
காரல் மார்க்ஸ்

# மூலதனம்

மூன்றாம் பாகம்

புத்தகம் ஒன்று



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# கார்ல் மார்க்ஸ்

# மூலதனம்

## அரசியல் பொருளாதார விமர்சனப் பகுப்பாய்வு

### மூன்றாம் பாகம்

புத்தகம் ஒன்று

SEELAN BOOKS NORWAY
SIGNATURE

## முழுமையான முதலாளித்துவ உற்பத்திச் செயல்முறை

பிரெடெரிக் எங்கெல்ஸ் பதிப்பித்த ஆங்கில நூலின் தமிழாக்கம்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
சென்னை-98

கார்ல் மார்க்ஸ்

மூலதனம் — மூன்றாம் பாகம் — புத்தகம் ஒன்று

மொழிபெயர்ப்பாளர் : தியாகு

பதிப்பாசிரியர் : ரா. கிருஷ்ணய்யா

© தமிழ் மொழிபெயர்ப்பு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை-600 098

முதல் பதிப்பு : ஏப்ரல், 1998

ISBN No. : 81-234-0588-X

CODE No. : A993

**விலை : ரூ.900.00**

அனைத்து மூன்று பாகங்களும்
சேர்த்து ஐந்து புத்தகங்கள்.

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ்
142, ஜானிஜான்கான் ரோடு
சென்னை-14.

## பதிப்பகத்தார் குறிப்பு

மூலதனத்தின் மூன்றாம் பாகம், காரல் மார்க்ஸ் இறந்த பின்னர், 1894-ல் பிரடரிக் எங்கல்ஸால் அச்சுக்குரியதாகத் தயாரிக்கப்பட்டு, பிரசுரிக்கப்பட்டது.

தற்போதைய ஆங்கிலப்பதிப்பு 1894-ம் வருடத்திய ஜெர்மன் பதிப்பின் அடிப்படையிலானதாகும்; இந்த ஜெர்மன் பதிப்பு, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் குழுவின் கீழமைந்த மார்க்ஸிய-லெனினியக் கல்விக் கழகத்தில் இப்போது பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள மார்க்ஸின் மூலக்கையெழுத்துப் பிரதியுடன் கவனமாகச் சரிபார்க்கப்பட்டது. 1894-ம் வருடப்பதிப்பில் கண்டு பிடிக்கப்பட்ட அச்சுப்பிழைகளும், எண் விவரங்கள் மற்றும் நூல் விவரங்களிலான தவறுகளும் திருத்தப்பட்டுள்ளன. ஆங்கிலேய மற்றும் அமெரிக்க நூலாசிரியர்களிடமிருந்தான அனைத்து மேற்கோள்களும் மூல நூல்களுடன் சரிபார்க்கப்பட்டுள்ளன.

1909-ம் ஆண்டில் சிக்காகோவைச் சேர்ந்த சார்லஸ் எச்.கெர் - கம்பெனி பிரசுரித்த மூலதனத்தின் மூன்றாம் பாகம் விரிவாகப் பயன்படுத்திக் கொள்ளப் பட்டுள்ளது.

மூலதனம் - மூன்றாம் பாகத்துக்கான எங்கல்ஸின் முன்னுரை இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. எங்கல்ஸ் எழுதிய 'மூலதனம், பாகம் மூன்றுக்கு அனுபந்தம்' என்பது பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளது. பெயர் அட்டவணை, ஆதாரங்களின் அட்டவணை, விஷய அட்டவணை ஆகியவையும் தரப்பட்டுள்ளன.

மூலதனத்தின் முதலாவது, இரண்டாவது பாகங்களின் ஆங்கில வாசகத்திலிருந்து தரப்பட்டுள்ள அனைத்து மேற்கோள்களும் குறிக்கும் பதிப்புகளாவன: காரல் மார்க்ஸ், மூலதனம், முதற்பாகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1963; காரல் மார்க்ஸ் , மூலதனம், இரண்டாம் பாகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1962.

நூலின் பருமை கருதி மூன்றாம் பாகம் இரு புத்தகங்களாக வெளியிடப்படுகிறது.

## பொருளடக்கம்


பக்கம்

*முன்னுரை* .................................................. *1*

## முழுமையான முதலாளித்துவ உற்பத்திச் செயல்முறை

### புத்தகம்-I

பகுதி I

### உபரி-மதிப்பு இலாபமாகவும் உபரி-மதிப்பு வீதம் இலாப-வீதமாகவும் மாறுதல்

*அத்தியாயம் I* — *அடக்கவிலையும் இலாபமும்* .................. *28*

*அத்தியாயம் II* — *இலாபவீதம்* .................. *46*

*அத்தியாயம் III* — *இலாபவீதத்துக்கும்உபரி-மதிப்பு வீதத்துக்குமான உறவு* .................. *58*

*அத்தியாயம் IV* — *இலாபவீதத்தின் மீது மூலதனப் புரள்வு ஏற்படுத்தும் விளைவு* .................. *86*

*அத்தியாயம் V* — *மாறா-மூலதனத்தைப் பயன்படுத்துவதில் சிக்கனம்* .................. *96*

*அத்தியாயம் VI* — *விலை ஏற்ற இறக்கங்களின் விளைவு* .................. *138*

*அத்தியாயம் VII* — *கூடுதல் குறிப்புகள்* .................. *183*

பகுதி II

### இலாபம் சராசரி இலாபமாக மாற்றமடைதல்

*அத்தியாயம் VIII* — *வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில் வெவ்வேறு மூலதன இயைபுகளும் அதனால் இலாப வீதங்களில் ஏற்படும் வேறுபாடுகளும்* .................. *188*

*அத்தியாயம் IX* — *பொது இலாபவீதம் (சராசரி இலாபவீதம்) உருவாதலும் சரக்குகளின் மதிப்புகள் உற்பத்தி விலைகளாக உருமாறுதலும்* .................. *204*

*அத்தியாயம் X* — *போட்டி வாயிலாகப் பொது .......... இலாபவீதம் சமனமாதல். சந்தை-விலைகளும் சந்தை-மதிப்புகளும் உபரி-இலாபம்* .................. *228*

| | | |
|---|---|---|
| அத்தியாயம் XI | கூலியில் ஏற்படும் பொதுவான ஏற்ற இறக்கங்கள் உற்பத்தி- விலைகள் மீது ஏற்படுத்தும் விளைவுகள் | 264 |
| அத்தியாயம் XII | கூடுதல் குறிப்புகள்............................ | 270 |

## பகுதி III

## இலாப வீதம் குறைந்து செல்லும் போக்கு பற்றிய விதி

| | | |
|---|---|---|
| அத்தியாயம் XIII | விதி அதன் தூய வடிவில் ............................ | 278 |
| அத்தியாயம் XIV | எதிர்த்து இயங்கும் காரணிகள் ...................... | 306 |
| அத்தியாயம் XV | விதியின் உள்முரண்பாடுகள் பற்றிய விளக்கம் .... | 319 |

## பகுதி IV

## சரக்கு-மூலதனமும் பண-மூலதனமும் வர்த்தக-மூலதனமாகவும் தனவாணிக-மூலதனமாகவும் (வணிக-மூலதனமாக) உருமாறுதல்

| | | |
|---|---|---|
| அத்தியாயம் XVI | வர்த்தக-மூலதனம் ........................................ | 354 |
| அத்தியாயம்XVII | வர்த்தக இலாபம் ........................................ | 372 |
| அத்தியாயம்XVIII | வணிக மூலதனத்தின் புரள்வு விலைகள்............ | 403 |
| அத்தியாயம் XIX | தனவணிக மூலதனம் .................................. | 422 |
| அத்தியாயம் XX | வணிக-மூலதனம் பற்றிய வரலாற்று உண்மைகள் | 434 |

## பகுதி V

## இலாபமானது வட்டியாகவும் தொழில் முனைவின் இலாபமாகவும் பிரிதல்

| | | |
|---|---|---|
| அத்தியாயம் XXI | வட்டி-மூலதனம் ........................................ | 456 |
| அத்தியாயம் XXII | இலாபப்பிரிவினை, வட்டி வீதம், இயற்கை வட்டி வீதம் ........................................ | 485 |
| அத்தியாயம் XXIII | வட்டியும், தொழில் முனைவின் இலாபமும் ...... | 502 |
| அத்தியாயம் XXIV | வட்டி-மூலதன வடிவில் மூலதன உறவுகள் புறம்பாதல் ........................................ | 533 |
| அத்தியாயம் XXV | கடன்-செலாவணியும் பெயரளவு மூலதனமும் .... | 546 |
| அத்தியாயம் XXVI | பண-மூலதனத்திரட்டல். வட்டி வீதத்தின் மீது அதன் தாக்கம் ........................................ | 572 |
| அத்தியாயம் XXVII | முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் ............ கடன்-செலாவணியின் பங்கு ........................ | 605 |
| அத்தியாயம் XXVIII | சுற்றோட்ட ஊடகமும் மூலதனமும்; டுக் புல்லர்ட்டன் கருத்தோட்டம் ..................... | 615 |

# முன்னுரை

ஆகக் கடைசியில், மார்க்ஸின் பிரதானப் படைப்பின் மூன்றாம் புத்தகத்தை வெளியிடும் பாக்கியம் எனதாகிறது; இப்புத்தகம் தத்துவப் பகுதியின் முடிவுரையாகும். ஒருசில, நிச்சயம், மிக முக்கியமான-பிரிவுகள் தவிர்த்து, மூன்றாம் பாகத்தில் அநேகமாகச் செய்நுட்ப சிரமங்கள் மட்டுமே தலைகாட்டும் என்று, 1885-ல் இரண்டாம் பாகத்தைப் பிரசுரித்தபோது நான் நினைத்தேன். உள்ளபடியே நடந்ததும் அதுதான். ஆனால், நூல் முழுவதன் மிக முக்கியப் பகுதிகளான இப்பிரிவுகள் இந்த அளவு தொல்லை தரும் என்று நான் அந்த நேரத்தில் அறிந்திடவில்லை; அதே போலத்தான், வேலையின் பூர்த்தியை இந்த அளவுக்குத் தாமதப்படுத்தவிருந்த மற்ற தடைகளையும் நான் எதிர் பார்த்திடவில்லை.

அடுத்து, அனைத்திலும் மிகமுக்கியமாக, எனது பார்வைக் கோளாறுதான் ஆண்டுக்கணக்காக எனது எழுதும் நேரத்தைக் குறைந்தபட்சமாகக் குறுக்கிவிட்டது; இப்போதும் கூட, விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே, செயற்கை ஒளியைப் பயன்படுத்தி எழுதிட அது இடமளிக்கிறது. மேலும் மார்க்ஸின் படைப்புகள் எனது முந்தைய படைப்புகள் ஆகியவற்றின் புதிய பதிப்புகள் மற்றும் மொழி பெயர்ப்புகள், எனது திறனாய்வுகள், முன்னுரைகள் மற்றும் அனுபந்தங்கள் போன்ற மற்ற முக்கியமான பணிகளையும் நிராகரித்திட முடியவில்லை, பலநேரங்களில், புதிதாகப் பயின்றிடாமலும் இன்னபிற பணிகளின்றியும் இவை சாத்தியமல்ல. அனைத்துக்கும் மேலாக, இந்த நூலின் முதல் பாகத்தின் ஆங்கிலப் பதிப்புப் பற்றிய வேலையிருந்தது; இதன் வாசகத்துக்கு நானே இறுதிப் பொறுப்பாவேன்; ஆதலால் எனது நேரத்தில் பெரும்பகுதியை அது விழுங்கிவிட்டது. கடந்த பத்தாண்டுகாலத்தில் சர்வதேசிய சோஷலிஸ இலக்கியம் கண்டுள்ள அசுர வளர்ச்சியினை, குறிப்பாக மார்க்ஸின் நூல்களும் எனது முந்தைய நூல்களும் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ள பெரும் எண்ணிக்கையிலான மொழிபெயர்ப்புகளை, எவ்விதத்தும் கவனித்து வந்துள்ள எந்த ஒருவரும் பின்வருவதை ஒப்புக் கொள்வார்: மொழிபெயர்ப்பாளர்களுக்கு நான் உதவும்படியாய் இருக்கக் கூடிய - ஆகவே அவர்களது மொழியாக்கத்தைத் திறனாய்ந்திட மனசாட்சிப்படி நான் மறுக்கமுடியாத - மொழிகளின் எண்ணிக்கை மிகவும் வரம்புக்குட்பட்டதே என்பது எனக்குள்ள அதிர்ஷ்டமாகும். ஆனால் இலக்கியத்தின் வளர்ச்சி என்பது, அதற்கிணையாகச் சர்வதேசியத் தொழிலாளி வர்க்க இயக்கம் அடைந்த வளர்ச்சியின் குறிமுள்ளாகத்தான் இருந்தது. இது என் மீது புதிய கடமைகளைச் சுமத்தியது. எங்களது பொது வாழ்க்கைச் செயல்பாட்டின் ஆரம்பநாட்கள் தொட்டே, மார்க்ஸும் நானும்தான் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த சோஷலிஸ்ட்டுகள் மற்றும் தொழிலாளர்களின் தேசிய இயக்கங்களுக்கான

இடைத்தூதர்களென்னும் பணியின் பிரதானச் சுமையைச் சிரமேற்கொண்டோம். முழு இயக்கமும் விரிவடைந்ததற் கேற்ப இந்தப் பணியும் விரிவடைந்தது. தான் இறக்கும் வரை, இதிலும் சுமையின் பெரும் பகுதியை மார்க்ஸே சுமந்தார். ஆனால் அவரது இறப்புக்குப் பின்னர், அதிகரித்த வண்ணமிருந்த, பெரும்பகுதி வேலையை நானே தனித்துச் செய்ய வேண்டியிருந்தது. அதன் பின், பல்வேறு தேசியத் தொழிலாளர் கட்சிகளும் நேரடித் தொடர்புகளை நிறுவிக் கொள்வது வழக்கமாகியுள்ளது; அதிருஷ்டவசமாக இந்தப் போக்கே வளர்ந்தும் வருகிறது. ஆயினும், எனது உதவிக்கான வேண்டுகோள்கள், எனது தத்துவ வேலையின் நிமித்தம் - நான் விரும்பக் கூடியதைக் காட்டிலும், வெகு அதிகமாகவே இன்னமும் உள்ளன. ஆனால், என்னைப்போல, ஒருவன் ஐம்பதாண்டுகளுக்கதிகமாக இயக்கத்தில் தீவிரமாகச் செயல்பட்டுள்ளான் என்றால், அது தொடர்பான பணியை அவன், தாமதமென்பதே கூடாத ஒரு கட்டாயக் கடமையாக மதிக்கிறான். 16-ம் நூற்றாண்டில் போலவே, விறுவிறுப்பு மிக்க நமது காலத்திலும், சமுதாய விவகாரங்களில் சுத்தமான தத்துவவாதிகள் என்போர் பிற்போக்கின் தரப்பில் மட்டுமே காணப்படுகின்றனர்; இக்காரணத்தில் அவர்கள் சொல்லுக்குரிய முழு அர்த்தத்தில் தத்துவவாதிகளே கூட அல்ல, வெறுமனே பிற்போக்கின் சப்பைக்கட்டுவாதிகள்தான்.

நான் லண்டனில் வசிப்பதால், எனது கட்சித்தொடர்புகள் குளிர் காலத்தில் கடிதப் போக்குவரத்தோடு சரி; கோடையிலோ அவை பெரிதும் நேர்முகமானவை. இந்த நிலைமையும், சீராக அதிகரித்து வரும் எண்ணிக்கையிலான நாடுகளிலும் இன்னும் வேகமாக அதிகரித்து வரும் எண்ணிக்கையிலான ஏடுகளிலும் இயக்கத்தைக் கவனிக்கிற அவசியமும், தடங்கலுக்கு இடம்தராத விஷயங்களைக் குளிர்கால மாதங்களில், பிரதானமாக ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் பூர்த்தி செய்வதற்கென ஒதுக்கிக் கொள்ளுமாறு என்னை நிர்ப்பந்தித்துள்ளன. ஒரு மனிதனின் வயது எழுபதைத் தாண்டியிருக்கும்போது, அவனது மூளையின் மெய்னெர்ட் இணைப்பு நரம்புகள் எரிச்சலூட்டும் மதமதப்புடன் செயல்படுகின்றன. சிரமமான தத்துவப் பிரச்னைகளில் ஏற்படும் தடங்கல்களை இனியும் அவன் முன்போல சுலபமாகவும் துரிதமாகவும் சமாளிப்பதில்லை. ஆகவே ஒரு குளிர் காலத்தின் பணி, பூர்த்தியாகா விட்டால், அடுத்த குளிர்காலத்தில் பெரும்பாலும் புதிதாகத் துவக்கப்பட வேண்டிய நிலைமையே ஏற்பட்டது. மிகமிகக் கடினமான ஐந்தாம் பகுதியின் விஷயத்தில் நடந்தது இதுவே.

மூன்றாம் பாகத்தைப் பதிப்பிக்கும் பணி இரண்டாம் பாகத்தைப் பதிப்பிக்கும் பணியிலிருந்து அடிப்படையிலேயே வேறுபட்டிருந்தது என்பதைப் பின் வருவதிலிருந்து வாசகர் காண்பர். மூன்றாம் பாகத்தின் விஷயத்தில், மிக மிக முழுமையற்ற ஒரு முதல் நகல் அல்லாமல் அடிப்படையாகக் கொள்ள ஏதுமில்லை. பல்வேறு பகுதிகளின் துவக்கங்களும், வழக்கமாகவே, கவனமாகச் செய்யப்பட்டிருந்தன, நடை மெருகேற்றப்பட்டிருந்தது. ஆனால் எவ்வளவுக்கு மேலே செல்கிறோமோ, அவ்வளவுக்கு கையெழுத்துப் பிரதி அதிகம்

நேர்த்தியற்றதாகவும் அரைகுறையானதாகவும் இருந்தது, கிளம்புகின்ற துணைப் பிரச்சினைகளில் கிளைபடர்வது அவ்வளவுக்கு அதிகமாயிருந்தது - தர்க்கத்தில் இவற்றுக்குரிய இடம் பற்றிப் பின்னர் முடிவு செய்து கொள்ளலாம் என்று விடப்பட்டிருந்தது, வாக்கியங்கள் அந்த அளவுக்கு நீண்டும் சிக்கல் மிகுந்தும் இருந்தன; இவ்வாக்கியங்களில், சிந்தனைகள் பிறந்த மேனியில் (**Statu nascendi**) பதிவு செய்யப்பட்டிருந்தன. சில இடங்களில் கையெழுத்தும் சமர்ப்பண முறையும், மிகையுழைப்பால் சேர்ந்த உடல் நலிவின் தாக்குதல்கள் வெடித்ததையும் படிப்படியாக முன்னேறியதையும் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன; இவ்வுடல் நலிவு நூலாசிரியரின் பணியை மேலும் மேலும் சிரமமானதாக்கி, இறுதியில் அவ்வப்போது வேலையை முழுமையாக நிறுத்திவிடுமாறும் அவரை நிர்ப்பந்தித்தது. இதில் வியப்பில்லைதான். *1863*-க்கும் *1867*-க்கும் இடையில், மார்க்ஸ் **மூலதனத்தின்** கடைசி இரு பாகங்களின் முதல் நகலைப் பூர்த்தி செய்து, முதல் பாகத்தை அச்சுக்கு ஆயத்தப்படுத்தியது மட்டுமல்லாமல், சர்வதேசிய உழைக்கும் மக்கள் சங்கத்தை ஸ்தாபிப்பது மற்றும் விரிவுபடுத்துவது தொடர்பான பிரமாண்டமான பணியையும் நிறைவேற்றினார். இதன் விளைவாக, *1864* மற்றும் *1865*-லேயே, உடல்நலிவின் கெடுங்குறிகள் வெளிப்பட்டன; இரண்டாவது, மூன்றாவது பாகங்களுக்கு இறுதிப்பூச்சுகளைத் தானே நேரடியாகத் தரவிடாமல் இவை மார்க்ஸைத் தடுத்துவிட்டன.

கையெழுத்துப் பிரதி முழுவதையும் வாசிக்கத்தக்கப் பிரதியாக எழுதிக்கொள்ளவென படித்துச் சொல்வது எனது பணியின் துவக்கமாக அமைந்தது; கையெழுத்தைக் கண்டறிந்து படிப்பது எனக்கே பல நேரங்களில் கடினமாயிருந்தது. இதற்கு மட்டுமே கணிசமான காலம் தேவைப்பட்டது. பின்னர்தான் வாஸ்தவமான பதிப்பித்தலில் நான் இறங்க முடிந்தது. இதனை அத்தியாவசியமென்னும் வரம்புக்குள் செய்தேன். போதுமான அளவு தெளிவாயிருந்த இடங்களிலெல்லாம் முதல் நகலின் தன்மையைக் காத்திட இயன்றவரை முயன்றேன். மறுகூறல்கள், மார்க்ஸுக்குரிய வழக்கப்படி, விஷயத்தை வேறொரு கண்ணோட்டத்தில் நோக்குவனவாக, அல்லது குறைந்த பட்சம், ஒரே சிந்தனையை வேறான சொற்களில் வெளியிடுவனவாக அமைந்த இடங்களிலெல்லாம், அந்த மறுகூறல்களைக் கூட நான் நீக்கிடவில்லை. எனது மாற்றங்கள் அல்லது சேர்க்கைகள் பதிப்பித்தலின் எல்லைகளைத் தாண்டிச் சென்ற இடங்களிலெல்லாம் அல்லது, முடிந்தவரை மார்க்ஸின் உணர்வுக்கு விசுவாசமாகவே என்றாலும் கூட மார்க்ஸின் உண்மை விவர நூற்பொருளை என் சொந்த சுயேச்சையான முடிவுகளுக்கு நான் பிரயோகிக்க வேண்டியிருந்த இடங்களிலெல்லாம், நூற்பகுதி முழுவதையும் அடைப்புக்குறிகளுக்குட்படுத்தி எனது பெயர் முதலெழுத்துக்களைப் பொறித்துள்ளேன். எனது அடிக்குறிப்புகளில் சில அடைப்புக் குறிகளில் தரப்படவில்லை; ஆனால் நான் அவற்றுக்கு எனது பெயர் முதலெழுத்துக்களைச் சேர்த்துள்ள இடங்களிலெல்லாம் குறிப்பு முழுமைக்கும் நானே பொறுப்பு.

கையெழுத்துப் பிரதியில் ஏராளமான விஷயங்கள் குறிப்பாகச் சொல்லப்பட்டுள்ளன; இவை பிற்பாடு விரிவாக்கப்பட்டிருக்க வேண்டும்; இவ்வாக்குறுதிகள் எப்போதும் காப்பாற்றப்படுவதில்லை; இது ஒரு முதல் நகலில் எதிர்பார்க்கத் தக்கதே. நான் அவற்றை விட்டுவிட்டேன்; ஏனென்றால் வருங்கால விரிவாக்கம் தொடர்பான நூலாசிரியரின் உத்தேசங்களை அவை வெளிப்படுத்துகின்றன.

இப்போது விவரங்களுக்கு வருவோம்.

முதல் பகுதியைப் பொறுத்தவரை, பிரதான கையெழுத்துப் பிரதி கணிசமான வரம்புகளுக்குட்பட்டே பயன்பட்டது. (நமது அத்தியாயம் III ஆக அமைவதான) உபரி மதிப்பு வீதத்துக்கும் லாபவீதத்துக்கும் இடையிலான உறவு பற்றிய கணிதக் கணக்கீடு முழுவதும் துவக்கத்திலேயே நுழைக்கப்படுகிறது; நமது அத்தியாயம் I-ல் கையாளப்படும் விஷயமோ, பின்னர், சந்தர்ப்பம் வரும்போது பரிசீலிக்கப்படுகிறது. அரைத்தாள் சுவடியில் (in Folia) தலா எட்டுப் பக்கங்களான அவற்றைத் திருத்துவதற்கான இரு முயற்சிகள் இங்கே பயனுள்ளவையாக இருந்தன. ஆனால் இவையும் கூட வேண்டப்பட்ட தொடர்ச்சியை முழுதாகப் பெற்றிருக்கவில்லை. இப்போது அத்தியாயம் I ஆக அமைந்திருக்கும் பகுதிக்கான சாரத்தை அவை வழங்கின. அத்தியாயம் II பிரதான கையெழுத்துப் பிரதியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அத்தியாயம் IIIக்கான பூர்த்தி செய்யப்படாத கணிதக் கணக்கீடுகள் சிரமமாக இருந்தன, அதேபோல், எழுபதாம் ஆண்டுகளில் துவங்குகின்ற கிட்டதட்ட பூர்த்தியான ஒரு முழுநோட்டுப் புத்தகமும் உள்ளது; இது, லாபவீதத்தோடு உபரி மதிப்பு வீதம் கொண்டுள்ள உறவை சமன்பாடுகளின் வடிவத்தில் சமர்ப்பிக்கிறது. முதல் பாகத்தின் பெரும்பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவரான எனது நண்பர் சாமுவேல்மூர், எனக்காக இந்த நோட்டுப்புத்தகத்தைப் பதிப்பித்துத்தர ஒப்புக் கொண்டார். கேம்பிரிட்ஜை சேர்ந்த ஒரு பழைய கணிதவியலாளர் என்ற விதத்தில், இந்த வேலைக்குரிய தகுதி அவருக்கு வெகு அதிகமுண்டு. அவரது சுருக்கவுரையிலிருந்துதான், பிரதான கையெழுத்துப் பிரதியையும் எப்போதாவது பயன்படுத்தி, பின்னர் நான் அத்தியாயம் III-ஐத் தொகுத்தேன். அத்தியாயம் IV-க்கு தலைப்பு மட்டுமே கிடைத்தது. அதனால் அதன் கருப்பொருளான, லாபவீதத்தின் மீதான புரட்டின் செல்வாக்கு என்பது ஜீவ முக்கியத்துவமுடைய தென்பதால் நானே அதனை எழுதியுள்ளேன்; இக்காரணத்தால் அவ்வத்தியாயம் முழுவதுமே அடைப்புக்குறிகளில் தரப்பட்டுள்ளது. அத்தியாயம் IIIல் தரப்பட்டுள்ள லாபவீதத்துக்கான சூத்திரம் பொதுவாகச் செல்லுபடியாக வேண்டுமானால், அதனை மருவி அமைத்தல் அவசியம் என்பது இந்த வேலையின் போக்கில் தெரியவந்தது. பல இடமாற்றங்களும் அனுபந்தங்களும் கூட அத்தியாவசியமாயிருந்தன என்றபோதிலும், இப்பகுதியின் மீதத்துக்கான ஆதாரம் பிரதான கையெழுத்துப் பிரதியே.

அடுத்து வரும் மூன்று பகுதிகளைப் பொறுத்தவரை, நடை சார்ந்த பதிப்பித்தலன்னியில், கிட்டதட்ட முழுமையாகவே மூலக் கையெழுத்துப்

# Das Kapital.

## Kritik der politischen Oekonomie.

Von

**Karl Marx.**

Dritter Band, erster Theil.

**Buch III:**
**Der Gesammtprocess der kapitalistischen Produktion.**
**Kapitel I bis XXVIII.**

Herausgegeben von Friedrich Engels.

Das Recht der Uebersetzung ist vorbehalten.

Hamburg
Verlag von Otto Meissner.
1894.

மூலதனம் மூன்றாம் பாகம் முதல் ஜெர்மன் பதிப்பின் மேலட்டை
(சிறிதாக்கியது)

பிரதியை நான் பின்பற்ற முடிந்தது. பெரும்பாலும் புரட்டின் செல்வாக்கு பற்றியவையான ஒரு சில நூற்பகுதிகளை, என்னால் நுழைக்கப்பட்ட அத்தியாயம் IV-க்கு இசைவாகத் தரவேண்டியிருந்தது; இவையும் அடைப்புக் குறிகளில் தரப்பட்டு, எனது பெயர் முதலெழுத்துக்களைக் கொண்டுள்ளன.

இந்நூற்பாகம் முழுவதிலும் மிகமிகச் சிக்கலான விஷயம் பற்றியதான பகுதி V-தான் மிகப் பெருஞ்சிரமத்தைக் கொடுத்தது. சரியாக இந்தக்கட்டத்தில்தான், மேற்குறிப்பிட்ட உடல் நலிவின் கடுந்தாக்குதல்களில் ஒன்று மார்க்ஸை மிஞ்சியிருந்தது. இங்கேயும் பூர்த்தியான நகலேதுமில்லை; நிரப்பிக் கொள்ளப்படக் கூடிய சுருக்கவுரைகளையுடைய ஒரு திட்டம்கூடக் கிடையாது; ஒரு விரிவாக்கத்தின் துவக்கம் மட்டுமே இருந்தது - பல நேரங்களில் குறிப்புகளும் விமர்சனக் கூற்றுகளும் எடுகோள்களுமான ஓர் ஒழுங்கற்ற திரள் மட்டுமே இருந்தது. முதல் பகுதி தொடர்பாக ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நான் செய்தது போலவே, நூலாசிரியர் விரும்பிய அனைத்துமே குறைந்தபட்சம் ஏறக்குறையவேனும் இடம்பெறக் கூடிய விதத்தில், இடைவெளிகளை இட்டு நிரப்புவதன் மூலமும் சூசனையாக மட்டுமே தரப்பட்ட நூற் பகுதிகளை விரிவுபடுத்துவதன் மூலமும், இந்தப் பகுதியைப் பூர்த்தி செய்ய முதலில் முயன்றேன். மூன்று தடவைக்குக் குறையாமல் நான் இப்படி முயன்றேன்; ஆனால் ஒவ்வொரு முயற்சியிலும் தோல்வி கண்டேன்; இதில் இழக்கப்பட்ட நேரம், இந்தப் பாகத்தை வழிமறித்த முதன்மையான காரணங்களில் ஒன்றாகும். நான் தடந் தவறிக் சென்று கொண்டிருப்பதைக் கடைசியில் உணர்ந்தேன். இத்துறையில் ஏராளமாயுள்ள இலக்கியம் முழுவதிலும் நான் புகுந்து புறப்பட வேண்டியிருந்திருக்கும், அப்படியும் மார்க்ஸ் எழுதிய ஒரு புத்தகமாக அமைந்திருக்காத ஏதோ ஒன்றை முடிவில் தயாரித்திருப்பேன். கிடைக்ககூடிய விஷயத்தை முடிந்தவரை ஒழுங்காக வரிசைப் படுத்துவதோடும், மிக மிக இன்றியமையாதவற்றை மட்டுமே சேர்ப்பதோடும் என்னை நான் கட்டுப்படுத்திக் கொள்வதன் மூலம் இந்தச் சிக்கலைக் கிட்டத்தட்ட அவிழ்ப்பது தவிர எனக்கு வேறு வழியில்லாமற் போனது. 1893-ம் ஆண்டின் வசந்தகாலத்தில் இந்தப் பகுதிக்கான பிரதான வேலைகளைப் பூர்த்தி செய்வதில் நான் வெற்றி கண்டது இப்படித்தான்.

பல்வேறு அத்தியாயங்களைப் பொறுத்தவரை, XXI முதல் XXIV வரையிலான அத்தியாயங்கள், பிரதானமாகப் பூர்த்தியாகியிருந்தன. XXV, XXVI ஆகிய அத்தியாயங்களில் பார்வைக் குறிப்புகளைச் சலிப்பதும், வேறிடங்களில் காணப்பட்ட நூற்பொருளை இடைச் செருகுவதும் அவசியமாயின. XXVII, XXIX ஆகிய அத்தியாயங்களைக் கிட்டத்தட்ட முழுமையாகவே மூலக் கையெழுத்துப் பிரதியிலிருந்து எடுத்துக் கொள்ள முடிந்தது, ஆனால் அத்தியாயம் XXVIII-ஐ சில இடங்களில் மாற்றி வரிசைப்படுத்த வேண்டியிருந்தது. ஆயினும், நிஜமான சிரமம் அத்தியாயம் XXX-ல் துவங்கியது. இது முதற்கொண்டு, பார்வைக்குறிப்புக்களை முறையாக வரிசைப் படுத்துவது மட்டு மல்லாமல், சிந்தனைச் சரத்தையும் முறையானவிதத்தில் கோவைப்படுத்த வேண்டியிருந்தது; ஏனெனில் குறுக்கே வரும் துணைவாக்கியங்களும்

பிறழ்வுகளும் இன்னபிறவும் ஒவ்வொரு கட்டத்திலும் அதனை இடைமறித்திருந்தன; அது வேறெங்காவது பல நேரங்களில் எதேச்சையாகவே, திரும்பக் கைக்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு, இடமாற்றங்களையும் மற்ற இடங்களில் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட ஒட்டுச்சேர்க்கைகளையும் கொண்டு அத்தியாயம் XXX கோக்கப்பட்டது. மீண்டும், அத்தியாயம் XXXI கூடுதலான தொடர்ச்சியைப் பெற்றுள்ளது. ஆனால் அடுத்து. 'குழப்பம்' என்ற தலைப்பிட்ட ஒரு நீண்ட பிரிவு கையெழுத்துப் பிரதியில் வருகிறது; இதில் *1848* மற்றும் *1857*-ம் வருடத்திய நெருக்கடிகள் பற்றிய பாராளுமன்ற அறிக்கைகளிலிருந்தான எடுகோள்கள் மட்டுமே அடங்கியுள்ளன, இவ்வறிக்கைகளில், பெரும்பாலும் பணம் மற்றும் மூலதனம், தங்க வடிப்பு, மிகை-ஹேஷ்யபேரம் முதலானவை பற்றி இருப்பத்து மூன்று தொழிலதிபர்களும் பொருளாதார அறிஞர்களும் அளித்துள்ள வாக்குமூலங்கள் தொகுக்கப்பட்டுள்ளன; இங்குமங்குமாக சுருக்கமான நையாண்டி விமர்சனங்கள் இப்பிரிவில் தரப்பட்டுள்ளன. நடைமுறையில், மூலதனத்தோடு பணத்திற்குள்ள உறவு தொடர்பாக அப்போது நடப்பிலிருந்து அனைத்துக் கருத்துக்களுமே அவற்றில் -பதில்களிலோ அல்லது கேள்விகளிலோ- இடம்பிடித்துள்ளன. பணச்சந்தையில் பணத்தையும் மூலதனத்தையும் அடையாளங் காண்பதில் வெளிப்பட்ட 'குழப்பத்தையே', விமர்சனத்தோடும் குத்தலோடும் மார்க்ஸ் எடுத்தாளவிரும்பினார். இந்த அத்தியாயத்துக்கு உருவங்கொடுக்க இயலாது என்று, பலமுயற்சிகளுக்குப் பின், எனக்கு உறுதியாகப்பட்டது. அதன் நூற்பொருள் குறிப்பாக மார்க்ஸின் விமர்சனக் கூற்றுகளோடு தரப்பட்ட நூற்பொருள், அதற்குப் பொருத்தமான ஸ்தானத்தை நான் கண்டவிடத்தெல்லாம், பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

ஏற்கக்கூடிய வரிசையில் அடுத்து வருவது, அத்தியாயம் XXXII-ல் நான் இடம் பெறச் செய்த பகுதியாகும். ஆனால் இதையடுத்து உடனடியாகவே, இப்பகுதியோடு தொடர்புள்ள எண்ணிப்பார்க்கத்தக்க ஒவ்வொரு விஷயம் பற்றியும் பாராளுமன்ற அறிக்கைகளிலிருந்ததான எடுகோள்களின் ஒரு புதிய கோவை வருகிறது; நூலாசிரியரின் விமர்சனங்களும் கலந்து வருகின்றன. முடிவுவாக்கில், இந்த எடுகோள்கள் மற்றும் விமர்சனங்கள், பண உலோகங்களின் இயக்கத்தின் மீதும் பரிவர்த்தனை வீதங்களின் மீதும் மேலும் மேலும் மையங் கொள்கின்றன; சகல வகை நானாவிதக் கூற்றுகளுடனும் இவை முடிகின்றன. மறுபுறம் 'முதலாளித்துவத்துக்கு முந்தைய அத்தியாயம் -XXXVI

*முன்னதாகச் செருகப்பட்டுவிட்ட நூற்பொருள் தவிர, 'குழப்பம்' என்பதுடன் துவங்குகிற இந்நூற்பொருள் முழுவதையும் பயன்படுத்தி, XXXIII முதல் XXXV வரையிலான அத்தியாயங்களை நான் தயாரித்தேன். தொடர்ச்சி யின் நிமித்தம் கணிசமான இடைச் செருகல்களை நான் சேர்த்திடாமல் இதனைச் செய்திட முடியவில்லை என்பது உண்மைதான். இயல்பில் அவை வெறுமனே வடிவ ரீதியானவை அல்லவென்றால், இடைச்செருகல்கள் என்னுடையவை என்று துலாம்பரமாகக் காட்டப்பட்டுள்ளது. விஷயத்துக்குத் தொடர்புள்ள*

நூலாசிரியரின் கூற்றுகள் அனைத்தையும் வாசகத்தினுள் இணைப்பதில், இவ்விதமாய் நான் இறுதியில் வெற்றி கண்டுள்ளேன். ஏற்கனவே கூறப்பட்டதையே திரும்பக் கூறுவதாயிருந்த, அல்லது கையெழுத்துப் பிரதி மேற்கொண்டு சிறிதும் ஆராயாத அம்சங்கள் பற்றியதாயிருந்த எடுகோள்களின் சிறியதொரு பகுதி தவிர எதுவுமே விடப்படவில்லை.

நிலவாரம் பற்றிய பகுதி முழுவதன் திட்டத்தையும் (கையெழுத்துப் பிரதியில் வாரம் பற்றிய பகுதியின்) கடைசிப் பாகமான அத்தியாயம் XLIII-ல் தொகுத்துரைப்பது அவசியமென மார்க்ஸ் கண்டார் என்ற ஒரே காரணத்தாலெனினும், இப்பகுதி எவ்விதத்தும் முறையாக வரிசைப் படுத்தப்பட்டிருக்கவில்லை; ஆயினும் அது வெகு அதிகம் முழுமையான விதத்தில் விவரிக்கப்பட்டிருந்தது. கையெழுத்துப் பிரதி அத்தியாயம் XXXVII உடன் துவங்கி, XLV முதல் XLVII வரையிலான அத்தியாயங்கள் அடுத்துவர, அதன் பின்னர்தான் XXXVIII முதல் XLIV வரையிலான அத்தியாயங்கள் வருகின்றன என்பதால், இது அந்த அளவுக்கு அதிகம் விரும்பத்தக்கதாயிருந்தது. வேறுபாட்டு வாரம் II-க்கான அட்டவணைகள் மிகப் பெருமளவு வேலைவாங்கின; இந்தவகை வாரத்தின் மூன்றாம் பட்சம் அதற்குரிய இடமான அத்தியாயம் XLIII-ல் அறவே பகுத்தாயப்படவில்லை என்ற கண்டுபிடிப்பும் அப்படித்தான்.

எழுபதாம் ஆண்டுகளில் மார்க்ஸ், நிலவாரம் பற்றிய இப்பகுதிக்காக முற்றிலும் புதிய விசேஷ ஆய்வுகளில் ஈடுபட்டார். ஆண்டுக்கணக்கில் அவர், ரஷ்யாவில் *1861*-ம் வருடத்திய 'சீர்திருத்தத்துக்குப்' பின்னர் தவிர்க்க முடியாதவையான புள்ளிவிவர அறிக்கைகளின் ரஷ்ய மூலங்களையும் நிலவுடைமை பற்றிய மற்ற பிரசுரங்களையும் படித்தார்; வியத்தகு விதமாய் முழுமையான வடிவத்தில் அவரது ரஷ்ய நண்பர்கள் அவருக்குத் தந்துதவிய இந்த மூலங்களிலிருந்து குறிப்புகளெடுத்தார்; அவற்றை இந்தப் பகுதியின் புதிய விவரணம் ஒன்றுக்காகப் பயன்படுத்த உத்தேசித்திருந்தார். ரஷ்யாவில் நிலவுடைமை, விவசாய உற்பத்தியாளர் தம் சுரண்டல் ஆகிய இரண்டுமே பலவிதமான வடிவங்களைக் கொண்டிருந்த காரணத்தால், தொழில் துறையிலான கூலியுழைப்பு தொடர்பாக முதல் புத்தகத்தில் இங்கிலாந்து வகித்த அதே பாத்திரத்தை, நிலவாரம் பற்றிய பகுதியில் இந்நாடு வகிக்கவிருந்தது. துரதிருஷ்டவசமாக, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வாய்ப்பு அவருக்கில்லாது போனது.

கடைசியாக, ஏழாவது பகுதி முழுமையாகக் கிடைத்தது, ஆனால் ஒரு முதல் நகலாகவே கிடைத்தது; இதனை அச்சுக்குரியதாய் ஆக்கிட வேண்டி, அதில் முடிவற்றுப் பின்னிக் கொண்டிருந்த காலப்பகுதிகளை முதலில் வேறுபிரிக்க வேண்டியிருந்தது. இறுதி அத்தியாயத்தின் துவக்கம் மட்டுமே இருக்கிறது. வருவாயின் முப்பெரும் வடிவங்களான நிலவாரம், லாபம், கூலி ஆகியவற்றுக்கு உரியோரான வளர்ச்சியடைந்த முதலாளித்துவ சமுதாயத்தின் முப்பெரும் வர்க்கங்கள் - நிலச் சொந்தக்காரர்கள், முதலாளிகள், கூலித் தொழிலாளர்கள் -

பற்றியும், முதலாளித்துவக் கால கட்டத்தின் வாஸ்தவமான விளைபயனென்ற விதத்தில் அவ்வர்க்கங்கள் ஜீவிப்பதன் ஒரு தவிர்க்க முடியாத உடன் பிறப்பாகிய வர்க்கப் போராட்டம் பற்றியும் அவ்வத்தியாயம் விவரிப்பதாக இருந்தது. அச்சுக்கு அனுப்புவதற்குச் சற்றுமுன்னதாக இறுதிப் பதிப்பித்தலைச் செய்யும் வரை இப்படிப்பட்ட கடைசிச் சுருக்கவுரைகளை விட்டுவைப்பது மார்க்ஸின் வழக்கமாயிருந்தது; அந்த நேரத்தில், மிகப்புதிய வரலாற்று நிகழ்ச்சிகள், அவரது தத்துவக் கருத்துரைகளுக்கான மிக மிகப் போற்றற்குரிய காலப்பொருத்தத்துக்கு வேண்டிய நிரூபணங்களை, தவறாமல் எப்போதும், அவருக்கு வழங்கின.

அவரது கூற்றுகளை விளக்குகின்ற மேற்கோள்களும் நிரூபணங்களும், இரண்டாம் பாகத்தில் போலவே, முதல் பாகத்திலிருப்பதை விடக் கணிசமான அளவுக்குக் குறைவாயுள்ளன. முதல் புத்தகத்திலிருந்ததான மேற்கோள்கள் 2-வது, 3-வது பதிப்புகளில் வரும் பக்கங்களைக் குறிக்கின்றன. கையெழுத்துப் பிரதி முந்தைய பொருளாதார அறிஞர்களின் தத்துவ உரைகளைக் குறிப்பிடுமிடங்களிலெல்லாம், வழக்கமாகப் பெயர் மட்டுமே தரப்படுகிறது; இறுதிப்பதிப்பித்தலின் போது மேற்கோள்கள் சேர்த்துக் கொள்ளப் படவிருந்தன. இதனை நான், இருந்தபடியே விட்டு விட வேண்டியிருந்தது என்பது உண்மையே. நான்கு பாராளுமன்ற அறிக்கைகள் மட்டுமே உள்ளன; ஆனால் இவை மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை பின் வருமாறு:

1) (கீழ்ச் சபையின்) கமிட்டிகள் தந்த அறிக்கைகள், பாகம் VIII, வர்த்தகத் துயரம், பாகம் II, பகுதி I, 1847-48. சாட்சியக் குறிப்புகள் - வர்த்தகத்துயரம் 1847-48 என்று மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

2) 1847-ன் வர்த்தகத்துயரம் பற்றிய பிரபுக்கள் சபையின் ரகசியக் கமிட்டி. 1848-ல் அச்சான அறிக்கை . சாட்சியம் 1857-ல் அச்சானது (ஏனென்றால் 1848-ல் அதிகப்படியான விட்டுக் கொடுக்குந் தன்மையுள்ளதாய்க் கருதப்பட்டது). -வ.து. 1848/57 என்று மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

3) அறிக்கை: வங்கிச் சட்டங்கள், 1857 - வங்கிச் சட்டங்கள், 1858.-1844 மற்றும் 1845-ன் வங்கிச் சட்டங்களின் பயன் பற்றி கீழ்ச் சபையின் கமிட்டியின் அறிக்கைகள். சாட்சியத்துடன். - வ.ச. (அல்லது வ.க.) 1857 அல்லது 1858 என்று மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

எப்படியும் சாத்தியப்பட்டதுமே, நான்காம் பாகம்-உபரி மதிப்புத் தத்துவத்தின் வரலாறு-தொடர்பான வேலையைத் தொடங்கப் போகிறேன்.

---

'ராட்பெர்ட்டஸின் உருவில் மார்க்ஸின் ரகசிய மூலதனத்தையும் மேம்பட்ட முன்னோடியையும்' கண்டுபிடித்து விட்டதாகக் கற்பனை பண்ணிக் கொண்டதால் அந்த நேரத்தில் ஒரு கூக்குரலை எழுப்பிய கனவான்களோடு, **மூலதனத்தின்** இரண்டாம் பாகத்துக்கான முன்னுரையில் நான் கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. 'ராட்பர்ட்டஸ் போன்ற ஒருவரின் பொருளாதாரத்தினால் எதைச் சாதிக்க முடியும்' என்பதைக் காட்டுவதற்கு

அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்க நான் முன் வந்தேன்; 'மதிப்பு விதியை மீறாமல் என்பது மட்டுமல்ல, அவ்விதியின் அடிப்படையிலேயே, ஒரு சமமான சராசரி லாபவீதம் எந்த வீதத்தில் உருவாக முடியும், உருவாக வேண்டும்' என்பதை அவர்களுக்கெதிராக நான் காட்டினேன். அகம் சார்ந்தவையோ புறம் சார்ந்தவையோ ஆன காரணங்களுக்காக - ஆனால் வழக்கமாகவே விஞ்ஞான பூர்வமல்லாத சகலவகைக் காரணங்களுக்காகவும் - துணிச்சல் காரரான ராட்பெர்ட்டஸை முதல்தரமான ஒரு பொருளாதார நட்சத்திரமாக அந்த நேரத்தில் பிரமாதப்படுத்திக் கொண்டிருந்த இதே கனவான்கள், ஒருவர்கூட பாக்கியில்லாமல் , ஒரு விடையினை அளித்திடத் தவறி விட்டனர். ஆயினும், இப்பிரச்சினையில் ஈடுபடுவது உருப்படியானதே என மற்றவர்கள் கருதியுள்ளனர்.

இரண்டாம் பாகம் பற்றிய தனது விமர்சனத்தில் (Canrads Jahrbücher, XI, 1885, பக். 452-65), பேராசிரியர் லெக்சிஸ், ஒரு நேரடித்தீர்வை வழங்குவது பற்றிக் கவலைப்படாவிட்டாலும், இப்பிரச்சினையைக் கிளப்பியுள்ளார். அவர் சொல்கிறார்: 'பல்வேறு பண்டவகைகளும் தனித்தனியாக நோக்கப்பட்டால், அவற்றின் மதிப்பு அவற்றின் பரிவர்த்தனை மதிப்புக்குச் சமமாகவும், பின்னது அவற்றின் விலைக்குச் சமமாக அல்லது விகிதாச்சாரமுடையதாகவும் இருப்பதானால், (ரிக்கார்டோ-மார்க்ஸிய மதிப்பு விதிக்கும் ஒரு சமமான சராசரி லாபவீதத்துக்கும் இடையிலான) 'முரண்பாட்டைத் தீர்ப்பது அசாத்தியமாகும்.' அவரது கருத்துப்படி, 'நாம் தனிப்பட்ட பண்டங்களின் மதிப்பை உழைப்புக்கேற்ப அளவிடுவதை நிறுத்திவிட்டு, முழுமையான பண்ட உற்பத்தியையும் முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களின் ஒட்டுமொத்த வர்க்கங்களிடையிலான அவற்றின் பங்கீட்டையும் மட்டுமே நோக்கினால்'தான் தீர்வு சாத்தியமாகும். '....தொழிலாளிவர்க்கம் பெறுவது மொத்த உற்பத்திப் பொருளின் ஒரு குறிப்பிட்ட பாகத்தையே,....முதலாளிவர்க்கத்தின் பங்கைச் சேர்ந்திடும் மறுபாகம், மார்க்ஸீய் அர்த்தத்தில் உபரி உற்பத்திப் பொருளையும், அதன்படி....உபரி மதிப்பையும் குறிக்கிறது. பின்னர் முதலாளி வர்க்கத்தின் அங்கத்தினர்கள், தங்களால் வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கேற்ப அல்லாமல், ஒவ்வொருவராலும் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்துக் கேற்ற விகிதாச்சாரத்திலேயே-நிலமும் மூலதனமதிப்பாகக் கணக்கிடப்படுகிறது-இந்த மொத்த உபரி மதிப்பைத் தங்களிடையே பிரித்துக் கொள்கின்றனர்.' பண்டங்களில் உள்ளிணைக்கப்பட்ட உழைப்பின் அலகுகளால் நிர்ணயிக்கப்படும் மார்க்ஸியக் கருத்தியல் மதிப்புகள் விலைகளுக்கு ஏற்ப அமைவதில்லை, ஆனால் 'வாஸ்தவமான விலைகளுக்கு இட்டுச் செல்லுகின்ற ஒரு மாற்றத்தின் துவக்கப்புள்ளிகளாகவே மதிக்கப்படலாம். இவ்விலைகள், சம மூலதனத் தொகைகள் சமலாபங்களைக் கோருகின்றன என்ற உண்மையைச் சார்ந்துள்ளன'. இக்காரணத்தால் சில முதலாளிகள் தம் பண்டங்களுக்கான கருத்தியல் மதிப்புகளைக் காட்டிலும் உயர்ந்த விலைகளையும், மற்றவர்கள் குறைந்த விலைகளையும் ஈட்டுவர். 'உபரி மதிப்பின் இழப்புகளும் ஆதாயங்களும் முதலாளி வர்க்கத்துக்குள்

ஒன்றையொன்று நேர் செய்துவிடுவதால், உபரிமதிப்பின் மொத்த அளவு, எல்லா விலைகளும் கருத்தியல் மதிப்புகளுக்கு விகிதாச்சார முடையவையாய் இருந்தால் எப்படியிருக்குமோ அப்படியே உள்ளது.'

இங்கே பிரச்சினை எவ்விதத்திலும் தீர்க்கப்பட்டுவிடவில்லை, ஆனால், ஓரளவு தொய்வாகவும் ஆழமற்றும் என்ற போதிலும், மொத்தத்தில், சரியாகத் தெளிந்துரைக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு. மேற்கண்ட நூலாசிரியரைப் போன்று, ஒரு 'கொச்சைப் பொருளாதார அறிஞராக' இருப்பதில் ஒரு நிச்சயமான பெருமை இருப்பதாகக் கருதுகின்ற ஒருவரிடமிருந்து நாம் எதிர்பார்த்திருக்கக் கூடியதைக் காட்டிலும், உள்ளபடியே இது அதிகமாகும். நாம் பின்னர் ஆராயவிருக்கும் மற்ற கொச்சைப் பொருளாதார அறிஞர்களின் கைவரிசையுடன் ஒப்பிடும்போது இது நிஜமாகவே வியப்புக் குரியதாகும். எப்படிப்பார்த்தாலும் லெக்சிஸின் கொச்சைப் பொருளாதாரம் தனி ரகமானது. எப்படியாயினும் மூலதன ஆதாயங்கள் மார்க்ஸினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வழியில் வருவிக்கப்படக்கூடும் என்றும், ஆனால் இக்கருத்தை ஏற்கவேண்டிய கட்டாயம் ஒன்றுமில்லை என்றும் அவர் சொல்கிறார். மாறாக, அதிகம் நியாயமானதெனத் தோன்றக்கூடிய ஒருவிளக்கமாவது கொச்சைப் பொருளாதாரத் திடமுள்ளது என்று அவர் சொல்கிறார்; அதாவது: 'கச்சாப் பொருட்களின் உற்பத்தியாளர், தொழிலதிபர், மொத்த வியாபாரி, சில்லரை வியாபாரி போன்ற முதலாளித்துவ விற்போர் எல்லோருமே, வாங்கும் விலையைக்காட்டிலும் உயர்ந்த ஒரு விலைக்கு விற்பதன் மூலம் தங்கள் கொடுக்கல் வாங்கல்களின் மீது ஓர் ஆதாயத்தைச் சம்பாதிக்கின்றனர், இவ்வாறு தாங்களே பண்டத்துக்குத் தருகின்ற விலையை ஒரு குறிப்பிட்ட சதவீதம் உயர்த்திவிடுகின்றனர். இது போன்ற ஒரு கூடுதல் மதிப்பைத் தன் பண்டத்துக்குப் பெற முடியாதிருப்பவன் தொழிலாளி மட்டுமே; முதலாளியுடன் ஒப்பு நோக்கின் அவனுக்குள்ள பாதக நிலைமையின் காரணத்தால், தன் உழைப்பை அதன் அடக்கவிலைக்கே, அதாவது அவனது அத்தியாவசிய ஜீவனோபயங்களுக்காகும் விலைக்கே விற்குமாறு அவன் நிர்ப்பந்திக்கப்படுகிறான்....இவ்வாறு, இவ்விலையுயர்வுகள் வாங்குந் தொழிலாளி தொடர்பாக தம் முழு பாதிப்பைத் தக்க வைத்துக் கொள்கின்றன; மொத்த உற்பத்திப் பொருளின் மதிப்பின் ஒரு பகுதி முதலாளிவர்க்கத்துக்கு மாற்றித் தரப்படக் காரணமாகின்றன.'

'கொச்சைப் பொருளாதாரத்தால்' முன்வைக்கப்பட்டுள்ளபடி மூலதனத்தின் லாபங்களுக்கான இந்த விளக்கமும், மார்க்ஸிய உபரி மதிப்புத்தத்துவமும் நடைமுறையில் ஒன்றே என்பதையும், தொழிலாளர்களின் 'பாதகமான நிலைமை' என்பது லெக்சிஸின் கருத்துப்படியும் மார்க்ஸின் கருத்துப்படியும் ஒன்றே என்பதையும், தொழிலாளியல்லாத ஒவ்வொருவனும் பண்டங்களை விலைகூட்டி விற்கமுடியும் என்னும் அதே நேரத்தில் தொழிலாளி அப்படிச் செய்யமுடியாது என்பதால் அவர்கள் அதே அளவுக்கே மோசடிக்கு இரையாகின்றனர் என்பதையும், இத்தத்துவத்தின் அடிப்படையில் குறைந்தபட்சம் அதே அளவு நியாயமெனத் தோன்றக்கூடிய கொச்சை சோஷலிசத்தைக் கட்டியெழுப்புவது, ஜெவோன்ஸி

# КАПИТАЛЪ

## КРИТИКА ПОЛИТИЧЕСКОЙ ЭКОНОМІИ

СОЧИНЕНІЕ

**КАРЛА МАРКСА**

изданное подъ редакціей Фридриха Энгельса

Переводъ съ нѣмецкаго

ТОМЪ ТРЕТІЙ

Книга III

**ПРОЦЕССЪ КАПИТАЛИСТИЧЕСКАГО ПРОИЗВОДСТВА ВЗЯТЫЙ ВЪ ЦѢЛОМЪ.**

С.-ПЕТЕРБУРГЪ
1896

மூலதனம் மூன்றாம் பாகம் முதல் ருஷ்யப் பதிப்பின் மேலட்டை
(சிறிதாக்கியது)

னுடைய மற்றும் மெங்கரினுடைய பயன்மதிப்பு. மற்றும் எச்சவகைப் பயனுடைமைத் தத்துவத்தின் அஸ்திவாரத்தின் மீது இங்கிலாந்தில் எழுப்பப்பட்ட கொச்சை சோஷலிஸத்தினளவுக்கே சுலபமானதாகும் என்பதையும் காண்பதற்கு, சிந்தனைச் சக்திகளைச் சிரமப்படுத்தத் தேவையில்லை. திரு ஜார்ஜ் பெர்னார்ட்ஷா இந்த லாபத்தத்துவத்தை அறிந்திருப்பாரேயானால், அநேகமாக அவர், ஜெவோன்ஸையும் காரல் மெங்கரையும் உதறிவிட்டு, இந்தப்பாறையின் மீது வருங்காலத்தின் ஃபேபியன் திருச்சபையைப் புதிதாக நிர்மாணித்திட இரு கரங்களாலும் உழைத்திட முனைந்திருப்பார் என்றுங்கூட நான் சந்தேகிக்கிறேன்.

ஆயினும், யதார்த்தத்தில் இத்தத்துவம் மார்க்ஸியத் தத்துவத்துக்கான ஒரு பொழிப்புரைதான். விலைக் கூட்டல்கள் அனைத்தையும் ஈடுகட்டுவது எது? தொழிலாளர்களின் 'மொத்த உற்பத்திப் பொருள்'தான். 'உழைப்பு' என்னும் பண்டம், அல்லது மார்க்ஸ் கூறுவது போல உழைப்புச்சக்தி, அதன் விலைக்குக் கீழாக விற்கப்பட வேண்டியிருப்பதே இதற்குக் காரணம். ஏனெனில் உற்பத்திச் செலவைக் காட்டிலும் உயர்ந்த விலைக்கு விற்கப்படுவது பண்டங்களனைத்தின் பொதுவானதொரு குணாம்சமாயிருக்க, உழைப்பு மட்டுமே - அது எப்போதுமே உற்பத்திச் செலவுக்கே விற்கப்படுவதால் - இதற்கு விதிவிலக்காகுமென்றால், உழைப்பானது இந்தக் கொச்சைப் பொருளாதார உலகில் விளங்குகின்ற விலைக்குக் கீழாக விற்கப்படுகிறது. அவ்வளவுதான். எனவே, கடைசியாகப் பார்த்தால், இதன் விளைவாக முதலாளிக்கு அல்லது முதலாளிவர்க்கத்துக்குப் போய்ச் சேருகின்ற கூடுதல் லாபமானது, தொழிலாளி தன் உழைப்புச்சக்தியின் விலைக்கான சமதையை மறு உற்பத்தி செய்த பின்னர், ஊதியமளிக்கப் பெறாத ஒரு கூடுதல் உற்பத்திப் பொருளை - அதாவது ஓர் உபரி உற்பத்திப் பொருளை, ஊதியமில்லாத உழைப்பின் ஓர் உற்பத்திப் பொருளை, அல்லது உபரி மதிப்பை- உற்பத்தி செய்யவேண்டும் என்ற உண்மையிலிருந்து பிறக்கிறது, அவ்வுண்மையிலிருந்தே அது பிறக்க முடியும். தனது பதங்களைத் தேர்ந்தெடுப்பதில் லெக்சிஸ் மிக மிக உஷாரானவர். மேற்கண்டது தன் சொந்தக் கருத்தமைவென்று அவர் எங்கும் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. ஆனால் அது அவரது சொந்தக் கருத்தமைவாக இருக்குமேயானால், மார்க்ஸின் பார்வையில் அவர்களில் ஒவ்வொருவரும் 'உயர்ந்தபட்சமாகச் சொன்னால் கடைத்தேற வழியற்ற ஓர் அறிவிலியே' என்று யாரைப்பற்றி அவரே சொல்கிறாரோ, அந்தச் சாதாரண கொச்சைப் பொருளாதார அறிஞர்களில் ஒருவரைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கவில்லை. ஒரு கொச்சைப் பொருளாதார அறிஞராக வேடம் பூண்ட ஒரு மார்க்ஸியவாதியைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறோம் என்பது வெள்ளிடைமலை. இந்த வேடம் உணர்வுபூர்வமாக நேர்ந்துள்ளதா, அல்லது உணர்வு பூர்வமற்று நேர்ந்துள்ளதா என்பது மனோதத்துவம் சார்ந்த ஒரு பிரச்சினையாகும்; இது பற்றி இந்தக்கட்டத்தில் நமக்கு அக்கறையில்லை. அக்கறையெடுத்து இதனை ஆராய்கின்ற எந்த ஒருவரும், லெக்சிஸ் போன்ற ஒரு மதியூகி - லெக்சிஸ் ஒரு மதியூகி என்பதில் ஐயமில்லை - ஒரு நேரத்தில் ஈருலோகக் கொள்கை போன்ற அபத்தத்துக்காக வாதாட முடிந்தது எப்படி என்பதையும் ஆராயக்கூடும்.

Die Durchschnitts profitrate auf Grundlage des Marx'schen Werthgesetzes ஸ்டட்கார்ட், டீட்ஸ், 1889-என்று தலைப்பிட்ட தனது பிரசுரத்தில் டாக்டர் கான்ராடு ஷ்மிட்தான் முதன் முதல் நிஜமாகவே இக் கேள்விக்கு விடையளிக்க முயன்றார். சந்தை விலைகளின் உருவாக்கம் பற்றிய விவரங்களை மதிப்பு விதி, சராசரி லாபவீதம் ஆகிய இரண்டுடனும் ஒத்துப் போகச் செய்ய ஷ்மிட் முயல்கிறார். தனது உற்பத்திப்பொருளின் உருவில் தொழில் முதலாளி, முதலாவதாக தான் முன்னிட்டுள்ள மூலதனத்தின் சமதையொன்றையும், இரண்டாவதாக தான் ஊதியமேதும் செலுத்தியிராத ஓர் உபரி உற்பத்திப் பொருளையும் பெறுகிறான். ஆனால் ஓர் உபரி உற்பத்திப் பொருளைப் பெற்றிட, அவன் உற்பத்திக்கு மூலதனத்தை முன்னிட வேண்டும். அதாவது, இந்த உபரி உற்பத்திப் பொருளைத் தனதாக்கிக் கொள்ள இயலும் பொருட்டு, அவன் பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்பின் ஒரு குறிப்பிட்ட அளவைப் பிரயோகிக்க வேண்டும். ஆகவே முதலாளியைப் பொறுத்தவரை, அவன் முன்னிடுகின்ற மூலதனம், அவன் இந்த உபரி உற்பத்திப் பொருளை ஈட்டிட சமுதாய ரீதியில் அவசியமான பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்பின் அளவைக் குறிக்கிறது. இது ஒவ்வொரு தொழில் முதலாளிக்கும் பொருந்துகிறது. இப்போது, மதிப்பு விதியின்படி, பண்டங்கள் அவற்றின் உற்பத்திக்கு சமுதாய ரீதியில் அவசியமான உழைப்புக்கேற்ற விகிதாச்சாரத்தில் பரஸ்பரம் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன என்பதாலும், முதலாளியைப் பொறுத்தவரை, உபரி உற்பத்திப் பொருளின் தயாரிப்புக்கு அவசியமான உழைப்பென்பது அவனது மூலதனத்தில் திரட்சி செய்யப்பட்ட கடந்தகால உழைப்பாக இருக்க நேரிடுகிறது என்பதாலும், உபரி உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுவது அவற்றின் உற்பத்திக்குத் தேவைப்பட்ட மூலதனத் தொகைகளுக்கேற்ற விகிதாச்சாரத்திலேயே, அவற்றில் வாஸ்தவமாக உள்ளிணைக்கப்பட்ட உழைப்புக்கேற்ற விகிதாச்சாரத்தில் அல்ல என்றாகிறது. ஆகவே ஒவ்வொரு மூலதன அலகின் பங்கும், உற்பத்தி செய்யப்பட்ட உபரி மதிப்புகளனைத்தின் கூட்டுத் தொகையை உற்பத்தியில் செலவிடப்பட்ட மூலதனங்களின் கூட்டுத் தொகையால் வகுத்து வருவதற்குச் சமமாகும். இதன்படி, சம மூலதனத் தொகைகள் சமகால அளவுகளில் சமலாபங்களை ஈந்திடுகின்றன; இப்படிக் கணக்கிடப்படும் உபரி உற்பத்திப் பொருளின் அடக்கவிலையை, அதாவது சராசரி லாபத்தை ஊதியமளிக்கப் பெற்ற உற்பத்திப் பொருளின் அடக்கவிலையோடு கூட்டுவதன் மூலமும், ஊதியமளிக்கப் பெற்ற உற்பத்திப் பொருள் ஊதியமளிக்கப் பெறாத உற்பத்திப் பொருள் இரண்டையுமே இந்த அதிகரித்த விலைக்கு விற்பதன் மூலமும் இது சாதிக்கப்படுகிறது. ஷ்மிட் கருதுவது போலச் சராசரிப் பண்டவிலைகள் மதிப்பு விதியால் தீர்மானிக்கப்பட்ட போதிலும், சராசரி லாபவீதம் உருப்பெறுகிறது.

இவ்வியாக்கியானம் அதிசாமர்த்தியமானது. இது முழுக்கவும் ஹெகலிய மாதிரியின் பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் பெரும்பாலான ஹெகலிய வியாக்கியானங்களைப் போன்றே இதுவும் சரியானதல்ல. உபரி

உற்பத்திப் பொருளோ ஊதியமளிக்கப் பெற்ற உற்பத்திப் பொருளோ, வேறுபாடேதுமில்லை. மதிப்பு விதி சராசரி விலைகளுக்கும் நேரடியாகச் செல்லுபடியாக வேண்டுமானால், அவையிரண்டுமே அவற்றை உற்பத்தி செய்வதில் தேவைப்பட்டு செலவிடப்பட்ட சமுதாய ரீதியில் அவசியமான உழைப்புக்கேற்ற விகிதாச்சாரமுடைய விலைகளுக்கு விற்கப்பட வேண்டும். மூலதனத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள கடந்த காலத்திய திரட்சியடைந்த உழைப்பென்பது பூர்த்தியான மதிப்பின் ஒரு குறிப்பிட்ட தொகை மட்டுமல்ல, உற்பத்தியிலும் லாபத்தின் உருவாக்கத்திலும் ஒரு காரணியென்பதால் அது மதிப்பையும் உற்பத்தி செய்கிறது என்ற - முதலாளித்துவ சிந்தனை முறையிலிருந்து வருவிக்கப்பட்ட - கருத்துக்கு எதிராக மதிப்பு விதி துவக்க முதலே குறிவைக்கிறது; உயிர்வாழும் உழைப்பு மட்டுமே அந்தச் சக்தியைப் பெற்றுள்ளது என அது நிலைநாட்டுகிறது. முதலாளிகள் தங்கள் லாபங்களுக்கேற்ற விகிதாச்சாரமுடைய சம, லாபங்களை எதிர்பார்க்கின்றனர், தங்களது மூலதன முன்னீடுகளைத் தங்கள் லாபங்களின் ஒருவகையான அடக்கவிலையாக மதிக்கின்றனர் என்பது நன்கு தெரிந்ததே, ஆனால் சராசரி லாபவீதத்தின் அடிப்படையிலான விலைகளை மதிப்பு விதியோடு ஒத்துப்போகச் செய்வதற்கான ஒரு வழியாக இக்கருத்தமைவை ஷ்மிட் பயன்படுத்துகிறார் என்றால், மதிப்பு விதிக்கு முற்றிலும் மாறான ஒரு கருத்தமைவை அதன் சக நிர்ணயக் காரணிகளில் ஒன்றாக அதற்குரித்தாக்குவதன் மூலம் அவர் அம்மதிப்பு விதியையே மறுதலிக்கிறார்.

ஒன்று, திரட்சியடைந்த உழைப்பும் உயிர்வாழும் உழைப்பைப் போலவே மதிப்பைப்படைக்கிறது. அப்படியானால் மதிப்பு விதி பொருந்துவதில்லை.

அல்லது, அது மதிப்பை சிருஷ்டிப்பதில்லை. அப்படியானால், ஷ்மிட்டின் நிருபணம் மதிப்புவிதியோடு ஒத்துவராது.

தீர்வை நெருங்கியே விட்டபோது, ஷ்மிட் இந்தக் கிளைப்பாதைக்குள் தவறி நுழைந்துவிட்டார்; ஏனென்றால் ஒவ்வொரு தனிப் பண்டத்தின் சராசரி விலையும் மதிப்பு விதிக்கு ஏற்ப அமைவதை நிருபிப்பதற்கு ஒரு கணிதச் சூத்திரமே - அதற்குக் குறைவாக எதுவுமல்ல - தனக்குத் தேவைப்படுவதாக அவர் நம்பினார். ஆனால், இந்த உதாரணத்தில், இலக்கின் உடனடி அண்மையில் தடந்தவறினார். என்னும் அதே நேரத்தில், அவரது புத்தகத்தின் மீதப் பகுதி, மூலதனத்தின் முதல் இரு பாகங்களிலிருந்தும் மேற்கொண்டு முடிவுகளை எடுத்ததில் அவர் காட்டிய புரிதலுக்குச் சான்றாகும். இதுவரை விளங்காதிருந்த, லாபவீதத்தின் மூழ்கும் போக்கிற்கு மூன்றாம் பாகத்தின் மூன்றாம் பகுதியில் மார்க்ஸ் வளர்த்தெடுத்த சரியான விளக்கத்தைச் சுயேச்சையாகக் கண்டுபிடித்ததும், இதேபோல், தொழில் ரீதியான உபரி மதிப்பிலிருந்து வர்த்தக லாபத்தின் வருவிப்பை விளக்கியதும், வட்டி மற்றும் நிலவாரம் தொடர்பாக ஏராளமான அபிப்பிராயங்களை வெளியிட்டதும் அவரது பெருமையாகும்; இவ்வபிப்பிராயங்களில் அவர், மூன்றாம் பாகத்தின் நான்காவது, ஐந்தாவது பகுதிகளில் மார்க்ஸ் வளர்தெடுத்த கருத்துக்களை முன்னறிகிறார்.

அடுத்து ஒரு கட்டுரையில் (Neue Zeit, 1892-93, எண்கள் 3 மற்றும் 4), ஷ்மிட் பிரச்னையைத் தீர்ப்பதற்கான தன் முயற்சியில் வேறொரு வழியைப் பின்பற்றுகிறார். சராசரிக்குக் கீழான லாபத்தோடு கூடிய உற்பத்திக் கிளைகளிலிருந்து சராசரிக்கு மேலான லாபத்தோடு கூடிய கிளைகளுக்கு மூலதனம் மாற்றப்படக் காரணமாவதன் மூலம், சராசரி லாப வீதத்தைத் தோற்றுவிப்பது போட்டியே என்று அவர் வாதிடுகிறார். போட்டி என்பது லாபங்களின் பெரும் சமப்படுத்தியாகும் என்ற ஒரு விஷயத்தின் வெளிப்படுத்தலல்ல இது. ஆனால், இப்போது ஷ்மிட், லாபங்களின் இந்த மட்டப்படுத்தலும், எச்ச சப்ளையிலுள்ள பண்டங்களின் விற்பனை விலையை மதிப்பு விதியின்படி அவற்றுக்குச் சமுதாயம் தரக்கூடிய ஒரு மதிப்புப் பருமனாகக் குறைப்பதும் ஒன்றே என்று நிரூபிக்க முயல்கிறார். இந்த வழியிலும் இலக்கை அடைய முடியாது என்பதற்கு, புத்தகத்திலுள்ள மார்க்ஸின் பகுப்பாய்வுகளே போதுமான சான்றாகும்.

ஷ்மிட்டுக்குப் பின்னர் பி.ஃபயர்மன் இப் பிரச்சினையைச் சமாளிக்கப் பார்த்தார் (Conrads Jahrbücher, dritte Folge, III, பக். 793) மார்க்ஸியப் பகுப்பாய்வின் மற்ற அம்சங்கள் பற்றிய அவரது கூற்றுக்களை நான் ஆராயப்போவதில்லை. தான் வெறுமனே ஆராயுமிடத்து மார்க்ஸ் இலக்கணங் கூற ஆசைப்படுகிறார் என்ற, பொதுவாக மார்க்ஸின் படைப்புகளில் நிலையான, அளவெடுத்து வார்க்கப்பட்ட, நிரந்தரமாகப் பிரயோகிக்கத்தக்க இலக்கணங்களை எதிர்பார்க்கலாம் என்ற, தவறான அனுமானத்தை அவை அடிப்படையாகக் கொண்டுள்ளன. விஷயங்களும் அவற்றின் பரஸ்பர உறவுகளும் நிலையானவையாக அன்றி மாறுவனவாகவே புரிந்து கொள்ளப்படுமிடத்து, அவற்றின் மனத்தோற்றங்களான கருத்துக்களும் அதேபோல் மாறுதலுக்கும் மாற்றத்துக்கும் உட்பட்டவையே என்பதுதானே தெளிவாகும்; அவை வளைந்து கொடுக்காத இலக்கணங்களில் அடைத்துவைக்கப்படுவதில்லை, அவற்றின் வரலாற்று ரீதியான அல்லது தர்க்கரீதியான உருவாக்கச் செயல் முறையில் வளைக்கப்படவே செய்கின்றன. தனது முதல்புத்தகத்தின் துவக்கத்தில் மார்க்ஸ் எளிய பண்ட உற்பத்தியை வரலாற்று ஆதாரமாகக் கொண்டு துவங்குவதும் இந்த அடிப்படையிலிருந்து இறுதியாக மூலதனத்துக்குப் போய்ச் சேருவதும் ஏன் என்பதை, தர்க்கரீதியிலும் வரலாற்று ரீதியிலும் இரண்டாம் நிலையான ஒருவடிவத்துக்குப் பதிலாக எளிய பண்டத்திலிருந்து -ஏற்கனவே முதலாளித்துவ ரீதியில் மருவிய பண்டத்திலிருந்து - அவர் துவங்குவது ஏன் என்பதை, இது தெளிவுபடுத்தத் தான் செய்கிறது. பி.ஃபயர்மன் இதனைத் திட்டவட்டமாகக் காணத் தவறிவிடுகிறார் என்பதில் ஐயமில்லை. விஷயத்தின் சாரத்திற்கு நாம் உடனடியாகச் செல்கையில், இவற்றையும் இன்னும் மற்ற பலவாறான ஆட்சேபனைகளைச் கிளப்பிவிடக்கூடிய மற்ற துணைப்பிரச்சினைகளையும் ஒதுக்குப்புறமாக விட்டுவிடுவதே மேல். உபரி மதிப்பு வீதம் நிர்ணயமானதாய் இருக்க, ஈடுபடுத்தப்பட்ட உழைப்புச் சக்திக்கேற்ற விகிதாச்சாரமுடையதாய் உபரி மதிப்பு உள்ளது என்ற தத்துவம் பி.ஃபயர்மனுக்குச் கற்றுக் கொடுக்கும் அதே நேரத்தில், சராசரி லாபவீதம் நிர்ணயமானதாயிருக்க, ஈடுபடுத்தப்பட்ட

மொத்த மூலதனத்துக்கேற்ற விகிதாச்சாரமுடையதாய் லாபம் உள்ளது என்று அனுபவத்திலிருந்து அவர் கற்றுக் கொள்கிறார். லாபம் என்பது வெறுமனே ஒரு மரபுசார்ந்த நிகழ்வுதான் என்று கூறுவதன் மூலம் அவர் இதனை விளக்குகிறார். (அது ஒரு திட்டமான சமுதாய வடிவமைப்புக்குச் சொந்தமானது, அது வாழ்வதும் வீழ்வதும் இவ்வமைப்புடன் சேர்ந்தே என்பது அவரது பாஷையில் இதன் பொருளாகும்), அதன் வாழ்வு மூலதனத்தோடு சர்வசாதாரணமாகப் பிணைக்கப்பட்டுவிடுகிறது. மூலதனமானது, தனக்கென்றே ஒரு லாபத்தை ஈட்டிக் கொள்ளப் போதுமான வலுவுடையதாக இருந்தால், அனைத்து மூலதனத் தொகைகளின் விஷயத்திலும் சமமானதாகிய ஒரு லாப வீதத்தையும் தனக்கென்றே ஈட்டிக் கொள்ளுமாறு போட்டியால் நிர்ப்பந்திக்கப்படுகிறது. ஒரு சமமான லாபவீதம் இல்லாமல் முதலாளித்துவ உற்பத்தி என்பதே அசாத்தியமாகிறது. இந்த உற்பத்தி முறை நிலவுவதாக வைத்துக் கொண்டால், தனி முதலாளிக்கான லாபஅளவு, ஒரு குறிப்பிட்ட லாப வீதத்தில், அவனது மூலதனத்தின் பருமனை மட்டுமே பொறுத்திருக்க முடியும். மறுபுறம், லாபம் உபரி மதிப்பாலானதாகும், ஊதியம் தரப்படாத உழைப்பாலானதாகும். ஆனால் உழைப்புச் சுரண்டலின் மட்டத்தைச் சார்ந்துள்ள பருமனையுடைய உபரிமதிப்பு, ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்தின் அளவைப் பொறுத்துள்ள பருமனையுடைய 'லாபமாக மாற்றப்படுவது எப்படி? 'மாறா மூலதனத்துக்கும் மாறும் மூலதனத்துக்கும் இடையிலான விகிதம் மிகப் பெரிதாயுள்ள அனைத்து உற்பத்திக் கிளைகளிலும் பண்டங்களை அவற்றின் மதிப்புக்கு மேலாக வைத்து விற்பதன் மூலம்தான்; ஆனால் மாறா மூலதனத்துக்கும் மாறும் மூலதனத்துக்கும் இடையிலான விகிதம்= C:V மிகச் சிறிதாயுள்ள உற்பத்திக்கிளைகளில் பண்டங்கள் அவற்றின் மதிப்புக்குக் கீழாக வைத்து விற்கப்படுகின்றன என்பதும், C:V என்னும் விகிதம் ஒரு குறிப்பிட்ட நடுவாந்திர எண்ணாக உள்ள கிளைகளில் மட்டுமே பண்டங்கள் அவற்றின் உண்மையான மதிப்புக்கு விற்கப்படுகின்றன என்பதும் கூட இதன் உட்கிடக்கையாகும்....தனி விலைகளுக்கும் முறையே அவற்றின் மதிப்புகளுக்கும் இடையிலான இந்த முரண்பாடு மதிப்புக் கோட்பாட்டை மறுப்பதாகுமா? இல்லவே இல்லை. ஏனெனில், சில பண்டங்களின் விலைகள் அவற்றின் மதிப்புக்கு மேலாக உயர்வதென்பது, மற்ற பண்டங்களின் விலைகள் அதற்குக் கீழாகக் குறைகின்ற அளவுக்கே என்பதால், விலைகளின் மொத்தத் தொகை மதிப்புகளின் மொத்தத் தொகைக்குச் சமமாகவே இருந்து வருகிறது..... முடிவில் இந்த ஒவ்வாமை மறைகிறது.' இந்த ஒவ்வாமை ஒரு 'தொந்தரவு' ஆகும்; 'ஆயினும் சரிநுட்பமான விஞ்ஞானங்களில், ஒரு முன்னறியக்கூடிய தொந்தரவை ஒரு விதியின் மறுப்பாக மதிப்பது வழக்கமல்ல'.

அத்தியாயம் IX-ல் வரும் இது தொடர்பான நூற்பகுதிகளை மேற்கண்டதுடன் ஒப்பிடும்போது, ஃபயர்மன் உள்ளபடியே முக்கியமான அம்சத்தில் கைவைத்துள்ளார் என்பது தெரிய வரும். ஆனால் அவரது ஆற்றல்மிக்க கட்டுரையின்பால் காட்டப்பட்டுள்ள அதன் தகுதிக்கு மாறான உற்சாகமில்லாப் போக்கானது, இந்தக்கண்டுபிடிப்புக்குப்பின்னரும் கூட, ஒரு முழுமையான, நிறைவான தீர்வினை ஃபயர்மன் வகுப்பதைச் சாத்தியமாக்கிட எத்தனை பரஸ்பரத்

தொடர்புள்ள கண்ணிகள் இன்னும் தேவைப்படும் என்பதை காட்டுகிறது. பலர் இந்தப் பிரச்சினையில் அக்கறை காட்டியபோதிலும், அவர்களனைவரும் வம்பில் மாட்டிக் கொள்வது பற்றி இன்னமும் அச்சப்படுகிறார்கள். ஃபயர்மன் தனது கண்டுபிடிப்பை முழுமையற்ற வடிவத்தில் விட்டுவைத்ததால் மட்டுமல்ல, மார்க்ஸியப் பகுப்பாய்வு பற்றிய அவரது புரிதல், அவரது தவறான புரிதலின் அடிப்படையிலான அதுபற்றிய அவரது சொந்தப் பொது விமர்சனம் ஆகிய இரண்டிலுமே அடங்கியுள்ள மறுக்கமுடியாத கோளாறினாலும், இது விளக்கப்படுகிறது.

ஏதாவது சிரமான விஷயம் குறித்துத் த்ன்னைத்தான் முட்டாளாக்கிக் கொள்ள ஒரு வாய்ப்புக் கிட்டும்போதெல்லாம், ஜுரிச்சைச் சேர்ந்த உயர்திரு பேராசிரியர் ஜுலியஸ் வொல்ஃப் அந்த வாய்ப்பைத் தவறவிடுவதேயில்லை. பிரச்சினை முழுவதும் ஒப்பீட்டு உபரி மதிப்பில் தீர்க்கப்படுவதாக அவர் நமக்குச் சொல்கிறார் (Conrads Jahrbücher, 1891, dritte Folge, II, பக்.352. மற்றும் அடுத்து வருவன). ஒப்பீட்டு உபரி மதிப்பின் உற்பத்தி என்பது, மாறும் மூலதனத்தோடு ஒப்புநோக்கின் மாறா மூலதனம் அதிகரிப்பதைச் சார்ந்துள்ளது. 'மாறா மூலதனத்திலான ஒரு கூட்டல் தொழிலாளர்களின் உற்பத்தித் திறனிலான ஒரு கூட்டலை முன்தேவையாகக் கொண்டுள்ளது. உற்பத்தித்திறனிலான இந்தக் கூட்டல் (தொழிலாளியின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதென்னும் வழியில்) உபரி மதிப்பில் ஒரு கூட்டலைத் தோற்றுவிக்கிறது என்பதால், அதிகரிக்கும் உபரி மதிப்புக்கும் மொத்த மூலதனத்தில் மாறா மூலதனத்தின் அதிகரிக்கும் பங்குக்கும் இடையே ஒரு நேரடி உறவு நிலைநாட்டப்படுகிறது. மாறா மூலதனத்திலான ஒரு கூட்டல் உழைப்பின் உற்பத்தித் திறனிலான ஒரு கூட்டலைச் சுட்டுகிறது. ஆகவே மாறும் மூலதனம் இருந்தபடி இருக்க, மாறா மூலதனம் அதிகரிக்க, மார்க்ஸின் கருத்துப்படி உபரிமதிப்பும் அதிகரிக்க வேண்டும். நம்முன் சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினை இதுவே.'

முதல் புத்தகத்தில் ஒரு நூறு இடங்களில் மார்க்ஸ் இதற்கு நேர் எதிரானதைச் சொல்கிறார் என்பது உண்மை; மார்க்ஸின் கருத்துப்படி, மாறும் மூலதனம் சுருங்கும்போது, மாறா மூலதனத்திலான அதிகரிப்புக்கேற்ற விகிதாச்சாரத்தில் ஒப்பீட்டு உபரிமதிப்பு அதிகரிக்கிறது என்ற கூற்று, பாராளுமன்ற முழக்கமனைத்தையும் வெட்கிட வைக்குமளவுக்குத் திகைப்பூட்டுவதாகும் என்பது உண்மை, ஒப்பீட்டு உபரிமதிப்பு அல்லது அறுதி உபரி மதிப்பு என்ற கருத்தமைவுகளை, ஒப்பீட்டு ரீதியாக வென்றாலும் அறுதியாகவென்றாலும், அவர் சிறிதும் புரிந்து கொள்வதில்லை என்பதைத் தனது ஒவ்வொரு வரியிலும் உயர்திரு ஜூலியஸ் வொல்ப் மெய்ப்பிக்கிறார் என்பது உண்மை; 'முதல் பார்வையில், நாம் நிஜமாகவே ஒவ்வாமைகளின் கூடாரமொன்றில் இருப்பதாகத் தோன்றுகிறது' என்று அவரே சொல்கிறார் என்பதை ஒப்புக் கொள்கிறேன்; அவரது முழுக் கட்டுரையிலும் ஒரே உண்மையான கூற்று இதுதான் என்பதையும் இங்கே சொல்லி வைக்கலாம். ஆனால் அதனாலெல்லாம் என்ன? இதற்காக மார்க்ஸிற்கு அவர் இறந்துவிட்ட போதிலும் புகழாரம் சூட்டாமலிருக்கவும், 'முதலாளித்துவப்

பொருளாதாரம் பற்றிய அவரது (மார்க்ஸின்) விமர்சனமுறை விவரிக்கப்பட்டுள்ள தீர்க்கமான, தொலைநோக்குள்ள விதத்துக்கான ஒரு புதிய நிரூபணம்' என்று தன் சொந்த ஆழங்காண முடியாத அபத்தத்தை மெச்சிக் கொள்ளாமலிருக்கவும் அவரால் முடியவில்லை என்னுமளவுக்கு, உயர்திரு ஜூலியஸ் வொல்.:.ப் தனது பிரகாசமான கண்டுபிடிப்புப் பற்றிப் பெருமைப்படுகிறார்.

ஆனால் இப்போது வருவதுதான் அனைத்திலும் சுவையானது. உயர்திரு வொல்.:.ப் சொல்கிறார்:' ஒரே உழைப்புச் செலவீடு ஒரே உபரிமதிப்பை (அதன் அளவு தொடர்பாக)ப் படைப்பது போலவே, ஒரு சமமான மூலதனமுதலீடு சமமான உபரிமதிப்பை (லாபத்தை)த் தருகிறது என்று ரிக்கார்டோவும் கூறியிருக்கிறார். ஒன்று மற்றதோடு உடன்படுவது எப்படி என்பதே இப்போது பிரச்சினையாக இருந்தது. ஆனால் பிரச்சினையை இவ்விதத்தில் முன்வைப்பதை மார்க்ஸ் ஏற்க மறுத்துள்ளார். இரண்டாவது கூற்று மதிப்பு விதியின் ஒரு விளைவாக இருக்க அவசியமில்லை என்பதையும் அது அவரது மதிப்பு விதியோடு முரண்படக்கூடச் செய்கிறது, ஆகவே அதனை .... உடனடியாக நிராகரித்துவிட வேண்டும் என்பதையும் (மூன்றாம் பாகத்தில்) அவர் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளார்.' அத்துடன் வொல்.:.ப், எங்களிருவரில் தவறிழைத்தது யார், மார்க்ஸா நானா என்பதை ஆராய்கிறார். இருளில் தடுமாறிக் கொண்டிருப்பது தானே என்பது இயல்பாகவே, அவருக்குப்படுவதில்லை.

இச்சுவைமிகு கவளத்திற்காக ஒரேஒரு வார்த்தையை நான் வீணடித்தாலும் என் வாசகர்களை அவமதித்தவனாவேன், நிலைமையின் நகைச் சுவையைக் காணத் தவறியவனாவேன். கான்ராடு ஷ்மிட்டின் மேற்சொன்ன படைப்பு 'நேரடியாக எங்கல்ஸின் ஊக்கம் பெற்றதாகும்' என்று பேராசிரியர்கள் மத்தியில் ஏதோ கிசு கிசுப் பேச்சு அடிப்பட்டதாகத் தெரிவிப்பதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டதில் அவர் காட்டியுள்ள துடுக்குத்தனம், 'மூன்றாம்பாகத்தில் சந்தேகத்திற்கிடமின்றி மார்க்ஸ் நிரூபித்துள்ளார்' என்று ஒரு நேரத்தில் துணிந்து சொல்வதில் அவர் காட்டியுள்ள துடுக்குத்தனத்திற்கு ஈடானதாகும். உயர்திரு ஷூலியஸ் வொல்.:.ப்! மற்றவர்களிடம் பகிரங்கமாக ஒரு பிரச்சினையை எழுப்புகின்ற நபர் அதன் தீர்வைத்தன் நெருங்கிய நண்பர்களுக்குத் திருட்டுத் தனமாகத் தெரியப்படுத்துவது நீங்கள் வாழ்கின்ற, உழைக்கின்ற உலகத்தில் பழக்கமாயிருக்கலாம். இந்த மாதிரி வேலையை உங்களால் செய்ய இயலும் என்பதை நான் நம்பத் தயார். ஆனால் எனது உலகத்தில் ஒருவர் இப்படிப்பட்ட மட்டமான தந்திரங்களின் அளவுக்குத் தாழ்ந்து போகத் தேவையில்லை என்பது இந்த முன்னுரையால் நிரூபிக்கப்படுகிறது.

மார்க்ஸ் இறந்ததுமே, திரு அகில் லோரியா அவரைப் பற்றி Nuova - Antologia (1883 ஏப்ரல்) ஏட்டில் ஒரு கட்டுரையை அவசர அவசரமாகப் பிரசுரித்தார். முதலில் தவறான தகவல் நிறைந்த ஒரு வாழ்க்கை வரலாறும், அடுத்து பொதுவாழ்வு, அரசியல், இலக்கியம் ஆகியவற்றிலான பணிபற்றிய ஒரு விமர்சனமும் வெளி வந்தன. வரலாறு பற்றிய மார்க்ஸின் பொருள் முதல் வாதக் கருத்தமைவில் அவர் மோசடி செய்கிறார், ஒரு பெரிய நோக்கத்துக்கும் சான்று

பகர்கின்ற அழுத்தத்தோடு அதனைத் திரிக்கிறார். இறுதியில் இந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டது. 1886-ல் இதே திரு லோரியா La teoria economica della constituzione politica என்ற ஒரு புத்தகத்தைப் பிரசுரித்தார்; 1883-ல் இவ்வளவு முழுமையாகவும் காரிய நோக்குடனும் அவரால் தவறாக எடுத்துரைக்கப்பட்ட மார்க்ஸின் வரலாற்றுக் கருத்தமைவு தன் சொந்தக் கண்டுபிடிப்பே என்று அவர் இதில் தன் சமகாலத்தவர்களுக்கு அறிவித்து அவர்களைத் திகைக்கச் செய்கிறார். நிச்சயமாக, இந்தப் புத்தகத்தில் மார்க்ஸியத் தத்துவம் ஒரு விதமான ஃபிலிஸ்டைன் மட்டத்துக்குத் தாழ்த்தப்படுகிறது; இதில் தரப்படும் வரலாற்று எடுத்துக் காட்டுகளிலும் நிரூபணங்களிலும், ஒரு நான்காம் படிவச் சிறுவனிடம் கூட ஒருக்காலும் சகித்துக் கொள்ள முடியாதவையான மடத்தனங்கள் நிறைந்துள்ளன. ஆனால் அதனாலென்ன? அரசியல் நிலைமைகளுக்கும் நிகழ்ச்சி களுக்கும் எங்கும் எப்போதுமே உரிய பொருளாதார நிலைமைகள் விளக்கமாகின்றன என்பதை - இத்துடன் காட்டப்பட்டிருப்பது போல - 1845-ல் மார்க்ஸ் கண்டுபிடிக்க வில்லையாம், 1886-ல் திரு லோரியாதான் கண்டு பிடித்தாராம். குறைந்த பட்சமாக அவர் தன் நாட்டினரை இதனை நம்பவைத்து மகிழ்ந்துள்ளார்; அவரது புத்தகம் பிரெஞ்சு மொழியில் வெளிவந்த பின்னர் சில பிரெஞ்சுக்காரர்களையும் கூட நம்ப வைத்துள்ளார்; பிரசித்திபெற்ற லோரியாவிடமிருந்து அவரது திருட்டு மயிலிறகுகளை உரித்தெடுப்பதற்கு இத்தாலிய சோஷலிஸ்டுகளுக்கு நேரம் கிடைக்கும்வரை, இத்தாலியில் இப்போது அவர் ஒரு புதிய சகாப்தம் படைக்கும் வரலாற்றுத்தத்துவத்தின் படைப்பாளியாகத் தன்னைக் காட்டிக் கொள்ளலாம்.

ஆனால் திருலோரியாவின் பாணிக்கு ஒரு மாதிரிதான் இது. மார்க்ஸின் தத்துவங்கள் அனைத்துமே உணர்வு பூர்வமான குதர்க்கத்தை (un consaputo sofisma) சார்ந்துள்ளன என்றும், பொய்க் காரணவாதங்களைப் பயன்படுத்துவதை, அவை பொய்க் காரணவாதங்களென்று (Sapendoli tali) தனக்குத் தெரிந்த போதுங்கூட, மார்க்ஸ் நிறுத்தவில்லை என்றும் இன்ன பிறவாறும் அவர் நமக்கு உறுதிசொல்கிறார்; படுவாவைச் சேர்ந்த நமது பேராசிரியரின் அதே இழிந்த மோசடியின் மூலம் தனது சிறிய காரியங்களைச் சாதித்துக் கொள்பவரான லோரியாவைப் போலவே, மார்க்ஸையும் ஒரு கொள்கையில்லாத கற்றுக்குட்டியாகத் தனது வாசகர்கள் மதிக்கவேண்டும் என்பதற்காக, இதுபோன்ற பல வெறுக்கத்தக்க குத்தல்களைக் கொண்டு இவ்விதய தனது வாசகர்களுக்கு அவசியமானதை உணர்த்திய பின்னர், அவர் அவர்களுக்கு ஒரு முக்கியமான ரகசியத்தை வெளியிடுகிறார், இதன் மூலம் நம்மை லாபவீதத்துக்குத் திரும்பக் கொண்டு செல்கிறார்.

திரு லோரியா சொல்கிறார்: மார்க்ஸின் கருத்துப்படி, ஒரு முதலாளித்துவத் தொழில் நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உபரிமதிப்பின் அளவு (இங்கே திரு லோரியா உபரிமதிப்பையும் லாபத்தை ஒன்றாகக் கருதுகிறார்) அதில் ஈடுபடுத்தப்பட்ட மாறும் மூலதனத்தைப் பொறுத்ததாயிருக்க வேண்டும்; ஏனெனில் மாறா மூலதனம் லாபத்தை ஈவதில்லை. ஆனால் இது உண்மைக்கு மாறானது. ஏனென்றால் நடைமுறையில் லாபம் மாறும் மூலதனத்தை

பொறுத்ததாயில்லாமல், மொத்த மூலதனத்தைப் பொறுத்ததாகவே உள்ளது. மார்க்ஸே இதனை அங்கீகரிக்கிறார் (Buch I, kap. XI); மேல் மட்டத்தில் உண்மைகள் தன் தத்துவத்தோடு முரண்படுவதாகத் தோன்றுகிறது என்று ஒப்புக் கொள்கிறார். ஆனால் அவர் இந்த முரண்பாட்டை எப்படிச் சமாளிக்கிறார்? இன்னும் பிரசுரிக்கப்படாத அடுத்து வரும் பாகத்தைப் பார்த்துக் கொள்ளுமாறு அவர் தன் வாசகர்களுக்குச் சொல்கிறார். இந்த எழுதுகின்ற எண்ணம் எந்த நேரத்திலாவது மார்க்ஸஸுக்கு இருந்ததாகத் தான் நம்பவில்லையென்று லோரியா இந்தப்பாகம் பற்றி வாசகர்களுக்கு ஏற்கனவே சொல்லியிருக்கிறார்; இப்போது அவர் வெற்றி முழங்குகிறார்: 'மார்க்ஸ் எப்போதுமே தன் எதிராளிகளை நோக்கி வீசுவதும் என்றுமே வெளிவராததுமான இந்த இரண்டாம் பாகமென்பது, விஞ்ஞானபூர்வ வாதங்கள் தனக்கு உதவாதபோதெல்லாம் மார்க்ஸ் பிரயோகித்த ஒரு சாதுரியமான உபாயமாகவே மிக அநேகமாய் இருந்திருக்கலாம் என்று நான் வாதிட்டதில் தவறில்லை (un ingegnoso spediente ideato dal Marx a sostituzione degli argomenti scientifici)." பிரசித்தி பெற்ற (illustre) லோரியாவைப் போன்ற விஞ்ஞான மோசடிப் பேர்வழிகளின் அதே ரகத்தைச் சேர்ந்தவரே மார்க்ஸும் என்று இதற்குப் பிறகும் யார் நம்பாவிட்டாலும், அவரைக் கடைத்தேற்ற வழியே இல்லை.

குறைந்த இந்த அளவுக்காவது நாம் கற்றுக் கொண்டுள்ளோம்: திரு . லோரியாவின் கருத்துப்படி, மார்க்ஸிய உபரி மதிப்புத்தத்துவம், ஒரு பொதுவான சம லாப வீதத்தின் இருத்தலோடு அறவே பொருந்திவராது. அடுத்து, இரண்டாம் பாகம் வெளிவந்தது; அத்துடன் சரியாக இதே விஷயம் பற்றி எனது பகிரங்கச் சவாலும் வெளிவந்தது. நாணமுள்ள ஜெர்மானியர்களான எங்களில் ஒருவராக திரு.லோரியா இருந்திருப்பாரேயானால், அவருக்கு ஓரளவு தர்மசங்கடம் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவர் ஒரு வெப்பமான தட்பவெப்ப நிலையிலிருந்து வருகின்ற அகம்பாவமுள்ள தெற்கத்திக்காரர்; அங்கே சொரணையற்ற நரம்பு ஓர் இயற்கைத் தேவைப்பாடாகும் என்பதற்கு அவரே சாட்சி சொல்ல முடியும். லாபவீதம் என்ற பிரச்சினை பகிர்ங்கமாக முன் வைக்கப்பட்டுள்ளது. அதனைத் தீர்க்க முடியாதென திரு. லோரியர் பகிரங்கமாகப் பறைசாற்றியுள்ளார். இதே காரணத்துக்காக, இப்போது அவர் அதை பகிரங்கமாகத் தீர்ப்பதன் மூலம் தன் சாதனையைத் தானே மிஞ்சப்போகிறார்.

Conrads Jahrbücher- ல் neue Folge, Buch XX, பக். 272 மற்றும் அடுத்து வருவன - கான்ராடு ஷ்மிட்டின் ஏற்கனவே எடுத்துக்காட்டப் பட்ட பிரசுரம் பற்றிய ஒரு கட்டுரையில் இந்த அற்புதம் நிகழ்த்தப்படுகிறது. வர்த்தக லாபம் எப்படிச் சம்பாதிக்கப்படுகிறது என்பதை லோரியா ஷ்மிட்டிடமிருந்து கற்ற பின்னர் பகலொளி படர்வதைத் திடீரெனக் கண்டார். 'உழைப்பு நேரத்தைக் கொண்டு மதிப்பை நிர்ணயிப்பது தங்களது மூலதனத்தில் கூடுதலான பகுதியைக் கூலியில் முதலீடு செய்கின்ற முதலாளிகளுக்குச் சாதகமானதாகும் என்பதால், உற்பத்திகரமல்லாத' (வர்த்தக என்று வாசிக்கவும்) 'மூலதனம் இந்தச் சலுகையுள்ள முதலாளிகளிடமிருந்து ஒரு கூடுதலான வட்டியை' (லாபத்தை

என்று வாசிக்கவும்) பெறமுடியும், இவ்வாறு தனிப்பட்ட தொழில் முதலாளிகளிடையே ஒரு சமப்படுத்தலை நிகழ்த்த முடியும்.... எடுத்துக்காட்டாக, A, B, C ஆகிய தொழில் முதலாளிகளில் ஒவ்வொருவரும் உற்பத்தியில் 100 வேலை நாட்களையும் முறையே 0,100, 200 என்னும் மாறா மூலதனத்தையும் பயன்படுத்தினால், 100 வேலைநாட்களுக்கான கூலி 50 வேலை நாட்களுக்கு ஒப்பானால், ஒவ்வொருவரும் 50 வேலை நாட்களென்னும் உபரிமதிப்பைப் பெறுகின்றனர்; லாபவீதம் முதலாவது முதலாளிக்கு 100%, இரண்டாமவனுக்கு 33.3%, மூன்றாமவனுக்கு 20%. ஆனால் D என்னுமொரு நான்காவது முதலாளி, A யிடமிருந்து மதிப்பில் 40 வேலை நாட்களுக்கும் சமமான ஒரு வட்டியையும் (லாபத்தையும்) "B யிடமிருந்து 20 வேலை நாட்களென்னும் வட்டியையும் பெறுகின்ற ஓர் உற்பத்திகரமல்லாத மூலதனமான 300 ஐத் திரட்சி செய்தால், A, B ஆகிய முதலாளிகளின் லாபவீதம் 20%-ஆகக் குறையும், Cயின் லாபவீதம் இதுவே; அதே நேரத்தில் D தன் மூலதனமான 300-ஐக் கொண்டு 60 என்னும் லாபம் பெறுகிறான், அல்லது லாபவீதம் 20%, மற்ற முதலாளிகளைப் போலவே.'

இப்படிப்பட்ட பிரமிப்பூட்டும், லாவகத்தோடு, பிரசித்தி பெற்ற l'illustre லோரியா, பத்தாண்டுகள் முன்னதாகத் தீர்க்க முடியாதெனத் தான் பறைசாற்றிய பிரச்சினையை ஜாலவித்தையின் மூலம் தீர்த்துவிடுகிறார். துரதிருஷ்டவசமாக, நிலச்சொந்தக்காரன் குத்தகைக்காரனின் உபரிலாபத்தை நில வாரமாகத் தன் பையில் போட்டுக் கொள்வது போலவே, தொழிலதிபர்களிடமிருந்து சராசரி லாபவீதத்தைக் காட்டிலும் எச்சமான அவர்களது கூடுதல் லாபத்தைக் கறப்பதற்கும் அதனைத் தன் சொந்தப் பையில் வைத்துக் கொள்வதற்குமான சக்தியை 'உற்பத்திகரமல்லாத மூலதனம்' எங்கிருந்து பெறுகிறது என்ற ரகசியத்தை அவர் நமக்குத் தெரியப்படுத்தவில்லை. உள்ளபடியே, அவரது கருத்துப்படி, தொழிலதிபர்களிடமிருந்து நிலவாரத்துக் கொப்பான ஒரு கப்பத்தை வசூலிக்கக்கூடியவர்களும் அதன்மூலம் ஒரு சராசரி லாபவீதத்தைத் தோற்றுவிக்கக் கூடியவர்களும் வணிகர்களாகவே இருப்பர். வர்த்தக மூலதனம் பொதுவான லாபவீதத்தைத் தோற்றுவிப்பதில் உள்ளபடியே ஒரு மிக அத்தியாவசியமான காரணியாகும்; இது கிட்டத்தட்ட சகலருக்குமே தெரியும். ஆனால், தன் இதயத்தில் அரசியல் பொருளாதாரத்தை வெறுத்தொதுக்கின்ற ஓர் இலக்கிய சாகசக்காரர்தான், பொதுலாபவீதத்தைக் காட்டிலும் எச்சமாக உள்ள உபரிமதிப்பு முழுவதையும் -இந்தப் பொதுவீதம் உருவெடுக்குமுன்னரேகூட- உட்கிரகிப்பதற்கும், மேலும் நிலச்சொத்து எதையும் பயன்படுத்தும் தேவையில்லாமலே கூட தனக்கேயான நிலவாடகையாக அதனை மாற்றுவதற்குமான மாயச்சக்தி வர்த்தக மூலதனத்துக்குள்ளது என்று கூறத்துணிய முடியும். சராசரி லாபவீதத்தை மட்டுமே அரவணைக்கின்ற உபரிமதிப்பை யுடைய குறிப்பான தொழிலதிபர்களை வர்த்தக மூலதனம் எப்படியோ கண்டு பிடித்துவிடுகிறது என்றும், மார்க்ஸிய மதிப்பு விதியினால் பாதிக்கப்பட்ட இந்த அதிருஷ்டங்கெட்டவர்களின் உற்பத்திப் பொருட்களை - அதற்காக ஒரு தரகுக் கட்டணத்தைக் கூட கேட்காமல் - இலலவசமாக அவர்களுக்கு விற்றுத் தருவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அவர்களது கஷ்டத்தைத் தணிப்பதை ஒரு

பாக்கியமாக அது கருதுகிறது என்றும் கூறுவது அதே அளவுக்குத் திகைப்பளிப்பதாகும் . இப்படிப்பட்ட பரிதாபத்துக்குரிய தந்திரங்களைக் கையாளவேண்டிய தேவை மார்க்ஸுக்கு ஏற்பட்டது என்று ஒருவர் கற்பனை செய்துகொண்டால் அவர் எவ்வளவு பெரிய கோமாளியாக இருக்க வேண்டும்!

ஆனால் அவரை அவரது வடக்கத்திப் போட்டியாளர்களுடன், எடுத்துக் காட்டாக உயர்திரு ஜூலியஸ் வொல்∴புடன் - இவரும் நேற்று பிறந்தவரல்ல- ஒப்பிடும்போதுதான், பிரசித்திபெற்ற லோரியாவின் முழுப் புகழும் பரிமளிக்கிறது. இத்தாலியரின் பக்கமாக, Sozialismus und kapitalistische Gesellschaftsordnung பற்றிய தனது பெரிய நூலிலேயேகூட உயர்திரு வொல்∴ப் எப்பேர்ப்பட்ட குரைக்கும் நாய்க்குட்டியாகத் தோன்றுகிறார்! மற்றவர்களைவிட அதிகமாகவோ குறைவாகவோ அன்றி, மார்க்ஸும் திரு.லோரியாவினளவுக்கே ஒரு குதர்க்க வாதியாகவும் பொய்க்காரண வாதியாகவும் மோசடிப் பேர்வழியாகவும் கோமாளியாகவும் இருந்தார் என்று-தான் ஒரு கஷ்டமான நிலைமையிலிருக்கும்போதெல்லாம் அடுத்து ஒரு நூற்பாகத்தில் தன் தத்துவத்தை முழுமைப்படுத்துவதாக, தான் அதனை எழுதவும் முடியாது, ஒருகாலும் எழுதப் போவதுமில்லை என்று நன்கு தெரிந்தே, வாக்களிப்பதன் மூலம் மார்க்ஸ் பொது ஜனங்களை ஏமாற்றினார் என்று - அனுமானித்துக் கொள்கின்ற விற்பன்னரின் அரிதான திடநம்பிக்கையின் பக்கத்தில் எவ்வளவு அசிங்கமாக- அடக்கமாக என்று சொல்லும் ஆசை கிட்டத்தட்ட எனக்கு ஏற்படுகிறது - அவர் தோன்றுகிறார்! சாத்தியமில்லாத நிலைமைகளில் ஒரு விலாங்கைப் போல நழுவுகின்ற ஆற்றல் கலந்த எல்லையற்ற உறுதி, வாங்கிக்கட்டிக் கொள்ளும் தோல்விகளின்பால் ஒரு வீரங்கலந்த அருவருப்பு, மற்றவர்களின் சாதனைகளைத் திருடுகின்ற அவசரங்கலந்த இலக்கியக்களவு, நச்சரிப்புத்தனமும் டம்பமும் கலந்த விளம்பரம், நண்பர்களின் பஜனை கோஷ்டியொன்றைக் கொண்டு புகழ்பரப்புதல் - இ∴தனைத்திலும் அவருக்கு ஈடாக யாரால் முடியும்?

சாஸ்திரீயக் கொள்கையின் பூமியாகும் இத்தாலி. நவீன காலத்தின் வைகறை அங்கே புலர்ந்த மாபெரும் யுகம் முதற்கொண்டே, டாண்ட்டே முதல் கரிபால்டி வரை ஈடிணையற்ற சாஸ்தீரியச் சிறப்புள்ள அற்புதமான குணச்சித்திரங்களை அது படைத்துள்ளது. ஆனால் அதன் சீர்கேடும் அந்நிய ஆதிக்கமும் நிகழ்ந்த காலகட்டம் அதற்கு சாஸ்திரீய குணச்சித்திர-முக மூடிகளையும் விட்டுச் சென்றது; இவர்களில் குறிப்பாகத் தெட்டத் தெளிவான இரு வார்ப்புகள் ஸ்கானரெல்லெ, துல்காமரா ஆகியோராவர். இருவரின் சாஸ்திரீய ஐக்கியம் நமது பிரசித்தி பெற்ற (illustre) லோரியாவில் அடக்கம்.

முடிவாக அட்லாண்டிக்கின் அக்கரைக்கு என் வாசகர்களை நான் அழைத்துச்செல்ல வேண்டும். நியூயார்க்கை சேர்ந்த டாக்டர் (மருத்துவர்) ஜார்ஜ் சி. ஸ்டிபலிங்கும் பிரச்சினைக்கு ஒரு தீர்வை, ஒரு மிக எளிய தீர்வைக் கண்டுபிடித்துள்ளார். உள்ளபடியே, இங்குள்ளவர்களோ அங்குள்ளவர்களோ யாருமே அவரைப் பெரிதுபடுத்த வில்லை யென்னுமளவுக்கு எளிய தீர்வு இது. இது அவரது ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது, மாக்கடலின் இருபுறமும் வெளிவந்த

பிரசுரங்கள் மற்றும் பத்திரிகைக் கட்டுரைகளின் வற்றாத பிரவாகம் ஒனறில் அவர் இதன் அநீதி பற்றிக் கடுமையாகக் குறைபட்டார். அவரது தீர்வு முழுவதுமே ஒரு கணிதப் பிழையைச் சார்ந்திருப்பதாக Neue Zeitல் அவருக்குச் சொல்லப்பட்டது. ஆனால் இதுபற்றி அவர் கவலைப்படக் கூடுமென்பது அரிதே. மார்க்ஸூம் கணிதப் பிழைகளைச் செய்தார்; ஆயினும் பல விஷயங்களில் சரியாகவே இருந்தார். அப்படியானால், டாக்டர் ஸ்டீபலிங்கின் தீர்வைப் பார்க்கலாம்.

'சமமூலதனங்களோடு சமகால அளவுக்கு, ஆனல் மாறா மற்றும் மாறும் மூலதனங்களின் வித்தியாசமானதொரு விகிதத்தோடு, செயல்படுகின்ற இரு தொழிற்சாலைகளை நான் எடுத்துக் கொள்கிறேன். மொத்த மூலதனம் $(C+V) = y$ என்றும் மாறா மற்றும் மாறும் மூலதனத்தின் விகிதத்திலான வித்தியாசம் $= x$ என்றும் நான் ஆக்கிக் கொள்கிறேன். தொழிற்சாலை I, $y = c+v$, தொழிற்சாலை IIக்கு $y = (c-x) + (v + x)$. ஆகவே தொழிற்சாலை I-க்கான உபரிமதிப்பு வீதம் $= s/v$ தொழிற்சாலை IIக்கு $= s/v+x$ லாபத்தையே (p) நான் மொத்த உபரி மதிப்பு (s) என்றழைக்கிறேன்; குறிப்பிட்ட காலத்தில் இம் மொத்த உபரி மதிப்பினளவுக்கு மொத்த மூலதனமான y அல்லது $c + v$ என்பதில் அதிகரிப்பு ஏற்படுகிறது, இவ்வாறு $p = s$. எனவே தொழிற்சாலை Iக்கான லாபவீதம் $= p/y$, அல்லது $s/(c+v)$ தொழிற்சாலை II-க்கும் அது $p/y$ ஆகும், அல்லது $s/(c-x)+(v+x)$ ஆகும். அதாவது $s/c+v$ இவ்வாறு, மதிப்பு விதியின் அடிப்படையில், மூலதனத்தோடும் சமகாலத்தோடும், ஆனால் உயிர்வாழும் உழைப்பின் சமமற்ற அளவுகளோடு, உபரி மதிப்பு வீதத்திலான ஒரு மாற்றம் ஒரு சராசரி, லாப வீதத்தின் சமப்படுத்தலுக்குக் காரணமாகிறது என்னும் விதத்தில் இப்பிரச்சினை தீர்கிறது. (ஜி.சி.ஸ்டீபலிங், Das Werthgesetz und die Profitrate, நியூயார்க், ஜான் ஹெய்ன்ரிச்).

மேற்கண்ட கணக்கீடு எவ்வளவுதான் அழகாகவும் தெளிவாகவும் இருப்பினும், டாக்டர் ஸ்டீபலிங்கிடம் ஒரு கேள்வியைக் கேட்கின்ற கட்டாயம் நமக்கு ஏற்படுகிறது: தொழிற்சாலை I உற்பத்தி செய்த உபரிமதிப்புத் தொகையும் தொழிற்சாலை II உற்பத்தி செய்த உபரிமதிப்புத் தொகையும் சரிசமம் என்று அவருக்கு எப்படித் தெரியும்? c, v, y, x ஆகியவை, அதாவது கணக்கீட்டில் வரும் மற்ற காரணிகளனைத்தும் இரு தொழிற்சாலைகளுக்கும் ஒன்றே என அவர் வெளிப்படையாகச் சொல்கிறார்; ஆனால் s பற்றி அவர் குறிப்பிடவேயில்லை. அட்சர கணித ரீதியில் மேற்சொன்ன உபரிமதிப்பளவுகள் இரண்டுக்குமே அவர் s என்று பெயர் சூட்டியதிலிருந்து இது எவ்விதத்தும் வந்துவிடுவதில்லை. சொல்லப் போனால், திரு ஸ்டீபலிங் மேற்கொண்டு சிரமமின்றி லாபமான p யையும் உபரி மதிப்போடு ஒன்றாக்கிவிடுகிறார் என்பதால், நிரூபிக்கப்பட வேண்டியதா யிருக்கும் விஷயமே அதுதான். இப்போது இரு மாற்று வழிகள் மட்டுமே சாத்தியமாகும். ஒன்று, இரு s-களும் சமம், இரு தொழிற்சாலைகளுமே சம உபரிமதிப்பளவுகளை உற்பத்தி செய்கின்றன, ஆகவே சம லாப அளவுகளையும் உற்பத்தி செய்கின்றன; ஏனெனில் இரு மூலதனங்களும் சமமாகும். அப்படியாயின், திரு ஸ்டீபலிங், எதை நிரூபிக்குமாறு நிஜமாகவே

கோரப்பட்டாரோ அதையே துவக்கமுதல் அனுமானித்துக் கொண்டுள்ளார். அல்லது, ஒரு தொழிற்சாலை மற்றதை விட அதிக உபரிமதிப்பை உற்பத்தி செய்கிறது; அப்படியாயின் கணக்கீடு முழுவதுமே குப்புறக் கவிழ்கிறது.

இந்தக் கணிதப் பிழையின்மீது கணக்கீடுகளை மலைமலையாகக் குவிக்கவும் அவற்றைப் பொதுஜனங்களின் பார்வைக்கு வைக்கவும் திரு ஸ்டீபலிங் பிரயாசையிலோ பணச் செலவிலோ குறை வைக்கவில்லை. கிட்டத்தட்ட அவையனைத்துமே ஒரே அளவுக்குத் தவறானவையாகும் என்றும், அப்படியில்லாத விதிவிலக்கான இடங்களிலும் அவை அவர் நிரூபிக்க முனைந்ததிலிருந்து முற்றிலும் வேறான எதையேனும் நிரூபிக்கின்றன என்றும், அவரது மனஅமைதிக்காகவே, நான் அவருக்கு உறுதி சொல்ல முடியும். எடுத்துக்காட்டாக, 1870 மற்றும் 1880-க்கான அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனக்கணிதை விவரங்களை ஒப்புநோக்குவதன் மூலம், லாபவீதம் வாஸ்தவத்தில் வீழ்ந்துள்ளது என்பதை அவர் நிரூபிக்கிறார்; ஆனால் அதனைத் தவறாக வியாக்கியானம் செய்து, இடையறாது ஸ்திரமாயுள்ள ஒரு லாபவீதம் பற்றிய மார்க்ஸின் தத்துவம் அனுபவத்தின் அடிப்படையில் சரிப்படுத்தப்பட வேண்டும் என்று அனுமானித்துக் கொள்கிறார். ஆயின், இந்த மார்க்ஸிய 'ஸதிர லாபவீதம்' என்பது சுத்தமாக திரு ஸ்டீபலிங்கின் கற்பனைக் கதையே என்பதும், லாபவீதத்தின் சரியும் போக்கிற்குக் காரணம், டாக்டர் ஸ்டீபலிங் சுட்டிக்காட்டும் சூழ்நிலைகளுக்கு நேர்மாறான சூழ்நிலைகளே என்பதும் இந்த மூன்றாம் புத்தகத்தின் மூன்றாம் பகுதியிலிருந்து தெரிகின்றன. டாக்டர் ஸ்டீபலிங்கின் மிக நல்ல நோக்கங்கள் பற்றிச் சந்தேகமே இல்லை, ஆனால் ஒரு மனிதர் விஞ்ஞானப் பிரச்சினைகளைக் கையாள விரும்பும்போது, அனைத்துக்கும் மேலாக அவர், தான் பயன்படுத்த விரும்புகின்ற நூல்களை நூலாசிரியர் அவற்றை எழுதியபடியே, - அனைத்துக்கும் மேலாக, அவற்றில் இல்லாத எதையும் அவற்றில் இருப்பதாக வைத்துக்கொண்டு வாசிக்காமல் - வாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தப்பிரச்சினை தொடர்பாகவும் மார்க்ஸியக் கருத்துப் பிரிவுமட்டுமே ஏதேனும் சாதித்துள்ளது என்பதை இந்த ஆய்வு முழுவதன் முடிவு மீண்டும் காட்டுகிறது. ஃபயர்மனும் கான்ராடு ஷ்மிட்டும் இந்த மூன்றாம் புத்தகத்தைப் படித்தால், ஒவ்வொருவரும் தன் பங்குக்கு, தன் சொந்தப் படைப்புக் குறித்து திருப்தியடையவே கூடும்.

லண்டன், அக்டோபர் 4, 1894.

பிரடரிக் எங்கல்ஸ்

# மூன்றாம் பாகம்

# முழுமையான முதலாளித்துவ உற்பத்திச் செயல்முறை

## புத்தகம் ஒன்று

# பகுதி I

# உபரி-மதிப்பு இலாபமாகவும் உபரி-மதிப்பு வீதம் இலாப வீதமாகவும் மாறுதல்

## அத்தியாயம் I

## அடக்க-விலையும் இலாபமும்

*முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையில்* (Process of capitalist Production) நேரடியான உற்பத்தி நிகழ்முறையாக அமைந்திடும் புலப்பாடுகளை, புறத்திருந்தான தாக்கங்களால் எழும் துணை விளைவுகளைப் பொருட்படுத்தாமல், முதல் பாகத்தில் நாம் பகுத்தாராய்ந்தோம். ஆனால் மூலதனத்தின் ஆயுள் இந்த நேரடியான உற்பத்தி நிகழ்முறையோடு முடிவடைவதல்ல. மெய்நடப்பில் உற்பத்தி நிகழ்முறையோடு சுற்றோட்ட நிகழ்முறையும் (Process of Circulation) நிரப்புக் கூறாகச் சேர்ந்து கொள்கிறது. இந்தச் சுற்றோட்ட நிகழ்முறைதான் இரண்டாம் பாகத்தின் ஆய்வுப் பொருள் ஆயிற்று. இரண்டாம் பாகத்தின் பகுதி IIIஇல் சுற்றோட்ட நிகழ்முறையானது சமுதாய மறுவுற்பத்தி நிகழ்முறை நடந்தேறும் ஊடகமாவதைப் பரிசீலித்தோம். முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையை ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், அது உற்பத்தி, சுற்றோட்டம் ஆகிய இரு நிகழ்முறைகளும் ஒருசேர இணைந்திருப்பதைக் குறிப்பதாகும் என்பது பகுதி IIIஇல் தெரியலாயிற்று. இனி இந்த மூன்றாம் பாகம் பரிசீலிக்கப் போவது என்ன? இரண்டும் இவ்விதம் ஒருசேர இணைவது பற்றிய பொதுப்படையான விளக்கத்துடன் இது நின்றுவிட முடியாது. மாறாக, *முழுமொத்த மூலதன அசைவியக்கங்களிலிருந்து* (movements) உதித்தெழும் ஸ்தூலமான வடிவங்களை இனங்கண்டு விவரித்தல் வேண்டும். நேரடியான உற்பத்தி நிகழ்முறையின் போது மூலதனம் ஏற்கும் வடிவமும், அதே போல் சுற்றோட்ட நிகழ்முறையின் போது அது ஏற்கும் வடிவமும் தனிப்பட்ட சில எடுத்துக்காட்டுகளே என்னும்படி, மூலதனங்கள் மெய்நடப்பில் அவற்றின் அசைவியக்கத்தின் போது அந்த அளவுக்கு ஸ்தூலமான வடிவில் ஒன்றையொன்று எதிர் நோக்குகின்றன. இந்த மூன்றாம் பாகத்தில் விவரிக்கப் பெறும் விதத்தில் பரிணமிக்கிற பல்வேறு மூலதன வகைகளும், சமுதாயத்தின் மேல்மட்டத்தின் ஒன்றன் மீது ஒன்று வெவ்வேறு மூலதனங்களும்


புரிந்திடும் செயலிலும், அவற்றிடையிலான போட்டியிலும், பொருளுற்பத்தியின் கர்த்தாக்களது அன்றாட உணர்விலும் அவை ஏற்கிற வடிவத்தை இவ்விதம் படிப்படியாக நெருங்கி வருகின்றன.

முதலாளித்துவ முறையில் உற்பத்தி செய்யப்படும் சரக்கின் (Commodity) C=c+v+s என்ற சூத்திர வடிவில் குறிக்கலாம். உற்பத்திப் பொருளின் இந்த மதிப்பிலிருந்து s என்னும் உபரி-மதிப்பைக் கழித்து விட்டால், உற்பத்தி-அடிக்கூறுகளுக்காகச் செலவான C+v என்னும் மூலதன-மதிப்புக்குச் சமதை அல்லது பதிலியான மதிப்பு மட்டும் சரக்குகளின் உருவில் எஞ்சுகிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு பண்டத்தின் உற்பத்திக்கு £500 மூலதன முதலீடு தேவை என்று கொள்வோம். இதில் £20 உற்பத்திக் கருவிகளின் தேய்மானத்துக்கும் £380 கச்சாப் பொருட்களுக்கும், £100 உழைப்புச் சக்திக்கும் வேண்டும் என்போம். உபரி-மதிப்பு வீதம் 100% என்றால், உற்பத்திப் பொருளின் மதிப்பு $400_c + 100_v + 100_s = £600$.

உபரி-மதிப்பான 100ஐக் கழித்துவிட்டால், £500 சரக்கு-மதிப்பு எஞ்சுகிறது; செலவிடப்பட்ட மூலதனமான £500ஐ மட்டும் இது மாற்றீடு செய்கிறது. சரக்கினது மதிப்பின் இந்தப் பகுதி நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்கள், உழைப்புச் சக்தி இவற்றின் விலையை மாற்றீடு செய்கிறது; அதாவது சரக்கை உற்பத்திச் செய்வதற்காக முதலாளிக்கு ஏற்படும் அடக்கச் செலவை மட்டும் மாற்றீடு செய்கிறது. ஆகவே, அவரைப் பொறுத்தவரை இது சரக்கின் அடக்கவிலையைக் (Cost-Price) குறிக்கிறது.

சரக்கிற்காக முதலாளிக்கு ஆகும் செலவும், உள்ளபடியே அதன் உற்பத்திக்கு ஆகும் செலவும் ஒன்றல்ல. உற்பத்திச்செய்யப்படும் சரக்கின் மதிப்பில் ஒரு பகுதி, உபரி-மதிப்பால் அமைந்திடும் பகுதி முதலாளிக்குச் செலவின்றிக் கிடைக்கிறது: இந்த மதிப்புப் பகுதிக்காக தொழிலாளி ஊதியமிலா உழைப்பைச் செலவிடுகிறார் என்பதே இதற்குக் காரணம். ஆயின், முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் தொழிலாளியே கூட முதலாளிக்குச் சொந்தமான இயங்கும் திறனுடை-மூலதனத்தின் அடக்கக் கூறுகளில் ஒன்றாகி விடுகிறார். முதலாளி இதனால் உள்ளபடியே சரக்கை உற்பத்திச் செய்பவர் ஆகிறார். ஆகவே, சரக்கின் அடக்க-விலைதான் மெய்யாகவே சரக்கிற்காகும் செலவு என்றே அவர் கருதியாக வேண்டும். அடக்க-விலை Kஎனக் கொண்டால், C=c+v+s என்னும்



மூலதனம், மூன்றாம் பாகம் கையெழுத்துப் பிரதியின் முதல் பக்கம்
நிழற்பட நகல் (சிறிதாக்கியது)

சூத்திரம் C=k+s, அதாவது சரக்கு-மதிப்பு = அடக்க-விலை + உபரி-மதிப்பு என்னும் சூத்திரமாக மாறிவிடுகிறது.

ஒரு சரக்கின் மதிப்புக் கூறுகளின் அச்சரக்கின் உற்பத்திக்காகச் செலவிடப்பட்ட மூலதன-மதிப்பை மட்டும் மாற்றீடு செய்கிற பல்வேறு கூறுகளையும் ஒருசேர இணைத்து அடக்க-விலை என்று குறிப்பிடுகையில், ஒரு புறம், முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பிரத்தியேகத் தன்மையை வெளியிடுகிறோம். சரக்கிற்கான முதலாளித்துவ அடக்கச் செலவை மூலதனத்தின் செலவீட்டால் அளவிடுகிறோம்; அதே போது சரக்கின் மெய்யான அடக்கச் செலவை உழைப்பின் செலவீட்டால் அளவிடுகிறோம். சரக்கின் முதலாளித்துவ அடக்க-விலையானது, இவ்வாறு அதன் மதிப்பிலிருந்து, அல்லது அதன் மெய்யான அடக்க-விலையிலிருந்து அளவில் வேறுபடுகிறது. அது சரக்கின் மதிப்பை விடச் சிறியது; ஏனென்றால், C=k+s , ஆக, k =C-s மறுபுறம், சரக்கின் அடக்க-விலை என்பது முதலாளித்துவக் கணக்குப் பதிவில் (Capitalist Book keeping) மட்டும் இடம் பெறுகிற ஒரு கருத்தினம்தானா என்றால் அல்லவே அல்ல. இந்த மதிப்புப் பகுதியைத் தனியாகப் பிரித்தல் என்பது சரக்கு உற்பத்தியில் மெய்யாகவே தொடர்ந்து காணப்படுகிற ஒரு நடைமுறை; ஏனென்றால், இந்த மதிப்புப் பகுதியானது சரக்கு வடிவத்திலிருந்து சுற்றோட்ட நிகழ்முறையின் வாயிலாய் திறனுடை-மூலதன வடிவத்துக்கு ஓயாமல் திரும்பத் திரும்ப மாறியாக வேண்டும். அதாவது சரக்கின் உற்பத்தியில் நுகரப்பட்ட உற்பத்தி-அடிக்கூறுகளை அதன் அடக்க-விலையைக் கொண்டு ஓயாமல் திரும்பத் திரும்ப வாங்கியாக வேண்டும்.

ஆனால் அடக்க-விலை என்னும் கருத்தினம் சரக்கு-மதிப்பின் உருவாக்கம் தொடர்பானதோ, மூலதனத்தின் தற்பெருக்க நிகழ்முறை தொடர்பானதோ அல்லவே அல்ல. சரக்கின் £600 மதிப்பில் ஆறில் ஐந்து பங்கு, அதாவது £500 என்பது அதன் உற்பத்தியில் நுகரப்பட்ட £500 மூலதனத்திற்கான சமதை மட்டுமே என்றும், ஆகவே இந்த மூலதனத்தின் பொருட் கூறுகளை மறுபடியும் வாங்குவதற்கு மட்டுமே அது போதுமானது என்றும் எனக்குத் தெரிந்திருக்கலாம்; என்றாலும் அதனாலேயே, சரக்கின் மதிப்பில் அதன்அடக்க-விலையைக் குறிக்கிற இந்த ஆறில் ஐந்து பங்கு எப்படி உற்பத்திச் செய்யப்பட்டது என்று எனக்குத் தெரிந்து விடாது; சரக்கின் மதிப்பில் உபரி-மதிப்பாக அமைகிற கடைசி ஆறிலொரு பங்கு எங்கிருந்து வந்தது என்றும் என்னால் சொல்லிவிட முடியாது. இருப்பினும் அடக்க-விலையானது

முதலாளித்துவப் பொருளாதார இயலில் மதிப்பு-உற்பத்தித் தொடர்பான கருத்தினமாகப் பொய்த் தோற்றம் பூணுவதை நமது ஆய்வு வெளிப்படுத்தப் போகிறது.

நமது உதாரணத்துக்குத் திரும்புவோம். சராசரி சமுதாய வேலை-நாள் ஒன்றில் ஒரு தொழிலாளி உற்பத்தி செய்யும் மதிப்பு 6 ஷில்லிங் என்னும் பணத் தொகைக்குச் சமமெனக் கொள்வோம். முன்னீடு செய்யப்படும் மூலதனமான £500 = $400_c + 100_v$ என்பது 1,666 $^2/_3$ பத்து-மணி நேர வேலை-நாட்களில் உற்பத்திச் செய்யப்படும் மதிப்பைக் குறிக்கும் என்றாகிறது. இவற்றில் 1,333$^1/_3$ வேலை-நாட்களானவை உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு=$400_c$ என்பதாகவும், 333$^1/_3$ வேலை-நாட்ககளானவை உழைப்புச் சக்தியின் மதிப்பு $100_v$ என்பதாகவும் உருக்கொண்டிருப்பவை. உபரி-மதிப்பு வீதம் 100% எனக் கொண்டிருப்பதால், புதிதாய் உருவாக வேண்டிய சரக்கின் உற்பத்திக்குச் செலவாகும் உழைப்புச் சக்தியானது $100_v + 100_s$ = 666 $^2/_3$ பத்து-மணி நேர வேலை-நாட்கள் என்பதற்குச் சமம்.

முதல் பாகத்திலிருந்து (அத்தியாயம் IX, பக்கம் 300—301) நாம் அறிந்து கொண்டதுதான்; புதிதாகப் படைக்கப்படும் உற்பத்திப் பொருளின் மதிப்பு இங்கு £600 என்பது (1) உற்பத்திச் சாதனங் களுக்காகச் செலவிடப்பட்டு உற்பத்திப் பொருளில் மீண்டு வந்து தோற்றமளிக்கும் மாறா-மூலதனத்தின் மதிப்பு £400. (2) புதிதாக உற்பத்திச் செய்யப்படும் மதிப்பு £200 ஆகியவற்றால் ஆனதாகும். சரக்கின் அடக்க-விலை = £500 மீண்டு வந்து தோற்றமளிக்கும் $400_c$ + புதிதாக உற்பத்தி செய்யப்படும் மதிப்பு£200இல் ஒரு பாதி (=$100_v$), ஆக, சரக்கின் அடக்கவிலை என்பது சரக்கு-மதிப்பின் இரு கூறுகளால்—இருவேறு தோற்றுவாய்களைக் கொண்ட இரு கூறுகளால்—ஆனதாகும்.

666 $^2/_3$ பத்து-மணி நேர வேலை-நாட்களில் செலவிடப்படும் உழைப்பு (labour) பயனுள்ள உழைப்பாய் இருப்பதால்தான், நுகரப்படும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு (£400) இந்த உற்பத்திச் சாதனங்களிலிருந்து உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கப்படுகிறது. இந்தப் பழைய மதிப்பு புதிய உற்பத்திப் பொருளினது மதிப்பின் அடக்கக் கூறாக மீண்டு வந்து தோற்றமளிப்பதே தவிர, இந்தச் சரக்கின் உற்பத்தி நிகழ்முறையில் படைக்கப்பட்ட ஒன்றல்ல. அது ஏற்கெனவே மூலதன முதலீட்டின் அடக்கக் கூறுகளில் ஒன்றாக இருந்ததால்தான் இப்போது சரக்கு-மதிப்பின் அடக்கக் கூறுகளில் ஒன்றாக இருக்கிறது.

செலவிடப்படும் மாறா-மூலதனமானது (Constant capital) இவ்வாறு சரக்கு-மதிப்பின் ஒரு பகுதியால், இம்மூலதனத்தால் சரக்கு-மதிப்போடு சேர்க்கப்படும் பகுதியால் மாற்றீடு செய்யப்படுகிறது. ஆகவே அடக்க-விலையின் இந்தக் கூறு இரட்டைத் தன்மை வாய்ந்த ஒன்று. ஒரு புறம், அது சரக்கு-மதிப்பின் அடக்கக் கூறாகவும் நுகரப்பட்ட மூலதனத்தை மாற்றீடு செய்வதாகவும் இருத்தலால் சரக்கின் அடக்க-விலையில் சேருகிறது. மறு புறம், அது நுகரப்பட்ட மூலதனத்தின் மதிப்பாக இருத்தலால்தான், அதாவது உற்பத்திச் சாதனங்களுக்காக இவ்வளவு தொகை செலவாகி இருத்தலால்தான், சரக்கு-மதிப்பின் கூறுகளில் ஒன்றாகிறது.


இதற்கு நேர்மாறாய் உள்ளது அடக்க-விலையின் மற்றொரு கூறு. சரக்கின் உற்பத்திக்காகச் செலவிடப்பட்ட $666^2/3$ வேலை-நாட்கள் £200 புதிய மதிப்பைப் படைக்கின்றன. இந்தப் புதிய மதிப்பின் ஒரு பகுதி முன்னீடு செய்யப்பட்ட £100 மாறும்-மூலதனத்தை, அதாவது ஈடுபடுத்தப்பட்ட உழைப்புச் சக்தியின் (labour-power) விலையை மட்டும் மாற்றீடு செய்கிறது. ஆனால் மூலதன-மதிப்பின் இந்த முன்னீடு புதிய மதிப்பின் படைப்பில் சேரவே இல்லை. மூலதன முன்னீட்டைப் பொறுத்த வரை, உழைப்புச் சக்தி ஒரு **மதிப்பாகக்** கணக்கிடப்படுகிறது. ஆனால் உற்பத்தி நிகழ்முறையில் அது மதிப்பின் **படைப்பாளியாகச்** செயல்படுகிறது. மூலதன முன்னீட்டில் உழைப்புச் சக்தியின் மதிப்பாக இடம் பெறுவது, உள்ளபடியே **இயங்கிடும்** திறனுடை-மூலதனத்தில் மதிப்பைப் படைத்திடும் உயிருள்ள உழைப்புச் சக்தியாக இடம் பெறுகிறது.

சரக்கு-மதிப்பின் இந்தப் பல்வேறு கூறுகளும் சேர்ந்துதான் அடக்க-விலை ஆகின்றன. இந்தக் கூறுகளுக்கிடையிலான வேறுபாடு மாறா-மூலதனமாகவோ மாறும்-மூலதனமாகவோ செலவிடப்படும் மதிப்பில் மாற்றம் ஏற்படும் போதெல்லாம், பளிச்செனத் தெரிகிறது. மாறா-மூலதனமாகிய உற்பத்திச் சாதனங்களின் விலை £400இலிருந்து £600 ஆக உயருவதாய்க் கொள்வோம்; அல்லது, இதற்கு மாறான முறையில் £200 ஆகக் குறைவதாய்க் கொள்வோம். முதலாம் நேர்வில், சரக்கின் அடக்க-விலை £500 இலிருந்து $600_c + 100_v$ = £700 ஆக உயருவதோடு, சரக்கின் மதிப்பும் கூட £600இலிருந்து $600_c + 100_v + 100_s$ = £800ஆக உயருகிறது. இரண்டாம் நேர்வில், சரக்கின் அடக்க-விலை £500 இலிருந்து $200_c + 100_v$ = £300 ஆகக் குறைவதோடு, சரக்கின் மதிப்பும் கூட £600 இலிருந்து $200_c + 100_v + 100_s$ = £400 ஆகக் குறைகிறது.

செலவிடப்படும் மாறா-மூலதனம் அதன் மதிப்பையே உற்பத்திப் பொருளுக்குப் பெயர்ப்பதால், ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க உற்பத்திப் பொருளின் மதிப்பானது அந்த மூலதன-மதிப்பின் அறுதிப் பருமனுக்கேற்ப உயரவோ குறையவோ செய்கிறது. மறு புறம், ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க, குறிப்பிட்ட அளவு உழைப்புச் சக்தியின் விலை £100இலிருந்து £150 ஆக உயருவதாய்க் கொள்வோம்; அல்லது, இதற்கு மாறான முறையில், அது £100 இலிருந்து £50 ஆகக் குறைவதாய்க் கொள்வோம். முதலாம் நேர்வில், அடக்க விலை £500இலிருந்து $400c + 150_v$ = £550 ஆக உயருகிறது; இரண்டாம் நேர்வில் அது 500 இலிருந்து $400_c + 50_v$ = £450 ஆகக் குறைகிறது. ஆனால் இரு நேர்வுகளிலுமே, சரக்கு-மதிப்பானது மாற்றமேதுமின்றி £600 ஆகவே இருந்து வருகிறது. முதலாம் நேர்வில் அது $400_c + 150_v + 50_s$ ஆகிறது; இரண்டாம் நேர்வில் $400_c + 50_v + 150_s$ ஆகிறது. முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனம் அதன் மதிப்பையே உற்பத்திப் பொருளோடு சேர்ப்பதில்லை. உழைப்பு படைத்திடும் புதிய மதிப்பு மாறும்-மூலதனத்தின் மதிப்புக்குப் பதிலாக உற்பத்திப் பொருளில் இடம்பெறுகிறது. ஆகவே, மாறும்-மூலதனத்தின் அறுதிப் பருமனில் ஏற்படும் மாற்றம் உழைப்புச் சக்தியின் விலையில் ஏற்படும் மாற்றத்தை மட்டுமே குறிப்பதாய் உள்ளவரை, உயிருள்ள உழைப்புச் சக்தி படைத்திடும் புதிய மதிப்பின் அறுதிப் பருமனில் அதனால் எந்த மாற்றமும் ஏற்படாது; எனவே சரக்கு-மதிப்பின் அறுதிப் பருமனிலும் எந்த மாற்றமும் ஏற்படாது. மாறும்-மூலதனத்தின் அறுதிப் பருமனில் இத்தகையதொரு மாற்றம் ஏற்படுவதால் இந்தப் புதிய மதிப்பின் இரு கூறுகளுக்கும் இடையிலான விகித உறவில் மட்டுமே மாற்றம் ஏற்படக் காண்கிறோம் - இவ்விரு கூறுகளில் ஒன்று உபரி-மதிப்பாய் அமைவது, மற்றொன்று மாறும்-மூலதனத்தை மாற்றீடு செய்து, இவ்விதம் சரக்கின் அடக்க-விலையில் சேருவது.

அடக்க-விலையின் இரு கூறுகளுக்கும், இங்கே $400_c$க்கும் $100_v$க்கும் பொதுவாயிருப்பது ஒன்றே ஒன்றுதான், இவை இரண்டுமே முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்தை மாற்றீடு செய்திடும் சரக்கு-மதிப்பின் பகுதிகள் என்பதுதான்.

ஆனால் இந்த மெய்நடப்பு, முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் கோணத்திலிருந்து பார்க்கையில், தவிர்க்க முடியாமலே தலைகீழாய்த் தெரிகிறது.



மூலதனம் மூன்றாம் பாகம் கையெழுத்துப் பிரதியில் ஒரு பக்கம்.
செயலர் ஒருவர் படியெடுத்ததில் எங்கெல்ஸ் திருத்தங்கள் செய்துள்ளார்.
மேற்புறம் காணப்படுவது எங்கெல்ஸ் சேர்த்தது
(சிறிதாக்கியது)

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் உழைப்புச் சக்தியின் மதிப்பு அல்லது விலையானது உழைப்பின் மதிப்பு அல்லது விலையாக, அதாவது கூலியாகத் தோற்றமளிக்கிறது — இது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை அடிமையுடைமையின் (slavery) அடிப்படையிலான பொருளுற்பத்தி முறையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவனவற்றில் ஒன்று (முதல் பாகம், அத்தியாயம் XIX). ஆகவே, முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் மாறும் பகுதியானது கூலிக்காக (wages) செலவிடப்படும் மூலதனமாக, உற்பத்திக்காகச் செலவிடப்படும் உழைப்பனைத்தின் மதிப்பு அல்லது விலையைக் கொடுக்கிற மூலதன-மதிப்பாகத் தோற்றமளிக்கிறது. உதாரணமாய், சராசரியாகப் பத்து மணி நேரம் கொண்ட சமுதாய வேலை-நாள் ஒன்று 6 ஷில்லிங் பணத் தொகையில் உருக்கொள்கிறது என்போம். அப்போது £100 மாறும்-மூலதன (Variable Capital) முன்னீடானது 333 1/3 பத்து-மணி நேர வேலை-நாட்களில் உற்பத்திச் செய்யப்படும் மதிப்பின் பணத் தெரிவிப்பாகும். ஆனால் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தைப் பொறுத்த வரை விலைக்கு வாங்கும் உழைப்புச் சக்தியைக் குறிக்கிற இம்மதிப்பு உள்ளபடியே செயல்படுகிற திறனுடை-மூலதனத்தின் பகுதியாவதில்லை; உற்பத்தி நிகழ்முறையைப் பொறுத்தவரை, இம்மதிப்பின் இடத்துக்கு உயிருள்ள உழைப்புச் சக்தி வந்து சேருகிறது. நமது எடுத்துக்காட்டின் இந்த உழைப்புச் சக்தியின் மீதான சுரண்டல்-கடுமை (degree of exploitation) 100% ஆகும். எனவே இந்த உழைப்புச் சக்தியானது 666 2/3 பத்து-மணி நேர வேலை நாட்களில் செலவிடப்பட்டு, இவ்விதம் உற்பத்திப் பொருளோடு £200 புதிய மதிப்பைச் சேர்க்கிறது. ஆனால் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தைப் பொறுத்தவரை £100 மாறும்-மூலதனமானது கூலிக்காக முதலீடு செய்யப்படும் மூலதனமாக, அதாவது 666 2/3 பத்து-மணி நேர வேலை-நாட்களில் ஆற்றப்படும் உழைப்பின் விலையாகத் தோற்றமளிக்கிறது. £100 பணத் தொகையை 666 2/3ஆல் வகுத்தால், ஒரு பத்து-மணி நேர வேலை-நாளின் (working-day) விலை 3 ஷில்லிங் ஆகிறது. மதிப்பில் இது ஐந்து மணி நேர உழைப்பின் உற்பத்திக்குச் சமம்.

முன்னீடு செய்யப்படும் மூலதனத்தைச் சரக்கு-மதிப்போடு ஒப்பு நோக்குவோம்:

I. முன்னீடு செய்யப்படும் £500 மூலதனம் = உற்பத்திச் சாதனங்களுக்காகச் செலவிடப்படும் £400 மூலதனம் (உற்பத்திச் சாதனங்களின் விலை) + உழைப்புக்காகச்

செலவிடப்படும் £100 மூலதனம் (666 2/3 வேலை-நாட்களின் விலை, அதாவது அவற்றுக்கான கூலி).

II. சரக்குகளின் மதிப்பு £600 = அடக்க-விலையைக் குறிக்கிற £500 (செலவாகிய உற்பத்திச் சாதனங்களின் விலை £400+செலவாகிய 666 2/3 வேலை-நாட்களின் விலை £100+உபரி-மதிப்பு £100)

இந்தச் சூத்திரத்தில், உழைப்புச் சக்திக்காக முதலீடு செய்யப்படும் மூலதனப் பகுதியானது பருத்தி, நிலக்கரி போன்ற உற்பத்திச் சாதனங்களுக்காக முதலீடு செய்யப்படும் பகுதியிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? பொருள் வகையில் வேறானதோர் உற்பத்தி-அடிக்கூறுக்கான விலையாகப் பயன்படுவதன் மூலம் வேறுபடுகிறதே தவிர, சரக்கு-மதிப்பைப் படைக்கிற நிகழ்முறையில் (இவ்வாறு மூலதனத்தின் தற்பெருக்க நிகழ்முறையிலுங்கூட) வேறானதொரு நோக்கத்துக்குப் பணிபுரிவதன் மூலம் அல்லவே அல்ல. உற்பத்திச் சாதனங்களின் விலையானது முன்னீடு செய்யப்படும் மூலதனத்தில் இடம்பெற்றது போலவே சரக்குகளின் அடக்க-விலையிலும் மீண்டு வந்து தோற்றமளிக்கிறது. இந்த உற்பத்திச் சாதனங்கள் பயனுள்ள வீதத்தில் நுகரப்பட்டிருப்பதே இதற்குக் காரணம்.

இதே போலத்தான், இந்தச் சரக்குகளின் உற்பத்திக்காகச் செலவிடப்படும் 666 2/3 வேலை-நாட்களுக்கான விலை அல்லது கூலியும், முன்னீடு செய்யப்படும் மூலதனத்தில் இடம் பெற்றது போலவே சரக்குகளின் அடக்க-விலையிலும் மீண்டு வந்து தோற்றமளிக்கிறது. இங்கும் இந்த உழைப்பளவு பயனுள்ள முறையில் செலவிடப்பட்டிருப்பதே இதற்குக் காரணம். நாம் இங்குப் பார்ப்பது நிறைவு பெற்று நிலவுகிற மதிப்புகளைத்தானே தவிர - முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பில் எப்பகுதிகள் உற்பத்திப் பண்ட மதிப்பின் ஆக்கத்தில் சேருகின்றனவோ அப்பகுதிகளைத்தானே தவிர - புதிய மதிப்பைப் படைக்கும் கூறினை அல்ல. மாறா-மூலதனத்துக்கும் மாறும் - மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடு மறைந்துவிட்டது. முழு அடக்க-விலையான £500 இப்போது இரு விவரங்களைக் குறிக்கிறது: முதலாவதாக, சரக்கு-மதிப்பான £600இல் சரக்கின் உற்பத்திக்காக செலவிடப்படும் £ 500 மூலதனத்தை மாற்றீடு செய்யும் பகுதியைக் குறிக்கிறது; இரண்டாவதாக இந்த அடக்க-விலையானது ஈடுபடுத்தப்பட்ட உற்பத்தி-அடிக்கூறுகளின், உற்பத்திச் சாதனங்கள், உழைப்பு இவற்றின் அடக்க விலையாக, அதாவது முன்னீடு

செய்யப்படும் மூலதனமாக ஏற்கெனவே இருந்ததால்தான், இப்போது சரக்கு-மதிப்பின் அடக்கக் கூறாக இருக்க முடிகிறது என்பதைக் குறிக்கிறது. மூலதன-மதிப்பானது சரக்கின் அடக்க-விலையாக மீண்டு வந்து தோற்றமளிப்பது அது மூலதன-மதிப்பாகச் செலவிடப் பட்டிருப்பதாகும், அது அவ்விதம் செலவிடப்பட்டிருக்கும் வரையிலும்தான்.

முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பின் பல்வேறு கூறுகளும் பொருள் வகையில் வெவ்வேறாக உற்பத்தி-அடிக்கூறுகளுக்காக, அதாவது உழைப்புச் சாதனங்கள், கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்கள் ஆகியவற்றுக்காகவும் உழைப்புக்காகவும் செலவிடப் படுகின்றன. சரக்கின் அடக்க-விலையானது பொருள் வகையில் வெவ்வேறான இந்த உற்பத்தி-அடிக்கூறுகளை மீண்டும் வாங்கு வதற்குப் பயன்பட வேண்டும் என்பதே இதன் பொருள். ஆயினும் அடக்க-விலையின் உருவாக்கத்தைப் பொறுத்தவரை- குறிப்பிடத் தக்கதான ஒரே ஒரு வேறுபாடு, நிலை-மூலதனத்துக்கும் (fixed Capital) சுழல்-மூலதனத்துக்கும் (Circulating Capital) இடையிலான வேறுபாடே ஆகும். நமது உதாரணத்தில், உழைப்புச் சாதனங்களின் தேய்மானம் £20 எனக் கொள்கிறோம்.

*($400_c$ = உழைப்புச் சாதனங்களின் தேய்மானத்துக்காக £20+மூலப் பொருட்களுக்காக £380).* உற்பத்தி நிகழ்முறைக்கு முன்னால் இந்த உழைப்புச் சாதனங்களின் மதிப்பு £1,200 எனக் கொள்வோம். சரக்குகள் உற்பத்திச் செய்யப்பட்ட பிறகு, இம்மதிப்பு இரு வடிவங்களில் நிலவுகிறது: £20 ஆனது சரக்கினது மதிப்பின் பகுதியாக நிலவுகிறது; 1,200—20 = £1,180 ஆனது இப்போதும் முதலாளியின் வசமுள்ள உழைப்புச் சாதனங்களின் எஞ்சிய மதிப்பாக நிலவுகிறது; அதாவது அவரது சரக்கு-மூலதனத்தின் கூறாக அல்லாமல் அவரது திறனுடை-மூலதனத்தின் ஒரு கூறாகவே நிலவுகிறது. உழைப்புச் சாதனங்களைப் போல் அல்லாமல், மூலப்பொருட்களும் கூலியும் சரக்கின் உற்பத்தியில் முழுமையாக நுகரப்படுகின்றன; இவ்வாறு அவற்றின் மதிப்பனைத்தும் உற்பத்திச் செய்யப்படும் சரக்கின் மதிப்பில் சேருகிறது. முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் பல்வேறு அடக்கக் கூறுகளும் எப்படிப் புரள்வைப் பொறுத்தவரை நிலை-மூலதனமாகவும் சுழல்-மூலதனமாகவும் வடிவெடுக்கின்றன என்று முன்பே பார்த்தோம்.

*ஆக, முன்னீடு செய்யப்படும் மூலதனம் £1,680 = நிலை-மூலதனம் £1,200 + சுழல்-மூலதனம் £480 = (மூலப் பொருட்களுக்காக £380 + கூலிக்காக £100).*

ஆனால் சரக்கின் அடக்க-விலை மட்டும் = £500 (நிலை-மூலதனத்தின் தேய்மானத்துக்காக £20 + சுழல்-மூலதனத்துக்காக £480)

சரக்கின் அடக்க-விலைக்கும் முன்னீடு செய்யப்பட்ட மூலதனத்துக்கும் இடையிலான இந்த வேறுபாடானது சரக்கின் உற்பத்தியில் உள்ளபடியே நுகரப்பட்ட மூலதனம் மட்டுமே அதன் அடக்க-விலையாகிறது என்பதைத்தான் காட்டுகிறது.

சரக்கின் உற்பத்தியில் £1,200 மதிப்புள்ள உழைப்புச் சாதனங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன. ஆனால் முன்னீடு செய்யப்படும் இந்த மூலதன-மதிப்பில் £20 மட்டுமே உற்பத்திக்காக இழக்கப்படுகிறது. இவ்வாறு, ஈடுபடுத்தப்படும் நிலை-மூலதனத்தில் ஒரு பகுதி மட்டுமே சரக்கின் உற்பத்தியில் நுகரப்படுவதால், அதன் ஒரு பகுதி மட்டுமே சரக்கின் அடக்க-விலையில் சேருகிறது. ஈடுபடுத்தப்படும் சரக்கின் சுழல்-மூலதனம் சரக்கின் உற்பத்தியில் முழுமையாக நுகரப்படுவதால் அது முழுதும் சரக்கின் அடக்க-விலையில் சேருகிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? நிலை-மூலதனத்தின் ஒரு பகுதியும், அவ்வாறே சுழல்-மூலதனத்தின் ஒரு பகுதியும் நுகரப்பட்டு, அவற்றின் மதிப்புப் பருமனுக்கேற்ப சரக்கின் அடக்கவிலையில் சேருகின்றன என்றும், சரக்கு-மதிப்பும் அடக்கக்கூறாகிய இது அதன் உற்பத்தியில் செலவிடப்பட்ட மூலதனத்திலிருந்துதான் பெறப்படுகிறது என்றும் தெரிகிறது. இல்லையென்றால், முன்னீடு செய்யப்படும் £1,200 நிலை-மூலதனமானது உற்பத்தி நிகழ்முறையில் அது உள்ளபடியே இழந்துவிடுகிற £20உடன் கூடவே அந்நிகழ்முறையில் அது இழந்திடாமல் வைத்திருக்கும் £1,180ஐயும் உற்பத்திப் பண்ட மதிப்போடு ஏன் சேர்க்கவில்லை என்ற கேள்விக்கு விடை காண முடியாது.

ஆகவே, அடக்க-விலையைக் கணக்கிடும் போது நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையில் காணப்படும் இந்த வேறுபாடானது, செலவிடப்பட்ட மூலதன-மதிப்பிலிருந்தே, அதாவது செலவிடப்பட்ட உழைப்புக்காகவும் செலவிடப்பட்ட ஏனைய உற்பத்தி-அடிக்கூறுகளுக்காகவும் முதலாளி செலுத்திய விலையிலிருந்தே அடக்க-விலை பிறப்பதாகத் தோன்றுவதைத்தான் உறுதி செய்கிறது. மறுபுறம், மதிப்பின் உருவாக்கத்தைப் பொறுத்தவரை, உழைப்புச் சக்திக்காக முதலீடு செய்யப்படும் மாறும்-மூலதனப் பகுதி இங்கு வெளிப்படையாகவே சுழல்-மூலதனம் என்ற இனத்தில் சேர்க்கப்படுவதால் அதுவும் (மூலப்பொருட்களாய்

அமைந்திடும் மூலதனப் பகுதியான) மாறா-மூலதனமும் ஒன்றாகிப் போகின்றன. மூலதனத்தின் தற்பெருக்க நிகழ்முறையை மூடு மந்திரமாக்கிடும் காரியம் இவ்விதம் முழுமை அடைகிறது.[1]

இதுவரை நாம் சரக்குகளது மதிப்பின் இரு கூறுகளில் ஒன்றை மட்டும், அதாவது அடக்க-விலையைப் பரிசீலித்தோம். இப்போது சரக்குகளது மதிப்பின் மற்றொரு கூறினை - அடக்க - விலையின் மீதான மிகையை, அதாவது உபரி-மதிப்பை - பரிசீலிப்போம். முதலாவதாக, உபரி-மதிப்பு என்பது சரக்கின் மதிப்பில் அதன் அடக்க-விலைக்கும் மேலதிகமாய் இருப்பதாகும். ஆனால் அடக்க-விலை என்பது நுகரப்பட்ட மூலதனத்தின் மதிப்புக்குச் சமமாகும். மேலும் இம்மூலதனத்தின் பொருட்கூறுகளாக ஓயாமல் மீண்டும் மீண்டும் மாற்றப்படுவதாகும் என்பதால், இந்த மிகை மதிப்பானது சரக்கின் உற்பத்தியில் செலவிடப்பட்டதும், அதன் சுற்றோட்டத்தின் வாயிலாக மீள்வதுமான மூலதனத்தோடு வந்து சேருகிற ஒரு மதிப்பே ஆகும்.

முன்பே பார்த்ததுதான்: மாறும் - மூலதனமாகிய vஇன் மதிப்பில் ஏற்படும் மாற்றத்திலிருந்தே உபரி-மதிப்பாகிய s பிறக்கிறது என்றாலும், எனவே அது ஆரம்பத்தில் மாறும்-மூலதனத்தின் கூடுதலே தவிர வேறல்ல என்றாலும், உற்பத்தி நிகழ்முறை முடிந்த பிறகு c+v என்பதன், அதாவது செலவிடப்பட்ட மொத்த மூலதனத்தின் கூடுதலாகவும் அது அமைந்துவிடுகிறது. c+(v+s) என்னும் சூத்திரமானது உழைப்புச் சக்திக்காக முன்னீடு செய்யப்படும் குறிப்பிட்ட மூலதன-மதிப்பாகிய vஐ அலைவுறும் பருமனாக - அதாவது மாறாப் பருமனை மாறும் பருமனாக - மாற்றுவதன் மூலம் s உற்பத்திச் செய்யப்படுவதைக் காட்டுகிறது. இந்தச் சூத்திரத்தை (c+v)+s என்றும் குறிக்கலாம். உற்பத்தி நடைபெறுவதற்கு முன்னால் £500 மூலதனம் இருந்தது. உற்பத்தி முடிந்த பிறகு, £500 மூலதனம் + £100 கூடுதல் மதிப்பு கிடைக்கிறது.[2]

1) இது பொருளாதார அறிஞர்தம் உள்ளத்தில் எத்தகைய குழப்பத்தைத் தோற்றுவிக்கக் கூடும் என்பதை முதல் பாகத்தில் நா.வி.சீனியரை உதாரணமாய்க் கொண்டு தெளிவாக்கினோம். (முதல் பாகம், அத்தியாயம் IX, பிரிவு 3, பக்கம் 305 முதலானவை.--பதிப்பாசிரியர்.)

2 'உபரி-மதிப்பு என்பது, vஇன் மதிப்பில் - உழைப்புச் சக்தியாக மாற்றப்படும் மூலதனப் பகுதியின் மதிப்பில் - ஏற்படும் மாறுபாட்டின் விளைவேதான் என்பதை முன்சொன்னதிலிருந்து அறியலாம். ஆதலால் $v+s=v+\Delta v$ (அதாவது v+vஇன் கூடுதல்). மூலதனத்தின் மாறும் பகுதி அதிகரிப்பதன் விளைவாக முன்னீட்டு மூலதனத்தின் மொத்தத் தொகையும் அதிகரிப்பதானது vமட்டுமே மாறுகிறது என்ற உண்மையையும், அந்த மாறுபாட்டுக்குரிய நிலைமைகளையும் கண்ணிற்படாமல் மறைக்கிறது. இந்த மொத்தத் தொகை ஆரம்பத்தில் £500ஆக இருந்தது. பிறகு £590 ஆகிறது.' (முதல் பாகம், அத்தியாயம் IX ., பிரிவு 1, பக்கம் 291. - பதிப்பாசிரியர்.)

ஆயினும் உபரி-மதிப்பானது, முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் எந்தப் பகுதி தற்பெருக்க நிகழ்முறையில் சேருகிறதோ அந்தப் பகுதியின் கூடுதலாக மட்டுமல்லாமல், அந்நிகழ்முறையில் சேராத பகுதியின் கூடுதலாகவும் அமைகிறது. அதாவது சரக்கின் அடக்க-விலையைக் கொண்டு ஈடு செய்யப்படுவதான நுகரப்பட்ட மூலதனத்தோடு கூடுதலாய் வந்து சேருவதாக மட்டுமல்லாமல், உற்பத்திக்காக முதலீடாகியுள்ள மூலதனம் அனைத்தோடும் வந்து சேர்கிற மதிப்பாகவும் அது அமைகிறது. உற்பத்தி நிகழ்முறைக்கு முன்னால் £1,680 மதிப்புள்ள மூலதனம் இருந்தது; அதாவது, உற்பத்திச் சாதனங்களில் முதலீடாகிய £1,200 நிலை-மூலதனம் (இதில் £20 மட்டும் தேய்மானமாகச் சரக்கின் மதிப்பில் சேருகிறது) + மூலப்பொருட்களிலும் கூலியிலும் முதலீடாகிய £480 சுழல்-மூலதனம் £1,680. உற்பத்தி நிகழ்முறை முடிந்த பிறகு பெறப்படுவது இதுதான்; திறனுடை-மூலதனத்தின் மதிப்புக் கூறாக £1,180 சரக்கு-மூலதனம் £600. இவ்விரு மதிப்புத் தொகைகளையும் சேர்த்துக் கூட்டினால், முதலாளியிடம் இப்போது இருக்கும் மதிப்பு £1,780 ஆகும். அவரது மொத்த மூலதன முன்னீடாகிய £1,680ஐக் கழித்துவிட்டால், £100 கூடுதல் மதிப்பு எஞ்சுகிறது. இவ்வாறு £100 உபரி-மதிப்பானது உற்பத்தியின் போது செலவிடப்பட்ட £500இன் கூடுதலாக அமைவது போலவே இந்த £500ஐ ஒரு பகுதியாகக் கொண்ட £1,680 மொத்த மூலதனத்தின் கூடுதலாகவும் அமைகிறது.

முதலாளிக்கு இந்தக் கூடுதல் மதிப்பானது அவர் தமது மூலதனத்தைக் கொண்டு மேற்கொள்ளும் உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்து, அதாவது மூலதனத்திலிருந்தே பிறப்பதாய்த் தெரிகிறது. ஏனென்றால் உற்பத்தி நிகழ்முறைக்கு முன்னால் அவரிடம் இல்லாத அம்மதிப்பு அந்நிகழ்முறைக்குப் பின்னால் அவரிடம் இருக்கிறது. உற்பத்தியில் உள்ளபடியே நுகரப்படும் மூலதனத்தைப் பொறுத்த வரை, உபரி-மதிப்பானது உற்பத்திச் சாதனங்களாகவும் உழைப்பாகவும் அமைந்திடும் இம்மூலதன-மதிப்பின் இருவேறு கூறுகளிலிருந்துமே பிறப்பதாய்த் தோன்றுகிறது. ஏனெனில் இவ்விரு கூறுகளுமே அடக்க-விலையின் உருவாக்கத்தில் சம்பந்தப்பட்டுள்ளன. மூலதன முன்னீடுகள் என்ற முறையில் இரண்டுமே உற்பத்திப் பண்டத்தின் மதிப்போடு தம் மதிப்புகளைச் சேர்க்கின்றன; மாறா மதிப்புப் பருமன் என்றும், மாறும் மதிப்புப் பருமன் என்றும் வேறுபடுத்தப்படவில்லை. செலவிடப்படும் மூலதனம் அனைத்தும் முழுக்க முழுக்கக் கூலியாக மட்டுமே அமைந்திருப்பதாய், அல்லது முழுக்க முழுக்க உற்பத்திச்

சாதனங்களின் மதிப்பாக மட்டுமே அமைந்திருப்பதாய்ச் சற்றே அனுமானம் செய்து கொள்வோமானால் இது தெளிவாய்த் தெரிந்துவிடும். முதலாவது அனுமானத்தின் படி, $400_C + 100_V + 100_s$ என்னும் சரக்கு-மதிப்புக்கு பதில் $500_V + 100_s$ என்னும் சரக்கு-மதிப்பு பெறப்படும். கூலிக்காக முதலீடாகியுள்ள £500 மூலதனமானது £600 சரக்கு-மதிப்பின் உற்பத்தியில் செலவிடப்பட்ட உழைப்பனைத்தின் மதிப்பாகிறது. எனவே உற்பத்திப் பண்டமனைத்தின் அடக்க-விலையாகிறது. ஆனால் இந்தச் சரக்கு-மதிப்பின் உருவாக்கத்தில் நமக்குத் தெரிந்த ஒரே ஒரு நிகழ்முறை இந்த அடக்க-விலையின் உருவாக்கம்தான்; செலவிடப்படும் மூலதனத்தின் மதிப்பு இந்நிகழ்முறையின் வாயிலாகவே உற்பத்திப் பண்ட மதிப்பின் அடக்கக் கூறாக மறுவுற்பத்திச் செய்யப்படுகிறது. இந்தச் சரக்கு-மதிப்பின் மற்றொரு பகுதியான £100 உபரி-மதிப்பு எப்படி உண்டாக்கப்படுகிறது என்று நமக்குத் தெரியாது. இரண்டாவது அனுமானத்தின் படி, சரக்கு-மதிப்பு $500_c + 100_s$; இங்கும் உபரி-மதிப்பு எப்படி உண்டாக்கப்படுகிறது என்று தெரியாது. இரு நேர்வுகளிலுமே, குறிப்பிட்ட ஒரு மதிப்பு திறனுடை-மூலதனத்தின் வடிவில் முன்னீடு செய்யப்பட்டதால் அம்மதிப்பிலிருந்து உபரி-மதிப்பு பெறப்படுவதை நாமறிவோம்; இந்தத் திறனுடை-மூலதனம் உழைப்பாக வடிவெடுத்ததா அல்லது உற்பத்திச் சாதனங்களாக வடிவெடுத்ததா என்னும் பிரச்சினையைக் கவனியாது ஒதுக்கிவிடுகிறோம். மறுபுறம், முன்னீடு செய்யப்படும் இந்த மூலதன-மதிப்பு செலவிடப்பட்டு விடுவதாலும், இவ்விதம் சரக்கின் அடக்க-விலையாக அமைந்து விடுவதாலுமே உபரி-மதிப்பை உண்டாக்கிவிட முடியாது. ஏனென்றால் அது சரக்கின் அடக்க-விலையாக அமைந்திருக்கும் வரை, செலவிடப்பட்ட மூலதனத்திற்கான சமதையை, மாற்றீட்டு மதிப்பை உண்டாக்குமே தவிர, உபரி-மதிப்பை உண்டாக்கவே உண்டாக்காது, ஆக, அது உபரி-மதிப்பை உண்டாக்குமானால், முன்னீடு செய்யப்படுகிற, எனவே பொதுவாக ஈடுபடுத்தப்படுகிற மூலதனம் என்ற பொறுப்பில் உண்டாக்குமே தவிர, செலவிடப்பட்ட மூலதனம் என்ற பொறுப்பில் அல்ல, இவ்வாறு, உபரி-மதிப்பானது முன்னீடு செய்யப்படும் மூலதனத்தில் சரக்கின் அடக்க-விலைக்குள் போய்ச் சேருகிற பகுதியிலிருந்து பிறப்பது போலவே அப்படிப் போய்ச் சேராத பகுதியிலிருந்தும் பிறக்கிறது. சுருங்கச் சொல்லின், ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் கூறுகளான நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் ஆகிய இரண்டிலிருந்துமே உபரி-மதிப்பு பிறக்கிறது. பொருள் வகையில்

பார்த்தால் மூலதனம் முழுவதுமே - உழைப்புச் சாதனங்களினாலும் சரி, மூலப்பொருட்களும் உழைப்புமானலும் சரி-பண்ட உற்பத்திக்குப் பயன்படுகிறது. மூலதனத்தின் ஒரு பகுதி மட்டுமே தற்பெருக்க நிகழ்முறையில் சேருகிறதென்றாலும், பொருள்வகையில் மூலதனம் முழுவதுமே உள்ளபடியான உழைப்பு நிகழ்முறையில் சேருகிறது. மூலதனமானது அடக்க-விலையின் உருவாக்கத்துக்குப் பகுதியளவே பங்கு செலுத்திய போதிலும், உபரி-மதிப்பின் உருவாக்கத்துக்கு முழு அளவில் பங்கு செலுத்துவதற்கு இதுவே காரணமாய் இருக்கலாம். அது எப்படியிருந்த போதிலும் இதிலிருந்து விளைவது என்னவென்றால் உபரி-மதிப்பானது முதலீடாகியுள்ள மூலதனத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஒருங்கே உதித்தெழுகிறது என்பதே. இந்த முடிவை இரத்தினச் சுருக்கமாய் வெளியிடும் பொருட்டு மால்தஸ் கூறுவது போல தெளிவாகவும், எளிமையாகவும் கூறலாம்: 'முதலாளி ... தாம் முன்னீடு செய்யும் மூலதனத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் சம அளவில் இலாபம் எதிர்பார்க்கிறார்.'[3]

இவ்விதம் உபரி-மதிப்பை முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்திலிருந்து பெறப்படுகிற ஒன்றாகக் கொள்ளும் போது அது உருமாறி இலாபம் ஆகிறது. ஆகவே குறிப்பிட்ட ஒரு மதிப்புத் தொகை இலாபம் தரும் பொருட்டு முதலீடு செய்யப்படுமானால்,[4] அல்லது குறிப்பிட்ட ஒரு மதிப்புத் தொகை மூலதனமாக ஈடுபடுத்தப்படுவதால் இலாபம் கிடைக்குமானால், அதுவே மூலதனம் ஆகும். இலாபம் P எனக் கொள்வோம். அப்போது $C = c+v+s = k+s$ என்னும் சூத்திரம், $C=k+p$ (சரக்கின் மதிப்பு = அடக்க-விலை + இலாபம்) என்னும் சூத்திரமாக மாறிப் போகிறது.

இவ்வாறு, இங்கே காட்டியுள்ளபடி இலாபமும் உபரி-மதிப்பும் ஒன்றே; ஆனால் இந்த உபரி-மதிப்பு மரும வடிவம் தரித்துள்ளது - இது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் தவிர்க்க முடியாத விளைவு. நாம் அனுமானம் செய்து கொண்டபடி அடக்க-விலையின் உருவாக்கத்தில் மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்கும் இடையே வேறுபாடு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லையாதலால், உற்பத்தி நிகழ்முறையின் போது நடைபெறும் மதிப்பு மாற்றத்தின்

---

3 மால்தஸ், அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், 2ஆம் பதிப்பு, லண்டன் 1836, பக்கம் 268.)

4 'இலாப நோக்கத்துடன் செலவிடப்படுவதே மூலதனம்.' மால்தஸ், ***அரசியல் பொருளாதாரத்தில் இலக்கணங்கள்***, லண்டன், 1827, பக்கம் 86.)

தோற்றுவாயை மாறும்-மூலதனத்திலிருந்து மொத்த மூலதனத்திற்கு மாற்றிக் கொள்ள வேண்டியதாகிறது. ஒரு துருவத்தில் உழைப்புச் சக்தியின் விலை உருமாறி கூலியாகிற காரணத்தால் மறு துருவத்தில் உபரி-மதிப்பு உருமாறி இலாபமாகிறது.

சரக்கின் அடக்க-விலை அதன் மதிப்பை விடச் சிறியது என்று பார்த்தோம். C= k+s என்பதால், k = C—s என்றாகிறது. s=0 என்றிருந்தால்தான், C = k+s என்னும் சூத்திரம் C = k, அதாவது சரக்கு-மதிப்பு = சரக்கின் அடக்க-விலை என்பதாகச் சுருங்குகிறது. தனிவிதமான சந்தை நிலைமைகள் காரணமாய் சரக்குகளின் விற்பனை-விலை அவற்றின் அடக்க-விலையாகக் குறையலாம், அல்லது அதை விடவும் குறையலாம். ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் s = 0 என்ற நிலை வரவே வராது.

ஆகவே, சரக்கு அதன் மதிப்புக்கே விற்கப்பட்டால், அதன் அடக்கவிலையின் மீது அதன் மதிப்புக்குள்ள மிகைக்குச் சமமான இலாபம் கிடைக்கிறது, அதாவது இந்த இலாபம் சரக்கின் மதிப்பில் அடங்கியுள்ள முழு உபரி-மதிப்புக்குச் சமமாகும். ஆனால் முதலாளி சரக்கை அதன் மதிப்புக்கும் குறைவான விலைக்கு விற்றும் கூட இலாபம் அடைய முடியும். அதன் விற்பனை-விலை அதன் மதிப்பை விடக் குறைவாக இருந்தபோதிலும், அதன் அடக்க-விலையை விட அதிகமாய் இருக்கும் வரை, அதில் அடங்கியுள்ள உபரி-மதிப்பின் ஒரு பகுதி ஈடேற்றம் செய்யப்படுகிறது; அதாவது இலாபம்கிடைக்கிறது, நமது எடுத்துக்காட்டில் சரக்கின் மதிப்பு £600, அடக்கவிலை £500 சரக்கு £510, £520, £530, £560 அல்லது £590க்கு விற்கப்பட்டால், அது அதன் மதிப்பை விட முறையே £90, 80, 70, 40 அல்லது 10 குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. என்றாலும் இந்த விற்பனையில் முறையே £10, 20 30, 60 அல்லது 90 இலாபம் கிடைக்கிறது. சரக்கின் மதிப்புக்கும் அதன் அடக்க-விலைக்கும் இடையே எண்ணற்ற விற்பனை-விலைகள் சாத்தியம் என்பதைக் கூறத் தேவையில்லை. சரக்கு-மதிப்பின் உபரி-மதிப்புக் கூறு எவ்வளவு பெரிதாய் இருக்கிறதோ, நடைமுறையில் இந்த இடைப்பட்ட விலைகளுக்கான வாய்ப்பும் அவ்வளவு விரிவாய் இருக்கிறது.

சந்தைப் போட்டியின் அன்றாட நிகழ்வுகளை, எடுத்துக்காட்டாக, விலை குறைத்து விற்கிற குறிப்பிட்ட சில நேர்வுகளையும் சில தொழிற் கிளைகளில் சரக்கு விலைகள் அசாதாரணமாய்க் குறைந்திருப்பதையும்,[5]

(5) பார்க்கவும்: முதல் பாகம், அத்தியாயம் XX, பிரிவு 1, பக்கம் 737 முதலானவை,--பதிப்பாசிரியர்.)

இன்ன பிறவற்றையும் விளங்கிக் கொள்வதற்கு இது பயன்படுகிறது. அது மட்டுமல்ல, முதலாளித்துவப் போட்டாப் போட்டியின் அடிப்படை விதிக்கு அரசியல் பொருளாதாரம் இது வரை கிரகித்துக் கொள்ளத் தவறிய இவ்விதிக்கு, பொது இலாப வீதத்தையும் அதனால் நிர்ணயிக்கப்படும் உற்பத்தி-விலைகள் என்கிறவற்றையும் ஆளுகிற இவ்விதிக்கு - ஆதாரமாய் இருப்பது சரக்குகளின் மதிப்புக்கும் அடக்க-விலைக்கும் இடையிலான இந்த வேறுபாடும், எனவே சரக்கை அதன் மதிப்புக்கும் குறைவான விலைக்கே விற்றும் கூட இலாபம் அடைவதற்குள்ள சாத்தியப்பாடும்தான், இதனைப் பிறகு பார்ப்போம்.

சரக்கினது விற்பனை-விலையின் கீழ்வரம்பு அதன் அடக்க-விலையாகும். அதன் அடக்க-விலைக்கும் குறைவாக அது விற்கப்பட்டால், செலவிடப்பட்ட திறனுடை-மூலதனக் கூறுகளை விற்பனை-விலையைக் கொண்டு முழுமையாக மாற்றீடு செய்ய முடியாது. இந்த நிலைமை நீடித்துக் கொண்டே போனால் முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் மதிப்பு அறவே மறைந்து போகிறது. இந்தக் கோணத்திலிருந்து மட்டுமே, முதலாளி சரக்கின் அடக்க-விலையை அதன் உண்மையான உள்மதிப்பாகக் கருத விரும்புகிறார். ஏனென்றால் அவர் தமது மூலதனம் அழியாதபடி பாதுகாத்துக் கொள்வதற்கே கூட இந்த விலை தேவைப்படுகிறது. ஆனால் வேறொன்றையும் குறிப்பிட வேண்டும்: சரக்கின் அடக்க-விலை என்பது அதன் உற்பத்திக்காக முதலாளியே செலுத்தியுள்ள வாங்கும் விலையாகும். இந்த வாங்கும் விலை உற்பத்தி நிகழ்முறையாலேயே நிர்ணயிக்கப்படுகிற ஒன்று. ஆகவே சரக்கை விற்பதால் கிடைக்கும் மிகை மதிப்பு அல்லது உபரி-மதிப்பு என்பது முதலாளிக்கு எப்படித் தெரிகிறதென்றால், அதன் அடக்க-விலையின் மீது அதன் மதிப்புக்குள்ள மிகையாக அல்லாமல், அதன் மதிப்பின் மீது அதன் விற்பனை-விலைக்குள்ள மிகையாகவே தெரிகிறது. இவ்வாறு, சரக்கில் அடங்கியுள்ள உபரி-மதிப்பானது அதன் விற்பனையால் ஈடேற்றம் செய்யப்படுவதாக மட்டுமல்லாமல் அந்த விற்பனையிலிருந்தே பிறப்பதாகவும் அவருக்குத் தோன்றுகிறது. இந்த மாயையை முதல் பாகத்தில் விவரமாய்ப் பரிசீலித்தோம் (அத்தியாயம் V., 'மூலதனத்தின் பொதுச்சூத்திரத்தில் உள்ள முரண்பாடுகள். 'பிரிவு2). இந்த மாயையின் எந்த வடிவத்தை டாரென்சும் மற்றவர்களும் அரசியல் பொருளாதாரம் ரிக்கார்டோவைத் தாண்டி அடைந்த முன்னேற்றம் என்று சொல்லி மீண்டும் உலவ விட்டார்களோ அந்த வடிவத்தை இங்குச் சற்றே பரிசீலிப்போம்.

'இயற்கை-விலை (natural price)என்பது உற்பத்திச் செலவை, அதாவது சரக்குகளை விளைவிப்பதில் அல்லது புனைவதில்

செலவிடப்படும் மூலதனத்தைக் குறிப்பதாகும்; இந்த இயற்கை-விலை இலாபத்தை உள்ளடக்கியதாய் இருக்க முடியாது....சாகுபடியாளர் தமது வயல்களைச் சாகுபடி செய்வதில் 100 குவார்ட்டர் தானியத்தைச் செலவிட்டுப் பதிலுக்கு 120 குவார்ட்டர் விளைச்சல் பெறுவதாகக் கொள்வோம். இந்த உதாரணத்தில், செலவுக்கு மேல் உற்பத்திக்குள்ள மிகையாகிய இருபது குவார்ட்டர் சாகுபடியாளரின் இலாபமாகிறது. ஆனால் இந்த மிகை அல்லது இலாபத்தைச் செலவின் பகுதி என்று சொல்வது அபத்தமாகும்....தொழிலதிபர் குறிப்பிட்ட அளவு கச்சாப் பொருள், கருவிகள், தொழிற் சாதனங்கள், உழைப்புக்கான வாழ்வுச் சாதனங்கள் இவற்றையெல்லாம் செலவிட்டு, பதிலுக்கு குறிப்பிட்ட அளவு பூர்த்தியான பண்டத்தைப் பெறுகிறார். பூர்த்தியான இந்தப் பண்டம் அதைப் பெறுவதற்காக முன்னீடு செய்யப்பட்ட மூலப்பொருட்கள், கருவிகள், வாழ்வுச் சாதனங்கள் இவற்றை விட உயர்ந்த பரிவர்த்தனை-மதிப்புடையதாய் இருக்க வேண்டும்.' இதிலிருந்து டாரென்ஸ் ஒரு முடிவுக்கு வருகிறார். அடக்க-விலை மீது விற்பனை-விலைக்குள்ள மிகை, அதாவது இலாபம் எப்படிப் பெறப்படுகிறது? நுகர்வோர் 'நேரடியான அல்லது சுற்றடியான பண்டமாற்றின் மூலம், சரக்குகளின் உற்பத்திக்குச் செலவாவதை விட சற்றே அதிகப் பகுதி மூலதனக் கூறுகளை அவற்றுக்காக அளிப்பதிலிருந்தோ'[6] இலாபம் பெறப்படுகிறது என்பதே டாரென்ஸ் காணும் முடிவு.

உண்மையில் குறிப்பிட்ட பருமன் மீதான மிகை அப்பருமனின் பகுதியாக முடியாது. ஆகவே முதலாளியின் செலவுகள் மீது சரக்கின் மதிப்புக்குள்ள மிகையாகிய இலாபமும் அச்செலவுகளின் பகுதியாக முடியாது. முதலாளி முன்னீடு செய்த மதிப்பு அல்லாமல் வேறு எந்தக் கூறும் சரக்கினது மதிப்பின் உருவாக்கத்தில் சேரவில்லை என்னும் போது உற்பத்தியினுள் நுழைந்ததைக் காட்டிலும் அதிக மதிப்பு உற்பத்தியிலிருந்து வெளிப்படுவது எப்படி என்று விளங்கவில்லை; ஏனென்றால் எதுவுமில்லா நிலையிலிருந்து எதுவும் வராது. ஆனால் எதுவுமில்லா நிலையிலிருந்து ஏதோ படைக்கப்படுவதான இந்த விசித்திரத்தை எப்படியாவது தட்டிக் கழிப்பதற்காகவே அதனைச் சரக்கு உற்பத்தித் துறையிலிருந்து சரக்குச் சுற்றோட்டத் துறைக்கு மாற்றி விடுகிறார் டாரென்ஸ். அவர் சொல்கிறார், இலாபம் உற்பத்தியிலிருந்து வர முடியாதாம், அப்படி வருமென்றால் அது ஏற்கெனவே உற்பத்திச் செலவில் அடங்கியிருக்குமாம், இச்செலவிற்கு மேல் உபரி என்ற ஒன்று

6. ரா.டாரென்ஸ், செல்வ உற்பத்தி பற்றிய கட்டுரை, லண்டன், 1821, பக்கம் 51-53, 349.

இருக்காதாம். இலாபமானது சரக்குப் பரிவர்த்தனைக்கு முன்பே இல்லை என்றால், இந்தப் பரிவர்த்தனையிலிருந்து வர முடியாது' என்று இதற்கு ராம்சே பதிலளிக்கிறார். பரிவர்த்தனையாகிற உற்பத்திப் பண்டங்களது மதிப்பின் கூட்டுத் தொகை இந்தப் பண்டங்களின் பரிவர்த்தனையால் மாறிவிடுவதில்லை என்பது தெளிவு. இத்தொகை பரிவர்த்தனைக்கு முன்னரும் பின்னரும் ஒன்றே. வெளிப்படையாகவே டாரென்சை மால்தஸ் ஆதாரமாய்க் கொள்கிறார் என்பதை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.[7] ஆனால் சரக்குகள் அவற்றின் மதிப்புக்கு மேல் விற்கப்படுவதற்கு மால்தஸ் தரும் விளக்கம் வேறு; அது இதற்கான விளக்கமே அல்ல என்று கூடச் சொல்லலாம். ஏனென்றால் சாராம்சத்தில் இவ்வகை வாதங்கள் எல்லாம் ஒரு காலத்தில் பிரபலமாயிருந்த பிளாஜிஸ்டானின் எதிர்நிலை எடை என்பதற்கே எப்போதும் இணையாகின்றன.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி கோலோச்சுகிற சமூக அமைப்பில், முதலாளித்துவமல்லாத உற்பத்தியாளரையும் கூட முதலாளித்துவக் கண்ணோட்டங்களே ஆட்டிப் படைக்கின்றன. எதார்த்த நிலைமைகளை ஆழமாய்ப் புரிந்து கொள்வதில் வல்லவரான பல்சாக் *Les Paysans* என்ற தமது கடைசிப் புதினத்தில் ஒரு சிறு விவசாயியைத் துல்லியமாய்ப் படம் பிடித்துக் காட்டுகிறார். இந்த விவசாயி தமக்குக் கடன் கொடுத்த வட்டிக்காரரின் நல்லெண்ணத்தை இழந்து விடக்கூடாதென்று சிறு சிறு காரியம் பலவும் இலவசமாய் அவருக்குச் செய்து கொடுக்கிறார். விவசாயி இந்த உழைப்புக்காகக் கைக்காசு ஏதும் செலவு செய்வதில்லை என்பதால், தாம் வட்டிக்காரருக்கு எதையும் இலவசமாய்க் கொடுத்து விடவில்லை என்று கற்பனை செய்து கொள்கிறார். வட்டிக்காரரைப் பொறுத்தவரை, இவ்விதம் ஒரு கல்லில் இரு காய் அடிக்கிறார். கூலிக்கான ரொக்கச் செலவு அவருக்கு மிச்சமாகிறது. விவசாயி தமது வயலில் உழைக்க முடியாமற் போவதால் படிப்படியாய்க் கெட்டு நாசமாகிக் கடுவட்டியின் சிலந்தி வலையில் மேலும் மேலும் சிக்கிக் கொள்கிறார்.

சரக்கின் அடக்க-விலையே அதன் மெய்யான மதிப்பு என்பதும், உற்பத்திப் பொருளை அதன் மதிப்பைக் காட்டிலும் அதிக விலைக்கு விற்பதிலிருந்தே உபரி-மதிப்பு பிறக்கிறது என்பதும் ஆராயாமல் சொல்லும் கருத்து. சரக்குகளின் விற்பனை-விலையானது அவற்றின் அடக்க-விலைக்குச் சமமாய் இருக்குமானால், அதாவது நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் விலை + கூலி என்பதற்குச் சமமாய்

7 மால்தஸ், அரசியல் பொருளாதாரத்தில் இலக்கணங்கள், லண்டன், 1853, பக்கம் 70, 71.)

இருக்குமானால், சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே விற்கப்படும் என்று இக்கருத்திலிருந்து பெறப்படுகிறது. இக்கருத்தைத்தான் புரூதோன் புதிதாய்க் கண்டுபிடித்த சோஷலிச இரகசியமாய் உலகிற்குப் பறைசாற்றுகிறார் - இந்தப் போலி விஞ்ஞானப் பித்தலாட்டம் அவருக்கு வாடிக்கையான ஒன்றுதான். உண்மையில் சரக்குகளின் மதிப்பை இவ்விதம் அவற்றின் அடக்க-விலையாகப் பெயர்ப்பதுதான் அவரது மக்கள்-வங்கிக்கு அடிப்படையாகும். உற்பத்திப் பொருளினது மதிப்பின் பல்வேறு ஆக்கக் கூறுகளையும் அந்த உற்பத்திப் பொருளின் விகிதாசாரப் பகுதிகளாய்க் காட்ட முடியுமென்று முன்பே தெளிவாக்கினோம் (முதல் பாகம், அத்தியாயம் IX, பிரிவு 2. பக்கம் 300-05). எடுத்துக்காட்டாக, 20 இராத்தல் நூலின் மதிப்பு 30 ஷில்லிங் எனக் கொள்வோம். உற்பத்திச் சாதனங்கள் 24 ஷில்லிங், உழைப்புச் சக்தி 3 ஷில்லிங், உபரி-மதிப்பு 3 ஷில்லிங்-இந்த உபரி-மதிப்பை உற்பத்திப் பொருளில் 1/10 பங்காகிய 2 இராத்தல் நூலாகக் காட்ட முடியும். இந்த 20 இராத்தல் நூல் இப்போது அதன் அடக்க-விலைக்கு 27 ஷில்லிங் என - விற்கப்படுமானால் வாங்குகிறவர் 2 இராத்தல் நூலை இலவசமாகப் பெறுகிறார்; அதாவது பண்டம் அதன் மதிப்பைக் காட்டிலும் 1/10 பங்கு குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. ஆனால் முன் போலவே இப்போதும் தொழிலாளி உபரி-உழைப்பைக் கொடுத்துள்ளார். அதில் எந்த மாற்றமும் இல்லை. அவர் இந்த உபரி-உழைப்பை நூல் உற்பத்திச் செய்யும் முதலாளிக்குக் கொடுப்பதற்கு பதில் நூல் வாங்குகிறவருக்குக் கொடுத்துள்ளார் என்பதே வேறுபாடு. எல்லாச் சரக்குகளும் அவற்றின் அடக்க-விலைக்கே விற்கப்பட்டால் ஏற்படும் விளைவும், அவையனைத்தும் அவற்றின் அடக்க-விலைக்கு மேல், ஆனால் அவற்றின் மதிப்புக்கே, விற்கப்பட்டால் ஏற்படும் விளைவும் உண்மையில் ஒன்றே எனக்கொள்வது பெருந் தவறாகிவிடும். ஏனெனில், உழைப்புச் சக்தியின் மதிப்பு, வேலை-நாளின் கால அளவு, உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமை ஆகியவை எல்லா இடங்களிலும் ஒன்றாகவே இருந்தாலும் கூட, பல்வேறு வகைச்சரக்குகளின் மதிப்புகளில் அடங்கியுள்ள உபரி-மதிப்பளவுகள் - அச்சரக்குகளின் உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் மூலதனங்களின் அங்கக இயைபுகளிலான வேறு பாட்டைப் பொறுத்து - சமமற்றவையாகவே இருக்கும்.[8]

8 'வெவ்வேறு மூலதனங்களால் உற்பத்தி செய்யப்படும் மதிப்பு, உபரி-மதிப்பு இவற்றின் திரள்கள் - உழைப்புச் சக்தியின் மதிப்பு குறிப்பிட்டதாகவும், அதன் மீதான சுரண்டல் - கடுமை சமமாகவும் இருக்க - இந்த மூலதனங்களின் மாறும் அங்கங்களின் அளவுகளுக்கு, அதாவது உயிருள்ள உழைப்புச் சக்தியாக மாற்றப்படுகிற அங்கங்களின் அளவுகளுக்கு நேர் விகிதத்தில் மாறுபடுகின்றன.' (முதல் பாகம், அத்தியாயம் XI - பதிப்பாசிரியர்.)

## அத்தியாயம் II

## இலாப விதம்

மூலதனத்திற்கான பொதுச் சூத்திரம் M—C—M'. அதாவது ஒரு மதிப்புத் தொகை சுற்றோட்டத்துள் செலுத்தப்பட்டு அதனிலும் பெரியதொரு தொகை வெளியே எடுக்கப்படுகிறது. செலுத்தியதைவிட பெரிய மதிப்புத் தொகையை உற்பத்திச் செய்யும் நிகழ்முறையே முதலாளித்துவப் பொருளுற்பத்தி. அதனை ஈடேற்றம் செய்கிற நிகழ்முறையே மூலதனச் சுற்றோட்டம். முதலாளி சரக்குக்காக சரக்கை உற்பத்திச் செய்யவில்லை; சரக்கின் பயன்-மதிப்புக்காகவோ தமது சொந்த நுகர்வுக்காகவோ அதை உற்பத்திச் செய்யவில்லை. முதலாளி குறியாக இருப்பது கண் முன்னுள்ள உற்பத்திப் பொருளில் அல்ல; அதன் உற்பத்திக்காகச் செலவாகும் மூலதன மதிப்புக்கும் கூடுதலாக அதிலுள்ள மிகை மதிப்பே (excess value) அவரது குறி. முதலாளி மொத்த மூலதனத்தை முன்னீடு செய்யும் போது அதன் அடக்கக் கூறுகள் உபரி-மதிப்பின் உற்பத்தியில் ஆற்றப் போகும் வெவ்வேறு விதமான பங்கினைக் கருதுவதில்லை. தாம் முன்னீடு செய்கிற மூலதனத்தை மறுவுற்பத்திச் செய்வதோடல்லாமல் மேலும் கூடுதலாய் ஒரு மிகை மதிப்பையும் உற்பத்திச் செய்வதற்காகவே முதலாளி இந்த மூலதனக் கூறுகளையெல்லாம் முன்னீடு செய்கிறார். தாம் முன்னீடு செய்கிற மாறும்-மூலதனத்தின் மதிப்பை அதினிலும் பெரிய மதிப்பாக மாற்ற வேண்டுமானால், அம்மதிப்பை உயிருள்ள உழைப்புக்காகப் பரிவர்த்தனை செய்து கொண்டு உயிருள்ள உழைப்பைச் சுரண்டுவது தான் அதற்குள்ள ஒரே வழி. ஆனால் உழைப்பைச் சுரண்ட வேண்டுமானால் அதேபோது அவர் இந்த உழைப்பு செயல்படுவதற்கு அவசியமானவற்றையும் முன்னீடு செய்தாக வேண்டும். அதாவது உழைப்புச் சாதனங்களும் இலக்குப் பொருட்களுமான இயந்திர சாதனங்களையும் கச்சாப் பொருட்களையும் முன்னீடு செய்தாக வேண்டும். இதன் பொருள் என்னவென்றால், அவர் தம் வசமுள்ள மதிப்பில் குறிப்பிட்ட அளவினை உற்பத்திச் சாதனங்களாய் மாற்றியாக வேண்டும். அவர் உழைப்புச் சாதனங்களின் உடைமையாளராய் இருப்பதாலும் உழைப்புச் சக்திக்கு மட்டுமே உடைமையாளரான தொழிலாளியை எதிர்நோக்குவதாலும்தான் முதலாளியாக இருக்கிறார்.

உழைப்பைச் சுரண்டும் நிகழ்முறையை அவரால் மேற்கொள்ள முடிகிறது. தொழிலாளி அல்லாதோர் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்களாய் இருப்பதால்தான் உழைப்பாளர்கள் கூலித் தொழிலாளர்களாகிறார்கள், தொழிலாளி அல்லாதோர் முதலாளிகளாகிறார்கள் - இதை முதல் பாகத்திலேயே தெளிவாக்கினோம்.*

முதலாளி மாறும்-மூலதனத்திலிருந்து இலாபம் பெறுவதற்காக மாறா-மூலதனத்தை முன்னீடு செய்வதாகவும் கொள்ளலாம். மாறா-மூலதனத்தின் மதிப்பை அதிகமாக்கிக் கொள்வதற்காக மாறும்-மூலதனத்தை முன்னீடு செய்வதாகவும் கொள்ளலாம், அதாவது அவர் தமது இயந்திர சாதனம், கச்சாப் பொருட்கள் இவற்றின் மதிப்பை அதிகமாக்கிக் கொள்வதற்காகப் பணத்தைக் கூலியாக முதலீடு செய்வதாகவும் கொள்ளலாம். உழைப்பைச் சுரண்டுவதற்காக இயந்திர சாதனத்திலும் கச்சாப் பொருட்களிலும் முதலீடு செய்வதாகவும் கொள்ளலாம். எப்படிக் கொண்டாலும் அவருக்குக் கவலை இல்லை, எல்லாமே அவருக்கு ஒன்றுதான். மூலதனத்தின் மாறும் பகுதி மட்டுமே உபரி-மதிப்பைப் படைக்கிறது என்றாலும் ஏனைய பகுதிகளான உற்பத்திச் சாதனங்களும் முன்னீடு செய்யப்பட்டால்தான் அதனால் இதைச் செய்ய முடிகிறது. மாறா-மூலதனத்தை முன்னீடு செய்துதான் உழைப்பைச் சுரண்ட முடியும் என்பதாலும், மாறும்-மூலதனத்தை முன்னீடு செய்துதான் மாறா-மூலதனத்தை இலாபகரமாய்ப் பயன்படுத்தி திறனுடையதாக்க முடியும் என்பதாலும், இவ்விரு மூலதனங்களும் முதலாளியின் பார்வையில் ஒன்றாகிச் சேர்ந்து விடுகின்றன. இதனிலும் முக்கியமான இன்னொரு நிலைமையையும் குறிப்பிட வேண்டும்: அதாவது உள்ளபடியே அவருக்குக் கிடைக்கும் ஆதாயத்தின் படித்தரமானது அந்த ஆதாயம் மாறும்-மூலதனத்தோடு கொண்டுள்ள விகித உறவால் நிர்ணயிக்கப்படாமல் மொத்த மூலதனத்தோடு கொண்டுள்ள விகித உறவாலேயே நிர்ணயிக்கப் படுகிறது. அதாவது உபரி-மதிப்பு வீதத்தால் நிர்ணயிக்கப்படாமல் இலாப வீதத்தாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. ஒரே இலாப-வீதம் வெவ்வேறு உபரி-மதிப்பு வீதங்களைக் குறிப்பதாய் இருக்கலாம் —இதைப் பிறகு பார்ப்போம்.

உற்பத்திப் பண்ட மதிப்பின் அடக்கக் கூறுகளில் எவற்றுக் கெல்லாம் முதலாளி விலை கொடுத்திருக்கிறாரோ, அதாவது

* தமிழ்ப் பதிப்பு: முதல் பாகம், பக்கம் 231-35, 1024-27. - பதிப்பாசிரியர்.)

எவற்றுக்கெல்லாம் உற்பத்தி நிகழ்முறையின் போது சமதை செலுத்தியுள்ளாரோ அவை யாவும் அவ்வுற்பத்திப் பண்டத்தின் அடக்கச் செலவுகளில் சேரும். இந்தச் செலவுகளை அவர் மீட்டுக் கொண்டாக வேண்டும். அப்போதுதான் அவரால் தமது மூலதனத்தை அழியாமல் காப்பாற்றிக் கொள்ள முடியும், அதாவது அதன் ஆரம்பப் பருமனில் அதை மறுவுற்பத்திச் செய்து கொள்ள முடியும்.

ஒரு சரக்கில் அடங்கியுள்ள மதிப்பு அச்சரக்கின் உற்பத்திக்குச் செலவாகிற உழைப்பு நேரத்துக்குச் சமம். இந்த உழைப்பு ஊதிய உழைப்பு, ஊதியமிலா உழைப்பு ஆகிய இரு பகுதிகளால் ஆனது. ஆனால் முதலாளியைப் பொறுத்த வரை, பொருள் வடிவம் பெற்று சரக்காகிற உழைப்பில் எப்பகுதிக்கு அவர் ஊதியமளித்திருக்கிறாரோ அப்பகுதி மட்டுமே சரக்கின் அடக்கச் செலவுகளில் சேருகிறது. சரக்கில் அடங்கியுள்ள உபரி-உழைப்புக்காக முதலாளி செலவேதும் செய்ய வேண்டியதில்லை. ஆனால் ஊதிய உழைப்பைப் போலவே ஊதியமிலா உபரி-உழைப்புக்காகவும் தொழிலாளி பாடுபட்டு உழைத்தாக வேண்டியிருக்கிறது. ஊதிய உழைப்பைப் போலவே உபரி-உழைப்பும் மதிப்பைப் படைக்கிறது, மதிப்பின் ஆக்கக் கூறாகச் சரக்கில் சேருகிறது. செலவேதும் செய்யாமலே வரப்பெற்ற ஒன்றை விற்பதால்தான் முதலாளிக்கு இலாபம் கிடைக்கிறது. ஆகவே உபரி-மதிப்பு அல்லது இலாபம் என்பது சரக்கின் அடக்க-விலைக்கும் கூடுதலாய் சரக்கில் அடங்கியுள்ள மிகை மதிப்பே தவிர வேறல்ல, அதாவது சரக்கில் உருக்கொண்டுள்ள மொத்த உழைப்பில் ஊதிய உழைப்புக்கும் கூடுதலாய் இருக்கும் மிகையே தவிர வேறல்ல. உபரி-மதிப்பானது எங்கிருந்து வருவதாய் இருப்பினும் இவ்விதம் அது முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தை அன்னியில் வரப்பெறும் உபரியே ஆகும். மொத்த மூலதனத்தோடு இந்த உபரிக்குள்ள விகித உறவை $^s/_C$ என்ற பின்னமாய்க் குறிக்கலாம்; இதில் C என்பது மொத்த மூலதனத்தைக் குறிக்கிறது. இவ்வாறு இலாப விதம் $^s/_C = {^s/_{C+V}}$ ஆனால் உபரி-மதிப்பு விதம் = $^s/_V$.

உபரி-மதிப்பை மாறும்-மூலதனத்தோடு ஒப்பிட்டு அளவிடுவதே உபரி-மதிப்பு வீதம் எனப்படுவது. உபரி-மதிப்பை,மொத்த மூலதனத்தோடு ஒப்பிட்டு அளவிடுவதே இலாப வீதம் எனப்படுவது. ஒன்றேயானதை இவை இருவேறு விதமாய் அளவிடுகின்றன. அளவீட்டு நியமங்கள் வேறுபடுவதால் ஒன்றேயானதை இரண்டும் இருவேறு விகிதங்கள் அல்லது உறவுகளாகத் தெரிவிக்கின்றன.

உபரி-மதிப்பு இலாபமாக மாற்றமடைவது உபரி-மதிப்பு வீதம் இலாப வீதமாக மாற்றமடைவதிலிருந்து பெறப்பட வேண்டுமே தவிர, இரண்டாவது மாற்றம் முதலாவது மாற்றத்திலிருந்து பெறப்படுவதாகக் கொள்ளலாகாது. உண்மையில் இலாப வீதம்தான் வரலாற்று வழிப்பட்ட தொடக்க முனை ஆகும். ஒப்பளவில் சொல்லப் போனால், உபரி-மதிப்பும் உபரி-மதிப்பு வீதமும் கண்ணுக்குத் தெரியா உட்பொருளாய், ஆய்ந்தறிய வேண்டியதாய் இருப்பவை. ஆனால் இலாப வீதமும், ஆகவே இலாபத்தின் வடிவில் தோற்றமளிக்கும் உபரி-மதிப்பும் மேற்புறப் புலப்பாடுகளாய் வெளியே தெரிகிறவை.

தனிப்பட்ட முதலாளியைப் பொறுத்தவரை உபரி-மதிப்பானது, அதாவது தமது சரக்குகளை விற்பதால் கிடைக்கும் மிகை மதிப்பானது அச்சரக்குகளின் உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தோடு கொண்டுள்ள விகித உறவில் மட்டுமே அவருக்குக் குறி என்பதைக் கூறத் தேவையில்லை. இந்த உபரி-மதிப்பு மூலதனத்தின் பல்வேறு கூறுகளோடும் கொண்டுள்ள பிரத்தியேக உறவையும் உள் தொடர்பையும் பற்றி அவருக்குக் கவலையில்லை. இன்னும் சொல்லப் போனால் இந்த பிரத்தியேக உறவையும் உள் தொடர்பையும் மூடிமறைப்பதுதான் அவருக்கு நல்லது.

சரக்கின் அடக்க-விலை கடந்து கூடுதலாய் இருப்பதாகிய அதன் மிகை மதிப்பானது நேரடி உற்பத்தி நிகழ்முறையில் உதித்தாலும் கூட, அது சுற்றோட்ட நிகழ்முறையில்தான் ஈடேற்றம் பெறுகிறது என்பதால், சுற்றோட்ட நிகழ்முறையிலிருந்தே அது உதிப்பதாக நினைக்கத் தோன்றுகிறது. அதோடு போட்டிக் களமாய்த் திகழும் எதார்த்த மெய்யான சந்தையில் இந்த உபரியானது ஈடேற்றம் பெறுகிறதா, இல்லையா, எந்த அளவுக்கு ஈடேற்றம் பெறுகிறது என்பதெல்லாம் சந்தை நிலவரங்களையே பொறுத்திருப்பதால், இந்த நினைப்பு மேலும் வலுவடைகிறது. சரக்கானது அதன் மதிப்புக்கும் அதிகமான விலைக்கும் விற்கப்படலாம். குறைவான விலைக்கும் விற்கப்படலாம். இதனால் உபரி-மதிப்பு பங்கிடப்பட்டுக் கொள்ளும் விதம் மாறுகிறதே தவிர, இந்த வேறுவிதமான பங்கீட்டால் - வெவ்வேறு ஆட்களும் உபரி-மதிப்பைப் பகிர்ந்துகொள்கிற விகிதங்களில் ஏற்படும் இந்த மாற்றத்தால் - உபரி மதிப்பின் பருமனோ, தன்மையோ எவ்விதத்திலும் மாறி விடவில்லை என்பதை இங்கு நாம் விளக்கத் தேவையில்லை. சுற்றோட்ட நிகழ்முறையின் போது நடப்பது இரண்டாம் பாகத்தில் நாம் பரிசீலித்த உருமாற்றங்கள் மட்டுமல்ல, அவற்றோடு கூட போட்டாபோட்டியும் நடந்தேறுகிறது - அதாவது சரக்குகளை

அவற்றின் மதிப்புக்கு அதிகமான அல்லது குறைவான விலைக்கு விற்றலும் வாங்கலுமான காரியமும் நடந்தேறுகிறது. இவ்விதம் தனிப்பட்ட முதலாளி ஈடேற்றிக் கொள்ளும் உபரி-மதிப்பானது உழைப்பின் மீதான சுரண்டலை எந்த அளவுக்குப் பொறுத்திருக்கிறதோ, அதே அளவுக்கு விற்றல் வாங்கலில் அவருக்குள்ள சாமர்த்தியத்தையும் பொறுத்ததாகிறது.

வேலைக் காலத்தோடு கூடவே சுற்றோட்டக் காலமும் சுற்றோட்ட நிகழ்முறையில் தாக்கம் செலுத்துகிறது. குறிப்பிட்ட காலத்தில் ஈடேற்றம் பெறக் கூடிய உபரி-மதிப்புக்கு அது வரம்பிடுகிறது. சுற்றோட்டத்திலிருந்து வரப்பெறும் வேறு சிலவும் நேரடி உற்பத்தி நிகழ் முறையில் தலையிட்டு திட்டவட்டமான முறையில் தாக்கம் செலுத்துகின்றன. உள்ளபடியான உற்பத்தி நிகழ்முறையும் சுற்றோட்ட நிகழ்முறையும் பின்னிப் பிணைவதும் ஒன்றோடொன்று கலப்பதும் ஓயாமல் நடைபெறுகின்றன. இரண்டையும் வேறுபடுத்திக் காட்டும் தனி இயல்புகள் இதனால் கலங்கிக் கெடுகின்றன. உபரி-மதிப்பின் உற்பத்தியும் பொதுவாக மதிப்பின் உற்பத்தியும் சுற்றோட்ட நிகழ்முறையின் போது தெளிவான புது வரையறை பெறுவதை முன்பே விளக்கியுள்ளோம். மூலதனமானது அதன் உருமாற்றங்களுக்கான சுற்றினை நிகழ்த்துகிறது. முடிவில் அது தனது அங்கக உருவாக்க அக வாழ்விலிருந்து (inner organic life) வெளிப்பட்டு புற வாழ்வுடன் உறவுகள் நிறுவிக் கொள்ள முற்படுகிறது. இந்த உறவுகளில் எதிரும் புதிருமாய் ஒன்றை ஒன்று நோக்குவது மூலதனமும் உழைப்பும் அல்ல - ஒரு சமயம் மூலதனம் மூலதனத்தையும், மற்றொரு சமயம் தனியாட்கள் சரக்கு வாங்குவோராகவும் விற்போராகவும் ஒருவரை ஒருவர் எதிரும் புதிருமாய் நோக்க வேண்டியதாகிறது. சுற்றோட்டக் காலத்தின் பாதையும் வேலைக் காலத்தின் பாதையும் ஊடாடிச் செல்கின்றன, இவ்வாறு இரண்டுமே உபரி-மதிப்பை நிர்ணயிப்பதாகத் தோன்றுகிறது. மூலதனமும் கூலியுழைப்பும் எதிரும் புதிருமாய் ஒன்றையொன்று நோக்கும் அந்த ஆதி வடிவமானது இந்த எதிர்நிலையைச் சாராமல் சுயேச்சையாய் இருப்பது போல் தோன்றுகிற உறவுமுறைகளின் குறுக்கீட்டால் மூடி மறைக்கப்படுகிறது. இப்போது உபரி-மதிப்புங் கூட உழைப்பு நேரம் தனதாக்கப்படுவதால் ஏற்படும் விளைவாக அல்லாமல், விற்பனை விலையில் சரக்கின் அடக்க-விலைக்கும் கூடுதலாய் இருக்கும் மிகையாகத் தோற்றமளிக்கிறது. இனி அடக்க-விலையே சரக்கின் சரியான மதிப்பாகும் (valeur intrinseque)

என்பதாகக் காட்டுவது எளிதாகிவிடுகிறது; அதேபோது இலாபமானது விற்பனை-விலையில் சரக்குகளின் உள்ளார்ந்த மதிப்புக்கும் கூடுதலாய் இருக்கும் மிகையாகத் தோற்றமளிக்கிறது.

உபரி-மதிப்பின் தன்மை அப்படிப்பட்டது, உற்பத்தி நிகழ்முறையின்போது அது முதலாளியின் உணர்வினை ஆட்கொண்டு முழு நேரமும் அவரை ஆட்டி வைக்கிறது. ஏனையோரது உழைப்பு நேரத்தின் மீது அவருக்குள்ள அடங்காத ஆசையும் இன்ன பிறவும் உபரி-மதிப்பு பற்றிய நமது பகுப்பாய்வின் போது இதனை நமக்குத் தெளிவாகவே புலப்படுத்தின. இதெல்லாம் மெய்தான் என்றாலும்: 1) மெய் நடப்பில் உற்பத்தி நிகழ்முறையானது சடுதியில் ஓடி மறையும் ஒரு கட்டமே ஆகும். இக்கட்டம் இடையறாது சுற்றோட்ட நிகழ்முறையோடும், அதேபோல பின்னது இக்கட்டத்தோடும் ஒன்றுகலக்கிறது. இதன் விளைவு என்னவென்றால், உற்பத்தி நிகழ்முறையின் போது வரப்பெறும் இலாபத்துக்கு எது தோற்றுவாய் என்பது, அதாவது உபரி-மதிப்பின் இயல்பான தன்மை எது என்பது முதலாளிக்கு ஓரளவுக்குத் தெளிவாகவே புலப்படுவதாய் இருப்பினும், அதேபோது எழுகிற வேறொரு கருத்தும் இதே அளவுக்கு ஏற்புடையதாகவே தோன்றுகிறது. அதாவது ஈடேற்றம் பெறுகிற இந்த உபரியானது உற்பத்தி நிகழ்முறையல்லாத வேறொன்றின் போது - சுற்றோட்ட நிகழ்முறையின் போது - பிறப்பதாக, உழைப்போடு மூலதனத்துக்குள்ள உறவு எதுவாயினும் மூலதனத்திலிருந்தே உதிப்பதாகக் கொள்ளும் கருத்தும் இதே அளவுக்கு ஏற்புடையதாகவே தோன்றுகிறது. ராம்சே, மால்தஸ், சீனியர், டாரென்ஸ் போன்ற நவீனகாலப் பொருளாதார அறிஞர்களுங்கூட சுற்றோட்டத்துறைக்குரிய இந்நிகழ்வுகளை நேரடி நிரூபணமாக எடுத்துரைத்து, மூலதனமானது அதன் வெறும் பொருள் வடிவிலேயே, (உழைப்போடு மூலதனத்துக்குள்ள சமுதாய உறவைச் சாராமலே, வெறும் பொருளாய் இருக்கும் ஒன்றை மூலதனம் ஆக்குகிற இந்தச் சமுதாய உறவைச் சாராமலே) உழைப்பைச் சாராமல் சுயேச்சையாகவே, உழைப்போடு கூடவே அதுவும் உபரி-மதிப்புக்கான சுயேச்சையானதொரு தோற்றுவாயாகச் செயல்படுவதாய்க் கூறுகிறார்கள். 2) செலவினங்களாய் கூலியும் மற்றும் கச்சாப் பொருட்களுக்குத் தரப்படும் விலையும் இயந்திர சாதனங்களது தேய்மானமும் இன்ன பிறவும் செலவுக் கணக்கில் சேருவதுபோல ஊதியமிலா உழைப்பும் சேர்ந்து விடுகிறது - ஒரு பண்டத்தை விலை கொடுத்து வாங்குகையில் வரப்பெறும் சிக்கனமாகக் கணக்கில் சேருகிறது. கச்சாப் பொருளை மலிவான விலைக்கு வாங்கும்போது,

அல்லது இயந்திர சாதனத் தேய்மானம் (depreciation of machinery) குறையும்போது வரப்பெறும் சிக்கனத்தைப் போல் குறிப்பிட்ட அளவு உழைப்புக்கு ஆகும் செலவு குறைவதால் வரப்பெறும் சிக்கனமாகக் கணக்கில் சேருகிறது. உபரி-உழைப்பைக் கறக்கும் செயலானது இவ்விதம் அதன் பிரத்தியேகத் தன்மையை இழந்துவிடுகிறது. அதற்கும் உபரி-மதிப்புக்குமுள்ள பிரத்தியேக உறவு இதனால் மூடி மறைக்கப்பட்டுவிடுகிறது. உழைப்புச் சக்தியின் மதிப்பினைக் கூலியின் வடிவில் தெரிவிப்பதானது எப்படி இதற்குத் துணை செய்கிறது என்பதை முதல் பாகத்தில் (பகுதி 6, பக்கம் 719-28) தெளிவுபடுத்தினோம்.

மூலதனத்தைச் சேர்ந்த எல்லாப் பகுதிகளுமே மிகை மதிப்பின் (இலாபத்தின்) தோற்றுவாயாகத் தோற்றமளிப்பதால் மூலதனத்தின் உறவுமுறைகள் மூடி மறைக்கப்படுகின்றன.

உபரி-மதிப்பானது இலாப வீதத்தின் மூலம் இலாபமாக உருமாற்றமடையும் நிகழ்வானது, ஏற்கெனவே உற்பத்தி நிகழ் முறையின் போது செயலின் கர்த்தாவுக்கும் செயலுக்கும் இலக்காகும் பொருளுக்குமிடையே நடைபெறும் மாறாட்டத்தின் (Subject-object inversion) வளர்ச்சியே ஆகும். உற்பத்தி நிகழ்முறையின் போது கர்த்தாவாகிய உழைப்பினுடைய உற்பத்தித் திறன்கள் மூலதனத் திறனுடைய உற்பத்தித் திறன்களாகத் தோற்றமளிக்கக் கண்டோம் (முதல் பாகம், பக்கம் 685-87)...ஒரு புறத்தில் உயிருள்ள உழைப்பின் மீது ஆதிக்கம் செலுத்தும் மதிப்பு....அல்லது கடந்த கால உழைப்பு - முதலாளியாக ஆளுருவம் பெறுகிறது. மறு புறத்தில் தொழிலாளி யானவர் வெறும் பொருள் வடிவிலான உழைப்புச் சக்தியாக, சரக்காகத் தோற்றமளிக்கிறார். இந்தத் தலைகீழ் உறவுமுறையானது சமானிய உற்பத்தி உறவுகளிலுங் (relations of production) கூட அதற்கு இணையான சில தலைகீழ்க் கருத்தோட்டங்களைத் தோற்றுவிக்கிறது. எதிர்மாறான உணர்வினை உண்டாக்குகிறது. சுற்றோட்ட நிகழ்முறையின் போது ஏற்படும் உருமாற்றங்களும் உருத்திரிபுகளும் இவற்றை மேலும் தொடர்ந்து வளர்த்திடுகின்றன.

இலாப வீதத்தின் விதிகளையும் உபரி-மதிப்பு வீதத்தின் விதிகளையும் ஒன்றுக்கொன்று முழுதொத்தவையாகக் காட்ட முயல்வது முற்றிலும் தவறு - ரிக்கார்டிய மரபினை ஆராய்வோமானால் இது தெரியவரும். இவ்விரு வீதங்களையும் முதலாளி வேறுபடுத்திப் பார்க்காததில் வியப்பில்லை. $^{s}/_{C}$ என்னும் சூத்திரத்தில் உபரி-மதிப்பை அதன் உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தின்

மதிப்போடு ஒப்பிட்டு அளவிடுகிறோம்: மொத்த மூலதனத்தில் ஒரு பகுதி இந்த உற்பத்திக்காக முற்றும் நுகரப்படுகிறது, மற்றொரு பகுதி இந்த உற்பத்திக்காக ஈடுபடுத்தப்படுகிறதே தவிர நுகரப்படுவதில்லை. $^{s}/_{C}$ என்னும் சூத்திரம் உண்மையில் தெரிவிப்பது முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தினது தற்பெருக்கப் படித்தரமே (degree of self expansion) ஆகும். அல்லது, கருத்துருவாக்கத்தின் உள்தொடர்புகளுக்கும் உபரி-மதிப்பின் இயல்பான தன்மைக்கும் இசைவாய் வைத்துப் பார்க்கும் போது, இந்தச் சூத்திரம் மாறும்-மூலதனத்தின் மாற்ற அளவானது முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தின் பருமனோடு கொண்டுள்ள விகித உறவினைத் தெரிவிக்கிறது.

அதனளவில் மொத்த மூலதன-மதிப்பின் பருமனுக்கும் உபரி-மதிப்பின் பருமனுக்கும் உள் தொடர்பு இல்லை, எப்படியும் நேரடியான உள் தொடர்பு இல்லை. மொத்த மூலதனத்திலிருந்து மாறும்-மூலதனத்தைக் கழித்த பின் எஞ்சுவது மாறா-மூலதனம், உழைப்பைப் பொருளாக உருவாக்குவதற்கு அவசியமான உழைப்புச் சாதனங்களும் மூலப் பொருட்களும்தான் இந்த மாறா-மூலதனத்தின் பொருட்கூறுகள் குறிப்பிட்ட அளவுள்ள உழைப்பானது பொருளாக உருவாகிச் சரக்காவதற்கும் இவ்வழியில் மதிப்பை உற்பத்திச் செய்வதற்கும் குறிப்பிட்ட அளவு உழைப்புச் சாதனங்களும் மூலப்பொருட்களும் தேவைப்படுகின்றன. ஈடுபடுத்தப்படும் உழைப்பின் தனித்தன்மைக்கு ஏற்ப, இந்த உழைப்பின் அளவுக்கும் இவ்வுழைப்பால் இயக்கப்படுகிற உற்பத்திச் சாதனங்களது அளவுக்குமிடையே குறிப்பிட்ட தொழில்நுட்ப உறவு நிறுவப்படுகிறது. ஆகவே உபரி-மதிப்பு அல்லது உபரி-உழைப்பின் அளவுக்கும் உற்பத்தி சாதனங்களின் அளவுக்குமிடையே இதேபோல் குறிப்பிட்ட உறவு நிலவக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, தொழிலாளியின் கூலிக்கு ஈடானதை உற்பத்திச் செய்வதற்கு நாள்தோறும் ஆறு மணி நேர உழைப்பு தேவைப்படுமானால், தொழிலாளி 12 மணி நேரம் வேலை செய்தால்தான் அவரால் ஆறு மணிநேர உபரி-உழைப்பைத் தர முடியும், அதாவது 100% உபரி-மதிப்பை உற்பத்திச் செய்ய முடியும். 6 மணி நேர வேலையின் போது செலவாவதைப் போல் இரு மடங்கு உற்பத்திச் சாதனங்கள் 12 மணி நேர வேலையின்போது செலவாகின்றன. ஆனால் அவர் ஆறு மணி நேரத்தில் உற்பத்திச் செய்யும் உபரி-மதிப்புக்கும் இந்த 6 அல்லது 12 மணி நேரத்தில் செலவாகும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்புக்கும் நேரடித் தொடர்பேதும் உண்டு என்பதல்ல இதன் பொருள். இந்த உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு இங்கு எவ்வளவாய் இருப்பினும்

கவலையில்லை. தொழில்நுட்ப வழியில் எவ்வளவு தேவை என்பது மட்டுமே முக்கியமானது. கச்சாப் பொருளானாலும், உழைப்புச் சாதனங்களானாலும் அவை தேவையான பயன்-மதிப்பு உடையவையாய் இருக்கும் வரை, ஈடுபடுத்தப்படும் உழைப்போடு ஒப்பிடுகையில் தொழில்நுட்ப வகையில் வரையறை செய்யப்பட்ட விகிதங்களில் கிடைக்கும் வரை விலை மலிவா அதிகமா என்பது குறித்து கவலை இல்லை. ஒரு மணி நேரத்தில் x இராத்தல் பருத்தி நூற்கப்படுவதாகவும், அந்தப் பருத்திக்கு a ஷில்லிங் செலவாவதாகவும் தெரியுமானால், 12 மணி நேரத்தில் 12a ஷில்லிங் பெறுமானமுள்ள 12 x இராத்தல் பருத்தி நூற்கப்படும் என்பதும் தெரிந்து விடுகிறது. ஆகவே 12 மணி நேரத்தில் உற்பத்தியாகும் மதிப்போடும், அவ்வாறே 6 மணி நேரத்தில் உற்பத்தியாகும் மதிப்போடும் உபரி-மதிப்புக்குள்ள விகிதத்தைக் கணக்கிட்டு விடலாம். ஆனால் உற்பத்திச் சாதனங்களின் மதிப்போடு உயிருள்ள உழைப்புக்குள்ள விகித உறவானது x இராத்தல் பருத்திக்கான குறியீடாய் a ஷில்லிங் பயன்படும் அளவுக்கே தெரிய வருகிறது. ஏனென்றால் குறிப்பிட்ட அளவு பருத்தி குறிப்பிட்ட விலையுடையதாய் இருக்கிறது. ஆகவே மறுதலையாக (பருத்தியின் விலை மாறாதிருக்கும் வரை) குறிப்பிட்ட விலை குறிப்பிட்ட அளவு பருத்திக்குக் குறியீடாகிறது. ஆறு மணி நேர உபரி-உழைப்பை நான் எனதாக்க வேண்டுமானால் தொழிலாளியை என்னிடம் 12 மணி நேரம் உழைக்க வைத்தாக வேண்டும் என்பது தெரியுமாயின், 12 மணி நேரத்துக்கு போதிய அளவு பருத்தி என்னிடம் இருந்தாக வேண்டும் என்பதும் தெரிகிறது. இந்தப் பருத்தியின் விலை எனக்குத் தெரியுமானால் (தேவைப்படும் பருத்தியின் அளவுக்கு இந்த விலையைக் குறியீடாகக் கொள்ளலாம்) பருத்தியின் விலைக்கும் உபரி-மதிப்புக்கும் இடையே இவ்விதம் சுற்றடியான முறையில் ஒரு விகித உறவு இருப்பதாகக் கூறலாம். ஆனால் மறுதலையாக, கச்சாப் பொருளின் விலையைக் கொண்டு, ஆறு மணி நேர நூற்புக்கு பதில் ஒரு மணி நேர நூற்புக்குச் செலவாகிற கச்சாப் பொருள் எவ்வளவு என்று முடிவு கட்ட முடியாது. ஆகவே மாறா-மூலதனத்தின் மதிப்புக்கும் உபரி-மதிப்புக்கும் இடையிலோ, மொத்த மூலதனத்தின் மதிப்புக்கும் (=C+V) உபரி-மதிப்புக்கும் இடையிலோ அவசிய உள் உறவு இருப்பதாகச் சொல்வதற்கில்லை.

உபரி-மதிப்பு வீதமும் உபரி-மதிப்பின் பருமனும் தெரியும் போது, இலாப வீதம் என்பது உள்ளபடியே அது என்னவோ அதைத்தான் தெரிவிக்கிறது-அதாவது உபரி-மதிப்பை அளவிடுவதற்கு அது

வேறொரு வழி என்பதைத்தான், மூலதனத்தின் எப்பகுதி உழைப்புக்காகப் பரிவர்த்தனைச் செய்யப்பட்டு அதன் வாயிலாய நேரடியாக உபரி-மதிப்பைத் தோற்றுவிக்கிறதோ அப்பகுதியோடு ஒப்பிடப்படுவதற்குப் பதில், மொத்த மூலதனத்தின் மதிப்போடு ஒப்பிட்டு உபரி-மதிப்பு அளவிடப்படுகிறது என்பதைத்தான் தெரிவிக்கிறது. ஆனால் மெய்நடப்பில் (அதாவது வெளிப் பார்வைக்குப் புலப்படும் உலகில்) என்ன ஆகிறதென்றால், யாவும் தலைகீழாய் மாற்றப்படுகிறது. உபரி-மதிப்பு எவ்வளவு என்று தெரிவிக்கப்படுகிறது; சரக்கின் விற்பனை-விலையில் அதன் அடக்க-விலைக்கும் கூடுதலாய் இருக்கும் மிகையாகத் தெரிவிக்கப் படுகிறது, ஆனால் இந்த மிகை எங்கிருந்து வந்தது-உற்பத்தி நிகழ்முறையின்போது உழைப்பு சுரண்டப்படுவதிலிருந்தா? சுற்றோட்ட நிகழ்முறையின்போது சரக்கை வாங்குகிறவர் ஏமாற்றப்படுவதி லிருந்தா? அல்லது இரண்டிலுமிருந்தா?-என்பது மருமமாகி விடுகிறது. மொத்த மூலதனத்தின் மதிப்பில் இந்த உபரிக்குள்ள விகிதமும், அதாவது இலாப வீதமும் தரப்படுகிறது. விற்பனை-விலையில் அடக்க-விலைக்கும் கூடுதலாய் இருக்கும் இந்த மிகையானது, முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்துடன் ஒப்பிடுகையில் எவ்வளவு என்று கணக்கிடுதல் முக்கியமானது மட்டுமல்ல, இயற்கை யானதுங்கூட, ஏனென்றால் இந்தக் கணக்கீடு மொத்த மூலதனம் பெருக்கமடைந்துள்ள விகிதத்தை, அதாவது அதன் தற்பெருக்கப் படித்தரத்தைத் தெரிவிக்கிறது. இந்த இலாப வீதத்திலிருந்து நம்மால் இந்த உபரிக்கும் கூலியாக முதலீடாகியுள்ள மூலதனப் பகுதிக்குமுள்ள பிரத்தியேக விகித உறவினை அறிய முடியாது. இவ்வழியின் உபரி-மதிப்பின் இரகசியத்தையும் மூலதனத்தின் மாறும் பகுதியோடு அதற்குள்ள பிரத்தியேக உறவையும் கண்டறிய முயலும் மால்தஸ் எப்படியெல்லாம் அதிவினோதக் கரணம் அடிக்க நேர்கிறது என்பதை அடுத்து வரும் ஓர் அத்தியாயத்தில் பார்ப்போம்.* உண்மையில் இலாப வீதமானது மொத்த மூலதனத்தின் சமமான பங்குகளோடு எப்படி இந்த உபரி எந்த வேறுபாடும் இல்லாத ஒரேசீரான விகித உறவு கொண்டுள்ளது என்பதைத்தான் புலப்படுத்துகிறது. ஆனால் இந்த நோக்குநிலையிலிருந்து எந்த உள் வேறுபாடும் வெளிப்படவில்லை. நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்குமுள்ள வேறுபாடு வேண்டுமானால் வெளிப்படுவதாகச் சொல்லலாம். உபரியானது

---

* கா.மார்க்ஸ், Theorien über den Mehrwert (கா.மார்க்ஸ் பி.எங்கல்ஸ், werke, Band 26, Teil3, பக்கம் 25-28 -ஆங்கிலப் பதிப்பாசிரியர்)

இருவேறு வழிகளில் கணக்கிடப்படுவதால்தான் இந்த வேறுபாடுங்கூட வெளிப்படுகிறது. முதல் வழி: சாமானியப் பருமனாக, அடக்க-விலைக்கும் கூடுதலாக இருக்கும் மிகையாகக் கணக்கிடுதல், ஆரம்ப வடிவமான இதில் சுழல்-மூலதனம் முழுதும் அடக்க-விலையில் சேருகிறது, நிலை-மூலதனத்தில் தேய்மானம் மட்டுமே அதில் சேருகிறது. இரண்டாவது வழி: இந்த மிகை மதிப்பை முன்னீடு செய்யப்படும் மொத்த மதிப்போடு ஒப்பிட்டுக் கணக்கிடுதல், இங்கு சுழல்-மூலதனத்தைப் போலவே மொத்த நிலை-மூலதன மதிப்பும் கணக்கில் சேர்க்கப்படுகிறது. இவ்விதம் சுழல்-மூலதனமானது இரு தரமும் ஒரே வழியில் கணக்கில் சேருகிறது. நிலை-மூலதனமோ முதல் தரம் சுழல்-மூலதனத்துக்கு வேறான வழியிலும், இரண்டாம் தரம் சுழல்-மூலதனத்துக்குரிய அதே வழியிலும் கணக்கில் சேருகிறது. இந்நிலையில் நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடு மட்டுமே முன்னிலைக்கு வருகிறது.

ஆகவே, ஹெகல் சொல்வது போல் சொல்வதானால், உபரியானது இலாப வீதத்திலிருந்து தன்னிலே தன்னைத் திரும்பவும் பிரதிபலிக்கச் செய்து கொள்கிறது. அல்லது வேறு விதமாகச் சொல்வதானால், உபரியானது இலாப வீதத்தால் மேலும் நெருங்கிய முறையில் குண நிர்ணயம் செய்யப்பட்டு, ஓராண்டு காலத்தில் அல்லது குறிப்பிட்ட சுற்றோட்டக் காலத்தில் மூலதனத்தால் அம்மூலதன மதிப்புக்கும் கூடுதலாய் உற்பத்திச் செய்யப்படுகிற உபரியாகத் தோற்றமளிக்கிறது.

உபரி-மதிப்பும் இலாபமும் உண்மையில் ஒன்றேதான், எண்ணளவில் சமமானதுதான் என்றாலும், இலாப வீதமானது இவ்விதம் எண்ணளவில் உபரி-மதிப்பு வீதத்திலிருந்து வேறுபடுகிறது. ஆயினும் இலாபமானது உபரி-மதிப்பின் மாறிய வடிவமே ஆகும்; உபரி-மதிப்பு எங்கிருந்து உதிக்கிறது, இப்படி ஒன்று இருக்க முடிவதன் இரகசியம் என்ன என்பதுமுதலான உண்மைகள் எல்லாம் மூடி மறைக்கப்பட்டு இருட்டடிப்பு செய்யப்படுகிற வடிவமாகுமே தவிர வேறல்ல. இலாபமானது உண்மையில் உபரி-மதிப்பு தன்னை வெளிக்காட்டிக் கொள்வதற்காகத் தரிக்கின்ற வேடமாகும். பகுப்பாய்வின் மூலம் முதலில் இந்த வேடத்தைக் களைந்தாக வேண்டும், வேடம் களையப்பட்டதும் அது உபரி-மதிப்புதான் என்பது வெளிப்படுகிறது. மூலதனத்துக்கும் உழைப்புக்குமுள்ள உறவானது உபரி-மதிப்பில் மூடி மறைக்கப்படாமல் அப்பட்டமாகத் தெரிகிறது. ஆனால் மூலதனத்துக்கும் இலாபத்துக்குமுள்ள உறவில், அதாவது

மூலதனத்துக்கும் உபரி-மதிப்புக்குமுள்ள உறவில் (இந்த உபரி-மதிப்பு ஒரு புறத்தில் சரக்கின் விலையில் சரக்கின் அடக்க-விலைக்கும் கூடுதலாக இருக்கும் மிகையாகி சுற்றோட்ட நிகழ்முறையின் போது ஈடேற்றம் பெறுகிற உபரியாகவும், மறு புறத்தில் மொத்த மூலதனத்தோடு அதற்குள்ள உறவினால் மேலும் நெருங்கிய முறையில் நிர்ணயிக்கப்படுகிற உபரியாகவும் தோற்றமளிக்கிறது) மூலதனமானது அதனுடனேயே கொண்டுள்ள உறவாகத் தோற்றமளிக்கிறது. இந்த உறவில் தொடக்க மதிப்புத் தொகையென்ற விதத்தில் அது அதனாலேயே உண்டாக்கப்படுகிற புதிய மதிப்பிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்படுகிறது. உற்பத்தி நிகழ்முறை, சுற்றோட்ட நிகழ்முறை ஆகிய இரண்டின் போதும் மூலதனமானது தனது அசைவியக்கத்தால் இந்தப் புதிய மதிப்பை உண்டாக்குவதாக நமக்குத் தோன்றுகிறது. ஆனால் எப்படி உண்டாக்கப்படுகிறது என்பது மூடி மறைக்கப்பட்டு மருமமாகிவிடுகிறது, மூலதனத்திலேயே உள்ளார்ந்து மறைந்திருக்கும் இயல்புகளிலிருந்து இந்தப் புதிய மதிப்பு உதிப்பது போல் தோன்றுகிறது.

மூலதனத்தின் தற்பெருக்க நிகழ்முறையை நாம் மேலும் மேலும் தொடர்ந்து கவனித்துச் செல்லும்போது மூலதன உறவுகள் மேலும் மேலும் மருமமாவதையும், அதன் அங்கக உயிரமைப்பின் இரகசியம் வெளிப்படுவது மேலும் மேலும் அரிதாவதையும் காண்போம்.

நூலின் இப்பகுதியில், இலாப வீதம் உபரி-மதிப்பு வீதத்திலிருந்து எண்ணளவில் வேறுபடுவதாய் கொள்ளப்பட்ட போதிலும், இலாபமும் உபரி-மதிப்பும் எண்ணளவில் ஒரே பருமனுடையவையாகவும் வடிவத்தில் மட்டும் வேறுபடுவனவாகவும் கொண்டு பரிசீலித்தோம். இந்த அன்னியமாதல் எப்படி வளர்ந்து செல்கிறது என்பதையும், இலாபமானது எண்ணளவிலும்கூட எப்படி உபரி-மதிப்பிலிருந்து மாறுபடும் பருமனைக் குறிப்பதாகிறது என்பதையும் அடுத்த பகுதியில் பரிசீலிப்போம்.

## அத்தியாயம் III

## இலாப வீதத்துக்கும் உபரி-மதிப்பு வீதத்துக்குமான உறவு

சென்ற அத்தியாயத்தின் முடிவில் குறிப்பிட்டபடியே, இந்த அத்தியாயத்திலும் பொதுவாக இந்த முதல் பகுதி முழுவதிலும், குறிப்பிட்ட மூலதனத்துக்குள் கிடைத்திடும் இலாபத்தின் அளவும் குறிப்பிட்ட சுற்றோட்டக் காலத்தில் இம்மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் மொத்த அளவும் ஒன்றே எனக் கொள்கிறோம். இவ்வாறு, ஒரு புறம் இந்த உபரி-மதிப்பானது பிரிந்து மூலதனத்தின் மீதான வட்டி, நில-வாடகை, வரிகள் போன்ற பல்வேறு துணை வடிவங்களும் பூணுவதைக் கவனியாது இப்போதைக்கு ஒதுக்கி விடுகிறோம். மறுபுறம் உபரி-மதிப்பானது பெரும்பாலான நேர்வுகளில் இலாபத்துடன் ஒருங்கமைவதில்லை என்ற விவரத்தையும் கூட கவனியாது ஒதுக்கி விடுகிறோம். இலாபமானது பொது இலாப வீதத்தின் பயனாய் அவரவருக்கும் போய்ச் சேருவதால் இந்நிலை ஏற்படுவதை பகுதி IIஇல் பார்ப்போம்.

இலாபமும் உபரி-மதிப்பும் அளவில் சமமெனக் கொண்டிருக்கும் வரை, இலாபத்தின் பருமனும் வீதமும் எளிய எண் விகிதங்களால் நிர்ணயிக்கப்படுகின்றன; இந்த எண் விகிதங்கள் தனிப்பட்ட ஒவ்வொரு நேர்விலும் குறிப்பிட்டவையாகவோ வரையறுக்கத் தக்கவையாகவோ அமைகின்றன. ஆகவே முதலில் நமது பகுப்பாய்வு கணிதவியலின் களத்தில் மட்டுமே நடைபெறுகிறது.

முதல் பாகத்திலும் இரண்டாம் பாகத்திலும் பயன்படுத்திய குறிகளையே இங்கும் பயன்படுத்துகிறோம். மொத்த மூலதனம் C மாறா-மூலதனம் c என்பதாலும் மாறும்-மூலதனம் v என்பதாலும் ஆனது, உபரி-மதிப்பு sஐ உற்பத்திச் செய்கிறது. முன்னீடு செய்யப்பட்ட மாறும்-மூலதனத்தோடு இந்த உபரி-மதிப்புக்குள்ள விகிதம், அதாவது $^{s}/_{v}$ என்பது உபரி-மதிப்பு வீதம் எனப்படுகிறது; இந்த உபரி-மதிப்பு வீதத்தை s' எனக் குறிக்கிறோம். ஆகவே $^{s}/_{v}$ =s'; s=s'v. இந்த உபரி-மதிப்பை மாறும் மூலதனத்தோடு மட்டும் ஒப்பிடுவதற்குப் பதில் மொத்த மூலதனத்தோடு ஒப்பிடும் போது இலாபம் p என்கிறோம். மொத்த மூலதனம் C உடன் உபரி-மதிப்பான s க்குள்ள விகிதம்,

அதாவது $^{s}/_{C}$ என்பது இலாப வீதம் எனப்படுகிறது. இந்த இலாப-வீதத்தை p' எனக் குறிக்கிறோம். ஆக,

$p' = {}^{s}/_{C} = {}^{s}/_{c+v}$

இப்போது sக்கு பதில் அதற்குச் சமதையான s' vஐ நுழைத்தல்,

$p' = s'\,{}^{v}/_{C} = s'\,{}^{v}/_{c+v}$

இச்சமன்பாட்டை $p': s' = v: C$;

என்றும் குறிக்கலாம். அதாவது இலாப வீதத்துக்கும் உபரி-மதிப்பு வீதத்துக்குமான விகித உறவும் மாறும்-மூலதனத்துக்கும் மொத்த மூலதனத்துக்குமான விகித உறவும் ஒன்றே.

இந்த விகித உறவிலிருந்து பெறப்படுவது என்னவென்றால்: இலாப வீதம் p ஆனது எப்போதுமே உபரி-மதிப்பு வீதம் s'ஐ விடச் சிறியது. ஏனென்றால் மாறும்-மூலதனம் vஆனது எப்போதுமே Cஐ விட, அதாவது மாறும்-மூலதனம், மாறா-மூலதனம் ஆகியவற்றின் கூட்டுத் தொகையான v+ cஐ விடச் சிறியது. இதற்கு ஒரே ஒரு விதிவிலக்குதான் உண்டு, நடைமுறையில் சாத்தியமற்றதாகிய அந்த விதிவிலக்கான நேர்வின் v=C. அதாவது முதலாளி மாறா-மூலதனமேதும், உற்பத்திச் சாதனங்களேதும் முன்னீடு செய்ய வில்லை. கூலி மட்டுமே முன்னீடு செய்கிறார்.

அது ஒரு புறமிருக்க, வேறு பல காரணிகளையும் கூட கணக்கில் கொண்டு நமது பகுப்பாய்வைத் தொடர்ந்தாக வேண்டும். இவ்வகையில் c, v, s, இவற்றின்பருமன் மீது தீர்மானகரத் தாக்கம் செலுத்திடும் காரணிகளைச் சுருக்கமாய்ப் பரிசீலிப்போம்.

முதலாவதாகப் **பணத்தின் மதிப்பு**. தொடக்கத்திலிருந்து கடைசி வரை இது மாறாதிருப்பதாய்க் கொள்ளலாம்.

இரண்டாவதாகப் **புரள்வு** (turnover) இப்போதைக்கு இக்காரணியைக் கண்டு கொள்ளாமல் அறவே ஒதுக்கி வைத்து விடுவோம். இலாப வீதத்தின் மீதான இதன் தாக்கத்தை பின்னொரு அத்தியாயத்தில் தனிப்பட பரிசீலிப்போம். [ஒன்றே ஒன்றை மட்டும் இங்கேயே சொல்லி வைப்போம்: $P' = s'\,{}^{v}/_{C}$ என்னும் சூத்திரம் மாறும்-மூலதனத்தின் ஒரு புறள்வுக் காலத்துக்கு மட்டுமே கண்டிப்பாய்ச் சரியானது. ஆனால் சாமானிய உபரி-மதிப்பு வீதம் s'க்கு பதில் வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் s'n நுழைத்து இச்சூத்திரத்தை வருடாந்தரப் புரள்வுக்குரியதாய் மாற்றலாம். இதில், n என்பது

ஓராண்டு காலத்தில் மாறும்-மூலதனம் நிகழ்த்தும் புரள்வுகளின் எண்ணிக்கையைக் குறிக்கிறது. (பார்க்கவும்: இரண்டாம் பாகம், அத்தியாயம் XVI பிரிவு 1.)—பி.எங்கெல்ஸ்.]

மூன்றாவதாக உழைப்பின் உற்பத்தித் திறன், (Productivity of labour). உபரி-மதிப்பு வீதத்தின் மீது இக்காரணி செலுத்தும் தாக்கத்தை முதல் பாகம், பகுதி IVஇல் விரிவாய்ப் பார்த்தோம். இதே காரணி இலாப வீதத்தின் மீதும் நேரடித் தாக்கம் செலுத்த முடியும், எப்படியும் தனியொரு மூலதனத்தினது இலாப வீதத்தின் மீதாவது இவ்விதம் தாக்கம் செலுத்த முடியும் - இந்தத் தனிப்பட்ட மூலதனமானது சமுதாய சராசரிக்கும் மேலான உற்பத்தித் திறனோடு செயல்பட்டு, ஒரு சரக்கை அதன் சராசரிச் சமுதாய மதிப்புக்கும் குறைந்த மதிப்பில் உற்பத்தி செய்து, இவ்விதம் கூடுதல் இலாபம் அடையும் போது, இப்படி நிகழ்வதை முதல் பாகத்தில் தெளிவாக்கினோம் (அத்தியாயம் XII, பக்கம் 427-29). ஆனால் இந்நேர்வையும் இங்கு கவனியாது ஒதுக்கி விடுவோம். நூலின் இந்தப் பகுதியைப் பொறுத்த வரை சரக்குகள் இயல்பான சமுதாய நிலைமைகளில் உற்பத்திச் செய்யப்படுவதாகவும் அவற்றின் மதிப்புக்கே விற்கப்படுவதாகவும் கொண்டு ஆய்வைத் தொடர்வோம். எனவே தனிப்பட்ட ஒவ்வொரு நேர்விலும் உழைப்பின் உற்பத்தித் திறன் மாறாதிருப்பதாய்க் கொள்கிறோம். மெய்ந்நடப்பில் நாம் காண்பதென்ன? ஒரு தொழிற் கிளையில் முதலீடாகும் மூலதனத்தின் மதிப்பு-இயைபு, அதாவது மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்கும் இடையிலான குறிப்பிட்ட விகிதாசாரம் எப்போதுமே உழைப்பினது உற்பத்தித் திறனில் குறிப்பிட்ட படித்தரத்தைக் குறிக்கிறது. ஆகவே மாறா-மூலதனத்தின் பொருட்கூறுகளது மதிப்பில் ஏற்படக்கூடிய மாற்றமோ கூலியில் ஏற்படக் கூடிய மாற்றமோ அல்லாத வேறு ஏதேனும் ஒரு காரணத்தால் மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்கும் இடையிலான விகிதத்தில் மாற்றம் ஏற்பட்டவுடனே, உழைப்பின் உற்பத்தித் திறனிலும் அதற்கிணையான மாற்றம் ஏற்பட்டாக வேண்டும். இதனால், c,v, s ஆகிய காரணிகளில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் உழைப்பின் உற்பத்தித் திறனிலும் மாற்றங்கள் ஏற்படச் செய்கின்றன என்பதை அநேக சந்தர்ப்பங்களில் பார்க்கப் போகிறோம்.

எஞ்சிய மூன்று காரணிகளான வேலை-நாளின் நீட்டளவு (length of the working-day), உழைப்பின் மும்முரம், கூலி ஆகியவற்றுக்கும் மேற்சொன்னது பொருந்தும், உபரி-மதிப்பினது அளவின் மீதும்

வீதத்தின் மீதும் இக்காரணிகள் ஏற்படுத்தும் தாக்கத்தை முதல் பாகத்தில் விரிவாய் எடுத்துரைத்தோம் (முதல் பாகம், பக்கம் 699-713)- ஆகவே இந்த மூன்று காரணிகளும் மாறாதிருப்பதாக நாம் எளிமையின் நிமித்தம் அனுமானம் செய்து கொண்டாலும் கூட, v, s ஆகியவை அடையும் மாற்றங்கள் அவற்றை நிர்ணயிக்கும் கூறுகளான இக்காரணிகளின் பருமனிலும் மாற்றங்களைக் குறிக்கின்றன என்பதை எளிதிற் புரிந்து கொள்ளலாம். இங்கு நாம் சுருக்கமாய் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியது என்னவென்றால்: கூலியானது வேலை-நாளின் கால அளவுக்கும் உழைப்பின் மும்முரத்துக்கும் எதிர் விகிதத்தில் உபரி-மதிப்பளவின் மீதும் உபரி-மதிப்பு வீதத்தின் மீதும் தாக்கம் செலுத்துகிறது; கூலியில் ஏற்படும் உயர்வு உபரி-மதிப்பைக் குறையச் செய்கிறது, வேலை-நாள் நீட்டிக்கப்படுவதும் உழைப்பின் மும்முரம் அதிகமாக்கப்படுவதும் உபரி-மதிப்பை உயரச் செய்கின்றன.

எடுத்துக்காட்டாக மூலதனம் 100 எனக் கொள்வோம். இம் மூலதனம் 20 தொழிலாளர்களைக் கொண்டு உற்பத்திச் செய்யும் உபரி-மதிப்பு 20 எனவும் வேலை-நாள் 10 மணி நேரம் எனவும், மொத்த வாரக் கூலி 20 எனவும் கொள்வோம். ஆக,

$80_c + 20_v + 20_s$; $s' = 100\%$, $p' = 20\%$.

இப்போது கூலியை உயர்த்தாமலே வேலை-நாள் 12 மணி நேரமாக நீட்டிக்கப்படுமானால், 20 தொழிலாளர்கள் உற்பத்தி செய்திடும் மொத்த மதிப்பு 40இலிருந்து 60ஆக அதிகரிக்கிறது (10:15 = 40:60). தொழிலாளர்களுக்குச் செலுத்தப்படும் கூலியான v மாறாதிருப்பதால் உபரி-மதிப்பு 20இலிருந்து 40 ஆக உயர்கிறது. ஆக,

$80_c + 20_V + 40_s$; $s' = 200\%$, $p' = 40\%$.

மறுதலையாக, பத்துமணி நேர வேலை-நாள் மாறாதிருக்கும் போதே கூலியானது 20இலிருந்து 12 ஆகக் குறையுமானால் மொத்த மதிப்பு-உற்பத்தி முன்போல் 40 ஆகவே உள்ளது. ஆனால் அதன் வினியோகம் மாறுபடுகிறது. vஆனது 12ஆகக் குறைகிறது; sக்கு 28 மிஞ்சுகிறது.

$80_c + 12_V + 28_s$; $s' = 233\,^1/_3\%$, $p' = {}^{28}/_{92} = 30\,^{10}/_{23}\%$.

ஆக, வேலை-நாள் நீளுவது (அல்லது உழைப்பின் மும்முரம் அதிகரிப்பது), கூலி குறைவது ஆகிய இரு நிகழ்வுகளுமே உபரி-மதிப்பின் அளவையும், இவ்வாறு உபரி-மதிப்பு வீதத்தையும்

அதிகரிக்கச் செய்கின்றன என்பதைக் காண்கிறோம். இதற்கு மாறாக, கூலி உயருவதானது - v ஏனையவை மாறாதிருக்க - உபரி-மதிப்பு வீதத்தை குறையச் செய்யும் கூலி உயருவதால் vஉயருமானால் இது உழைப்பின் விலை அதிகமாவதைக் குறிக்குமே தவிர உழைப்பளவு அதிகமாவதைக் குறிக்காது, இந்நிலையில் உம் s'உம் p'உம் குறையுமே தவிர உயர மாட்டா, இதிலிருந்து தெளிவாவது என்னவென்றால்:

வேலை-நாள், உழைப்பின் மும்முரம், கூலி ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமானால், அதேபோது vஇலும் sஇலும் இவற்றின் விகித உறவிலும் மாற்றம் ஏற்பட்டாக வேண்டும், இவ்விதம் sக்கும் மொத்த மூலதனம் c+ vக்கும் இடையிலான விகிதமாகிய p'இலும் கூட மாற்றம் ஏற்பட்டாக வேண்டும். sக்கும் vக்கும் இடையிலான விகிதத்தில் ஏற்படும் மாற்றங்கள் மேற்கூறிய மூன்று உழைப்பு நிலைமைகளில் ஒன்றோ ஒன்றிலாவது இணையான மாற்றங்களைக் குறிக்கின்றன என்பதும் இங்கு தெளிவாகிறது.

முழுமொத்த மூலதனத்தின் அசைவியக்கத்துடனும் தற்பெருக்கத்துடனும் மாறும்-மூலதனத்திற்குள்ள பிரத்தியேகமான அங்ககஉறவையும்,அதோடு மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்குமான வேறுபாட்டையும் இங்கே துல்லியமாய்ப் பார்க்க முடிகிறது. மதிப்பின் ஆக்கத்தைப் பொறுத்த வரை, மாறா-மூலதனம் அது பெற்றுள்ள மதிப்புக்காக மட்டுமே முக்கியமானது. எடுத்துக்காட்டாக, £1,500 மாறா-மூலதனமானது டன்னுக்கு £1வீதம் 1,500 டன் இரும்பைக் குறிக்கிறதா, அல்லது டன்னுக்கு £3 வீதம் 500 டன் இரும்பைக் குறிக்கிறதா என்பது மதிப்பின் ஆக்கத்தை பொறுத்த வரை கிஞ்சிற்றும் கருத்துக்குரியதன்று. உருக்கொண்டுள்ள பிண்டப் பொருளின் அளவானது மதிப்பின் ஆக்கத்துக்கும் இலாப வீதத்துக்கும் சிறிதும் முக்கியமானதன்று. இலாப வீதமானது மாறா-மூலதனத்தின் மதிப்புக்கு எதிர் விகிதத்தில் மாறுகிறது - இம்மதிப்பில் ஏற்படும் அதிகரிப்பு அல்லது குறைவுக்கும் இம்மதிப்பினால் குறிக்கப்படும் பயன்-மதிப்புகளின் பண்டத் திரளுக்கும் இடையிலான விகிதம் என்னவானாலும் சரி.

மாறும்-மூலதனத்தின் சங்கதி வேறு. மாறும்-மூலதனம் பெற்றுள்ள மதிப்பு. அதில் உருக்கொண்டுள்ள உழைப்பு இங்கே கருத்துக் குரியதன்று. மாறும்-மூலதனம் இயங்கச் செய்கிற - அதனால் குறிக்கப் பெறாத - மொத்த உழைப்பின் குறியீடென்ற வீதத்தில் மட்டுமே அதன் மதிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. இந்த மொத்த உழைப்புக்கும்

மாறும்-மூலதனத்தால் குறிக்கப் பெறுவதான ஊதிய உழைப்புக்கும் (அதாவது உபரி-மதிப்பை படைக்கும் உழைப்புக்கும்) இடையிலான வேறுபாடு மாறும்-மூலதனத்தின் மதிப்பில் அடங்கிய உழைப்பளவுக்கு எதிர் விகிதத்தில் அதிகரிக்கிறது. பத்து மணி நேரம் கொண்ட ஒரு வேலை-நாள் = 10 ஷில்லிங் எனக் கொள்வோம். கூலியை, அதாவது மாறும்-மூலதனத்தை மாற்றீடு செய்யும் உழைப்பாகிய அவசிய-உழைப்பு = 5 மணி நேரம் = 5 ஷில்லிங் என்றால், உபரி-உழைப்பு = 5 மணி நேரம், உபரி-மதிப்பு = 5 ஷில்லிங், அவசிய-உழைப்பு = 4 மணி நேரம் = 4 ஷில்லிங் என்றால், உபரி-உழைப்பு = 6 மணி நேரம், உபரி-மதிப்பு = 6 ஷில்லிங்.

எனவே, மாறும்-மூலதனத்தின் மதிப்பு அது இயங்கச் செய்கிற உழைப்பளவின் குறியீடாக இல்லாது போய், இந்தக் குறியீட்டின் அடிப்படையே மாறிப் போனவுடனே, உபரி-மதிப்பு வீதம் எதிர்த் திசையிலும் எதிர் விகிதத்திலும் மாறும்.

இலாப வீதத்தின் மேற்கூறிய சமன்பாட்டை, அதாவது $p'=s'\,{}^{v}/_{C}$ என்பதை சாத்தியமான பல்வேறு நேர்வுகளுக்கும் இப்போது நாம் பொருத்திப் பார்க்கலாம். $s'{}^{v}/_{C}$ என்பதன் தனித்தனி காரணிகளுக்குள்ள மதிப்பை அடுத்தடுத்து மாற்றம் செய்து, இந்த மாற்றங்கள் இலாப வீதத்தின் மீது ஏற்படுத்தும் விளைவைக் கண்டறியலாம். இவ்விதம் நமக்குப் பல்வேறு நேர்வுத் தொடர்கள் கிடைக்கும், இவற்றை ஒரே மூலதனத்தின் இயக்க நிலைமைகளில் ஏற்படும் அடுத்தடுத்த மாற்றங்களாகவோ வெவ்வேறு தொழிற் கிளைகள் அல்லது வெவ்வேறு நாடுகளிலிருந்து ஒப்புநோக்கிற்காக எடுத்துக் கொள்ளப்படுகிற ஒருங்கே நில்வும் வெவ்வேறு மூலதனங்களாகவோ கருதலாம். ஆகவே, நமது எடுத்துக்காட்டுகளில் சிலவற்றை ஒரே மூலதனத்தின் செயற்பாட்டு நிலைகளாகக் கருதுவது வலிந்து நுழைக்கப்பட்டதாகவோ நடைமுறைக்கு ஒவ்வாததாகவோ தோன்றுமானால், இவற்றை தனித்தனி மூலதனங்களிடையிலான ஒப்புநோக்கின் விளைவெனக் கருதும் போது இவ்விதம் எதிர்ப்பு தெரிவிக்க இடமில்லாது போகிறது.

$s'\,{}^{v}/_{C}$ என்னும் பெருக்குத் தொகையை அதன் இரு காரணிகளான $s'$ ஆகவும் ${}^{v}/_{C}$ ஆகவும் பிரித்துக் கொள்வோம். முதலில் $s'$ மாறாததெனக் கொண்டு $v$ இல் சாத்தியமான மாற்றங்களின் விளைவைப் பரிசீலிப்போம். அதன் பின்னர் ${}^{v}/_{C}$ என்னும் பின்னத்தை மாறாததெனக் கொண்டு $s'$ இல் சாத்தியமான மாற்றங்களின் விளைவைப்

பரிசீலிப்போம். முடிவில் எல்லாக் காரணிகளையுமே மாறும் பருமன்களாகக் கொண்டு, இலாப வீதத்தை ஆளும் விதிகளுக்கு வழிவகுக்கும் நேர்வுகளையெல்லாம் பார்த்து முடிப்போம்.

### I. s' மாறாதது, $v/C$ மாறுவது

இந்த நேர்வில் அநேக துணை நேர்வுகள் அடங்கியுள்ளன. இதை ஒரு பொதுச் சூத்திர வடிவில் குறிக்கலாம். C, $C_1$ என்னும் இரு மூலதனங்களை எடுத்துக் கொள்வோம்; முறையே இவற்றில் மாறும்-மூலதனக் கூறுகளை v, $v_1$ என்போம். இவையிரண்டுக்கும் பொதுவான உபரி-மதிப்பு வீதத்தை s' என்போம். இலாப வீதங்களை p', $p'_1$ என்போம்.

ஆக,

$$p' = s' \, v/C ; \quad p'_1 = s' \, v_1/C_1$$

C, $C_1$ ஆகியவையும் v, $v_1$ ஆகியவையும் குறிப்பிட்ட விகித உறவில் இருக்கக் காணலாம். எடுத்துக்காட்டாக, $C_1/C$ என்னும் பின்னத்தின் மதிப்பு = E என்றும், $v_1/v$ என்பதன் மதிப்பு = e என்றும் கொள்வோமானால், $C_1 = EC$; $v_1 = ev$. மேற்கூறிய சமன்பாட்டில் $p_1$, $C_1$, $v_1$ ஆகியவற்றுக்கு பதில் இம்மதிப்புகளைப் பயன்படுத்தினால் நாம் பெறுவது

$$p'_1 = s' \, ev/EC$$

இதோடு கூட மேற்சொன்ன இரு சமன்பாடுகளையும் கீழ்க்காணும் விகித உறவுக்கு மாற்றும் போது இரண்டாவதாக ஒரு சூத்திரம் நமக்குக் கிடைக்கிறது:

$$p' : p'_1 = s' \, v/C : s' \, v_1/C_1 = v/C : v_1/C_1$$

ஒரு பின்னத்தின் மேலிலக்கத்தையும் கீழிலக்கத்தையும் ஒரே எண்ணால் பெருக்கினாலோ வகுத்தாலோ அந்தப் பின்னத்தின் மதிப்பு மாறாதாகையால், C, $C_1$ ஆகிய இரண்டுமே 100 எனக் கொள்வதன் மூலம் $v/C$, $v_1/C_1$ ஆகியவற்றை சதவீதங்களாகப் பெயர்க்கலாம். அதாவது $v/C = v/100$ ; $v_1/C_1 = v_1/100$ அடுத்து நாம் மேற்கண்ட விகித உறவில் கீழிலக்கங்களை நீக்கி விடுவோமானால், $p' : p'_1 = v : v_1$

அதாவது, ஒரே உபரி-மதிப்பு வீதத்தோடு செயல்படும் எந்த இரு மூலதனங்களை எடுத்துக் கொண்டாலும், இலாப வீதங்களிடையிலான விகித உறவும் மொத்த மூலதனத்தின் சதவீதமாய்க் கணக்கிடப்படும் மாறும்-மூலதனக் கூறுகளிடையிலான விகித உறவும் ஒன்றே.

$^{v}/_{C}$இல் சாத்தியமான எல்லா மாற்றங்களும் இவ்விரு சூத்திரங்களிலும் அடங்கியிருக்கக் காணலாம்.

இந்தப் பல்வேறு நேர்வுகளையும் ஒவ்வொன்றாய் எடுத்துப் பரிசீலிப்பதற்கு முன்னால் இன்னுமொன்றைக் குறிப்பிட வேண்டும். C ஆனது மாறா-மூலதனம் c, மாறும்-மூலதனம் v ஆகியவற்றின் கூட்டுத் தொகையே என்பதாலும், உபரி-மதிப்பு வீதமும் இலாப வீதமும் சதவீதங்களாய்த் தெரிவிக்கப்படுவது வழக்கமாய் இருப்பதாலும், c+v என்னும் தொகையையும் 100 எனக் கொள்வது. அதாவது cஐயும் vஐயும் சதவீதங்களாகத் தெரிவிப்பது வசதியான ஒன்று.

*மாறா-மூலதனம் 12,000, மாறும்-மூலதனம் 3,000 ஆகியவற்றாலான 15,000 மூலதனமானது 3,000 உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதாகச் சொல்கிறோமா, அல்லது இந்த மூலதனத்தை சதவீதங்களாகப் பெயர்த்துச் சொல்கிறோமா என்பது இலாபத்தின் அளவினை நிர்ணயிக்கையில் முக்கியமானதே என்றாலும் இலாப வீதத்தை நிர்ணயிக்கையில் கருத்துக்குரியதல்ல;*

$15{,}000\,C = 12{,}000_c + 3{,}000_v\ (+3{,}000_s)$

$100\,C = 80_c + 20_v\ (+20_s)$.

இரு நேர்வுகளிலுமே உபரி-மதிப்பு வீதம் $s' = 100\%$ இலாப வீதம் $= 20\%$.

இரு மூலதனங்களை ஒன்றோடொன்று ஒப்புநோக்கும் போதும் இதே நிலைமைதான். எடுத்துக்காட்டாக, மேலே கண்ட மூலதனத்தை வேறொரு மூலதனத்துடன் ஒப்புநோக்குவோம். வேறொரு மூலதனமாவது:

$12{,}000\,C = 10{,}800_c + 1{,}200_v\ (+1{,}200_s)$

$100\,C = 90_c + 10_v\ (+10_s)$.

இங்கு $s' = 100\%$, $p' = 10\%$. மேலே கண்ட மூலதனத்தோடு இதனை ஒப்பிடுவது சதவீத வடிவில் மிகவும் எளிதாகிறது.

*மாறாக, ஒரே மூலதனத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பரிசீலிக்கும் போது, சதவீத வடிவமானது அநேகமாய் எப்போதுமே இந்த மாற்றங்களை மூடி மறைத்து விடுவதால் அரிதிலும் அரிதாகவே பயன்படுத்தத் தக்கதாய் உள்ளது. ஒரு மூலதனம்*

$80_c + 20_v + 20_s$

*என்ற சதவீத வடிவிலிருந்து*

$90_c + 10_v + 10_s$,

என்ற சத வீத வடிவிற்கு மாறுமானால், $90_c+10_v$ என்னும் புதிய சதவீத இயைபுக்கு vஇல் ஏற்பட்ட அறுதிக் குறைவு காரணமா, cஇல் ஏற்பட்ட அறுதி அதிகரிப்பு காரணமா, அல்லது இரண்டுமே காரணமா என்று நம்மால் சொல்ல முடியாமற் போகும். அறுதிப் பருமன்களும் தெரிந்தால்தான் இதைச் சொல்ல முடியும். பின்வரும் தனிப்பட்ட மாற்ற நேர்வுகளை நாம் ஆராயும் போது இந்த மாற்றம் எப்படி நிகழ்ந்தது என்பதே முக்கியமானது. $80_c + 20_v$ ஆனது $90_c + 10_v$ ஆக மாறியதற்கு என்ன காரணம்? $12{,}000_c + 3{,}000_v$ என்பது மாற்றமடைந்து $27{,}000_c + 3{,}000_v$ (சதவீதக் கணக்கில் $90_c + 10_v$)ஆகிப் போனது காரணமா? அதாவது மாறும்-மூலதனம் அப்படியே இருக்க, மாறா-மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமா? அல்லது மாறா-மூலதனம் அப்படியே இருக்க மாறும்-மூலதனம் குறைந்து போனது காரணமா? அதாவது, அது மாற்றமடைந்து $12{,}000_c + 1{,}333\,^1/_{3\,v}$ (இதுவும் சதவீதக் கணக்கில் $90_C + 10_v$ தான்) ஆகிப் போனது காரணமா? அல்லது கடைசியாகச் சொன்னால், இந்த இரு அளவுகளுமே மாற்றமடைந்து $13{,}500_c + 1{,}500_v$ (இதுவும் சதவீதக் கணக்கில் $90_c + 10_v$ தான்) ஆகிப்போனது காரணமா? எது காரணம் என்பதே இங்குக் கருத்துக்குரியது. ஆனால் இந்த நேர்வுகளையெல்லாம் நாம் அடுத்தடுத்து பகுத்தாராய வேண்டும்.

வசதியானதாகிய சதவீத வடிவை இவ்விதம் ஒதுக்கித் தள்ள வேண்டியிருக்கும்; எப்படியும் அதனை இரண்டாம்பட்ச மாற்றாக மட்டுமே பயன்படுத்த வேண்டியிருக்கும்.

*1) s' மாறாதது, C மாறாதது, v மாறுவது*

vஇன் பருமனில் மாற்றம் ஏற்படும்போது Cஇன் மற்றொரு அடக்கக் கூறாகிய மாறா-மூலதனம் c ஆனது vமாறும் அதே அளவு—ஆனால் எதிர்த்திசையில் மாறினால்தான் Cமாறாதிருக்க முடியும்.

ஆரம்பத்தில் $C = 80_c + 20_v = 100$ என்றால், vஆனது பிறகு 10ஆகக் குறைக்கப்பட்டால், cஆனது 90 ஆக அதிகரிக்கப்பட்டால்தான் $C = 100$ ஆக இருக்க முடியும்; $90_c + 10_v = 100$. பொதுவாகச் சொன்னால், vஆனது $v \pm d$ என்பதாக, அதாவது d என்னுமளவு அதிகரித்தோ குறைந்தோ போன vஆக மாற்றப்பட்டால், c ஆனது $c \mp d$ என்பதாக, அதாவது dஎன்னுமளவு மாறிய, ஆனால் எதிர் திசையில் மாறி c ஆக - மாற்றப்பட வேண்டும். அப்போதுதான் நமது இப்போதைய ஆய்வின் நிபந்தனைகள் நிறைவு பெறும்.

இதே போல், உபரி-மதிப்பு வீதம் s' மாறாதிருக்க மாறும்-மூலதனம் v மாறுவதாகக் கொண்டால், உபரி-மதிப்பு sஇன் அளவு மாறியாக வேண்டும்; ஏனென்றால் $s = s'v$ மேலும் s'vஇன் காரணிகளில் ஒன்று, அதாவது vவேறொரு மதிப்பைப் பெற்றுள்ளது.

இந்த ஆய்வில் நாம் அனுமானித்துக் கொண்டிருப்பவற்றை ஆரம்பச் சமன்பாடாகிய

$$p' = s' \, v/C$$

என்பதோடு சேர்த்துக் கொள்வோமானால், vஇன் மாற்றத்தின் மூலமாய் இன்னொரு சமன்பாடு கிடைக்கிறது; அதாவது

$$p_1 = s' \, v_1/C$$

இச்சமன்பாட்டில் vஇப்போது $v_1$ஆகி விட்டது. இதிலிருந்து விளையும் புதிய இலாப வீதம் $p'_1$ஐ நாம் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

இதைக் கண்டுபிடிக்கப் பயன்படும் விகித உறவாவது:

$$p' : p_1' = s' \, v/C \; : \; s' \, v_1/C, = v : v_1$$

உபரி-மதிப்பு வீதமும் மொத்த மூலதனமும் மாறாதிருக்க, ஆரம்ப இலாப வீதத்திற்கும் மாறும்-மூலதனத்தில் மாற்றம் ஏற்படுவதால் வரப்பெறும் புதிய இலாப வீதத்திற்கும் இடையிலான விகிதமும் ஆரம்ப மாறும்-மூலதனத்துக்கும் மாற்றத்துக்குப் பிந்திய மாறும்-மூலதனத்திற்கும் இடையிலான விகிதமும் ஒன்றே.

மூலதனமானது ஆரம்பத்தில், மேலே பார்த்தது போல்

I. *15,000* $C = 12{,}000_c + 3{,}000_v \; (+3{,}000_s)$ என்பதாய் இருந்தால், இப்போது;

II. *15,000* $C = 13{,}000_c + 2{,}000_v (+2{,}000_s)$ என்பதாய் இருந்தால், இரு நேர்வுகளிலுமே $C = 15{,}000$, $s' = 100\%$. முதலாம் நேர்வில் வரப்பெறும் இலாப வீதத்திற்கும் *(20%)* இரண்டாம் நேர்வில் வரப்பெறும் இலாப வீதத்திற்கும் *(13 ¹/3%)* இடையிலான விகிதமும் முதலாம் நேர்வில் வரும் மாறும்-மூலதனத்திற்கும் *(3,000)* இரண்டாம் நேர்வில் வரும் மாறும்-மூலதனத்திற்கும் *(2000)* இடையிலான விகிதமும் ஒன்றேதான். அதாவது *20% : 13 ¹/3% = 3,000 : 2, 000.*

மாறும்-மூலதனம் அதிகரிக்கலாம் அல்லது குறையவும் செய்யலாம். அது அதிகரிக்கிற எடுத்துக்காட்டை முதலில்

குறிப்பிடுவோம். ஏதேனுமொரு மூலதனம் ஆரம்பத்தில் பின்வரும் அமைப்போடு இயங்கத் தொடங்குவதாய்க் கொள்வோம்:

I. $100_c + 20_v + 10_s$; C= 120, s'= 50%, p' = $8\ ^1/_3$%

இப்போது மாறும்-மூலதனம் 30 ஆக அதிகரிப்பதாய்க் கொள்வோம். நமது அனுமானத்தின் படி மாறா-மூலதனம் 100 இலிருந்து 90 ஆகக் குறைந்திட வேண்டும். அப்படியானால்தான் மொத்த மூலதனம் மாறாமல் 120 ஆகவே இருக்கும். உபரி-மதிப்பு வீதம் மாறாமல் 50% ஆகவே இருக்கும், உபரி-மதிப்பின் உற்பத்தி அப்போது 10இலிருந்து 15 ஆக அதிகரிக்கும். அதாவது

II. $90_c + 30_v + 15_s$; C= 120, s'= 50%, p'= 12½%

முதற்கண் கூலி மாறாதிருப்பதாய்க் கொண்டு ஆய்வைத் தொடங்குவோம். உபரி-மதிப்பு வீதத்தின் ஏனைய காரணிகளும், அதாவது வேலை-நாள், உழைப்பின் மும்முரம் ஆகியவையும் மாறாதிருக்க வேண்டும். அப்போது vஇல் (20இலிருந்து 30ஆக) ஏற்படும் அதிகரிப்பானது முன்பிருந்ததில் பாதித் தொகையிலான தொழிலாளர்கள் மட்டுமே அமர்த்தப்படுவதைத்தான் குறிக்க முடியும். உற்பத்தி செய்யப்படும் மொத்த மதிப்பும் அரை மடங்கு, அதாவது 30இலிருந்து 45ஆக உயர்கிறது; இம்மதிப்பு முன்போலவே, கூலிக்கு 2/3 பங்கும், உபரி-மதிப்புக்கு $^1/_3$ பங்குமாய்ப் பிரிக்கப்படுகிறது. ஆனால், தொழிலாளர் தொகை அதிகரிக்கும் அதே போது, மாறா-மூலதனம், அதாவது உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு 100இலிருந்து 90 ஆகக் குறைகிறது. ஆகவே, இந்நேர்வில் உழைப்பின் உற்பத்தித்திறன் குறையும் போதே அதனோடு சேர்ந்து மாறா-மூலதனமும் குறையக் காண்கிறோம். பொருளாதார நோக்கில் இப்படியொரு நேர்வு சாத்தியம்தானா?

வேளாண்மையிலும் எடுபொருள் உற்பத்தித் தொழில்களிலும் (extractive industries) உழைப்பின் உற்பத்தித் திறன் குறைவதையும், ஈடுபடுத்தப்படும் தொழிலாளர் தொகை அதனால் அதிகமாக்கப்படுவதையும் அதிசயமாய்க் கருத முடியாது. இந்நிகழ்முறையோடு கூட - முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் எல்லைகளுக்குட்பட்டும் அதன் அடிப்படை மீதும் - மாறா-மூலதனம் அதிகமாகுமே தவிர குறையாது. விலைச் சரிவின் காரணத்தால் மட்டுமே c இல் மேற்சொன்னது போன்ற சரிவு ஏற்பட்டாலும் கூட தனியொரு மூலதனம் மிகவும் விதிவிலக்கான நிலைமைகளில் மட்டுமே

Iஇலிருந்து IIக்கு மாறிச் செல்ல முடியும். ஆனால் வெவ்வேறு நாடுகளிலோ, விவசாயம் அல்லது எடுபொருள் உற்பத்தித் தொழிலின் வெவ்வேறு கிளைகளிலோ முதலீடாகியுள்ள தனித்தனியான இரு மூலதனங்களை எடுத்துக் கொள்ளும் போது, இரண்டாம் நேர்வைக் காட்டிலும் முதலாம் நேர்வில் குறைந்த மதிப்புள்ள அல்லது குறைந்த அளவிலான உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு அதிகத் தொழிலாளர்கள் (எனவே அதிக மாறும்-மூலதனம்) ஈடுபடுத்தப் பட்டால் அது எவ்வகையிலும் அசாதாரணம் ஆகாது.

கூலி மாறாமல் இருக்கும் அனுமானத்தைக் கைகழுவி விட்டு, மாறும்-மூலதனம் 20இலிருந்து 30ஆக அதிகரிப்பதற்கு கூலி அரைப் பங்கு உயருவதே காரணமெனக் கொள்வோமானால், அடியோடு மாறுபட்ட ஒரு நேர்வைச் சந்திக்கிறோம். முன்பிருந்த அதே தொகையிலான - 20 என்று வைத்துக் கொள்வோம்-தொழிலாளர்கள் அதே உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு (அல்லது அற்ப அளவு மட்டுமே குறைந்த உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு) தொடர்ந்து வேலை செய்கிறார்கள். வேலை-நாள் 10 மணி நேரம் என்று வைத்துக் கொள்வோம்-மாறாமல் இருந்தால் மொத்த மதிப்பு-உற்பத்தியும் மாறாமல் இருக்கிறது. முன்போல் 30ஆகவே இருந்து வருகிறது. ஆனால் முன்னீடு செய்யப்பட்ட மாறும்-மூலதனம் 30ஐ ஈடு செய்வதற்கு இப்போது இந்த 30 முழுதாய்த் தேவைப்படுகிறது; உபரி-மதிப்பு இதனால் அறவே மறைந்து விடும். ஆனால் உபரி-மதிப்பு வீதம் மாறாமல் 50% ஆகவே - அதாவது Iஇல் உள்ளவாறே-இருந்து வர வேண்டும் என்று அனுமானம் செய்துள்ளோம். வேலை-நாள் அரைப் பங்கு நீட்டப்பட்டு 15 மணி நேரமாக்கப்பட்டால்தான் இது சாத்தியமாகும். அப்போது 20 தொழிலாளர்களும் 15 மணி நேரத்தில் உற்பத்தி செய்வதன் மொத்த மதிப்பு 45 ஆக இருக்கும். நிபந்தனைகள் யாவும் இவ்விதம் நிறைவு பெற்று விடும்:

II. $90_c + 30_v + 15_s$; $C = 120$, $s' = 50\%$, $p' = 12\frac{1}{2}\%$

உழைப்புச் சாதனங்கள், கருவிகள், இயந்திரங்கள் முதலானவை இந்நேர்விலும் முதல் நேர்வில் தேவைப்பட்ட அளவுக்கே தேவைப்படுகின்றன. கச்சாப் பொருட்கள் அல்லது துணைப் பொருட்களை மட்டுமே அரைப் பங்கு கூடுதலாக்கவேண்டும். இந்த மூலப்பொருட்களின் விலைகளில் ஒரு வீழ்ச்சி ஏற்படுமேயானால், நமது அனுமானத்தின் படி Iஇலிருந்து IIக்கு மாறுவது தனியொரு மூலதனத்துக்கும் கூட பொருளாதார நோக்கில் எளிதாகக் கூடும்.

மாறா-மூலதனத்தினது மதிப்பிறக்கத்தின் மூலம் முதலாளிக்கு இழப்பு ஏதும் ஏற்படுமானால் கூடுதலான இலாபம் அந்த இழப்பை ஓரளவு ஈடு செய்யும்.

மாறும்-மூலதனம் உயருவதற்கு பதில் குறைவதாகக் கொள்வோம். இதற்கு IIஐ ஆரம்ப மூலதனமாகக் கொண்டு, உதாரணத்தைத் தலைகீழாக்கி IIஇலிருந்து Iக்குச் சென்றால் போதும்.

II. $90_c + 30_v + 15_s$ என்பது அப்போது,

$100_c + 20_v + 10_s$ என்பதாக மாறுகிறது; இந்த நிலைமாற்றம் இலாப வீதங்களையும் அவற்றின் பரஸ்பர உறவையும் கட்டுப்படுத்தும் நிலைமைகளில் எதையும் கொஞ்சம் கூட மாற்றி விடுவதில்லை என்பது தெளிவு.

மாறா-மூலதனம் அதிகரித்தாலும் $^1/_3$ பங்கு குறைவான தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவதால் vஆனது 30இலிருந்து 20 ஆகக் குறைந்தால் vஆனது தொழில் துறைக்கு இயல்பான நேர்வு, அதாவது உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதும், கூடுதலான அளவு உற்பத்திச் சாதனங்களைக் குறைந்த அளவு தொழிலாளர்களைக் கொண்டு இயக்குவதுமான நேர்வு பெறப்படுகிறது. இந்த இயக்கத்துக்கும் அதேபோது இலாப வீதம் சரிந்து செல்வதற்கும் அவசியத் தொடர்பு உண்டு என்ற கருத்தை இப்பாகத்தின் மூன்றாம் பகுதியில் வகுத்துரைப்போம்.

மறுபுறம், அதே தொகையிலான தொழிலாளர்கள் முன்னைக் காட்டிலும் குறைந்த கூலிக்கு அமர்த்தப்படுவதால் vஆனது 30இலிருந்து 20ஆகக்குறையுமானால், வேலை-நாள் மாறாதிருக்க, முன்போலவே மொத்த மதிப்பு-உற்பத்தியானது $30_v + 15_s = 45$ என்பதாக இருக்கும். vஆனது 20 ஆகக் குறைந்ததால் உபரி-மதிப்பு 25 ஆக உயரும், உபரி-மதிப்பு வீதம் 50%இலிருந்து 125% ஆக உயரும்; இது நமது அனுமானத்துக்கு மாறாக இருக்கும். நாம் எடுத்துக் கொண்ட நேர்வின் நிபந்தனைகள் நிறைவு பெற வேண்டுமானால், உபரி-மதிப்பு வீதம் 50% ஆக இருக்கும் போதே உபரி-மதிப்பு 10 ஆகக் குறைய வேண்டும்; ஆகவே மொத்த மதிப்பு-உற்பத்தி 45இலிருந்து 30 ஆகக் குறைய வேண்டும்; வேலை-நாள் மூன்றிலொரு பங்கு குறைக்கப்பட்டால்தான் இது சாத்தியமாகும். முன் போலவே இப்போதும்:

$100_c + 20_v + 10_s$; $s' = 50\%$, $p' = 8\ ^1/_3\%$.

கூலியில் ஒரு வீழ்ச்சி ஏற்படுமானால், நடைமுறையில் இது போல் வேலை நேரம் குறையாது என்பது கூறாமல் விளங்கும். ஆனால் இதுவல்ல இங்கே கருத்துக்குரியது. இலாப வீதம் என்பது அநேக மாறும் பருமன்களின் பணியாகும்; இந்த மாறும் பருமன்கள் இலாப வீதத்தின் மீது எப்படித் தாக்கம் செலுத்துகின்றன என்பதை அறிய விரும்பினால், ஒவ்வொன்றின் தனிப்பட்ட விளைவையும் நாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பகுத்தாராய வேண்டும்; இப்படி ஒரு தனிப்பட்ட விளைவு தனியொரு மூலதனத்துக்குப் பொருளாதார வழியில் நடைமுறைச் சாத்தியமானதா என்பது கருத்துக்குரியதன்று.

**(2) s' மாறாதது, v மாறுவது, v மாறுவதால் C மாறுவது.**

இந்த நேர்வு முதல் நேர்விலிருந்து படித்தரத்தில் மட்டுமே வேறுபடுகிறது. C ஆனது v அதிகரிக்கவோ குறையவோ செய்கிற அதே அளவுக்குத் குறையவோ அதிகரிக்கவோ செய்யாமல் மாறாதிருந்து வருகிறது. முக்கியத் தொழில்களிலும் விவசாயத்திலும் இன்றுள்ள நிலைமைகளில் மாறும்-மூலதனமானது மொத்த மூலதனத்தில் ஒப்பளவில் சிறு பகுதியே. எனவேதான் மாறும்-மூலதனத்திலான மாற்றங்கள் காரணமாக மொத்த மூலதனத்தில் ஏற்படும் அதிகரிப்பானாலும் குறைவானாலும் ஒப்பளவில் மிகச் சிறியதே.

மீண்டும் ஒரு முறை

I. $100_c + 20_v + 10_s$; $C = 120$, $s' = 50\%$, $p' = 8\,{}^{1}/{}_{3}\%$

என்னும் மூலதனத்திலிருந்து தொடங்குவோம். இந்த மூலதனம் மாற்றமடைந்து,

II. $100_c + 30_v + 15_s$; $= C = 130$, $s' = 50\%$, $p' = 11\,{}^{7}/{}_{13}\%$

என்றாவதாகக் கொள்வோம். இதற்கு மாறாக மாறும்-மூலதனம் குறைவதைக் குறிக்கும் நேர்வை மீண்டும் IIஇலிருந்து Iக்குத் தலைகீழ் மாற்றம் ஏற்படுவதாய்க் கொண்டு விளக்கலாம்.

பொருளாதார நிலைமைகள் முந்தைய நேர்வில் இருந்தது போலவே இருக்கும்; அடிப்படை மாற்றம் ஏதும் இருக்காது. எனவே இந்நிலைமைகளை மீண்டும் ஆராயத் தேவையில்லை Iஇலிருந்து IIக்கு மாறுவது உழைப்பின் உற்பத்தித் திறன் அரைப் பங்கு குறைவதைக் குறிக்கிறது; $100_C$ ஐப் பயன்படுத்திக் கொள்ள, Iக்குத் தேவையானதைக் காட்டிலும் IIக்கு அரைப் பங்கு கூடுதலான உழைப்பு தேவைப்படுகிறது. விவசாயத்தில் இப்படி நேரிட வாய்ப்புண்டு.[9]

9 எங்கெல்ஸ் குறிப்பு: கையெழுத்துப் பிரதியில் இங்குக் காணப்படும் குறிப்பு - 'இந்த நேர்வு நில-வாடகையோடு எவ்விதத்தில் தொடர்புடையது என்பதைப் பிறகு ஆராய வேண்டும்.')

மாறா-மூலதனம் மாறும்-மூலதனமாகவோ மாறும்-மூலதனம் மாறா-மூலதனமாகவோ மாற்றப்படுவது காரணமாய் முந்தைய நேர்வில் மொத்த மூலதனம் மாறாதிருந்து வருகிறது. இந்த நேர்விலோ, மாறும்-மூலதனம் அதிகரித்தால் கூடுதல் மூலதனம் முடக்கப்படுகிறது. மாறும்-மூலதனம் குறைந்தால் முன்னதாக ஈடுபடுத்தப்பட்டிருக்கும் மூலதனம் விடுவிக்கப்படுகிறது.

*3) s' உம் v உம் மாறாதவை, c உம் ஆகவே C உம் மாறுகிறவை.*

இந்நேர்வில் சமன்பாடானது,

$p' = s' \, {}^{v}/_{C}$ என்பதிலிருந்து $p'_1 = s' \, {}^{v}/_{C_1}$ என்பதாக மாறுகிறது; இரு பக்கமும் இடம் பெற்றுள்ள காரணிகளை நீக்கினால் பெறப்படுவது:

$$p'_1 : p' = C : C_1 ;$$

உபரி-மதிப்பு வீதங்கள் சமமாயிருக்க, மாறும்-மூலதனங்களும் சமமாயிருக்க, இலாப வீதங்கள் மொத்த மூலதனங்களுக்கு எதிர் விகிதத்தில் உள்ளன.

மூன்று மூலதனங்களை அல்லது ஒரே மூலதனத்தின் மூன்று வெவ்வேறு நிலைமைகளை எடுத்துக்காட்டாய்க் கொண்டால்

I. $80_c + 20_v + 20_s$;  $C = 100$, $s' = 100\%$, $P' = 20\%$;

II. $100_c + 20_v + 20_s$; $C = 120$, $s' = 100\%$, $p' = 16\,{}^2/_3\%$;

III. $60_c + 20_v + 20_s$; $C = 80$, $s' = 100\%$, $p' = 25\%$.

இதிலிருந்து பெறப்படும் விகித உறவுகள்:

$20\% : 16\,{}^2/3\% = 120 : 100$, மற்றும் $20\% : 25\% = 80 : 100$.

s' மாறாதிருக்கையில் ${}^{v}/_{C}$ மாறுவதற்கு ஏற்கெனவே தரப்பட்ட பொதுச் சூத்திரம்:

$p'_1 = s' \, {}^{ev}/_{EC}$ இது இப்போது $p'_1 = s' \, {}^{v}/_{EC}$ என்றாகிறது. v மாறுவதில்லையென்பதால் $e = {}^{v}1/_{v}$ என்னும் காரணி 1 என்றாகிறது.

$s'v = s$ அதாவது உபரி-மதிப்பின் அளவு s', v, ஆகிய இரண்டுமே மாறாதவை. எனவே C எப்படி மாறினாலும் s இல் எந்த மாற்றமும் ஏற்படாது என்றாகிறது. உபரி-மதிப்பின் அளவு மாற்றத்துக்கு முன் என்னவோ, பிறகும் அதுவேதான்.

c பூஜ்யமாகக் குறையுமானால், p' = s' ஆகும்; அதாவது இலாப வீதம்உபரி-மதிப்பு வீதத்துக்குச் சமமாக இருக்கும்.

மாறா-மூலதனத்தின் பொருட்கூறுகளின் மதிப்பில் மாற்றம் ஏற்படுவதாலேயே c மாறலாம். அல்லது, மொத்த மூலதனத்தின் தொழில் நுட்ப இயைபில் மாற்றம் ஏற்படுவதால், அதாவது குறிப்பிட்ட தொழிற் கிளையில் உழைப்பின் உற்பத்தித் திறனில் மாற்றம் ஏற்படுவதால் c மாறலாம். பின்சொன்னதுபோல் நிகழுமானால், நவீனத் தொழில் துறையும் பெருவீத வேளாண்மையும் வளர்ந்திருப்பது காரணமாய் சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்ந்து (மேற்கண்ட எடுத்துக்காட்டில்) III இலிருந்து Iக்கும், I இலிருந்து IIக்கும் மாறுதல் நிகழச்செய்யும். ஊதியமாக 20 பெற்று மதிப்பாக 40 உற்பத்தி செய்யும் ஓர் உழைப்பளவு முதலில் 60 மதிப்புள்ள உழைப்புச் சாதனங்களைப் பயன்படுத்தும்; உற்பத்தித் திறன் உயர்ந்து, மதிப்பு மாறாதிருந்தால், பயன்படுத்தித் தீர்க்கப்படும் உழைப்புச்சாதனங்கள் முதலில் 80 ஆகவும், பின்னர் 100 ஆகவும் உயரும். இந்த வரிசைத் தொடரை நேர்மாறாக்கினால் உற்பத்தித் திறன் குறைவதாகக் காட்டும். அதே அளவு உழைப்பு முன்னிலும் குறைந்த அளவிலான உற்பத்திச் சாதனங்களை இயங்கச்செய்யும். உற்பத்திச் செயற்பாடு குறுகி விடும். விவசாயம், சுரங்கத் தொழில் போன்றவற்றில் இப்படி நிகழ வாய்ப்புண்டு.

மாறா-மூலதனத்தை மிச்சம் பிடிப்பது ஒருபுறம் இலாப வீதத்தை உயர்த்துகிறது. மறுபுறம் மூலதனத்தை விடுவிக்கிறது; எனவே இது முதலாளிக்கு முக்கியத்துவமுடையதாகிறது. இதனையும், இதே போல் மாறா-மூலதனக் கூறுகளின், குறிப்பாகக் கச்சாப் பொருட்களின் விலையில் ஏற்படும் மாற்றத்தின் விளைவையும் பின்னொரு கட்டத்தில்* இன்னும் நெருங்கி ஆராய்வோம்.

c இன் பொருட் கூறுகள் அதிகரிப்பதோ குறைவதோ காரணமானாலும் சரி, அவற்றின் மதிப்பு மட்டும் மாறுவது காரணமானாலும் சரி, மாறா-மூலதனத்தில் ஏற்படும் மாற்றம் இலாப வீதத்தில் மாற்றம் உண்டாக்கவே செய்கிறது.

### 4) s' மாறாதது; v, c, C அனைத்தும் மாறுகிறவை

மாறிய இலாப/ வீதத்துக்கென தொடக்கத்தில் தரப்பட்ட பொதுச் சூத்திரம் தொடர்ந்து இந்த நேர்வுக்கும் பொருந்துகிறது.

* இந்தப் பதிப்பு: அத்தியாயம் V, VI.பதிப்பாசிரியர்.)

$p'_1 = s' \ ^{ev}/_{EC}$

இதிலிருந்து பெறப்படுவது - உபரி-மதிப்பு வீதம் மாறாதிருக்க:

அ) Eஆனது eஐ விடப் பெரிதாய் இருந்தால், அதாவது மொத்த மூலதனம் மாறும்-மூலதனத்தை விடத் துரிதமாய் வளரும் அளவுக்கு மாறா-மூலதனம் அதிகரித்தால், இலாப வீதம் குறைகிறது. $80_c + 20_v + 20_s$ என்னும் மூலதனம் $170_c + 30_v + 30_s$ என்று மாறினால், s'=100% ஆகவே நீடிக்கிறது; ஆனால் v, Cஇரண்டுமே அதிகரித்திருந்தாலும் $^v/_C$ஆனது $^{20}/_{100}$ என்பதிலிருந்து $^{30}/_{200}$ ஆகக் குறைகிறது; அதற்கேற்ப இலாப வீதம் 20% இலிருந்து 15% ஆகக் குறைகிறது.

ஆ) e=Eஎன்றிருந்தால்தான், அதாவது ஒரு மாற்றம் ஏற்படுவதாகத் தோன்றிய போதிலும் $^v/_C$ என்னும் பின்னத்தின் மதிப்பு மாறாமலிருந்தால்தான், அதாவது அதன் மேலிலக்கமும் கீழிலக்கமும் ஒரே காரணியால் பெருக்கவோ வகுக்கவோ பட்டால்தான், இலாப வீதம் மாறாதிருக்கிறது. $80_c+20_v+20_s$ என்னும் மூலதனமும் $160_c+40_v+40_s$ என்னும் மூலதனமும் 20% என்னும் ஒரே இலாப வீதத்தைத் தருவது தெளிவாகவே தெரிகிறது. ஏனெனில் s'=100% ஆகவே இருந்து வருகிறது; $^v/_C = {}^{20}/_{100} = {}^{40}/_{200}$ என்பது இரு உதாரணங்களிலும் ஒரே மதிப்பையே குறிக்கிறது.

இ) eஆனது Eஐ விடப் பெரிதாயிருக்கும்போது, அதாவது மாறும்-மூலதனம் மொத்த மூலதனத்தை விட விரைவாய் வளரும் போது, இலாப வீதம் உயருகிறது. $80_c + 20_v + 20_s$ என்பது $120_c + 40_v + 40_s$ ஆக மாறினால், இலாப வீதம் 20% இலிருந்து 25% ஆக உயருகிறது; ஏனென்றால் s' மாறாதிருக்கும் நிலையில் $s' \ ^v/_C = {}^{20}/100$ என்பது $^{40}/160$ ஆக உயருகிறது, அதாவது $^1/_5$ இலிருந்து ¼ ஆக உயருகிறது.

vஉம் Cஉம் ஒரே திசையில் மாற்றமடைந்தால், நாம் இந்தப் பருமன் மாற்றத்தை ஓரளவுக்கு எப்படிக் கருதலாம் என்றால், இரண்டும் ஒரே விகிதத்தில் மாறியது போலவும், எனவே $^v/_C$ அதுவரை மாறாமலிருந்தது போலவும் கருதலாம். இதற்குமேல் அவற்றில் ஒன்று மட்டுமே மாறும். சிக்கலானதாகிய இந்த நேர்வை முன்சென்ற எளிய நேர்வுகளில் ஒன்றாக இவ்விதம் நாம் அமைத்துக் கொண்டுவிடலாம்.

எடுத்துக்காட்டாக, $80_c+20_v+20_s$ என்பது $100_c+30_v+30_s$ ஆகுமானால், C உடனும், மற்றும் cஉடனும் vக்குள்ள விகிதமானது இந்த மாற்றத்தில் $100_c + 25_v + 25_s$ வரை மாறாதிருக்கிறது. ஆகவே அது

வரை இலாப வீதமும் மாறாதிருக்கிறது. இதிலிருந்து நாம் $100_c + 25_v + 25_s$ ஐக் தொடக்க நிலையாகக் கொள்ளலாம். v ஆனது 5 கூடுதலாகி 30v ஆகக் காண்கிறோம். 125 ஆக இருந்த C இதனால் 130 ஆக உயருகிறது. v மட்டும் மாறுவதும் இதன் பயனாய் C மாறுவதுமான இரண்டாம் நேர்வு இங்கே பெறப்படுகிறது. இவ்விதம் 5 v கூடுதலாகச் சேருவதன் மூலம். உபரி-மதிப்பு வீதம் மாறாதிருக்கும் போதே இலாப வீதம் 20%இலிருந்து 23 1/3% ஆக உயருகிறது.

v இன் பருமனும் C இன் பருமனும் எதிரெதிர்த் திசையில் மாறினாலும் கூட, எளிய நேர்வாக இப்படி மாற்றி அமைத்துக் கொள்வது சாத்தியமே. எடுத்துக்காட்டாக மீண்டும் $80_c + 20_v + 20_s$ என்பதிலிருந்து தொடங்குவோம்; இது $110_c + 10_v + 10_s$ ஆக மாறுவதாய்க் கொள்வோம். இப்படி மாறும் போது $40_c + 10_v + 10_s$ வரை இலாப வீதம் அதே 20% ஆகத்தான் இருந்துவரும். இந்த இடைநிலை வடிவத்தோடு $70_c$ சேரும் போது, இலாப வீதம் $8\,^1/_3\%$ ஆகக் குறைந்துவிடும். இந்நேர்வை ஒரு காரணி மட்டும், அதாவது C மட்டும் மாற்றமடையும் நேர்வாக இவ்விதம் அமைத்துக் கொள்கிறோம்.

ஆகவே, v,c,C ஆகியவை ஒருங்கே மாற்றமடையும் நிகழ்வு புதிய பண்புக் கூறுகள் எதையும் வெளிப்படுத்தவில்லை. முடிவாகப் பார்க்குமிடத்து, ஒரு காரணி மட்டும் மாற்றமடையும் நேர்வுக்கே திரும்புவதற்குத்தான் இது வழி செய்கிறது.

எஞ்சியிருக்கிற ஒரே ஒரு நேர்வும் கூட, அதாவது v உம் C உம் தொகையளவில் மாறாதிருக்கும் போதே அவற்றின் பொருட் கூறுகளது மதிப்பு மாறி, v ஆனது இயங்கச் செய்யப்படும் உழைப்பின் மாறிய அளவையும் c ஆனது இயங்கச் செய்யப்படும் உற்பத்திச் சாதனங்களின் மாறிய அளவையும் குறிக்கிற நேர்வும் கூட ஏற்கெனவே முடிந்துவிட்டது.

$80_c + 20_v + 20_s$ என்பதில், ஆரம்பத்தில் 20 ஆனது நாளொன்றுக்கு 10 மணி நேரம் வேலை செய்யும் 20 தொழிலாளர்களின் கூலியைக் குறிப்பதாகவும், பிற்பாடு ஒவ்வொருவரின் கூலியும் 1இலிருந்து 1 ¼ ஆக உயருவதாகவும் கொள்வோம். அப்போது $20_V$ என்பது 20 தொழிலாளர்களுக்கு பதில் 16 தொழிலாளர்களுக்கு மட்டுமே ஊதியமாகும். ஆனால் 20 தொழிலாளர்கள் 200 வேலை-மணிகளில் 40 என்னும் மதிப்பை உற்பத்தி செய்தால், நாளொன்றுக்கு 10 மணி நேரம் வேலை செய்யும் 16 தொழிலாளர்கள் 160 வேலை-மணிகளில் 32

என்னும் மதிப்பையே உற்பத்தி செய்வார்கள். அப்படியானால், கூலிக்காக $20_v$ ஐக் கழித்துக் கொண்ட பிறகு இந்த 32இல் 12 மட்டுமே உபரி-மதிப்புக்கு மிஞ்சும். உபரி-மதிப்பு வீதம் 100%இலிருந்து 60% ஆகக் குறைந்து விடும். ஆனால் நாம் உபரி-மதிப்பு வீதம் மாறாதிருப்பதாகக் கொண்டிருப்பதால், வேலை-நாளை 10இலிருந்து 12 ½ மணி நேரமாக, அதாவது கால் பங்கு நீட்ட வேண்டியிருக்கும். 20 தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 10 மணி நேரம் வேலை செய்து (மொத்தம் 200 வேலை-மணிகள்) 40 என்னும் மதிப்பை உற்பத்தி செய்தால், 16 தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 12 ½ மணி நேரம் வேலை செய்து (மொத்தம் 200 வேலை-மணிகள்) அதே மதிப்பை உற்பத்திச் செய்வார்கள்; $80_c + 20_v$ என்னும் மூலதனம் முன்போல் 20 என்னும் அதே உபரி-மதிப்பையே உற்பத்திச் செய்யும்.

மறுதலையாக, கூலி குறைந்து $20_v$ ஆனது 30 தொழிலாளர்களின் கூலியைக் குறிக்கும் நிலை ஏற்படுமானால், வேலை-நாள் 10இலிருந்து $6\,^2/_3$ மணி நேரமாகக் குறைக்கப்பட்டால்தான் s' மாறாதிருக்கும். $20 \times 10 = 30 \times 6\,^2/_3 = 200$ வேலை-மணிகள்.

c ஆனது நிலைமைகளில் ஏற்படும் மாற்றத்தைப் பொறுத்து வெவ்வேறு உற்பத்திச் சாதன அளவுகளைக் குறிக்கும்போதே எப்படியும் பண வடிவிலான அதன் மதிப்புத் தெரிவிப்பு மாறாதிருக்க முடியும் என்பதை மேற்கண்ட பல்வேறுபட்ட எடுத்துக்காட்டுகள் மூலம் அடிப்படையான முறையில் விளக்கி இருக்கிறோம். ஆனால் தூயவடிவில் இப்படி நிகழ்வது விதிவிலக்காக மட்டுமே சாத்தியப்படும்.

c இன் கூறுகளின் மதிப்பில் ஒரு மாற்றம் ஏற்பட்டு, அந்த மாற்றத்தால் அவற்றின் மதிப்புத் தொகையில் (c) எவ்வித மாற்றமும் ஏற்படாத போதே அக்கூறுகளின் திரள் அதிகரித்தாலும் சரி, குறைந்தாலும் சரி, இது இலாப வீதத்தையோ உபரி-மதிப்பு வீதத்தையோ பாதிக்காது - இம்மாற்றம் இன் பருமனிலும் மாற்றம் ஏற்படுவதற்கு வழி செய்யாத வரை.

ஆக, நமது சமன்பாட்டில் v,c,C, ஆகியவை மாறக் கூடிய சாத்தியமான நேர்வுகளை எல்லாம் பார்த்து முடித்துவிட்டோம். உபரி-மதிப்பு வீதம் மாறாதிருக்கும்போதே, இலாப வீதம் குறையவோ, மாறாதிருக்கவோ, உயரவோ செய்யலாம் என்று பார்த்தோம். c உடனோ C உடனோ v க்குள்ள விகிதத்தில் ஏற்படக்கூடிய சிறு மாற்றமும் இலாப வீதத்தையும் மாறச் செய்வதற்குப் போதுமானதாய் இருக்கும் எனக் கண்டோம்.

நாம் மேலும் பார்த்ததாவது: v மாறுவதற்கு எந்நேரமும் ஓர் எல்லை உண்டு; இந்த எல்லைக்கப்பால் s' மாறாமல் இருப்பது பொருளாதார வழியில் சாத்தியமன்று. இவ்வாறே c இல் ஒருதரப்பாக ஏற்படக்கூடிய ஒவ்வொரு மாற்றமும் v இனியும் மாற முடியாத ஓர் எல்லையை அடைந்தாக வேண்டும் என்பதால், $^{v}/_{C}$ இல் சாத்தியமாகக்கூடிய எல்லா மாற்றங்களுக்கும் எல்லைகள் உண்டு என்பதையும், இந்த எல்லைகளுக்கப்பால் s'உம் மாறியாக வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ள முடிகிறது. s' இல் ஏற்படக்கூடிய மாற்றங்களை இப்போது பரிசீலிப்போம். நமது சமன்பாட்டின் பல்வேறுபட்ட மாறுநிலைகளின் (variables) பரஸ்பரச் செயற்பாடு s' இன் இந்த மாற்றங்களில் இன்னும் கூட துலக்கமாய்ப் புலப்படும்.

## II. s' மாறுவது

v/C மாறாதிருந்தாலும் சரி, மாறிப் போனாலும் சரி, வெவ்வேறு உபரி-மதிப்பு வீதங்களுக்குரிய இலாப வீதங்களுக்குப் பொதுச் சூத்திரம் வகுக்கும் பொருட்டு,

$$p' = s' \, ^{v}/_{C}$$

என்னும் சமன்பாட்டை

$$p'_1 = s'_1 \, ^{v_1}/_{C_1}$$

என்னும் சமன்பாடாக மாற்றிக் கொள்வோம், இதில் $p'_1$, $s'_1$, $v_1$, $C_1$ ஆகியவை p', s', v, C ஆகியவற்றின் மாறிய மதிப்புகளைக் குறிக்கின்றன. ஆக,

$$p' : p'_1 = s' \, ^{v}/_{C} : s'_1 \, ^{v_1}/_{C_1};$$

எனவே,

$$p'_1 = {}^{s'_1}/_{s'} \times {}^{v_1}/_{v} \times C/_{C_1} \times p'.$$

*1)* s' *மாறுவது,* $^{v}/_{C}$ *மாறாதது.*

இந்த நேர்வில்,

$$p' = s' \, ^{v}/_{C} ; \; p'_1 = s'_1 \, ^{v}/_{C} ,$$

ஆகிய இரு சமன்பாடுகளிலும் v/c சமமாகும். ஆகவே

$$p' : p'_1 = s' : s'_1.$$

ஒரே இயைபு கொண்ட இரு மூலதனங்களின் இலாப வீதங்களிடையிலான விகிதமும் அவற்றுக்குரிய உபரி-மதிப்பு வீதங்களிடையிலான விகிதமும் ஒன்றே. $^{v}/_{C}$ என்னும் பின்னத்தில் v,

C இவற்றின் அறுதிப் பருமன்கள் கருத்துக்குரியவை அல்ல, அவற்றின் விகிதம் மட்டுமே முக்கியம், ஆதலால், அறுதிப் பருமன் எதுவானாலும் ஒரே இயைபு கொண்ட எல்லா மூலதனங்களுக்கும் இது பொருந்தும்.

$$80_c + 20_v + 20_s\ ;\ C = 100,\quad s' = 100\%,\ p' = 20\%$$

$$160_c + 40_v + 20_s;\ C = 200,\ s' = 50\%,\ p' = 10\%$$

$$100\% : 50\% = 20\% : 10\%$$

v,Cஇவற்றின் அறுதிப் பருமன்கள் இரு நேர்வுகளிலுமே ஒன்றானால், இலாப விதங்களிடையிலான விகிதமும் உபரி-மதிப்புத் திரள்களிடையிலான விகிதமும் ஒன்றே:

$$p' : p'_1 = s'v : s'_1v = s : s_1$$

எடுத்துக்காட்டாக,

$$80_c + 20_v + 20_s\ ;\ s' = 100\%,\ p' = 20\%$$

$$80_c + 20_v + 10_s;\ s' = 50\%,\ p' = 10\%$$

$$20\% : 10\% = 100 \times 20 : 50 \times 20 = 20_s : 10_s$$

மூலதனங்கள் அறுதியாகவோ ஒப்பளவிலோ ஒரே இயைபு கொண்டவையாக இருக்குமிடத்து, கூலியோ வேலை-நாளின் நீட்டளவோ உழைப்பின் மும்முரமோ மாறுபட்டால்தான் உபரி-மதிப்பு வீதமும் மாறுபட முடியும் என்பது இப்போது தெளிவாய்த் தெரிகிறது. மூன்று நேர்வுகளை எடுத்துக் கொள்வோம்:

$$\text{I. } 80_c + 20_v + 10_s\ ;\ s' = 50\%,\ p' = 10\%$$

$$\text{II. } 80_c + 20_v + 20_s\ ;\ s' = 100\%,\ p' = 20\%$$

$$\text{III. } 80_c + 20_v + 40_s\ ;\ s' = 200\%,\ p' = 40\%$$

மொத்த மதிப்பு-உற்பத்தி Iஇல் 30 ($20_v + 10_s$): IIஇல் 40; IIIஇல் 60, இது நடந்தேறுவதற்கு மூவேறு வழிகள் உண்டு:

***முதலாவதாக,*** *கூலி மாறுவது காரணமாய் $20_v$ என்பது தனிப்பட்ட ஒவ்வொரு நேர்விலும் வெவ்வேறு தொழிலாளர் தொகையைக் குறிக்குமானால் மேற்சொன்னவாறு நிகழும். மூலதனம் I ஆனது £1 $^1/_3$ கூலிக்கு நாளொன்றுக்கு 10 மணி நேரம் 15 தொழிலாளர்களை ஈடுபடுத்துவதாகவும், அவர்கள் £30 மதிப்பை உற்பத்தி செய்வதாகவும், இதில் £20 கூலியை மாற்றீடு செய்வதாகவும், உபரி-மதிப்பாக £10 எஞ்சுவதாகவும் கொள்வோம். கூலியானது £1 ஆகக் குறைந்தால், 20 தொழிலாளர்களை 10 மணி நேரத்துக்கு ஈடுபடுத்தலாம். அவர்கள் £40*

மதிப்பை உற்பத்திச் செய்வார்கள்; இதில் £20 கூலிக்கு மாற்றீடாகவும், £20 உபரி-மதிப்பாகவும் அமையும். கூலியானது மேலும் குறைந்து £ $^{2}/_{3}$ ஆகிப் போனால், முப்பது தொழிலாளர்களை 10 மணி நேரத்துக்கு ஈடுபடுத்தலாம். அவர்கள் £60 மதிப்பை உற்பத்திச் செய்வார்கள்; இதில் £20 கூலிக்குப் போக, £40 உபரி-மதிப்பைக் குறிக்கும்.

இந்த ஒரு நேர்வில் மட்டும்தான் - சதவீதக் கணக்கில் மூலதனத்தின் இயைபு மாறாதிருப்பதும், வேலை-நாள் மாறாதிருப்பதும், உழைப்பின் மும்முரம் மாறாதிருப்பதும், கூலி மாறுவதால் உபரி-மதிப்பு வீதம் மாறுவதுமான நேர்வில் மட்டும்தான் - ரிக்கார்டோவின் பின்வரும் அனுமானம் சரியானது: 'கூலி குறைந்தோ உயர்ந்தோ இருக்கும் **அதே விகிதத்தில்** இலாபம் உயர்ந்தோ குறைந்தோ இருக்கும்.' (கோட்பாடுகள், அத்தியாயம் I, பிரிவு III, 1852இல் மக்குல்லோஹ் பதிப்பித்த ரிக்கார்டோ நூல்களில் பக்கம் 18.)

**இரண்டாவதாக,** உழைப்பின் மும்முரம் மாறினால் அப்போதும் மேற்சொன்னவாறு நிகழும். இந்த நேர்வில், எடுத்துக்காட்டாக 20 தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 10 மணி நேரம் வேலை செய்து அதே உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்தி குறிப்பிட்ட ஒரு சரக்கில் Iஇல் 30 உருப்படிகளும் II இல் 40 உருப்படிகளும் III இல் 60 உருப்படிகளும் உற்பத்தி செய்வதாகக் கொள்வோம். இந்த உருப்படிகள் ஒவ்வொன்றும் அதில் சேர்ந்த உற்பத்திச் சாதனங்களின் மதிப்பை அன்னியில் £1 புதிய மதிப்பையும் குறிக்கிறது. 20 உருப்படிகள் £20 எந்நிலையிலும் கூலிக்கு மாற்றீடு ஆவதால், உபரி-மதிப்பாக எஞ்சுவது Iஇல் 10 உருப்படிகள் = £10, IIஇல் 20 உருப்படிகள் = £20 IIIஇல் 40 உருப்படிகள் = £40.

**மூன்றாவதாக,** வேலை-நாள் நீட்டளவில் மாறினால், அப்போதும் மேற்சொன்னவாறு நிகழ்கிறது. உழைப்பின் மும்முரம் மாறாதிருக்க, 20 தொழிலாளர்கள் Iஇல் 9 மணி நேரமும், IIஇல் 12 மணி நேரமும், IIIஇல் 18 மணி நேரமும் வேலை செய்வார்களானால், அவர்களின் மொத்த உற்பத்திகளிடையிலான விகிதம் 9:12:18, அதாவது 30:40:60 ஆகும். எந்நிலையிலும் கூலி = 20. ஆதலால், உபரி-மதிப்பாக முறையே 10,20,40 எஞ்சியிருக்கும்.

ஆக, கூலி உயர்வதோ குறைவதோ உபரி-மதிப்பு வீதத்தில் அதற்கு எதிரிடையான மாற்றம் உண்டாகச் செய்கிறது. அதேபோது உழைப்பின் மும்முரம் உயர்வதோ குறைவதோ, மற்றும் வேலை-நாள் நீளுவதோ குறுகுவதோ உபரி-மதிப்பு வீதத்தில் அதற்கு இணையான மாற்றம்

உண்டாகச் செய்கிறது. எனவே, $^{v}/_{C}$ மாறாதிருக்க, இலாப வீதத்திலும் அதே போன்ற மாற்றம் உண்டாகச் செய்கிறது.

*2) s' மாறுவது v மாறுவது C மாறாதது.*

இந்நேர்வுக்குரிய விகித உறவு இதுதான்:

$$p' : p'_1 = s'^{v}/_{C} : s'_1 {}^{v_1}/_{C} = s'v : s'_1 v_1 = s : s_1$$

இலாப வீதங்களிடையிலான விகிதமும் அந்தந்த உபரி-மதிப்பு திரள்களிடையிலான விகிதமும் ஒன்றே.

மாறும்-மூலதனம் மாறாதிருக்க, உபரி-மதிப்பு வீதம் மாறுவது மதிப்பு-உற்பத்தியின் அளவிலும் வினியோகத்திலும் (distribution) மாற்றம் ஏற்படுவதைக் குறிக்கிறது. v உம் s' உம் ஒரே சமயத்தில் மாறுவதும் கூட இதேபோல் மதிப்பு-உற்பத்தியின் விநியோகத்தில் மாற்றம் ஏற்படுவதைக் குறிக்கிறது என்றாலும், எப்போதும் அதன் அளவிலும் மாற்றம் ஏற்படுவதைக் குறித்தாக வேண்டும் என்பதில்லை. இதிலிருந்து மூன்று நேர்வுகள் சாத்தியமாகும்:

*அ)* v உம் s' உம் எதிரெதிர்த் திசைகளில் மாறிய போதிலும் ஒரே அளவு மாறுகின்றன; எடுத்துக்காட்டாக,

$80_c + 20_v + 10_s$; s' = 50%, p' = 10%

$90_c + 10_v + 20_s$; s' = 200%, p' = 20%

இரு நேர்வுகளிலும் மதிப்பு-உற்பத்தி ஒன்றுதான். எனவே புரியப்படும் உழைப்பின் அளவும் ஒன்றுதான். $20_v + 10_s = 10_v + 20_s = 30$, ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால், முதல் நேர்வில் கூலிக்கு 20 போக உபரி-மதிப்பாக 10 மிஞ்சுகிறது; இரண்டாவதிலோ கூலிக்கு 10 மட்டும் போக, உபரி-மதிப்பாக 20 மிஞ்சுகிறது. இந்த ஒரு நேர்வில் மட்டும்தான் v உம் s' உம் ஒரே சமயத்தில் மாறும் போதே தொழிலாளர் தொகையும் உழைப்பின் மும்முரமும் வேலை-நாளின் நீட்டளவும் மாறாமல் அப்படியே இருந்துவிடுகின்றன.

*ஆ)* s' உம் v உம் எதிரெதிர்த் திசைகளில் மாறுகின்றன. ஆனால் ஒரே அளவு மாறுவதில்லை. அதாவது v, s', இவற்றில் ஒன்றின் மாற்றம் மற்றொன்றின் மாற்றத்தை விஞ்சுவதாய் உள்ளது.

I. $80_c + 20_v + 20_s$; s' = 100%, p' = 20%

II. $72_c + 28_v + 20_s$; s' = $71\,^3/_7$%, p' = 20%

III. $84_c + 16_v + 20_s$; s' = 125%, p' = 20%

மூலதனம் Iஆனது மதிப்பு-உற்பத்தி 40க்கு $20_v$ ஊதியமளிக்கிறது. IIஆனது மதிப்பு-உற்பத்தி 48க்கு $28_v$ ஊதியமளிக்கிறது. IIIஆனது மதிப்பு-உற்பத்தி 36க்கு $16_v$ ஊதியமளிக்கிறது. மதிப்பு-உற்பத்தி, கூலி இரண்டுமே மாறிவிட்டன. ஆனால் மதிப்பு-உற்பத்தியில் மாற்றம் ஏற்படுவது புரியப்படும் உழைப்பின் அளவிலும் மாற்றம் ஏற்படுவதைக் குறிக்கிறது; எனவே தொழிலாளர் தொகையிலோ உழைப்பு நேரத்திலோ உழைப்பின் மும்முரத்திலோ, அல்லது இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றிலோ மாற்றம் ஏற்படுவதைக் குறிக்கிறது.

இ) s'உம் vஉம் ஒரே திசையில் மாறுகின்றன. அந்நிலையில் ஒன்றின் விளைவு மற்றதன் விளைவைத் தீவிரப்படுத்துகிறது.

$$90_c + 10_v + 10_s; \quad s' = 100\%, \quad p' = 10\%$$
$$80_c + 20_v + 30_s; \quad s' = 150\%, \quad p' = 30\%$$
$$92_c + 8_v + 6_s; \quad s' = 75\%, \quad p' = 6\%$$

மதிப்பு-உற்பத்திகள் மூன்றும் இங்கேயும் வெவ்வேறானவை, அதாவது 20, 50, 14, இந்நேர்வுகளிடையே உழைப்பின் அளவில் காணப்படும் இந்த வேறுபாட்டைத் தொழிலாளர் தொகையிலோ உழைப்பு நேரத்திலோ உழைப்பின் மும்முரத்திலோ அல்லது இக்காரணிகளில் ஒன்றுக்கு மேற்பட்டவற்றிலோ காணப்படும் வேறுபாடாகப் பெயர்க்கலாம்.

*3)* s', v, c எல்லாமே மாறுவது

இந்த நேர்வு புதிய பண்புக் கூறுகள் எதையும் புலப்படுத்தவில்லை. s'மாறுவதாயுள்ள IIஎனும் தலைப்பில் தரப்பட்டுள்ள பொதுச் சூத்திரமே இதற்கும் தீர்வாகிறது.

---

ஆக, உபரி-மதிப்பு வீதத்திலான மாற்றம் இலாப வீதத்தின் மீது ஏற்படுத்தும் விளைவைப் பின்வரும் நேர்வுகளிலிருந்து அறியலாம்:

1) $^v/_C$ மாறாதிருந்தால், p' ஆனது s'ஐப் போல் அதே விகிதத்தில் அதிகமாகிறது அல்லது குறைகிறது.

$$80_c + 20_v + 20_s; \quad s' = 100\%, \quad p' = 20\%$$
$$80_c + 20_v + 10_s; \quad s' = 50\%, \quad p' = 10\%$$
$$100\% : 50\% = 20\% : 10\%$$

2) s' நகர்கிற அதே திசையில் $^v/_C$உம் நகர்ந்தால், அதாவது s'அதிகமாகிற அல்லது குறைகிற போது $^v/_C$உம் அதிகமானால் அல்லது

*குறைந்தால், p'ஆனது s'ஐ விட கூடுதலான விகிதத்தில் உயர்கிறது அல்லது குறைகிறது.*

$80_c + 20_v + 10_s$ ; s' = 50%, p' = 10%

$70_c + 30_v + 20_s$; s' = 66 2/3%, p' = 15%

50% : $66^2/_3$ < 10% : 20%

*3) $^V/_C$ஆனது s'க்கு எதிர் விகிதத்தில் மாறிய போதிலும் அதை விடக் குறைந்த விகிதத்தில் மாறினால் p' ஆனது s'ஐ விடக் குறைந்த விகிதத்தில் உயர்கிறது அல்லது குறைகிறது.*

$80_c + 20_v + 10_s$ ; s' = 50%, p' = 20%

$90_c + 10_v + 15_s$; s' = 150%, p' = 15%

50%:150% > 10%:15%

*4) $^V/_C$ஆனது s'க்கு எதிர்த் திசையிலும் அதை விட கூடுதலான விகிதத்திலும் மாறினால், s'குறையும் போதே p' உயர்கிறது அல்லது s'உயரும் போதே p' குறைகிறது.*

$80_c + 20_v + 20_s$ ; s' = 100%, p' = 20%

$90_c + 10_v + 15s$ ; s' = 150%, p' = 15%

*இங்கு s'ஆனது 100%இலிருந்து 150%ஆக உயர்கிறது; p'ஆனது 20% இலிருந்து 15%ஆகக் குறைகிறது.*

*5) முடிவில், $^V/_C$ஆனது s'க்கு எதிர் விகிதத்தில் மாறினாலும் சரியாக அதே விகிதத்தில் மாறினால் s'உயர்ந்தாலும் குறைந்தாலும் p'மாறாதிருந்து வருகிறது.*

இந்தக் கடைசி நேர்வை மட்டும் இன்னும் கொஞ்சம் பரிசீலித்தாக வேண்டும். $^V/_C$இல் மாற்றம் ஏற்படும் போது ஒரே உபரி-மதிப்பு வீதத்தை எப்படிப் பல்வேறு இலாப வீதங்களாகத் தெரிவிக்க முடிகிறது என்று மேலே பார்த்தோம்.ஒரே இலாப வீதத்துக்கு எப்படிப் பல்வேறு உபரி-மதிப்பு வீதங்கள் அடிப்படையாக முடிகிறது என்று இங்கு பார்க்கிறோம். s' மாறாதுள்ள வரை, vக்கும் Cக்குமான விகிதத்தில் ஏற்படக் கூடிய எந்த ஒரு மாற்றமும் இலாப வீதத்தில் மாற்றம் உண்டாக்கப் போதுமானதாகும். ஆனால், இலாப வீதம் மாறாதிருக்க வேண்டுமென்றாலே, s'மாறுவதற்கீடாக $^V/_C$ஆனது எதிர்த் திசையில் மாறியாக வேண்டும். ஒரே மூலதனத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, ஒரே நாட்டில் இரு மூலதனங்களை எடுத்துக் கொண்டாலும் சரி,

மிகவும் விதிவிலக்காகவே இப்படி நிகழ வாய்ப்புண்டு. பின்வரும் மூலதனத்தை எடுத்துக்காட்டாகக் கொள்வோம்.

$$80_c + 20_v + 20_s;\ C = 100,\ s' = 100\%,\ p' = 20\%;$$

முன்பு $20_v$க்குக் கிடைத்த அதே எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இப்போது $16_v$க்கும் கிடைக்கும் படியாகக் கூலி குறைவதாய்க் கொள்வோம். மற்றவை மாறாதிருக்க, 4 v விடுவிக்கப்படும். ஆக,

$$80_c + 16_v + 24_s;\ C = 96,\ s' = 150\%,\ p' = 25\%$$

p' ஆனது முன்போல் 20% ஆகவே இருக்க வேண்டுமானால், மொத்த மூலதனம் 120 ஆகவும், இவ்விதம் மாறா-மூலதனம் 104 ஆகவும் அதிகரிக்க வேண்டும்:

$$104_c + 16_v + 24_s;\ C = 120;\ s' = 150\%,\ p' = 20\%$$

கூலி குறைகிறபோதே உழைப்பின் உற்பத்தித் திறனில் மாற்றம் ஏற்பட்டு மூலதனத்தின் இயைபு இப்படி மாற வேண்டிய அவசியம் ஏற்பட்டால்தான் இது சாத்தியமாகும். அல்லது, மாறா-மூலதனத்தின் பண மதிப்பு 80இலிருந்து 104 ஆக உயர்ந்தால்தான் இது சாத்தியமாகும். சுருங்கச் சொல்லின், இதற்கு நிலைமைகள் தற்செயலாய் ஒருங்கமைய வேண்டியிருக்கும். மெய்ந்நடப்பில் s', மாறிய போதிலும் அதனோடு சேர்ந்து vஉம், எனவே $^v/_C$உம் மாறாமல் இருப்பது மிக விஷேசமான நிலைமைகளில்தான் மட்டுமே சாத்தியமாகும்; அதாவது உழைப்பின் இலக்குப் பொருளை இயற்கை வழங்கிட நிலை-மூலதனமும் உழைப்பும் மட்டுமே ஈடுபடுத்தப்படும் தொழிற் கிளைகளில் மட்டுமே இது சாத்தியமாகும். மற்றபடி இப்படி நிகழும் என எண்ணிப் பார்க்கவும் முடியாது.

ஆனால் இரு வேறு நாடுகளின் இலாப வீதங்களை ஒப்புநோக்கும் போது இதுவல்ல நிலைமை. ஏனெனில், இப்படி ஒப்புநோக்கும் போது, ஒரே இலாப வீதம் பெரும்பாலும் வெவ்வேறு உபரி-மதிப்பு வீதங்களை வெளியிடுகிறது.

ஆக இந்த ஐந்து நேர்வுகளிலிருந்தும் தெரிவது என்னவென்றால்: உயரும் இலாப-வீதம் உபரி-மதிப்பு வீதத்தின் சரிவுடனோ உயர்வுடனோ இணைந்து வரக்கூடும்; சரிந்து செல்லும் இலாப வீதம் உபரி-மதிப்பு வீதத்தின் உயர்வுடனோ சரிவுடனோ இணைந்து வரக்கூடும். மாறாத இலாப வீதம் உபரி-மதிப்பு வீதத்தின் உயர்வுடனோ

சரிவுடனோ இணைந்து வரக்கூடும். உயர்ந்து செல்கிற, அல்லது சரிந்து செல்கிற, அல்லது மாறாமல் இருக்கிற இலாப வீதம் மாறாத உபரி-மதிப்பு வீதத்தோடு கூட இணைந்து வரலாம் என்பதை Iஇலேயே தெரிந்து கொண்டோம்.

---

ஆகவே, இலாப வீதம் என்பது உபரி-மதிப்பு வீதம், மூலதனத்தின் மதிப்பு-இயைபு ஆகிய இரு பிரதானக் காரணிகளைப் பொறுத்ததாகும். மூலதனத்தின் இரு பகுதிகளில் எது மாற்றத்தை உண்டு பண்ணுகிறது என்பது இங்கு கருத்துக்குரியது அல்லவாதலால், மூலதனத்தின் இயைபை சதவீதமாகக் குறிப்பதன் மூலம் இரு காரணிகளும் ஏற்படுத்துகிற விளைவுகளைப் பின்வருமாறு தொகுத்து உரைக்கலாம்:

இரு வேறு மூலதனங்களின் அல்லது அடுத்தடுத்த இருவேறு நிலைகளிலுள்ள ஒரே மூலதனத்தின் இலாப வீதங்கள் கீழ்க்காணும் சந்தர்ப்பங்களில் சமம்:

*1) மூலதனங்களின் சதவீத இயைபு ஒன்றாய் இருத்தல், அவற்றின் உபரி-மதிப்பு வீதமும் ஒன்றாய் இருத்தல்:*

*2) மூலதனங்களின் சதவீத இயைபு மாறுபடுதல், உபரி-மதிப்பு வீதமும் மாறுபடுதல், ஆனால் உபரி-மதிப்பு வீதத்தை மூலதனத்தினது மாறும் பகுதியின் சதவீதத்தால் பெருக்கி வருகிறது (s'Xv) ஒன்றாய் இருத்தல், அதாவது உபரி-மதிப்புத் திரள்கள் (s=s'v) மொத்த மூலதனத்தின் சதவீதமாகக் கணக்கிடப்படுகையில் சமமாய் இருத்தல், அதாவது s',vஎன்னும் காரணிகள் இரு நேர்வுகளிலும் ஒன்றுக்கொன்று எதிர் விகிதம் கொண்டிருத்தல்.*

மேற்சொன்ன இலாப வீதங்கள் பின்வரும் சந்தர்ப்பங்களில் சமமல்ல.

*1) சதவீத இயைபு ஒன்றாய் இருத்தல், உபரி-மதிப்பு வீதங்கள் மாறுபட்டிருத்தல் இந்நிலையில் இலாப வீதங்களிடையிலான விகிதமும் உபரி-மதிப்பு வீதங்களிடையிலான விகிதமும் ஒன்றாய் இருத்தல்:*

*2) உபரி-மதிப்பு வீதம் ஒன்றாய் இருத்தல், சதவீத இயைபு மாறுபட்டிருத்தல், இந்நிலையில் இலாப வீதங்களிடையிலான விகிதமும் மூலதனங்களின் மாறும் பகுதிகளிடையிலான விகிதமும் ஒன்றாய் இருத்தல்;*

***3) உபரி-மதிப்பு வீதம் மாறுபட்டிருத்தல், சதவீத இயைபும் மாறுபட்டிருத்தல் இந்நிலையில் இலாப வீதங்களிடையிலான விகிதமும் s' v என்னும் பெருக்குத் தொகைகளிடையிலான, அதாவது மொத்த மூலதனத்தின் சதவீதமாகக் கணக்கிடப்படும் உபரி-மதிப்புத் திரள்களிடையிலான விகிதமும் ஒன்றாய் இருத்தல்.[10]***

10. எங்கெல்ஸ் குறிப்பு: உபரி-மதிப்பு வீதத்துக்கும் இலாப வீதத்துக்கும் இடையிலான வேறுபாடு ( s'--p') குறித்து இன்னும் பல விவரமான கணக்கீடுகளும் கையெழுத்துப் பிரதியில் இடம் பெற்றுள்ளன. இந்த வேறுபாடு கருத்துக்குரிய பற்பல தனித்தன்மைகளுடையது. இவ்விரு வீதங்களும் எந்த எந்த சந்தர்ப்பங்களில் ஒன்றிலிருந்து ஒன்று விலகிச் செல்கின்றன, எந்த எந்த சந்தர்ப்பங்களில் ஒன்றை ஒன்று நெருங்கி வருகின்றன என்பதை இந்த வேறுபாட்டின் அசைவியக்கத்திலிருந்து அறிய முடிகிறது. இவ்வியக்கங்களை வளைகோடுகளாகவும் குறிக்கலாம். கையெழுத்துப் பிரதியில் காணப்படும் இந்த விவரப்பொருள் இந்நூலின் நேரடி நோக்கத்திற்கு முக்கியமல்ல என்பதாலும், இது குறித்து மேலும் பயில விரும்பக்கூடிய வாசகர்களுக்கு இங்கு இதை கவனப்படுத்துவதே போதும் என்பதாலும், நான் அதனை நூலில் சேர்க்கவில்லை.)

### அத்தியாயம் IV

## இலாப வீதத்தின்மீது மூலதனப் புரள்வு ஏற்படுத்தும் விளைவு

மூலதனப் புரள்வினால் உபரி-மதிப்பின் உற்பத்திமீதும், இலாப உற்பத்தி மீதும் ஏற்படும் விளைவு பற்றி இரண்டாம் பாகத்தில் பரிசீலித்தோம். சுருங்கச் சொல்வதாயின், புரள்வுக்கு அவகாசம் தேவைப்படுவதால் முழு மூலதனத்தையும் ஒருங்கே உற்பத்தியில் ஈடுபடுத்த முடியாது. எப்போதுமே மூலதனத்தில் ஒரு பகுதி வேலையின்றி சும்மா ஓய்ந்திருக்கிறது - பண-மூலதனமாகவோ கச்சாப் பொருள் இருப்புகளாகவோ, செய்து முடிக்கப்பெற்ற போதிலும் விற்கப்படாதிருக்கும் சரக்கு-மூலதனமாகவோ, கொடுபட வேண்டிய கடன்களாகவோ ஓய்ந்திருக்கிறது. உற்பத்தியில் முனைப்புடன் செயலாற்றி வரும் மூலதனத்தில், அதாவது உபரி-மதிப்பின் உற்பத்தியிலும் தனதாக்கத்திலும் இயங்கி வரும் மூலதனத்தில் மேற்சொன்னவாறு ஓய்ந்திருக்கும் மூலதனப் பகுதியின் அளவுக்கு ஒரு குறைவு ஏற்படுகிறது. உபரி-மதிப்பின் உற்பத்தியும் தனதாக்கமும் அதே விகிதத்தில் குறைந்து போகின்றன. புரள்வுக் காலம் எவ்வளவுக்கு எவ்வளவு குறுகியதோ, முழு மூலதனத்தோடு ஒப்பிடுமிடத்து இந்த ஓய்ந்திருக்கும் மூலதனப் பகுதி அவ்வளவுக்கு அவ்வளவு சிறியதாகும்; ஆகவே, மற்ற நிலைமைகள் மாறாதிருக்க, உபரி-மதிப்பின் தனதாக்கம் அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாகும்.

புரள்வுக் காலத்திலோ (Period of turnover) உற்பத்திக் காலம். (time of production)சுற்றோட்டக் காலம் என்னும் அதன் இரு பிரிவுகளில் ஒன்றிலோ ஏற்படும் குறைவினால் எப்படி உபரி-மதிப்பின் உற்பத்தி, அதிகமாகிறது என்று இரண்டாம் பாகத்தில் விளக்கமாய்ப் பார்த்தோம்.* ஆனால் இலாப வீதமானது உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் அளவு அதன் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் மொத்த மூலதனத்தோடு கொண்டுள்ள விகித உறவின் தெரிவிப்பே ஆதலால், புரள்வு காலத்தில் ஏற்படும் எந்த ஒரு குறைவும் இலாப-வீதம் உயரவே வழி செய்கிறது என்பது தெளிவு. உபரி-மதிப்பு தொடர்பாக இரண்டாம் பாகம் பகுதி IIஇல் கூறியிருப்பதெல்லாம் இலாபத்துக்கும் இலாப

---

* இரண்டாம் பாகம், பக்கம் 368 - 74. -பதிப்பாசிரியர்.

வீதத்துக்கும் கூட அப்படியே பொருந்தும். அதையெல்லாம் இங்கு இன்னொரு முறை திருப்பிச்சொல்ல வேண்டிய அவசியமில்லை. முக்கியமான சிலவற்றை மட்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

உற்பத்திக் காலத்தைக் குறைக்க வேண்டுமானால், உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதே முக்கிய வழி, வழக்கமாய் இதைத்தான் தொழில் துறை முன்னேற்றம் என்கிறார்கள். இதற்காக விலையுயர்ந்த இயந்திர சாதனங்களை நிறுவுவதற்கும் பிற வகையிலும் மொத்த மூலதன முதலீட்டைக் கணிசமாய் அதிகமாக்க வேண்டிய தில்லையென்றால், எனவே இலாப வீதத்தையும் (மொத்த மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுவது) குறைக்க வேண்டியதில்லையென்றால், இந்த இலாப வீதம் உயர்ந்தாக வேண்டும். உலோகத் தொழிலிலும் இரசாயனத் தொழிலிலும் மிகச் சமீபத்திய மேம்பாடுகளில் பலவும் இதையே தெளிவாய்ப் புலப்படுத்துகின்றன. இரும்பு, உருக்கு உற்பத்திக்கென சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வழிமுறைகள் - பெசமர், சீமன்ஸ், ஜில்க்ரிஸ்ட்-தாமஸ் முதலானோரின் வழிமுறைகள் - நீண்ட நெடிய நிகழ்முறைகளாய் முன்பு இருந்தவற்றை ஒப்பளவில் குறைந்த செலவிலேயே பெரிதும் குறுகச் செய்து விட்டன. சீலிலிருந்து (coal - tar) இப்போது ஒரு சில வாரங்களில் அலிசாரின் சாயப்பொருள் வடிக்க முடிகிறது, கீல் சாயப் பொருட்களுக்காக ஏற்கெனவே பயன்படும் பொறியமைவுகளைக் கொண்டே இதைச் செய்ய முடிகிறது. இதே காரியத்துக்கு முன்பெல்லாம் ஆண்டுக் கணக்கில் ஆயிற்று. முன்பு இந்த சாயப் பொருள் சாயச் செடியிலிருந்து தயாரிக்கப்பட்டது. இந்தச் செடி வளருவதற்கு ஓராண்டு ஆயிற்று. செடியிலிருந்து வேர்களை எடுத்துப் பக்குவம் செய்வதற்கு மேலும் சில ஆண்டுகள் ஆயின.

சுற்றோட்டக் காலத்தைக் குறைக்க வேண்டுமானால், தொடர்புச் சாதனங்களை மேம்படுத்துவதே முக்கிய வழி. கடந்த ஐம்பதாண்டு காலத்தில் இத்துறையில் ஏற்பட்டுள்ள புரட்சி 18ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் நடைபெற்ற தொழிற் புரட்சிக்கு ஒப்பானது. தரைவழிப் போக்குவரத்தில் கப்பிக்கல் சாலைக்கு பதில் இருப்புப் பாதை முதலிடம் பெற்று விட்டது. கடல்வழிப் போக்குவரத்தில் மெதுவாகவும் கால ஒழுங்கில்லாமலும் செல்லும் பாய்மரக்கப்பல் போல் விரைவாகவும் கால ஒழுங்கோடும் செல்லும் நீராவிக் கப்பல் வந்து விட்டது. புவிக்கோள் முழுதுமே தந்திக் கம்பிகளால் வளையமிடப்படுகிறது. கிழக்காசியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் முறையான நீராவிக் கப்பல்

போக்குவரத்துக்கு சூயஸ் கால்வாய் வழிகோலிவிட்டது. கிழக்காசியாவுக்குக் கப்பலில் சரக்கேற்றி அனுப்புவதற்காகும் சுற்றோட்டக் காலம் 1847இல் குறைந்தது பன்னிரண்டு மாதம் (பார்க்கவும்: இரண்டாம் பாகம், பக்கம் 334-36): இது இப்போது ஏறக்குறைய பன்னிரண்டு வாரமாய்க் குறைந்துவிட்டது. 1825க்கும் 1857க்கும் இடைப்பட்ட காலத்திய நெருக்கடிகளின் இரு பெரும் மையங்களான அமெரிக்காவும் இந்தியாவும், போக்குவரத்துத் துறையிலான இப்புரட்சியினால், ஐரோப்பியத் தொழில் வள நாடுகளுக்கு 70 முதல் 90 சதவீதம் அண்மையாகிவிட்டன; நெருக்கடிகளது வெடிப்பு அதிர்ச்சியின் கடுமை இதனால் தணிந்துவிட்டது. மொத்த உலக வர்த்தகப் புரள்வுக் காலம் இதே அளவுக்குக் குறைந்துவிட்டது, அதில் ஈடுபட்டுள்ள மூலதனத்தின் பயன்திறன் இரண்டு அல்லது மூன்று மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது. இதன் தாக்கம் இலாப வீதத்திலும் காணப்படுகிறது என்பது கூறாமலே விளங்கும்.

மொத்த மூலதனத்தின் புரள்வு இலாப வீதத்தின் மீது ஏற்படுத்தும் விளைவைத் தனியே பிரித்தறிய வேண்டுமானால், ஒப்பு நோக்கப்படுகிற இரு மூலதனங்களுக்கும் ஏனைய நிலைமைகள் யாவும் ஒன்றெனக் கொள்ள வேண்டும். உபரி-மதிப்பு வீதம், வேலை-நாள் இவற்றோடு முக்கியமாய் மூலதனத்தின் சதவீத இயைபும் ஒன்றெனக் கொண்டாக வேண்டும். A என்னும் மூலதனத்தின் இயைபு $80_c+20_v=100$ C, என்றும் உபரி-மதிப்பு வீதம் 100% என்றும், புரள்வு ஆண்டுக்கு இரு முறை என்றும் வைத்துக் கொள்வோம். ஆக, வருடாந்தர உற்பத்தி:

$160_c+40_v+40_s$ ஆகிறது. ஆனால் இலாப வீதத்தைக் கண்டறியும் பொருட்டு இந்த $40_s$ ஐ முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்பாகிய 100இன் அடிப்படையில் கணக்கிடுகிறோமே தவிர புரளும் மூலதன-மதிப்பாகிய 200இன் அடிப்படையில் அல்ல. எனவே p' = 40%.

இதை B என்னும் மூலதனத்தோடு ஒப்புநோக்குவோம்: B மூலதனம் = $160_c+40_v=200$ C, இதன் உபரி-மதிப்பு வீதமும் 100% தான், ஆனால் இது ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் புரளுகிறது. ஆகவே இந்த மூலதனத்தின் வருடாந்தர உற்பத்தியும் A மூலதனத்தின் வருடாந்தர உற்பத்தியும் ஒன்றே, அதாவது $160_c+40_v+40_s$ ஆனால் இங்கே $40_s$ஐ முன்னீடு செய்யப்படும் மூலதன மதிப்பாகிய 200இன் அடிப்படையில் கணக்கிடும்போது இலாப

வீதம் 20%தான் ஆகிறது. அதாவது A மூலதனத்துக்கான இலாப வீதத்தில் பாதியளவுதான்.

ஆக, சதவீத இயைபும் உபரி-மதிப்பு வீதமும் வேலை-நாளும் இருமூலதனங்களுக்கு ஒன்றாயிருக்கும் போது அவற்றின் இலாப வீதங்கள் அவற்றின் புரள்வுக் காலங்களுக்கு எதிர்விகிதத்தில் மாறும் என்றாகிறது. ஒப்புநோக்கப்படும் இரு நேர்வுகளிலும் மூலதன இயைபோ உபரி-மதிப்பு வீதமோ வேலை-நாளோ உழைப்புக்கான கூலியோ ஒன்றாய் இல்லா விட்டால், இலாப வீதத்தில் மேலும் பல வேறுபாடுகளும் தலை தூக்கும், ஆனால் இவற்றுக்கும் மூலதனப் புரள்வுக்கும் தொடர்பேதுமில்லை. இவை இங்கு நம் கருத்துக் குரியவையல்ல, அத்தியாயம் III இலேயே இவற்றைப் பரிசீலித்து விட்டோம்.

உபரி-மதிப்பு உற்பத்தி மீதும் ஆதலால் இலாப உற்பத்தி மீதும் புரள்வுக் காலத்திலான சுருக்கம் ஏற்படுத்தும் நேரடி விளைவு அதன் மூலம் மாறும்-மூலதனப் பகுதியின் பயன் திறனில் ஏற்படும் அதிகரிப்பே ஆகும். இது பற்றி இரண்டாம் பாகம் அத்தியாயம் XVI இல் ('மாறும் மூலதனத்தின் புரள்வு') ஆராய்ந்தோம். உபரி-மதிப்பு வீதம் ஒன்றே, கூலியும் ஒன்றே என்னும் போது, ஆண்டுக்குப் பத்து முறை புரளும் 500 மதிப்புள்ள மாறும்-மூலதனம், ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே புரளும் 5,000 மதிப்புள்ள மாறும்-மூலதனத்தைப் போல் அதே அளவு உபரி-மதிப்பை ஓராண்டு காலத்தில் உற்பத்திச் செய்வதை அங்கே பார்த்தோம்.

மூலதனம் I ஐ எடுத்துக் கொள்வோம். இதில் நிலை-மூலதனம் 10,000. இதன் வருடாந்தரத் தேய்மானம் 10% 1,000. இதில் மாறாச் சுழல்-மூலதனம் 500, மாறும்-மூலதனம் 500. உபரி-மதிப்பு வீதம் 100%. மாறும்-மூலதனம் ஆண்டுக்குப் பத்து முறை புரளுகிறது. மாறும்-மூலதனம் புரளுகிற அதே காலத்தில் மாறாச் சுழல்-மூலதனமும் புரளுவதாக பின்வரும் எடுத்துக்காட்டுகளில் எளிமையின் பொருட்டு அனுமானம் செய்து கொள்வோம் - பொதுவாக நடைமுறையிலும் இப்படித்தான் நிகழ்கிறது. இப்படியொரு புரள்வுக் காலத்தின் உற்பத்தி:

$100_c$ (தேய்மானம்) $+500_c + 500_v + 500_s = 1,600$

இப்படிப்பட்ட பத்து புரள்வுகளைக் கொண்ட முழு ஆண்டின் உற்பத்தி:

$1,000_c$ (தேய்மானம்) $+ 5,000_c + 5,000_v + 5,000_s = 16,000$,

$C = 11,000$, $s = 5,000$, $p' = {}^{5,000}/_{11,000} = 45\,{}^{5}/_{11}\%$

*மூலதனம் IIஐ எடுத்துக் கொள்வோம்: நிலை-மூலதனம் 9,000, வருடாந்தரத் தேய்மானம் 1,000, மாறாச் சுழல்-மூலதனம் 1,000, மாறும்-மூலதனம் 1,000, உபரி-மதிப்பு வீதம் 100%, மாறும்-மூலதனத்தின் புரள்வுகள் ஆண்டுக்கு 5. அப்படியானால், மாறும்-மூலதனத்தின் இந்தப் புரள்வுக் காலங்களில் ஒவ்வொன்றினதும் உற்பத்தி:*

$200_c$ *(தேய்மானம்)* $+1,000_c + 1,000_v + 1,000_s = 3,200$,

*ஐந்து புரள்வுகளும் முடிந்த பிறகு மொத்த வருட உற்பத்தி:*

$1,000_c$ *(தேய்மானம்)* $+ 5,000_c + 5,000_v + 5,000_s = 16,000$,

$c = 11,000$, $s = 5,000$, $p' = {}^{5,000}/_{11,000} = 45\,{}^{5}/_{11}\%$.

*மூலதனம் IIIஐயும் எடுத்துக் கொள்வோம். இதில் நிலை-மூலதனம் ஏதுமில்லை. மாறாச் சுழல்-மூலதனம் 6,000. மாறும்-மூலதனம் 5,000. இந்த மூலதனம் ஆண்டுக்கொரு முறை புரளுகிறது, உபரி-மதிப்பு வீதம் 100%. மொத்த வருட உற்பத்தி:*

$6,000_c + 5,000_v + 5,000_s = 16,000$,

$C = 11,000$, $s = 5,000$, $p' = {}^{5,000}/_{11,000} = 45\,{}^{5}/_{11}\%$.

*மூன்று நேர்வுகளிலுமே உபரி-மதிப்பின் வருட உற்பத்தியளவு ஒன்றுதான். அதாவது 5,000. மூன்று நேர்வுகளிலுமே மொத்த மூலதனம் ஒன்றுதான், அதாவது 11,000. ஆகவே இலாப-வீதமும் ஒன்றுதான். அதாவது 45 ⁵/11%.*

*மேற்சொன்ன மூலதனம் Iஇன் மாறும் பகுதியானது ஆண்டுக்கு 10 முறை புரளுவதற்கு பதில் 5 முறை மட்டுமே புரளுமானால், இறுதி விளைவு மாறிப்போகும். அப்போது ஒரு புரள்வின் உற்பத்தி:*

$200_c$ *(தேய்மானம்)* $+500_c + 500_v + 500_s = 1,700$.

*வருட உற்பத்தி:*

$1,000_c$ *(தேய்மானம்)* $+2,500_c + 2,500_v + 2,500_s = 8,500$,

$C = 11,000$, $s = 2,500$; $p' = {}^{2,500}/_{11,000}\ 22\,{}^{8}/_{11}\%$.

*புரள்வுக் காலம் இரு மடங்காகி விட்டதால் இலாப வீதம் சரிபாதியாகக் குறைந்துவிட்டது.*

ஆகவே ஓராண்டில் தனதாக்கப்படும் உபரி-மதிப்பின் அளவானது மாறும்-மூலதனத்தின் ஒரு புரள்வுக் காலத்தில் தனதாக்கப்படும் உபரி-மதிப்பின் அளவினை ஓராண்டு காலத்தில் நிகழும் இத்தகைய புரள்வுகளின் எண்ணிக்கையால் பெருக்கி வருவதற்குச் சமம். ஓராண்டில் தனதாக்கப்படும் உபரி-மதிப்பு அல்லது இலாபத்தை Sஎன்னும், ஒரு புரள்வுக் காலத்தில் தனதாக்கப்படும் உபரி-மதிப்பை s என்றும், ஓராண்டு காலத்தில் மாறும்-மூலதனம் நிகழ்த்தும் புரள்வுகளின் எண்ணிக்கையை nஎன்றும் குறிப்போமானால் $S=sn$; வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் $S'=s'n$; இரண்டாம் பாகம், அத்தியாயம் XVI,பிரிவு Iஇலேயே இதைப் பார்த்தோம்.*

$p'=s'^{v}/_{C} = s'\ ^{v}/_{c+v}$ என்பதில் மேலிலக்கத்தில் வரும் vஉம் கீழிலக்கத்தில் வரும் vஉம் ஒன்றாய் இருந்தால்தான் இச்சூத்திரம் சரியானதென்பதை சொல்லாமலே விளங்கிக் கொள்ளலாம். கீழிலக்கத்தில் வரும் vஆனது, மொத்த மூலதனத்தில் மாறும்-மூலதனமாகக் கூலிக்கென்று செலவிடப்படும் முழுப் பகுதியாகும். குறிப்பிட்ட அளவு உபரி-மதிப்பு = s ஆனது அதனால் உற்பத்திச் செய்யப்பட்டு தனதாக்கப்பட்டுள்ளது, உபரி-மதிப்பு வீதம் s' (அதாவது $^{s}/_{v}$)மூலமாய் அதனோடு உறவு கொள்கிறது என்பதே மேலிலக்கத்தில் வரும் vஐ ஆரம்பத்தில் நிர்ணயிக்கிறது. இந்த வழியில்தான் $p' = ^{s}/_{c+v}$ என்னும் சூத்திரம் $p' = s'\ ^{v}/_{c+v}$என்னும் சூத்திரமாக மாற்றப்படுகிறது. மேலிலக்கத்தில் வரும் v ஆனது கீழிலக்கத்தில் வரும் vக்கு, அதாவது மூலதனம் Cஇல் மாறும் பகுதியாயுள்ள அனைத்துக்கும் சமமாய் இருந்தாக வேண்டும் என்ற நிலைமை இப்போது அதனை இன்னும் கூட துல்லியமாக வரையறுக்க உதவும். அதாவது, sஆனது மாறும்-மூலதனத்தின் ஒரே ஒரு புரள்வுக் காலத்தில் உற்பத்தி A செய்யப்பட்ட உபரி-மதிப்பைக் குறிப்பதாக இருந்தால்தான் $p'= ^{s}/_{C}$என்னும் சமன்பாட்டை $p' = s'\ ^{v}/_{c+v}$ என்னும் சமன்பாடாகப் பிழையின்றி மாற்ற முடியும். s ஆனது இந்த உபரி-மதிப்பில் ஒரு பகுதியை மட்டும் குறிப்பதாய் இருந்தாலும் கூட $s=s'v$என்பதில் பிழையில்லை. ஆனால் இந்த vஆனது இப்போது $C=c+v$ என்பதில் வரும் vஐ விடச் சிறியதாகும்; ஏனென்றால் கூலிக்குச் செலவாகும் முழு மாறும்-மூலதனத்தையும் விட அது சிறியதாகும். ஆனால் sஆனது vஇன் ஒரு புரள்வுக்குரிய உபரி-மதிப்பை விடவும் அதிகமானதைக் குறிக்குமானால், இந்த vஇல் ஒரு பகுதி அல்லது அது

* இரண்டாம் பாகம், பக்கம் 401.- பதிப்பாசிரியர்

முழுதுமே கூட இரு முறை v பயன்படுகிறது, அதாவது முதல் புரள்விலும், இரண்டாம் புரள்விலும், முடிவில் அடுத்தடுத்து வரும் புரள்வுகளிலும் பயன்படுகிறது. ஆகவே உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதும், கொடுக்கப்படும் கூலியனைத்தின் கூட்டுத் தொகையாய் இருப்பதுமான vஆனது c+vஇல் வரும் vஐ விடப் பெரியதாகி விடுகிறது; கணக்கில் பிழையுள்ளது என்றாகிறது.

வருடாந்தர இலாப வீதத்துக்கான சூத்திரம் கிஞ்சிற்றும் பிழையற்றதாய் இருக்க வேண்டுமானால், நாம் சாமானிய உபரி-மதிப்பு வீதத்தை நீக்கிவிட்டு அதனிடத்தில் வருடாந்தர உபரி-மதிப்பு வீதத்தை அமர்த்த வேண்டும், அதாவது s'ஐ நீக்கி விட்டு அதனிடத்தில் S'அல்லது s'nஐ அமர்த்த வேண்டும். வேறு விதமாகச் சொன்னால், உபரி-மதிப்பு வீதம் s'ஐ - அல்லது Cஇல் அடங்கிய மாறும்-மூலதனம் vஐ இரண்டும் ஒன்றே - ஓராண்டு காலத்தில் இந்த மாறும்-மூலதனம் நிகழ்த்தும் புரள்வுகளின் எண்ணிக்கையால் அதாவது nஆல் பெருக்க வேண்டும். இதிலிருந்து பெறப்படுவது $p'=s'n^{v}/C$இது வருடாந்தர இலாப வீதத்துக்கான சூத்திரம்.

தமது தொழிலில் எவ்வளவு மாறும்-மூலதனம் முதலீடாகி யிருக்கிறது என்பது பெரும்பாலும் முதலாளிக்கே தெரியாது. இரண்டாம் பாகம், அத்தியாயம் VIIIஇலேயே பார்த்தோம், போகப் போக இன்னும் பார்க்கவிருக்கிறோம், என்னவென்றால்: முதலாளிக்கு அவரது மூலதனத்திற்குள்ளான அடிப்படை வேறுபாடாக மனத்தில் பதிவது நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்குமான வேறுபாடு மட்டும்தான். முதலாளியின் சுழல்-மூலதனம் வங்கியில் போட்டு வைக்கப்பட்டிராத வரையில் பண வடிவில் அதில் ஒரு பகுதி அவர் கைவசம் உள்ளது, இதிலிருந்து கூலி கொடுப்பதற்குத் தேவையான பணத்தைத் தமது பணப் பெட்டியிலிருந்து அவர் எடுத்துக் கொடுக்கிறார்: கச்சாப் பொருட்களுக்கும் துணைப் பொருட்களுக்கும் அதே பணப் பெட்டியிலிருந்துதான் எடுத்துக் கொடுக்கிறார். இரண்டையுமே ஒரே ரொக்கக் கணக்கில்தான் எழுதி வைக்கிறார். அவர் கூலிக்குத் தனிக் கணக்கு வைத்துக் கொண்டாலுங்கூட, வருட முடிவில், கூலியாகத் தரப்பட்டிருக்கும் மொத்தத் தொகையை, அதாவது vnஐ அதிலிருந்து அறிய முடியுமே தவிர, மாறும்-மூலதனம் vஐ அறிய முடியாது. மாறும்-மூலதனம் எவ்வளவென்று அறிய வேண்டுமானால், அவர் தனிக் கணக்கீடு ஒன்றைச் செய்ய வேண்டியிருக்கும் - இதற்கான ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

*முதல் பாகத்தில் (பக்கம் 298) விவரித்த நூற்பாலையை எடுத்துக் கொள்வோம், அது 10,000 கதிர்கள் கொண்டது. 1871 ஏப்ரலில் ஒரு வாரத்திற்கென்று அங்கு தரப்பட்ட கணக்கே அந்த ஆண்டு முழுவதற்கும் பொருத்துவதாய்க் கொள்வோம். இயந்திர சாதன உருவிலான நிலை-மூலதனத்தின் மதிப்பு £10,000. சுழல்-மூலதனம் தரப்படவில்லை, அதன் மதிப்பு £2,500 எனக் கொள்வோம். இது சற்றே உயர்ந்த அளவுதான் என்றாலும் நியாயமானதே; ஏனெனில் கடன்-செலாவணி திரட்டும் செயற்பாடுகள் ஏதும் நடைபெறவில்லையென, அதாவது பிறருக்குச் சொந்தமான மூலதனம் நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ சிறிதும் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லையென தொடர்ந்து அனுமானம் செய்வது இங்கு அவசியமாகிறது. இயந்திர சாதனத்தின் தேய்மானம் £20 மாறாச் சுழல் மூலதன முன்னீடு £358 (வாடகை £6, பஞ்சு £342, நிலக்கரியும் வாயுவும் எண்ணெயும் £10), கூலியாகத் தரப்படும் மாறும்-மூலதனம் £52, உபரி-மதிப்பு £80 ஆகியவை சேர்ந்ததே வாராந்தர உற்பத்தியின் மதிப்பெனக் கொண்டோம். ஆகவே,*

$$20_c \text{ (தேய்மானம்)} + 358_c + 52_v + 80_s = 510.$$

*இவ்வாறு வாராந்தர சுழல்-மூலதன முன்னீடு $358_c + 52_v = 410$, அதன் சதவீத இயைபு $87.3_c + 12.7_v$ மொத்தச் சுழல்-மூலதனம் £2,500இல் மாறா-மூலதனம் £2,182, மாறும்-மூலதனம் £318. ஒரு முழு ஆண்டுக்கு கூலிக்கான மொத்தச் செலவு £52 X 52 = £2,704. எனவே மாறும்-மூலதனம் £318 ஓராண்டு காலத்தில் ஏறக்குறைய 8½ தரம் புரள்கிறது என்றாகிறது. உபரி-மதிப்பு வீதம் $^{80}/_{52} = 153\ ^{11}/_{13}\%$. இந்தக் கூறுகளின் அடிப்படையில் இலாப வீதத்தைக் கணக்கிடும் பொருட்டு $p'=s'n\ v/C$ என்னும் சூத்திரத்தில் மேற்கண்ட மதிப்புகளைப் பிரயோகிக்க வேண்டும். $s' = 153\ ^{11}/_{13}$, $n = 8\frac{1}{2}$, $v = 318$, $C = 12,500$; எனவே,*

$$p' = 153\ ^{11}/_{13} \times 8\tfrac{1}{2} \times {}^{318}/_{12,500} = 33.27\%$$

*$p' = {}^{s}/_{C}$ என்னும் எளிய சூத்திரத்தைக் கொண்டு இதை நாம் சோதித்துப் பார்க்கலாம். மொத்த வருடாந்தர உபரி-மதிப்பு அல்லது இலாபம் = £80 X52 = £4,160. இதை மொத்த மூலதனம் £12,500ஆல் வகுத்தால் கிடைப்பது 33.28%. அநேகமாய் மேலே கண்ட அதே முடிவுதான். இந்த இலாப வீதம் இயல்பு மீறி உயர்ந்த ஒன்று. அப்போதைக்கு மிகவும் சாதகமாய் அமைந்துவிட்ட நிலைமைகளே (பருத்தி விலை மிகவும் குறைந்திருந்ததும், அதோடு நூல் விலை*

மிகவும் உயர்ந்திருந்ததும்) இதற்குக் காரணமாய் இருக்க முடியும். இதே நிலைமை உண்மையில் ஆண்டு முழுக்க நீடித்திருக்க முடியாதென்பது திண்ணம்.

$p'=s'n^{v}/_{C}$ என்னும் சூத்திரத்தில் s'n என்பது, முன்பே கூறியது போல இரண்டாம் பாகத்தில் (வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் என்று சொல்லப்பட்டதைக் குறிக்கும். இது மேற்கூறிய உதாரணத்தில் $153\ ^{11}/_{13}\% \times 8\ ½ = 1,307\ ^{9}/_{13}\%$ ஆகும். பீடர்மன்* என்கிற பேர்வழி இரண்டாம் பாகத்தில் ஓர் உதாரணமாகத் தரப்பட்ட *1,000%* என்னும் வருடாந்தர உபரி-மதிப்பு வீதம் அளவுமீறி அதிகமாய் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றாரென்றால், இப்போது மான்செஸ்டரின் நடைமுறையில் கண்ட உதாரணமாகத் தரப்படும் *1,300%*க்கும் அதிகமான இந்த வருடாந்தர உபரி-மதிப்பு வீதத்தைப் பார்த்து அவர் அநேகமாய் சமாதானப்படலாம். மிகவும் செழிப்பான காலங்களில் - நாம் பார்த்து நீண்ட காலமாகிவிட்ட இத்தகைய காலங்களில் - இவ்வளவு உயர்ந்த இலாப வீதம் அரிதல்ல.

நவீனப் பெருவீதத் தொழில் துறையில் உள்ளபடியே மூலதனத்தின் இயைபு எப்படி இருக்கிறது என்பதற்கும் இதையே எடுத்துக்காட்டாய்க் கொள்ளலாம். மொத்த மூலதனமானது மாறா-மூலதனம் *£12,182*, மாறும்-மூலதனம் *£318* என்பதாய்ப் பிரிகிறது. மொத்தத் தொகை *£12,500*. சதவீதக் கணக்கில் சொல்வதானால் $97\ ½_{c} + 2\ ½_{v} = 100\ C$. மொத்தத்தில் நாற்பதிலொரு பங்கு மட்டுமே - ஓராண்டு காலத்தில் எட்டு முறைக்கும் அதிகமாகவே புரள்வு நிகழ்த்தப்படுகையில் - கூலி கொடுப்பதற்குப் பயன்படுகிறது.

மிகச் சில முதலாளிகளே தமது தொழில் குறித்து இப்படியெல்லாம் கணக்கிடுகிறவர்கள் ஆதலால், மொத்த சமுதாய மூலதனத்தின் மாறாப் பகுதி மாறும் பகுதியோடு கொண்டுள்ள உறவு குறித்து புள்ளி விவரங்கள் மௌனம் சாதிக்கின்றன. இன்றைய நிலைமையில் அமெரிக்க மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மட்டும்தான் எது சாத்தியம் என்று தெரிவிக்கிறது, அதாவது ஒவ்வொரு தொழிற் கிளையிலும் தரப்படும் கூலியையும் பெறப்படும் இலாபத்தையும் தெரிவிக்கிறது. தொழில் அதிபர்களே தரும் தகவல் சரிபார்க்கப்படாமல் ஏற்கப்படுவதால் இந்தப் புள்ளி விவரங்கள் சந்தேகத்துக்குரியவைதான்

---

* பீடர்மன் - அற்பவாதி. இப்பெயர் இங்கு சிலேடையாகப் பயன்படுத்தப்படுகிறது. (Deutsche Allgemeine Zeitung) இதழின் ஆசிரியருக்கும் இதே பெயர்தான்.-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

என்றாலும் இவை மதிப்பு மிக்கவை; இவை தவிர நமக்கு இப்பொருள் குறித்து வேறு ஆவணச் சான்று ஏதுமில்லை. [ஐரோப்பாவில் இருக்கிற நாமோ இங்கிதம் தெரிந்தவர்கள், நமது மாபெரும் தொழிலதிபர்களிடமிருந்து இம்மாதிரியான தகவல்களைப் பெறலாம் என நினைப்பதில்லை.- பி.எங்கெல்ஸ்]

## அத்தியாயம் V

# மாறா-மூலதனத்தைப் பயன்படுத்துவதில் சிக்கனம்

## I. பொதுவான பரிசிலனை

மாறும்-மூலதனம் அப்படியே இருக்கையில், எனவே அதே எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் அதே பெயர்க் கூலிக்கு (மிகை-நேர ஊதியத்தை நாம் கருதவில்லை) வேலை செய்கையில் அறுதி உபரி-மதிப்பு அதிகமாவது, அதாவது உபரி-உழைப்பும் இவ்விதம் வேலை-நாளும் நீட்டிக்கப்படுவது மாறா-மூலதனத்தின் ஒப்பீட்டு மதிப்பை-மொத்த மூலதனத்தோடும் மாறும்- மூலதனத் தோடும் ஒப்பிடுகையில் - குறையச் செய்கிறது; இதன் மூலம் இலாப வீதத்தை உயரச் செய்கிறது. உபரி-மதிப்பின் அளவு அதிகமாகும் போதும் கூட, ஏன், உபரி-மதிப்பு வீதம் உயர்ந்து செல்லும் போதும் கூட, இது நடைபெறலாம். வேலை 16 மணி நேரம் நடந்தாலும் சரி, 12 மணி நேரம் நடந்தாலும் சரி, நிலை-மூலதனமாக இருக்கும் மாறா-மூலதனப் பகுதியாகிய ஆலைக் கட்டடங்கள், இயந்திர சாதனம் போன்றவற்றின் பரிமாணம் மாறுவதில்லை. மிக அதிகமாகச் செலவாகக் கூடிய மாறா-மூலதனப் பகுதியான இவற்றுக்காக, வேலை-நாளை நீட்டும் போது புதிதாய் ஏதும் செலவு செய்யத் தேவையில்லை. மேலும் நிலை-மூலதனத்தின் மதிப்பு மறுவுற்பத்தி செய்யப்படுவதற்கு ஆகும் புரள்வுக் காலங்களின் எண்ணிக்கை இதனால் குறைந்து போகிறது. குறிப்பிட்ட இலாபம் பெற வேண்டி நிலை-மூலதனத்தை முன்னீடு செய்ய வேண்டிய முன்னீட்டுக் காலம் இவ்விதம் சுருங்கிவிடுகிறது. ஆகவே வேலை-நாளை நீட்டுவது இலாபத்தை அதிகரிக்கச் செய்கிறது; மிகை-நேரத்துக்கு ஊதியம் தரப்பட்டாலும் கூட, ஓர் அளவு வரை இயல்பான வேலை நேரத்துக்குரியதை விட அதற்கு அதிக ஊதியம் தரப்பட்டாலும் கூட, இதே நிலைமைதான். நவீனத் தொழில் துறையில் நிலை-மூலதனத்தை மேன்மேலும் அதிகமாக்கிச் செல்ல வேண்டியதில்லை தேவையானது இலாப வெறி கொண்ட முதலாளிகள் இவ்விதம் வேலை-நாளை நீட்டுவதற்கு ஒரு முக்கியக்

*காரணமாய் விளங்கியது[11] வேலை-நாள் மாறாதிருக்குமானால் நடப்பது வேறு. அப்போது இரண்டில் ஒன்றைச் செய்ய வேண்டும்: அதாவது முதலாவதாக, தொழிலாளர் தொகையை அதிகமாக்க வேண்டும், கூடுதலான உழைப்பளவைச் சுரண்டும் பொருட்டு கட்டடங்கள், இயந்திர சாதனம் போன்றவையாகிய நிலை-மூலதனத்தின் அளவையும் சற்றே அதிகமாக்க வேண்டும். (கூலியிலிருந்து செய்யப்படும் பிடித்தங்களையோ, கூலி அதன் இயல்பான அளவுக்கும் கீழே குறைக்கப்படுவதையோ இங்கே கவனியாது ஒதுக்கி விடுகிறோம்.) அல்லது இரண்டாவதாக, உழைப்பின் மும்முரமும், எனவே அதன் உற்பத்தித் திறனும் அதிகரித்தால், பொதுவாக ஒப்பீட்டு உபரி-மதிப்பின் உற்பத்தி அதிகரித்தால், சுழல்-மூலதனமாக இருக்கும் மாறா-மூலதனப் பகுதியின் பருமனானது கச்சாப் பொருட்களைப் பயன்படுத்தும் தொழிற் கிளைகளில் அதிகரிக்கிறது. ஏனெனில் குறிப்பிட்ட கால அளவில் செய்பொருளாக்க வேண்டிய கச்சாப் பொருள் போன்றவற்றின் அளவு அதிகமாகிறது. இன்னும் சொல்லப் போனால், அதே தொகையிலான தொழிலாளர்களால் இயக்கப்படும் இயந்திர சாதனத்தின் அளவு அதிகமாகிறது. இதுவும் கூட மாறா-மூலதனத்தில் அடங்குவதே. ஆகவே உபரி-மதிப்பு அதிகமாகும் போது அதனுடன் கூடவே மாறா-மூலதனமும் அதிகமாகிறது. உழைப்பின் மீதான சுரண்டல் அதிகமாகும் போது உழைப்பைச் சுரண்டும் கருவிகளான உற்பத்திச் சாதனங்களுக்காகும் செலவும் அதிகமாகிறது. அதாவது மூலதன முதலீடும் அதிகமாகிறது. ஒரு பக்கத்தில் இலாப வீதம் அதிகரித்தாலும் கூட மறு பக்கத்தில் குறைந்து போகிறது.*

*வேலை-நாள் நீண்டு சென்றாலும் சரி, குறுகி அமைந்தாலும் சரி, நடப்புச் செலவுகள் பலவற்றிலும் அதனால் எவ்வித மாற்றமும் இல்லை எனலாம். கண்காணிப்புச் செலவை எடுத்துக் கொண்டால், 18 வேலை-மணிகளில் 500 தொழிலாளர்களுக்கு ஆவது 12 வேலை-மணிகளில் 750 தொழிலாளர்களுக்கு ஆவதை விடக் குறைவாகும். "ஒரு தொழிற்சாலையை 10 மணி நேரம் வேலை செய்ய வைப்பதற்காகும் செலவும் 12 மணி நேரம் வேலை செய்ய வைப்பதற்காகும் செலவும் அநேகமாய் ஒன்றுதான்.." (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1848 அக்டோபர் 31, பக்கம் 37.) அரசு வரிகளும்*

11 'எல்லாத் தொழிற்சாலைகளிலும் கணிச அளவிலான நிலை-மூலதனம் கட்டடங்களாகவும் இயந்திர சாதனமாகவும் இருப்பதால், எவ்வளவு அதிக மணி நேரத்துக்கு இயந்திர சாதனத்தை இயங்கச் செய்ய முடிகிறதோ அவ்வளவு அதிகமாய்ப் பலன் கிட்டும்.. (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1858 அக்டோபர் 31, பக்கம் 8.)

உள்ளாட்சி வரிகளும், தீ விபத்துக்கான காப்பீடு, பல்வேறு நிரந்தர ஊழியர்களுக்கும் தர வேண்டிய ஊதியம், இயந்திர சாதனத்தின் மதிப்பிறக்கம், தொழிற்சாலையில் ஏற்படக்கூடிய மற்றும் பல செலவுகள் - வேலை நேரம் நீண்டு சென்றாலும் குறுகி அமைந்தாலும் இச்செலவுகளில் அதனால் எவ்வித மாற்றமும் இல்லை. உற்பத்தி குறைந்து செல்லும் வரை, இலாபத்தோடு ஒப்பிடுகையில் இச்செலவுகள் வளர்ந்து செல்கின்றன. (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1862 அக்டோபர், பக்கம் 19.)

இயந்திர சாதனத்தின் மதிப்பும் நிலை-மூலதனத்தின் ஏனைய அடக்கக் கூறுகளது மதிப்பும் மறுவுற்பத்திச் செய்யப்படுவதற்கு எவ்வளவு காலமாகும் என்பதை நடைமுறையில் அவற்றின் ஆயுட்காலம் தீர்மானிப்பதில்லை; இந்த இயந்திர சாதனமும் பிறவும் செயல்பட்டு தேய்மானமுற்றுத் தீர்கிற உழைப்பு நிகழ்முறை முழுவதன் கால அளவுதான் அதைத் தீர்மானிக்கிறது. தொழிலாளர்கள் 12 மணி நேரத்திற்கு பதில் 18 மணி நேரம் வேலை வாங்கப்பட்டால், வாரத்திற்கு மூன்று கூடுதல் வேலை-நாள் என்றாகிறது. ஒரு வாரம் ஒன்றரை வாரமாகிப் போகிறது. ஈராண்டு மூன்றாண்டாகிப் போகிறது. இந்த மிகை-நேரத்திற்கு ஊதியமளிக்கப்படா விட்டால், தொழிலாளர்கள் இயல்பான உபரி-உழைப்பு நேரத்தைக் கொடுப்பதோடல்லாமல், மூன்று வாரத்திற்கு ஒரு வாரம் வீதமும், மூன்றாண்டுக்கு ஓராண்டு வீதமும் இலவசமாய்க் கொடுக்கின்றனர். இயந்திர சாதனத்தினது மதிப்பின் மறுவுற்பத்தி இவ்விதம் 50% துரிதமாக்கப்பட்டு முன்னதாகத் தேவைப்பட்டதில் மூன்றிலிரு பங்கு காலத்திலேயே செய்து முடிக்கப்படுகிறது.

இந்தப் பகுப்பாய்விலும் சரி, கச்சாப் பொருட்களின் விலையிலான ஏற்ற இறக்கங்கள் பற்றிய பகுப்பாய்விலும் (அத்தியாயம் VI) சரி, உபரி-மதிப்பின் திரளும் வீதமும் குறிப்பிட்டவையாய் இருப்பதாக அனுமானம் செய்து கொள்கிறோம் - தேவையற்ற சிக்கல்களைத் தவிர்க்கும் பொருட்டே இந்த அனுமானம்.

கூட்டு-வேலையையும் உழைப்புப் பிரிவினையையும் இயந்திர சாதனத்தையும் பற்றி விளக்கியுரைத்த போதே ஒன்றைத் தெளிவாக்கி விட்டோம். அதாவது: பெருவீதப் பொருளுற்பத்தியின் சிறப்பியல்பாய் காணப்படும் உற்பத்திச் சாதனங்களிலான சிக்கனத்துக்கு* (economy) அடிப்படைக் காரணமாய் அமைவது இந்தச் சாதனங்கள் சமுதாய

* (முதல் பாகம், பக்கம் 446-48-பதிப்பாசிரியர்.)

இணைப்பின்றிச் செயல்படுகிற அல்லது சிறு அளவுக்கு மட்டுமே நேரடியாக இணைந்து கூட்டு-வேலை செய்கிற பெருந்திரளான தொழிலாளர்களால் சிறுசிறு பின்னப் பகுதிகளாய் நுகரப்படுவதற்கு பதில் இந்த உற்பத்திச் சாதனங்கள் உற்பத்தி நிகழ்முறையில் கூட்டுத் தொழிலாளியால் பொதுவில் நுகரப்படுகின்றன. ஓரிரு மைய விசையூட்டிகளைக் கொண்டு இயங்கும் ஒரு பெரிய தொழிற்சாலையில் இவ்விசையூட்டிகளுக்காகும் செலவு அவற்றின் குதிரைத்திறனும் செயலெல்லையும் அதிகரிக்கிற அதே விகிதத்தில் அதிகரிக்காது. விசை செலுத்தும் பொறியமைவுக்காகும் செலவு அதனால் இயங்க வைக்கப்படும் இயந்திரங்களின் மொத்த எண்ணிக்கை அதிகரிக்கிற அதே விகிதத்தில் அதிகரிக்காது. இயந்திரத்தின் பொறிச் சட்டத்திற்காகும் செலவு அதன் உறுப்புகளால் அமைந்து இயங்குகிற கருவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் அதே விதத்தில் அதிகரிக்காது. மேலும், உற்பத்திச் சாதனங்களின் குவிப்பு (concentration) காரணமாய் முறையான பட்டறைகளுக்கு மட்டுமல்லாமல், சேமிப்பகம் போன்ற சகலவகைக் கட்டடங்களுக்குமான செலவில் மிச்சம் பிடிக்க முடிகிறது. வெப்பமூட்டுவதற்கும் விளக்குப் போடுவதற்கும் இன்ன பிறவற்றுக்குமான செலவுகளுக்கும் இதுவே பொருந்தும். ஏனைய உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்தவரை பற்பலர் பயன்படுத்துவ தானாலும் சரி, ஒரு சிலரே பயன்படுத்துவதானாலும் சரி, அவற்றில் எந்த மாற்றமும் இல்லை.

உற்பத்திச் சாதனக் குவிப்பிலிருந்தும், பெருவீதத்தில் அவற்றைப் பயன்படுத்துவதிலிருந்தும் எழுகிற இந்தச் சிக்கனங்கள் யாவற்றுக்கும் இன்றியமையாத் தேவையாய் இருப்பது தொழிலாளர்கள் ஓரிடத்தில் குவிக்கப்படுவதும் கூட்டாக வேலை செய்வதும் ஆகும், அதாவது உழைப்பின் சமுதாய இணைவு (Social combination of labour) ஆகும். ஆகவே, இந்தச் சிக்கனமானது, தனித்தனியே ஒவ்வொரு தொழிலாளியின் உபரி-உழைப்பிலிருந்தும் உபரி-மதிப்பு பிறப்பதே போல், உழைப்பின் சமூகத் தன்மையிலிருந்து பிறப்பதாகும். தொடர்ந்து மேம்பாடுகள் செய்ய முடியும், அது அவசியமும் ஆகும் - இந்த மேம்பாடுகளுக்கே கூட சமுதாய அனுபவமும் கூர்ந்த கவனமும்தான் காரணம். இந்த அனுபவத்தையும் கூர்ந்த கவனத்தையும் சாத்தியமாக்குவதும் ஊக்கி வளர்ப்பதும் எதுவென்றால் ஒன்றிணைந்து செயல்படுகிற கூட்டுத் தொழிலாளியைக் கொண்டு நடைபெறும் பெருவீதப் பொருளுற்பத்தியே.

உற்பத்திச் சாதனங்களில் சிக்கனத்துக்கு வழி செய்யும் அந்த இரண்டாவது முக்கியக் காரணிக்கும் இதுவே பொருந்தும். அதாவது உற்பத்தியால் கழிக்கப்படுவதை, கழிவுப் பொருள் எனப்படுவதை அதே தொழிற் கிளையிலோ வேறு கிளைகளிலோ உற்பத்திக்குப் பயன்படும் புதிய அடிக்கூறுகளாக மாற்றியமைப்பதைச் சொல்கிறோம்; கழிவு எனப்படுகிற இதனை உற்பத்திச் சகடத்தில், எனவே திறனுடை நுகர்வு அல்லது தனிப்பட்ட சொந்த நுகர்வில் திருப்பிச் செலுத்தும் நிகழ்முறைகளைச் சொல்கிறோம். இவ்வகையில் மிச்சம் பிடிப்பதும் கூட - பிற்பாடு இதனை இன்னும் நெருங்கிப் பரிசீலிப்போம் - பெருவீதச் சமுதாய உழைப்பின் விளைவுதான். இதனால் இக்கழிவுப் பொருட்கள் அபரிமிதமாய்ப் பெருகி புதிய வர்த்தகப் பொருட்களும் புதிய உற்பத்தி-அடிக்கூறுகளும் ஆகின்றன. பலரும் இணைந்து ஈடுபடும் உற்பத்தியின், இவ்விதம் பெருவீத உற்பத்தியின் கழிவுப் பொருட்கள் என்ற முறையில்தான் இவை உற்பத்தி நிகழ்முறைக்கு முக்கியமானவையாகி, பரிவர்த்தனை மதிப்பின் ஊர்திகளாய் இருந்து வருகின்றன. இந்தக் கழிவுப் பொருட்கள் புதிய உற்பத்தி அடிக்கூறுகளாகப் பயன்படுவதோடு, மீண்டும், மீண்டும் விற்கத் தக்கனவாய் இருக்கிற அளவில் கச்சாப்பொருளுக்காகும் செலவையும் குறைக்கின்றன; எப்படியென்றால் எப்போதுமே இந்தச் செலவில் இயல்பான கழிவும் அடங்கும் - உற்பத்தி நிகழ்முறையின் போது சராசரியாக இழக்கப்படுவதே இயல்பான கழிவெனப்படும். மாறா-மூலதனத்தின் இந்தப் பகுதிக்காகும் செலவு எந்த அளவுக்கு குறைகிறதோ, இலாப வீதம் அந்த அளவுக்கு அதிகரிக்கிறது. (மாறும்-மூலதனத்தின் பருமனும் உபரி-மதிப்பின் வீதமும் குறிப்பிட்டவையெனக் கொள்கிறோம்).

உபரி-மதிப்பு குறிப்பிட்டதாய் இருந்தால், சரக்குகளின் உற்பத்திக்கு அவசியமான மாறா-மூலதனத்தின் மதிப்பைக் குறைப்பதன் மூலம் மட்டுமே இலாப வீதத்தை உயர்த்த முடியும். இச்சரக்குகளின் உற்பத்தியில் மாறா-மூலதனத்திற்குப் பங்கிருக்கும் வரை கருத்துக்குரியதாய் இருப்பது அதன் பயன் மதிப்புதானே தவிர பரிவர்த்தனை-மதிப்பன்று. நூற்பாலையில் வெண்சணலால் உறிஞ்ச முடிகிற உழைப்பளவு அந்த வெண்சணலின் அளவைப் பொறுத்ததே தவிர மதிப்பையன்று - உழைப்பின் உற்பத்தித் திறன், அதாவது தொழில்நுட்ப வளர்ச்சித் தரம் குறிப்பிட்டதாய் இருப்பதாகக் கொண்டு இப்படிச் சொல்கிறோம். இவ்வாறே, ஓர் இயந்திரம் உதாரணமாக மூன்று தொழிலாளர்களுக்கு வழங்கிடும் உதவி அவ்வியந்திரத்தின்

பயன்-மதிப்பைப் பொறுத்ததுதானே தவிர மதிப்பையன்று. தொழில்நுட்ப வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் மோசமான இயந்திரம் விலையுயர்ந்ததாகவும் இன்னொரு கட்டத்தில் நல்ல இயந்திரம் விலைமலிவானதாகவும் இருக்கலாம்.

எடுத்துக்காட்டாக, பருத்திக்கும் நூற்புக்கான இயந்திர சாதனத்துக்கும் செலவு குறைவதன் மூலமாய் ஒரு முதலாளிக்கு அதிக இலாபம் கிடைப்பதானது உழைப்பின் உற்பத்தித் திறன் உயருவதால் ஏற்படும் விளைவாகும் - உற்பத்தித் திறன் இப்படி உயர்வது பருத்திச் சாகுபடியிலும் இயந்திர சாதன உற்பத்தியிலும்தானே தவிர நூற்பாலையில் அல்ல. குறிப்பிட்ட அளவு உழைப்பைப் பொருள் வடிவாக்கவும், இவ்விதம் குறிப்பிட்ட அளவு உபரி-உழைப்பைக் கறக்கவும் உழைப்புச் சாதனங்களுக்காகச் செய்ய வேண்டிய செலவு குறைந்து போகிறது, குறிப்பிட்ட அளவு உபரி-உழைப்பைத் தனதாக்குவதற்காகச் செய்ய வேண்டிய மொத்தச் செலவும் இதனால் குறைந்து போகிறது.

கூட்டு உழைப்பு, அதாவது சமூக வழியில் ஒன்றிணைந்த உழைப்பு உற்பத்தி நிகழ்முறையில் உற்பத்திச் சாதனங்களைக் கூட்டாகப் பயன்படுத்துவதால் செலவு மிச்சமானது பற்றி முன்பே குறிப்பிட்டோம். சுற்றோட்டக் காலத்தைக் குறுக்குவதன் மூலமும் மாறா-மூலதனம் மிச்சமாகிறது (தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சி இங்கு மிக முக்கியப் பொருளாயதக் காரணி ஆகிறது). பிறகு இதைப் பரிசீலிப்போம். இப்போது நாம் தொடர்ச்சியான இயந்திர சாதன மேம்பாடுகளால் விளையும் சிக்கனத்தை முதற்கண் ஆராய்வோம், இந்த மேம்பாடுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்: (1) இயந்திர சாதனத்தின் பிண்டப் பொருளிலான மேம்பாடுகள், உதாரணமாக மரத்துக்கு பதில் இரும்பைப் பயன்படுத்தி இயந்திரம் செய்தல்; (2) பொதுவாக இயந்திரக் கட்டுமானத்தை மேம்படுத்துவதன் மூலம் இயந்திர சாதனத்தை விலைமலிவாக்குதல்; இதனால் ஏற்படும் விளைவு என்னவென்றால் நிலை-மூலதனமாய் இருக்கும் மாறா-மூலதனப் பகுதியின் மதிப்பு பெருவீத உற்பத்தியிலான உழைப்பின் வளர்ச்சியைத் தொடர்ந்து ஓயாமல் வளர்ந்தாலும் கூட, அதே வேகத்தில் வளருவதில்லை;[12] (3) இருக்கிற இயந்திர சாதனங்களையே இன்னும் குறைந்த செலவிலும் இன்னுமதிகப் பயன் திறனோடும் இயங்கச் செய்வதற்கு வழி செய்யும் தனிவித மேம்பாடுகள்; நீராவிக்

12 தொழிற்சாலை நிர்மாணத்திலான முன்னேற்றம் பற்றி யூர் எழுதியிருப்பதைப் பார்க்கவும்.

கொதிகலன்களில் செய்யப்படும் மேம்பாடுகளை இதற்கு உதாரணமாய்க் குறிப்பிடலாம் - பிற்பாடு இது பற்றி இன்னும் விவரமாய்ப் பார்ப்போம்; (4) இன்னுஞ்சிறந்த இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி கழிவுப் பொருள் குறையச் செய்தல்.

குறிப்பிட்ட உற்பத்திக் காலத்தை எடுத்துக் கொள்வோமானால் இயந்திர சாதனத்தின், பொதுவாக நிலை-மூலதனத்தின் தேய்மானத்தைக் குறையச் செய்கிற ஒவ்வொன்றும் தனியொரு சரக்கினை மலிவாக்குவதோடு (எப்படியென்றால் தனிப்பட்ட ஒவ்வொரு சரக்கின் விலையிலும் இந்தத் தேய்மானத்தின் ஈவுப் பங்கு அடங்கியுள்ளது), மூலதனச் செலவீட்டில் இந்த உற்பத்திக் காலத்திற்குரிய ஈவுப் பங்கையும் குறையச் செய்கிறது. மராமத்து வேலையும் இன்ன பிறவும் தேவைப்படுமானால், அப்படித் தேவைப்படுகிற அளவுக்கு இயந்திர சாதனத்திற்கான ஆரம்பச் செலவோடு சேர்த்துக் கணக்கிடப்படுகின்றன. இயந்திர சாதனம் கூடுதலாய் நீடித்திருக்கும் திறன் படைத்ததாய் இருப்பின் அதனால் மராமத்துச் செலவில் ஏற்படும் குறைவு இயந்திர சாதனத்தின் விலையை அந்த அளவுக்குக் குறையச் செய்கிறது.

இவ்வகைச் சிக்கனங்களெல்லாம் ஒன்றிணைந்த உழைப்புக்கு மட்டுமே சாத்தியமாகக் கூடியவை என்றும், அநேகமாய் இன்னும் பெரிய அளவுவீதத்தில் உற்பத்தி செய்வதன் மூலமே இவற்றை அடைய முடியும் என்றும் இங்கேயும் கூட சொல்லப்படலாம். இவ்விதம் இச்சிக்கனங்கள் நேரடி உற்பத்தி நிகழ்முறையில் இன்னும் பெரிய அளவில் உழைப்பின் இணைவைக் கோருகின்றன எனலாம்.

ஆனால் மறு பக்கத்தில் என்ன நடக்கிறது பாருங்கள்: ஓர் உற்பத்திக் கிளையில் எடுத்துக்காட்டாக இரும்பு, நிலக்கரி, இயந்திர சாதன உற்பத்தி, கட்டட நிர்மாணம் போன்ற ஏதேனுமொன்றில் உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்படும் வளர்ச்சி (ஓரளவுக்கு இது அறிவு சார்ந்த உற்பத்திக் களத்தில், குறிப்பாக இயற்கை விஞ்ஞானத்திலும் அதன் நடைமுறைப் பிரயோகத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தோடு தொடர்புடையதாயிருக்கலாம்) ஏனைய தொழிற் கிளைகளில், எடுத்துக்காட்டாக ஜவுளித் தொழிலிலோ வேளாண்மையிலோ உற்பத்திச் சாதனங்களின் மதிப்பும், எனவே அவற்றுக்காகும் செலவும் குறைவதற்கு முன்நிபந்தனையாக விளங்குகிறது. இது கூறாமலே விளங்கக் கூடியதுதான். ஏனெனில் ஒரு தொழிற் கிளையிலிருந்து உற்பத்திப் பண்டமாக வெளிப்படும் சரக்கு இன்னொரு கிளையில்

உற்பத்திச் சாதனமாகப் பிரவேசிக்கிறது. அது மலிவானதா, கிராக்கியானதா என்பது அதனை உற்பத்திச் செய்தளிக்கிற உற்பத்திக் கிளையில் செயல்படும் உழைப்பின் உற்பத்தித் திறனைப் பொறுத்ததாய் உள்ளது. அதே போது அதனை உற்பத்திச் சாதனமாகக் கொண்டு உற்பத்தியாகிற சரக்குகளை விலைமலிவாக்குவதோடு, அதனை ஒரு கூறாய்க் கொண்ட மாறா-மூலதனத்தின் மதிப்பைக் குறைப்பதற்கும், எனவே இலாப வீதத்தை உயர்த்துவதற்குமான ஒரு காரணியாகவும் உள்ளது.

மாறா-மூலதனத்திலான இவ்வகைச் சிக்கனம் தொழில் துறை மேன்மேலும் வளர்ந்து செல்கிறபோது வரப்பெறுவதாகும். இந்தச் சிக்கனத்தின் சிறப்பியல்பு என்னவென்றால், ஒரு தொழிற்கிளையில் இலாப வீதம் உயருவது இன்னொரு கிளையில் உழைப்பின் உற்பத்தித் திறன் வளருவதைப் பொறுத்ததாய் உள்ளது. இங்கேயும் கூட முதலாளி அடைந்திடும் ஆதாயம் சமுதாய உழைப்பினால் - அவரே நேரடியாகச் சுரண்டுகிற தொழிலாளர்களின் உழைப்பினால் அல்ல என்றாலும் - படைக்கப்படுவதேயாகும். முடிவாகப் பார்க்குமிடத்து உற்பத்தித் திறனிலான இந்த வளர்ச்சிக்கு, உற்பத்தியில் ஈடுபடுகிற உழைப்பின் சமூகத் தன்மையும் சமுதாயத்திலான உழைப்புப் பிரிவினையும் அறிவு சார்ந்த உழைப்பு (குறிப்பாக இயற்கை விஞ்ஞானங்களில்) அடைகிற வளர்ச்சியுமே காரணம் என்று தெரிய வரும். இங்கு முதலாளி பயன்படுத்திக் கொள்வது சமுதாய உழைப்புப் பிரிவினையின் முழு அமைப்பிலிருந்தும் விளையும் அனுகூலங்களையே தவிர வேறல்ல. வெளித்துறையில், அதாவது உற்பத்திச் சாதனங்களை முதலாளிக்கு வழங்கிடும் துறையில் உழைப்பின் உற்பத்தித் திறன் அடைகிற வளர்ச்சிதான் அவர் ஈடுபடுத்துகிற மாறா-மூலதனத்தின் மதிப்பை ஒப்பளவில் குறையச் செய்து, இவ்விதம் இலாப வீதத்தை உயரச் செய்கிறது.

இலாப வீதம் உயர இன்னொரு வழியும் உண்டு - மாறா - மூலதனத்தை உற்பத்திச் செய்தளிக்கும் உழைப்பைச் சிக்கனம் செய்வதற்கு பதில் இந்த மாறா-மூலதனத்தைப் பிரயோகிப்பதில் சிக்கனம் செய்தும் இலாப வீதத்தை உயரச் செய்யலாம். தொழிலாளர் குவிப்பும் அவர்களின் பெருவீதக் கூட்டு-வேலையும் மாறா-மூலதனத்தின் மிச்சம் பிடிக்கப் பயன்படுகின்றன. சிறுவீதப் பொருளுற்பத்தியைக் காட்டிலும் பெருவீதப் பொருளுற்பத்திக்கு அதே கட்டட வசதிகளுகாகவும் வெப்பத்துக்கும் வெளிச்சத்துக்கும்

பிறவற்றுக்குமான அதே வசதிகளுக்காகவும் ஒப்பளவில் குறைந்த செலவே ஆகிறது. இயக்கு விசை தொடர்பாகவும் வேலைப் பொறிகள் (working machinery) தொடர்பாகவும் இவ்வாறே சொல்லலாம். இவற்றின் மதிப்பு அறுதியாக உயர்ந்த போதிலும், ஒப்பளவில், அதாவது விரிவடைந்து செல்லும் உற்பத்தியோடும் மாறும் - மூலதனத்தின் பருமன் அல்லது இயங்க வைக்கப்படும் உழைப்புச் சக்தியின் அளவோடும் ஒப்பிடுகையில் குறைகிறது. குறிப்பிட்ட மூலதனம் அதன் உற்பத்திக் கிளையினுள்ளேயே சாதிக்கிற சிக்கனம் என்பது, அனைத்துக்கும் முதலாவதாக, உழைப்பிலான சிக்கனமாகும். அதாவது அதன் தொழிலாளர்களின் ஊதிய உழைப்பைக் குறைப்பதாகும்; மறுபுறம், முன்னதாகக் குறிப்பிட்ட சிக்கனமானது வெளியிலிருப்பவர்களின் ஊதியமிலா உழைப்பை மிகவும் சிக்கனமான வழியில் (அதாவது உற்பத்தியின் அளவுவீதத்தை மாற்றாமலே முடிந்த வரை மிகக் குறைந்த செலவில்) முடிந்தவரை அதிகபட்சமாய்த் தனதாக்குவதில் அடங்கியுள்ளது. இந்தச் சிக்கனமாகனது ஏற்கெனவே கூறியது போல் மாறா-மூலதனத்தின் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனைப் பயன்படுத்திக் கொள்வதைச் சார்ந்ததாய் இராமல், மாறா-மூலதனத்தைப் பிரயோகிப்பதிலான சிக்கனமாகவே இருப்பதால் அது குறிப்பிட்ட உற்பத்திக் கிளைக்குள் கூட்டு-வேலையிலிருந்தும் உழைப்பின் சமூக வடிவத்திலிருந்தும் நேரடியாய் எழுந்தாக வேண்டும்; அல்லது இயந்திர சாதனமும் இன்ன பிறவும் அவற்றின் பயன்-மதிப்பைப் போல் அதே வேகத்தில் அவற்றின் மதிப்பு வளருவதற்கு இடந்தராத ஓர் அளவுவீதத்தில் உற்பத்தியாவதிலிருந்து எழுந்தாக வேண்டும்.

இங்கே மனத்திலிருக்க வேண்டியவை இரண்டு - முதலாவதாக, cஇன் மதிப்பு =0 என்றால் p'=s' ஆகிவிடும், இலாப வீதம் அதிகபட்ச அளவுக்கு உயர்ந்திருக்கும். அதேபோது; இண்டாவதாக, நேரடி உழைப்புச் சுரண்டலுக்கு மிகவும் முக்கியமானது அச்சுரண்டலுக்கு - நிலை-மூலதனமாகவோ கச்சாப் பொருட்களும் துணைப் பொருட்களுமாகவோ - சாதனங்களாய் இருப்பவற்றின் மதிப்பு அல்லவே அல்ல. இயந்திரங்களும் கட்டடங்களும் கச்சாப் பொருட்களும் பிறவுமான' இந்தச் சாதனங்கள் உழைப்பையும் உபரி-உழைப்பையும் பொருள் வடிவாக்குவதற்கான கருவிகளாய் அமைந்து, உழைப்பை உறிஞ்சுவதற்குப் பயன்படுகிறவையாய் உள்ள வரை, இவற்றின் பரிவர்த்தனை-மதிப்பு எதுவாகவும் இருக்கலாம். முடிவாகப் பார்க்குமிடத்து, ஒரு புறம், குறிப்பிட்ட அளவு

உழைப்போடு இணைவதற்குத் தொழில நுட்ப வழியில் அவசியமான இந்தச் சுரண்டல்-சாதனங்களின் அளவும், மறு புறம், அவற்றின் காரியப் பொருத்தமும்தான் இங்கே முக்கியமானவை. (அதாவது சுரமான இயந்திரங்கள் தேவைப்படுவதோடு தரமான கச்சாப் பொருட்களும் துணைப் பொருட்களும் கூட தேவைப்படுகின்றன). இலாப வீதமானது ஓரளவுக்குக் கச்சாப் பொருளின் தரத்தைப் பொறுத்தது. பொருள் தரமாயிருந்தால் கழிவு அதிகமாய் இருக்காது. அப்போது குறிப்பிட்ட அளவு உழைப்பை உறிஞ்சத் தேவையான கச்சாப் பொருளின் அளவும் குறைகிறது. வேலைப் பொறி சமாளிக்க வேண்டிய எதிர்வும் (resistance) குறைந்து போகிறது. இது ஓரளவுக்கு உபரி-மதிப்பிலும் உபரி-மதிப்பு வீதத்திலும் கூட தாக்கம் செலுத்துகிறது. கச்சாப் பொருள் மட்டமாய் இருந்தால் குறிப்பிட்ட அளவு பண்ட உற்பத்திக்குத் தொழிலாளி செலவிட வேண்டிய நேரம் அதிகமாகிறது; கூலி மாறாதிருக்க, இதனால் உபரி-மதிப்பு குறைய நேரிடுகிறது. மறுவுற்பத்தி, மூலதனத் திரட்டல் ஆகியவற்றின் மீதும் இது குறிப்பிடத்தக்க விளைவை ஏற்படுத்துகிறது; இந்த மறுவுற்பத்தியும் திரட்டலும் ஈடுபடுத்தப்படும் உழைப்பின் அளவைக் காட்டிலும் அவ்வுழைப்பின் உற்பத்தித் திறனையே கூடுதலாய்ச் சார்ந்திருப்பதாக முதல் பாகத்திலேயே (பக்கம் 854) தெளிவாக்கினோம்.

ஆகவே, முதலாளியானவர் உற்பத்திச் சாதனங்களில் (means of production) சிக்கனம் செய்வதற்குத் துடியாய்த் துடிப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. இழப்போ கழிவோ இம்மியளவும் ஏற்படக் கூடாதென்றால், உற்பத்திக்கே அவசியமான முறையில் மட்டும் உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டுமென்றால், இது ஓரளவுக்குத் தொழிலாளர்களின் பயிற்சியையும் தேர்ச்சியையும் பொறுத்தது. ஓரளவுக்கு முதலாளி ஒன்றிணைந்த உழைப்பின் மீது செலுத்தும் கட்டுப்பாட்டைப் பொறுத்தது-தொழிலாளர்கள் அவர்களுக்காகவே வேலை செய்து கொள்கிற சமூக நிலையில் இந்தக் கட்டுப்பாடு தேவையற்றதாகிவிடும்; இப்படித்தான் அது ஏற்கெனவே பலன்வீத வேலை முறையில் அநேகமாய்த் தேவையற்றதாகிவிட்டது. சிக்கனத்துக்கான இந்தத் துடிப்பு இதற்கு மாறான வழியிலும் வெளிப்படுகிறது; -தரக் குறைவான உற்பத்தி-அடிக்கூறுகளைப் பயன்படுத்துவதிலும் வெளிப்படுகிறது. மாறும்-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் மாறா-மூலதனத்தின் மதிப்பைக் குறைத்து இலாப வீதத்தை உயரச் செய்வதற்கான முக்கிய வழிகளில் ஒன்றாக இது பயன்படுகிறது. இந்த உற்பத்தி-அடிக்கூறுகளைப் பண்டமாக

மீண்டுவிடும் அவற்றின் மதிப்புக்கும் கூடுதலான விலைக்கு விற்பது மோசடியே தவிர வேறல்ல. இந்த நடைமுறை குறிப்பாக ஜெர்மானியத் தொழில் துறையில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நல்ல சரக்காய் மாதிரிக்கு அனுப்பிவிட்டு, மட்டமானதை அடுத்து அனுப்பினால் தயங்காமல் எல்லாரும் வாங்கிவிடுவார்கள் என்பதே ஜெர்மானியத் தொழில் துறையின் தாரக மந்திரம். என்றாலும், போட்டி தொடர்பாக ஆராய வேண்டிய இவற்றையெல்லாம் இங்கு நாம் பரிசீலிக்கத் தேவையில்லை.

மாறா-மூலதனத்தின் மதிப்பு, அதாவது அதற்காகும் செலவு குறையுமாறு செய்வதன் மூலம் இலாப வீதத்தை இப்படி உயரச் செய்வதற்கும், இது நடைபெறுகிற தொழிற் கிளை என்ன உற்பத்திச் செய்கிறது - சொகுசுப் பண்டங்களா, தொழிலாளர் நுகர்வுக்கான அவசியப் பண்டங்களா, அல்லது பொதுவாக உற்பத்திச் சாதனங்களா - என்பதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை. உற்பத்திப் பண்டம் என்ன என்பது உபரி-மதிப்பு வீதத்தின்மீது தாக்கம் செலுத்துகிற அளவுக்கு மட்டுமே முக்கியமானதாகும். உபரி-மதிப்பானது அடிப்படையில் உழைப்புச் சக்தியின் மதிப்பையே, அதாவது தொழிலாளர்களின் வழக்கமான அவசியப் பண்டங்களின் மதிப்பையே பொறுத்ததாகும். ஆனால் இங்கே உபரி-மதிப்பையும் உபரி-மதிப்பு வீதத்தையும் குறிப்பிட்டவையாகக் கொண்டுள்ளோம். மொத்த மூலதனத்தோடு உபரி-மதிப்புக்குள்ள விகித உறவு - இலாப வீதத்தை நிர்ணயிப்பதான இது இந்நிலைமைகளில் பிரத்தியேகமாய் மாறா-மூலதனத்தின் மதிப்பைப் பொறுத்ததுதானே தவிர எவ்விதத்தும் அதிலடங்கிய கூறுகளின் பயன்-மதிப்பைப் பொறுத்ததன்று.

உற்பத்திச் சாதனங்கள் ஒப்பளவில் விலைமலிவாகும்போதே அவற்றின் மொத்த அறுதி மதிப்பு அதிகமாவதும் கூட சாத்தியம்தான்; எப்படி எனில் உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ந்து, அதோடு கூடவே உற்பத்தியின் அளவு வீதம் பெருகும் போது உற்பத்திச் சாதனங்கள் பிரயோகிக்கப்படுவதன் அறுதியான அளவுவீதமும் அசாதாரணமாய்ப் பெருகுகிறது. பிரயோகத்திலான சிக்கனத்தை எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் முதற்கண் அது உற்பத்திச் சாதனங்கள் ஒருசேர இணைந்து செயல்படும் தொழிலாளர்களின் பொதுவான உற்பத்திச் சாதனங்களாகப் பயன்படுத்தப்படுவதன் விளைவுதான் என்பதை அறியலாம். இதிலிருந்து விளைகிற சிக்கனம் நேரடித் திறனுடை உழைப்பினது சமூகத் தன்மையின் விளைபயனாய்க் காணப்படுகிறது. இரண்டாவதாக இச்சிக்கனம் மூலதனத்துக்கு உற்பத்திச் சாதனங்களைச் செய்தளிக்கும்

துறைகளில் உழைப்பின் உற்பத்தித் திறன் வளருவதன் விளைவுமாகும்; X என்கிற ஒரு முதலாளியிடம் வேலை செய்கிற தொழிலாளர்களை அந்த ஒரு முதலாளிக்கெதிராகவே நிறுத்திப் பார்ப்பதற்கு பதில் மூலதனம் அனைத்திற்கும் எதிராக உழைப்பனைத்தையும் நிறுத்திப் பார்த்தாலும்கூட அப்போதும் இந்தச் சிக்கனமானது சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன்களில் ஏற்படும் வளர்ச்சியின் விளைபயனாகவே விளங்குகிறது. வேறுபாடு ஒன்றே ஒன்றுதான், அதாவது Xஎன்கிற அந்த ஒரு முதலாளி அவரது நிறுவனத்திலான உழைப்பின் உற்பத்தித் திறனிலிருந்து மட்டுமல்லாமல், ஏனைய நிறுவனங்களிலான உழைப்பின் உற்பத்தித் திறனிலிருந்தும் ஆதாயம் அடைகிறார். என்றாலும் முதலாளியின் பார்வையில் அவரது மாறா-மூலதனத்தின் சிக்கனமானது அவரது தொழிலாளிக்கு அறவே அந்நியமான தேவையாக, அத்தொழிலாளியைச் சிறிதும் சாராத ஒன்றாகத் தெரிகிறது. ஆனால், குறிப்பிட்ட பணத் தொகைக்கு முதலாளி வாங்கும் உழைப்பு கூடுதலாய் இருக்கிறதா, குறைவாய் இருக்கிறதா என்பதற்கும் (முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையிலான பரிமாற்றம் முதலாளியின் உள்ளத்திரையில் இப்படித்தான் காட்சியளிக்கிறது) தொழிலாளிக்கும் தொடர்பு இருக்கவே செய்கிறது என்பதை எப்போதும் அறிந்தவர்தான் முதலாளி. உற்பத்திச் சாதனங்களைப் பிரயோகிப்பதிலான இந்தச் சிக்கனம், குறிப்பிட்ட விளைவை மிகக் குறைந்த செலவில் அடைகிற இந்த வழிமுறை - உழைப்பின் வேறெந்த உள்ளாற்றலை விடவும் - மூலதனத்தின் உள்ளார்ந்த ஆற்றலாகவும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கே பிரத்தியேகமானதொரு வழிமுறையாகவும் தோற்றமளிக்கிறது.

இந்தக் கண்ணோட்டம் வியப்புக்குரியதன்று. ஏனென்றால் இது மெய்நடப்புக்கு ஒத்ததாய்த் தோன்றுகிறது; மேலும், மூலதன உறவானது தொழிலாளியை அவரது உழைப்பை ஈடேற்றம் செய்து கொள்வதற்கான சாதனங்களில் கூட சிறிதும் நாட்டமில்லாமல் ஒதுங்கி அந்நியப்பட்ட நிலையில் (alienation) ஆழ்த்துவதோடு, இந்நிலையின் உள் தொடர்பினையும் மூடி மறைத்துவிடுகிறது.

முதலாவதாக, மாறா-மூலதனமாய் அமைந்திடும் உற்பத்திச் சாதனங்கள் முதலாளிக்குச் சொந்தமான பணத்தையே குறிக்கின்றன (கடன் பட்ட ரோமானியரின் உடல் அவருக்குக் கடன் கொடுத்தவரின் பணத்தைக் குறித்ததாக லிங்கே சொன்னார் அல்லவா.* அதே

* (லிங்கே) Théorie des loix civiles ou Principes fondamentaux de la société, இரண்டாம் பாகம், லண்டன்,1767, பகுதி V., அத்தியாயம் XX -ஆங்கிலப்பதிப்பாசிரியர்)

போலத்தான் இதுவும்): இச்சாதனங்களுக்கும் அவருக்கும் மட்டுமே தொடர்பு உண்டு. தொழிலாளியோ நேரடியான பொருளுற்பத்தி நிகழ்முறையில்தான் இவற்றோடு பழக முற்படுகிறார்; அப்படிப் பழகிடும் அளவில் இவற்றை உற்பத்திக்குப் பயன்படும் பயன்-மதிப்புகளாக மட்டுமே, உழைப்பின் சாதனங்களாகவும் இலக்குப் பொருட்களாகவும் மட்டுமே கையாளுகிறார். ஆகவே இந்த உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு அதிகரிப்பதோ குறைவதோ முதலாளியுடனான தொழிலாளியின் உறவில் எவ்வித மாற்றமும் ஏற்படக் காரணமாவதில்லை - அவரது வேலைக்கு இலக்குப் பொருளாய் இருப்பது தாமிரமா இரும்பா என்பது எப்படி இந்த உறவில் எவ்வித மாற்றமும் ஏற்படக் காரணமாவதில்லையோ, அதே போல, ஆனால் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு அதிகரித்து, அதனால் இலாப வீதம் குறையும் போதெல்லாம் முதலாளி இதே விவரத்தை வேறு கோணத்திலிருந்து பார்க்க விரும்புகிறார் - இதைப் பின்னர் பார்ப்போம்.

*இரண்டாவதாக,* இந்த உற்பத்திச் சாதனங்கள் முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் உழைப்பைச் சுரண்டுவதற்கான சாதனங்களாகவும் இருப்பதால், இந்தச் சுரண்டல் சாதனங்கள் ஒப்பளவில் விலையுயர்ந்தவையா விலைமலிவானவையா என்பது குறித்து தொழிலாளிக்குக் கவலை இல்லை. கடிவாளம் விலையுயர்ந்ததா விலை மலிவானதா என்பது குறித்துக் குதிரை கவலைப்படாது அல்லவா, அதே போலத்தான் இதுவும்.

*இறுதியாக* - முன்பே நாம் பார்த்ததுதான் (முதல் பாகம், பக்கம் 452) - மெய்யாகவே தொழிலாளி அவரது உழைப்பின் சமூகத் தன்மையை, அதாவது பொதுவான ஒரு நோக்கத்திற்காக மற்றவர்களது உழைப்போடு அது இணைக்கப்படுவதைத் தமக்கு அந்நியமான ஒன்றாகவே பார்க்கிறார்; இந்த இணைப்பை ஈடேற்றம் செய்யும் சாதனங்கள் பிறருக்குச் சொந்தமான உடைமையாகும்; இந்த உடைமையைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு அவரை யாரும் கட்டாயம் செய்யவில்லையானால், அது விரயமாவது குறித்து அவர் கொஞ்சங்கூட கவலைப்படமாட்டார். தொழிலாளர்களுக்கே சொந்தமாயுள்ள தொழிற்சாலைகளில் நிலைமை நேர்மாறாய் இருக்கக் காணலாம்; ராக்டேலிலுள்ள ஆலைகளை எடுத்துக்காட்டாய்க் குறிப்பிடலாம்.

ஒரு தொழிற்கிளையில் உழைப்பு உற்பத்தித் திறன் மிக்கதாய் இருப்பது வேறொரு தொழிற்கிளையில் உற்பத்திச் சாதனங்கள்

விலைமலிவாவதற்கும் மேம்படுவதற்கும் தூண்டுதலாய் அமைந்து, இலாப வீதத்தை உயரச் செய்யுமானால், சமுதாய உழைப்பின் இந்தப் பொதுத் தொடர்பு தொழிலாளர்களுக்கு அறவே அந்நியமான ஒன்றாகவும், இந்த உற்பத்திச் சாதனங்களை விலைக்கு வாங்குவதும் தனதாக்குவதும் முதலாளியே ஆதலால் அவருக்கு மட்டுமே அக்கறையுள்ள ஒன்றாகவும் ஆகிப் போகிறது - கூறாமலே விளங்கக்கூடியது இது. முதலாளியானவர் தமது தொழிற்கிளையைச் சேர்ந்த தொழிலாளர்கள் உற்பத்தி செய்வதை விலையாகக் கொடுத்தே வேறொரு தொழிற்கிளையைச் சேர்ந்த தொழிலாளர்கள் உற்பத்தி செய்வதை வாங்குகிறார், எனவே தனது தொழிலாளர்களின் உற்பத்தியை இலவசமாய்த் தனதாக்கிக் கொள்வதன் மூலமே, வேறறொரு முதலாளியின் தொழிலாளர்களது உற்பத்தியைப் பயன்படுத்திக் கொள்கிறார் - சுற்றோட்ட நிகழ்முறையும் இன்ன பிறவும் இந்த உண்மையை மூடி மறைத்துக் கொள்கின்றன.

இன்னுமொன்றையும் குறிப்பிடலாம், அதாவது பெருவீதப் பொருளுற்பத்தி முதன்முதலாய் முதலாளித்துவ வடிவிலேயே வளர்ந்தது என்பதால், சரக்குகளை முடிந்தவரை மலிவாக உற்பத்தி செய்யுமாறு நிர்ப்பந்திக்கிற இலாப வேட்டையும் போட்டா போட்டியும் மாறா-மூலதனத்தைப் பயன்படுத்துவதிலான சிக்கனத்தை முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கே உரித்தான ஒன்றாகத் தோன்றச் செய்து, முதலாளிக்குரிய பணியாக்குகின்றன.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது ஒரு புறம் சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன்களது வளர்ச்சியைத் தூண்டுகிறது, அவ்வாறே மறுபுறம் மாறா-மூலதனத்தைப் பயன்படுத்துவதிலான சிக்கனத்தையும் தூண்டுகிறது.

உயிருள்ள உழைப்பின் கலனாய் இருப்பவரான தொழிலாளி தமது உழைப்புக்கான சாதனங்களைச் சிக்கனமாக, அதாவது விவேகமாகவும் அளவாகவும் பயன்படுத்துவதில் நாட்டமில்லாதவராய் அந்நியப் படுவதோடு விவகாரம் முடிந்துவிடவில்லை. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது அதன் முரண்பாடான பகைமைவாய்ந்த தன்மைக்கு முற்றிலும் ஒப்ப, தொழிலாளியின் உயிரும் உடல்நலமும் அளவுமீறிப் பாழாவதையும், அவரது வாழ்க்கை நிலைமைகளின் தரம் சரிந்து வீழ்வதையும் மாறா-மூலதனத்தைப் பயன்படுத்துவதிலான சிக்கனமாக, எனவே இலாப வீதத்தை உயர்த்தும் வழிவகையாகக் கொள்ளும் நிலைக்குப் போய்விடுகிறது.

தொழிலாளி தனது வாழ்நாளில் பெரும் பகுதியைப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் செலவிடுகிறார். எனவே இந்நிகழ்முறையின் நிலைமைகள் பெரிய அளவுக்கு அவரது முனைப்பான வாழ்வு நிகழ்முறையின் நிலைமைகளாகவும், அதாவது அவரது வாழ்க்கை நிலைமைகளாகவே அமைந்துவிடுகின்றன. இந்த வாழ்க்கை நிலைமைகளிலான சிக்கனம் இலாப வீதத்தை உயர்த்துவதற்கான வழிமுறைகளில் ஒன்றாகும். இதனால்தான், முன்பே நாம் பார்த்தது போல மிகையுழைப்பு, அதாவது தொழிலாளியை மாடாய் உழைக்கச் செய்வது மூலதனத் தற்பெருக்கத்தை, உபரி-மதிப்பு உற்பத்தியை முடுக்கிவிடுவதற்கான ஒரு வழியாகிறது.* இந்தச் சிக்கனத்தை முன்னிட்டு என்னவெல்லாம் செய்யப்படுகிறது பாருங்கள்: சுகாதாரக் கேடுகள் மலிந்த குறுகலான கூடங்களில் தொழிலாளர்களை நெரிசலாய் நுழைக்கிறார்கள் - இதை இடவகைச் சிக்கனம் என்கிறார் முதலாளி. பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கருவிகளுக்கு வழி செய்யாமலே இந்தக் கூடங்களில் ஆபத்தான இயந்திரங்களை அடைசலாய் வைத்து இயங்கச் செய்கிறார்கள். இயல்பாகவே உடல்நலத்துக்குத் தீங்கு பயப்பவையாகவோ ஆபத்துகள் நிறைந்தவையாகவோ இருக்கும் உற்பத்தி நிகழ்முறைகளில் (உதாரணமாய் சுரங்கத் தொழிலிலும் பிறவற்றிலும்) பாதுகாப்பு ஏற்பாடுகளைப் புறக்கணிக்கிறார்கள். இந்நிலையில், உற்பத்தி நிகழ்முறையை மனிதத் தன்மை வாய்ந்ததாகவோ, உடன்பாடானதாகவோ, குறைந்தது சகிக்கக் கூடியதாகவோ அமைத்துத் தருவதற்கு எவ்வித ஏற்பாடும் செய்யப்படாமலிருப்பது பற்றி சொல்லவே வேண்டாம். இதையெல்லாம் அர்த்தமற்ற வீண் செலவாகவே முதலாளி கருதுவார். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது யாவற்றிலும் கருமித்தனமாய் நடந்து கொண்ட போதிலும் மானுடப் பொருளை மட்டும் ஊதாரித்தனமாய் செலவழிக்கிறது. இதே போலத்தான் அது வர்த்தகத்தின் வாயிலாக உற்பத்திப் பண்டங்களை வினியோகம் செய்கிற முறையின் மூலமும் போட்டா போட்டியின் மூலமும் பௌதிகச் செல்வாதாரங்களைக் கண்மூடித்தனமாய் வீணடிக்கிறது; தனியொரு முதலாளிக்கு ஆதாயமாகப் பெற்றுத் தருவதைச் சமுதாயத்திற்கு ஏற்படும் கொடிய இழப்பாக்கிவிடுகிறது.

உயிருள்ள உழைப்பை இன்றியமையாக் குறைந்தபட்ச அளவில் மட்டும் நேரடியாக ஈடுபடுத்துவதும் உழைப்பின் சமுதாய உற்பத்தித்

* முதல் பாகம், பக்கம் 314-423 - பதிப்பாசிரியர்

திறனை சுரண்டுவதன் மூலம் ஒரு சரக்கின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பை ஓயாமல் குறுக்குவதும், உயிருள்ள உழைப்பை நேரடியாக ஈடுபடுத்துவதில் இவ்விதம் முடிந்தவரை அதிகபட்சமாய் சிக்கனம் செய்வதும் மூலதனத்தின் போக்காகும். இவ்வாறே மூலதனத்திற்குள்ள மற்றொரு போக்கு இந்த உழைப்பை - இன்றியமையாக் குறைந்தபட்ச அளவாகக் குறைக்கப்பட்டுவிட்ட இதனை - மிகவும் சிக்கனமான நிலைமைகளில் வைத்து வேலை வாங்குவதாகும், அதாவது ஈடுபடுத்தப்படும் மாறா-மூலதனத்தின் மதிப்பைக் குறைந்தபட்ச அளவாகச் சுருக்குவதாகும். சரக்குகளின் மதிப்பை நிர்ணயிப்பது அவற்றில் அடங்கியுள்ள அவசிய உழைப்பு நேரம்தானே தவிர முழு உழைப்பு நேரமும் அல்ல என்றால், இந்த நிர்ணயிப்பு முறையை மூலதனம்தான் முதலில் மெய்நடப்பாக்குகிறது, அடுத்து உடனே குறிப்பிட்ட சரக்கின் உற்பத்திக்கு சமூக வழியில் அவசியமான உழைப்பைக் குறைத்துச் செல்ல ஓயாது முனைகிறது. ஆகவே, சரக்கின் உற்பத்திக்குத் தேவையான உழைப்பின் ஒவ்வொரு பகுதியையும் குறைந்தபட்ச அளவாகக் குறுக்குவதன் வாயிலான சரக்கின் விலை குறைந்தபட்ச அளவாகச் சுருக்கப்படுகிறது.

மாறா-மூலதனத்தைப் பயன்படுத்துவது தொடர்பான சிக்கனத்தில் ஒரு வேறுபாடு இருப்பதை நாம் புரிந்து கொண்டாக வேண்டும். ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் அளவும், அதோடு அம்மூலதன-மதிப்பின் மொத்தத் தொகையும் அதிகரிப்பது முதற்கண் எதைக் குறிக்கும் என்றால், ஒரே கையில் இன்னுமதிக மூலதனம் குவிவதையே, ஆயினும், தனியொருவர் ஈடுபடுத்தும் மூலதனத் திரள் இப்படி அதிகமாவதுதான் (இது இப்படி அதிகமாகும் போது தொழிலாளர் தொகை அறுதியாக அதிகரித்தாலும் ஒப்பளவில் குறைவதே வழக்கம்) மாறா-மூலதனத்திலான சிக்கனத்திற்கு வழி செய்கிறது. தனியொரு முதலாளியை எடுத்துக் கொண்டால் அவசிய மூலதன முதலீட்டின், முக்கியமாய் அதன் நிலை-மூலதனப் பகுதியின் பரிமாணம் அதிகரிக்கக் காண்கிறோம்; ஆனால் மூலப்பொருட்களது திரளோடும் சுரண்டப்படுகிற உழைப்போடும் ஒப்பிடுகையில் இம்மூலதனத்தின் மதிப்பு குறையக் காண்கிறோம்.

ஒரு சில எடுத்துக்காட்டுகளைக் கொண்டு இப்போது இதை விளக்குவோம். கடைசியாய்க் குறிப்பிட்ட சிக்கனத்திலிருந்து - தொழிலாளியின் வாழ்க்கை நிலைமைகளாகவும் அமைந்திடும் உற்பத்தி நிலைமைகளிலான சிக்கனத்திலிருந்து தொடங்குவோம்.

## II. தொழிலாளர் நலனைப் பலியிட்டு வேலை நிலைமைகளில் சிக்கனம் செய்தல்

*நிலக்கரிச் சுரங்கங்கள், இன்றியமையாச் செலவிடுகள் புறக்கணிக்கப்படுதல்:* 'நிலக்கரி அதிபர்களிடையிலும் சுரங்க உடைமையாளர்களிடையிலும் கடும் போட்டி நிலவுவதால்..... கண்கூடான பௌதிக இடர்பாடுகளை சமாளிப்பதற்குப் போதுமானதற்கு மேல் சல்லிக்காசும் செலவு செய்யப்படுவதில்லை. நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களிடையே - செய்யப்பட வேண்டிய வேலைக்குத் தேவையானதைக் காட்டிலும் வழக்கமாய் அதிக எண்ணிக்கையிலிருக்கும் இவர்களிடையே - கடும் போட்டி நிலவுவதால் இவர்கள் பேராபத்தையும் மிகக் கொடிய விளைவுகளுக்கு ஆளாக வேண்டிய நிலையையும் மனமுவந்து ஏற்றுக் கொள்வார்கள். சுற்றுவட்டாரத்திலிருக்கிற விவசாயக் குடிகளுக்குக் கிடைப்பதைக் காட்டிலும் சற்றே கூடுதலாய்க் கூலி கிடைப்பது இதற்கு ஒரு காரணம்; இவர்கள் இத்தொழிலில் தமது குழந்தைகளையும் இலாபகரமாய் பயன்படுத்திக் கொள்ள முடிவது மற்றுமொரு காரணம். இந்த இரட்டைப் போட்டி காரணமாகவே.....ஏராளமான சுரங்கக் குழிகளில் வடிகால் வசதியும் காற்றோட்ட வசதியும் அரைகுறையாகவே செய்யப்பட்டுள்ளன; பலவற்றில் சுரங்கப் பாதைகள் சரிவர அமைக்கப்படாதுள்ளன, கருவிகள் மோசமாயுள்ளன, தகுதி வாய்ந்த பொறியாளர்கள் இல்லை. இடைவழிகளும் வாகன வழிகளும் சரிவர நிர்மாணிக்கப்படாமலும் செப்பனிடப்படாமலும் உள்ளன. இதனால் உயிர்ச் சேதமும் அங்கச் சிதைவும் உடல்நலக்கேடும் உண்டாகின்றன. இது தொடர்பான புள்ளி விவரங்கள் நம்மைத் திடுக்கிட வைப்பவையாய் இருக்கின்றன.. (நிலக்கரிச் சுரங்கங்களிலும் ஏனையவற்றிலுமான குழந்தையுழைப்பு பற்றிய முதல் அறிக்கை, 1829 ஏப்ரல் 21, பக்கம் 102.) 1860இல் ஆங்கிலேய நிலக்கரிச் சுரங்கங்களில் சராசரியாக வாரந்தோறும் உயிர்ப் பலியானோர் தொகை 15 ஆக இருந்தது. 1852 முதல் 1861 வரையிலான பத்தாண்டு காலத்தில் மொத்தம் 8,466 பேர் உயிர்ப்பலியானதாக நிலக்கரிச் சுரங்க விபத்துகள் பற்றிய அறிக்கை (1862, பிப்ரவரி 6) தெரிவிக்கிறது. இருப்பினும் இந்த எண்ணிக்கை மிகக் குறைவானதென்பதை அந்த அறிக்கையே ஒப்புக் கொள்கிறது. முதல் சில ஆண்டுகளில் ஆய்வாளர்கள் அப்போதுதான் நியமிக்கப் பட்டிருந்ததாலும், அவர்களது ஆய்வுக்குரிய வட்டங்கள் மிக விரிவாய் இருந்ததாலும் பெருந்தொகையான விபத்துகளும் சாவுகளும் அறிக்கையிடப்படவே இல்லை. இன்றுங்கூட விபத்துகள்

ஏராளமாய் நிகழவே செய்கின்றன என்றாலும், ஆய்வாளர்களின் தொகை போதாக் குறையானதாகவும் அவர்களது அதிகாரங்கள் வரம்புக்குட்பட்டவையாகவும் இருக்கின்றன என்றாலும், ஆய்வுமுறை புகுத்தப்பட்ட பின் விபத்துகளின் எண்ணிக்கை கணிசமாய்க் குறைந்திருப்பதே முதலாளித்துவச் சுரண்டலின் இயற்கைப் போக்கைக் காட்டுவதாய் உள்ளது. இந்த நரபலிக் கொடுமைகளுக்கு மிக முக்கியக் காரணம் நிலக்கரிச் சுரங்க அதிபர்களின் இழிந்த பேராசையே. சான்றாகச் சொல்வதானால், பெரும்பாலும் இவர்கள் ஒரே ஒரு சுரங்கப் பாதை மட்டுமே அமைத்துக் கொடுக்கிறார்கள். இதனால் உருப்படியான காற்றோட்ட வசதி இல்லாமல் போய்விடுவதோடு, இந்த ஒரு பாதையும் அடைப்பட்டு விடும் போது தப்புதற்கு வழியே இல்லாது போகிறது.

சுற்றோட்ட நிகழ்முறையையும் போட்டியிலான அத்து மீறல்களையும் ஒதுக்கித் தள்ளி விட்டு முதலாளித்துவப் பொருளுற்பத்தியை மட்டும் தனித்துப் பார்ப்போமானால், அது சரக்குகளில் சேர்க்கப்படும் பொருள்வடிவான உழைப்பை மிகவும் சிக்கனமாய்ப் பயன்படுத்தக் காண்கிறோம். ஆனால் வேறெந்த பொருளுற்பத்தி முறையைக் காட்டிலும் அதுவே எவ்வித தயக்கமோ கலக்கமோ இல்லாமல் மனிதப் பிறவிகளை, உயிருள்ள உழைப்பை விரயம் செய்கிறது. இரத்தத்தையும் சதையையும் மட்டுமல்ல, நரம்புகளையும் மூளையையும்கூட பாழாக்குகிறது. இந்த வரலாற்றுச் சகாப்தத்தில் - மனித சமுதாயத்தை உணர்வுபூர்வமாய்ப் புனரமைப்பதற்கு நேர்முற்பட்டதாகிய இந்தச் சகாப்தத்தில் - உண்மையில் தனிமனித வளர்ச்சியை மிகப் பெருமளவில் வீணடித்துப் பாழ்படுத்துவதன் மூலமே பொதுவான மனித குல வளர்ச்சி நிகழவும் தொடரவும் வழி செய்யப்படுகிறது. இங்கு நாம் பரிசீலித்து வருகிற சிக்கனமெல்லாம் உழைப்பின் சமூகத் தன்மையிலிருந்தே எழுவதாகையால், தொழிலாளர்களின் உயிரும் உடல்நலமும் இப்படிப் பாழாவதற்கு உண்மையில் உழைப்பின் இந்த நேரடிச் சமூகத் தன்மையேதான் அடிகோலுகிறது. தொழிற்சாலை ஆய்வாளர் ஆர்.பேக்கர் எழுப்பும் கேள்வி இங்கு மிகவும் பொருத்தமானதொன்று: 'இப்பிரச்சினை முழுவதுமே அக்கறையோடு பரிசீலிக்க வேண்டியது. பெருந்திரளானோர் ஓரிடத்தில் சேர்ந்து உழைப்பதால் சின்னஞ்சிறார்கள் இப்படி உயிர்ப் பலிக்கு, ஆளாவதைத் தவிர்ப்பதற்கு மிக்சிறந்த வழியென்ன?. (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1863 அக்டோபர், பக்கம் 157.)

*தொழிற்சாலைகள்:* முறையான தொழிற்சாலைகளிலும் கூட தொழிலாளர்களின் இடர்காப்பையும் வசதியையும் உடல்நலத்தையும் பேணுவதற்கு அவசியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் புறக்கணிக்கப்படுவது பற்றி இங்கு பரிசீலிக்கிறோம். ஆலைத் தொழிலாளர்களில் காயமுற்றோரையும் கொல்லப்பட்டோரையும் தெரிவிக்கும் சேதப் பட்டியல்களில் பெரும்பகுதிக்கு இந்தப் புறக்கணிப்புதான் காரணம் (பார்க்கவும்: வருடாந்தரத் தொழிற்சாலை அறிக்கைகள்). இட வசதி, காற்றோட்ட வசதி போன்றவை இல்லாத நிலையையும் இங்குக் குறிப்பிடலாம்.

கிடைமட்ட சுரங்கப் பாதைகளில் பாதுகாப்புக் கருவிகள் பொருத்துவது தொடர்பான சட்ட விதிகளுக்கு மிகப் பல ஆலையதிபர்களிடமிருந்து எழுந்த எதிர்ப்பு குறித்து 1855 அக்டோபரிலேயே லியொனார்டு ஹார்னர் குறைபட்டுக் கொண்டார். அடிக்கடி நிகழ்ந்த விபத்துகள் - இவற்றில் பலவும் உயிர்பலி கொண்டவை - ஆபத்தின் கடுமையை அவ்வப்போது புலப்படுத்தி வந்தன என்றாலும், இந்தப் பாதுகாப்புக் கருவிகள் விலையுயர்ந்தவையோ வேலைக்கு இடையூறானவையோ அல்ல என்றாலும், அவர்கள் இப்படி எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1855 அக்டோபர், பக்கம் 6.) இவற்றுக்கும் ஏனைய சட்ட விதிகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்த இந்தத் தொழிலதிபர்களுக்கு ஊதியம் பெறாத அமைதிக் காப்பு நடுவர்கள் பகிரங்கமாகவே முட்டுக்கொடுத்தார்கள். வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டிய இந்த நடுவர்களே பெரும்பாலும் ஆலையதிபர்களாகவோ ஆலையதிபர்களின் நண்பர்களாகவோ இருந்தார்கள். அவர்கள் வழங்கிய தீர்ப்புகளும் அதற்கேற்பவே அமைந்தன. இந்தக் கனவான்கள் எப்படித் தீர்ப்பு வழங்கினார்கள் என்பதை உயர்நிலை நீதிபதி கேம்ப்பெல் வெளிப்படுத்தினார். இப்படி வழங்கப்பட்ட ஒரு தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டைப் பரிசீலிக்கையில் அவர் சொன்னார்: இத்தீர்ப்பு நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தை ரத்து செய்வதாகுமே தவிர, அச்சட்டத்தை விளக்குவதாகாது. (மேலது, பக்கம் 11). பல தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு உரிய எச்சரிக்கை தராமலே இயந்திர சாதனத்தைத் திடுமென இயக்கத் தொடங்கும் நிலை இருப்பதாக இதே அறிக்கையில் ஹார்னர் சொல்கிறார். இயந்திர சாதனம் இயங்காமல் ஓய்ந்திருக்கிற போதும் அதில் ஏதாவது செய்து கொண்டே இருக்க நேரிடுவதால் சில கரங்களும் விரல்களும் அதில் ஊடாடிக் கொண்டிராத நேரமேயில்லை.

எச்சரிக்கைக்கு ஒரு சமிக்ஞை கூட இல்லாத காரணத்தாலேயே விபத்துகள் ஓயாது நிகழ்கின்றன (மேலது, பக்கம் 44). அப்போது ஆலையதிபர்கள் தொழிற்சாலைச் சட்டத்தை எதிர்ப்பதற்காக ஒரு தொழிற் சங்கம் அமைத்தார்கள், தொழிற்சாலைச் சட்டங்களில் திருத்தம் செய்யக் கோருகிற தேசிய சங்கம் என்று அதற்குப் பெயரிட்டார்கள், மான்செஸ்டரிலிருந்து இச்சங்கம் இயங்கியது. தொழிற்சாலை ஆய்வாளர்களால் கூண்டிலேற்றப்பட்ட சங்க உறுப்பினர்களின் சட்டச் செலவுகளைச் சமாளிக்கவும், அவர்களது வழக்குகளைச் சங்கத்தின் சார்பில் நடத்தவும் ஒரு குதிரைத் திறனுக்கு 2 ஷில்லிங் வீதம் நன்கொடை வசூலித்து இச்சங்கமானது £50,000க்கு மேல் நிதி திரட்டியது. இதற்கெல்லாம் என்ன குறிக்கோள் தெரியுமா? இலாபத்தின் பொருட்டு செய்கையில் சாகடிப்பது கொலையாகாது* என்று நிரூபிப்பதுதான். ஸ்காட்லாந்துக்கான தொழிற்சாலை ஆய்வாளர் சர் ஜான் கின்கயிடு கிளாஸ்கோவிலிருக்கும் ஒரு நிறுவனத்தைப் பற்றிச் சொல்கிறார். இந்நிறுவனம் தன் தொழிற்சாலையில் கழிவாய்க் கிடைத்த இரும்புச் சீவலைப் பயன்படுத்தி £9 ஷி1 செலவில் தன் இயந்திர சாதனம் அனைத்துக்கும் காப்புக் கவசமிட்டதாம். இந்நிறுவனம் ஆலையதிபர் சங்கத்தில் சேர்ந்திருக்குமானால், அதன் 110 குதிரைத் திறனுக்கும் £11, அதாவது காப்புக் கவசங்களுக்கான மொத்தச் செலவை விடவும் அதிகமாகவே செலுத்த வேண்டியதாகி இருக்கும். ஆனால் இத்தகைய காப்புக் கவசங்களை அமைக்க ஆணையிடுகிற சட்டத்தை எதிர்ப்பதற்கென்று சொல்லியே 1854இல் மேற்குறிப்பிட்ட தேசியச் சங்கம் அமைக்கப்பட்டது. 1844 முதல் 1854 வரை ஆலை அதிபர்கள் இச்சட்டத்தைக் கண்டு கொள்ளவேயில்லை. பிறகு, பாமர்ஸ்டன் கட்டளையிட்டதன் பேரில் தொழிற்சாலை ஆய்வாளர்கள் ஆலையதிபர்களுக்குத் தெரியப்படுத்தினார்கள். சட்டம் இனிமேல் கண்டிப்பாக அமல் செய்யப்படும் என்று. ஆலையதிபர்கள் உடனே சங்கம் கண்டார்கள். சங்கத்தின் முக்கிய உறுப்பினர்களில் பலரும் அமைதிக் காப்பு நடுவர்களாகவும் இருந்தனர்; அதாவது சட்டத்தை அமல் செய்யும் பொறுப்பில் இருந்தனர். 1855 ஏப்ரலில் புதிய உள்துறை அமைச்சரான சர் ஜார்ஜ் கிரே ஒரு சமரசத் தீர்வுக்கு ஆலோசனை கூறினார். இதன்படி ஆட்சியானது பெரும்பாலும் பெயரளவிலான காப்புக் கருவிகளையே போதுமென்று ஏற்றுக்கொண்டு விடும். சங்கமானது இதையுங்கூட வெறுப்பாய் நிராகரித்தது. பிரபலப்

* ஆசிரியர் இங்கு குறிப்பிடுவது 1657இல் இங்கிலாந்தில் வெளிவந்த "சாகடிப்பது கொலையாகாது" எனும் பிரசுரத்தையே. இப்பிரசுரத்தை எழுதியவர் சமனப்படுத்தியான எட்வர்டு செக்ஸ்பி ஆவார் - ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

பொறியாளர் வில்லியம் ஃபேர்பெயிர்ன் பல்வேறு வழக்குகளிலும் சிக்கனக் கோட்பாட்டுக்கும் மூலதனத்தின் மீறப்பட்ட சுதந்தரத்துக்கும் ஆதாரவாகத் தமது பெரும்புகழையும் தனித் திறனையும் பயன்படுத்தி வாதிட்டார். தொழிற்சாலை ஆய்வகத்தின் தலைவர் லியோனார்டு ஹார்னரை ஆலையதிபர்கள் கருத்துக்கு எட்டக் கூடிய ஒவ்வொரு வழியிலும் இன்னலுக்கும் இழிந்த அவதூறுக்கும் ஆளாக்கினார்கள்.

கிடைமட்டச் சுரங்கப் பாதைகள் தரைக்கு மேல் ஏழடிக்கும் கூடுதலான உயரத்தில் இருக்கவில்லையென்றால் 1844ஆம் வருடத்திய சட்டம் அவற்றுக்குக் காப்புக் கருவிகள் ஏதும் அமைக்கச் சொல்லவில்லை என்பதாக அரசப் பேராய நீதிமன்றத்திடமிருந்து (Court of Queen's Bench) ஒரு பேராணையைப் பெறும் வரை ஆலையதிபர்கள் ஓய்ந்தார்களில்லை. முடிவில் அவர்கள் 1856இல் அப்போதைய நிலைமையில் தங்களுக்கு முழு நிறைவு அளிக்கக்கூடிய நாடாளுமன்றச் சட்டத்தை இயற்றச் செய்வதில் வெற்றி கண்டார்கள்; இதற்குப் பெருந்துணை புரிந்தவர் மத வேடதாரி வில்சன் பேட்டன் ஆவார் - சமயப் பற்றை ஆரவாரமாய் வெளிப்படுத்திக் கொண்டே பண முதலைகளுக்கு இத்தகைய சேவை புரிந்திட எப்போதும் சித்தமாய் இருக்கும் அந்த பக்திப் பழங்களில் இவரும் ஒருவர். இந்தப் புதிய சட்டமானது தொழிலாளர்களுக்கு இருந்த தனிப் பாதுகாப்பை யெல்லாம் நடைமுறையில் பறித்துக் கொண்டுவிட்டது, இயந்திர விபத்துகளால் ஏற்படும் காயங்களுக்கு அவர்கள் இழப்பீடு கோர விரும்பினால் சாதாரண நீதி மன்றங்களை அணுகலாம் என்று கூறிவிட்டது. (இது, இங்கிலாந்தில் சட்ட வழக்காடுவதற்கு ஆகும் பெருஞ் செலவைக் கருத்தில் கொண்டால், கேலிக்கூத்தே அல்லாமல் வேறொன்றுமல்ல). இதெல்லாம் போதாதென்று, இந்தச் சட்டம் நுட்ப நயம் வாய்ந்த சரத்தின் மூலம் நிபுணர்களது சாட்சியத்துக்கு வழிசெய்து, வழக்கில் ஆலையதிபர்கள் தோல்வியுற அநேகமாய் வாய்ப்பே இல்லாத படி செய்துவிட்டது. விபத்துகளின் எண்ணிக்கைத் துரிதமாய்ப் பெருகியதே இதனால் கண்ட பயன். 1858 மே முதல் அக்டோபர் வரையிலான ஆறு மாத காலத்தில் முந்தைய அரையாண்டுடன் ஒப்பிடுமிடத்து விபத்துகள் 21% அதிகரித்ததாக ஆய்வாளர் பேக்கர் அறிக்கையளித்தார். இந்த விபத்துகளில் 36.7 சதவீதத்தைத் தவிர்த்திருக்க முடியும் என்றும் கருத்து தெரிவித்தார். 1845, 1846 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 1858, 1859 ஆண்டுகளில் விபத்துகளின் எண்ணிக்கை கணிசமாய்க் குறைந்து விட்டது மெய்தான். ஆய்வாளர்களின் பார்வைக்குட்பட்ட தொழிற் கிளைகளில்

தொழிலாளர் தொகை 20% அதிகரித்து விட்டாலும் விபத்துகளின் எண்ணிக்கை மெய்யாகவே 29% குறைந்து விட்டது. ஆனால் இதற்கு என்ன காரணம்? இந்தக் கேள்விக்கு இப்போது (1865) விடை தெரிந்துவிட்டது: காப்புக் கருவிகள் பொருத்தப்பட்டு விட்ட புதிய இயந்திர சாதனம் புகுத்தப்பட்டதே முதற் பெரும் காரணம். இந்தக் கருவிகளுக்காகச் கூடுதலாய் செலவேதும் செய்ய வேண்டியதில்லையாதலால் ஆலையதிபரும் எதிர்ப்பு தெரிவிக்க வில்லை. மற்றுமொரு காரணமும் உண்டு; கையிழந்த தொழிலாளர்கள் சிலர் வழக்காடி இழப்பீடாகப் பெருந்தொகைகள் பெறுவதில் வெற்றி கண்டார்கள், இந்தத் தீர்ப்புகளை உச்ச நீதிமன்றங்களும் கூட ஏற்றுக் கொண்டன. (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1861 ஏப்ரல் 30, பக்கம் 31, மற்றும் 1862 ஏப்ரல், பக்கம் 17.)

இந்தச் சிக்கனங்கள் எல்லாம் இயந்திர சாதனங்களோடு வேலை செய்வதிலும் அவற்றைச் செயல்பட வைப்பதிலும் இருக்கும் அபாயங்களிலிருந்து தொழிலாளர்களின் (இவர்களில் பலரும் சிறுவர் சிறுமியர்) உயிரையும் உறுப்புகளையும் பாதுகாப்பதற்கென அமைந்த காப்பு ஏற்பாடுகளில் செய்யப்படும் சிக்கனங்கள்.

**பொதுவாக மூடியடைத்த இடங்களில் நடைபெறும் வேலை:** இட வசதியிலும், எனவே கட்டடங்களிலும் சிக்கனம் செய்யப்படுவதால் எந்த அளவுக்குத் தொழிலாளர்கள் நெரிசலாய் அடைந்திருக்க வேண்டியதாகிறது என்பதை நன்கறிவோம். இதோடு காற்றோட்டச் சாதனங்களிலான சிக்கனம் வேறு சேர்ந்து கொள்கிறது. இவ்விரு சிக்கனங்களும், மற்றும் நீண்ட வேலை நேரமும்தான் சுவாச உறுப்புகளிலான நோய்கள் ஏகமாய்ப் பெருகுவதற்கும், எனவே மரண வீதம் அதிகரிப்பதற்கும், காரணமாகின்றன. பின்வரும் சான்றுகள் பொதுச்சுகாதாரம் பற்றிய அறிக்கைகள், ஆறாம் அறிக்கை, 1863 என்பதிலிருந்து எடுத்துத் தரப்படுகின்றன. இவ்வறிக்கையைத் தொகுத்தவர் முதல் பாகத்திலேயே நமக்குப் பரிச்சயமாகி விட்ட டாக்டர் ஜான் சைமன்.

தொழிலாளர்கள் இணைந்து வேலை செய்வதும் அவர்களது கூட்டு-வேலையுமே இயந்திரங்களின் பெருவீதப் பிரயோகத்திற்கும், உற்பத்திச் சாதனக் குவிப்பிற்கும், அவற்றைப் பயன்படுத்துவதில் சிக்கனத்திற்கும் இடமளிக்கின்றன என்பதை அறிவோம். அதே போலத்தான் அடைத்த இடங்களில் இப்படிப் பெருந்திரளாய்க்கூடி வேலை செய்வது, தொழிலாளியின் உடல்நலத் தேவைகளைக்

காட்டிலும் பண்ட உற்பத்தி வேலைகளை எளிதாக்குவதே முக்கியமாய்க் கொள்ளப்படும் நிலைமைகளில் வேலை செய்வது - அதாவது பெருந்திரளானோர் ஒரே பட்டறையில் குவிக்கப்படுவது - ஒரு புறம் முதலாளிக்கு இன்னுமதிக இலாபம் கிடைப்பதற்கான ஆதாரம் ஆகிறது. இதுவே மறுபுறம் தொழிலாளர்களின் உயிரும் உடல்நலமும் பாழாவதற்கான காரணமும் ஆகிறது - வேலை நேரத்தைக் குறுக்கியும் தனிவித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தும் இதனைத் தடுத்து நிறுத்தாமல் போனால் இப்படித்தான் நிகழும்.

டாக்டர் சைமன் ஏராளமான புள்ளி விவரங்களை ஆதாரமாய்க் காட்டி பின்வரும் விதியை வகுத்துரைக்கிறார்: .மற்றவை மாறாதிருக்க, கூடி வேலை செய்ய வேண்டிய எந்தவோர் உள்ளரங்கத் தொழிலினாலும் ஒரு வட்டத்தைச் சேர்ந்த மக்கள் எவ்வளவுக்கு எவ்வளவு ஈர்க்கப்படுகிறார்களோ, நுரையீரல் நோய்களால் அவ்வட்டத்தில் ஏற்படும் மரண வீதம் அவ்வளவுக்கு அவ்வளவு அதிகரிக்கும். (பக்கம் 23). காரணம் காற்றோட்ட வசதி இன்மையே. 'இங்கிலாந்து முழுவதிலும் அநேகமாய் இந்த விதிக்கு விலக்கே இல்லை என்று சொல்லி விடலாம். பெரும் உள்ளரங்கத் தொழில் இடம் பெற்றிருக்கிற ஒவ்வொரு வட்டத்திலும் தொழிலாளர் மரண வீதம் அதிகரித்துச் செல்வது, அவ்வட்டம் முழுவதற்குமான இறப்புக் கணக்கை உயர்த்திவிடுகிறது; அங்கே நுரையீரல் நோய் குறிப்பிடத்தக்க அளவுக்கு மிகையாய் மலிந்திருப்பதே காரணம். (பக்கம் 23).

மூடியடைத்த இடங்களில் நடைபெறும் தொழிலகங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் இறப்பு தொடர்பாய் 1860இலும் 1861இலும் சுகாதார வாரியம் திரட்டிய விவரங்களிலிருந்து தெரிய வருவது இதுதான்: 15க்கும் 55க்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினரை எடுத்துக் கொள்வோமானால், அவர்களில் காசநோயாலும் இதர நுரையீரல் நோய்களாலும் இறந்தவர்கள் எண்ணிக்கை இங்கிலாந்தின் விவசாய வட்டங்களில் 100 என்றால், வேறு சிலவற்றில் பின்வருமாறு உள்ளது; கவண்ட்ரி-163, பிளாக்பர்ன் மற்றும் ஸ்கிப்டன் - 167, காங்கில்டன் மற்றும் பிராட்ஃபோர்டு - 168, லீசெஸ்டர் - 171, லீக் - 182, மக்லெஸ்ஃபீல்டு - 184, போல்டன் - 190, நாட்டிங்கம் - 192, ரோச்டேல் - 193, டெர்பி - 198, சால்ஃபோர்டு மற்றும் லைன் - அடி - ஆஷ்டன் - 203, லீட்ஸ் - 218, பிரெஸ்டன் - 220, மான்செஸ்டர் - 263 (பக்கம் 24), கீழ்க்காணும் அட்டவணை இன்னுங்கூட தெளிவான சான்றாய் அமைகிறது:

| வட்டம் | முக்கியத் தொழில் | 15க்கும் 25க்கும் இடைப்பட்ட வயதினர் நுரையிரல் நோய் களால் இறப்பு வீதம் (100,000 மக்கள் தொகைக்கு) | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| பெர்க்காம்ப்ஸ்டெட் | சருகுப்பின்னல்(பெண்கள்)... | 219 | 578 |
| லெய்ட்டன் புஸ்ஸார்டு | சருகுப்பின்னல்(பெண்கள்).... | 309 | 554 |
| நியூபோர்ட் பாக்னல் | சித்திரப் பின்னல் (பெண்கள்).. | 301 | 617 |
| டௌசெஸ்டர் | சித்திரப் பின்னல்(பெண்கள்).... | 239 | 577 |
| யோவில் | கையுறை தயாரித்தல் (பெரும்பாலும் பெண்கள்).... | 280 | 409 |
| லீக் | பட்டுத் தொழில் (பிரதானமாகப் பெண்கள்).... | 437 | 856 |
| காங்கில்டன் | பட்டுத் தொழில் (பிரதானமாகப் பெண்கள்)... | 566 | 790 |
| மக்லெஸ்ஃபீல்டு | பட்டுத் தொழில் (பிரதானமாகப் பெண்கள்)... | 593 | 890 |
| ஆரோக்கியமான ஒரு கிராமப்புற வட்டம் | வேளாண்மை....... | 331 | 333 |

*15க்கும் 25க்கும் இடைப்பட்ட வயதினரில் நுரையீரல் நோய்களால் ஏற்படும் இறப்பு வீதத்தை 100,000 மக்கள் தொகைக்கு இத்தனை ஆண்கள், இத்தனை பெண்கள் எனும் கணக்கில் இந்த அட்டவணை புலப்படுத்துகிறது. இங்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள வட்டங்களில் மூடியடைத்த இடங்களில் நடைபெறும் தொழில்களில் பெண்கள் மட்டுமே வேலை செய்கிறார்கள், ஆண்களோ பல்வேறுபட்ட தொழிற் கிளைகள் யாவற்றிலும் வேலை செய்கிறார்கள்.*

*ஆலையுழைப்பில் ஆண்கள் ஈடுபடுவது அதிகமாய் உள்ள பட்டுத் தொழில் வட்டங்களில் அவர்களது இறப்பு வீதமும் அதிகமாயுள்ளது. ஆண், பெண் அனைவரிலும் காசநோயால் ஏற்படும் இறப்புவீதம் இந்த அறிக்கையே சொல்வது போல .பெரும்பாலும் நமது பட்டுத் தொழில் உடல்நலம் கெடுக்கும் படுகேவலமான நிலைமைகளில் நடத்தப்பட்டு வருவதை வெளிப்படுத்துவதாய் உள்ளது. இதே பட்டுத் தொழில்தான் ஆலை அதிபர்கள் தமது தொழிலில் சுகாதார நிலைமைகள் விசேஷமாய்க் குறிப்பிடத் தக்க அளவுக்குப் பிரமாதமாய் இருப்பதாகச் சொல்லி, விதி விலக்கென்ற முறையில் 13 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நீண்ட*

வேலை நேரம் விதித்திட உரிமை கோரினார்கள். ஓரளவுக்கு இந்தக் கோரிக்கையில் வெற்றியும் பெற்றார்கள். [முதல் பாகம், அத்தியாயம் X, பிரிவு 6, பக்கம் 398.]

''இது வரை ஆராயப்பட்டுள்ள தொழில்களிலேயே அநேகமாய்த் தையல் தொழிலில்தான் நிலவரம் படுமோசமாய் உள்ளது, இது குறித்து டாக்டர் ஸ்மித் தரும் படப்பிடிப்பைப் பார்ப்போம்:— 'சுகாதார நிலைமைகளைப் பொறுத்த வரை பட்டறைக்குப் பட்டறை அதிக வேறுபாடு உள்ளது, ஆனால் ஒத்தாற்போல் எல்லாப் பட்டறைகளுமே நெரிசல் மிகுந்தவையாகவும் போதிய காற்றோட்ட வசதி இல்லாதவையாகவும் உடல் நலத்துக்குப் பெருந் தீங்கு பயப்பவையாகவும் உள்ளன.... இந்த அறைகள் கதகதப்பாகத்தான் இருக்கும். ஆனால் மூடுபனி நாட்களில் பகற் பொழுதிலும் குளிர் காலத்தில் இராப் பொழுதிலும் வாயு விளக்கு மூட்டப்படும் போது அறையின் வெப்பம் 80°க்கு, ஏன், 90°க்கு மேலேயும் கூட ஏறி விடுகிறது. இதனால் வியர்த்துக் கொட்டுகிறது. கண்ணாடிச் சாளரங்களில் ஆவி படிந்து நீராகிறது, தாரை தாரையாகவோ சொட்டுச் சொட்டாகவோ கூரையிலிருந்து வடிகிறது. தடுமன் பிடித்தாலும் பிடிக்கட்டுமென்று தொழிலாளர்கள் சில சாளரங்களைத் திறந்து வைத்திருக்க வேண்டியதாகிறது.' வெஸ்ட் எண்டில் உள்ள மிக முக்கியமான 16 பட்டறைகளில் தாம் கண்டவற்றை அவர் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்:— 'போதிய காற்றோட்ட வசதி இல்லாத இந்த அறைகளில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் கிடைக்கிற இடத்தின் அளவு அதிகபட்சமாய் 270 கன அடி, குறைந்தபட்சமாய் 105 கன அடி, ஒட்டுமொத்த சராசரி 156 கன அடி மட்டுமே. ஓர் அறையில்—இதைச் சுற்றிலும் தாழ்வாரம் உள்ளது, கூரையிலிருந்து மட்டும் விளக்கு வசதி செய்யப்பட்டுள்ளது—92 முதல் 100 பேர் வரை, அதற்கதிகமாகவும் கூட ஆட்கள் வேலை செய்கிறார்கள். ஏராளமான வாயு விளக்குகள் எரிகின்றன, சிறுநீர் கழிப்பிடங்கள் நெருக்கமாய் அருகிலுள்ளன, ஒவ்வொருவருக்குமான இடத்தின் அளவு 150 கன அடிக்கு மேல் இல்லை. இன்னோர் அறையில்—இதனை முற்றத்திலமைந்த நாய்ப் பட்டி என்றுதான் சொல்ல முடியும்—கூரையிலிருந்து விளக்கு வசதி செய்யப்பட்டு, காற்றோட்டத்துக்காக மேற்புறத்தில் சிறு திறப்பு அமைக்கப் பட்டுள்ளது; இதில் ஐந்தாறு ஆட்கள் வேலை செய்கிறார்கள். ஒவ்வொருவருக்குமான இடத்தின் அளவு 112 கன அடி.... டாக்டர் ஸ்மித் விவரிக்கிற இந்தக் கேவலமான பட்டறைகளில் தையற்காரர்கள் பொதுவாக நாளொன்றுக்கு 12 அல்லது 13 மணி நேரம் வேலை செய்கிறார்கள், சில சமயம் 15 அல்லது 16 மணி நேரத்துக்கு வேலை நீடிப்பதும் உண்டு'' (பக்கம் 25, 26, 28).

ஒரு விவரத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும், மருத்துவத் துறையின் தலைவரும் இவ்வறிக்கையைத் தயாரித்தவருமான ஜான் சைமனும் கூட இதைக் குறிப்பிடுகிறார். அதாவது லண்டனில் 25க்கும் 35க்கும் இடைப்பட்ட வயதுடைய தையற்காரர்களுக்கும் அச்சுக்கோப்புத் தொழிலாளர்களுக்கும் அச்சு இயந்திரத் தொழிலாளர்களுக்கான இறப்பு வீதம் உண்மைக்கு மாறாகக் குறைத்துக் காட்டப்பட்டது. ஏனென்றால் லண்டனில் தையல் தொழிலிலும் அச்சுத் தொழிலிலும் அதிபர்களாய் இருப்போர் கிராமப்புறத்திலிருந்து ஏராளமான இளம் வயதினரை (அநேகமாய் 30 வயது வரை) பழகு தொழிலாளர்களாகவும் "வளர் தொழிலாளர்களாகவும்", அதாவது மேற்கொண்டு பயிற்சி பெற வேண்டியவர்களாக அமர்த்திக் கொள்கின்றனர். இவர்களையும் சேர்த்துக் கணக்கிடுவதால் ஆட்களின் தொகை பெரிதும் அதிகமாகி விடுகிறது. இந்தத் தொகையின் அடிப்படையில்தான் லண்டனுக்கான தொழில் துறை இறப்பு வீதங்கள் கணக்கிடப்படுகின்றன. ஆனால் இவர்கள் இதே விகிதத்தில் லண்டனில் இறப்புகளின் தொகை அதிகமாவதற்கும் பங்களிக்கிறார்களா என்றால் இல்லை. ஏனென்றால் . இவர்கள் லண்டனில் தங்குவது தற்காலிகமாக மட்டுமே. இப்படித் தங்கியிருக்கும் போது உடல் நலிவுற்றால் ஊர் திரும்பி விடுகிறார்கள். அதாவது கிராமத்துக்குப் போய் விடுகிறார்கள். இறக்க நேரிட்டால் அங்குதான் அது பதிவாகிறது. இந்நிலைமை இளம் வயதினரைப் பொறுத்த வரை இன்னுங்கூட முக்கியமானது. இதனால்தான் உடல்நலத்திற்குத் தொழில் துறையால் ஏற்படும் தீய விளைவுகளுக்கான அளவீடுகள் என்ற முறையில் இந்த இளம் வயதினருக்கான லண்டன் இறப்பு வீதப் புள்ளி விவரங்களுக்கு மதிப்பே இல்லாது போகிறது (பக்கம் 30).

| வேலை செய்வோர் தொகை | தொழிற் கிளைகளும் இடமும் | இறப்பு வீதம் (100,000 மக்கள்தொகைக்கு) | | |
|---|---|---|---|---|
| | | வயது 25-35 | வயது 35-45 | வயது 45-55 |
| 958,265 | விவசாயம் — இங்கிலாந்து, வேல்ஸ்...................... | 743 | 805 | 1,145 |
| 22,301 ஆண்<br>12,377 பெண் | தையல் தொழில் — லண்டன் .................... | 958 | 1,262 | 2,093 |
| 13,803 | அச்சுக்கோப்புத் தொழிலும் அச்சாக்கத் தொழிலும் — லண்டன் .................... | 894 | 1,747 | 2,367 |

அச்சுக்கோப்புத் தொழிலாளர்களின் நிலைமையும் தையற் தொழிலாளர்களின் நிலைமையைப் போன்றதுதான். போதிய

காற்றோட்ட வசதி இல்லாமை, மாசடைந்த காற்று முதலான வற்றோடு கூடுதலாய் அச்சுக்கோப்புத் தொழிலாளர்கள் இரவு நேரத்தில் வேலை செய்தாக வேண்டிய அவசியமும் சேர்ந்து கொள் கிறது. வழக்கமாய் அவர்களது வேலை-நாள் 12 அல்லது 13 மணி நேரம், சில சமயம் 15 அல்லது 16 மணி நேரம் ஆகும். ''வாயு விளக்குகள் மூட்டப்படும் போது அறையில் வெப்பம் மிகுவதும் காற்று கெடுவதும் ஆரம்பமாகின்றன.... அடிக்கடி நிகழ்வது என்ன வென்றால், வார்ப்பட சாலையிலிருந்து கிளம்பும் புகையோ இயந்திர சாதனம் அல்லது கழிவுத் தொட்டியிலிருந்து கிளம்பும் துர்நாற்றமோ கீழ் அறையிலிருந்து எழுந்து மேல் அறையின் கெடுதி களை மேலும் முற்றச் செய்கின்றன. கீழ் அறைகளில் வெப்ப மடைந்த காற்று மேல் அறைகளின் தளத்தை சூடாக்கி அங்கேயும் வெப்பத்தை அதிகமாக்கக் கூடியது. அறைகள் தாழ்வாய் அமைந்து எரிவாயு அதிகமாய் உட்கொள்ளப்படும் போது இத்தீமை ஆபத் தாகி விடுகிறது. இதையும் விஞ்சும் படியான ஒரே தீமை நீராவிக் கொதிகலன்கள் கீழ் அறையில் வைக்கப்பட்டு கட்டடம் முழு வதற்கும் வேண்டாத வெப்பத்தை வாரி வழங்குவதாகும்.... பொது வாகச் சொன்னால், எங்கெங்கும் காணப்படும் நிலவரம் இதுதான் எனலாம்: காற்றோட்ட வசதிக்கான ஏற்பாட்டில் குறைகள் மலிந் துள்ளன. மாலையிலும் இரவிலும் வாயு எரிவதால் உண்டாகும் வெப்பத்தையும் வேறு விளைவுகளையும் போக்குவதற்கு இந்த ஏற்பாடு சற்றும் போதுமானதாய் இல்லை. பல அலுவலகங்களில், குறிப்பாகக் குடியிருப்பு வீடுகளாய் இருந்து அலுவலகங்கள் ஆகி யிருப்பவற்றில் நிலைமை மிகவும் வருந்ததத்தக்கதாய் உள்ளது.... சில அலுவலகங்களில் (குறிப்பாக வாரப் பத்திரிகை அலுவலகங் களில்) சேர்ந்தாற்போல் இரு பகலும், ஓர் இரவும் அநேகமாய் இடை நிறுத்தம் என்பதே இல்லாமல் வேலை நடைபெறும், 12 முதல் 16 வயதுடைய சிறுவர்களும் மற்றவர்களுக்கு நிகராகவே இந்த வேலையில் பங்கேற்கிறார்கள். ஏனைய அச்சகங்களோ 'அவசர' வேலை நிமித்தம் கூடுதலாய் இயங்குகின்றன, இங்கெல் லாம் ஞாயிற்றுக் கிழமையிலும் தொழிலாளிக்கு ஓய்வோ இளைப் பாறலோ கிடையாது. அவரது வேலை-நாட்கள் வாரத்துக்கு ஆறல்ல, ஏழு'' (பக்கம் 26, 28).

அலங்காரத் தையல் தொழிலிலும் ஆடை தயாரிப்புத் தொழிலி லும் வேலை செய்வோரின் மிகையுழைப்பை முதல் பாகத்திலேயே பரிசீலித்தோம் [அத்தியாயம் X, பிரிவு 3, பக்கம் 345-47] இப்போது நாம் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கும் அறிக்கையில் இத்தொழிலாளர்களின் வேலையறைகள் குறித்து டாக்டர் ஓர்டு விவரித்துள்ளார். இந்த அறைகளில் பகலில் நிலைமை அவ்வளவு மோசமில்லை என்றாலும், வாயு எரிகிற வேளையில் வெப்பம் மிகுந்து காற்று மாசடைந்து உடல் நலத்துக்குக் கேடு பயக்கும் சூழல்

உண்டாகிறது. டாக்டர் ஓர்டு பார்வையிட்டவற்றில், மோசமில்லை என்னும் படியான 34 பட்டறைகளில் ஒவ்வொரு தொழிலாளிக்கு மான இடத்தின் சராசரி கன அடி பின்வருமாறு இருந்தது:

''... நான்கில் 500க்கு மேல், வேறு நான்கில் 400 முதல் 500, ... ஏழில் 200 முதல் 250, வேறு நான்கில் 150 முதல் 200, ஒன்பதில் 100 முதல் 150 மட்டுமே. முழுமையான காற்றோட்ட வசதிக்கு வழிசெய்யப்பட்டிரா விட்டால் இந்த இட அளவு களிலேயே மிகப் பெரியதும் கூட தொடர்ச்சியாக வேலை செய் வதற்குப் பொருத்தமாய் இராது. தனிச்சிறப்பான முறையில் காற் றோட்ட வசதிக்கு வழி செய்யப்பட்டிரா விட்டால் வாயு விளக்கு எரிகிற போது அறைக்குள் சூழல் சகிக்கவொண்ணாததாகி விடும்.'' டாக்டர் ஓர்டு தாம் பார்வையிட்ட சிறு பட்டறைகளில் ஒன்றைப் பற்றிச் சொல்வதை கேட்போம் (இந்தப் பட்டறை ஓர் இடையாளரின் சார்பில் நடத்தப்படுவது): ''அறை ஒன்றின் இட அளவு 1,280 கன அடி; உள்ளிருக்கும் ஆட்கள் 14; ஒவ்வொருவருக்குமான இட அளவு 91.5 கன அடி. பெண்கள் அங்கே களைத்துச் சோர்ந்தும் அழுக்கடைந்தும் காணப்பட்டனர். அவர்கள் வாரமொன்றுக்கு 7 ஷில்லிங் முதல் 15 ஷில்லிங் வரை ஈட்டுவதாகத் தெரிவிக்கப் பட்டது. தேநீரும் கிடைக்கிறதாம். வேலை நேரம் காலை 8 முதல் இரவு 8 வரை. இந்த 14 பேரும் அடைபட்டிருந்த சிற்றறையில் போதிய காற்றோட்ட வசதி செய்யப்படவில்லை. நகரும் சாளரங்கள் இரண்டும், ஒரு கணப்படுப்பும் இருந்தன. ஆனால் கணப்படுப்பு அடைபட்டிருந்தது, காற்றோட்டத்துக்குத் தனி ஏற்பாடு ஏதும் செய்யப்படாமலிருந்தது'' (பக்கம் 27).

அலங்காரத் தையல் தொழிலிலும் ஆடை தயாரிப்புத் தொழிலி லும் வேலை செய்வோர் மிகையுழைப்பில் ஈடுபட வேண்டியிருப்பது பற்றி இதே அறிக்கை சொல்வதாவது: ''... நவநாகரிக ஆடை தயாரிப்பு நிலையங்களில் இளம் பெண்கள் மிகையுழைப்பில் ஈடு படுத்தப்படுவது அநேக சந்தர்ப்பங்களில் பொதுமக்களின் தற் காலிக வியப்புக்கும் கோபத்துக்கும் ஆளானதுண்டு; இருப்பினும் ஆண்டில் சுமார் 4 மாத காலத்துக்கு மேல் இது அவ்வளவு பயங்கர அளவில் நடைபெறுவதில்லை. ஆனால் இந்த நான்கு மாத காலமும் உள்ளரங்கத் தொழிலாளர்கள் வழக்கமாக நாளொன்றுக்கு முழு தாய் 14 மணி நேரம் வேலை செய்தாக வேண்டும். நெருக்குதல் மிகுந்த சமயங்களில் தொடர்ந்து நாட்கணக்கில் நாளொன்றுக்கு 17, ஏன், 18 மணி நேரமும் கூட வேலை செய்தாக வேண்டும். ஆண்டின் ஏனைய பகுதியில் உள்ளரங்கத் தொழிலாளர்கள் அநேக மாய் 10 முதல் 14 மணி நேரம் வேலை செய்தாக வேண்டும். வெளிப்புறத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஒத்தாற் போல் 12 அல்லது 13 மணி நேரம் வேலை செய்தாக வேண்டும். மேலாடை தயாரிப்பு, கழுத்துப்பட்டை தயாரிப்பு சட்டை தயாரிப்பு

ஆகியவற்றில் வேலை செய்வோர் மற்றும் (தையல் இயந்திரத்தில் வேலை செய்வோர் உள்ளிட்ட) பல்வேறு வகையான தையல் தொழிலாளர்களும் பொதுவான வேலை அறையில் செலவிடும் நேரம் குறைவு—பொதுவாக 10 முதல் 12 மணி நேரத்துக்கு மேல் போவதில்லை. கூடுதல் ஊதியத்துக்காகக் கூடுதல் நேரம் வேலை செய்யும் நடைமுறை காரணமாய் சில சமயம் சில வீடுகளிலும், வேலை நேரம் முடிந்த பிறகு வீட்டில் செய்யும் பொருட்டு தொழிலகங்களிலிருந்து வேலையைக் கொண்டு சென்றுவிடும் நடைமுறை காரணமாய் வேறு சில வீடுகளிலும் இந்தத் தொழிலாளர்களின் முறையான வேலை நேரம் கணிசமான நீட்டிப்புக்கு உள்ளாகிறது என்கிறார் டாக்டர் ஓர்டு. இவ்விரு நடைமுறைகளுமே அநேக சந்தர்ப்பங்களில் கட்டாயமானவையாய் இருக்கக் காணலாம் என்பதையும் குறிப்பிட வேண்டும்'' (பக்கம் 28). இந்தப் பக்கத்துக்கான அடிக்குறிப்பில் ஜான் சைமன் குறிப்பிடுகிறார்: ''திரு ராட்க்ளிஃப், ...கொள்ளை நோயியல் சங்கத்தின் கௌரவச் செயலாளர், ...முதல் தரமான தொழிலகங்களில் வேலை செய்யும் இளம் பெண்களை விசாரித்திட வழக்கத்துக்கு மாறான வாய்ப்புகளைப் பெற நேரிட்டது... இவர் விசாரித்தவர்களில் 20 பெண்கள் தாங்கள் 'பூரண நலம்' என்று சொல்லிக் கொண்டார்கள்; இப்படிச் சொல்லிக் கொண்டவர்களில் ஒரே ஒருவரை மட்டுமே நல்ல உடல்நிலையில் இருப்பதாகச் சொல்ல முடியுமென அவர் கண்டார். மற்றவர்களோ உடல்திறன் குறைவு, நரம்புத் தளர்ச்சி ஆகியவற்றாலும் இவை சார்ந்த எத்தனையோ இயக்கக் குலைவுகளாலும் பல்வேறு அளவுகளில் பீடிக்கப்பட்டிருந்தனர். இந்த உடல்நலக் கேடுகளுக்கு முதற் காரணமாய் அவர் குறிப்பிடுவது நீண்ட வேலை நேரம்தான்—குறைந்தபட்ச வேலை நேரம் வியாபாரப் பருவம் அல்லாத காலத்தில் 12 மணி நேரம் என்பது அவரது மதிப்பீடு. இவற்றுக்கு இரண்டாவது காரணமாக அவர் குறிப்பிடுவது... வேலை அறைகளில் நெரிசலாய் இருப்பதும், காற்றோட்டத்துக்கு வழிசெய்யப்படாமலிருப்பதும், எரிவாயு விளக்குகளிலிருந்து வரும் புகையும், உணவு போதாமலோ தரங்கெட்டோ இருப்பதும், வீட்டில் அவசிமான வசதிக்குக் கவனம் செலுத்தாமலிருப்பதுமே.''

ஆங்கிலேய் சுகாதார வாரியத்தின் தலைவர் முடிவாகச் சொல்வது இதுதான். ''தொழிலாள மக்கள் தத்துவ அளவில் அவர்களுக்குரிய முதல் துப்புரவு உரிமையை—அதிபரானவர் அவர்களை என்ன வேலை செய்வதற்காக ஓரிடத்தில் ஒன்றுகூட்டினாலும் சரி, அவரைப் பொறுத்த வரை, அவரது செலவில் அந்த வேலைக்குத் தேவையற்ற ஆரோக்கியக்கேடான நிலைமைகளையெல்லாம் போக்கிவிட வேண்டும் என்கிற அந்த உரிமையை—தாமே வலியுறுத்தி நிலைநாட்டுவது நடைமுறையில் சாத்தியமன்று.... தொழிலாள மக்கள் இந்தத் துப்புரவு நீதி தமக்குக் கிடைக்குமாறு செய்து கொள்ளவும்

நடைமுறையில் இயலாது; (சட்டத்தின் நோக்கங்களாய்க் கருதப் படுகிறவை எவையானாலும்) தொல்லைகள் ஒழிப்புச் சட்டங்களின் நியமன நிர்வாகிகளிடமிருந்து உருப்படியான உதவி ஏதும் இம் மக்கள் எதிர்பார்க்கவும் முடியாது'' (பக்கம் 29). ''மெய்தான், சரியாக எந்நிலையில் அதிபர்கள் விதிமுறைக்கு உட்பட்டவர்கள் ஆவார்கள் என்பதை வரையறுத்துத் துல்லியமாய்க் கோடு கிழிப் பதில் ஏதேனும் செய்நுட்ப இடர்ப்பாடு எழக் கூடும். ஆனால்... கோட்பாட்டளவில் துப்புரவு உரிமை பொருந்தாத இடமில்லை. ஓரிடத்தில் வேலைக்கமர்ந்து உழைப்பது காரணமாகவே எல்லை யற்ற உடல்துன்பத்திற்கு ஆளாகி தேவையே இல்லாமல் நோய் வாய்ப்பட்டு ஆயுள் குறுகிப் போகிறார்களே, அந்த ஆயிரமாயிரம் உழைக்கும் ஆண்-பெண்களின் நலனுக்காக நான் தெரிவிக்க விரும்புகிற எதிர்பார்ப்பு இதுதான்: எங்கெங்கும் உழைப்பின் துப்புரவு நிலைமைகள், குறைந்தது இது வரையிலானவை பொருத்த மான சட்ட வழிவகைகளின் வீச்சுக்கு உட்படுத்தப்பட வேண்டும்; உள்ளரங்க வேலையிடங்கள் யாவற்றிலும் பயனுள்ள முறையில் காற்றோட்ட வசதி செய்யப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். இயற்கையிலேயே உடல் நலத்துக்கு ஊறு செய்யக் கூடியதான ஒவ்வொரு தொழிலிலும், சுகாதாரத்துக்கு ஆபத்தான பிரத்தியேக பாதிப்புகளை கூடுமான வரை குறைத்திட வேண்டும்'' (பக்கம் 31).

## III. விசையுற்பத்தி, விசை செலுத்தல், மற்றும் கட்டடங்களில் சிக்கனம்

லி. ஹார்னர் 1852 அக்டோபருக்கான தமது அறிக்கையில், பாட்ரிக்ரோஃப்டைச் சேர்ந்தவரும் நீராவிச் சுத்தியலைக் கண்டு பிடித்தவருமான புகழ்மிகு பொறியாளர் ஜேம்ஸ் நாஸ்மித் எழுதிய கடிதத்தை மேற்கோளாகக் காட்டுகிறார். அக்கடிதத்தின் சில பகுதி கள் இதோ:

''... நான் சொல்லிக் காட்டுகிற (நீராவி எஞ்சின்களின்) அமைப்பு மாற்றங்களாலும் மேம்படுத்தல்களாலும் ஓட்டுந்திறன் பெருமளவில் அதிகரித்திருப்பதை பொதுமக்கள் அவ்வளவாய் அறிய மாட்டார்கள். இந்த வட்டத்தின் (லங்காஷயர்) எஞ்சின்-திறனானது ஏறத்தாழ நாற்பதாண்டுகளாய் துணிவின்மையும் விருப்புவெறுப்புமான பாரம்பரியங்களின் சுமையில் அழுந்திக் கிடந்தது. ஆனால் இன்று மகிழ்ச்சிக்குரிய விதத்தில் விடுதலை பெற்று விட்டோம். கடந்த பதினைந்தாண்டு காலத்தில், இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் கடந்த நான்காண்டு காலத்தில் (1848 இலிருந்து), வடிப்பு நீராவி எஞ்சின்களை [condensing steam-engines] இயக்கும் அமைப்பில் மிக முக்கியமான சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.... இதனால் ஏற்பட்டுள்ள விளைவு

என்னவென்றால்... குறிப்பிட்ட அதே எஞ்சின்களைக் கொண்டு முன்னிலும் மிக அதிகமான அளவில் காரியம் அல்லது வேலை செய்து முடிக்கப்படுகிறது. எரிபொருள் செலவும் மிகக் கணிச மாய்க் குறைந்து விட்டது.... மேற்கூறிய வட்டங்களின் ஆலை களிலும் பட்டறைகளிலும் நீராவி விசை புகுத்தப்பட்ட பிறகு பல்லாண்டு காலம் நிலவிய கருத்து, வடிப்பு நீராவி எஞ்சின்களை இயக்கும் போது உந்துதண்டின் [piston] வேகம் நிமிடத்துக்கு சுமார் 220 அடியாக இருப்பதே முறையானது என்பதுதான்; அதாவது 5-அடி வீச்சுக் கொண்ட எஞ்சினானது சுழல்தண்டினை [crankshaft] நிமிடத்துக்கு 22 முறை மட்டும் சுழலச் செய்ய வேண்டு மென்று 'விதிப்படி' வரையறை செய்யப்பட்டது. இதற்கும் கூடுத லான வேகத்தில் எஞ்சினை இயங்கச் செய்வது விவேகமானதோ, விரும்பத்தக்கதோ அல்லவெனக் கருதப்பட்டது. ஆலையின் பல் லிணை [gearing] முழுவதும் உந்துதண்டின் இந்த—நிமிடத்துக்கு 220 அடி—வேகத்துக்குப் பொருத்தமானதாய் ஆக்கப்பட்டதால், அபத்தமான முறையில் வரையறுக்கப்பட்டதான இந்த மிகக் குறைந்த வேகமே பல்லாண்டு காலம் இவ்வகை எஞ்சின்களின் இயக்கத்தை ஆள்வதாய் இருந்து வந்தது. ஆனால் நாளாவட்டத்தில், அதிருஷ்ட வசமாய் 'விதி' பற்றிய அறியாமை காரணமாகவோ, புதுமை செய் வதில் நாட்டமுள்ள யாரோ ஒரு துணிச்சல்காரர் இன்னுங்கூட பொருத்தமான நோக்கங்கருதி செயல்பட்டதன் காரணமாகவோ, கூடுதலான எஞ்சின் வேகம் சோதித்துப் பார்க்கப்பட்டது. சோதனை யின் முடிவு மிகவும் சாதகமாய் இருந்து விட்டதால் மற்றவர்களும் இந்த உதாரணத்தைப் பின்பற்றி 'எஞ்சினைக் கட்டவிழ்த்து விட்ட னர்' (இப்படித்தான் இது வர்ணிக்கப்படுகிறது); அதாவது நிமிடத் துக்கு 300 அடியும் அதற்கதிகமாகவும் எஞ்சினை ஓட விடும் விதத் தில் பல்லிணையின் முதல் இயக்கச் சக்கரங்களின் விகித அளவு களை மாற்றியமைத்தனர்; அதேபோது பல்லிணை பொதுவாகப் பழைய வேகத்திலேயே இயங்குமாறு வைத்துக் கொள்ளப்பட் டது.... இப்படி 'எஞ்சினைக் கட்டவிழ்த்து விடுவது'... அநேகமாய் எங்கெங்கும் எஞ்சின்கள் 'விரைவுபடுவதற்கு' வழிகோலியுள்ளது. ஏனென்றால் அதே எஞ்சின்களிலிருந்து இப்போது கூடுதலாய் விசைத்திறன் கிடைப்பதாக நிரூபணம் ஆனதோடு எஞ்சினின் கூடுதல் வேகமானது சுற்றுச் சக்கரத்தில் [fly-wheel] கூடுதல் முடுக்குவிசை ஏற்படுத்தியதால் இயக்கம் முன்னை விடவும் அதிகம் சீரொழுங்கு உடையதாவது தெரிய வந்தது.... (வடிப்புக் கலனில் நீராவியின் அழுத்தமும் வெற்றிடமும் மாறாதிருக்க) நீராவி எஞ்சி னின் உந்துதண்டினை இன்னுமதிக வேகத்தில் இயங்க விடுவதன் மூலமே அதிலிருந்து முன்னிலும் கூடுதலான விசைத்திறன் எடுத்து விடுகிறோம்.... எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட ஓர் எஞ்சின், நிமிடத்துக்கு 200 அடி வேகத்தில் அதன் உந்துதண்டு செயல்படும்

போது, 40 குதிரைத் திறன் தருவதாகக் கொள்வோம். பொருத்த மான ஏற்பாடு அல்லது திருத்தும் செய்வதன் மூலம் இதே எஞ்சினை அதன் உந்துதண்டு நிமிடத்துக்கு 400 அடி ஓடும் படியான வேகத் தில் இயங்க விட முடியுமானால் (மேலே குறிப்பிட்டது போல, நீராவியின் அழுத்தமும் வெற்றிடமும் மாறாதிருப்பதாய்க் கொள் கிறோம்), சரியாக இரு மடங்கு விசைத்திறன் கிடைக்கும்.... நீராவியின் அழுத்தத்திலும் வெற்றிடத்திலும் மாற்றமில்லையாத லால், இந்த எஞ்சினின் உறுப்புகள் மீதான அமுக்கமானது உந்து தண்டு 200 அடி வேகத்தில் இயங்கிய போது இருந்ததை விட அது 400 அடி வேகத்தில் இயங்கும் போது சிறிதும் கூடுதலாகி விடாது; அதாவது எஞ்சினின் வேகம் அதிகரிப்பதாலேயே அது 'நிலை குலைந்து' நின்று விடும் ஆபத்தும் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்து விடுவதில்லை. என்னதான் வேறுபாடு உள்ளதென் றால், இப்போது உந்துதண்டின் வேகத்துக்கு ஏற்ற விகிதத்தில், அல்லது சற்றேறக்குறைய அதற்கொப்ப, நீராவி உட்கொள்ளப் படும்; 'பித்தளைகள்' [brasses] எனப்படுகிறவை அல்லது உராயும் உறுப்புகள் சற்றே கூடுதலாய்த் தேய்மானமுறும்; ஆனால் இந்தத் தேய்மான அதிகரிப்பு மிகச் சிறு அளவினதே ஆதலால் பெரும் பாலும் கவனத்துக்குரியதாகாது.... ஆனால் ஒரு எஞ்சினின் உந்து தண்டினை இன்னுமதிக வேகத்தில் இயங்க விட்டு அந்த எஞ்சினி லிருந்து இன்னுமதிக விசைத்திறன் பெற வேண்டுமானால் ... கொதி கலனின் கீழே ஒவ்வொரு மணி நேரத்துக்கும் இன்னுமதிக நிலக்கரி எரித்தாக வேண்டும், அல்லது நீரை ஆவியாக்குவதில், அதாவது நீராவி உற்பத்தி செய்வதில் இன்னுமதிகத் திறன் வாய்ந்த கொதி கலன்களைப் பயன்படுத்தியாக வேண்டும். இதுதான் நடந்தது— நீராவி உற்பத்தி செய்வதில், நீரை ஆவியாக்குவதில் அதிகத் திறன் வாய்ந்த கொதிகலன்கள் 'விரைவுபடுத்திய' பழைய எஞ்சின்களில் பொருத்தப்பட்டன. இப்படியெல்லாம் மாற்றங்கள் செய்ததன் மூலம் அதே எஞ்சின்களிலிருந்து அநேக சந்தர்ப்பங்களில் சுமார் 100% என்னுமளவுக்கு அதிக வேலை பெறப்பட்டது. சுமார் பத்தாண்டு முன்னர், கார்ன்வால் சுரங்கப் பணிகளில் ஈடுபடுத்திய எஞ்சின்கள் விசையுற்பத்தியை அசாதாரண அளவுக்கு சிக்கனப் படுத்திக் காட்டின; இந்தச் சிக்கனம் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கலாயிற்று. நூற்புத் தொழிலில் கடும் போட்டி நிலவியதால் தொழிலதிபர்கள் 'மிச்சம் பிடிக்கும் வழிகளையே' இலாபத்திற்கான முக்கிய ஆதாரமாகக் கருத வேண்டியதாயிற்று. ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒவ்வொரு குதிரைத் திறனுக்கும் உட்கொள்ளப்படும் நிலக்கரியின் அளவில் குறிப்பிடத்தக்க வேறுபாடு இருப்பதை கார்னிஷ் எஞ்சின்களின் செயற்பாடும், மற்றும் வுல்ஃபின் ஈருருளை எஞ்சின்களின் அசாதாரண சிக்கனச் செயற்பாடும் காட்டின. இந்த வேறுபாடானது இவ்வட்டத்தில் எரிபொருள் சிக்கனம் என்னும்

விஷயத்தின் பால் முன்னிலும் அதிகமாய் கவனத்தை ஈர்க்கலாயிற்று. சாதாரண பஞ்சாலை எஞ்சின்கள் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் குதிரைத் திறன் ஒன்றுக்கு 8 முதல் 12 இராத்தல் வீதம் நிலக்கரி உட்கொண்டன என்னும் அதேபோதில் கார்னிஷ் எஞ்சின்களும் ஈருருளை எஞ்சின்களும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் குதிரைத் திறன் ஒன்றுக்கு 3½ முதல் 4 இராத்தல் மட்டும் நிலக்கரி உட்கொண்டன. வேறுபாடு இவ்வளவு குறிப்பிடத்தக்கதாய் அமைந்து ஆவலைத் தூண்டியதால் இவ்வட்டத்தில் ஆலையதிபர்களும் எஞ்சின் தயாரிப்பாளர்களும் இதே போன்ற வழிகளைக் கையாள்வதன் மூலம் சிக்கனத்துக்குப் பயன்படும் விளைவுகளை அடைய முயன்றனர். இத்தகைய அசாதாரணச் சிக்கனம் கார்ன்வாலிலும் பிரான்சிலும் சர்வசாதாரணமாய் இருந்தது. அங்கெல்லாம் நிலக்கரி விலை அதிகமாய் இருந்ததால் ஆலையதிபர்கள் தமது தொழில் நிறுவனங்களில் அதிகமாய்ச் செலவு செய்யும் பிரிவுகளாய் இருந்தவை குறித்து தீவிர கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருந்தது. எரிபொருள் சிக்கனம் குறித்து இப்படி அதிகக் கவனம் செலுத்தியதன் விளைவு, பல வகையிலும் மிக முக்கியமானதாய் இருந்துள்ளது. முதலாவதாக, பல கொதிகலன்களை — அமோகமாய் இலாபம் கிடைத்து வந்த அந்த இனிய காலத்தில் இந்தக் கொதிகலன்களின் மேற்பரப்பில் பாதியளவு எவ்வகையிலும் மூடப்படாமல் குளிர் காற்று படும்படி விடப்பட்டிருந்தது — ஒட்டுக் கம்பள உறைகளைக் கொண்டும் கல்லும் காரையும் கொண்டும் மூடினார்கள்; திறந்து வைக்கப்பட்ட மேற்பரப்பின் வெப்பத்தைக் காத்திட ஏராள எரிபொருள் செலவாகி வந்ததல்லவா, அந்த வெப்பம் இப்படித் தப்பி விடுவதைத் தடுக்கும் பொருட்டு மேற்சொன்ன வழிமுறைகளையும் வேறு சிலவற்றையும் கையாளத் தொடங்கினர். நீராவி குழாய்களுக்கும் இவ்வாறே 'காப்பளிக்கத்' தொடங்கினர். எஞ்சின் உருளையின் வெளிப்புறத்துக்கும் இதே போல் ஒட்டுக் கம்பள உறையிட்டும் பலகை அடித்தும் மூடினார்கள். அடுத்து 'உயர் நீராவியைப்' பயன்படுத்தலாயினர்; அதாவது சதுர அங்குலத்துக்கு 4; 6 அல்லது 8 இராத்தல் என்ற கணக்கில் நீராவி பீச்சப்படும் படியாக கர்ப்புக் கவாடத்தை அமைப்பதற்கு பதில், நீராவி அழுத்தத்தை 14 அல்லது 20 இராத்தலாக உயர்த்துவதன் மூலம் ... எரிபொருளில் திட்டவட்டமாய் சிக்கனம் காண முடியும் என்று தெரிந்தது; இதையே வேறுவிதமாகச் சொல்வதானால் நிலக்கரி உட்கொள்ளப்படும் அளவினை குறிப்பிடத்தக்கவாறு குறைத்து ஆலையின் பணி நிறைவேற்றப்பட்டது. வசதி வாய்ப்போடு தெம்பும் திராணியும் உடையவர்கள் நீராவி அழுத்தத்தை அதிகமாக்குவதையும், 'விரிவாக்க வேலை முறையையும்' முழு அளவுக்கு நிறைவேற்றினார்கள். சதுர அங்குலத்துக்கு 30, 40, 50, 60, 70 இராத்தல் நீராவி வழங்குவதற்கென முறையாக நிர்மாணிக்கப்பட்ட

கொதிகலன்களை ஈடுபடுத்துவதன் மூலம் இதைச் செய்தனர். இவை பழைய மரபைச் சேர்ந்த எந்தப் பொறியாளரையும் திகிலடையச் செய்யக் கூடிய அழுத்த அளவுகளாகும். ஆனால் நீராவி அழுத்தத்தை இப்படி அதிகமாக்குவதால் விளைந்திடும் சிக்கனங்கள் ... சீக்கிரமே £ , ஷில்லிங், பென்னி என்னும் கண்கூடான வடிவில் தெரியலாயின, அப்போது வடிப்பு எஞ்சின்களை இயக்குவதற்கு உயர் அழுத்த நீராவிக் கொதிகலன்களைப் பயன்படுத்துவது பரவலாகி விட்டது எனலாம். முழு அளவுக்குப் போக விரும்பியவர்கள் ... சீக்கிரமே வுல்ஃப் எஞ்சினை அதன் முழுக் கட்டமைப் போடும் ஈடுபடுத்த முற்பட்டனர். சமீப காலத்தில் கட்டப்பட்ட நமது ஆலைகளில் பெரும்பாலானவை வுல்ஃப் எஞ்சின்களால் இயக்கப்படுகின்றன; இவற்றில் ஒவ்வொரு எஞ்சினுக்கும் இரு உருளைகள் உண்டு, முதல் உருளையில் கொதிகலனிலிருந்து வரும் உயர் அழுத்த நீராவி அதன் அழுத்தம் வெளிப்புற அழுத்தத்தை விட மிகையாய் இருப்பதால் விசை செலுத்துகிறது அல்லது விசை கொடுக்கிறது. மேற்கூறிய உயர் அழுத்த நீராவி ஒவ்வொரு வீச்சின் முடிவிலும் தடையின்றி வெளிக்காற்றில் சென்று கலக்க விடப்படாமல் முதல் உருளையைப் போல் சுமார் நான்கு மடங்கு பரப்புடைய குறையழுத்த உருளைக்குள் செல்லுமாறு செய்யப்படுகிறது. உரிய விரிவகற்சி ஏற்பட்ட பின் இது அழுத்த அறைக்குச் செல்கிறது. இவ்வகை எஞ்சின்களின் பயனாய் அடையப்பெறும் சிக்கனம் என்னவென்றால் எரிபொருள் செலவு குதிரைத் திறன் ஒன்றுக்கு ஒரு மணி நேரத்துக்கு 3½ முதல் 4 இராத்தல் நிலக்கரி என்ற விகிதத்தில் அமைகிறது; பழைய வகை எஞ்சின்களிலோ, நிலக்கரிச் செலவு குதிரைத் திறன் ஒன்றுக்கு ஒரு மணி நேரத்துக்கு சராசரியாக 12 முதல் 14 இராத்தலாக இருந்தது. இரட்டை உருளை அல்லது உயர் அழுத்தமும் குறையழுத்தமும் ஒரு சேரக் கொண்ட எஞ்சின் என்பதான வுல்ஃபின் முறை ஏற்கெனவே இருந்து வரும் எஞ்சின்களில் சாமர்த்தியமானதோர் ஏற்பாட்டின் மூலம் விரிவான அளவில் புகுத்தப்பட்டுள்ளது. விசையுற்பத்தி, எரிபொருட் சிக்கனம் ஆகிய இரு வகையிலும் இவற்றின் சாதனை இதனால் உயர்ந்துள்ளது. இது ... கடந்த எட்டு அல்லது பத்து ஆண்டு காலமாய்ப் பயன்பட்டு வருகிறது; ஓர் உயர் அழுத்த எஞ்சினை ஒரு வடிப்பு எஞ்சினோடு இணைத்து முதலாவதில் கழிவாகிற நீராவியை இரண்டாவதற்குச் செலுத்தி அதனை இயக்குவதன் மூலம் சிக்கனம் வரப்பெறுகிறது. அநேக சந்தர்ப்பங்களில் இம்முறை மிகவும் வசதியான ஒன்று.

"இந்த மேம்பாடுகளில் சிலவற்றையோ எல்லாவற்றையுமோ குறிப்பிட்ட எஞ்சின்களுக்குப் பிரயோகித்து அதனால் அந்த எஞ்சின்களின் சாதனை அல்லது வேலை அதிகமாவது தொடர்பாகத் துல்லியமான விவரங்கள் கிடைப்பது அவ்வளவு எளிதன்று.

எப்படியானாலும் நான் என்ன நம்புகிறேன் என்றால்... நீராவி எஞ்சின் இயந்திர சாதனத்தின் குறிப்பிட்ட எடையளவிலிருந்து சராசரியாகப் பெறப்படும் பணி அல்லது வேலையின் அளவு எப்படியும் 50 சதவீதம் இப்போது அதிகரித்துள்ளது, அநேக உதாரணங்களில் வேகமானது நிமிடத்துக்கு 220 அடியாக வரை யறுக்கப்பட்டிருந்த காலத்தில் 50 குதிரைத் திறன் கொடுத்த அதே நீராவி எஞ்சின்கள் இப்போது 100க்கு மேல் கொடுத்து வரு கின்றன. வடிப்பு நீராவி எஞ்சின்களை இயக்குவதில் உயர் அழுத்த நீராவியைப் பயன்படுத்துவதால் வரப்பெற்ற பெருஞ் சிக்கனமும் ஆலை விரிவாக்கங்களுக்கு அதே எஞ்சின்களிலிருந்து இன்னுமதிக விசைத் திறன் தேவைப்படுவதும் சேர்ந்து, கடந்த மூன்றாண்டுக்குள் குழாய் வடிவக் கொதிகலன்களை நாடிச் செல்வதற்கு வழிசெய் துள்ளன. ஆலை எஞ்சின்களுக்கு நீராவி உற்பத்தி செய்வதில் முன்பெல்லாம் ஈடுபடுத்தப்பட்டவற்றைக் காட்டிலும் இந்தக் கொதி கலன்களிலிருந்து மிக அதிகமான சிக்கனம் வரப்பெறுகிறது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1852 அக்டோபர், பக்கம் 23-27.)

விசையுற்பத்தி தொடர்பாகச் சொன்னதையெல்லாம் விசை செலுத்துதல் [power transmission] தொடர்பாகவும் வேலைப் பொறிகள் தொடர்பாகவும் கூட சொல்ல வேண்டும்.

''கடந்த சில ஆண்டுகளில் இயந்திர சாதன மேம்பாடு வெகு விரைவாய் முன்னேறியுள்ளது, இதனால் ஆலையதிபர்கள் இயக்கு விசையைக் கூடுதலாக்காமலே உற்பத்தியைக் கூடுதலாக்க முடிந் துள்ளது. வேலை-நாளின் கால அளவு குறைந்து விட்டதால் உழைப்பை முன்னிலும் சிக்கனமாய்ப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சிறந்த முறையில் நடத்தப்படும் ஆலை கள் பெரும்பாலானவற்றில் எப்போதும் நடைபெறுகிற அறிவார்ந்த பரிசீலனை எவ்விதத்தில் செலவைக் குறைத்து உற்பத்தியைப் பெருக்கலாம் என்பதே. இதோ ஓர் அறிக்கை என்னெதிரில் கிடக் கிறது, அன்புடன் இதனை ஆக்கித் தந்தவர் எனது வட்டத்திலுள்ள ஓர் அறிவாளி. 1840 முதல் இன்று வரையிலும் வேலைக்கமர்த்தப் பட்ட ஆட்களின் தொகை, அவர்களது வயது, வேலை செய்த இயந்திரங்கள், தரப்பட்ட கூலி ஆகிய விவரங்களை இந்த அறிக்கை தருகிறது. இந்தக் கனவானின் நிறுவனம் 1840 அக்டோபரில் 600 ஆட்களை வேலைக்கமர்த்தியது, இவர்களில் 200 பேர் 13 வயதுக் குட்பட்டவர்கள். சென்ற அக்டோபரில் 350 ஆட்களை வேலைக் கமர்த்தியது, இவர்களில் 60 பேர் மட்டும் 13 வயதுக்குட்பட்டவர் கள். வேலை செய்த இயந்திரங்களின் தொகையிலும் அநேகமாய் மாற்றமில்லை, இரு காலப் பகுதிகளிலும் தரப்பட்ட கூலித் தொகை யும் ஒன்றே.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1852 அக்டோபர் என்பதில் ரெட்கிரேவ் அறிக்கை, பக்கம் 58-59.)

இந்த இயந்திர சாதன மேம்பாடுகள் பொருத்தமான விதத்தில் கட்டப்பட்ட புதிய ஆலைக் கட்டடங்களில் வைத்துப் பயன்படுத்தப் படும் வரை தமது முழுப் பயனையும் காட்டுவதில்லை.

''இயந்திர சாதனத்தில் செய்யப்பட்டுள்ள மேம்பாட்டைப் பொறுத்த வரை முதற்கண் குறிப்பிடக் கூடியதாய் இருப்பது, மேம்பட்ட இயந்திர சாதனத்தை ஏற்பதற்குத் தகவமைந்த ஆலைக் கட்டடங்கள் கட்டுவதில் மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதே....கீழ் அறையில் நூல் முழுவதையும் முறுக்கச் செய் கிறேன், அந்த ஒரே தளத்தில் 29,000 முறுக்குங் கதிர்களை இருத்துவேன். அறையிலும் கொட்டத்திலுமாக உழைப்பு குறைந்தது 10 சதவீதம் மிச்சமாகிறது. இப்படி மிச்சமாவதற்கு நூல் முறுக்கும் முறையிலான எந்த மேம்பாட்டை விடவும், இயந்திர சாதனங்கள் ஒரே மேலாண்மையின் கட்டுப்பாட்டில் ஒன்றுகுவிக்கப்படுவதே காரணம். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கதிர்களை ஒரே ஒரு சுழல்தண்டைக் கொண்டு என்னால் இயக்க முடிகிறது. இதே எண்ணிக்கையிலான கதிர்களை இயக்குவதற்கு ஏனைய தொழிலகங் கள் பயன்படுத்த வேண்டியிருக்கும் சுழல்தண்டு அமைப்போடு ஒப்பிடுமிடத்து 60 சதவீதம், சில நேரம் 80 சதவீதம் மிச்சமாகிறது. பெருமளவில் எண்ணெய் மிச்சமாகிறது. சுழல்தண்டு அமைப்பு, மசையிலும் அவ்வாறே.... ஆலைக்குள் வரிசையமைப்புகளின் நிலையை உயர்த்தியதாலும், இயந்திர சாதன மேம்பாட்டினாலும், மிகக் குறைவாக மதிப்பீடு செய்தாலும் கூட எனக்கு உழைப்பு வகையில் 10 சதவீதம் மிச்சமாகியுள்ளது, விசைத்திறன், நிலக்கரி, எண்ணெய், கொழுப்பு, சுழல்தண்டு அமைப்பு, பட்டையிணைப்பு என்ற வகையில் பெருமளவில் மிச்சமாகியுள்ளது.'' (பருத்தி நூற் பதிபர் ஒருவரின் சாட்சியம், தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை கள், 1863 அக்டோபர், பக்கம் 109, 110.)

## IV. உற்பத்தியின் கழிவுகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல்

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை விரிந்து செல்லச் செல்ல உற்பத்தியிலும் நுகர்விலும் கழிவுகளாய் விடப்படுகிற வற்றின் பயன்பாடும் மேலும் மேலும் விரிந்து செல்கிறது. தொழில் துறை, வேளாண்மைத் துறை இவற்றின் கழிவுப் பண்டங்களை உற்பத்தியின் கழிவுகள் என்கிறோம்; மனித உடலில் இயற்கையாய் நடைபெறும் வளர்சிதை மாற்றத்தால் வெளியேற்றப்படும் கழிவு களையும், பயனுள்ள பண்டங்கள் நுகரப்பட்ட பிறகு கழிவுப் பொருட்களாய் எஞ்சி நிற்பதையும் நுகர்வின் கழிவுகள் என் கிறோம். எடுத்துக்காட்டாக இரசாயனத் தொழிலில் துணையுற்பத் திப் பொருட்கள் உற்பத்தியின் கழிவுகளாகின்றன. உற்பத்தி சிறு வீதத்தில் மட்டும் நடைபெறுகையில் இக்கழிவுகளைப் பயன்படுத்திக்

கொள்ள முடிவதில்லை. ஆனால் இயந்திர சாதன உற்பத்தியில் கழிவுகளாய் விடப்படுகிற குவியல் குவியலான இரும்புச் சீவல்கள் இரும்பு உற்பத்திக்கான கச்சாப் பொருளாகவும் இதர பல வகையிலும் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. இயற்கையான மனிதக் கழிவுப் பொருட்கள், கந்தல் வடிவிலான பழைய ஆடைகள் முதலானவை நுகர்வின் கழிவுகளாகின்றன. இந்தக் கழிவுகள் வேளாண்மைக்கு பெரும் முக்கியத்துவமுடையவை. ஆனால் முதலாளித்துவப் பொருளாதாரத்தில் இவற்றைப் பயன்படுத்திக் கொள்வதை விடவும் வீணடிப்பதே அதிகமாய் நடைபெறுகிறது. எடுத்துக் காட்டாக லண்டனில் நாற்பத்தைந்து இலட்சம் மக்களின் இயற்கையான கழிவுப் பொருட்கள் தேம்ஸ் நதியை—மிகப் பெருஞ் செலவில்—மாசுபடுத்தவே பயன்படுகின்றன.

கச்சாப் பொருட்களுக்கு ஆகும் செலவு அதிகரிப்பதானது கழிவுப் பொருட்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இயல்பாகவே தூண்டுதலாய் அமைகிறது.

இந்தக் கழிவுகளைத் திரும்பப் பயன்படுத்திக் கொள்வதற்குப் பொதுவாய் தேவைப்படுகிறவை இவைதான்: இந்தக் கழிவுப் பொருட்கள் பெருமளவில் இருந்தாக வேண்டும், பெருவீத உற்பத்தியில் மட்டுமே இது சாத்தியமாகிறது; இயந்திரங்களைத் திருத்தி மேம்படுத்தியாக வேண்டும், முன்னதாகப் பயனற்ற வடிவில் இருந்த பொருட்களை புதிய உற்பத்திக்குப் பொருத்தமான வடிவத்துக்கு மாற்றிட இது உதவுகிறது; முடிவாகச் சொன்னால் விஞ்ஞானம், குறிப்பாக வேதியியல் முன்னேற்றம் கண்டாக வேண்டும், வேதியியலானது இந்தக் கழிவுப் பண்டங்களின் பயனுள்ள குணங்களை வெளிப்படுத்தி உதவுகிறது. மெய்தான், சிறுவீத வேளாண்மையிலும் கூட இத்தகைய மாபெரும் சிக்கன முயற்சிகள் நடைபெறக் காணலாம். லோம்பார்டியிலும் தென் சீனத்திலும் ஜப்பானிலும் நடைபெறும் சிறுவீத வேளாண்மையை எடுத்துக்காட்டாய்க் குறிப்பிடலாம். ஆனால் மொத்தத்தில் மனித உழைப்புச் சக்தியை ஏனைய உற்பத்தித் துறைகளிலிருந்து விலக்கியெடுத்து ஊதாரித்தனமாகச் செலவிடுவதன் மூலமே இந்த உற்பத்தி அமைப்பில் விவசாய உற்பத்தித் திறன் அடையப் பெறுகிறது.

கழிவுப் பொருள் எனப்படுவது பெரும்பாலான தொழில்களில் முக்கியப் பங்கு வகிக்கிறது. எடுத்துக்காட்டாக 1863 டிசம்பருக்கான தொழிற்சாலை அறிக்கையானது இங்கிலாந்திலும், அயர்லாந்தில் பல்வேறு இடங்களிலும் விவசாயிகள் வெண்சணல் பயிரிட விரும்புவதில்லை அல்லது அரிதாகவே பயிரிடுகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டு அதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்றைப் பின்வருமாறு எடுத்துரைக்கிறது: ''நீர்விசை கொண்டு சணல் கோதும் ஆலைகளில் ஏராளமாய்க் கழிவு விடப்பட்டுள்ளது... பருத்தியில் கழிவு ஒப்பளவில் குறைவுதான். ஆனால் வெண்சணலில் மிக

அதிகம். நீரில் ஊற வைப்பதிலும் தரமான இயந்திர சாதனத்தைக் கொண்டு சணலைக் கோதுவதிலுமான பயன்திறன் இந்த இடர்ப் பாட்டைக் கணிசமாய்க் குறைக்கும்.... அயர்லாந்தில் வெண்சணல் கோதுதல் படுமோசமான முறையில் நடைபெறுகிறது. 28 அல்லது 30 சதவீதம் என்னுமளவுக்குப் பேரிழப்பு இதனால் உண்டா கிறது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1863 டிசம்பர், பக்கம் 139, 142); அதே போது இன்னும் தரமான இயந்திர சாதனத்தைப் பயன்படுத்தி இந்த இழப்பையெல்லாம் தவிர்த்திட லாம். சணற் கூளம் ஏராளமாய் வீணாகிறது. இதனால்தான் தொழிற்சாலை ஆய்வாளர் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டு கிறார்: ''அயர்லாந்திலுள்ள கோதும் ஆலைகள் சிலவற்றைப் பற்றி எனக்குக் கிடைத்துள்ள தகவல் என்னவென்றால், கோதும் ஆலைத் தொழிலாளர்கள் ஆலையின் கழிவுப் பொருட்களை — மதிப்பு மிக்கவையான இவற்றை — வீட்டில் கணப்படுப்புக்குப் பயன்படுத்து கிறார்களாம்'' (மேற்சொன்ன அறிக்கை, பக்கம் 140). பிறகு, கச்சாப் பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களைப் பரிசீலிக்கும் போது பருத்திக் கழிவு பற்றியும் பார்ப்போம்.

கம்பளித் தொழில் வெண்சணல் தொழிலைக் காட்டிலும் சாமர்த்தியம் வாய்ந்ததாய் இருந்தது. ''திரும்பவும் துணியுற்பத்தி செய்வதற்காகக் கம்பளிக் கழிவுகளையும் கூளங்களையும் சேகரித்துத் தயார்படுத்துவதைக் குறை கூறுவது ஒரு காலத்தில் மாமூலாய் இருந்தது. ஆனால் கந்தல் வாணிபத்தைப் பொறுத்த வரை இந்த வேண்டாத அருவருப்பு அடியோடு ஒழிந்து விட்டது. இந்த வாணி பம் யார்க்ஷயர் கம்பளி வாணிபத்தில் முக்கியக் கிளையாகி விட்டது. இதே போல் பருத்திக் கழிவு வாணிபமும் ஒப்புக் கொள்ளப்பட்ட தேவையை நிறைவு செய்ய அவசியமானதாய் ஏற்றுக் கொள்ளப் படும் என்பதில் ஐயமில்லை. இன்னும் முப்பதாண்டு கழிந்த பின் கம்பளிக் கூளங்கள், அதாவது கம்பளியால் ஆன துண்டுத்துணி களும் பழந்துணிகளும் இன்ன பிறவும் டன் சுமார் £4 ஷில்லிங் 4 சராசரி விலைக்கு விற்கப்படும்: கடந்த சில ஆண்டுகளுக்குள் இவற்றின் மதிப்பு டன் £44 ஆகியுள்ளது. இவற்றுக்கான வேண் டல் அதிகரித்ததால், பருத்தியும் கம்பளியும் கலந்த துணிகளின் கூளங்களில் பருத்தியை அழித்து விட்டு கம்பளியை அப்படியே வைத்துப் பயன்படுத்திக் கொள்வதற்கு வழிவகை கண்டுள்ளனர். இப்போது ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கந்தலைக் கொண்டு செய்யப்படும் துணியுற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். மிகச் சாதாரண விலைக்கு சுமாரான தரத்தில் துணி வாங்க முடிவதால் நுகர்வாளர் இதிலிருந்து பெரும் நன்மையடைகிறார்.'' (தொழிற்சாலை ஆய் வாளர் அறிக்கைகள், 1863 அக்டோபர், பக்கம் 107.) 1862 முடிவுவாக்கில் ஆங்கிலேயக் கம்பளித் தொழிலில் பயன்படுத்தப் பட்ட கம்பளியில் மூன்றிலொரு பங்கு உயிர்ப்பிக்கப்பட்ட கந்தலே.

(தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1862 அக்டோபர், பக்கம் 81.) ''நுகர்வாளர்'' அடையும் மற்றொரு ''பெரும் நன்மை'' என்னவென்றால், கந்தலைக் கொண்டு தயாரான இந்த ஆடைகள் சாதாரணமாய் ஆவதில் மூன்றிலொரு பங்கு காலத்தில் உதவாமற் கிழிந்து விடுகின்றன, ஆறிலொரு பங்கு காலத்தில் நூல்நூலாய் நைந்து விடுகின்றன.

ஆங்கிலேயப் பட்டுத் தொழிலும் இவ்வாறே சரிந்து சென்றது. அசல் கச்சாப் பட்டு நுகரப்படுவது 1839க்கும்1862க்கும்இடைப் பட்ட காலத்தில் சற்றே குறைந்தது; அதே போது பட்டுக் கழிவு நுகரப்படுவது இரட்டிப்பாயிற்று. வேறு எந்த விதத்திலும் மதிப்பற்ற தாகிய இக்கழிவுப் பொருளிலிருந்து பற்பல பயனும் கொண்ட ஒரு வகைப் பட்டு தயார் செய்வதற்கு இயந்திர சாதன மேம்பாடுகள் உதவின.

கழிவுப் பொருளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு மிகவும் எடுப்பான உதாரணமாய் இரசாயனத் தொழில் அமைந்திடுகிறது. இத்தொழில் அதன் கழிவையே பயன்படுத்திக் கொள்கிறது, இக் கழிவுக்குப் புதிய உபயோகங்களைக் கண்டறிகிறது என்பதோடு ஏனைய பல்வேறு வகைப்பட்ட தொழில்களின் கழிவுகளையும் பயன்படுத்திக் கொள்கிறது. எடுத்துக்காட்டாக முன்பு அநேகமாய்ப் பயனற்றதாயிருந்த கீலை [gas-tar] நீலச்சாயப் பொருட்களாகவும் அலிசாரின் ஆகவும் சமீப காலத்தில் மருந்துப் பொருட்களாகவும் கூட அது மாற்றித் தருகிறது.

உற்பத்தியின் கழிவுகளைத் திரும்பப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் வரப்பெறுவதான இந்தச் சிக்கனத்தை, வீணாவதைத் தடுப்பதன் மூலம் வரப்பெறும் சிக்கனத்திலிருந்து, அதாவது உற்பத்தி யின் கழிவுகளைக் குறைந்தபட்ச அளவாகக் குறைப்பதன் மூலமும் உற்பத்திக்குத் தேவையான கச்சாப் பொருட்கள் அனைத்தையும் அதிகபட்சமாய் நேரடியாகவே பயன்படுத்திக் கொள்வதன் மூலமும் வரப்பெறும் சிக்கனத்திலிருந்து வேறுபடுத்திப் பார்த்தாக வேண்டும்.

வீணாவதைக் குறைப்பதென்பது உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இயந்திர சாதனத்தின் தரத்தை ஓரளவு சார்ந்துள்ளது. இயந்திர உறுப்புகள் எவ்வளவுக்கு எவ்வளவு துல்லியமாய் செப்பம் செய்யப் பட்டுள்ளனவோ, எண்ணெய், சவக்காரம் போன்றவை அவ்வள வுக்கு அவ்வளவு மிச்சமாகின்றன. இது துணைப்பொருட்களிலான சிக்கனத்தைக் குறிக்கிறது. ஆனால் உற்பத்தி நிகழ்முறையில் எவ்வளவு கச்சாப் பொருள் கழிவாகிப் போகிறது என்பது— ஓரளவுக்கு என்றாலும் மிக முக்கியமாய்—உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இயந்திரங்கள், கருவிகளின் தரத்தையும் பொறுத்ததாகும். முடிவில் இது கச்சாப் பொருளின் தரத்தையுங் கூட பொறுத்ததாகும். கச்சாப் பொருளின் தரமோ அதனை உற்பத்தி செய்கிற எடுபொருள்

உற்பத்தித் தொழில், வேளாண்மை இவற்றின் வளர்ச்சியை (பொதுவாகச் சொன்னால், நாகரிகத்தின் முன்னேற்றத்தை) ஓரளவும், கச்சாப் பொருட்கள் செய்பொருள் உற்பத்தியில் நுழைவதற்கு முன்னால் கடந்து வரும் நிகழ்முறைகளின் வளர்ச்சியை ஓரளவும் சார்ந்துள்ளது.

"ஒப்பளவில் குறுகியதொரு காலத்தில் (பதினான்காம் லூயீ சகாப்தத்துக்குப் பின் வந்த காலத்தில்) பிரான்சில் தானிய அரைவைக் கலை பிரமாதமாய் வளர்ச்சியடைந்திருப்பதாகவும், இதனால் புதிய ஆலைகள் பழையவற்றுடன் ஒப்பிடுகையில் அதே அளவு தானியத்திலிருந்து அரைப் பங்கு அதிக ரொட்டி தயாரித்தளிக்க முடிவதாகவும் பார்மெந்தியே காட்டியுள்ளார். பாரிசில் வருடாந்தர தானிய நுகர்வு ஒவ்வொருவருக்கும் முதலில் 4 செட்டீர் என்றும், பிறகு 3 என்றும், முடிவில் 2 என்றும் மதிப்பீடு செய்யப்பட்டது, இப்போதெல்லாம் 1⅓ செட்டீர் மட்டுமே, அதாவது ஒவ்வொருவருக்கும் சுமார் 342 இராத்தல்.... நான் நீண்ட நாள் வசித்த இடமாகிய பெர்ச்சில் ஆலைகள் ஒழுங்கின்றிக் கட்டப்பட்டவை, அவற்றின் அரைவைக் கற்கள் கருங் கல்லாலும் கடப்பைக் கல்லாலும் ஆனவை. இவற்றில் பெரும்பாலானவை கடந்த முப்பதாண்டு காலத்தில் அதிவிரைவாய் முன்னேறியுள்ள இயந்திரவியல் விதிகளின் படி திருத்திக் கட்டப்பட்டுள்ளன. லாஃபெர்ட்டிலிருந்து தரமான அரவைக் கற்களை கொண்டு வந்து பொருத்தியுள்ளனர், தானியத்தை இரு முறை திரும்பத் திரும்ப அரைக்கின்றனர், அரைவைச் சாக்கு வட்டமாய்ச் சுற்றி வரும்படி செய்யப்பட்டுள்ளது, குறிப்பிட்ட அளவு தானியத்திலிருந்து கிடைக்கும் மாவின் அளவு ஆறிலொரு பங்கு அதிகரித்துள்ளது. ஆகவே ஒவ்வொரு நாளும் நுகரப்படும் தானியத்தின் அளவில் காணப்படும் மிகப்பெரும் வேறுபாட்டுக்கு விளக்கம் காண்பது எளிதாகிறது. தானியம் அரைப்பதிலும் ரொட்டி தயாரிப்பதிலுமான செப்பமற்ற வழிமுறைகள்தான் இந்த வேறுபாட்டுக்கு ஒரே காரணமென்று அறிய முடிகிறது. பிளினி (XVIII., அத்தியாயம் 20, 2) எடுத்துக் காட்டும் அந்தக் குறிப்பிடத்தக்க நிலவரத்துக்கும் கூட இதுவே காரணமாய் இருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது: ...'ரோமாபுரியில் மாவு அதன் தரத்தைப் பொறுத்து **மோடியஸ்** ஒன்றுக்கு 40, 48 அல்லது 96 ஆஸ் விலைக்கு விற்கப்பட்டது. அக்காலத்திய தானிய விலைகளோடு ஒப்பிடுகையில் இந்த மாவு விலைகள் மிக அதிகமாய் இருப்பதற்கு அக்காலத்திய ஆலைகள் செப்பமுறாமல் இளம்பிராய நிலையில் இருந்ததும் அதனால் அரைவைச் செலவுகள் உயர்ந்து இருந்ததுமே காரணம்.'" (Dureau de la malle, *Economie Politique des Romains*, பாரிஸ், 1840, I., பக்கம் 280-81.)

## V. கண்டுபிடிப்புகள் வாயிலாய் வரப்பெறும் சிக்கனம்

முன்பே நாம் கூறியதுதான்: நிலை-மூலதனத்தைப் பயன்படுத்துவதிலான இந்தச் சிக்கனத்துக்கு ஆதாரமாய் இருப்பது உழைப்புச் சாதனங்கள் பெருவீதத்தில் ஈடுபடுத்தப்படுவதே. சுருங்கச் சொன்னால், நேரடிச் சமுதாய உழைப்பின், அதாவது சமூக மயமாக்கப்பட்ட உழைப்பின், அல்லது உற்பத்தி நிகழ்முறைக் குட்பட்ட நேரடிக் கூட்டு-வேலையின் சாதனங்களாக இவை பயன் படுவதே இச்சிக்கனத்துக்கு ஆதாரமாகிறது. ஒரு புறம் சரக்கின் விலையை உயர்த்தாமலே இயந்திரவியல், வேதியியல் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இது அவசியத் தேவையாகும், எப்போதும் இதுவே இன்றியமையா நிபந்தனையாகும். மறு புறம் உற்பத்தி பெருவீதத்தில் நடைபெறும் போது மட்டுமே கூட்டு-வேலை முறையிலான திறனுடை நுகர்விலிருந்து வரப்பெறும் சிக்கனங்களுக்கு இடமளிக்கிறது. ஆனால் முடிவில் எங்கே எப்படிச் சிக்கனம் செய்வது, பழைய கண்டுபிடிப்புகளை எப்படி வளர்ப்பது, தத்துவத்தைச் செயலாக்குவதில், அதாவது உற்பத்தி நிகழ்முறைக்கு அதைப் பிரயோகிப்பதில் எழுந்திடும் நடைமுறைத் தடைகள்ளை எப்படிச் சமாளிப்பது என்பதையெல்லாம் ஒன்றிணைந்த தொழிலாளியின் அனுபவம்தான் கண்டறிந்து வெளிப்படுத்துகிறது.

சர்வப்பொது உழைப்பையும் [universal labour] கூட்டுமுறையிலமைந்த உழைப்பையும் [co-operative labOur] வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். இரண்டுமே உற்பத்தி நிகழ்முறையில் அதனதன் பங்கினை ஆற்றுகின்றன, ஒன்றோடொன்று கலந்து ஊடாடுகின்றன, ஆனாலும் அவை வேறுபட்டவைதான். சர்வப்பொது உழைப்பு என்பதெல்லாம் முழுக்க முழுக்க விஞ்ஞான உழைப்பு மட்டுமே, வெளிப்படுத்தலும் கண்டுபிடித்தலும் மட்டுமே. இந்த உழைப்பானது இப்போது உயிர்வாழும் மனிதர்களின் கூட்டு-வேலையை ஓரளவும், வாழ்ந்து மறைந்தவர்களின் உழைப்பை பயன்படுத்திக் கொள்வதை ஓரளவும் சார்ந்திருப்பதாகும். ஆனால் கூட்டுமுறையிலமைந்த உழைப்பு என்பது தனியாட்களின் நேரடிக் கூட்டு-வேலையைக் குறிப்பதாகும்.

அடிக்கடி கவனத்துக்கு வருகிற சில விவரங்கள் இதற்கெல்லாம் சான்றாகின்றன:

*1)* ஒரு புதிய இயந்திரத்தின் முதல் மாதிரியைத் தயாரிப்பதற்காகும் செலவுக்கும் அதை மறுவுற்பத்தி செய்வதற்காகும் செலவுக்கும் இடையில் பெருத்த வேறுபாடு உள்ளது (*பார்க்கவும்: யூர்* * *மற்றும் பாபேஜ்* **).

---

* ஆ. யூர், **ஆலைத் தொழில்களின் தத்துவம்**, இரண்டாம் பதிப்பு, லண்டன், *1855.* — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

** *சா. பாபேஜ்,* **இயந்திர சாதனம் மற்றும் தொழில்களின் சிக்கனம் பற்றி**, லண்டன். *1832,* பக்கம் *280-81.* — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

2) புதிய கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் ஒரு தொழில் முனைவை நிறுவுவதற்காகும் செலவு அது அழிந்த போன பிறகு அதன் சிதிலங்களிலிருந்து எழுகிற பிற்காலத்திய நிறுவனங்களுக்கு ஆகும் செலவை விட மிக அதிகமாய் உள்ளது. எந்த அளவுக்கு அதிகமாய் உள்ளது என்றால் முன்னோடித் தொழில் முனைவர்கள் பெரும்பாலும் போண்டியாகி விடுகின்றனர், பிறகு வருகிறவர்கள் தான் கட்டடங்களையும் இயந்திர சாதனத்தையும் இன்ன பிறவற்றை யும் குறைந்த விலைக்கு வாங்க முடிவதால் செழிப்படைகின்றனர். ஆகவேதான் பண முதலாளிகளில் தகுதியோ சிறப்போ கொஞ்ச மும் இல்லாதவர்கள் மானுட சாரத்தினது சர்வப்பொது உழைப் பின் புதிய வளர்ச்சிகள் யாவற்றையும், ஒன்றிணைந்த உழைப்பின் வாயிலான அவற்றின் சமுதாயப் பிரயோகத்தையும் பயன்படுத்தி மிகப்பெரும் இலாபம் பெறுவது வழக்கமாய் உள்ளது.

# அத்தியாயம் VI

## விலை ஏற்ற இறக்கங்களின் விளைவு

### I. கச்சாப் பொருட்களின் விலையிலான ஏற்ற இறக்கங்களும், இலாப வீதத்தின் மீது அவற்றின் நேரடி விளைவுகளும்

முன்போலவே இங்கேயும், உபரி-மதிப்பு வீதத்தில் மாற்ற மில்லையெனக் கொள்கிறோம். இப்போது நம் பரிசீலனைக்குரிய தாய் இருப்பதை அதன் தூய வடிவில் பகுத்தாய்வதற்கு இந்த அனுமானம் அவசியமாகிறது. எப்படியானாலும், உபரி-மதிப்பு வீதம் மாறாதிருக்கும் போதே குறிப்பிட்ட ஒரு மூலதனம் வேலைக் கமர்த்தும் தொழிலாளர் தொகை அதிகரிக்கவோ குறையவோ செய்யலாம்; கச்சாப் பொருட்களின் விலையிலான ஏற்ற இறக்கங் களால்—இங்கு நாம் ஆராயப் போவது இவற்றைத்தான்—ஏற்படும் சுருக்கமோ பெருக்கமோதான் இதற்குக் காரணம். இந்நிலையில் உபரி-மதிப்பு வீதம் மாறாதிருந்தாலும் கூட உபரி-மதிப்பின் அளவு மாறலாம்; இது ஒரு துணை விளைவே ஆதலால் இங்கு இதைக் கருதாமல் விட்டுவிடுகிறோம். இயந்திர சாதன மேம்பாடுகளும் கச்சாப் பொருட்களின் விலையிலான மாற்றங்களும் குறிப்பிட்ட மூலதனம் வேலைக்கமர்த்தும் தொழிலாளர் தொகையிலோ அல்லது கூலி மட்டத்திலோ ஒருங்கே தாக்கம் செலுத்துமானால், (1) மாறா-மூலதனத்திலான மாற்றங்கள் இலாப வீதத்தின் மீது ஏற்படுத்தும் விளைவையும் (2) கூலியிலான மாற்றங்கள் இலாப வீதத்தின் மீது ஏற்படுத்தும் விளைவையும் ஒன்றாய் இணைத்திட வேண்டும்; அவ்வளவுதான். உடனே முடிவு கிடைத்து விடுகிறது.

முன்போலவே இங்கேயும் கவனிக்க வேண்டியது என்னவென்றால், மாறா-மூலதனத்தைப் பயன்படுத்துவதிலான சிக்கனத்தி லிருந்து விளைகிற மாற்றங்களைப் போலவே, கச்சாப் பொருட் களின் விலையிலான ஏற்ற இறக்கங்களிலிருந்து [fluctuations] விளைகிற மாற்றங்களும்—இவை கூலியிலும் எனவே உபரி-மதிப்பு வீதத்திலும் உபரி-மதிப்பின் அளவிலும் சிறு சலனத்தையும் ஏற் படுத்தா விட்டாலுங்கூட—எப்போதுமே இலாப வீதத்தில் தாக்கம்

செலுத்துகின்றன. இந்த மாற்றங்கள் $s'\frac{v}{C}$ என்பதில் C இன் மதிப்பையும், இவ்விதம் இந்தப் பின்னம் -முழுவதன் மதிப்பையும் மாறச் செய்கின்றன. இந்த மாற்றங்கள் எந்தெந்த உற்பத்தித் துறைகளில் ஏற்படுகின்றன? இவற்றின் தாக்கத்துக்குள்ளாகும் தொழிற் கிளைகள் தொழிலாளர்களுக்கான வாழ்வுச் சாதனங்களை உற்பத்தி செய்கிறவையா, அல்லவா? அல்லது இந்த வாழ்வுச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கான மாறா-மூலதனத்தை உற்பத்தி செய்கிறவையா, அல்லவா? — இதெல்லாம் இங்கு கருத்துக்குரியதே அல்ல (உபரி-மதிப்பை நாம் ஆராய்ந்த போது இருந்த நிலைமைக்கு மாறானது இது). இங்கு சொல்லப்பட்டிருப்பவை யாவும் சொகுசுப் பண்டங்களின் உற்பத்தியில் இந்த மாற்றங்கள் ஏற்படுகிற போதும் பொருந்தக் கூடியவைதான். உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்திக்குத் தேவையில்லாத உற்பத்தியனைத்தையும் இங்கே சொகுசுப் பண்ட உற்பத்தி என்கிறோம்.

அவுரி, நிலக்கரி, வாயு போன்ற துணைப் பொருட்களையும் சேர்த்தே இங்கு கச்சாப் பொருள் என்று குறிப்பிடுகிறோம். மேலும் இயந்திர சாதனத்தையும் இவ்வினத்தில் வைத்துப் பரிசீலிக்கிற அளவில், அதன் ஆக்கத்துக்கே ஆன கச்சாப்பொருள் என்பது இரும்பு, மரம், தோல் போன்றவையாகும். ஆகவே இயந்திர சாதனக் கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் கச்சாப்பொருட்களின் விலையிலான ஏற்ற இறக்கங்கள் இயந்திர சாதனத்தின் விலையிலும் தாக்கம் செலுத்துகின்றன. இயந்திர சாதனமாய் உருப்பெறும் கச்சாப் பொருட்களின் விலையிலோ அது இயங்குவதற்கு அவசியமான துணைப்பொருட்களின் விலையிலோ ஏற்படும் ஏற்ற இறக்கங்களின் விளைவாக அதன் விலை உயர்ந்திடுமானால் இலாப வீதம் அதற்கேற்பக் குறைந்திடும், அதன் விலை குறைந்திடுமானால் இலாப வீதம் அதற்கேற்ப உயர்ந்திடும்.

அடுத்து வரும் பகுப்பாய்வில் சரக்கின் உற்பத்தி நிகழ்முறையில் உள்ளபடியே பங்கேற்கிற கச்சாப் பொருட்களின் விலையிலான ஏற்ற இறக்கங்களை மட்டும் கருத்தில் கொள்கிறோம், உழைப்புச் சாதனங்களாகப் பயன்படும் இயந்திர சாதனத்தின் கச்சாப் பொருட்களையும் அதன் இயக்கத்துக்கு அவசியமான துணைப் பொருட்களையும் கவனியாது ஒதுக்கி விடுகிறோம். இங்கு குறிப்பிட்டாக வேண்டிய ஒரே ஒரு விவரம் என்னவென்றால், இயந்திர சாதனத்தின் கட்டுமானத்திலும் இயக்கத்திலும் முக்கியக் கூறுகளாகிய இரும்பு, நிலக்கரி, மரம் போன்றவற்றின் உருவிலான இயற்கைச் செல்வமானது இங்கே மூலதனத்திற்குரியதோர் இயற்கை வளமையாகக் காட்சி தருகிறது, கூலி மட்டம் உயர்ந்திருந்தாலும் தாழ்ந்திருந்தாலும் இலாப வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகளில் இதுவும் ஒன்றாகிறது.

இலாப வீதம் $= \frac{s}{C} = \frac{s}{c+v}$. ஆகவே s உம் v உம் அவற்றிற்கிடையிலான விகித உறவும் மாறாமலிருந்தாலும் கூட cஇன் பருமனிலும் இவ்விதம் Cஇன் பருமனிலும் மாற்றம் உண்டாகச் செய்கிற ஒவ்வொன்றும் இலாப வீதத்திலும் மாற்றம் உண்டாகச் செய்கிறது என்பது தெளிவு. கச்சாப் பொருளானது மாறா-மூலதனத்தின் முக்கிய அடக்கக் கூறுகளில் ஒன்றாகும். பிரத்தியேகமாய் எந்தவொரு கச்சாப் பொருளையும் பயன்படுத்தாத் தொழிற் கிளைகளிலும் கூட துணைப் பொருளாகவோ இயந்திர சாதனத்தின் ஆக்கக் கூறுகள் போன்றவையாகவோ கச்சாப் பொருள் இடம் பெறவே செய்கிறது, அதன் விலையிலான ஏற்ற இறக்கங்களும் இலாப வீதத்தில் உரியவாறு தாக்கம் செலுத்தவே செய்கின்றன: கச்சாப் பொருளின் விலையான்து d என்னுமளவு குறைவதாகக் கொள்வோம், $\frac{s}{C}$ அல்லது $\frac{s}{c+v}$ இதனால் $\frac{s}{C-d}$ அல்லது $\frac{s}{(c-d)+v}$ ஆகி விடுகிறது, இலாப வீதம் உயர்கிறது. மாறாக கச்சாப் பொருளின் விலை உயர்ந்தால் $\frac{s}{C}$ அல்லது $\frac{s}{c+v}$ இதனால் $\frac{s}{C+d}$ அல்லது $\frac{s}{(c+d)+v}$ ஆகி விடுகிறது, இலாப வீதம் குறைகிறது. ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க, இலாப வீதமானது கச்சாப் பொருளின் விலைக்கு எதிர் விகிதத்தில் உயர்கிறது அல்லது குறைகிறது. கச்சாப் பொருளின் விலையிலான ஏற்ற இறக்கங்களோடு கூடவே பண்டத்தின் விற்பனை வட்டத்தில் ஏற்ற இறக்கங்கள் நேரிடா விட்டாலும், அதாவது வேண்டலுக்கும் வழங்கலுக்குமான உறவு எப்படியிருந்தாலும், கச்சாப் பொருள் குறைந்த விலைக்குக் கிடைப்பது தொழில்வள நாடுகளுக்கு எவ்வளவு முக்கியம் என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது. அயல் வர்த்தகமானது அவசியப் பண்டங்களை விலைமலிவாக்கி, கூலியில் ஏற்படுத்தும் விளைவு எத்தகையதாய் இருந்தாலும் அது எப்படி இலாப வீதத்தின் மீது தாக்கம் செலுத்துகிறது என்பதும் கூட தெளிவாகிறது. தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் பயன்படுத்தப்படும் கச்சாப் பொருட்கள் அல்லது துணைப் பொருட்களின் விலைகளை அயல் வர்த்தகம் பாதிப்பது குறிப்பிடத்தக்கது. இலாப வீதத்தின் இயல்பும், உபரி-மதிப்பு வீதத்திலிருந்து அது பிரத்தியேகமாக வேறுபடுவதும் சரிவரப் புரிந்து கொள்ளப்படவில்லை; இதனால்தான், ஒரு பக்கத்தில், இலாப வீதத்தின் மீது கச்சாப் பொருள் விலைகள் செலுத்தும் பெரும் தாக்கத்தை நடைமுறை அனுபவத்தின் வாயிலாக அறிந்து அதற்கு அழுத்தம் கொடுக்கிற பொருளாதார அறிஞர்கள் அதனைத் தவறான முறையில் விளக்குகிறார்கள் (உதாரணம்: டாரென்ஸ்*); மறு பக்கத்தில், பொதுக் கோட்பாடுகளை உறுதியாகப்

* ரா. டாரென்ஸ், **செல்வ உற்பத்தி பற்றிய கட்டுரை**, லண்டன், 1821, பக்கம் 28 முதலானவை. — **ஆங்கிலப் பதிப்பாசிரியர்.**

பற்றிக் கொண்டிருக்கும் பொருளாதார அறிஞர்கள் உலக வர்த்தகம் போன்றவை இலாப வீதத்தின் மீது செலுத்தும் தாக்கத்தை ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள் (உதாரணம்: ரிக்கார்டோ*).

கச்சாப் பொருட்கள் மீதான சுங்கத் தீர்வைகளை ஒழிப்பது அல்லது குறைப்பது தொழில் துறைக்கு எவ்வளவு முக்கியமான தென்று இதிலிருந்து புரிந்து கொள்ளலாம். காப்பு வரி முறை அறிவார்ந்த வடிவில் வளர்ந்து வந்த போது, கச்சாப் பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வைகளை முடிந்த வரை குறைக்க வேண்டு மென்பது அதன் ஆதாரக் கோட்பாடுகளில் ஒன்றாயிற்று. இதுவும், தானிய வரியை ஒழிப்பதும் தான் ஆங்கிலேயத் தடையிலா வாணிபக் காரர்களின் முக்கியக் குறிக்கோளாய் இருந்தது. இந்த முறையில் தான் அவர்கள் பஞ்சுத் தீர்வைக்கு முடிவு கட்டுவதிலும் குறியாய் இருந்தார்கள்.

முறையான கச்சாப் பொருள் அல்லாத துணைப் பொருளும் கூட விலை மலிவாய் இருப்பது எவ்வளவு முக்கியமானது என் பதற்கு எடுத்துக்காட்டாக பருத்தித் தொழிலில் பயன்படுத்தப்படும் மாவைக் குறிப்பிடலாம்; மாவு துணைப் பொருளாகப் பயன்படு வதோடல்லாமல் பிரதான உணவுப் பொருளாகவும் இருப்பதாகும். 1837 இலேயே ரா. ஹெ. கிரெக் கணக்கிட்டுச் சொன்னார்:[13] மகா பிரிட்டனைச் சேர்ந்த பருத்தியாலைகளில் அப்போது இயங்கி வந்த 100,000 விசைத் தறிகளும் 250,000 கைத்தறிகளும் பாவு நூலை வழவழப்பாக்குவதற்கு ஆண்டொன்றுக்கு 41 மிலியன் இராத்தல் வீதம் மாவு பயன்படுத்தின. வெளுப்பதற்கும் ஏனைய நிகழ்முறை களுக்கும் இதில் மூன்றிலொரு பங்கு மாவு கூடுதலாய்த் தேவைப் பட்டது. இவ்விதம் பயன்படுத்தப்பட்ட மாவின் மொத்த மதிப்பு முந்தைய பத்தாண்டு காலத்தில் ஆண்டொன்றுக்கு £342,000 என்பதாக கிரெக் கணக்கிட்டார். கண்டத்தில் நிலவிய மாவு விலை களுடன் ஒப்புநோக்கிய போது, தானிய வரிகளால் ஏற்பட்ட மாவு விலை உயர்வு ஆலையதிபர்கள் மீது ஏற்றிய சுமை ஓராண்டில் சுமார் £170,000 என்று தெரிந்தது. 1837 இல் இச்சுமை குறைந்த பட்சம் £200,000 ஆனதாய் கிரெக் மதிப்பீடு செய்கிறார், ஒரே ஒரு தொழில் நிறுமத்துக்கு இந்த மாவு விலை மிகைப்பாடு ஆண் டொன்றுக்கு £1,000 ஆயிற்று என்கிறார். இதனால்தான் ''யோசித் துக் கணக்கிட்டுக் காரியமாற்றும் தொழில் துறைப் பெரும் புள்ளி களாம் ஆலையதிபர்கள் தானியச் சட்டங்கள் ரத்து செய்யப்படு மானால் பத்து மணி நேர உழைப்பே போதுமென்று சொல்லி

* டே. ரிக்கார்டோ, **அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் மற்றும் வரி விதிப்பு குறித்து**, மூன்றாம் பதிப்பு, லண்டன், 1821, பக்கம் 131-38. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

13 ரா. ஹெ. கிரெக் எழுதிய **தொழிற்சாலைப் பிரச்சினையும் பத்து மணி நேர மசோதாவும்**, லண்டன், 1837, பக்கம் 115.

விட்டார்கள்.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1848 அக்டோபர், பக்கம் 98.) தானியச் சட்டங்கள் ரத்து செய்யப் பட்டன. பருத்திக்கும் ஏனைய கச்சாப் பொருட்களுக்குமான தீர்வை களும் ரத்து செய்யப்பட்டன. ஆனால் இது நடைபெற்ற உடனேயே ஆலையதிபர்கள் பத்து மணி நேர மசோதாவை முன்னெப்போதை யும் விட மூர்க்கமாய் எதிர்த்தனர். இந்த எதிர்ப்பையும் மீறி தொழிற் சாலையில் பத்து மணி நேர வேலை-நாள் என்பது விரைவிலேயே சட்டமாயிற்று; இதன் முதல் விளைவாக, பொதுவாய் எல்லா இடங்களிலும் கூலியைக் குறைப்பதற்கு முயற்சி செய்தனர்.

கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்களின் மதிப்பானது அப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பண்டத் தின் மதிப்பில் ஒருங்கே முழுமையாகச் சேர்ந்து விடுகிறது; நிலை-மூலதனக் கூறுகளின் மதிப்போ அவ்ற்றின் தேய்மானத்திற்கேற்ப சன்னம் சன்னமாகவே பண்டத்தின் மதிப்பில் சேருகிறது. இதி லிருந்து பெறப்படுவது என்னவென்றால், மூலதனத்தின் மொத்த மதிப்பில் உற்பத்திப் பண்டத்தின் ஆக்கத்திற்காக நுகரப்படுவது எவ்வளவானாலும் இலாப வீதம் அம்மொத்த மதிப்பாலேயே நிர்ணயிக்கப்படுகிறது என்றாலுங்கூட உற்பத்திப் பண்டத்தின் விலையில் நிலை-மூலதனத்தின் வில்லையைக் காட்டிலும் கச்சாப் பொருளின் விலையே மிக அதிகமாய்த் தாக்கம் செலுத்துகிறது. ஆனால் சந்தை விரிவடைவதோ குறுகுவதோ தனியொரு பண்டத் தின் விலையைப் பொறுத்தது, இந்த விலையின் ஏற்றம் அல்லது இறக்கத்துக்கு எதிர் விகிதத்தில் நடைபெறுவது என்பது கண்கூடு (நாம் இதைப் போகிற போக்கில் சொல்லி வைக்கிறோம் என்பத தற்கு மேல் ஒன்றுமில்லை, ஏனென்றால் இங்கேயும் கூட சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே விற்கப்படுவதாகத்தான் கொள்கிறோம், போட்டி காரணமாய் ஏற்படும் விலை ஏற்ற இறக்கங்களை இன்ன மும் கவனியாது ஒதுக்கி விடவே செய்கிறோம்). ஆகவே உண்மை யில் என்ன நடக்கிறது என்றால், கச்சாப் பொருளின் விலை உயரும் அதே விகிதத்தில் உற்பத்திப் பண்டத்தின் விலை உயரு வதில்லை, கச்சாப் பொருளின் விலை குறையும் அதே விகிதத்தில் உற்பத்திப் பண்டத்தின் விலை குறைவதும் இல்லை. ஆதலால், கச்சாப் பொருளின் விலை உயர்ந்தால் ஏற்படும் இலாப வீதக் குறைவும் கச்சாப் பொருளின் விலை குறைந்தால் ஏற்படும் இலாப வீத உயர்வும் சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே விற்கப்பட்டால் ஏற்படுவதை விட அதிகமாய் இருக்கும்.

மேலும், ஈடுபடுத்தப்படும் இயந்திர சாதனத்தின் அளவும் மதிப் பும் உழைப்பின் உற்பத்தித் திறன் உயர உயர வளர்ந்து சென்ற போதிலும் அதே விகிதத்தில் வளர்ந்து செல்வதில்லை, அதாவது இந்த இயந்திர சாதனத்தால் உற்பத்தி செய்யப்படும் பண்டம் அதிகரிக்கிற அதே விகிதத்தில் வளர்ந்து செல்வதில்லை. ஆகவே

கச்சாப் பொருட்களைப் பயன்படுத்திக் கொள்கிற, அதாவது உழைப்பின் இலக்குப் பொருளே முற்கால உழைப்பின் உற்பத்திப் பொருளாய் இருக்கிற தொழிற் கிளைகளில், உழைப்பின் உற்பத்தித் திறன் உயருவதானது குறிப்பிட்ட அளவு உழைப்பை உட்கிரகிக்கும் கச்சாப் பொருளின் அளவு அதிகரிப்பதில், அதாவது (உதாரண மாக) ஒரு மணி நேரத்தில் பண்டங்களாக மாற்றப்படுகிற, சரக்கு களாகச் செய்யப்படுகிற கச்சாப் பொருளின் அளவு அதிகரிப்பதில் துல்லியமாய் வெளிப்படுகிறது. இவ்வாறு, உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்ந்து செல்லும் அதே விகிதத்தில் கச்சாப் பொருளின் மதிப்பானது சரக்கு-உற்பத்தியின் [commodity-product] மதிப்பில் மேலும் மேலும் பெரிதாகிச் செல்கிற ஓர் அடக்கக் கூறாகிறது; கச்சாப் பொருளின் மதிப்பு சரக்கின் மதிப்பில் முழுமொத்தமாய் சேருவது மட்டுமல்ல காரணம், மொத்த உற்பத்தியின் ஒவ்வோர் ஈவுப் பங்கிலும் இயந்திர சாதனத்தின் தேய்மானத்தைக் குறிப்பதும் புதிதாய்ச் சேர்த்த உழைப்பைக் குறிப்பதும் ஆகிய இரு பகுதிகளுமே ஓயாமல் சரிந்து செல்வதும் கூட இதற்குக் காரணமாகும். இவை இப்படிச் சரிந்து செல்லும் போக்கின் விளைவாக, மதிப்பின் மற்றோர் அடக்கக் கூறாகிய கச்சாப் பொருளைக் குறிக்கும் கூறு ஒப்பளவில் வளர்ந்து செல்கிறது; ஆனால் கச்சாப் பொருளை உற்பத்தி செய்திடும் உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்ந்து சென்று அதனால் அப்பொருளின் மதிப்பில் ஏற்படக் கூடிய சரிவு மேற் கூறிய ஒப்பளவிலான வளர்ச்சியை இல்லாமற் செய்து விடுவதும் சாத்தியமே.

மேலும், கூலியைப் போலவே, கச்சாப் பொருட்களும் துணைப் பொருட்களும் சுழல்-மூலதனத்தின் அடக்கக் கூறுகளாகும்; ஆகவே உற்பத்திப் பொருளை விற்று ஓயாமல் இவற்றை முழுமையாக மாற்றீடு செய்து வர வேண்டும். ஆனால் இயந்திர சாதனத்தைப் பொறுத்த வரை தேய்மானமாவதை மட்டும் மாற்றீடு செய்தாக வேண்டும்; இந்த மாற்றீடு முதலில் ஒரு சேம நிதியாகவே உருப் பெறுகிறது. வருடாந்தர மொத்த விற்பனையிலிருந்து இந்தச் சேம நிதியின் வருடாந்தரப் பங்குக்கு உரியது கிடைத்து வரும் வரை ஒவ்வொரு தனிப்பட்ட விற்பனையிலிருந்தும் இந்நிதிக்குப் பங்கு கிடைக்க வேண்டிய அவசியமே இல்லை. கச்சாப் பொருளின் விலை உயருவதானது எப்படி மறுவுற்பத்தி நிகழ்முறை முழுவதை யும் குறுக்கவோ தடுக்கவோ கூடும் என்பதை இங்கேயும் பார்க்க முடிகிறது. ஏனென்றால் சரக்கை விற்று அடையப்பெறும் விலை அதன் அடிக்கூறுகள் அனைத்தையும் மாற்றீடு செய்வதற்கு இப் போது போதுமானதாய் இருக்கவில்லை. அல்லது, உற்பத்தி நிகழ் முறையை அதன் தொழில் நுட்ப அடிப்படைக்கு ஏற்ற அளவு வீதத்தில் தொடர்ந்து நடத்த முடியவில்லை. எனவே இயந்திர சாதனத்தில் ஒரு பகுதி மட்டுமே தொடர்ந்து இயங்க முடிகிறது,

இல்லையேல் முழு இயந்திர சாதனமும் வழக்கமான நேரத்தில் ஒரு பகுதி மட்டுமே இயங்க முடிகிறது.

முடிவில், கழிவுப் பொருளால் ஏற்படும் செலவுகள் கச்சாப் பொருளின் விலை ஏற்ற இறக்கங்களுக்கு நேர் விகிதத்தில் மாறு கின்றன, கச்சாப் பொருளின் விலை உயரும் போது இச்செலவு களும் உயர்கின்றன, அது குறையும் போது இவையும் குறைகின்றன. ஆனால் இதற்கும் ஓர் எல்லையுண்டு. 1850 ஏப்ரலுக்கான தொழிற் சாலை அறிக்கை சுட்டிக் காட்டியதாவது: ''கச்சாப் பொருளின் விலை ஏறும் போது கணிச அளவில் இழப்பு ஏற்படுகிறதென்றால் அதற்கு ஒரு காரணம்—இது நூற்பு வேலையில் ஈடுபட்டிருப்ப வரைத் தவிர வேறெவருக்கும் தெரிந்திருப்பதற்கில்லை—கழிவுப் பொருளால் ஏற்படுவதாகும். பருத்தி விலை ஏறும் போது, நூற் பாளருக்கு, அதிலும் மட்ட ரகங்களை நூற்கிறவருக்கு ஏற்படும் செலவினது அதிகரிப்பின் விகிதம் உள்ளபடியே அவர் கொடுக்கும் விலையேற்றத்தின் விகிதத்தையும் விஞ்சும் படியானது. ஏனென் றால் மோட்டா ரக நூல் நூற்பதில் ஏற்படும் கழிவு முழுதாக 15 சதவீதமாகும்; இராத்தலுக்கு 3½ பென்னி விலையுள்ள பருத்திக்கு இராத்தலுக்கு ½ பென்னி வீதம் இழப்பு ஏற்படுகிறது; பருத்தி விலை 7 பென்னியாக உயரும் போது இழப்பு இராத்தலுக்கு 1 பென்னியாய் உயர்ந்து விடுகிறது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1850 ஏப்ரல், பக்கம் 17.) ஆனால் அமெரிக்க உள்நாட்டுப் போரின் விளைவாக, பருத்தி விலை ஏறத்தாழ நூறாண்டு காலத்தில் ஏறாத உயரத்துக்கு ஏறி விட்ட போது அறிக்கையின் சுருதியே மாறிப் போனது: ''கழிவுப் பொருளுக்கு இப்போது தரப்படுகிற விலையும், அது பருத்திக் கழிவின் உருவில் தொழிற்சாலையில் மீண்டும் நுழைக்கப்படுவதும் கழிவுப் பொருள் வகையிலான இழப்பில் சூரத் பருத்திக்கும் அமெரிக்கப் பருத்திக்கும் இடையிலான சுமார் 12½ சதவீத வேறுபாட்டை சரிக்கட்ட சற்றே உதவுகின்றன.

''சூரத் பருத்தியை நூற்கையில் ஏற்படும் கழிவுப் பொருள் 25 சதவீதம் ஆகும் என்ற நிலையில், பருத்திக்காக நூற்பாளர் செய்யும் செலவு, அவர் அதனை நூலாக்குவதற்கு முன்பே இதனால் கால் பங்கு கூடுதலாகி விடுகிறது. அமெரிக்கப் பருத்தியின் விலை இராத் தல் ஒன்றுக்கு 5 அல்லது 6 பென்னியாக இருந்த போது, கழிவுப் பொருளால் ஏற்படும் இழப்பு குறிப்பிடத்தக்கதாய் இருக்கவில்லை; ஏனென்றால் அது இராத்தல் ஒன்றுக்கு ¾ பென்னிக்கு மேல் போகவில்லை. ஆனால் இப்போது பருத்தி விலை இராத்தல் ஒன்றுக்கு 2 ஷில்லிங் ஆகி விட்டது, கழிவுப் பொருளால் ஏற்படும் இழப்பு இராத்தல் ஒன்றுக்கு 6 பென்னி ஆகி முக்கியத்துவம்

பெற்று விட்டது.''[14] (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், *1863* அக்டோபர், பக்கம் *106*.)

## II. மூலதனத்தின் மதிப்பேற்றமும் மதிப்பிறக்கமும் விடுவிப்பும் முடக்கமும்

இந்த அத்தியாயத்தில் பரிசீலிக்கப்படும் நிகழ்வுகள் முழு வளர்ச்சி பெறுவதற்கு கடன்-செலாவணி அமைப்பும் [credit system] உலகச் சந்தையில் [world-market] வியாபாரப் போட்டியும் தேவைப்படுகின்றன; இந்தப் போட்டிதான் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் அடித்தளமும் ஜீவாதாரமும் ஆகும். ஆனால் மூலதனத்தின் பொது இயல்பை புரிந்து கொண்ட பிறகு தான் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் இந்த ஸ்தூல வடிவங்களைப் பரிபூரணமாய் வரைந்து காட்ட முடியும்; மேலும் இவ் வடிவங்கள் இந்நூலின் ஆய்வெல்லைக்கு உட்பட்டவையல்ல, பின்னால் வரக் கூடிய இதன் தொடர்ச்சியையே சேர்ந்தவை. என்றாலும் இந்தப் பிரிவுக்கான தலைப்பில் வரிசையாய்க் குறிப்பிட்டுள்ள நிகழ்வுகளை இங்கே பொதுவாகப் பரிசீலிக்கலாம். இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாய் இருப்பதோடு இலாப வீதம், இலாப அளவு ஆகியவற்றுக்கும் கூட தொடர்புடையவையாய் இருக்கின்றன. இதற்காகவே இவற்றை இங்கு சுருக்கமாய்ப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. ஏனென்றால் இலாப வீதம் மட்டுமல்லாமல் இலாப அளவும் கூட (இலாப அளவு என்றாலும் உபரி-மதிப்பளவு என்றாலும் ஒன்றுதான்) உபரி-மதிப்பின் அசைவியக்கங்களை — உபரி-மதிப்பளவின் அசைவியக்கங்களை ஆனாலும் சரி, உபரி-மதிப்பு வீதத்தின் அசைவியக்கங்களை ஆனாலும் சரி — சாராமல் அதிகரிப்பதோ குறைவதோ சாத்தியமே.

மூலதனத்தின் விடுவிப்பையும் [release] முடக்கத்தையும் [tie-up] ஒரு பக்கத்திலும், அதன் மதிப்பேற்றத்தையும் [appreciation] மதிப்பிறக்கத்தையும் [depreciation] மறு பக்கத்திலும் வைத்து வெவ்வேறு நிகழ்வுகளாகப் பரிசீலிக்க வேண்டுமா?

முதற் கேள்வி இதுதான்: மூலதனத்தின் விடுவிப்பு என்றும் முடக்கம் என்றும் சொல்கிறோமே, அது என்ன? மதிப்பேற்றம்,

---

[14] எங்கெல்ஸ் குறிப்பு. — அறிக்கையின் கடைசி வாக்கியத்தில் ஒரு பிழை உள்ளது. கழிவுப் பொருளால் ஏற்படும் இழப்பு 6 பென்னி என்பதற்கு பதில் 3 பென்னி என்றிருக்க வேண்டும். இந்த இழப்பு சூரத் பருத்திக்கு 25%, அமெரிக்கப் பருத்திக்கு 12½ முதல் 15% மட்டுமே. இந்த அமெரிக்கப் பருத்தியைத்தான் ஆசிரியர் இங்கு குறிப்பிடுகிறார், இராத்தல் ஒன்றுக்கு 5 முதல் 6 பென்னி விலை வைத்து இந்த சதவீதம் சரியாகவே கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், உள்நாட்டுப் போரின் பிந்திய ஆண்டுகளில் ஐரோப்பாவுக்கு ஏற்றி வந்த அமெரிக்கப் பருத்தியில் கழிவுப் பொருளின் விகிதம் அடிக்கடி முன்னைக் காட்டிலும் கணிசமாய் உயர்ந்தது மெய்தான்.

மதிப்பிறக்கம் பற்றிச் சொல்லத் தேவையில்லை, கூறாமலே விளங்கும். குறிப்பிட்ட மூலதனத்தின் மதிப்பு பொதுவான சில பொருளாதார நிலைமைகளின் விளைவாய் உயரவோ குறையவோ செய்கிறது என்பதைத்தான் சொல்கிறோம்; ஏனெனில் குறிப்பாகத் தனியொரு மூலதனத்திற்கு என்ன நேரிடுகிறது என்று நாம் பரிசீலிக்கவில்லை. ஒரு மூலதனம் அது ஈடுபடுத்துகிற உபரி-உழைப்பினால் தற்பெருக்கம் அடைந்தாலும் அடையா விட்டாலும் அம்மூலதனத்தின் மதிப்பு உயரவோ குறையவோ செய்கிறது என்பதைத்தான் சொல்கிறோம்.

மூலதனத்தின் முடக்கம் என்று எதைச் சொல்கிறோம்? உற்பத்திப் பண்டத்தின் மொத்த மதிப்பில் குறிப்பிட்ட கூடுதலான பங்கு மாறா-மூலதனக் கூறுகளாகவோ மாறும்-மூலதனக் கூறுகளாகவோ மாற்றப்பட்டாக வேண்டும். அப்போதுதான் உற்பத்தியைப் பழைய அளவுவீதத்திலேயே தொடர்ந்து நடத்த முடியும். மூலதன விடுவிப்பு என்று எதைச் சொல்கிறோம்? உற்பத்திப் பண்டத்தின் மொத்த மதிப்பில், ஏற்கெனவே மாறா-மூலதனமாகவோ மாறும்-மூலதனமாகவோ திரும்ப மாற்ற வேண்டியதாய் இருந்த ஒரு பகுதி பழைய அளவுவீதத்திலேயே உற்பத்தியைத் தொடருவதற்குத் தேவையற்றதாகி, இப்போது வேறு காரியங்களுக்குத் தயாராய் உள்ளது. மூலதனத்தை விடுவிப்பதும் முடக்குவதும் வேறு, வருவாயை விடுவிப்பதும் முடக்குவதும் வேறு. தனியொரு மூலதனமாகிய Cஇன் வருடாந்தர உபரி-மதிப்பு = x எனக் கொள்வோமானால், முதலாளி நுகர்கிற சரக்குகளின் விலை குறைவதன் மூலம் குறிப்பிட்ட அதே தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு (x − a) என்பதே போதுமானதாய் இருக்கக் கூடும். ஆகவே, முதலாளியின் வருவாயில் aக்குச் சமமான ஒரு பகுதி விடுவிக்கப்படுகிறது. இப்பகுதியானது அவரது நுகர்வை அதிகமாக்கிக் கொள்வதற்கோ திரும்பவும் மூலதனமாக மாற்றப்படுவதற்கோ (அதாவது மூலதனத் திரட்டலுக்கோ) பயன்படக் கூடும். மாறாக, முன்போலவே இப்போதும் தொடர்ந்து வாழ்வதற்கு (x + a) தேவைப்படுமானால் இந்த வாழ்க்கைத் தரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டியிருக்கும், அல்லது முன்னதாக மூலதனத் திரட்டலுக்குப் பயன்பட்ட வருமானத்தில் aக்குச் சமமான ஒரு பகுதியை வருவாயாகச் செலவிட வேண்டியிருக்கும்.

மதிப்பேற்றமும் மதிப்பிறக்கமும் மாறா-மூலதனத்திலோ மாறும்-மூலதனத்திலோ அல்லது இரண்டிலுமோ ஏற்படலாம்; மாறா-மூலதனத்தைப் பொறுத்த வரை இந்த மதிப்பேற்றமும் மதிப்பிறக்கமும் அதன் நிலையான பகுதியிலோ சுழலும் பகுதியிலோ அல்லது இரண்டிலுமோ ஏற்படலாம்.

மாறா-மூலதனத்தை எடுத்துக் கொண்டால் கச்சாப் பொருட்களைப் பரிசீலித்தாக வேண்டும் — துணைப் பொருட்களையும்

பூர்த்தியாகாத பண்டங்களையும் சேர்த்தே இங்கு கச்சாப் பொருட்கள் என்கிறோம். கச்சாப் பொருட்களை மட்டுமல்லாமல் இயந்திர சாதனத்தையும் ஏனைய நிலை-மூலதனத்தையும் கூட பரிசீலித்தாக வேண்டும்.

முன்னதாக நாம் கச்சாப் பொருட்களின் விலை அல்லது மதிப்பிலான மாற்றங்களைப் பரிசீலித்த போது, குறிப்பாக இலாப வீதத்தின் மீது இம்மாற்றங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தில் தனிக் கவனம் செலுத்தினோம்; மற்றவை மாறாதிருக்க, இலாப வீதம் கச்சாப் பொருளின் மதிப்புக்கு எதிர் விகிதத்தில் மாறுவதாகப் பொது விதி வகுத்தோம். குறிப்பிட்ட தொழிலில் மூலதனம் புதிதாய் ஈடுபடுத்தப்பட்டு, மூலதன முதலீடு, அதாவது பணம் திறனுடை-மூலதனமாக உருமாறுவது முதன்முதலாய் நடைபெறுகையில் இந்த விதி அப்படியே முழுமையாகப் பொருந்தும்.

ஆனால் புதிதாய் முதலீடு செய்யப்படும் இந்த மூலதனத்தை அன்னியில், ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கும் மூலதனத்தில் பெரியதொரு பகுதி சுற்றோட்டத் துறையிலும், அதே போது மற்றொரு பகுதி உற்பத்தித் துறையிலும் இருந்து வருகின்றன. ஒரு பகுதி சந்தையில் சரக்காக இருந்து வருகிறது, இதைப் பணமாக மாற்ற வேண்டும்; இன்னொரு பகுதி ஏதேனுமொரு வகைப் பணமாக இருந்து வருகிறது, இதனைத் திரும்பவும் உற்பத்திச் சாதனங்களாய் மாற்றியாக வேண்டும்; முடிவில் மூன்றாவதாக ஒரு பகுதி உற்பத்தித் துறையில் இருந்து வருகிறது, இதில் ஒரு பிரிவு சந்தையில் வாங்கப்படும் கச்சாப் பொருட்களாகவும் துணைப் பொருட்களாகவும் பூர்த்தியாகாத பண்டங்களாகவும் இயந்திர சாதனமாகவும் ஏனைய நிலை-மூலதனமாகவும் இருந்து வருகிறது, மற்றொரு பிரிவு தயாராகிக் கொண்டிருக்கும் உற்பத்திப் பண்டங்களின் வடிவில் இருந்து வருகிறது. மூலதன-மதிப்பில் ஏற்படும் ஏற்றம் அல்லது இறக்கத்தின் விளைவு என்ன என்பது இங்கு இந்த அடக்கக் கூறுகளின் விகித ஒப்பளவுகளையே பெருமளவுக்குச் சார்ந்துள்ளது. எளிமைப்படுத்தும் பொருட்டு நாம் ஒன்று செய்யலாம்: நிலை-மூலதனத்தைக் கவனியாது அடியோடு ஒதுக்கி விட்டு மாறா-மூலதனத்தில் கச்சாப் பொருட்களாகவும் துணைப் பொருட்களாகவும் அமைகிற பகுதியையும், தயாராகி வரும் சரக்குகளையும், பூர்த்தி பெற்றுச் சந்தையிலிருப்பவற்றையும் மட்டுமே பரிசீலிப்போம்.

கச்சாப் பொருளின், எடுத்துக்காட்டாகப் பருத்தியின் விலை உயர்ந்தால், பருத்தி விலைமலிவாய் இருந்த போது தயாரான பருத்திச் சரக்குகளின் விலையும் உயர்கிறது — நூல் போன்ற பூர்த்தியாகாத சரக்குகள் ஆனாலும் சரி, துணி போன்ற பூர்த்தியான சரக்குகள் ஆனாலும் சரி. இன்னும் எவ்வித நிகழ்முறைக்கும் உள்ளாக்கப்படாமல் இருப்பில் வைக்கப்பட்டுள்ள பருத்தியின் மதிப்பும் உயர்கிறது, ஆக்க நிகழ்முறையில் இருந்து வரும் பருத்தியின்

மதிப்பும் உயர்கிறது. பின்னோக்கிப் பார்க்கையில் இந்தப் பருத்தியானது கூடுதலான உழைப்பு நேரத்தைக் குறிப்பதாகிறது. இவ்விதம் இந்தப் பருத்தி தன்னை ஓர் ஆக்கக் கூறாகக் கொண்டு தயாராகிற உற்பத்திப் பண்டத்துக்குத் தனது ஆரம்ப மதிப்பை விடவும், தனக்காக முதலாளி கொடுத்த விலையை விடவும் உயர்ந்த மதிப்பை சேர்த்திடுகிறது.

எனவே பூர்த்தியான சரக்குகள் சந்தையில் குறிப்பிடத்தக்க அளவில் இருந்து வரும் போதே கச்சாப் பொருளின் விலை உயருமானால் (இப்பொருள் பண்டம் ஆகிற நிகழ்முறையில் எந்தக் கட்டத்தை அடைந்திருந்தாலும் சரி) இந்தச் சரக்குகளின் மதிப்பு உயர்கிறது, குறிப்பிட்ட அந்த மூலதனத்தின் மதிப்பும் இதற்கீடாக உயர்கிறது. உற்பத்தியாளரின் கையிலுள்ள கச்சாப் பொருள் இருப்புக்கும் இது பொருந்தும். இந்த மதிப்பேற்றமானது தனிப்பட்ட முதலாளிக்கு, ஏன், முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் குறிப்பிட்ட கிளை முழுவதற்கும் கூட கச்சாப் பொருளின் விலை உயர்வால் இலாப வீதம் சரிந்து அதனால் ஏற்படும் இழப்பை ஈடு செய்வதாகவோ அந்த இழப்பீட்டுக்கும் அதிகமானதாகவோ அமையக் கூடும். சந்தைப் போட்டியின் விளைவுகளை இங்கே விவரமாக ஆராயாமல், முழுமையின் நிமித்தம் பின்வருவனவற்றை மட்டும் குறிப்பிடலாம்: (1) கச்சாப் பொருள் கணிச அளவில் இருப்பிலிருந்தால் ஆரம்பத்தில் அது உற்பத்தியான இடத்தில் நேரிட்ட விலை உயர்வை இந்நிலைமை சரிக்கட்ட முனைகிறது; (2) பூர்த்தியாகாத பண்டங்களும் பூர்த்தியான பண்டங்களும் சந்தைக்கு வந்து நெருக்குவது கடுமையாகுமானால் இந்தப் பண்டங்களின் விலை அவற்றின் கச்சாப் பொருளது விலை உயரும் அதே விகிதத்தில் உயராமல் தடுக்கப்படுகிறது.

கச்சாப் பொருளின் விலை குறையும் போது இதற்கு நேர் மாறான நிலைமை உண்டாகிறது. மற்றவை மாறாதிருக்க, இது இலாப வீதத்தை உயரச் செய்கிறது. சந்தையிலிருக்கும் சரக்குகளும் இன்னமும் உற்பத்தி நிகழ்முறையிலேயே இருந்து வரும் பண்டங்களும் கச்சாப் பொருள் இருப்புகளும் மதிப்பிறக்கத்துக்கு உள்ளாகின்றன. அதேபோது இலாப வீதத்தில் ஏற்படும் உயர்வை இது சரிக்கட்ட முனைகிறது.

தொழில் ஆண்டின் முடிவில், அதாவது கச்சாப் பொருட்கள் பெரும்பெரும் அளவுகளில் புதிதாய் வழங்கப்படும் தருணத்தில் (விவசாயத்தை எடுத்துக் கொள்வோமானால் அறுவடை முடிந்த பிறகு) உற்பத்திக் கிளையிலும் சந்தையிலும் இருப்புகள் எவ்வளவுக்கு எவ்வளவு குறைவாய் உள்ளனவோ, கச்சாப் பொருள் விலை மாற்றங்களால் ஏற்படும் விளைவு அவ்வளவுக்கு அவ்வளவு எடுப்பாய்த் தெரிகிறது.

இந்தப் பகுப்பாய்வு முழுவதிலும் விலையிலான ஏற்ற இறக்கத்தை மெய்யாகவே மதிப்பில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தின் தெரிவிப்பாகவே கொள்கிறோம். ஆனால் இங்கு நம் கருத்துக்குரியதாய் இருப்பது- இந்த விலை மாற்றங்கள் இலாப வீதத்தின் மீது ஏற்படுத்தும் விளைவே ஆதலால், இவ்விலை மாற்றங்களுக்கு அடிப்படைக் காரணம் என்ன என்பது பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. மதிப்பிலான ஏற்ற இறக்கங்களின் விளைவாக அல்லாமல் கடன்-செலாவணி அமைப்பு, சந்தைப் போட்டி முதலானவற்றின் தாக்கத்தாலேயே விலைகள் ஏறினாலும் அல்லது இறங்கினாலும் அப்போதும் மேற்கூறியவாறே எல்லாம் நடைபெறும்.

இலாப வீதமானது உற்பத்திப் பண்டத்தின் மதிப்பிலான உபரிக்கும் முன்னீடு செய்யப்படும் மொத்த மூலதனத்தின் மதிப்புக்குமான விகிதத்துக்குச் சமம் ஆகையால், முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் மதிப்பிறக்கத்தால் இலாப வீதம் உயரும் போது அது மூலதன-மதிப்பில் ஓர் இழப்பைக் குறிக்கும். மாறாக, முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் மதிப்பேற்றத்தால் இலாப வீதம் குறையும் போது அது மூலதன-மதிப்பில் ஓர் ஆதாயத்தைக் குறிக்கலாம்.

மாறா-மூலதனத்தின் மற்றொரு பகுதியாகிய இயந்திர சாதனத்திலும், பொதுவாக நிலை-மூலதனத்திலும் ஏற்படும் மதிப்பேற்றம் முக்கியமாய் கட்டடங்கள், நிலச் சொத்து முதலானவற்றை அளாவுவதாகையால் நில-வாடகைத் தத்துவத்தின் துணை கொண்டுதான் இதை விளங்கிக் கொள்ள முடியும். எனவே இது இந்த அத்தியாயத்திற்கு உரியதன்று. ஆனால் மதிப்பிறக்கப் பிரச்சினைக்குப் பொதுவான முக்கியத்துவமுடைய பின்வரும் கூறுகளைக் குறிப்பிடுவோம்:

இருந்து வரும் இயந்திர சாதனம், ஆலைக் கட்டடங்கள் முதலானவற்றின் பயன்-மதிப்பையும், இவ்விதம் மதிப்பையும் குறையச் செய்திடும் தொடர்ச்சியான மேம்பாடுகள் — இந்நிகழ்முறையானது புதிய இயந்திர சாதனத்தின் முதல் அறிமுகக் காலத்தில், அதாவது அது குறிப்பிட்ட அளவு முதிர்ச்சி அடைவதற்கு முற்பட்ட காலத்தில் மிகக் கடுமையான விளைவை உண்டுபண்ணுகிறது. அடுத்து அடுத்து வருகிற அந்தந்த இயந்திர சாதனமும் அதனதன் மதிப்பை மறுவுற்பத்தி செய்வதற்குப் போதிய அவகாசம் கிடைக்குமுன்பே பழமைப்பட்டுப் போகிறது. வேலைநேரம் வரம்பின்றி நீட்டப்படுவது இத்தகைய காலங்களில் மாமூலாகி விடுவதற்கும், பகல் நேரக் குழுவையும் இரவு நேரக் குழுவையும் மாறி மாறி ஈடுபடுத்துவதற்குமான காரணங்களில் இதுவும் ஒன்று. இப்படிச் செய்வதால் தேய்மானத்துக்காகப் பெருஞ்செலவுகள் செய்ய வேண்டிய அவசியமில்லாமலே இயந்திர சாதனத்தின் மதிப்பைக் குறுகிய காலத்தில் மறுவுற்பத்தி செய்து கொள்ள முடிகிறது. இயந்திர சாதனம் பயன்திறனோடு செயல்படும் காலம் குறுகிப் போவதை (வரவிருக்கும் மேம்பாடுகளால் அதன் ஆயுட்காலம் குறுகிப் போவதை) இப்படியெல்லாம்

சரிக்கட்டாது விட்டு விட்டால் அது கௌரவ மதிப்பிறக்கத்தின் [moral depreciation] வாயிலாய் அதன் மதிப்பின் மிக அதிகமான பகுதியை உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்திடும், கைத்தொழிலோடு கூட அதனால் போட்டியிட முடியாமற் போகும்.[15]

இயந்திரங்களும் ஆலைக் கட்டடங்களும், பொதுவாக நிலை-மூலதனமும் குறிப்பிட்ட முதிர்ச்சி நிலையை அடைந்து, எப்படியும் அடிப்படைக் கட்டுமானத்தில் நீண்ட காலத்துக்கு மாற்றமடையாமல் இருந்து வருகின்றன. ஆனால் இந்த நிலை-மூலதனத்தை மறுவுற்பத்தி செய்யும் வழிமுறைகளில் மேம்பாடுகள் ஏற்படுவதால் மதிப்பிறக்கம் நிகழ்கிறது. இயந்திரங்கள் போன்றவற்றின் மதிப்பு இவ்விதம் குறைந்து போவதற்குக் காரணம் அவற்றை இப்போது முன்னிலும் குறைந்த செலவில் மறுவுற்பத்தி செய்ய முடிவதுதானே தவிர இன்னுமதிக உற்பத்தித் திறனுள்ள புதிய இயந்திரங்கள் துரிதமாய் அவற்றினிடத்தைக் கைப்பற்றுவதோ அதனால் அவை ஓரளவுக்கு மதிப்பிறக்கம் அடைவதோ அல்ல. பெரும் தொழில் முனைவுகளின் முதலாம் உரிமையாளர்கள் போண்டியான பிறகு அவை அநேகமாய் அவற்றின் இரண்டாம் உரிமையாளர்களின் கையில்தான் சிறந்த முறையில் செழித்து வளருவதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று; இரண்டாம் உரிமையாளர் இவற்றை மலிவாய் வாங்கி குறைந்த முதலீட்டில் உற்பத்தி தொடங்குகிறார்.

உற்பத்திப் பண்டத்தின் விலையை உயரவோ குறையவோ செய்யும் அதே காரணங்கள் மூலதனத்தின் மதிப்பையும் உயரவோ குறையவோ செய்வதை முக்கியமாய் வேளாண்மைத் துறையில் காணலாம். அங்கே மூலதனம் பெருமளவுக்கு அந்த உற்பத்திப் பண்டமாகவே, உதாரணமாய் தானியம் அல்லது கால்நடையாகவே அமைந்திருப் பதுதான் காரணம் (ரிக்கார்டோ*).

---

மாறும்-மூலதனத்தை இப்போது எடுத்துக் கொள்வோம்.

உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்திக்கு அவசியமான வாழ்வுச் சாதனங்களின் மதிப்பு உயருவது காரணமாய் அவ்வுழைப்புச் சக்தியின் மதிப்பு உயருகிற அளவில், அல்லது இந்த வாழ்வுச் சாதனங்களின் மதிப்பு குறைவது காரணமாய் உழைப்புச் சக்தியின் மதிப்பு குறைகிற அளவில் (மாறும்-மூலதனத்தின் மதிப்பேற்றமும்

---

[15] பாபேஜ் இதற்கு உதாரணங்கள் தருகிறார் [இயந்திர சாதனம் மற்றும் பட்டறைத் தொழில்களின் சிக்கனம் பற்றி, லண்டன், 1832, பக்கம் 280-281. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்]. வழக்கமான உபாயம், அதாவது கூலிக் குறைப்பு இங்கேயும் பயன் படுத்தப்படுகிறது, தொடர்ச்சியான இந்த மதிப்பிறக்கம் திரு கேரி தமது ''இசைவான மூளையில்'' காணும் கனவுகளுக்கு நேர்மாறாகவே செயல்படுகிறது.

* டே. ரிக்கார்டோ, அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் மற்றும் வரி விதிப்பு குறித்து, மூன்றாம் பதிப்பு, லண்டன், 1821, அத்தியாயம் II. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

மதிப்பிறக்கமும் உண்மையில் புலப்படுத்துவது இவ்விரு நிலைகளைத் தானே தவிர வேறல்ல), வேலை-நாள் மாறாதிருப்பதாகக் கொண்டால் இவ்வகையான மதிப்பேற்றம் உபரி-மதிப்பு குறைவதையும், மதிப்பிறக்கம் உபரி-மதிப்பு உயருவதையும் குறிக்கின்றன. ஆனால் வேறு பல நிலைமைகளையும்—மூலதன விடுவிப்பு மற்றும் முடக்கத்தையும்—கணக்கில் கொள்ள வேண்டும். இந்நிலைமைகளை இது வரை நாம் பகுத்தாயவில்லை—இப்போது இவற்றைச் சுருக்கமாய்க் குறிப்பிடுவோம்.

உழைப்புச் சக்தியின் மதிப்பு குறைந்து அதனால் கூலி குறையுமானால் (இதோடு சேர்ந்தாற் போல் உழைப்பின் உண்மை விலை உயர்ந்தாலும் கூட), கூலிக்காக முதலீடாகியிருந்த மூலதனத்தில் ஒரு பகுதி விடுவிக்கப்படுகிறது. மாறும்-மூலதனம் விடுவிக்கப்படுகிறது. இதனால் ஏற்படும் விளைவு, புதிதாய் முதலீடாகிற மூலதனத்தைப் பொறுத்த வரை, இன்னும் உயர்ந்த உபரி-மதிப்பு வீதத்தோடு அம்மூலதனத்தால் செயல்பட முடிவதே தவிர வேறல்ல. குறிப்பிட்ட அளவு உழைப்பை இயங்க வைப்பதற்கு முன்பு தேவைப்பட்டதை விட இப்போது குறைந்த பணமே தேவைப்படுகிறது; இவ்விதம் ஊதிய உழைப்புப் பகுதி குறைந்து ஊதியமிலாப் பகுதி அதிகமாகிறது. ஆனால் ஏற்கெனவே முதலீடாகியுள்ள மூலதனத்தைப் பொறுத்த வரை உபரி-மதிப்பு உயருவது மட்டுமல்லாமல் முன்பு கூலிக்காக முதலீடாகியிருந்த மூலதனத்தில் ஒரு பகுதியும் விடுவிக்கப்படுகிறது. இப்பகுதி இது வரை முடக்கப்பட்டிருந்தது, தொழிலைப் பழைய அளவுவீதத்தில் தொடர்ந்து நடத்திச் செல்ல வேண்டுமானால் உற்பத்திப் பண்டத்தை விற்று வருவதிலிருந்து அவ்வப்போது எடுத்து கூலிக்காக முதலீடு செய்யப்பட்டு மாறும்-மூலதனமாகச் செயல்பட வேண்டிய பகுதியாய் இருந்து வந்தது. இந்தப் பகுதி இப்போது விடுவிக்கப்படுகிறது. இருக்கிற தொழிலையே விரிவாக்குவதற்கு என்றாலும் சரி, வேறு ஏதேனும் உற்பத்தித் துறையில் செயல்படுவதற்கு என்றாலும் சரி, இதனைப் புதிய முதலீடாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக, 500 தொழிலாளர்களை வேலைக்கமர்த்திட முதலில் வாரத்துக்கு £500 தேவைப்பட்டதாகவும், இப்போது £400 மட்டும் தேவைப்படுவதாகவும் கொள்வோம். முன்போலவே இப்போதும் உற்பத்தியின் மதிப்பளவு = £1,000; முன்னதாக வாரர்ந்தர உபரி-மதிப்பளவு = £500, உபரி-மதிப்பு வீதம் $\frac{500}{500}$ = = 100%. ஆனால் கூலிக் குறைப்புக்குப் பிறகு உபரி-மதிப்பளவு = = £1,000 – £400 = £600, உபரி-மதிப்பு வீதம் $\frac{600}{400}$ = 150%. உபரி-மதிப்பு வீதத்திலான இந்த அதிகரிப்புதான் £400 மாறும்-மூலதனத்தோடும் அதற்குரிய மாறா-மூலதனத்தோடும் இந்த உற்பத்தித் துறையில் புதிதாய்த் தொழில் தொடங்குகிற ஒருவருக்கு ஏற்படும் ஒரே

விளைவு ஆகும். ஆனால் ஏற்கெனவே செயல்பட்டு வரும் தொழில் ஒன்றில் மாறும்-மூலதனத்தினது மதிப்பிறக்கத்தின் விளைவாக உபரி-மதிப்பளவு £500இலிருந்து £ 600 ஆகவும் உபரி-மதிப்பு வீதம் 100இலிருந்து 150% ஆகவும் அதிகரிப்பதோடு, £100 மாறும்-மூலதனமும் விடுவிக்கப்படுகிறது, இதைப் பயன்படுத்தி மேலும் உழைப்பைச் சுரண்டலாம். குறிப்பிட்ட உழைப்பளவு முன்னிலும் இலாபகரமாய் சுரண்டப்படுகிறது. மேலும், £100 விடுவிக்கப்படுவதால் அதே மாறும்-மூலதனத்தைக் (£500) கொண்டு அதிகரித்த உபரி-மதிப்பு வீதத்திலேயே முன்னிலும் அதிகத் தொழிலாளர்களைச் சுரண்டுவது சாத்தியமாகிறது.

இப்போது நேர்மாறாய் நிகழ்வதாகக் கொண்டு பார்ப்போம். 500 தொழிலாளர்கள் வேலை செய்வதாகவும், $400_v + 600_s =$ $= 1,000$ என்ற முறையில் உற்பத்திப் பண்டம் முதலில் பிரிவதாகவும் கொள்வோம். உபரி-மதிப்பு வீதம் = 150% என்றாகிறது. ஆக, தொழிலாளி பெறும் வாரக் கூலி = £$\frac{4}{5}$ = 16 ஷில்லிங். மாறும்-மூலதனத்தின் மதிப்பு அதிகரித்து இந்த 500 தொழிலாளர்களுக்கும் வாரம் ஒன்றுக்கு £500 செலவாகுமானால், ஒவ்வொரு தொழிலாளிக்குமான வாரக் கூலி = £1. இந்த £400ஐக் கொண்டு 400 தொழிலாளர்களை மட்டும் வேலைக்கமர்த்தலாம். அதே எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டால் $500_v + 500_s = 1,000$. உபரி-மதிப்பு வீதம் 150%இலிருந்த 100% ஆக, அதாவது மூன்றில் ஒரு பங்கு குறையும்; இதனால் ஏற்படும் விளைவு, புதிய மூலதனத்தைப் பொறுத்த வரை உபரி-மதிப்பு வீதம் இப்படிக் குறைவதாக மட்டுமே இருக்கும். மற்றவை மாறாதிருக்க, இலாப வீதமும் அதே விகிதத்தில் குறையா விட்டாலும் உரியவாறு குறைந்திருக்கும். எடுத்துக்காட்டாக, c = 2,000 என்றால், முன்னதாக $2,000_c + 400_v + 600_s = 3,000$. உபரி-மதிப்பு வீதம் = 150%, இலாப வீதம் = $\frac{600}{2,400}$ = 25%. இப்போது $2,000_c + 500_v + 500_s = 3,000$. உபரி-மதிப்பு வீதம் = 100%, இலாப வீதம் = $\frac{500}{2,500}$ = 20%. என்றாலும் ஏற்கெனவே முதலீடாகியுள்ள மூலதனத்தின் விஷயத்தில் இரட்டை விளைவு ஏற்படும். £400 மாறும்-மூலதனத்தைக் கொண்டு 400 தொழிலாளர்களை மட்டுமே வேலைக்கமர்த்த முடிந்தது; உபரி-மதிப்பு வீதம் 100% ஆக இருந்தது. ஆகவே அவர்கள் உற்பத்தி செய்யும் மொத்த உபரி-மதிப்பு £400 மட்டுமே. மேலும், £2,000 மதிப்புள்ள மாறா-மூலதனம் செயல்படுவதற்கு 500 தொழிலாளர்கள் தேவைப்படுவதால், 400 தொழிலாளர்கள் £1,600 மதிப்புள்ள மாறா-மூலதனத்தை மட்டுமே இயங்க வைக்க முடியும். உற்பத்தி அதே அளவுவீதத்தில் தொடர்ந்து நடைபெற வேண்டுமானால்,

ஐந்திலொரு பங்கு இயந்திர சாதனம் வேலையற்று ஓய்ந்து கிடக்கக் கூடாதென்றால், முன்போலவே 500 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் பொருட்டு மாறும்-மூலதனத்தோடு £100 கூடுதலாய்ச் சேர்க்கப்பட வேண்டும். முன்பு தயாராய்க் கிடைத்து வந்த மூல தனத்தை முடக்கிப் போடுவதன் மூலமே இது சாத்தியமாகும். இப்படி முடக்குவதால் என்ன நேரிடுகிறதென்றால்: உற்பத்தியை விரிவாக்கும் நோக்கத்தோடு நடைபெறும் மூலதனத் திரட்டலில் ஒரு பகுதி இப்போது ஓர் இடைவெளியை நிரப்புவதற்கு மட்டுமே பயன்படுகிறது, அல்லது வருவாயாகச் செலவிடுவதற்கான ஒரு பகுதி ஆரம்ப மூலதனத்தோடு சேர்க்கப்படுகிறது. அப்போது £100 அதிகரித்த மாறும்-மூலதனம் £100 குறைந்த உபரி-மதிப்பை உற்பத்தி செய்கிறது. அதே எண்ணிக்கையிலான தொழிலாளர் களை வேலைக்கு அமர்த்த இன்னுமதிக மூலதனம் தேவைப் படுகிறது; அதேபோது தனிப்பட்ட ஒவ்வொரு தொழிலாளியும் உற்பத்தி செய்யும் உபரி-மதிப்பு குறைந்து போகிறது.

மாறும்-மூலதனம் விடுவிக்கப்படுவதால் விளைகிற சாதகங் களும் சரி, அது முடக்கப்படுவதால் விளைகிற பாதகங்களும் சரி, ஏற்கெனவே ஈடுபடுத்தப்பட்டு குறிப்பிட்ட நிலைமைகளில் தன்னைத் தானே மறுவுற்பத்தி செய்து கொள்கிற மூலதனத்துக்கு மட்டும் நிலவுகிறவை ஆகும். புதிதாய் முதலீடாகிற மூலதனத்தைப் பொறுத்த வரை ஒரு புறம் சாதகங்களும் மறு புறம் பாதகங்களும் எந்த அளவோடு சரி என்றால்: உபரி-மதிப்பு வீதம் உயரும் அல்லது சரியும், அதற்கேற்ப இலாப-வீதத்திலும் — சரிவிகிதமாய் அல்லவென்றாலும் — மாற்றம் ஏற்படும்.

---

மாறும்-மூலதனம் விடுவிக்கப்படுவதையும் முடக்கப்படுவதையும் இது வரை பரிசீலித்தோம். இந்த விடுவிப்பும் முடக்கமும் மாறும்-மூலதனக் கூறுகளின் மதிப்பிலான, அதாவது உழைப்புச் சக்தியை மறுவுற்பத்தி செய்வதற்காகும் செலவிலான இறக்கம் அல்லது ஏற்றத்தின் விளைவாகும்.

ஆனால், கூலி வீதம் மாறாதிருக்க, உழைப்பின் உற்பத்தித் திறனிலான வளர்ச்சி காரணமாய் குறிப்பிட்ட அளவு மாறா-மூலதனத்தை இயங்கச் செய்வதற்குத் தேவைப்படும் தொழிலாளர் தொகை குறைந்தால், அப்போதும் மாறும்-மூலதனம் விடுவிக்கப் படலாம். மறுதலையாகப் பார்க்குமிடத்து, உழைப்பின் உற்பத்தித் திறனிலான சரிவு காரணமாய் குறிப்பிட்ட அளவு மாறா-மூல தனத்தை இயங்கச் செய்வதற்குத் தேவைப்படும் தொழிலாளர் தொகை அதிகரித்தால், கூடுதல் மாறும்-மூலதனம் முடக்கப் படலாம். மறு புறம், முன்பு மாறும்-மூலதனமாக ஈடுபடுத்தப் பட்ட மூலதனத்தில் ஒரு பகுதி இப்போது மாறா-மூலதனமாக

ஈடுபடுத்தப்படுமானால், அதாவது அதே மூலதனத்தின் அடக்கக் கூறுகளது பரவல் மட்டும் மாறுபடுமானால் இது உபரி-மதிப்பு வீதத்தின் மீதும் இலாப வீதத்தின் மீதும் நிச்சயமாய்த் தாக்கம் ஏற்படுத்தும் என்றாலும், இங்கு நமது ஆய்வுப் பொருளுக்கு, மூலதனத்தின் முடக்கமும் விடுவிப்பும் என்னும் தலைப்புக்கு உட்பட்டதன்று.

முன்பே நாம் பார்த்ததுதான்: மாறா-மூலதனமும் கூட அதன் பொருட் கூறுகளின் மதிப்பு ஏறுவதாலும் இறங்குவதாலும் முடக்கப் படலாம் அல்லது விடுவிக்கப்படலாம். மேலும், உழைப்பின் உற் பத்தித் திறன் அதிகரித்தால்தான், அதாவது குறிப்பிட்ட அளவு உழைப்பு செய்திடும் உற்பத்தியும், எனவே அது இயங்கச் செய்யும் மாறா-மூலதனமும் அதிகரித்தால்தான் (மாறும்-மூலதனத்தில் ஒரு பகுதியை மாறா-மூலதனமாக மாற்றாமலே) மாறா-மூலதனத்தை முடக்க முடியும். உற்பத்தித் திறன் குறைந்தாலும் குறிப்பிட்ட சில நிலைமைகளில் இவ்வாறே நிகழக் கூடும். வேளாண்மையை இதற்கு உதாரணமாய்க் குறிப்பிடலாம். அங்கே உழைப்பின் அளவில் மாற்றமில்லாமலே, குறிப்பிட்ட அளவு விளைபொருளின் உற் பத்திக்குத் தேவையான உற்பத்திச் சாதனங்களின், அதாவது விதை, உரம், வடிகால் முதலானவற்றின் அளவு அதிகரிக்கிறது. மேம்பாடு களின் துணை கொண்டும் இயற்கைச் சக்திகளைக் கட்டுப்படுத்தி முறையாகப் பயன்படுத்தியும் குறைந்த மதிப்புடைய மாறா-மூல தனத்தைக் கொண்டே அதிக மதிப்புடைய மாறா-மூலதனம் முன்பு ஆற்றி வந்த அதே பணிகளைச் செய்வது தொழில் நுட்ப வழியில் சாத்தியப்படுமானால் மதிப்பிறக்கமே இல்லாமல் மாறா-மூல தனத்தை விடுவிக்கலாம்.

சரக்குகளை விற்றுப் பணமாக்கிய பிறகு இந்தப் பணத்தில் ஒரு பகுதியை மாறா-மூலதனத்தின் பொருட் கூறுகளாய் மாற்றியாக வேண்டும் என்றும், குறிப்பிட்ட உற்பத்திக் கிளையின் பிரத்தியேகத் தொழில் நுட்பத் தன்மையைப் பொறுத்து உரிய விகித அளவு களில் இந்த மாற்றம் நடைபெற்றாக வேண்டும் என்றும் இரண்டாம் பாகத்தில் பார்த்தோம் [மூலதனம், இரண்டாம் பாகம், பகுதி III] கூலியை, அதாவது மாறும்-மூலதனத்தைக் கவனியாது ஒதுக்கி விட்டுப் பார்த்தால், எல்லா உற்பத்திக் கிளைகளிலும் மிக முக்கி யக் கூறாயிருப்பது கச்சாப் பொருளாகும்; கச்சாப் பொருள் என் பதில் துணைப் பொருளும் அடங்கும். முறையான கச்சாப் பொருள் ஏதும் தேவைப்படாத உற்பத்திக் கிளைகளில், எடுத்துக் காட்டாக சுரங்கத் தொழிலிலும் பொதுவாக எடுபொருள் உற் பத்தித் தொழில்களிலும் [extractive industries] துணைப் பொருள் தனி முக்கியத்துவம் உடையதாகும். பண்ட விலையில் இயந்திர சாதனத் தேய்மானத்தை மாற்றீடு செய்ய வேண்டிய பகுதியானது, அந்த இயந்திர சாதனம் சற்றேனும் இயங்கத்தக்க நிலையில் இருந்து

வரும் வரை, பிரதானமாகப் பெயரளவுக்குத்தான் கணக்கேடுகளில் பதியப்பெறுகிறது. இந்த விலை செலுத்தப்பெற்றுப் பணமாகும் நிகழ்வு இன்று நடந்தாலும் சரி, நாளை நடந்தாலும் சரி, மூல தனத்தினது புரள்வுக் காலத்தின் வேறு எந்தக் கட்டத்தில் நடந்தாலும் சரி, இது அவ்வளவாய்க் கருத்துக்குரியதன்று. கச்சாப் பொருள் இப்படியல்ல. அதன் விலை உயர்ந்தால், சரக்குகளின் விலையில் கூலி போக எஞ்சுவதைக் கொண்டு அதை முழுமையாக மாற்றீடு செய்ய முடியாமற் போகலாம். ஆகவே பண்ட விலையில் தாறுமாறான ஏற்ற இறக்கங்கள் நிகழ்வது மறுவுற்பத்தி நிகழ்முறையில் தடங்கல்களும் பெருங்குழப்பங்களும், ஏன், பேரழிவுகளும் கூட ஏற்படுவதற்கு வழிசெய்து விடுகிறது. விவசாய விளை பொருட்களை முக்கியமாய்க் குறிப்பிட வேண்டும்; இந்தக் கச்சாப் பொருட்கள் உயிர் உலகிலிருந்து பெறப்படுகிறவை. மகசூல் முதலானவற்றில் ஏற்படும் மாற்றங்களின் காரணத்தால் இவ்விளை பொருட்கள் மிக அதிகமாய் இந்த மதிப்பு ஏற்ற இறக்கங்களுக்கு உட்படுகின்றன — கடன்-செலாவணி முறையின் தாக்கத்தை நாம் கருத்தில் கொள்ளவில்லை. கட்டுப்படுத்த முடியாத இயற்கை நிலைமைகள், பருவ காலத்தின் சாதக பாதகங்கள் முதலியவற்றைப் பொறுத்து பல்வேறு பயன்-மதிப்பளவுகள் இங்கு ஒரே உழைப் பளவின் தெரிவிப்புகளாய் அமையலாம். எனவே குறிப்பிட்ட ஒரு பயன்-மதிப்பளவுக்கே பல்வேறு விலைகள் இருக்கும். x என்னும் மதிப்பு a என்னும் பண்டத்தின் 100 இராத்தல் அளவைக் குறித்தால், ஒரு இராத்தல் a இன் விலை $= \frac{x}{100}$; அதுவே 1,000 இராத்தல் a ஐக் குறித்தால், ஒரு இராத்தல் a இன் விலை $= \frac{x}{1,000}$; இப்படியே மேலும் சொல்லலாம். இவ்விதம் கச்சாப் பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களில் இது ஒரு கூறாகும். இதில் இரண்டாவதாக வரும் கூறு — சந்தைப் போட்டியும் கடன்-செலாவணி முறையும் இன்னமும் நமது பகுப்பாய்வின் எல்லைக்கு அப்பாற்பட்டவையே ஆதலால் இங்கு இதை முழுமைக்காக வேண்டியே குறிப்பிடுகிறோம் — என்னவென்றால்: இயல்பிலேயே தாவரப் பொருட்களும் விலங்கினப் பொருட்களும் வளர்ச்சியடைவதும் உற்பத்தியாவதும் குறிப்பிட்ட சில உயிருலக விதிகளுக்கு [organic laws] உட்பட்டவையும், இயற்கை வழியில் நிர்ணயமான காலவரைகளுக்குக் கட்டுப்பட்டவையும் ஆகும்; இயந்திரங்களையும் இதர வகை நிலை-மூலதனத்தையும் அல்லது நிலக்கரி, தாதுப் பொருள் போன்றவற்றையும் போல இந்த தாவரப் பொருட்களையும் விலங்கினப் பொருட்களையும் அதே அளவுக்கு திடுமென அதிகமாக்கி விட முடியாது. அவசியமான இயற்கை நிலைமைகள் நிலவுவதாகக் கொண்டால் மேற்கூறிய இயந்திரங்களையும் பிறவற்றையும் தொழில்

வளர்ச்சியடைந்த நாட்டில் அதிவிரைவாய் மறுவுற்பத்தி செய்து விட முடியும். ஆகவே, மாறா-மூலதனத்தில் உயிர் உலகக் கச்சாப் பொருட்களாக அமைந்திடும் பகுதியுடன் ஒப்பிடுகையில், நிலை-மூலதனமாக, இயந்திர சாதனமும் இன்னபிறவுமாக அமைந்திடும் பகுதியை உற்பத்தி செய்வதும் அதிகமாக்குவதும் குறிப்பிடத்தக்க அளவுக்கு முந்திச் செல்வது சாத்தியமே; முதலாளித்துவப் பொருளுற்பத்தி முழு வளர்ச்சி அடைந்திருக்கும் நிலையில் இது தவிர்க்க முடியாததும் ஆகும். இதனால்தான் இந்தக் கச்சாப் பொருட்களுக்கான வேண்டல் அவற்றின் வழங்கலைக் காட்டிலும் துரிதமாய் வளர்ந்து செல்கிறது, அவற்றின் விலையும் உயர்ந்து செல்கிறது. இந்த விலையுயர்வினால் ஏற்படும் மாற்றங்கள் பின்வருமாறு: (1) இந்தக் கச்சாப் பொருட்கள் முன்னை விடவும் தொலைதூரத்திலிருந்து கொண்டுவரப்படுகின்றன; விலை உயர்வைக் கொண்டு அதிகப்படியான போக்குவரத்துச் செலவுகளை சமாளித்து விடலாம். (2) இந்தக் கச்சாப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கிறது; ஆனால் உற்பத்தியளவை அதிகமாக்க — இயற்கை நிலைமைகள் காரணமாய் — ஓராண்டு காத்திருந்தாக வேண்டும். (3) முன்னெப் போதும் பயன்படுத்தாத பல்வேறு பதிலிப் பொருட்களும் இப்போது பயன்படுகின்றன, கழிவுப் பண்டங்களை முன்னிலும் அதிகமாய்ப் பயன்படுத்திக் கொள்ள முடிகிறது. இந்த விலை உயர்வானது உற்பத்தி மீதும் வழங்கல் மீதும் குறிப்பிடத்தக்க விளைவை ஏற்படுத்தத் தொடங்கும் போது, பொதுவாகத் திருப்புமுனை ஏற்கெனவே அடையப்பட்டு விட்டதைக் காட்டுகிறது — கச்சாப் பொருளின் விலையும் அந்தக் கச்சாப் பொருளை ஓர் அடிக்கூறாகக் கொண்டு உற்பத்தியாகிற சரக்குகள் யாவற்றின் விலையும் தொடர்ந்து நீண்ட காலம் உயர்ந்து செல்வதன் விளைவாக வேண்டல் சரிவுற்று, கச்சாப் பொருளின் விலையில் ஓர் எதிர்வினை உண்டாகிறது. பல்வேறு வழிகளிலும் மூலதனத்தின் மதிப்பைக் குறைத்து இந்த விளைவைத் தோற்றுவிக்கிற குழப்படிகள் ஒரு புறமிருக்க வேறு சில காரணிகளும் செயலுக்கு வருகின்றன — எவை என்று இப்போதே பார்ப்போம்.

முதலாவதாக, மேலே கூறப்பட்டதிலிருந்து எப்படியும் ஒரு விவரம் தெளிவாகியிருக்க வேண்டும்: முதலாளித்துவப் பொருளுற்பத்தி எவ்வளவுக்கு எவ்வளவு வளர்ச்சி பெற்றுள்ளதோ, எனவே மாறா-மூலதனத்தில் இயந்திர சாதனமும் இன்ன பிறவுமாய் அமைந்திடும் பகுதியை திடுமென்றும் நிரந்தரமாகவும் அதிகமாக்கும் வழிவகைகள் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய் உள்ளனவோ, மூலதனத் திரட்டல் (முக்கியமாய் செழிப்புக் காலங்களில்) எவ்வளவுக்கு எவ்வளவு துரிதமாய் நடைபெறுகிறதோ, இயந்திர சாதனமும் இதர வகை நிலை-மூலதனமும் ஒப்பளவில் அவ்வளவுக்கு அவ்வளவு மிகையுற்பத்தி ஆகின்றன; தாவர, விலங்கினக் கச்சாப் பொருட்கள்

ஒப்பளவில் அவ்வளவுக்கு அவ்வளவு அடிக்கடி குறையுற்பத்தி ஆகின்றன; இப்பொருட்களின் மேலே விவரித்த விலை உயர்வும், அதனால் வரும் எதிர்வினையும் அவ்வளவுக்கு அவ்வளவு குறிப் பிடத்தக்கவை ஆகின்றன. மறுவுற்பத்தி நிகழ்முறையில் முக்கியக் கூறுகளாய் இருப்பவற்றில் ஒன்றின் தாறுமாறான விலையேற்றங் களால் அவ்வளவுக்கு அவ்வளவு அடிக்கடி குழப்படிகள் மூள் கின்றன.

மேற்சொன்னவாறு கச்சாப் பொருட்களின் விலையில் ஏற்படும் உயர்வு ஒரு புறம் வேண்டலில் சரிவு ஏற்படச் செய்கிறது, மறு புறம் ஓரிடத்தில் உற்பத்திப் பெருக்கமும் மற்றோரிடத்தில் முன்னர் அவ் வளவாய் நாடப்பட்டிராத தொலைதூரப் பகுதிகளிலிருந்து இறக்கு மதியும் நடைபெறச் செய்கிறது, இரு நிலைகளிலுமே கச்சாப் பொருட் களின் வழங்கல் அவற்றுக்கான வேண்டலை (முக்கியமாய்ப் பழைய உயர்விலைகளில்) விஞ்சும் படியான நிலைமையைத் தோற்றுவிக் கிறது; இதனால் இந்த உயர்விலைகள் தகர்ந்திடும் போது ஏற்படும் விளைவை வெவ்வேறு கோணங்களிலிருந்து பரிசீலித்திடலாம். கச்சாப் பொருட்களின் விலை திடுமெனத் தகர்ந்து வீழ்வது அவற் றின் மறுவுற்பத்திக்குத் தடையாகிறது. மிகவும் சாதகமான நிலைமை களில் கச்சாப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டு வரும் ஆரம்பக் கச்சாப் பொருளுற்பத்தி நாடுகளின் ஏகபோகம் இவ்வாறு மீண்டும் நிலைபெறுகிறது — அநேகமாய் சில வரம்புகளுடன்தான் என்றாலும் நிலைபெறுகிறது. கச்சாப் பொருட்களின் மறுவுற்பத்தி அதற்குக் கிடைக்கும் ஊக்கம் காரணமாய் விரிதிற அளவுவீதத்தில் முன்னேறிச் செல்வதும், முக்கியமாய் இந்த உற்பத்தியில் ஏகபோகம் வகிக்கிற நாடுகளில் இது நடைபெறுவதும் மெய்தான். ஆனால் இயந்திர சாதனம் முதலானவற்றின் விரிவாக்கத்துக்குப் பிறகு, உற்பத்தி தொடர்ந்து நடைபெறுவதற்கு அடிப்படையாய் அமைவது — ஒரு சில ஏற்ற இறக்கங்களுக்குப் பிறகு இப்போது புதிய இயல்பான அடிப்படையாக, புதிய தொடக்க முனையாக அமைய வேண்டி யது — முந்தையப் புரள்வுச் சகடத்தில் நிகழ்ந்தவற்றால் பெரிதும் விரிவடைந்திருக்கிறது. இதற்கிடையில் சற்றே முதலில் அதிகரித்த மறுவுற்பத்தியானது, இரண்டாம் நிலைப்பட்ட வழங்கீட்டு ஆதாரங் கள் சிலவற்றில் மீண்டும் கணிசமான இடையூறுகளை சந்திக்கிறது. எடுத்துக்காட்டாக, கடந்த முப்பதாண்டு காலத்தில் (1865 வரை) அமெரிக்கப் பருத்தியுற்பத்தியில் சரிவு ஏற்படும் போதெல்லாம், இந்தியாவில் பருத்தி உற்பத்தி அதிகமாவதையும் அடுத்துதிடுமெனக் குறிப்பிடத்தக்க அளவுக்குச் சுருங்கிப் போவதையும் ஏற்றுமதி அட்ட வணைகள் துலக்கமாய்ப் புலப்படுத்துகின்றன. கச்சாப் பொருட்களின் விலை உயரும் காலத்தில், தொழில் துறை முதலாளிகள் ஒன்று சேர்ந்து, உற்பத்தியை முறைப்படுத்த சங்கங்கள் அமைக்கிறார்கள். எடுத் துக்காட்டாக, மான்செஸ்டரில் 1848இல் பருத்தி விலை உயர்வுக்குப்

பிறகு ஆலையதிபர்கள் சங்கம் அமைத்தார்கள்; அயர்லாந்தில் வெண்சணல் உற்பத்தி தொடர்பாகவும் இதையே செய்தார்கள். ஆனால் உடனே, (கச்சாப் பொருளுற்பத்தி செய்யும் நாடுகள் தமது விளைபொருளை அச்சமயம் உடனடியாக என்ன விலைக்குத் தர முன்வந்தாலும், இச்சங்கங்கள் செய்ய முயல்வது போல் அந் நாடுகளில் உற்பத்தித் திறனை ஊக்கி வளர்ப்பது என்ற வழிக்கு பதிலாக) ''மிகவும் விலைகுறைந்த சந்தையில் வாங்குவது'' என்னும் போட்டியின் பொதுக் கோட்பாடு மீண்டும் கோலோச்சத் தொடங் கியவுடனே, வழங்கலை முறைப்படுத்தும் பொறுப்பு மறுபடியும் ''விலைகளிடம்'' விடப்படுகிறது. பொதுவாகவும் அனைத்தும் தழுவிய முறையிலும் தொலைநோக்குடனும் கச்சாப் பொருட்களின் உற்பத்தி மீது கட்டுப்பாடு செலுத்துவதென்ற எண்ணம் அடியோடு மறைந்து, வழங்கலும் வேண்டலும் தமக்குள் ஒன்றையொன்று முறைப்படுத்திக் கொள்ளும் என்ற நம்பிக்கை மீண்டும் தலை யெடுக்கிறது. இவ்வகைக் கட்டுப்பாடு மொத்தத்தில் முதலாளித் துவப் பொருளுற்பத்தி விதிகளுக்கு ஒத்துவராதது, எனவே என் றென்றைக்கும் ஆசைக் கனவாகவே இருந்து வருவது, அல்லது அவசரப் பேராபத்தும் குழப்பமும் நிறைந்த தருணங்களில் விதி விலக்கான கூட்டுச் செயற்பாடு என்ற அளவோடு நின்று விடுவது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.[16] வழங்கலும் வேண் டலும் ஒன்றையொன்று முறைப்படுத்திக் கொள்வது தொடர் பாக முதலாளிகள் அப்பட்டமான மூட நம்பிக்கையில் மூழ்கிப் போயுள்ளனர்; தொழிற்சாலை ஆய்வாளர்களே கூட இது குறித்து

---

[16] எங்கெல்ஸ் குறிப்பு. — மேற்கண்டது (1865இல்) எழுதப்பட்ட பின்னர் உலகச் சந்தையில் போட்டி மிகவும் மும்முரமாகியிருக்கிறது. நாகரிக நாடுகள் யாவற்றிலும், குறிப்பாக அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் ஏற்பட்ட துரிதமான தொழில் வளர்ச்சியே இதற்குக் காரணம். உற்பத்திச் சக்திகள் முதலாளித்துவச் சரக்குப் பரிவர்த்தனை விதிகளுக்கு உட்பட்டு செயல்படுவதாகக் கருதப்பட்ட போதிலும், இன்று துரிதமாகவும் பெருமளவிலும் விரிவடைந்து வரும் இச்சக்திகள் அவ்விதிகளின் கட்டுப்பாட்டையும் விஞ்சி வளர்ந்து செல்கின்றன. இந்த உண்மை முதலாளிகளின் உள்ளத்திலும்கூட மேலும் மேலும் ஆழப் பதிகிறது. இதை வெளிப்படுத்தும் விதத்தில் முக்கியமாய் இரு அறிகுறிகள் தென்படுகின்றன. முதலாவதாக, காப்பு வரி விதிக்க வேண்டுமென்னும் புதிய பித்து பரவலாய்க் காணப்படுகிறது; இதற்கும் பழைய காப்பு முறைக்கும் வேறுபாடு என்னவென்றால்: ஏற்றுமதிக்குப் பொருத்தமான பண்டங்கள்தான் இப்போது மிகச் சிறந்த காப்பினைப் பெறுகின்றன. இரண்டாவதாக, முழு முழு உற்பத்திக் கிளைகளைச் சேர்ந்த தொழிலதிபர்களின் பொறுப்புக் கழகங்கள் உற்பத்தியையும், இவ்வாறு விலைகள், இலாபங்களையும் கூட கட்டுப்படுத்துகின்றன. பொருளாதார நிலைமை ஒப்பளவில் சாதகமாக உள்ள வரைதான் இந்தப் பரிசோதனைகள் நடை முறைக்கு ஏற்றவை என்பது சொல்லாமல் விளங்கும். ஒரு புயல் வீசினால் போதும், அவை கவிழ்ந்து விடும். ஒழுங்கு செய்து கட்டுப்படுத்துவது பொருளுற்பத்திக்கு அவசியம் தான் என்றாலும் இந்தப் பணிக்கு முதலாளி வர்க்கம் கொஞ்சம் கூட பொருத்தமான தல்ல என்று உறுதியாகச் சொல்லலாம், இதற்கிடையில் பொறுப்புக் கழகங்கள் செய்து வரக் கூடியதெல்லாம் பெரிய மீன்கள் சிறிய மீன்களை இன்னும் கூட துரிதமாக விழுங்குமாறு பார்த்துக் கொள்வதுதான்.

அவ்வப்போது தமது அறிக்கைகளில் திகைப்பு தெரிவிக்கின்றனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். சாதக ஆண்டுகளும் பாதக ஆண்டுகளும் மாறி மாறி வருவதும் கூட இயல்பாகவே கச்சாப் பொருட்கள் மேலும் விலைமலிவாவதற்கு வழிசெய்கிறது. இருக்கிற வேண்டல் மீது இது ஏற்படுத்தும் நேரடி விளைவு மட்டுமல்லாமல், நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட படி இலாப வீதத்தின் மீது ஏற்படும் விளைவும் கூட ஊக்குவிசையாகச் செயல்படுகிறது. அப்போது மேற்சொன்ன நிகழ்முறை — கச்சாப் பொருட்களின் உற்பத்தியை இயந்திர சாதனம் முதலானவற்றின் உற்பத்தி பையப் பைய முந்துவதான நிகழ்முறை — இன்னுங்கூட விரிவான அளவில் மறுபடியும் நடந்தேறுகிறது. தேவைப்படுகிற அளவில் மட்டுமல்லாமல் தரத்திலும் கச்சாப் பொருள் வழங்கப்பட வேண்டுமானால், எடுத்துக்காட்டாக இந்தியாவிலிருந்து அமெரிக்கத் தரம் வாய்ந்த பருத்தி வழங்கப்பட வேண்டுமானால் அந்தக் கச்சாப் பொருளில் உள்ளபடியே மேம்பாடு ஏற்பட வேண்டும், நீண்ட கால அடிப்படையில் ஐரோப்பாவின் வேண்டல் சீராக மேன்மேலும் உயர்ந்து செல்வது இதற்கு அவசியமாகும். (இந்திய உற்பத்தியாளர் தமது நாட்டில் எத்தகைய பொருளாதார நிலைமைகளில் உழைக்கிறார் என்பது பற்றிக் கவலையில்லை.) ஆக, கச்சாப் பொருட்களின் உற்பத்தி முதலில் திடுமென விரிவடைகிறது, பிறகு வெடுக்கென சுருங்கிப் போகிறது. இதையெல்லாம் — பொதுவாக முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் உள்ளியல்பையும் கூட — 1861-65 காலத்திய பருத்திப் பஞ்சத்திலிருந்து குறைவறப் பயிலலாம். மறுவுற்பத்தியின் தலையாய அடிக்கூறுகளில் ஒன்றாகிய ஒரு கச்சாப் பொருள் சிறிது காலத்துக்குக் கிஞ்சிற்றும் கிடைக்காமலிருந்தது என்பதிலிருந்து இந்தப் பஞ்சத்தின் தனித்தன்மையைத் தெரிந்து கொள்ளலாம். வழங்கல் செறிவாய் இருக்கிற போதும் கூட — கடின நிலைமைகளிலேயே அது செறிவாய் இருக்குமானால் — விலைகள் உயரலாம். அல்லது கச்சாப் பொருள் மெய்யாகவே தட்டுப்பாடாய் இருக்கலாம். பருத்தி நெருக்கடியின் போது ஆரம்பத்தில் நிலவியது இதே நிலைமைதான்.

எவ்வளவுக்கு எவ்வளவு மிகச் சமீப காலப் பொருளுற்பத்தி வரலாற்றைத் திரும்பிப் பார்க்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு தொடர்ச்சியாய் (குறிப்பாகக் கேந்திரத் தொழிற் கிளைகளில்) நமக்குக் காணக் கிடைப்பது இதுதான்: உயிர் உலகிலிருந்து பெறப்படும் கச்சாப் பொருட்கள் ஓயாமல் மாறி மாறி ஒப்பீட்டு மதிப்பேற்றத்துக்கும் அடுத்து அதன் விளைவாகவே மதிப்பிறக்கத்துக்கும் உட்படுகின்றன. தொழிற்சாலை ஆய்வாளர்களின் அறிக்கைகளிலிருந்து தரப்படும் பின்வரும் எடுத்துக்காட்டுகள் நமது பரிசீலனைக்குத் துணை செய்கின்றன.

வரலாறு கற்பிக்கும் படிப்பினை — வேளாண்மை தொடர்பான

வேறு பல ஆய்வுகளிலிருந்தும் பெறப்படும் படிப்பினை — இதுதான்: முதலாளித்துவ அமைப்பு அறிவார்ந்த வேளாண்மைக்கு [rational agriculture] எதிரானது; அதாவது அறிவார்ந்த வேளாண்மை முதலாளித்துவ அமைப்புக்கு (இவ்வமைப்பு வேளாண்மையில் தொழில் நுட்ப முன்னேற்றத்துக்கு ஊக்கமளித்தாலும் கூட) ஒத்து வராதது; சொந்த உழைப்பை நம்பி வாழும் சிறு விவசாயிகளோ அல்லது ஒருசேர இணைந்த உற்பத்தியாளர்களின் கட்டுப்பாடோ இதற்கு அவசியமாகும்.

---

மேலே குறிப்பிட்டவாறு ஆங்கிலேயத் தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகளிலிருந்து சில எடுத்துக்காட்டுகளைத் தருகிறோம்.

''தொழில் நிலவரம் மேம்பட்டுள்ளது; ஆனால் இயந்திர சாதனம் பெருகப் பெருக சாதக பாதகக் காலங்களின் சகடம் குறுகுகிறது. கச்சாப் பொருட்களுக்கான வேண்டல் பெருகப் பெருக இக்காலங்களில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் செல்லும் மாற்றங்கள் அடிக்கடி நிகழ்கின்றன....இப்போது, 1857 ஆம் வருடத்திய பீதிக்குப் பிறகு நம்பிக்கை மீண்டிருப்பதோடு, பீதி [panic] அநேகமாய் மறந்து போய் விட்டதாகவே தோன்றுகிறது. இந்த மேம்பாடு தொடருமா, தொடராதா என்பது பெரும்பாலும் க்ச்சாப் பொருட்களின் விலையைப் பொறுத்தது. சிலவற்றுக்கு மேல்வரம்பு அடையப்பட்டு விட்டதற்கான சான்றுகள் ஏற்கெனவே எனக்குத் தென்படுகின்றன; இவற்றின் உற்பத்தியிலிருந்து இலாபம் கிடைப்பது இந்த வரம்பைத் தாண்டிய பிறகு பையப்பைய குறைந்து சென்று, முடிவில் அறவே ஒழிந்து போகிறது. மென்கம்பளி வர்த்தகத்தில் இலாபகர ஆண்டுகளான 1849 ஐயும் 1850 ஐயும் எடுத்துக் கொண்டால், கோதப்பட்ட ஆங்கிலேயக் கம்பளியின் விலை இராத்தல் ஒன்றுக்கு 1 ஷில்லிங் 1 பென்னியாகவும், ஆஸ்திரேலியக் கம்பளியின் விலை 1 ஷில்லிங் 2 பென்னிக்கும் 1 ஷில்லிங் 5 பென்னிக்கும் இடைப்பட்டதாகவும் இருந்தது; 1841 முதல் 1850 முடியும் வரையிலான பத்தாண்டு காலத்தில் சராசரியாகப் பார்த்தால் ஆங்கிலேயக் கம்பளியின் விலை இராத்தல் ஒன்றுக்கு 1 ஷில்லிங் 2 பென்னியையும், ஆஸ்திரேலியக் கம்பளியின் விலை 1 ஷில்லிங் 5 பென்னியையும் தாண்டவே இல்லை. ஆனால், பேரழிவு நிகழ்ந்த 1857 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆஸ்திரேலியக் கம்பளியின் விலை 1 ஷில்லிங் 11 பென்னியாக இருந்தது, டிசம்பரில் பீதி உச்ச நிலையிலிருந்த போது 1 ஷில்லிங் 6 பென்னியாகக் குறைந்தது; ஆனால் பையப்பைய உயர்ந்து சென்று 1858 இல் 1 ஷில்லிங் 9 பென்னி ஆகி விட்டது; இப்போதும் அதே விலைதான். அதே போது ஆங்கிலேயக் கம்பளியின் விலை இராத்தல் ஒன்றுக்கு

1 ஷில்லிங் 8 பென்னியிலிருந்து ஆரம்பித்து 1857 ஏப்ரல்-செப்டெம்பரில் 1 ஷில்லிங் 9 பென்னியாக உயர்ந்து, 1858 ஜனவரியில் 1 ஷில்லிங் 2 பென்னியாகக் குறைந்து, பிறகு 1 ஷில்லிங் 5 பென்னியாக உயர்ந்துள்ளது. இது நான் குறிப்பிட்ட பத்தாண்டு காலத்தின் சராசரியை விட இராத்தல் ஒன்றுக்கு 3 பென்னி கூடுதலாகும்.... இதிலிருந்து மூன்றில் ஒன்று தெளிவாவதாக நான் கருதுகிறேன் — ஒன்று, 1857இல் இத்தகைய விலைகளால் போண்டியாக நேரிட்ட நிகழ்வுகள் மறந்து போய் விட்டன; அல்லது இருக்கின்ற கதிர்களைக் கொண்டு பயன்படுத்திக் கொள்ளக் கூடிய அளவுக்கு மட்டுமே கம்பளி உற்பத்தியாகியுள்ளது; அல்லது செய்பொருட்களாகிய பண்டங்களின் விலைகள் நிரந்தரமாய் உயரக் கூடிய நிலையில் இருக்கின்றன.... கடந்த காலத்திய அனுபவத்தையே இப்போதும் காண்கிறேன், கதிர்களும் தறிகளும் நம்ப முடியாத அளவுக்கு மிகக் குறுகிய காலத்தில் தொகையிலும் விரைவிலும் பல்கிப் பெருகியுள்ளன; பிரான்சுக்கு நமது கம்பளி ஏற்றுமதிகள் அநேகமாய் இதற்கு நிகரான விகிதத்தில் அதிகரித்துள்ளன; உள்நாட்டிலும் சரி, வெளி நாட்டிலும் சரி, ஆடுகளின் வயது மேன்மேலும் குறைந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது; அவற்றின் தொகை அதிகரித்திருப்பதும், ''துரிதமாய்ப் பலனெடுத்தல்'' என்று வேளாண் துறையினர் குறிப்பிடும் நிலையுமே இதற்குக் காரணம். இதை அறியாத சிலரைப் பற்றி நான் வருத்தப்பட்டதுண்டு; இவர்கள் தேர்ச்சியையும் மூலதனத்தையும் எத்தகைய தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்துகிறார்கள் என்று பார்க்கிறேன்; இம்முயற்சிகள் தமது வெற்றிக்கு முழுமையாக நம்பியுள்ள உற்பத்திப் பண்டம் எப்படிப்பட்டதென்றால், உயிருலக விதிகளின் படி மட்டுமே அதனை அதிகமாக்க முடியும்.... எல்லாக் கச்சாப் பொருட்களுக்குமான வழங்கல்-வேண்டல் நிலவரமாகிய இதுவேதான் ... கடந்த காலத்தில் பருத்தி வர்த்தகத்தில் நேரிட்ட ஏற்ற இறக்கங்கள் பலவற்றுக்கும் மற்றும் 1857ஆம் வருடத்திய இலையுதிர் காலத்தில் ஆங்கிலேயக் கம்பளிச் சந்தையில் சமாளிக்க முடியாத விளைவுகளைத் தோற்றுவித்த நிலைமைக்கும் காரணமெனத் தோன்றுகிறது.''[17] (ஆர். பேக்கர், தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1858 அக்டோபர், பக்கம் 56-61.)

யார்க்ஷயரில் வெஸ்ட்-ரைடிங் மென்கம்பளித் தொழிலின்

---

[17] எங்கெல்ஸ் குறிப்பு. — கச்சாப் பொருளின் விலைக்கும் உற்பத்திப் பொருளின் விலைக்குமான விகிதப் பொருத்தமின்மையே 1857ஆம் வருடத்திய கம்பளி நெருக்கடிக்குக் காரணம் என்று திரு பேக்கரைப் போல் நாம் விளக்கம் அளிப்பதில்லை என்பது கூறாமல் விளங்கும். இந்தப் பொருத்தமின்மையே கூட ஓர் அறிகுறிதான். நெருக்கடி பரவலான ஒன்றாய் இருந்தது.

வசந்த காலமாய்த் திகழ்ந்த ஆண்டுகள் 1849 உம் 50 உம். இந்தத் தொழிலில் வேலை செய்வோர் தொகை 1838இல் 29,246; 1843இல் 37,000; 1845இல் 48,097; 1850இல் 74,891. இவ்வட்டத்தில் இயந்திரத் தறிகளின் எண்ணிக்கை 1838இல் 2,768; 1841இல் 11,458; 1843இல் 16,870; 1845இல் 19,121; 1850இல் 29,539. (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1850, பக்கம் 60.) சிக்கெடுத்த கம்பளித் தொழிலின் இந்தச் செழுமை வரவிருக்கும் இன்னலின் முன்னறிகுறிகள் சிலவற்றை 1850 அக்டோபரிலேயே வெளிப்படுத்தியது. உதவி ஆய்வாளர் பேக்கர் 1851 ஏப்ரலுக்கான அறிக்கையில், லீட்ஸ் தொடர்பாகவும் பிராட்ஃபோர்டு தொடர்பாகவும் கூறினார்: ''தொழில் நிலவரம் கொஞ்சம் கூட திருப்தியளிக்கக் கூடியதாய் இல்லை. சில காலமாய் இதே நிலைமைதான். மென்கம்பளி நூற்பாளர்கள் 1850ஆம் வருடத்திய இலாபங்களைத் துரிதமாய் இழந்து வருகிறார்கள்; பெரும்பாலான அதிபர்கள் அவ்வளவு சிறப்பான நிலையில் இருக்கவில்லை. கம்பளி இயந்திர சாதனங்கள் ஓய்ந்து நிற்கின்றன. ஒரே நேரத்தில் இவ்வளவு சாதனங்கள் முன்னெப்போதும் ஓய்ந்து நின்றதில்லை என நினைக்கிறேன். வெண்சணல் நூற்பாளர்களும் ஆட்களை நீக்கம் செய்து வருகிறார்கள், பொறிச் சட்டங்களை நிறுத்தி வருகிறார்கள். உண்மை நிலவரம் என்னவென்றால், ஜவுளித் துணிகளில் தொழிற் சகடங்கள் கொஞ்சம் கூட நிச்சயமில்லாதவை; உண்மை விரைவில் புலப்படுமென நினைக்கிறேன், ... அதாவது கதிர்களின் உற்பத்தித் திறனுக்கும் கச்சாப் பொருளின் அளவுக்கும் மக்கள்தொகைப் பெருக்கத்துக்கும் இடையே ஒப்புமை ஏதுமில்லை'' (பக்கம் 52).

பருத்தித் தொழிலிலும் இதே நிலைமைதான். எடுத்துக்காட்டப்பட்ட 1858 அக்டோபருக்கான அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: ''தொழிற்சாலைகளில் உழைப்பு நேரம் நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதால், ஜவுளித் துணிகள் அனைத்திலும் நுகர்வும் உற்பத்தியும் கூலியும் எவ்வளவு என்பதெல்லாம் ஒரு முக்கூற்று விதியாகக் குறுக்கப்பட்டு விட்டது.... இப்போது பிளாக்பர்ன் நகராட்சித் தலைவராயிருக்கும் திரு பேய்ன்ஸ் பருத்தித் தொழில் பற்றி சமீபத்தில் ஆற்றிய உரையிலிருந்து மேற்கோள் தருகிறேன்; இவர் இந்த வழியைக் கையாண்டு தமது வட்டாரத்துப் பருத்திப் புள்ளி விவரங்களை ஆன மட்டும் துல்லியமாகக் குறுக்கித் தருகிறார்:

'''உண்மைக் குதிரைத் திறன், இயந்திரக் குதிரைத் திறன் ஒவ்வொன்றும், தயாரிப்புடன் 450 தன்னியக்க - மியூல் கதிர்களை, அல்லது 200 திராசில் கதிர்களை, அல்லது நூல் சுற்றுதல், முறுக்குதல், பசையிடுதல் உட்பட 40 அங்குலத் துணிக்கான 15 தறிகளை இயக்கும். நூற்பில் ஒவ்வொரு குதிரைத் திறனுக்கும்

2½ தொழிலாளர் வீதம் வேலை பெறுவர், ஆனால் நெசவில் 10 பேர் வேலை பெறுவர்; ஒவ்வொருவருக்கும் சராசரி வாரக் கூலி முழுதாய் 10 ஷில்லிங் 6 பென்னி.... நூற்கப்படுவதும் நெய்யப் படுவதுமான நூலின் சராசரி இழைத் தர எண் பாவு நூலுக்கு 30 முதல் 32உம் ஊடு நூலுக்கு 34 முதல் 36உம் ஆகும்; வாராந்தர நூற்பு உற்பத்தி கதிர் ஒன்றுக்கு 13 அவுன்ஸ் எனக் கொண்டால் வாரம் ஒன்றுக்கு 824,700 இராத்தல் நூல் நூற்கப்படும், இதற்கு £28,300 செலவில் 970,000 இராத்தல் அல்லது 2,300 பேல் பருத்தி தேவைப்படும்.... இந்த வட்டத்தில் (பிளாக்பர்னைச் சுற்றி ஐந்து மைல் எல்லைக்குள்) வாரம் ஒன்றுக்கு நுகரப்படும் மொத்தப் பருத்தி 1,530,000 இராத்தல் அல்லது 3,650 பேல் ஆகும்; இதற்கு £44,625 செலவாகிறது.... இது, ஐக்கிய முடியரசின் பருத்தி நூற்பு முழுவதிலும் பதினெட்டில் ஒரு பங்கும், விசைத்தறி நெசவு முழுவதிலும் ஆறிலொரு பங்கும் ஆகும்.

"இவ்வாறு, திரு பேய்ன்ஸ் கணக்கிட்டுள்ள படி, ஐக்கிய முடியரசில் பருத்திக் கதிர்களின் மொத்த எண்ணிக்கை 28,800,000 என்று அறிகிறோம். இந்தக் கதிர்கள் எப்போதும் முழு நேரம் இயங்குவதாகக் கொண்டால், வருடாந்தரப் பருத்தி நுகர்வு 1,432,080,000 இராத்தலாக இருக்க வேண்டும். ஆனால் இறக்கு மதியான பருத்தியிலிருந்து 1856இலும் 1857இலும் செய்யப்பட்ட ஏற்றுமதியைக் கழித்து விட்டால் 1,022,576,832 இராத்தல் மட்டுமே ஆதலால் வழங்கீட்டில் 409,503,168 இராத்தல் என்னு மளவுக்குப் பற்றாக்குறை கட்டாயம் ஏற்பட்டாக வேண்டும். ஆனால் திரு பேய்ன்ஸ்—இப்பொருள் குறித்து இவர் அன்பு கூர்ந்து என்னோடு கடிதப் பரிமாற்றம் செய்து கொண்டார்—பிளாக்பர்ன் வட்டத்தில் பயன்படுத்தப்படும் அளவின் அடிப்படை யில் வருடாந்தரப் பருத்தி நுகர்வு கணக்கிடப்படும் போது மிகைப் பாடு நேரிட வாய்ப்புண்டு எனக் கருதுகிறார். நூற்கப்படும் நூலின் தர எண்களில் மட்டுமல்லாமல் இயந்திர சாதனத்தின் சிறப்பிலும் காணப்படும் வேறுபாடே இதற்குக் காரணம் என்கிறார். ஐக்கிய முடியரசில் மொத்த வருடாந்தரப் பருத்தி நுகர்வு 1,000,000,000 இராத்தல் இருக்குமென அவர் மதிப்பீடு செய்கிறார். ஆனால், அவரது மதிப்பீடு சரியாக இருக்குமானால், உண்மையிலேயே வழங்கீட்டில் 22,576,832 இராத்தல் என்னுமளவுக்கு மிகைப்பாடு இருக்குமானால், வழங்கலும் வேண்டலும் ஏற்கெனவே அநேகமாய் நேராகி விட்டதாகத் தோன்றுகிறது—தமது வட்டத்தில் வேலைக்குத் தயாராகி வருவதாக திரு பேய்ன்ஸ் குறிப்பிடுகிற அந்தக் கூடுதல் கதிர்களையும் தறிகளையும் (இதே காரண காரியத்தைக் கொண்டு பார்த்தால் அநேகமாய் ஏனைய வட்டாரங்களிலும் கூடுதலாய் இருக்கக் கூடியவற்றையும்) கருத்தில் கொள்ளாமலே இதைச் சொல் கிறோம்." (பக்கம் 59, 60).

## III. பொதுவான எடுத்துக்காட்டு.
## 1861-65 காலத்திய பருத்தி நெருக்கடி
### முன் வரலாறு 1845-60

*1845*. பருத்தித் தொழிலின் பொற்காலம். பருத்தி விலை மிகக் குறைவு. இது குறித்து லி. ஹார்னர் சொல்கிறார்: ''முக்கியமாய்ப் பருத்தி நூற்பில் சென்ற கோடை காலத்திலும் இலையுதிர் காலத்திலும் நிலவியது போல் இவ்வளவு விறுவிறுப்பான தொழில் நிலவரத்தைக் கடந்த எட்டாண்டு காலத்தில் நான் கண்டதே இல்லை. இந்த அரையாண்டு முழுக்க ஒவ்வொரு வாரமும் தொழிற்சாலைகளில் புதிய முதலீடுகள் பற்றிய அறிவிப்புகள் எனக்கு வந்த வண்ணமுள்ளன; புதிய ஆலைகள் கட்டப்படுவதன் வடிவிலோ சும்மா கிடந்த சில ஆலைகளை நடத்த ஆள் கிடைப்பதன் வடிவிலோ, இருக்கின்ற ஆலைகளை விரிவாக்குவதன் வடிவிலோ, இன்னுமதிகத் திறன் வாய்ந்த புதிய எஞ்சின்களின் வடிவிலோ, செய்பொருளுற்பத்திக்கான இயந்திர சாதனத்தின் வடிவிலோ இப்புதிய முதலீடுகள் நிகழ்ந்தன.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1845 அக்டோபர், பக்கம் 13.)

*1846*. புகார்கள் வரத் தொடங்குகின்றன: ''கடந்த சில காலமாகவே, பருத்தியாலைகளை நடத்துவோர் தமது தொழிலின் மந்த நிலை குறித்துப் பொத்தம்பொதுவாய்ப் புகார் சொல்லக் கேட்டேன்.... கடந்த ஆறு வாரமாய்ப் பல ஆலைகள் குறைநேரம் வேலை செய்யத் தொடங்கியுள்ளன; வழக்கம் போல் தினமும் பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்வதற்கு பதில் எட்டு மணி நேரம்தான் வேலை செய்கின்றன; இந்தப் போக்கு வளர்ந்து வருவதாகத் தெரிகிறது.... கச்சாப் பொருள் விலை பெரிதும் உயர்ந்துள்ளது.... செய்பொருள் விலை சிறிதும் உயரவில்லை என்பதோடு... பருத்தி விலையேற்றம் தொடங்குவதற்கு முன்னால் இருந்ததை விடவும் குறைவாயுள்ளது. கடந்த நான்காண்டு காலத்தில் பருத்தியாலைகள் ஏராளமாய்ப் பெருகியுள்ளன. ஒரு புறம் கச்சாப் பொருளுக்கான வேண்டலும் மறு புறம் சந்தையில் செய்பொருளின் வழங்கலும் இதனால் பெரிதும் அதிகரித்திருக்க வேண்டும்; இந்தக் காரணங்கள் ஒன்றாய்க் கூடி (கச்சாப் பொருள் வழங்கலும் செய்பொருள் நுகர்வும் மாறவில்லை எனக் கொண்டால்) இலாபங்களுக்கு எதிராகச் செயல் பட்டிருக்க வேண்டும்; சமீப காலத்தில் பருத்தி வழங்கல் குறுகிப் போனதாலும், உள்நாட்டுச் சந்தைகளும் வெளிநாட்டுச் சந்தைகளுமான பல சந்தைகளிலும் செய்பொருளுக்கான வேண்டல் சரிவுற்றதாலும் இந்தச் செயல்பாடு இன்னுமுயர்ந்த விகிதத்தில்தான் அமைந்திருக்க வேண்டும்.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1846 அக்டோபர், பக்கம் 10.)

கச்சாப் பொருளுக்கான வேண்டல் உயர்ந்ததும் சந்தையில் செய்பொருள் குவிக்கப்பட்டதும் இயல்பாகவே இணைந்து நிகழ்ந்தன. இங்கு இடைக்குறிப்பாய்ச் சொல்ல வேண்டியது என்னவென்றால்: அந்த நேரத்தில் தொழில் விரிவுற்றதும் அடுத்து தேக்க நிலை ஏற்பட்டதும் பருத்தித் தொழில் வட்டங்களோடு நின்று விடவில்லை. சிக்கெடுத்த கம்பளித் தொழில் வட்டமான பிராட்ஃபோர்டில் *1836*இல் *318* தொழிற்சாலைகளே இருந்தன. *1846*இல் இந்த எண்ணிக்கை *490*ஆக உயர்ந்து விட்டது. இந்தப் புள்ளி விவரம் உண்மையான உற்பத்திப் பெருக்கத்தைப் புலப்படுத்தவில்லை. ஏனென்றால் புதிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டதோடு பழை யவையும் கணிசமாய் விரிவாக்கப்பட்டன. இது தொடர்பாக வெண் சணல் நூற்பாலைகளை முக்கியமாய்க் குறிப்பிட வேண்டும். ''கடந்த பத்தாண்டு காலத்தில் இருப்பு மிகையாய்க் குவிந்து போனதற்கு எல்லாமே ஓரளவுக்குக் காரணமாய் இருந்துள்ளன; தொழிலில் இப்போது ஏற்பட்டுள்ள தேக்க நிலைககான முக்கியக் காரணங் களில் இந்த மிகையிருப்பும் ஒன்று....மந்த நிலையானது...ஆலை களும் இயந்திர சாதனமும் இப்படித் துரிதமாய் அதிகரிப்பதிலிருந்து இயல்பாகவே விளைவது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை கள், *1846* அக்டோபர், பக்கம் *30*.)

*1847*. அக்டோபரில் பணப் பீதி [money panic]. கழிவு *8%*. இந்தப் பீதி இரயில்வே மோசடியின் தகர்வையும், கடன் வசதி உண்டியலிலான [accommodation bill] கிழக்கிந்திய ஊக வாணி பத்தையும் தொடர்ந்து ஏற்பட்டது. ஆனால்:

''பருத்தி, கம்பளி, வெண்சணல் தொழில்கள் விரிவாய்ப் பெருகியதால் கடந்த சில ஆண்டுகளில் பருத்திக்கும் கம்பளிக்கும் வெண் சணலுக்குமான வேண்டல் அதிகரித்திருப்பது குறித்து திரு பேக்கர் கருத்துக்குரிய விவரங்களை எடுத்துக்காட்டுகிறார். இந்தக் கச்சாப் பொருட்களின் உற்பத்தியானது சராசரி வழங்கலை விடவும் மிகத் தாழ்ந்த நிலைக்குக் குறைந்து போயிருப்பதால் இவற்றுக்கான அதிகரித்த வேண்டலே (பணவகைச் சீர்குலைவைக் கவனியாது ஒதுக்கி விட்டாலும்) அநேகமாய் இந்தத் தொழிற் கிளைகளின் இப்போதைய நிலவரத்துக்குக் காரணமென்று அவர் கருதுகிறார். நானே பார்த்தறிந்தவையும், தொழிலை நன்கறிந்தவர்க ளோடு உரையாடித் தெரிந்து கொண்டவையும் இந்தக் கருத்தை முழுமையாக உறுதி செய்கின்றன. அந்தத் தொழிற் கிளைகள் யாவும் மிகவும் மந்த நிலையில் இருந்த போதே, 5 சதவீதக் கழிவு களும் அதற்கும் குறைவான கழிவுகளும் கூட தட்டுத் தடையின்றிக் கிடைத்தன. மாறாக, கச்சாப் பட்டின் வழங்கல் செறிவாகவும், விலை குறைவாகவும், எனவே தொழில் விறுவிறுப்பாகவும் இருந்து வந்தது.... இரண்டு மூன்று வாரத்துக்கு முன்னால் இருந்த நிலைமை இது: இப்போது சந்தேகமே இல்லாமல் பணவகைச் சீர்குலைவு

ஏற்பட்டு, உள்ளபடியே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களை பாதித்திருப்பதோடு, இன்னும் கூட விரிவான அளவில் அலங்காரத் துணி உற்பத்தியாளர்களையும் பாதித்துள்ளது — பின்னவர்கள் முறுக்கு இழை நூற்பாளர்களுக்கு முக்கிய வாடிக்கையாளர்களாய் இருந்தவர்கள். பிரசுரமாகியுள்ள தகவலறிக்கைகளைப் பார்க்கும் போது, பருத்தித் தொழில் கடந்த மூன்றாண்டு காலத்தில் சுமார் 27 சதவீதம் வளர்ந்திருப்பது தெரிகிறது. இதன் விளைவாகப் பருத்தியின் விலை இராத்தலுக்கு 4 பென்னியிலிருந்து 6 பென்னியாக உயர்ந்துள்ளது. அதே போது பட்டு நூலின் விலையானது வழங்கல் அதிகமானதால் பழைய விலைக்கு மேல் சிறிதளவே உயர்ந்துள்ளது. கம்பளித் தொழில் 1836 இலிருந்து வளரலாயிற்று. அது முதல் யார்க்ஷயரில் கம்பளித் துணி உற்பத்தி 40 சதவீதம் அதிகரித்துள்ளது; ஸ்காட்லாந்தில் இதை விடவும் அதிகரித்துள்ளது. மென்கம்பளித் தொழில்[18] இன்னுமதிகமாய் வளர்ந்துள்ளது. கணக்கிட்டுப் பார்க்கும் போது, மேற் குறிப்பிட்ட காலத்தில் இத்தொழில் 74 சதவீதத்துக்கு மேல் வளர்ந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே கச்சாக் கம்பளி ஏராளமாய் நுகரப்பட்டுள்ளது. வெண்சணல் தொழில் 1839 இலிருந்து இங்கிலாந்தில் சுமார் 25 சதவீதமும், ஸ்காட்லாந்தில் 22 சதவீதமும், அயர்லாந்தில் ஏறக்குறைய 90 சதவீதமும் வளர்ந்துள்ளது.[19] இதனாலும் மற்றும் மகசூல் குறைந்ததாலும் ஏற்பட்ட விளைவு, நூல் விலை கட்டு ஒன்றுக்கு 6 பென்னி குறைந்துள்ள போதே கச்சாப் பொருள் விலை டன் ஒன்றுக்கு £10 அதிகரித்துள்ளது." (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1847 அக்டோபர், பக்கம் 30-31.)

*1849.* 1848 பிற்பகுதியிலிருந்து தொழில் புத்துயிர் பெற்றது. "வெண்சணல் விலை மிகக் குறைவாய் இருந்ததால், வருங்காலத்தில் என்ன நடந்தாலும் நியாயமான இலாபம் கிடைக்கும் என்பதற்கான உத்தரவாதமாய்க் கருதப்பட்டது எனலாம். இது தொழிலதிபர்களை மிகவும் உறுதியாகக் காரியமாற்றத் தூண்டியுள்ளது.... கம்பளித் தொழிலதிபர்கள் ஆண்டின் முற்பகுதியில் சிறிது காலம் மிகவும் முனைப்பாய்ச் செயல்பட்டனர்.... பல சந்தர்ப்பங்களில் கம்பளிச் சரக்குத் தொகுதிகள் மெய்யான வேண்டலுக்கு பதிலாய் இடம் பெறுகின்றன என்றும், செழிப்புக் காலங்கள்* போல்

[18] குறுக்கிழைக் கம்பளியிலிருந்து சிக்குவாரிய நூல் நூற்று நெசவு செய்யும் கம்பளித் தொழில் என்றும் (முக்கிய மையம் லீட்ஸ்), நீட்டிழைக் கம்பளியிலிருந்து மென்கம்பளி நூல் நூற்று நெசவு செய்யும் மென்கம்பளித் தொழில் என்றும் (முக்கிய மையம் யார்க்ஷயரில் உள்ள பிராட்ஃபோர்டு) இங்கிலாந்தில் தெளிவாய் வேறுபடுத்தப் படுகிறது.

[19] எங்கெல்ஸ் குறிப்பு. — அயர்லாந்தில் இயந்திர வழி லினன் நூல் உற்பத்தியின் இந்தத் துரிதப் பெருக்கம் ஜெர்மனியில் (சைலீஷியா, லுசாத்தியா, வெஸ்ட்ஃபேலியா) கைநூற்பு நூலில் நெய்த லினன் ஏற்றுமதிகளுக்கு மரண அடி கொடுத்தது.

தோன்றுகிறவை, அதாவது முழுமையாக வேலை நடைபெறும் காலங்கள் எப்போதும் முறைப்படியான வேண்டலின் காலங்களாய் இருப்பதில்லை என்றும் நான் ஐயுறுகிறேன். சில மாதங்களில் மென்கம்பளி மிகவும் நல்ல விலைக்குப் போயிருக்கிறது; உண்மையிலேயே பிரமாதமாய் இருந்துள்ளது.... குறிப்பிட்ட காலத்தின் தொடக்கத்தில், கம்பளி விலை மிகவும் குறைவாய் இருந்தது; நூற்பாளர்கள் தாராளமாகவும் ஏராளமாகவும் கம்பளி வாங்கினார்கள். வசந்த காலக் கம்பளி விற்பனையில் கம்பளி விலை உயர்ந்த போது, நூற்பாளர்கள் நன்மையடைந்தார்கள். செய்பொருளுக்கான வேண்டல் கணிசமாய் வளர்ந்து அவசர அவசியமாகி விட்ட நிலையில் நூற்பாளர்கள் தொடர்ந்து நன்மையடைந்தார்கள்.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1849 ஏப்ரல், பக்கம் 42.)

''மூன்று முதல் நான்கு ஆண்டு காலமாய் நாட்டின் ஆலைத் தொழில் வட்டாரங்களில் ஏற்பட்டுள்ள தொழில் நிலவரத்திலான மாற்றங்களைப் பார்ப்போமானால், கவலைக்குரியதொரு பெருங் காரணம் எங்கோ மறைந்திருப்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டுமென நினைக்கிறேன்.... ஆனால் பெருகி விட்ட இயந்திர சாதனத்தின் பிரம்மாண்ட உற்பத்தித் திறனும் கூட இதற்கு இன்னுமொரு காரணமாய் இல்லாது போய் விடுமா?'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1849 ஏப்ரல், பக்கம் 42, 43.)

1848 நவம்பரிலும் 1849 மே மாதத்திலும் கோடை காலத்திலும் — அக்டோபர் வரை — தொழில் செழித்தோங்கியது. ''மென் கம்பளிச் சரக்கு — பிராட்ஃபோர்டும் ஹாலிஃபாக்சும் இதற்கான முக்கியத் தொழில் மையங்கள் — விறுவிறுப்பாய் ஓடியுள்ளது; இந்தத் தொழில் இப்போது எட்டியுள்ளது போன்ற அளவை முன் எப்போதும் எட்டியதில்லை. அனைத்துக்கும் மேலாக ஊக வாணிபமும், பருத்திப் பஞ்சு கிடைக்குமா கிடைக்காதா என்ற நிச்சயமற்ற நிலையுமே அந்தத் தொழிற் கிளையின் நிலவரத்தில் இன்னுமதிகப் பரபரப்பையும், அவ்வப்போது மாறுதல்களையும் தோற்றுவித்து வந்தன.... இப்போது மோட்டா ரகப் பருத்தித் துணிகளின் இருப்பு குவிந்து வருகிறது; சிறு நூற்பாளர்கள் இது குறித்துக் கவலை அடைந்துள்ளார்கள்; இதனால் அவர்கள் பாதிப்புக்கு ஆளாகியுள்ளார்கள். அவர்களில் பலரும் தம் ஆலைகளைக் குறைநேரம் இயக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1849 அக்டோபர், பக்கம் 64-65.)

1850, ஏப்ரல், தொழில் தொடர்ந்து விறுவிறுப்பாய் நடைபெற்றது. இதற்கு விதிவிலக்காக: ''பருத்தித் தொழிலின் ஒரு பகுதியில் பெரும் மந்த நிலை ஏற்பட்டுள்ளது.... முக்கியமாய் மட்ட ரகப் பருத்தி நூல் நூற்பதிலும், மொத்தையான பருத்தித் துணி நெய்வதிலும் ஈடுபட்டிருக்கும் தொழிற் கிளைக்கு ஏற்றதான கச்சாப் பொருள் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்குக்

காரணம். மென்கம்பளித் தொழிலுக்குரிய இயந்திர சாதனம் சமீப காலத்தில் கூடுதலாய்த் தயாரிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து இதே போன்ற எதிர்வினை நிகழக் கூடும் என்ற அச்சம் நிலவுகிறது. மென்கம்பளித் தறிகள் அவற்றின் உற்பத்தியளவை 1849இல் மட்டும் 40 சதவீதம் கூடுதலாக்கியுள்ளன. கதிர்கள் 25 அல்லது 30 சதவீதம் கூடுதலாகியுள்ளன. அவை இன்றும் அதே வீதத்தில் உற்பத்தியைக் கூடுதலாக்கி வருகின்றன என்று திரு பேக்கர் கணக் கிட்டுச் சொல்கிறார்.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1850 ஏப்ரல், பக்கம் 54.)

*1850*. அக்டோபர். ''கச்சாப் பருத்தியின் உயர் விலை காரண மாய்... இந்தத் தொழிற் கிளையில் (முக்கியமாய், உற்பத்திச் செல வில் கச்சாப் பொருள் கணிசப் பங்கு வகிக்கும் துணி வகைகளைப் பொறுத்த வரை) குறிப்பிடத்தக்க அளவில் தொடர்ந்து மந்த நிலை காணப்படுகிறது.... இதே போல், கச்சாப் பட்டு மிக அதிகமாய் விலையேறிப் போனதால் அந்தத் தொழிலிலும் அநேகக் கிளை களில் மந்த நிலை காணப்படுகிறது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1850 அக்டோபர், பக்கம் 14.)

இதே அறிக்கையின் பக்கம் 31, 33இல் கூறப்பட்டிருப்பதி லிருந்து நாம் அறிவது: வெண்சணலின் உயர்விலையும் ஏனைய விவசாய விளைபொருட்களின் குறைவிலையும் சேர்ந்து, வரவிருக்கும் ஆண்டில் வெண்சணல் உற்பத்தி கணிசமாய்க் கூடுதலாவதை உறுதிப்படுத்தும் என்று அயர்லாந்தில் வெண்சணல் சாகுபடியின் முன்னேற்றத்துக்கும் மேம்பாட்டுக்குமான முடியரசுச் சங்கத்தின் குழு முன்கூட்டியே அறிவித்தது.

*1853*. ஏப்ரல். பெருஞ்செழிப்பு. லி. ஹார்னர் தமது அறிக்கை யில் கூறுகிறார்: ''லங்காஷயர் ஆலைத் தொழில் வட்டங்களோடு அலுவலின் பொருட்டு நான் பழகி வரும் கடந்த பதினேழு ஆண்டு களில், இது போன்ற பொதுவான செழிப்பை முன் எப்போதும் கண்டதில்லை; ஒவ்வொரு கிளையிலும் அசாதாரண முனைப்பைக் காண முடிகிறது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1853 ஏப்ரல், பக்கம் 19.)

*1853*. அக்டோபர். பருத்தித் தொழிலில் மந்த நிலை. ''மிகை யுற்பத்தி.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1853 அக்டோபர், பக்கம் 15.)

*1854*. ஏப்ரல். ''கம்பளித் தொழில் விறுவிறுப்பாய் நடை பெறா விட்டாலும், கம்பளித் துணி உற்பத்தி செய்யும் எல்லாத் தொழிற்சாலைகளிலும் முழு வேலை நடக்கிறது; பஞ்சாலைகளிலும் இதே நிலைமைதான் எனலாம். பொதுவாக மென்கம்பளித் தொழி லின் நிலைமை கடந்த அரையாண்டு முழுக்க நிச்சயமற்றதாகவும் மன நிறைவு அளிக்காததாகவுமே இருந்துள்ளது.... வெண்சணலும் நார்ச்சணலும்கொண்டு நடைபெறும் ஆலைத் தொழில் அநேகமாய்க்

கடுந்தடைகளை சந்திக்க வேண்டி வரும்; ருஷ்யாவிலிருந்து கச்சாப் பொருட்கள் வருவது கிரிமியப் போரின் விளைவாகக் குறைந்து போனதால் ஏற்பட்டுள்ள நிலைமை இது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1854 ஏப்ரல், பக்கம் 37.)

*1859.* ''ஸ்காட்லாந்தின் வெண்சணல் வட்டங்களில் தொழில் இன்னும் மந்தமாகவே உள்ளது. கச்சாப் பொருள் தட்டுப்பாடாய் இருப்பதோடு, விலையும் அதிகம்; பால்டிக் வட்டாரத்தில் (பிரதான மாய் அங்கிருந்துதான் நமக்குத் தேவையான வெண்சணல் வருகிறது) சென்ற ஆண்டு விளைந்த சணலின் தரம் மோசம். இவையெல்லாம் இவ்வட்டங்களின் வெண்சணல் தொழிலுக்குக் கேடு செய்யும். ஆனால் மோட்டா ரகத் துணி வகைகள் பலவற்றிலும் பையப் பைய வெண்சணலின் இடத்தைக் கைப்பற்றி வரும் சணலானது விலை யில் அசாதாரணமாய் உயர்ந்திருக்கவும் இல்லை, அளவில் தட்டுப் பாடாகவும் இல்லை....தண்டீயில் சுமார் ஒரு பாதி இயந்திர சாதனங்கள் இப்போது சணல் நூற்பில் ஈடுபட்டுள்ளன.'' (தொழிற் சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1859 ஏப்ரல், பக்கம் 19.)— ''கச்சாப் பொருளின் உயர் விலை காரணமாய், வெண்சணல் நூற்பு இன்று வரை ஆதாயம் தரும் நிலையை நெருங்கவுமில்லை; மற்றெல்லா ஆலைகளும் முழு நேரம் ஓடிக் கொண்டிருக்கும் போதே பல இடங்களில் வெண்சணல் இயந்திர சாதனம் ஓய்ந்து கிடப்ப துண்டு.... சணல் நூற்பு ... இதை விடவும் சற்றே மன நிறைவளிப் பதாய் உள்ளது; கச்சாப் பொருளின் விலை சமீபத்தில் சரிந்ததே காரணம்; இவ்விலை இப்போது மிகவும் குறைந்துள்ளது.'' (தொழிற் சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1859 அக்டோபர், பக்கம் 20.)

**1861-64. அமெரிக்க உள்நாட்டுப் போர். பருத்திப் பஞ்சம். கச்சாப் பொருள் தட்டுப்பாடு, விலையுயர்வு இவை காரணமாய் உற்பத்தி நிகழ்முறை தடைபடுவதற்கு மிகப் பெரும் எடுத்துக்காட்டு.**

*1860.* ஏப்ரல். ''தொழில் நிலவரத்தைப் பொறுத்த வரை, நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்ன வென்றால்: கச்சாப் பொருளின் விலை உயர்ந்திருந்தாலும் பட்டு நீங்கலாய் ஜவுளி ஆலை அதிபர்கள் அனைவரும் கடந்த அரை யாண்டு காலத்தில் ஓரளவு முனைப்பாய் இயங்கியுள்ளனர்.... பருத் தித் தொழில் வட்டங்கள் சிலவற்றில், வேலைக்கு ஆள் தேவை என்று விளம்பரம் தரப்பட்டுள்ளது; நார்ஃபோக்கிலிருந்தும் ஏனைய கிராமப்புற மாவட்டங்களிலிருந்தும் ஆட்கள் வந்திருக்கிறார்கள்.... ஒவ்வொரு தொழிற் கிளையிலும், கச்சாப் பொருள் மிகவும் தட்டுப் பாடாய் இருப்பதாகத் தோன்றுகிறது.... நம்மை ஓர் எல்லைக்குள்

கட்டுப்படுத்தி வைத்திருப்பதே கச்சாப் பொருள் இல்லாமை மட்டும் தான். பருத்தித் தொழிலில், புதிய ஆலைகள் நிறுவப்படுதலும் புதிய விரிவாக்க அமைப்புகள் உண்டாக்கப்படுதலும், ஆட்களுக் கான வேண்டலும் எக்காலத்திலும் இதை விட அதிகமாய் இருந் திருக்க முடியாது என்று நினைக்கிறேன். எங்கு பார்த்தாலும் கச்சாப் பொருளைத் தேடிப் புதிய முயற்சிகள் நடைபெறுகின் றன.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1860 ஏப்ரல், பக்கம் 57.)

*1860* அக்டோபர். ''பருத்தி, கம்பளி, வெண்சணல் வட்டங் களில் தொழில் நிலவரம் நன்றாய் இருந்துள்ளது; அயர்லாந்தில் ஓராண்டுக்கும் மேலே 'மிகச் சிறப்பாய்' இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது; கச்சாப் பொருளின் விலை இப்படி உயராமல் இருந்திருந்தால் இன்னும் கூட சிறப்பாய் இருந்திருக்குமாம். வெண் சணல் நூற்பாளர்கள், தமக்குத் தேவையான அளவு வெண்சணல் கிடைக்க வேண்டும் என்பதற்காக, இந்தியா இருப்புப் பாதைகளால் அகலத் திறந்து விடப்படுவதையும், அதன் வேளாண்மை வளர்ச்சி யடைவதையும் என்றுமில்லாத ஆவலோடு எதிர்நோக்கிக் கொண் டிருப்பதாகத் தெரிகிறது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை கள், 1860 அக்டோபர், பக்கம் 37.)

*1861* ஏப்ரல். ''இப்போது தொழில் நிலவரம் மந்தமாய் இருக்கிறது... ஒரு சில பஞ்சாலைகள் குறைநேரம் ஓடுகின்றன. பட்டாலைகள் பலவும் பகுதியளவு மட்டுமே வேலை செய்கின்றன. கச்சாப் பொருளின் விலை அதிகம்; பெருந் திரளான நுகர்வாளர் கள் வாங்கி உபயோகிக்கும் படி துணி உற்பத்தி செய்வதற்கு எவ் வளவு கொடுத்து கச்சாப் பொருளை வாங்கலாமோ அதை விட அதிகம். அநேகமாய் ஜவுளித் தொழிலின் ஒவ்வொரு கிளையிலுமே இப்படித்தான் உள்ளது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கை கள், 1861 ஏப்ரல், பக்கம் 33.)

1860இலேயே பருத்தித் தொழில் மிகையுற்பத்தி செய்திருப்பது தெளிவாகி விட்டது. இதனால் ஏற்பட்ட விளைவு அடுத்த சில ஆண்டுகளில் வெளிப்பட்டது. ''உலகின் சந்தைகள் 1860ஆம் ஆண்டின் மிகையுற்பத்தியை உறிஞ்சித் தீர்ப்பதற்கு இரண்டு மூன்று ஆண்டுகள் ஆயின.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1863 டிசம்பர், பக்கம் 127.) 1860 முற்பகுதியில் கீழையுலகில் பருத்தித் துணிகளுக்கான சந்தைகளில் ஏற்பட்ட மந்த நிலையானது பிளாக்பர்ன் தொழில் மீது அதற்குரிய விளைவை ஏற்படுத்தியது; பிளாக்பர்னில் கீழையுலகின் நுகர்வுக்கென்றே துணி உற்பத்தி செய்வதில் வழக்கமாய் 30,000 விசைத் தறிகள் ஈடுபட்டுள்ளன. ஆகவே, மாதக் கணக்கில் உழைப்புக்கான வேண்டல் மிகக் குறை வாய் இருந்தது. பருத்தி வர்த்தகத் தடையின் விளைவுகள் வெளிப் படும் வரை இந்நிலை நீடித்தது.... நல்ல வேளையாக இத்தடையானது

அநேக நூற்பதிபர்களையும் ஆலையதிபர்களையும் சர்வ நாசத்தில் சிக்கி அழிந்து விடாமல் காப்பாற்றியது. இருப்புகள் விற்கப் படாமல் கையிலிருந்த வரை அவற்றின் மதிப்பு உயர்ந்தது. இதனால்தான் சொத்து மதிப்பு படுபயங்கர வீழ்ச்சிக்கு — இப்படியொரு நெருக்கடியில் நியாயமாகவே எதிர்பார்க்கக் கூடிய வீழ்ச்சிக்கு — ஆளாகாமல் தப்பியது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1862 அக்டோபர், பக்கம் 29, 31.)

*1861*, அக்டோபர். ''தொழில் சிறிது காலமாகவே மிகவும் மந்தமான நிலையில் இருந்து வருகிறது.... குளிர் கால மாதங்களில் பல நிறுவனங்கள் மிகக் குறுகிய நேரமே வேலை செய்வதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் இதை எதிர்பார்த்து ஆவன செய்திருக்கலாம்...,வழக்கம் போல் அமெரிக்காவிலிருந்து பருத்தி கிடைப்பதற்கும், நமது ஏற்றுமதிகளுக்கும் தடையாகியுள்ள காரணங்கள் எவையானாலும் சரி, கடந்த மூன்றாண்டுகளில் உற்பத்தி பெரிதும் அதிகரித்திருப்பதாலும், இந்தியச் சந்தையும் சீனச் சந்தையும் நிலை பெறாதிருப்பதாலும் குறைநேரம் வேலை செய்வதை அடுத்த குளிர் காலத்தில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1861 அக்டோபர், பக்கம் 19.)

*பருத்திக் கழிவு. கிழக்கிந்தியப் பருத்தி (சூரத்). தொழிலாளர்களின் கூலி மீதான தாக்கம். இயந்திர சாதன மேம்பாடு. ஸ்டார்ச் மாவையும் தாதுப் பதிலிகளையும் பருத்தியோடு சேர்த்தல். ஸ்டார்ச் மாவுப் பசையிடுதல் தொழிலாளர்கள் மீது ஏற்படுத்தும் விளைவு. நேர்த்தி நூல் ரகத் தொழிலதிபர்கள். தொழிலதிபர்களின் மோசடி.*

''ஒரு தொழிலதிபர் எனக்கு எழுதுகிறார்: 'கதிருக்கு இவ்வளவு நுகர்வு எனும் மதிப்பீடுகளைப் பொறுத்த வரை, ஒரு விவரத்தை நீங்கள் போதிய அளவுக்குக் கணக்கில் கொள்கிறீர்களா என்று எனக்கு சந்தேகமாய் இருக்கிறது; அதாவது: பருத்தி விலை அதிகமாயிருக்கும் போது, சாதாரண நூல் (உதாரணமாகத் தர எண் 40 வரை, பிரதானமாகத் தர எண் 12 முதல் 32) உற்பத்தி செய்யும் ஒவ்வொரு நூற்பதிபரும் தமது நூலின் தர எண்ணை முடிந்த வரை உயர்த்திக் கொள்வார், அதாவது 12க்கு பதில் 16, அல்லது 16க்கு பதில் 22 என்றெல்லாம் உயர்த்திக் கொள்வார். இந்த நேர்த்தி ரக நூல் வகைகளைப் பயன்படுத்தும் ஆலையதிபர் தமது துணியை வழக்கமான எடையுள்ளதாக்குவதற்காக அந்த அளவுக்குப் பசை சேர்ப்பார். தொழிலானது இப்போது இவ்வழியை மானக்கேடான அளவுக்குப் பயன்படுத்திக் கொள்கிறது. ஏற்றுமதிக்குரிய சாதாரண சட்டைத் துணியின் எடை 8 இராத்தல் என்றால் இதில் பருத்தி 5¼ இராத்தல், பசை 2¾ இராத்தல் என்று சரியான ஆதாரத்தோடு கேள்விப்பட்டேன்..., இதர வகைத் துணிகளில் 50 சதவீத

அளவுக்குப் பசை சேர்ப்பதும் கூட உண்டு. இராத்தல் ஒன்றுக்கு இவ்வளவு பணம் என்று கணக்கிட்டால், நூல் வாங்குவதற்குக் கொடுத்ததை விடக் குறைந்த விலைக்குத் துணி விற்றுப் பணக்கார னாகி வருகிறேன் என்று ஆலையதிபர் பெருமை பேசலாம், உண்மை யிலேயே இப்படித்தான் பெருமை பேசுகிறார்.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1864 ஏப்ரல், பக்கம் 27.)

''சூரத் பருத்தியின் பாவு நூலை விறைப்பாக்கப் பயன்படுத்தப் படும் பசையே தாங்கள் உடல் நலிவுறுவது அதிகரிக்கக் காரணம் என்று நெசவாளர்கள் கூறுவதாகவும் எனக்குப் புகார்கள் வந்துள் ளன; இந்தப் பசை முன்போல் மாவிலிருந்து தயாரிக்கப்பட்டதல்ல. ஆயினும் மாவுக்கான இந்தப் பதிலிப் பொருள் துணியின் எடையைப் பெரிதும் கூடுதலாக்குவதால் மிக முக்கிய நன்மை பயப்பதாய்ச் சொல்லப்படுகிறது; 15 இராத்தல் கச்சாப் பொருள் 20 இராத்தல் துணியாக நெய்யப்படுவதற்கு இது வழி செய்கிறது.'' (தொழிற் சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1863 அக்டோபர். சீனக் களி மண் எனப்படும் டால்கம் பொடி அல்லது பிரெஞ்சுச் சாக் எனப் படும் ஜிப்சம்-கனிக்கல்தான் இந்தப் பதிலிப் பொருள்.) ''பாவு நூலுக்குப் பசையிடுவதற்கு மாவுக்கான பதிலிப் பொருட்களைப் பயன்படுத்துவதால் நெசவாளர்களின் (அதாவது தொழிலாளர் களின்) ஊதியம் பெரிதும் குறைந்து போகிறது. இந்தப் பசையானது நூலைக் கனக்கச் செய்து, நெகிழ்வற்றதாயும் அறக் கூடியதாயும் ஆக்கி விடுகிறது. தறியில் பாவு நூலின் ஒவ்வோர் இழையும் 'பன்னை' [heald] என்னும் தறியுறுப்பின் ஊடாகச் செல்கிறது; பன்னையிலுள்ள வலுவான இழைகள்தான் பாவு நூலை உரிய இடத்திலிருந்து விலகாமல் இருக்கச் செய்கின்றன. பாவு நூல் மொடமொடப்பாய் இருப்பதால் பன்னையின் இழைகள் அடிக் கடி அறுந்து போகின்றன. அறுந்த இழையை முடிவதற்கு ஒவ் வொரு முறையும் நெசவாளிக்கு ஐந்து நிமிடம் ஆகும் என்கிறார்கள்; நெசவாளர் முன்னைப் போல் எப்படியும் பத்து மடங்காவது அடிக்கடி அறுந்த இழைகளை முடிய வேண்டியுள்ளது; இதனால் வேலை நேரத்தில் தறியின் உற்பத்தித் திறன் குறைந்து விடுகிறது.'' (மேலது, பக்கம் 42-43.)

''ஆஷ்டன், ஸ்டாலிபிரிட்ஜ், மோஸ்லி, ஓதாம் போன்ற இடங் களில் வேலை நேரம் முழுதாக மூன்றிலொரு பங்கு குறைந்து விட்டது, வாரத்துக்கு வாரம் மேன்மேலும் குறைந்து வருகிறது.... இந்த நேரக் குறைப்போடு கூடவே பல துறைகளில் கூலியும் குறைந்து வருகிறது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1861 அக்டோபர், பக்கம் 12-13.) 1861 முற்பகுதியில் லங்காஷயரின் சில பகுதிகளில் இயந்திர நெசவாளர்கள் வேலைநிறுத்தம் செய்தார் கள். ஆலையதிபர்கள் பலர் கூலியை 5 முதல் 7.5% குறைப்பதாக அறிவித்திருந்தனர். வேலை நேரம் குறைந்தாலும் கூலி விகிதத்தில்

மாற்றம் செய்யக் கூடாது என்று தொழிலாளர்கள் வலியுறுத்தினார்கள். இந்தக் கோரிக்கை ஏற்கப்படாததால் வேலைநிறுத்தம் தொடங்கியது. ஒரு மாதம் கழித்து தொழிலாளர்கள் பணிய வேண்டியதாயிற்று. கேட்டதற்கு மாறாக, அவர்கள் இரண்டையுமே ஏற்க வேண்டியதாயிற்று. ''முடிவில் தொழிலாளர்கள் கூலிக் குறைப்புக்கு இணங்கினார்கள்; அதோடு, அநேக ஆலைகள் இப்போது குறை நேரம் ஓடுகின்றன.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், *1861* ஏப்ரல், பக்கம் *23*.)

*1862.* ஏப்ரல். ''கடைசியாக நான் அறிக்கையளித்த தேதிக்குப் பிறகு தொழிலாளர்களின் துன்பங்கள் பல்கிப் பெருகியுள்ளன. ஆனால் இவ்வளவு திடுமென்றும், இவ்வளவு கடுமையாகவும் மூண்டெழுந்த துன்பங்களைத் தொழிலாளர்கள் மௌனம் தோய்ந்த சகிப்புடனும் பொறுமை தோய்ந்த தன்மானத்துடனும் இந்த அளவுக்குத் தாங்கிக் கொண்டது ஆலைத் தொழில்களின் வரலாற்றில் எக்காலத்திலும் காணப்படாத ஒன்று.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், *1862* ஏப்ரல், பக்கம் *10*.) ''இந்தத் தேதியில் சிறிதும் வேலையில்லாதுள்ள தொழிலாளர்களின் விகிதாசார எண்ணிக்கை *1848*இல் இருந்ததை விட அவ்வளவாய் அதிகமில்லை எனத் தோன்றுகிறது; அப்போது சாதாரண பீதி நிலவியது; என்றாலும் இதன் விளைவுகள் தொழிலதிபர்களிடையே அச்ச உணர்வைத் தூண்டி விட்டன. இதனால்தான் பருத்தித் தொழில் நிலவரம் குறித்து புள்ளி விவரம் சேகரிப்பது அவசியமாயிற்று. இந்தப் புள்ளி விவரங்கள் இப்போது வாராவாரம் வெளியிடப்படுகின்றன.... *1848* மே மாத நிலவரப்படி, மான்செஸ்டரில் வழக்கமாக வேலை செய்யும் பருத்தித் தொழிலாளர்களின் மொத்தத் தொகையில் வேலையில்லாதவர்கள் *15* சதவீதமாகவும், குறைநேரம் வேலை செய்தவர்கள் *12* சதவீதமாகவும் இருந்தார்கள். *70* சதவீதத்தினருக்கு முழுமையாக வேலை இருந்தது. நடப்பு ஆண்டு மே *28* தேதிய நிலவரப்படி, வழக்கமாக வேலை செய்வோரின் மொத்தத் தொகையில் வேலையில்லாதவர்கள் *15* சதவீதமாகவும், குறைநேரம் வேலை செய்தவர்கள் *35* சதவீதமாகவும் இருந்தார்கள். *49* சதவீதத்தினருக்கு முழு நேரமும் வேலை இருந்தது..., வேறு சில இடங்களில், உதாரணமாக ஸ்டாக்போர்ட்டில், குறைநேரத்துக்கும் வேலையின்மைக்குமான சராசரிகள் இதை விட அதிகம்; முழு நேரமும் வேலை பெறுவோரின் சராசரி இதை விடக் குறைவு.'' ஏனென்றால் மான்செஸ்டரை விடவும் அங்கே மோட்டா ரகங்கள் நூற்கப்படுகின்றன (பக்கம் *16*).

*1862.* அக்டோபர். ''*1861*இல் ஐக்கிய முடியரசில் *2,887* பருத்தித் தொழிற்சாலைகள் இருந்ததாகவும் இவற்றில் *2,109* என் வட்டத்தில் (லங்காஷயர், செஷயர்) இருந்ததாகவும் பாராளுமன்றத்துக்குக் கடைசியாகத் தரப்பட்ட தகவலறிக்கையிலிருந்து தெரிகிறது.

என்து வட்டத்திலுள்ள 2,109 தொழிற்சாலைகளில் பலவும் சில ருக்கு மட்டுமே வேலை தரும் சிறு நிறுவனங்கள் என்று முன்பே எனக்குத் தெரியும். என்றாலும் இவற்றின் விழுக்காடு இவ்வளவு அதிகமாய் இருக்கக் கண்டு வியப்புறேன். 392 தொழிற்சாலை களில், அதாவது 19 சதவீதமானவற்றில் நீராவி எஞ்சின் அல்லது நீர்விசைச் சக்கரத்தின் குதிரைத் திறன் 10க்கும் குறைவு; 345இல், அதாவது 16 சதவீதமானவற்றில் குதிரைத் திறன் 10க்கு மேல் 20க்குள்; 1,372 தொழிற்சாலைகளில் குதிரைத் திறன் 20உம் அதற்கு மேலும்.... இந்தச் சிறு தொழிலதிபர்களில் பலரும் — மொத் தத் தொகையில் மூன்றிலொரு பங்குக்கு மேல் — சமீப காலம் வரை தொழிலாளர்களாய் இருந்தவர்கள் தாம்; இவர்கள் வசம் மூலதனம் இல்லை.... ஆக, எஞ்சிய மூன்றிலிரு பங்கினர்தாம் பாரத்தைச் சுமந்தாக வேண்டும்.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1862 அக்டோபர், பக்கம் 18, 19.)

இதே அறிக்கையின்படி லங்காஷயரிலும் செஷயரிலும் பஞ் சாலைத் தொழிலாளர்களில் 40,146 பேர், அதாவது 11.3 சத வீதத்தினர் அப்போது முழு நேரம் வேலை செய்து வந்தார்கள்; 134,767 பேர், அதாவது 38 சதவீதத்தினர் குறை நேரம் வேலை செய்து வந்தார்கள்; 179,721 பேர், அதாவது 50.7 சதவீதத்தினர் வேலையற்றிருந்தனர். ஒப்பளவில் பருத்திப் பஞ்சத்தால் அதிகம் பாதிப்புறாத தொழிற் கிளையாகிய நேர்த்தி ரகங்களின் நூற்பே பிரதானமாய் நடைபெறும் மான்செஸ்டர், போல்ட்டன் ஆகிய இடங்களிலிருந்து வந்த விவரங்களை நீக்கி விட்டுப் பார்த்தால், நிலைமை இன்னும் கூட பாதகமாய்த் தெரிகிறது: அதாவது முழு அளவில் வேலை பெறுவோர் 8.5%, பகுதியளவே வேலை பெறுவோர் 38%, வேலையற்றோர் 53.5% (பக்கம் 19, 20).

''பருத்தி தரமானதாகவோ மட்டமானதாகவோ இருப்பது அதை வைத்து வேலை செய்யும் தொழிலாளிக்கு முக்கிய வேறுபாடாய் அமைகிறது. ஆண்டின் முற்பகுதியில் தொழிலதிபர்கள் ஆலை களைத் தொடர்ந்து இயக்க வேண்டுமென்பதற்காக, தங்களுக்குக் கிடைத்த குறைந்த விலைப் பருத்தி முழுவதையும் பயன்படுத்தித் தீர்த்தார்கள். தரமான பருத்தியை வழக்கமாய்ப் பயன்படுத்தி வந்த ஆலைகளினுள் அப்போது மட்டரகப் பருத்தி ஏராளமாய்க் கொண்டு வரப்பட்டது. தொழிலாளர்களின் கூலி இதனால் பெரிதும் பாதிப் புற்றது; பழைய கூலி விகிதப்படி நியாயமான நாட் கூலி கிடைக்க வில்லை என்று சொல்லி அநேக வேலைநிறுத்தங்கள் நடை பெற்றன.... சில சந்தர்ப்பங்களில், முழு நேரம் வேலை செய்தாலும் மட்டரகப் பருத்தியை வைத்து வேலை செய்ததால் கூலி சரிபாதி யாகக் குறைந்து போகும் அளவுக்கு வேறுபாடு மிகப் பெரிதாயிருந் தது'' (பக்கம் 27).

1863, ஏப்ரல். ''இந்த ஆண்டில், நாட்டிலுள்ள பருத்தித்

தொழிலாளர்களில் பாதிக்கும் மிக அதிகமானவர்களுக்கு முழு வேலைவாய்ப்பு இருக்காது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், *1863* ஏப்ரல், பக்கம் *14*.)

''ஆலையதிபர்கள் இப்போது சூரத் பருத்தியைப் பயன்படுத்தித் தான் ஆக வேண்டும். இந்தப் பருத்தியைப் பயன்படுத்துவதற்கு எதிராக மிக முக்கியமாய்த் தெரிவிக்கப்படும் காரணங்களில் ஒன்று, பொருளுற்பத்தி நிகழ்முறைகளில் இயந்திர சாதனத்தின் வேகத்தைப் பெரிதும் குறைத்தாக வேண்டும் என்பதாகும். இயந்திர சாதனத்தின் வேகத்தைக் கூடுதலாக்கி, அதையே இன்னுமதிக வேலை செய்ய வைப்பதற்குக் கடந்த சில ஆண்டுகளாய் ஒவ்வொரு வழியிலும் முயற்சி நடைபெறுகிறது. வேகத்தைக் குறைப்பது தொழிலாளி, அதிபர் இருவரையும் பாதிக்கிற பிரச்சினையாகிறது. ஏனெனில் பெரும் பகுதி தொழிலாளர்கள் செய்து முடித்த வேலையின் அடிப்படையில் ஊதியம் பெறுகிறவர்கள்; எடுத்துக்காட்டாக நூற்பாளர்கள் நூற்ற நூலின் அடிப்படையில் இராத்தலுக்கு இவ்வளவு என்று ஊதியம் பெறுகிறவர்கள்; நெசவாளர்கள் நெய்து கொடுத்த உருப்படிகளின் அடிப்படையில் உருப்படிக்கு இவ்வளவு என்று ஊதியம் பெறுகிறவர்கள். வாரக் கூலி பெறும் ஏனைய வகைத் தொழிலாளர்களுக்கும் கூட, உற்பத்தியாகும் சரக்குகளின் அளவு குறையும் போது கூலி குறைந்து விடும். இந்த ஆண்டில் பருத்தித் தொழிலாளர்களின் வருமானம் தொடர்பாக நான் நடத்திய விசாரணைகளிலிருந்தும், என்னிடம் தரப்பட்டுள்ள வாக்குமூலங்களிலிருந்தும், அவர்களது வருமானம் முன்னை விட சராசரியாக 20 சதவீதம் குறைந்திருப்பது தெரிகிறது. சிலருக்கு (அதே 1861 ஆம் வருடத்திய கூலி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிடுகையில்) 50 சதவீதம் என்னுமளவுக்கு வருமானம் குறைந்துள்ளது'' (பக்கம் 13).

''எவ்வளவு சம்பாதிக்க முடியும் என்பது...வேலைக்குரிய மூலப் பொருளின் தன்மையைப் பொறுத்தது....வருமானத்தைப் பொறுத்த வரை தொழிலாளர்களின் நிலை சென்ற ஆண்டு இந்த நேரத்தில் இருந்ததை விட இப்போது (*1863* அக்டோபர்) வெகுவாய் முன்னேறியிருக்கிறது. இயந்திர சாதனம் மேம்பட்டுள்ளது, மூலப் பொருளின் தன்மை முன்னை விடவும் தெளிவாய் அறியப்பட்டுள்ளது; தொடக்கத்தில் எதிர்ப்பட்ட இடர்ப்பாடுகளைத் தொழிலாளர்களால் முன்னை விடவும் வெற்றிகரமாய்ச் சமாளிக்க முடிகிறது. சென்ற வசந்த காலத்தில் பிரெஸ்டனில் (வேலையற்றோருக்கான அற நிறுவனமாகிய) ஒரு தையற் பள்ளிக்குப் போய் வந்ததை நினைவு வைத்துள்ளேன். அங்கு இளம் பெண்கள் இருவரைக் கண்டேன்; அவர்கள் அதற்கு முந்தைய நாள் ஒரு நெசவுக் கொட்டிலில் வேலை செய்வதற்கு அனுப்பப்பட்டார்களாம்; அவர்களால் வாரம் ஒன்றுக்கு 4 ஷில்லிங் சம்பாதிக்க முடியும் என்று தொழிலதிபர் கூறியதால் அனுப்பப்பட்டார்களாம்; திரும்பி வந்து

மறுபடியும் பள்ளியில் சேர்ந்து விட்டார்களாம்; நெசவுக் கொட்டிலில் வாரம் ஒன்றுக்கு ஒரு ஷில்லிங் கூட சம்பாதித்திருக்க முடியாது என்று குறைபட்டார்களாம். 'தன்னியக்கக் கவனிப்பாளர்கள்' பற்றி என்னிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது....இவர்கள் மியூல்களைக் கவனித்துக் கொள்கிறவர்கள்; இரு வாரங்கள் முழு நேரம் வேலை செய்தால் முடிவில் 8 ஷில்லிங் 11 பென்னி ஊதியம் பெறுகிறவர்கள். இந்தத் தொகையிலிருந்து வீட்டு வாடகை பிடித்துக் கொள்ளப்படுகிறதாம்; ஆனால் பாதி வாடகையைத் தொழிலதிபர் அன்பளிப்பாகத் திருப்பித் தந்து விடுகிறாராம். (என்னே தாராளம்!) கவனிப்பாளர்களுக்குக் கையில் கிடைப்பது 6 ஷில்லிங் 11 பென்னி தான். பல இடங்களில், இவர்கள் 1862இன் கடைசி மாதங்களில் வாரம் ஒன்றுக்கு 5 ஷில்லிங் முதல் 9 ஷில்லிங் வரை பெற்றனர்; நெசவாளர்கள் வாரம் ஒன்றுக்கு 2 ஷில்லிங் முதல் 6 ஷில்லிங் வரை பெற்றனர். பெரும்பாலான வட்டங்களில் இன்னமும் ஊதியம் மிகவும் குறைந்தே இருப்பினும், நிலைமை முன்னைக் காட்டிலும் இப்போது பெரிதும் ஆரோக்கியமாய் உள்ளது. வருமானம் குறைவாய் இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன; சூரத் பருத்தியின் இழை குட்டையாய் இருப்பதும் அழுக்கடைந்திருப்பதும் மட்டுமல்ல காரணம். உதாரணமாய், இப்போதெல்லாம் சூரத் பருத்தியோடு கழிவை ஏராளமாய்க் கலப்பது வழக்கமாகியுள்ளது. இதனால் நூற்பாளர் அல்லது கவனிப்பாளரின் இடர்ப்பாடுகள் அதிகரிக்கின்றன. பருத்தியிழை குட்டையாயிருப்பதால், மியூல் இழுக்கப்படுகையிலும் நூல் முறுக்கப்படுகையிலும் இழைகள் அறுந்து போக ஏதுவாகிறது; மியூலை அவ்வளவு தொடர்ச்சியாக இயங்கச் செய்ய முடியாது.... இந்நிலையில், நெசவு வேலை செய்கையில் இழைகளைக் கவனிப்பதில் பெருங் கவனம் தேவைப்படுவதால், நெசவாளர்கள் பலரும் ஆளுக்கொரு தறியை மட்டுமே கவனித்துக் கொள்ள முடிகிறது; மிகச் சிலர் மட்டும் இரண்டுக்கதிகமான தறிகளைக் கவனித்துக் கொள்ள முடிகிறது.... தொழிலாளர்களின் கூலி 5, 7½, 10 சதவீதம் நேரடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.... பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தொழிலாளி தன்னிடம் தரப்படும் மூலப்பொருளைத் திறம்படப் பயன்படுத்தி, சாதாரணக் கூலி விகிதத்தில் முடிந்த வரை உயர்ந்த கூலியைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டியதுதான். நெசவாளர்கள் சில சமயம் சந்திக்க வேண்டியுள்ள இன்னோர் இடர்ப்பாடு மட்டரக மூலப் பொருட்களிலிருந்து அவர்கள் உற்பத்தி செய்யும் துணி இறுதி வடிவில் சிறந்து விளங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதும், அவர்களது வேலையில் ஏற்படும் குறைகளுக்காக அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுவதும் ஆகும்." (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1863 அக்டோபர், பக்கம் 41-43.)

வேலை முழு நேரம் நடைபெற்ற இடங்களிலும் கூலி மிகக்

குறைவாய் இருந்தது. வடிகால் அமைத்தல், சாலை போடுதல், கல்லுடைத்தல், தெரு சீர்செய்தல் போன்ற அனைத்து வகைப் பொதுப் பணிகளிலும் பருத்தித் தொழிலாளர்கள் தயங்காமல் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்கள்; அதிகாரிகளிடமிருந்து வயிற்றுக்குச் சோறு பெற வேண்டுமென்று இவற்றில் வேலை செய்தார்கள் (நடைமுறையில் இது ஆலையதிபர்களுக்கான உதவியே ஆகிப் போனது. பார்க்கவும்: முதல் பாகம், பக்கம் 570). முதலாளி வர்க்கம் முழுவதும் காவலுக்கு நின்று தொழிலாளர்களைக் கண்காணித்தது. படுகேவலமான கூலி தரப்பட்டு, தொழிலாளி அதனை ஏற்க மறுத்தால், துயர்தணிப்புக் குழு அதன் பட்டியல்களிலிருந்து அவரை நீக்கி விடும். ஒரு விதத்தில் தொழிலதிபர்களுக்கு அது ஒரு பொற்காலம். ஏனெனில் தொழிலாளர்கள் பட்டினி கிடந்து சாக வேண்டும், இல்லையேல் முதலாளிக்கு மிக அதிக இலாபம் கிடைக்கும் படியான அற்ப விலைக்கு உழைத்துக் கொட்டியாக வேண்டும் என்பதே அப்போதைய நிலைமை. துயர்தணிப்புக் குழுக்கள் காவல் நாய்களாகச் செயல்பட்டன. அதேபோது தொழிலதிபர்கள் குடிப்பெயர்ச்சியை முடிந்த வரை தடுப்பதற்காக அரசுடன் இரகசிய உடன்பாடு கொண்டு செயல்பட்டார்கள். ஒரு நோக்கம் தொழிலாளர்களின் சதையிலும் இரத்தத்திலும் முதலீடாகியுள்ள மூலதனத்தை விட்டு விடாமல் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது. மற்றொரு நோக்கம் தொழிலாளர்களிடமிருந்து கறக்கும் வீட்டு வாடகையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பது.

'துயர்தணிப்புக் குழுக்கள் இந்த விவகாரத்தில் மிகுந்த கண்டிப்புடன் செயல்பட்டன. வேலைக்கு அழைக்கப்படும் தொழிலாளர்களைப் பட்டியல்களிலிருந்து நீக்குவதன் மூலம், அவர்கள் அந்த அழைப்பை ஏற்குமாறு நிர்ப்பந்தம் செய்தனர். வேலையை ஏற்பதற்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தால்.... ஊதியம் பெயரளவிலானதாகவே இருந்திருக்கும், ஆனால் வேலை மிகவும் கடுமையாய் இருந்திருக்கும் என்பதே காரணம்.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1863 அக்டோபர், பக்கம் 97.)

பொதுப் பணிகள் சட்டத்தின் படி தங்களுக்குத் தரப்பட்ட எந்த வேலையையும் செய்யத் தொழிலாளர்கள் தயாராயிருந்தார்கள். ''தொழில் துறை வேலை வாய்ப்புகளை ஒழுங்கு செய்வதற்கான கோட்பாடு நகரத்துக்கு நகரம் கணிசமாய் மாறுபட்டது; ஆனால் வெளிப்புறப் பணி எவ்விதத்தும் உழைப்புக்கு ஒரு சோதனையாய் அமையாத இடங்களிலும் கூட, துல்லியமான துயர்தணிப்பு விகிதத்திலோ அதற்கு மிகவும் நெருங்கி வரும்படியாகவோ உழைப்புக்கு ஊதியமளிக்கப்பட்ட விதமானது அப்பணியை உண்மையிலேயே உழைப்புச் சோதனையாக்கி விட்டது'' (பக்கம் 69). ''இந்தச் சங்கடத்துக்குப் பரிகாரம் காண்பதற்காகவும், தொழிலாளி சுயேச்சையான

உழைப்பாளியாக நாட்கூலி சம்பாதிக்க உதவுவதற்காகவுமே 1863ஆம் வருடத்திய பொதுப் பணிகள் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் நோக்கங்கள் மூன்று: முதலாவதாக, வட்டார அதிகாரிகள் கருவூலக் கடன் ஆணையர்களிடமிருந்து (மத்திய துயர் தணிப்புக் குழுத் தலைவரின் ஒப்புதலோடு) கடன் பெறுவதை சாத்தியமாக்குவது; இரண்டாவதாக, பருத்தித் தொழில் வட்டங்களில் நகரங்களின் மேம்பாட்டுக்கு உதவி செய்வது; மூன்றாவதாக, வேலையில்லாத் தொழிலாளர்களுக்கு வேலையும் ஆதாயமான கூலியும் கிடைக்கச் செய்வது. இச்சட்டத்தின் படி 1863 அக்டோபர் முடிவு வரை மொத்தம் £883,700 கடன்கள் வழங்கப் பட்டன (பக்கம் 70). கால்வாய் வெட்டுதல், சாலை போடுதல், தெரு சீர்செய்தல், நீர் வழங்கீட்டுத் தேக்கங்கள் கட்டுதல் முதலானவை எடுத்துக் கொண்ட பணிகளில் முக்கியமானவை.

பிளாக்பர்னில் குழுத் தலைவரான திரு ஹெண்டர்சன் இது தொடர்பாகத் தொழிற்சாலை ஆய்வாளர் ரெட்சிரேவுக்கு எழுதினார்: "என் அனுபவத்தில் வேறு எதுவும் இதை விட அழுத்தமாய் என் மனதிற் பதிந்ததும் இல்லை, இதை விட அதிகமாய் எனக்கு மன நிறைவு அளித்ததும் இல்லை—பொதுப் பணிகள் சட்டம் இயற்றப்பட்டதன் மூலம் பிளாக்பர்ன் நகராட்சி தமக்களித்த வேலையை இவ்வட்டத்து வேலையில்லாத் தொழிலாளர்கள் ஆனந்தமும் ஆர்வமுமாய் ஏற்றுக் கொண்டதையே சொல்கிறேன். பருத்தி நூற்பாளர் தொழிற்சாலையின் தேர்ச்சி பெற்ற தொழிலாளியாக வேலை செய்வதற்கும், அவரே 14 அல்லது 18 அடி ஆழமுள்ள சாக்கடையில் இறங்கி வேலை செய்வதற்கும் இடையிலான வேற்றுமைக்கு மேல் எதையும் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை." (குடும்ப அளவைப் பொறுத்து அவர் வாரம் ஒன்றுக்கு 4 முதல் 12 ஷில்லிங் சம்பாதித்தார்; இந்தப் பெருந் தொகை சில சமயம் எட்டு பேர் கொண்ட குடும்பத்தைக் காப்பாற்றப் பயன்பட்டது. நகரத்தார் இதிலிருந்து இரட்டை இலாபம் பெற்றனர். முதலாவதாக, புகையடர்ந்தும் கவனிப்பாரற்றும் கிடந்த தமது நகரங்களை மேம்பாடு செய்திட மிகக் குறைந்த வட்டி வீதங்களில் அவர்களுக்குப் பணம் கிடைத்தது. இரண்டாவதாக, தொழிலாளர்களுக்கு அவர்கள் மாமூலாகத் தர வேண்டியதை விட மிகக் குறைந்த கூலியே கொடுத்தனர்.) "தொழிலாளி கிட்டத்தட்ட வெப்ப மண்டலத்துக்குரிய தட்ப வெப்ப நிலைக்குப் பழக்கப்பட்டவர்; விரைவாகச் செயல்படும் ஊக்கமும், இலாவகமாய் இயங்கிடும் நுணுக்கமுமே உடல் வலுவைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாய்த் தமக்கு உதவும் படியான வேலைக்குப் பழக்கப்பட்டவர்; இப்போது தம்மால் சம்பாதிக்க முடிவதைப் போல் இரு மடங்கும், சில சமயம் மும்மடங்கு மான ஊதியத்துக்குப் பழக்கப்பட்டவர். ஆகவே இப்போது தரப் பட்ட வேலைவாய்ப்பை அவா தயங்காமல் ஏற்பதற்கு ஓரளவு

தன்னலங் கருதாமையும் பிறர்நலங் கருதலும் அவசியமாயின. இந்த நற்குணங்களை அவர் வெளிப்படுத்தியிருப்பது பெரிதும் போற்றத் தக்கது. பிளாக்பர்னில் அநேகமாய் ஒவ்வொரு வகை வெளிப்புற வேலையிலும் ஆட்கள் சோதிக்கப்படுகிறார்கள்: கெட்டிக் களி மண்ணைக் கணிசமான ஆழத்துக்கு வெட்டியெடுக்கிறார்கள், வடி கால் அமைக்கிறார்கள், கல்லுடைக்கிறார்கள், சாலை போடுகிறார் கள், தெருச் சாக்கடைகளுக்காக 14, 16 அடி, சில சமயம் 20 அடி ஆழத்துக்குப் பள்ளம் தோண்டுகிறார்கள். பல இடங்களில் இப்படி வேலை செய்கையில் 10, 12 அங்குல ஆழத்துக்கு சேற்றிலும் நீரிலும் நிற்கிறார்கள்; மொத்தத்தில், எவ்விதக் காப்புமின்றி கால நிலையின் தாக்கத்துக்கு ஆளாகிறார்கள். ஜில்லிடும் நைப்பைப் பொறுத்த வரை, இங்கிலாந்தில் எந்த வட்டத்தின் கால நிலையும்—இதற்கு ஈடானாலும் ஆகலாமே தவிர—இதை விஞ்சி விட முடி யாது என நினைக்கிறேன்'' *(பக்கம் 91-92).* ''குறையே சொல்ல முடியாத படி தொழிலாளர்கள் நடந்து கொள்கிறார்கள் எனலாம். வெளிப்புற வேலையைத் தயங்காமல் ஏற்று, மிகச் சிறப்பாகச் செய் கிறார்கள்'' *(பக்கம் 69).*

*1864.* ஏப்ரல். அவ்வப்போது ஆள் பற்றாக்குறை தொடர் பாகப் பல்வேறு வட்டங்களிலும் புகார் சொல்கின்றனர்; ஆனால் இந்தக் குறைபாடு குறிப்பிட்ட துறைகளில் முதல் முக்கியப் பிரச் சினையாக வெளிப்படுகிறது; நெசவாளர் பற்றாக்குறையை சான் றாய்க் குறிப்பிடலாம்....நெசவுத் தொழிலையே எடுத்துக் கொண் டாலும் கூட, இந்தப் புகார்கள் எழுவதற்கு தொழிலாளர்கள் உள்ள படியே பற்றாக்குறையாக இருப்பது எந்த அளவுக்குக் காரண மாகிறதோ, பயன்படுத்தப்படும் நூல் தரக்குறைவாய் இருப்பதால் ஆட்கள் மிகக் குறைந்த கூலி விகிதமே பெற முடிவதும் அதே அளவுக்குக் காரணமாகிறது. சென்ற மாதத்தில் குறிப்பிட்ட ஆலை களில் அதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே கூலி தொடர்பாக ஏராளமான மோதல்கள் வெடித்துள்ளன. வேலை நிறுத்தங்கள் அடிக்கடி நடைபெறுவதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.... பொதுப் பணிகள் சட்டத்தின் விளைவை ஆலை யதிபர்கள் தமக்குப் போட்டியாகக் கருதுகிறார்கள். பாக்கப் எனும் இடத்தில் உள்ளூர்க் குழு செயல்பாடுகளை நிறுத்தி வைத்துள்ளது; ஏனெனில், எல்லா ஆலைகளும் ஓடவில்லை என்றாலும் ஆள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.'' (தொழிற்சாலை ஆய்வாளர் அறிக் கைகள், 1864 ஏப்ரல், பக்கம் 9, 10.) தொழிலதிபர்கள் இனியும் சும்மாயிருப்பதற்கில்லை. உழைப்புக்கான வேண்டல் பொதுப் பணிகள் சட்டத்தின் விளைவாக வலுப்பெற்றதால், ஆலைத் தொழிலாளர்கள் பலரும் பாக்கப் கற்சுரங்கங்களில் நாளொன்றுக்கு 4 முதல் 5 ஷில்லிங் ஈட்டினர். ஆகவே பொதுப் பணிகள்—1848ஆம் வருடத்திய தேசியப் பட்டறைகளின் *(Ateliers nationaux)*

புதிய பதிப்பாகிய இவை, ஆனால் இம்முறை முதலாளி வர்க்க நலன் கருதித் தொடக்கப்பட்ட இவை—பையப்பைய நிறுத்தப் பட்டன.

பரிசோதனைகள்

"பல ஆலைகளில் (முழு வேலை பெற்ற) தொழிலாளர்கள் உள்ளபடியே எவ்வளவு சம்பாதித்தார்கள் என்ற விவரத்தைக் கொடுத்துள்ளேன். ஆனால் இதன் பொருள் அவர்கள் வாரா வாரம் இதே தொகையை சம்பாதிக்கிறார்கள் என்பதன்று. தொழி லாளர்களின் ஊதியம் பெருத்த ஏற்ற இறக்கத்துக்கு உட்பட்ட தாகும். ஒரே ஆலையில் பருத்தி, கழிவு இவற்றின் வகைகளையும் விகித அளவுகளையும், அதாவது 'கலவைகள்' எனப்படுகிறவற்றை தொழிலதிபர்கள் ஓயாமல் மாற்றி மாற்றிப் பரிசோதனைகள் செய்வதே இந்த ஏற்ற இறக்கத்துக்குக் காரணம். பருத்திக் கலவை களின் தரம் ஏறி இறங்குவது போல் தொழிலாளர்கள் பெறும் ஊதியமும் ஏறி இறங்குகிறது; சில சமயம், முன்பு பெற்றதில் 15 சதவீதத்துக்குள் பெறுவதுண்டு; அடுத்து ஓரிரு வாரத்தில் 50 முதல் 60 சதவீதம் குறைவாகப் பெறுவதுண்டு." இந்த அறிக்கையை அளித்திடும் ஆய்வாளர் ரெட்கிரேவ் எதார்த்த நடைமுறையிலிருந்து பெறப்பட்ட கூலி விவரங்களை இதன் பிறகு எடுத்துக்காட்டுகிறார். இவற்றில் பின்வரும் உதாரணங்களைக் குறிப்பிடுவதே போது மானது:

நெசவாளர் A, 6 பேர் கொண்ட குடும்பம், வாரத்துக்கு 4 நாள் வேலை, 6 ஷில்லிங் 8.5 பென்னி. நூற்பாளர் B, வாரத்துக்கு 4.5 நாள் வேலை, 6 ஷில்லிங். நெசவாளர் C, 4 பேர் கொண்ட குடும்பம். வாரத்துக்கு 5 நாள் வேலை, 5 ஷில்லிங் 1 பென்னி. நூல் சுற்றுபவர் D, 6 பேர் கொண்ட குடும்பம், வாரத்துக்கு 4 நாள் வேலை, 7 ஷில்லிங் 10 பென்னி. நெசவாளர் E, 7 பேர் கொண்ட குடும்பம், வாரத்துக்கு 3 நாள் வேலை.... ரெட்கிரேவ் தொடர்கிறார்: "மேற்கண்ட தகவல்கள் கருத்தில் கொள்ள வேண்டியவை. வேலை செய்வதே பல குடும்பங்களுக்கு துர்பாக்கியம் ஆகி விடும் என்பது இவற்றிலிருந்து தெளிவாகிறது. ஏனெனில் தொழிலாளர்களின் குடும்பத்தில் எல்லாருமே வேலை யற்றவர்களாய் இருந்தால் துயர்தணிப்பு உதவியாகக் கிடைக்கக் கூடிய தொகை கூட அவர்களுக்குக் கூலியாகக் கிடைக்காததால், அந்தத் தொழிலாளர்களுக்குத் துணை உதவி தரப்படா விட்டால், வேலை செய்வதால் வருமானம் குறைவது மட்டுமல்ல, இன்றி யமையாத் தேவைகளில் சிறு பகுதிக்கு மட்டுமே வழிசெய்ய முடியுமென்னும் அளவுக்கே குறைந்து போகிறது." (தொழிற் சாலை ஆய்வாளர் அறிக்கைகள், 1863 அக்டோபர், பக்கம் 50-53.)

"சென்ற ஜூன் 5ஆம் தேதிக்குப் பிறகு, எந்த ஒரு வாரத்திலும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் இரண்டு நாள், ஏழு மணி, சில நிமிடம் என்பதற்கதிகமாக வேலை கிடைக்கவில்லை." (மேலது, பக்கம் 121.)

நெருக்கடி தொடங்கியதிலிருந்து 1863 மார்ச் 25 வரை புரவலர்களும் மத்திய துயர்தணிப்புக் குழுவும் மேயர் இல்லக் குழுவும் செலவிட்ட தொகை சுமார் மூன்று மிலியன் பவுன் ஸ்டெர்லிங் ஆகும். (மேலது, பக்கம் 13.)

''அதிநேர்த்தி ரக நூல் நூற்கப்படுகிற ஒரு வட்டத்தில்... தென் கடல் தீவுப் பருத்தியை விட்டு எகிப்தியப் பருத்திக்கு மாறியதன் விளைவாக நூற்புத் தொழிலாளர்களின் ஊதியம் சுற்றடியாக 15 சதவீதம் குறைந்து போயிற்று.... சூரத் பருத்தியுடன் கழிவைக் கலந்து பெருமளவில் பயன்படுத்தும் பல பகுதிகளைக் கொண்ட விரிந்து பரந்த வட்டம் ஒன்றில்... நூற்புத் தொழிலாளர்களின் ஊதியம் 5 சதவீதம் குறைந்து போயிற்று; சூரத் பருத்தியையும் கழிவுப் பருத்தியையும் வைத்து வேலை செய்ததால் கூடுதலாக 20 முதல் 30 சதவீத இழப்புக்கும் அவர்கள் ஆளாகியுள்ளனர். நெசவாளர் 4 தறிகளுக்கு பதில் 2 தறிகளில் வேலை செய்ய வேண்டியுள்ளது. 1860இல் சராசரியாக' அவர்கள் தறிக்கு 5 ஷில்லிங் 7 பென்னி ஊதியம் பெற்றனர். 1863இல் 3 ஷில்லிங் 4 பென்னி மட்டுமே பெற்றனர். அபராதங்கள் (நெசவாளர் கட்ட வேண்டியவை) அமெரிக்கப் பருத்தியை வைத்து வேலை செய்கையில் முன்பெல்லாம் ஆளுக்கு 3 முதல் 6 பென்னியாக இருந்தது இப்போது 1 ஷில்லிங் முதல் 3 ஷில்லிங் 6 பென்னி ஆகி விட்டது.'' எகிப்தியப் பருத்தி கிழக்கிந்தியப் பருத்திக் கலவையோடு பயன்படுத்தப்பட்ட ஒரு வட்டத்தில், ''மியூல் நூற்பாளர்களின் சராசரி வருமானம் 1860இல் வாரம் ஒன்றுக்கு 18 முதல் 25 ஷில்லிங்காய் இருந்தது இப்போது 10 முதல் 18 ஷில்லிங் ஆகி விட்டது; மட்ட ரகப் பருத்தி மட்டுமல்ல, நூலில் கூடுதலாய் முறுக்கேறுவதற்காக மியூலின் வேகத்தைக் குறைப்பதும் கூட இதற்குக் காரணமாகும்; சாதாரணக் காலங்களில் இதற்கு ஊதியப் பட்டியலின் படி கூலி தரப்படும்.'' (பக்கம் 43, 44.) ''இந்தியப் பருத்தியைப் பயன்படுத்தி தொழிலதிபர் இலாபம் சம்பாதித்திருக்கலாம் என்ற போதிலும், 1861ஆம் ஆண்டோடு ஒப்பிடுமிடத்து தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதை அறியலாம் (பார்க்கவும்: பக்கம் 53இல் தரப்பட்டுள்ள கூலிப் பட்டியல்); சூரத் பருத்தி பயன்படுத்தப்படுவது உறுதியானால் தொழிலாளர்கள் 1861ஆம் வருடம் போல் கூலி பெற விரும்புவார்கள்; இது தொழிலதிபரின் இலாபத்தைக் கடுமையாகப் பாதிக்கும்; கச்சாப் பொருள் விலையின் மூலமோ தமது உற்பத்திப் பண்டங்களது விலையின் மூலமோ அவர் இந்தப் பாதிப்பை ஈடுசெய்து கொண்டாக வேண்டும் (பக்கம் 105).

*வீட்டு வாடகை.* ''தொழிலாளர்கள் தொழிலதிபர்களுக்குச் சொந்தமான குடிசைகளில் குடியிருப்பவர்களாய் இருந்தால், அவர்கள் குறைநேரமே வேலை செய்கிற போதும் கூட அவர்களது கூலியிலிருந்து வாடகைக்காகப் பிடித்தம் செய்து கொள்ளப்படுவதுண்டு. இருப்பினும் இவ்வகைச் சொத்தின் மதிப்பு குறைந்துள்ளது; சாதாரணக் காலங்களில் கிடைப்பதை விட இப்போது 25 முதல் 50 சதவீதம் குறைந்த வாடகைக்கு வீடுகள் கிடைக்கும். எடுத்துக்காட்டாக, வாரம் ஒன்றுக்கு 3 ஷில்லிங் 6 பென்னி வாடகை ஆகியிருக்கக் கூடிய ஒரு குடிசை இப்போது 2 ஷில்லிங் 6 பென்னிக்கும், சில சமயம் இன்னும் குறைந்த வாடகைக்கும் கூட கிடைக்கும்'' (பக்கம் 57).

*குடிப்பெயர்ச்சி.* இயல்பாகவே, அதிபர்கள் தொழிலாளர்களின் குடிப்பெயர்ச்சியை எதிர்த்தனர்; ஏனென்றால், ஒரு புறம் ''பருத்தித் தொழில் இப்போதைய மந்த நிலையிலிருந்து மீட்சி பெறுமென எதிர்பார்த்து, தங்கள் ஆலைகளை மிகவும் ஆதாயமான வழியில் இயக்குவதற்கு அவசியமான சாதனங்களை கைக்கெட்டும் தொலைவில் வைத்துக் கொள்கின்றனர்.'' மறு புறம், ''அநேகத் தொழிலதிபர்கள் தமது ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் குடியிருக்கும் வீடுகளின் உடைமையாளர்களாகவும் இருக்கிறார்கள்; இவர்களில் சிலர் தமக்கு வர வேண்டிய் வாடகை பாக்கியில் ஒரு பகுதியாவது வந்து விடுமென எதிர்பார்ப்பதில் ஐயமில்லை'' (பக்கம் 96).

திரு பெர்னால் ஆஸ்போர்ன் 1864 அக்டோபர் 22ஆம் நாள் தமது நாடாளுமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கு ஆற்றிய சொற்பொழிவில் இதைக் குறிப்பிடுகையில், லங்காஷயர் தொழிலாளர்கள் புராதன கால ஞானிகளைப் போல் (பண்டைக் கிரேக்க ஞானி சீனோவின் சீடர்களான ஸ்டோயிக்குகளைப் போல்) சகிப்புத் தன்மை வாய்ந்தோராய் இருந்ததாகச் சொன்னார். ஏன், மந்தை ஆடுகளைப் போல் இல்லையா?

## அத்தியாயம் VII

## கூடுதல் குறிப்புகள்

குறிப்பிட்ட எந்த ஓர் உற்பத்திக் கிளையிலும் இலாபத்தின் அளவானது அக்கிளையில் முதலீடாகியுள்ள மொத்த மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்புத் தொகைக்குச் சமம் எனக் கொள்வோம் (இப்பகுதி முழுக்க இவ்வாறே கொண்டுள்ளோம்). முதலாளியானவர் அப்போதும் கூட தமது இலாபமும் உபரி-மதிப்பும் (அதாவது ஊதியமிலா உபரி-உழைப்பும்) ஒன்றே எனக் கருத மாட்டார். காரணங்கள் வருமாறு:

1) சுற்றோட்ட நிகழ்முறையில் அவர் உற்பத்தி நிகழ்முறையை மறந்து விடுகிறார். சரக்குகளின் மதிப்பை ஈடேற்றம் செய்கையில்— உபரி-மதிப்பின் ஈடேற்றமும் இதில் அடங்கும்—உபரி-மதிப்பு உண்டாவதாக நினைக்கிறார். [எங்கெல்ஸ் குறிப்பு.— கையெழுத்துப் பிரதியில் இதையடுத்து காலியாக இடம் விடப்பட்டிருப்பது மார்க்ஸ் இது குறித்து இன்னும் விவரமாக எடுத்துரைக்க எண்ணியிருந்தார் என்பதைக் காட்டுகிறது.]

2) உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமையில் மாற்றமில்லை எனக் கொள்வதோடு, கடன்-செலாவணி முறையால் [credit system] புகுத்தப்படும் திருத்தங்கள், முதலாளிகள் ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதும் மோசடி செய்வதுமான காரியங்கள், சாதகமான சந்தைத் தேர்வுகள் இவற்றையெல்லாம் ஒதுக்கி விட்டுப் பார்த்தாலும் கூட, இலாப வீதங்கள் கணிசமாய் வேறுபடலாம் என்று தெளிவாக்கினோம். இந்த வேறுபாடானது கச்சாப் பொருளின் கொள்முதல் விலையைப் பொறுத்தது, கொள்முதல் செய்கிறவரின் அனுபவ ஆற்றலைப் பொறுத்தது, பயன்படுத்தப்படும் இயந்திர சாதனத்தின் உற்பத்தித் திறனையும் பொருத்தப்பாட்டையும் விலைமலிவையும் பொறுத்தது, பல்வேறு கட்டங்களிலும் உற்பத்தி நிகழ்முறை ஒழுங்கு செய்யப்படுவதன் தரத்தைப் பொறுத்தது, கழிவு கவிர்க்கப்படுவதையும், திறமையாக எளிய முறையில் மேலாண்மை நடைபெறுவதையும் பொறுத்தது. சுருங்கச் சொல்லின், ஏதேனும் ஒரு மாறும்-மூலதனத்துக்கான உபரி-மதிப்பு

குறிப்பிட்டதாயிருக்க, இந்த உபரி-மதிப்பின் தெரிவிப்பாகிய இலாப வீதம் உயர்ந்திருக்கிறதா தாழ்ந்திருக்கிறதா என்பது, எனவே அதிக இலாபம் கிடைக்கிறதா குறைந்த இலாபம் கிடைக்கிறதா என்பது தனிமனிதனின் தொழில் திறமையையே, முதலாளியின் அல்லது அவருடைய மேலாளர்கள், விற்பனையாளர்களின் தொழில் திறமையையே மிக அதிகமாய்ச் சார்ந்திருக்கிறது. ஒரே £1,000 உபரி-மதிப்பானது—£1,000 கூலியிலிருந்து விளைவது—A தொழிலில் £9,000 மாறா-மூலதனத்தைக் கொண்டும், B தொழிலில் £11,000 மாறா-மூலதனத்தைக் கொண்டும் கிடைப்பதாகக் கொள்வோம். Aக்கு $p' = \frac{1,000}{10,000}$, அதாவது 10%. Bக்கு $p' = \frac{1,000}{12,000}$, அதாவது 8⅓%. முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனம் (£1,000) இரு தொழில்களிலும் ஒன்றே, உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பும் (£1,000) ஒன்றே, அதாவது இரண்டிலும் சம எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் சம அளவில் சுரண்டப்படுகிறார்கள். என்றாலும் மொத்த மூலதனமானது B தொழிலைக் காட்டிலும் A தொழிலில் ஒப்பளவில் அதிக இலாபம் உற்பத்தி செய்கிறது; அதாவது இலாப வீதம் உயர்ந்திருக்கிறது. ஒரே உபரி-மதிப்புத் திரள் தெரிவிக்கப்பெறும் விதத்திலான இந்த வேறுபாடு, அதாவது சம அளவில் உழைப்பு சுரண்டப்படுகையில் இலாப வீதத்திலும் ஆகவே இலாபத்திலும் ஏற்படும் வேறுபாடு வேறு காரணங்களால் விளைவதாகவும் இருக்கலாம். இரு நிறுவனங்களையும் நடத்திச் செல்வதிலான தொழில் திறமையில் காணப்படும் வேறுபாட்டிலிருந்து மட்டுமே விளைவதாகவும் கூட இருக்கலாம். இந்நிலைமை முதலாளியிடம் தவறான கருத்தை ஏற்படுத்துகிறது; தமது இலாபம் உழைப்பைச் சுரண்டுவதால் கிடைப்பதல்ல என்றும், எப்படியும் ஓரளவாவது சுரண்டலல்லாத வேறு காரணங்களாலும், முக்கியமாய்த் தமது தனிப்பட்ட செயலூக்கத்தாலும் கிடைப்பது ஆகும் என்றும் அவரை நம்ப வைக்கிறது.

---

இந்த முதற் பகுதியின் பகுப்பாய்வுகள் ரோட்பெர்ட்டஸ்* கருத்து எவ்வளவு தவறானது என்பதைத் தெளிவாகவே புலப்படுத்துகின்றன. இந்தக் கருத்தின் படி, நில-வாடகையைப் போல் அல்லாமல் (இங்கே நிலப்பரப்பளவு மாறாமல் அப்படியே இருந்தும் நில-வாடகை உயர முடியும்) தனிப்பட்ட மூலதனத்தின் பருமனில் எவ்வளவு பெரிய மாற்றம் ஏற்பட்டாலும் மூலதனத்துக்கும் இலாபத்துக்குமிடையிலான விகித உறவை, அதாவது இலாப

* ரோட்பெர்ட்டஸ், *Sociale Briefe an von Kirchmann, Dritter Brief: Widerlegung der Ricardo'schen Lehre von der Grundrente und Begrundung einer neuen Rententheorie*, பெர்லின், 1851, பக்கம் 125.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

வீதத்தை அது பாதிப்பதில்லையாம்; ஏனென்றால் இலாபத் திரள் அதிகரிக்குமாயின் (இலாப வீதத்தின் கணக்கீட்டுக்கு அடிப்படை யாகிய) மூலதனத் திரளும் அதிகரித்து விடுகிறதாம்; மூலதனத் திரள் குறையுமாயின் இலாபத் திரளும் குறைந்து விடுகிறதாம்.

இரு நேர்வுகளில் மட்டுமே இது உண்மையாகும். முதலாவது, மற்றவை யாவும், குறிப்பாக உபரி-மதிப்பு வீதம் மாறாதிருக்கையில், பணச் சரக்காக உள்ள சரக்கின் மதிப்பில் மாற்றம் ஏற்படும் நேர்வு ஆகும். (மற்றவை மாறாதிருக்க, மதிப்பில் பெயரளவுக்கு மட்டும் மாற்றம் ஏற்படும் போதும், அதாவது மதிப்பின் அடையாளங்களில் மட்டும் ஏற்றமோ இறக்கமோ நேரிடும் போதும் இவ்வாறே நிகழ் கிறது.) மொத்த மூலதனம் = £100 என்றும், இலாபம் = £20 என்றும் கொள்வோம்; இலாப வீதம் = 20%. தங்கத்தின் மதிப்பு சரிபாதியாய்க் குறைந்தால் ஏற்கெனவே £100 மதிப்புடையதாய் இருந்த அதே மூலதனம் £200 மதிப்புடையதாகி விடும். £40 பெறுமானமுள்ள இலாபம் கிடைக்கும், அதாவது பழைய £20க்கு பதில் £40 பண வடிவில் இலாபம் தெரிவிக்கப் பெறும்; தங்கத் தின் மதிப்பு இரு மடங்காய் உயர்ந்தால் ஏற்கெனவே £100 மதிப்புடையதாய் இருந்த அதே மூலதனம் £50 மட்டும் மதிப் புடையதாகி விடும், £10 மதிப்புடைய உற்பத்திப் பண்டத்தால் இலாபம் குறிக்கப்பெறும். இவ்விரு நிலைகளிலுமே 200:40 = = 50:10 = 100:20 = 20%. ஆனால் இந்த உதாரணங்களில் எல்லாம் மூலதன-மதிப்பின் பருமனில் மாற்றமேதும் இல்லை; மாற்றம் எல்லாம் மதிப்பின் பணத் தெரிவிப்பிலும் உபரி-மதிப்பின் பணத் தெரிவிப்பிலும் மட்டுமேதான். எனவே $\frac{s}{C}$, அதாவது இலாப வீதம் பாதிப்புற வழியில்லை.

இரண்டாம் நேர்வில், மூலதன-மதிப்பின் பருமனில் உள்ள படியே மாற்றம் ஏற்படுகிறது; இதோடு கூட v:c என்னும் விகிதத் தில் மாற்றம் ஏற்படுவதில்லை, அதாவது உபரி-மதிப்பு வீதம் மாறாதிருக்க, உழைப்புச் சக்தியில் முதலீடாகிற மூலதனத்துக்கும் (இயங்க வைக்கப்படும் உழைப்புச் சக்தியின் அளவினது குறியீடாய்க் கொள்ளப்படும் மாறும்-மூலதனத்துக்கும்) உற்பத்திச் சாதனங்களில் முதலீடாகிற மூலதனத்துக்குமான விகித உறவு மாறாதிருக்கிறது. இந்நிலைமைகளில், C அல்லது nC, அல்லது $\frac{C}{n}$, உதாரணமாய் 1,000 அல்லது 2,000 அல்லது 500 இவற்றில் எதை எடுத் துக் கொண்டாலும் இலாப-வீதம் 20% ஆதலால், முதலாவதில் இலாபம் = 200, இரண்டாவதில் 400, மூன்றாவதில் 100 ஆகிறது. ஆனால் 200:1000 = 400:2,000 = 100:500 = = 20%. அதாவது, மூலதனத்தின் இயைபு மாறாதிருப்பதாலும், பருமனிலான மாற்றத்தால் பாதிப்புறாமல் இருப்பதாலும் இலாப

வீதம் மாறாதிருக்கிறது. ஆகவே, இலாப அளவு அதிகரிப்பதோ குறைவதோ மூலதன முதலீட்டின் பருமன் அதிகரிப்பதையோ குறைவதையோதான் காட்டுகிறது.

ஆகவே, முதல் நேர்வில், ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் பருமனில் புறத் தோற்ற அளவில் மட்டுமே மாற்றம் ஏற்படுகிறது. இரண்டாவதிலோ உள்ளபடியே மாற்றம் ஏற்படுகிறது. ஆனால் மூலதனத்தின் அங்கக இயைபில், அதாவது அதன் மாறும் பகுதிக்கும் மாறாப் பகுதிக்குமான விகித உறவில் மாற்றம் ஏதும் ஏற்படுவதில்லை. ஆனால் இவ்விரு நேர்வுகளையும் ஒதுக்கி விட்டுப் பார்த்தால், ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் பருமனிலான மாற்றமென்பது, அதன் அடக்கக் கூறுகளில் ஒன்றினது மதிப்பில் ஏற்பட்ட மாற்றத்தின், எனவே இந்த அடக்கக் கூறுகளின் ஒப்பீட்டுப் பருமனில் ஏற்பட்ட மாற்றத்தின் **விளைவு** ஆகும் (மாறும்-மூலதனத்தோடு சேர்ந்து உபரி-மதிப்பும் மாறாதுள்ள வரை இது பொருந்தும்); அல்லது இந்தப் பருமன் மாற்றமானது அதன் இரு அங்கங்களினதும் ஒப்பீட்டுப் பருமனிலான மாற்றத்திற்குக் **காரணம்** ஆகிறது (பெருவீத உழைப்பு நிகழ்முறைகளில் புதிய இயந்திர சாதனம் புகுத்தப்படுவதை உதாரணமாய்க் கொள்ளலாம்). ஆக, இந்நேர்வுகள் யாவற்றிலும், மற்றவை மாறாதிருக்க, ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் பருமன் மாறும் போதே அதனோடு சேர்ந்து இலாப வீதமும் மாறியாக வேண்டும்.

---

*இலாப வீதம் உயர்கிறது என்றால், உபரி-மதிப்பு அறுதியாகவோ ஒப்பளவிலோ அதற்கான உற்பத்திச் செலவுடன், அதாவது மொத்த மூலதன முன்னீட்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பது தான், அல்லது இலாப வீதத்துக்கும் உபரி-மதிப்பு வீதத்துக்கும் இடையிலான வேறுபாடு குறைவதுதான் அதற்குக் காரணம்.*

*மூலதனத்தின் அங்கக் கூறுகளிலோ அதன் அறுதிப் பருமனிலோ ஏற்படக் கூடிய மாற்றங்களைச் சாராமலே இலாப வீதத்தில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படலாம்; நிலை-மூலதன அல்லது சுழல்-மூலதன மதிப்பின் உயர்வாலோ வீழ்ச்சியாலோ ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் இவை. இந்த உயர்வு அல்லது வீழ்ச்சி இம்மூலதன-மதிப்பின் மறுவுற்பத்திக்குத் தேவைப்படுகிற வேலை நேரம் அதிகரிப்பதாலோ குறைவதாலோ நிகழ்வதாகும். இந்த வேலை நேர அதிகரிப்பும் குறைவும் ஏற்கெனவே செயல்பட்டு வருகிற மூலதனத்தை எவ்விதத்தும் சார்ந்ததல்ல. ஒவ்வொரு சரக்கின் மதிப்பும்—எனவே மூலதனமாய் அமைகிற சரக்குகளின் மதிப்பும் கூட—அதில் அடங்கிய அவசிய உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுவதில்லை, அதன் மறுவுற்பத்திக்குத் தேவையான சமுதாய உழைப்புநேரத்தாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. இந்த மறுவுற்பத்தி நடைபெறும் நிலைமைகள்*

ஆரம்ப உற்பத்தியின் நிலைமைகளிலிருந்து வேறுபட்டவையாய் இருக்கலாம், அவற்றிலும் சாதகமானவையாகவோ பாதகமானவை யாகவோ இருக்கலாம். குறிப்பிட்ட மூலதன பிண்டப் பொருளின் மறுவுற்பத்திக்கு இப்போது மாறிய நிலைமைகளில் முன்னைப் போல் இரு மடங்கோ பாதியளவோ நேரம் தேவைப்படுவதாகக் கொள்வோம்; பணத்தின் மதிப்பு மாறாதிருக்க, முன்பு £100 பெறுமானமுடையதாயிருந்த மூலதனம் இப்போது £200 அல்லது £50 பெறுமானமுடையதாயிருக்கும். இந்த மதிப்பேற்றம் அல்லது மதிப்பிறக்கம் எல்லா மூலதனப் பகுதிகளிலும் ஒரேசீராக விளைவு உண்டாக்குமானால், இலாபமும் கூட அதே போல் இரு மடங்கு அல்லது பாதியளவு பணத் தொகையில் தெரிவிக்கப் பெறும். ஆனால் இந்த மதிப்பு மாற்றமானது மூலதனத்தின் அங்கக இயை பிலும், அதாவது மூலதனத்தின் மாறும் பகுதிக்கும் மாறாப் பகுதிக்குமான விகிதத்திலும் ஒரு மாற்றத்தைக் குறிக்குமானால், மற்றவை மாறாதிருக்க, இலாபவீதமானது மாறும்-மூலதனம் ஒப் பளவில் உயரும் போது உயர்ந்து, அது ஒப்பளவில் சரியும் போது சரியும். மூலதன முன்னீட்டின் பண-மதிப்பு மட்டும் (பணத்தின் மதிப்பு மாறுவதன் விளைவாக) ஏறவோ இறங்கவோ செய்தால், உபரி-மதிப்பின் பணத் தெரிவிப்பும் அதே விகிதத்தில் ஏறவோ இறங்கவோ செய்யும். இலாப வீதம் மாறாதிருக்கும்.

## பகுதி II

# இலாபம் சராசரி இலாபமாக மாற்றமடைதல்

## அத்தியாயம் VIII

## வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில் வெவ்வேறு மூலதன இயைபுகளும் அதனால் இலாப வீதங்களில் ஏற்படும் வேறுபாடுகளும்

உபரி-மதிப்பு வீதம் மாறாதிருக்கும் போதே இலாபவீதம் மாறலாம், உயரலாம் அல்லது குறையலாம் என்பது நாம் முதல் பகுதியில் தெளிவாக்கிய விவரங்களில் ஒன்று. இந்த அத்தியாயத்தில் நாம் செய்து கொள்ளும் அனுமானம் என்னவென்றால், குறிப்பிட்ட நாட்டின் சமுதாய உழைப்பைத் தம்மிடையே பிரித்துக் கொள்ளும் எல்லா உற்பத்திக் கிளைகளிலும் உழைப்புச் சுரண்டலின் மும்முரம் ஒன்றே, ஆகவே உபரி-மதிப்பு வீதமும் வேலைநாளின் நீட்டளவும் ஒன்றே என்பதாகும். ஆதாம் ஸ்மித்* ஏற்கெனவே விரிவுபடத் தெளிவாக்கி விட்டார்; என்னவென்றால்: பல்வேறு உற்பத்திக் கிளைகளிடையிலும் உழைப்புச் சுரண்டலில் காணப்படும் பற்பல வேறுபாடுகளும் அனைத்து வகைச் சரியீடுகளின் மூலமும் (மெய்யான சரியீடுகளானாலும் சரி, அச்சமயம் நிலவும் தப்பெண்ணத்தின் அடிப்படையில் சரியீடுகளாய்க் கருதப்படுகிறவை ஆனாலும் சரி) ஒன்றையொன்று சரிக்கட்டி விடுகின்றன. இதனால் இவை ஓடி மறையும் வேறுபாடுகளே ஆகின்றன. பொது உறவுகளின் பரிசீலனையில் முக்கியமல்லாத வேறுபாடுகளே இவை. ஏனைய வேறுபாடுகள், எடுத்துக்காட்டாகக் கூலி விகிதத்தில் காணப்படும் வேறுபாடுகள் முதல் பாகத்தின் தொடக்கத்தில் [பக்கம் 71-72] குறிப்பிட்ட சாமானிய உழைப்புக்கும் சிக்கலான உழைப்புக்கும் இடையிலான வேறுபாட்டையே பெரிதும் சார்ந்துள்ளன. இந்த வேறுபாடுகள் பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் தொழிலாளியின் நிலையை சற்றும் சமத்துவமற்றதாக்கிய போதிலும், இவற்றுக்கும் அந்த உற்பத்திக் கிளைகளிலான சுரண்டல்-கடுமைக்கும் தொடர்பேதுமில்லை. எடுத்துக்காட்டாக, நாட் கூலித்

---

* ஆ. ஸ்மித், நாடுகளின் செல்வம்: இதன் இயல்பும் காரணங்களும் பற்றிய ஆய்வு, முதல் பாகம், அத்தியாயம் X. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

தொழிலாளியின் உழைப்பை விட பொற்கொல்லரின் உழைப்புக்கு உயர்ந்த விகிதத்தில் ஊதியமளிக்கப்படுமானால், முன்னவரின் உபரி-உழைப்பைக் காட்டிலும் பின்னவரின் உபரி-உழைப்பு விகித அளவில் கூடுதலான உபரி-மதிப்பை உற்பத்தி செய்கிறது. வெவ் வேறு உற்பத்திக் கிளைகள் இடையிலும், ஒரே உற்பத்திக் கிளை யில் வெவ்வேறு மூலதன முதலீடுகளிடையிலும் கூட கூலியையும் வேலை நேரத்தையும், இவ்விதம் உபரி-மதிப்பு வீதத்தையும் சமன மாக்கும் நிகழ்வானது அந்தந்த வட்டாரத்திலும் அனைத்து வகைத் தடைகளையும் சந்திக்க வேண்டியுள்ளது என்றாலும், முதலாளித் துவப் பொருளுற்பத்தி முன்னேற முன்னேற, எல்லாப் பொரு ளாதார உறவுகளும் இந்தப் பொருளுற்பத்தி முறைக்குக் கீழ்ப்பட கீழ்ப்பட, இந்தச் சமனமாக்கும் நிகழ்வு மேன்மேலும் அதிகமாய் நடைபெறவே செய்கிறது. மேற்கூறியவை போன்ற தடங்கல்களைப் பரிசீலிப்பது கூலி தொடர்பான தனி ஆய்வுக்கு முக்கியமானதே என்றாலும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி பற்றிய பொதுவான பகுப்பாய்வில் இப்பரிசீலனையை அவசியமற்றதாகவும் பொருத்த மற்றதாகவும் கருதி ஒதுக்கி விடலாம். இத்தகைய பொதுவான பகுப்பாய்வில் வழக்கமாகச் செய்து கொள்ளப்படும் அனுமானம் என்னவென்றால்: உள்ளபடியே நிலவுகிற நிலைமைகள் அவற்றின் கருத்துருவத்துக்கு பொருத்தமாய் உள்ளன, அதாவது உள்ளபடியே நிலவுகிற நிலைமைகள் அவற்றின் பொதுவான இனமாதிரியாய் அமையும் அளவுக்கு மட்டுமே சித்திரிக்கப்படுகின்றன என்பதே.

உபரி-மதிப்பு வீதத்திலும் உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமை யிலும் [degree of exploitation] நாடுகளிடையே நிலவும் வேறு பாடுகள் இப்போது நாம் செய்து கொண்டிருக்கும் ஆய்விற்கு அவசியமல்ல. எந்த ஒரு நாட்டை எடுத்துக் கொண்டாலும் அந்த நாட்டிற்குள் எப்படி பொது இலாப வீதம் உருப்பெறுகிறது என்பதைத் தெளிவாக்குவதே இப்பகுதியில் நமது நோக்கமாகும். எப்படியானாலும், பல்வேறு நாடுகளின் இலாப வீதங்களையும் ஒப்புநோக்க வேண்டுமானால் ஏற்கெனவே பரிசீலித்ததை இங்கு பரிசீலிக்கவிருப்பதுடன் சேர்த்துக் கொண்டாலே போதுமென்பது தெளிவு. தேச உபரி-மதிப்பு வீதங்களிலான வேறுபாடுகளைப் பரிசீலிப்போம்; பிறகு இந்தக் குறிப்பிட்ட வீதங்களின் அடிப்படை யில் தேச இலாப வீதங்களிலான வேறுபாடுகளை ஒப்பு நோக்கு வோம். இந்த வேறுபாடுகளுக்கு தேச உபரி-மதிப்பு வீதங்களிலான வேறுபாடுகள் காரணமாய் அமையாத வரை, அப்படிக் காரணமாய் அமைந்திடும் நிலைமைகளில் உபரி-மதிப்பு எங்கெங்கும் அப்படியே இருப்பதாக, அதாவது மாறாதிருப்பதாகக் கொள்கிறோம்; இந்த அத்தியாயத்திலும் அவ்வாறே கொள்கிறோம்.

உபரி-மதிப்பு வீதம் மாறாதிருக்கும் போதே, குறிப்பிட்ட மூலதனத்திலிருந்து பெறப்படும் இலாப வீதம் உயரலாம் அல்லது

குறையலாம்; மாறா-மூலதனத்தில் ஏதேனுமொரு பகுதியின் மதிப்பை உயரவோ குறையவோ செய்கிற (எனவே ஒட்டுமொத்த மூலதனத்தின் மாறா அங்கத்துக்கும் மாறும் அங்கத்துக்கும் இடையிலான விகித உறவை மாற்றுகிற) நிலைமைகள் காரணமாய் இந்த மாற்றம் ஏற்படலாம் என்று சென்ற அத்தியாயத்தில் தெளிவாக்கினோம். தனியொரு மூலதனத்தின் புரள்வுக் காலத்தை நீளவோ குறுகவோ செய்திடும் நிலைமைகளும் இதே போல் இலாபவீதத்தின் மீது தாக்கம் செலுத்தலாம் என்றும் பார்த்தோம். இலாபத்தின் அளவும் உபரி-மதிப்பின் அளவும், அதாவது உபரி-மதிப்பும் ஒன்றேயாதலால் இலாபத்தின் அளவிலும்— இது வேறு, இலாப வீதம் வேறு— மேற்கூறிய மதிப்பு ஏற்ற இறக்கங்களால் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை என்றும் பார்த்தோம். இந்த ஏற்ற இறக்கங்களால் மாற்றத்துக்கு உள்ளாவது குறிப்பிட்ட உபரி-மதிப்பும், எனவே குறிப்பிட்ட பருமனுள்ள இலாபமும் தெரிவிக்கப்பெறும் வீதம் மட்டுமே, இலாபத்தின் ஒப்பீட்டுப் பருமன் மட்டுமே, அதாவது மூலதன முன்னீட்டின் பருமனுடன் ஒப்பிடப்பெறும் இலாபப் பருமன் மட்டுமே. இத்தகைய மதிப்பு ஏற்ற இறக்கங்களால் மூலதனம் முடக்கவோ விடுவிக்கவோ படுகிற அளவில், இந்தச் சுற்றடி வழியில் மாற்றத்துக்கு உள்ளாகக் கூடியது இலாப வீதம் மட்டுமல்ல, இலாபமும்தான். ஆனால் இது ஏற்கெனவே முதலீடாகியுள்ள மூலதனத்துக்குப் பொருந்துமே தவிர, புதிய முதலீடுகளுக்கு அல்ல. மேலும் இலாபம் அதிகரிப்பதோ குறைவதோ குறிப்பிட்ட மூலதனம் இயங்கச் செய்திடும் உழைப்பு இந்த மதிப்பு மாற்றத்தால் எந்த அளவுக்குக் கூடுதலாகிறது அல்லது குறைந்து போகிறது என்பதையே பொறுத்ததாகும்; வேறு விதமாகச் சொன்னால், உபரி-மதிப்பு வீதம் மாறாதிருக்க, குறிப்பிட்ட மூலதனத்தால் அடைய முடிகிற உபரி-மதிப்பளவு எந்த அளவுக்கு அதிகரிக்கிறது அல்லது குறைகிறது என்பதையே பொறுத்ததாகும். விதிவிலக்கு போல் தோன்றும் இந்நிகழ்வு பொது விதிக்கு முரணானதோ, அதற்கொரு விலக்காய் அமைவதோ அல்லவே அல்ல; இது உள்ளபடியே பொது விதியின் பிரயோகத்திற்கான தனி உதாரணமே ஆகும்.

உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமை மாறாதிருக்க, மாறா-மூலதனத்தின் அடக்கக் கூறுகளது மதிப்பிலும் மூலதனத்தின் புரள்வுக் காலத்திலும் மாற்றம் ஏற்படும் போது இலாப வீதமும் மாறுகிறது என்று சென்ற பகுதியில் பார்த்தோம். இதிலிருந்து தெளிவாகவே தெரிவது என்னவென்றால்: மற்றவை மாறாதிருக்க, முதலீடாகியுள்ள மூலதனங்களின் புரள்வுக் காலங்கள் வேறுபட்டாலோ, பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் இந்த மூலதனங்களின் அங்கக் கூறுகளிடையிலான மதிப்புறவு வேறுபட்டாலோ ஒருங்கே அடுத்தடுத்து இருந்து வரும் வெவ்வேறு உற்பத்திக் கிளைகளிலும் இலாப வீதங்கள் வேறுபட்டாக வேண்டும். ஒரே

மூலதனம் தொடர்வரிசையாய் அடையும் மாற்றங்களாக முன்பு நாம் கருதியவற்றை வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில் ஒருங்கே அடுத்தடுத்து நிலவும் மூலதன முதலீடுகளிடையிலான ஏககாலத்திய வேறுபாடுகளாய் இப்போது கருத வேண்டும்.

இப்போது நாம் பகுத்து ஆராய வேண்டியவை இவைதான்: (1) மூலதனங்களின் அங்கக இயைபிலான [organic composition] வேறுபாடு; (2) அவற்றின் புரள்வுக் காலத்திலான வேறுபாடு.

இந்தப் பகுப்பாய்வு முழுவதிலும் நாம் ஒன்றை முதனிலையாகக் கொள்கிறோம். அதாவது, குறிப்பிட்ட உற்பத்திக் கிளையில் மூலதனத்தின் இயைபு அல்லது புரள்வு பற்றிப் பேசும் போதெல் லாம், இந்தக் கிளையில் முதலீடாகியுள்ள மூலதனத்தின் இயல்பான சராசரி நிலைமையையே குறிப்பிடுகிறோம், குறிப்பிட்ட உற்பத்திக் கிளையில் முதலீடாகியுள்ள மொத்த மூலதனத்தின் சராசரி பற்றிப் பேசுகிறோமே ஒழிய தனிப்பட்ட மூலதனங்களிடையிலான தற் செயல் வேறுபாடுகளைப் பற்றியல்ல.

மேலும் உபரி-மதிப்பு வீதத்தையும் வேலை-நாளையும் மாறாதவை யாகக் கொள்கிறோம், இந்த அனுமானமானது கூலியும் மாறாதிருப் பதைக் குறிக்கிறது. ஆகவே குறிப்பிட்ட அளவு மாறும்-மூலதனம் என்பது குறிப்பிட்ட அளவு உழைப்புச் சக்தி இயங்க வைக்கப் படுவதை, எனவே குறிப்பிட்ட அளவு உழைப்பு பொருள் வடிவா வதைக் குறிக்கிறது. ஆகவே £100 ஆனது, 100 தொழிலாளர் களின் வாரக் கூலியைத் தெரிவிப்பதாகவும், எனவே உழைப்புச் சக்தியின் 100 அலகுகளைக் குறிப்பதாகவும் இருக்குமானால், n × £100 என்பது n × 100 தொழிலாளர்களின் கூலியைத் தெரி விப்பதாகும், $\frac{£100}{\text{ம}}$ என்பது $\frac{100}{\text{ம}}$ தொழிலாளர்களின் கூலியைத் தெரிவிப்பதாகும். ஆக, மாறும்-மூலதனமானது குறிப்பிட்ட மொத்த மூலதனத்தால் இயங்க வைக்கப்படும் உழைப்பளவின் குறியீடாக இங்கே பயன்படுகிறது (கூலி மாறாதிருப்பதாய்க் கொள்ளப்படும் போதெல்லாம் அது இவ்வாறே பயன்படுகிறது). ஆகவே, ஈடு படுத்தப்படும் மாறும்-மூலதனத்தின் பருமனிலான வேறுபாடுக்ள், ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்தியின் அளவிலான வேறுபாடு களின் குறியீடாகப் பயன்படுகின்றன. £100 ஆனது வாரத்துக்கு 100 தொழிலாளர்களையும் வாரத்துக்கு 60 வேலை-மணிகள் வீதம் 6,000 வேலை-மணிகளையும் குறிக்குமானால், £200 ஆனது 12,000 வேலை-மணிகளைக் குறிக்கும், £50 ஆனது 3,000 வேலை-மணிகளை மட்டுமே குறிக்கும்.

முதல் பாகத்திலேயே குறிப்பிட்டது போல, மூலதனத்தின் முனைப்புள்ள அங்கத்துக்கும் முனைப்பிலா அங்கத்துக்கும், அதாவது மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்கும் இடையிலான விகிதத்தையே மூலதன இயைபு என்று சொல்கிறோம். இதில் இரு

விகித உறவுகள் கவனத்துக்குரியவை. இவ்விரண்டும் குறிப்பிட்ட சில நிலைமைகளில் ஒரேவிதமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்றாலும், ஒரேவிதமான முக்கியத்துவம் உடையவை அல்ல.

முதல் விகித உறவு தொழில் நுட்ப அடிப்படையிலானது; உற்பத்திச் சக்திகளின் எந்த ஒரு வளர்ச்சிக் கட்டத்திலும் இவ்விகித உறவை குறிப்பிட்ட ஒன்றாய்க் கொள்ள வேண்டும். ஒரு நாளில் குறிப்பிட்ட அளவு பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொழிலாளர்களால் குறிக்கப்படும் குறிப் பிட்ட அளவு உழைப்புச் சக்தி தேவைப்படுகிறது. இதற்கு குறிப் பிட்ட அளவு உற்பத்திச் சாதனங்களை, இயந்திர சாதனம், கச்சாப் பொருள் முதலானவற்றை உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகருவது அவசியமாகும். தொழிலாளர்களின் குறிப்பிட்ட எண்ணிக்கை உற்பத்திச் சாதனங்களின் குறிப்பிட்ட அளவைக் குறிக்கிறது. அதாவது உயிருள்ள உழைப்பின் குறிப்பிட்ட அளவு உற்பத்திச் சாதனங்களாக உருப்பெற்றிருக்கும் உழைப்பின் குறிப்பிட்ட அளவைக் குறிக்கிறது. இந்த விகித உறவு வெவ்வேறு உற்பத்திக் கிளைகளிலும் பெரிதும் மாறுபட்டிருக்கலாம், ஒரே தொழிலின் வெவ்வேறு கிளைகளிலுங் கூட இவ்விதம் மாறுபட்டிருப்பதுண்டு. அறவே வெவ்வேறான தொழிற் கிளைகளில் இந்த விகித உறவு அநேகமாய் ஒன்றாகவே இருந்து விடுவதுங் கூட உண்டு.

மூலதனத்தின் தொழில் நுட்ப இயைபு [technical composition] என்பதும், மூலதனத்தின் அங்கக இயைபுக்கு உள்ளபடியே அடிப் படையாய் இருப்பதும் இந்த விகித உறவுதான்.

மாறும்-மூலதனம் உழைப்புச் சக்தியின் வெறும் குறியீடாகவும், மாறா-மூலதனம் இந்த உழைப்புச் சக்தியால் இயங்கச் செய்யப்படும் உற்பத்திச் சாதனத் திரளுக்கான வெறும் குறியீடாகவுமே உள்ள வரை, இந்த முதல் விகித உறவானது வெவ்வேறு தொழிற் கிளை களில் ஒன்றாகவே இருந்து விடுவதும் சாத்தியம்தான். எடுத்துக் காட்டாக, தாமிரத்தைக் கொண்டோ இரும்பைக் கொண்டோ செய்யக் கூடிய சில வேலைகளுக்கு உழைப்புச் சக்திக்கும் உற்பத்திச் சாதனங்களுக்கும் இடையிலான விகித உறவு ஒன்றாகவே இருப் பினும், தாமிரம் இரும்பை விட விலை உயர்ந்ததாகையால் மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்கும் இடையிலான மதிப்புறவு வெவ்வேறாகி விடும்; எனவே மொத்த மூலதனங்களின் மதிப்பு-இயைபும் வெவ்வேறாகி விடும். தொழில் நுட்ப இயைபுக்கும் மதிப்பு-இயைபுக்கும் இடையிலான வேறுபாடு ஒவ்வொரு தொழிற் கிளையிலும் எவ்விதம் வெளிப்படுகிறது என்றால், தொழில் நுட்ப இயைபு மாறாதிருக்கும் போதே மூலதனத்தின் இரு பகுதிகளுக்கு மிடையிலான மதிப்புறவு மாறலாம். தொழில் நுட்ப இயைபு மாறும் போதே இந்த மதிப்புறவு மாறாமலிருக்கலாம். ஈடுபடுத்தப்படும்

உற்பத்திச் சாதனத் திரளுக்கும் உழைப்புச் சக்திக்கும் இடையிலான விகிதத்தில் ஏற்படும் மாற்றத்தை அவற்றின் மதிப்புகளில் ஏற்படும் எதிர்மாற்றம் ஈடு செய்து விட்டால் மட்டுமே, தொழில் நுட்ப இயைபு மாறும் போதே மதிப்புறவு மாறாமலிருக்கும் நிகழ்வு நடைபெறுகிறது.

மூலதனத்தின் தொழில் நுட்ப இயைபால் நிர்ணயிக்கப்படுவதும், தொழில் நுட்ப இயைபைப் பிரதிபலிப்பதும் ஆகிய இந்த மதிப்பு-இயைபைத்தான் [value-composition] மூலதனத்தின் அங்கக இயைபு என்கிறோம்.[20]

ஆக, மாறும்-மூலதனமானது குறிப்பிட்ட அளவு உழைப்புச் சக்தியின், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொழிலாளர்களின், அல்லது இயங்க வைக்கப்படும் உயிருள்ள உழைப்பினது குறிப்பிட்ட அளவின் குறியீடாய்க் கொள்ளப்படுகிறது. மாறும்-மூலதன மதிப்பின் பருமனில் ஏற்படும் மாற்றம் ஒரே உழைப்பளவின் உயர்ந்த விலையையோ குறைந்த விலையையோ மட்டும் குறிப்பதாய் இருக்கலாம் என்று முதல் பகுதியில் பார்த்தோம். ஆனால் இங்கு இது பொருந்தாது. ஏனென்றால் உபரி-மதிப்பு வீதம், வேலை-நாள் இரண்டுமே மாறாதவையாய்க் கொள்ளப்படுவதோடு, குறிப்பிட்ட உழைப்பு நேரத்துக்கான கூலியும் நிர்ணயமானதாய் உள்ளது. மறு புறம், மாறா-மூலதனத்தின் பருமனிலான வேறுபாடு குறிப்பிட்ட அளவு உழைப்புச் சக்தியால் இயங்க வைக்கப்படும் உற்பத்திச் சாதனத் திரளில் ஏற்படும் மாற்றத்தின் குறியீடாகவே அமையலாம். ஆனால் இந்த வேறுபாடானது ஓர் உற்பத்திக் கிளையில் இயங்க வைக்கப்படும் உற்பத்திச் சாதனங்களுக்கும் மற்றொரு கிளையில் இயங்க வைக்கப்படும் உற்பத்திச் சாதனங்களுக்கும் இடையிலான மதிப்பு வேறுபாட்டிலிருந்து வருவதாகவும் இருக்கலாம். ஆகவே, இங்கு இவ்விரு கண்ணோட்டங்களையும் பரிசீலித்தாக வேண்டும்.

முடிவில், பின்வரும் அடிப்படை விவரங்களைக் கணக்கில் கொண்டாக வேண்டும்:

*100 தொழிலாளர்களுக்கான வாரக் கூலி £100 எனக் கொள்வோம். மேலும், வாரம் ஒன்றுக்கு 60 வேலை-மணிகள், உபரி-மதிப்பு வீதம் = 100% என்போம். இந்நிலையில், தொழிலாளர்கள் 60 மணி நேரத்தில் 30 மணி நேரம் தமக்காகவும், 30 மணி நேரம் இலவசமாய் முதலாளிக்காகவும் வேலை செய்கிறார்கள். உண்மையில் £100 கூலியானது 100 தொழிலாளர்களின் 30 வேலை-மணிகளையே, அதாவது மொத்தத்தில் 3,000 வேலை-மணிகளையே*

---

[20] எங்கெல்ஸ் குறிப்பு.— இது முதல் பாகத்தின் மூன்றாம் பதிப்பிலேயே அத்தியாயம் XXIII இன் தொடக்கத்தில் (தமிழ்ப் பதிப்பு: அத்தியாயம் XXV இன் தொடக்கம், பக்கம் 823-24) சுருக்கமாய் வகுத்துரைக்கப்பட்டது. முதல் இரு பதிப்புகளில் அப்பகுதி இடம் பெறாமற் போனதால் அதனை இங்கு திரும்பவும் குறிப்பிடுவது நன்றே.

குறிக்கிறது; அதே போது மீதமுள்ள 3,000 வேலை-மணிகளும் முதலாளி பையில் போட்டுக் கொள்கிற £100 உபரி-மதிப்பு அல்லது இலாபமாய் உருக்கொள்கின்றன. £100 கூலியானது 100 தொழிலாளர்களின் ஒரு வார உழைப்பு பொருள்வடிவாகி யுள்ள மதிப்பைக் குறிப்பதல்ல என்றாலும் (வேலை-நாளின் நீட்டளவும் உபரி-மதிப்பு வீதமும் குறிப்பிட்டவை ஆதலால்) 100 தொழிலாளர்களை இம்மூலதனம் மொத்தம் 6,000 வேலை-மணிகளுக்கு இயங்க வைப்பதைக் குறிப்பதாகும். £100 மூலதன மானது இதைக் குறிப்பதற்கு இரு காரணங்கள் உண்டு; முதலாவ தாக, இயங்க வைக்கப்படும் தொழிலாளர்களின் எண்ணிக் கையை அது காட்டுகிறது; £1 = வாரம் ஒன்றுக்கு 1 தொழிலாளி, £100 = 100 தொழிலாளர்கள். இரண்டாவதாக, உபரி-மதிப்பு வீதம் 100% ஆகத் தரப்பட்டிருப்பதால் இந்தத் தொழிலாளர் களில் ஒவ்வொருவரும் தமது கூலியில் அடங்கியிருப்பது போல் இரு மடங்கு உழைப்பை ஆற்றுகிறார்; அதாவது £1 கூலியானது அரை வார உழைப்பின் தெரிவிப்பே ஆகும் என்றாலும் முழுதாக ஒரு வார உழைப்பை இயங்கச் செய்கிறது; £100 ஆனது 50 வார உழைப்பை மட்டும் குறிப்பதாய் இருந்தாலும் 100 வார உழைப்பை இயங்கச் செய்கிறது. ஆகவே மாறும்-மூலதனத்தை, அதாவது கூலியில் முதலீடாகிற மூலதனத்தைப் பொறுத்த வரை ஓர் அடிப்படை வேறுபாடு இருப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த மாறும்-மூலதன மதிப்பு கூலித் தொகையாக, அதாவது பொருள்வடிவான உழைப்பின் குறிப்பிட்ட அளவாக இருப்பதை, அதனால் இயங்க வைக்கப்படும் உயிருள்ள உழைப்புத் திரளின் குறியீடாக மட்டும் இருப்பதிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். இரண்டாவதாகக் குறிப்பிட்டது மாறும்-மூலதனத்தில் அடங்கியுள்ள உழைப்பை விட எப்போதுமே கூடுதலாய் இருப் பதாகும்; எனவே மாறும்-மூலதனத்தின் மதிப்பை விட கூடுதலான மதிப்பால் குறிக்கப்படுவதாகும். இந்தக் கூடுதலான மதிப்பு, ஒரு புறம், இந்த மாறும்-மூலதனத்தால் இயங்க வைக்கப்படும் தொழி லாளர் தொகையாலும், மறு புறம், அவர்களால் நிறைவேற்றப்படும் உபரி-உழைப்பின் அளவாலும் நிர்ணயிக்கப்படுகிறது.

மாறும்-மூலதனத்தை இவ்விதம் பரிசீலித்ததிலிருந்து தெரிய வருவதாவது:

A என்னும் உற்பத்திக் கிளையில் முதலீடாகிற ஒரு மூலதனம் மொத்த மூலதனத்தில் 700க்கு 600ஐ மாறா-மூலதனமாகச் செல விட்டு 100ஐ மட்டும் மாறும்-மூலதனமாகச் செலவிடுகிறது என்றும், B என்னும் உற்பத்திக் கிளையில் முதலீடாகிற ஒரு மூல தனம் 600ஐ மாறும்-மூலதன்மாகச் செலவிட்டு 100ஐ மட்டும் மாறா-மூலதனமாகச் செலவிடுகிறது என்றும் வைத்துக் கொள் வோம். அப்படியானால் A மூலதனத்தில் 700 என்னும் தொகை

100 மதிப்புள்ள உழைப்புச் சக்தியை மட்டும் இயங்க வைக்கிறது, அதாவது (ஏற்கனவே நாம் அனுமானம் செய்து கொண்டுள்ள படி) 100 வார உழைப்பை, அதாவது 6,000 மணி நேர உயிருள்ள உழைப்பை இயங்க வைக்கிறது. ஆனால் B-மூலதனத்தில் அதே தொகையானது 600 வார உழைப்பை, அதாவது 36,000 மணி நேர உயிருள்ள உழைப்பை இயங்க வைக்கிறது. இந்நிலையில் A கிளையில் மூலதனமானது 50 வார உழைப்பையே, அதாவது 3,000 மணி நேர உபரி-உழைப்பையே தனதாக்கும். ஆனால் B கிளையில் அதே மூலதனத் தொகையானது 300 வார உழைப்பை அதாவது 18,000 மணி நேரத்தைத் தனதாக்கிக் கொள்ளும், மாறும்-மூலதனமானது அதில் அடங்கியிருக்கும் உழைப்பின் குறியீடு மட்டுமல்ல, (உபரி-மதிப்பு வீதம் குறிப்பிட்டதாய் இருக்க) அவ்வுழைப்புக்கு மேல் உபரியாய் அதனால் இயங்க வைக்கப்படும் உழைப்பளவின், அதாவது உபரி-உழைப்பின் குறியீடும் ஆகும். சுரண்டல்-கடுமை ஒன்றே எனக் கொண்டால் இலாபமானது முதல் நேர்வில் $\frac{100}{700} = \frac{1}{7} = 14^{2}/_{7}\,\%$ ஆகவும், இரண்டாம் நேர்வில் $\frac{600}{700} = \frac{6}{7} = 85^{5}/_{7}\,\%$ ஆகவும் இருக்கும், அதாவது இரண்டாவதில் பெறப்படும் இலாப வீதம் முதலாவதில் பெறப்படுவதைப் போல் 6 மடங்காய் இருக்கும். இலாப வீதம் மட்டுமல்ல, இங்கு உள்ளபடியே கிடைக்கிற இலாபமும் கூட ஆறு மடங்காகவே இருக்கும், Aக்கு 100 என்றால் Bக்கு 600 ஆக இருக்கும்; ஏனென்றால் அதே மூலதனம் உயிருள்ள உழைப்பை ஆறு மடங்கு அதிக அளவில் இயங்க வைக்கிறது, (சுரண்டல்-கடுமை இரண்டுக்கும் ஒன்றேயெனக் கொண்டால்) ஆறு மடங்கு உபரி-மதிப்பும், எனவே ஆறு மடங்கு இலாபமும் கிடைக்கிறது.

ஆனால், A கிளையில் முதலீடாகிற மூலதனம் 700 ஆக இல்லாமல் £7,000 ஆக இருக்குமானால், அதே போது Bஇல் முதலீடாகிற மூலதனம் £700 ஆக மட்டும் இருக்குமானால், இரண்டுக்குமான அங்கக இயைபு ஒன்றேயானால், A மூலதனமானது £7,000இல் £1,000ஐ மாறும்-மூலதனமாக ஈடுபடுத்தும்; அதாவது வாரத்துக்கு 1,000 தொழிலாளர்கள் = 60,000 மணி நேர உயிருள்ள உழைப்பு; இதில் 30,000 உபரி-உழைப்பாகும். ஆனால் A மூலதனத்தில் ஒவ்வொரு £700உம், B மூலதனத்தைப் போல் ஆறில் ஒரு பங்கு உயிருள்ள உழைப்பை மட்டுமே தொடர்ந்து இயங்க வைக்கும், எனவே ஆறில் ஒரு பங்கு உபரி-உழைப்பை மட்டுமே இயங்க வைக்கும்; ஆறில் ஒரு பங்கு இலாபம் மட்டுமே உற்பத்தி செய்யும். இலாப வீதத்தை எடுத்துக் கொண்டால், Aஇல் $\frac{1000}{7000} = \frac{100}{700} = 14^{2}/_{7}\,\%$ ஆகவும் Bஇல் $\frac{600}{700} = 85^{5}/_{7}\,\%$ ஆகவும் இருக்கும். மூலதனத் தொகைகள் சமமாய் இருந்த போதிலும்

இங்கு இலாப வீதங்கள் வேறுபடுகின்றன. உபரி-மதிப்பு வீதங்கள் சமமாய் இருந்த போதிலும் இயங்க வைக்கப்படும் உயிருள்ள உழைப்பளவுகள் வேறுபடுவதால் உபரி-மதிப்பளவுகளும், எனவே இலாபங்களும் வேறுபடுகின்றன என்பதே இதற்குக் காரணம்.

இரு உற்பத்திக் கிளைகளிலும் தொழில் நுட்ப நிலைமைகள் ஒன்றேயானாலும் ஈடுபடுத்தப்படும் மாறா-மூலதனத்தின் கூறுகளது மதிப்பு வேறுபடுமானால் நடைமுறையில் இதே விளைவுதான் பெறப்படுகிறது. இரு மூலதனங்களுமே மாறும்-மூலதனமாக £100 முதலீடு செய்வதாகவும், எனவே ஒரே அளவு இயந்திர சாதனத்தை யும் கச்சாப் பொருளையும் இயங்க வைப்பதற்கு வாரம் ஒன்றுக்கு 100 தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதாகவும் கொள்வோம். ஆனால் இந்த இயந்திர சாதனமும் கச்சாப் பொருளும் A கிளை யைக் காட்டிலும் B கிளையில் விலையுயர்ந்திருக்கின்றன என் போம். எடுத்துக்காட்டாக, £100 மாறும்-மூலதனம் Aஇல் £200 மாறா-மூலதனத்தையும் Bஇல் £400 மாறா-மூலதனத்தையும் இயங் கச் செய்யும். உபரி-மதிப்பு வீதம் 100% எனும் நிலையில், உபரி-மதிப்பின் உற்பத்தி இரு கிளைகளிலுமே £100க்குச் சமம். ஆகவே இலாபமானது இரு நேர்வுகளிலுமே £100க்குச் சமம். ஆனால் Aஇல் இலாப வீதம் $\frac{100}{200_c + 100_v} = \frac{1}{3} = 33\frac{1}{3}\%$ ஆகும். Bஇல் இலாப வீதம் $\frac{100}{400_c + 100_v} = \frac{1}{5} = 20\%$ ஆகும். உண்மையில், இரு நேர்வுகளிலும் மொத்த மூலதனத்தின் குறிப்பிட்ட ஈவுப் பகுதியை எடுத்துக் கொள்வோமானால், Bஇல் ஒவ்வொரு £100இலும் £20, அதாவது ஐந்திலொரு பங்கு மட்டுமே மாறும்-மூலதனமாகிற அதே போது Aஇன் ஒவ்வொரு £100இலும் £33⅓, அதாவது மூன்றிலொரு பங்கு மாறும்-மூலதனமாகக் காண்கிறோம். Aஐக் காட்டிலும் Bஆனது உயிருள்ள உழைப்பை குறைந்த அள விலேயே இயங்க வைப்பதால் B ஒவ்வொரு £100க்கும் குறைந்த இலாபமே உற்பத்தி செய்கிறது. இங்கேயும் இலாப வீதங்களிலான வேறுபாடு முதலீடாகிற மூலதனத்தில் ஒவ்வொரு 100உம் உற்பத்தி செய்கிற உபரி-மதிப்புத் திரள்களின், எனவே இலாபத் திரள் களின் வேறுபாடாகப் பெயர்கிறது.

இந்த இரண்டாவது உதாரணத்துக்கும் முதல் உதாரணத்துக்கு மான ஒரே வேறுபாடு என்னவென்றால்: இரண்டாவதில் Aக்கும் Bக்குமான சமப்படுத்தலுக்கு வேண்டியதெல்லாம் (தொழில் நுட்ப அடிப்படை மாறாதிருக்க) Aஇலோ Bஇலோ மாறா-மூலதனத்தின் மதிப்பில் ஒரு மாற்றம் மட்டுமே. முதலாவதிலோ இரு உற்பத்திக் கிளைகளிடையிலும் தொழில் நுட்ப இயைபிலேயே வேறுபாடு உள்ளது, இப்படியொரு சமப்படுத்தல் நிகழ வேண்டுமானால் அந்தத் தொழில் நுட்ப இயைபையே அடியோடு மாற்ற வேண்டியிருக்கும்.

ஆக, மூலதனங்களின் வெவ்வேறான அங்கக இயைபுக்கும் அவற்றின் அறுதிப் பருமனுக்கும் தொடர்பேதுமில்லை. இதில் சம்பந்தப்பட்டுள்ள ஒரே பிரச்சினை ஒவ்வொரு 100இலும் மாறும்-மூலதனம் எவ்வளவு, மாறா-மூலதனம் எவ்வளவு என்பதே.

ஒரே பருமனுள்ள மூலதனங்கள், அல்லது வெவ்வேறு பருமனுள்ள மூலதனங்களின் சதவீத அளவுகள்—வேலை-நாள் ஒன்றே, உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமை ஒன்றே என்னும் நிலையில்—பெரிதும் வெவ்வேறான அளவுகளில் உபரி-மதிப்பும், எனவே இலாபமும் உற்பத்தி செய்கின்றன. இவற்றின் மாறும்-மூலதனப் பகுதிகள் வெவ்வேறு உற்பத்திக் கிளைகளிலும் மூலதனத்தின் அங்கக இயைபிலான வேறுபாட்டுக்கேற்ப வேறுபடுகின்றன. இதன் பொருள் என்னவென்றால் உயிருள்ள உழைப்பின் வெவ்வேறு அளவுகள் இயங்க வைக்கப்படுகின்றன; உபரி-உழைப்பின்—அதாவது உபரி-மதிப்பினதும், எனவே இலாபத்தினதும் சாரத்தின்—வெவ்வேறு அளவுகள் தனதாக்கப்படுகின்றன. வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில் மொத்த மூலதனத்தின் சம பங்குகளிலிருந்து சமமற்ற அளவுகளில் உபரி-மதிப்பு பிறக்கிறது; உபரி-மதிப்பின் ஒரே ஆதாரம் உயிருள்ள உழைப்பாகும். உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமை குறிப்பிட்டதாய் இருக்க 100 மதிப்புள்ள மூலதனத்தால் இயங்க வைக்கப்படும் உழைப்புத் திரளும், எனவே அதனால் தனதாக்கப்படும் உபரி-உழைப்புத் திரளும் அதன் மாறும்-மூலதன அங்கத்தைப் பொறுத்தவை. சுரண்டல்-கடுமை குறிப்பிட்டதாய் இருக்க, $90_c + 10_v$ எனும் சதவீத இயைபு கொண்ட மூலதனமும் $10_c + 90_v$ எனும் சதவீத இயைபு கொண்ட மூலதனமும் ஒரே அளவு உபரி-மதிப்பு அல்லது இலாபம் உற்பத்தி செய்யுமானால், உபரி-மதிப்புக்கும், எனவே பொதுவாக மதிப்புக்கும் கூட உழைப்பல்லாத வேறோர் ஆதாரம் இருந்தாக வேண்டும் என்பதும், அப்போது அரசியல் பொருளாதாரம் அறிவார்ந்த அடிப்படையே அற்றதாகிப் போகும் என்பதும் தெள்ளத் தெளிவாகும். £1 என்பது 60 மணி நேரம் வேலை செய்யும் தொழிலாளியின் வாரக் கூலியைக் குறிப்பதாகவும், உபரி-மதிப்பு வீதம் 100% என்றும் தொடர்ந்து வைத்துக் கொள்வோமானால் ஒரு தொழிலாளி ஒரு வார காலத்தில் செய்தளிக்கும் மொத்த மதிப்பு-உற்பத்தி £2 ஆகும் எனத் தெரிகிறது. அப்படியானால், பத்து தொழிலாளர்கள் £20க்கு மேல் உற்பத்தி செய்ய முடியாது; இந்த £20இல் £10 ஆனது கூலிக்கு மாற்றீடாக வேண்டியிருப்பதால், இந்தத் தொழிலாளர்கள் £10க்கு மேல் உபரி-மதிப்பு உற்பத்தி செய்ய முடியாது. மறு புறம், மொத்தம் £180 மதிப்பை உற்பத்தி செய்து £90 கூலி பெறும் 90 தொழிலாளர்கள் £90 உபரி-மதிப்பை உற்பத்தி செய்வார்கள். இலாப வீதமானது இவ்விதம் முதல் நேர்வில் 10% ஆகவும், இரண்டாவதில் 90% ஆகவும்

இருக்கும். அப்படி இல்லாது போனால் மதிப்பும் உபரி-மதிப்பும் பொருள்வடிவான உழைப்பாய் இல்லாமல் வேறு ஏதோ ஆகிப் போகும். வெவ்வேறு உற்பத்திக் கிளைகளிலும் முதலீடாகிற மூல தனங்களின் சம அளவுகள், அல்லது சதவீத அளவுகள் மாறா-மூலதனக் கூறாகவும் மாறும்-மூலதனக் கூறாகவும் வெவ்வேறு விகிதங்களில் பிரிக்கப்பட்டு உயிருள்ள உழைப்பின் வெவ்வேறு அளவுகளை இயங்க வைத்து, வெவ்வேறு உபரி-மதிப்பு அல்லது இலாப அளவுகளை உற்பத்தி செய்கின்றன என்பதால், இலாப வீதமும்— சதவீதக் கணக்கில் மொத்த மூலதனத்தோடு உபரி-மதிப் புக்குள்ள விகிதமே ஆகிய இதுவும்—வேறுபட்டாக வேண்டும் என்றாகிறது.

ஆனால் வெவ்வேறு உற்பத்திக் கிளைகளிலும் முதலீடாகிற மூலதனங்களின் சம அளவுகள் அல்லது சதவீத அளவுகள் அவற் றின் அங்கக இயைபிலான வேறுபாடு காரணமாய் வெவ்வேறு இலாப அளவுகளை உற்பத்தி செய்யுமானால், வெவ்வேறு உற் பத்திக் கிளைகளில் முதலீடாகிற சமமல்லாத மூலதனங்களின் இலாபங்கள் அந்தந்த மூலதன அளவுகளுக்கு விகிதாசாரம் உடை யவையாய் இருக்க முடியாது என்றும், வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில் பெறப்படும் இலாபங்கள் அந்தந்தக் கிளையிலும் முதலீடாகிற மூலதனங்களின் பருமன்களுக்கு விகிதாசாரம் உடை யவையல்ல என்றும் ஆகிறது. ஏனெனில், இலாபங்கள் மூலதன முதலீட்டின் பருமனுக்கேற்ப அதிகரிக்குமானால், சம அளவுள்ள மூலதனங்கள் அவற்றின் அங்கக இயைபுகள் வேறுபட்ட போதி லும் வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில் ஒரே இலாப வீதம் கிடைக்கச் செய்யும் என்றாகி விடும். ஒரே உற்பத்திக் கிளைக்குள்ளே தான், அதாவது மூலதனத்தின் அங்கக இயைபு குறிப்பிட்டதாய் இருக்குமிடத்தேதான், அல்லது உற்பத்திக் கிளைகள் வெவ்வேறாய் இருந்தாலும் மூலதனத்தின் அங்கக இயைபில் வேறுபாடு இல்லாத போதுதான் இலாப அளவுகள் மூலதன முதலீட்டு அளவுகளுக்கு இழைபிசகாத விகிதாசாரமுடையவை ஆகின்றன. சமமல்லாத மூலதனங்களிலிருந்து பெறப்படும் இலாபங்கள் அவற்றின் பருமன் களுக்கு விகிதாசாரமுடையவை என்று சொல்வதன் பொருள், சம மூலதனங்கள் சம இலாபங்களைத் தருகின்றன என்பதாகவோ, பருமனளவும் அங்கக இயைபும் எதுவானாலும் எல்லா மூலதனங் களுக்கும் இலாப வீதம் ஒன்றே என்பதாகவோதான் இருக்கும்.

இப்படியெல்லாம் சொல்லும் போது, சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே விற்கப்படுவதாகக் கொள்கிறோம். சரக்கின் மதிப்பு = = அதில் அடங்கியுள்ள மாறா-மூலதனத்தின் மதிப்பு + அதில் மறுவுற்பத்தி செய்யப்பட்டுள்ள மாறும்-மூலதனத்தின் மதிப்பு + + இந்த மாறும்-மூலதனத்தின் உயர்வு (அதாவது உற்பத்தி செய்யப் பட்டுள்ள உபரி-மதிப்பு). உபரி-மதிப்பு வீதம் குறிப்பிட்டதாய்

இருக்க, உபரி-மதிப்பின் அளவானது மாறும்-மூலதனத்தின் அளவைப் பொறுத்தது என்பது தெளிவு. 100 மதிப்புள்ள மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் மதிப்பு முதல் நேர்வில் $90_c + 10_v + 10_s = 110$ ஆகவும், இரண்டாம் நேர்வில் $10_c +$ $+ 90_v + 90_s = 190$ ஆகவும் இருக்கும். சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே விற்கப்படுமானால், முதலாவது உற்பத்திப் பொருள் 110க்கு விற்கப்பட்டு அதில் 10 ஆனது உபரி-மதிப்பு அல்லது ஊதியமிலா உழைப்பைக் குறிக்கும்; இரண்டாவது உற்பத்திப் பொருள் 190க்கு விற்கப்பட்டு, அதில் 90 ஆனது உபரி-மதிப்பு அல்லது ஊதியமிலா உழைப்பைக் குறிக்கும்.

வெவ்வேறு நாடுகளில் பெறப்படும் இலாப வீதங்களை ஒன்றோடு ஒன்று ஒப்புநோக்குகையில், இது தனி முக்கியத்துவமுடையதாகிறது. ஐரோப்பிய நாடு ஒன்றில் உபரி-மதிப்பு வீதம் 100% எனக் கொள்வோம்; அதாவது தொழிலாளி தனக்காக அரை நாளும் தன்னை வேலைக்கமர்த்தும் அதிபருக்காக அரை நாளும் வேலை செய்கிறார். ஆசிய நாடு ஒன்றில் உபரி-மதிப்பு வீதம் 25%எனக் கொள்வோம்: அதாவது தொழிலாளி ஒரு நாளில் தனக்காக ஐந்தில் நான்கு பங்கும், தன்னை வேலைக்கமர்த்தும் அதிபருக்காக ஐந்தில் ஒரு பங்கும் வேலை செய்கிறார். தேச மூலதனத்தின் இயைபு ஐரோப்பிய நாட்டில் $84_c + 16_v$ என்றும் ஆசிய நாட்டில் $16_c + 84_v$ என்றும் வைத்துக் கொள்ளலாம். ஆசிய நாட்டில் இயந்திர சாதனமும் இன்ன பிறவும் அதிகமாய்ப் பயன்படுத்தப்படுவதில்லை, குறிப்பிட்ட அளவு உழைப்புச் சக்தி குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகர்ந்திடும் கச்சாப் பொருள் ஒப்பளவில் மிகக் குறைவே. இதிலிருந்து பெறப்படும் கணக்கீடு வருமாறு:

ஐரோப்பிய நாட்டில் உற்பத்திப் பொருளின் மதிப்பு $= 84_c +$ $+ 16_v + 16_s = 116$; இலாப வீதம் $= \frac{16}{100} = 16\%$.

ஆசிய நாட்டில் உற்பத்திப் பொருளின் மதிப்பு $= 16_c + 84_v +$ $+ 21_s = 121$; இலாப வீதம் $= \frac{21}{100} = 21\%$.

ஆசிய நாட்டில் பெறப்படும் உபரி-மதிப்பு வீதம் ஐரோப்பிய நாட்டில் பெறப்படுவதில் கால் பங்கே ஆனாலும், ஆசிய நாட்டில் பெறப்படும் இலாப வீதம் ஐரோப்பிய நாட்டில் பெறப்படுவதை விட சுமார் 25% கூடுதலாகும். கேரி, பாஸ்தியா போன்றவர்கள் இதற்கு நேர்மாறான முடிவுக்கே வருகிறார்கள்.

பொதுவாகச் சொன்னால் தேச இலாப வீதங்களிலான வேறுபாடுகள் தேச உபரி-மதிப்பு வீதங்களிலான வேறுபாடுகளைப் பொறுத்தவை என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஆனால் இந்த அத்தியாயத்தில் நாம் ஒரே உபரி-மதிப்பு வீதத்திலிருந்து

பெறப்படும் வெவ்வேறான இலாப வீதங்களை ஒப்புநோக்கு கிறோம்.

மூலதனங்களின் அங்கக இயைபிலான வேறுபாடுகள் அன்னி யில், அதாவது ஒரே பருமனுள்ள மூலதனங்கள் வெவ்வேறு உற் பத்திக் கிளைகளில் இயங்க வைத்திடும் உழைப்புத் திரள்களிலான — எனவே, மற்றவை மாறாதிருக்க, உபரி-உழைப்புத் திரள்களிலு மான — வேறுபாடுகள் அன்னியில், இலாப வீதங்களிலான சமத்துவ மின்மைக்கு இன்னொரு காரணமும் உண்டு: வெவ்வேறு உற்பத்திக் கிளைகளிலும் மூலதனப் புரள்வுக் காலம் வெவ்வேறாய் இருப்பதே அது. மற்றவை மாறாதிருக்க, ஒரே அங்கக இயைபுள்ள மூலதனங் களின் இலாப வீதங்கள் அவற்றின் புரள்வுக் காலத்துக்கு எதிர் விகிதம் கொண்டவை என்று அத்தியாயம் IVஇல் பார்த்தோம். வெவ்வேறு கால அளவுகளில் புரளுகிற ஒரே மாறும்-மூலதனம் ஓராண்டு காலத்தில் வெவ்வேறு உபரி-மதிப்பளவுகளை உற்பத்தி செய்வதாகவும் பார்த்தோம். ஆக, புரள்வுக் காலங்களிலான வேறு பாடானது வெவ்வேறு உற்பத்திக் கிளைகளைச் சேர்ந்த சம பரும னுள்ள மூலதனங்கள் சம காலங்களில் சம இலாபங்களை உற்பத்தி செய்யாமைக்கும், எனவே இந்த வெவ்வேறு கிளைகளில் இலாப வீதங்கள் வேறுபடுவதற்கும் மற்றுமொரு காரணமாகிறது.

ஆனால் மூலதனங்களின் இயைபில் நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்குமான விகிதத்தைப் பொறுத்த வரை, அது வாகவே இலாப வீதத்தில் எவ்விளைவும் உண்டாக்குவதில்லை. மூலதன இயைபு இவ்விதம் வேறுபடும் போதே மாறும்-மூல தனத்துக்கும் மாறா-மூலதனத்துக்குமான விகிதமும் வேறுபட நேரிட் டால் மட்டுமே, மேற்கூறிய விகிதம் இலாப வீதத்தில் தாக்கம் ஏற்படுத்தக் கூடும். இந்நேர்வில் இலாப வீதம் வேறுபடுவதற்குக் காரணம் மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்குமான விகிதத் தில் ஏற்படும் வேறுபாடுதானே தவிர, நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்குமான விகிதத்தில் ஏற்படும் வேறுபாடு அல்ல. நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்குமான விகிதத்தில் ஏற் படும் வேறுபாடு குறிப்பிட்ட இலாபம் ஈடேற்றமாகிற புரள்வுக் காலத்திலான வேறுபாட்டுக்குக் காரணமாய் அமையுமானால், அப் போதும் நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்குமான இந்த விகிதம் இலாப வீதத்தில் தாக்கம் ஏற்படுத்தக் கூடும். மூலதனங்கள் நிலை-மூலதனமாகவும் சுழல்-மூலதனமாகவும் வெவ்வேறு விகிதங் களில் பிரிக்கப்பட்டால் இது இலாப வீதத்தில் தாக்கம் உண்டாக்கி அதில் வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும் என்பது இயல்பானதே. ஆனால் சம அளவு மூலதனங்கள் குறிப்பிட்ட இலாபத்தை ஈடேற் றம் செய்து கொள்வதற்காகிற புரள்வுக் காலமும் இதனால் வேறு பட்டாக வேண்டும் என்பதில்லை. எடுத்துக்காட்டாக, எப்போதுமே A ஆனது அதன் உற்பத்திப் பொருளில் பெரும் பகுதியைக்

கச்சாப் பொருட்கள் முதலானவையாக மாற்ற வேண்டியிருக்கலாம்; அதேபோது B ஆனது குறிப்பிட்ட இயந்திர சாதனம் முதலானவற்றையே இன்னும் நீண்ட காலம் பயன்படுத்தலாம், இன்னும் குறைவான கச்சாப் பொருளே அதற்குத் தேவைப்படலாம், ஆனால் A, B இரண்டுமே உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதால் எப்போதுமே தங்கள் மூலதனத்தில் ஒரு பகுதியை — ஒன்று கச்சாப் பொருட்களிலும், அதாவது சுழல்-மூலதனத்திலும், மற்றொன்று இயந்திர சாதனம் முதலானவற்றிலும், அதாவது நிலை-மூலதனத்திலும் — ஈடுபடுத்தியுள்ளன. A ஆனது அதன் மூலதனத்தில் ஒரு பகுதியை சரக்கு வடிவத்திலிருந்து பண வடிவத்துக்கும், பண வடிவத்திலிருந்து திரும்பவும் கச்சாப் பொருள் வடிவத்துக்கும் ஓயாமல் மாற்றிச் செல்கிறது. அதேபோது இப்படிப்பட்ட உருமாற்றங்களே இல்லாமல் B ஆனது அதன் மூலதனத்தில் ஒரு பகுதியை, உழைப்புச் சாதனமாக இன்னும் நீண்ட காலத்துக்குப் பயன்படுத்துகிறது. இரு கிளைகளுமே ஒரே அளவு உழைப்பைப் பயன்படுத்துமானால் ஓராண்டு காலத்தில் அவை விற்றிடும் பண்டங்களின் மதிப்பு சமமாய் இருக்காது என்பது உறுதி. ஆனால் இவ்விரு பண்டத் திரள்களிலுமே உபரி-மதிப்பு சம அளவில் அடங்கியிருக்கும்; நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்குமான அவற்றின் இயைபும் அதே போல் அவற்றின் புரள்வுக் காலமும் மாறுபட்டிருந்த போதிலும் இலாப வீதம் — முதலீடாகிற மொத்த மூலதனத்தை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்படுவது — இரண்டுக்கும் ஒன்றாகவே இருக்கும். புரள்வுக் காலங்கள் வேறுபட்டாலும் இரு மூலதனங்களும் சம காலங்களில் சம இலாபங்களை ஈட்டேற்றம் செய்து கொள்கின்றன.[21] புரள்வுக் காலத்திலான வேறுபாடு குறிப்பிட்ட அளவு மூலதனம் குறிப்பிட்ட காலத்தில் தனதாக்கி ஈட்டேற்றம் செய்து கொள்கிற உபரி-உழைப்புத் திரளில் விளைவு உண்டாக்குவதாய் இருக்கும் வரைதான் அதனளவில் முக்கியத்துவம்

---

[21] எங்கெல்ஸ் குறிப்பு. — A, B ஆகிய மூலதனங்கள் மதிப்பு-இயைபில் வேறுபடும் போது மட்டுமே மேற்சொன்னது பொருந்தும் என்பதையும், ஆனால் இம்மூலதனங்களின் மாறும் பகுதிகளின் சதவீதங்கள் அவற்றின் புரள்வுக் காலங்களுக்கு விகிதாசாரமானவை, அதாவது அவற்றின் புரள்வு எண்ணிக்கைக்கு எதிர் விகிதமுள்ளவை என்பதையும் அத்தியாயம் IVஇலிருந்து அறிய முடிகிறது. A மூலதனத்தின் இயைபை சதவீதக் கணக்கில் $20_c$ நிலை-மூலதனம் + $70_c$ சுழல்-மூலதனம் என்பதாகக் கொள்வோம்; அதாவது $90_c + 10_v = 100$. உபரி-மதிப்பு வீதம் = 100% ஆனால் $10_c$ ஆனது ஒரு புரள்வில் $10_s$ உற்பத்தி செய்கிறது; ஒரு புரள்வுக்கு அது தரும் இலாப வீதம் = 10%. மூலதனம் B = $60_c$ நிலை-மூலதனம் + $20_c$ சுழல்-மூலதனம் என்பதாகக் கொள்வோம்; அதாவது $80_c + 20_v = 100$. மேற்கண்ட உபரி-மதிப்பு வீதத்தில், $20_v$ ஆனது ஒரு புரள்வில் $20_s$ உற்பத்தி செய்கிறது; ஒரு புரள்வுக்கு அது தரும் இலாப வீதம் = 20%; இது Aஇன் இலாப வீதத்தைப் போல் இரு மடங்காகும். ஆனால் ஆண்டுக்கு A இரு முறையும் B ஒரே ஒரு முறையும் புரளுமானால், $2 \times 10$ = ஆண்டுக்கு $20_s$ ஆகி விடும்; அப்போது வருடாந்தர இலாப வீதம் இரண்டுக்கும் ஒன்றே, அதாவது 20%.

உடையதாகும், ஆகவே சுழல்-மூலதனத்துக்கும் நிலை-மூலதனத் துக்குமான வெவ்வேறு இயைபுகள் புரள்வுக் காலங்களிலான வேறுபாட்டை — அதாவது இலாப வீதங்களிலான வேறுபாட்டை — குறித்தாக வேண்டியதில்லை என்றால், இலாப வீதங்களில் வேறு பாடு ஏதுமிருந்தால், அதற்குக் காரணம் நிலை-மூலதனத்துக்கும் சுழல்-மூலதனத்துக்குமான இயைபில் காணப்படும் வேறுபாடே அல்ல; இந்த விகித வேறுபாடு இலாப வீதத்தில் விளைவு உண்டாக் கும் வகையில் புரள்வுக் காலங்கள் வேறுபடுவதைக் காட்டுவதே ஆகும்.

ஆகவே, பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் மாறா-மூலதனத் தின் அங்கங்களாகிய சுழல்-மூலதனத்துக்கும் நிலை-மூலதனத்துக்கும் இடையிலான விகிதங்களில் காணப்படும் வேறுபாடுகள் தம்மள வில் இலாப வீதத்தின் மீது எவ்விதத் தாக்கமும் செலுத்துவதில்லை என்பது தெளிவாகிறது. ஏனென்றால் இந்தப் பிரச்சினையில் தீர்மானகர முக்கியத்துவம் வாய்ந்தது மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்கும் இடையிலான விகிதமே ஆகும். அதேபோது மாறா-மூலதனத்தின் மதிப்பும், எனவே மாறும்-மூலதனத்தோடு ஒப்பிட்டு வரும் அம்மதிப்பின் பருமனும் கூட அம்மாறா-மூலதனத் தின் கூறுகள் நிலை-மூலதனத் தன்மையுடையனவா, சுழல்-மூலதனத் தன்மையுடையனவா என்பதைக் கிஞ்சிற்றும் பொறுத்ததல்ல. ஆனால் நிலை-மூலதனம் குறிப்பிடத்தக்கவாறு வளர்ச்சி அடைந்துள்ள இடங்களிலெல்லாம், உற்பத்தி பெருவீதத்தில் நடைபெறுவதையும், அதனால் மாறா-மூலதனம் மாறும்-மூலதனத்தை வெகுவாய் விஞ்சி நிற்பதையுமே இது புலப்படுத்தக் காணலாம். அதாவது மூலதனத் தால் ஈடுபடுத்தப்படும் உயிருள்ள உழைப்புச் சக்தி அச்சக்தியால் இயங்க வைக்கப்படும் உற்பத்திச் சாதனத் திரளுடன் ஒப்பிடுகையில் குறைவாய் இருக்கக் காணலாம் — இது பிழையான முடிவுகளுக்கு இட்டுச் சென்று விடுவதும் உண்டு.

ஆக; வெவ்வேறு தொழிற் கிளைகளில் வெவ்வேறு இலாப வீதங் கள் பெறப்படுவதையும், இலாப வீதத்திலான இவ்வேறுபாடுகள் மூலதனங்களின் அங்கக இயைபிலான வேறுபாடுகளுக்கு ஏற்பவும், குறிப்பிட்ட வரம்புகளுக்குள் அவற்றின் புரள்வுக் காலத்திலான வேறுபாடுகளுக்கேற்பவும் அமைவதையும் தெளிவாக்கினோம். புரள் வுக் காலம் குறிப்பிட்டதாய் இருக்க, இலாபங்கள் மூலதனப் பருமன்களுக்கு நேர் விகிதம் கொண்டவை என்பதும், எனவே சம பருமனுள்ள மூலதனங்கள் சம காலங்களில் சம இலாபங்களைத் தருகின்றன என்பதுமான விதி (பொதுவான ஒரு போக்கு என்ற முறையில்) பொருந்துவது — உபரி-மதிப்பு வீதம் ஒன்றே ஆனாலும் கூட — ஒரே அங்கக இயைபு கொண்ட மூலதனங்களுக்கு மட்டுமே. இங்கு நாம் கூறியிருப்பவையெல்லாம் ஓர் அனுமானத்தை ஆதார மாய்க் கொண்டவை; இது வரையிலான நமது பகுப்பாய்வு

முழுவதும் அதே அனுமானத்தை ஆதாரமாய்க் கொண்டதுதான் — சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே விற்கப்படுகின்றன என்பதுதான் அந்த அனுமானம். ஆனால் அடிப்படையல்லாதவையும் தற்செயலானவையும் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்கிறவையுமான நிலைமைகளை ஒதுக்கி விட்டுப் பார்த்தால் பல்வேறு தொழிற் கிளைகளுக்குமிடையே சராசரி இலாப வீதத்தில் இத்தகைய வேறுபாடு ஏதும் நிலவவில்லை என்பதிலும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி அமைப்பு முழுவதையும் ஒழித்துக் கட்டாமல் இந்த வேறுபாடு நிலவ முடியாது என்பதிலும் ஐயமில்லை. இவ்வாறு மதிப்புத் தத்துவமானது உள்ளபடியான நிகழ்முறையோடு ஒத்து வராதது, மெய்யான உற்பத்தி நிகழ்வுகளோடு ஒத்து வராதது என்பது போல் தோன்றுகிறது; எனவே இந்த நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதற்கான முயற்சியை அறவே கைவிட வேண்டியதுதான் என்ற தோற்றமும் ஏற்படும்.

இந்த நூற் பாகத்தின் முதற் பகுதியிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால்: வெவ்வேறு உற்பத்திக் கிளைகளுக்கும் உரிய பண்டங்களின் உற்பத்திக்காக சம மூலதனப் பங்குகள் முன்னீடு செய்யப்பட்டால் அப்பண்டங்களின் அடக்க-விலைகள் சமமாகும் — இம்மூலதனங்களின் அங்கக இயைபு எவ்வளவுதான் வேறுபட்டாலும் சரி. மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடு முதலாளியைப் பொறுத்த வரை அடக்க-விலையில் மறைந்து போகிறது. சரக்கு ஒன்றின் உற்பத்திக்காக அவர் £100 முதலீடு செய்ய வேண்டியிருந்தால், $90_c + 10_v$ முதலீடு செய்தாலும் ஒன்றுதான், $10_c + 90_v$ முதலீடு செய்தாலும் ஒன்றுதான். இரு நிலைகளிலுமே அவருக்கு ஆகும் செலவு £100 தான் — அதற்கு அதிகமாகவும் இல்லை, குறைவாகவும் இல்லை. உற்பத்தியான மதிப்புகளும் உபரி-மதிப்புகளும் எவ்வளவுதான் வேறுபட்டாலும் சரி, வெவ்வேறு கிளைகளில் முதலீடாகிற சம மூலதனங்களுக்கு அடக்க-விலைகள் ஒன்றே. அடக்க-விலைகளின் சமத்துவமே மூலதன முதலீடுகளிடையே போட்டாப் போட்டிக்கு அடிப்படை, இப்போட்டியால் விளைவதே சராசரி இலாபம்.

## அத்தியாயம் IX

# பொது இலாப வீதம் (சராசரி இலாப வீதம்) உருவாதலும் சரக்குகளின் மதிப்புகள் உற்பத்தி-விலைகளாக உருமாறுதலும்

குறிப்பிட்ட எத்தருணத்திலும் மூலதனத்தின் அங்கக இயைபு இரு காரணிகளைப் பொறுத்தது: முதலாவதாக, ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்திக்கும் ஈடுபடுத்தப்படும் உற்பத்திச் சாதனங்களுக்கும் இடையிலான தொழில் நுட்ப விகித உறவையும், இரண்டாவதாக, இந்த உற்பத்திச் சாதனங்களின் விலையையும் பொறுத்தது. இந்த அங்கக இயைபை சதவீத அடிப்படையில் பரிசீலிக்க வேண்டு மெனப் பார்த்தோம். $^4/_5$ பங்கு மாறா-மூலதனமாகவும் $^1/_5$ பங்கு மாறும்-மூலதனமாகவும் அமைந்துள்ள மூலதனத்தின் அங்கக இயைபை $80_c + 20_v$ என்னும் சூத்திரத்தால் குறிக்கிறோம். இந்த ஒப்புநோக்கிற்காக உபரி-மதிப்பு வீதத்தை மாறவே மாறாததாய்க் கொள்கிறோம்; அவ்வீதம் 100% என்போம் (இதற்கு பதில் விருப்பம் போல் வேறு எந்த சதவீதத்தை எடுத்துக் கொண்டாலும் ஒன்றுதான்). ஆக, $80_c + 20_v$ என்னும் மூலதனம் $20_s$ உபரி-மதிப்பைத் தருகிறது; இதிலிருந்து பெறப்படும் இலாப வீதம் மொத்த மூலதனத்துக்கு 20% ஆகிறது. உள்ளபடியே உற்பத்திப் பொருளுக்குள்ள மதிப்பின் பருமன் மாறா-மூலதனத்தினது நிலை-மூலதனப் பகுதியின் பருமனையும், அதிலிருந்து தேய்மான உருவில் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்ந்து செல்லும் பகுதியையும் பொறுத்தது. ஆனால் இதற்கும் இலாப வீதத்துக்கும் சற்றும் தொடர்பில்லை, நமது இப்போதைய பகுப்பாய்வில் இது கருத்துக் குரியதும் அல்ல. எனவே, மாறா-மூலதனமானது எந்நிலையிலும் மூலதனங்களின் வருடாந்தர உற்பத்திப் பொருளில் முழுமொத்த மாய்ச் சேர்ந்து விடுகிறது என்று எளிமையின் பொருட்டு அனு மானம் செய்து கொள்வோம். வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில் முதலீடாகும் மூலதனங்கள் அவற்றின் மாறும்-மூலதனக் கூறுகளின்

அளவுக்கேற்ற விகிதத்தில் ஆண்டுதோறும் ஒரே அளவு உபரி-மதிப்பையே ஈடேற்றம் செய்து கொள்கின்றன என்றும் வைத்துக் கொள்வோம். புரள்வுக் காலங்களிலான வேறுபாடு இங்கு தோற்று விக்கக் கூடிய வேறுபாடுகளைக் கவனியாது இப்போதைக்கு ஒதுக்கி விடுவோம். இது பற்றி பிறகு பார்ப்போம்.

வெவ்வேறான ஐந்து உற்பத்திக் கிளைகளை எடுத்துக் கொள் வோம்; ஒவ்வொன்றிலும் முதலீடாகிற மூலதனம் வெவ்வேறு அங்கக இயைபு உடையதெனக் கொள்வோம். அதாவது:

| மூலதனங்கள் | உபரி-மதிப்பு வீதம் | உபரி-மதிப்பு | உற்பத்திப் பொருளின் மதிப்பு | இலாப வீதம் |
|---|---|---|---|---|
| I. $80_c + 20_v$ | 100% | 20 | 120 | 20% |
| II. $70_c + 30_v$ | 100% | 30 | 130 | 30% |
| III. $60_c + 40_v$ | 100% | 40 | 140 | 40% |
| IV. $85_c + 15_v$ | 100% | 15 | 115 | 15% |
| V. $95_c + 5_v$ | 100% | 5 | 105 | 5% |

இங்கே, சுரண்டல்-கடுமையில் வேறுபாடில்லாத வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில், மூலதனங்களின் வெவ்வேறான அங்கக இயைபுக்கேற்பக் கணிசமாய் வேறுபடும் இலாப வீதங்கள் பெறப் படக் காண்கிறோம்.

இந்த ஐந்து உற்பத்திக் கிளைகளிலும் முதலீடாகிற மூலதனங் களின் மொத்தத் தொகை = 500; அவற்றால் உற்பத்தி செய்யப் படும் உபரி-மதிப்பின் மொத்தத் தொகை = 110; அவற்றால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் மொத்த மதிப்பு = 610. நாம் 500ஐ ஒரே மூலதனமாகக் கொண்டு, I முதல் V வரையிலான மூலதனங்களை அதன் அடக்கக் கூறுகளாக மட்டும் கருதுவோ மானால் (ஒரு பஞ்சாலையை உதாரணமாகக் கொண்டால் அதன் பல்வேறு பிரிவுகளிலும், தூசகற்றல், வாரிச் சிக்கெடுத்தல், நூற்பு, நெசவு இவற்றுக்கான பட்டறைகளில் மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்கும் இடையே வெவ்வேறான விகிதங்கள் இருக் கும், முழுத் தொழிற்சாலைக்குமான சராசரி விகிதத்தை இவற்றி லிருந்து கணக்கிட்டு அறிய வேண்டும்), இந்த 500 மூலதனத்தின் சராசரி இயைபு = $390_c + 110_v$, அல்லது சதவீதக் கணக்கில் = = $78_c + 22_v$; 100 மதிப்புள்ள ஒவ்வொரு மூலதனத்தையும் மொத்த மூலதனத்தில் ஐந்தில் ஒரு பங்காக மட்டும் கருதும் போது

அதன் இயைபு $78_c + 22_v$ என்னும் சராசரி இயைபாகவே இருக்கும்; இதே போல் 100 மதிப்புள்ள இந்த ஒவ்வொரு மூலதனத்திற்கும் சராசரி உபரி-மதிப்பு 22 போய்ச் சேரும். சராசரி இலாப வீதம் இவ்விதம் 22% ஆகும்; இந்த 500 மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் மொத்தப் பண்டத்தில் ஒவ்வோர் ஐந்திலொரு பங்கின் விலையும் = 122. மொத்த மூலதன முன்னீட்டில் ஒவ்வோர் ஐந்திலொரு பங்கின் உற்பத்திப் பொருளும் இவ்விதம் 122க்கு விற்கப்படும்.

ஆனால் அடக்க-விலைகள் ஒவ்வொன்றும் = 100 என்பதாக வைத்துக் கொள்வோமானால் முழுக்க முழுக்கத் தவறான முடிவுகளையே அடைய நேரிடும்.

$80_c + 20_v$ என்பதையும், உபரி-மதிப்பு வீதம் 100% என்பதையும் கொண்டு 100 மதிப்புள்ள மூலதனம் I உற்பத்தி செய்திடும் சரக்குகளின் மொத்த மதிப்பு $80_c + 20_v + 20_s = 120$. மாறா-மூலதனம் முழுவதும் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தில் சேருவதாய்க் கொள்கிறோம். சில உற்பத்திக் கிளைகளில் குறிப்பிட்ட சில நிலைமைகளில இப்படி நிகழக் கூடும். ஆனால் $c : v = 4 : 1$ என்னும் விகிதம் நிலவும் போது இப்படி நிகழ வாய்ப்பில்லை. ஆகவே 100 மதிப்புள்ள வெவ்வேறான ஒவ்வொரு மூலதனமும் உற்பத்தி செய்திடும் சரக்குகளின் மதிப்புகளை ஒப்பிடுகையில் நிலை-மூலதனக் கூறும் சுழல்-மூலதனக் கூறும் தொடர்பாக cஇன் இயைபில் நிலவும் வேறுபாட்டுக்கேற்ப இம்மதிப்புகள் வேறுபடுகின்றன என்பதையும், வெவ்வேறு மூலதனங்கள் ஒவ்வொன்றின் நிலை-மூலதனக் கூறுகள் விரைவாகவோ மெதுவாகவோ தேய்மானம் அடைகின்றன, எனவே தமது மதிப்பின் சமமல்லாத அளவுகளை சம கால அளவுகளில் உற்பத்திப் பொருளுக்குப் பெயர்க்கின்றன என்பதையும் மனத்தில் இருத்த வேண்டும். ஆனால் இது இலாப வீதத்தைப் பொறுத்த வரை கருத்துக்குரியது அன்று. $80_c$ ஆனது அதன் மதிப்பாகிய 80ஐ வருடாந்தர உற்பத்திப் பொருளுக்குப் பெயர்த்துக் கொடுத்தாலும் சரி, 50 அல்லது 5 ஐக் கொடுத்தாலும் சரி, எனவே வருடாந்தர உற்பத்தி பண்டம் $80_c + 20_v + 20_s = 120$ ஆனாலும் சரி, $50_c + 20_v + 20_s = 90$, அல்லது $5_c + 20_v + 20_s = 45$ ஆனாலும் சரி, எப்படியானாலும் உற்பத்திப் பொருளின் அடக்க-விலையைக் காட்டிலும் அதன் மதிப்புக்குள்ள மிகை = 20. இந்த எல்லா நேர்வுகளிலுமே இலாப வீதத்தைக் கணக்கிடும் பொருட்டு இந்த 20 ஆனது 100 மூலதனத்தோடு ஒப்பிடப் படுகிறது. ஆகவே மூலதனம் Iஇன் இலாப வீதம் ஒவ்வொரு நேர்விலும் 20% ஆகும். இதை மேலும் தெளிவாக்கும் பொருட்டு, வெவ்வேறான மாறா-மூலதனப் பகுதிகள் இந்த ஐந்து மூலதனங்களின் உற்பத்திப் பண்டங்களது மதிப்பிலும் சேருவதாகக் கொள்வோம். அட்டவணை வருமாறு:

| மூலதனங்கள் | உபரி-மதிப்பு வீதம் | உபரி-மதிப்பு | இலாப வீதம் | பயன் படுத்தப் பட்ட c | சரக்கு களின் மதிப்பு | அடக்க-விலை | |
|---|---|---|---|---|---|---|---|
| I. $80_c + 20_v$ | 100% | 20 | 20% | 50 | 90 | 70 | |
| II. $70_c + 30_v$ | 100% | 30 | 30% | 51 | 111 | 81 | |
| III. $60_c + 40_v$ | 100% | 40 | 40% | 51 | 131 | 91 | |
| IV. $85_c + 15_v$ | 100% | 15 | 15% | 40 | 70 | 55 | |
| V. $95_c + 5_v$ | 100% | 5 | 5% | 10 | 20 | 15 | |
| $390_c + 110_v$ | — | 110 | 110% | — | — | — | மொத்தம் |
| $78_c + 22_v$ | — | 22 | 22% | — | — | — | சராசரி |

I முதல் V வரையிலான மூலதனங்களை மீண்டும் ஒரே மொத்த மூலதனமாகக் கருதுவோமானால், அப்போதும் கூட இந்த ஐந்து மூலதனங்களின் மொத்தத் தொகை $500 = 390_c + 110_v$ என்பதாய் இருக்கக் காண்கிறோம்; அதாவது இப்போதும் அவற்றின் சராசரி இயைபு $= 78_c + 22_v$ என்பதுதான்; இவ்வாறே சராசரி உபரி-மதிப்பும் 22 ஆகவே இருக்கிறது. I முதல் V வரையிலான மூலதனங்களிடையே இந்த உபரி-மதிப்பை சீராகப் பிரிப்போமானால், பின்வரும் சரக்கு-விலைகள் பெறப்படுகின்றன:

| மூலதனங்கள் | உபரி-மதிப்பு | சரக்குகளின் மதிப்பு | சரக்குகளின் அடக்க-விலை | சரக்குகளின் விலை | இலாப வீதம் | மதிப்பிலிருந்து விலை வேறுபடுதல் |
|---|---|---|---|---|---|---|
| I. $80_c + 20_v$ | 20 | 90 | 70 | 92 | 22% | + 2 |
| II. $70_c + 30_v$ | 30 | 111 | 81 | 103 | 22% | − 8 |
| III. $60_c + 40_v$ | 40 | 131 | 91 | 113 | 22% | − 18 |
| IV. $85_c + 15_v$ | 15 | 70 | 55 | 77 | 22% | + 7 |
| V. $95_c + 5_v$ | 5 | 20 | 15 | 37 | 22% | + 17 |

கூட்டிச் சேர்க்குமிடத்து, சரக்குகள் அவற்றின் மதிப்பைக் காட்டிலும் $2 + 7 + 17 = 26$ கூடுதலாகவும், $8 + 18 = 26$ குறைவாகவும்

விலைக்கு விற்கப்படுகின்றன; இவ்வாறு, உபரி-மதிப்பை சீராக வினியோகிப்பதன் மூலம், அதாவது I முதல் V வரையிலான சரக்குகளின் அந்தந்த அடக்க-விலைகளோடும் மூலதன முன்னீடு 100க்கு 22 வீதம் சராசரி இலாபத்தைக் கூட்டிக் கொள்வதன் மூலம், மதிப்பிலிருந்தான விலையின் வேறுபாடுகள் ஒன்றை யொன்று சரிக்கட்டி விடுகின்றன. ஒரு பகுதிச் சரக்குகள் மதிப் புக்கு மேல் விலை வைத்து விற்கப்படும் அதே விகிதத்தில் மறு பகுதிச் சரக்குகள் மதிப்புக்குக் கீழ் விலை வைத்து விற்கப்படுகின் றன. சரக்குகள் இவ்விதம் விலை வைத்து விற்கப்படுவதால்தான், I முதல் V வரையிலான மூலதனங்கள் அங்கக இயைபில் எவ்வளவு தான் வேறுபட்டாலும் அவற்றுக்கான இலாப வீதம் ஒரேசீராய் 22% ஆக இருக்க முடிகிறது. பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் வெவ்வேறான இலாப வீதங்களின் சராசரியை அந்த வெவ்வேறு கிளைகளின் அடக்க-விலைகளோடு கூட்டிச் சேர்ப்பதன் மூலம் பெறப்படும் விலைகள் **உற்பத்தி-விலைகள்** [prices of production] ஆகின்றன. பொது இலாப வீதம் [general rate of profit] நிலவுவது இந்த உற்பத்தி-விலைகளுக்கு முன்தேவையாகும். குறிப்பிட்ட ஒவ் வோர் உற்பத்திக் கிளையையும் அதனளவில் எடுத்துக் கொள்ளும் போது அந்தந்தக் கிளையிலும் இலாப வீதங்கள் ஏற்கெனவே சராசரி வீதங்களாகப் பெயர்க்கப்பட்டிருப்பது பொது இலாப வீதத் துக்கு முன்தேவையாகும். குறிப்பான இந்த இலாப வீதங்கள் ஒவ் வோர் உற்பத்திக் கிளையிலும் $\frac{s}{C}$ ஆகும். இந்நூலின் முதற் பகுதி யில் தெளிவாக்கியது போல் இவ்வீதங்களை சரக்கின் மதிப்பி லிருந்து வகுத்திட வேண்டும். இப்படி வகுக்காமல் இருக்கும் போது பொது இலாப வீதமானது (எனவே சரக்குகளின் உற்பத்தி-விலையும் கூட) பொருளும் தெளிவுமற்ற கருத்தமைவாகவே இருந்து வருகிறது. எனவே, ஒரு சரக்கின் உற்பத்தி-விலை = அதன் அடக்க-விலை + பொது இலாப-வீதத்தின் படி சதவீதக் கணக்கில் அதற்குக் கிடைக்கும் இலாபம். அதாவது = அதன் அடக்க-விலை + சராசரி இலாபம்.

வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில் முதலீடாகிற மூலதனங் களின் அங்கக இயைபுகள் வேறுபடுவதன் விளைவாகவும், எனவே குறிப்பிட்ட பருமனுள்ள மொத்த மூலதனத்தில் மாறும்-மூலதன மாய் அமைந்துள்ள பகுதியின் வெவ்வேறான சதவீதங்களைப் பொறுத்து சம பருமனுள்ள மூலதனங்கள் இயங்க வைக்கும் உழைப் பளவுகள் பெரிதும் வேறுபடுவதன் விளைவாகவும், அவை தன தாக்கும் உபரி-உழைப்பளவுகள் பெரிதும் வேறுபடுகின்றன; அதா வது அவை உற்பத்தி செய்யும் உபரி-மதிப்பளவுகள் பெரிதும் வேறுபடுகின்றன. ஆக, பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் நிலவும் இலாப வீதங்கள் ஆரம்பத்தில் பெரிதும் வேறுபடுகின்றன.

போட்டியானது வெவ்வேறான இந்த இலாப வீதங்களை ஒரே பொது இலாப வீதமாக சமனமாக்குகிறது. பொது இலாப வீதமென்பது வெவ்வேறான இந்த இலாப வீதங்கள் அனைத்திற்கும் சராசரி ஆகும். ஒரு மூலதனத்தின் அங்கக இயைபு என்னவாய் இருந்தாலும் சரி, இந்தப் பொது இலாப வீதத்தின் படி அம்மூலதனத்தின் குறிப் பிட்ட பருமனுக்கு போய்ச் சேருகிற இலாபத்தை சராசரி இலாபம் என்கிறோம். சரக்கின் உற்பத்தி-விலை = சரக்கின் அடக்க-விலை + + முதலீடாகியுள்ள மொத்த மூலதனத்தின் (நுகரப்படுகிற மூல தனம் மட்டுமல்ல) மீதான வருடாந்தர சராசரி இலாபத்தில் மூல தனப் புரள்வு நிலைமைகளைப் பொறுத்து அச்சரக்குக்கு உரிய தாகிற பங்கு. 500 மதிப்புள்ள ஒரு மூலதனத்தை எடுத்துக் கொள் வோம்; இதில் 100 நிலை-மூலதனம் என்போம். 400 சுழல்-மூலதனத்தின் ஒரு புரள்வுக் காலத்தில் இந்த நிலை-மூலதனத்தில் 10% தேய்மானம் அடைவதாகக் கொள்வோம். இந்தப் புரள்வுக் காலத்துக்கு சராசரி இலாபம் 10% என்போம். ஆக, இந்தப் புரள்வின் போது உற்பத்தியாகிற பண்டத்தின் அடக்க-விலையானது தேய்மானத்துக்கு $10_c$ + சுழல்-மூலதனம் 400 $(c + v) = 410$ ஆகும், அதன் உற்பத்தி-விலையானது அடக்க-விலை 410 + 50 (500க்கு 10% இலாபம்) = 460 ஆகும்.

ஆக, பல்வேறு உற்பத்திக் கிளைகளையும் சேர்ந்த முதலாளிகள் தத்தமது சரக்குகளை விற்பதன் மூலம் அவற்றின் உற்பத்தியில் நுகரப்பட்ட மூலதன-மதிப்பை மீட்டுக் கொண்ட போதிலும், இந்தச் சரக்குகளின் உற்பத்தியால் தத்தமது கிளைகளில் உண்டாக்கப் பெறும் உபரி-மதிப்பையும், எனவே இலாபத்தையும் அப்படியே அடைவதில்லை. அவர்கள் அடைவது எல்லாம், உற்பத்திக் கிளை கள் யாவற்றிலுமாகச் சேர்ந்து மொத்தச் சமுதாய மூலதனமானது குறிப்பிட்ட காலத்தில் தோற்றுவிக்கும் மொத்தச் சமுதாய உபரி-மதிப்பு அல்லது இலாபம் சமமாகப் பங்கிடப்படுகையில் சமுதாய மூலதனத்தின் ஒவ்வோர் ஈவுப் பகுதிக்கும் கிடைக்கிற பங்கு மட்டுமே தான். மூலதன முதலீட்டில் ஒவ்வொரு 100உம்— அம்மூலதனத் தின் இயைபு என்னவானாலும்— ஓராண்டு காலத்தில் (அல்லது வேறெந்தக் கால வட்டத்திலும்) பெறுகிற இலாப அளவு மொத்த மூலதனத்தில் nஇல் ஒரு பங்காகிய ஒவ்வொரு 100இன் பங்குக் கும் அதே காலத்தில் கிடைக்கிற இலாப அளவே ஆகும். இலாபத் தைப் பொறுத்த வரை, பல்வேறு முதலாளிகளும் பங்கு நிறுமத்தைச் சேர்ந்த பங்குதாரர்களின் நிலையிலேயே உள்ளனர்; இந்நிறுமத்தில் இலாப ஈவுகள் ஒவ்வொரு 100க்கும் இவ்வளவென்று சமச் சீராய்ப் பங்கிடப்படுகின்றன; ஆகவே, தனிப்பட்ட முதலாளி களைப் பொறுத்த வரை, அவர்கள் ஒவ்வொருவரும் ஒட்டுமொத்தத் தொழில் முனைவில் முதலீடு செய்துள்ள மூலதனத்தின் அளவுக் கேற்பவே, அதாவது மொத்தச் சமுதாயப் பொருளுற்பத்தியில்

அவர் செய்துள்ள முதலீட்டுக்கேற்பவே, அவரது பங்குகளின் எண்ணிக்கைக்கேற்பவே இலாபம் மாறுபடுகிறது. ஆகவே சரக்கு களின் விலையில் எந்தப் பகுதி இந்தச் சரக்குகளின் உற்பத்தியில் நுகரப்பட்ட மூலதனக் கூறுகளை மாற்றீடு செய்கிறதோ, எந்தப் பகுதியைப் பயன்படுத்தி இந்த மூலதன-மதிப்புகளை மீண்டும் வாங்கியாக வேண்டுமோ அந்தப் பகுதி, அதாவது அடக்க-விலை யானது அந்தந்த உற்பத்திக் கிளைக்குள்ளேயும் செய்யப்பட்டுள்ள முதலீட்டையே முழுக்க முழுக்கச் சார்ந்திருக்கிறது. ஆனால் சரக்கு-விலையின் மறு கூறு, அதாவது இந்த அடக்க-விலையோடு சேர்க்கப் படும் இலாபமானது குறிப்பிட்ட உற்பத்திக் கிளையில் குறிப்பிட்ட மூலதனம் குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தி செய்கிற இலாப அளவைச் சார்ந்திருப்பதன்று. சமுதாயப் பொருளுற்பத்தியில் முதலீடாகிற மொத்தச் சமுதாய மூலதனத்தின் ஈவுப் பகுதி என்ற முறையில் ஒவ்வொரு தனிப்பட்ட மூலதனத்துக்கும் எந்தக் குறிப் பிட்ட காலத்துக்குமான சராசரியாக போய்ச் சேரும் இலாபத் திரளையே அது சார்ந்திருக்கிறது.[22]

ஆக, ஒரு முதலாளி தன் சரக்குகளை அவற்றின் உற்பத்தி-விலைக்கு விற்கும் போது, அவற்றின் உற்பத்தியில் நுகரப்பட்ட மூலதனத்தின் மதிப்புக்கேற்ற விகிதத்தில் பணம் எடுப்பதோடு, மொத்தச் சமுதாய மூலதனத்தின் ஈவுப் பகுதி என்ற முறையில் தாம் முன்னீடு செய்த மூலதனத்துக்கேற்ற விகிதத்தில் இலாபமும் அடை கிறார். சரக்கின் அடக்க-விலை அவருக்குப் பிரத்தியேகமானது. ஆனால் அந்த அடக்க-விலையோடு சேர்க்கப்படுகிற இலாபம் மூலதன முதலீட்டில் ஒவ்வொரு 100 அலகுக்குமான எளிய சரா சரியாகுமே தவிர அவரது உற்பத்திக் கிளையைச் சார்ந்ததல்ல.

மேற்கூறிய எடுத்துக்காட்டில் வரும் I முதல் V வரையிலான ஐந்து வெவ்வேறு முதலீடுகளும் ஒருவருக்கே சொந்தமெனக் கொள் வோம். பண்டங்களின் உற்பத்தியில் I முதல் V வரையிலான ஒவ்வொரு கிளையிலும் சரக்கு உற்பத்திக்காகச் செய்த முதலீட்டில் ஒவ்வொரு 100இலும் நுகரப்பட்ட மாறும்-மூலதனம், மாறா-மூல தனத்தின் அளவு தெரிந்திருக்கும். I முதல் V வரையிலான சரக்கு களின் மதிப்பில் ஒரு பகுதியாகிய இதுவே முன்னீடு செய்யப்பட்டு நுகரப்படும் மூலதனப் பகுதியை மாற்றீடு செய்வதற்குத் தேவை யான குறைந்தபட்ச விலை ஆகுமென்பதால் இது அச்சரக்குகளின் விலையில் ஒரு பகுதியாக அமையும் என்பது கண்கூடு. ஆகவே, இந்த அடக்க-விலைகள் I முதல் V வரையிலான பண்டங்களின் ஒவ்வொரு வகைக்கும் வெவ்வேறாய் இருக்கும், உடைமையாள ரால் வெவ்வேறாய்க் குறிக்கப் பெறும். I முதல் V வரையிலான

---

[22] ஷெர்பூலியே [*Richesse ou pauvrete*, பாரிஸ், 1841, பக்கம் 71-72.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.]

மூலதனங்களால் உற்பத்தி செய்யப்படும் வெவ்வேறான உபரி-மதிப்பு அல்லது இலாபத் திரள்களைப் பொறுத்த வரை, முதலாளி யானவர் அவற்றையெல்லாம் தாம் முன்னீடு செய்த மொத்த மூலதனத்தின் மீதான இலாபமாய்க் கருதுவது எளிதே; இதனால் மூலதனத்தில் ஒவ்வொரு 100க்கும் இவற்றின் குறிப்பிட்ட ஈவுப் பகுதி போய்ச் சேரும். ஆகவே I முதல் V வரையிலான முதலீட்டுக் கிளைகள் ஒவ்வொன்றிலும் உற்பத்தியாகும் சரக்குகளின் அடக்க-விலைகள் வேறுபடும்; ஆனால், அவற்றின் விற்பனை-விலையில் எந்தப் பகுதி மூலதனத்தில் ஒவ்வொரு 100க்கும் இவ்வளவென்று சேர்க்கப்படும் இலாபத்திலிருந்து வருவிக்கப்படுகிறதோ அந்தப் பகுதி ஒன்றாகவே இருக்கும். ஆக, I முதல் V வரையிலான சரக்கு களின் மொத்த விலையும் மொத்த மதிப்பும் ஒன்றுதான், அதாவது I முதல் V வரையிலான அடக்க-விலைகளின் கூட்டுத் தொகை + I முதல் V வரையிலான கிளைகளில் உற்பத்தியாகும் உபரி-மதிப்பு கள் அல்லது இலாபங்களின் கூட்டுத் தொகை என்பதற்குச் சமமாயிருக்கும். ஆகவே உண்மையில் அது I முதல் V வரையி லான சரக்குகளில் அடங்கியுள்ள உழைப்பின் — கடந்த காலத்தி யதும் புதிதாய்ச் சேர்க்கப்படுவதுமான உழைப்பின் — மொத்த அள விற்கான பணத் தெரிவிப்பாகவே இருக்கும். இதே போல் சமு தாயம் முழுவதிலும் உற்பத்தியாகிற சரக்குகளின் உற்பத்தி-விலை களது கூட்டுத் தொகை — எல்லா உற்பத்திக் கிளைகளையும் மொத்த மாய் எடுத்துக் கொள்ளும் போது — அவற்றின் மதிப்புகளது கூட்டுத் தொகைக்குச் சமம்.

இதற்கு முரணாய் இருப்பது போல் தெரிகிற விவரம் என்ன வென்றால்: முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் திறனுடை-மூல தனத்தின் கூறுகள் பொதுவாகச் சந்தையில் விலைக்கு வாங்கப் படுகின்றன என்பதும், ஆதலால் அவற்றின் விலைகள் ஏற்கெனவே ஈடேற்றம் பெற்று விட்ட இலாபத்தை உள்ளடக்கியவை, இவ்விதம் ஓர் உற்பத்திக் கிளையின் உற்பத்தி-விலையை அதிலடங்கிய இலாபத் தோடு கூடவே உள்ளடக்கியவை என்பதும், தொழிற் கிளை ஒன்றின் இலாபம் இவ்விதம் மற்றொன்றின் அடக்க-விலையில் சேருகிறது என்பதுமே. ஆனால், ஒரு நாடு முழுவதன் சரக்குகளின் அடக்க-விலைகளது கூட்டுத் தொகையை ஒரு பக்கத்திலும், அதன் உபரி-மதிப்புகள் அல்லது இலாபங்களின் கூட்டுத் தொகையை மறு பக்கத்திலும் இருத்துவோமானால் கணக்கு சரியாகி விடும் என்பது தெளிவு. A என்னும் சரக்கை எடுத்துக் கொள்வோம். அதன் அடக்க-விலையானது B, C, D முதலானவற்றின் இலாபங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கலாம்; இதே போல் B, C, D முதலான வற்றின் அடக்க-விலைகள் Aஇன் இலாபங்களைத் தம்மகத்தே கொண்டிருக்கலாம். இப்படிக் கணக்கிடுவோமானால் Aஇன் இலா பம் அதன் அடக்க-விலையில் சேராது; B, C, D முதலானவற்றின்

இலாபங்களும் அவற்றின் அடக்க-விலைகளில் சேர மாட்டா. இவர்களில் யாரும் தனது அடக்க-விலையில் தனது இலாபத்தை சேர்ப்பதில்லை. உற்பத்திக் கிளைகளின் எண்ணிக்கை n எனக் கொள்வோம்; இவை ஒவ்வொன்றிலும் அடையப் பெறும் இலாபத்தை p என்போம். இவை அனைத்தின் மொத்த அடக்க-விலை, = k – np. கணக்கை முழுமையாகப் பார்க்கும் போது, உற்பத்திக் கிளை ஒன்றின் இலாபங்கள் மற்றொன்றின் அடக்க-விலையில் எந்த அளவுக்குச் சேருகின்றனவோ, இறுதி உற்பத்திப் பொருளின் ஒட்டு மொத்த விலையின் ஆக்கக் கூறுகளாக இந்த இலாபங்கள் அந்த அளவுக்குக் கணக்கில் சேர்க்கப்பட்டு விடுகின்றன; ஆகவே இவை இலாபத்தின் தரப்பில் இரண்டாம் தரம் இடம் பெற முடியாது என்பது தெளிவாகிறது. அப்படி ஏதாவது இத்தரப்பில் இடம் பெறுமானால், குறிப்பிட்ட அந்தச் சரக்கே இறுதி உற்பத்திப் பொருளாய் அமைந்து விடுவதுதான் காரணம். இதனால் அதன் உற்பத்தி-விலை வேறொரு சரக்கின் அடக்க-விலையில் சேராமல் இருந்து விடுகிறது.

ஒரு சரக்கின் அடக்க-விலையில் p என்னும் தொகை—உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்வோரின் இலாபத்தைக் குறிப்பதாகிய இத்தொகை—சேருமானால், இந்த அடக்க-விலையோடு $p_1$ என்னும் இலாபம் சேர்க்கப்படுமானால் மொத்த இலாபம் $P = p + p_1$ அப்படியானால், விலையில் இலாபத்தைக் குறிக்கும் பகுதிகள் அனைத்தையும் நீக்கி விட்டுப் பார்க்கையில் சரக்கின் மொத்த அடக்க-விலையானது அதன் சொந்த அடக்க-விலையிலிருந்து Pஐக் கழித்து வருவதாகும். இந்த அடக்க-விலையை k என்போம். $k + P = k + p + p_1$. முதல் பாகத்தில் [அத்தியாயம் IX, பிரிவு 2, பக்கம் 300-03] உபரி-மதிப்பு குறித்துப் பேசுகையில் பார்த்ததுதான்: எந்த ஒரு மூலதனத்தின் உற்பத்திப் பொருளையும் அதில் ஒரு பகுதி மூலதனத்தை மட்டும மாற்றீடு செய்வதாகவும் மறு பகுதி உபரி-மதிப்பை மட்டும் குறிப்பதாகவும் கருதிப் பரிசீலிக்கலாம். சமுதாயத்தின் மொத்தப் பொருளுற்பத்திக்கு இந்தக் கணக்கீட்டு முறையைப் பிரயோகிக்கையில், சில திருத்தங்கள் செய்தாக வேண்டும். ஏனென்றால் ஒட்டுமொத்தமாகச் சமுதாயத்தை எடுத்துக் கொள்ளும் போது, உதாரணமாய் வெண்சணலின் விலையில் அடங்கியுள்ள இலாபம் இரு முறை சேர்க்கப்படலாகாது; துணியினது விலையின் பகுதியாக ஒரு முறையும், வெண்சணலின் இலாபமாக ஒரு முறையும் சேர்க்கப்படலாகாது.

எடுத்துக்காட்டாக Aஇன் உபரி-மதிப்பு Bஇன் மாறா-மூலதனத்தில் சேருகையில் உபரி-மதிப்புக்கும் இலாபத்துக்கும் வேறுபாடு ஏதும் இல்லை. பார்க்கப் போனால், சரக்குகளின் மதிப்பைப் பொறுத்த வரை அவற்றில் அடங்கியுள்ள உழைப்பு ஊதிய உழைப்பா, ஊதியமிலா உழைப்பா என்பது சற்றும் கருத்துக்குரியதன்று. இதிலிருந்து தெரிவதெல்லாம் B ஆனது Aஇன் உபரி-மதிப்புக்கு

விலை கொடுக்கிறது என்பதே. Aஇன் உபரி-மதிப்பு மொத்தக் கணக்கில் இரு முறை சேர முடியாது.

ஆனால் வேறுபாடு இதுதான்: B மூலதனத்தின் உற்பத்திப் பொருளை எடுத்துக் கொள்வோமானால் அதன் விலை அதன் மதிப்பிலிருந்து வேறுபடுவதற்குக் காரணம், Bஇல் ஈடேற்றம் செய்யப்படும் உபரி-மதிப்பு Bஇன் உற்பத்திப் பொருட்களது விலையில் சேர்க்கப்படும் இலாபத்தைக் காட்டிலும் அதிகமாகவோ குறைவாகவோ இருப்பதே. இது ஒரு புறமிருக்க B மூலதனத்தின் மாறாப் பகுதியாய் அமைந்திடும் சரக்குகளுக்கும், சுற்றடியாகத் தொழிலாளர்களுக்கான வாழ்வுச் சாதனங்கள் என்ற முறையில் அதன் மாறும்-மூலதனத்துக்கும் கூட இதே நிலைமை பொருந்துகிறது. மாறா-மூலதனப் பகுதியை பொறுத்த வரை, அடக்க-விலையையும் உபரி-மதிப்பையும் கூட்டி வருவதற்குச் சமம் ஆகும், எனவே இங்கு அடக்க-விலையையும் இலாபத்தையும் கூட்டி வருவதற்குச் சமம் ஆகும். இந்த இலாபமோ அதனால் குறிக்கப் பெறும் உபரி-மதிப்பை விட அதிகமாகவோ குறைவாகவோ இருக்கலாம். மாறும்-மூலதனத்தைப் பொறுத்த வரை எப்போதுமே சராசரி நாட் கூலியானது தொழிலாளி தமக்கான அவசியப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு உழைத்தாக வேண்டிய அத்தனை மணி நேரத்தில் உற்பத்தியாகும் மதிப்புக்குச் சமமாகிறது. ஆனால் அவசியப் பண்டங்களின் உற்பத்தி-விலைகள் அவற்றின் மதிப்புகளிலிருந்து வேறுபட்டுச் செல்வதால் இந்த மணிக் கணக்கிலிருந்து விலக நேரிடுகிறது. எப்படிப் பார்த்தாலும், எப்போதுமே, இதிலிருந்து உருப்பெறும் நிலைமையில், உபரி-மதிப்பு ஒரு சரக்கில் மிக அதிகமாகவும் மற்றொன்றில் மிகக் குறைவாகவும் சேருகிறது; எனவே சரக்குகளின் உற்பத்தி-விலைகளுக்கும் மதிப்புகளுக்குமான வேறுபாடுகள் தம்மை சரிக்கட்டிக் கொள்கின்றன. முதலாளித்துவப் பொருளுற்பத்தியில், பொது விதியானது சிக்கல் மிகுந்த, தோராயமான வழியில்தான், ஓயவே ஓயாத ஏற்ற இறக்கங்களின் சராசரியாகத்தான், ஒருபோதும் வரையறுத்துச் சொல்ல முடியாத சராசரியாகத்தான் நடப்புக்கு வரும் போக்காய்ச் செயல்படுகிறது.

குறிப்பிட்ட காலத்தில், உதாரணமாய் ஓராண்டு காலத்தில் முதலீடாகிற மூலதனத்தில் ஒவ்வொரு 100க்கும் பெறப்படும் பல்வேறு இலாப வீதங்களின் சராசரியே பொது இலாப வீதம் ஆகிறது. ஆகவே புரள்வுக் காலங்களிலான வேறுபாட்டால் வெவ்வேறு மூலதனங்களுக்கிடையே தோற்றுவிக்கப்படும் வேறுபாடும் மறைந்தொழிகிறது. ஆனால், இந்த வேறுபாடுகள் பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் வெவ்வேறு இலாப வீதங்கள் உருவாவதில் தீர்மானகரமான பங்கு ஆற்றுகின்றன; இந்த வெவ்வேறு இலாப வீதங்களின் சராசரியே பொது இலாப வீதம் ஆகிறது.

சராசரி இலாப வீதம் உருவாவது தொடர்பான முந்தைய எடுத்துக்காட்டில், ஒவ்வொரு உற்பத்திக் கிளையிலும் ஒவ்வொரு மூலதனமும் = 100 எனக் கொண்டோம். சதவீதக் கணக்கில் இலாப வீதங்களிலான வேறுபாடுகளையும், எனவே சம அளவு மூலதனங்கள் உற்பத்தி செய்யும் சரக்குகளின் மதிப்புகளிலான வேறுபாடுகளையும் தெளிவாகப் புலப்படுத்தும் பொருட்டு அப்படிச் செய்தோம். ஆனால் மூலதன இயைபு ஒவ்வோர் உற்பத்திக் கிளையிலும் குறிப்பிட்டதாகையால், ஒவ்வோர் உற்பத்திக் கிளையிலும் உள்ளபடியே எவ்வளவு உபரி-மதிப்பு உற்பத்தியாகிறது என்பது முதலீடாகிற மூலதனங்களின் பருமனைப் பொறுத்தது என்பது கூறாமல் விளங்கும். என்றாலும், குறிப்பிட்ட எந்த உற்பத்திக் கிளையிலும் முதலீடாகிற மூலதனம் 100 ஆனாலும், $m \times 100$ ஆனாலும், $xm \times 100$ ஆனாலும், இலாப **வீதம்** அதனால் பாதிக்கப்படுவதில்லை. மொத்த இலாபம் 100க்கு 10 ஆனாலும் சரி, 10,000க்கு 1,000 ஆனாலும் சரி, இலாப வீதம் 10%தான்.

பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் உற்பத்தியாகிற உபரி-மதிப்பு அல்லது இலாப அளவுகள் மொத்த மூலதனத்தோடு மாறும்-மூலதனத்துக்குள்ள விகிதத்தைப் பொறுத்து ஒன்றுக்கொன்று பெரிதும் வேறுபடுவதால் இலாப வீதங்களும் கிளைக்குக் கிளை வேறுபடுகின்றன. இந்நிலையில் சமுதாய மூலதனத்தில் ஒவ்வொரு 100க்குமான சராசரி இலாபமும், எனவே சராசரி அல்லது பொது இலாப வீதமும் பல்வேறு கிளைகளிலும் முதலீடாகிற மூலதனங்களின் தனிப்பட்ட பருமன்களைப் பொறுத்து பெரிதும் மாறுபடும் என்பது தெளிவு. A, B, C, D என்னும் நான்கு மூலதனங்களை எடுத்துக் கொள்வோம். நான்கிற்குமே உபரி-மதிப்பு வீதம் = 100% என்போம். மொத்த மூலதனத்தில் ஒவ்வொரு 100க்கும் மாறும்-மூலதனம் Aஇல் 25, Bஇல் 40, Cஇல் 15, Dஇல் 10 எனக் கொள்வோம். அப்படியானால், மொத்த மூலதனத்தில் ஒவ்வொரு 100உம் தரக் கூடிய உபரி-மதிப்பு அல்லது இலாபம் Aஇல் 25, Bஇல் 40, Cஇல் 15, Dஇல் 10. மொத்தம் 90. இந்த நான்கு மூலதனங்களும் சம பருமனுள்ளவையாக இருந்தால், சராசரி இலாப வீதம் $\frac{90}{4}$, அதாவது $22\frac{1}{2}\%$ ஆகும்.

மொத்த மூலதனங்கள் பின்வருமாறு இருப்பதாகக் கொள்வோம்: A = 200, B = 300, C = 1,000, D = 4,000. அப்போது, உற்பத்தியாகிற இலாபங்கள் முறையே 50, 120, 150, 400 ஆகும். ஆக, நான்கு மூலதனங்களின் கூட்டுத் தொகையான 5,500க்கு இலாபம் 720, சராசரி இலாப வீதம் $13\frac{1}{11}\%$.

உற்பத்தியாகிற மொத்த மதிப்பளவுகள் முறையே A, B, C, D இவற்றில் முதலீடாகிற மொத்த மூலதனங்களின் வெவ்வேறு பருமன்களுக்கேற்ப வேறுபடுகின்றன. ஆகவே சராசரி இலாப வீதம்

உருவாதல் என்பது பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் வரப் பெறும் வெவ்வேறு இலாப **வீதங்களின்** வெறும் சராசரியைக் கணிப்பதாய் மட்டும் இராமல், அந்தச் சராசரி உருவாவதில் இந்த வெவ்வேறு இலாப வீதங்களுக்குள்ள ஒப்பு எடைத்தரத்தைக் கணிப் பதாகவும் அமைகிறது. ஆனால் இந்த ஒப்பு எடைத்தரமானது அந்தந்தக் கிளையிலும் முதலீடாகிற மூலதனத்தின் ஒப்புப் பருமனைப் பொறுத்தது ஆகும்; அதாவது அந்தந்தக் கிளையிலும் முதலீடாகிற மூலதனத்தால் மொத்தச் சமுதாய மூலதனத்தை வகுத்து வரும் ஈவுத் தொகையைப் பொறுத்தது ஆகும். வேறுபாடு மிகப் பெரியதாகவே இருக்கும்; உயர்வாகவோ குறைவாகவோ இருக்கும் இலாப வீதத் தைப் பெற்றுத் தரும் மூலதனம் மொத்த மூலதனத்தில் பெரிய தொரு பகுதியா, சிறியதொரு பகுதியா என்பதைப் பொறுத்ததாகும் இந்த வேறுபாடு. இந்தச் சராசரியோ மொத்த மூலதனத்தோடு ஒப்பிடுகையில் மாறும்-மூலதனம் குறைவாகவோ அதிகமாகவோ இருக்கும் கிளைகளில் எவ்வளவு மூலதனம் முதலீடாகிறது என் பதைப் பொறுத்தது. 4, 5, 6, 7% ... என்று வெவ்வேறு வட்டி வீதங் களில் வெவ்வேறு மூலதனத் தொகைகளைக் கடன் கொடுத்து வட்டி வசூலிப்பவருக்குக் கிடைக்கும் சராசரி வட்டியைப் போன்றதே இது. சராசரி வட்டி வீதமானது அந்தந்த வட்டி வீதத்திலும் எந்தெந்த அளவு மூலதனத்தைக் கடன் கொடுக்கிறார் என்பதைப் பொறுத்த தாகவே இருக்கும்.

ஆக, பொது இலாப- வீதம் இரு காரணிகளால் நிர்ணயிக்கப் படுகிறது:

1) பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் மூலதனங்களின் அங்கக இயைபும், எனவே தனிப்பட்ட கிளைகளில் பெறப்படும் வெவ் வேறான இலாப வீதங்களும்.

2) இந்த வெவ்வேறு கிளைகளில் மொத்தச் சமுதாய மூலதனத் தின் வினியோகப் பரப்பீடு, அதாவது தனிப்பட்ட ஒவ்வொரு கிளையிலும் அக்கிளைக்குரிய பிரத்தியேக இலாப வீதத்தில் முதலீ டாகிற மூலதனத்தின் ஒப்பீட்டுப் பருமன்; அதாவது மொத்தச் சமுதாய மூலதனத்தின் தனிப்பட்ட ஒவ்வொரு கிளையிலும் அக் கிளைக்குரிய பிரத்தியேக இலாப வீதத்தில் முதலீடாகிற மூலதனத் தின் ஒப்பீட்டுப் பருமன்; அதாவது மொத்தச் சமுதாய மூலதனத் தில் தனிப்பட்ட ஒவ்வோர் உற்பத்திக் கிளையும் எடுத்துக் கொள்ளும் ஒப்பீட்டுப் பங்கு.

முதல் பாகத்திலும் இரண்டாம் பாகத்திலும் சரக்குகளின் **மதிப்பை** மட்டும் பரிசீலித்தோம். இப்போது இந்த மூன்றாம் பாகத்தில் இந்த மதிப்பின் ஒரு பகுதியாக சரக்கின் **அடக்க-விலையைத்** தனியே பிரித்துப் பரிசீலிக்கிறோம். அதே போது இம் மதிப்பை சரக்கின் **உற்பத்தி-விலையாக** உருமாற்றம் பெறுமாறு வளர்த்திடுகிறோம்.

சராசரிச் சமுதாய மூலதனத்தின் இயைபு $80_c + 20_v$ என்றும், வருடாந்தர உபரி-மதிப்பு வீதமான $s' = 100\%$ என்றும் கொள் வோம். மூலதனம் 100க்கு வருட சராசரி இலாபம் 20 ஆகிறது. வருடப் பொது இலாப வீதம் = 20%. மூலதனம் 100 ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யும் சரக்குகளின் அடக்க-விலை k எவ் வளவானாலும், அவற்றின் உற்பத்தி-விலை $k + 20$ ஆகத்தான் இருக்கும். மூலதனத்தின் இயைபு $= (80 - x)_c + (20 + x)_v$ என்பதாக இருக்கும் உற்பத்திக் கிளைகளில், உள்ளபடியே கின்னக்குள் உற் பத்தியாகிற உபரி-மதிப்பு அல்லது வருட இலாபம் $= 20 + x$, அதா வது 20ஐ விட அதிகம்; உற்பத்தியாகிற சரக்குகளின் மதிப்பு = $= 20 + x$, அதாவது $k + 20$ஐ விட அதிகம், அதாவது அவற் றின் உற்பத்தி-விலையை விட அதிகம், மூலதனத்தின் இயைபு = $= (80 + x)_c + (20 - x)_v$ என்பதாக இருக்கும் கிளைகளில், ஓராண்டு காலத்தில் உற்பத்தியாகிற உபரி-மதிப்பு அல்லது இலாபம் $= 20 - x$, அதாவது 20ஐ விடக் குறைவு. எனவே சரக்கு களின் மதிப்பான $k + 20 - x$ உற்பத்தி-விலையான $k + 20$ஐ விடக் குறைவாக இருக்கும். புரள்வுக் காலங்கள் வேறுபடும் சாத்தியப் பாட்டை ஒதுக்கி விட்டுப் பார்த்தால், மூலதன இயைபு $80_c + 20_v$ ஆக இருக்க நேரிடும் கிளைகளில் மட்டுமே சரக்குகளின் உற்பத்தி-விலை அவற்றின் மதிப்புக்குச் சமமாய் இருக்கும்.

குறிப்பிட்ட அளவு உழைப்பினால், அதாவது (வேலை-நாள் குறிப்பிட்டதாய் இருக்க) குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொழி லாளர்களால் எவ்வளவு உற்பத்திச் சாதனங்கள் இயங்க வைக்கப் படுகின்றன என்பதைப் பொறுத்து உழைப்பினது சமுதாய உற் பத்தித் திறனின் பிரத்தியேகமான வளர்ச்சிப் படித்தரம் உற்பத்திக் கிளைக்கு உற்பத்திக் கிளை மாறுபடுகிறது, உயர்வாகவோ குறை வாகவோ இருக்கிறது. ஆகவே இந்தப் படித்தரமானது குறிப்பிட்ட அளவு உற்பத்திச் சாதனங்களுக்கு எவ்வளவு குறைவாக உழைப்பு தேவைப்படுகிறது என்பதைச் சார்ந்துள்ளது. ஆகவே சராசரி சமுதாய மூலதனத்தைக் காட்டிலும் கூடுதலான சதவீதத்தில் மாறா-மூலதனத்தையும் குறைந்த சதவீதத்தில் மாறும்-மூலதனத்தையும் கொண்டு அமைந்துள்ள மூலதனங்களை **உயர்ந்த இயைபுள்ள மூலதனங்கள்** என்றழைக்கிறோம். மாறாக, சராசரி சமுதாய மூல தனத்தைக் காட்டிலும் ஒப்பளவில் குறைவான சதவீதத்தில் மாறா-மூலதனத்தையும் ஒப்பளவில் கூடுதலான சதவீதத்தில் மாறும்-மூலதனத்தையும் கொண்டு அமைந்துள்ள மூலதனங்களை **தாழ்ந்த இயைபுள்ள மூலதனங்கள்** என்றழைக்கிறோம். முடிவில், இயைபில் சராசரி சமுதாய மூலதனத்தை அப்படியே ஒத்திருக்கும் மூலதனங் களை **சராசரி இயைபுள்ள மூலதனங்கள்** என்றழைக்கிறோம். சராசரி சமுதாய மூலதனத்தின் இயைபு சதவீதக் கணக்கில் $80_c +$ $+ 20_v$ ஆக இருக்குமானால், $90_c + 10_v$ ஆகிற மூலதனம் சமுதாய

சராசரியைக் காட்டிலும் உயர்ந்தது ஆகும். $70_c + 30_v$ ஆகிற மூல தனம் சமுதாய சராசரியைக் காட்டிலும் தாழ்ந்தது ஆகும். பொது வாகச் சொன்னால், சராசரி சமுதாய மூலதனத்தின் இயைபு = $= m_c + n_v$ ($m$உம் $n$உம் மாறாப் பருமன்கள், $m + n = 100$) எனக் கொள்வோமானால், $(m + x)_c + (n - x)_v$ என்பது தனியொரு மூல தனம் அல்லது மூலதனத் தொகுதியின் உயர்ந்த இயைபையும் $(m - x)_c + (n + x)_v$ என்பது தாழ்ந்த இயைபையும் குறிப்பனவா கும். ஆண்டுக்கு ஒரு புரள்வு எனக் கொண்டு, சராசரி இலாப வீதம் நிலைபெற்ற பிறகு இந்த மூலதனங்கள் எப்படிச் செயல் படுகின்றன என்பதைப் பின்வரும் அட்டவணையிலிருந்து அறிய லாம். இங்கு மூலதனம் I ஆனது சராசரி இயைபைக் குறிப்பதா கும்; இலாப வீதம் = 20%.

I) $80_c + 20_v + 20_s$. இலாப வீதம் = 20%.
உற்பத்திப் பொருளின் விலை = 120. மதிப்பு = 120.

II) $90_c + 10_v + 10_s$. இலாப வீதம் = 20%.
உற்பத்திப் பொருளின் விலை = 120. மதிப்பு = 110.

III) $70_c + 30_v + 30_s$. இலாப வீதம் = 20%.
உற்பத்திப் பொருளின் விலை = 120. மதிப்பு = 130.

ஆகவே மூலதனம் II உற்பத்தி செய்யும் சரக்குகளின் மதிப்பு அவற்றின் உற்பத்தி-விலையை விடக் குறைவாக இருக்கும், மூல தனம் III உற்பத்தி செய்யும் சரக்குகளின் உற்பத்தி-விலை அவற் றின் மதிப்பை விடக் குறைவாக இருக்கும். மூலதனம் Iஐப் பொறுத்த வரை மட்டுமே, அதாவது மூலதன இயைபு சமுதாய சரா சரியை அப்படியே ஒத்திருக்க நேரிடும் உற்பத்திக் கிளைகளில் மட்டுமே மதிப்பும் உற்பத்தி-விலையும் சமமாகும். இந்த வரையறை களைத் தனிப்பட்ட உதாரணங்களுக்குப் பிரயோகிக்கையில் நாம் மனத்திலிருத்த வேண்டிய ஒன்று என்னவென்றால், தொழில் நுட்ப இயைபிலான வேறுபாட்டின் விளைவாக மட்டுமல்லாமல், மாறா-மூலதனக் கூறுகளின் மதிப்பில் மாற்றம் ஏற்படுகிற காரணத்தாலும் $c$க்கும் $v$க்கும் இடையிலான விகிதம் பொதுச் சராசரியிலிருந்து விலகிச் செல்லலாம் என்பதே.

மேற்கண்ட விளக்கமானது சரக்கின் அடக்க-விலையை நிர்ண யிப்பது தொடர்பான ஆரம்ப அனுமானத்தையும் மாற்றும் படி செய்துள்ளது. சரக்கின் அடக்க-விலை அதன் உற்பத்தியில் நுகரப் பட்ட சரக்குகளின் மதிப்புக்குச் சமம் என்றுதான் ஆரம்பத்தில் வைத்துக் கொண்டோம்: ஆனால் விலை கொடுத்து சரக்கு வாங்கு கிறவருக்கு அச்சரக்கின் உற்பத்தி-விலையே அதன் அடக்க-விலை ஆகிறது, இவ்விதம் அதுவே அடக்க-விலையாக வேறு சரக்குகளின் விலைகளில் சேரலாம். ஒரு சரக்கின் உற்பத்தி-விலை அதன் மதிப்பிலிருந்து வேறுபடலாம் என்பதால், ஏனைய சரக்குகளின்

உற்பத்தி-விலையை உள்ளடக்கிய ஒரு சரக்கின் அடக்க-விலையும் அதன் மொத்த மதிப்பில் எப்பகுதி அதனால் நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்பிலிருந்து கிடைத்ததோ அப்பகுதிக்கு மேலாகவோ கீழாகவோ அமையலாம் என்றாகிறது. அடக்க-விலை எதைக் குறிக்கிறது என்பதில் செய்யப்பட்டுள்ள இந்தத் திருத்தத்தை மறவாதிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட எக்கிளையிலும் சரக்கின் அடக்க-விலையை அதனால் நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்போடு சமப்படுத்தும் போதெல்லாம் தவறு நிகழ வாய்ப்புண்டு என்பதையும் மனத்திற் கொள்ளல் வேண்டும். இப்போது நாம் செய்து கொண்டிருக்கும் பகுப்பாய்வுக்கு இதனை இதற்கு மேல் விவரமாகப் பரிசீலிக்கத் தேவையில்லை. என்றாலும் சரக்கின் அடக்க-விலை எப்போதும் அதன் மதிப்பை விடச் சிறியதே என்ற உண்மையில் இப்போதும் மாற்றமில்லை. எப்படியென்றால், ஒரு சரக்கின் அடக்க-விலை அதனால் நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்பிலிருந்து எவ்வளவுதான் மாறுபட்டாலும் சரி, கடந்த காலத்துக்குரியதான இப்பிழை குறித்து முதலாளிக்குக் கவலை இல்லை. தனியொரு சரக்கின் அடக்க-விலை என்பது முன்கூட்டியே நிர்ணயமான ஒன்று, அது நமது முதலாளியின் உற்பத்தியைச் சார்ந்திருப்பதல்ல. அவரது உற்பத்தியின் விளைவாகிய சரக்கோ உபரி-மதிப்பை, எனவே அதன் அடக்க-விலைக்கு மேல் ஒரு மிகை மதிப்பைத் தன்னுள் கொண்டிருப்பதாகும். மற்றபடி, சரக்கின் அடக்க-விலை அதன் மதிப்பை விடச் சிறியது என்பது சரக்கின் அடக்க-விலை அதன் உற்பத்தி-விலையை விடச் சிறியது என்பதாக நடைமுறையில் மாறிப் போய் விட்டது. மொத்தச் சமுதாய மூலதனத்தை (இதில், உற்பத்தி-விலை = மதிப்பு) எடுத்துக் கொண்டால், இரண்டும் ஒன்றேதான். தனிப்பட்ட உற்பத்திக் கிளைகளுக்கு ஏற்ப மாறுபாடுகள் உண்டென்றாலும், மாறவே மாறாத அடிப்படை உண்மை என்னவென்றால்: மொத்தச் சமுதாய மூலதனத்தை எடுத்துக் கொள்ளும் போது அதனால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் அடக்க-விலை அவற்றின் மதிப்பை விடச் சிறியது. அல்லது உற்பத்தியான மொத்தச் சரக்குத் திரளைக் கருதுகையில் அவற்றின் உற்பத்தி-விலையை விட (இங்கு உற்பத்தி-விலையும் மதிப்பும் ஒன்றுதான்) சிறியது. சரக்கின் அடக்க-விலை என்பது அதில் அடங்கியுள்ள ஊதிய உழைப்பின் அளவை மட்டுமே பொறுத்ததாகும். சரக்கின் மதிப்பு என்பதோ அதில் அடங்கியுள்ள ஊதிய உழைப்பு, ஊதியமிலா உழைப்பு இரண்டும் சேர்ந்த மொத்த உழைப்பளவைப் பொறுத்ததாகும். உற்பத்தி-விலை என்பது ஊதிய உழைப்பும் ஊதியமிலா உழைப்பில் குறிப்பிட்ட அளவும் சேர்ந்த கூட்டுத் தொகை ஆகும்; ஊதியமிலா உழைப்பில் எவ்வளவு சேர்க்கப்பட வேண்டும் என்பது குறிப்பிட்ட ஒவ்வோர் உற்பத்திக் கிளைக்கும் அக்கிளைக்குக் கட்டுப்படாத நிலைமைகளால் நிர்ணயிக்கப்படுகிறது.

சரக்கின் உற்பத்தி-விலை $= k + p$, அதாவது அதன் அடக்க-விலை + இலாபம் என்னும் சூத்திரத்தை இப்போது இன்னுங் கூட துல்லியமாய் வகுத்துரைக்கலாம். $p = kp'$ ($p'$ என்பது பொது இலாப வீதத்தைக் குறிக்கும்) ஆதலால் உற்பத்தி-விலை $= k + kp'$. $k = 300$, $p' = 15\%$ என்றால், உற்பத்தி-விலை $k + kp' = 300 + 300 \times \frac{15}{100} = 345$.

எந்தத் தனிப்பட்ட உற்பத்திக் கிளையிலும் சரக்குகளின் உற்பத்தி-விலையில் பருமன் மாற்றங்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு:

1) சரக்குகளின் மதிப்பு மாறாதிருக்க (அதாவது அவற்றின் உற்பத்தியில் இறுகிய உழைப்பும் உயிருள்ள உழைப்பும் முன்பு நுகரப்பட்ட அதே அளவுகளில் இப்போதும் நுகரப்படும் நிலையில்) அந்தத் தனிப்பட்ட உற்பத்திக் கிளையைச் சாராமலே பொது இலாப வீதம் மாறிப் போதல்.

2) பொது இலாப வீதம் மாறாதிருக்க, தொழில் நுட்ப மாற்றங்களின் விளைவாகவோ, அந்தத் தனிப்பட்ட கிளைக்கான மாறா-மூலதனக் கூறுகளாய் அமையும் சரக்குகளின் மதிப்பு மாறுவதன் விளைவாகவோ அக்கிளையில் மதிப்பு மாற்றம் ஏற்படுதல்.

3) முடிவில், இந்த இரு நிலைமைகளும் சேர்ந்து செயல் புரிதல்.

தனிப்பட்ட உற்பத்திக் கிளைகளுக்குள் உள்ளபடியான இலாப வீதங்களில் ஓயாமல் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கத்தான் போகிறோம். இந்த மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த போதிலும், பொது இலாப வீதத்தில் மெய்யாகவே ஏற்படுகிற ஒரு மாற்றம்—பொருளாதாரத் துறையில் அசாதாரண நிகழ்ச்சிகள் நடைபெறுவதால் விதிவிலக்காக ஏற்படும் மாற்றமல்ல—சரமாரியாகத் தொடர்ந்து நிகழும் நெடுங்காலத்திய அலைவுகளின் இறுதி விளைவே ஆகும். இந்த அலைவுகள் உறுதிப்பட்டு ஒன்றையொன்று நேர்செய்து பொது இலாப வீதத்தில் மாற்றம் உண்டாக்குவதற்குக் கணிசமாய்க் காலம் தேவைப்படுகிறது. ஆகவே, அவ்வளவாய் நீண்டு செல்லாத குறுங் காலவரைகள் யாவற்றிலும் (சந்தை-விலையின் அலைவுகளை ஒரு புறம் ஒதுக்குவோமாயின்) உற்பத்தி-விலையில் ஏற்படும் மாற்றமானது எடுத்த எடுப்பிலேயே எப்போதும் சரக்கின் மதிப்பில் உள்ளபடியே ஏற்படும் மாற்றத்தின் விளைவாய், அதாவது சரக்கின் உற்பத்திக்குத் தேவைப்படும் உழைப்பு நேரத்தின் மொத்த அளவில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாய் எழுவதே ஆகும். மதிப்புகளின் பணத் தெரிவிப்பில் மட்டும் ஏற்படும் மாற்றங்களை இங்கு நாம் கருத்தில் கொள்ளவில்லைதான்.[23]

---

23 கார்பெட் [**தனியாட்களது செல்வத்தின் காரணங்கள், முறைகள் பற்றிய ஆய்வு, லண்டன், 1841.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்**], பக்கம் 174.

மறு புறம், மொத்தச் சமுதாய மூலதனத்தின் கண்ணோட்டத்தில், அதனால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் மதிப்பு (பணமாகத் தெரிவித்தால், அவற்றின் விலை) = மாறா-மூலதனத்தின் மதிப்பு + மாறும்-மூலதனத்தின் மதிப்பு + உபரி-மதிப்பு என்பது தெளிவாய்த் தெரிகிறது. உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமை மாறாதிருப்பதாகக் கொண்டால், மாறா-மூலதனத்தின் மதிப்பிலோ மாறும்-மூலதனத்தின் மதிப்பிலோ இரண்டின் மதிப்பிலுமோ மாற்றம் ஏற்படா விட்டால் உபரி-மதிப்புத் திரள் மாறாதிருக்கும் வரை இலாப வீதம் மாற முடியாது; மாறா-மூலதனத்தின் மதிப்பிலோ மாறும்-மூலதனத்தின் மதிப்பிலோ இரண்டின் மதிப்பிலுமோ மாற்றம் ஏற்பட்டால், C மாறுகிறது; பொது இலாப வீதத்தைக் குறிப்பதான $\frac{s}{C}$ உம் இதனால் மாறுகிறது. ஆகவே, ஒவ்வொரு நேர்விலும் பொர்து இலாப வீதத்தில் ஏற்படும் மாற்றமானது மாறா-மூலதனத்தின் கூறுகளாகவோ மாறும்-மூலதனத்தின் கூறுகளாகவோ இரண்டின் கூறுகளுமாகவோ அமைந்திடும் சரக்குகளின் மதிப்பிலான மாற்றத்தைக் குறிக்கிறது.

அல்லது, சரக்குகளின் மதிப்பு மாறாதிருக்க, உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமையில் மாற்றம் ஏற்படுமானால் பொது இலாப வீதம் மாறலாம்.

அல்லது, உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமை மாறாதிருக்க, உழைப்பு நிகழ்முறையில் ஏற்படும் தொழில் நுட்ப மாற்றங்களின் பயனாய் மாறா-மூலதனத்தோடு ஒப்பிடுகையில் வேலைக்கமர்த்தப் படும் உழைப்பளவில் மாற்றம் ஏற்படுமானால் பொது இலாப வீதம் மாறலாம். ஆனால், எப்போதுமே இத்தகைய தொழில் நுட்ப மாற்றங்கள் சரக்குகளின் மதிப்பில் ஏற்படும் மாற்றமாக வெளிப் படுகிறவையாகவும், அம்மாற்றத்தைக் கையோடு கொண்டுவருகிறவையாகவும் இருத்தல் வேண்டும்.

உபரி-மதிப்பும் இலாபமும் பருமன் அளவைப் பொறுத்த வரை முற்றிலும் ஒன்றேதான் என்பதை முதல் பகுதியில் பார்த்தோம். ஆனால் இலாப வீதமானது தொடக்க முதலாகவே உபரி-மதிப்பு வீதத்திலிருந்து முற்றிலும் வேறானதாகவே விளங்கியது. இலாப வீதம் வேறொரு கணிப்பு வடிவமாகவே முதற் பார்வைக்குத் தோன்றிய போதிலும், ஆரம்ப முதலாகவே உபரி-மதிப்பின் மெய்யான தோற்றுவாயை வெளியே தெரியாத படி மறைத்து மூடுமந்திரமாக்குவதற்கே பயன்படுகிறது. உபரி-மதிப்பு வீதம் மாறாதிருக்கும் போதே இலாப வீதம் உயரவோ குறையவோ செய்யலாம், இலாப வீதம் மாறாதிருக்கும் போதே உபரி-மதிப்பு வீதம் உயரவோ குறையவோ செய்யலாம் என்பதாலும், முதலாளி நடைமுறையளவில்

முழுக்க முழுக்க இலாப வீதத்திலேயே கருத்தாய் இருக்கிறார் என்பதாலுமே இப்படி நிகழ்கிறது. என்றாலும் பருமனளவிலான வேறுபாடு உபரி-மதிப்பு வீதத்துக்கும் இலாப வீதத்துக்குமிடையே இருக்கிறதேயன்றி உபரி-மதிப்புக்கும் இலாபத்துக்குமிடையே இல்லை. உபரி-மதிப்பை மொத்த மூலதனத்தோடு ஒப்பிட்டே இலாப வீதம் அளவிடப்படுவதாலும், மொத்த மூலதனமே இலாப வீதத்தின் அளவை-நியமமாய்க் கொள்ளப்படுவதாலும், உபரி-மதிப்பே மொத்த மூலதனத்திலிருந்து உதித்தெழுவதாக நினைக்கத் தோன்றுகிறது. அதாவது மூலதனத்தின் எல்லாக் கூறுகளும் ஒருங்கே உபரி-மதிப்புக்கு மூலாதாரம் ஆவதாக நினைக்கத் தோன்றுகிறது. இவ்விதம் இலாபம் என்னும் கருத்தோட்டத்தில் மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்கும் இடையிலான அங்கக வேறுபாடு இல்லாதொழிக்கப்படுகிறது. இலாபமாக மாறுவேடம் பூண்டு விடும் உபரி-மதிப்பு தனது பூர்வோத்திரத்தையே நிராகரித்து, தனது அடிப்படை இயல்பையே இழந்து, இன்னதென இனங்காண முடியாததாகி விடுகிறது. இருப்பினும் இது வரை இலாபத்துக்கும் உபரி-மதிப்புக்கும் இடையிலான வேறுபாடு பண்பு மாற்றத்தை மட்டுமே, வடிவ மாற்றத்தை மட்டுமே குறித்தது. மாற்றத்தின் இந்த முதற்கட்டத்தில் உபரி-மதிப்புக்கும் இலாபத்துக்குமிடையே பருமனில் உள்ளபடியே எந்த வேறுபாடும் இருக்கவில்லை; இலாப வீதத்துக்கும் உபரி-மதிப்பு வீதத்துக்கும் இடையேதான் பருமனில் வேறுபாடு இருந்தது.

ஆனால், ஒரு பொது இலாப வீதம் நிலைபெற்றவுடனே, எனவே பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் முதலீடாகிற மூலதனப் பருமனுக்கொப்ப சராசரி இலாபம் நிலைபெற்றவுடனே நிலைமை மாறிப் போகிறது.

இந்நிலையில், தனிப்பட்ட உற்பத்திக் கிளை ஒன்றில் உள்ளபடியே உற்பத்தியாகிற உபரி-மதிப்பும், எனவே இலாபமும் சரக்கின் விற்பனை-விலையில் அடங்கியுள்ள இலாபத்தோடு ஒத்து அமையுமானால் அது ஒரு தற்செயல் நிகழ்வாகவே இருக்கும். பொதுவாகச் சொன்னால், உபரி-மதிப்பு வீதமும் இலாப வீதமும் மட்டுமல்ல, உபரி-மதிப்பும் இலாபமும் கூட அப்போது வெவ்வேறு பருமனளவுகள் பெறுகின்றன. சுரண்டலின் கடுமை குறிப்பிட்டதாய் இருக்க, தனிப்பட்ட உற்பத்திக் கிளை ஒன்றில் எவ்வளவு உபரி-மதிப்பு உற்பத்தி ஆகிறது என்பது குறிப்பிட்ட உற்பத்திக் கிளையை சேர்ந்த தனிப்பட்ட முதலாளியைக் காட்டிலும் சமுதாய மூலதனத்தின் ஒட்டுமொத்த சராசரி இலாபத்திற்கும் இவ்விதம் பொதுவாக முதலாளி வர்க்கத்துக்கும் கூடுதல் முக்கியத்துவம் உடையதாகும். தனிப்பட்ட முதலாளியைப் பொறுத்த வரை அதற்குள்ள முக்கியத்துவமெல்லாம் அவரது உற்பத்திக் கிளையில் உற்பத்தியாகிற உபரி-மதிப்பின் அளவும் கூட சராசரி இலாபத்தை

நிர்ணயிப்பதில் பங்கு வகிக்கிறது என்பது மட்டுமே.[24] ஆனால் இந்நிகழ்முறை அவரது முதுகுக்குப் பின்னால் நடைபெறுவதால், அவர் அதைப் பார்ப்பதுமில்லை, புரிந்து கொள்வதுமில்லை. சொல்லப் போனால் அதில் அவருக்கு அக்கறையுமில்லை. பல் வேறு உற்பத்திக் கிளைகளிலும் இலாபத்துக்கும் உபரி-மதிப்புக்கும் இடையே — இலாப வீதத்துக்கும் உபரி-மதிப்பு வீதத்துக்கும் இடையே மட்டுமல்ல — உள்ளபடியே நிலவும் பருமன் வேறுபாடு, இலாபத் தின் உண்மைத் தன்மையையும் தோற்றுவாயையும் இப்போது முற்றாகவே மறைத்து விடுகிறது; இந்த அமிசத்தில் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதில் தனி அக்கறை கொண்டுள்ள முதலாளி யிடம் மட்டுமல்லாமல், உழைக்கும் தொழிலாளியிடமும் மறைத்து விடுகிறது. மதிப்புகள் உற்பத்தி-விலைகளாக உருமாறுவது மதிப்பை நிர்ணயிப்பதற்கான அடிப்படையையே மூடிமறைக்கப் பயன்படு கிறது. முடிவில், உபரி-மதிப்பு இலாபமாக உருமாறுவதே சரக்கின் மதிப்பில் இலாபமாய் அமைந்திடும் பகுதியை அதன் அடக்க-விலையாய் அமைந்திடும் பகுதியிலிருந்து வேறுபடுத்திக் காட்டி விடு கிறது என்பதால், மதிப்பென்னும் கருத்துருவம் முதலாளிக்குப் பிடி படாமற் போவது இயல்புதான்; எப்படியென்றால் சரக்கில் சேர்ந் துள்ள மொத்த உழைப்பில் அவர் ஒரு பகுதியை மட்டுமே — உயி ருள்ள சாதனங்களானாலும் உயிரற்றவையானாலும் உற்பத்திச் சாதனங்களாக அவர் விலை கொடுத்து வாங்கியுள்ள உழைப்பை மட்டுமே — பார்க்கிறார். இதனால் இலாபமானது சரக்கின் உள் ளார்ந்த மதிப்புக்கு அப்பாற்பட்ட ஒன்றாக அவருக்குத் தெரிகிறது. அவரது குறிப்பிட்ட உற்பத்திக் கிளையின் நோக்குநிலையிலிருந்து பார்க்கும் போது, அடக்க-விலையோடு சேர்க்கப்படும் இலாப மானது அவரது கிளைக்குள்ளேயே நடைபெறும் மதிப்பாக்கத்தின் எல்லைகளுக்கு உட்பட்டு நிர்ணயிக்கப்படாமல், முற்ற முழுக்க அதற்குப் புறத்திருந்தான தாக்கங்களால் நிர்ணயிக்கப்படுவதால் மேற்கூறிய கருத்து முழு அளவுக்கு உறுதியடைந்து, வலுப்பெற்று, கெட்டியாய் இறுகி விடுகிறது.

இந்த உள்ளார்ந்த தொடர்பு இங்குதான் முதன்முதலாய் வெளிப் படுகிறது. உபரி-மதிப்புக்கும் இலாபத்திற்கும் இடையே, உபரி-மதிப்பு வீதத்திற்கும் இலாப வீதத்திற்கும் இடையே நிலவும் வேறு பாடுகளை அரசியல் பொருளாதாரமானது இது வரை வலுவந்த மாய் ஒதுக்கி விட்டுப் பரிசீலித்தது (அடுத்து வருவதிலும் நான்காம் பாகத்திலும் இது நமக்குத் தெரிய வரும்), இவ்விதம்தான் அரசியல் பொருளாதாரம் தொடர்ந்து மதிப்பு நிர்ணயிப்பைத் தனக்குரிய ஓர்

---

24 எங்கெல்ஸ் குறிப்பு. — கூலிக் குறைப்புகள், ஏகபோக விலைகள் முதலான வழி களில் தற்காலிக மிகை இலாபம் சம்பாதிக்கும் சாத்தியப்பாட்டை ஒதுக்கி விட்டுதான் இப்படிச் சொல்கிறோம்.

அடிப்படையாகக் கொள்ள முடிந்தது. புலப்பாட்டு அளவில் கண்ணை உறுத்துகிற இவ்வேறுபாடுகளை இப்படி ஒதுக்கி விட்டுப் பரிசீலிக்க விரும்பாமல் அவற்றையே விடாப்பிடியாய்த் தொடர்ந்து பற்றிக் கொள்ள முற்பட்ட போதெல்லாம், அரசியல் பொருளாதாரம் இந்த மதிப்பு நிர்ணயிப்பையும், அத்துடன் விஞ்ஞான அணுகுமுறைக்கான அடிப்படையையும் கூட கைவிட நேர்ந்தது. தத்துவவாதிகளின் இந்தக் குழப்பம் செயல்துறை முதலாளியின் அவலமான ஏலாமையைத்தான் புலப்படுத்துகிறது. போட்டாபோட்டியானது முதலாளியின் கண்ணை மறைத்து விடுகிறது. இதனால் அவர் இந்நிகழ்முறையின் புலப்பாடுகளை ஊடுருவிச் சென்று, இதன் உட்சாரத்தையும் உள்ளமைப்பையும் கண்டறிய முடியாதவராகிறார்.

முதல் பகுதியில் இலாப வீதத்தின் உயர்வும் வீழ்ச்சியும் தொடர்பாக வளர்த்தெடுத்த விதிகளெல்லாம் உண்மையில் இரட்டைப் பொருள் கொண்டவை; எப்படியென்றால்:

1) ஒரு புறம், அவை பொது இலாப வீதம் தொடர்பான விதிகளாகும். இலாப வீதம் உயரவோ வீழவோ வழிசெய்கிற பல்வேறு காரணங்களையும் கருத்தில் கொள்ளும் போது, மேலே கூறியவற்றையெல்லாம் வைத்துப் பார்த்தால் பொது இலாப வீதம் நாளுக்கு நாள் மாறியாக வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். ஆனால் ஓர் உற்பத்திக் கிளையின் அசைவியக்கத்தை இன்னொன்றின் அசைவியக்கம் சரிக்கட்டி விடுவதால் அவற்றின் விளைவுகள் ஒன்றுக்கொன்று எதிர்ச் செயல் புரிந்து ஒன்றையொன்று முடங்கச் செய்கின்றன. இந்த ஏற்ற இறக்கங்கள் முடிவில் எப்பக்கம் நோக்கித் திரும்புகின்றன என்பதைப் பிறகு பார்ப்போம். ஆனால் இந்நிகழ்முறை மெதுவாய் நிகழ்வது. தனிப்பட்ட உற்பத்திக் கிளைகளில் ஏற்ற இறக்கங்கள் திடுமென ஏற்படுவதும், பலதரப்பட்டவையாய் இருப்பதும், வெவ்வேறு கால்நீட்சி உடையவையாய் இருப்பதும் அவை காலத்தில் முன்பின்னாக வரும் அதே வரிசையில் அமைந்து ஒன்றை ஒன்று ஈடு செய்துகொள்வதற்கு வழி செய்கின்றன; விலை வீழ்ச்சியைத் தொடர்ந்து விலை உயர்வும் விலை உயர்வைத் தொடர்ந்து விலை வீழ்ச்சியும் ஏற்படுமாறு செய்கின்றன. இதனால் இந்த ஏற்ற இறக்கங்கள் தனிப்பட்ட கிளைகளுக்கு உட்பட்டவையாகவே இருந்து விடுகின்றன. முடிவில், அந்தந்தக் கிளையிலுமான பல்வேறு ஏற்ற இறக்கங்களும் ஒன்றை ஒன்று சரிக்கட்டிக் கொள்கின்றன. தனிப்பட்ட ஒவ்வோர் உற்பத்திக் கிளையிலும் மாற்றங்கள், அதாவது பொது இலாப வீதத்திலிருந்து வேறுபட்டு விலகிச் செல்லும் நிகழ்வுகள் ஏற்படவே செய்கின்றன. இந்த விலகல்கள் ஒரு புறம் குறிப்பிட்ட காலத்தில் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்கின்றன; இதனால் பொது இலாப வீதத்தின் மீது எவ்விதத் தாக்கமும் அற்றவை ஆகின்றன; மறு புறம் ஒருங்கே நிகழும்

அந்தந்தக் கிளையிலுமான ஏனைய ஏற்ற இறக்கங்களால் சரிக் கட்டப்பட்டு விடுவதால் இம்மாற்றங்கள் பொது இலாப வீதத்தின் மீது தாக்கம் செலுத்துவதில்லை. பொது இலாப வீதமானது ஒவ் வொரு கிளையிலும் சராசரி இலாப வீதத்தால் மட்டுமல்லாமல் பல்வேறு தனிப்பட்ட கிளைகளிடையிலும் மொத்தச் சமுதாய மூல தனத்தின் வினியோகப் பரவலாலும் நிர்ணயிக்கப்படுவதாகும்; மற்றும் இந்தப் பரவல் ஓயாமல் மாறிக் கொண்டிருப்பது. இதுவும் பொது இலாப வீதம் ஓயாமல் மாறுவதற்கான காரணங்களில் ஒன்றாகிறது. ஆனால் இந்த அசைவியக்கம், ஓய்வு ஒழிவின்றி* நடைபெறுவதாகவும் பன்முகப்பட்டதாகவும் இருப்பதால் இக்காரண மானது பெரும்பாலும் செயலற்றதாகிப் போகிறது.

2) ஒவ்வோர் உற்பத்திக் கிளைக்குள்ளேயும் அக்கிளையின் இலாப வீதம் நீண்ட காலமோ குறுகிய காலமோ ஏறியிறங்கிக் கொண்டிருப்பதற்கு இடமுள்ளது. அதற்குப் பிறகுதான், இந்த மாற்றம்—ஏற்றமானாலும் சரி, இறக்கமானாலும் சரி—போதிய அளவு நிலைப்பட்டு பொது இலாப வீதத்தில் விளைவு ஏற்படுத்த வும், இவ்விதம் கிளையின் வரம்புக்கு அப்பாற்பட்ட முக்கியத்துவம் பெறவும் முடிகிறது. ஆகவே, இப்பாகத்தின் முதற்பகுதியில் வளர்த் தெடுத்த இலாப வீத விதிகள் இந்த இட வகை, கால வகை எல்லைகளுக்குள்ளும் தொடர்ந்து செல்லுபடியாகின்றன.

உபரி-மதிப்பு இலாபமாக முதலில் உருமாறுவது தொடர்பான தத்துவக் கண்ணோட்டம், அதாவது மூலதனத்தின் ஒவ்வொரு பகுதியும் சமச்சீரான முறையில் இலாபம் கொடுக்கிறது என்னும் கருத்து[25] ஒரு நடைமுறை உண்மையை வெளியிடுவதாகும். தொழில் துறை மூலதனம் ஒன்றின் இயைபு எப்படி அமைந்த போதிலும், அது கால் பங்கு இறுகிய உழைப்பையும் முக்கால் பங்கு உயிருள்ள உழைப்பையும் இயங்க வைப்பதானாலும் சரி, முக்கால் பங்கு இறுகிய உழைப்பையும் கால் பங்கு உயிருள்ள உழைப்பையும் இயங்க வைப்பதானாலும் சரி, இவ்விதம் முதல் நேர்வில் இரண் டாம் நேர்வைப் போல் மும்மடங்கு உபரி-உழைப்பு உறிஞ்சப் பட்டாலும், அதாவது மும்மடங்கு உபரி-மதிப்பு உற்பத்தி செய்யப் பட்டாலும், கிடைக்கிற இலாபம் இரு நேர்வுகளிலும் ஒன்றுதான்—உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமையில் வேறுபாடு இல்லை யெனக் கொண்டும் தனிப்பட்ட வேறுபாடுகளைக் கவனியாது ஒதுக்கி யும் இப்படிச் சொல்கிறோம். உற்பத்திக் கிளை முழுவதற்குமான

* ''விட்டு விட்டு'' [Unterbrochenheit] என்று மூலத்தில் காணப்படுகிறது. மார்க்சின் கையெழுத்துப் பிரதியைப் பார்த்து அதன் படி திருத்தம் செய்யப்படுகிறது.— ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

[25] மால்தஸ் [அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், 2ஆம் பதிப்பு, லண்டன், 1836, பக்கம் 268.— ஆங்கிலப் பதிப்பாசிரியர்].

சராசரி இயைபையே நாம் கருத்திற் கொண்டிருப்பதால் இந்தத் தனிப்பட்ட வேறுபாடுகள் மறைந்து விடுகின்றன என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். தனிப்பட்ட முதலாளியின் (அல்லது ஒவ்வொரு தனிப்பட்ட உற்பத்திக் கிளையையும் சேர்ந்த முதலாளிகள் அனைவரின்) பார்வை குறுகிய ஒன்று. வேலைக்குத் தம்மால் அமர்த்தப்படும் அல்லது தமது தொழிற் கிளையில் அமர்த் தப்படும் உழைப்பிலிருந்து மட்டும் வருவதல்ல தமது இலாபம் என்று அவர் நினைப்பது சரிதான். அவரது சராசரி இலாபத்தைப் பொறுத்த வரை இது சரிதான். மொத்தச் சமுதாய மூலதனம், அதாவது நமது முதலாளியின் முதலாளித்துவக் கூட்டாளிகள் அனைவரும் மொத்தமாய் உழைப்பைச் சுரண்டுவது எந்த அளவுக்கு இந்த இலாபத்திற்குக் காரணமாகிறது என்பது — இந்த இடையுறவு — அவருக்கு விளங்கவே விளங்காத மருமமாகும். முதலாளித்துவத் தத்துவவாதிகள், அரசியல் பொருளாதார அறிஞர்கள் எவரும் இது வரை இந்த மருமத்தைத் துலக்கிவிடவில்லை. உழைப்பை மிச்சம் செய்வதும் — குறிப்பிட்ட பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு அவசிய மான உழைப்பை மட்டுமல்லாமல் வேலைக்கமர்த்தப்படும் தொழி லாளர் தொகையையும் மிச்சம் செய்வதும் — இறுகிய 'உழைப்பை (மாறா-மூலதனத்தை) இன்னுமதிகமாய்ப் பயன்படுத்துவதும் மிகச் சரியான பொருளாதார நடவடிக்கைகளாகத் தோன்றுகின்றன; இவை பொது இலாப வீதத்தையும் சராசரி இலாபத்தையும் சிறிதும் பாதிப்பதில்லை எனத் தோன்றுகிறது. உற்பத்திக்குத் தேவைப்படும் உழைப்பளவிலான குறைப்பு இலாபத்தைப் பாதிப்பதில்லை எனத் தோன்றுவதோடு, குறிப்பிட்ட நிலைமைகளில் தனிப்பட்ட முத லாளிக்காவது இலாபத்தைக் கூடுதலாக்கும் நேரடி ஆதாரமாகவும் தோன்றுகிறது என்னும் போது, உயிருள்ள உழைப்பு எப்படி இலாபத்தின் ஒரே ஆதாரமாய் இருக்கக் கூடும்?

குறிப்பிட்ட உற்பத்திக் கிளையில், அடக்க-விலையில் மாறா-மூலதனத்தின் மதிப்பைக் குறிக்கும் பகுதி அதிகரிக்கவோ குறை யவோ செய்தால் இந்தப் பகுதியானது சுற்றோட்டத்திலிருந்து வந்து, விரிந்தோ குறுகியோ தொடக்கத்திலிருந்தே சரக்கின் உற்பத்தி நிகழ்முறைக்குள் செல்கிறது. மறு புறம், வேலைக்கு அமர்த்தப்படும் தொழிலாளர்கள் குறிப்பிட்ட கால அளவில் முன்னைக் காட்டிலும் அதிகமாகவோ குறைவாகவோ உற்பத்தி செய்வார்களானால், அதாவது தொழிலாளர் எண்ணிக்கை மாறாதிருக்கும் போதே குறிப்பிட்ட அளவு சரக்குகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பளவு மாறுமானால், அடக்க-விலையில் மாறும்-மூலதனத் தைக் குறிக்கும் பகுதி மாறாதிருக்கலாம், அதாவது மொத்த உற்பத்தி யின் அடக்க-விலையில் அது சேர்ப்பிக்கும் பருமன் மாறாதிருக்கலாம். ஆனால் மொத்த உற்பத்தியின் அங்கங்களாகிய தனிப்பட்ட சரக்கு கள் ஒவ்வொன்றும் அதன் பங்காகப் பெறும் உழைப்பு (ஊதிய

உழைப்பும், எனவே ஊதியமிலா உழைப்பும் கூட) அதிகரிக்கவோ குறையவோ செய்கிறது; ஆகவே இவ்வுழைப்புக்கான முதலீட்டில், அதாவது கூலியில் ஒவ்வொரு சரக்கும் அதன் பங்காகப் பெறுவதும் அதிகரிக்கவோ குறையவோ செய்கிறது. முதலாளி கொடுக்கும் மொத்தக் கூலி மாறாதுள்ளது; ஆனால் ஒவ்வோர் உருப்படிக்கும் இவ்வளவு என்று கணக்கிடும் போது கூலி வேறுபடுகிறது. சரக்கினது அடக்க-விலையின் இந்தப் பகுதியில் இவ்விதம் மாற்றம் ஏற்படுகிறது. ஆனால் இந்த மதிப்பு மாற்றங்களின் விளைவாக—சரக்கின் மதிப்பிலோ அதன் அடிக்கூறுகளின் மதிப்பிலோ ஏற்படும் மாற்றங்களின் விளைவாக—தனியொரு சரக்கின் அடக்க-விலை (அல்லது, குறிப்பிட்ட பருமனுள்ள மூலதனம் உற்பத்தி செய்திடும் சரக்குத் திரளின் அடக்க-விலை) ஏறினாலும் இறங்கினாலும், சராசரி இலாப வீதம் மாறாமல் அப்படியே இருந்து வருகிறது; உதாரணமாக அது 10% என்றால் 10% ஆகவே இருந்து வருகிறது. ஆனால், தனியொரு சரக்கில் 10% என்பது, மேலே நாம் அனுமானம் செய்த மதிப்பு மாற்றங்களால் தனியொரு சரக்கின் அடக்க-விலையில் ஏற்படும் பருமன் மாற்றத்தைப் பொறுத்து, மிகவும் மாறுபட்ட அளவுகளைக் குறிக்கக் கூடும்.[26]

மாறும்-மூலதனம் மிகவும் முக்கியமானது; ஏனென்றால் இதுவே உபரி-மதிப்புக்கு ஆதாரம்; இதற்கும் முதலாளி செல்வம் திரட்டுவதற்கும் உள்ள தொடர்பை மூடி மறைக்கிற ஒவ்வொன்றும் முதலாளித்துவ அமைப்பு முழுவதையும் மருமமாக்கி விடுகிறது. மாறும்-மூலதனத்தைப் பொறுத்த வரை, நிலைமை இன்னும் கூட கொச்சையாகி, முதலாளிக்குப் பின்வருமாறு தெரிகிறது: £100 மாறும்-மூலதனம் 100 தொழிலாளர்களின் வாரக் கூலியைக் குறிப்பதாகக் கொள்வோம். வேலை நேரம் குறிப்பிட்டதாய் இருக்க, இந்த 100 தொழிலாளர்களும் ஒரு சரக்கை வாரம் ஒன்றுக்கு 200 உருப்படிகள் = 200C வீதம் உற்பத்தி செய்வார்களானால், 1Cஇன் அடக்க-விலை (அடக்க-விலையில் மாறா-மூலதனத்திலிருந்து வரப்பெறும் பகுதியை ஒதுக்கி விடுகிறோம்) $\frac{£100}{200} = 10$ ஷில்லிங்; ஏனென்றால் £100 = 200C. உழைப்பின் உற்பத்தித் திறனில் இப்போது ஒரு மாற்றம் ஏற்படுவதாகக் கொள்வோம். இத்திறன் இரு மடங்காய்ப் பெருகினால், அதே எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் முன்பு 200C உற்பத்தி செய்வதற்கு எடுத்துக் கொண்ட அதே காலத்தில் இப்போது இரு மடங்கு 200C உற்பத்தி செய்கிறார்கள். இந்நிலையில் (அடக்க-விலையில் கூலியிலிருந்து வரப்பெறும் பகுதியை மட்டும் கருத்தில் கொள்கிறோம்)

---

26 கார்பெட் [**தனியாட்களது செல்வத்தின் காரணங்கள், முறைகள் பற்றிய ஆய்வு**, லண்டன், 1841, பக்கம் 20.—**ஆங்கிலப் பதிப்பாசிரியர்**.]

$1C = \frac{£100}{400} = 5$ ஷில்லிங்; ஏனென்றால் இப்போது $£100 = 400C$. உற்பத்தித் திறன் பாதியளவு குறைந்தால், அதே உழைப்பு $\frac{200C}{2}$ உற்பத்தி செய்யும்; $£100 = \frac{£200C}{2}$ என்பதால், $1C = \frac{£200}{200} = £1$. ஆக, சரக்குகளின் உற்பத்திக்குத் தேவையான உழைப்பு நேரத்தில் ஏற்படும் மாற்றங்களும், எனவே அவற்றின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களும், அடக்க-விலை தொடர்பாகவும், எனவே உற்பத்தி-விலை தொடர்பாகவும், கூடுதலான சரக்குகளுக்கோ குறைவான சரக்குகளுக்கோ குறிப்பிட்ட கூலி பகிரப்படும் வேறு ஒரு வினியோகப் பரவலாகக் காட்சியளிக்கின்றன; அதே கூலிக்கு அதே உழைப்பு நேரத்தில் கூடுதலாகவோ குறைவாகவோ சரக்குகள் உற்பத்தியாவதைப் பொறுத்ததாகும் இது. முதலாளியும், எனவே அரசியல் பொருளாதார அறிஞரும் கூட எதைப் பார்க்கிறார்கள் என்றால்: ஊதிய உழைப்பில் சரக்கின் ஒவ்வோர் உருப்படிக்கும் கிடைக்கும் பகுதியானது உழைப்பின் உற்பத்தித் திறனுக்கேற்ப மாறுகிறது என்பதையும், ஒவ்வோர் உருப்படியின் மதிப்பும் கூட அவ்வாறே மாறுகிறது என்பதையுமே. சரக்கின் ஒவ்வோர் உருப்படியிலும் அடங்கியுள்ள ஊதியமிலா உழைப்புக்கும் கூட இதுவே பொருந்தும் என்பதை அவர்கள் பார்ப்பதில்லை. சராசரி இலாப வீதமானது தனிப்பட்ட முதலாளியின் உற்பத்திக் கிளையில் உறிஞ்சப்படும் ஊதியமிலா உழைப்பால் நிர்ணயிக்கப்படுவது தற்செயலாக மட்டுமே என்பதால் அவர்கள் இதைப் பார்க்க முடியாமற் போகிறது. சரக்குகளின் மதிப்பு அவற்றில் அடங்கியுள்ள உழைப்பால் நிர்ணயிக்கப்படுகிறது என்ற உண்மை குளறுபடியான இந்த அபத்த வடிவில்தான் எப்போதாவது இமைப் பொழுதுக்கு நம் கண்ணிற்படுவதாய் இருக்கிறது.

## அத்தியாயம் X

# போட்டி வாயிலாகப் பொது இலாப வீதம் சமனமாதல். சந்தை-விலைகளும் சந்தை-மதிப்புகளும். உபரி-இலாபம்

சில உற்பத்திக் கிளைகளில் முதலீடாகிற மூலதனம் நடும [mean] அல்லது சராசரி இயைபைப் பெற்றுள்ளது; அதாவது சராசரி சமுதாய மூலதனம் பெற்றுள்ள அதே இயைபை அல்லது கிட்டத்தட்ட அதே இயைபைப் பெற்றுள்ளது.

இந்த உற்பத்திக் கிளைகளில் சரக்கின் உற்பத்தி-விலையும் பண வடிவில் தெரிவிக்கப்படும் அதன் மதிப்பும் துல்லியமாகவோ தோராயமாகவோ சமமாகின்றன. கணித வரம்பைக் காண்பதற்கு வேறு வழியே இல்லாது போனால், பின்வருமாறு செய்யலாம். சராசரி இயைபுள்ள மூலதனத்தைப் பெற்றிருக்கும் இந்தக் கிளைகளில் நிலவும் உற்பத்தி-விலையை முன்மாதிரியாகக் கொண்டு ஒவ்வொரு கிளையிலும் உற்பத்தி-விலைகள் உருவாகும் விதத்தில் போட்டியானது வெவ்வேறு உற்பத்திக் கிளைகளிடையிலும் சமுதாய மூலதனம் வினியோகமாகும் படி செய்கிறது. அதாவது உற்பத்தி-விலை = k + kp' (அடக்க-விலை + சராசரி இலாப வீதம் × அடக்க-விலை). ஆனால் இந்த சராசரி இலாப வீதமானது சராசரி இயைபுள்ள கிளைகளில், எனவே இலாபம் உபரி-மதிப்புக்குச் சமமாய் இருக்கும் கிளைகளில் பெறப்படும் இலாப சதவீதம்தானே தவிர வேறல்ல. ஆகவே எல்லா உற்பத்திக் கிளைகளிலும் இலாப வீதம் ஒன்றே. எப்படியென்றால் சராசரி மூலதன இயைபுள்ள இந்த சராசரி உற்பத்திக் கிளைகளின் இலாப வீதத்தோடு அது சமன மாக்கப்படுகிறது. ஆகவே, எல்லா உற்பத்திக் கிளைகளிலும் பெறப் படும் இலாபங்களின் கூட்டுத் தொகை உபரி-மதிப்புகளின் கூட்டுத் தொகைக்குச் சமமாக வேண்டும். மொத்தச் சமுதாய உற்பத்திப் பொருளுக்கான உற்பத்தி-விலைகளின் கூட்டுத் தொகை அதன் மதிப்புகளின் கூட்டுத் தொகைக்குச் சமமாக வேண்டும். ஆனால் வெவ்வேறு இயைபுள்ள உற்பத்திக் கிளைகளிடையிலான சமனமாதல்

எப்போதுமே இக்கிளைகளை சராசரி இயைபுள்ள கிளைகளோடு சமனமாக்கும் போக்குள்ளதாய் இருக்க வேண்டும் — இக்கிளைகள் சமுதாய சராசரியோடு துல்லியமாய் ஒத்தமைந்தாலும் சரி, தோராய மாகவே ஒத்தமைந்தாலும் சரி. அதிகமாகவோ குறைவாகவோ சமுதாய சராசரியை நெருங்கி வரும் இந்தக் கிளைகளுக்கிடையிலும் கூட, சமனமாகும் போக்கு இலட்சிய சராசரியை [ideal average] அடைய முனையும் போக்கு காணப்படுகிறது; இலட்சிய சராசரி என்பது உண்மையில் நிலவ முடியாதது, அதாவது இந்த இலட்சி யத்தை நியமமாய்க் கொண்டு அமைய முனையும் ஒரு போக்காய் இருப்பது. இவ்வாறு உற்பத்தி-விலைகளை மதிப்பின் மாறிய வடிவங்களாக மட்டும், அல்லது இலாபங்களை உபரி-மதிப்புப் பகுதிகளாக மட்டும் மாற்றும் போக்கு தவிர்க்க முடியாதபடி நிலவு கிறது. இந்த உபரி-மதிப்புப் பகுதிகள் தனிப்பட்ட ஒவ்வொரு கிளையிலும் உற்பத்தியாகும் உபரி-மதிப்புக்கேற்ப வினியோக மாவதற்குப் பதில் ஒவ்வொரு கிளையிலும் ஈடுபடுத்தப்படும் மூலதனத் திரளுக்கு ஏற்பவே வினியோகமாகின்றன. இவ்விதம் சம மூலதனத் திரள்கள், அவற்றின் இயைபு எதுவானாலும், மொத்தச் சமுதாய மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் மொத்த உபரி-மதிப்பில் சமமான ஈவுப் பங்குகளைப் பெறுகின்றன.

இவ்வாறு, சராசரி அல்லது கிட்டத்தட்ட சராசரி இயைபுள்ள மூலதனங்களைப் பொறுத்த வரை, அவை உற்பத்தி செய்கிற மதிப்புக்கு உற்பத்தி-விலையும் உபரி-மதிப்புக்கு இலாபமும் சம மாகின்றன. ஏனைய மூலதனங்கள் எல்லாம் அவற்றின் இயைபு எப்படி இருந்த போதிலும், போட்டியின் நெருக்குதல் காரணமாய் இந்த சராசரியை நோக்கிச் சாயும் போக்குடையவை. ஆனால் சராசரி இயைபுள்ள மூலதனங்கள் சராசரி சமுதாய மூலதனத்துக்கு சமமாகவோ கிட்டத்தட்ட சமமாகவோ அமைந்திருப்பதால் எல்லா மூலதனங்களுமே, எவ்வளவு உபரி-மதிப்பை அவை உற்பத்தி செய்தாலும் சரி, தமது சரக்குகளின் விலையில் இந்த உபரி-மதிப்பை ஈடேற்றம் செய்வதற்கு பதில் சராசரி இலாபத்தையே ஈடேற்றம் செய்யும் போக்குடையவை. அதாவது அவை உற்பத்தி-விலைகளை ஈடேற்றம் செய்யும் போக்குடையவை.

இங்கு இன்னொன்றையும் குறிப்பிட்டாக வேண்டும்: இலாபம் சராசரி இலாபமாகவும், எனவே பொது இலாப வீதமாகவும் இருக்கும் போதெல்லாம் — இந்நிலைமை எப்படி ஏற்பட்டதாகவும் இருக்கலாம் — இந்த சராசரி இலாபமானது சராசரிச் சமுதாய மூலதனத்தின் மீதான இலாபமாகத்தான் இருக்க முடியும்; இந்த இலாபத்தின் பருமனளவு உபரி-மதிப்பின் பருமனளவுக்குச் சமம். மற்றும், இந்த சராசரி இலாபத்தை அடக்க-விலைகளோடு கூட்டிச் சேர்த்துப் பெறப்படும் விலைகள் உற்பத்தி-விலைகளாக உருமாறிய மதிப்புகளாகத்தான் இருக்க முடியும். ஏதோ காரணமாய் குறிப்பிட்ட

சில உற்பத்திக் கிளைகளில் மூலதனங்களானவை இலாப வீதம் சம மாகும் நிகழ்முறைக்கு உட்படாது போகுமானால் இதனாலும் எதுவும் மாறி விடாது. இந்நிலையில் சராசரி இலாபமானது சமன மாகும் நிகழ்முறையில் சேரும் சமுதாய மூலதனப் பகுதியை வைத்துக் கணக்கிடப்படும். சராசரி இலாபமானது உபரி-மதிப்பு களின் மொத்தத் திரளை அந்தந்த உற்பத்திக் கிளையிலும் முதலீ டாகும் மூலதனங்களின் பருமனுக்கேற்ப அவற்றிடையே பங்கிட்டு வருவதாகத்தான் இருக்க முடியும் என்பது தெளிவாய்த் தெரிகிறது. இது ஈடேற்றம் பெற்ற ஊதியமிலா உழைப்பின் மொத்தத் திர ளாகும்; இந்த மொத்தத் திரளான்து இறுகியதோ உயிருள்ளதோ ஆன ஊதிய உழைப்பைப் போலவே முதலாளிகளுக்குப் போய்ச் சேரும் மொத்தச் சரக்குத் திரளிலும் பணத்திலும் குறிக்கப் பெறுவதாகும்.

இங்கு உண்மையிலேயே கடினமான கேள்வி இதுதான்: இலாபங் கள் இப்படிப் பொது இலாப வீதமாகச் சமனமாகிற நிகழ்வு எப்படி நடைபெறுகிறது? இலாபங்கள் இவ்விதம் சமனமாதல் முடிவில் வந்தடையும் விளைவாகுமே தவிர தொடக்க நிலை அல்ல என்பது கண்கூடாகையால் இக்கேள்வி எழுகிறது.

உதாரணமாக சரக்கு-மதிப்புகளைப் பணமாகக் கணிப்பது அவற்றைப் பரிவர்த்தனை செய்வதன் விளைபயனாகத்தான் இருக்க முடியும் என்பது எ்டுத்த எடுப்பிலேயே கண்கூடாய்த் தெரிகிறது. ஆகவே இப்படிப் பணமாக்க் கணிப்பதை முன்கூட்டியே அனு மானம் செய்து கொள்வதானால், சரக்கு-மதிப்புக்கு சரக்கு-மதிப்பு உள்ளபடியே பரிவர்த்தனை ஆவதன் விளைபயனாகத்தான் அதைக் கருதியாக வேண்டும். சரக்குகள் அவற்றின் உண்மை மதிப்பு களுக்குப் பரிவர்த்தனையாகும் இந்நிகழ்வு எப்படி நடந்தேறுகிறது?

பல்வேறு கிளைகளிலும் உற்பத்தியாகிற சரக்குகள் எல்லாம் அவற்றின் உண்மை மதிப்புகளுக்கே விற்கப்படுவதாக முதலில் வைத்துக் கொள்வோம். அப்போது என்ன நடைபெறும்? மேலே நாம் எடுத்துரைத்த வாதங்களின் படி பார்த்தால் பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் மிகவும் மாறுபட்ட இலாப வீதங்கள் கோஃலோச்சும். சரக்குகள் அவற்றின் மதிப்புகளுக்கே விற்கப்படுகின்றனவா (அதா வது அவை அவற்றில் அடங்கியுள்ள மதிப்புக்கேற்ற விகிதத்தில், அவற்றின் மதிப்பையொத்த விலைகளுக்கே ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றனவா) என்பதும், அவை யவற்றின் உற்பத்திக்காக முன்னீடு செய்யப்பட்ட மூலதனங்களின் சம அளவுகள் மீது சம இலாபங்கள் கிடைக்கச் செய்யும் படியான விலைகளுக்கு அவை விற்கப்படுகின்றனவா என்பதும் சற்றும் தொடர்பற்ற இருவேறு விவகாரங்களாகவே முதல் பார்வைக்குத் தென்படுகின்றன.

உயிருள்ள உழைப்பை சமம் அல்லாத அளவுகளில் ஈடுபடுத்தி இயங்க வைக்கும் மூலதனங்கள் உபரி-மதிப்பையும் சமம் அல்லாத

அளவுகளில் உற்பத்தி செய்வதாகச் சொல்வதன் அர்த்தம் என்ன? உழைப்பின் மீதான சுரண்டலின் கடுமை அல்லது உபரி-மதிப்பு வீதம் ஓரளவுக்கேனும் ஒன்றாகவே இருக்க வேண்டும் என்றோ, இல்லையேல் இவற்றிடையே இருக்கக் கூடிய வேறுபாடுகள் உண்மையான அல்லது கற்பிதமான (மாமூல்) காரணங்களால் ஈடுகட்டப்பட்டு சமனமாக்கப்பட வேண்டும் என்றோதான் அர்த்தம். தொழிலாளர்களிடையே போட்டாபோட்டி இருப்பதும் உற்பத்தியின் ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்கு ஓயாது அவர்கள் பெயர்ந்து செல்வதைக் கொண்டு சமனமாதல் நடைபெறுவதும் இதற்கு அவசியமாகும். இத்தகைய பொது உபரி-மதிப்பு வீதத்தை — ஏனைய எல்லாப் பொருளாதார விதிகளையும் போலவே இதுவும் ஒரு போக்குதான் — தத்துவ வகையில் எளிமைப்படுத்துவதற்குத் தேவையான ஒன்றாகவே அனுமானம் செய்து கொள்கிறோம். நடைமுறையில் இது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு உள்ளபடியே அவசியமான முதனிலைகளில் ஒன்றாகும். நடைமுறையில் எழக் கூடிய தடங்கல்கள் இந்தப் பொது உபரி-மதிப்பு வீதம் உருவாவதில் ஓரளவுக்குக் குறுக்கிடுவதும், இதனால் சற்றே முக்கியத்துவம் வாய்ந்த வட்டார வேறுபாடுகள் தலைதூக்குவதும் மெய்தான். பிரிட்டனில் பண்ணைத் தொழிலாளர்களுக்கென்றுள்ள நிலவர ஏற்பாட்டுச் சட்டங்களை [settlement laws] இதற்கு எடுத்துக்காட்டாய்க் குறிப்பிடலாம் என்றாலும், தத்துவத்தில் நாம் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் விதிகள் அப்படியே தூய வடிவில் இயங்குவதாய்க் கொள்கிறோம். இழை பிசகாத துல்லிய நிலையல்ல, விதிகளுக்கு ஓரளவு நெருக்கமான தோராய நிலைதான் மெய்ந்நடப்பில் காணப்படுவது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை எவ்வளவுக்கு எவ்வளவு வளர்ச்சியடைந்து, முந்தைய பொருளாதார நிலைமைகளின் மிச்சச் சொச்சங்களோடு கலந்தும் பிணைந்தும் இருப்பது எவ்வளவுக்கு எவ்வளவு குறைந்து விடுகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு இந்தத் தோராய நிலை உண்மை நிலவரத்துக்கு நெருங்கியதாகிறது.

இடர்ப்பாடு அனைத்துக்கும் காரணமாய் அமைவது இதுதான்: சரக்குகள் **சரக்குகளாக** மட்டும் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படாமல் **மூலதனங்களின் உற்பத்திப் பொருட்களாகவும்** பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன. இம்மூலதனங்கள் தத்தமது பருமனுக்கேற்ப மொத்த உபரி-மதிப்புத் திரளில் பங்கு கேட்கின்றன, சம பருமனுக்கு சம பங்கு கேட்கின்றன. குறிப்பிட்ட மூலதனம் குறிப்பிட்ட கால அளவில் உற்பத்தி செய்யும் சரக்குகளின் மொத்த விலை இந்தக் கோரிக்கையை நிறைவு செய்தாக வேண்டும். ஆனால் இந்த மொத்த விலையானது இம்மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் தனிப்பட்ட சரக்குகளின் விலைகளது கூட்டுத் தொகைதானே தவிர வேறல்ல.

பின்வருமாறு அணுகுவோமானால் பிரச்சினையின் முக்கியக்

கூறு எடுப்பாய் வெளிப்படும். தொழிலாளர்களே தத்தமது உற்பத்திச் சாதனங்களை கைவசம் வைத்திருப்பதாகவும், உற்பத்திச் சரக்குகளை ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை செய்து கொள்வதாகவும் வைத்துக் கொள்வோம். இந்தச் சரக்குகள் மூலதனத்தின் உற்பத்திப் பொருட்கள் ஆக மாட்டா. வேலையின் தொழில் நுட்பத் தன்மையைப் பொறுத்து வெவ்வேறு உற்பத்திக் கிளைகளிலும் ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சாதனங்கள், கச்சாப் பொருட்களின் மதிப்பு மாறுபடும். மேலும், இத்தொழிலாளர்களால் பயன்படுத்தப்படும் உற்பத்திச் சாதனங்கள் சமம் அல்லாத மதிப்புடையவை என்பதை ஒதுக்கி விட்டுப் பார்த்தாலும் கூட, குறிப்பிட்ட உழைப்பளவுக்கு இந்த உற்பத்திச் சாதனங்கள் வெவ்வேறு அளவுகளில் தேவைப்படும்; எப்படியென்றால் ஒரு சரக்கு ஒரு மணி நேரத்தில் தயாராகி விடும், வேறொன்றை செய்து முடிக்க ஒரு நாள் தேவைப்படும்— இவ்வாறே இன்னும் சொல்லலாம். இந்தத் தொழிலாளர்கள் உழைத்திடும் சராசரி வேலை நேரம் ஒன்றெனவும் கொள்வோம்; உழைப்பின் மும்முரம் போன்றவற்றிலான வேறுபாடுகளை சரிக்கட்டுவதற்கும் இங்கு இடமளித்துக் கொள்வோம். அப்போது இத்தொழிலாளர்களில் இருவரை எடுத்துக் கொள்வோமானால் முதலாவதாக அவ்விருவருமே அவரவரது ஒரு நாள் உழைப்பின் உற்பத்திச் சரக்குகளில் அவர்களது முதலீடுகளை, அவர்கள் நுகர்ந்த உற்பத்திச் சாதனங்களின் அடக்க-விலைகளை மாற்றீடு செய்திருப்பார்கள். இந்த முதலீடுகள் அவர்களது உழைப்பின் தொழில் நுட்பத் தன்மையைப் பொறுத்து மாறுபடும். இரண்டாவதாக அவ்விருவரும் படைக்கும் புதிய மதிப்பு, அதாவது உற்பத்திச் சாதனங்களோடு சேர்த்திடும் வேலை-நாள் ஒரே அளவினதாய் இருக்கும். இப்புதிய மதிப்பு அவர்களது கூலியாலும் உபரி-மதிப்பாலும் ஆனதாகும். இந்த உபரி-மதிப்பு அவர்கள் தமது அவசியத் தேவைகளுக்கு வேண்டியிருப்பதற்கு மேல் உழைப்பதாகிய உபரி-உழைப்பைக் குறிப்பதாகும். என்றாலும் இந்த உபரி-உழைப்பின் பலன் அவர்களையே சேரும். முதலாளித்துவ வழியில் கூறுவதானால், அவ்விருவரும் ஒரே கூலியும் ஒரே இலாபமும் பெறுவார்கள்; கூலியும் இலாபமும் சேர்ந்த இந்தக் கூட்டுத் தொகை (உதாரணமாக) பத்து மணி நேர வேலை-நாளுக்குரிய உற்பத்திப் பொருளின் வடிவிலான மதிப்புக்குச் சமமாகும். ஆனால் அவர்கள் உற்பத்தி செய்யும் சரக்குகளின் மதிப்புகள் மாறுபட்டாக வேண்டும். I, II என்னும் இரு சரக்குகளை எடுத்துக் கொள்வோம். நுகரப்பட்ட உற்பத்திச் சாதனங்களிலிருந்து வரப்பெறும் மதிப்புப் பகுதி சரக்கு IIஐக் காட்டிலும் சரக்கு Iஇல் கூடுதலாய் அடங்கி இருக்கலாம். சரக்கு IIஐக் காட்டிலும் சரக்கு I உயிருள்ள உழைப்பைக் கூடுதலாய் உறிஞ்சுவதாகவும், எனவே Iஇன் உற்பத்திக்கு உழைப்பு நேரம் கூடுதலாய்த் தேவைப்படுவதாகவும் கொள்வோம்— சாத்தியமான

வேறுபாடுகளை எல்லாம் நுழைத்து விட வேண்டுமென்பதற்காகவே இங்கு இவ்வாறு அனுமானம் செய்து கொள்கிறோம். ஆகவே இந்த I, II சரக்குகளின் மதிப்புகளிடையே பெருத்த வேறுபாடு இருக்கும். I, II தொழிலாளர்களின் குறிப்பிட்ட நேர உழைப்பால் உற்பத்தியாகிற சரக்குகளின் மதிப்புத் தொகைகளிடையிலும் பெருத்த வேறுபாடு இருக்கும். உற்பத்திச் சாதனங்களுக்காக முதலீடாகிற மொத்த மதிப்போடு உபரி-மதிப்புக்குள்ள விகிதத்தை இங்கு இலாப வீதம் என்போமானால், இலாப வீதங்களிடையிலும் கூட பெருத்த வேறுபாடு இருக்கும். Iஉம் IIஉம் ஒவ்வொரு நாளும் உற்பத்தியின் போது நுகர்வனவும் கூலியைக் குறிப்பனவுமாகிய வாழ்வுச் சாதனங்கள் இங்கு உற்பத்திச் சாதன முதலீட்டில் சாதாரணமாய் மாறும்-மூலதனம் எனப்படும் பகுதியாகின்றன. ஆனால் வேலைக் காலங்கள் சமமாயிருக்க, Iக்கும் IIக்கும் உபரி-மதிப்பு ஒன்றுதான். இன்னும் கூட துல்லியமாகச் சொன்னால், I, II சரக்குகளில் ஒவ்வொன்றும் ஒரு நாள் உழைப்பின் உற்பத்தி-மதிப்பைப் பெறுவது காரணமாய்—முதலீடாகிற ''மாறாக்'' கூறுகளின் மதிப்பைக் கழித்த பின்—சம மதிப்புகளைப் பெறுகின்றன. இம்மதிப்புகளில் ஒரு பகுதியை உற்பத்தியில் நுகரப்பட்ட வாழ்வுச் சாதனங்களுக்கான பதிலியாகவும், மறு பகுதியை இப்பதிலிக்கு மிகையான உபரி-மதிப்பாகவும் கருதலாம். I தொழிலாளிக்குச் செலவுகள் இன்னுமதிகமாய் ஏற்பட்டால், அவரது உற்பத்திச் சரக்கின் மதிப்பில் அதிகமான பகுதியைக் கொண்டு கூடுதல் செலவு சரிக்கட்டப்படும். இந்த ''மாறாப்'' பகுதிக்கு மாற்றீடாய் இருப்பது இந்த உற்பத்திச் சரக்குதான். ஆகவே அவர் தமது உற்பத்திப் பொருளின் மொத்த மதிப்பில் கூடுதலான பங்கைத் திரும்பவும் இந்த மாறாப் பகுதியின் பொருட் கூறுகளாய் மாற்றியாக வேண்டும். அதே போது II தொழிலாளி அவரது உற்பத்திப் பொருளுக்குப் பெறுவது குறைவானது, அந்த அளவுக்கு அவர் திரும்பவும் மாற்றியாக வேண்டியதும் குறைவானதே. ஆகவே இந்நிலைமைகளில் இலாப வீதங்களிலான வேறுபாடு குறித்து அவர்களுக்குக் கவலையில்லை—இன்று கூலித் தொழிலாளர்களுக்கு அவர்களிடமிருந்து கறக்கப்படும் உபரி-மதிப்பளவினைப் புலப்படுத்தும் இலாப வீதம் என்ன என்பது குறித்து எப்படிக் கவலையில்லையோ, தம்மிடையே சரக்குப் பரிவர்த்தனை செய்து கொள்ளும் நாடுகளுக்கு சர்வதேச வர்த்தகத்தில் பல்வேறு நாடுகளிடையிலும் இலாப வீதத்தில் காணப்படும் வேறுபாடு குறித்து எப்படிக் கவலை இல்லையோ அதே போலத்தான் இதுவும்.

ஆக, சரக்குகளை அவற்றின் மதிப்புக்கே—அல்லது தோராயமாய் அவற்றின் மதிப்புக்கே—பரிவர்த்தனை செய்வதற்குத் தேவைப்படும் வளர்ச்சிக் கட்டம் அவற்றின் உற்பத்தி-விலைக்குப் பரிவர்த்தனை செய்வதற்குத் தேவைப்படும் கட்டத்தை விட மிகவும்

தாழ்வானதாகும். உற்பத்தி-விலைக்குப் பரிவர்த்தனை செய்வதற்கு முதலாளித்துவ வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு படித்தரம் அவசிய மாகிறது.

வெவ்வேறு சரக்குகளின் விலைகள் ஒன்றை ஒன்று நிர்ண யித்துக் கொள்வது அல்லது ஒழுங்கு செய்து கொள்வது எவ் வழியில் நடைபெற்றாலும், எப்போதுமே மதிப்பு விதிதான் அவற் றின் அசைவியக்கங்களை ஆளுகிறது. மற்ற நிலைமைகள் மாறா திருக்க, அவற்றின் உற்பத்திக்கு தேவைப்படும் உழைப்பு நேரம் குறைந்தால் விலைகளும் குறைகின்றன. அவ்வுழைப்பு நேரம் உயர்ந்தால் விலைகளும் உயர்கின்றன.

விலைகளையும் அவற்றின் அசைவியக்கத்தையும் மதிப்பு விதி ஆளுவது ஒரு புறமிருக்க, சரக்குகளின் மதிப்புகளைத் தத்துவ வழியில் மட்டுமல்லாமல் வரலாற்று வழியிலும் உற்பத்தி-விலை களுக்கு முற்பட்டவையாகக் கருதுவதும் பொருத்தமானதே. தொழி லாளி பயன்படுத்தும் உற்பத்திச் சாதனங்கள் அவருக்கே சொந்த மாய் இருக்கும் நிலைமைகளுக்கு இது பொருந்தும். புராதன உலகிலும் சரி, நவீன உலகிலும் சரி, நிலவுடைமை-விவசாயிகளும் கைவினைஞர்களும் இப்படித்தான் இருக்கிறார்கள் — இவர்கள் தமக்காகவே உழைத்து வாழ்பவர்கள். மற்றும், இதுவே நாம் முன்னர்* தெரிவித்த கருத்துக்கும் [27] உடன்பாடானது. அதாவது உற்பத்திப் பொருட்கள் சரக்குகளாக மாறும் பரிணாம வளர்ச்சி வெவ்வேறு சமுதாயங்களிடையிலான பரிவர்த்தனையிலிருந்து வருவதே தவிர, ஒரே சமுதாயத்தை [community] சேர்ந்தவர் களுக்குள் நடைபெறும் பரிவர்த்தனையிலிருந்து வருவது அல்ல. இது இந்த ஆதி நிலைமைக்கு மட்டும்தான் பொருந்தும் என்ப தில்லை. அதற்குப் பிறகு அடிமை முறை, பண்ணையடிமை முறையின் அடிப்படையில் உருப்பெற்ற சமூக நிலைமைகளுக்கும், கைத்தொழில் உற்பத்தியின் அடிப்படையிலான கைவினைச் சங்க [guild] ஒழுங்கமைப்புக்கும் கூட (ஒவ்வோர் உற்பத்திக் கிளையிலும் ஈடுபட்டுள்ள உற்பத்திச் சாதனங்களை ஒரு கிளையிலிருந்து இன் னொரு கிளைக்கு மாற்றுவதில் இடர்ப்பாடு இருந்து வரும் வரை, எனவே பல்வேறு உற்பத்திக் கிளைகளும் — குறிப்பிட்ட வரம்பு களுக்குள் — அந்நிய நாடுகளைப் போலவோ பொதுவுடைமைச் சமுதாயங்களைப் போலவோ தமக்குள் உறவு கொண்டிருக்கும் வரை) இதுவே பொருந்தும்.

---

* தமிழ்ப் பதிப்பு: முதல் பாகம், பக்கம் 128. — பதிப்பாசிரியர்.

[27] எங்கெல்ஸ் குறிப்பு. — 1865இல் மார்க்சின் ''கருத்தாக'' மட்டுமே இருந்தது இது. இன்று மௌரர் முதல் மார்கன் வரை பலரும் பூர்விகச் சமுதாயங்களின் தன்மை பற்றி நடத்தியுள்ள விரிவான ஆராய்ச்சிக்குப் பின்னர், இது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகி விட்டது; இதை மறுத்தல் அரிதே.

சரக்குகள் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனையாகும் விலைகள் தோராயமாய் அவற்றின் மதிப்புகளுக்கு ஒத்தமைய வேண்டு மானால், அதற்கு அவசியமாவதெல்லாம் இவ்வளவுதான்; அதாவது (1) பல்வேறு சரக்குகளும் பரிவர்த்தனையாவது முற்றிலும் தற் செயலானதாய் இருப்பது அல்லது சந்தர்ப்பவசமாக மட்டும் நடை பெறுவது ஒழிய வேண்டும்; (2) சரக்குகளின் நேரடிப் பரிவர்த்த னையைப் பொறுத்த வரை பரஸ்பரத் தேவைகளைக் கிட்டத்தட்ட நிறைவு செய்வதற்குப் போதுமான அளவுகளில் இரு தரப்பிலும் இச்சரக்குகள் உற்பத்தி செய்யப்பட வேண்டும்; தேவை என்ன என்பது பரஸ்பர வர்த்தக அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்வது, எனவே தொடர்ந்து வர்த்தகம் புரிவதிலிருந்தே இயல்பாய் வருவது; (3) விற்பதைப் பொறுத்த வரை, இயற்கை ஏகபோகத்தினாலோ செயற்கை ஏகபோகத்தினாலோ ஒப்பந்தத் தரப்புகளில் ஒன்று சரக்கை மதிப்புக்கு மேல் விலை வைத்து விற்க முடிவதும் கூடாது, வேறு வழியின்றி மதிப்புக்கும் குறைவான விலைக்கு விற்க நேரிடு வதும் கூடாது. வாங்குகிறவருக்கோ விற்கிறவருக்கோ தற்செயலான வழங்கல்-வேண்டல் [supply and demand] நிலவரத்தின் மூலமாய்க் கிடைக்கும் ஏகபோகத்தையே தற்செயல் ஏகபோகம் என்கிறோம்.

பல்வேறு உற்பத்திக் கிளைகளிலிருந்தும் வருகிற சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே விற்கப்படுகின்றன என்கிற அனுமானம் குறிப்பது என்ன? இச்சரக்குகளின் மதிப்பு ஈர்ப்பு மையமாய்த் திகழ்கிறது என்பதையும், இம்மையத்தைச் சுற்றியே அவற்றின் விலைகள் அலைவுறுகின்றன என்பதையும், அவற்றின் ஓயாத ஏற்ற இறக்கங்கள் இம்மையத்தை நோக்கியே சமனமாகும் போக்குடையவை என்பதையும்தான் அது குறிக்கிறது. இதற்கு மேல், **சந்தை-மதிப்பையும்** [market-value] (இது பற்றி பிறகு பார்ப்போம்) வெவ் வேறு உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்திடும் குறிப்பான சரக்கு களின் தனிப்பட்ட மதிப்பிலிருந்து வேறுபடுத்திக் கண்டாக வேண்டும். இந்தச் சரக்குகளில் சிலவற்றின் தனிப்பட்ட மதிப்பு அவற்றின் சந்தை-மதிப்பை விடக் குறைவாய் இருக்கும். (அதாவது அவற்றின் உற்பத்திக்குத் தேவையான உழைப்பு நேரம் சந்தை-மதிப்பாகத் தெரிவிக்கப்பெறும் உழைப்பு நேரத்தை விடக் குறைவு); ஏனையவற்றின் தனிப்பட்ட மதிப்பு சந்தை-மதிப்பை விட அதிக மாய் இருக்கும். சந்தை-மதிப்பை ஒரு புறம் தனியொரு கிளையில் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் சராசரி மதிப்பாகவும், மறு புறம் அக்கிளையில் சராசரி நிலைமைகளில் உற்பத்தியாகி அக்கிளை யின் உற்பத்தியில் பெரும் பகுதியாய் அமைகிற சரக்குகளின் தனிப் பட்ட மதிப்பாகவும் கருத வேண்டும். அசாதாரணச் சூழல்களில் மட்டுமே படுமோசமான நிலைமைகளிலோ அதிசாதக நிலைமை களிலோ உற்பத்தியாகும் சரக்குகள் சந்தை-மதிப்பை ஆளுகின்றன. சந்தை-மதிப்பை மையமாகக் கொண்டுதான் சந்தை-விலைகள்

அலைவுறுகின்றன. ஆயினும் ஒரே வகைச் சரக்குகளுக்கு சந்தை-விலைகளும் ஒன்றுதான். சரக்குகளை சராசரி மதிப்புக்கு, அதாவது இரு கோடிகளுக்கும் நடுவாந்தரமான மதிப்புக்குக் கிடைக்கச் செய்திடும் வழங்கலானது வழக்கமான வேண்டலை நிறைவு செய்திடுமானால், சந்தை-மதிப்பை விடக் குறைவான தனிப்பட்ட மதிப்பை உடைய சரக்குகள் கூடுதல் உபரி-மதிப்பு அல்லது உபரி-இலாபத்தைப் பெற்றுத் தரும்; சந்தை-மதிப்பை விட அதிகமான தனிப்பட்ட மதிப்பை உடைய சரக்குகளோ அவற்றில் அடங்கியுள்ள உபரி-மதிப்பில் ஒரு பகுதியை ஈடேற்றம் செய்து கொடுக்க இயலாமற் போகும்.

படுமோசமான நிலைமைகளில் உற்பத்தியாகும் சரக்குகள் விற்றுப் போவது வேண்டலை நிறைவு செய்வதற்கு அவை தேவைப் படுவதையே காட்டுவதாகச் சொல்வதால் பயனில்லை. மேலே நாம் அனுமானம் செய்து கொண்ட நேர்வில் சராசரி சந்தை-மதிப்பை விட விலை அதிகமாய் இருக்குமானால் வேண்டல் குறைந்து போகும்.* விலை குறிப்பிட்டதாய் இருக்க, ஒரு வகைச் சரக்கு சந்தையில் குறிப்பிட்ட இடப்பரப்பையே வகிக்க முடியும்; விலை மாற்றங்கள் ஏற்படுகையில் இந்த இடப்பரப்பு மாறாதிருக்க வேண்டுமானால், விலை உயரும் போதே சரக்கின் வழங்கல் குறைய வேண்டும், விலை குறையும் போதே அவ்வழங்கல் அதிகரிக்க வேண்டும் என்றாலும், வேண்டலானது படுமோசமான நிலைமைகளில் உற்பத்தியாகிற சரக்குகளின் மதிப்பால் விலை நிர்ணயிக்கப்படும் போதும் சுருங்காத அளவுக்கு மிகவும் வலுவாயிருந்தால், இந்நிலைமைகளே சந்தை-மதிப்பை நிர்ணயிக்கும். இது சாத்தியமாக வேண்டுமானால், வேண்டல் வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாய் இருக்க வேண்டும், அல்லது வழங்கல் வழக்கத்தைக் காட்டிலும் குறைவாய் இருக்க வேண்டும். முடிவில், உற்பத்தியாகிற சரக்குத் திரள் சராசரி சந்தை-மதிப்புக்கு முழுமையாக விற்றுப் போக முடியாத அளவுக்கு மிக அதிகமாய் இருந்தால், அதிசாதக நிலைமைகளில் உற்பத்தியாகிற சரக்குகளால் சந்தை-மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக இச்சரக்குகள் துல்லியமாகவோ தோராயமாகவோ அவற்றின் தனிப்பட்ட மதிப்புக்கே விற்கப் படலாம். அப்படி அவை விற்கப்படுமானால், படுமோசமான நிலைமைகளில் உற்பத்தியாகிற சரக்குகள் அவற்றின் அடக்க-விலையைக் கூட ஈடேற்றம் செய்ய முடியாமற் போகலாம்; சராசரி நிலைமைகளில் உற்பத்தி ஆகிறவை அவற்றில் அடங்கியுள்ள உபரி-மதிப்பில் ஒரு பகுதியை மட்டும் ஈடேற்றம் செய்யும். இங்கு நாம்

---

* "அதிகரிக்கும்." என்றே மூலத்தில் இருக்கிறது. மார்க்சின் கையெழுத்துப் பிரதியைப் பார்த்து அதில் உள்ளவாறு திருத்தம் செய்யப்பட்டது. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

சந்தை-மதிப்பு தொடர்பாகக் கூறியிருப்பது — சந்தை-மதிப்பின் இடத்துக்கு உற்பத்தி-விலை வந்தவுடனே — உற்பத்தி-விலைக்கும் பொருந்தும். உற்பத்தி-விலை அந்தந்தக் கிளையிலும் நிர்ணயிக்கப் படுகிறது, அதுவும் விசேஷ நிலைமைகளால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த உற்பத்தி-விலையை மையமாகக் கொண்டுதான் அன்றாட சந்தை-விலைகள் அலைவுறுகின்றன. இந்த மையத்தை நோக்கித் தான் அவ்விலைகள் குறிப்பிட்ட காலவட்டங்களில் ஒன்றுக் கொன்று சமனமாகும் போக்கை வெளிப்படுத்துகின்றன. (படுமோசமான நிலைமைகளில் வேலை செய்யும் உற்பத்தியாளர்களால் உற்பத்தி-விலை நிர்ணயிக்கப்படுவது குறித்து ரிக்கார்டோவைப்* பார்க்கவும்.)

எப்படி விலைகள் நிர்ணயிக்கப்பட்டாலும் சரி, விளைவு இதுதான்:

1) மதிப்பு விதி விலைகளின் அசைவியக்கத்தை ஆளுகிறது; உற்பத்திக்குத் தேவைப்படுகிற உழைப்பு நேரம் குறைந்து போவதோ கூடுதலாவதோ உற்பத்தி-விலைகள் குறைவதற்கோ உயருவதற்கோ காரணமாகிறது. இந்த அர்த்தத்தில்தான் ரிக்கார்டோ (தாம் சொல்லும் உற்பத்தி-விலைகள் சரக்குகளின் மதிப்புகளிலிருந்து விலகிச் செல்வதை அவர் உணர்ந்திருந்தார் என்பதில் ஐயமில்லை) ''நான் வாசகரின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிற பரிசீலனை சரக்குகளின் ஒப்பீட்டு மதிப்பில் — அறுதி மதிப்பில் அல்ல — ஏற்படும் மாறுபாடுகளின் விளைவு தொடர்பானதாகும்'' என்று சொல்கிறார்.**

2) உற்பத்தி-விலைகளை நிர்ணயிப்பதான சராசரி இலாபம் மொத்தச் சமுதாய மூலதனத்தின் ஈவுப் பகுதி என்ற முறையில் தனிப்பட்ட மூலதனத்திற்குப் போய்ச் சேரும் உபரி-மதிப்பளவுக்கு எப்போதுமே கிட்டத்தட்ட சமமாய் இருக்க வேண்டும். பொது இலாப வீதமும், எனவே சராசரி இலாபமும் உள்ளபடியான சராசரி உபரி-மதிப்பின் பண-மதிப்பைக் காட்டிலும் கூடுதலான பண-மதிப்பால் தெரிவிக்கப் பெறுவதாகக் கொள்வோம். அப்படியானால், முதலாளிகளைப் பொறுத்த வரை, ஒருவருக்கொருவர் 10% இலாபம் வைத்தாலும் சரி, 15% இலாபம் வைத்தாலும் சரி, எல்லாமே ஒன்றுதான். உள்ளபடியான சரக்கு-மதிப்பைக் குறிக்கிற அளவில் இந்த சதவீதங்கள் ஒன்று மற்றதைக் காட்டிலும் அதிகமாய்க் குறிக்கவில்லை. ஏனென்றால் பணத் தெரிவிப்பின்

* டே. ரிக்கார்டோ, *அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் மற்றும் வரி விதிப்பு குறித்து*, மூன்றாம் பதிப்பு, லண்டன், 1821, பக்கம் 60-61. — *ஆங்கிலப் பதிப்பாசியர்.*

** டே. ரிக்கார்டோ, *அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், நூல்கள்*, பதிப்பாசியர்: மக்குல்லோஹ், 1852, பக்கம் 15. — *ஆங்கிலப் பதிப்பாசியர்.*

ரிகைப்பாடு பரஸ்பரமாய் நடைபெறுகிறது. தொழிலாளியைப் பொறுத்த வரை (அவர் இயல்பான கூலி பெறுவதாகவும், எனவே சராசரி இலாபத்திலான உயர்வு அவரது கூலியிலிருந்து உள்ள படியே பிடித்தம் செய்வதைக் குறிக்காது, அதாவது முதலாளியின் இயல்பான உபரி-மதிப்பிலிருந்து அறவே வேறான ஒன்றை அது தெரிவிக்கிறது என்றும் வைத்துக் கொள்கிறோம்) சராசரி இலாபம் உயருவது காரணமாய் சரக்கு-விலைகளில் ஏற்படும் உயர்வுக்கு மாறும்-மூலதனத்தின் பணத் தெரிவிப்பிலான உயர்வு ஈடாக வேண்டும். நடப்பு என்னவென்றால், மொத்த மூலதன முன்னீட்டுடன் உள்ளபடியான உபரி-மதிப்புக்குள்ள விகிதத்தால் விதிக்கப்படும் வரம்புக்கு மேல் இலாப வீதமும், எனவே சராசரி இலாபமும் இப்படிப் பொதுவான விதத்தில் பெயரளவுக்கு அதிகரிப்பது கூலியை உயரச் செய்யாமலும், அதே போல் மாறா-மூலதனமாய் அமைகிற சரக்குகளின் விலைகளை உயரச் செய்யாமலும் சாத்திய மன்று. இலாப வீதமும் சராசரி இலாபமும் குறையுமானால் மேற் சொன்னதற்கு அப்படியே நேர்மாறாய் நடைபெறும். சரக்குகளின் மொத்த மதிப்பே மொத்த உபரி-மதிப்பை ஆளுகிறது, இந்த மொத்த உபரி-மதிப்புதான் சராசரி இலாப மட்டத்தையும், இவ் விதம் பொது இலாப வீதத்தையும் ஆளுகிறது — இது ஒரு பொது விதி, அல்லது ஏற்ற இறக்கங்களை ஆளும் விதி — என்பதால், மதிப்பு விதியே உற்பத்தி-விலைகளை ஆளுகிறது என்பது தெளி வாகிறது.

சந்தைப் போட்டியினால் முதலில் தனியொரு கிளையில் ஏற்படும் விளைவு சரக்குகளின் பல்வேறு தனிப்பட்ட மதிப்புகளி லிருந்து ஒரே சந்தை-மதிப்பும் சந்தை விலையும் நிலைபெறுவதே ஆகும். வெவ்வேறு கிளைகளில் முதலீடாகும் மூலதனங்களிடையி லான போட்டிதான் அந்தக் கிளைகளிடையே இலாப வீதங்களைச் சமனமாக்கி உற்பத்தி-விலையை முன்னுக்குக் கொண்டுவருகிறது. முதலாவதாகக் குறிப்பிட்ட நிகழ்முறையைக் காட்டிலும் இரண்டாவ தாகக் குறிப்பிட்ட நிகழ்முறைக்கு முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை கூடுதலாய் வளர்ச்சி அடைந்திருத்தல் அவசியமாகும்.

ஒரே உற்பத்திக் கிளையிலிருந்து வருபவையும், ஒரே வகையைச் சேர்ந்தவையும் கிட்டத்தட்ட ஒரே தரமுள்ளவையும் ஆன சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே விற்கப்பட வேண்டுமானால் அதற்கு அவசியமானவை இரண்டு:

முதலாவதாக, வெவ்வேறு தனிப்பட்ட மதிப்புகள் ஒரே சமுதாய மதிப்பாய், மேலே குறிப்பிட்ட சந்தை-மதிப்பாய் சமனமாக்கப்பட வேண்டும். ஒரே வகைச் சரக்கின் உற்பத்தியாளர்களிடையே போட்டி நிலவுவதும், மற்றும் அவர்கள் தமது பண்டங்களை விற் பதற்கு ஒரு பொதுவான சந்தை இருப்பதும் இதற்கு அவசியமாகும். முழுதொத்த சரக்குகளே ஆனாலும் அவை ஒவ்வொன்றும்

வெவ்வேறான தனிப்பட்ட நிலைமைகளுக்கு உட்பட்டு உற்பத்தியாகும் போது அவற்றின் சந்தை-விலை சந்தை-மதிப்புக்கு இணையானதாகவும் மேலே உயர்ந்தோ கீழே சரிந்தோ அம்மதிப்பிலிருந்து வேறுபட்டு விலகாததாகவும் அமைய வேண்டுமானால், சரக்கு விற்கிற பல்வேறு ஆட்களும் ஒருவர் மீது ஒருவர் பிரயோகிக்கும் நெருக்குதல் சமுதாயத் தேவைகளை நிறைவு செய்வதற்கு வேண்டிய சரக்குகளை — அதாவது சமுதாயம் சந்தை-மதிப்பை விலையாகக் கொடுத்து வாங்க முடிகிற அளவு சரக்குகளை — சந்தைக்கு வரச் செய்திடப் போதுமானதாய் இருப்பது அவசியம். உற்பத்திப் பண்டத் திரள் இந்த வேண்டலுக்கு மேல் போய் விடுமானால் சரக்குகளை அவற்றின் சந்தை-மதிப்புக்கும் குறைவான விலைக்கு விற்க வேண்டியிருக்கும். மாறாக, உற்பத்திப் பண்டத் திரள் வேண்டலை நிறைவு செய்திடப் போதுமானதாய் இல்லாவிட்டால் அல்லது விற்பவர்களிடையிலான போட்டியின் நெருக்குதல் இந்தப் பண்டத் திரளை சந்தைக்கு வரச் செய்திடப் போதுமானதாய் இல்லா விட்டால்—இரண்டும் ஒன்றே—சரக்குகள் சந்தை-மதிப்புக்கும் கூடுதலான விலைக்கு விற்கப்படுகின்றன. சந்தை-மதிப்பு மாறினால் சரக்குத் திரள் முழுவதும் விற்கப்படுவதற்கு அவசியமான நிலைமைகளிலும் மாற்றம் ஏற்படும். சந்தை-மதிப்பு குறைந்தால் சராசரி சமுதாய வேண்டல் (வேண்டல் என்னும் போது பயன்திற வேண்டலையே [effective demand] குறிப்பிடுகிறோம்) உயரும்; குறிப்பிட்ட சில வரம்புகளுக்கு உட்பட்டு சமுதாயம் இன்னும் அதிக அளவிலான சரக்குகளை உட்கிரகிக்கலாம். சந்தை-மதிப்பு உயர்ந்தால் சரக்குகளுக்கான சமுதாய வேண்டல் குறுகி உட்கிரகிக்கப்படும் சரக்குகளின் அளவு குறைந்து போகிறது. ஆக வழங்கலும் வேண்டலும் சந்தை-விலையை, அல்லது இன்னும் சரியாகச் சொன்னால், சந்தை-மதிப்பிலிருந்து சந்தை-விலை விலகிச் செல்வதை ஆளுகின்றன என்றால், பதிலுக்கு சந்தை-மதிப்பானது வழங்கலுக்கும் வேண்டலுக்குமான விகித உறவை, வழங்கல்-வேண்டலின் ஏற்ற இறக்கங்கள் சந்தை-விலைகளை அலைவுறச் செய்வதற்கான மையத்தை ஆளுகிறது.

நெருங்கிப் பார்க்கும் போது, தனியொரு சரக்கின் மதிப்புக்குப் பொருந்தக் கூடிய நிலைமைகள் இங்கே ஏதேனும் ஒரு வகைச் சரக்கின் மொத்த அளவினது மதிப்புக்கான நிலைமைகளாக மறுபதிப்பாவது தெரிகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி தொடக்கத்திலிருந்தே பெருந்திரள் உற்பத்தியாய் இருக்கக் காண்கிறோம். வளர்ச்சி குன்றிய ஏனைய பொருளுற்பத்தி முறைகளில் சிறுவீத உற்பத்தியாளர்கள் பலராலும் சிறு சிறு அளவுகளில் உற்பத்தி செய்யப்படுவதும் கூட — எப்படியும் முக்கியச் சரக்குகளைப் பொறுத்த வரையிலாவது — ஒப்பளவில் ஒரு சிலரேயான வணிகர்களின் கையில் பெரும் பெரும் அளவுகளாய்ச் சேர்ந்து பொதுவான

உற்பத்திப் பொருளாக சந்தையில் குவிக்கப்படுகிறது. இவ்வணிகர்கள் அச்சரக்குகளைத் திரட்டிச் சேர்த்து முழு உற்பத்திக் கிளையின் பொதுவான உற்பத்திப் பொருளாகவோ அதிலொரு கணிசப் பகுதியாகவோ விற்க முற்படுகிறார்கள்.

இங்கு ஒன்றை இடைக் குறிப்பாய்ச் சொல்லியாக வேண்டும்: ''சமுதாய வேண்டல்'' என்பது—வேண்டலின் கோட்பாட்டை ஆளுவதாகிய இது—அடிப்படையில் வெவ்வேறு வர்க்கங்களின் பரஸ்பர உறவு முறைக்கும் அவையவற்றின் பொருளாதார நிலைகளுக்கும் உட்பட்டதாகும்; எனவே குறிப்பாகச் சொன்னால், முதலாவதாக மொத்த உபரி-மதிப்புக்கும் கூலிக்குமிடையிலான விகித உறவுக்கும், இரண்டாவதாக உபரி-மதிப்பை பிரித்துப் பங்கிட்டு வரும் (இலாபம், வட்டி, நில-வாடகை, வரிகள் முதலான) பல்வேறு பகுதிகள் இடையிலான விகித உறவுக்கும் உட்பட்டதாகும். வழங்கலுக்கும் வேண்டலுக்குமான உறவு எந்த அடிப்படையின் மீது நிலவுகிறதோ அந்த அடிப்படையைக் கண்டறிந்து கொள்ளாமல், இந்த உறவைக் கொண்டு எதற்கும் விளக்கம் காண முடியாது என்பதுதான் திரும்பவும் இங்கு நிரூபணமாகிறது.

சரக்கு, பணம் இரண்டுமே பரிவர்த்தனை-மதிப்பும் பயன்-மதிப்பும் ஐக்கியமாவதைக் குறிக்கின்றன என்றாலும், எப்படி விற்றல்-வாங்கலின் போது இவ்விரு பணிகளும் நேரெதிர் முனைகளுக்குத் தள்ளப்பட்டு இரு கடைக்கோடி நிலைகளை ஏற்கின்றன என்று முன்பே (முதல் பாகம், அத்தியாயம் 1, பிரிவு 3) பார்த்தோம்; அதாவது சரக்கு (விற்பவர்) பயன்-மதிப்பைக் குறிக்கிறது, பணம் (வாங்குபவர்) பரிவர்த்தனை-மதிப்பைக் குறிக்கிறது. சரக்கு பயன்-மதிப்புடையதாகவும் இவ்விதம் ஒரு சமுதாயத் தேவையை நிறைவு செய்வதாகவும் இருக்க வேண்டும் என்பது விற்றலுக்கான முக்கிய முன்னிபந்தனைகளில் ஒன்றெனக் கண்டோம். மற்றொரு முன்னிபந்தனை என்னவென்றால், சரக்கில் அடங்கியுள்ள உழைப்பளவு சமூக வழியில் அவசியமான உழைப்பைக் குறிப்பதாய் இருக்க வேண்டும்; அதாவது அதன் தனிப்பட்ட மதிப்பு (இப்போதைய நமது அனுமானத்தின் படி இதுவும் அதன் விற்பனை-விலையும் ஒன்றுதான்) சமுதாய மதிப்புக்குச் சமமாய் இருக்க வேண்டும்.[28]

ஒரு முழுக் கிளையின் உற்பத்தியாய் அமைந்து சந்தைக்கு வரும் சரக்குத் திரளை இந்த இரு நிபந்தனைகளுக்கும் உட்படுத்திப் பார்ப்போம்.

பிரச்சினையை எளிதாய்ப் படம் பிடிக்கும் பொருட்டு ஒரு தொழிற் கிளையால் உற்பத்தி செய்யப்படும் இந்தச் சரக்குத் திரள்

[28] கார்ல் மார்க்ஸ், அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு, பெர்லின், 1859.

முழுவதையும் ஒரே சரக்காகவும் முழுதொத்த சரக்குகள் பலவற்றின் விலைகளது கூட்டுத் தொகையை ஒரே விலையாகவும் கொள்வோம். அப்போது தனியொரு சரக்கு பற்றி நாம் கூறியதெல்லாம் சந்தையில் கிடைக்கக் கூடிய ஒரு தொழிற் கிளை முழுவதன் சரக்குத் திரளுக்கும் அப்படியே சொல்பிசகாமல் பொருந்தும். இந்தச் சரக்குத் திரளில் அதன் உற்பத்திக்கு அவசியமான சமுதாய உழைப்பு அடங்கியிருக்கிறது என்பதாலும் இத்திரளின் மதிப்பு அதன் சந்தை-மதிப்புக்குச் சமமாய் இருக்கிறது என்பதாலும், சரக்கு ஒவ்வொன்றின் தனிப்பட்ட மதிப்பு அதன் சமுதாய மதிப்புக்கு ஒத்ததாய் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இப்போது நிறைவேற்றம் பெறுகிறது, அல்லது முடிவில் உறுதி செய்யப்படுகிறது.

இச்சரக்குகளில் பெரும் பகுதியானவை ஏறக்குறைய ஒரே விதமான இயல்பான சமுதாய நிலைமைகளில் உற்பத்தியாவதாய்க் கொள்வோம். அதாவது இம்மதிப்பு அதே போது இத்திரளில் அடங்கிய தனிப்பட்ட சரக்குகளின் தனிப்பட்ட மதிப்பும் ஆகிறது. இச்சரக்குகளில் ஒப்பளவில் சிறு பகுதியானவை இன்னும் மோசமான நிலைமைகளிலும், இன்னொரு சிறு பகுதியானவை இன்னும் சாதகமான நிலைமைகளிலும் உற்பத்தி செய்யப்பட்டிருக்குமானால், இதனால் பெரும் பகுதியான சரக்குகளின் சராசரி மதிப்பைக் காட்டிலும் ஒரு பகுதியின் தனிப்பட்ட மதிப்பு கூடுதலாகவும், இன்னொரு பகுதியின் தனிப்பட்ட மதிப்பு குறைவாகவும் இருக்குமானால், என்றாலும் இந்த இரு முனைகளும் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்ளுமானால், அதாவது இந்த முனைகளைச் சார்ந்த சரக்குகளின் சராசரி மதிப்பு மையத்திலுள்ள சரக்குகளின் மதிப்புக்குச் சமமானால், சந்தை-மதிப்பு சராசரி நிலைமைகளில் உற்பத்தியாகிற சரக்குகளின் மதிப்பால் நிர்ணயிக்கப்படுகிறது.[29] மொத்தச் சரக்குத் திரளின் மதிப்பு தனிப்பட்ட எல்லா சரக்குகளுடையவும் மதிப்புகளை உள்ளபடியே கூட்டி வரும் கூட்டுத் தொகைக்குச் சமம்—இச்சரக்குகள் சராசரி நிலைமைகளில் உற்பத்தி செய்யப்பட்டாலும் சரி, சராசரிக்கு மேலான அல்லது கீழான நிலைமைகளில் உற்பத்தி செய்யப்பட்டாலும் சரி. சரக்குத் திரளின் சந்தை-மதிப்பு, அல்லது சமுதாய மதிப்பு—சரக்குகளில் அடங்கியுள்ள அவசிய உழைப்பு நேரம்—நடுவாந்தரமான பெருந்திரளின் மதிப்பால் நிர்ணயிக்கப்படுகிறது.

மாறாக, சந்தைக்குக் கொண்டுவரப்படும் இந்தச் சரக்குகளின் மொத்தத் திரள் மாறாதிருப்பதாகவும், ஆனால் மோசமான நிலைமைகளில் உற்பத்தியாகிறவற்றின் மதிப்பு சாதக நிலைமைகளில் உற்பத்தியாகிறவற்றின் மதிப்பால் சரிக்கட்டப்படாததாகவும் கொள்வோம். அப்போது இச்சரக்குத் திரளில் மோசமான நிலைமைகளில்

---

29 மேலது.

உற்பத்தியாகிற பகுதியானது சராசரித் திரளோடும் எதிர்முனையோடும் ஒப்பிடுங்கால் குறிப்பிடத்தக்க பருமனாய் அமைகிறது. இந்நிலையில் மோசமான நிலைமைகளில் உற்பத்தியாகும் சரக்குத் திரளே சந்தை-மதிப்பை, அல்லது சமுதாய மதிப்பை ஆளுகிறது.

முடிவில், சராசரிக்கு மேலான நிலைமைகளில் உற்பத்தியாகும் சரக்குத் திரள் மோசமான நிலைமைகளில் உற்பத்தியாவதைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க அளவில் மிகுந்திருப்பதாகவும், சராசரி நிலைமைகளில் உற்பத்தியாவதோடு ஒப்பிடுகையில் கூட கணிசமாய் இருப்பதாகவும் கொள்வோம். அப்போது அதிசாதக நிலைமைகளில் உற்பத்தியாகும் பகுதியே சரக்கு-மதிப்பை நிர்ணயிக்கும். சந்தையில் இருப்பு மிகையாய் இருக்கும் நிலையை — இந்நிலையில் அதிசாதக நிலைமைகளில் உற்பத்தியகிற பகுதிதான் எப்போதும் சந்தை-விலையை ஆளுகிறது — இங்கு கவனியாது ஒதுக்கி விடுகிறோம். இங்கு நாம் பரிசீலித்துக் கொண்டிருப்பது சந்தை-மதிப்பின் பல்வேறு நிர்ணயிப்புகளையே தவிர சந்தை-மதிப்பிலிருந்து வேறுபடும் சந்தை-விலையை அல்ல.[30]

கண்டிப்பாகச் சொன்னால் (மெய்ந்நடப்பில் தோராயமாகவும் ஓராயிரம் திருத்தங்களோடுமே இது நடைபெறுகிறது) சராசரி

---

30 நில-வாடகை தொடர்பாக ஸ்டோர்ஹ், ரிக்கார்டோ இருவருக்கும் இடையே எழுந்தது ஒரு சர்ச்சை (பொருளை விட்டு சற்றும் விலகாமல் நடைபெற்ற சர்ச்சை இது; சொல்லப் போனால், எதிராளிகள் இருவரும் ஒருவரிடம் ஒருவர் கிஞ்சிற்றும் கவனம் செலுத்தவில்லை). சந்தை-மதிப்பானது (அவர்களைப் பொறுத்த வரை சந்தை-விலை என்றோ உற்பத்தி-விலை என்றோ சொல்லப்படுவது) சாதகமல்லாத நிலைமைகளில் உற்பத்தியாகிற சரக்குகளால் ஆளப்படுகிறதா (ரிக்கார்டோ) [**அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் மற்றும் வரிவிதிப்பு குறித்து**, மூன்றாம் பதிப்பு, லண்டன், 1821, பக்கம் 60-61.— ***ஆங்கிலப் பதிப்பாசிரியர்***], சாதக நிலைமைகளில் உற்பத்தியாகிறவற்றால் ஆளப்படுகிறதா (ஸ்டோர்ஹ்) [*Course d'economie politique, ou exposition des principes, qui determinent la prosperite des nations*, இரண்டாம் பாகம், செயிண்ட் பீட்டர்ஸ்பர்க், 1815, பக்கம் 78-79. — ***ஆங்கிலப் பதிப்பாசிரியர்***] என்பதே சர்ச்சை. இந்த சர்ச்சையின் முடிவு என்னவென்றால், இருவர் சொல்வதுமே சரி, இருவர் சொல்வதுமே தவறு, இருவருமே சராசரி நேர்வைப் பரிசீலிக்க அறவே தவறி விட்டனர் என்பதுதான். அதிசாதக நிலைமைகளில் உற்பத்தியாகிற சரக்குகளால் விலை ஆளப்படும் நேர்வுகள் குறித்து கார்பெட் என்ன சொல்கிறார் பாருங்கள் [**தனியாட்களது செல்வத்திற்கான காரணங்கள், முறைகள் பற்றிய ஆய்வு**, லண்டன், 1841, பக்கம் 42-44. — ***ஆங்கிலப் பதிப்பாசிரியர்***].— "இருவேறு பண்டங்களின் — ஒரு தொப்பி, ஒரு ஜோடி பாத அணிகள் — குறிப்பிட்ட இரு தொகுதிகள் சம உழைப்பளவுகளால் உற்பத்தி செய்யப்பட்டவையாக இருக்கும் போது ஒன்றுக்கொன்று பரிவர்த்தனையாகின்றன என்பதல்ல அவர் (ரிக்கார்டோ) சொல்வது. 'சரக்கு' என்பதை இங்கு 'சரக்கு வகை' என்றே புரிந்து கொள்ள வேண்டும். தனியொரு தொப்பி என்றோ பாத அணி ஜோடி என்றோ புரிந்து கொள்ளக் கூடாது. இந்த நோக்கத்தை மனத்திற் கொண்டு, இங்கிலாந்தில் தொப்பிகளனைத்தையும் உற்பத்தி செய்கிற முழு உழைப்பும் எல்லாத் தொப்பிகளிடையிலும் பிரித்துப் பங்கிடப்படுவதாய்க் கருத வேண்டும். இது முதலில் தெரிவிக்கப்படவில்லை, இந்தக் கோட்பாட்டின் பொது உரைகளிலும் தெரிவிக்கப்படவில்லை என்றெனக்குப்படுகிறது." (***அரசியல் பொருளாதாரத்தில் ... குறிப்பிட்ட சில வார்த்தைச் சர்ச்சைகள் பற்றிய கண்ணோட்டங்கள்***, லண்டன், 1821, பக்கம் 53-54.)

மதிப்புகளால் ஆளப்படுவதாகிய சரக்குத் திரள் முழுவதன் சந்தை-மதிப்பும் முதல் நேர்வில் அவற்றின் தனிப்பட்ட மதிப்புகளது கூட்டுத் தொகைக்குச் சமம்; இரு முனைகளிலும் உற்பத்தியாகிற சரக்குகளைப் பொறுத்த வரை இம்மதிப்பானது அவற்றின் மீது சுமத்தப்படும் சராசரி மதிப்பாய்க் குறிக்கப் பெறுகிறது என்றாலும் இதுவே நிலைமை. இந்நிலைமையில், படுமோசமான முனையில் உற்பத்தி செய்கிறவர்கள் தமது சரக்குகளை அவற்றின் தனிப்பட்ட மதிப்பை விடவும் குறைவான விலைக்கு விற்றாக வேண்டும். அதே போது அதிசாதக முனையில் உற்பத்தி செய்வோர் தமது சரக்கு களை அவற்றின் தனிப்பட்ட மதிப்பை விடவும் கூடுதலான விலைக்கு விற்கின்றனர்.

இரண்டாம் நேர்வில் இரு கடைக்கோடி நிலைகளில் உற்பத்தி யாகிற தனிப்பட்ட சரக்கு-மதிப்புத் தொகுதிகள் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்வதில்லை. மோசமான நிலைமைகளில் உற்பத்தி யாகிற சரக்கு-மதிப்புத் தொகுதிதான் பிரச்சினையைத் தீர்மானிக் கிறது. கண்டிப்பாகச் சொன்னால், ஒவ்வொரு தனிப்பட்ட சரக் கிற்குமான, அதாவது மொத்தத் திரளின் ஒவ்வோர் ஈவுப் பகுதிக்கு மான சராசரி விலை, அல்லது சந்தை-மதிப்பு இப்போது இந்தத் திரளின் மொத்த மதிப்பாலும் (பல்வேறு நிலைமைகளிலும் உற் பத்தியாகிற சரக்குகளின் மதிப்புகளைக் கூட்டிச் சேர்த்து இம் மொத்த மதிப்பைக் கண்டறிகிறோம்), இம்மொத்த மதிப்பில் ஒவ் வொரு தனிப்பட்ட சரக்கின் பங்கிற்கும் போய்ச் சேரும் ஈவுப் பகுதி யாலும் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்விதம் பெறப்படும் சந்தை-மதிப் பானது சாதக முனையைச் சேர்ந்த சரக்குகளின் தனிப்பட்ட மதிப்பை விட அதிகமாய் இருப்பதோடு, சராசரித் தொகுதியைச் சேர்ந்த சரக்குகளின் தனிப்பட்ட மதிப்பை விடவும் கூட அதிகமாய் இருக்கும். என்றாலும் அது சாதகமல்லாத முனையில் உற்பத்தியாகிற சரக்குகளின் தனிப்பட்ட மதிப்பை விடக் குறைவாகவே இருக்கும். இந்தத் தனிப்பட்ட மதிப்பை சந்தை-மதிப்பு எந்த அளவுக்கு நெருங்கி வரும் என்பது, அல்லது இவை இரண்டுமே முடிவில் ஒன்றாகி விடுமா என்பது குறிப்பிட்ட சரக்குத் துறையின் சாதகமல்லாத முனையில் உற்பத்தியாகிற சரக்குகளின் பரிமாணத்தையே முற்றி லும் சார்ந்திருக்கும். வேண்டலானது வழங்கலை மிகச்சிறு அளவுக்கே விஞ்சியிருக்குமானால், சாதகமல்லாத நிலைமைகளில் உற்பத்தி யாகிற சரக்குகளின் தனிப்பட்ட மதிப்புதான் சந்தை-விலையை ஆளுகிறது.

முடிவில், சாதக முனையில் உற்பத்தியாகிற சரக்குத் தொகுதி எதிர் முனையின் சரக்குத் தொகுதியை விட அதிகமாய் இருப்ப தோடு சராசரித் தொகுதியை விடவும் கூட அதிகமாய் இருக்கு மானால் (அதாவது மூன்றாம் நேர்வில்) சந்தை-மதிப்பு சராசரி மதிப்பை விடக் குறைந்து போகிறது. இரு முனைகளையும்

நடுவாந்தரத்தையும் சேர்ந்த மதிப்புத் தொகைகளைக் கொண்டு கணிக்கப்படுவதாகிய சராசரி மதிப்பு இங்கு நடுவாந்தரத்தின் மதிப்பை விடக் குறைவாயுள்ளது. சராசரி மதிப்பு நடுவாந்தரத்தின் மதிப்பை நெருங்கி வருவதோ அதிலிருந்து விலகிச் செல்வதோ சாதக முனை ஒப்பளவில் வகிக்கும் இடத்தைப் பொறுத்தது. வழங்கலை விட வேண்டல் மட்டாய் இருக்குமானால் சாதக நிலை பெற்றுள்ள பகுதியானது— அதன் பரிமாணம் என்னவானாலும்— தன் விலையைத் தன் தனிப்பட்ட மதிப்பின் வரம்பு வரை குறைத்துச் சென்று வலுவந்தமாய் இடம் ஏற்படுத்திக் கொள்கிறது. சந்தை-மதிப்பும் அதிசாதக நிலைமைகளில் உற்பத்தியாகிற சரக்குகளின் இந்தத் தனிப்பட்ட மதிப்பும் ஒருபோதும் ஒன்றாக முடியாது— வேண்டலை வழங்கல் வெகுவாய் விஞ்சி விடுகிற சந்தர்ப்பங்கள் மட்டும் இதற்கு விலக்காகும்.

சந்தை-மதிப்புகளின் இந்த நிர்ணயிப்பு, இங்கு நாம் சூக்குமமாகவே வரைந்து காட்டியுள்ள இது மெய்யான சந்தையில் வாங்குவோரிடையிலான போட்டாபோட்டியின் மூலம் நடந்தேறுகிறது— இவ்விதம் நிர்ணயமாகும் மதிப்புகளில் சரக்குத் திரள் முழுவதையும் உட்கிரகிக்க வேண்டல் போதிய வலுப் பெற்றிருப்பதாய்க் கொள்கிறோம். இது நம்மை இரண்டாவது அவசியத்திற்கு அழைத்து வந்து விடுகிறது.

ஒரு சரக்கு பயன்-மதிப்பைப் பெற்றுள்ளது என்று சொல்வதும் அது ஒரு சமுதாயத் தேவையை நிறைவு செய்கிறது என்று சொல்வதும் ஒன்றுதான். தனியொரு சரக்கை மட்டும் நாம் ஆராய்ந்து கொண்டிருந்த வரை, குறிப்பிட்ட சரக்கிற்குத் தேவை இருப்பதாக அனுமானம் செய்து கொள்ள முடிந்தது. நிறைவு செய்தாக வேண்டிய தேவையின் அளவு குறித்து மேலும் விவரமாய் ஆராயாமல் சரக்கின் விலையிலேயே அதன் அளவு குறிக்கப் பெற்று விட்டதாய்க் கொண்டோம். ஒரு பக்கத்தில் ஓர் உற்பத்திக் கிளை முழுவதன் உற்பத்தியையும் மறு பக்கத்தில் அதற்கான சமுதாயத் தேவையையும் வைத்துப் பரிசீலிக்க முற்பட்டவுடனே இந்த அளவு என்ன என்பது அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகி விடுகிறது. இப்போது சமுதாயத் தேவையின் பரிமாணத்தை, அதாவது அதன் அளவினைப் பரிசீலிப்பது அவசியமாகிறது.

சந்தை-மதிப்பின் மேற்கண்ட நிர்ணயிப்புகளில், உற்பத்திச் சரக்குகளின் திரள் குறிப்பிட்டதாய் இருப்பதாக, அதாவது மாறாதிருப்பதாகக் கொண்டோம். வெவ்வேறான நிலைமைகளில் உற்பத்தி செய்யப்படுகிறவையான இத்திரளின் அடக்கக் கூறுகளிடையிலான விகித உறவுகளில் மட்டும் மாற்றம் ஏற்படுவதாகவும், எனவே ஒரே சரக்குத் திரளின் சந்தை-மதிப்பு வெவ்வேறு விதமாய் ஆளப்படுவதாகவும் கொண்டோம். இந்தச் சரக்குத் திரள் வழக்கமான

வழங்கலின் அளவுக்கு இணையாவதாய்க் கொள்வோம், உற்பத்திச் சரக்குகளில் ஒரு பகுதி சந்தையிலிருந்து தற்காலிகமாய் விலக்கிக் கொள்ளப்படும் சாத்தியப்பாட்டைக் கருதாமல் ஒதுக்கி விடுவோம். இந்தச் சரக்குத் திரளுக்கான வேண்டலும் இப்போது மாறாதிருக்கு மானால், சரக்கு அதன் சந்தை-மதிப்புக்கே விற்கப்படும்; இச்சந்தை-மதிப்பு மேலே நாம் ஆராய்ந்த மூன்று நேர்வுகளில் எந்த ஒன்றா லும் ஆளப்படலாம். இந்தச் சரக்குத் திரள் ஒரு தேவையை நிறைவு செய்கிறது என்பதோடு முழுமையாகச் சமுதாய அளவிலும் நிறைவு செய்கிறது. சரக்குகளின் அளவு அவற்றுக்கான வேண்டலை விட குறைவாகவோ கூடுதலாகவோ இருக்குமானால், சந்தை-விலை சந்தை-மதிப்பிலிருந்து விலகிச் செல்லும். முதலாவதாக, வழங்க லின் அளவு குறைவாய் இருந்தால், எப்போதுமே சந்தை-மதிப் பானது படுமோசமான நிலைமைகளில் உற்பத்தியாகிற சரக்கு களால் ஆளப்படும்; வழங்கலின் அளவு மிகையாய் இருந்தால் எப்போதுமே சந்தை-மதிப்பானது அதிசாதக நிலைமைகளில் உற் பத்தியாகிற சரக்குகளால் ஆளப்படும். ஆக, இரு முனைகளில் ஒன்றுதான் சந்தை-மதிப்பை நிர்ணயிக்கிறது; வெவ்வேறான நிலைமைகளில் உற்பத்தியாகிற சரக்குத் திரள்களின் விகித அளவு களை மட்டும் எடுத்துக் கொண்டால் வேறு விதமான முடிவு பெறப்படும் என்றாலும் கூட உண்மையில் நடப்பது இதுதான். உற்பத்திப் பொருளுக்கான வேண்டலுக்கும் அது உற்பத்தியாகிற அளவுக்கும் இடையிலான வேறுபாடு இன்னுங்கூட கணிசமாய் இருக்குமானால், அதே போல் சந்தை-விலையும் சந்தை-மதிப்பை விட கணிசமாய் அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும். உற் பத்திச் சரக்குகளின் அளவுக்கும் இந்தச் சரக்குகள் அவற்றின் சந்தை-மதிப்புக்கு விற்கப்படும் அளவுக்கும் இடையிலான வேறு பாட்டுக்கு இரு காரணங்கள் இருக்கலாம். ஒன்று, உற்பத்திச் சரக்குகளின் அளவு மாறுகிறது, மிகக் குறைவோ மிக அதிகமோ ஆகி விடுகிறது; அதாவது குறிப்பிட்ட சந்தை-மதிப்பை நிர்ணயிப்ப தாய் இருந்ததிலிருந்து வேறான அளவுவீதத்தில் மறுவுற்பத்தி நடைபெறும். இந்நிலையில், வேண்டல் மாறாதிருந்த போதிலும் வழங்கல் மாறுகிறது, இவ்விதம் ஒப்பீட்டு மிகையுற்பத்தியோ குறை யுற்பத்தியோ நிகழ்கிறது. அல்லது, மறுவுற்பத்தியும், எனவே வழங்கலும் மாறாதுள்ளன; ஆனால் வேண்டல் உயரவோ குறை யவோ செய்கிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இங்கே வழங்கலின் அறுதிப் பருமன் மாறவில்லை என்றாலும் அதன் ஒப்பீட்டுப் பருமன் [relative magnitude] அதாவது வேண்டலுடன் ஒப்பிடப்படுவதும் வேண்டலைக் கொண்டு அளவிடப்படுவதுமான அதன் பருமன் மாறியுள்ளது. முதல் நேர்வில் ஏற்பட்ட அதே விளைவு இங்கும் ஏற்படுகிறது, ஆனால் எதிர்த் திசையில் ஏற்படு கிறது. முடிவில், மாற்றங்கள் இரு தரப்பிலும் ஏற்படுவதாகவும்,

ஆனால் எதிரெதிர்த் திசைகளிலோ, ஒரே திசையில் என்றால் வெவ்வேறு அளவுக்கோ ஏற்படுவதாகவும் கொள்வோமானால், அதாவது மாற்றங்கள் இரு தரப்பிலும் ஏற்பட்ட போதிலும் அவ்விரு தரப்புகளுக்கும் இடையிலான பழைய விகித உறவை மாற்றும் வகையில் ஏற்படுவதாகக் கொள்வோமானால் அப்போதும் இறுதி விளைவு மேற்குறிப்பிட்ட இரு நேர்வுகளில் ஒன்றுக்கு வழி செய்வதாகவே இருந்தாக வேண்டும்.

வேண்டலும் வழங்கலுமான பொதுக் கருத்துருவங்களை வகுத்துரைப்பதிலுள்ள மெய்யான இடர்ப்பாடு என்னவென்றால், சொன்னதையே திருப்பிச் சொல்லும் சொற்புரட்டாகவே அது தோற்றமளிப்பதுதான். முதலில் வழங்கலை எடுத்துக் கொள்வோம். உள்ளபடியே சந்தையில் விற்பனைக்குத் தயாராயிருக்கிற அல்லது சந்தைக்கு அனுப்பும் படியான நிலையில் இருக்கிற உற்பத்திப் பொருளையே வழங்கல் என்கிறோம். உதவாத விவரங்களில் மாட்டிக் கொள்வதைத் தவிர்க்கும் பொருட்டு, தனிப்பட்ட ஒவ்வோர் உற்பத்திக் கிளையிலும் ஒவ்வோர் ஆண்டும் மறுவுற்பத்தி ஆகிற பண்டத் திரளை மட்டும் இங்கே கருத்திற் கொண்டு, சந்தையிலிருந்து விலக்கி எடுத்து (உதாரணமாய்) அடுத்த ஆண்டு வரை நுகர்வுக்காக சேமித்து வைக்கக் கூடியவையாய் பல்வேறு சரக்குகளும் எந்த அளவுக்கு உள்ளன என்பதைக் கருதாமல் ஒதுக்கி விடுவோம். இந்த வருடாந்தர மறுவுற்பத்தியானது குறிப்பிட்ட அளவுடையதாகக் குறிக்கப் பெறுகிறது; இந்தச் சரக்குத் திரள் தனித்தனிக் கூறுகளாக அளவிடப்படுகிறதா, விடாத் தொடராக அளவிடப்படுகிறதா என்பதைப் பொறுத்து எடையளவாகவோ எண்ணிக்கையளவாகவோ குறிக்கப் பெறுகிறது. இச்சரக்குகள் மனிதத் தேவைகளை நிறைவு செய்யும் பயன்-மதிப்புகள் என்பதோடு, குறிப்பிட்ட அளவுகளில் சந்தையில் கிடைக்கிற பயன்-மதிப்புகளும் ஆகும். ஆனால், இரண்டாவதாக, இந்தச் சரக்களவு குறிப்பிட்ட சந்தை-மதிப்பை உடையதாகும்; இச்சந்தை-மதிப்பைத் தனியொரு சரக்கின் அல்லது அதன் அளவை-அலகின் சந்தை-மதிப்பினது பெருக்கற்பலனாய்க் குறித்திடலாம். சந்தையிலுள்ள சரக்குகளின் அளவுப் பரிமாணத்துக்கும் அவற்றின் சந்தை-மதிப்புக்கும் இடையில் அவசியத் தொடர்பு ஒன்றுமில்லை. ஏனென்றால் (எடுத்துக்காட்டாக) சில சரக்குகள் இயல்பிலேயே உயர்ந்த மதிப்புடையனவாகவும் வேறு சில சரக்குகள் இயல்பிலேயே குறைந்த மதிப்புடையனவாகவும் உள்ளன. அதாவது குறிப்பிட்ட மதிப்புத் தொகை ஒரு சரக்கின் மிகப் பெரும் அளவாலும் இன்னொன்றின் மிகச் சிறு அளவாலும் குறிக்கப் பெறலாம். சந்தையில் கிடைக்கிற பண்டங்களின் அளவுக்கும் இந்தப் பண்டங்களின் சந்தை-மதிப்புக்கும் இடையிலுள்ள ஒரேயொரு தொடர்பு இது தான்: உழைப்பின் உற்பத்தித் திறன் குறிப்பிட்டதாய் இருக்க,

தனிப்பட்ட ஒவ்வோர் உற்பத்திக் கிளையிலும் குறிப்பிட்ட பண்ட அளவின் உற்பத்திக்கு குறிப்பிட்ட அளவு சமுதாய உழைப்பு-நேரம் தேவைப்படுகிறது; இந்த விகித உறவு உற்பத்திக் கிளைக்கு உற்பத்திக் கிளை மாறுபட்ட போதிலும், இதற்கும் இந்தப் பண்டங்களின் பயனுடைமை அல்லது அவற்றின் பயன்-மதிப்புகளுக்குள்ள தனித் தன்மைக்கும் உள்ளார்ந்த தொடர்பேதும் இல்லை என்ற போதிலும் இதுவே நிலைமை. மற்றெல்லா நிலைமைகளும் சமமெனக் கொள்ளும் போது ஏதேனுமொரு சரக்கின் a அளவுக்கு b உழைப்பு நேரம் செலவாகிறது என்றால் அதே சரக்கின் na அளவிற்கு nb உழைப்பு நேரம் செலவாகும். மேலும், சமுதாயம் ஏதேனுமொரு தேவையை நிறைவு செய்து கொள்ள விரும்புகிறது, இதற்காக ஒரு பண்டத்தை உற்பத்தி செய்விக்கிறது என்றால் அது அப்பண்டத்திற்கு விலை கொடுத்தாக வேண்டும். உள்ளபடியே, சரக்கு உற்பத்திக்கு உழைப்புப் பிரிவினை அவசியமாவதால், கிடைக்கிற உழைப்பு நேரத்தில் ஒரு பகுதியை இப்பண்டத்தின் உற்பத்திக்காக ஒதுக்குவதன் மூலமே சமுதாயம் அதற்கு விலை கொடுக்கிறது. அதாவது சமுதாயம் அதன் வசமிருக்கும் உழைப்பு நேரத்தில் குறிப்பிட்ட அளவை விலையாகக் கொடுத்து இப்பண்டத்தை வாங்குகிறது. சமுதாயத்தின் ஒரு பிரிவினர் இந்தக் குறிப்பிட்ட பண்டத்தை உற்பத்தி செய்வதில் உழைப்புப் பிரிவினையின் படி தம் உழைப்பை ஈடுபடுத்த வேண்டியதாகிறது. இவர்கள் அதற்குச் சமதையான சமுதாய உழைப்பைத் தம் தேவைகளை நிறைவு செய்கிற பண்டங்களின் வடிவில் பெற்றாக வேண்டும். ஆனால், ஒரு புறம், ஒரு சமுதாயப் பண்டத்திற்காகச் செலவிடப்படும் சமுதாய உழைப்பின் மொத்த அளவுக்கும், அதாவது சமுதாயம் அதனிடமுள்ள மொத்த உழைப்புச் சக்தியில் இந்தப் பண்டத்தின் உற்பத்திக்காகச் செலவிடும் ஈவுப் பகுதிக்கும், எனவே மொத்த உற்பத்தியில் இந்தப் பண்டத்தின் உற்பத்திக்குள்ள பரிமாணத்துக்கும், மறு புறம் குறிப்பிட்ட பண்டத்தால் கவனிக்கப்பட வேண்டிய தேவையை நிறைவு செய்வதற்கு சமுதாயம் முனைந்திடும் அளவிற்கும் இடையே தற்செயல் தொடர்பு உண்டே 'தவிர அவசியத் தொடர்பு ஏதும் கிடையாது. தனியொரு பண்டம் அல்லது ஒரு சரக்கின் குறிப்பிட்ட அளவானது அதன் உற்பத்திக்குத் தேவையான சமுதாய உழைப்பை மட்டும் கொண்டதாய் இருக்கலாம்; இந்தக் கண்ணோட்டத்தில், இந்தச் சரக்கு முழுவதன் சந்தை-மதிப்பானது அவசிய-உழைப்பை மட்டும் குறிக்கிறது. ஆனால் இந்தச் சரக்கு அந்நேரத்திய சமுதாயத் தேவைகளுக்கும் மிகையாக உற்பத்தி செய்யப்பட்டால், அவ்வளவு சமுதாய உழைப்பு நேரம் வீணாகிறது, குறிப்பிட்ட சரக்குத் திரளானது உள்ளபடியே தன்னகத்தே கொண்டிருப்பதை விட மிகக் குறைந்த சமுதாய உழைப்பளவைக் குறிப்பதாகிறது. (பொருளுற்பத்தியானது சமுதாயத்தின்

உண்மையான நேரடிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடைபெறும் போதுதான், தனிப்பட்ட பண்டங்களின் உற்பத்திக்குப் பயன் படுத்தப்படும் சமுதாய உழைப்பு நேரத்தின் பரிமாணத்துக்கும் இந்தப் பண்டங்கள் நிறைவு செய்தாக வேண்டிய சமுதாயத் தேவையின் பரிமாணத்துக்கும் இடையே சமுதாயம் தொடர்பு ஏற்படுத்த முடியும்.) ஆகவே இச்சரக்குகளை அவற்றின் சந்தை-மதிப்புக்கும் குறைவான விலைக்கே விற்றாக வேண்டும், அவற்றில் ஒரு பகுதியை விற்கவே முடியாமலும் போகலாம். குறிப்பிட்ட வகைச் சரக்கின் உற்பத்திக்காகச் செலவிடப்படும் சமுதாய உழைப் பளவு அச்சரக்கிற்கான சமுதாய வேண்டலை நிறைவு செய்வ தற்குப் போதுமானதாய் இல்லா விட்டால் மேற்சொன்னதற்கு நேர்மாறாக நிகழ்கிறது. ஆனால் குறிப்பிட்ட பண்டத்தின் உற்பத்திக் காகச் செலவிடப்படும் சமுதாய உழைப்பளவு அப்பண்டத்திற்கான சமுதாய வேண்டலுக்கு ஏற்றதாய் இருக்குமானால், அதாவது உற்பத்தியின் அளவு மறுவுற்பத்தியின் வழக்கமான அளவுக்கு ஏற்றதாய் இருந்து, வேண்டலும் மாறாதிருக்குமானால், அப்பண்டம் அதன் சந்தை-மதிப்புக்கே விற்கப்படும். சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே பரிவர்த்தனை அல்லது விற்பனை ஆவது அறிவுக்குகந்த நிலை ஆகும், அதாவது அவற்றிடையிலான சம நிலையின் இயற்கை விதி ஆகும். இந்த விதியைக் கொண்டுதான் விலகல்களுக்கு விளக்கம் சொல்ல முடியும், விலகல்களைக் கொண்டு விதிக்கு விளக்கம் சொல்ல முடியாது.

மறு பக்கத்தை—வேண்டலை—இப்போது பரிசீலனை செய் வோம்.

சரக்குகள் உற்பத்திச் சாதனங்களாகவோ வாழ்வுச் சாதனங்க ளாகவோ விலைக்கு வாங்கப்படுகின்றன. திறனுடை நுகர்விலோ சொந்த நுகர்விலோ சேரும் பொருட்டு இவ்விதம் வாங்கப்படு கின்றன. சில சரக்குகள் இரு நோக்கங்களுக்கும் பயன்படக் கூடும் என்றாலும் அதனால் எவ்வித மாற்றமும் இல்லை. சரக்குகளுக்கான வேண்டல் உற்பத்தியாளர்களிடமிருந்தும் வருகிறது (உற்பத்திச் சாதனங்கள் மூலதனமாக மாற்றப்படுவதாய்க் கொள்கிறோம், எனவே உற்பத்தியாளர்கள் என்றால் இங்கு முதலாளிகளைக் குறிக்கும்), நுகர்வாளர்களிடமிருந்தும் வருகிறது. வேண்டலின் தரப்பில் குறிப்பிட்ட அளவு சமுதாயத் தேவை நிலவுவதாகவும், அதற்கிணையாக மறு தரப்பில் வெவ்வேறு உற்பத்திக் கிளை களிலும் குறிப்பிட்ட அளவு சமுதாயப் பொருளுற்பத்தி நடை பெறுவதாகவும் இரு தரப்பாரும் நினைப்பதாக முதற் பார்வைக்குத் தெரிகிறது. பருத்தித் தொழிலானது குறிப்பிட்ட அளவுவீதத்தில் அதன் வருடாந்தர மறுவுற்பத்தியை நடத்திச் செல்ல வேண்டு மானால், வழக்கமான அளவில் பருத்தி வழங்கப் பெறுவதும், ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க, மூலதனத் திரட்டலால் ஏற்படும்

வருடாந்தர மறுவுற்பத்தி விரிவாக்கத்துக்கு ஏற்ப கூடுதல் பருத்தி யும் அதற்குத் தேவைப்படுகின்றன. வாழ்வுச் சாதனங்களுக்கும் இது அப்படியே பொருந்தும். தொழிலாளி வர்க்கம் சராசரியாக அதற்கு வழக்கமான முறையில் தொடர்ந்து வாழ்ந்து வர வேண்டுமானால், எப்படியும் முன்பிருந்த அதே அளவிலாவது அவசியப் பண்டங்கள் அதற்குக் கிடைத்து வரவேண்டும். இந்தப் பண்ட அளவு பல்வேறு வகைச் சரக்குகளாகவும் பங்கீடாகிற முறை சற்றே வேறுபடலாம் என்றாலும் இதுவே நிலைமை. மற்றும் வருடாந்தர மக்கள்தொகைப் பெருக்கத்துக்கு ஈடாகவும் கூடுதல் பண்ட அளவு அவசியமாகும். சில பல திருத்தங்களோடு இதுவே ஏனைய வர்க்கங்களுக்கும் பொருந்தும்.

ஆக, வேண்டலின் தரப்பில் திட்டமாய் வரையறுக்கப்பட்ட அளவில் குறிப்பிட்ட சமுதாயத் தேவைகள் இருப்பதாகவும், இத்தேவைகள் நிறைவு பெறுவதற்கு சந்தையில் குறிப்பிட்ட அளவில் சரக்கு இருக்க வேண்டும் என்றும் தோன்றுகிறது. ஆனால் இந்த சமுதாயத் தேவைகள் நெகிழ்வுடன் எளிதில் மாறுகிறவை. அவை நிலையாய் இருப்பதெல்லாம் பொய்த் தோற்றமே. வாழ்வுச் சாதனங் கள் இன்னுங் கூட விலைமலிவாய் இருந்தால், அல்லது பணக் கூலி அதிகமாய் இருந்தால், தொழிலாளர்கள் அவற்றை அதிகமாய் வாங்குவார்கள், அவற்றுக்கான ''சமுதாயத் தேவை'' அதிகரிக்கும்; உயிர் வாழ்வதற்கு வேண்டிய மிகக் குறுகிய வரம்புகளுக்கும் குறைவான ''வேண்டலுக்குக்'' காரணமாகிற வக்கற்றோரையும் இன்ன பிறரையும் சொல்லவே வேண்டாம். மறு புறம் பருத்தியின் விலை குறையுமானால் அதற்கான முதலாளிகளின் வேண்டல் அதிகரிக்கும், கூடுதல் மூலதனம் இன்னுமதிகமாய் பருத்தித் தொழிலில் இடப்படும்; இவ்வாறே இன்னும் சொல்லலாம். இது தொடர்பாக நாம் மறக்கவே கூடாதது என்னவென்றால், திறனுடை நுகர்வுக்கான வேண்டல் நமது அனுமானப்படி முதலாளியின் வேண்டல் ஆகும். இதன் அடிப்படை நோக்கம் உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதாகும். ஆகவே அவர் இந்நோக்கத்தை மனத்தி லிருத்தியே குறிப்பிட்ட சரக்கு வகையை உற்பத்தி செய்கிறார். என்றாலும் முதலாளி (உதாரணமாய்) பருத்தி வாங்குகிறவராக சந்தையில் இருந்து வரும் வரை இப்பருத்திக்கான தேவையைக் குறிப்பவராகவே இருப்பார். பருத்தியை வாங்குகிறவர் அதனை சட்டைத் துணி ஆக்குகிறாரா, வெடிப் பஞ்சு ஆக்குகிறாரா, அல்லது தன் காதையோ ஏனையோர் காதையோ அடைக்கும் அடைப்பான் ஆக்குகிறாரா என்பது பற்றியெல்லாம் பருத்தி விற்கிற வருக்குக் கவலையே இல்லை. என்றாலும் முதலாளி எதற்காகப் பருத்தி வாங்குகிறார் என்பது அவர் எவ்வளவு விலை கொடுத்து வாங்குவார் என்பதைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கவே செய்கிறது. முதலாளிக்கு வேண்டியதெல்லாம் இலாபம் ஒன்றே,

இதன் மாறுவேடம்தான் பருத்திக்கான அவரது வேண்டல்—இவ்வுண்மையால் அவரது வேண்டல் கணிசமாய்த் திருத்தப் பெற்று விடுகிறது. சரக்குகளுக்கு சந்தையில் நிலவும் தேவையாகிய வேண்டல் உள்ளபடியான **சமுதாயத் தேவையிலிருந்து** அளவு வகையில் எவ்வரம்புகளுக்குள் வேறுபடுகிறது என்பது சரக்குக்கு சரக்கு கணிசமாய் மாறுபடுவது இயல்புதான்; சரக்கிற்கு இருக்கிற வேண்டலுக்கும், வேறு விதமான விலைகளில், அல்லது வாங்குகிறவர்களின் வேறு விதமான நிதி நிலைமைகளிலும் வாழ்க்கை நிலைமைகளிலும் இருக்கக் கூடிய வேண்டலுக்கும் இடையிலான வேறுபாட்டையே சொல்கிறேன்.

வேண்டலுக்கும் வழங்கலுக்குமான முரணிலைகளையும், இவற்றின் விளைவாக சந்தை-விலைகள் சந்தை-மதிப்புகளிலிருந்து விலகிச் செல்வதையும் புரிந்து கொள்வது எவர்க்கும் எளிதே. மெய்யாகவே எது அரிதென்றால், வேண்டலும் வழங்கலும் சமமாதல் என்று சொல்வதன் பொருளை வரையறுப்பதே.

குறிப்பிட்ட உற்பத்திக் கிளையில் உற்பத்தியாகும் சரக்குத் திரளை அதன் சந்தை-மதிப்பூக்கே—அதற்கு மேலாகவோ கீழாகவோ அல்ல—விற்கக் கூடிய விதத்தில் வேண்டலுக்கும் வழங்கலுக்குமான விகித உறவு அமையும் போது வேண்டலும் வழங்கலும் சமம் ஆகின்றன. முதலாவதாக நமக்குச் சொல்லப்படுவது இது.

இரண்டாவது என்னவென்றால்: சரக்குகளை அவற்றின் சந்தை-மதிப்புக்கே விற்க முடியும் போது வேண்டலும் வழங்கலும் சமம் ஆகின்றன.

வேண்டலும் வழங்கலும் சமமானால் அவற்றால் எவ்விளைவும் ஏற்படாது போகிறது; எனவேதான் சரக்குகள் அவற்றின் சந்தை-மதிப்புக்கே விற்கப்படுகின்றன. இரு சக்திகள் எதிரெதிர்த் திசைகளில் சரிநிகராய்ச் செயல்படும் போதெல்லாம் அவை ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்கின்றன. புறத்தே எவ்விளைவும் அவற்றால் ஏற்படுவதில்லை; இந்நிலைமைகளில் புலப்படும் நிகழ்வுகளுக்கு இவ்விரு சக்திகளின் செயல்பாடல்லாத வேறு காரணங்களைக் கொண்டுதான் விளக்கம் அளித்தாக வேண்டும். வேண்டலும் வழங்கலும் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்ளுமானால், அவை எதற்கும் காரண விளக்கமாய் இல்லாது போகின்றன, அவற்றால் சந்தை-மதிப்பில் எவ்விளைவும் உண்டாவதில்லை; ஆகவே சந்தை-மதிப்பு இந்தப் பணத் தொகையாகத் தான்தெரிவிக்கப்பட வேண்டும், வேறு எத்தொகையாகவும் அல்ல என்பதற்கு என்ன காரணம் என்பது இதனால் இம்மியளவும் தெளிவாவதில்லை. வேண்டலும் வழங்கலும் பரஸ்பரம் செயல் புரிவதைக் காட்டி முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் மெய்யான உள் விதிகளுக்கு விளக்கம் அளித்து விட முடியாது என்பது தெளிவு (இவ்விரு சமூக இயக்கு **சக்திகளையும்** இன்னுங்கூட ஆழப்

பகுத்தாய்ந்தால்தான் இவற்றுக்கு விளக்கமளிக்க முடியும் என்றாலும், அதற்குரிய இடம் இதுவல்ல). ஏனென்றால் வேண்டலும் வழங்கலும் செயல்படாது போகும் வரை, அதாவது அவை ஒன்றுக்கு ஒன்று சமமாகும் வரை இந்த விதிகளை அவற்றின் தூய வடிவில் தெளிவாகக் கண்டுணர முடியாது. மெய்ந்நடப்பில் வேண்டலும் வழங்கலும் சமமாவதே இல்லை; அப்படியே ஆனாலும் தற்செயலாக மட்டுமே சமமாகின்றன. விஞ்ஞான நோக்கங்களுக்கு இந்தத் தற்செயல் நிகழ்வைக் கணக்கில் கொள்வதற்கில்லை; இப்படியொன்று நடைபெறவில்லை என்றே கொள்ள வேண்டும். ஆனால் அரசியல் பொருளாதாரமானது வேண்டலும் வழங்கலும் ஒன்றுக் கொன்று சமமாவதாய்க் கொள்கிறதே, ஏன்? புலப்படும் நிகழ்வுகளைப் பார்த்து ஆராயும் போது அடிப்படை உறவுகளைக் காட்டும் படியான வடிவில், அவற்றின் கருத்துருவத்திற்கு ஏற்ற வடிவில் ஆராய்ந்திட வேண்டும், அதாவது வேண்டல்-வழங்கலின் அசைவியக்கத்தால் உண்டாகும் தோற்றங்களைச் சாராமல் இந் நிகழ்வுகளை ஆராய்ந்திட வேண்டும் என்பதற்காகவே. இன்னொரு காரணம், இந்நிகழ்வுகளினது அசைவியக்கத்தின் மெய்யான போக்கைக் கண்டறியவும் ஓரளவுக்கு வரையறுத்துச் சொல்லவும் வேண்டும் என்பதாகும். முரணிலைகள் பகைத்தன்மை வாய்ந்தவை என்பதாலும், ஓயாமல் அடுத்தடுத்து வருகிறவை என்பதாலும், தமது எதிரெதிர் அசைவியக்கங்களின் மூலமாகவும் பரஸ்பர முரண்பாட்டின் மூலமாகவும் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்கின்றன. ஆகவே, வேண்டலும் வழங்கலும் குறிப்பிட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒன்றுக்கொன்று சமமாவதில்லை என்றாலும், அவற்றின் முரணிலைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடருவது காரணமாய்—ஒரு திசையில் விலகிச் செல்வதன் விளைவு எதிர்த் திசையில் விலகிச் செல்வதை அவசியமாக்குவது காரணமாய்—குறிப்பிட்ட கால அளவை எடுத்து முழுமையாக நோக்கும் போதெல்லாம் வேண்டலும் வழங்கலும் சமமாகின்றன. ஆனால் கடந்த கால அசைவியக்கங்களின் சராசரி என்ற முறையில் மட்டுமே, முரண்பாட்டினது ஓயாத அசைவியக்கத்தின் வாயிலாக மட்டுமே அவை சமமாகின்றன. சந்தை-மதிப்புகளிலிருந்து விலகிச் செல்லும் சந்தை-விலைகள் சராசரிக் கணக்கில் சரிக்கட்டப்பெற்று சந்தை-மதிப்புகளுக்கே சமமாகி விடுகின்றன. எப்படியென்றால் இந்த மதிப்புகளிலிருந்தான விலகல்கள் கூட்டல்களும் கழித்தல்களுமாய் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்கின்றன. இந்தச் சராசரியானது தத்துவ வகையில் மட்டும் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல, இது மூலதனத்துக்கு நடைமுறை வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. மூலதன முதலீடானது ஓரளவுக்கு நிர்ணயமான காலத்தின் போது ஏற்படும் அலைவுகளையும் சரியீடுகளையும் வைத்துக் கணக்கிடப்படுகிறது.

ஆகவே, வேண்டலுக்கும் வழங்கலுக்குமான உறவானது சந்தை-விலைகள் சந்தை-மதிப்புகளிலிருந்து ஏன் விலகிச் செல்கின்றன என்பதை மட்டுமே விளக்குகிறது; மறு புறம், இந்த விலகல்களை, அதாவது வேண்டலுக்கும் வழங்கலுக்குமான உறவின் விளைவை அகற்றும் போக்கைக் குறிப்பதாகவும் இருக்கிறது. (மதிப்பு இல்லாமல் விலை மட்டும் உள்ள சரக்குகளைப் போன்ற விதிவிலக்குகளை இங்கு கருதுவதற்கில்லை.) வேண்டலும் வழங்கலும் அவற்றின் முரணிலையால் ஏற்படும் விளைவைப் பல்வேறு வழிகளில் போக்கலாம். எடுத்துக்காட்டாக, வேண்டல் சரிந்து, அதனால் சந்தை-விலையும் சரியுமானால் மூலதனம் விலக்கிக் கொள்ளப்பட்டு, அதனால் வழங்கல் சுருங்கலாம். அவசியமான உழைப்பு நேரத்தைக் குறையச் செய்யும் கண்டுபிடிப்புகளின் பயனாய் சந்தை-மதிப்பே சுருங்கி சந்தை-விலையோடு சமப்படவும் நேரிடலாம். மாறாக, வேண்டல் அதிகரித்து அதன் விளைவாக சந்தை-மதிப்புக்கு மேல் சந்தை-விலை உயருமானால், இந்த உற்பத்திக் கிளையினுள் மிக அதிக மூலதனம் நுழைவதற்கும், இதனால் உற்பத்தி பெருகி சந்தை-விலை சந்தை-மதிப்பை விடவும் குறைந்து போவதற்கும் இது வழி செய்யக் கூடும். அல்லது, இது விலை உயர்வுக்கு வழி செய்து, வேண்டலைக் குறைக்கக் கூடும். சில உற்பத்திக் கிளைகளில் சந்தை மதிப்பு சிறிது காலம் உயர்ந்து செல்வதற்கும் கூட இது வழி செய்யக் கூடும். வேண்டப்படும் பண்டங்களில் ஒரு பகுதியை இக்காலத்தின் போது மோசமான நிலைமைகளில் உற்பத்தி செய்ய வேண்டியிருப்பதே காரணம்.

வேண்டலும் வழங்கலும் சந்தை-விலையை [market-price] நிர்ணயிக்கின்றன என்றால், அவ்வாறே சந்தை-விலையும், மேலும் சென்று பார்க்குமிடத்து சந்தை-மதிப்பும் வேண்டலையும் வழங்கலையும் நிர்ணயிக்கின்றன. வேண்டலைப் பொறுத்த வரை இது கண்கூடாய்த் தெரிகிறது. ஏனென்றால் அது விலைகளுக்கு எதிரான திசையில் நகர்கிறது. விலை குறையும் போது வேண்டல் உயருகிறது, விலை உயரும் போது வேண்டல் குறைகிறது. வழங்கலுக்கும் இதுவே பொருந்தும். எப்படியென்றால், வழங்கப்படும் சரக்குகளில் சேர்ந்துள்ள உற்பத்திச் சாதனங்களின் விலைகள் இச்சாதனங்களுக்கான வேண்டலை நிர்ணயிக்கின்றன; எனவே எச்சரக்குகளின் வழங்கல் இந்த உற்பத்திச் சாதனங்களுக்கு ஒரு வேண்டலை ஏற்படுத்திக் கொடுக்கிறதோ அச்சரக்குகளின் வழங்கலையும் நிர்ணயிக்கின்றன. பருத்தி விலைகள் பருத்தித் துணிகளின் வழங்கலை நிர்ணயிக்கின்றன.

வேண்டலும் வழங்கலும் விலையை நிர்ணயிப்பதும் விலையால் நிர்ணயிக்கப்படுவதுமான இந்தக் குழப்பம் போதாதென்று, வழங்கலை வேண்டல் நிர்ணயிக்கிறது, வேண்டலை வழங்கல்

நிர்ணயிக்கிறது. மேலும் சந்தையை உற்பத்தி நிர்ணயிக்கிறது, உற்பத்தியை சந்தை நிர்ணயிக்கிறது.[31]

புறச்சார்பான நிலைமைகளால் வேண்டலிலோ வழங்கலிலோ மாற்றம் ஏற்படாமல் சரக்குகளின் சந்தை-மதிப்பில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக வேண்டலுக்கும் வழங்கலுக்குமான விகித உறவு மாறலாம் என்பது சாதாரண பொருளாதார அறிஞருக்கே புரிகிறது (பார்க்கவும்: அடிக்குறிப்பு). சந்தை-மதிப்பு என்ன வானாலும் சரி, அது வெளிப்பட வேண்டுமானால் வேண்டலும் வழங்கலும் சமமாதல் அவசியம் என்று அவரே ஏற்றுக் கொண்டாக வேண்டும். அதாவது, வேண்டலுக்கும் வழங்கலுக்குமான விகிதம் சந்தை-மதிப்புக்கு விளக்கமாகாது. சந்தை-மதிப்புதான் வேண்டல்-வழங்கலிலான ஏற்ற இறக்கங்களுக்கு விளக்கமாகும். கண் ணோட்டங்கள் நூலின் ஆசிரியர் (அடிக்குறிப்பில் மேற்கோளாய்த் தந்த வாசகத்துக்குப் பிறகு) தொடர்ந்து சொல்கிறார்: ''ஆனால்

---

31 பின்வரும் அதிநுட்பவாதம் அபத்தமே தவிர வேறல்ல: ''ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான கூலி, மூலதனம், நிலத்தின் அளவு முன்பிருந்ததி விருந்து வேறுபட்டதாகும் போது, அப்பண்டத்தின் இயற்கை-விலை என்று ஆதாம் ஸ்மித் குறிப்பிடுவது வேறுபட்டதாகிறது; முன்பு அதன் இயற்கை-விலையாய் இருந்த விலை இம்மாற்றத்தினால் அதன் சந்தை-விலை ஆகி விடுகிறது; ஏனென்றால் வழங்கலோ வேண்டப்படும் பண்ட அளவோ மாறாதிருந்தாலும்'' — சந்தை-மதிப் பானது, அல்லது ஆதாம் ஸ்மித் கூறுகிற படி உற்பத்தி-விலையானது மதிப்பு மாற்றத்தின் விளைவாக மாற்றமடைவதால்தான் இங்கு இவையிரண்டும் மாறுகின்றன— ''இப்போது உற்பத்திச் செலவாக இருப்பதைக் கொடுக்க இயலுகிறவர்களாகவும் விரும்புகிறவர்களாகவும் இருப்போருக்கு அந்த வழங்கல் இப்போது துல்லியமாய்ப் போதுமானதாக இருப்பதற்கு பதில் அதிகமாகவோ குறைவாகவோதான் இருக்கிறது; இதனால் வழங்கலுக்கும் புதிய உற்பத்திச் செலவின் அடிப்படையில் பயன்திற வேண்டலாய் அமைவதற்கும் இடையிலான விகித உறவு முன்பிருந்ததிலிருந்து மாறு படுகிறது. வழியில் தடையேதும் இல்லையென்றால், அப்போது வழங்கல் வீதத்தில் மாற்றம் ஏற்படும்; முடிவில் சரக்கு அதன் புதிய இயற்கை-விலைக்கு வந்து சேரும். வழங்கலில் மாற்றம் ஏற்படுவதன் மூலம் சரக்கு அதன் இயற்கை-விலையை அடைவதால் வேண்டலுக்கும் வழங்கலுக்கும் இடையிலான ஒரு விகிதம் இயற்கை-விலைக்கும், இவ்வாறே இன்னொரு விகிதம் சந்தை-விலைக்கும் காரணமாவதாகச் சொல்வதே பொருத்தமென சிலர் கருதக் கூடும். ஆகவே சந்தை-விலையைப் போலவே இயற்கை-விலையும் வேண்டலுக்கும் வழங்கலுக்கும் இடையிலான விகிதத்தையே பொறுத்தது என்றும் இவர்களுக்குத் தோன்றலாம்.'' (''வேண்டல்-வழங்கலின் மாபெரும் கோட்பாடு செயல்படுவதன் மூலமே ஆ. ஸ்மித் இயற்கை-விலைகள் என்று அழைக்கிறவையும் அதே போல் சந்தை-விலைகளும் நிர்ணயமாகின்றன.'' — மால்தஸ்.) [அரசியல் பொருளா தாரக் கோட்பாடுகள், லண்டன், 1820, பக்கம் 75. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.] (குறிப்பிட்ட சில வார்த்தைச் சர்ச்சைகள் பற்றிய கண்ணோட்டங்கள், லண்டன், 1821, பக்கம் 60-61.) உற்பத்திச் செலவிலும் இவ்விதம் மதிப்பிலும் ஏற்பட்ட மாற்றம்தான் இங்கு வேண்டலிலும் எனவே வேண்டலுக்கும் வழங்கலுக்குமான விகித உறவிலும் மாற்றம் உண்டாக்கியது என்பதையும், வேண்டலிலான இந்த மாற்றம் வழங்கலிலும் மாற்றம் உண்டாக்கலாம் என்பதையும் இந்தக் கெட்டிக்காரர் புரிந்து கொள்ளவில்லை. நமது சிந்தனைச் செம்மல் எதை நிரூபிக்க விரும்புகிறாரோ அதற்கு நேர் எதிரானதற்கே இது நிரூபணமாகும். வேண்டலுக்கும் வழங்கலுக்குமான விகித உறவு உற்பத்திச் செலவிலான மாற்றத்துக்கு எவ்விதத்தும் காரணமாகாது. மாறாக இந்த மாற்றம்தான் அந்த விகித உறவையே ஆளுகிறது.

'வேண்டல்' என்றும் 'இயற்கை-விலை' என்றும் சற்று முன் ஆதாம் ஸ்மித் பற்றிப் பேசுகையில் எதைச் சொன்னோமோ அதையே இப்போதும் சொல்வோமானால் இந்த விகித உறவு'' (வேண்டலுக்கும் வழங்கலுக்குமான விகித உறவு) ''எப்போதுமே சமத்துவ உறவாகத்தான் இருக்க வேண்டும்; எப்படியென்றால் வழங்கலானது பயன்திற வேண்டலுக்கு, அதாவது இயற்கை-விலை தருவதற்கு மேலாகவோ கீழாகவோ அமைந்திடாத வேண்டலுக்கு சமமாகும் போதுதான் மெய்யாகவே இயற்கை-விலை செலுத்தப் படுகிறது; ஆதலால் ஒரே சரக்குக்கு வெவ்வேறு நேரங்களில் பெரிதும் வெவ்வேறான இருவேறு இயற்கை-விலைகள் இருக்கலாம்; இருப்பினும் வேண்டலுக்கும் வழங்கலுக்குமான விகித உறவு இரு நேர்வுகளிலும் ஒன்றாகவே, அதாவது சமத்துவ உறவாகவே இருக்கலாம்.'' ஒரே சரக்குக்கு வெவ்வேறு நேரங்களில் இருவேறு இயற்கை-விலைகள் இருப்பதால், வேண்டலும் வழங்கலும் எப்போதுமே ஒன்றுக்கொன்று சமமாய் இருக்க முடியும், இரு சந்தர்ப்பங்களிலும் சரக்கு அதன் இயற்கை-விலைக்கு விற்கப்பட வேண்டுமானால் அவை சமமாய் இருந்தாக வேண்டும். வேண்டலுக்கும் வழங்கலுக்குமான விகித உறவு இரு சந்தர்ப்பங்களிலும் ஒன்றே என்பதாலும் இயற்கை-விலையின் பருமன் மட்டுமே மாறுபடுகிறது என்பதாலும், இந்த விலை நிர்ணயிக்கப்படுவதற்கும் வேண்டல்-வழங்கலுக்கும் தொடர்பில்லை என்றும், இவ்விலை வேண்டல்-வழங்கலால் நிர்ணயிக்கப்பட முடியவே முடியாது என்றும் தெளிவாய்ப் பெறப்படுகிறது.

சரக்கை அதன் சந்தை-மதிப்புக்கு விற்க வேண்டுமானால், அதாவது அதில் அடங்கியுள்ள அவசிய சமுதாய உழைப்புக்கேற்ற விலைக்கு விற்க வேண்டுமானால், இவ்வகைச் சரக்கின் மொத்தத் திரளை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்படும் சமுதாய உழைப்பின் மொத்த அளவானது இதற்கான சமுதாயத் தேவையின், அதாவது பயன்திறனுள்ள சமுதாயத் தேவையின் அளவுக்கு ஒத்தமைய வேண்டும். சந்தைப் போட்டியும், வேண்டலுக்கும் வழங்கலுக்குமான விகித உறவில் ஏற்படும் அலைவுகளுக்கேற்ப சந்தை-விலையில் ஏற்படும் அலைவுகளும் ஒவ்வொரு வகை சரக்குக்கும் செலவாகிற உழைப்பின் மொத்த அளவை மேற்கூறிய நிலைக்குக் கொண்டுவர ஓயாமல் முனைகின்றன.

வேண்டலுக்கும் வழங்கலுக்குமான விகித உறவானது முதலாவதாகப் பயன்-மதிப்புக்கும் பரிவர்த்தனை-மதிப்புக்கும் இடையிலான, சரக்குக்கும் பணத்துக்கும் இடையிலான, வாங்குகிறவருக்கும் விற்கிறவருக்கும் இடையிலான உறவினைத் தொகுத்துரைக்கிறது. இரண்டாவதாக உற்பத்தியாளருக்கும் நுகர்வாளருக்கும் இடையிலான உறவினைத் தொகுத்துரைக்கிறது — இவ்விருவருக்குமே மூன்றாம் தரப்பினர் வணிகர்களின் உருவில் பிரதிநிதிகளாய்

அமையலாம் என்பது மெய்தான். வாங்குகிறவரையும் விற்கிறவரையும் பொறுத்த வரை, இருவரும் தனியாட்கள் என்ற முறையில் ஒருவரை ஒருவர் எதிர்ப்படுமாறு செய்வதே அவர்களிடையிலான உறவு முறையைப் புலப்படுத்த போதுமானது. ஒரு சரக்கின் முழு உருமாற்றத்துக்கும், எனவே முழுமையான விற்றல்-வாங்கல் நிகழ் முறைக்கும் மூவரே போதும். A ஆனவர் தமது சரக்கை B இடம் விற்றுப் பணமாக மாற்றுகிறார், பிறகு இப்பணத்தைப் பயன் படுத்தி Cஇடம் சரக்குகள் வாங்குகிறார், அதாவது பணத்தை மீண்டும் சரக்குகளாக மாற்றுகிறார். நிகழ்முறை அனைத்தும் இந்த மூவருக்குள் நடைபெறுவதே. மேலும் நாம் பணத்தைப் பரிசீலித்துக் கொண்டிருந்த போது, சரக்குகள் அவற்றின் மதிப்புக்கே விற்கப் படுவதாய்க் கொண்டோம்; சரக்குகள் பணமாக மாற்றப்படும் போதும், பிறகு பணம் என்னும் நிலையிலிருந்து திரும்பவும் சரக்குகளாக மாற்றப்படும் போதும் அடையும் வடிவ மாற்றங் களையே அப்போது நாம் ஆராய்ந்து கொண்டிருந்ததால் மதிப்பு களிலிருந்து விலகிச் செல்லும் விலைகளைக் கருத்தில் கொள்ளக் காரணமே இல்லாது போயிற்று. சரக்கு விற்கப்பட்டு, விற்று வரும் தொகையால் புதிய சரக்கு வாங்கப்பட்டதுமே, உருமாற்றம் நமக்கு முழுமையாய்க் . காணக் கிடைக்கிறது; சரக்கின் விலை அதன் மதிப்பை விடக் கூடுதலாய் இருக்கிறதா, குறைவாய் இருக்கிறதா என்பது இங்கு சற்றும் கருத்துக்குரியதன்று. அடிப்படை என்ற முறையில் சரக்கின் மதிப்புக்குள்ள முக்கியத்துவம் நீடிக்கிறது. ஏனென்றால் பணமென்னும் கருத்துருவத்தைப் புரிந்து கொள்வதற்கு இந்த அடிப்படையிலிருந்துதான் தொடங்கியாக வேண்டும். பொது வான அர்த்தத்தில் விலை என்பது பண வடிவிலான மதிப்பே தவிர வேறல்ல. மேலும் நாம் பணத்தை சுற்றோட்ட ஊடகமாக [medium of circulation] பரிசீலித்த போது ஒரேயொரு சரக்கின் ஒரேயொரு உருமாற்றம் மட்டும் நிகழ்வதாகக் கொள்ளவில்லை. இந்த உருமாற்றங்கள் சமூக வழியில் பின்னிப் பிணைந்திருப் பதையே பரிசீலித்தோம். இவ்விதமாகத்தான் பணச் சுற்றோட்டத் தையும் சுற்றோட்ட ஊடகமாக அதன் பணி வளர்ந்திடுவதையும் வந்தடைந்தோம். ஆனால் இந்தக் கட்டமைப்பானது பணம் சுற் றோட்ட ஊடகமாவதற்கும் இதனால் அதன் வடிவம் மாறுவதற்கும் எவ்வளவுதான் முக்கியமானதாய் இருந்தாலும், வாங்குகிற, விற்கிற தனியாட்களிடையிலான பரிமாற்றத்தைப் பொறுத்த வரை சற்றும் முக்கியமானதல்ல.

ஆனால் வேண்டல்-வழங்கலைப் பொறுத்த வரை, வழங்க லானது குறிப்பிட்ட வகைச் சரக்கை விற்கிறவர்களோ உற்பத்தி செய்கிறவர்களோ ஆன அனைவரும் வழங்கிடும் சரக்குகளின் மொத்தத் தொகைக்குச் சமம்; வேண்டலானது அவ்வகைச் சரக்கை வாங்குகிறவர்களோ நுகர்கிறவர்களோ (சொந்த நுகர்வானாலும்

திறனுடை நுகர்வானாலும்) ஆன அனைவரின் மொத்தத் தொகைக் குச் சமம். இந்தத் தொகைகள் ஒருமங்களாக, முழு மொத்தச் சக்தி களாக ஒன்றின் மீது ஒன்று வினை புரிகின்றன. தனியாள் இங்கே ஒரு சமுதாயச் சக்தியின் பகுதியாக மட்டுமே, பிண்டத்தில் ஓர் அணுவாக மட்டுமே கணக்கிடப் பெறுகிறார்; இவ்வடிவில்தான் போட்டியானது உற்பத்திக்கும் நுகர்வுக்குமுள்ள சமூகத் தன்மையை வெளிப்படுத்துகிறது.

போட்டாபோட்டியில் தற்காலிகமாய் வலுக்குன்றி இருக்கும் தரப்பில்தான் தனியாள் தமது போட்டியாளர்களின் திரளைச் சாராமலும் பல நேரம் அத்திரளை எதிர்த்தும் செயல்படுகிறார்; அவர்கள் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பது இவ்விதமாகத்தான் அவர்களுக்கே உணர்த்தப்படுகிறது. அதே போது போட்டா போட்டியில் வலுவுள்ள தரப்பானது எப்போதுமே ஓரளவுக்கு ஒன்றுபட்ட முழுமையாக அதன் எதிராளியை சந்திக்கிறது. குறிப் பிட்ட இவ்வகைச் சரக்குக்கு வேண்டலானது வழங்கலை விட அதிகமாய் இருக்குமானால் வாங்குகிறவர்களில் ஒருவர் — குறிப் பிட்ட சில வரம்புகளுக்குள் — மற்றவரை விட அதிக விலைக்குக் கேட்கிறார்; இவ்விதம் அச்சரக்கின் விலையை அனைவருக்குமே சந்தை-மதிப்புக்கு மேலாய் உயர்த்தி விடுகிறார். மறு புறம், விற்கிறவர்கள் எல்லாம் உயர்ந்த சந்தை-விலைக்கு விற்க முனை கிறார்கள். மாறாக, வழங்கலானது வேண்டலை விஞ்சுமானால் விற்கிறவர் தமது பண்டங்களை மலிவாகத் தள்ளி விட முற் படுகிறார். மற்றவர்களும் அதையேதான் செய்தாக வேண்டும். மறு புறம், வாங்குகிறவர்கள் எல்லாம் சந்தை-விலையை சந்தை-மதிப்புக்கும் கீழே முடிந்த வரை இறக்க முனைகிறார்கள். பொது நலனைக் கருதிக் கிடைப்பது கருதாமல் கிடைப்பதை விடக் கூடுத லாய் இருக்கும் வரைதான் ஒவ்வொருவரும் பொது நலனில் அக்கறை கொள்கிறார். இரு தரப்புகளில் ஒன்று வலுக்குன்றிய உடனே இந்தச் செயலொற்றுமை மறைந்து விடுகிறது; ஒவ்வொரு வரும் அவரவரால் முடிந்த வரை பிடுங்கிக் கொள்ள முயல்கிறார். விற்கிறவர்களில் ஒருவர் மற்றவர்களை விடக் குறைந்த செலவில் உற்பத்தி செய்து அதிகமாய் சரக்குகளை விற்க முடியுமானால், இவ்விதம் நடப்பு சந்தை-விலை அல்லது சந்தை-மதிப்பை விடக் குறைந்த விலைக்கு விற்பதன் மூலம் சந்தையில் கூடுதலாய் இடம் பிடிக்க அவரால் முடியுமானால், அவர் அதைத்தான் செய்வார். இப்படித் தொடங்கும் அசைவியக்கம் பையப்பைய மற்றவர்களையும் நிர்ப்பந்தித்து மலிவான உற்பத்தி முறையைப் புகுத்தச் செய்து, சமுதாய வழியில் அவசியமான உழைப்பைப் புதிய கீழ்நிலைக்குக் குறையச் செய்கிறது. ஒரு தரப்பின் கை ஓங்கும் போது அதைச் சேர்ந்தவர்களெல்லாம் ஆதாயமடைகிறார்கள். அவர்கள் தமக்குப் பொதுவாய் உள்ள ஏகபோகத்தைச் செலுத்தினாற் போல் இது

நடந்தேறுகிறது. வலுக்குன்றிய தரப்பைப் பொறுத்த வரை, ஒவ்வொருவரும் தனித்தனியே வலுப்பெற முயலலாம் (குறைந்த செலவில் உற்பத்தி செய்கிறவரை இதற்கு உதாரணமாய் குறிப்பிடலாம்), அல்லது முடிந்த வரை நல்ல விதமாய் மீண்டு வருவதற்காவது பாடுபடலாம்; இது போன்ற சந்தர்ப்பங்களில், யார் எக்கேடு கெட்டாலும் அவரவரும் அவரவருக்காகவே; அவரது செயல் அவரை மட்டுமல்லாமல் அவர் தரப்பார் எல்லாரையும் பாதிக்கும் என்றாலும் அதைச் செய்யாமல் விட மாட்டார்.[32]

வேண்டலும் வழங்கலும் மதிப்பு சந்தை-மதிப்பாக மாறுவதைக் குறிப்பனவாகும்; இவை முதலாளித்துவ அடிப்படையில் செயல் புரிந்து வரும் வரை, சரக்குகள் மூலதனத்தின் உற்பத்திப் பொருட்களாய் இருந்து வரும் வரை, முதலாளித்துவ உற்பத்தி நிகழ்முறைகளை, அதாவது பண்டங்களை வாங்குவதும் விற்பதும் என்ற நிலைமை மட்டுமே அல்லாத முற்றிலும் வேறான நிலைமைகளைக் குறிக்கின்றன. இங்கு சரக்குகளின் மதிப்பு விலையாக உருமாறுவது அல்ல, அதாவது வெறும் வடிவ மாற்றம் அல்ல பிரச்சினை; சந்தை-விலைகள் சந்தை-மதிப்புகளிலிருந்தும், மேலும் சென்று பார்க்கையில் உற்பத்தி-விலைகளிலிருந்தும் திட்டவட்டமாய் அளவு வழியில் விலகிச் செல்வதே பிரச்சினை. சாதாரண விற்றல்-வாங்கலில் சரக்கு உற்பத்தியாளர்கள் ஒருவரை ஒருவர் எதிர்ப்படுவதே போதுமானது. மேலும் ஆராய்ந்து பார்க்குமிடத்து வேண்டல்-வழங்கலானது பல்வேறு வர்க்கங்களும் வர்க்கப் பிரிவுகளும் இருப்பதைக் குறிக்கிறது; இவ்வர்க்கங்களும் வர்க்கப் பிரிவுகளும் சமுதாயத்தின் மொத்த வருவாயைப் பங்கிட்டுக் கொள்வதோடு, வருவாயாக அதனை நுகரவும் செய்கின்றன; எனவே வருவாயிலிருந்து வேண்டல் எழுவதற்கு வழிசெய்கின்றன. அதே போது உற்பத்தியாளர் என்ற முறையில் உற்பத்தியாளர்களிடையே உருவாகிற வேண்டல்-வழங்கலைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் ஒட்டுமொத்தக் கட்டமைப்பைப் புரிந்து கொள்வது அவசியமாகும்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியில், சரக்கு வடிவில் சுற்றோட்டத்தில் விடப்பட்ட மதிப்புத் திரளுக்குப் பிரதியாய் வேறொரு

---

32 ''ஒரு பிரிவு அல்லது வகையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் அவ்வகையினர் அனைவரின் ஆதாயங்களிலும் உடைமைகளிலும் குறிப்பிட்ட பங்கு அல்லது ஈவுப் பகுதிக்கு மேல் அடைவது முடியவே முடியாத காரியமாய் இருக்குமானால், ஆதாயத்தை உயர்த்தும் பணியில் உவப்புடன் தம்மை இணைத்துக் கொள்வார்;'' (வேண்டலுக்கும் வழங்கலுக்குமான விகித உறவு இடமளித்த உடனே அவர் இதைச் செய்வார்.) ''இதுதான் ஏகபோகம் [monopoly]. ஆனால் மொத்த அளவைக் குறையச் செய்கிற வழிமுறையின் மூலமே என்றாலும் தம் சொந்தப் பங்கின் அறுதி அளவினை எப்படியும் உயர்த்திக் கொள்ள முடியும் என ஒவ்வொருவரும் கருதுமிடத்து அடிக்கடி அதைச் செய்வார்; இதுதான் போட்டி..'' (*வேண்டலின் இயல்பு...தொடர்பான கோட்பாடுகள் பற்றிய ஆய்வு*, லண்டன், *1821*, பக்கம் *105*.)

வடிவில் — பண வடிவிலோ பிறிதொரு சரக்கின் வடிவிலோ — அதற்குச் சமமான மதிப்புத் திரளை எடுத்தால் மட்டும் போதாது. உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் மூலதனம் எந்த உற்பத்திக் கிளையில் பயன்படுத்தப்பட்டாலும் அது ஈட்டுகிற உபரி-மதிப்பு அல்லது இலாபத்தின் அளவு அதே பருமனுள்ள வேறெந்த மூலதனமும் ஈட்டுகிற அதே அளவாய், அதாவது அதன் பருமனுக்கு ஏற்ற விகிதமுடையதாய் இருப்பதும் அவசியமாகும். ஆகவே சரக்குகளை சராசரி இலாபம் கிடைக்கும் படியான விலைகளுக்கு, அதாவது உற்பத்தி-விலைகளுக்கு விற்பது எப்படியும் குறைந்த பட்சத் தேவையாகும். மூலதனம் இவ்வடிவில்தான் தன்னை ஒரு சமூக சக்தியாக உணர்ந்து கொள்கிறது; ஒவ்வொரு முதலாளியும் மொத்தச் சமுதாய மூலதனத்தில் தனக்குள்ள பங்குக்கேற்ற விகிதத்தில் இச்சக்தியில் பங்கு பெறுகிறார்.

முதலாவதாக, உற்பத்தி செய்யப்படும் தனிப்பட்ட பயன்-மதிப்புகள் குறித்தோ, பொதுவாகச் சரக்குகளின் தனி இயல்புகள் குறித்தோ அதனளவில் முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு அக்கறை இல்லை. ஒவ்வோர் உற்பத்திக் கிளையிலும் அதற்குள்ள அக்கறையெல்லாம் உபரி-மதிப்பை உற்பத்தி செய்ய வேண்டும், உழைப்பின் உற்பத்திப் பொருளில் குறிப்பிட்ட அளவு ஊதியமிலா உழைப்பைத் தனதாக்க வேண்டும் என்பதே. இதே போல் மூலதனத்திற்குக் கீழ்ப்பட்ட கூலியுழைப்பின் தன்மையும் என்னவென்றால் அது செய்யும் வேலையின் பிரத்தியேகத் தன்மை பற்றி அதற்கு அக்கறை இல்லை; மூலதனத்தின் தேவைகளுக்கேற்ப மாறிக் கொள்வதற்கும், ஓர் உற்பத்திக் கிளையிலிருந்து இன்னோர் உற்பத்திக் கிளைக்கு மாற்றப்படுவதற்கும் அது இணங்கியாக வேண்டும்.

இரண்டாவதாக, உற்பத்திக் கிளைகளில் எந்த ஒன்றும் பிறிதொன்றைப் போன்றதே. ஒவ்வொரு கிளையும் கிடைக்கச் செய்கிற இலாபம் ஒன்றே. ஒவ்வொரு கிளையும் அது உற்பத்தி செய்கிற சரக்கு ஏதேனும் ஒரு வகை சமுதாயத் தேவையை நிறைவு செய்யவில்லையேல் பயனற்றதே ஆகும்.

சரக்குகள் அவற்றின் மதிப்புக்குச் சமமான விலைக்கு விற்கப்பட்டால், பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் முதலீடாகிற மூலதனத் திரள்களின் அங்கக இயைபிலான வேறுபாட்டைப் பொறுத்து, இக்கிளைகளில் பெறப்படும் இலாப வீதங்களும் பெரிதும் வேறுபடும் என்று முன்பே தெளிவாக்கினோம். ஆனால் மூலதனமானது குறைந்த இலாப வீதம் தரும் கிளையிலிருந்து விலகி உயர்ந்த இலாப வீதம் தரும் ஏனைய கிளைகளில் படையெடுக்கிறது. இந்த ஓயாத பெயர்ச்சியின் மூலமாய், இலாப வீதம் எங்கே உயர்கிறது, எங்கே சரிகிறது என்பதற்கேற்பப் பல்வேறு கிளைகளிடையிலும் மூலதனம் வினியோகமாவதன் மூலமாய் உருவாகிற

வேண்டல்-வழங்கல் விகிதத்தின் செயல்பாட்டால் பல்வேறு கிளை களிலும் சராசரி இலாபம் ஒன்றாகி, மதிப்புகள் இவ்விதம் உற்பத்தி-விலைகளாக உருமாறுகின்றன. இந்தச் சமனமாக்கத்தில் மூலதனம் எந்த அளவுக்கு வெற்றி பெறுகிறது என்பது குறிப்பிட்ட நாட்டில் முதலாளித்துவம் எந்த அளவுக்கு வளர்ந்துள்ளது என்பதைப் பொறுத்தது; அதாவது குறிப்பிட்ட நாட்டில் நிலைமைகள் எந்த அளவுக்கு முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்குத் தகவமைந் துள்ளன என்பதைப் பொறுத்தது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முன்னேறிச் செல்லும் போது அதன் இன்றியமையாத் தேவைகளும் வளர்ந்து செல்கின்றன, உற்பத்தி நிகழ்முறைக்கு அடிப்படையாய் உள்ள சமுதாய முன்தேவைகளையெல்லாம் அது தன் பிரத்தியேகத் தன்மைக்கும் உள்ளார்ந்த விதிகளுக்கும் உட்படுத்திச் செல்கிறது.

ஓயாமல் திரும்பத் திரும்ப எழும் வேறுபாடுகள் ஓயாமல் இப்படி சமனமாக்கப்படும் நிகழ்வு எவ்வளவு துரிதமாய் நடந்தேறுகிறது என்பது (1) மூலதனம் எவ்வளவு பெயர்ச்சித் திறனுடையதாய் இருக்கிறது, அதாவது ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்கும் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கும் மூலதனத்தை எவ்வளவு எளிதில் மாற்ற முடிகிறது என்பதையும் (2) ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்கும் உற்பத்தியின் ஒரு மையத்திலிருந்து இன் னொரு மையத்திற்கும் உழைப்புச் சக்தியை எவ்வளவு துரிதமாய் மாற்ற முடிகிறது என்பதையும் பொறுத்தது ஆகும். முதல் நிபந் தனையின் பொருள் என்னவென்றால், சமுதாயத்திற்குள் முழுமை யான தொழில் சுதந்தரம் நிலவ வேண்டும் என்பதும், இயற்கை யான ஏகபோகங்கள் தவிர, அதாவது முதலாளித்துவப் பொருளுற் பத்தி முறையிலிருந்தே இயல்பாய் எழுந்திடும் ஏக போகங்கள் தவிர ஏனைய ஏகபோகங்கள் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுமே. தயாராய் இருக்கக் கூடிய சமுதாய மூலதனத்தின் அசேதனத் திரளை [inorganic mass] தனிப்பட்ட முதலாளியிடம் குவியச் செய்வதாகிய கடன்-செலாவணி அமைப்பு வளர்ந்திருக்க வேண்டும் என்பதையும் கூட இந்த முதல் நிபந்தனை குறிக்கிறது. முடிவில், பல்வேறு உற்பத்திக் கிளைகளும் முதலாளிகளின் கட்டுப்பாட்டுக்கு உட் படுத்தப்பட்டிருப்பதையும் அது குறிக்கிறது. கடைசியாகக் குறிப் பிட்டது முன்பே நாம் அனுமானம் செய்து கொண்ட முதனிலை களில் ஒன்றுதான் — முதலாளித்துவ வழியில் சுரண்டலுக்கு உட் பட்ட எல்லா உற்பத்திக் கிளைகளிலும் மதிப்புகள் உற்பத்தி-விலைகளாக உருமாற வேண்டும் என்ற அனுமானத்தைச் சொல் கிறோம். ஆனால் பற்பல முக்கிய உற்பத்திக் கிளைகள் முதலாளித் துவமல்லாத வழியில் இயங்குமானால் (சிறு சாகுபடியாளர்களின் உழவுத் தொழிலை. உதாரணமாய்க் குறிப்பிடலாம்), இந்த உற் பத்திக் கிளைகள் முதலாளித்துவத் தொழில்-முனைவுகளுக்கு இடை யிடையே நிலைகொண்டு அவற்றோடு பிணைப்புள்ளவையாக

இருக்குமானால், மேற்கூறிய சமனமாக்கம் பெருந்தடைகளைச் சந்திக்க வேண்டியதாகிறது. மக்கள்தொகை அடர்த்தியாய் இருக்க வேண்டியது முதல் நிபந்தனைக்கு அவசியமான இன்னொன்று.

இரண்டாவது நிபந்தனையின் பொருள் என்னவென்றால்: தொழிலாளர்கள் உற்பத்தியின் ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்கும் ஒரு மையத்திலிருந்து இன்னொரு மையத்துக்கும் மாறிச் செல்வதைத் தடுக்கிற சட்டங்களையெல்லாம் ஒழித்து விட வேண்டும்; தொழிலாளி தமது வேலையின் தன்மை குறித்துக் கவலைப் படக் கூடாது; எல்லா உற்பத்திக் கிளைகளிலும் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு உழைப்பை சாமானிய உழைப்பாகப் பெயர்க்க வேண்டும். தொழிலாளர்களிடையே தொழில்கள், வினைகள் குறித்து நிலவும் விருப்புவெறுப்புகள் மறைய வேண்டும்; முடிவில் என்றாலும் முக்கியமாய், தொழிலாளி முதலாளித்துவப் பொருளுற் பத்தி முறைக்குக் கீழ்ப்படுத்தப்பட வேண்டும். இதனை இதற்கு மேல் விவரிப்பது போட்டி தொடர்பான தனிப் பகுப்பாய்வுக் குரியது.

மேற்கண்டவற்றிலிருந்து தெரிவது என்னவென்றால்: தனிப் பட்ட ஒவ்வோர் உற்பத்திக் கிளையிலும் முதலாளிகள் அனைவரின் முழுமொத்தத்தைப் போலவே தனியொரு முதலாளியும் மொத்த மூலதனம் மொத்தத் தொழிலாளி வர்க்கததைச் சுரண்டுவதிலும், அச்சுரண்டலின் கடுமையிலும் நேரடியாகப் பங்கு பெறுகிறார். பொதுவான வர்க்கப் பரிவு மட்டுமல்ல, நேரடியான பொருளா தாரக் காரணங்களும் இதற்கு உண்டு. எப்படியென்றால், மொத்த மாறா-மூலதன முன்னீட்டின் மதிப்பு உட்பட ஏனைய எல்லா நிலைமைகளும் மாறாதவை எனக் கொண்டால், சராசரி இலாப வீதமானது உழைப்பின் மொத்த அளவை மூலதனத்தின் மொத்த அளவு எவ்வளவு கடுமையாய்ச் சுரண்டுகிறது என்பதைப் பொறுத் தது.

சராசரி இலாபமானது மூலதனத்தில் ஒவ்வொரு 100உம் உற்பத்தி செய்யும் சராசரி உபரி-மதிப்புக்குச் சமமாகிறது. உபரி-மதிப்பைப் பொறுத்த வரை, மேற்கூறியது தொடக்கத்திலிருந்தே தெளிவாய்த் தெரிகிறது. சராசரி இலாபத்தைப் பொறுத்த வரை மூலதன முன்னீட்டின் மதிப்பு இலாப வீதத்தை நிர்ணயிப்பதில் கூடுதல் கூறாகிறது. உண்மையில், தனிப்பட்ட எந்தவோர் உற்பத் திக் கிளையிலும் ஒரு முதலாளியோ மூலதனமோ நேரடி அக்கறை செலுத்துவது என்பதெல்லாம், அசாதாரண மிகையுழைப்பின் மூலமோ, கூலியை சராசரிக்கும் கீழே குறைப்பதன் மூலமோ, அசாதாரண உற்பத்தித் திறன் படைத்த உழைப்பை ஈடுபடுத்து வதன் மூலமோ, கூடுதல் ஆதாயம், அதாவது சராசரிக்கு மேற்பட்ட இலாபம் ஈட்டுவதற்காகவே. இது ஒரு புறமிருக்க, தமது உற்பத்திக் கிளையில் கொஞ்சம் கூட மாறும்-மூலதனத்தைப் பயன்படுத்தாத,

அதாவது ஒரேயொரு தொழிலாளியைக் கூட வேலைக்கு அமர்த் தாத முதலாளியும் (உண்மையில் இது மிகையான அனுமானமே), மாறும்-மூலதனத்தை மட்டும் ஈடுபடுத்துகிற (இதுவும் மிகையான அனுமானமே), எனவே தமது மூலதனம் முழுவதையும் கூலியில் முதலீடு செய்கிற முதலாளியைப் போலவே, தொழிலாளி வர்க் கத்தை மூலதனம் சுரண்டுவதில் அதே அளவு அக்கறை கொண் டிருப்பார். அதே போல் ஊதியமிலா உபரி-உழைப்பிலிருந்தே இலாபத்தைப் பெறுவார். ஆனால் உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமையானது வேலை-நாள் குறிப்பிட்டதாய் இருந்தால் உழைப்பின் சராசரி மும்முரத்தையும், உழைப்பின் மும்முரம் குறிப்பிட்டதாய் இருந்தால் வேலை-நாளின் நீட்டளவையும் பொறுத்தது. உழைப் பின் மீதான சுரண்டல்-கடுமைதான் உபரி-மதிப்பு வீதத்தையும், எனவே குறிப்பிட்ட மாறும்-மூலதனத் திரளுக்கு உபரி-மதிப்பின் அளவினையும், இவ்விதம் இலாப அளவினையும் கூட நிர்ணயிக் கிறது. ஒரு கிளையைச் சேர்ந்த மூலதனம் — மொத்தச் சமுதாய மூலதனம் அல்ல — அக்கிளையில் நேரடியாக அமர்த்தப்படும் தொழிலாளர்களைச் சுரண்டுவதில் கொண்டுள்ள தனி அக்கறை, தனியொரு முதலாளி — அவரது கிளை முழுவதும் அல்ல — அவரால் நேரடியாக அமர்த்தப்படும் தொழிலாளர்களைச் சுரண்டுவதில் கொண்டுள்ள தனி அக்கறைக்கு இணையானது.

மறு புறம், ஒவ்வொரு தனிப்பட்ட மூலதனக் கிளையும் ஒவ்வொரு தனிப்பட்ட முதலாளியும் மொத்த மூலதனத்தால் ஈடுபடுத்தப்படும் சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனில் கொண்டுள்ள அக்கறை ஒரேவிதமானதே. ஏனெனில் இந்த உற்பத்தித் திறனைச் சார்ந்திருப் பவை இரண்டு: முதலாவதாக, சராசரி இலாபத்தைக் குறிக்கும் பயன்-மதிப்புத் திரள்; இந்த சராசரி இலாபமே புதிய மூலதனத் திரட்டலுக்கான நிதியாகவும் நுகர்வுக்கான வருவாய்-நிதியாகவும் பயன்படுவதன் மூலம் இரட்டை முக்கியத்துவம் பெறுகிறது. இரண்டாவதாக, முதலீடாகிற மொத்த மூலதனத்தின் (மாறா-மூலதனம், மாறும்-மூலதனம்) மதிப்பு; முதலாளி வர்க்கம் முழு வதற்குமான உபரி-மதிப்பு அல்லது இலாபத்தின் அளவு குறிப் பிட்டதாய் இருக்க, இந்த மூலதன-மதிப்பே இலாப வீதத்தை, அதாவது குறிப்பிட்ட மூலதன அளவின் மீதான இலாபத்தை நிர்ண யிக்கிறது. தனிப்பட்ட ஒரு கிளையில் அல்லது இக்கிளையைச் சேர்ந்த தனிப்பட்ட ஒரு தொழிலில் உழைப்பின் தனி உற்பத்தித் திறனானது அதில் நேரடியாக ஈடுபட்டுள்ள முதலாளிகளுக்கு மட்டுமே அக்கறைக்குரியதாகும். ஏனென்றால் மொத்த மூலதனத் தோடு ஒப்பிடுகையில அந்தத் தனிப்பட்ட கிளை — அல்லது கிளை யோடு ஒப்பிடுகையில் அந்தத் தனிப்பட்ட முதலாளி — கூடுதல் இலாபம் பெறுவதற்கு இந்தத் தனி உற்ப்த்தித் திறன் வழிசெய் கிறது.

ஆக, முதலாளிகள் தமக்குள் போட்டியிடுகையில் தீராப் பகை கொண்டோராய் எதிர்த்துக் கொண்டாலும், ஏன் தொழிலாளி வர்க்கத்தின் முன்னால் உடன்பிறந்தோராய் ஒன்றுபடுகிறார்கள் என்பதற்கு அப்பட்டமான கணித நிரூபணத்தை இங்கே காணலாம்.

உற்பத்தி-விலையில் சராசரி இலாபம் அடக்கமாகும். நாம் உற்பத்தி-விலை என்று சொல்வதைத்தான் ஆதாம் ஸ்மித் இயற்கை-விலை என்றும், ரிக்கார்டோ உற்பத்தி-விலை அல்லது உற்பத்திச் செலவு என்றும் சொல்கிறார்கள். பிசியோக்கிராட்டுகள் இதனை அவசிய-விலை என்கிறார்கள். ஏனென்றால் நீண்ட கால அடிப்படையில் இது வழங்கலின் முன்தேவை ஆகும். அதாவது தனிப்பட்ட ஒவ்வொரு கிளையிலும் சரக்குகளின் மறுவுற்பத்திக்கு அவசியம் ஆகும்.[33] ஆனால் இந்தப் பொருளாதார அறிஞர்களில் ஒருவர் கூட உற்பத்தி-விலைக்கும் மதிப்புக்கும் இடையிலான வேறுபாட்டை வெளிப்படுத்தவில்லை. சரக்குகளின் மதிப்பை உழைப்பு நேரத்தால், அதாவது அவற்றில் அடங்கியுள்ள உழைப்பளவால் நிர்ணயிப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அதே பொருளாதார அறிஞர்கள் எப்போதுமே உற்பத்தி-விலைகளை சந்தை-விலைகள் அலைவுறுவதற்கான மையங்களாகக் குறிப்பிடுவதன் காரணத்தை நாம் புரிந்து கொள்வது எளிதே. உற்பத்தி-விலையானது சரக்கு-மதிப்பின் வடிவமே என்றாலும், முற்றிலும் புறம்பான, முதல் பார்வைக்கு அர்த்தமற்றதாய்த் தெரிகிற வடிவமாக, போட்டியிலே உருவெடுத்து, அதனால் கொச்சை முதலாளியின் உணர்விலும், ஆகவே கொச்சைப் பொருளாதார அறிஞரின் உணர்விலும் தெரிகிற வடிவமாக இருப்பதால்தான் அவர்கள் இவ்விதம் குறிப்பிடத் தயங்குவதில்லை.

---

சந்தை-மதிப்பானது (இம்மதிப்பு தொடர்பாகக் கூறப்பட்டுள்ள ஒவ்வொன்றும் உரிய திருத்தங்களோடு உற்பத்தி-விலைக்கும் பொருந்தும்) எந்தக் குறிப்பிட்ட உற்பத்திக் கிளையிலும் அதிசாதக நிலைமைகளில் உற்பத்தி செய்வோருக்கான உபரி-இலாபத்தையும் உள்ளடக்கியதுதான் என்பதை நமது பகுப்பாய்வு வெளிப்படுத்தியுள்ளது. நெருக்கடியையும் பொதுவாக மிகையுற்பத்தியையும் விலக்கி விட்டுப் பார்த்தால் இது எல்லா சந்தை-விலைகளுக்கும் பொருந்தும்— இவை சந்தை-மதிப்புகள் அல்லது சந்தை உற்பத்தி-விலைகளிலிருந்து எவ்வளவுதான் வேறுபட்டு விலகினாலும் சரி. ஏனென்றால், பெரிதும் வெவ்வேறான தனிப்பட்ட நிலைமைகளுக்கு உட்பட்டு உற்பத்தி செய்யப்பட்டவையாகவும், எனவே பெரிதும் வெவ்வேறான

[33] மால்தஸ் [அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், லண்டன், 1836, பக்கம் 77-78 — ஆங்கிலப் பதிப்பாசிரியர்].

அடக்க-விலைகள் உடையவையாகவும் இருந்தாலும் கூட, ஒரே வகைச் சரக்குகளுக்கு ஒரே விலை தரப்படுவதையே சந்தை-விலை குறிக்கிறது. (செயற்கை ஏகபோகமானாலும் சரி, இயற்கை ஏக போகமானாலும் சரி, ஏகபோகம் என்ற சொல்லுக்குரிய வழக்க மான பொருளில், ஏகபோகங்களின் விளைவாய்க் கிடைக்கும் உபரி-இலாபங்களைப் பற்றி இங்கு நாம் குறிப்பிடாமல் விட்டு விடுகிறோம்.)

குறிப்பிட்ட சில உற்பத்திக் கிளைகள் தமது சரக்கு-மதிப்புகள் உற்பத்தி-விலைகளாக உருமாற்றப்பட்டு, தமது இலாபங்கள் சமன மாக்கப்பட்டு சராசரி இலாபமாவதைத் தவிர்க்கும் படியான நிலை யில் இருக்கும் போதும் உபரி-இலாபம் எழக் கூடும். உபரி-இலாபத்தின் இந்த இரு வடிவங்களும் இன்னும் எப்படியெல்லாம் மருவி மாற்றமடைகின்றன என்பதை நில-வாடகை தொடர்பான பகுதியில் நாம் பரிசீலிப்போம்.

## அத்தியாயம் XI

# கூலியில் ஏற்படும் பொதுவான ஏற்ற இறக்கங்கள் உற்பத்தி-விலைகள் மீது ஏற்படுத்தும் விளைவுகள்

சமுதாய மூலதனத்தின் சராசரி இயைபு $80_c + 20_v$ என்றும், இலாபம் 20% என்றும் வைத்துக் கொள்வோம். ஆக உபரி-மதிப்பு வீதம் = 100%. மற்றவை யாவும் மாறாதிருக்க, கூலியில் ஏற்படும் பொதுவான ஏற்றமானது உபரி-மதிப்பு வீதம் குறைவதைக் குறிப்பதாகும். சராசரி மூலதனத்திற்கு இலாபமும் உபரி-மதிப்பும் ஒன்றேதான். கூலி 25% உயருமானால், முன்பு 20 செலவிட்டு இயங்க வைத்த அதே உழைப்பளவை இப்போது 25 செலவிட்டு இயங்க வைத்தாக வேண்டும். இதிலிருந்து பெறப்படும் புரள்வு-மதிப்பு $80_c + 20_v + 20_p$ ஆக இருப்பதற்கு பதில் $80_c + 25_v + 15_p$ ஆக இருக்கும். மாறும்-மூலதனம் இயங்க வைக்கிற உழைப்பினால் உற்பத்தி செய்யப்படும் மதிப்பு முன்போலவே இப்போதும் 40 ஆக இருக்கும். v ஆனது 20இலிருந்து 25ஆக உயருமானால், உபரியாகிய s அல்லது p ஆனது 15ஆக மட்டுமே இருக்கும். 105 மூலதனத்திற்கு 15 இலாபம் என்பது $14^{2}/_{7}$% ஆகும். இதுவே புதிய சராசரி இலாப வீதம் ஆகும். சராசரி மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் உற்பத்தி-விலை அவற்றின் மதிப்புக்குச் சமமாய் இருப்பதால் இச்சரக்குகளின் உற்பத்தி-விலையில் மாற்றம் இருக்காது. ஆகவே கூலி உயருவது இலாபம் குறைவதைக் குறிக்கும் என்றாலும், சரக்குகளின் மதிப்பிலோ விலையிலோ எவ்வித மாற்றத்தையும் குறிக்காது.

முன்பு சராசரி இலாபம் 20% ஆக இருந்த போது, ஒரு புரள்வுக் காலத்தில் உற்பத்தியாகிற சரக்குகளின் உற்பத்தி-விலை = அவற்றின் அடக்க-விலை + இந்த அடக்க-விலை மீதான 20% இலாபம். அதாவது $k + kp' = k + \frac{20k}{100}$. இந்தச் சூத்திரத்தில் k ஆனது மாறும் பருமன் ஆகும்; சரக்குகளில் சேர்ந்திடும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்புக்கேற்பவும், உற்பத்திப் பொருளில் சேர்ந்திடும் நிலை-மூலதனத் தேய்மானத்தின் அளவுக்கேற்பவும் k மாறுகிறது. கூலி

உயர்ந்த பிறகு உற்பத்தி-விலை $= k + \frac{14^{2}/_{7}k}{100}$.

$80_c + 20_v$ என்பது சராசரி சமுதாய மூலதனத்தின் ஆரம்ப இயைபு (இது இப்போது $76\frac{4}{21}_c + 23\frac{17}{21}_v$ ஆக மாறி விட்டது). இதைக் காட்டிலும் தாழ்ந்த இயைபுடைய ஒரு மூலதனத்தை எடுத்துக் கொள்வோம்; இதன் இயைபு $50_c + 50_v$ என்போம். நிலை-மூல தனம் முழுவதும் தேய்மானத்தின் மூலம் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தில் சேர்ந்து விடுவதாகவும், புரள்வுக் காலம் முதல் நேர்வில் இருந்ததாகவே இங்கும் இருப்பதாகவும் எளிமையின் நிமித்தம் அனுமானம் செய்து கொள்வோம். வருடாந்தர உற்பத்திப் பண்டத்தின் உற்பத்தி-விலை கூலி உயர்வுக்கு முன் $50_c + 50_v + 20_p = 120$ ஆக இருந்திருக்கும். இயங்க வைக்கப்படும் உழைப்பளவு மாறாதிருக்க, கூலி 25% உயருமானால், மாறும்-மூலதனம் 50 இலிருந்து $62\frac{1}{2}$ ஆக உயரும். வருடாந்தர உற்பத்திப் பண்டம் பழைய உற்பத்தி-விலையாகிய 120க்கு விற்கப்படுமானால், $50_c + 62\frac{1}{2}_v + 7\frac{1}{2}_p$ பெறப்படும்; இலாப வீதம் $6\frac{2}{3}\%$. ஆனால் புதிய சராசரி இலாப வீதம் $= 14^{2}/_{7}\%$. மற்றவை யாவும் மாறாதிருப்பதாக நாம் வைத்துக் கொள்வதால், $50_c + 62\frac{1}{2}_v$ ஆகிய இந்த மூலதனமும் இதே இலாபம் பெற்றுத் தந்தாக வேண்டும். மூலதனம் $= 112\frac{1}{2}$, இலாப வீதம் $= 14^{2}/_{7}\%$ என்றால் இலாபம் $= 16^{1}/_{14}$. ஆக, இந்த மூல தனத்தால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் உற்பத்தி-விலை இப்போது $50_c + 62\frac{1}{2}_v + 16^{1}/_{14\,p} = 128^{8}/_{14}$. கூலி 25% உயர்ந்ததால் அதே சரக்கினது அதே அளவின் உற்பத்தி-விலை 120 இலிருந்து $128^{8}/_{14}$ ஆகியுள்ளது, அதாவது 7%க்கு மேல் உயர்ந்துள்ளது.

இதற்கு மாறாக, சராசரி மூலதனத்தைக் காட்டிலும் உயர்ந்த இயைபுடைய உற்பத்திக் கிளையொன்றை எடுத்துக் கொள்வோம்; இக்கிளையில் மூலதன இயைபு $92_c + 8_v$ என்போம். இங்கும் ஆரம்ப சராசரி இலாபம் $= 20$; நிலை-மூலதனம் முழுவதும் வருடாந்தர உற்பத்திப் பண்டத்தில் சேர்ந்து விடுவதாகவும், புரள்வுக் காலம் முதல் இரு நேர்வுகளிலும் இருந்ததாகவே இங்கும் இருப்பதாகவும் மீண்டும் அனுமானம் செய்து கொள்வோம். இங்கும் கூட சரக்கின் உற்பத்தி-விலை $= 120$.

கூலி 25% உயருவதால், அதே உழைப்பளவுக்குத் தேவையான மாறும்-மூலதனம் 8 இலிருந்து 10 ஆக அதிகரிக்கிறது, இதனால் சரக்குகளின் அடக்க-விலை 100 இலிருந்து 102 ஆக அதிகரிக்கிறது, அதே போது சராசரி இலாப வீதம் 20% இலிருந்து $14^{2}/_{7}\%$ ஆகக் குறைகிறது. ஆனால் $100 : 14^{2}/_{7} = 102 : 14^{4}/_{7}$. எனவே இப்போது 102க்கு கிடைக்கும் இலாபம் $14^{4}/_{7}$. இதனால் மொத்த உற்பத்திப் பண்டமானது $k + kp' = 102 + 14^{4}/_{7} = 116^{4}/_{7}$க்கு விற்கப்படுகிறது. உற்பத்தி-விலையானது இவ்விதம் 120 இலிருந்து $116^{4}/_{7}$ ஆக, அதாவது $3^{3}/_{7}$ குறைந்துள்ளது.

ஆக, கூலி 25% உயருவதால் பின்வரும் விளைவு ஏற்படுகிறது:

1) சராசரி சமுதாய இயைபுடைய மூலதனத்திற்கு, சரக்கின் உற்பத்தி-விலை மாறுவதில்லை;

2) தாழ்ந்த இயைபுடைய மூலதனத்திற்கு, சரக்கின் உற்பத்தி-விலை உயருகிறது, ஆனால் இலாபம் குறைகிற அதே விகிதத்தில் உயருவதில்லை;

3) உயர்ந்த இயைபுடைய மூலதனத்திற்கு சரக்கின் உற்பத்தி-விலை குறைகிறது, ஆனால் இலாபம் குறைகிற அதே விகிதத்தில் குறைவதில்லை.

சராசரி மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் உற்பத்தி-விலை மாறாதிருப்பதால், அதாவது உற்பத்திப் பொருளின் மதிப்புக்குச் சமமாய் இருப்பதால், எல்லா மூலதனங்களாலும் உற்பத்தி செய்யப்படுகிறவற்றின் உற்பத்தி-விலைகளின் கூட்டுத் தொகையும் மாறாதிருக்கிறது, அதாவது மொத்த மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் மதிப்புகளின் கூட்டுத் தொகைக்குச் சமமாய் இருக்கிறது. ஒரு புறம் அதிகரிக்கிறது, மறுபுறம் குறைகிறது, இரண்டும் ஒன்றையொன்று சரி செய்து கொள்கின்றன. இதனால் மொத்த மூலதனம் சராசரி சமுதாய மூலதனத்தின் நிலையை அடைகிறது.

உற்பத்தி-விலையானது இரண்டாம் நேர்வில் உயருகிறது, மூன்றாம் நேர்வில் குறைகிறது என்றால், உபரி-மதிப்பு வீதம் குறைவதால் அல்லது பொதுவான கூலி உயர்வால் ஏற்படும் ஒன்றுக்கொன்று நேர்மாறான இந்த விளைவுகளே கூலி உயர்வை விலையைக் கொண்டு சரிக்கட்டி விட முடியாது என்பதற்குச் சான்றாகின்றன. மூன்றாம் நேர்வில் முதலாளியின் இலாபம் வீழ்வதை உற்பத்தி-விலையின் வீழ்ச்சியைக் கொண்டு சரிக்கட்டி விட முடியாது, அதே போல் இரண்டாம் நேர்விலும் இலாபம் வீழ்வதை விலையுயர்வைக் கொண்டு தடுத்து விட முடியாது. இரு நேர்வுகளில் எதை எடுத்துக் கொண்டாலும், விலை உயர்ந்தாலும் சரி, குறைந்தாலும் சரி, விலை மாற்றத்துக்கு இடந்தராத சராசரி மூலதனத்திற்குக் கிடைக்கும் அதே இலாபம்தான் கிடைக்கிறது. இரு நேர்வுகளிலும் பெறப்படுவது அதே சராசரி இலாபம்தான், இரண்டாம் நேர்விலும் மூன்றாம் நேர்விலும் $5^{5}/_{7}$, அதாவது 25%க்கு சற்றே அதிகமாய்க் குறைந்து விடுகிற அதே சராசரி இலாபம்தான். இதிலிருந்து தெரிவது என்ன? விலையானது இரண்டாம் நேர்வில் உயராமலும் மூன்றாம் நேர்வில் குறையாமலும் இருந்து விட்டால், இரண்டாவதில் புதிய—முன்னைக் காட்டிலும் குறைந்த—சராசரி இலாபத்தை விடக் குறைந்த இலாபத்துக்கும், மூன்றாவதில் அதை விட அதிக இலாபத்துக்கும் விற்க வேண்டியிருக்கும். கூறாமலே விளங்குவதுதான் இது: கூலி உயர்வு முதலாளியின் மீது ஏற்படுத்தும் விளைவு அவர் 100 மூலதன

அலகுகளில் எவ்வளவை (50, 25, அல்லது 10) கூலிக்காக முதலீடு செய்கிறார் என்பதைப் பொறுத்தது; கூலிக்காகத் தமது மூலதனத்தில் $^{1}/_{10}$ பங்கை முதலீடு செய்துள்ள முதலாளியின் மீது கூலி உயர்வு ஏற்படுத்தும் விளைவு ¼ அல்லது ½ பங்கு முதலீடு செய்திருப்பவர் மீது ஏற்படுத்தும் விளைவிலிருந்து மாறுபட்டதாகவே இருந்தாக வேண்டும். இயைபில் மூலதனம் சராசரி சமுதாய இயைபைக் காட்டிலும் தாழ்ந்திருக்கிறதா, உயர்ந்திருக்கிறதா என்பதைப் பொறுத்து, உற்பத்தி-விலை ஒரு புறம் உயருவதும், மறு புறம் குறைவதும் இலாபமானது புதிய — முன்னைக் காட்டிலும் குறைந்த — சராசரி இலாபத்தின் நிலைக்கு சமனமாக்கப்படும் நிகழ் முறையைக் கொண்டுதான் நடைபெறுகிறது.

அப்படியானால், பொதுவான கூலிக் குறைப்பும், அதனால் இலாப வீதத்திலும் இவ்விதம் சராசரி இலாபத்திலும் ஏற்படும் பொதுவான உயர்வும் சராசரி சமுதாய இயைபிலிருந்து எதிரெதிர்த் திசைகளில் வேறுபட்டமைந்த மூலதனங்களால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் உற்பத்தி-விலைகளில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும்?

I. சராசரி மூலதனம். $80_c + 20_v = 100$; உபரி-மதிப்பு வீதம் = $= 100\%$; உற்பத்தி-விலை = பண்டங்களின் மதிப்பு $= 80_c + 20_v + 20_p = 120$; இலாப வீதம் $= 20\%$. கூலி கால் பங்கு குறைவதாகக் கொள்வோம். அதாவது $20_v$ இயங்க வைத்த அதே மாறா-மூலதனத்தை $15_v$ இயங்க வைக்கிறது. சரக்குகளின் மதிப்பு $80_c + 15_v + 25_p = 120$. vஐக் கொண்டு நிறைவேறும் உழைப்பின் அளவில் மாற்றமில்லை. அது புதிதாய்ப் படைத்திடும் மதிப்பு முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையே எவ்விகிதத்தில் வினியோகமாகிறது என்பதில்தான் மாறுபாடு உள்ளது. உபரி-மதிப்பு 20இலிருந்து 25ஆக உயருகிறது, உபரி-மதிப்பு வீதம் $^{20}/_{20}$இலிருந்து $^{25}/_{15}$ ஆக, அதாவது 100%இலிருந்து $166\frac{2}{3}\%$ ஆக உயருகிறது. 95க்கு இப்போது இலாபம் 25; அதாவது இலாப வீதம் $= 26^{6}/_{19}\%$. சதவீதமாக இப்போது மூலதனத்தின் புதிய இயைபு $84^{4}/_{19c} + 15^{15}/_{19v} = 100$.

II. சராசரியை விட தாழ்ந்த இயைபுடைய மூலதனம். மேலே பார்த்தது போலவே ஆரம்பத்தில் $50_c + 50_v$. கூலி கால் பங்கு குறைவதால் v ஆனது $37\frac{1}{2}$ ஆகக் குறைகிறது. ஆகவே மொத்த மூலதன முன்னீடு $= 50_c + 37\frac{1}{2}_v = 87\frac{1}{2}$. புதிய இலாப வீதத்தை $(26^{6}/_{19}\%)$ இதற்குப் பிரயோகித்தால் பெறப்படுவது $100 : 26^{6}/_{19} = 87\frac{1}{2} : 23^{1}/_{38}$. முன்பு 120 விலையான அதே சரக்குத் திரள் இப்போது $87\frac{1}{2} + 23^{1}/_{38} = 110^{10}/_{19}$ விலையாகிறது. அதாவது விலை கிட்டத்தட்ட 10 குறைகிறது.

III. சராசரியை விட உயர்ந்த இயைபுடைய மூலதனம். ஆரம்பத்தில் $92_c + 8_v = 100$. கூலி கால் பங்கு குறைவதால் $8_v$ ஆனது

$6_v$ ஆகக் குறைகிறது, மொத்த மூலதனம் 98 ஆகக் குறைகிறது. ஆகவே $100 : 26^{6}/_{19} = 98 : 25^{15}/_{19}$. முன்பு $100 + 20 = 120$ ஆக இருந்த சரக்கின் உற்பத்தி-விலை கூலிக் குறைப்புக்குப் பிறகு இப்போது $98 + 25^{15}/_{19} = 123^{15}/_{19}$ ஆகிறது. அதாவது விலை கிட்டத்தட்ட 4 உயர்கிறது.

இதிலிருந்து தெளிவாகவே தெரிவது என்னவென்றால்: முன்பு எடுத்துரைத்த அதே போக்கினை உரிய திருத்தங்களோடு எதிர்த் திசையில் ஆராய்ந்தால் போதும்; கூலியில் ஏற்படும் பொதுவான சரிவு உபரி-மதிப்பிலும் உபரி-மதிப்பு வீதத்திலும் பொதுவான உயர்வுக்கு வழி செய்கிறது; மற்றவை மாறாதிருக்க, இலாப வீதத்திலும் கூட பொதுவான உயர்வுக்கு (உயர்வின் விகிதத்தில் மாறுபாடு இருக்கலாம் என்றாலும்) வழிசெய்கிறது; சராசரியை விடத் தாழ்ந்த இயைபுடைய மூலதனங்களால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் உற்பத்தி-விலைகள் குறைவதற்கும், சராசரியை விட உயர்ந்த இயைபுடைய மூலதனங்களால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் உற்பத்தி-விலைகள் உயருவதற்கும் வழிசெய்கிறது. கூலியில் ஏற்படும் பொதுவான உயர்வால் விளைவதென நாம் கண்டதற்கு நேர்மாறானதாகும் இவ்விளைவு.[34] கூலி உயர்ந்தாலும் குறைந்தாலும் வேலை-நாள் மாறாதிருப்பதாய்க் கொள்கிறோம், வாழ்வுச் சாதனங்களின் விலைகளும் கூட மாறாதிருப்பதாகவே கொள்கிறோம். கூலியானது இந்நிலைமைகளில் குறைய வேண்டுமானால், ஏற்கெனவே உழைப்பின் இயல்பான விலைக்கும் கூடுதலாய் இருந்தாக வேண்டும், அல்லது அவ்விலைக்கும் கீழே குறைக்கப்பட்டாக வேண்டும். தொழிலாளி வழக்கமாய் நுகர்கிற சரக்குகளின் மதிப்பிலும், எனவே உற்பத்தி-விலையிலும் ஏற்படும் மாற்றம் கூலி உயருவதற்கோ குறைவதற்கோ காரணமாகும் போது, அதனால் ஏற்படும் திருத்தம் என்ன என்பதை நில-வாடகை தொடர்பான பகுதியில் சற்றே விரிவாகப் பரிசீலிப்போம். என்றாலும் இங்கேயே முடிவாக சிலவற்றைக் குறிப்பிட்டாக வேண்டும்:

---

[34] கூலியின் பொதுவான சரிவால் ஏற்படும் விளைவுகளை ரிக்கார்டோ பரிசீலிக்காமலே விட்டது விசித்திரம்தான். முதல் நேர்வை மட்டுமே, அதாவது கூலி உயருவதையும் சரக்குகளின் உற்பத்தி-விலைகளில் அதனால் ஏற்படும் விளைவுகளையும் மட்டுமே அவர் பரிசீலித்தார். [அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் மற்றும் வரிவிதிப்பு குறித்து. மூன்றாம் பதிப்பு, லண்டன், 1821, பக்கம் 36-41. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.] (இயல்பாகவே அவரது ஆய்வு முறை நமது ஆய்வு முறையிலிருந்து வேறுபடுகிறது: ஏனென்றால் மதிப்புகள் உற்பத்தி-விலைகளாகச் சமனமாவதை அவர் புரிந்து கொள்ளவில்லை.) அந்த *servum pecus imitatorum** [ஹொரேஸ், *Epistles*, புத்தகம் I, epistle 19. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்] கூறாமலே விளங்குகிற, சொன்னதையே சொல்லுகிற இந்த நடைமுறைப் பிரயோகத்தை செய்து பார்ப்பதற்குக் கூட இயலவில்லை.

---

* கபட வேடம் போடும் சீட கோடிகள்.

கூலி உயர்வோ கூலிக் குறைவோ அவசிய வாழ்வுச் சாதனங்களின் மதிப்பிலான மாற்றத்தால் ஏற்படுமானால், ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் மேற்கண்ட முடிவுகளில் திருத்தம் அவசியமாகிறது. அதாவது மாறும்-மூலதனம் கூடுதலாவதற்கோ குறைவதற்கோ வழி செய்யும் விலை மாற்றத்திற்கு உள்ளாகிற சரக்குகள் மாறா-மூலதனத்திலும் அதன் அடக்கக் கூறுகளாக சேர்ந்து, அதனால் கூலியை மட்டுமல்லாமல் ஏனையவற்றையும் பாதிக்கிற சந்தர்ப்பத்தில் மட்டும் நமது முடிவுகளை சற்றே திருத்திக் கொள்ள வேண்டும். ஆனால் இச்சரக்குகள் கூலி மீது மட்டும் தாக்கம் செலுத்துமானால், இது குறித்துச் சொல்ல வேண்டியதையெல்லாம் மேலே நமது ஆய்விலேயே சொல்லி விட்டோம்.

பொது இலாப வீதமும் சராசரி இலாபமும் நிலைநாட்டப் பெறுவதாகவும், எனவே மதிப்புகள் உற்பத்தி-விலைகளாய் உருமாறுவதாகவும் இந்த அத்தியாயம் முழுவதிலும் வைத்துக் கொண்டோம். சரக்குகளின் உற்பத்தி-விலைகளை அனுமானம் செய்து கொண்டு, பொதுவான கூலி உயர்வாலோ குறைவாலோ இவ்விலைகளில் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதையே நாம் ஆராய்ந்தோம். இந்த இரண்டாம் பகுதியில் நாம் ஆராய்ந்த ஏனைய முக்கிய பிரச்சினைகளோடு ஒப்பிடுகையில் இப்பிரச்சினை சர்வசாதாரணமானதே. ஆனால் இங்கே நம்முன்னுள்ள ஆய்வுடன் தொடர்பு கொண்ட பிரச்சினைகளில் இந்த ஒரு பிரச்சினையை மட்டுமே ரிக்கார்டோ ஆராய்ந்தார்; ஒருதரப்பான முறையிலும் அரைகுறையாகவுமே அவர் இதனை ஆராய்ந்தார் என்பதைப் பிறகு பார்ப்போம்.*

---

* கா. மார்க்ஸ், *உபரி-மதிப்புத் தத்துவங்கள்*, கா. மார்க்ஸ்/பி. எங்கெல்ஸ், *Werke*, Band 26, Teil 2, பக்கம் 181-94. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

## அத்தியாயம் XII

## கூடுதல் குறிப்புகள்

### 1. உற்பத்தி-விலையில் மாற்றம் ஏற்படுவதற்கான காரணங்கள்

சரக்கின் உற்பத்தி-விலையை மாற்றக் கூடிய காரணங்கள் இரண்டே இரண்டுதான்:

*முதலாவது:* பொது இலாப வீதம் மாறுதல். பொது இலாப வீதம் மாற வேண்டுமானால், சராசரி உபரி-மதிப்பு வீதமே மாறியாக வேண்டும்; அல்லது, சராசரி உபரி-மதிப்பு வீதம் மாறாதிருக்க, தனதாக்கப்படும் உபரி-மதிப்புத் தொகைக்கும் முன்னீடு செய்யப்படும் மொத்தச் சமுதாய மூலதனத்துக்கும் இடையிலான விகிதம் மாறியாக வேண்டும்.

உபரி-மதிப்பு வீதத்திலான மாற்றம் கூலி இயல்புக்கும் கீழே குறைக்கப்படுவதையோ, இயல்புக்கும் மேலே உயர்த்தப்படுவதையோ சார்ந்திராத வரை — இத்தகைய அசைவியக்கங்களை எப்போதும் அலைவுகளாகவே கருத வேண்டும் — உழைப்புச் சக்தியின் மதிப்பு குறைவதாலோ உயருவதாலோதான் இம்மாற்றம் சாத்தியமாகும். வாழ்வுச் சாதனங்களை உற்பத்தி செய்யும் உழைப்பின் உற்பத்தித் திறனில், அதாவது தொழிலாளி நுகர்ந்திடும் சரக்குகளின் மதிப்பில் மாற்றம் ஏற்படா விட்டால் உழைப்புச் சக்தியின் மதிப்பு குறைவோ உயரவோ வாய்ப்பே இல்லை.

அல்லது, தனதாக்கப்படும் உபரி-மதிப்புத் தொகைக்கும் முன்னீடு செய்யப்படும் மொத்தச் சமுதாய மூலதனத்துக்கும் இடையிலான விகிதத்தில் மாற்றம் ஏற்படலாம். இந்த மாற்றம் உபரி-மதிப்பு வீதத்திலிருந்து விளைந்ததல்ல என்பதால், மொத்த மூலதனத்திலிருந்து, பார்க்கப் போனால் அதன் மாறாப் பகுதியிலிருந்து விளைவதாகவே இருந்தாக வேண்டும். தொழில் நுட்பக் கோணத்திலிருந்து பார்க்கும் போது, இந்த மாறாப் பகுதியின் திரளானது மாறும்-மூலதனத்தால் வாங்கப்படும் உழைப்புச் சக்தியின் அளவுக்கேற்ற விகிதத்தில் அதிகரிக்கவோ குறையவோ செய்கிறது. எனவே இத்திரள் அதிகரிக்கவோ குறையவோ செய்யும் போது

அதன் மதிப்பளவும் அதிகரிக்கவோ குறையவோ செய்கிறது. மாறும்-மூலதனத்தின் மதிப்பளவுக்கேற்பவும் மாறா-மூலதனத்திரள் அதிகரிக்கவோ குறையவோ செய்கிறது. குறிப்பிட்ட உழைப்பு முன்னைக் காட்டிலும் அதிக மாறா-மூலதனத்தை இயங்கச் செய் தால் அதன் உற்பத்தித் திற்ன் அதிகரித்திருப்பதாகவும், முன்னைக் காட்டிலும் குறைந்த மாறா-மூலதனத்தையே இயங்க வைத்தால் அதன் உற்பத்தித் திறன் குறைந்திருப்பதாகவும் பொருள். ஆக, உழைப்பின் உற்பத்தித் திறனில் மாற்றம் ஏற்பட்டுள்ளது, குறிப் பிட்ட சில சரக்குகளின் மதிப்பில் மாற்றம் ஏற்பட்டிருக்க வேண் டும்.

ஆகவே, இவ்விரு நேர்வுகளையும் அளாவிய விதி பின் வருமாறு: ஒரு சரக்கின் உற்பத்தி-விலை பொது இலாப வீதத் திலான மாற்றத்தின் விளைவாக மாறுமானால் அதன் மதிப்பு அப்போதும் கூட மாறாமல் இருக்க முடியும். ஆனால் ஏனைய சரக்குகளின் மதிப்பில் மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

*இரண்டாவது:* பொது இலாப வீதம் மாறாதிருத்தல். இந்நேர் வில் சரக்கின் மதிப்பே மாறியிருந்தால்தான் அதன் உற்பத்தி-விலை மாற முடியும். இந்த மதிப்பு மாற்றமானது இந்தச் சரக்கின் மறுவுற் பத்திக்குத் தேவையான உழைப்பு அதிகரிப்பதாலோ குறைவதாலோ ஏற்படுவதாகும்—குறிப்பிட்ட சரக்கை இறுதி வடிவில் உற்பத்தி செய்கிற உழைப்பின் உற்பத்தித் திறனிலான மாற்றம் காரண மானாலும் சரி, அதன் உற்பத்திக்குப் பயன்படும் வேறு சரக்குகளை உற்பத்தி செய்கிற உழைப்பின் உற்பத்தித் திறனிலான மாற்றம் காரணமானாலும் சரி. பருத்தி நூலின் உற்பத்தி-விலை குறை வதற்கு, கச்சாப் பருத்தி முன்னை விடக் குறைந்த செலவில் உற்பத்தியாவதோ, இயந்திர சாதன மேம்பாட்டின் பயனாய் நூற்பு உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதோ காரணமாய் இருக்க லாம்.

உற்பத்தி-விலை = $k + p$, அதாவது அடக்க-விலை + இலாபம் என்று பார்த்தோம். ஆனால் இது $k + kp'$ என்பதற்குச் சமம்; இதில் அடக்க-விலையாகிய $k$ உற்பத்திக் கிளைக்கு உற்பத்திக் கிளை மாறுகிற ஒன்று, எங்குமே சரக்கின் உற்பத்தியில் நுகரப்படும் மாறா-மூலதனம், மாறும்-மூலதனம் ஆகியவற்றின் மதிப்புக்குச் சம மானது; $p'$ என்பது சதவீத வடிவிலான சராசரி இலாப வீதமாகும். $k = 200$ என்றும், $p' = 20\%$ என்றும் கொள்வோமானால் உற்பத்தி-விலை $k + kp' = 200 + 200 \times \frac{20}{100} = 200 + 40 = 240$. சரக்குகளின் மதிப்பு மாறினாலும் இந்த உற்பத்தி-விலை மாறாதிருக்கலாம் என்று தெளிவாகிறது.

சரக்குகளின் உற்பத்தி-விலையிலான மாற்றங்கள் எல்லாம் இறுதி யாகப் பார்க்குமிடத்து மதிப்பிலான மாற்றங்களாகப் பெயர்கின்றன.

ஆனால் சரக்குகளின் மதிப்பிலான எல்லா மாற்றங்களுமே உற்பத்தி-விலையிலான மாற்றங்களாய் வெளிப்பட்டாக வேண்டுமென்பதில்லை. உற்பத்தி-விலையை நிர்ணயிப்பது எல்லாச் சரக்குகளின் மொத்த மதிப்புதானே தவிர, ஏதேனும் ஒரு சரக்கின் மதிப்பு மட்டுமல்ல. ஆகவே, A சரக்கிலான மாற்றம் B சரக்கிலான எதிர் மாற்றத்தால் சரிக்கட்டப்படலாம், இவ்விதம் பொது வான விகித உறவு மாறாது நீடிக்கிறது.

## II. சராசரி இயைபுடைய மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் உற்பத்தி-விலை

மதிப்பிலிருந்து உற்பத்தி-விலை வேறுபட்டு விலகுவதற்கான காரணங்கள் ஏவையென்று முன்பே பார்த்தோம். அவையாவன:

1) சரக்கின் அடக்க-விலையோடு அதிலடங்கிய உபரி-மதிப்பைச் சேர்ப்பதற்கு பதில் சராசரி இலாபத்தைச் சேர்த்தல்.

2) ஒரு சரக்கின் மதிப்பிலிருந்து இவ்விதம் வேறுபடும் உற்பத்தி-விலை ஏனைய சரக்குகளின் அடக்க-விலையில் ஒரு கூறாகச் சேர்தல்; அதாவது சராசரி இலாபத்துக்கும் உபரி-மதிப்புக்கும் இடையிலான வேறுபாட்டிலிருந்து எழக் கூடியதை அன்னியில், சரக்கின் உற்பத்தியில் நுகரப்படும் உற்பத்திச் சாதனங்களிலேயே இந்த விலகல் ஏற்பட்டு விடலாம்.

ஆகவே சராசரி இயைபுடைய மூலதனங்களால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் அடக்க-விலை அவற்றின் உற்பத்தி-விலையில் இப்பகுதியாக அமைந்திடும் கூறுகளின் மதிப்புத் தொகையிலிருந்து வேறுபடுவதும் கூட சாத்தியமே. சராசரி இயைபு $80_c + 20_v$ எனக் கொள்வோம். உள்ளபடியே இந்த இயைபில் அமைந்துள்ள தனிப்பட்ட மூலதனங்களில் $80_c$ ஆனது மாறா-மூலதனம் c இன் மதிப்பை விட அதிகமானதாகவோ குறைவானதாகவோ இருக்கக் கூடும்; எப்படியென்றால், இந்த c ஆக அமைந்திடும் சரக்குகளின் உற்பத்தி-விலை அவற்றின் மதிப்பிலிருந்து வேறுபடுவதாய் இருக்கலாம். இதேபோல் கூலியைச் செலவிட்டு வாங்கி நுகரப்படும் சரக்குகளின் உற்பத்தி-விலை அவற்றின் மதிப்பிலிருந்து வேறுபட்டு விலகிச் சென்றால், $20_v$ உம் வேறுபடுவதாய் இருக்கலாம்; இந்நிலையில், தொழிலாளி இச்சரக்குகளைத் திரும்பவும் வாங்குவதற்கு (அவற்றை மாற்றீடு செய்வதற்கு) இன்னும் நீண்ட காலமோ குறுகிய காலமோ வேலை செய்ய வேண்டியிருக்கும்; இந்த அவசியப் பண்டங்களின் உற்பத்தி-விலை அவற்றின் மதிப்புக்குச் சமமாய் இருந்தால் தேவைப்படக் கூடியதைக் காட்டிலும் அதிகமான அல்லது குறைவான அவசிய உழைப்பை நிறைவேற்ற வேண்டியிருக்கும்.

என்றாலும் சராசரி இயைபுடைய மூலதனங்களின் சரக்குகளுக் கென எடுத்துரைத்த கோட்பாடுகள் சரியானவை என்பதை இந்தச் சாத்தியப்பாடு கிஞ்சிற்றும் பாதிப்பதில்லை. இந்தச் சரக்குகளின் பங்குக்கு உரித்தாகிற இலாபத்தின் அளவு அவற்றிலடங்கிய உபரி-மதிப்பின் அளவுக்குச் சமம். எடுத்துக்காட்டாக, மேற்குறிப்பிட்ட வாறு $80_c + 20_v$ இயைபுடைய மூலதனத்தைப் பொறுத்த வரை, உபரி-மதிப்பை நிர்ணயிப்பதில் மிகவும் முக்கியமானது இந்த எண் விவரங்கள் உள்ளபடியான மதிப்புகளை தெரிவிக்கின்றனவா என்பதல்ல, அவற்றிடையிலான விகித உறவு என்ன என்பதுதான், அதாவது மொத்த மூலதனத்தில் v ஆனது $^1/_5$ பங்காகவும் c ஆனது $^4/_5$ பங்காகவும் இருக்கின்றனவா என்பதுதான். அப்படியிருக்கும் போதெல்லாம், v உற்பத்தி செய்திடும் உபரி-மதிப்பு சராசரி இலாபத்துக்குச் சமம் என்பது நமது அனுமானம். மறு புறம், உபரி-மதிப்பு சராசரி இலாபத்துக்குச் சமமாதலால், உற்பத்தி-விலை = = அடக்க-விலை + இலாபம் = k + p = k + s; அதாவது நடை முறையில் சரக்கின் மதிப்புக்குச் சமம். இதன் பொருள் என்ன வென்றால்: கூலி உயருவதோ குறைவதோ எப்படி இங்கே சரக்கு களின் மதிப்பை பாதிக்காதோ அதே போல் உற்பத்தி-விலையான் k + p ஐயும் பாதிக்காது; இலாப வீதத்தில் மட்டும் உரிய எதிர் இயக்கத்தை, குறைவு அல்லது உயர்வை அது நிகழச் செய்யும். இங்கு கூலி உயருவதோ குறைவதோ சரக்குகளின் விலையை பாதிக்குமானால் சராசரி இயைபுடைய இந்தக் கிளைகளில் இலாப வீதமானது ஏனைய கிளைகளில் இருப்பதைக் காட்டிலும் உயரவோ குறையவோ செய்யும். விலை மாறாதிருக்கும் வரைதான், சராசரி இயைபுடைய கிளை ஏனைய கிளைகளில் நிலவும் அதே இலாப வீதத்தைக் கொண்டதாய் இருக்கும். ஆகவே நடைமுறையில் இதன் விளைவு இக்கிளையின் உற்பத்திப் பொருட்கள் அவற்றின் உண்மை மதிப்புக்கே விற்கப்பட்டால் ஏற்படக் கூடிய அதே விளைவுதான். சரக்குகள் அவற்றின் உண்மை மதிப்புக்கே விற்கப் படுமானால், மற்றவை மாறாதிருக்க, கூலி உயருவதோ குறைவதோ அதற்கேற்ப இலாபம் குறைவதற்கோ உயருவதற்கோ வழிசெய்யும் என்றாலும் சரக்கின் மதிப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படச் செய் யாது என்பதும், கூலி உயருவதோ குறைவதோ எந்நிலையிலும் சரக்குகளின் மதிப்பை பாதிக்க முடியாது என்றாலும் உபரி-மதிப்பின் பருமனை மட்டுமே பாதிக்கக் கூடும் என்பதும் தெளிவு.

## III. முதலாளியின் இழப்பீட்டுக்கான நியாயம்

போட்டியானது வெவ்வேறு உற்பத்திக் கிளைகளிடையே இலாப வீதங்களைச் சமனமாக்கி சராசரி இலாப வீதத்தை உருப்பெறச் செய்கிறது என்றும், இவ்விதம் இந்த வெவ்வேறு கிளைகளின்

உற்பத்திப் பொருட்களுடைய மதிப்புகளை உற்பத்தி-விலைகளாக மாற்றுகிறது என்றும் குறிப்பிட்டோம்.* மூலதனத்தின் ஓயாத பெயர்ச்சியால் ஏற்படுகிற விளைவு இது. அந்தந்த நேரத்தில் எங்கெங்கே இலாபம் சராசரிக்கு மேல் அதிகமாகிறதோ அக்கிளை களுக்கு மூலதனம் பிற கிளைகளிலிருந்து பெயர்ந்து செல்கிறது. என்றாலும், குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட தொழிற் கிளையில் செழிப்பான ஆண்டுகளும் வறண்ட ஆண்டுகளுமாய் மாறி வரும் சகடத்தால் இலாபத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களையும் இங்கு உரிய முறையில் கணக்கில் எடுத்துக் கொண்டாக வேண்டும். மூலதனம் இவ்விதம் வெவ்வேறு உற்பத்தி கிளைகளிடையே ஓய்வு ஒழிச்சலின்றி ஓடிப் பாய்வது—வெளியேறுவதும் நுழைவதும்—இலாப வீதம் ஏறுவதும் இறங்குவதுமான போக்குகளைத் தோற்று விக்கிறது. இந்தப் போக்குகள் ஒன்றையொன்று ஓரளவு சரி செய்து கொண்டு, இவ்விதம் முடிவில் எல்லாத் துறைகளிலுமே யாவற்றுக் கும் பொதுவான சரிமட்ட நிலை வரும்படியான போக்கு உரு வாகிறது.

மூலதனங்களின் இந்த அசைவியக்கத்துக்கு சந்தை-விலைகளின் நிலவரமே முதற் காரணம். இவ்விலைகள் இலாபத்தை ஓரிடத்தில் பொது சராசரிக்கு மேல் உயரச் செய்கின்றன, பிறிதோரிடத்தில் அந்த சராசரிக்குக் கீழ் குறையச் செய்கின்றன. ஊக வாணிபம் இவ்விடத்துக்குரியதல்ல என்பதால் அதனைக் கருதாமல் விட்டு விடுகிறோம்; மக்கள் மிக அதிகமாய் விரும்பும் குறிப்பிட்ட சில பண்டங்களில் திடீர் திடீரென்று தலைதூக்கும் ஊக வாணிப வலிப்புகளிலிருந்து தெரிவது இதுதான்: ஒரு தொழிற் கிளையி லிருந்து அசாதாரண விரைவுடன் மூலதனத் திரள்களை விலக்கி யெடுத்து இன்னொரு கிளையில் அதே விரைவுடன் அவற்றை வீசு வதற்கு வணிக-மூலதனத்தால் முடியும். ஆனால் உள்ளபடியான ஒவ்வோர் உற்பத்தித் துறையிலும்—தொழில் துறை, வேளாண்மை, சுரங்கம் முதலானவற்றில்—மூலதனத்தை ஒரு கிளையிலிருந்து இன் னொரு கிளைக்கு மாற்றுவதில் கணிசமான இடர்ப்பாடுகள் உள்ளன; இருந்து வரும் நிலை-மூலதனம் இதற்கு முக்கியக் காரண மாகும். மேலும், அனுபவத்தின் வாயிலாகத் தெரிய வருவது என்ன வென்றால், ஒரு தொழிற் கிளை, உதாரணமாகப் பருத்தித் தொழில் ஒரு காலத்தில் வழக்கத்துக்கு மேல் அதிக இலாபம் கிடைக்கச் செய்து, இன்னொரு காலத்தில் மிகக் குறைந்த இலாபமே கிடைக்கச் செய்கிறது, அல்லது இழப்புக்கும் கூட உள்ளாகிறது; இதனால் ஆண்டுகளின் குறிப்பிட்ட ஒரு சகடத்தில் சராசரி இலாபம் ஏறத் தாழ ஏனைய கிளைகளில் கிடைப்பதாகவே இருக்கிறது. இந்த அனுபவத்தைக் கணக்கிலெடுக்க விரைவில் கற்றுக் கொண்டு விடுகிறது மூலதனம்.

ஆனால் மதிப்புகளின் நிர்ணயிப்பு உற்பத்தியின் இயக்கத்தை

ஆளுவதை, மதிப்புகளே உற்பத்தி-விலைகளுக்கு அடியில் மறைந்திருந்து முடிவில் அவற்றை நிர்ணயிப்பதை சந்தையில் நடைபெறும் போட்டி வெளிப்படுத்துவது இல்லை; மறு புறம், போட்டி புலப்படுத்துகிறவை இவைதான்: (1) சராசரி இலாபங்கள் — இவை வெவ்வேறு உற்பத்திக் கிளைகளிலும் மூலதனத்திற்குள்ள அங்கக இயைபைச் சாராதிருப்பவை, எனவே குறிப்பிட்ட சுரண்டல் கிளையில் குறிப்பிட்ட மூலதனத்தால் தனதாக்கப்படும் உயிருள்ள உழைப்பின் திரளையும் கூட சாராதிருப்பவை; (2) கூலி நிலவரத்திலான மாற்றங்களின் விளைவாக உற்பத்தி-விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கம் — எடுத்த எடுப்பில் இந்நிகழ்வு சரக்குகளின் மதிப்பு உறவுக்கு அறவே முரணானது போல் தெரிகிறது; (3) சந்தை-விலைகளின் ஏற்ற இறக்கங்கள் — இவை குறிப்பிட்ட காலத்தில் சரக்கின் சராசரி சந்தை-விலையை அதன் சந்தை-மதிப்பாகப் பெயர்த்திடாமல், இந்தச் சந்தை-மதிப்பிலிருந்து பெரிதும் வேறுபட்டு விலகிச் செல்லும் சந்தை-உற்பத்தி-விலையாகப் பெயர்த்திடுகின்றன. இந்த நிகழ்வுகளெல்லாம் உழைப்பு நேரத்தால் மதிப்பு நிர்ணயிக்கப்படுவதற்கும், ஊதியமிலா உபரி-உழைப்பால் ஆனதாய் இருக்கும் உபரி-மதிப்பின் தன்மைக்கும் முரணானவை போல் தெரிகின்றன. **ஆக, சந்தைப் போட்டியில் எல்லாமே நேர்மாறாய்த் தெரிகிறது.** மேற்பரப்பில் பார்க்கையில் பொருளாதார உறவுகளின் இறுதிச் சித்திரம் அவற்றின் யதார்த்தத்திலும், ஆகவே அவற்றின் ஊர்திகளும் செயலிகளுமாய் இருப்பவர்கள் இவ்வுறவுகளைப் புரிந்து கொள்ளப் பயன்படுத்தும் கருத்தோட்டங்களிலும் புலப்படும் சித்திரம் உள்ளே மறைந்திருக்கும் மூலச் சித்திரத்திலிருந்தும் அதற்குரித்தான கருத்தோட்டத்திலிருந்தும் பெரிதும் வேறுபடுவதாய், ஏன், அவற்றுக்கு நேர்மாறானதாகவும் கூட இருக்கிறது.

மேலும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி குறிப்பிட்ட வளர்ச்சி நிலையை அடைந்த பிறகு, தனிப்பட்ட உற்பத்திக் கிளைகளில் நிலவும் வெவ்வேறான இலாப வீதங்கள் பொது இலாப வீதமாக சமனமாக்கப்படும் நிகழ்வு கவர்ந்து இழுப்பதும் விலக்கித் தள்ளுவதுமான செயல்பாட்டின் — சந்தை-விலைகள் மூலதனத்தைக் கவர்ந்து இழுப்பதோ விலக்கி தள்ளுவதோ ஆன செயல்பாட்டின் — மூலமாய் மட்டுமே நடைபெறுவதாகக் கூறுவதற்கில்லை. சராசரி விலைகளும் அவற்றுக்குரிய சந்தை-விலைகளும் சிறிது காலத்துக்கு நிலைபெற்ற பிறகு, இந்தச் சமனமாதல் குறிப்பிட்ட வேறுபாடுகளை சரிக்கட்டுவதை தனிப்பட்ட முதலாளிகள் உணர்ந்து கொள்கிறார்கள். இதனால் அவர்கள் இவற்றைத் தம்மிடையிலான கணக்கீடுகளில் சேர்த்துக் கொள்ள முடிகிறது. இந்த வேறுபாடுகள் முதலாளிகளின் உள்ளத்தில் இடம்பெற்று, இழப்பீட்டுக்கான நியாயமாய் [grounds for compensating] கணக்கில் கொள்ளப்படுகின்றன.

இங்கு அடிப்படைக் கருத்தாய் இருப்பது சராசரி இலாபமே, அதாவது குறிப்பிட்ட காலத்தில் சம அளவு மூலதனங்களிலிருந்து சம அளவு இலாபங்கள் கிடைத்தாக வேண்டும் என்ற கருத்தே. இதற்கும் அடிப்படையாய் இருக்கும் கருத்து என்னவென்றால்: மொத்தச் சமுதாய மூலதனத்தால் தொழிலாளர்களிடமிருந்து கறக்கப்படும் மொத்த உபரி-மதிப்பில் ஒவ்வோர் உற்பத்திக் கிளையையும் சேர்ந்த மூலதனம் அதன் அளவுக்கேற்ப பங்கு பெற்றாக வேண்டும் என்பதே. அல்லது, ஒவ்வொரு தனிப்பட்ட மூலதனமும் மொத்தச் சமுதாய மூலதனத்தின் பகுதியாகவே கருதப்பட வேண்டும், ஒவ்வொரு முதலாளியும் உள்ளபடியே மொத்தச் சமுதாயத் தொழில் முனைவில் ஒரு பங்காளியாகவே கருதப்பட வேண்டும், ஒவ்வொருவரும் தனது மூலதனப் பங்கின் அளவுக்கேற்ப மொத்த இலாபத்தில் பங்கு பெறுவதாகவே கருதப்பட வேண்டும் என்பதே.

இந்தக் கருத்து முதலாளியின் கணக்கீடுகளுக்கு அடிப்படை ஆகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு மூலதனத்தின் சரக்குகளை உற்பத்தி செய்வதற்கு நீண்ட காலம் தேவைப்படலாம், அல்லது அச்சரக்குகளை தொலைதூரச் சந்தைகளுக்குக் கொண்டுசென்று விற்க வேண்டியிருக்கலாம். இதனால் இம்மூலதனத்தின் புரள்வு பிறவற்றின் புரள்வைக் காட்டிலும் மெதுவாகி விடுகிறது. இம்மூலதனம் இவ்வகையில் இழக்க நேரிடுகிற இலாபத் தொகையை விலையில் சேர்த்து, தனக்கு இழப்பீடு தேடிக் கொள்கிறது. அல்லது, அதிக அபாயத்துக்கும் இடருக்கும் ஏதுவாகும் தொழில்களில்—எடுத்துக்காட்டாய்க் கப்பல் போக்குவரத்தில்—செய்யப்படும் முதலீடுகளுக்கு கூடுதல் விலைகளின் மூலம் இழப்பீடு தேடிக் கொள்கிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தியும் அத்துடன் காப்பீட்டுத் தொழிலும் வளர்ச்சி அடைந்ததும், அபாயத்தாலும் இடராலும் ஏற்படும் இழப்பு எல்லா உற்பத்திக் கிளைகளிலும் நடைமுறையில் சமன் செய்யப்பட்டு விடுகிறது. (பார்க்கவும்: கார்பெட்*); ஆனால் அதிக அபாயத்துக்கும் இடருக்கும் ஏதுவாகும் தொழில்கள் அதிகக் காப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்தியாக வேண்டும். அவை இக்கூடுதல் செலவைத் தமது சரக்குகளின் விலையை உயர்த்தி மீட்டுக் கொள்கின்றன. நடைமுறையில் இவை யாவும் குறிப்பதென்ன? உற்பத்திக் கிளைகளில் (எல்லாக் கிளைகளும் குறிப்பிட்ட வரம்புகளுக்குள் அவசியமானவையாகவே கருதப்படுகின்றன) ஒன்றைக் குறைந்த இலாபத்துக்கும் இன்னொன்றை அதிக இலாபத்துக்கும் உரியதாக்குகிற ஒவ்வொரு நிலைமையும் எடை போடப்பட்டு, இழப்பீட்டுக்கான நியாயம் கணிக்கப்படுகிறது; ஆகவே எப்போதும் போட்டியின் மூலமாகத்தான் இழப்பீட்டைக் கணிப்பதற்கான

---

* தா. கார்பெட், **தனியாட்களது செல்வத்தின் காரணங்கள், முறைகள் பற்றிய ஆய்வு**, லண்டன், 1841, பக்கம் 100-02.—**ஆங்கிலப் பதிப்பாசிரியர்.**

அடிப்படைக் கூறுகள் புலப்படுத்தப்பட வேண்டும் என்பதில்லை, வெவ்வேறு உற்பத்திக் கிளைகளிலும் சரக்கு-விலைக் கணக்கீடு களில் முதலாளிகள் இழப்பீட்டுக்காக முன்வைக்கிற இந்த நியாயங் களில் அடங்கியிருக்கும் சாரப் பொருள் எல்லாம், எல்லா முதலாளிகளுக்கும் உரிய பொதுக் கொள்ளையான மொத்த உபரி-மதிப்பில் அந்தந்த முதலாளியும் அவரது மூலதனத்தின் பருமனுக் கேற்பப் பங்கு பெற சம உரிமை உண்டு என்பதுதான். இந்த உண்மையை முதலாளி மறந்தே விடுகிறார்; போட்டி அதை அவருக் குக் காட்டாததால் பார்க்கத் தவறி விடுகிறார் என்று கூட சொல்ல லாம். அவர்களுக்கு வேறு விதமாய்த் **தெரிகிறது;** அவர்கள் அடை கிற இலாபம் அவர்கள் கைப்பற்றிக் கொள்ளும் உபரி-மதிப்பி லிருந்து வேறுபடுவதால், இழப்பீட்டுக்கான அவர்களின் நியாயங் கள் மொத்த உபரி-மதிப்பில் அவர்களுக்குக் கிடைக்கும் பங்கினை சமனமாக்குவதற்கு பதில் **இலாபத்தையே படைத்துக் கொடுப்ப தாகத்** தெரிகிறது; சரக்கின் அடக்க-விலையோடு ஏதேனும் ஒரு நியாயத்தின் பேரில் சேர்க்கப்படுகிற கூடுதல் தொகையிலிருந்து இலாபம் வரப்பெறுவதாகத் தெரிகிறது.

மற்றபடி, உபரி-மதிப்பின் ஆதாரம் தொடர்பாக முதலாளிக் குள்ள அனுமானங்களைப் பற்றி அத்தியாயம் VIIஇல் [பக்கம் *186* ] கூறியவை சராசரி இலாபத்திற்கும் பொருந்தும். இங்கு ஒரே ஒரு வேறுபாடுதான்: சரக்குகளின் சந்தை-விலையும் உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமையும் குறிப்பிட்டவையாய் இருக்க, அடக்க-விலை யில் மிச்சம் பிடிப்பது தனிப்பட்ட தொழில் திறனையும் விழிப் புணர்வையும் இன்ன பிறவற்றையும் பொறுத்ததாகும்.

## பகுதி III

# இலாப வீதம் குறைந்து செல்லும் போக்கு பற்றிய விதி

## அத்தியாயம் XIII

### விதி அதன் தூய வடிவில்

கூலியும் வேலை-நாளும் குறிப்பிட்டவையாய் இருக்க, எடுத்துக் காட்டாக 100 மாறும்-மூலதனமானது குறிப்பிட்ட எண்ணிக்கையில் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுவதைக் குறிக்கிறது. அது இவ்வெண்ணிக்கையின் குறியீடாகும். 100 தொழிலாளர்களுக்கான ஒரு வாரக் கூலி £100 எனக் கொள்வோம். இந்தத் தொழிலாளர் களின் உழைப்பில் அவசிய-உழைப்பளவும் உபரி-உழைப்பளவும் சமமாய் இருந்தால், அவர்கள் ஒவ்வொரு நாளும் முதலாளிக்காக, உபரி-மதிப்பின் உற்பத்திக்காக எத்தனை மணி நேரம் வேலை செய்கிறார்களோ, தமக்காகவும், அதாவது தமது கூலியின் மறு வுற்பத்திக்காகவும் அத்தனை மணி நேரமே வேலை செய்தால், அவர்களது மொத்த உற்பத்தியின் மதிப்பு = £200; அவர்கள் உற்பத்தி செய்யும் உபரி-மதிப்பு = £100. உபரி-மதிப்பு வீதம் $\frac{s}{v}$ = 100%. ஆனால் — முன்பே பார்த்ததுதான் — இந்த உபரி-மதிப்பு வீதம் மிகவும் வெவ்வேறான இலாப வீதங்களாகத் தெரிவிக்கப் பெறும்; மாறா-மூலதனம் cஇன் பரிமாணங்கள், எனவே மொத்த மூலதனம் Cஇன் பரிமாணங்கள் வேறுபடுவதைப் பொறுத்ததாகும் இது. ஏனென்றால் இலாப வீதம் = $\frac{s}{C}$. உபரி-மதிப்பு வீதம் 100%:

c = 50, v = 100 என்றால், $p' = \frac{100}{150} = 66⅔\%$;

c = 100, v = 100 என்றால், $p' = \frac{100}{200} = 50\%$;

c = 200, v = 100 என்றால், $p' = \frac{100}{300} = 33¾$;

c = 300, v = 100 என்றால், $p' = \frac{100}{400} = 25\%$;

c = 400, v = 100 என்றால், $p' = \frac{100}{500} = 20\%$.

உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமை மாறாதிருக்க, ஒரே உபரி-மதிப்பு வீதம் இப்படித்தான் சரிந்து செல்லும் இலாப வீதமாகத் தெரிவிக்கப் பெறும்; ஏனென்றால் மாறா-மூலதனத்தின் பொருள்வகை அதிகரிப்பு—அதே விகிதத்தில் அல்லவென்றாலும்—அதன் மதிப்பும், எனவே மொத்த மூலதனத்தின் மதிப்பும் கூட அதிகரிப்பதைக் குறிப்பதாகும்.

மூலதனத்தின் இயைபில் ஏற்படும் இந்தப் படிப்படியான மாற்றம் தனிப்பட்ட உற்பத்திக் கிளைகளோடு நின்று விடாமல் அநேகமாய் எல்லாக் கிளைகளிலும், எப்படியும் கேந்திரமான உற்பத்திக் கிளைகளிலாவது நிகழ்வதாகக் கொள்வோம். இதனால் குறிப்பிட்ட சமுதாயத்தின் மொத்த மூலதனத்திற்குள்ள சராசரி அங்கக இயைபில் மாற்றங்கள் ஏற்படும். அப்போது மாறும்-மூல தனத்தோடு ஒப்பிடுகையில் மாறா-மூலதனம் படிப்படியாய் அதி கரிப்பது **பொது இலாப வீதம்** [general rate of profit] **படிப்படி யாக குறைந்து செல்வதற்கு** கட்டாயம் வழி செய்தே ஆக வேண்டும்—உபரி-மதிப்பு வீதமும் உழைப்பை மூலதனம் சுரண்டுவதன் கடுமையும் மாறாதிருப்பதாய்க் கொள்கிறோம். முதலாளித்துவப் பொருளுற்பத்தி வளர்ந்து செல்லும் போது, இயங்க வைக்கப்படும் மாறா-மூலதனத்தோடும், எனவே மொத்த மூலதனத்தோடும் ஒப் பிடுகையில் மாறும்-மூலதனம் குறைந்து செல்வதாகப் பார்த்தோம். இதையே வேறு விதமாகச் சொல்லின், வெவ்வேறான உற்பத்தி வழிமுறைகள் வளர்ந்து உருவாகிற காரணத்தால், குறிப்பிட்ட மதிப் புள்ள மாறும்-மூலதனத்தால் இயங்க வைக்கப்படும் அதே எண் ணிக்கையிலான தொழிலாளர்கள் (அதாவது அதே அளவு உழைப் புச் சக்தி) அதே கால அளவில் மென்மேலும் அதிக அளவில் உழைப்புக் கருவிகளையும் இயந்திர சாதனங்களையும் அனைத்து வகை நிலை-மூலதனத்தையும், கச்சாப் பொருட்களையும் துணைப் பொருட்களையும்—எனவே மென்மேலும் அதிக மதிப்புள்ள மாறா-மூலதனத்தை—செயல்படுத்தி செய்பொருளாக்கி உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகர்ந்திடுகிறார்கள். மாறா-மூலதனத்தோடும், எனவே மொத்த மூலதனத்தோடும் ஒப்பிடுகையில் மாறும்-மூல தனம் இவ்விதம் ஓயாமல் குறைந்து செல்வதும், சராசரிச் சமுதாய மூலதனத்தின் அங்கக இயைபு மென்மேலும் உயர்ந்து செல்வதும் ஒன்றுதான். மேலும் உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறன் மென் மேலும் வளர்ந்து செல்வதற்கு இதுவும் ஒரு தெரிவிப்பாகிறது. இதனைத் துல்லியமாய் மெய்ப்பித்துக் காட்டும் உண்மை என்ன வென்றால்: இயந்திர சாதனங்களும் பொதுவாக நிலை-மூலதனமும் பயன்படுத்தப்படுவது மென்மேலும் அதிகரித்துச் செல்வதன் பய னாய், மென்மேலும் அதிகரித்துச் செல்லும் அளவிலான கச்சாப் பொருட்களையும் துணைப் பொருட்களையும் குறிப்பிட்ட எண் ணிக்கையிலான தொழிலாளர்கள் குறிப்பிட்ட காலத்தில்—அதாவது

இன்னும் குறைந்த உழைப்பைக் கொண்டே—உற்பத்திப் பொருட்களாக மாற்ற முடிகிறது. மாறா-மூலதனத்தின் மதிப்பு இப்படி வளர்ந்து செல்லும் போதே—இந்த வளர்ச்சி மாறா-மூலதனத்தின் பொருட் கூறுகளாய் இருக்கும் பயன்-மதிப்புகளின் திரளினது வளர்ச்சியைத் தோராயமாய்க் குறிப்பதாகவே இருந்த போதிலும்—உற்பத்திப் பொருட்கள் மென்மேலும் விலை மலிவாகிச் செல்கின்றன. ஒவ்வோர் உற்பத்திப் பொருளையும் தனித்தனியே பார்ப்போமானால், உற்பத்தியின் இன்னும் தாழ்ந்த வளர்ச்சிக் கட்டத்தில்—கூலிக்காக முதலீடாகிற மூலதனம் உற்பத்திச் சாதனங்களுக்காக முதலீடாகிற மூலதனத்துடன் ஒப்பிடுகையில் இன்னுங்கூட முக்கியப் பங்கு வகிக்கிற கட்டத்தில்—அடங்கியிருப்பதை விட குறைந்த அளவு உழைப்பே இப்போது அதில் அடங்கியிருக்கக் காணலாம். ஆகவே, இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் ஒரு கருதுகோளாய் வரையப்பட்ட வரிசைத் தொடர் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் மெய்யான போக்கையே தெரிவிப்பதாகும். இந்தப் பொருளுற்பத்தி முறை மாறா-மூலதனத்தோடு ஒப்பிடுகையில் மாறும்-மூலதனம் மென்மேலும் குறைந்து செல்வதற்கும், எனவே மொத்த மூலதனத்தின் அங்கக இயைபு ஓயாமல் உயர்ந்து செல்வதற்கும் வழிசெய்கிறது. இதன் நேரடி விளைவு என்னவென்றால், உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமை மாறாதிருக்கும் போது, ஏன், அது உயரும் போதே கூட, உபரி-மதிப்பு வீதமானது ஓயாமல் குறைந்து செல்லும் பொது இலாப வீதத்தால் குறிக்கப் பெறுகிறது. (இந்தக் குறைவு அறுதி வடிவில் வெளிப்படாமல் ஏன் மென்மேலும் குறைந்து செல்லும் போக்காகவே வெளிப்படுகிறது என்பதைப் பிறகு [அத்தியாயம் XIV] பார்ப்போம்.) ஆக, பொது இலாப வீதம் மென்மேலும் குறைந்து செல்லும் போக்கானது உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறன் மென்மேலும் வளர்ந்து செல்வதன் தெரிவிப்புதான், **முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கே உரிய தெரிவிப்புதான்.** இதன் பொருள் இலாப வீதம் வேறு காரணங்களால் தற்காலிகமாய்க் குறைய முடியாது என்பதல்ல. ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் தன்மையிலிருந்து தொடங்குவோமானால், அது வளர்ந்து செல்கையில் பொதுவான சராசரி உபரி-மதிப்பு வீதம் குறைந்து செல்கிற பொது இலாப வீதமாய்த் தெரிவிக்கப் பெறுவது தர்க்க வழிப்பட்ட அவசியமாய் இவ்விதம் நிரூபணமாகிறது. ஈடுபடுத்தப்படும் உயிருள்ள உழைப்பின் திரள் அதனால் இயங்க வைக்கப்படும் பொருள் வடிவான உழைப்பின் திரளோடு, அதாவது உற்பத்தித் திறனுள்ள முறையில் நுகரப்படும் உற்பத்திச் சாதனங்களோடு ஒப்பிடுகையில் தொடர்ந்து குறைந்து செல்வதால், உயிருள்ள உழைப்பில் ஒரு பகுதியாகிய—உபரி-மதிப்பாய் இறுகிய—ஊதியமிலா உழைப்பும் மொத்த மூலதன முதலீட்டின் மதிப்புத் தொகையோடு ஒப்பிடுகையில்

ஓயாமல் குறைந்து சென்றாக வேண்டும் என்றாகிறது. மொத்த மூலதன முதலீட்டின் மதிப்போடு உபரி-மதிப்புத் திரளுக்குள்ள விகிதமே இலாப வீதம் ஆவதால் இந்த வீதமும் ஓயாமல் குறைந்து சென்றாக வேண்டும்.

மேற்சென்னவற்றிலிருந்து இந்த விதி எளிய ஒன்றாய்த் தெரிய வருகிறது. ஆயினும் அரசியல் பொருளாதார இயல் அனைத்தும் அதனைக் கண்டுபிடிப்பதில் இது வரை வெற்றி பெற்றிடவில்லை— இதைப் பிறகு பார்ப்போம்.* இப்புலப்பாட்டைப் பார்த்த பொரு ளாதார அறிஞர்கள் அதை விளக்குவதற்கு மண்டையை உடைத்து கொண்டு எப்படியெல்லாமோ முயன்றார்கள். முதலாளித்துவப் பொருளுற்பத்திக்குப் பெருமுக்கியத்துவம் வாய்ந்த விதியாகிய இது புரியாப் புதிராகவே இருந்துள்ளது, இந்தப் புதிருக்கு விடை காண்பதே ஆதாம் ஸ்மித் காலம் முதலாய் அரசியல் பொருளா தாரத்தின் எல்லா மரபுகளுக்கும் குறிக்கோளாய் இருந்துள்ளது. வெவ்வேறு மரபுகளுக்கும் இடையிலான வேறுபாடே இந்தப் புதிரை அவிழ்ப்பதற்கு அவை அனுசரித்த வெவ்வேறு அணுகுமுறைகளுக் கிடையிலான வேறுபாட்டிலிருந்து எழுவதுதான். மறு புறம், அரசி யல் பொருளாதாரம் இன்று வரை மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாட்டை சுற்றிச் சுற்றி வந்ததே தவிர எப்படி அதற்கு சரிநுட்பமாய் இலக்கணம் வகுப்பதென அறிந்து கொள்ளவே இல்லை என்பதையும், அது உபரி-மதிப்பை இலாபத்திலிருந்து வேறுபடுத்தியதே கிடையாது, இலாபத்தையும் கூட தொழில் துறை இலாபம், வர்த்தக இலாபம், வட்டி, நில-வாடகை போன்ற அதன் சுயேச்சையான வெவ்வேறு கூறுகளி லிருந்தும் வேறுபடுத்தித் தூய வடிவில் பரிசீலித்ததே கிடையாது என்பதையும், அது மூலதனத்தின் அங்கக இயைபிலான வேறு பாடுகளை முழுமையாகப் பகுத்து ஆராய்ந்ததே இல்லை, பொது இலாப வீதத்தின் உருவாக்கத்தைப் பகுத்து ஆராய்வது பற்றி எண்ணிப் பார்த்ததே இல்லை என்பதையும் கருதிப் பார்க்கையில் அது இந்தப் புதிரை விடுவிக்கத் தவறி விட்டதில் வியப்பேதும் இல்லை.

வேண்டுமென்றேதான் நாம் முதலில் இந்த விதியை எடுத் துரைத்து விட்டு, பிறகே இலாபம் சுயேச்சையான வெவ்வேறு இனங்களாகப் பிரிவதைப் பரிசீலிக்க முற்படுகிறோம். இலாப மானது வெவ்வேறு வகைகளாகப் பிரிந்து வெவ்வேறு வகை யினரின் பங்குக்குப் போய்ச் சேருவதை இந்தப் பகுப்பாய்வு எவ்விதத்தும் சார்ந்ததல்ல. இந்த விதி அதன் முழு உருவில் இந்த இலாபப் பிரிவினையைச் சார்ந்ததல்ல, இப்பிரிவினையின்

---

* கார்ல் மார்க்ஸ், *உபரி-மதிப்புத் தத்துவங்கள்*, கா. மார்க்ஸ்-பி. எங்கெல்ஸ், *Werke*, Band 26, Teil 2, பக்கம் 435-63, 541-43.-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

விளைவாய் எழும் இலாப வகைகள் தம்மிடையே கொண்டுள்ள உறவு களையும் சார்ந்ததல்ல என்பதை இது தொடக்கத்திலிருந்தே தெளிவாய்க் காட்டுகிறது. இங்கு நாம் குறிப்பிடுகிற இலாபமானது உபரி-மதிப்புக்கு மறு பெயரே தவிர வேறல்ல; அதனை அதன் பிறப்புக்கு ஆதாரமாகிய மாறும்-மூலதனத்தோடு ஒப்பிட்டுக் காட்டுவதற்கு பதில் மொத்த மூலதனத்தோடு ஒப்பிட்டுக் காட்டுகிறோம், அவ்வளவுதான். ஆகவே இலாப வீதத்திலான வீழ்ச்சி மொத்த மூலதன முன்னீட்டுடன் உபரி-மதிப்புக்குள்ள விகித உறவிலான வீழ்ச்சியைத் தெரிவிப்பதாகும்; இதனால் அது இந்த உபரி-மதிப்பு பல்வேறு இனங்களிடையிலும் பிரிக்கப்படுவதற்கு எவ்விதத்தும் தொடர்பில்லாதது.

முதலாளித்துவ வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தில் மூலதனத்தின் அங்கக இயைபு c : v = 50 : 100 என்று இருக்கக் கண்டோம்; 100% உபரி-மதிப்பு வீதமானது 66⅔% இலாப வீதமாகத் தெரிவிக்கப் பெற்றது. இன்னும் உயர்ந்த வளர்ச்சிக் கட்டத்தில் c : v = = 400 : 100 என்று இருந்த போது அதே உபரி-மதிப்பு வீதம் 20% இலாப வீதமாகவே தெரிவிக்கப் பெற்றது. ஒரு நாட்டில் அடுத்தடுத்து வரும் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களுக்குப் பொருந்துகிற இது ஒரே சமயத்தில் வெவ்வேறு நாடுகளில் நிலவும் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களுக்கும் பொருந்தும். முதலாவதாகக் குறிப்பிட்ட மூலதன இயைபை சராசரி இயைபாய்க் கொண்ட வளர்ச்சி பெறாத நாட்டில் பொது இலாப வீதம் 66⅔% ஆக இருக்கும், இரண்டாவதாகக் குறிப்பிட்ட இயைபுடையதும் மிக உயர்ந்த வளர்ச்சிக் கட்டத்தில் இருப்பதுமாகிய நாட்டிலோ பொது இலாப வீதம் 20% ஆக இருக்கும்.

ஆனால் இரு நாடுகளின் இலாப வீதங்களுக்கு இடையிலான வேறுபாடு மறைந்து விடக் கூடிய, நேர்மாறாய்ப் புரண்டும் விடக் கூடிய நிலைமையும் ஏற்படலாம். குறைந்த வளர்ச்சி பெற்றிருக்கும் நாட்டில் உழைப்பின் உற்பத்தித் திறன் குறைவாய் இருந்து, குறைந்த அளவிலான அதே சரக்கில் அதிக அளவிலான உழைப்பும், குறைந்த பயன்-மதிப்பில் அதிகமான பரிவர்த்தனை-மதிப்பும் அடங்கியிருக்கும் போது இம்மாதிரியான நிலைமைதான் ஏற்படும். அப்போது தொழிலாளி தமக்கு வேண்டிய வாழ்வுச் சாதனங்களை அல்லது அவற்றின் மதிப்பை மறுவுற்பத்தி செய்து கொள்வதில் இன்னுமதிக நேரத்தையும், உபரி-மதிப்பை உற்பத்தி செய்து கொடுப்பதில் இன்னுங் குறைந்த நேரத்தையும் செலவிடுவார். எனவே அவரது உபரி-உழைப்பு குறைந்து போகும்; இதனால் உபரி-மதிப்பு வீதமும் குறைந்து போகும். வளர்ச்சி குன்றிய நாட்டின் தொழிலாளி வேலை-நாளில் ⅔ பங்கு தமக்காகவும் ⅓ பங்கு முதலாளிக்காகவும் உழைப்பதாகக் கொள்வோம். மேற்கண்ட எடுத்துக்காட்டின்படி அதே உழைப்புச் சக்திக்கு இப்போது 133⅓

ஊதியம் தரப்படும்; $66\frac{2}{3}$ மட்டுமே அதிலிருந்து உபரியாகக் கிடைக்கும். 50 மாறா-மூலதனத்துக்கு $133\frac{1}{3}$ மாறும்-மூலதனம் தேவைப்படும். உபரி-மதிப்பு வீதம் $= 66\frac{2}{3} : 133\frac{1}{3} = 50\%$. இலாப வீதம் $= = 66\frac{2}{3} : 183\frac{1}{3}$, தோராயமாய் $36\frac{1}{2}\%$.

இலாபத்தின் வெவ்வேறு அடக்கக் கூறுகளை நாம் இது வரை ஆராயவில்லை, அதாவது அப்படி எதுவும் இல்லாததாய்க் கொள்கிறோம். தவறாகப் புரிந்து கொள்வதைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக மட்டுமே பின்வருவனவற்றை முன்கூட்டிச் சொல்கிறோம்: வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களில் இருக்கும் நாடுகளை ஒப்பு நோக்கும் போது, ஒரு நாட்டினது இலாப வீதத்தின் மட்டத்தை அந்நாட்டினது வட்டி வீதத்தின் மட்டத்தால் அளவிடுவது பெருந் தவறாகும். அதாவது வளர்ச்சியடைந்த முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையைக் கொண்டிருக்கும் நாடுகளை, மெய்ந்நடப்பில் முதலாளி தொழிலாளியைச் சுரண்டிய போதிலும் உழைப்பு இன்னமும் வடிவ அளவில் மூலதனத்துக்குக் கீழ்ப்பட்டிராத நாடுகளோடு (இந்தியாவை உதாரணமாய்க் கொள்ளலாம், அங்கே நிலவுடைமையாளர் சுயேச்சையான உற்பத்தியாளராகத் தமது பண்ணையை மேலாண்மை செய்கிறார், எனவே நேரடியாக அவரது உற்பத்தி இன்னமும் மூலதனத்துக்குக் கீழப்பட்டதல்ல, இருப்பினும் கடு வட்டிக்காரர் வட்டியின் மூலமாய் அவரது உபரி-உழைப்பு முழுவதையும் கொள்ளையிடுவதோடு, அவரது கூலியில் ஒரு பகுதியையும் — முதலாளித்துவ வழக்கில் — தட்டிச் செல்லக் கூடும்) ஒப்பு நோக்கும் போது ஒரு நாட்டினது இலாப வீதத்தின் மட்டத்தை மேற்சொன்னவாறு அந்நாட்டினது வட்டி வீதத்தின் மட்டத்தால் அளவிடுவது பெருந்தவறாகும் இந்த வட்டியானது, முதலாளித்துவப் பொருளுற்பத்தி வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் இருப்பது போல், உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பு அல்லது இலாபத்தின் ஓர் ஈவுப் பகுதியை மட்டும் குறிப்பதாய் இருப்பதற்கு பதில் இலாபம் முழுவதையும், இலாபத்திற்கும் கூடுதலானதையும் குறிப்பதாய் இருக்கிறது. மேலும் அங்கே வட்டி வீதத்தைப் பெரும்பாலும் நிர்ணயிக்கிற உறவுகள் இலாபத்தோடு எவ்விதத் தொடர்பும் அற்றவை, கடுவட்டி எந்த அளவுக்கு நில-வாடகையைத் தனதாக்கிக் கொள்கிறது என்பதையே காட்டக் கூடியவை (நில-வாடகை பெறும் பெரிய பண்ணைகளின் அதிபர்களுக்கு கடுவட்டிக்காரர்கள் வழங்கும் கடன்களை உதாரணமாய்க் குறிப்பிடலாம்).

முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களில் இருக்கும் நாடுகளின் மூலதனங்களும் வெவ்வேறு அங்கக இயைபுடையவை. இந்த நாடுகளில் ஒரு நாட்டின் இயல்பான வேலை-நாள் இன்னொரு நாட்டின் இயல்பான வேலை-நாளை விடக் குறுகியதாய் இருக்குமானால், முன்னது பின்னதைக் காட்டிலும் உயர்ந்த உபரி-மதிப்பு வீதத்தை உடையதாய் இருக்கலாம்

(உபரி-மதிப்பு வீதம் இலாப வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்று). முதலாவதாக, இங்கிலாந்தின் 10 மணி நேர வேலை-நாளானது அதன் உழைப்பு அதிகம் மும்முரமானதாக இருப்பது காரணமாய் ஆஸ்திரியாவின் 14 மணி நேர வேலை-நாளுக்குச் சமமானால், இரண்டிலும் வேலை-நாளை சம பங்காய்ப் பிரிக்கையில் 5 மணி நேர ஆங்கிலேய உபரி-உழைப்பானது உலகச் சந்தையில் 7 மணி நேர ஆஸ்திரிய உபரி-உழைப்பைக் காட்டிலும் கூடுதலான மதிப்பை குறிக்கக் கூடும். இரண்டாவதாக, ஆஸ்திரிய வேலை-நாளைக் காட்டிலும் ஆங்கிலேய வேலை-நாளில் பெரியதொரு பகுதி உபரி-உழைப்பைக் குறிக்கக் கூடும்.

மாறாதிருக்கும் உபரி-மதிப்பு வீதம், ஏன், உயர்ந்து செல்லும் உபரி-மதிப்பு வீதமும் கூட குறைந்து செல்லும் இலாப வீதத்தால் தெரிவிக்கப் பெறுவது பற்றிய விதியின் பொருள் என்ன? சராசரி சமுதாய மூலதனத்தின் குறிப்பிட்ட அளவில், உதாரணமாய் 100 மூலதனத்தில் உழைப்புச் சாதனங்களின் பகுதி மென்மேலும் அதிகரித்துச் செல்வதாகவும், உயிருள்ள உழைப்பின் பகுதி மென்மேலும் குறைந்து செல்வதாகவும் இருக்கின்றன என்பதே. ஆகவே உற்பத்திச் சாதனங்களை இயக்கிடும் உயிருள்ள உழைப்பின் மொத்தத் திரள் இந்த உற்பத்திச் சாதனங்களின் மதிப்போடு ஒப்பிடுகையில் குறைந்து போவதால், ஊதியமிலா உழைப்பும் அவ்வுழைப்பைக் குறிக்கிற மதிப்புப் பகுதியும் மொத்த மூலதன முன்னீட்டின் மதிப்போடு ஒப்பிடுகையில் குறைந்தாக வேண்டும். அல்லது: முதலீடாகிற மொத்த மூலதனத்தில் மென்மேலும் சிறிய ஈவுப் பகுதியே உயிருள்ள உழைப்பாக மாற்றப்படுகிறது. ஆகவே, இந்த மொத்த மூலதனமானது அதன் பருமனுடனான விகித உறவில் மென்மேலும் குறைந்து செல்லும் உபரி-உழைப்பையே உறிஞ்சுகிறது. ஈடுபடுத்தப்படும் உழைப்பின் ஊதியமிலாப் பகுதி ஊதியப் பகுதியோடு ஒப்பிடுகையில் அதிகரிக்கிற போதும் கூட இப்படித்தான் நடைபெறுகிறது. ஒப்பளவில் மாறும்-மூலதனம் குறைந்து செல்வதும் மாறா-மூலதனம் அதிகரித்துச் செல்வதும்—இவ்விரு மூலதனப் பகுதிகளும் எவ்வளவுதான் அறுதிப் பருமனில் அதிகரித்தாலும்—முன்பே கூறியது போல உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்ந்து செல்வதற்கு மற்றுமொரு தெரிவிப்பே ஆகும்.

மூலதனம் $100 = 80_c + 20_v$ என்றும், $20_v = 20$ தொழிலாளர்கள் என்றும் வைத்துக் கொள்வோம். உபரி-மதிப்பு வீதம் 100% என்போம். அதாவது தொழிலாளர்கள் தமக்காக அரை நாளும் முதலாளிக்காக அரை நாளும் வேலை செய்கிறார்கள் குறைந்த வளர்ச்சி பெற்றிருக்கும் ஒரு நாட்டில் மூலதனம் $100 = 20_c + 80_v$ என்றும், $80_v = 80$ தொழிலாளர்கள் என்றும் வைத்துக் கொள்வோம். இந்தத் தொழிலாளர்கள் ஒரு நாளில் தமக்காக ⅔ பங்கு வேலை செய்ய வேண்டியிருக்கும், முதலாளிக்காக ⅓

பங்கு மட்டுமே வேலை செய்வார்கள். மற்றவை யாவும் சமமெனக் கொண்டால், தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் மதிப்பு முதல் நேர்வில் 40, இரண்டாம் நேர்வில் 120. முதல் மூலதனம் செய்யும் உற்பத்தி $80_c + 20_v + 20_s = 120$; இலாப வீதம் = 20%. இரண்டாவது மூலதனம் செய்யும் உற்பத்தி $20_c + + 80_v + 40_s = = 140$; இலாப வீதம் = 40%. ஆகவே முதல் நேர்வின் உபரி-மதிப்பு வீதம் (100%) இரண்டாம் நேர்வின் உபரி-மதிப்பு வீதத்தைப் (50%) போல் இரு மடங்காய் இருந்த போதிலும், இரண்டாவதன் இலாப வீதம் முதலாவதன் இலாப வீதத்தைப் போல் இரு மடங்காய் உள்ளது. ஆனால் முதல் நேர்வில் இருபது தொழிலாளர்களின் உபரி-உழைப்பை மட்டும் தனதாக்கிக் கொள்கிற அதே மூலதனப் பருமன் இரண்டாம் நேர்விலோ 80 தொழிலாளர்களின் உபரி-உழைப்பைத் தனதாக்கிக் கொள்கிறது.

இலாப வீதம் தொடர்ந்து மென்மேலும் குறைந்து செல்வதாக, அல்லது உயிருள்ள உழைப்பால் இயங்க வைக்கப்படும் பொருள் வடிவான உழைப்புத் திரளோடு ஒப்பிடுகையில் தனதாக்கப்படும் உபரி-உழைப்பு குறைந்து செல்வதாகக் கூறும் இந்த விதி சமுதாய மூலதனத்தால் இயங்க வைக்கப்படுகிற சுரண்டப்படும் உழைப்பின் அறுதித் திரளும், எனவே அது தனதாக்கிடும் உபரி-உழைப்பின் அறுதித் திரளும் அதிகரிப்பதைத் தடுப்பதில்லை; தனிப்பட்ட முதலாளிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் மூலதனங்கள் மென்மேலும் அதிகமாகிச் செல்லும் உழைப்பையும் , எனவே உபரி-உழைப்பையும் (இந்த முதலாளிகள் வேலைக்கமர்த்தும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கா விட்டாலும் அதிகமாகிச் செல்லும் உபரி-உழைப்பையும்) பயன்படுத்திக் கொள்வதை இவ்விதி தடுப்பதில்லை.

உழைக்கும் மக்கள்தொகை இரண்டு மிலியன் எனக் கொள்வோம். மேலும் சராசரி வேலை-நாளின் நீட்டளவும் மும்முரமும், கூலி விகிதமும், எனவே அவசிய-உழைப்புக்கும் உபரி-உழைப்புக்கும் இடையிலான விகிதமும் குறிப்பிட்டவை எனக் கொள்வோம். இந்நிலையில் இந்த இரண்டு மிலியன் தொழிலாளர்களின் மொத்த உழைப்பும் உபரி-மதிப்பாகத் தெரிவிக்கப்பெறும் அவர்களின் உபரி-உழைப்பும் உற்பத்தி செய்யும் மதிப்புப் பருமன் எப்போதுமே ஒன்றுதான். ஆனால் இந்த உழைப்பால் இயங்க வைக்கப்படும் மாறா-மூலதனத்தின் (நிலை-மூலதனம், சுழல்-மூலதனம் ஆகியவற்றின்) திரள் வளர்ந்து செல்லும் போது இந்த மதிப்பு-உற்பத்தியின் அளவு இந்த மூலதனத்தின் மதிப்போடு ஒப்பிடுகையில் குறையவே செய்கிறது; இந்த மூலதனத் திரள் வளர்ந்து செல்லும் போது அதன் மதிப்பும் — அதே விகிதத்தில் அல்லவென்றாலும் — வளர்ந்து செல்கிறது. ஆளப்படும் உயிருள்ள உழைப்பின் திரள் அப்படியே மாறாமல் இருந்தாலும், அதிலிருந்து மூலதனம் அதே அளவு

உபரி-உழைப்பையே உறிஞ்சிக் கொண்டாலும், மதிப்பு-உற்பத்தியின் அளவுக்கும் மூலதன-மதிப்புக்குமான இந்த விகிதம் குறைந்து செல்கிறது, இதனால் இலாப வீதமும் குறைந்து செல்கிறது. மதிப்பு-உற்பத்தியின் அளவில் மாற்றம் ஏற்படக் காரணம், உயிருள்ள உழைப்பால் இயங்க வைக்கப்படும் பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்புத் திரள் கூடுதலாவதுதானே தவிர உயிருள்ள உழைப்புத் திரள் குறைந்து விட்டது அல்ல. இது ஒப்பீட்டுக் குறைவுதானே தவிர அறுதிக் குறைவு அல்ல. உண்மையில் இந்த ஒப்பீட்டுக் குறைவுக்கும் இயங்க வைக்கப்படும் உழைப்பு, உபரி-உழைப்பு இவற்றின் அறுதிப் பருமனுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இலாப வீதத்தில் ஏற்படும் வீழ்ச்சிக்குக் காரணம், மொத்த மூலதனத்தின் மாறும் பகுதி ஒப்பளவில், அதாவது மாறாப் பகுதியுடன் ஒப்பிடுகையில் குறைவதுதானே தவிர அறுதியாய்க் குறைவது அல்ல.

மேலே கூறியதெல்லாம் உழைப்பு, உபரி-உழைப்பு இவற்றின் குறிப்பிட்ட எந்தத் திரளுக்கும் பொருந்துவது போலவே, அதிகரித்துச் செல்லும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களுக்கும் பொருந்தும்; எனவே பொதுவாகப் பேசுமிடத்து (மேற்கண்ட அனுமானத்துக்கு உட்பட்டு) ஆளப்படும் உழைப்பின் அதிகரித்துச் செல்லும் எந்தத் திரளுக்கும் பொருந்தும், குறிப்பாக அதன் ஊதியமிலாப் பகுதிக்கு, அதாவது உபரி-உழைப்புக்குப் பொருந்தும். உழைக்கும் மக்கள் தொகை இரண்டு மிலியனிலிருந்து மூன்று மிலியனாக அதிகரிக்குமானால், கூலியில் முதலீடாகிற மாறும்-மூலதனமும் இரண்டு மிலியனிலிருந்து மூன்று மிலியனாக உயருமானால், அதே போது மாறா-மூலதனம் 4 மிலியனிலிருந்து 15 மிலியனாக உயருமானால் உபரி-உழைப்புத் திரளும் அரைப் பங்கு, அதாவது 50% அதிகரித்து இரண்டு மிலியனிலிருந்து மூன்று மிலியனாகின்றன (மேற்சொன்னவாறே வேலை-நாளும் உபரி-மதிப்பு வீதமும் மாறாதிருப்பதாக அனுமானம் செய்து கொள்கிறோம்). ஆனால் உபரி-உழைப்பின், எனவே உபரி-மதிப்பின் அறுதித் திரள் இவ்விதம் 50% அதிகரித்த போதிலும், மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்குமான விகிதம் 2 : 4இலிருந்து 3 : 15 ஆகக் குறையும்; உபரி-மதிப்புக்கும் மொத்த மூலதனத்துக்குமான விகிதம் பின்வருமாறு இருக்கும் (மிலியன் கணக்கில்):

$$\text{I.}\quad 4_c + 2_v + 2_s;\quad C = 6,\quad p' = 33\tfrac{1}{3}\%.$$

$$\text{II.}\quad 15_c + 3_v + 3_s;\quad C = 18,\quad p' = 16\tfrac{2}{3}\%.$$

உபரி-மதிப்புத் திரள் அரைப் பங்கு அதிகமாகியுள்ளது; அதே போது இலாப வீதமோ அரைப் பங்கு குறைந்துள்ளது. ஆனால் இலாபம் என்பது உபரி-மதிப்பை மொத்தச் சமுதாய மூலதனத்தோடு ஒப்பிட்டுக் கணக்கிடுவதுதானே தவிர வேறல்ல. இலாபத் திரள், அதாவது இலாபத்தின் அறுதிப் பருமன் சமுதாய அளவில்

உபரி-மதிப்பின் அறுதிப் பருமனுக்குச் சமம். ஆகவே மொத்த மூலதன முன்னீட்டுடன் ஒப்பிடுகையில் இலாபம் பெரிதும் குறைந்து விட்ட போதிலும், அதாவது பொது இலாப வீதம் பெரிதும் குறைந்து விட்ட போதிலும், இலாபத்தின் அறுதிப் பருமன், அதன் மொத்த அளவு 50% அதிகரித்திருக்கும். இதன் விளைவு என்ன வென்றால்: இலாப வீதத்தின் வீழ்ச்சி மென்மேலும் அதிகரித்து வந்தாலும் கூட, மூலதனத்தால் வேலையில் அமர்த்தப்படும் தொழி லாளர் தொகை, இயங்க வைக்கப்படும் உழைப்பு, உறிஞ்சப்படும் உபரி-உழைப்பு , உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பு, ஈட்டப் படும் இலாபம் ஆகிய இவை யாவற்றின் அறுதிப் பருமன் அதிகரிக்க முடியும் என்பதோடு, மென்மேலும் பெரிய அளவில் அதிகரிக்க முடியும். முடியும் என்பது மட்டுமல்ல, தற்காலிக அலைவுகளை ஒதுக்கி விட்டுப் பார்த்தால், முதலாளித்துவப் பொருளுற்பத்தி அடிப்படையாய் இருக்கும் போது அதிகரித்தே ஆக வேண்டும்.

அடிப்படையில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறை யானது அதேபோது மூலதனத் திரட்டல் நிகழ்முறையும் [process of accumulation] ஆகும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி வளர்ந்து செல்லும் போது என்ன நடைபெறுகிறது என்று முன்பே தெளி வாக்கினோம்: அமர்த்தப்படும் உழைப்புச் சக்தி மாறாதிருந்தாலும் கூட அப்படியே மறுவுற்பத்தி மட்டும் செய்யப்பட வேண்டிய அல்லது பாதுகாக்கப்பட வேண்டிய மதிப்புத் திரளானது உழைப் பின் உற்பத்தித் திறன் வளரும் போது கூடவே அதிகமாகிச் செல் கிறது. ஆனால் உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறன் வளர்ந்து செல்லும் போது, உற்பத்தியாகிய பயன்-மதிப்புகளின் திரள்— உற்பத்திச் சாதனங்கள் இதில் ஒரு பகுதி—இன்னுங்கூட அதிக மாகிறது. இந்தக் கூடுதல் செல்வத்தை மூலதனமாக மாற்ற வேண்டு மானால் கூடுதல் உழைப்பைத் தனதாக்க வேண்டும்; இந்தக் கூடுதல் உழைப்பு (வாழ்வுச் சாதனங்கள் உள்ளிட்ட) இந்த உற்பத்திச் சாதனங்களின் திரளைப் பொறுத்ததே தவிர மதிப்பை அல்ல. ஏனென்றால் உற்பத்தி நிகழ்முறையில் தொழிலாளர்களுக்குத் தேவைப்படுவது உற்பத்திச் சாதனங்களின் பயன்-மதிப்பு மட்டுமே; அச்சாதனங்களின் மதிப்பு என்னவானாலும் அவர்களுக்கு ஒன்று தான். ஆனால் மூலதனத் திரட்டலும் அதோடு சேர்ந்து வரும் மூலதனக் குவிப்பும் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான பொரு ளாயத வழியாகும். உற்பத்திச் சாதனங்களின் இந்த வளர்ச்சியில் உழைக்கும் மக்கள்தொகையின் வளர்ச்சியும் அடங்கும்; உபரி-மூலதனத்துக்கு ஏற்ற முறையில் உழைக்கும் மக்கள்தொகை உரு வாக்கப்படுகிறது. இந்த உருவாக்கம் அம்மூலதனத்தின் பொது வான தேவைகளை விஞ்சிச் சென்று விடுவதும் கூட உண்டு, இது மிகைத் தொழிலாளர் தொகைக்கு வழிகோலுகிறது. உபரி-மூலதனம் அதனால் திரட்டப்பட்ட உழைக்கும் மக்கள் தொகைக்கு மேல்

எப்போதேனும் மிகையாய் இருப்பது ஓடி மறைந்திடும் நிலவரமே ஆகும்; இந்த மிகைப்பாட்டினால் இரட்டை விளைவு ஏற்படும். ஒரு புறம், இதனால் கூலி உயரும், தொழிலாளர்களின் குழந்தை குட்டி களை பேரழிவுக்கு ஆளாக்கும் துன்பங்கள் தணியும். இதனால் பையப்பைய மக்கள் தொகை பெருகும். மறு புறம், ஒப்பீட்டு உபரி-மதிப்பு கிடைக்கும்படியான வழிமுறைகளை (இயந்திர சாதனங் களைப் புகுத்துதல், மேம்படுத்துதல்) கையாளச் செய்து இம்மிகைப் பாடு இன்னுங்கூட துரிதமான, செயற்கையான ஒப்பீட்டு மிகை-மக்கள் தொகைக்கு வழிகோலும். இந்த மிகை-மக்கள்தொகையோ உண்மையிலேயே அதிவிரைவாய் மக்கள்தொகை பெருகுவதற்கான விளைநிலமாகி விடுகிறது. ஏனென்றால் முதலாளித்துவப் பொரு ளுற்பத்தியில் வறுமைக் கொடுமை மக்கள்தொகையைப் பெருகச் செய்யும் காரணியாகி விடுகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் அமிசங்களில் ஒன்றேயான முதலாளித்துவத் திரட்டல் நிகழ்முறையின் இயைபிலிருந்தே பெறப்படுவது என்னவென்றால்: மூலதனமாக மாற்றப்பட வேண்டிய கூடுதல் உற்பத்திச் சனதனத் திரளுக்கு எப்போதுமே அதற்கிணையாக சுரண்டத்தக்க கூடுதல் தொழிலாளர் தொகை, ஏன், மிகையான தொழிலாளர் தொகையே கூட கிடைத்து விடுகிறது. ஆகவே உற்பத்தி நிகழ்முறையும் மூலதனத் திரட்டல் நிகழ்முறையும் முன்னேறிச் செல்லும் போது தயாராய் இருப்பதும் தனதாக்கப்படுவதுமான உபரி-உழைப்புத் திரளும், எனவே சமுதாய மூலதனத்தால் தனதாக்கப்படு அறுதி இலாபத் திரளும் வளர்ந்தாக வேண்டும். ஆனால் உற்பத்திக்கும் திரட்டலுக்கு மான இதே விதிகள் மாறா-மூலதனத்தின் பரிமாணத்துடன் கூடவே அதன் மதிப்பையும் கூடுதலாக்குகின்றன, உயிருள்ள உழைப்பில் முதலீடாகியுள்ள மாறும்-மூலதனத்தின் மதிப்பை விடவும் துரித மாய் உயர்ந்து செல்லும் விருத்தித் தொடர் முறையில் கூடுதலாக்கு கின்றன. ஆக, சமுதாய மூலதனத்துக்கு அறுதி இலாபத் திரளை மென்மேலும் வளரச் செய்யும் அதே விதிகள் இலாப வீதத்தை மென்மேலும் குறையச் செய்கின்றன.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முன்னேறிச் செல்லும் போது, அதனோடு கூடவே சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ந்து, உற்பத்திக் கிளைகளும், எனவே உற்பத்திப் பொருட் களும் பல்கிப் பெருகும் போது, குறிப்பிட்ட மதிப்பளவு மென் மேலும் அதிகரித்துச் செல்லும் அளவிலான பயன்-மதிப்புகளை யும் இன்ப நுகர்ச்சிகளையும் குறிப்பதாகிறது என்பதை இங்கே சற்றும் கருதாமல் ஒதுக்கி விடுவோம்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியும் திரட்டலும் வளர்ந்து செல்லும் போது உழைப்பு நிகழ்முறைகள் அளவுவீதத்தில் மென் மேலும் விரிவடைந்து செல்கின்றன, மென்மேலும் கூடுதலான பரிமாணங்களைப் பெறுகின்றன; இதனால் தனிப்பட்ட ஒவ்வொரு

நிறுவனத்துக்கும் மென்மேலும் கூடுதலான முதலீடுகள் அவசியமாகின்றன. ஆகவே மூலதனங்கள் மென்மேலும் குவிக்கப்படுவது (இதனோடு கூடவே—இதை விடச் சிறிய அளவில் என்றாலும்—முதலாளிகளின் எண்ணிக்கை அதிகமாவது) முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் பொருளாயதத் தேவைகளில் ஒன்றாவதோடு அதன் விளைவுகளில் ஒன்றும் ஆகிறது. இத்துடன் சேர்ந்தாற் போலவும், ஒன்றின் மீதொன்று செயல் புரியும் படியும், நேரடி உற்பத்தியாளர்கள் மென்மேலும் உடைமைப் பறிப்புக்கு ஆளாவது நிகழ்கிறது. ஆக, தனிப்பட்ட முதலாளிகள் மென்மேலும் விரிவான தொழிலாளர் பட்டாளங்களை ஆளுவது இயல்பானதே (மாறா-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் மாறும்-மூலதனம் எவ்வளவுதான் குறைந்தாலும் சரி); இம்முதலாளிகளால் தனதாக்கப்படும் உபரி-மதிப்புத் திரளும், எனவே இலாபத் திரளும் இலாப வீதம் குறையும் போதே அக்குறைவையும் மீறி வளருவதும் கூட இயல்பானதே. நிலை-மூலதன முதலீட்டுத் திரளையும், கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்களையும் ஈடுபடுத்தப்படும் உயிருள்ள உழைப்புத் திரளோடு ஒப்பிடுகையில் மென்மேலும் உயர்ந்த விகிதத்தில் அதிகரிக்கச் செய்யும் அதே காரணங்கள்தான் திரள்திரளான தொழிலாளர்களை தனிப்பட்ட முதலாளிகளின் ஆளுகையில் குவித்திடுகின்றன.

இங்கு ஒரு விவரத்தைப் போகிற போக்கில் சொல்லி வைத்தாலே போதும். அதாவது உழைக்கும் மக்கள்தொகை குறிப்பிட்டதாய் இருக்க, உபரி-மதிப்பு வீதம் அதிகரித்தால் உபரி-மதிப்புத் திரள், எனவே இலாபத்தின் அறுதித் திரள் அதிகரித்தாக வேண்டும் (உபரி-மதிப்பு வீதம் அதிகரிப்பதற்கான காரணம் வேலை-நாள் நீட்டப்படுவதாகவோ மேலும் மும்முரமாகக்கப்படுவதாகவோ இருந்தாலும் சரி, உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதால் கூலியின் மதிப்பு குறைவதாக இருந்தாலும் சரி); மாறா-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் மாறும்-மூலதனம் குறைந்த போதிலும் கூட உபரி-மதிப்புத் திரள் மேற்சொன்னவாறு அதிகரித்தே ஆக வேண்டும்.

சமுதாய உழைப்பினது உற்பத்தித் திறனின் இந்த வளர்ச்சி (இந்த விதிகள்) மொத்த மூலதனத்தோடு ஒப்பிடுமிடத்து மாறும்-மூலதனம் குறைந்து செல்வதிலும், இதனால் மூலதனத் திரட்டல் எளிதாவதிலும் வெளிப்படுகிறது. இந்த மூலதனத் திரட்டலோ உற்பத்தித் திறன் மேலும் வளர்ச்சி அடைவதற்கும் மாறும்-மூலதனம் ஒப்பளவில் மேலும் குறைந்து போவதற்கும் தொடக்க நிலை ஆகிறது. இதே வளர்ச்சி, தற்காலிக ஏற்ற இறக்கங்களை ஒதுக்கி விட்டுப் பார்க்கும் போது, ஈடுபடுத்தப்படும் மொத்த உழைப்புச் சக்தி மென்மேலும் கூடுதலாகிச் செல்வதிலும், உபரி-மதிப்பின், எனவே இலாபத்தின் அறுதித் திரள் மென்மேலும் கூடுதலாகிச் செல்வதிலும் வெளிப்படுகிறது.

இலாப வீதம் குறைவதற்கு வழி செய்யும் அதே காரணங்கள் அறுதி இலாபத் திரள் அதே போது அதிகமாவதற்கும் வழிசெய் கிறது — இரு பக்கமும் கூர்மை வாய்ந்ததாய் இருக்கும் இந்த விதி யின் வடிவம் என்ன? குறிப்பிட்ட நிலைமைகளில் தனதாக்கப்படும் உபரி-உழைப்புத் திரளும், எனவே உபரி-மதிப்புத் திரளும் அதி கரிப்பதை அடிப்படையாகக் கொண்ட விதியா, மொத்த மூலதனத் தைப் பொறுத்த வரை அல்லது மொத்த மூலதனத்தின் ஈவுப் பகுதி யாய் இருக்கும் தனிப்பட்ட மூலதனத்தைப் பொறுத்த வரை இலாப மும் உபரி-மதிப்பும் ஒன்றேதான் என்பதை அடிப்படையாகக் கொண்ட விதியா?

மூலதன ஈவுப் பகுதி ஒன்றை எடுத்துக் கொண்டு, அதற்கான இலாப வீத்தைக் கணக்கிடுவோம். இந்த ஈவுப் பகுதி 100 என்போம். இந்த 100 ஆனது மொத்த மூலதனத்தின் சராசரி இயைபைக் குறிக்கிறது, அதாவது $80_c + 20_v$. இந்நூலின் இரண் டாம் பகுதியில் பார்த்ததுதான் : பல்வேறு உற்பத்திக் கிளைகளிலுட சராசரி இலாப வீதமானது மூலதனத்தின் சராசரிச் சமுதாய இயை பால் நிர்ணயிக்கப்படுகிறதே ஒழிய, ஒவ்வொரு தனிப்பட்ட மூல தனத்தின் குறிப்பான இயைபாலும் அல்ல. மாறா-மூலதனத்து முடன், எனவே மொத்த மூலதனம் 100 உடன் ஒப்பிடுகையில் மாறும்-மூலதனம் குறையக் குறைய, இலாப வீதம், அதாவது உபரி-மதிப்பின் ஒப்பீட்டுப் பருமன், மொத்த மூலதன முன்னீடு 100 உடன் அதற்குள்ள விகிதம் குறைந்து செல்கிறது; சுரண்டலின் கடுமை மாறாமலிருந்தாலும் கூட, அல்லது அதிகரிக்கவே செய் தாலும் கூட இதுவே நிலைமை. ஆனால் இந்த ஒப்பீட்டுப் பருமன் மட்டும்தான் குறைகிறது என்பதற்கில்லை; மொத்த மூலதனம் 100இனால் உறிஞ்சப்படும் உபரி-மதிப்பு அல்லது இலாபத்தின் பருமனும் கூட அறுதியாகக் குறைகிறது. உபரி-மதிப்பு வீதம் 100% ஆக இருக்க, $60_c + 40_v$ என்னும் மூலதனம் உற்பத்தி செய்யும் உபரி-மதிப்பு அல்லது இலாபத்தின் திரள் 40; $70_c + 30_v$ என்னும் மூலதனம் உற்பத்தி செய்யும் இலாபத் திரள் 30; $80_c + 20_v$ என்னும் மூலதனம் உற்பத்தி செய்யும் இலாபத் திரள் 20. இப்படிக் குறைந்து செல்வது உபரி-மதிப்புத் திரளுக்கும், எனவே இலாபத் திரளுக்கும் பொருந்தும். மொத்த மூலதனம் 100இனால் ஈடுபடுத்தப்படும் உயிருள்ள உழைப்பு குறைந்து போவதும், உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமை மாறாதிருக்க, அம்மூலதனத்தால் இயங்க வைக்கப்படும் உபரி-உழைப்பும், எனவே அதனால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பும் குறைந்து செல் வதும்தான் இதற்குக் காரணம். சமுதாய மூலதனத்தின் ஏதேனுமோர் ஈவுப் பகுதியை, அதாவது சராசரி இயைபுடைய ஒரு மூலதனத்தை உபரி-மதிப்பின் அளவீட்டுக்கான நியமமாய் எடுத்துக் கொள்வோ மானால் — இலாபக் கணக்கீடுகள் யாவற்றிலும் இப்படித்தான்

எடுத்துக் கொள்ளப்படுகிறது — உபரி-மதிப்பின் ஒப்பீட்டுக் குறைவும் அறுதிக் குறைவும் பொதுவாக முழுதொத்தவையே ஆகும். மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் இலாப வீதம் 40% இலிருந்து 20% ஆகவும் குறைகிறது; உண்மையில் அம்மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்புத்திரள், எனவே இலாபத் திரள் 40 இலிருந்து 30 ஆகவும் 20 ஆகவும் அறுதியாய்க் குறைகிறது. உபரி-மதிப்பை அளவிடுவதற்குப் பயன்படும் மூலதனத்தின் மதிப்புப் பருமன் 100 என்று குறிக்கப்பட்டிருப்பதால், இந்தக் குறிப்பிட்ட பருமனோடு உபரி-மதிப்புக்குள்ள விகிதம் குறைவது உபரி-மதிப்பு, இலாபம் இவற்றின் அறுதிப் பருமன் குறைவதற்கான இன்னொரு தெரிவிப்பாக மட்டுமே இருக்க முடியும். சொன்னதையே திருப்பிச் சொல்வதுதான் இது. ஆனால் — முன்பே தெளிவாக்கியது போல் — இந்தக் குறைவு ஏற்படுவதற்கே முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையினது வளர்ச்சியின் இயல்புதான் காரணம்.

மறு புறம் குறிப்பிட்ட மூலதனத்திற்கான உபரி-மதிப்பும், எனவே இலாபமும், இவ்விதம் சதவீதக் கணக்கிலான இலாப வீதமும் அறுதியாகக் குறைவதற்கு வழி செய்யும் அதே காரணங்கள் சமுதாய மூலதனத்தால் (அதாவது ஒருங்கே முதலாளிகள் அனைவராலும்) தனதாக்கப்படும் உபரி-மதிப்பின், எனவே இலாபத்தின் அறுதித் திரளையும் அதிகரிக்கச் செய்கின்றன. இது எப்படி நிகழ்கிறது? இது நிகழ்வதற்குள்ள ஒரே வழி என்ன? அல்லது, முரண்பாடாகத் தெரியும் இதில் அடங்கும் நிபந்தனைகள் யாவை?

சமுதாய மூலதனத்தின் ஏதேனுமோர் ஈவுப் பகுதி (= 100), எனவே சராசரி சமுதாய இயைபுடைய ஏதேனுமொரு 100 மாறாப் பருமனாய் இருப்பதாகக் கொள்வோம். ஆகவே, இங்கு அளவை-நியமமாகப் பயன்படும் மூலதனம் மாறாப் பருமனாய் இருப்பதால் இம்மூலதனத்திற்கு இலாபவீதம் குறையும் போதே இலாபத்தின் அறுதிப் பருமனும் குறைகிறது. இந்நிலையில், தனிப்பட்ட முதலாளிகளின் கையிலிருக்கும் மூலதனத்தின் பருமனைப் போலவே சமுதாய மூலதனத்தின் பருமனும் மாறும் பருமனாகிறது; நமது அனுமானங்களின்படி அது அதன் மாறும்-மூலதனப் பகுதி குறைவதற்கு எதிர் விகிதத்தில் மாறியாக வேண்டும்.

நமது பழைய எடுத்துக்காட்டில், மூலதனத்தின் சதவீத இயைபு $60_c + 40_v$ ஆக இருந்த போது கிடைத்த உபரி-மதிப்பு அல்லது இலாபம் 40 ஆக இருந்தது; எனவே இலாப வீதம் 40%. மூலதன இயைபின் இந்தக் கட்டத்தில் இருந்த மொத்த மூலதனம் ஒரு மிலியன் எனக் கொள்வோம். ஆக, மொத்த உபரி-மதிப்பு, எனவே மொத்த இலாபம் 400,000க்குச் சமமாய் இருந்தது. பிற்பாடு மூலதன இயைபு $= 80_c + 20_v$, ஆனால் உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமையில் மாற்றம் இல்லையென்றால் ஒவ்வொரு

100க்குமான உபரி-மதிப்பு அல்லது இலாபம் = 20. ஆனால் இலாப வீதம் குறைந்த போதிலும், அதாவது ஒவ்வொரு 100 மூலதனத்துக்குமான உபரி-மதிப்பின் உற்பத்தி குறைந்த போதிலும் உபரி-மதிப்பு அல்லது இலாபத்தின் அறுதித்திரள் அதிகரிப்பதால், உதாரணமாக 400,000இலிருந்து 440,000 ஆக அதிகரிப்பதால் இந்தப் புதிய இயைபு உருவான நேரத்தில் பிறப்பெடுத்த மொத்த மூலதனம் 2,200,000 ஆக உயர்ந்து விட்டதால்தான் இப்படி நடைபெறுகிறது. இயங்க வைக்கப்படும் மொத்த மூலதனத் திரள் 220% ஆக உயர்ந்திருக்கிறது; அதே போது இலாப வீதமோ 50% குறைந்துள்ளது. மொத்த மூலதனம் இருமடங்கு மட்டுமே ஆகியிருக்குமானால், அது பழைய 1,000,000 மூலதனம் 40% இலாப வீதத்தில் உற்பத்திச் செய்த அதே அளவு உபரி-மதிப்பையும் இலாபத்தையும் உற்பத்தி செய்தால்தான் 20% இலாப வீதம் பெற முடியும். மொத்த மூலதனம் இரு மடங்காவதற்குக் குறைவாகவே வளர்ந்திருக்குமானால், பழைய 1,000,000 மூலதனத்தை விடக் குறைவாகவே உபரி-மதிப்பு அல்லது இலாபம் உற்பத்தி செய்திருக்கும். இந்தப் பழைய மூலதனம் அதன் பழைய இயைபில் அதன் உபரி-மதிப்பை 400,000இலிருந்து 440,000 ஆக உயர்த்திக் கொள்வதற்கு 1,000,000 இலிருந்து 1,100,000க்குக் கூடுதலான தாய் வளர வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

ஏற்கெனவே வகுத்துரைத்த விதி (முதல் பாகம், பக்கம் 846-47) இங்கு நம்மை மீண்டும் எதிர்கொள்கிறது. அதாவது, மாறும்-மூலதனம் ஒப்பளவில் குறைவது, எனவே உழைப்பின் சமுதாய உற்பத்தித் திறன் வளருவது குறிப்பிட்ட அளவு உழைப்புச் சக்தியை இயங்க வைப்பதற்கும் குறிப்பிட்ட அளவு உபரி-உழைப்பைப் பிழிவதற்கும் மென்மேலும் பெருந்திரளான மொத்த மூலதனம் அவசியமாவதைக் குறிக்கிறது. ஆதலால் உழைக்கும் மக்கள் ஒப்பளவில் உபரியாகும் [relative surplus] சாத்தியப்பாடு முதலாளித்துவப் பொருளுற்பத்தி அடையும் முன்னேற்றங்களுக்கேற்ப அதிகரிப்பதற்குக் காரணம். சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதே தவிர குறைவது அல்ல. ஆகவே உழைப்புக்கும் வாழ்வுச் சாதனங்களுக்கும் அல்லது வாழ்வுச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கான சாதனங்களுக்கும் இடையில் தோன்றும் அறுதியான ஒவ்வாமையிலிருந்து எழுவதல்ல இந்த சாத்தியப்பாடு. முதலாளித்துவ வழியில் உழைப்பு சுரண்டப்படுவதால் ஏற்படும் ஒவ்வாமையிலிருந்தே, மூலதனம் மென்மேலும் வளர்ந்து செல்வதற்கும் மக்கள் தொகை அதிகரிப்பிற்கான அதன் தேவை ஒப்பளவில் சுருங்கி விடுவதற்கும் இடையிலான ஒவ்வாமையிலிருந்தே எழுவதாகும் அது.

இலாப வீதம் 50% குறைந்து சரிபாதியாவதாய்க் கொள்வோம். அப்போதும் இலாபத் திரள் மாறாதிருக்க வேண்டுமானால்,

மூலதனம் இரு மடங்காய்ப் பெருக வேண்டும். இலாப வீதம் குறையும் போதே இலாபத் திரள் மாறாதிருக்க வேண்டுமானால், மொத்த மூலதனத்தின் அதிகரிப்பைக் குறிக்கும் பெருக்குமென் இலாப வீதத்தின் குறைவைக் குறிக்கும் வகுக்குமெண்ணுக்குச் சமமாய் இருக்க வேண்டும். இலாப வீதம் 40இலிருந்து 20 ஆகக் குறைந்தால் மொத்த மூலதனம் 20:40 என்னும் எதிர் விகிதத்தில் அதிகரிக்க வேண்டும், அப்போதுதான் விளைவில் மாற்றமிருக்காது. இலாப வீதம் 40இலிருந்து 8 ஆகக் குறைந்தால், மூலதனம் 8:40 எனும் விகிதத்தில், அதாவது ஐந்து மடங்கு கூடுதலாக வேண்டியிருக்கும். 1,000,000 மூலதனம் 40% இலாப வீதத்தில் 400,000 இலாபம் பெறுகிறது. 5,000,000 மூலதனமும் 8% இலாப வீதத்தில் 400,000 இலாபம் பெறுகிறது. விளைவில் மாற்றமில்லாததைக் குறிப்பதாகும் இது. ஆயின் விளைவு அதிகரிக்க வேண்டுமானால், இலாப வீதம் குறைவதைக் காட்டிலும் உயர்ந்த விகிதத்தில் மூலதனம் அதிகரிக்க வேண்டும். அதாவது, மொத்த மூலதனத்தின் மாறும் பகுதியானது அம்மொத்த மூலதனத்தின் சதவீதமென்ற முறையில் குறைந்த போதிலும் அறுதியாக மாறாமலிருப்பதோடு அதிகரிக்கவும் வேண்டுமானால், மொத்த மூலதனமானது மாறும்-மூலதனத்தின் சதவீத அளவு குறைவதைக் காட்டிலும் விரைவான விகிதத்தில் வளர்ந்தாக வேண்டும். அது கணிசமாய் வளர்ந்தாக வேண்டும், அது புதிய இயைபு பெற்ற பின் உழைப்புச் சக்தியை வாங்குவதற்கு பழைய மாறும்-மூலதனப் பகுதியை விடக் கூடுதலாய்த் தேவைப்படும் அளவுக்கு வளர்ந்தாக வேண்டும். 100 மூலதனத்தின் மாறும் பகுதி 40இலிருந்து 20 ஆகக் குறைந்தால் மொத்த மூலதனம் 200க்கும் கூடுதலானதாய் வளர்ந்தால்தான் 40க்கும் கூடுதலான மாறும்-மூலதனத்தை அதனால் ஈடுபடுத்த முடியும்.

சுரண்டப்படும் தொழிலாளர் திரள் மாறாதிருக்க, வேலை-நாளின் நீட்டளவும் மும்முரமும் மட்டுமே அதிகரிப்பதாய் இருந்தாலும் கூட, முதலீடாகும் மூலதனத் திரள் அதிகரித்தாக வேண்டும். ஏனென்றால் மூலதன இயைபு மாறிய பிறகு அதே உழைப்புத் திரளை பழைய சுரண்டல் நிலைமைகளில் வேலைக்கமர்த்த வேண்டுமானால் இந்த மூலதனத் திரள் அதிகரித்தாக வேண்டும்.

ஆக, உழைப்பினது சமுதாய உற்பத்தித் திறனின் வளர்ச்சியானது ஒருபுறம் இலாப வீதம் தொடர்ந்து மென்மேலும் குறைந்து செல்லும் போக்கில் வெளிப்படுகிறது; இதே வளர்ச்சி மறு புறம் தனதாக்கப்படும் உபரி-மதிப்பு அல்லது இலாபத்தின் அறுதித் திரள் தொடர்ந்து மென்மேலும் அதிகமாகிச் செல்வதில் வெளிப்படுகிறது. அதாவது மொத்தத்தில், மாறும்-மூலதனமும் இலாபமும் ஒப்பளவில் குறையும் போதே அறுதியாய் அதிகரிக்கின்றன. இந்த இரட்டை விளைவானது, முன்பே நாம் பார்த்தது போல, இலாப

வீதம் குறைந்து செல்வதைக் காட்டிலும் மொத்த மூலதனம் விரை வாய் வளர்ந்து செல்வதில் மட்டுமே வெளிப்பட முடியும். ஈடு படுத்தப்படும் மாறும்-மூலதனத்தின்அளவு அறுதியாய் அதிகரிக்கும் போதே மூலதன இயைபு உயர வேண்டுமானால், அதாவது மாறா-மூலதனம் ஒப்பளவில் இன்னுங்கூட அதிகரிக்க வேண்டுமானால், மொத்த மூலதனம் அதன் இயைபு உயருவதற்கேற்ற விகிதத்தில் அதிகரித்தால் மட்டும் போதாது, இன்னுங்கூட விரைவாய் அதிகரிக்க வும் வேண்டும். அப்படியானால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை வளர வளர, உழைப்புச் சக்தியை இன்னும் அதிக அளவில் ஈடுபடுத்துவது இருக்கட்டும், அதே அளவில் ஈடுபடுத்துவதற்கே கூட மென்மேலும் பெருமளவில் மூலதனம் தேவைப்படுகிறது. இவ்வாறு முதலாளித்துவ அடித்தளத்தின் மீது உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்ந்து செல்வதானது உழைப்போரின் மிகை-மக்கள்தொகை போல் தெரிகிற ஒன்றை அவசியமாகவும் நிரந்தரமாகவும் தோற்று விக்கிறது. மாறும்-மூலதனம் மொத்த மூலதனத்தில் முன்பு ½ பங்காய் இருந்தது இப்போது $^{1}/_{6}$ பங்கு மட்டுமே ஆகி விடு மானால், அதே அளவு உழைப்புச் சக்தியை ஈடுபடுத்துவதற்கு மொத்த மூலதனத்தை மும்மடங்கு ஆக்கியாக வேண்டும். ஈடு படுத்தப்படும் உழைப்புச் சக்தியை இரு மடங்கு ஆக்க வேண்டு மானால், மொத்த மூலதனத்தை ஆறு மடங்கு ஆக்கியாக வேண்டும்.

இலாப வீதம் குறைந்து செல்லும் போக்கு பற்றிய விதிக்கு அரசியல் பொருளாதாரத்தால் இது வரை விளக்கமளிக்க முடிய வில்லை. அது தனக்குத்தானே ஆறுதல் சொல்லிக் கொள்ளும் முகத்தான் என்ன செய்தது என்றால், தனிப்பட்ட முதலாளிக் கானாலும் சரி, சமுதாய மூலதனத்திற்கானாலும் சரி, இலாபத் திரள் அதிகமாகிச் செல்வதை, அதாவது இலாபத்தின் அறுதிப் பருமன் கூடுதலாகிச் செல்வதை சுட்டிக் காட்டியது; ஆனால் இதற்கும் கூட வெற்றுரையையும் ஊகத்தையுமே அடிப்படையாய் கொண்டிருந்தது.

இலாபத் திரள் இரு காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது—ஒன்று: இலாப வீதம், இரண்டு: இந்த இலாப வீதத்தில் முதலீடாகிற மூலதனத் திரள்; இப்படிச் சொல்வது வெறும் சொற்புரட்டுதான். ஆகவே இலாப வீதம் குறையும் போதே கூட இலாபத் திரள் அதிகரிப்பது சாத்தியமே என்று சொல்வது இந்தச் சொற்பரட்டின் தொடர்ச்சியே தவிர வேறல்ல. இதைக் கொண்டு நம்மால் ஓரடி கூட முன் செல்ல முடியாது; மூலதனம் அதிகரித்தாலும் இலாபத் திரள் அதிகரிக்காமல் இருப்பது சாத்தியம்தான், மூலதனம் அதி கரித்தாலும் இலாபத் திரள் குறைந்து போவதும் கூட சாத்தியம் தான். 100இல் 25% என்றால் கிடைப்பது 25, 400இல் 5%

என்றால் 20 மட்டுமே.[35] ஆனால் இலாப வீதத்தைக் குறையச் செய்யும் அதே காரணங்கள் கூடுதல் மூலதனம் திரட்டப்படுவதை, அதாவது உருவாவதை அவசியமாக்குகிற காரணங்களாகவும் இருந்து விடுமானால், ஒவ்வொரு கூடுதல் மூலதனமும் கூடுதல் உழைப்பை ஈடுபடுத்திக் கூடுதல் உபரி-மதிப்பை உற்பத்தி செய் வதாய் இருக்குமானால், மறு புறம் இலாப வீதம் குறைவது என்பதே மாறா-மூலதனமும் அத்துடன் பழைய மொத்த மூலதன மும் அதிகரித்திருப்பதைக் குறிக்குமானால், அப்போது இந்நிகழ் முறை புரியாப் புதிராய் இருக்கும் நிலை மறைந்து விடுகிறது. இலாப வீதம் குறையும் போதே இலாபத் திரள் அதிகரிப்பதை சாத்தியமற்றதாக்க வேண்டுமென்று சிலர் திட்டமிட்டே பொய்யும் புரட்டுமாய்க் கணக்கீடுகள் செய்வதைப் பிறகு பார்ப்போம்.*
பொது இலாப வீதம் குறைந்து செல்லும் போக்கிற்கான அதே காரணங்கள் எப்படி வளர்வேக மூலதனத் திரட்டலையும், எனவே

35 "நாட்டில் நடைபெறும் மூலதனத் திரட்டலின் விளைவாகவும், கூலியுயர்வின் விளைவாகவும் மூலதனத்தின் மீதான இலாப வீதம் எவ்வளவுதான் குறைந்து போனா லும், இலாபத்தின் மொத்த அளவு அதிகரிக்குமென்றும் நாம் எதிர்பார்க்கலாம். அதாவது £100,000 திரும்பத் திரும்ப திரட்டப்படும் போது, இலாப வீதம் 20இலிருந்து 19 ஆகவும் 18 ஆகவும் 17% ஆகவும் ஓயாமல் குறைந்து செல்வதாகக் கொண்டால், அடுத்தடுத்து மூலதன உடைமையாளர்களாய் இருப்பவர்கள் பெற்றிடும் மொத்த இலாப அளவு எப்போதுமே தொடர்ந்து மென்மேலும் அதிகரித்துச் செல்வதாய் இருக்கு மென்று எதிர்பார்க்கலாம்; இந்த மொத்த இலாப அளவானது £ 100,000 மூல தனத்திற்கு இருந்ததை விட £300,000 மூலதனத்திற்கு அதிகமாய் இருக்குகம்; £300,000 மூலதனத்திற்கு இன்னுமதிகமாய் இருக்கும்; இலாப வீதம் குறைந்த போதிலும், மூலதனம் அதிகரிக்கும் போதெல்லாம் இலாப அளவு மேலும் மேலும் அதிகமாகிச் செல்லும். ஆனால் இவ்விதம் அதிகமாகிச் செல்வது குறிப்பிட்ட காலத் திற்கு மட்டுமே நடைபெறுவதாகும்; £200,000இல் 19% என்பது £100,000இல் 20*க்கும் கூடுதலாகும்; அதே போல் £300,000இல் 18% என்பது £200,000இல் 19%க்கும் கூடுதலாகும்; ஆனால் மூலதனம் பெருந் தொகையாகத் திரண்டு, இலாபம் குறைந்த பிறகு, அதற்கு மேல் நடைபெறும் மூலதனத் திரட்டலானது இலாபத்தின் மொத்த அளவினைக் குறையச் செய்கிறது, அதாவது £1,000,000 மூலதனம் திரட்டப்படுவதாகவும் 7%சதவீதம் இலாபம் கிடைப்பதாகவும் கொள்வோமனால், இலாபத்தின் மொத்த அளவு £70,000 ஆகிறது; இப்போது மூலதனம் ஒரு மிலிய னோடு £100,000 சேர்க்கப்பட்டு, இலாபம் 6% ஆகக் குறையுமானால், மொத்த மூலதன அளவு £1,000,000இலிருந்து £1,100,000 ஆக அதிகரித்த போதிலும் மூலதன உடைமையாளர்களுக்குக் கிடைக்கும் இலாப அளவு £66,000 ஆகி விடும். அதாவது £4,000 குறைந்து விடும்." — ரிக்கார்டோ. *அரசியல் பொருளாதாரம்*, அத்தியாயம் VI (நூல்கள், பதிப்பாசிரியர்: மக்குல்லோஹ், 1852, பக்கம் 68-69). — உண்மை என்னவென்றால், மூலதனம் £1,000,000இலிருந்து £1,100,000 ஆக, அதாவது 10% அதிகரிக்கும் போதே இலாப வீதம் 7இலிருந்து 6 ஆக, அதாவது 14²/₇% குறைவதாக இங்கு அனுமானம் செய்யப்பட்டிருக்கிறது. *Hinc illae lacrimae!* * [பப்லியஸ், டெரன்ஸ், ஆந்திரியா, அங்கம் I, காட்சி 1. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.]

* கா. மார்க்ஸ், *உபரி-மதிப்புத் தத்துவங்கள்*, கா. மார்க்ஸ்/பி. எங்கெல்ஸ், *Werke, Band 26*, Teil 2, பக்கம் 435-36, 541-43. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

**

அம்மூலதனத்தால் தனதாக்கப்படும் உபரி-உழைப்பினது (உபரி-மதிப்பு, இலாபம்) அறுதிப் பருமன் அல்லது மொத்தத் திரளின் அதிகரிப்பையும் அவசியமாக்குகின்றன என்று தெளிவாக்கினோம். சந்தைப் போட்டியிலும், இவ்விதம் அப்போட்டியின் செயலிகளது உணர்வு நிலையிலும் எப்படி எல்லாமே நேர்மாறாய்த் தெரிகின்றனவோ அதே போல் இந்த விதியும்—முரண்பட்டவையாகத் தோன்றுகிற இரண்டுக்கிடையிலான இந்த உள்ளார்ந்த அவசியத் தொடர்பும்—நேர்மாறாய்த் தெரிகிறது. மேற்கூறிய விகித உறவுகளுக்குள் பெரிய மூலதனத்தை ஆளுகிற முதலாளி உயர்ந்த இலாபம் பெறுவதாகத் தோன்றும் சிறு முதலாளியைக் காட்டிலும் கூடுதலான அளவில் இலாபம் பெறுவார் என்பது தெளிவாய்த் தெரிகிறது. மேலும் முதலாளிகளிடையிலான போட்டாபோட்டியை மேலோட்டமாய்ப் பரிசீலிக்கும் போதே என்ன தெரிகிறது என்றால், பெரு முதலாளி சந்தையில் இடம் பிடிக்கவும் சிறு முதலாளிகளை நெருக்கித் தள்ளி வெளியேற்றவும் விரும்பும் போது—நெருக்கடிக் காலங்களில் இப்படித்தான் நடைபெறுகிறது—நடைமுறையில் இதனைப் பயன்படுத்திக் கொள்கிறார்; அதாவது வேண்டுமென்றே தமது இலாப வீதத்தைக் குறைந்து சிறு முதலாளிகளை மண் கவ்வச் செய்கிறார். வணிக-மூலதனமும் கூட (இது பற்றிப் பிறகு விவரமாய்ப் பார்ப்போம்) தொழிலும், இவ்விதம் மூலதனமும் பெருகுவதாலேயே இலாபம் குறைவாகத் தோன்றச் செய்யும் புலப்பாடுகளை வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. பொய்யான இந்தக் கருத்தமைவுக்குரிய விஞ்ஞானத் தெரிவிப்பு பிறகு தரப்படும். தனிப்பட்ட தொழில் வகைகளை தடையிலாப் போட்டிக்கோ ஏகபோகத்துக்கோ உட்பட்டவையாக வேறுபடுத்தி அவற்றில் பெறப்படும் இலாப வீதங்களை ஒப்புநோக்குவதும் இதே போல் மேலெழுந்தவாரியான கருத்தோட்டங்களுக்கு வழி செய்கிறது. போட்டியின் செயலிகளது உள்ளத்தில் நிலவும் சற்றும் ஆழமற்ற கருத்தமைவை ரோஷரிடம் காணலாம்; அதாவது இலாப வீதம் குறைக்கப்படுவதே "இன்னுங்கூட விவேகமும் நற்பண்பும்"* வாய்ந்தது என்கிறார் அவர். இங்கே இலாப வீதம் குறைவதானது மூலதனம் அதிகரிப்பதாலும், அதையொட்டி முதலாளியானவர் இலாப வீதம் குறைந்தால் தமக்குக் கிடைக்கும் இலாபத் திரள் அதிகரிக்குமென்று கணக்கிடுவதாலும் ஏற்படுகிற விளைவாகவே தோற்றமளிக்கிறது. இந்தக் கருத்தமைவு முழுவதற்கும் (பிறகு நாம் குறிப்பிடப் போகிற ஆதாம் ஸ்மித் கருத்தமைவைத் தவிர) * ஆதாரமாய் இருப்பது பொது

* ரோஷர், *Die Grundlage der Nationalokonomie*, 3 Auflage, 1858, § 108, பக்கம் 192.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

* கார்ல் மார்க்ஸ், உபரி-மதிப்புத் தத்துவங்கள், கா. மார்க்ஸ்/பி. எங்கெல்ஸ் Werke, Band 26, Teil 2, பக்கம் 214-28.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

இலாப வீதம் எனறால் என்ன என்பது பற்றிய முற்ற முழுக்கத் தவறான புரிதலும் சரக்குகளின் உண்மை மதிப்போடு விருப்பம் போல் இலாபப் பங்களவு ஒன்றைக் கூட்டிச் சேர்ப்பதன் மூலம் தான் விலைகள் உள்ளபடியே நிர்ணயமாகின்றன என்னும் முதிர்ச்சி யற்ற கருத்துமே ஆகும். இவை எல்லாம் முதலாளித்துவப் பொரு ளுற்பத்தியின் உள்ளார்ந்த விதிகள் போட்டியின் களத்தில் தலை கீழாய் உருக்குலைந்து தோற்றமளிப்பதிலிருந்து தவிர்க்க முடியாத படி எழும் அரைவேக்காட்டுக் கருத்துகளாகும்.

---

உற்பத்தித் திறன் வளருவதால் இலாப வீதம் குறையும் போதே இலாபத் திரள் அதிகமாகிறது என்கிற விதியானது, மூலதனம் உற்பத்தி செய்கிற சரக்குகளின் விலை குறையும் போதே அவற்றில் அடங்கியிருப்பவையும் அவற்றின் விற்பனையால் ஈடேற்றம் பெறு கிறவையுமான இலாபத் திரள்கள் ஒப்பளவில் அதிகரிக்கின்றன என்னும் உண்மையிலும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

உற்பத்தித் திறன் வளர்ச்சி அடைவதாலும், அதற்கேற்ப மூலதன இயைபு உயருவதாலும், இயங்க வைக்கப்படும் உற்பத்திச் சாதனங் களின் அளவு ஓயாமல் அதிகரித்தும், இயங்க வைக்கும் உழைப்பின் அளவு ஓயாமல் குறைந்தும் செல்வது காரணமாய், மொத்த உற் பத்திப் பொருளின் ஈவுப் பகுதி ஒவ்வொன்றும், அதாவது தனிச் சரக்கு ஒவ்வொன்றும், அல்லது உற்பத்திப் பண்டங்களின் மொத்தத் திரளில் தனிப்பட்ட சரக்குத் தொகுதி ஒவ்வொன்றும் உறிஞ்சும் உயிருள்ள உழைப்பு குறைந்து செல்கிறது; அது உள்ளடக்கிக் கொள்ளும் பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்பும்—ஈடுபடுத்தப் படும் நிலை-மூலதனத்தினது தேய்மானத்தின் மூலமாகவும் சரி, நுகரப் படும் கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்களின் மூல மாகவும் சரி—குறைந்து செல்கிறது. எனவே தனிச் சரக்கு ஒவ் வொன்றும் உள்ளடக்கிக் கொள்ளும் உழைப்பின் மொத்த அளவு, அதாவது உற்பத்திச் சாதனங்களாய்ப் பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்பு, உற்பத்தியின் போது புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பு இவற்றின் மொத்த அளவு குறைந்து செல்கிறது. இது தனிப்பட்ட சரக்கின் விலையை குறையச் செய்கிறது. ஆனால் அறுதி அல்லது ஒப்பீட்டு உபரி-மதிப்பின் வீதம் உயருமானால், தனிப்பட்ட சரக்கு களில் அடங்கியுள்ள இலாபத் திரள் அதிகரிக்கக் கூடும். சரக்கு உள்ளடக்கிக் கொள்கிற புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பு குறைந்து போகிறது, ஆனால் அவ்வுழைப்பின் ஊதியப் பகுதியோடு ஒப் பிடுகையில் ஊதியமிலாப் பகுதி அதிகரிக்கிறது. என்றாலும், குறிப் பிட்ட சில வரம்புகளுக்கு உட்பட்டு மட்டுமே இப்படி நிகழ்கிறது. தனிப்பட்ட சரக்குகளின் புதிதாய் இணைக்கப்படும் உயிருள்ள உழைப்பின் அறுதி அளவானது உற்பத்தி வளர வளர பெருமளவில்

குறைகிறது என்னும் நிலையில் அவற்றில் அடங்கியுள்ள ஊதிய மிலா உழைப்பின் அறுதித் திரளும் குறைந்து போகும்—உழைப்பின் ஊதியப் பகுதியோடு ஒப்பிடுகையில் இந்த ஊதியமிலா உழைப்பு எவ்வளவுதான் அதிகரித்திருந்தாலும் சரி. உபரி-மதிப்பு வீதம் உயர்ந்தாலும், உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ச்சி பெறுகை யில் தனிப்பட்ட சரக்கு ஒவ்வொன்றின் மீதான இலாபத் திரளும் உழைப்பின் உற்பத்தித் திறன் வளருவதற்கேற்ப கணிசமாய்க் குறைந்து விடும். இலாப வீதத்திலான சரிவைப் போலவே இந்தக் குறைவும் மாறா-மூலதனக் கூறுகளின் விலை மலிவாதல் போன்ற காரணிகளால் தாமதப்படுவதோடு சரி—இந்தக் காரணிகளை யெல்லாம் இப்புத்தகத்தின் முதல் பகுதியில் எடுத்துரைத்தோம்; உபரி-மதிப்பு வீதம் குறிப்பிட்டதாய், ஏன், குறைந்து செல்வ தாயும் கூட இருக்கும் போதே இக்காரணிகள் இலாப வீதத்தை உயரச் செய்கின்றன.

மூலதனத்தின் மொத்த உற்பத்தியாய் அமைந்திடும் தனிப்பட்ட சரக்குகளின் விலை குறைவதன் பொருள், குறிப்பிட்ட உழைப் பளவு இன்னும் பெரிய சரக்களவில் ஈடேற்றம் பெறுகிறது என்பது தானே தவிர வேறல்ல. அதாவது தனிப்பட்ட சரக்கு ஒவ்வொன்றி லும் முன்னை விடக் குறைந்த உழைப்பே அடங்கியுள்ளது. மாறா-மூலதனத்தின் ஒரு பகுதி, கச்சாப் பொருள் போன்ற ஒரு பகுதி விலையில் உயர்ந்தாலும் கூட இப்படித்தான் நிகழ்கிறது. ஒரு சில நேர்வுகளை (எடுத்துக்காட்டாக உழைப்பின் உற்பத்தித் திறனானது மாறா-மூலதனக் கூறுகள், மாறும்-மூலதனக் கூறுகள், யாவற்றை யுமே ஒரேசீராய் விலைமலிவாக்கிடும் நேர்வை) ஒதுக்கி விட்டுப் பார்க்கும் போது, உபரி-மதிப்பு வீதம் உயர்ந்த போதிலும் இலாப வீதம் குறையும். (1) ஏனென்றால் புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப் பின் மொத்த அளவு குறைந்து போகிறது, இந்த மொத்த அளவில் ஊதியமிலாப் பகுதி முன்னை விடப் பெரியதாய் இருந்தாலும் கூட முந்தைய பெரிய அளவின் சிறிய பகுதியாய் அமைந்திடும் ஊதிய மிலா ஈவுப் பகுதியை விடச் சிறியதே; (2) தனிப்பட்ட சரக்கில் புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பு பொருள்வடிவாகியுள்ள மதிப்புப் பகுதி கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்களைவும், நிலை-மூலதனத்தின் தேய்மானத்தையும் குறிக்கிற அதன் மதிப்புப் பகுதி யுடன் ஒப்பிடுகையில் குறைந்து செல்வதானது மூலதனத்தின் உயர்ந்த இயைபு தனிப்பட்ட சரக்கின் உருவில் வெளிப்பட உதவு கிறது. தனிப்பட்ட சரக்குகளின் விலையில் பல்வேறு அடக்கக் கூறுகளாய் இருப்பவற்றின் விகித உறவில் ஏற்படும் இந்த மாற்றம், அதாவது புதிதாய்ச் சேர்க்கப்படும் உயிருள்ள உழைப்பு பொருள் வடிவாகியுள்ள விலைப் பகுதி குறைவதும் முன்பே பொருள்வடி வாக்கப்பட்டு விட்ட உழைப்பைக் குறிக்கும் விலைப் பகுதி அதி கரிப்பதும் மாறா-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் மாறும்-மூலதனம்

குறைவதைத் தனிப்பட்ட சரக்குகளது விலையின் வாயிலாக வெளியிடும் வடிவமே ஆகும். இந்தக் குறைவு குறிப்பிட்ட மூலதன அளவுக்கு—100 மூலதனத்துக்கு என்போம்—அறுதிக் குறைவாய் இருப்பது போலவே, மறுவுற்பத்தி செய்யப்படும் மூலதனத்தின் ஈவுப் பகுதி என்ற முறையில் தனிப்பட்ட ஒவ்வொரு சரக்குக்கும் கூட அறுதிக் குறைவே ஆகும். என்றாலும் தனியொரு சரக்கினது விலையின் கூறுகளது அடிப்படையில் மட்டும் கணக்கிடப்படும் இலாப வீதம் வேறு, உள்ளபடியான இலாப வீதம் வேறு. காரணம் என்னவென்றால்:

[இலாப வீதமானது முதலீடாகிற மொத்த மூலதனத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட காலத்துக்கு, உண்மையில் ஓராண்டுக்கு இவ்வளவு எனக் கணக்கிடப் படுகிறது. இலாப வீதமென்பது ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டு ஈடேற்றமாகும் உபரி-மதிப்பு அல்லது இலாபத்துக்கும் மொத்த மூலதனத்துக்குமான விகிதமே, சதவீத வடிவிலான விகிதமே ஆகும். ஆகவே இந்த இலாப வீதமானது ஓராண்டுக்கு என்றல்லாமல், முதலீடாகிற மூலதனத்தின் புரள்வுக் காலத்துக்கென கணக்கிடப்படும் இலாப வீதத்துக்குச் சமமாய் இருந்தாக வேண்டுமென்ற அவசியமில்லை. மூலதனம் சரியாக ஓராண்டு காலத்தில் புரளுவதாய் இருந்தால் தான் இவ்விரு இலாப வீதங்களும் சமமாகின்றன.

மறு புறம் ஓராண்டு காலத்தில் கிடைக்கிற இலாபமானது அந்த ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகிற சரக்குகளின் மீதான இலாபங்களின் கூட்டுத் தொகையே தவிர வேறல்ல. சரக்குகளது அடக்க-விலையின் அடிப்படையில் இலாபத்தை கணக்கிடுவோமானால், பெறப்படும் இலாப வீதம் $= \frac{p}{k}$; இதில் p ஆனது ஓராண்டு காலத்தில் ஈடேற்றமாகிற இலாபத்தையும், k ஆனது அந்த ஓராண்டு காலத்திற்குள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகிற சரக்குகளின் அடக்க-விலைகளது கூட்டுத் தொகையையும் குறிக்கின்றன. $\frac{p}{k}$ என்கிற இந்த இலாப வீதம் இலாபத் திரளை மொத்த மூலதனத்தால் வகுப்பதாகிய $\frac{p}{C}$ என்னும் உண்மையான இலாப வீதத்திற்குச் சமமாகாது என்பது தெளிவு. $k = C$ என்கிற ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமே, அதாவது மூலதனம் சரியாக ஓராண்டு காலத்தில் புரளுகிற போது மட்டுமே, இவ்விரு இலாப வீதங்களும் சமமாகின்றன.

தொழில் துறை மூலதனம் ஒன்றின் மூவேறு நிலைமைகளை எடுத்துக் கொள்வோம்.

I. 8,000 மூலதனம் ஓராண்டு காலத்தில் ஒரு சரக்கின் 5000 உருப்படிகளை உற்பத்தி செய்து, உருப்படிக்கு 30 ஷில்லிங் வீதம் அவற்றை விற்பதாகக் கொள்வோம். வருடாந்தரப் புரள்வு £7,500

ஆகிறது. உருப்படி ஒவ்வொன்றுக்கும் கிடைக்கும் இலாபம 10 ஷில்லிங், அதாவது ஆண்டுக்கு £2,500. எனவே ஒவ்வோர் உருப்படியும் 20 ஷில்லிங் மூலதன முன்னீட்டையும் 10 ஷில்லிங் இலாபத்தையும் தன்னுள் கொண்டிருக்கிறது. ஆக, உருப்படி ஒன்றுக்கு இலாப வீதம் $\frac{10}{20} = 50\%$ ஆகும். £7,500 புரள்வுத் தொகையில் £5,000 மூலதன முன்னீடும் £2,500 இலாபமும் அடங்கியுள்ளன. புரள்வு ஒன்றுக்கு இலாப வீதம், அதாவது $\frac{p}{k} = 50\%$. ஆனால் மொத்த மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிடும் போது இலாப வீதம் $\frac{p}{C} = \frac{2,500}{8,000} = 31\frac{1}{4}\%$.

II. மூலதனம் £10,000 ஆக உயருகிறது. உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரித்திருப்பதால், உருப்படி ஒன்றுக்கு 20 ஷில்லிங் அடக்க-விலையில் ஆண்டு ஒன்றுக்கு 10,000 உருப்படிகள் வீதம் அதனால் உற்பத்தி செய்ய முடிகிறது. சரக்கானது 4 ஷில்லிங் இலாபம் வைத்து, அதாவது உருப்படி ஒன்றுக்கு 24 ஷில்லிங் விலையில் விற்கப்படுவதாகக் கொள்வோம். இந்நிலையில் வருடாந்தர உற்பத்தியின் விலை = £12,000; இதில் £10,000 மூலதன முன்னீடாகும். £2,000 இலாபமாகும். இலாப வீதம் $\frac{p}{k}$ = உருப்படி $\frac{4}{20}$, வருடாந்தரப் புரள்வுக்கு $\frac{2,000}{10,000}$, அதாவது இரு நிலைகளிலும் 20%. மொத்த மூலதனம் அடக்க-விலைகளின் கூட்டுத் தொகைக்குச் சமம். அதாவது £10,000 என்பதால், உள்ளபடியான இலாப வீதம் $\frac{p}{C}$ என்பதும் இங்கே 20%தான் என்றாகிறது.

III. உழைப்பின் உற்பத்தித் திறன் ஓயாமல் உயர்ந்து செல்வதன் பயனாய், மூலதனம் £15,000 ஆக அதிகரிக்கிறது. அது உருப்படிக்கு 15 ஷில்லிங் அடக்க-விலையில் ஆண்டு ஒன்றுக்கு 30,000 உருப்படிகள் உற்பத்தி செய்கிறது. உருப்படி ஒவ்வொன்றும் 2 ஷில்லிங் இலாபம் வைத்து 15 ஷில்லிங்குக்கு விற்கப் படுகிறது. ஆக, வருடாந்தரப் புரள்வு = 30,000 × 15 ஷில்லிங் = £22,500; இதில்£19,500 மூலதன முன்னீடு ஆகும். £3,000 இலாபம் ஆகும். அப்படியானால், இலாப வீதம் $\frac{p}{k} = \frac{2}{13} = \frac{3,000}{19,500} = 15\frac{5}{13}\%$. ஆனால் $\frac{p}{C} = \frac{3,000}{15,000} = 20\%$.

ஆகவே, புரளும் மூலதன-மதிப்பு மொத்த மூலதனத்துக்குச் சமமாய் இருக்கும் நேர்வு IIஇல் மட்டுமே உருப்படி ஒவ்வொன்றுக்குமான, அல்லது மொத்தப் புரள்வுத் தொகைக்கான இலாப வீதமும் மொத்த மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும் இலாப வீதமும் சமமாய் இருக்கக் காண்கிறோம். புரள்வின் அளவு மொத்த மூலதனத்தை விடக் குறைவாய் இருக்கும் நேர்வு Iஇல் சரக்கினது

அடக்க-விலையின் அடிப்படையில் கணக்கிடப்படும் இலாப வீதம் கூடுதலாய் உள்ளது; மொத்த மூலதனம் புரள்வின் அளவினை விடக் குறைவாய் இருக்கும் நேர்வு IIIஇல் அது மொத்த மூலதனத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும் உள்ளபடியான இலாப வீதத்தை விடக் குறைவாய் உள்ளது. இது ஒரு பொது விதி.

வர்த்தக நடைமுறையில் புரள்வு சரிவரக் கணக்கிடப்படுவதில்லை என்பதே பொதுவான நிலவரம். ஈடேற்றமாகும் சரக்கு-விலை களின் கூட்டுத் தொகை முதலீடாகிற மொத்த மூலதனத் தொகைக்குச் சமமானதுமே மூலதனம் ஒரு முறை புரண்டிருப்பதாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் ஈடேற்றமாகும் சரக்குகளின் அடக்க-விலைகளதுகூட்டுத் தொகை மொத்த மூலதனத் தொகைக்குச் சமமாய் இருக்கும் போதுதான் மூலதனம்முழுப் புரள்வு ஒன்றை நிகழ்த்தி முடிக்க முடியும். — பி. எங்கெல்ஸ்]

முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் தனிப்பட்ட சரக்குகளை அல்லது குறிப்பிட்ட காலத்தின் சரக்கு-உற்பத்தியைத் தனித்து ஒதுக்கி, அவற்றினளவில் வெறும் சரக்குகளாக மட்டும் கருதிடாமல், மூலதன முன்னீட்டின் உற்பத்திப் பொருட்களாகவும் அவற்றை உற்பத்தி செய்யும் மொத்த மூலதனத்துடன் உறவுபடுத்தியும் கருதுவது எவ்வளவு முக்கியமானது என்பதையே மேற்கூறியதிலிருந்தும் அறிய முடிகிறது.

உற்பத்தி செய்யப்பட்டு ஈடேற்றமாகிற உபரி-மதிப்புத் திரளை சரக்குகளில் மீண்டு வரும் நுகரப்பட்ட மூலதனப் பகுதியோடு தொடர்புபடுத்துவது மட்டுமல்லாமல், இந்த நுகரப்பட்ட பகுதி, பிரயோகிக்கப்பட்ட போதிலும் நுகரப்பட்டு விடாமல் தொடர்ந்து உற்பத்தியில் செயல்பட்டு வரும் மூலதனப் பகுதி இவற்றின் கூட்டுத் தொகையோடும் தொடர்புபடுத்தி அளவிடுவதன் மூலம் இலாப வீதத்தைக் கணக்கிட்டாக வேண்டும். ஆனால் இலாபத் திரளானது சரக்குகளிலேயே அடங்கியிருப்பதும் அவற்றை விற்பதன் மூலம் ஈடேற்றமாக வேண்டியதுமான இலாபம் அல்லது உபரி-மதிப்பின் திரளுக்குச் சமமானதாகவே இருக்க முடியும்.

தொழில் துறையின் உற்பத்தித் திறன் அதிகரித்தால் தனிப்பட்ட சரக்குகளின் விலை குறைகிறது. அவை உள்ளடக்கிக் கொள்ளும் உழைப்பின் அளவு — ஊதிய உழைப்பின் அளவும் ஊதியமிலா உழைப்பின் அளவும் — குறைகிறது. குறிப்பிட்ட அளவு உழைப்பு முன்னைப் போல் மும்மடங்கு உற்பத்தி செய்வதாகக் கொள்வோம். அதாவது தனிப்பட்ட உற்பத்திப் பொருளைச் செய்து முடிப்பதற்கான உழைப்பின் அளவு $^{2}/_{3}$ பங்கு குறைகிறது. இலாபமானது தனியொரு சரக்கில் அடங்கியுள்ள உழைப்பளவில் ஒரு பகுதியை மட்டுமே குறிப்பதாய் இருக்க முடியும் என்பதால், தனிப்பட்ட சரக்கில் அடங்கியுள்ள இலாபத் திரள் குறைந்தாக வேண்டும். இது குறிப்பிட்ட சில வரம்புகளுக்குள் நடைபெறுகிறது, உபரி-மதிப்பு

வீதம் உயர்ந்தாலும் கூட நடைபெறுகிறது. எது எப்படியானாலும், மூலதனம் ஈடுபடுத்தும் தொழிலாளர் தொகையும் அவர்கள் மீதான சுரண்டலின் கடுமையும் மாறாதுள்ள வரை, மொத்த உற்பத்தி யிலிருந்து பெறப்படும் இலாபத் திரள் ஆரம்ப இலாபத் திரளுக்கும் கீழாகக் குறைந்து விடாது. (தொழிலாளர் தொகை குறைந்து அவர் கள் மீதான சுரண்டலின் கடுமை உயருமானால் அப்போதும் இதே நிலைமை ஏற்படலாம்.) ஏனென்றால் தனிப்பட்ட உற்பத்திப் பொருளிலிருந்து பெறப்படும் இலாபத் திரளானது உற்பத்திப் பொருட்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கேற்பக் குறைந்து செல் கிறது. மொத்தச் சரக்களவின் மீது இலாபத்தின் வினியோகப் பரப்பீடு மாறுபட்ட போதிலும் இலாபத்தின் மொத்த அளவில் மாற்றமில்லை. புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பு படைத்திடும் மதிப்பளவு தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே வினியோகமாவதிலும் இதனால் மாற்றமில்லை. ஈடுபடுத்தப்படும் உழைப்பளவு மாறாதுள்ள வரை, ஊதியமிலா உபரி-உழைப்பு அதிகரித்தால்தான் இலாபத் திரள் அதிகரிக்க முடியும்; சுரண்டல்-கடுமை மாறாதுள்ள வரை, தொழிலாளர்களின் எண்ணிக்கை அதி கரித்தால்தான் இலாபத் திரள் அதிகரிக்க முடியும். இரு காரணங் களும் சேர்ந்து இதே விளைவைத் தோற்றுவிப்பதும் உண்டு. இந்த நேர்வுகள் யாவற்றிலும் — மாறும்-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் மாறா-மூலதனம் அதிகரிப்பதாகவும், மொத்த மூலதனத்தின் பரு மன் அதிகரிப்பதாகவும் நாம் அனுமானம் செய்து கொள்கிற இந்த நேர்வுகளில் — தனியொரு சரக்கில் அடங்கியுள்ள இலாபத் திரள் குறைந்து செல்கிறது, தனியொரு சரக்கின் அடிப்படையில், கணக் கிட்டாலும் கூட இலாப வீதம் குறைந்து செல்கிறது. குறிப்பிட்ட அளவு புதிதாய்ச் சேர்க்கப்படும் உழைப்பினால் பொருள்வடி வாகிற சரக்குகளின் அளவு அதிகரித்துச் செல்கிறது. தனியொரு சரக்கின் விலை குறைந்து செல்கிறது. உழைப்பின் உற்பத்தித் திறன் உயருவதாலும், அதே போது இந்த விலைகுறைந்த சரக்கின் எண்ணிக்கை அதிகமாவதாலும், தனியொரு சரக்கின் விலை குறைந்த போதிலும், சூக்கும நோக்கில் இலாப வீதம் மாறாதிருக்கலாம். எடுத்துக்காட்டாக உழைப்பின் உற்பத்தித் திறனிலான உயர்வு சரக்கின் எல்லாக் கூறுகள் மீதும் ஒருங்கே செயல்படுவதோடு ஒரேசீராகவும் செயல்படுமானால், மேற்சொன்னவாறு இலாப வீதம் மாறாதிருக்கலாம்; அதாவது உழைப்பின் உற்பத்தித் திறன் உயருகிற அதே விகிதத்தில் சரக்கின் மொத்த விலை குறையும் போதே சரக்கினது விலையின் வெவ்வேறு கூறுகள் ஒன்றோ டொன்று கொண்டிருக்கும் விகித உறவு மாறாதிருக்குமானால் இலாப வீதம் மாறாதிருக்கலாம். உபரி-மதிப்பு வீதம் உயரும் போதே மாறா-மூலதனத்தின், முக்கியமாய் நிலை-மூலதனத்தின் கூறுகளது மதிப்பு கணிசமாய்க் குறையுமானால், இலாப வீதம்

உயரவும் கூடும். ஆனால் உண்மையில் இலாப வீதமானது நாளா வட்டத்தில் குறைந்தே போகும் என்று பார்த்தோம். எது எப்படி யானாலும், எந்தவொரு தனிப்பட்ட சரக்கின் விலையும் குறைந்து செல்வதை வைத்தே அதனளவில் இலாப வீதத்தை அறிந்து கொண்டு விட முடியாது. எல்லாமே அச்சரக்கின் உற் பத்தியில் முதலீடாகிற மொத்த மூலதனத்தின் பருமனைப் பொறுத்தது. எடுத்துக்காட்டாக ஒரு கெஜம் துணியின் விலை 3 ஷில்லிங்கிலிருந்து 1⅔ ஷில்லிங் காகக் குறையுமானால், அதில் இந்த விலைக் குறைப்புக்கு முன்னர் 1⅔ ஷில்லிங் மதிப்புள்ள நூலும் பிறவுமாகிய மாறா-மூலதனமும் ⅔ ஷில்லிங் கூலியும் ⅔ ஷில்லிங் இலாபமும் அடங்கியிருந்தன என்றும், விலைக்குறைப்புக்குப் பிறகு 1 ஷில்லிங் மதிப்புள்ள மாறா-மூலதனமும் ⅓ ஷில்லிங் கூலியும் ⅓ ஷில்லிங் இலாபமும் அடங்கியுள்ளன என்றும் நமக்குத் தெரியுமானால், இலாப வீதம் மாறாதுள்ளதா அல்லவா என்று நம்மால் சொல்ல முடியாது. மொத்த மூலதன முன்னீடு அதிகரித்துள்ளதா என்பதையும் எவ் வளவு அதிகரித்துள்ளது என்பதையும் குறிப்பிட்ட காலத்தில் அது இன்னும் எத்தனை கெஜம் கூடுதலாய் உற்பத்தி செய்கிறது என் பதையும் பொறுத்ததாகும் இது.

உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்ந்து செல்வதானது தனி யொரு சரக்கின் அல்லது குறிப்பிட்ட சரக்குத் திரளின் விலை குறைந்து செல்வதையும், சரக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதையும், தனியொரு சரக்கின் மீதான இலாபத் திரளும் மொத்தச் சரக்களவின் மீதான இலாப வீதமும் குறைந்து செல்வதை யும், மொத்தச் சரக்களவின் மீதான இலாபத் திரள் அதிகரித்துச் செல்வதையும் குறிப்பதாய் இருக்கும் நிகழ்வு முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் இயல்பிலிருந்தே எழுகிற ஒன்று. இந்நிகழ்வானது தனியொரு சரக்கின் மீதான இலாபத் திரளில் ஏற் படும் குறைவாகவும், அதன் விலையில் ஏற்படும் குறைவாகவும் மொத்தச் சமுதாய மூலதனமோ தனியொரு முதலாளியோ உற் பத்திச் செய்திடும் அதிகரித்த மொத்த எண்ணிக்கையிலான சரக்கு கள் மீதான இலாபத் திரளில் ஏற்படும் அதிகரிப்பாகவும்தான் மேற்பரப்பில் தோற்றமளிக்கிறது. இந்நிலையில், முதலாளி அவ ராகவே விரும்பி தனியொரு சரக்கின் விலையோடு முன்னைவிடக் குறைந்த இலாபத்தைச் சேர்த்துக் கொள்வது போலவும், இன்னு மதிக எண்ணிக்கையில் சரக்குகளை உற்பத்தி செய்வதன் மூலம் இந்த இழப்பை சரிக்கட்டிக் கொள்வது போலவும் தெரி கிறது. இந்தக் கண்ணோட்டம் உடைமை-மாற்றத்திலிருந்தே இலா பம் வரு கிறது என்னும் கருத்தை அடிப்படையாய்க் கொண்டிருக் கிறது. இந்தக் கருத்தோ வணிக-மூலதனத்தின் கண்ணோட்டத்தி லிருந்து பெறப்படுவதாகும்.

முதல் பாகத்திலேயே (பகுதி IV, VII) பார்த்ததுதான்: உழைப்பின்

உற்பத்தித் திறன் உயருவதோடு சேர்ந்து சரக்குத் திரள் அதிகரிப்பதும், தனியொரு சரக்காய் இருப்பது விலைமலிவாவதும் (இந்தச் சரக்குகள் உழைப்புச் சக்தியின் விலையை நிர்ணயிக்கும் காரணிகளாய் இல்லாத வரை) தனியொரு சரக்கில் ஊதிய உழைப் புக்கும் ஊதியமிலா உழைப்புக்கும் இடையிலான விகித உறவைப் பாதிப்பதில்லை.

சந்தைப் போட்டியில் எல்லாமே திரிபுற்று, அதாவது நேர் மாறாகித் தெரிவதால், தனிப்பட்ட முதலாளி (1) தாம் தனியொரு சரக்கின் விலையைக் குறைத்து அதன் மீதான இலாபத்தைக் குறைத்துக்கொண்ட போதிலும், அதிக அளவில் சரக்குகளை விற்று கூடுதல் இலாபம் பெறுவதாகவும் (2) தாமே தனிப்பட்ட சரக்குகளின் விலையை நிர்ணயம் செய்வதாகவும், மொத்த உற்பத்தியின் விலையும் பெருக்கல் வழியில் தம்மாலேயே நிர்ணயிக்கப்படுவதாகவும் கற்பனை செய்து கொள்கிறார். ஆனால் உண்மையில் ஆரம்ப நிகழ்முறை வகுத்தல் வழியில்தான் நடைபெறுகிறது (முதல் பாகம், அத்தியாயம் XII, பக்கம் 430-31); இரண்டாவதாகத்தான் பெருக்கல் வருகிறது; ஏனென்றால் இந்தப் பெருக்கலே கூட அந்த வகுத்தலைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. கொச்சைப் பொருளாதார அறிஞர் செய்வதெல்லாம், முதலாளிமார்கள் போட்டியினால் ஆட்கொள்ளப்பட்டு வடித்திடும் அலாதிக் கருத்துருவங்களை இன்னும் கூட தத்துவார்த்தமானதாகவும் பொதுமைப் பட்டதாகவும் தெரிகிற மொழிக்குப் பெயர்ப்பது, அந்தக் கருத்தமைவுகளுக்கு ஆதாரமளித்து நியாயம் கற்பிக்க முயல்வது என்பதற்கு மேல் அநேகமாய் ஒன்றுமில்லை.

சரக்குகளின் விலைகள் குறைந்து செல்வதும் இந்த விலை குறைந்த சரக்குகளின் திரள் அதிகரித்து அவற்றிலிருந்து பெறப்படும் இலாபத் திரள் உயர்ந்து செல்வதும், உண்மையில், இலாப வீதம் குறைந்து செல்வதும் அதே போது இலாபத் திரள் அதிகரித்துச் செல்வதும் பற்றிய விதிக்கான வேறொரு தெரிவிப்பே ஆகும்.

குறைந்து செல்லும் இலாப வீதமும் உயர்ந்து செல்லும் விலைகளும் எந்த அளவுக்கு ஒன்றையொன்று சந்திக்கும் என்பது பற்றிய பகுப்பாய்வு இவ்விடத்திற்கு உரியதன்று. இவ்வாறே ஒப்பீட்டு உபரி-மதிப்பு தொடர்பாக முதல் பாகத்தில் (பக்கம் 429-31) எடுத்துரைத்தவை பற்றிய பகுப்பாய்வும் கூட இவ்விடத்திற்கு உரியதன்று. ஒரு முதலாளி மேம்பட்ட உற்பத்தி வழிமுறைகளைத் தமது தொழிலில் கையாள்கிறார். அந்த வழிமுறைகள் பரவலான அளவில் இன்னமும் கையாளப்படவில்லை என்றால், அவர் சரக்கை விற்கும் விலை சந்தை-விலைக்குக் கீழானதாய், ஆனால் அவரது தனிப்பட்ட உற்பத்தி-விலைக்கு மேலானதாய் இருக்கும்; அவரது இலாப வீதம் உயர்ந்து செல்லும்; முடிவில் போட்டி அதனை சமனமாக்கும். இந்தச் சமனமாக்கம் நடைபெறும் காலத்தில், இரண்டாவது

தேவைப்பாடு, அதாவது முதலீடாகிற மூலதனத்தின் விரிவாக்கம் செயல்படத் தொடங்குகிறது. இந்த விரிவாக்கத்தின் படித்தரத்திற் கேற்ப, முதலாளியால் புதிய நிலைமைகளில் அவரது பழைய தொழிலாளர்களில் ஒரு பகுதியினரையோ ஒருகால் அனை வரையுமோ, ஏன், இன்னும் கூட அதிகமான தொழிலாளர் களையோ வேலைக்கமர்த்த முடியும்; எனவே அதே அளவு இலாபத் தையோ இன்னுமதிக அளவு இலாபத்தையோ உற்பத்தி செய்ய முடியும்.

## அத்தியாயம் XIV

# எதிர்த்து இயங்கும் காரணிகள்

சமுதாய உழைப்பின் உற்பத்திச் சக்திகள் கடந்த 30 ஆண்டு களில் மட்டும் அதற்கு முந்தைய கால கட்டங்கள் யாவற்றோடும் ஒப்பிடுகையில் கண்டிருக்கும் பிரமாதாமான வளர்ச்சியை நோக்கு வோமானால், குறிப்பாக சமுதாயப் பொருளுற்பத்தி நிகழ்முறை முழுவதிலும் பங்கு கொள்கிற இயந்திர சாதனங்களை அன்னியில் நிலை-மூலதனத்தின் பிரம்மாண்டத் திரளை நோக்குவோமானால், இது வரை பொருளாதார அறிஞரை வருத்தி வந்திருக்கும் பிரச் சினையான இலாப வீதம் ஏன் சரிந்து செல்ல வேண்டும் என்ப தானது மறைந்து, அதற்கு எதிரானதாகிய இந்தச் சரிவு ஏன் இன்னும் பெரிதாகவும் துரிதமாகவும் நடைபெறவில்லை என்பது பெருமலை பிரச்சினையாக எழுகிறது. பொது விதியின் பாதைய்யில் குறுக்கிட்டு அதன் பலன்களைக் குலைத்திடும் காரணிகள் இருக்க வேண்டும், எதிர்த்து இயங்கும் இந்த்க் காரணிகள் விதியை விதி யாக அல்லாமல் ஒரு போக்காக மட்டும் செயல்பட வைக்க வேண்டும் என்று தெரிகிறது. இதனால்தான் நாம் பொது இலாப வீதத்தின் குறைவை குறைந்து செல்லும் போக்காகக் குறிப்பிடுகிறோம்.

இப்படி எதிர்த்து இயங்கும் காரணிகளில் மிகவும் பொதுப் படையானவை வருமாறு:

### I. சுரண்டல்-கடுமை அதிகரித்தல்

உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமை — அதாவது உபரி-உழைப் பும் உபரி-மதிப்பும் தனதாக்கப்படுதல் — வேலை-நாள் நீட்டப்படு வதன் மூலமும் உழைப்பு மும்முரமாக்கப்படுவதன் மூலமும் கணிச மாய் அதிகரிக்கிறது. இந்த இரு அமிசங்களும் அறுதி உபரி-மதிப்பு, ஒப்பீட்டு உபரி-மதிப்பின் உற்பத்திக்குத் தொடர்புள்ளவை என்ற முறையில் முதல் பாகத்தில் முழுநிறைவாய்ப் பரிசீலிக்கப்பட்டன. உழைப்பை மும்முரமாக்குவது மாறும்-மூலதனத்துடன் ஒப்பிடுகை யில், மாறா-மூலதனம் கூடுதலாவதையும், எனவே இலாப வீதம்

குறைவதையும் • குறிப்பதாகும். உழைப்பை மும்முரமாக்குவதற்குப் பல வழிகள் உண்டு; தொழிலாளியை இன்னுமதிக இயந்திரங்களை இயக்கும் படி கட்டாயப்படுத்துவது இவற்றில் ஒன்று. உழைப்பை இப்படி மும்முரமாக்கும் நிலைகளில்—ஒப்பீட்டு உபரி-மதிப்பின் உற்பத்திக்குப் பயன்படும் பெரும்பாலான வழிமுறைகளில்—உபரி-மதிப்பு வீதத்தை உயரச் செய்யும் அதே காரணங்கள், மொத்த மூலதன முதலீட்டின் குறிப்பிட்ட அளவுகளை வைத்துப் பார்க்கும் போது, உபரி-மதிப்புத் திரளைக் குறையவும் செய்வதுண்டு. ஆனால் உழைப்பை மும்முரமாக்குவதற்கான வேறு சில வழிகள்—எடுத்துக் காட்டாக இயந்திர சாதனத்தின் வேகத்தை அதிகமாக்குதல்—குறிப் பிட்ட காலத்தில் இன்னுமதிக அளவிலான கச்சாப் பொருளை நுகரச் செய்த போதிலும், நிலை-மூலதனத்தைப் பொறுத்த வரை இயந்திர சாதனத்தை இன்னுங்கூட மிகத் துரிதமாய்த் தேய்மான முறச் செய்கின்றன; என்றாலும் இயந்திர சாதனத்தின் மதிப்புக்கும் அதனை இயங்க வைக்கும் உழைப்பின் விலைக்குமான விகித உறவை இவை எவ்விதத்தும் பாதிப்பதில்லை. ஆனால் வேலை-நாளை நீட்டிப்பதுதான், நவீனத் தொழில் துறையின் இந்தக் கண்டு பிடிப்புதான் ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்திக்கும் அதனால் இயங்க வைக்கப்படும் மாறா-மூலதனத்துக்குமான விகித உறவை அடிப்படையில் மாற்றி விடாமலே, தனதாக்கப்படும் உபரி-உழைப் புத் திரளை அதிகமாக்குவதோடு, இந்த மாறா-மூலதனம் ஒப்பள வில் குறைந்து செல்லும் போக்கையும் தோற்றுவிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இலாப வீதம் குறைந்து செல்லும் போக்கின் மெய்ப்பொருள் என்னவென்று முன்பே தெளிவாய்க் காட்டியுள்ளோம்; அதாவது ஒப்பீட்டு உபரி-மதிப்பு உற்பத்தி செய்வதற்கான தந்திரங்களுக்கெல்லாம் அடிப்படை நோக்கமாவது, ஒரு புறம் குறிப்பிட்ட உழைப்பளவில் முடிந்த வரை பெரும் பகுதியை உபரி-மதிப்பாக மாற்றுவதும், மறு-புறம் முதலீடாகிற மூலதனத்துடனான விகிதத்தில் முடிந்த வரை மிகக் குறைந்த அளவு உழைப்பை ஈடுபடுத்துவதுமே ஆகும். எனவேதான் சுரண்டல்-கடுமையை உயர்த்துவதற்கு இடமளிக்கும் அதே காரணங்கள், முன்போல் அதே அளவு உழைப்பு அதே மூலதனத்தால் சுரண்டப் படுவதை சாத்தியமற்றதாக்கி விடுகின்றன. எதிர்த்து இயங்கும் போக்குகள் என்பவை இவையே; இப்போக்குகள் உபரி-மதிப்பு வீதத்தை உயரச் செய்யும் அதே போது, உபரி-மதிப்புத் திரளும், எனவே குறிப்பிட்ட மூலதனத்தின் இலாப வீதமும் குறைந்து செல்லும் போக்கும் ஏற்படுகிறது. இங்கு குறிப்பிட வேண்டிய இன்னொன்று, மாதர் உழைப்பும் குழந்தை உழைப்பும் பரவலாய்ப் புகுத்தப்படுவதாகும். முழுக் குடும்பமும் முன்னைக் காட்டிலும் இப்போது மூலதனத்திற்காக அதிக உபரி-உழைப்பைத் தந்தாக வேண்டும்; அவர்களது கூலியின் மொத்தத் தொகை அதிகரித்தாலும்

கூட இதுவே நிலைமை; இந்த மொத்தத் தொகை எப்போதுமே அதிகரிப்பதாகவும் சொல்வதற்கில்லை. — மூலதன முதலீட்டின் பருமனில் மாற்றம் செய்யாமலே வழிமுறைகளை மட்டும் மேம் படுத்தி, எடுத்துக் காட்டாக வேளாண்மையில், ஒப்பீட்டு உபரி-மதிப்பின் உற்பத்திக்கு வழி செய்கிற ஒவ்வொன்றும் இதே விளைவைத் தோற்றுவிக்கிறது. இது போன்ற சந்தர்ப்பங்களில், மாறும்-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் மாறா-மூலதனம் அதிகரிப் பதில்லை என்பது மெய்தான் (இங்கு மாறும்-மூலதனத்தை ஈடு படுத்தப்படும் உழைப்புச் சக்தியின் அளவுக்கான குறியீடாகக் கொள்கிறோம்). ஆனால் உற்பத்தி அளவானது ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்திக்கேற்ற விகிதத்தில் அதிகரிக்கவே செய்கிறது. உழைப்பின் உற்பத்தித் திறனானது (அவ்வுழைப்பின் உற்பத்திப் பொருள் தொழிலாளியின் நுகர்வுக்குப் பயன்பட்டாலும் சரி, மாறா-மூலதனக் கூறுகளில் சேர்ந்தாலும் சரி) போக்குவரத்துத் தொடர்புகளிலான இடையூறுகளிலிருந்து, காலப்போக்கில் தடை களாகி விட்ட கட்டுப்பாடுகளிலிருந்து — முறைமீறியோ முறைப் படியோ விதிக்கப்பட்ட இக்கட்டுப்பாடுகிளலிருந்து — விடுவிக்கப் படுமானால், மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்குமான விகிதத்தை நேரடியாகப் பாதிக்காமல் சகல வகைக் கட்டுத்தளை களிலிருந்தும் விடுவிக்கப்படுமானால், அப்போதும் இதுவே நடை பெறும்; அதாவது ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்திக்கேற்ற விகிதத் தில் உற்பத்தியின் அளவு அதிகரிக்கும்.

இலாப வீதம் குறைந்து செல்வதை மட்டுப்படுத்திய போதிலும், இறுதியாகப் பார்க்குமிடத்து அக்குறைவைத் துரிதப்படுத்தவே செய்யும் காரணிகளில், உபரி-மதிப்பு பொதுவான மட்டத்திற்கு மேல் உயர்ந்து செல்லும் தற்காலிக உயர்வுகள் — தற்காலிகமானவை என்றாலும் மீண்டும் மீண்டும் ஏற்படும் இந்த உயர்வுகள் — அடங்குமா என்று கேட்கப்படலாம் (இந்த உயர்வுகள் ஒரு நேரம் ஓர் உற்பத்திக் கிளையிலும் ஒரு நேரம் வேறொரு கிளையிலும் தொடர்ந்து ஏற் பட்டு வருகின்றன; கண்டுபிடிப்புகளும் பிறவும் வேறு இடங்களில் புகுத்தப்படுவதற்கு முன்னரே அவற்றைப் பயன்படுத்திக் கொள் ளும் தனிப்பட்ட முதலாளிகளுக்கு இந்த உயர்வுகள் நன்மை சேர்க் கின்றன). இந்தக் கேள்விக்கு ஆம் என்றே பதிலளித்தாக வேண்டும்.

குறிப்பிட்ட பருமனுள்ள மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்புத் திரள் இரு காரணிகளின் பெருக்கற் பலனாகும் — உபரி-மதிப்பு வீதத்தை இவ்வீதத்தில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர் தொகையால் பெருக்கி வருவதாகும். ஆகவே உபரி-மதிப்பு வீதம் குறிப்பிட்டதாய் இருக்க, உபரி-மதிப்புத்திரள் தொழிலாளர் தொகையைப் பொறுத்தது; தொழிலாளர் தொகை குறிப்பிட்டதாய் இருக்க, இத்திரள் உபரி-மதிப்பு வீதத்தைப் பொறுத்தது. பொது வாகச் சொன்னால், உபரி-மதிப்புத்திரள் மாறும்-மூலதனத்தின்

அறுதிப் பருமன்களுக்கும் உபரி-மதிப்பு வீதத்துக்குமான கலவை விகிதத்தைப் பொறுத்தது. சராசரியாகப் பார்த்தால், ஒப் பீட்டு உபரி-மதிப்பின் வீதத்தை உயரச் செய்யும் அதே காரணி கள் ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்தியின் திரளைக் குறையச் செய் கின்றன என்பதை நாமறிவோம். என்றாலும் தெளிவாய்த் தெரிவது என்னவென்றால்: இது எந்த அளவுக்கு நடைபெறும் என்பது இந்த முரண்பாடான இயக்கம் வெளிப்படுத்தும் திட்டமான விகித உறவைப் பொறுத்ததாகும்; இலாப வீதம் குறைந்து செல்லும் போக்கானது வேலை-நாளை நீட்டுவதன் மூலம் அறுதி உபரி-மதிப் பின் வீதத்தில் ஏற்படும் உயர்வினால் குறிப்பிடத்தக்கவாறு நலிவுறு கிறது.

இலாப வீதத்தைப் பொறுத்த வரை அது குறையும் போதே பொதுவாக இலாபத் திரள் அதிகரிக்கிறது என்றும், ஈடுபடுத்தப் படும் மொத்த மூலதனத் திரள் அதிகரிப்பதே இதற்குக் காரணம் என்றும் பார்த்தோம். சமுதாயத்தினுடைய மொத்த மாறும்-மூல தனத்தின் கோணத்திலிருந்து பார்க்கும் போது, அது உற்பத்தி செய்திருக்கும் உபரி-மதிப்பு அது உற்பத்தி செய்திருக்கும் இலாபத் திற்குச் சமம். உபரி-மதிப்பின் அறுதித் திரள், உபரி-மதிப்பு வீதம் இரண்டுமே அதிகரித்துள்ளன. முதலாவது அதிகரித்திருப்பது ஏனென்றால், சமுதாயத்தினால் ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்தி யின் அளவு அதிகரித்துள்ளது. இரண்டாவது அதிகரித்திருப்பது ஏனென்றால், இந்த உழைப்புச் சக்தி மீதான சுரண்டல்-கடுமை அதிகரித்துள்ளது. ஆனால் மூலதனத்தின் பருமன் குறிப்பிட்டதாய் இருக்க—உதாரணமாய் 100 என்போம்—உபரி-மதிப்பின் சரா சரித் திரள் குறையும் போதே உபரி-மதிப்பு வீதம் அதிகரிக்கலாம்; ஏனென்றால் உபரி-மதிப்பு வீதமானது மாறும்-மூலதனம் எவ் விகிதத்தில் மதிப்பை உற்பத்தி செய்கிறது என்பதால் நிர்ணயிக்கப் படுகிறது. உபரி-மதிப்புத் திரளோ மாறும்-மூலதனத்துக்கும் மொத்த மூலதனத்துக்குமான விகிதத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

உபரி-மதிப்பு வீதம் உயருவது உபரி-மதிப்புத் திரளையும், எனவே இலாப வீதத்தையும் கூட நிர்ணயிக்கிற காரணிகளில் ஒன்று. இவ்வுயர்வு குறிப்பாக எத்தகைய நிலைமைகளில் நடை பெறுகிறது என்று முன்பே பாாத்தோம். மாறும்-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் மாறா-மூலதனம் சற்றும் அதிகரிக்காத அல்லது உரிய விகிதத்தில் அதிகரிக்காத நிலைமைகளில் இது நடைபெறு கிறது. இந்தக் காரணி பொது விதியை ஒழித்து விடுவதில்லை. அவ்விதி ஒரு போக்காகச் செயல்படுவதற்கே இது காரணமாகிறது. அதாவது இவ்விதியின் அறுதிச் செயற்பாட்டை அதற்கு எதிரிடை யாகச் செயல்படும் நிலைமைகள் மட்டுப்படுத்தி, வேகங் குறைத்து, நலிவுறச் செய்கின்றன. ஆனால் உபரி-மதிப்பு வீதத்தை உயரச் செய்யும் அதே காரணிகள் (வேலை நேரம் நீட்டப்படுவதும் கூட

பெருவீதத் தொழில் துறையின் விளைவாகும்) குறிப்பிட்ட மூல தனத்தால் ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்தி குறைந்து செல்லும் போக்கையும் தோற்றுவிப்பதால், இந்தக் காரணிகள் இலாப வீதம் குறைந்து செல்வதும் இந்தக் குறைவின் வேகம் மட்டுப்படுவதுமான போக்கையும் தோற்றுவிக்கின்றன என்றாகிறது. குறைந்தது இரு தொழிலாளர்கள் சீரான முறையில் வேலை செய்து நிறைவேற் றும் அதே அளவு உழைப்பை ஒரே தொழிலாளி நிறைவேற்றுமாறு சுட்டாயப்படுத்தப்பட்டால், அத்தொழிலாளி மூன்று தொழிலாளர் களை மாற்றீடு செய்யக் கூடிய நிலைமைகளில் இது நடைபெற்றால், அந்த ஒரு தொழிலாளி முன்னதாக இருவரால் நிறைவேற்றப்பட்ட அதே அளவு உபரி-உழைப்பை நிறைவேற்றுவார்; உபரி-மதிப்பு வீதமும் அதற்கேற்ப உயர்ந்திருக்கும். ஆனால் அவர் மூவரால் நிறைவேற்றப்பட்ட அளவு உழைப்பை நிறைவேற்ற மாட்டார்; உபரி-மதிப்புத் திரள் அதற்கேற்பக் குறைந்திருக்கும். ஆனால் உபரி-மதிப்புத் திரளிலான குறைவு உபரி-மதிப்பு வீதத்திலான உயர்வால் சரிக்கட்டப்படும் அல்லது வரம்பிடப்படும். மக்கள் தொகை முழுவதுமே இன்னுமுயர்ந்த உபரி-மதிப்பு வீதத்தில் வேலைக்கு அமர்த்தப்படுமானால், மக்கள்தொகை மாறாதிருந்த போதிலும் உபரி-மதிப்புத் திரள் அதிகரிக்கும். மக்கள்தொகை அதிகரித்தால் இத்திரள் இன்னுங்கூட அதிகரிக்கும். இது மொத்த மூலதனத்தின் பருமனோடு ஒப்பிடுகையில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர் தொகையைக் குறைப்பதோடு பிணைக்கப்பட்டதாகும் என் றாலும், இந்தக் குறைப்பு உபரி-மதிப்பு வீதத்திலான உயர்வால் மட்டுப்படுகிறது அல்லது தடைபடுகிறது.

இந்த அமிசத்தை முடித்துக் கொள்வதற்கு முன்னால், மீண்டு மொரு முறை வலியுறுத்திச் சொல்ல வேண்டியது இதுதான்:மூல தனத்தின் பருமன் குறிப்பட்டதாய் இருக்க, உபரி-மதிப்புத் திரள் குறையும் போதே உபரி-மதிப்பு **வீதம்** உயரலாம், உபரி-மதிப்புத் திரள் அதிகரிக்கும் போதே உபரி-மதிப்பு **வீதம்** குறைய லாம். உபரி-மதிப்புத் திரளானது உபரி-மதிப்பு வீதத்தைத் தொழிலாளர் தொகையால் பெருக்கி வருவதற்குச் சமம்; என்றாலும் உபரி-மதிப்பு வீதம் ஒரு போதும் மொத்த மூலதனத்தின் அடிப்படையில் கணக் கிடப்படுவதில்லை; அது மாறும்-மூலதனத்தின் அடிப்படை யில்தான், அதுவும் உள்ளபடியே அந்தந்த வேலை-நாளுக்குத்தான் கணக்கிடப்படுகிறது. மறு புறம், மூலதன-மதிப்பின் பருமன் குறிப் பிட்டதாய் இருக்க, **உபரி-மதிப்புத்** திரள் உயராமலோ குறையா மலோ இலாப **வீதம்** உயரவோ குறையவோ முடியாது.

## II. கூலியை உழைப்புச் சக்தியின் மதிப்புக்கும் கீழாகக் குறைத்தல்

அனுபவத்தால் அறியப்படுகிற வகையில் மட்டுமே இங்கு

இதைக் குறிப்பிடுகிறோம். ஏனென்றால் பட்டியலிட்டுச் சொல்லக் கூடிய வேறு பலவற்றையும் போலவே இதுவும் மூலதனப் பகுப் பாய்வைச் சேர்ந்ததல்ல. போட்டி தொடர்பான பகுப்பாய்வுக்கு உரியது இது. ஆனால் அந்தப் பகுப்பாய்வு இந்த நூலில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எப்படியான போதிலும், இலாப வீதம் குறைந்து செல்லும் போக்கை மட்டுப்படுத்தும் மிக முக்கியக் காரணிகளில் இதுவும் ஒன்று.

### III. மாறா-மூலதனக் கூறுகள் விலைமலிவாதல்

உபரி-மதிப்பு வீதம் மாறாதிருக்கும் போதே, அல்லது உபரி-மதிப்பு வீதம் எப்படியிருந்த போதிலும், இலாப வீதத்தை உயரச் செய்யும் காரணிகள் பற்றி இப்புத்தகத்தின் முதல் பகுதியில் கூறி யதனைத்தும் இவ்விடத்துக்கும் அவசியமானதே. ஆகவே, மொத்த மூலதனத்தைப் பொறுத்த வரை, மாறா-மூலதனத்தின் பொருட் பரிமாணம் அதிகரிக்கும் அதே விகிதத்தில் அதன் மதிப்பு அதிகரிப் பதில்லை என்பதையும் கூட இங்கே குறிப்பிட வேண்டும். எடுத்துக் காட்டாக ஐரோப்பாவில் முன்பெல்லாம் ஒரு நூற்பாளர் இராட்டை கொண்டு நூற்றிடும் பஞ்சின் அளவோடு ஒப்பிடுகையில், நவீனத் தொழிற்சாலையில் தனியொரு நூற்பாளர் நூற்றிடும் பஞ்சின் அளவு பிரம்மாண்டமாய் அதிகரித்துள்ளது. இருப்பினும் நூற்கப் படும் பஞ்சின் திரள் அதிகரித்துள்ள அதே விகிதத்தில் அதன் மதிப்பு அதிகரிக்கவில்லை. இயந்திர சாதனம், இதர வகை நிலை-மூலதனம் தொடர்பாகவும் இதையே குறிப்பிடலாம். சுருங்கச் சொல்லின், மாறும்-மூலதனத்தோடு ஒப்பிடுகையில் மாறா-மூல தனத் திரளை அதிகரிக்கச் செய்யும் அதே வளர்ச்சி உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரித்ததன் விளைவாக மாறா-மூலதனக் கூறு களின் மதிப்பைக் குறையச் செய்கிறது; எனவேதான் மாறா-மூல தனத்தின் மதிப்பு ஓயாமல் அதிகரித்த போதிலும், அதன் பொருட் பரிமாணம் (அதாவது அதே அளவு உழைப்புச் சக்தியால் இயங்க வைக்கப்படும் உற்பத்திச் சாதனங்களின் பொருட் பரிமாணம்) அதிகரிக்கும் அதே விகிதத்தில் அதிகரிக்க முடியாமற் போகிறது. தனிப்பட்ட ஒரு சில நேர்வுகளில் மட்டும், மாறா-மூலதனத்தின் மதிப்பு மாறாமலிருக்கும் போதே அல்லது குறையும் போதே மாறா-மூலதனக் கூறுகளின் திரள் அதிகரித்தாலும் அதிகரிக்கலாம்.

மேற்கூறியது இப்போது இருக்கும் மூலதனத்தின் (அதாவது அதன் பொருட் கூறுகளின்) மதிப்பிறக்கத்தோடு [depreciation] பிணைப்புண்டிருப்பதாகும். இந்த மதிப்பிறக்கம் தொழில் துறை வளர வளர நடைபெறுவதாகும். இது இலாபம் தரும் மூலதனத் திரளைக் குறைப்பதன் மூலம் குறிப்பிட்ட சில நிலைமைகளில் இலாபத்திரளிலும் கைவைக்கக் கூடும் என்றாலும், இலாப வீதம்

குறைந்து செல்வதை மட்டுப்படுத்தும் இன்னொரு காரணியாய், ஓயாமல் செயல்படும் காரணியாய் இருக்கிறது. இலாப வீதம் குறைந்து செல்லும் போக்கைத் தோற்றுவிக்கும் அதே தாக்கங்கள் இந்தப் போக்கின் விளைவுகளை மட்டுப்படுத்தவும் செய்கின்றன என்பது இங்கேயும் தெளிவாகிறது.

## IV. ஒப்பீட்டு மிகை-மக்கள்தொகை

ஒப்பீட்டு மிகை-மக்கள்தொகையின் [relative over-population] பெருக்கமானது உழைப்பினது உற்பத்தித் திறனின் வளர்ச்சியிலிருந்து பிரிக்க முடியாததும், இவ்வளர்ச்சியால் துரிதமாக்கப்படுவதும் ஆகும் — உற்பத்தித் திறனின் இவ்வளர்ச்சி இலாப வீதம் குறைந்து செல்வதில் வெளிப்படுகிறது. ஒரு நாட்டில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை எவ்வளவுக்கு எவ்வளவு வளர்ந்திருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு ஒப்பீட்டு மிகை-மக்கள்தொகை வெளிப்படையாகத் தெரியக் கூடியதாகிறது. இதனால்தான், ஒரு புறம், உற்பத்திக் கிளைகள் பலவற்றிலும் உழைப்பானது மூலதனத்திற்கு முற்றிலும் கீழ்ப்படியாமல் இருக்கும் நிலை தொடர்ந்து நிலவி, பொதுவாய் நாடு எய்தியிருக்கும் வளர்ச்சிக் கட்டத்துக்கு ஒவ்வாததாகத் தோன்றுமளவுக்கு நீடிக்கிறது. வேலையில்லாத கூலித் தொழிலாளர்கள் தங்குதடையின்றி மலிவாகவும் ஏராளமாகவும் கிடைப்பதோடு சில உற்பத்திக் கிளைகளில் அவற்றின் இயல்பு காரணமாய் உடல் உழைப்பை இயந்திர உழைப்பாக்குவதற்கான மாற்றத்தைக் கொண்டு வர எதிர்ப்பு அதிகமாகி விடுவதாலும் இப்படி நீடிக்க வேண்டியதாகிறது. மறு புறம், புதிய உற்பத்திக் கிளைகள் — முக்கியமாய் சொகுசுப் பண்டங்களை உற்பத்தி செய்கிறவை — திறந்து விடப்படுகின்றன; இந்தக் கிளைகள்தான் இந்த ஒப்பீட்டு மிகை-மக்கள் தொகையை — அநேக சந்தர்ப்பங்களில் ஏனைய உற்பத்திக் கிளைகளின் மாறா-மூலதனம் அதிகரிப்பதால் அக்கிளைகளிலிருந்து விடுவிக்கப்படுவோரை — தமக்குரிய அடிப்படையாய்க் கொள்கின்றன. இந்தப் புதிய கிளைகள் தொடங்கும் போது, உயிருள்ள உழைப்பே அவற்றின் முதன்மைக் கூறாக அமைகிறது. பையப் பைய இக்கிளைகளும் ஏனைய கிளைகளுக்குரிய அதே பரிணாம வளர்ச்சியினூடாகச் செல்கின்றன. இரு நேர்வுகளிலுமே மாறும்-மூலதனம் மொத்த மூலதனத்தில் கணிசமான பகுதி ஆகிறது. கூலி சராசரிக்கும் குறைவாய் உள்ளது. இதனால் இந்த உற்பத்திக் கிளைகளில் உபரி-மதிப்பு வீதம், உபரி-மதிப்புத் திரள் இரண்டுமே வழக்கத்துக்கு மாறான அளவிற்கு உயர்ந்திருக்கின்றன. ஆனால் தனிப்பட்ட உற்பத்திக் கிளைகளின் இலாப வீதங்கள் பொது இலாப வீதமாகச் சமனமாவதால், இலாப வீதம் குறைந்து செல்லும் போக்கைத் தோற்றுவிக்கும் அதே காரணி

இந்தப் போக்கை மட்டுப்படுத்தி, அதன் விளைவுகளைப் பெரு மளவுக்குப் பயனற்றதாக்கவும் செய்கிறது.

## V. அயல் வர்த்தகம்

அயல் வர்த்தகமானது [foreign trade] மாறா-மூலதனக் கூறு களை ஓரளவு விலைமலிவாக்குகிறது. மாறும்-மூலதனத்திற்குப் பரிவர்த்தனையாகிற அவசியப் பண்டங்களையும் ஓரளவு விலை மலிவாக்குகிறது; எனவே உபரி-மதிப்பு வீதத்தை உயரச் செய்தும் மாறா-மூலதனத்தின் மதிப்பைக் குறையச் செய்தும் இலாப வீதம் உயர்ந்து செல்லும் போக்கை அது தோற்றுவிக்கிறது. உற்பத்தியின் அளவுவீதம் விரிவடைவதற்கு வழிசெய்வதன் மூலம் அயல் வர்த் தகம் பொதுவாக இத்திசையில் செயல்படுகிறது. இவ்விதம் ஒரு புறம் அது மூலதனத் திரட்டல் நிகழ்முறையை விரைவுபடுத்துகிறது, மறு புறம் மாறா-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் மாறும்-மூல தனத்தைக் குறையச் செய்து இலாப வீதம் குறைந்து செல்வதையும் விரைவுபடுத்துகிறது. இதே வழியில் அயல் வர்த்தகத்தின் பெருக்க மானது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு அதன் இளம் பிராயத்தில் அடிப்படையாய் அமைந்த போதிலும், அப்பொருளுற் பத்தி முறை மேலும் முன்னேறிச் செல்கையில் அதன் விளைபயனே ஆகி விடுகிறது. இந்தப் பொருளுற்பத்தி முறையின் உள்ளார்ந்த அவசியத்தால், அதாவது தொடர்ந்து மென்மேலும் விரிவாகிச் செல்லும் சந்தை அதற்குத் தேவைப்படுவதால் இந்நிலை ஏற்படு கிறது. இந்த விளைவின் இரட்டைத் தன்மையையே மீண்டும் இங்கே பார்க்கிறோம். (அயல் வர்த்தகத்தின் இந்த அமிசத்தை ரிக்கார்டோ அறவே பார்க்கத் தவறி விடுகிறார்.*)

இன்னொரு கேள்வி எழுகிறது — தனித் தன்மை வாய்ந்ததாகை யால் மெய்யாகவே நமது ஆய்வெல்லைக்கு அப்பாற்பட்டதாகிய அந்தக் கேள்வி இதுதான்: அயல் வர்த்தகத்திலும், அதிலும் குறிப் பாக குடியேற்ற நாட்டு வர்த்தகத்திலும் முதலீடாகிற மூலதனத்தால் அடையப் பெறும் உயர்ந்த இலாப வீதம் பொது இலாப வீதத்தை உயரச் செய்கிறதா?

அயல் வர்த்தகத்தில் முதலீடாகும் மூலதனங்கள் உயர்ந்த இலாப வீதம் கிடைக்கச் செய்யலாம். ஏனென்றால் முதலாவதாக, மட்டரக உற்பத்தி வசதிகளைப் பெற்றுள்ள ஏனைய நாடுகளில் உற்பத்தி யாகும் சரக்குகளோடு போட்டி ஏற்படுகிறது. அதிகமாய் முன் னேறிய நாடு அதன் பண்டங்களை (போட்டியிடும் நாடுகளைக்

---

* டே. ரிக்கார்டோ, அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் மற்றும் வரி விதிப்பு குறித்து, மூன்றாம் பதிப்பு, லண்டன் 1821, அத்தியாயம் VII. — ஆங்கிலப் பதிப் பாசிரியர்.

காட்டிலும் மலிவாகவே என்றாலும்) அவற்றின் மதிப்புக்கு மேல் அதிக விலைக்கு விற்கிறது. முன்னேறிய நாட்டின் உழைப்பு இங்கே உயர்தர ஒப்பு எடை உள்ள உழைப்பாக ஈடேற்றம் பெறுவதால், இலாப வீதம் உயருகிறது. அதாவது உயர்தர உழைப்பாக ஊதியம் பெறவில்லை என்றாலும் அத்தகைய உழைப்பாய் விற்கப்படுவதால் இலாப வீதம் உயருகிறது. சரக்குகளை இறக்குமதி செய்யும் நாட்டுக்கும் ஏற்றுமதி செய்யும் நாட்டுக்குமான உறவிலும் இதுவே நிகழலாம்; அதாவது, ஏற்றுமதி செய்யும் நாடு பண்ட வடிவில் தருகிற பொருள்வடிவாக்கப்பட்ட உழைப்பு அது பெறுவதைக் காட்டிலும் கூடுதலாய் இருக்கலாம். இருப்பினும் இவ்வழியில் அது சரக்குகளை அவற்றின் உற்பதற்திக்கு ஆகக் கூடிய செலவைக் காட்டிலும் குறைந்த விலைக்குப் பெறலாம். புதிய கண்டுபிடிப்பை அது பரவலாய்ப் பயன்படலாவதற்குள் பயன்படுத்திக் கொள்கிற ஆலையதிபர் அவரது சரக்கை அவருக்குப் போட்டியாளர்களை விடக் குறைந்த விலைக்கே விற்கிறார் என்றாலும், அதன் தனிப் பட்ட மதிப்புக்கும் கூடுதலான விலைக்கு விற்கிறார் அல்லவா, அதாவது அவர் தம்மால் ஈடுபடுத்தப்படும் உழைப்பின் உயர்ந்த ஒப்பு உற்பத்தித் திறனை உபரி-உழைப்பாக ஈடேற்றம் செய்து உபரி-இலாபம் பெறுகிறார் அல்லவா, அதே போலத்தான் இதுவும். மறு புறம், குடியேற்ற நாடுகளிலும் இன்ன பிற இடங்களிலும் முதலீடாகிற மூலதனங்களைப் பொறுத்த வரை, இவற்றிலிருந்து உயர்ந்த இலாப வீதங்கள் வரப் பெறலாம்; அங்கே வளர்ச்சி நிலை பிற்பட்டிருப்பதால் இலாப வீதம் உயர்ந்திருப்பதும், அடிமைகள், கூலிகள் முதலானோர் பயன்படுத்தப்டுவதால் உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமையும் கூட அதே போல் உயர்ந்திருப்பதும்தான் காரணம். குறிப்பிட்ட சில தொழிற் கிளைகளில் முதலீடாகிற மூலதனங்களால் அடையப் பெற்று தாய்நாட்டுக்கு அனுப்பப் பெறும் இந்த உயர்வீத இலாபங்கள் பொது இலாப வீதத்தின் சமனமாக்கத்தில் பங்கு பெறலாமே, இவ்விதம் அந்த அளவுக்குப் பொது இலாப வீதம் உயர்ந்து செல்லும் போக்கைத் தோற்றுவிக்க லாமே என்ற கேள்வி எழலாம். ஏகபோகங்கள் குறுக்கிட்டு வழி மறித்திடா விட்டால் இப்படி நடைபெறலாம்.[36] இந்த முதலீட்டுத் துறைகள் தடையிலாப் போட்டியின் விதிகளுக்கு உட்பட்டவை யாதலால், ஏகபோகங்கள் அவ்வளவாய்க் குறுக்கிடக் காரணம்

---

[36] இது தொடர்பாய் ஆதாம் ஸ்மித் கொண்டிருந்த பார்வையே சரி. மாறாக, ரிக்கார்டோ கருத்து பிழையானது. அவர் கூறியதாவது: ''இலாபங்கள் பொதுவாக உயருவதால் இலாபங்களில் சமத்துவம் வந்து விடும் என்கிறார்கள்; சலுகை பெற்ற வர்த்தகத்திலிருந்து வரப்பெறும் இலாபங்கள் பொதுவான இலாப மட்டத்திற்கு விரைந்து இணங்கி விடும் என்பதே என் கருத்து.'' (நூல்கள், பதிப்பாசிரியர்: மக்குல்லோஹ், பக்கம் 73.)

இல்லை. ரிக்கார்டோ கட்டும் மனக்கோட்டை பிரதானமாய் இது தான்: அயல் நாடுகளில் உயர்ந்த விலைகளாய் வரப் பெறுவதைக் கொண்டு, பதிலுக்கு அங்கேயே சரக்குகள் வாங்கித் தாயநாட்டுக்கு அனுப்புகிறார்களாம். இந்தச் சரக்குகள் இவ்விதம் உள்நாட்டுச் சந்தையில் விற்கப்படுவதால், எப்படிப் பார்த்தாலும், ஏனைய உற்பத்திக் கிளைகளோடு ஒப்பிடுகையில் அனுகூலமான இந்தக் கிளைகளுக்கு இருக்கும் அதிகப்படியான பாதக நிலை தற்காலிக மாக ஏற்படலாமே தவிர நீடிக்க முடியாது. பண வடிவம் களையப் பட்டவுடனே இந்த மாயை விலகி விடுகிறது. அனுகூலமடையும் நாடு பரிவர்த்தனையில் குறைந்த உழைப்பைக் கொடுத்து கூடுத லான உழைப்பைப் பெறுகிறது; உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான எந்தப் பரிவர்த்தனையிலும் போலவே இந்தப் பரிவர்த்தனையிலும் இவ்வேறுபாடு, இம்மிகை குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் பைக்குப் போய்ச் சேருகிறது. குடியேற்ற நாட்டில் இயற்கை நிலைமைகள் சாதகமாய் இருக்கும் வரை இலாப வீதம் பொதுவாய் அதிகமாகவே இருக்கும் என்றாலும், அதே போது அங்கு சரக்குகளின் விலைகள் குறைவாகவே இருக்கும். இதனால் ஒன்றுக்கொன்று சரி செய்து கொண்டு யாவும் சமனமாகின்றன. ஆனால் ரிக்கார்டோ நினைப்பது போல் பழைய மட்டத்திற்குச் சமனமாவதில்லை.

உள்நாட்டில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் வளர்ச்சிக்கு — மாறா-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் மாறும்-மூல தனம் குறைந்து செல்வதைக் குறிப்பதாகிய இவ்வளர்ச்சிக்கு — வழி செய்கிற அதே அயல் வர்த்தகம் மறு புறம் வெளிநாட்டுச் சந்தை களைப் பொறுத்த வரை மிகையுற்பத்திக்குக் காரணமாகிறது; நாளா வட்டத்தில் மீண்டும் எதிர் வளைவு ஏற்படுகிறது.

ஆக, பொது இலாப வீதம் குறைந்து செல்லும் போக்கைத் தோற்றுவிக்கும் அதே காரணிகள்தான் இதற்கு எதிரான விளைவு களையும் ஏற்படுத்தி, இந்தக் குறைவுப் போக்கைத் தடுக்கவும் மட்டுப்படுத்தவும் ஓரளவுக்குக் குலைத்திடவும் செய்கின்றன என்பது தெரிய வருகிறது. இந்த எதிர் விளைவுகள் இந்த விதியின் பலனை மட்டுப்படுத்துகின்றனவே தவிர விதியை ஒழித்திடவில்லை. இப்படி இவை மட்டுப்படுத்தா விடில், பொது இலாப வீதத்தின் குறைவுப் போக்கு ஒப்பளவில் ஏன் இந்த மந்த கதியில் நிகழ்கிறது என்பது புரிந்து கொள்ள முடியாததாய் இருக்குமே தவிர, இலாப வீதத்தின் குறைவுப் போக்கு அவ்வளவாய்ப் புரிந்து கொள்ள முடியாததாய் இருக்காது. ஆக, இந்த விதி ஒரு போக்காக மட்டுமே செயல படுகிறது. குறிப்பிட்ட சில நிலைமைகளில்தான், நீண்ட நெடுங் காலங்கள் கழிந்த பிறகுதான் இவ்விதியின் விளைவுகள் எடுப் பாய்ப் புலப்படக் காண்கிறோம்.

மேலே பார்ப்பதற்கு முன்னால், தவறாகப் புரிந்து கொள்ளும்

நிலைகளைத் தவிர்க்கும் பொருட்டு, திரும்பத் திரும்ப பரிசீலித்த இரு விவரங்களை நினைவு கூர்வோம்.

*முதலாவதாக:* முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையி ; வளர்ச்சிப் போக்கில் சரக்குகளை விலைமலிவாகச் செய்யும் அ த நிகழ்முறை சரக்கு உற்பத்தியில் முதலீடாகும் சமுதாய மூலதனத்த ன் அங்கக இயைபிலும் மாற்றம் உண்டாகச் செய்கிறது. எனவே இலாப வீதத்தைக் குறையச் செய்கிறது. அதாவது நாம் ஒன்றில் கவனமாய் இருக்க வேண்டும்; தனியொரு சரக்கின் ஒப்பீட்டுச் செலவு — இச்செலவில் இயந்திர சாதனத்தின் தேய்மானத்தைக் குறிக்கும் பகுதி உட்பட — குறைவதையும் மாறும்-மூலதனத்தோடு ஒப்பிடுகையில் மாறா-மூலதனத்தின் மதிப்பு உயருவதையும் ஒன் றெனக் கருதி விடக் கூடாது. இதற்கு மாறாக, மாறா-மூலதனத்தின் பொருட் கூறுகளது பரிமாணம் மாறாதிருப்பதாகவோ அதிகரிப் பதாகவோ கொள்வோமானால், மாறா-மூலதனத்திற்காகும் ஒப் பீட்டுச் செலவில் ஏற்படும் ஒவ்வொரு குறைப்பும் இலாப வீதம் உயர்ந்து செல்லும் போக்கை, அதாவது அந்த அளவுக்கு (ஈடு படுத்தப்படும் மாறும்-மூலதனத்தின் குறைந்து செல்லும் விகித அளவுகளுடன் ஒப்பிடுகையில்) மாறா-மூலதனத்தின் மதிப்பு குறைந்து செல்லும் போக்கைத் தோற்றுவிக்கிறது.

*இரண்டாவதாக:* புதிதாய்ச் சேர்க்கப்பட்டு தனிப்பட்ட சரக்கு களில் - இவற்றின் ஒட்டு மொத்தமே மூலதனத்தின் உற்பத்தி ஆகிறது - அடங்கியுள்ள உயிருள்ள உழைப்பானது அச்சரக்குகளில் அடங்கியுள்ள மூலப் பொருட்களோடும் அச்சரக்குகளால் நுகரப் பட்ட உழைப்புச் சாதனங்களோடும் ஒப்பிடுகையில்குறைந்து செல் கிறது; ஆகவே புதிதாய்ச் சேர்க்கப்பட்டு அவற்றில் பொருள்வடி வாக்கப்படும் உயிருள்ள உழைப்பின் அளவு தொடர்ந்து மென் மேலும் குறைந்து செல்கிறது. ஏனென்றால் சமுதாய உற்பத்தித் திறன் வளர்ந்து செல்லும் போது இச்சரக்குகளின் உற்பத்திக்குத் தேவையான உழைப்பளவு குறைந்து செல்கிறது. ஆனால் இதெல் லாம் சரக்குகளில் அடங்கியுள்ள உயிருள்ள உழைப்பு ஊதிய உழைப்பாகவும் ஊதியமிலா அழைப்பாகவும் வேறுபட்டுப் பிரியும் விகிதத்தைப் பாதிப்பதில்லை. உண்மையில் இதற்கு நேர்மாறாகவே நடைபெறுகிறது. புதிதாய்ச் சேர்க்கப்பட்டு சரக்குகளில் அடங்கி யுள்ள உயிருள்ள உழைப்பின் மொத்த அளவு குறைந்த போதிலும், ஊதிய உழைப்புப் பகுதியாடு ஒப்பிடுகையில் ஊதியமிலாப் பகுதி அதிகரிக்கிறது. ஊதியப் பகுதி அறுதியாகவோ ஒப்பளவிலோ சுருங்குவதன் மூலம் இது நடைபெறுகிறது; பொருளுற்பத்தி முறை யானது ஒரு சரக்கில் சேர்க்கப்படும் உயிருள்ள உழைப்பின் மொத்த அளவினைக் குறையச் செய்யும் போதே, அறுதி அல்லது ஒப்பீட்டு உபரி-மதிப்பு உயர்ந்து செல்கிறது. இலாப வீதம் குறைந்து செல்லும் போக்கானது உபரி-மதிப்பு வீதம் உயர்ந்து செல்லும் போக்கோடு,

எனவே உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமை உயர்ந்து செல்லும் போக்கோடு பிணைப்புண்டு இருக்கிறது. ஆகவே இலாப வீதம் குறைவதற்கு கூலி வீதம் உயருவதைக் காரணமாய்க் காட்டி விளக்கம் அளிப்பதை விட அபத்தம் வேறில்லை. விதிவிலக்காக இப்படியும் நிகழ்வதுண்டு என்பது மெய்தான். இலாப வீதத்திற்கு உருக்கொடுக்கும் நிலைமைகள் முழுமையாகப் புரிந்து கொள்ளப்படும் வரை, புள்ளி விவர இயலால் வெவ்வேறு சகாப்தங்களிலும் நாடுகளிலுமான கூலி வீதங்களை உள்ளபடியே பகுத்தாராய முடியாது. இலாப வீதம் குறைவதற்குக் காரணம் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகமாவதுதானே தவிர, குறைந்து போவது அல்ல. உபரி-மதிப்பு வீதம் உயருவதும் சரி, இலாப வீதம் குறைவதும் சரி, இரண்டுமே முதலாளித்துவத்தில் உழைப்பின் வளரும் உற்பத்தித் திறனை வெளிப்படுத்தும் பிரத்தியேக வடிவங்கள்தாம்.

## VI. வட்டி-மூலதனம் அதிகமாதல்

மேற்சொன்ன ஐந்து காரணிகளோடு பின்வருவதையும் சேர்த்துக் கொள்களலாம்; ஆனால் இப்போதைக்கு இதனை விவரமாகப் பரிசீலிப்பதற்கில்லை. முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து (இந்த முன்னேற்றம் மூலதனத் திரட்டல் அதிவேகமடைவதோடு சேர்ந்து நடைபெறுகிறது), மூலதனத்தில் ஒரு பகுதி கணக்கிடப்பட்டு, வட்டி-மூலதனமாக மட்டும் ஈடுபடுத்தப்படுகிறது. தொழில் துறை முதலாளி முதலீடு செய்பவருக்குரிய இலாபம் ஈட்டி வருகையில், மூலதனத்தைக் கடனாகத் தருகிற ஒவ்வொரு முதலாளியும் வெறும் வட்டியோடு திருப்தியடைவதாக இதற்கு அர்த்தமில்லை. வட்டிக்கும் பொது இலாப வீதத்தின் அளவுமட்டத்திற்கும் சம்பந்தமில்லை. ஏனென்றால் பொது இலாப வீதத்தைப் பொறுத்த வரை, இலாபம் = வட்டி + எல்லா வகையிலுமான இலாபம் + நில-வாடகை. பொது இலாப வீதத்தின் அளவு மட்டம் மாறாதவரை, இலாபத்தின் தனித்தனியான இந்த வகைப் பிரிவினை எப்படி அமைந்தாலும் ஒன்றுதான். மூலதனங்கள் பெரும் பெரும் தொழில் முனைவுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அடக்கச் செலவுகள் யாவும் கழிக்கப்பட்ட பின் எஞ்சுகிற ஆதாயப் பங்கீடுகள் எனப்படும் பெரிதும் சிறிதுமான வட்டித் தொகைகளே இவற்றுக்குக் கிடைக்கின்றன என்பதுதான் இதன் அர்த்தம். இரயில் போக்குவரத்துத் தொழிலை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம். சமனம் செய்யப்பட்டு பொது இலாப வீதம் உருவாவதில் இந்தத் தொகைகள் பங்கு கொள்வதில்லை. ஏனெனில் இவை சராசரி இலாப வீதத்தைக் காட்டிலும் குறைவான ஆதாயமே அளிக்கின்றன. சமனம் செய்வதில் இவையும் பங்கு கொள்ளுமாயின், பொது இலாப வீதம் இன்னும் அதிகமாய்ப்

வீழ்ந்து விடும். தத்துவார்த்தத்தில் இவையும் கணக்கீட்டில் சேர்க்கப் படலாம் என்றாலும், முதலாளிகளுக்குத் தீர்மானகரமானதாய் நடப்பில் நிலவுகிற வீதத்தை விடவும் குறைவான இலாப வீதமே இப்படிச் சேர்ப்பதன் விளைவாய் இருக்கும். ஏனென்றால் குறிப் பாக இந்தத் தொழில் முனைவுகளில் மாறும்-மூலதனத்தோடு ஒப்பிடுகையில் மாறா-மூலதனம் மிகப் பெரிது.

## அத்தியாயம் XV

## விதியின் உள்முரண்பாடுகள் பற்றிய விளக்கம்

### I. பொது

இலாப வீதம் உபரி-மதிப்பு வீதத்தைத் தெரிவிக்கும் போதெல்லாம் உள்ளபடியான உபரி-மதிப்பு வீதத்தை விடக் குறைவாகவே தெரிவிக்கிறது என்று இந்தப் புத்தகத்தின் முதல் பகுதியில் பார்த்தோம். உயர்ந்து செல்லும் உபரி-மதிப்பு வீதமும் கூட குறைந்து செல்லும் இலாப வீதத்தில் தெரிவிக்கப் பெறும் போக்குடையதாய் இருப்பதாக சற்று முன்னர்தான் பார்த்தோம். $c = 0$ என்று இருந்தால் மட்டுமே, அதாவது மொத்த மூலதனமும் கூலியாகவே தரப்பட்டால் மட்டுமே இலாப வீதம் உபரி-மதிப்பு வீதத்திற்குச் சமமாகும். மாறா-மூலதனத்தின் மதிப்புக்கும் அதனை இயங்க வைக்கும் உழைப்புச் சக்தியின் அளவுக்குமான விகிதம் மாறாமல் இருந்தால்தான், அல்லது மாறா-மூலதனத்தின் மதிப்புடன் ஒப்பிடுகையில் உழைப்புச் சக்தியின் அளவு அதிகரித்தால்தான் குறைந்து செல்லும் இலாப வீதம் குறைந்து செல்லும் உபரி-மதிப்பு வீதத்தைத் தெரிவிப்பதாய் இருக்கும்.

ரிக்கார்டோ இலாப வீதத்தைப் பகுத்தாராய்வதாகச் சொல்லி, உண்மையில் உபரி-மதிப்பு வீதத்தையே பகுத்தாராய்கிறார். இதையும் வேலை-நாளை மும்முரத்திலும் அளவிலும் மாறாப்பருமனாக அனுமானித்துக் கொண்டுதான் செய்கிறார்.

இலாப வீதம் குறைந்து செல்வதும் மூலதனத் திரட்டல் அதிவேகமாவதும் உற்பத்தித் திறனிலான வளர்ச்சியைப் பிரதிபலிக் கிற அளவில் மட்டுமே ஒரே நிகழ்முறையின் இருவேறு தெரிவிப்புகளாய் இருக்கின்றன. மூலதனத் திரட்டலானது உழைப்பு பெரு வீதத்தில் குவிக்கப்படுவதையும், எனவே உயர்ந்த மூலதன இயைபையும் குறிக்கிற அளவில், லாப வீதம் குறைவதைத் துரிதமாக்குகிறது. மறு புறம், இலாப வீதம் குறைவதானது மூலதனக் குவிப்பையும் மூலதன மையப்பாட்டையும் [centralisation] துரிதமாக்குகிறது; சிறு முதலாளிகளை — இன்னமும் பறிக்கப்படுவதற்கு உடைமை ஏதும்

மிச்சம் வைத்திருக்கும் அந்த ஒரு சில நேரடி உற்பத்தியாளர்களை — உடைமைப் பறிப்புக்கு [expropriation] ஆளாக்குவதன் மூலம் இப்படிச் செய்கிறது. இலாப வீதம் குறைந்து செல்லும் போது மூல தனத் திரட்டல் வீதமும் குறைந்து செல்கிறது என்றாலும், அளவைப் பொறுத்த வரை மூலதனத் திரட்டல் முடுக்கி விடப்படுகிறது.

மறு புறம், மொத்த மூலதனத்தின் தற்பெருக்க வீதமே, அதாவது இலாப வீதமே முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் தூண்டுகோலாய் இருப்பதால் (மூலதனத் தற்பெருக்கமே இப்பொருளுற்பத்தியின் ஒரே நோக்கம்), இலாப வீதம் குறைந்து செல்வது சுயேச்சையான புதிய மூலதனங்கள் உருவாவதை மட்டுப்படுத்துகிறது; எனவே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் வளர்ச்சிக்கு ஓர் அச்சுறுத்தலாகத் தோன்றுகிறது. அது மிகையுற்பத்தியையும் ஊக வாணிபத்தையும் நெருக்கடிகளையும் உபரி-மக்கள் தொகையோடு கூடவே உபரி-மூலதனத்தையும் விளைவித்திடுகிறது. ஆகவே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை அறுதியான ஒன்றாகக் கருதும் பொருளாதார அறிஞர்கள் — ரிக்கார்டோ போன்றவர்கள் — இந்தக் கட்டத்தில் அது ஒரு தடையை ஏற்படுத்துவதாக நினைக்கிறார்கள்; எனவேதான் இத்தடைக்கு உற்பத்தியைக் காரணமாக்காமல் (வாடகைத் தத்துவத்தில்) இயற்கையைக் காரணமாக்குகிறார்கள். ஆனால் இலாப வீதம் குறைந்து செல்வது குறித்து அவர்கள் மிரட்சி கொள்வதில் முக்கியமாய் கவனிக்க வேண்டியது என்னவென்றால், முதலாளித்துவப் பொருளுற்பத்தி அதன் உற்பத்திச் சக்திகளது வளர்ச்சியின் போது செல்வ உற்பத்தியோடு தொடர்பில்லாத ஒரு தடையை வந்தடைகிறதே என்பதுதான். தனி விசேஷமான இந்தத் தடை முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் வரம்புகளுக்கும், அது ஒரு வரலாற்றுக் கட்டத்துக்குரியதே, மறையக் கூடியதே என்பதற்கும் சான்றாகிறது; செல்வ உற்பத்திக்கு அது அறுதியான முறையன்று, மேலும் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் செல்வ உற்ப்த்தி தொடர்ந்து வளருவதற்கு அது முரணாகி மோதுகிறது.

மெய்தான், ரிக்கார்டோவும் அவரது மரபினரும் வட்டி உள்ளிட்ட தொழில் துறை இலாபத்தை [industrial profit] மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டார்கள். ஆனால் நில-வாடகை வீதமும் [rate of ground-rent] கூட குறைந்து செல்லும் போக்குடையதுதான். நில-வாடகையின் அறுதித் திரள் அதிகரித்தாலும், தொழில் துறை இலாபத்தை விடவும் கூடுதலான விகிதத்தில் அது அதிகரிக்கக் கூடும் என்றாலும், நில-வாடகை வீதம் குறைந்து செல்லும் போக்குடையதாகவே இருக்கிறது. (பார்க்கவும்: எட்வர்டு வெஸ்ட்;*

* [எ. வெஸ்ட்] நிலத்துக்கு மூலதனத்தைப் பிரயோகிப்பது பற்றிய கட்டுரை, லண்டன், 1815. — ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

இவர்தான் ரிக்கார்டோவுக்கு முன்பே நில-வாடகை விதியை வகுத்தளித்தவர்.) மொத்தச் சமுதாய மூலதனம் C என்றும், வட்டியையும் நில-வாடகையையும் கழித்த பின் கழித்த பின் எஞ்சுகிற தொழில் துறை இலாபம் $p_1$ என்றும், வட்டி i என்றும், நில-வாடகை r என்றும் வைத்துக் கொள்வோமானால், $\frac{s}{C} = \frac{p}{C} = \frac{p_1 + i + r}{C} = \frac{p_1}{C} + \frac{i}{C} + \frac{r}{C}$. உபரி-மதிப்பின் மொத்த அளவு s ஆனது முதலாளித்துவம் வளர்ந்து செல்கையில் ஓயாமல் அதிகரித்துச் செல்கிறது என்னும் அதே போது, C ஆனது sஐக் காட்டிலும் துரிதமாய் வளர்ந்து செல்வதால், $\frac{s}{C}$ ஓயாமல் குறைந்து செல்வதாகப் பார்த்தோம். ஆகவே $\frac{s}{C} = \frac{p}{C}$ என்றிருக்கும் போதே $p_1$, i, r ஒவ்வொன்றும் தனித்தனியே ஓயாமல் அதிகரித்துச் செல்வது எவ்விதத்தும் முரண்பாடாகாது; $\frac{p_1}{C}$, $\frac{i}{C}$, $\frac{r}{C}$ ஒவ்வொன்றும் தனித்தனியே ஓயாமல் குறைந்து செல்வதும் கூட முரண்பாடாகாது. i உடன் ஒப்பிடுகையில் $p_1$ அதிகரிப்பது, அல்லது $p_1$ உடன் ஒப்பிடுகையில் r அதிகரிப்பது, அல்லது$p_1$ உடனும் i உடனும் ஒப்பிடுகையில் r அதிகரிப்பது—இதெல்லாம் கூட முரண்பாடாகாது. மொத்த உபரி-மதிப்பு அல்லது இலாபம் s = p உயர்ந்து செல்லும் நிலையிலும் அதே போது $\frac{s}{C} = \frac{p}{C}$ குறைந்து செல்லும் நிலையிலும், s = p என்பதன் பகுதிகளான $p_1$, i, r ஆகியவற்றின் விகித உறவுகள் sஇன் மொத்த அளவினால் விதிக்கப்படும் வரம்புகளுக்குள் எப்படி வேண்டுமானாலும் மாறலாம்; s அல்லது $\frac{s}{C}$இன் பருமனைப் பாதிக்காமலே மாறலாம்.

$p_1$, i, r இவை ஒவ்வொன்றுக்கும் இடையிலான மாறுபாடானது வெவ்வேறு வர்க்கங்களிடையே sஇன் வினியோகப் பரவலிலான மாறுபாடே தவிர வேறல்ல. ஆகவே, பொது இலாப வீதம் $\frac{s}{C}$ குறையும் போதே $\frac{p_1}{C}$, $\frac{i}{C}$, $\frac{r}{C}$, அதாவது தனிப்பட்ட தொழில் துறை இலாப வீதம், வட்டி வீதம், நில-வாடகைக்கும் மொத்த மூலதனத்துக்குமான விகிதம் ஆகியவை ஒன்றுக்கொன்று ஒப்பளவில் உயரலாம். ஒரே நிபந்தனை, இந்த மூன்றையும் சேர்த்தால் $\frac{s}{C}$க்கு சமமாய் இருக்க வேண்டும் என்பதே. குறிப்பிட்ட மூலதனத்தின் உபரி-மதிப்பு வீதம் = 100% என்றும், அதன் இயைபு $50_c + 50_c$ என்பதமிலிருந்து $75_c + 25_v$ஆக மாறி விடுவதால் இலாப வீதம் 50%இலிருந்து 25% ஆகக் குறைகிறது என்றும் வைத்துக் கொள்வோம். 1000 மூலதனமானது முதல் நேர்வில் 500 இலாபம் பெறும்; 4000 மூலதனமானது இரண்டாம் நேர்வில்

1000 இலாபம் பெறும். $p_1$ அரைப் பங்கு குறைந்திருக்கும் போதே s அல்லது p இரு மடங்காய் அதிகரித்திருக்கக் காண்கிறோம். அந்த 50% முன்னதாக இலாபம் 20, வட்டி 10, வாடகை 20 என்று பிரிக்கப்பட்ட போது, $\frac{p_1}{C} = 20\%$, $\frac{i}{C} = 10\%$, $\frac{r}{C} = 20\%$. 50% ஆனது 25% ஆக மாறிய பிறகும் இவற்றிடையிலான விகித உறவுகள் மாறாதிருக்குமானால், $\frac{p_1}{C} = 10\%$, $\frac{i}{C} = = 50\%$, $\frac{r}{C} = 10\%$. ஆனால், $\frac{p_1}{C}$ ஆனது 8% ஆகவும், $\frac{r}{C}$ ஆனது 4% ஆகவும் குறையுமானால், $\frac{r}{C}$ ஆனது 13% ஆக உயரும். p ஆனது மாறாமலிருக்கும் போதே rஇன் ஒப்பீட்டுப் பருமனானது $p_1$க்கும் iக்கும் மாறாக உயர்ந்திருக்கும். இரு அனுமானங்களிலுமே நான்கு மடங்கு கூடுதலான மூலதனத்தால் உற்பத்தி செய்யப் படுவது காரணமாய் $p_1$, c, r ஆகியவற்றின் கூட்டுத்தொகை அதிகரித்திருக்கும். மேலும், ஆரம்பத்தில் தொழில் துறை மூலதனமானது (வட்டி உள்ளிட்டது) உபரி-மதிப்பு முழுவதையும் தன்னகத்தே கொண்டிருப்பதாக ரிக்கார்டோ செய்து கொள்ளும் அனுமானம் வரலாற்று வழியிலும் தர்க்க வழியிலும் தவறாகும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் முன்னேற்றம்தான் (1) இலாபம் முழுவதையும் நேரடியாகத் தொழில் துறை முதலாளிகளிடமும் வர்த்தகத் துறை முதலாளிகளிடமும் கொடுத்து மேலும் வினியோகமாகச் செய்கிறது; (2) வாடகையை இலாபத்தின் மீதான மிகையாகத் தாழ்த்துகிறது. இந்த முதலாளித்துவ அடிப்படையின் மீதுதான் வாடகையும் வளர்ந்து செல்கிறது: வாடகையானது இலாபத்தின் (அதாவது மொத்த மூலதனத்தின் உற்பத்தியாகக் கருதப்படும் உபரி-மதிப்பின்) பகுதியே தவிர, உற்பத்திப் பொருளில் முதலாளி வசப்படுத்திக் கொள்ளும் அந்தப் பிரத்தியேகப் பகுதி யல்ல.

அவசியமான உற்பத்திச் சாதனங்கள் இருப்பதாக, அதாவது போதுமான அளவு மூலதனம் திரட்டப்பட்டு இருப்பதாகக் கொள்வோமானால், உபரி-மதிப்பு வீதம், அதாவது சுரண்டல்-கடுமை குறிப்பிட்டதாய் இருக்க, உபரி-மதிப்பின் உற்பத்திக்கு உழைக்கும் மக்கள்தொகை மட்டுமே வரம்பாகிறது; உழைக்கும் மக்கள்தொகை குறிப்பிட்டதாய் இருக்க, சுரண்டல்-கடுமை மட்டுமே வரம்பாகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் சாரமாய் இருப்பது உபரி-மதிப்பின் உற்பத்தியே. உபரி-மதிப்பைக் குறிப்பதே உபரி-உற்பத்தி, அதாவது உற்பத்தியான சரக்குகளில் ஊதியமிலா உழைப்பின் பொருள்வடிவாய் அமையும் ஈவுப் பகுதி. இந்த உபரி-மதிப்பின் உற்பத்திதான் — உபரி-மதிப்பில் ஒரு பகுதியைத் திரும்பவும் மூலதனமாக மாற்றுவது, அதாவது மூலதனத் திரட்டல் என்பது உபரி-மதிப்பின் இந்த உற்பத்தியில் பிரிக்க முடியாத அங்கம்

ஆகிறது — முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் நேரடி நோக்கமும் பிரதானக் குறியும் ஆகும். முதலாளித்துவப் பொருளுற்பத்தியை அது அல்லாத ஒன்றாக, அதாவது முதலாளிக்காக இன்ப நுகர்வையே அல்லது இன்ப நுகர்வுச் சாதனங்களின் உற்பத்தியையே நேரடி நோக்கமாய்க் கொண்ட ஒன்றாக சித்திரிக்கலாகாது. இப்படிச் சித்திரிப்பது இந்தப் பொருளுற்பத்திக்கு உரிய தனித் தன்மையை, அதன் உட்பொருள் அனைத்திலும் வெளிப்படும் இத் தன்மயைக் காணத் தவறுவதாகவே இருக்கும்.

இந்த உபரி-மதிப்பின் உற்பத்தியே நேரடிப் பொருளுற்பத்தி நிகழ்முறை ஆகிறது. மேலே குறிப்பிட்டவை தவிர இந்த உற்பத்திக்கு வேறு வரம்புகள் இல்லையென்றோம். கறக்க முடிந்த உபரி-உழைப்பனைத்தும் சரக்குகளில் உருக்கொண்டு விடும் போது உபரி-மதிப்பு உற்பத்தியாகி விடுகிறது. ஆனால் உபரி-மதிப்பின் இந்த உற்பத்தி முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் முதல் அங்கத்தைத்தான், நேரடிப் பொருளுற்பத்தி நிகழ்முறையைத் தான் நிறைவு பெறச் செய்கிறது. மூலதனம் குறிப்பிட்ட அளவு ஊதியமிலா உழைப்பை உறிஞ்சி விட்டது. இந்நிகழ்முறையின் வளர்ச்சி இலாப வீதத்தின் வீழ்ச்சியாக வெளிப்படுகிறது; இவ்விதம் உற்பத்தியாகும் உபரி-மதிப்புத் திரள் பெருகி மிகப்பெரும் பரிமாணங்களை அடைகிறது. அடுத்து வருவது நிகழ்முறையின் இரண்டாம் அங்கம். சரக்குகளின் முழுத்திரள், அதாவது மாறா-மூலதனத்தையும் மாறும்-மூலதனத்தையும் மாற்றீடு செய்கிற பகுதியும் உபரி-மதிப்பைக் குறிக்கிற பகுதியும் அடங்கிய மொத்த உற்பத்திப் பொருள் விற்கப்பட்டாக வேண்டும். விற்கப்படா விட்டால், அல்லது பகுதியளவு மட்டுமே விற்கப்பட்டால், அல்லது உற்பத்தி-விலைகளை விடக் கீழான விலைகளுக்கே விற்கப்பட்டால், தொழிலாளி சுரண்டப்பட்டுள்ள போதிலும் அந்தச் சுரண்டல் அப்படியே முதலாளிக்கு ஈடேற்றமாகவில்லை என்று பொருள்; தொழிலாளியிடமிருந்து பிழிந்தெடுத்த உபரி-மதிப்பை ஈடேற்றம் செய்வதில் இதனால் முழு அளவுக்கோ ஓரளவுக்கோ தோல்வி ஏற்படலாம், முழு அளவுக்கோ ஓரளவுக்கோ மூலதனத்தையே இழக்கவும் கூட நேரிடலாம். நேரடிச் சுரண்டல் நிலைமைகளும் அச்சுரண்டலை ஈடேற்றம் செய்யும் நிலைமைகளும் முழுதொத்தவை அல்ல. இவை இடத்தாலும் காலத்தாலும் வேறுபடுகிறவை மட்டுமல்ல, தர்க்க வழியிலும் வேறுபடுகிறவை. முன்சொன்ன நிலைமைகளுக்கு சமுதாயத்தின் உற்பத்தித் திறன் மட்டுமே வரம்பிடுகிறது; பின்சொன்ன நிலைமைகளுக்கு பல்வேறு உற்பத்திக் கிளைகளுக்குமிடையிலான விகித உறவும் சமுதாயத்தின் நுகர்வுத் திறனும் [consumer power] வரம்பிடுகின்றன. ஆனால் இந்த நுகர்வுத் திறனானது அறுதி உற்பத்தித் திறனாலோ அறுதி நுகர்வுத் திறனாலோ நிர்ணயிக்கப் படுவதல்ல, பகைத் தன்மை வாய்ந்த வினியோக நிலைமைகளின்

அடிப்படையிலான நுகர்வுத் திறனாலேயே நிர்ணயிக்கப்படுவதாகும்; பகைத்தன்மை வாய்ந்த இந்நிலைமைகள் சமுதாயத்தில் பெரும்பகுதியானவர்களின் நுகர்வைக் குறைந்தபட்ச அளவாக சுருங்கச் செய்கின்றன; இந்தக் குறைந்தபட்சமானது குறுகிய வரம்புகளுக்குள் மாறக் கூடியது. மூலதனம் திரட்டுகிற போக்கு, மூலதனம் பெருகச் செய்து விரிதிற வீதத்தில் உபரி-மதிப்பு உற்பத்தி செய்வதற்கான முயற்சி நுகர்வுத் திறனை கட்டுப்படுத்தும் மற்றுமொரு காரணி ஆகிறது. இது முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கான விதி—உற்பத்தியின் வழிமுறைகளிலேயே ஏற்படும் ஓயாத புரட்சிகளால் விதிக்கப்படுவது; தற்போதுள்ள மூலதனத்தில் எப்போதுமே இப்புரட்சிகள் ஏற்படுத்தும் மதிப்பிறக்கத்தால் விதிக்கப்படுவது; பொதுவான போட்டாப் போட்டியாலும், உற்பத்தியை மேம்படுத்தவும் அதன் அளவுவீதத்தை விரிவாக்கவும் வேண்டிய தேவையாலும் விதிக்கப்படுவது (தன்னைத்தான் பாதுகாத்துக் கொள்வதற்கும், அழிந்து நாசமாகி விடும் ஆபத்தைத் தவிர்ப்பதற்கும் கூட இந்த மேம்படுத்தலும் விரிவாக்கமும் அவசியமாகின்றன). ஆகவே சந்தையானது ஓயாமல் விரிவாக்கப்பட்டாக வேண்டும்; இவ்வழியில் சந்தையின் இடையுறவுகளும் அவற்றை ஆளும் நிலைமைகளும் உற்பத்தியாளரைச் சாராமல் இயங்கும் இயற்கை விதியாக மென்மேலும் வடிவெடுத்து மென்மேலும் கட்டுக்கடங்காதவை ஆகின்றன. இந்த உள்முரண்பாட்டைத் தீர்க்கும் முயற்சி புறத்தமைந்த உற்பத்திக் களத்தை விரிவாக்குவதன் மூலம் நடைபெறுகிறது. ஆனால் உற்பத்தித் திறன் எவ்வளவுக்கு எவ்வளவு வளருகிறதோ, நுகர்வு நிலைமைகள் சார்ந்துள்ள குறுகலான அடித்தளத்தோடு அவ்வளவுக்கு அவ்வளவு முரண்படலாகிறது. இந்தத் தன்முரண்பாட்டு அடிப்படையை ஏற்றுக் கொண்டால், மக்கள்தொகையிலான உபரி பெருகிச் செல்லும் போதே மூலதனம் மிகையாய் இருந்து வருவது சிறிதும் முரண்பாடு ஆகாது. எப்படியென்றால், இவை இரண்டும் சேர்ந்து உற்பத்தியாகிற உபரி-மதிப்புத் திரளை உண்மையில் கூடுதலாக்கவே செய்யும்; அதே போது இந்த உபரி-மதிப்பின் உற்பத்தி நிலைமைகளுக்கும் ஈடேற்ற நிலைமைகளுக்கும் இடையிலான முரண்பாடு தீவிரமாகும்.

இலாப வீதம் குறிப்பிட்டதாய் இருக்க, இலாபத் திரள் எப்போதுமே மூலதன முன்னீட்டின் பருமனைப் பொறுத்தது. ஆனால் இந்த இலாபத் திரளில் திரும்பவும் மூலதனமாக மாற்றப்படும் பகுதியாலேயே மூலதனத் திரட்டல் நிர்ணயிக்கப்படுகிறது. இந்தப் பகுதியானது முதலாளிகளால் நுகரப்படும் வருவாயை இலாபத்திலிருந்து கழித்து வருவதற்குச் சமம்; இது இந்த இலாபத் திரளின் மதிப்பை மட்டுமல்லாமல், அதைக் கொண்டு முதலாளி வாங்க முடிகிற சரக்குகள் விலை மலிவாய் அமைவதையும் பொறுத்ததாய் இருக்கும். இந்தச் சரக்குகள் ஓரளவுக்கு அவரது நுகர்வில், அவரது

வருவாயில் சேருகிறவையும், ஓரளவுக்கு அவரது மாறா-மூலதனத்தில் சேருகிறவையும் ஆகும். (கூலி இங்கே குறிப்பிட்டதாய்க் கொள்ளப்படுகிறது.)

தொழிலாளி தாம் இயங்க வைக்கிற மூலதனத் திரளின் மதிப்பைத் தமது உழைப்பைக் கொண்டு பாதுகாத்து உற்பத்திப் பொருளாக மறுவுற்பத்தி செய்கிறார். இப்படி அவர் இயங்க வைக்கும் மூலதனத் திரள் வேறு, அதனோடு அவர் சேர்க்கும் மதிப்பு வேறு. மூலதனத் திரள் = 1,000, சேர்க்கப்படும் உழைப்பு = 100 என்றால், மறுவுற்பத்தி செய்யப்படும் மூலதனம் = 1,100. மூலதனத்திரள் = 100, சேர்க்கப்படும் உழைப்பு = 20 என்றால், மறுவுற்பத்தி செய்யப்படும் மூலதனம் = 120. முதல் உதாரணத்தில் இலாப வீதம் = 10%. இரண்டாவதில் இலாப வீதம் = 20%. 20இலிருந்து திரட்டுவதை விட 100இலிருந்து அதிகமாய் மூலதனம் திரட்ட முடியும். மூலதன நதி இவ்வாறாகப் பாய்ந்தோடுகிறது (உற்பத்தித் திறன் உயருவதால் மூலதனத்தில் ஏற்படும் மதிப்பிறக்கத்தை ஒதுக்கி விடுகிறோம்), அதாவது மூலதனத் திரட்டல் இலாப வீதத்திற்கேற்ப அல்லாமல் ஏற்கெனவே மூலதனம் கொண்டுள்ள உந்துவிசைக்கேற்பவே முன்னேறிச் செல்கிறது. உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகமாய் இல்லா விட்டாலும் இலாப வீதம் உயர்ந்ததாய் இருப்பது உயர்ந்த உபரி-மதிப்பு வீதத்தை அடிப்படையாய்க் கொண்டுள்ள வரை, வேலை-நாள் மிகவும் நீண்டதாய் இருக்கும்போதுதான் சாத்தியமாகிறது. தொழிலாளர்களின் தேவைகள் மிகக் குறைவாகவும், எனவே சராசரிக் கூலி மிகத் தாழ்வாகவும் இருப்பதால் உயர்ந்த இலாப வீதம் சாத்தியமாகிறது. தொழிலாளர்களின் ஆற்றல் கீழ்நிலையில் இருப்பதற்கேற்ப கூலியும் குறைவாய் இருக்கிறது. அப்போது இலாப வீதம் உயர்ந்திருந்தாலும் மூலதனம் மெல்ல மெல்லவே திரள்கிறது. மக்கள்தொகை தேக்கம் அடைகிறது. உற்பத்திப் பொருளுக்குச் செலவாகிற வேலை நேரம் அதிகமாய் உள்ளது. அதே போது தொழிலாளிக்குத் தரப்படும் கூலி குறைவாய் உள்ளது.

இலாப வீதம் வீழ்ச்சியடைவதற்கு, தொழிலாளி முன்னை விடக்குறைவாகச் சுரண்டப்படுவதல்ல காரணம். பொதுவாகச் சொன்னால், ஈடுபடுத்தப்படும் மூலதனத்தோடு ஒப்பிடுகையில், முன்னை விடக் குறைவான உழைப்பு ஈடுபடுத்தப்படுவதே காரணம்.

இலாப வீதம் குறைந்து செல்லும் போதே, மேலே நாம் தெளிவாக்கியது போல, இலாபத் திரள் அதிகரித்துச் செல்கிறது என்றால், இதன் பொருள் என்ன? உழைப்பின் வருடாந்தர உற்பத்தியிலிருந்து முதலாளி மூலதனம் என்ற வகையில் (நுகரப்படும் மூலதனத்திற்கான மாற்றீடாக) தனதாக்கிக் கொள்ளும் பகுதி அதிகரித்துச் செல்கிறது. இலாபம் என்ற வகையில் தனதாக்கிக் கொள்ளும் பகுதி ஒப்பளவில் குறைந்து செல்கிறது என்பதே.

இதிலிருந்து உதிப்பதுதான் பாதிரி சால்மர்ஸ்* கூறிய அதிவினோதக் கருத்து: முதலாளிகள் வருடாந்தர உற்பத்தியில் எவ்வளவுக்கு எவ்வளவு குறைவானதை மூலதனமாகச் செலவிடுகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் இலாபம் அடைகிறார்களாம். இலாபம் அதிகரித்துச் செல்கையில், அரசுத் திருச்சபையும் உபரி-உற்பத்தியில் மேலும் மேலும் கூடுதலான பகுதியை மூலதனமாகப் பயன்படுத்துவதற்குப் பதில் நுகர்ந்து தீர்ப்பதற்கு இம்முதலாளிகளுக்குத் துணை புரிந்திடலாம். காரணத்தையும் காரியத்தையும் போட்டுக் குழப்பிக் கொள்கிறார் போதகர். மேலும், மூலதன முதலீடு அதிகரிக்கும் போது இலாப வீதம் குறைந்தாலும் இலாபத் திரள் அதிகரிக்கிறது. ஆனால் அதே போது மூலதனக் குவிப்பும் நடைபெற்றால்தான் இது சாத்தியம். ஏனென்றால் பொருளுற்பத்திக்கு அப்போது அவசியமாகிற நிலைமைகள் மூலதனத்தை முன்னிலும் பெருவீதத்தில் ஈடுபடுத்தக் கோருகின்றன. இதோடு மூலதன மையப்பாடும் தேவயாகி விடுகிறது. அதாவது; சிறு முதலாளிகள் பெருமுதலாளிகளால் விழுங்கப்பட்டு தமது மூலதனத்தை இழந்து போண்டியாவதும் அவசியமாகிறது. இதுவும் கூட உற்பத்திச் சாதனங்கள் துண்டித்து விலக்கப்படுதலே—இந்த விலக்கத்தின் இரண்டாம் படிப்பெருக்கத்துக்கு உயர்த்தப்படுதலே—ஆகும். இந்தச் சிறு முதலாளிகள் இன்னமும் உற்பத்தியாளர்களாகவே இருப்பவர்கள்; ஏனெனில் இவர்களது சொந்த உழைப்பு இன்னமும் தொடர்ந்து உற்பத்திக்குப் பங்காற்றி வருகிறது. ஒரு முதலாளியின் உழைப்பு அவரது மூலதனத்தின் பருமனளவுக்கு, அதாவது அவர் முதலாளியாய் இருக்கும் படித்தரத்துக்கு எதிர் விகிதமுடையதாகும். ஒரு புறம் உற்பத்தியாளர்களிடமிருந்து உற்பத்திச் சாதனங்கள் துண்டித்து விலக்கப்படுதலாகிய இதே விலக்கத்திலிருந்துதான் மூலதனம் என்னும் கருவே உருவாகிறது. ஆதித் திரட்டலிலிருந்து [primitive accumulation] ஆரம்பமாகும் இந்த விலக்கம் (முதல் பாகம், பகுதி VIII மூலதனத் திரட்டலிலும் மூலதனக் குவிப்பிலும் நிரந்தர நிகழ்முறையாக நிலைத்து, இறுதியில் நடப்பிலுள்ள மூலதனங்கள் ஒரு சிலர் கையில் குவிந்து மையப்படுவதையும், பலரும் தமது மூலதனத்தை இழந்து போண்டியாவதையும் குறிப்பதாகிறது (உடைமைப் பறிப்பு இப்போது மூலதனப் பறிப்பாய் மாறிப் போகிறது). எதிர்த்து இயங்கும் போக்குகள் மட்டும் இல்லையென்றால், இந்நிகழ்முறையானது விரைவில் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையையே தகர்ந்து விழச் செய்து விடும். எதிர்த்து இயங்கும் இந்தப் போக்குகளின் விளைவாய்,

---

* தா. சால்மர்ஸ் சமுதாயத்தின் நல்லொழுக்க நிலை மற்றும் நல்லொழுக்க வாய்ப்புகள் தொடர்பாக அரசியல் பொருளாதாரம் பற்றி, இரண்டாம் பதிப்பு, கிளாஸ்கோ, 1832, பக்கம் 88.—ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

மையப்பாட்டுப் போக்குடன் கூடவே, மையம் விட்டோடுதலும் தொடர்ச்சியாய் நடைபெறுகிறது.

## II. உற்பத்தி விரிவாக்கத்துக்கும் உபரி-மதிப்பு உற்பத்திக்கும் இடையிலான மோதல்

உழைப்பினது சமுதாய உற்பத்தித் திறனின் வளர்ச்சி இரு வழிகளில் வெளிப்படுகிறது: முதலாவதாக, ஏற்கெனவே உற்பத்தியாகி இருக்கும் உற்பத்திச் சக்திகளின் பருமனிலும், புதிய உற்பத்தி நடைபெறுவதற்குப் பயன்படும் உற்பத்திச் சாதனங்களின் மதிப்பிலும் திரளிலும், ஏற்கெனவே திரட்டப்பட்டிருக்கும் திற்னுடை-மூலதனத்தின் அறுதிப் பருமனிலும் வெளிபடுகிறது; இரண்டாவதாக, மொத்த மூலதனத்தில் கூலியாகச் செலவிடப்படும் பகுதி ஒப்பளவில் குறைவாய் இருப்பதில், அதாவது குறிப்பிட்ட மூலதனத்தின் மறுவுற்பத்திக்கும் தற்பெருக்கத்துக்கும் தேவைப்படுகிற, பெருந்திரள் உற்பத்திக்குத் தேவைப்படுகிற உயிருள்ள உழைப்பின் அளவு ஒப்பளவில் குறைவாய் இருப்பதில் வெளிப்படுகிறது. இது மூலதனக் குவிப்பையும் குறிக்கிறது.

ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்தி தொடர்பாகவும் உற்பத்தித் திறனின் வளர்ச்சி இரு வழிகளில் வெளிப்படுகிறது. முதலாவதாக, உபரி-உழைப்பின் அதிகரிப்பில், அதாவது உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்திக்குத் தேவையான அவசிய-உழைப்பு நேரத்தின் குறைப்பில் வெளிப்படுகிறது. இரண்டாவதாக, குறிப்பிட்ட மூலதனத்தை இயங்க வைப்பதற்குப் பொதுவாக ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்தியின் அளவு (தொழிலாளர் எண்ணிக்கை) குறைவதில் வெளிப்படுகிறது.

இவ்விரு அசைவியக்கங்களும் கைகோத்துச் செல்கிறவை என்பதோடு, ஒன்றில் ஒன்று தாக்கம் செலுத்துகிறவையும், ஒரே விதி தெரிவிக்கப் பெறும் புலப்பாடுகளும் ஆகும். ஆனால் இவை எதிரெதிர் வழியில் இலாப வீதத்தை பாதிக்கின்றன. மொத்த இலாபத் திரள் மொத்த உபரி-மதிப்புத் திரளுக்குச் சமம். இலாப வீதம் $= \frac{s}{C} = \frac{\text{உபரி-மதிப்பு}}{\text{மொத்த மூலதன முன்னீடு}}$. இருப்பினும் உபரி-மதிப்பின் மொத்த அளவானது முதலாவதாக உபரி-மதிப்பு வீதத்தாலும், இரண்டாவதாக இந்த வீதத்தில் ஒருங்கே ஈடுபடுத்தப்படும் உழைப்புத் திரளாலும், அதாவது மாறும்-மூலதனத்தின் பருமனாலும் நிர்ணயிக்கப்படுகிறது. இந்தக் காரணிகளில் ஒன்றாகிய உபரி-மதிப்பு வீதம் உயருகிறது; மற்றொரு காரணியாகிய தொழிலாளர் தொகை (ஒப்பளவிலோ அறுதியாகவோ) குறைகிறது. உற்பததிச் சக்திகளின் வளர்ச்சியானது ஈடுபடுத்தப்படும் உழைப்பின் ஊதியப் பகுதியைக்

குறையச் செய்கிற அளவில் உபரி-மதிப்பை உயரச் செய்கிறது; ஏனென்றால் அது உபரி-மதிப்பு வீததை உயரச் செய்கிறது. ஆனால் இவ்வளர்ச்சியானது குறிப்பிட்ட மூலதனத்தால் ஈடுபடுத்தப் படும் மொத்த உழைப்புத் திரளைக் குறையச் செய்கிற அளவில், உபரி-மதிப்பு வீதம் எதனால் பெருக்கப்பட்டு உபரி-மதிப்புத் திரள் அடையப் பெறுகிறதோ அந்த எண்-காரணியைக் குறையச் செய் கிறது. நாளொன்றுக்கு 12 மணி நேரம் உழைக்கும் இரு தொழி லாளர்கள் — இவர்கள் காற்றைப் பருகியே உயிர் வாழ முடியும், எனவே தமக்காக அவர்கள் சிறிதும் உழைக்கத் தேவையில்லை என்று வைத்துக் கொண்டாலும் கூட — நாளொன்றுக்கு 2 மணி நேரம் மட்டும் உழைக்கும் 24 தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் அதே அளவு உபரி-மதிப்பை உற்பத்தி செய்து விட முடியாது. இந்த அமிசத்தைப் பொறுத்த வரை, தொழிலாளர் எண்ணிக்கையில் ஏற்படும் குறைவை சுரண்டல்-கடுமையைத் தீவிரப்படுத்துவதன் மூலம் சரிக்கட்டுவதற்கு மீற முடியாத சில வரம்புகள் உள்ளன. ஆகவே இந்த வழிமுறை இலாப வீதம் குறைவதைக் கட்டுப்படுத்தக் கூடும் என்றாலும், முற்றிலுமாய்த் தடுத்து விட முடியாது.

ஆக, முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை வளர்ந்து செல லும் போது இலாப வீதம் குறைந்து செல்கிறது; அதே போது ஈடுபடுத்தப்படும் மூலதனத் திரள் வளர வளர இலாபத் திரளும் அதிகரித்துச் செல்கிறது. இலாப வீதம் குறிப்பிட்டதாய் இருக்க, மூலதனத் திரளிலான அறுதி அதிகரிப்பு அதன் அந்நேரத்திய பருமனைப் பொறுத்தது. ஆனால் மறு புறம், இந்தப் பருமன் குறிப்பிட்டதாய் இருந்தால், அதன் வளர்ச்சியின் விகிதம், அதாவது அதன் உயர்வு வீதம் இலாப வீதத்தைப் பொறுத்தது. உழைப்பின் உற்பத்தித் திறனிலான அதிகரிப்பு (எப்போதுமே இந்த அதிகரிப்பு இருக்கக் கூடிய மூலதனத்தின் மதிப்பிறக்கத்தோடு சேர்ந்து அதோடு கூடவே கைகோத்து ஏற்படுகிறது என்பதை மறுபடியும் சொல் கிறோம்) இலாப வீதத்தை உயர்த்துவதன் மூலம் வருடாந்தர உற்பத்தியின் மதிப்பில் திரும்பவும் மூலதனமாக மாற்றப்படும் பகுதியைக் கூடுதலாக்கினால்தான், தற்பொதுள்ள மூலதனத்தின் மதிப்பை நேரடியாய்க் கூடுதலாக்க முடியும். உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதைப் பொறுத்த வரை (இந்த உற்பத்தித் திறன் தற்போதுள்ள மூலதனத்தின் மதிப்போடு எவ்விதத் தொடர்பும் இல்லாதது என்பதால்) ஒப்பீட்டு உபரி-மதிப்பை உயர்த்துவதன் மூலமோ மாறா-மூலதனத்தின் மதிப்பைக் குறைப்பதன் மூலமோ தான், அதாவது உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்திக்கு பயன்படும் சரக்குகளையோ மாறா-மூலதனக் கூறுகளாய் அமையும் சரக்கு களையோ மலிவாக்குவதன் மூலம்தான் இந்த அதிகரிப்பு ஏற்பட முடியும். இவ்விரு வழிகளுமே தற்போதுள்ள மூலதனத்தின் மதிப் பிறக்கத்தைக் குறிக்கிறவை, இரண்டுமே மாறா-மூலதனத்துடன்

ஒப்பிடுகையில் மாறும்-மூலதனம் குறைவதோடு சேர்ந்தே நடை பெறுகிறவை. இரண்டும் இலாப வீதத்தைக் குறையச் செய்கிறவை, மட்டுப்படுத்துகிறவை. மேலும், இலாப வீதத்திலான அதிகரிப்பு உழைப்புக்கான வேண்டலை அதிகரிக்கச் செய்யும் அளவில், தொழி லாளராய் வேலை செய்வோரது தொகையை, யாரைச் சுரண்டு வதன் மூலம் மூலதனத்திலிருந்து அதிக மூலதனத்தைத் தருவிக்க முடிகிறதோ அவர்களது தொகையைக் கூடுதலாக்கும் போக்குடைய தாகும்.

ஆனால் சுற்றடியாகப் பார்க்குமிடத்து உழைப்பினது உற்பத்தித் திறனின் வளர்ச்சி தற்போதுள்ள மூலதனத்தின் மதிப்பு அதிகரிப் பதற்குப் பங்களிக்கிறது; குறிப்பிட்ட பரிவர்த்தனை-மதிப்பு உருக் கொண்டிருக்கும் பயன்-மதிப்புகளின் திரளையும் பல்வகைமையை யும் அதிகமாக்குவதன் மூலம் இதைச் செய்கிறது; இந்தப் பயன்-மதிப்புகள் மூலதனத்தின் பொருட் சாரமாய், அதாவது பொருட் கூறுகளாய், நேரடியாக மாறா-மூலதனமாகவும், எப்படியும் சுற் றடியாகவேனும் மாறும்-மூலதனமாகவும் இருக்கிற பிண்டப் பொருட் களாய் அமைகிறவை. மூலதனமாய் உருமாறக் கூடிய உற்பத்திப் பண்டங்கள் குறிப்பிட்ட மூலதனத்தையும் குறிப்பிட்ட உழைப்பை யும் கொண்டு இன்னுமதிகமாய்ப் படைக்கப்படுகின்றன — இந்தப் பண்டங்களின் பரிவர்த்தனை-மதிப்பு என்னவாகவும் இருக்கலாம். இந்தப்பண்டங்கள் கூடுதல் உழைப்பை, எனவே கூடுதல் உபரி-உழைப்பையும் கூட உறிஞ்சப் பயன்படலாம். இவ்விதம் கூடுதல் மூலதனத்தைப் படைக்கப் பயன்படலாம். மூலதனம் ஆளக் கூடிய உழைப்பளவானது அம்மூலதனத்தின் மதிப்பைப் பொறுத்ததல்ல; கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்கள், இயந்திர சாதனம், நிலை-மூலதனக் கூறுகள், அவசியப் பண்டங்கள் இவை யாவும் சேர்ந்ததே மூலதனம்) இவற்றின் மதிப்பு என்னவானாலும் இவற் றின் திரளையே பொறுத்ததாகும். ஈடுபடுத்தப்படும் உழைப்புத் திரளும், எனவே உபரி-உழைப்புத் திரளும் அதிகமாகிச் செல்லும் போது, மறுவுற்பத்தி செய்யப்படும் மூலதனத்தின் மதிப்பும் அத னோடு புதிதாய்ச் சேர்க்கப்படும் உபரி-மதிப்பும் கூட வளர்ந்து செல்கின்றன.

ஆனால் மூலதனத் திரட்டல் நிகழ்முறை அளாவிய இவ்விரு கூறுகளையும், ரிக்கார்டோ கருதுவது போல், அக்கம்பக்கமாய் ஓய்ந்து கிடப்பவையாகவே கருதி விடக் கூடாது. இவற்றில் ஒரு முரண்பாடு அடங்கியிருக்கிறது; முரண்பாடான போக்குகளிலும் புலப்பாடுகளிலும் தன்னைக் காட்டிக் கொள்கிற முரண்பாடு இது. ஒன்றுக்கொன்று பகையான இந்தக் காரணிகள் ஒரே சமயத்தில் ஒன்றுக் கொன்று எதிரிடையாகச் செயல்படுகின்றன.

மொத்தச் சமுதாய உற்பத்தியில் மூலதனமாகப் பயன்படும் பகுதி அதிகரிப்பதால் தொழிலாளர் தொகை உள்ளபடியே

அதிகரிப்பதற்குக் கிடைக்கும் ஊக்கங்கள் ஒரு புறமிருக்க, ஒப்பீட்டு மிகை-மக்கள்தொகையை மட்டும் உண்டாக்குகிற காரணிகளும் உள்ளன.

இலாப வீதம் குறைந்து செல்லும் போதே மூலதனத் திரள் வளர்ந்து செல்கிறது; தற்போதுள்ள மூலதனங்களில் இதனோடு சேர்ந்தாற் போல் மதிப்பிறக்கம் ஏற்படுகிறது; இது இலாப வீதத்தின் சரிவைக் கட்டுப்படுத்தி, மூலதன மதிப்புகளின் திரட்டலை முடுக்கி விரைவுபடுத்துகிறது.

உற்பத்தித் திறன் வளர்ந்து செல்லும் போதே மூலதன இயைபு உயர்ந்து செல்கிறது; அதாவது மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்குமான விகிதம் ஒப்பளவில் குறைகிறது.

இந்த வெவ்வேறு பாதிப்புகள் ஒரு நேரம் பெரும்பாலும் இட வகையில் அடுத்தடுத்து செயல்படலாம், பிறிதொரு சமயம் கால வகையில் அடுத்தடுத்து ஒன்றன்பின் ஒன்றாய் வரலாம். ஒன்றுக்கொன்று பகையான காரணிகளின் மோதல் காலவட்ட முறையில் அவ்வப்போது நெருக்கடிகளாய் [crises] வெடித்து வெளிப்படுகிறது. எப்போதுமே இந்த நெருக்கடிகள் ஏற்கெனவே நிலவி வரும் முரண்பாடுகளுக்கு வலுவந்தமாய்ப் பெறப்படும் சொற்ப காலத் தீர்வுகளே ஆகும். ஆவேசமாய் வெடித்துக் கிளம்பும் இந்நெருக்கடிகள் தகர்வுற்ற சமனிலையை சிறிது காலத்திற்கு மீட்டமைக்கின்றன.

பொத்தம் பொதுவாகச் சொன்னால், முரண்பாடு இதுதான்: ஒரு புறம் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது உற்பத்திச் சக்திகளில் இருக்கக் கூடிய மதிப்பையும் உபரி-மதிப்பையும் கருதாமலும், இந்தப் பொருளுற்பத்தி நடைபெறும் சமூக நிலைமைகளைக் கருதாமலும் உற்பத்திச் சக்திகளை வரம்பின்றி வளர்த்திடும் போக்குடையதாய் இருக்கிறது; மறு புறம் தற்போதுள்ள மூலதனத்தின் மதிப்பு குறைந்து விடாமல் பேணிக் காத்து இம்மதிப்பின் தற்பெருக்கத்தை அதன் உச்ச நிலைக்கு உயர்த்துவதையே (அதாவது இந்த மதிப்பை மென்மேலும் வேகமாய் வளர்த்திடுவதையே) தனது குறிக்கோளாய்க் கொண்டுள்ளது. தற்போதுள்ள மூலதன-மதிப்பை சாதனமாகப் பயன்படுத்தி இம்மதிப்பை எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு அதிகரிக்கச் செய்கிறது என்பதே இந்தப் பொருளுற்பத்தி முறைக்குரிய தனிச் சிறப்பு ஆகும். இலாப வீதத்தைக் குறையச் செய்வதும், தற்போதுள்ள மூலதனத்தை மதிப்பிறக்கம் பெறச் செய்வதும், ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருக்கும் உற்பத்திச் சக்திகளின் செலவில் உழைப்பின் உற்பத்தித் திறன்களை வளர்த்துச் செல்வதும்தான் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை இந்தக் குறிக்கோளின் ஈடேற்றத்துக்குக் கையாளும் வழிமுறைகள்.

தற்போதுள்ள மூலதனம் கால வட்ட முறையில் மதிப்பிறக்கத்துக்கு உள்ளாவது—இலாப வீதம் குறைவதைக் கட்டுப்படுத்துவதற்கும் புதிய மூலதன உருவாக்கக்கின் மூலம் மூலதன-மதிப்பின்

திரட்டலை துரிதமாக்குவதற்கும் முதலாளித் துவப் பொருளுற்பத்தியில் உள்ளார்ந்திருக்கும் வழிவகைகளில் ஒன்றாகிய இது—குறிப்பிட்ட எந்நிலைமைகளுக்குள் மூலதனத்தின் சுற்றோட்ட, மறுவுற்பத்தி நிகழ்முறை நடைபெறுகிறதோ அந்நிலைமைகளைக் குலைவுறச் செய்கிறது. ஆகவே இந்த மதிப்பிறக்கத் துடன் சேர்ந்து உற்பத்தி நிகழ்முறையில் திடீர் நிறுத்தங்களும் நெருக்கடிகளும் ஏற்படுகின்றன.

மாறா-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் மாறும்-மூலதனம் குறைந்து செல்வது—உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியோடு சேர்ந்து நடைபெறுகிறது இது—உழைக்கும் மக்கள்தொகையின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் அதே போது ஓயாது ஒழியாது செயற்கையான மிகை-மக்கள்தொகையையும் உண்டாக்குகிறது. இலாப வீதம் குறைந்து செல்வது மதிப்புக் கணக்கில் மூலதனத் திரட்டலை மட்டுப்படுத்திய போதிலும், பயன்-மதிப்புகளின் திரட்டலை மேலும் துரிதமாக்குகிறது; பதிலுக்கு இது மதிப்புக் கணக்கில் மூலதனத் திரட்டலுக்குப் புது விசை ஊட்டுகிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியானது . இந்த உள்ளார்ந்த தடைகளைச் சமாளிக்க ஓயாமல் முயல்கிறது. ஆனால் இவற்றைச் சமாளிக்க அது கையாளும் முறைகள் எல்லாம் அதன் வழியில் மீண்டும் இதே தடைகளை—முன்னைக் காட்டிலும் கடுமையான அளவில்—ஏற்படுத்துகிறவைதான்.

முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு உண்மைத் தடையாய் இருப்பது மூலதனமேதான்; அதாவது மூலதனமும் அதன் தற்பெருக்கமும் பொருளுற்பத்திக்குத் தொடக்க முனையாகவும் இறுதி முனையாகவும், இயக்கு விசையாகவும் குறிக்கோளாகவும் விளங்குவதே; உற்பத்திக்காக மூலதனம் என்றில்லாமல் மூலதனத்திற்காக மட்டுமே உற்பத்தி என்றிருப்பதே; உற்பத்திச் சாதனங்கள் உற்பத்தியாளர்களடங்கிய சமுதாயத்தின் உயிர் வாழ்க்கை நிகழ்முறையின் ஓயாத விரிவாக்கத்துக்கான சாதனங்களாய் மட்டும் இல்லாதிருப்பதே. பெருந்திரளான உற்பத்தியாளர்கள் உடைமைப் பறிப்புக்கு ஆளாகி ஓட்டாண்டிகளாவதன் அடிப்படையில் மூலதன-மதிப்பு பாதுகாக்கப்படுவதற்கும் தற்பெருக்கமடைவதற்குமான வரம்புகள் மூலதனம் அதன் நோக்கங்களை அடைவதற்காகக் கையாளும் உற்பத்தி முறைகளோடு ஓயாது ஒழியாது முரண்பட்டு மோதுகின்றன. இந்த உற்பத்தி முறைகள் எல்லையின்றி விரிவாகிச் செல்லும் உற்பத்தியை நோக்கியும், உற்பத்தியையே குறிக்கோளாய்க் கொண்ட உற்பத்தியை நோக்கியும், உழைப்பினது சமுதாய உற்பத்தித் திறனின் வரைமுறையற்ற வளர்ச்சியை நோக்கியும் உந்தித் தள்ளுகிறவையாகும். வழிமுறையானது—சமுதாயத்தினது உற்பத்திச் சக்திகளின் நிபந்தனையற்ற வளர்ச்சி—வரம்புக்குட்பட்ட நோக்கத்தோடு, தற்போதுள்ள மூலதனத்தின் தற்பெருக்கத்தோடு

ஓயாது ஒழியாது முரண்பட்டு மோதுகிறது. இவ்வாறு முதலாளித் துவப் பொருளுற்பத்தி முறையானது பொருளாயத உற்பத்திச் சக்திகளை வளர்ப்பதற்கும், இவற்றுக்கு அவசியமான உலகச் சந்தையைத் தோற்றுவிப்பதற்குமான வரலாற்று வழிப்பட்ட ஒரு சாதனமாகிறது; அதே போது அது இந்த வரலாற்றுக் கடமையும் தனக்குரிய சமுதாய உற்பத்தி உறவுகளும் முரண்படுவதால் எழும் ஓயாத மோதலாகவும் அமைகிறது.

## III. மிகை மூலதனமும் மிகை மக்கள்தொகையும்

இலாப வீதம் குறைவதையொட்டி, தனியொரு முதலாளி உழைப்பை உற்பத்தித் திறனுள்ள முறையில் ஈடுபடுத்துவதற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச மூலதனத்தின் அளவில் ஓர் உயர்வு ஏற்படுகிறது; பொதுவாக உழைப்பைச் சுரண்டுவதற்கு மட்டு மல்லாமல், நுகரப்படும் உழைப்பு நேரத்தை சரக்குகளின் உற் பத்திக்கு அவசியமான உழைப்பு நேரம் என்ற முறையில் போது மானதாய் அமைந்திடச் செய்வதற்கும், அதாவது சரக்குகளின் உற்பத்திக்குத் தேவையான சராசரி சமுதாய உழைப்பு நேரத்தை விஞ்சாதிருக்கச் செய்வதற்கும் இந்தக் குறைந்தபட்ச மூலதனம் தேவைப்படுகிறது. இலாப வீதம் குறையும் போதே மூலதனக் குவிப்பு அதிகமாகிறது; ஏனென்றால், குறிப்பிட்ட சில வரம்பு களுக்கப்பால், பெரிய இலாப வீதமுடைய சிறிய மூலதனத்தை விட சிறிய இலாப வீதமுடைய பெரிய மூலதனம் விரைவாகத் திரளு கிறது. இவ்விதம் அதிகரித்துச் செல்கிற குவிப்பும் குறிப்பிட்ட உச்சநிலையை அடைந்ததும் இலாப வீதத்தில் ஒரு புதிய சரிவைத் தோற்றுவிக்கிறது. சிதறிக் கிடக்கும் சிறு சிறு மூலதனங்களின் திரளானது இதனால் ஊக வாணிபம், கடன்-செலாவணி மோசடி கள், பங்கு-மூலதன ஏமாற்றுகள், நெருக்கடிகள் இவற்றின் சாகசப் பாதையில் இழுத்துச் செல்லப்படுகிறது. சாராம்சத்தில் மூலதன மிகைப்பாடு [plethora of capital] குறிப்பதென்ன? இலாப வீதச் சரிவால் வரப்பெறும் இழப்புக்கு இலாபத் திரளின் பெருக்கத்தால் ஈடு செய்யப் பெறாத மூலதனம் மிகைப்படுவதையே குறிக்கிறது. (மூலதனம் கிளைத்து புதுத்தளிர்கள் விட்டு வளரும் பிரிவுகளில் எப்போதுமே இப்படி நெருகிறது); அல்லது, தாமாகச் செயல்பட வக்கில்லாமல் பெரும் தொழில் நிலையங்களின் நிர்வாகிகள் வசம் கடன்-செலாவணியாக வந்து குவியும் மூலதனங்கள் மிகைப்படு வதையே குறிக்கிறது. இந்த மூலதன மிகைப்பாடு எழுவது ஒப்பீட்டு மிகை-மக்கள்தொகையை விளைவிக்கும் அதே காரணங்களிலிருந்து தான். ஆகவே அது மிகை-மக்கள்தொகையோடு சேர்ந்து அதன் நிரப்புக் கூறாகிறது. என்றாலும் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று

நேரெதிரான இரு முனைகளில் — வேலையில்லாமல் சும்மா இருக்கும் மூலதனம் ஒரு முனையிலும் வேலையில்லாமல் திண்டாடும் தொழிலாளி மக்கள்தொகை எதிர் முனையிலும் — இருப்பவை.

ஆக, மூலதனத்தின் மிகையுற்பத்தி என்பது — எப்போதுமே மூலதனத்தின் மிகையுற்பத்தியில் சரக்குகளின் மிகையுற்பத்தியும் அடங்குமென்றாலும், தனிப்பட்ட சரக்குகளின் மிகையுற்பத்தி அல்லது — மூலதனத்தின் மிகைத் திரட்டலே ஆகும். இந்த மிகைத் திரட்டில் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் (பிற்பாடு இன்னும் நெருக்கமாய்ப் பகுத்தாராய்வோம்). அதனை அறுதியானதாகக் கொள்வதே போதுமானது. மூலதனத்தின் மிகையுற்பத்தி எப்போது அறுதியானதாகும்? உற்பத்திக் கிளைகளில் ஏதேனும் ஒன்றை மட்டும், அல்லது முக்கியமான ஒரு சிலவற்றை மட்டும் அளாவக் கூடியதாய் இல்லாமல், முழுவீச்சில் அறுதியானதாக, எனவே எல்லா உற்பத்திக் கிளைகளிலும் பற்றிப் படரக் கூடியதாக இருக்கும் மிகையுற்பத்திதான் அறுதியானதா?

முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் நோக்கங்களுக்கான கூடுதல் மூலதனம் = 0 என்ற நிலை ஏற்பட்டவுடனே மூலதன மிகையுற்பத்தி அறுதியானதாகி விடும். ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் நோக்கம் மூலதனத்தின் தற்பெருக்கமே, அதாவது உபரி-உழைப்பை தனதாக்குவதே, உபரி-மதிப்பை, இலாபத்தை உற்பத்தி செய்வதே. ஆகவே, மூலதனம் வளர்ந்து சென்று, உழைக்கும் மக்கள்தொகையோடு அது கொண்டுள்ள விகிதமானது இந்த மக்கள்தொகையால் வழங்கப் பெறும் அறுதி வேலை நேரத்தையும் சரி, ஒப்பீட்டு உபரி-வேலை நேரத்தையும் சரி, மேற்கொண்டு சிறிதும் நீட்ட முடியாது என்னும் நிலையை (எப்படியானாலும் உழைப்புக்கான வேண்டல் வலுவடைந்து, கூலி உயர்ந்து செல்லும் போக்குடையதாய் இருக்கும் போது வேலை நேரத்தை நீட்டுவதற்கு வாய்ப்பிருக்காது) அடைந்ததுமே, அதாவது மூலதனம் அதிகரித்த பிறகு உற்பத்தி செய்யும் உபரி-மதிப்பு அது அதிகரிப்பதற்கு முன் உற்பத்தி செய்த உபரி-மதிப்புக்கே சமமானதாய், ஏன், அதை விடக் குறைவானதாயும் கூட இருக்கிற கட்டத்தில், மூலதன மிகையுற்பத்தி அறுதியானதாகும். இதன் பொருள் என்னவென்றால்: மூலதனம் C ஆனது ΔC என்னுமளவு விரிவடைந்து C + ΔC ஆன பிறகு உற்பத்தி செய்யும் இலாபம் அதற்கு முன் உற்பத்தி செய்த இலாபத்திற்கே சமமானதாய், ஏன், அதை விடக் குறைவானதாயும் கூட இருக்கும். இரு சந்தர்ப்பங்களிலுமே பொது இலாப வீதம் செங்குத்தாகவும் திடீரென்றும் வீழ்ச்சி அடையும்; ஆனால் இப்போது இதற்குக் காரணமாவது மூலதன இயைபில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியால் ஏற்பட்ட மாற்றமல்ல, மாறும்-மூலதனத்தின் பண மதிப்பில் (கூலியுயர்வினால்) ஏற்படும் உயர்வும், அதற்கேற்ப

உபரி-உழைப்புக்கும் அவசிய-உழைப்புக்குமான விகிதத்தில் ஏற்படும் குறைவுமே ஆகும்.

உண்மையில், மூலதனத்தில் ஒரு பகுதி முழுமையாகவோ பகுதியாகவோ சும்மாயிருக்கும் (ஏனென்றால் அது முனைப்பாய்ச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மூலதனத்தில் ஒரு பகுதியை வெளியேற்றிய பிறகுதான் தன் மதிப்பைப் பெருக்கிக் கொள்ள முடியும்) என்றும், வேலையில்லாத அல்லது ஓரளவுக்கு மட்டுமே வேலை செய்திடும் மூலதனத்தின் நெருக்குதல் காரணமாய் மறு பகுதி இன்னும் குறைந்த இலாப வீதத்தில் மதிப்புகளை உற்பத்தி செய்யும் என்றும் தெரியவரும் இங்கே கூடுதல் மூலதனத்தில் ஒரு பகுதி பழைய இடத்துக்கு வந்தாலும், பழைய மூலதனம் கூடுதல் மூலதனத்தில் இடம் பிடித்தாலும், எல்லாம் ஒன்றுதான். அப்போதும் ஒரு பக்கத்தில் பழைய மூலதனத் தொகையும் மறு பக்கத்தில் கூடுதல் மூலதனத் தொகையும்தான் இருக்கும். இலாப வீதம் குறைந்து செல்லும் போதே இலாபத் திரளும் அறுதியாகக் குறையும்; ஏனென்றால் நாம் அனுமானம் செய்து கொண்ட நிலைமைகளில், ஈடுபடுத்தப்படும் உழைப்புச் சக்தியின் திரளைக் கூடுதலாக்கவும் முடியாது, உபரி-மதிப்பு வீதத்தை உயர்த்தவும் முடியாது, எனவே உபரி-மதிப்புத் திரளையும் கூடுதலாக்க முடியாது. குறைந்து போன இலாபத் திரளை கூடுதலாகிப் போன மொத்த மூலதனத்தை அடிப்படையாக வைத்துக் கணக்கிட்டாக வேண்டும். ஆனால் ஈடுபடுத்தப்டும் மூலதனம் தொடர்ந்து பழைய இலாப வீதத்திலேயே தற்பெருக்கமடைவதாகவும், எனவே இலாபத் திரள் மாறாதிருப்பதாகவும் வைத்துக் கொண்டு பார்த்தாலும் கூட அப்போதும் இந்தத் திரள் கூடுதலாகிப் போன மொத்த மூலதனத்தை அடிப்படையாக வைத்தே கணக்கிடப்படும்—இதுவும் கூட இலாப வீதம் குறைவதையே குறிக்கிறது. 1000 மொத்த மூலதனமானது 100 இலாபம் கொடுத்தது என்றும், 1500ஆக கூடுதலாக்கப்பட்ட பிறகும் 100 இலாபம்தான் கொடுத்தது என்றும், கொள்வோமானால், இரண்டாம் நேர்வில் 1000 தருவது 66⅔ மட்டுமே. அறுதி நோக்கில் பழைய மூலதனத்தின் தற்பெருக்கம் குறைந்து போயிருக்கும். பழைய நிலைகளில் 666⅔ மூலதனம் தந்ததற்கு மேல் புதிய நிலைமைகளில் 1000 மூலதனம் தந்து விடாது.

ஆனால் பழைய மூலதனத்தின் இந்த உள்ளபடியான மதிப்பிறக்கம் ஒரு போராட்டம் இல்லாமல் நடைபெற முடியாது; கூடுதல் மூலதனம் ΔC ஒரு போராட்டம் இல்லாமல் மூலதனப் பணிகளை மேற்கொள்ள முடியாது என்று தெளிவாய்த் தெரிகிறது. போட்டியின் விளைவாக இலாப வீதம் வீழ்ச்சி அடையாது; மூலதன மிகையுற்பத்தியே காரணம். நேர் மாறானதே நிகழும்; இலாப வீத வீழ்ச்சிக்கும் மூலதன மிகையுற்பத்திக்கும் மூலகாரணமாகிற நிலைமைகள் ஒன்றேயாதலால் போட்டிப் போராட்டம் தொடங்கும். செயல்பட்டு

வரும் பழைய முதலாளிகளின் கையிலுள்ள ΔC இன் பகுதி பெரும் பாலும் வேலையற்று இருக்குமாறு விடப்படும்; அவர்களது ஆரம்ப மூலதனம் மதிப்பிறக்கம் அடையாமல் தடுக்கும் பொருட்டும், உற் பத்திக் களத்தில் அதன் இடம் குறுகி விடாமல் பார்த்துக் கொள்ளும் பொருட்டும் இவ்வாறு செய்யப்படும். அல்லது, தற்காலிக இழப்பு ஏற்பட்டாலும் அவர்கள் அதனை ஈடுபடுத்துவார்கள்; கூடுதல் மூலதனத்தை வேலையற்றதாய் வைத்துக் கொள்ள வேண்டிய தேவைப் புதுமுகங்களின் கைக்கும், பொதுவாகத் தமது போட்டி யாளர்களின் கைக்கும் மாற்றும் பொருட்டு இப்படிச் செய்வார்கள்.

ΔC இன் ஒரு பகுதி புதியவர்களின் கையில் இருக்கிறது அல் லவா, அந்தப் பகுதி பழைய மூலதனத்தைத் தள்ளி விட்டுத் தனக் கென இடம் பிடிக்க முனையும்; பழைய மூலதனத்தில் ஒரு பகுதியை வேலையற்றதாய் இருக்கச் செய்வதன் மூலம் ஓரளவு இடம் பிடித்தும் விடும். அது பழைய மூலதனத்தைக் கட்டாயப்படுத்தி, அதன் பழைய இடத்தைக் கைவிட்டு விலகிச்சென்று முழு அள வுக்கோ ஓரளவுக்கோ வேலையற்றிருக்கும் கூடுதல் மூலதனத்தோடு சேர்ந்து கொள்ளும் படி செய்த விடும்.

பழைய மூலதனத்தில் ஒரு பகுதி எந்நிலைமையிலும் பயன் படுத்தப்படாமல் கிடந்தாக வேண்டும். அது மூலதனமாய்ச் செயல் பட்டு மதிப்பை உற்பத்தி செய்வதைப் பொறுத்த வரை, மூல தனத்துக்குரிய தனித் தன்மையைக் கைவிட்டாக வேண்டும். அதில் எந்தப் பகுதி குறிப்பாக பாதிக்கப்படும் என்பதைப் போட்டிப் போராட்டம் தீர்மானிக்கும். எல்லாம் நல்ல முறையில் நடைபெற்று வரும் வரை போட்டியானது முதலாளி வர்க்கத்தினிடையே செயல் வழிப்பட சகோதரத்துவத்தைத் தோற்றுவிக்கிறது; பொது இலாப வீதத்தின் சமனமாக்கத்தைப் பரிசீலிக்கையில் இதைக் கண்டோம். ஒவ்வொருவரும் தத்தமது முதலீட்டுக்கேற்ப பொதுக் கொள்ளையில் பங்கு பெறுவதற்கு இந்த சகோதரத்துவம் வழி வகுக்கிறது. ஆனால் இலாபங்களைப் பங்கிட்டுக் கொள்வதற்கு பதில் இழப்புகளை பங்கிட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்ட உடனே, ஒவ்வொருவரும் தமது பங்கைக் குறைந்தபட்ச அளவாய் குறைத்துக் கொள்வதற்கும் அதையும் வேறொருவர் தலையில் சுமத்துவதற்கும் முயல்கிறார். முதலாளி வர்க்கமானது வர்க்கமென்ற முறையில் தவிர்க்க முடியாத படி இழப்புக்காளாகியே தீரும். இந்த இழப்பைத் தனிப்பட்ட முதலாளி எந்த அளவுக்குத் தாங்கிக் கொள்ள வேண் டும், அதாவது அதில் எந்த அளவுக்கு அவர் பங்கு பெற வேண்டும் என்பது வலிமையாலும் தந்திரத்தாலும் தீர்மானிக்கப்படுகிறது; போட்டி அப்போது பகை கொண்ட சகோதரர்கள் இடையிலான போராகி விடுகிறது. ஒவ்வொரு தனிப்பட்ட முதலாளியின் நலன் களுக்கும் முதலாளி வர்க்க முழுமையின் நலன்களுக்கும் இடையி லான பகைமை முன்னுக்கு வருகிறது—எப்படி முன்னதாக இந்த

நலன்களின் முழுதொத்த தன்மை நடைமுறையில் போட்டி வாயிலாகச் செயல்பட்டதோ அதே போல.

எப்படி இந்த முரண்பாடு தீர்க்கப்பட்டு, முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் "உகந்த" செயற்பாட்டுக்கு ஏற்ற நிலைமைகள் மீட்டமைக்கப்படுகின்றன? எம்முரண்பாட்டின் தீர்வு குறித்துப் பரிசீலிக்கிறோமோ அம்முரண்பாட்டின் வெளிப்பாட்டிலேயே தீர்வு முறை உணர்த்தப்பட்டு விடுகிறது. கூடுதல் மூலதனமாகிய $\Delta C$ இன் முழு மதிப்புக்குச் சமமான மூலதனத்தை அல்லது அதில் ஒரு பகுதியை விலக்கிக் கொள்வதையும், ஏன், ஓரளவுக்கு அழித்து விடுவதையும் கூட இது குறிக்கும். இந்த முரண்பாடு பற்றிய விளக்கம் காட்டுவது போல, இழப்பானது தனிப்பட்ட மூலதனங்களிடையே எவ்விதத்தும் சரிசமமாய் வினியோகமாவதில்லை. இழப்பின் வினியோகப் பரப்பீடு போட்டிப் போராட்டத்தின் வாயிலாகவே தீர்மானிக்கப்படுகிறது; தனி வசதிகள் அல்லது ஏற்கெனவே கைப்பற்றிய நிலைகளைப் பொறுத்து இந்தப் போராட்டத்தில் இழப்பானது பெரிதும் வேறுபட்ட விகிதங்களிலும் வடிவங்களிலும் வினியோகமாகிறது. இதனால், ஒரு மூலதனம் பயன்படுத்தாமல் விடப்படுகிறது, மற்றொன்று அழிக்கப்படுகிறது, பிறிதொன்று ஒப்பளவில் மட்டுமே இழப்படைகிறது, அல்லது தற்காலிகமாகவே மதிப்பிறக்கத்துக்கு உள்ளாகிறது. இவ்வாறே மேலும் சொல்லலாம்.

ஆனால் எந்நிலைமையிலும் குறிப்பிட்ட அளவு மூலதனத்தை விலக்கிக் கொள்வது, ஏன், அழித்தே விடுவது என்னும் வழியில்தான் சமநிலை மீட்கப்படும். ஓரளவுக்கு மூலதனத்தின் பொருட்சாரத்துக்கு இப்படித்தான் நேரிடும்; அதாவது உற்பத்திச் சாதனங்களில் — நிலை-மூலதனத்திலும் சுழல்-மூலதனத்திலும் — ஒரு பகுதி இயங்காது, மூலதனமாகச் செயல்படாது; இயங்கி வரும் நிறுவனங்களில் சில அப்போது நின்று போகும். இவ்வகையில் எல்லா உற்பத்திச் சாதனங்களுமே (நிலம் தவிர) காலத்தின் தாக்குதலுக்குள்ளாகி கேடுறுகின்றன என்றாலும், வேலை நின்று போவது உற்பத்திச் சாதனங்களுக்கு உண்மையில் இன்னுங்கூட பெருத்த நாசம் உண்டாக்கும். ஆனால் இந்த உற்பத்திச் சாதனங்கள் உற்பத்திச் சாதனங்களாகச் செயல்படாமல் போகும் என்பதே, அவை உற்பத்திச் சாதனங்களாகச் செயல்படுவது குறிப்பிட்ட காலத்துக்குக் குலைவுறும் என்பதே இங்கு முக்கிய விளைவாய் இருக்கும்.

கடுமையான விளைவுகளை உண்டாக்கும் பெருத்த நாசம் மூலதனத்திற்கு ஏற்படும்; மதிப்பின் தன்மை வாய்ந்தவை என்பதால் மூலதனங்களின் மதிப்புகளுக்கு ஏற்படும். மூலதன-மதிப்பில் ஒரு பகுதி வருங்கால உபரி-மதிப்புப் பங்குகள் மீதான, அதாவது இலாபப் பங்குகள் மீதான பாத்தியதைகளின் வடிவிலேயே, உண்மையில் உற்பத்தியின் மீதான பல்வேறு வகை உறுதிப் பத்திரங்களின்

வடிவிலேயே இருக்குமானால், அந்தப் பகுதி அதன் கணக்கீட்டுக்கு அடிப்படையான வரவுகள் குறைந்து போவதால் உடனே மதிப்பிறக் கத்துக்கு இரையாகிறது. தங்கம், வெள்ளியில் ஒரு பகுதி பயன் படுத்தப்படாமல் சும்மா கிடக்கிறது, அதாவது மூலதனமாகச் செயல்படாமல் இருக்கிறது. சந்தையில் இருக்கும் ஒரு பகுதிச் சரக்குகள் அவற்றின் விலைகள் பெருமளவு சுருங்குவதன் மூல மாகத்தான், எனவே அவற்றால் குறிக்கப் பெறும் மூலதனம் மதிப் பிறக்கத்துக்கு உள்ளாவதன் மூலமாகத்தான் அவற்றின் சுற்றோட்ட, மறுவுற்பத்தி நிகழ்முறையை உற்பத்தி செய்யமுடிகிறது. நிலை-மூலதனக் கூறுகளும் இதே வழியில் குறிப்பிட்ட அளவு மதிப்பிறக் கத்துக்கு உள்ளாகின்றன . இங்கே இன்னுமொன்றையும் குறிப்பிட வேண்டும்: முன்கூட்டியே அனுமானம் செய்யப்பட்ட திட்டமான விலையுறவுகள் மறுவுற்பத்தி நிகழ்முறையை ஆளுகின்றன; பொது வாக விலைகள் வீழ்ச்சி அடைவது மறுவுற்பத்தி நிகழ்முறையைத் தேக்கமுறச் செய்து குழப்பத்தில் ஆழ்த்தி விடுகிறது. இந்தக் குழப்ப மும் தேக்கமும் பணத்தைக் கொடுப்புச் சாதனமாகச் செயல்பட விடாமல் முடங்கச் செய்கின்றன; ஏனென்றால் கொடுப்புச் சாதனத்தின் வளர்ச்சி மூலதன வளர்ச்சியோடு இணைந்து நடை பெறுவது, முன்கூட்டியே அனுமானம் செய்யப்பட்ட அந்த விலை யுறவுகளை அடிப்படையாகக் கொண்டது. குறிப்பிட்ட தேதிகளில் நிறைவேற வேண்டிய கொடுப்புக் கடப்பாடுகளின் சங்கிலித் தொடர் அநேக இடங்களில் அறுபடுகிறது. கடன்-செலாவணி அமைப்பு (மூலதனத்தோடு ஒருங்கே வளர்ந்திடும் இவ்வமைப்பு) தகர்ந்து போகிறது; குழப்பமும் நாசமும் மேலும் கடுமையாகின்றன; மூர்க்கம் வாய்ந்த கடும் நெருக்கடிகள் வெடித்து வலுவந்த முறையில் திடுதிப்பென மதிப்பிறக்கங்கள் ஏற்படுகின்றன. மறுவுற்பத்தி நிகழ் முறை தேக்கமுற்றுக் குலைந்து போகிறது. முடிவில் மறுவுற்பத்தி மெய்யாகவே நின்று விட வேண்டியதாகிறது.

ஆனால், அதே போது வேறு சில காரணிகளும் கூட செயல் படுகின்றன. மந்தமுற்றுத் தேங்கும் உற்பத்தியானது தொழிலாளி வர்க்கத்தில் ஒரு பகுதியினரை வேலையிழந்து வெளியேறச் செய் கிறது; தொடர்ந்து வேலையில் இருந்து வரும் பகுதியினர் இதனால் சராசரிக்கும் கீழே கூலி விகிதங்கள் குறையும் படியான கூலி வெட்டுக்குப் பணிய வேண்டிய நிலையில் இருத்தப்படுகின்றன. இது மூலதனத்தின் மீது ஏற்படுத்தும் விளைவும் சராசரிக் கூலியில் ஒப்பீட்டு அல்லது அறுதி உபரி-மதிப்பு அதிகரித்திருந்தால் ஏற் பட்டிருக்கக் கூடிய விளைவும் ஒன்றேதான். செழுமையானது தொழிலாளர்களிடையே மேலும் திருமணங்கள் நடைபெறுவதற்கு வழிசெய்வதோடு, குழந்தைகள் மடிவதையும் குறையச் செய்திருக் கும். இது உண்மையிலேயே மக்கள்தொகை அதிகரிப்பதைக் குறிப்ப தாய் இருந்தாலும், உள்ளபடியே உழைக்கும் மக்கள்தொகை

அதிகரிப்பதைக் குறிப்பதல்ல. ஆனால் இது தொழிலாளிக்கும் மூல தனத்துக்குமான உறவுகளைப் பாதிக்கிறது; உள்ளபடியே வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு இந்த உறவுகளை எப்படி பாதித்திருக்குமோ, அதே வழியில் பாதிக் கிறது. மறு புறம், விலைகளில் ஏற்படும் வீழ்ச்சியும் போட்டிப் போராட்டமும் புதிய இயந்திரங்களைக் கொண்டும், புதிய மேம் பட்ட வேலைமுறைகளைக் கொண்டும், புதிய இணைவுகளைக் கொண்டும் ஒவ்வொரு முதலாளியும் தமது மொத்த உற்பத்தியின் தனிப்பட்ட மதிப்பை அதன் பொது மதிப்புக்கும் கீழானதாய் குறைத்துக் கொள்ளுமாறு தள்ளி விட்டிருக்கும். அதாவது குறிப் பிட்ட உழைப்பளவின் உற்பத்தித் திறனை உயர்த்துமாறும், மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்குமான விகித உறவைத் தாழ்த்துமாறும், இவ்விதம் தொழிலாளர்கள் சிலரை விடுவிக்கு மாறும் தள்ளி விட்டிருக்கும். ஈடுபடுத்தப்படும் மாறா-மூலதனத் திரள், மாறும்-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்திருக்கும். ஆனால் அதன் மதிப்பு குறைந்திருக்கக் கூடும். இதையொட்டி உற்பத்தியில் ஏற்படும் தேக்கம்—முதலாளித்துவ வரம்புகளுக்குள்—உற்பத்தி அடுத்தாற்போல் விரிவடைவதற்கு ஆயத்தம் செய் திருக்கும்.

ஆக, சகடம் புதிதாய்ச் சுழலும் செயல்பாடு தேக்கமுறுவதால் மதிப்பிறக்கத்துக்கு உள்ளாகும் மூலதனத்தில் ஒரு பகுதி அதன் பழைய மதிப்பை மீட்டுக் கொள்ளும். மற்றபடி, உற்பத்தி நிலைமை கள் விரிவகற்சி பெற்றும், சந்தை விரிவடைந்தும், உற்பத்திச் சக்திகள் அதிகரித்தும் செல்ல அதே நச்சுச் சுழல்தான் திரும்பவும் நிகழ்கிறது.

ஆனால் நாம் அனுமானம் செய்துள்ள கடைக்கோடி நிலைமை களிலும் கூட மூலதனத்தின் இந்த அறுதி மிகையுற்பத்தி அறுதி மிகையுற்பத்தியே அல்ல, உற்பத்திச் சாதனங்களின் மிகையுற்பத்தி இல்ல. உற்பத்திச் சாதனங்கள் மூலதனமாகப் பயன்படுகிற அளவுக்கு மட்டுமே, எனவே மதிப்பின் தற்பெருக்கத்தை உள்ளடக்கியதாய், உற்பத்திப் பொருள் அதிகரிப்பதற்கேற்ப கூடுதல் மதிப்பை உற் பத்தி செய்தாக வேண்டியதாய் இருக்கிற அளவுக்கு மட்டுமே இது உற்பத்திச் சாதனங்களின் மிகையுற்பத்தி ஆகும்.

அப்போதும் கூட அது மிகையுற்பத்தியாகவே இருக்கும். ஏனென் றால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் ''நிறை வான'', ''இயல்பான'' வளர்ச்சிக்குத் தேவையான அளவுக்கு, ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் வளரும் திரளோடு சேர்ந்து இலா பத் திரளும் அதிகரிக்கக் கூடிய அளவுக்காவது, எனவே மூலதனம் அதிகரிப்பது போலவே, ஏன், அதை விடவும் துரிதமாய் இலாப வீதம் குறைந்து விடாமல் தடுக்கிற அளவுக்கு, மூலதனத்தால் உழைப்பைச் சுரண்ட முடியாமற் போகும்.

மூலதனத்தின் மிகையுற்பத்தி என்பது மூலதனமாகப் பயன்படக் கூடிய, அதாவது குறிப்பிட்ட சுரண்டல்-கடுமையில் உழைப்பைச் சுரண்டுவதற்குப் பயன்படக் கூடிய உற்பத்திச் சாதனங்களின் — உழைப்புச் சாதனங்கள், அவசிய வாழ்வுச் சாதனங்களின் — மிகை யுற்பத்தியே தவிர வேறல்ல; ஆனால், சுரண்டல்-கடுமை குறிப் பிட்ட நிலைக்கும் கீழே குறைந்து விடும் போது முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் குலைவுகளும் நிறுத்தங்களும் ஏற் படுகின்றன; நெருக்கடிகள் மூண்டு மூலதன அழிப்பு நடைபெறு கிறது. மூலதனத்தின் இந்த மிகையுற்பத்தியோடு [over-production] கணிசமான ஒப்பீட்டு மிகை மக்கள்தொகையும் சேர்ந்து வருவதில் மரண்பாடு ஒன்றுமில்லை. உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தி உற்பத்திச் சரக்குகளின் திரளைப் பெருகச் செய்து, சந்தைகளை விரிவாக்கி, அளவுவழியில் ஆனாலும் மதிப்புவழியில் ஆனாலும் மூலதனத் திரட்டலை முடுக்கி இலாப வீதத்தைக் குறையச் செய்த அதே நிலைமைகள் ஒப்பீட்டு மிகை-மக்கள்தொகையையும் — உபரி-மூலதனத்தால் வேலைக்கமர்த்தப்படாத தொழிலாளர்களின் மிகை-மக்கள்தொகையை — தோற்றுவித்துள்ளன, தொடர்ச்சியாகத் தோற்று விக்கின்றன. இந்தத் தொழிலாளர்களுக்கு உபரி-மூலதனம் ஏன் வேலை கொடுப்பதில்லை என்றால், இவர்களை வேலைக்கு அமர்த்துவதானால் குறைந்த சுரண்டல்-கடுமையில்தான் அமர்த்த முடியும்; சுரண்டல்-கடுமையில் மாற்றமில்லா விட்டாலும் இவர் களைக் கொண்டு குறைந்த இலாப வீதமே பெறப்படும்.

மூலதனம் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகிறது என்றால் அதனை உள்நாட்டில் பயன்படுத்த முடியவே முடியாது என்பதல்ல, வெளி நாட்டில் இன்னுமுயர்ந்த இலாப வீதத்தில் அதனை ஈடுபடுத்த முடியும் என்பதுதான் காரணம். ஆனால் இப்படி அனுப்பப்படும் மூலதனம் வேலை பெற்றுள்ள உழைக்கும் மக்கள்தொகைக்கும், பொதுவாகத் தாய்நாட்டுக்கும் அறுதியான மிகை மூலதனம் ஆகும். ஒப்பீட்டு மிகை-மக்கள்தொகையோடு கூடவே அறுதி மிகை மூல தனமும் இருந்து வருகிறது; எப்படி இவை இரண்டும் அடுத்தடுத்து இருந்து வருகின்றன, தமக்கிடையில் ஒன்றின் மீது ஒன்று தாக்கம் செலுத்திக் கொள்கின்றன என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

மறு புறம் மூலதனத் திரட்டல் தொடர்பாக இலாப வீதத்தில் ஏற்படும் குறைவு தவிர்க்க முடியாதவாறு போட்டிப் போராட்டத் துக்கு வழிவகுக்கிறது. இலாப வீதத்திலான குறைவுக்கு இழப்பீடாக இலாபத் திரள் உயருவதென்பது மொத்தச் சமுதாய மூலதனத் துக்கும் உறுதியாய் நிலைபெற்ற பெருமுதலாளிகளுக்கும் மட்டுமே பொருந்துவதாகும். சுயேச்சையாக இயங்கிடும் புதிய கூடுதல் மூல தனத்துக்கு இழப்பீடு பெறுவதற்கான நிலைமைகள் வாய்ப்ப தில்லை. இனிமேல்தான் அது இந்நிலைமைகளுக்கு வழிசெய்து கொண்டாக வேண்டும். ஆகவே இலாப வீதத்தின் வீழ்ச்சியைத்

தொடர்ந்து முதலாளிகளிடையே போட்டிப் போராட்டம் ஏற்படு கிறதே தவிர, முதலாளிகளின் போட்டிப் போராட்டத்தால் இலாப வீதம் வீழ்வதாகக் கூறுவதற்கில்லை. மெய்தான், போட்டிப் போராட் டம் நடைபெறும் போது கூலி தற்காலிகமாய் உயருகிறது. இதனால் இலாப வீதமும் தற்காலிகமாய் மேலும் குறைந்து போகிறது. சரக்குகள் மிகையுற்பத்தி ஆகுமானால், சந்தைகளில் இருப்பு மிகையாகி விடுமானால், அப்போதும் இப்படித்தான் நடைபெறு கிறது. மூலதனத்தின் நோக்கம் இலாபம் பண்ணுவதுதானே தவிர, குறிப்பிட்ட தேவைகளை நிறைவு செய்வதல்ல என்பதாலும், அது இந்த நோக்கத்தை அடைவதற்குக் கையாளும் வழிமுறைகள் உற் பத்தியின் பருமனளவை உற்பத்தியின் வீதஅளவுக்கேற்ப மாற்றி யமைத்துக் கொள்கிறவையே தவிர வீதஅளவை பருமனளவுக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்கிறவை அல்ல என்பதாலும், முதலாளித் துவத்தில் நுகர்வின் பரிமாணத்துக்குள்ள குறுகிய தடை வரம்பு களுக்கும் இந்த உள்ளார்ந்த தடைமதிலை மீறிச் செல்லவே எப் போதும் எத்தனிக்கும் உற்பத்திக்கும் இடையே எந்நேரமும் ஓயாத மோதல் எழுந்தே ஆக வேண்டும். மேலும் மூலதனம் சரக்குகளால் ஆனது; எனவே மூலதனத்தின் மிகையுற்பத்தி சரக்குகளின் மிகை யுற்பத்தியைக் குறிப்பதாகும். சரக்குகளின் மிகையுற்பத்தியை மறுக் கும் பொருளாதார அறிஞர்கள் மூலதனத்தின் மிகையுற்பத்தியை ஒப்புக் கொள்ளும் விசித்திரத்துக்கு இதுவே காரணம். பொதுவான மிகையுற்பத்தி ஏதும் இல்லையென்றும், பல்வேறு உற்பத்திக் கிளை களுக்குள்ளேயும் சரிவிகிதமற்ற நிலையே [disproportion] காணப் படுகிறது என்றும் சொல்வதன் பொருள், முதலாளித்துவப் பொரு ளுற்பத்தியில் தனிப்பட்ட உற்பத்திக் கிளைகளின் சரிவிகித நிலை சரிவிகித மின்மையிலிருந்து தொடர்ச்சியான நிகழ்முறையாக உதித் தெழுகிறது என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. ஏனென்றால் ஒட்டு மொத்தப் பொருளுற்பத்தியின் ஒருங்கிணைப்பானது உற்பத்திச் செயலிகளின் பொதுச் சிந்தையால் புரிந்து கொள்ளப்பட்டு கட்டுப் பாடு செய்யப்பட்டு உற்பத்தி நிகழ்முறையை அவர்களின் கூட்டுக் கட்டுப்பாடுக்குக் கீழ்ப்பட வைக்கிற விதியாகச் செயல்படாமல், இச்செயலிகள் மீது குருட்டு விதியாகத் தன்னை இருத்திக் கொள் கிறது. மேலும் இப்படிச் சொல்வது முதலாளித்துவப் பொருளுற் பத்தி வளர்ச்சி பெறாத நாடுகள் முதலாளித்துவப் பொருளுற்பத்தி நடைபெறும் நாடுகளுக்குப் பொருத்தமான வீதஅளவில் நுகரவும் உற்பத்தி செய்யவும் வேண்டும் என்று கோருவதற்கு ஒப்பாகும். மிகையுற்பத்தி ஒப்பளவிலானதே என்று சொல்லப்படுமானால் சரி தான். ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை அனைத் துமே ஒப்பளவிலானதுதான்; இதற்கான தடைகளும் அறுதியானவை யல்ல. இந்தப் பொருளுற்பத்தி முறைக்கு மட்டுமே, அதாவது இந்தப் பொருளுற்பத்தி முறையை அடிப்படையாகக் கொள்ளும்

போது மட்டுமே இத்தடைகள் அறுதியானவை. இல்லையேல் பெருந் திரளான மக்கள் எச்சரக்குகள் இல்லாமல் தவிக்கிறார்களோ அதே சரக்குகளுக்கான வேண்டலில் எப்படிக் குறைவு ஏற்பட முடியும்? உள்நாட்டில் தொழிலாளர்களுக்கு சராசரி அளவில் அவசிய வாழ்வுச் சாதனங்களைக் கொடுப்பதற்கே வெளிநாட்டில், அயல் தேசச் சந்தைகளில் இந்த வேண்டலைக் காண்பது எப்படிச் சாத்திய மாகும்? இந்தப் பிரத்தியேக முதலாளித்துவ இடையுறவில் உபரி-உற்பத்தி மேற்கொள்ளும் வடிவம் அதன் உடைமையாளருக்கான மூலதனமாகத் திரும்பவும் உருமாறிய பிறகுதான் அவர் அதனை நுகர்வுக்கு வழங்க முடியும் என்னும் படியான வடிவமாய் இருப்ப தால்தான் இது சாத்தியமாகிறது. முதலாளிகள் தமது சரக்குகளைத் தம்மிடையே பரிவர்த்தனை செய்து நுகர வேண்டியதுதான் என்று முடிவில் சொல்லப்படுமானால், இப்படிச் சொல்வது முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையின் இயல்பையே காணத் தவறுவதாகும்; மூலதனத்தின் மதிப்பை நுகருவது அல்ல, பெருகச் செய்வதே நோக்கம் என்பதை மறப்பதும் ஆகும். சுருங்கச் சொல்லின், மிகை யுற்பத்தியின் கண்கூடான நிகழ்வுகளுக்கு எதிராகச் சொல்லப்படும் இந்த ஆட்சேபங்களெல்லாம் (இந்த நிகழ்வுகள் இந்த ஆட்சேபங் களைப் பொருட்படுத்தவே இல்லை) முதலாளித்துவப் பொரு ளுற்பத்திக்கு எழும் தடைமதில்கள் பொதுவாகப் பொருளுற்பத்திக்கு எழும் தடைமதில்களோ, ஆகவே இந்தப் பிரத்தியேக முதலாளித் துவப் பொருளுற்பத்தி முறைக்கு எழும் தடைமதில்களோ ஆவ தில்லை என்று வாதிடுவதற்கே ஒப்பாகும். ஆனால் முதலாளித் துவப் பொருளுற்பத்தி முறையின் முரண்பாடு உற்பத்திச் சக்தி களின் அறுதி வளர்ச்சி நோக்கிய அதன் போக்கில்தான் பொதிந் துள்ளது; இந்தப் போக்கானது மூலதனம் எந்நிலைமைகளில் இயங்குகிறதோ, அதனால் எந்நிலைமைகளில் மட்டுமே இயங்க முடியுமோ அந்த பிரத்தியேக உற்பத்தி நிலைமைகளோடு ஓயாமல் மோதிக் கொள்கிறது.

இருந்து வரும் மக்கள்தொகையோடு ஒப்பிடுகையில், அவசிய வாழ்வுச் சாதனங்கள் அப்படியொன்றும் அதிகப்படியாய் உற்பத்தி யாவதில்லை. நேர்மாறானதே நிகழ்கிறது. பெருந்திரளானோரின் தேவைகளைக் கச்சிதமாகவும் கண்ணியமாகவும் நிறைவு செய் வதற்குப் போதாத அளவில் மிகக் குறைவாகவே உற்பத்தி ஆகிறது.

மக்கள்தொகையில் உடல்திடம் வாய்ந்த பகுதியினருக்கு வேலை கொடுத்திடப் போதிய அளவில் உற்பத்திச் சாதனங்கள் உற்பத்தி ஆவதில்லை. நேர்மாறானதே நிகழ்கிறது. முதலாவதாக, உற்பத்தி யாகிற மக்கள்தொகையில் பெரியதொரு பகுதியினர் உண்மையில் உழைக்கும் திறனுடைவர்கள் அல்லர்; நிலைமைகளின் நெருக்குத லால் இவர்கள் பிறரது உழைப்பைச் சுரண்டுவதை சார்ந்திருக்க வேண்டியதாகிறது, அல்லது படுகேவலமான ஒரு பொருளுற்பத்தி

முறையில் மட்டுமே உழைப்பு என்று பெயர் சொல்லும் படியான உழைப்பைச் சார்ந்திருக்க வேண்டியதாகிறது. இரண்டாவதாக, உடல்திடம் வாய்ந்த மக்களனைவருக்கும் மிகவும் உற்பத்தித் திறனுடைத்த நிலைமைகளில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கும், இவ்விதம் வேலை நேரத்தில் ஈடுபடுத்தப்படும் மாறா-மூலதனத்தின் திரளையும் பயன்திறத்தையும் கொண்டு அவர்களின் அறுதி வேலைக் காலத்தைக் குறுக்குவதற்கும் போதிய அளவில் உற்பத்திச் சாதனங்கள் உற்பத்தியாவதில்லை.

மறு புறம், உழைப்புச் சாதனங்களும் அவசிய வாழ்வுச் சாதனங்களும் சில நேரம் அதிகப்படியாய் உற்பத்தி செய்யப்படுகின்றன; இதனால் அவை குறிப்பிட்ட இலாப வீதத்தில் தொழிலாளர்களைச் சுரண்டுவதற்கான சாதனங்களாகப் பயன்பட முடியாத நிலை ஏற்படுகிறது. அதிகப்படியான சரக்குகள் உற்பத்தி செய்யப்படுவதால் முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கே உரித்தான வினியோக, நுகர்வு நிலைமைகளில் அச்சரக்குகளில் அடங்கிய மதிப்பையும் உபரி-மதிப்பையும் ஈடேற்றம் செய்யவும், புதிய மூலதனமாக மாற்றவும் முடியாத நிலை ஏற்படுகிறது; அதாவது ஓயாது திரும்பத் திரும்ப வெடித்தெழும் அதிர்வுகள் இல்லாமல் இந்த நிகழ்முறைகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படுகிறது.

செல்வம் அதிகப்படியாய் உற்பத்தி ஆகிறது என்பதல்ல. ஆனால் தமக்குத் தாமே முரண்படும் வடிவங்களாகிய முதலாளித்துவ வடிவங்களில் செல்வம் சில நேரம் அதிகப்படியாய் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதே.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்குள்ள தடைவரம்புகள் பின்வரும் வழிகளில் வெளிப்படுகின்றன:

1) உழைப்பினது உற்பத்தித் திறனின் வளர்ச்சியானது குறைந்து செல்லும் இலாப வீதத்திலிருந்து ஒரு விதியைப் படைக்கிறது. இந்த விதி குறிப்பிட்ட கட்டத்தில் அவ்வளர்ச்சியுடன் பகை முரண்பாடாகி மோதுகிறது; அவ்வப்போது எழும் நெருக்கடிகளின் மூலமாகவே இவ்விதி சமாளிக்கப்பட்டாக வேண்டும்.

2) உற்பத்தியின் பெருக்கமும் சுருக்கமும் ஊதியமிலா உழைப்பின் தனதாக்கத்தாலும் இந்த ஊதியமிலா உழைப்புக்கும் பொதுவாகப் பொருள்வடிவான உழைப்புக்கும் உள்ள விகித உறவாலும் நிர்ணயிக்கப்படுகின்றன; அல்லது முதலாளிகளின் மொழியில் கூறுவதானால், இலாபத்தாலும் இந்த இலாபத்துக்கும் ஈடுபடுத்தப்படும் மூலதனத்துக்கும் உள்ள விகித உறவாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. எனவே சமுதாயத் தேவைகளோடு, அதாவது சமூக வழியில் வளர்ச்சி பெற்ற மனிதப் பிறவிகளின் தேவைகளோடு உற்பத்திக்குள்ள உறவினால் நிர்ணயிக்கப்படுவதற்கு பதில் குறிப்பிட்ட இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்படுகின்றன. இதனால்தான் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை உற்பத்திப் பெருக்கத்தின்

குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் தடைமதில்களை வந்தடைகிறது. ஆனால் தேவை நிறைவின் கோணத்தில், இந்த உற்பத்திப் பெருக்கம் சற்றும் போதுமானதல்ல. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் உற்பத்திப் பெருக்கம் இப்படி எங்கே தடைபடுகிறது என்பது இலாபத்தின் உற்பத்தியினாலும் ஈட்டேற்றத்தினாலும் நிர்ணயிக்கப் படுகிறதே தவிர, தேவைகளை நிறைவு செய்யும் அவசியத்தால் அல்ல.

இலாப வீதம் குறையுமானால், ஒரு புறம் மூலதனம் இன்னுங் கூட முனைந்து செயல்படுகிறது; இவ்விதம் தனிப்பட்ட முதலாளி கள் மேம்பட்ட வழிமுறைகளைக் கொண்டும் இன்ன பிறவாலும் தமது தனிப்பட்ட சரக்கின் மதிப்பை சமுதாய சராசரி மதிப்புக்கும் கீழானதாய்க் குறைத்து, இவ்விதம் நடப்பிலுள்ள சந்தை-விலையில் கூடுதல் இலாபம் அடைய முடிகிறது. மறு புறம் மோசடியும் ஏமாற்றும் தலைதூக்குகின்றன. புதிய உற்பத்தி வழிமுறைகளும் புதிய முதலீடுகளும் புதிய சாகசங்களுமான அவசர முயற்சிகள் இந்த மோசடியைப் பரவலாய் வளர்க்கின்றன. இவை யாவும் பொது சராசரியைச் சாராமலும், அதற்கு மேல் கூடுதலாகவும் சிறிது இலாபம் பெறும் முயற்சிகளே.

இலாப வீதம், அதாவது மூலதனத்தின் ஒப்பீட்டு உயர்வு புதிதாய்க் கிளைத்து வந்து தமக்கென்று சுயேச்சை இடம் பிடிக்க முயன்று கொண்டிருக்கும் மூலதனத் தளிர்களுக்கு எல்லாம் மிகவும் முக்கியமானது. மூலதன உருவாக்கமானது நிலைபெற்ற பெரு மூலதனங்கள் ஒரு சிலவற்றின் கைக்குள் அடங்கியதும் (இலாப வீதத்தின் குறைவை இந்தப் பெருமூலதனங்கள் இலாபத் திரளின் அதிகரிப்பால் ஈடு செய்து கொள்கின்றன) உற்பத்தியின் உயிர்ச் சுடர் அணைந்தே போகும். உற்பத்தி ஓய்ந்து போகும். இலாப வீதமே முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் இயக்குவிசை. இலாபம் கிடைக்கிற விதத்தில் உற்பத்தி செய்ய முடிகிற வரைதான் பண்டங் கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இலாப வீதத்தின் சரிவு குறித்து ஆங்கிலேயப் பொருளாதார அறிஞர்கள் கவலைப்படுவதற்கு இதுவே காரணம். இப்படி நேரலாம் என்னும் சாத்தியப்பாடே கூட ரிக்கார் டோவைக் கவலை கொள்ளச் செய்கிறது; முதலாளித்துவப் பொரு ளுற்பத்திக்கு அவசியமான நிலைமைகளை அவர் எவ்வளவு தீர்க்க மாய் புரிந்து வைத்திருந்தார் என்பதை அவரது இந்தக் கவலை புலப்படுத்துகிறது. எதை அவருக்கு எதிராகச் சொல்லி அவரைச் சாடுகிறார்களோ அதுவேதான்—அதாவது "மனிதனைப்" பற்றி அக்கறை இல்லாமல், மனிதன் தர வேண்டியுள்ள விலையைக் கருதாமல், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியிலும் மூலதன-**மதிப்பு களிலும்** மட்டுமே கருத்து செலுத்துவதாக அவர் மீது குற்றம் சாட்டு கிறார்களே. அதுவேதான்—அவரது முக்கியத்துவத்தை உணர்த்தும் பிரதான விவரமாகும். சமுதாய உழைப்பின் உற்பத்தித் திறனை

வளர்த்திடுவதே வரலாற்று வழியில் மூலதனத்திற்குரிய பணி, இதுவேதான் மூலதனத்திற்குரிய நியாய விளக்கம். இவ்வழியில் தான் மூலதனம் இன்னுமுயர்ந்த உற்பத்தி முறைக்கு வேண்டிய பொருளாயத நிலைமைகளைத் தன்னையுமறியாமல் உருவாக்கு கிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தியை ஊக்குவிக்கும் ஆதா ரமும் மூலதனத் திரட்டலின் அடிப்படை முதற்கோளும் உந்து விசையுமான இலாப வீதம் பொருளுற்பத்தியின் வளர்ச்சி யினாலேயே ஆபத்திற்குள்ளாவதுதான் ரிக்கார்டோவைக் கவலை கொள்ளச் செய்கிறது. அளவுவழி விகித உறவுதான் இங்கே யாவற்றையும் தீர்மானிக்கிறது. இதற்குப் பின்னால் ஆழமாய் ஏதோ மறைந்திருப்பது மெய்தான். ஆனால் அவர் அது பற்றி அரசல் புரசலாகவே உணர்ந்திருந்தார். இது இங்கே முற்றிலும் பொரு ளாதார வழியில்தான் வெளிப்படுகிறது — அதாவது முதலாளித்துவக் கண்ணோட்டத்திலிருந்துதான், முதலாளித்துவப் புரிதலின் வரம்பு களுக்கு உட்பட்டுதான், முதலாளித்துவப் பொருளுற்பத்திக்குரிய கோணத்திலிருந்துதான் வெளிப்படுகிறது. முதலாளித்துவப் பொரு ளுற்பத்தி முறைக்கு ஒரு தடைமதில் உண்டு, இந்தப் பொருளுற் பத்தி முறை அறுதியானது அல்ல, ஒப்பளவிலானதே, வரலாற்று வழிப்பட்டதே, உற்பத்திக்கு வேண்டிய பொருளாயத நிலைமை களின் வளர்ச்சியில் அது வரம்பிற்குட்பட்ட குறிப்பிட்ட சகாப்தத் திற்கு மட்டுமே உரியது என்பது தெரிய வருகிறது.

## IV. கூடுதல் குறிப்புகள்

உழைப்பினது உற்பத்தித் திறனின் வளர்ச்சியானது பல்வேறு தொழிற் கிளைகளிலும் மிகவும் ஏறுமாறாய் நடைபெறுகிறது. படித்தரத்தில் ஏறுமாறாய் நடைபெறுவதோடு அநேக சந்தர்ப்பங் களில் எதிரெதிர்த் திசைகளிலும் கூட நடைபெறுகிறது. ஆகவே, சராசரி இலாபத்தின் (= உபரி-மதிப்பு) திரளானது மிகவும் முன் னேறிய தொழிற் கிளைகளில் உற்பத்தித் திறன் வளர்ந்த பிறகு இயல்பாய் எதிர்பார்க்கக்கூடிய மட்டத்தை விடவும் கணிசமாய்க் குறைந்திருக்க வேண்டும் என்றாகிறது. வெவ்வேறு தொழிற் கிளை களில் உற்பத்தித் திறனின் வளர்சசியானது கணிசமாய் வெவ் வேறான வீதங்களிலும், அநேக சந்தர்ப்பங்களில் எதிரெதிர்த் திசை களிலும் கூட நடைபெறுவதற்கு சந்தைப் போட்டியின் அராஜகமும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் விசேஷத் தன்மையும் மட்டுமல்ல காரணம். உழைப்பின் உற்பத்தித் திறன் இயற்கை நிலைமைகளோடும் பிணைப்புண்டிருப்பதாகும்; உற்பத்தித் திறன் வளர வளர — இது சமுதாய நிலைமைகளைப் பொறுத்ததாகை யால் — அநேக சந்தர்ப்பங்களில் இயற்கை நிலைமைகளின் உற் பத்தித் திறன் குறைந்து போகிறது. இதனால்தான் இந்த வெவ்வேறு

கிளைகளில் எதிரெதிர் அசைவியக்கங்கள் ஏற்படுகின்றது— இங்கே முன்னேற்றம், அங்கே பின்னடைவு. பருவ காலங்களின் தாக்கம் (கச்சாப் பொருட்கள் பலவும் கிடைக்கக்கூடிய அளவு பருவ காலங்களையே சார்ந்துள்ளது), வன நிலங்களும் நிலக்கரி, இரும்புச் சுரங்கங்களும் வளமிழந்து வற்றிப் போதல் இவற்றையெல்லாம் இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

மாறா-மூலதனத்தின் சுழலும் பகுதியாகிய கச்சாப் பொருட்கள் போன்றவை உழைப்பின் உற்பத்தித் திறனுக்கேற்ற விகிதத்தில் தமது திரளை ஓயாமல் அதிகமாக்கிக் கொள்கின்றன; ஆனால் நிலை-மூலதனமாகிய கட்டடங்கள், இயந்திர சாதனம், வெளிச்சத்துக்கும் வெப்பத்துக்குமான வசதிகள் போன்றவை இப்படியல்ல. இயந்திரத்தினது தசையுருவின் திரள் வளரும் போது அவ்வியந்திரத்தின் விலை அறுதிக் கணக்கில் அதிகரித்த போதிலும் ஒப்பளவில் மலிவாகிறது. ஐந்து தொழிலாளர்கள் ஒரு சரக்கை முன்னைப் போல் பத்து மடங்கு அதிகமாய் உற்பத்தி செய்வார்களானால் நிலை-மூலதனத்துக்கான முதலீடு இதனால் பத்து மடங்கு அதிகமாவதில்லை. இந்த மாறா-மூலதனப் பகுதியின் மதிப்பு உற்பத்தித் திறனின் வளர்ச்சியோடு சேர்ந்து அதிகரித்த போதிலும், அதே விகிதத்தில் அதிகரிப்பது கிடையாது; மாறா-மூலதனத்துக்கும் மாறும்-மூலதனத்துக்கும் உள்ள விகிதத்திலான வேறுபாடு இலாப வீதத்தினது சரிவின் வாயிலாகத் தெரிவிக்கப் பெறுவதையும், இதே வேறுபாடு உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ந்து செல்லும் போது தனியொரு சரக்கோடும் அதன் விலையோடும் உறவுபடுத்தித் தெரிவிக்கப் பெறுவதையும் பல முறை சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

[சரக்கின் மதிப்பு அதிலடங்கிய கடந்த கால உழைப்பினதும் உயிருள்ள உழைப்பினதும் மொத்த உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதானது உயிருள்ள உழைப்பின் பங்கு குறைவதிலும், அதே போது கடந்த கால உழைப்பின் பங்கு அதிகரிப்பதிலும்தான் அடங்கியுள்ளது. ஆனால் அச்சரக்கில் அடங்கியுள்ள மொத்த உழைப்பளவு சரிந்து செல்லும் விதத்தில், அதாவது கடந்த கால உழைப்பு அதிகரிப்பதைக் காட்டிலும் உயிருள்ள உழைப்பு குறைந்து போகும் விதத்தில் இம்மாற்றம் நடைபெறுகிறது. ஒரு சரக்கின் மதிப்பில் அடங்கியுள்ள கடந்த கால உழைப்பில்—மூலதனத்தின் மாறாப் பகுதியில்—ஒரு பாகம் நிலை-மூலதனத்தின் தேய்மானத்தால் ஆனது, மற்றொரு பாகம் அச்சரக்கால் முழுக்க நுகரப்பட்ட—கச்சாப் பொருள், துணைப் பொருள் போன்ற—மாறாச் சுழல்-மூலதனத்தால் ஆனது. கச்சாப் பொருட்களிலிருந்தும் துணைப் பொருட்களிலிருந்தும் வரப் பெறும் மதிப்புப் பகுதியானது உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும் போது குறைந்தாக வேண்டும். ஏனென்றால்: இந்தப் பொருட்களைப் பொறுத்த வரை, இவற்றின் மதிப்பைக் குறைப்பதன்

மூலமாகத்தான் உற்பத்தித் திறன் வெளிப்படுகிறது. மறு புறம் மாறா-மூலதனத்தின் நிலைப் பகுதியும், அத்துடன் அதன் மதிப் பில் தேய்மானத்தின் மூலம் சரக்குகளுக்குப் பெயர்க்கப்படும் பகுதியும் வலுவாய்ப் பெருகுவது உழைப்பின் உற்பத்தித் திறன் உயருவதற்கே யுரிய குணக்குறி ஆகும். உற்பத்திக்கான புதிய வழிமுறை மெய் யாகவே உற்பத்தித் திறன் அதிகரிப்பதைக் குறிக்க வேண்டுமானால் அது தேய்மானத்தின் மூலம் சரக்கின் ஒவ்வோர் அலகுக்கும் பெயர்த்திடும் நிலை-மூலதன மதிப்பின் கூடுதல் பகுதியானது உயிருள்ள உழைப்பை மிச்சம் செய்வதன் மூலம் அவ்வலகிலிருந்து பிடித்தமாகிற மதிப்புப் பகுதியை விடச் சிறிதாய் இருக்க வேண்டும்; சுருங்கச் சொல்லின், அது சரக்கின் மதிப்பைக் குறையச் செய் வதாய் இருக்க வேண்டும். கச்சாப் பொருட்கள் அல்லது துணைப் பொருட்களின் அளவோ விலையோ கூடிப் போவதால் நிலை-மூலதனத்தின் தேய்மானத்திற்கான கூடுதல் மதிப்புப் பகுதிக்கும் மேலதிகமாய் ஒரு கூடுதல் மதிப்பு சரக்கின் மதிப்பில் சேருவ தாய் இருந்தாலும் கூட — சில சந்தர்ப்பங்களில் இப்படி நேரிடுவ துண்டு — புதிய வழிமுறையானது சரக்கின் மதிப்பைக் குறையச் செய்வதாகவே இருந்தாக வேண்டும். சரக்கின் மதிப்பு எவ்வகையில் கூடுதலாகப்பட்டாலும், உயிருள்ள உழைப்பைக் குறைப்பதிலிருந்து விளையும் மதிப்புக் குறைப்பு அதையெல்லாம் விஞ்சிச் செல்வதாய் இருந்தாக வேண்டும்.

பொருளுற்பத்தி எத்தகைய சமூக நிலைமைகளில் நடைபெற்றா லும் சரி, சரக்கில் சேரும் மொத்த உழைப்பளவைக் குறைப்பதுதான் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதற்கான அடிப்படை அளவுகோலாகத் தெரிகிறது. உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியை முன்கூட்டியே திட்டம் வகுத்து ஒழுங்கு செய்து கொள்ளும் சமு தாயத்தில், ஏன், சாமானிய சரக்கு உற்பத்தியிலும் கூட உழைப்பின் உற்பத்தித் திறனானது எப்போதும் இந்நியமத்தைக் கொண்டே அளவிடப்படும் என்பது மெய்தான். ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் என்ன நிலைமை?

முதலாளித்துவத் தொழில் துறையின் குறிப்பிட்ட ஒரு கிளை பின்வரும் நிலைமைகளில் அதன் சரக்கின் இயல்பான அலகினை உற்பத்தி செய்வதாகக் கொள்வோம். நிலை-மூலதனத் தேய்மானம் உருப்படிக்கு ½ ஷில்லிங்; அதில் சேரும் கச்சாப் பொருட்கள், துணைப் பொருட்களின் மதிப்பு உருப்படிக்கு 17½ ஷில்லிங்; கூலி 2 ஷில்லிங்; உபரி-மதிப்பு வீதம் 100% எனவே உபரி-மதிப்பு 2 ஷில்லிங். மொத்த மதிப்பு 22 ஷில்லிங். இந்த உற்பத்திக் கிளையில் உள்ள மூலதனம் சமுதாய மூலதனத்தின் சராசரி இயை புடையதென்று எளிமையின் பொருட்டு அனுமானம் செய்து கொள்கிறோம்; அதாவது சரக்கின் உற்பத்தி-விலையும் அதன் மதிப்பும் ஒன்றுதான், முதலாளியின் இலாபமும் படைக்கப்படும்

உபரி-மதிப்பும் ஒன்றுதான். ஆக, சரக்கின் அடக்கவிலை = ½ + + 17½ + 2 = 20 ஷில்லிங்; சராசரி இலாப வீதம் $\frac{2}{20}$ = 10%; சரக்கின் உற்பத்தி-விலை உருப்படி ஒன்றுக்கு (அதன் மதிப்பைப் போலவே) = 22 ஷில்லிங்.

ஓர் இயந்திரம் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு, அது சரக்கின் ஒவ்வோர் உருப்படிக்கும் தேவையான உயிருள்ள உழைப்பை சரிபாதி குறையச் செய்வதாகவும், ஆனால் சரக்கின் மதிப்பில் நிலை-மூலதனத்தின் தேய்மானத்திற்குரிய பகுதியை மும்மடங்கு ஆக்கி விடுவதாகவும் கொள்வோம். அப்போது கணக்கீடு பின் வருமாறு அமையும்: தேய்மானம் = 1½ ஷில்லிங்; கச்சாப் பொருட் களுக்கும் துணைப் பொருட்களுக்கும் முன் போலவே 17½ ஷில்லிங்; கூலி 1 ஷில்லிங்; உபரி-மதிப்பு 1 ஷில்லிங்; மொத்தம் 21 ஷில்லிங். ஆக, சரக்கின் மதிப்பு 1 ஷில்லிங் குறைகிறது; புதிய இயந்திரம் உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய் திருப்பது உறுதி. ஆனால் முதலாளி எப்படிப் பார்க்கிறார் என் றால்: அவரது அடக்க-விலை இப்போது தேய்மானத்துக்கு 1½ ஷில்லிங், கச்சாப் பொருட்களுக்கும் துணைப் பொருட்களுக்கும் 17½ ஷில்லிங், கூலிக்கு 1 ஷில்லிங். மொத்தம் முன் போலவே 20 ஷில்லிங். புதிய இயந்திரத்தால் இலாப வீதம் உடனே மாறி விடுவதில்லை என்பதால், அவர் தமது அடக்க-விலைக்கு மேல் 10%, அதாவது 2 ஷில்லிங் பெறுவார். ஆக, உற்பத்தி-விலை = 22 ஷில்லிங் என்பதில் மாற்றமில்லை; ஆனால் இது மதிப்பைக் காட்டிலும் 1 ஷில்லிங் கூடுதல் ஆகும். முதலாளித்துவ நிலைமை களில் பொருளுற்பத்தி செய்யும் சமுதாயத்தைப் பொறுத்த வரை, சரக்கு விலைமலிவாகவில்லை. புதிய இயந்திரம் அச்சமுதாயத்திற்கு எவ்விதத்தும் மேம்பாடே அல்ல. ஆகவே, அதைப் புகுத்துவதில் முதலாளிக்கு அக்கறையில்லை. அதைப் புகுத்துவது இப்போது அவரிடமுள்ள இன்னமும் தேய்ந்தொழியாத இயந்திர சாதனத்தை ஒன்றுக்கும் உதவாமற் செய்து விடும், கழிப்பிரும்புக் கடைக்கு உரிய தாக்கி விடும், எனவே நேரடியாகவே இழப்பை ஏற்படுத்தும் என்பதால், அவர் கண்ணும் கருத்துமாய் இருந்து இந்தத் தவறை — அவரது பார்வையில் கற்பனாவாதத் தவறாகிய இதனை — தவிர்த் திடுகிறார்.

ஆக, உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பது தொடர்பான விதி மூலதனத்திற்கு முழுமுதலாய்ப் பொருந்தக் கூடியதல்ல. மூலதனத்தைப் பொறுத்த வரை, உற்பத்தித் திறன் அதிகரிப்பது கடந்த காலத்தில் செலவிடப்பட்ட உழைப்புடன் ஒப்பிடுகையில் உயிருள்ள உழைப்பின் ஊதியப் பகுதியை மிச்சம் செய்வதன் மூலம்தானே தவிர, பொதுவாக உயிருள்ள உழைப்பை மிச்சம் செய்வதன் மூலம் அல்ல — இதை முதல் பாகத்திலேயே போகிற

போக்கில் சொல்லி வைத்தோம் (அத்தியாயம் XV, பிரிவு 2 பக்கம் 531-33). இங்கே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் இன்னொரு முரண்பாடு வெளிப்படுகிறது. மனித உழைப்பின் உற்பத்தித் திறனை பெருக்கு விருத்தியில் தட்டுத்தடையின்றி வளர்த்துச் செல்வது அதன் வரலாற்றுப் பெரும் பணி ஆகும். இங்கு நடைபெறுவது போல் அது உற்பத்தித் திறனின் வளர்ச்சியை மட்டுப்படுத்தும் போதெல்லாம் இப்பெரும் பணியிலிருந்து பின் வாங்கிச் செல்கிறது. அது முழுமை அடைந்து வருவதும், மேலும் மேலும் காலாவதியாகி வருவதும் இதிலிருந்தும் கூட தெளி வாகிறது.][37]

---

உற்பத்தித் திறன் அதிகரிக்கும் போது சுயேச்சையான தொழில் நிறுவனம் ஒன்றை வெற்றிகரமாய் இயக்குவதற்குத் தேவையான மூலதனத்தின் குறைந்தபட்ச அளவும் அதிகரிக்கிறது. அதிகரித்துச் செல்லும் இந்த குறைந்தபட்ச அளவானது போட்டி காரணமாய் பின்வரும் தன்மையை மேற்கொள்கிறது: அதிக விலையுள்ளதாகிய புதிய சாதனம் எங்கெங்கும் நிலைபெற்றவுடனே, சிறு மூலதனங்கள் அதுமுதல் இத்தொழிலிலிருந்து விலக்கப்பட்டு விடுகின்றன. இயந் திரக் கண்டுபிடிப்புகளின் இளம் பிராயத்தில் மட்டுமே சிறு மூல தனங்கள் பல்வேறு தொழிற் கிளைகளிலும் சுயேச்சையாய் இயங்கி வர முடிகிறது. மறு புறம் அசாதாரண அளவுக்கு உயர்ந்த விகிதத் தில் மாறா-மூலதனத்தைக் கொண்டிருக்கும் மிகப் பெரும் தொழில் முயற்சிகள் — எடுத்துக்காட்டாக இரயில்வேக்கள் — சராசரி இலாப வீதம் தருவதற்கு பதில் அதில் ஒரு பகுதி மட்டுமே, வட்டி மட்டுமே தருகின்றன. இல்லையேல் பொது இலாப வீதம் இன்னும் கீழே சரிந்து விட்டிருக்கும். ஆனால் இவ்வழியில் பெரும் மூலதனக் குவிப்புகளைப் பங்குகளின் வடிவில் நேரடியாக ஈடுபடுத்தும் வாய்ப்பு கிடைக்கிறது.

மூலதனப் பெருக்கம், எனவே மூலதனத் திரட்டல் மூலதனத் தின் அங்கக் கூறுகளின் விகித உறவில் மேற்கூறிய மாற்றங்களுக்கு வழிசெய்வதாய் இல்லாது போனால் இலாப வீதம் குறைவதைக் குறிப்பதாகாது. எனவே, உற்பத்தி முறையில் ஓயாமல் அனு தினமும் புரட்சிகள் ஏற்பட்ட போதிலும் மொத்த மூலதனத்தில் ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு பகுதியாய் பெரியதோ சிறியதோ ஆன ஒரு பகுதி அந்த அங்கக் கூறுகளின் குறிப்பிட்ட சராசரி விகித

---

37 எங்கெல்ஸ் குறிப்பு. — மூலக் கையெழுத்துப் பிரதியின் குறிப்புகளை ஒட்டிச் சேர்த்து எழுதப்பட்டதென்றாலும், சில அமிசங்களில் மூலதனத்தில் காணப்படும் நூற்பொருளின் வீச்சுக்கும் அப்பாற்பட்டதாய் இருப்பதால் மேற்கண்ட பகுதி அடைப்புக் குறிகளில் தரப்படுகிறது.

உறவின் அடிப்படையில் குறிப்பிட்ட காலங்களுக்குத் தொடர்ந்து திரள்கிறது; அதாவது அம்மூலதனம் வளர்ந்த போதிலும் எவ்வித அங்கக மாற்றத்திற்கும் உள்ளாவதில்லை. இதனால் இலாப வீதமும் குறைவதில்லை. உற்பத்திக்கான புதிய வழிமுறைகள் அக்கம் பக்கத்தில் புகுத்தப்பட்டு வரும் போதே பாதிப்பின்றித் தொடர்கிற பழைய வழிமுறையின் அடிப்படையில் மூலதனம் இப்படி ஓயாமல் விரிவடைவது, எனவே உற்பத்தியும் விரிவடைவது சமுதாயத்தின் மொத்த மூலதனம் பெருகும் அளவுக்கு ஏன் இலாப வீதம் குறைவதில்லை என்பதற்கு இன்னொரு காரணமாகும்.

கூலியில் முதலீடாகிற மாறும்-மூலதனம் ஒப்பளவில் குறைந்த போதிலும் தொழிலாளர்களின் அறுதி எண்ணிக்கையிலான அதிகரிப்பு எல்லா உற்பத்திக் கிளைகளிலும் ஏற்படுவ்திதில்லை, எல்லாவற்றிலும் ஒரே சீராய் ஏற்படுவதுமில்லை. உயிருள்ள உழைப்பாகிய அடிக்கூறு வேளாண்மையில் அறுதியாகவே குறையக் கூடும்.

எப்படியானாலும், கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒப்பளவில் குறைந்தாலும் அறுதியாய் அதிகரிப்பது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு அவசியமாகும். உழைப்புச் சக்தியை நாளொன்றுக்கு 12 முதல் 15 மணி நேரம் வேலை வாங்குவது அவசியமில்லாமற் போனவுடனே உழைப்புச் சக்தி தேவைக்கதிகமானதாகி விடுகிறது. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி தொழிலாளர்களின் அறுதி எண்ணிக்கையைக் குறையச் செய்யுமானால், அதாவது நாடு முழுவதும் முழு உற்பத்தியையும் இன்னும் குறுகிய கால அளவில் செய்து முடிக்க உதவுமானால், அவ்வளர்ச்சி பெரும் பகுதி மக்களை ஓரங்கட்டி ஒதுக்கித் தள்ளி, புரட்சிக்கு வழிகோலுவதாய் இருக்கும். இது முதலாளித்துவப் பொருளுற்பத்திக்குள்ள பிரத்தியேகத் தடைமதிலை நிதர்சனமாக்கும் இன்னோர் எடுத்துக்காட்டாகும். உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கும் செல்வத்தின் படைப்புக்கும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி எவ்வகையிலும் ஓர் அறுதி வடிவம் அல்ல என்பதோடு, இந்த வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் அதனோடு முரண்பட்டு மோதவும் செய்கிறது என்பதையும் இது தெளிவாக்குகிறது. இந்த மோதல் ஓரளவுக்குக் காலவட்ட நெருக்கடிகளில் வெளிப்படுகிறது; உழைக்கும் மக்கள்தொகையில் ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு பகுதியினர் அவர்களின் பழைய வேலைவாய்ப்பு முறையில் தேவைக்கதிகமானோர் ஆகிற நிலைமையிலிருந்து எழுகிறவை இந்நெருக்கடிகள், முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வரம்பு தொழிலாளர்களின் அதிகப்படியான நேரமே ஆகும்; சமுதாயம் ஈட்டுகிற மீத நேரம் குறித்து அதற்குக் கவலை இல்லை; உற்பத்தித் திறனின் வளர்ச்சியானது பொதுவாகப் பொருளுற்பத்திக்கான உழைப்பு நேரத்தைக் குறையச் செய்கிறது என்பதால் அல்ல, தொழிலாளி வர்க்கத்தின் உபரி-உழைப்பு நேரத்தை அதிகரிக்கச் செய்கிறது என்பதால்

மட்டுமே அதற்கு அக்கறைக்குரியதாகும். இவ்விதம் அது ஒரு முரண்பட்ட வழியில் இயங்குகிறது.

வளர்ந்து செல்லும் மூலதனத் திரட்டல் வளர்ந்து செல்லும் மூலதனக் குவிப்பைக் குறிப்பதாய்ப் பார்த்தோம். மூலதனத்தின் சக்தி, முதலாளியாக ஆளுருவம் பெற்றுள்ள சமுதாய உற்பத்திச் சாதனங்கள் மெய்யான உற்பத்தியாளர்களிடமிருந்து அந்நியமாதல் இவ்விதமாக வளர்ந்து செல்கிறது. மூலதனம் மென்மேலும் ஒரு சமுதாய சக்தியாக முன்னுக்கு வருகிறது; இச்சக்தியின் செயலியே முதலாளி. இந்தச் சமுதாயச் சக்திக்கும் தனியொருவரின் உழைப் பால் படைக்க முடிவதற்கும் ஒட்டுமில்லை, உறவுமில்லை. அது ஓர் அந்நியமான, சுயேச்சையான சமுதாயச் சக்தியாகிறது; ஓர் இலக்காய் நின்று, முதலாளி செலுத்தும் சக்திக்கு ஆதாரமான இலக்காய் நின்று சமுதாயத்தை எதிர்க்கிறது. மூலதனம் பொது வான சமுதாயச் சக்தியாக வளருகிறது அல்லவா, இந்தச் சமுதாயச் சக்திக்கும் சமுதாய உற்பத்தி நிலைமைகள் மீது முதலாளிகள் தனிப்பட்ட முறையில் செலுத்தும் சக்திக்கும் இடையிலான முரண் பாடு இணக்கங் காண முடியாததாய் மென்மேலும் வளர்ந்து செல்கிறது. ஆனால் பிரச்னைக்கான தீர்வும் இம்முரண்பாட்டிலேயே அடங்கியுள்ளது; ஏனென்றால் அதே போது இது உற்பத்தி நிலைமைகள் அனைவருக்கும் பொதுவான சமுதாய நிலைமை களாக உருமாற்றம் பெறுவதைக் குறிப்பதாகிறது. இந்த மாற்றம் முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் உற்பத்திச் சக்திகள் [productive forces] அடையும் வளர்ச்சியிலிருந்தும், இந்த வளர்ச்சியை ஏற்படச் செய்யும் வழிவகைகளிலிருந்தும் விளைவதாகும்.

---

உற்பத்திக்கான புதிய வழிமுறை ஒன்று இலாப வீதத்தைக் குறையச் செய்வதாய் உள்ள வரை, அது எவ்வளவுதான் உற்பத்தித் திறனுள்ளதாய் இருந்தாலும், எவ்வளவுதான் உபரி-மதிப்பு வீதத்தை உயர்த்தக் கூடியதாய் இருந்தாலும், எந்த முதலாளியும் தாமாகவே அவ்வழிமுறையை ஒருபோதும் புகுத்த மாட்டார். ஆனால் இத்தகைய புதிய உற்பத்தி வழிமுறை ஒவ்வொன்றும் சரக்குகளை விலை மலிவாக்குகிறது. ஆகவே முதலாளி அவற்றை ஆரம்பத்தில் அவற் றின் உற்பத்தி-விலைக்கு மேல், அல்லது அநேகமாய் அவற்றின் மதிப்புக்கு மேல் விலை வைத்து விற்கிறார். அவற்றின் உற்பத்திச் செலவுக்கும் இன்னுமுயர்ந்த உற்பத்திச் செலவில் தயாரிக்கப்படும் அதே சரக்குகளின் சந்தை-விலைக்கும் இடையிலான வேறுபாடாய் அமையும் தொகையை அவர் அடைந்து கொள்கிறார். எதனால் அவர் இப்படிச் செய்ய முடிகிறது என்றால், இரண்டாவதாகக் குறிப்பிட்ட இச்சரக்குகளின் உற்பத்திக்கு சமூக வழியில் தேவைப் படும் சராசரி உழைப்பு நேரம் புதிய உற்பத்தி வழிமுறைகளுக்குத்

தேவைப்படும் உழைப்பு நேரத்தை விட அதிகமாய் இருக்கிறது. அவரது உற்பத்தி வழிமுறை சமுதாயச் சராசரிக்கு மேம்பட்டதாய் இருக்கிறது. ஆனால் போட்டியானது அவ்வழிமுறையைப் பொது வானதாக்கி பொது விதிக்கு உட்படச் செய்கிறது. இதையடுத்து இலாப வீதம் குறைகிறது—இக்குறைவு இந்த உற்பத்திக் கிளையில் முதலாவதாய் இருக்கலாம்; முடிவில் அது ஏனைய கிளைகளோடு சமநிலை அடைகிறது. ஆகவே இலாப வீதம் இப்படிக் குறைவது கிஞ்சிற்றும் முதலாளியின் சித்தம் சார்ந்து நடைபெறுவதல்ல.

இன்னொன்றையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்: தொழி லாளர்களின் நுகர்விலோ, அவர்களின் அவசியத் தேவைகளை ஆக்கப் பயன்படும் உற்பத்திச் சாதனங்களிலோ நேரடியாகவோ சுற்றடியாகவோ சேராத பண்டங்களைச் செய்தளிக்கும் உற்பத்திக் கிளைகளும் இதே விதியால் ஆளப்படுகின்றன; ஆகவே ஒப்பீட்டு உபரி-மதிப்பைக் கூடுதலாக்குவது, அல்லது உழைப்புச் சக்தியை விலைமலிவாக்குவது என்ற விதத்தில் சரக்குகளின் விலைமலி வாதல் ஏதும் நடைபெறாத உற்பத்திக் கிளைகளுக்கும் இவ்விதி பொருந்தும். (எப்படியானாலும், உழைப்பின் மீதான சுரண்டல்-கடுமை மாறாதிருக்க, இந்தக் கிளைகள் யாவற்றிலும் மாறா-மூலதனம் விலைமலிவாவது இலாப வீதத்தை உயர்த்தக் கூடும்.) உற்பத்திக்கான புதிய வழிமுறை பரவத் தொடங்கியதுமே, இவ் விதம் உள்ளபடியே இந்தச் சரக்குகளை இன்னுங் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடியும் என்பதைக் கண்கூடாய் நிரூபிக்கத் தொடங்கியதுமே, பழைய உற்பத்தி வழிமுறைகளைப் பயன்படுத்தி வரும் முதலாளிகள் தமது பண்டத்தை அதன் முழு உற்பத்தி-விலைக்குக் கீழாய் விற்க வேண்டியதாகிறது; ஏனென்றால் இந்தச் சரக்கின் மதிப்பு குறைந்து விட்டது, அவர்கள் அதனை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் உழைப்பு நேரம் சமுதாயச் சராசரியை விடக் கூடுதலாகி விட்டது. சுருங்கச் சொல்லின் — இது போட்டியின் விளைவுகளில் ஒன்றாகத் தெரிகிறது — இந்த முதலாளிகளும் மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்குமான விகிதத்தைக் குறையச் செய்யும் புதிய உற்பத்தி வழிமுறையைப் புகுத்தியாக வேண்டும்.

தன்னால் உற்பத்திச் செய்யப்படும் சரக்கின் விலையை மலி வாக்குகிற இயந்திர சாதனத்தைப் பயன்படுத்த வழிகோலும் நிலை மைகள் யாவும் — இறுதியாகப் பார்க்குமிடத்து — தனியொரு சரக்கு-உருப்படியால் உட்கிரகிக்கப்படும் உழைப்பளவு குறைந்து போவதைக் குறிக்கின்றன; இரண்டாவதாக, இயந்திர சாதனத்தின் தேய்மானத் தில் ஒரு பகுதியின் மதிப்பு தனியொரு சரக்கு-உருப்படியில் சேருகிறது அல்லவா, அப்பகுதி குறைந்து போவதைக் குறிக்கின் றன. இயந்திர சாதனத்தின் தேய்மானம் எவ்வளவுக்கு எவ்வளவு மந்தகதியில் ஏற்படுகிறதோ, இந்தத் தேய்மான மதிப்பு அவ்வள வுக்கு அவ்வளவு அதிகமான சரக்குகளிடையே வினியோகமாகிறது,

மற்றும் அதன் மறுவுற்பத்திக்குரிய காலம் வருமுன்பே உயிருள்ள உழைப்பை அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் அது மாற்றீடு செய்கிறது. இரு நேர்வுகளிலுமே நிலையான மாறா-மூலதனத்தின் அளவும் மதிப்பும் மாறும்-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் அதிகரிக்கின்றன.

''மற்றவை யாவும் மாறாதிருக்க, நாடு அதன் இலாபத்திலிருந்து சேமிக்கும் ஆற்றல் இலாப வீதத்திற்கேற்ப மாறுகிறது: இலாப வீதம் உயர்ந்திருந்தால் அதிகமாகவும், இலாப வீதம் தாழ்ந்திருந்தால் குறைவாகவும் இருக்கிறது; ஆனால் இலாப வீதம் குறையும் போது மற்றவை யாவும் மாறாதிருப்பதில்லை.... சாதாரணமாக, இலாப வீதம் குறைந்திருக்கும் போது, மக்கள்தொகையுடன் ஒப்பிடுகையில் மூலதனத் திரட்டல் அதிவேகமாய் நடைபெறுகிறது; எடுத்துக்காட்டு: இங்கிலாந்து.... இலாப வீதம் உயர்ந்திருக்கும் போது, மக்கள்தொகயுடன் ஒப்பிடுகையில் மூலதனத் திரட்டல் மெதுவாய் நடைபெறுகிறது; எடுத்துக்காட்டு: போலந்து, ருஷ்யா, இந்தியா முதலானவை.'' (ரிச்சர்டு ஜோன்ஸ், **அரசியல் பொருளாதாரம் பற்றிய அறிமுக விரிவுரை**, லண்டன், 1833, பக்கம் 50, அடிக்குறிப்பு.) இலாப வீதம் குறைந்து சென்ற போதிலும் மூலதனம் திரட்டுவதற்கான தூண்டுதல்களும் செயலாற்றல்களும் பெருகுவதாக ஜோன்ஸ் சரியாகவே வலியுறுத்திச் சொல்கிறார்; அவை இப்படிப் பெருகுவதற்கு முதலாவது காரணம், ஒப்பீட்டு மிகை-மக்கள்தொகை வளர்ந்து செல்வதாகும்; இரண்டாவது காரணம், உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ந்து செல்லும் போது, குறிப்பிட்ட பரிவர்த்தனை-மதிப்பால் குறிக்கப்பெறும் பயன்-மதிப்புகளின் திரளும், எனவே மூலதனத்தின் பொருட் கூறுகளும் அதிகரிப்பதாகும்; மூன்றாவது காரணம், உற்பத்திக் கிளைகள் மேலும் பல்வேறாய்ப் பிரிவதாகும். நான்காவது காரணம், கடன்-செலாவணி அமைப்பு, பங்கு நிறுமங்கள் முதலானவை வளர்ச்சியடைவதும், தொழில் துறை முதலாளி ஆகாமலே பணத்தை மூலதனமாக மாற்றும் சந்தர்ப்பம் இதன் விளைவாக எழுவதும் ஆகும். ஐந்தாவது காரணம், தேவைகளும் செல்வப் பேராசையும் அதிகரிப்பதாகும். ஆறாவது காரணம், நிலை-மூலதனத்திலான முதலீடுகளின் திரள் பெருகுவதாகும்; இவ்வாறே மேலும் சொல்லலாம்.

---

முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் தலையாய மூன்று உண்மைகள் வருமாறு:

1) உற்பத்திச் சாதனங்கள் ஒரு சிலர் கையில் குவிக்கப்படுகின்றன. இதனால் இவை நேரடி உழைப்பாளர்களின் உடைமையாக விளங்கும் நிலை மறைந்து சமுதாய உற்பத்தி ஆற்றல்களாய் மாறிப் போகின்றன. தொடக்கத்தில் இவை முதலாளிகளின் தனிச்

சொத்தாக [private property] இருந்தாலும் கூட இவர்கள் முதலாளித்துவச் சமுதாயத்தின் அறங்காவலர்களாகவே இருக்கிறார்கள்; ஆனால் இந்த அறங்காவல் பொறுப்பின் வரவுகளை எல்லாம் தமதாக்கிக் கொண்டு விடுகிறார்கள்.

2) உழைப்பு சமுதாய உழைப்பாக ஒழுங்கமைக்கப்படுகிறது; கூட்டு-வேலையின் [co-operation] மூலமும், உழைப்புப் பிரிவினையின் மூலமும், உழைப்பை இயற்கை விஞ்ஞானங்களுடன் ஒன்றுபடுத்துவதன் மூலமும் இது நடைபெறுகிறது.

இந்த இரு அர்த்தங்களிலும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது—முரண்பாடான வடிவங்களில்தான் என்றாலும்—தனிச் சொத்தையும் தனிப்பட்ட சொந்த உழைப்பையும் ஒழித்துக் கட்டுகிறது.

3) உலகச் சந்தை உருவாகிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் மக்கள்தொகையுடன் ஒப்பிடுகையில் உற்பத்தித் திறன் பிரமாதமாய் வளர்ச்சி அடைகிறது; அதே விகிதத்தில் இல்லா விட்டாலும் மூலதன-மதிப்புகளும் (இவற்றின் பொருட் கூறுகள் மட்டுமல்ல) அதிகரிக்கின்றன; இவை மக்கள்தொகையைக் காட்டிலும் மிகத் துரிதமாய் அதிகரிக்கின்றன. இந்த வளர்ச்சியும் இந்த அதிகரிப்பும் பெருகிச் செல்லும் செல்வத்துடன் ஒப்பிடுகையில் ஓயாமல் குறுகிச் செல்வதான அடிப்படையுடன் முரண்படுகின்றன (இந்தப் பிரம்மாண்டமான உற்பத்தித் திறன் அனைத்தும் இந்த அடிப்படைக்கே பணி புரிகிறது). பெருகிச் செல்லும் இந்த மூலதனம் எந்நிலைமைகளில் தன் மதிப்பை அதிகமாக்கிக் கொள்கிறதோ அந்நிலைமைகளுடனும் இவை முரண்படுகின்றன. எனவேதான் வெடித்தெழுகின்றன நெருக்கடிகள்.

## பகுதி IV

# சரக்கு-மூலதனமும் பண-மூலதனமும் வர்த்தக-மூலதனமாகவும் தனவணிக-மூலதனமாகவும் (வணிக-மூலதனமாக) உருமாறுதல்

### அத்தியாயம் XVI

### வர்த்தக-மூலதனம்

*வணிக-மூலதனமானது இரு வகைகள் அல்லது உட்பிரிவுகளாக, அதாவது வர்த்தக-மூலதனமாகவும் [commercial capital] தனவணிக-மூலதனமாகவும் [money-dealing capital] பிரிகிறது; மூலதனத்தின் அடிப்படைக் கட்டமைப்பு தொடர்பான நமது பகுப்பாய்வுக்கு அவசியமாதலால், இவற்றுக்கு இப்போது இன்னும் துல்லியமாய் இலக்கணம் வகுத்துரைப்போம். இக்கால அரசியல் பொருளாதாரம், அதன் மிகச் சிறந்த பிரதிநிதிகளின் விளக்கங்களிலும் கூட, வணிக-மூலதனத்தையும் தொழில் துறை மூலதனத்தையும் வேறுபடுத்தாமலே ஒன்றாய்ச் சேர்த்து விடுவதால், முன்னதன் தனியியல்புகளைக் காணத் தவறி விடுவதால் இப்படி இலக்கணம் வகுத்துரைப்பது அத்தியாவசியம் ஆகிறது.*

---

சரக்கு-மூலதனத்தின் அசைவியக்கங்களை இரண்டாம் பாகத்தில் (பக்கம் 114-30) பரிசீலித்தோம். சமுதாயத்தின் மொத்த மூலதனத்தை எடுத்துக் கொள்வோமானால், அதில் ஒரு பகுதி—எப்போதுமே வெவ்வேறு கூறுகளால் ஆனதும் பருமனில் மாறிக் கொண்டிருப்பதுமான ஒரு பகுதி—எப்போதுமே சந்தையில் சரக்குகளின் வடிவில் இருந்து விடுகிறது; இந்தச் சரக்குகளைப் பணமாக மாற்ற வேண்டும். இன்னொரு பகுதி சந்தையில் பண வடிவில் இருந்து வருகிறது; இந்தப் பணத்தைச் சரக்குகளாக மாற்ற வேண்டும். மூலதனம் எப்போதுமே இப்படி மாறிச் செல்லும் நிகழ்முறையில், இப்படி வடிவ மாற்றத்துக்கு உள்ளாகும் நிகழ்முறையில் இருந்து வருகிறது. சுற்றோட்ட நிகழ்முறையில் மூலதனத்தின் இந்தப் பணி தனி மூலதனத்தின் தனிப் பணியாக, உழைப்புப் பிரிவினையின்

அடிப்படையில் நிறுவப்படும் பணியாக முதலாளி களின் தனிக் குழுவுக்கு ஒதுக்கப்படுவதால் சரக்கு-மூலதனம் வர்த்தக-மூலதன மாகிறது.

போக்குவரத்துத் தொழிலையும் சரக்குச் சேமிப்பையும், வினி யோகம் செய்யத்தக்க வடிவிலுள்ள சரக்குகளின் வினியோகத்தை யும் எந்த அளவுக்கு சுற்றோட்ட நிகழ்முறைக்குள் தொடரும் உற்பத்தி நிகழ்முறைகளாகக் கருதலாம் என்பதை முன்பே விளக்கிச் சொன்னோம் (இரண்டாம் பாகம், அத்தியாயம் VI, ''சுற்றோட்டச் செலவுகள்,'' பிரிவு 2, 3). சரக்கு-மூலதனச் சுற்றோட்டத்தின் போது இடைநிகழ்வுகளாய் நடைபெறுகிற இவை வணிக அல்லது வர்த்தக-மூலதனத்துக்குரிய தனிப் பணிகளோடு குழப்பிக் குளறுபடி செய்யப் படுகின்றன. இவை சில நேரம் உள்ளபடியே இந்தப் பிரத்தியேகமான தனிப் பணிகளோடு நடைமுறையில் பிணைக்கப் பட்டிருக்கின்றன; ஆனால் சமுதாய உழைப்புப் பிரிவினை வளர்ச்சி அடையும் போது, வணிக-மூலதனத்தின் பணி அந்தத் துணைப் பணிகளிலிருந்து துண்டிக்கப்பட்டு அவற்றைச் சாராத தூய வடிவில் பரிணமிக்கிறது. ஆகவே அந்தப் பணிகள் மூலதனத்தினது இந்தத் தனி வடிவத்தின் பிரத்தியேக வேறுபாட்டை விளக்குவதான நமது நோக்கத்துக்கு வேண்டாதவை. முழுக்க முழுக்க சுற்றோட்ட நிகழ் முறையில் மட்டும் ஈடுபடுத்தப்படும் மூலதனமாகிய தனி வர்த்தக-மூலதனம் ஓரளவுக்கு அந்தப் பணிகளை அதன் பிரத்தியேகப் பணிகளோடு இணைத்திடுவதால் அதன் தூய வடிவில் காணப் படுவதில்லை. அதிலிருந்து இந்தத் துணைப் பணிகளை எல்லாம் களைந்த பிறகு அதன் தூய வடிவம் நமக்குக் கிடைக்கிறது.

மூலதனம் சரக்கு-மூலதனமாக நிலவுவதும், சரக்கு-மூலதனம் என்ற முறையில் சந்தையில் சுற்றோட்டத் துறைக்குள் அது உரு மாறுவதும் — இந்த உருமாற்றம் வாங்குவதும் விற்பதுமாய், சரக்கு-மூலதனத்தைப் பண-மூலதனமாகவும் பண-மூலதனத்தைச் சரக்கு-மூலதனமாகவும் மாற்றுவதாய்ப் பெயர்கிறது — தொழில் துறை மூலதனத்தின் மறுவுற்பத்தி நிகழ்முறையில், எனவே அதன் ஒட்டு மொத்த உற்பத்தி நிகழ்முறையில் ஒரு கட்டமாகும் என்று பார்த் தோம். ஆனால் சுற்றோட்ட மூலதனமாக அது ஆற்றும் பணி திறனுடை-மூலதனமாக அது ஆற்றும் பணியிலிருந்து வேறுபட்ட தென்றும் பார்த்தோம். இவை ஒரே மூலதனத்தின் தனித்தனியான இருவேறு நிலவல் வடிவங்களாகும். மொத்தச் சமுதாய மூலதனத்தில் ஒரு பகுதி சுற்றோட்ட மூலதனத்தின் வடிவில் எந்நேரமும் சந்தை யில் செயல்பட்டு, உருமாற்ற நிகழ்முறையைக் கடந்து கொண்டிருக் கிறது. ஆயினும் தனிப்பட்ட ஒவ்வொரு மூலதனத்தையும் பொறுத்த வரைஅது சரக்கு-மூலதனமாக இருந்து கொண்டும், இவ்வடிவி லிருந்து உருமாற்றம் அடைந்து கொண்டும் இருக்கிறது. இவ்விரு நிலைகளும் ஓயாமல் மறைந்தும் ஓயாமல் புதுப்பிக்கப்பட்டும்

வருகிற திருப்புமுனைகளையே குறிக்கின்றன; அதாவது தொடர்ந்து நிகழும் அதன் உற்பத்தி நிகழ்முறையில் ஒன்று மற்றொன்றாய் மாறும் கட்டங்களையே குறிக்கின்றன. சந்தையிலுள்ள சரக்கு-மூலதனக் கூறுகள் இதனால் ஓயாமல் மாறிய வண்ணமுள்ளன, சரக்குச் சந்தையிலிருந்து இடையறாது வெளியே எடுக்கப்பட்டும், அதே போல் காலவட்ட உற்பத்தி நிகழ்முறையின் புதிய பண்டங்களாக அவ்வப் போது சரக்குச் சந்தைக்குத் திருப்பியனுப்பப்பட்டும் வருகின்றன.

வர்த்தக-மூலதனமானது ஓயாமல் சந்தையில் காணப்படுவதும், எந்நேரமும் உருமாற்ற நிகழ்முறையில் இருப்பதும், எப்போதும் சுற்றோட்டத் துறையின் வசத்திலிருப்பதுமான இந்தச் சுற்றோட்ட மூலதனத்தில் ஒரு பகுதியின் மாறிய வடிவமே தவிர வேறல்ல. ஒரு பகுதி என்று நாம் சொல்வது ஏனென்றால், சரக்குகளை விற்ப திலும் வாங்குவதிலும் ஒரு பகுதி எப்போதுமே நேரடியாகத் தொழில் துறை முதலாளிகளிடையே நடைபெறுகிறது. இந்தப் பகுதியை நாம் இப்பகுப்பாய்வில் கருத்தில் கொள்ளாமல் அறவே விட்டு விடுகிறோம். ஏனென்றால் வணிக-மூலதனம் என்னும் கருத்துருவத்திற்கு இலக்கணம் வகுக்கவோ, அம்மூலதனத்தின் பிரத்தியேகத் தன்மையைப் புரிந்து கொள்ளவோ இது எவ்வகை யிலும் பயன்படுவதில்லை. மேலும் இதனை இரண்டாம் பாகத்தி லேயே நமது நோக்கத்திற்குப் பரிசீலத்து முடித்து விட்டோம்.

சரக்கு வர்த்தகரானவர் பொதுவாக முதலாளி என்ற முறையில் பிரதானமாய்க் குறிப்பிட்ட பணத்தொகையின் பிரதிநிதியாகவே சந்தைக்கு வருகிறார்; இந்தப் பணத்தொகையை அவர் முதலாளி யாக முன்னீடு செய்கிறார். அதாவது இத்தொகையை x (அதன் ஆரம்ப மதிப்பு) என்பதிலிருந்து x + Δx (ஆரம்ப மதிப்பு + இலா பம்) என்பதாக மாற்ற விரும்புகிறார். ஆனால் அவர் சரக்குகளை உற்பத்தி செய்கிறவர் அல்ல என்பதால், அவரது மூலதனம் முதலில் பண-மூலதனத்தின் வடிவில் சந்தையில் நுழைந்தாக வேண்டும்—பொதுவாக ஒரு முதலாளி என்பதோடு தனிச் சிறப் பாக ஒரு சரக்கு வர்த்தகராயும் இருக்கிற அவருக்கு இது தெளி வாகவே தெரியும். அவர் செய்வதெல்லாம் சரக்குகளை வாணிகம் செய்வதே, அவர் அவற்றின் அசைவியக்கத்தை விரைவுபடுத்து கிறார்; அவற்றை வைத்துத் தொழில் செய்ய வேண்டுமானால், அவர் முதலில் அவற்றை வாங்கியாக வேண்டும்; ஆகவே அவர் வசம் பண-மூலதனம் இருந்தாக வேண்டும்.

சரக்கு வர்த்தகர் ஒருவர் £3,000 பெற்றிருப்பதாகவும் அவர் அத்தொகையை வணிக-மூலதனமாக முதலீடு செய்வதாகவும் கொள் வோம். இந்த £3,000க்கு அவர் துணி உற்பத்தியாளர்களிட மிருந்து கெஜத்துக்கு 2 ஷில்லிங் வீதம் 30,000 கெஜம் துணி வாங்குகிறார் என்போம். பிறகு இந்த 30,000 கெஜத்தையும் விற்று வருகிறார். வருடாந்தர சராசரி இலாப வீதம் = 10% என்றால்,

தேவையான செலவுகள் அனைத்தும் போக அவர் 10% வருடாந்தர இலாபம் ஈட்டினால், ஆண்டு இறுதிக்குள் அவர் தமது £3,000ஐ £3,300 ஆக மாற்றிக் கொண்டு விடுகிறார். அவர் எப்படி இந்த இலாபத்தைப் பெறுகிறார் என்ற பிரச்சினையைப் பிறகு பரிசீலிப்போம். இப்போது அவரது மூலதனத்தின் அசைவியக்கங்களது வடிவத்தை மட்டுமே பரிசீலிக்கப் போகிறோம். தமது £3,000ஐக் கொண்டு அவர் துணி வாங்குவதும் விற்பதுமாய் இருக்கிறார். விற்கும் பொருட்டு வாங்குவதாகிய இந்தக் காரியத்தை ஓயாமல் திரும்பத் திரும்ப செய்கிறார். இதுவே M – C – M', முழுக்க முழுக்க சுற்றோட்ட நிகழ்முறையிலேயே புழங்கிடும் மூலதனத்தின் சாமானிய வடிவம்; இதில் உற்பத்தி நிகழ்முறையின் குறுக்கீடு ஏதுமில்லை; உற்பத்தி நிகழ்முறையானது இம்மூலதனதின் அசைவியக்கத்துக்கும் பணிக்கும் புறத்தே உள்ளது.

சரி, இந்த வர்த்தக-மூலதனத்துக்கும் தொழில் துறை மூலதனத்தின் நிலவல் வடிவம் மட்டுமேயாகிய சரக்கு-மூலதனத்துக்குமான உறவு என்ன? துணி உற்பத்தியாளரைப் பொறுத்தவரை அவர் தமது துணியின் மதிப்பை வணிகரின் பணத்தைக் கொண்டு ஈடேற்றம் செய்து, தமது சரக்க-மூலதனத்தின் உருமாற்றத்தில் முதல் கட்டத்தை—அது பணமாக மாறுவதை—பூர்த்தி செய்து விட்டார். மற்ற நிலைமைகள் மாறாதிருக்க, இந்தப் பணத்தை அவர் இப்போது நூலாகவும் நிலக்கரியாகவும் கூலி போன்றவையாகவும் தமது வருவாயை நுகருவதற்கான வாழ்வுச் சாதனங்கள் போன்றவையாகவும் மாற்றிக் கொள்ள முற்படலாம். ஆகவே வருவாய்ச் செலவீட்டை ஒதுக்கி விட்டுப் பார்த்தால் அவர் மறுவுற்பத்தி நிகழ்முறையைத் தொடரலாம்.

ஆனால் துணியின் விற்பனை, அதாவது பணமாக அது உருமாற்றம் அடைவது உற்பத்தியாளராகிய அவருக்கு நடைபெற்று விட்ட போதிலும், துணியைப் பொறுத்த வரை இன்னும் நடைபெறவில்லை. அது இன்னமும் சரக்கு-மூலதனமாகச் சந்தையிலிருக்கிறது, முதல் உருமாற்றம் அடைய—விற்கப்பட—காத்திருக்கிறது. உடைமையாளர் மாறியிருப்பது தவிர இந்தக் துணிக்கு எதுவும் நேரிடவில்லை. அதன் நோக்கத்தைப் பொறுத்த வரை, நிகழ்முறையில் அதற்குரிய இடத்தைப் பொறுத்தவரை, இன்னமும் அது சரக்கு-மூலதனமே, விற்கத்தக்க சரக்கே; ஒரே ஒரு வேறுபாடு அது உற்பத்தியாளரின் கையில் இருப்பதற்கு பதில் இப்போது வணிகரின் கையில் இருப்பதே. அதை விற்கிற வேலை, அதன் உருமாற்றத்தின் முதல் கட்டத்தை நிறைவேற்றுகிற வேலை உற்பத்தியாளரிடமிருந்து வணிகருக்கு மாறியுள்ளது. வணிகரின் தனித் தொழில் ஆகியுள்ளது—முன்பெல்லாம் உற்பத்தியாளர் சரக்கை உற்பத்தி செய்கிற வேலையை முடித்த பிறகு அதை விற்கிற வேலையையும் தாமே செய்க வேண்டியிருந்தது.

துணி உற்பத்தியாளர் £3,000 மதிப்புள்ள 30,000 கெஜம் துணியைச் சந்தைக்கு கொண்டுவரத் தேவைப்படும் இடைக் காலத்தில் வணிகர் முதலாவது 30,000 கெஜம் துணியை விற்கத் தவறி விடுவதாகக் கொள்வோம். வணிகரிடம் 30,000 கெஜம் துணி விற்கப்படாமல், திரும்பவும் பண-மூலதனமாக மாற்றப்படாமல் இருப்பில் வருவதால் அவரால் 30,000 கெஜம் வாங்க முடியாது. இதனால் வேலை நிற்கிறது. அதாவது மறுவுற்பத்தி தடைபடுகிறது. துணி உற்பத்தியாளர் வசம் கூடுதல் பண-மூலதனம் இருக்கலாம், 30,000 கெஜம் விற்றாலும் விற்கா விட்டாலும் அவர் இந்தக் கூடுதல் பண-மூலதனத்தைத் திறனுடை-மூலதனமாக மாற்றி உற் பத்தி நிகழ்முறையைத் தொடரலாம் என்பது மெய்தான். என்றாலம் இதனால் நிலைமை மாறி விடாது. 30,000 கெஜம் துணியில் முடக்கப்பட்டுள்ள மூலதனத்தைப் பொறுத்த வரை, அதன் மறு வுற்பத்தி நிகழ்முறை தடைபடுகிறது, தடைபட்டே இருந்து வருகிறது. உண்மையில், வணிகர் செய்யும் காரியங்கள் உற்பத்தியாளரின் சரக்கு-மூலதனத்தைப் பணமாக மாற்றுவதற்கு எப்படியும் செய்தாக வேண்டிய காரியங்களே தவிர வேறல்ல என்பதை இங்கு எளிதிப் காணலாம். இவை சுற்றோட்ட நிகழ்முறையிலும் மறுவுற்பத்தி நிகழ்முறையிலும் சரக்கு-மூலதனத்தின் பணிகளை நிறைவேறச் செய்யும் காரியங்களாகும். சுயேச்சையான வணிகருக்கு பதில் பிரத்தியேகமாய் விற்னையையும் — வாங்குதலையும் கூட — கவனித் துக் கொள்வது உற்பத்தியாளரின் எழுத்தருக்குரிய பணி ஆக்கப் படுமானால், அப்போதும் மேற்கூறிய தொடர்பு கணப்பொழுதும் மறைக்கப்படாது.

ஆக, வர்த்தக-மூலதனம் என்பது பணமாக உருமாறும் நிகழ் முறைக்கு உள்ளாக வேண்டிய — சந்தையில் தனது சரக்கு-மூலதனப் பணியை ஆற்ற வேண்டிய — உற்பத்தியாளரின் சரக்கு-மூலதனமே தவிர வேறல்ல. ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால், உற்பத்தி யாளரின் துணைப் பணி ஒன்றைக் குறிப்பதற்கு பதில் அது இப்போது ஒரு தனி வகை முதலாளியின், வணிகரின் பிரத்தியேக மான காரியமும், ஒரு தனி வகை முதலீட்டின் தொழிலாய் ஒதுக்கப் படுவதும் ஆகும்.

வர்த்தக-மூலதனத்தின் பிரத்தியேகமான சுற்றோட்ட வடிவத்தில் இது மேலும் தெளிவாகிறது. வணிகர் சரக்கை வாங்கி, பிறகு விற்கிறார்: M – C – M′ சாமானிய சரக்குச் சுற்றோட்டத்தில், ஏன், தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறையில் காணப்படும் சரக்குச் சுற்றோட்டத்திலும் கூட (C′ – M – C) ஒவ் வொரு காசும் இரு முறை கைமாறி சுற்றோட்டத்தை நடைபெறச் செய்கிறது. துணி உற்பத்தியாளர் தமது சரக்காகிய துணியை விற்றுப் பணமாக மாற்றுகிறார்; வாங்குகிறவரின் பணம் துணி உற்பத்தியாளரின் கைக்குப் போய்ச் சேருகிறது. இந்தப் பணத்தைக்

கொண்டு அவர் நூலும் நிலக்கரியும் உழைப்பும் இன்ன பிறவும் வாங்குகிறார்; அதாவது துணியின் மதிப்பை அதன் உற்பத்தி-அடிக்கூறுகளாய் அமையும் சரக்குகளாகத் திரும்பவும் மாற்றுவதற்கு அப்பணத்தைச் செலவிடுகிறார். அவர் விற்பதும் வாங்குவதும் ஒரே சரக்கு அல்ல, ஒரே வகைச் சரக்கு அல்ல. அவர் உற்பத்திப் பண்டங்களை விற்று உற்பத்திச் சாதனங்களை வாங்குகிறார். ஆனால் வணிக-மூலதனத்தின் அசைவியக்கங்களைப் பொறுத்த வரை நிலைமை வேறு. துணி வணிகர் தம்மிடம் இருக்கும் £3,000ஐக் கொண்டு 30,000 கெஜம் துணி வாங்குகிறார். சுற்றோட்டத்திலிருந்து தமது பண-மூலதனத்தை (£3,000 மற்றும் இலாபத்தை) மீட்டெடுக்கும் பொருட்டு இந்த 30,000 கெஜம் துணியை விற்கிறார். இங்கு இரு முறை இடம் மாறுவது ஒரே சரக்குதானே தவிர ஒரே காசு அல்ல; சரக்கானது விற்கிறவரிடமிருந்து வாங்குகிறவரின் கைக்கும், வாங்குகிறவர் இப்போது விற்கிறவர் ஆகி அவரிடமிருந்து இன்னொரு வாங்குகிறவரின் கைக்கும் செல்கிறது. அது இரு முறை விற்கப்படுகிறது. வரிசையாகப் பல வணிகர்களை ஊடகமாய்க் கொண்டு அது திரும்பத் திரும்ப விற்கப்படலாம். இப்படித் திரும்பத் திரும்ப விற்கப்படுவதன் மூலமாகத்தான், ஒரே சரக்கினது இந்த இரட்டை இடமாற்றத்தின் மூலமாகத்தான், முதலில் வாங்கியவர் அதை வாங்குவதற்காக முன்னீடு செய்த பணம் மீட்டெடுக்கப்படுகிறது, அவரிடம் அப்பணம் திரும்பி வந்து சேருவது நிறைவேறுகிறது. முதல் நேர்வில் C' – M – C ஆனது ஒரே பணத்தின் இரட்டை இடமாற்றத்தை நிறைவேற்றுகிறது; ஒரு வடிவத்தில் சரக்கு விற்கப்படுவதையும், இன்னொரு வடிவத்தில் சரக்கு வாங்கப் படுவதையும் நிறைவேற்றுகிறது. மறு நேர்வில் M – C – M' ஆனது ஒரே சரக்கின் இரட்டை இடமாற்றத்தை, முன்னீடு செய்யப்பட்ட பணம் சுற்றோட்டத்திலிருந்து விலக்கி எடுக்கப்படுவதை நிறைவேற்றுகிறது. சரக்கானது உற்பத்தியாளரிடமிருந்து வணிகரின் கைக்குச் செல்லும் போது இறுதியாக விற்கப்பட்டு விடுவதில்லை என்பது தெளிவு. வணிகர் விற்பதென்னும் காரியத்தைத் தொடரவே செய்கிறார்—அதாவது சரக்கு-மூலதனத்தின் பணியை நிறைவேறச் செய்கிறார். ஆனால் அதே போது உற்பத்தித் துறையைச் சேர்ந்த முதலாளிக்கு அவரது மூலதனம் அதன் நிலையற்ற சரக்கு-மூலதன வடிவில் ஆற்றுகிற பணியைக் குறிக்கும் C – M என்பது அவர் முன்னீடு செய்யும் பண-மூலதனத்தின் மதிப்பில் ஏற்படும் குறிப்பிட்ட அதிகரிப்பைக் குறிக்கும் M – C – M' என்பதாகிறது. சரக்குகளது உருமாற்றத்தின் ஒரு கட்டம் இங்கே வணிகரைப் பொறுத்த வரை M – C – M' எனும் வடிவில் அமைந்து, மூலதனத்தின் தனியொரு வகைக்குரிய பணியாகத் தோற்றமளிக்கிறது.

வணிகர் முடிவில் தமது சரக்கை, அதாவது துணியை

நுகர்வாளரிடம் விற்கிறார் — இந்த நுகர்வாளர் திறனுடை நுகர்வாள ராகவும் (எடுத்துக்காட்டாக, துணிகளை வெளுத்து வெண்மை யாக்குகிறவர்) இருக்கலாம். சொந்த உபயோகத்துக்காகத் துணி வாங்குகிற தனியாளாகவும் இருக்கலாம். வணிகர் தாம் முன்னீடு செய்த மூலதனத்தை (இலாபத்தோடு) இந்த விற்பனையின் மூலம் மீட்டுக் கொள்கிறார். முன்பு செய்ததை இப்போது அவர் புதி தாயத் திருப்பிச் செய்யலாம். பணமானது துணி வாங்குவதில் கொடுப்புச் சாதனமாக மட்டும் பயன்பட்டிருக்குமானால்; அதாவது வணிகர் ஆறு வாரம் கழித்தே பணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்குமானால், இந்தக் காலவரை முடிவதற்குள் அவர் சரக்கை விற்று முடிப்பதில் வெற்றி பெற்றிருப்பாரானால், அவர் சொந்தமாய்ப் பண-மூலதனம் ஏதும் முன்னீடு செய்யாமலே துணி உற்பத்தியாளருக்குத் தர வேண்டியதைத் தந்திருக்கலாம். அவர் அதை விற்று முடிக்கவில்லையானால், தமது £3,000ஐ துணி தம்மிடம் சேர்ப்பிக்கப்படும் போது முன்னீடு செய்வதற்கு பதில் மேற்கூறிய காலவரை முடிவடையும் தேதியில் முன்னீடு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். சந்தை-விலைகள் குறைந்து அவர் கொள்மதல் விலைக்கும் கீழே விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்குமானால், தம் சொந்த மூலதனத்திலிருந்து பற்றாக் குறையை சரிக்கட்ட வேண்டி நிலை ஏற்பட்டிருக்கும்.

ஆகவே, வர்த்தக-மூலதனத்துக்கு சுயேச்சையாய் இயங்கும் குணத்தை அளிப்பது எது? தாம் உற்பத்தி செய்வதைத் தாமே விற்றுப் பணமாக்கும் உற்பத்தியாளர் கையில் இருக்கையில் அவரது மூலதனத்தின் ஒரு விசேஷ வடிவமாய், அதாவது சுற்றோட்டத் துறையில் இருக்கும் காலத்தில் மறுவுற்பத்தி நிகழ்முறையின் ஒரு பிரத்தியேகக் கட்டத்துக்குரிய வடிவமாய் இருப்பது இப்போது சுயேச்சையாய் இயங்கும் குணம் பெறுவது எப்படி?

முதலாவதாக, சரக்கு-மூலதனம் முடிவில் பணமாக மாற்றப் படுகிறது; அது தன் தொடக்க உருமாற்றத்தை, அதாவது சரக்கு-மூலதனம் என்ற முறையில் சந்தையில் தனக்கு உரித்தான பணியை உற்பத்தியாளர் அல்லாத ஒரு செயலியின் கரத்தில் இருக்கையில் நிறைவேற்றிக் கொள்கிறது; சரக்கு-மூலதனத்தின் இந்தப் பணியை வணிகர் தாம் செய்யும் காரியங்களில் — வாங்குவதிலும் விற்பதிலும் — செய்து முடிக்கிறார்; ஆகவே இந்தக் காரியங்கள் தொழில் துறை மூலதனத்தின் ஏனைய பணிகளிலிருந்து வேறான தனித்த தொழில் முனைவின் — எனவே சுயேச்சையான தொழில் முனைவின் — தோற்றத்தை மேற்கொள்கின்றன. இது சமுதாய உழைப்புப் பிரி வினையின் [social division of labour] தனியொரு வடிவமாகும்; அதாவது சாதாரணமாய் மூலதனத்தினது மறுவுற்பத்தி நிகழ்முறை யின் தனியொரு கட்டமாக நிறைவேற்றப்படும் பணியில் — இங்கே சுற்றோட்டத்தில் — ஒரு பகுதியானது உற்பத்தியாளரிடமிருந்து

வேறான பிரத்தியேக சுற்றோட்டச் செயலியின் பிரத்யேகப் பணி யாகக் காணப்படுகிறது. ஆனால் இது மட்டுமே இந்தக் குறிப் பிட்டத் தொழிலுக்கு மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டுள்ள தொழில் துறை மூலதனத்திலிருந்து தனியானதும் சுயேச்சையானது மாகிய பிரத்தியேக மூலதனத்துக்குரிய பணியின் தன்மையை எவ் விதத்தும் தந்து விடாது; பார்க்கப் போனால், பயண விற்பனை யாளர்களோ தொழில் துறை முதலாளியின் வேறு வகை நேரடி முகவர்களோ வாணிகம் செய்து வரும் நேர்வுகளில் இது அப்படிக் காணப்படுவதில்லை. ஆகவே இதில் இன்னொரு கூறு சம்பந்தப் பட்டிருக்க வேண்டும் என்றாகிறது.

**இரண்டாவதாக**, வணிகர் சுயேச்சையான சுற்றோட்டச் செயலி என்ற பொறுப்பில் பண-மூலதனத்தை (தமக்குச் சொந்தமானதையோ கடன் வாங்கியதையோ) முன்னீடு செய்வதிலிருந்து மேற்கூறிய நிலைமை எழுகிறது. மறுவுற்பத்தி நிகழ்முறையில் இருக்கும் தொழில் துறை மூலதனத்துக்கு C – M, அதாவது சரக்கு-மூலதனத்தைப் பண-மூலதனமாக மாற்றுவது மட்டுமே அல்லது விற்பனை மட்டுமே ஆகிற பரிமாற்றச் செய்கை வணிகருக்கு M – C – M′ என்னும் வடிவம் உடையதாகிறது, அதாவது ஒரே சரக்கின் வாங்கலும் விற்றலும் ஆகிறது, இவ்விதம் வாங்கலில் அவரை விட்டுச் சென்று விற்றலில் அவரிடமே திரும்பி வரும் பண-மூலதனதத்தின் மீள்வு ஆகிறது.

எப்போதுமே C – Mதான், அதாவது சரக்கு-மூலதனத்தைப் பண-மூலதனமாக மாற்றுவதுதான் சரக்குகளை அவற்றின் உற்பத்தி யாளர்களிடமிருந்து வாங்குவதற்காக மூலதனத்தைதை முன்னீடு செய்கிற வணிகருக்கு M – C – M ஆக வடிவெடுக்கிறது; இது எப்போதுமே சரக்கு-மூலதனத்தின் முதல் உருமாற்றமாகும்; ஆனால் இதே பரிமாற்றமானது ஓர் உற்பத்தியாளருக்கோ மறுவுற்பத்தி நிகழ்முறையில் இருக்கும் தொழில் துறை மூலதனத்திற்கோ M – C என்பதாய் அதாவது பணம் மீண்டும் சரக்குகளாக (உற்பத்திச் சாதனங்களாக) மாற்றப்படுவதாய், உருமாற்றத்தின் இரண்டாவது கட்டமாய் அமையலாம். துணி உற்பத்தியாளருக்கு முதல் உரு மாற்றம் C – M ஆகிறது, அதாவது அவரது சரக்கு-மூலதனத்தைப் பண-மூலதனமாக மாற்றுவதாகிறது. இந்தத் துணியை அவர் வெளுப்புக்காரரிடம் விற்பாரானால், அது M – C ஆகும், அதா வது பண-மூலதனத்தைத் திறனுடை-மூலதனமாய் மாற்றுவதாகும்; இது வெளுப்புக்காரருக்கு அவரது சரக்கு-மூலதனத்தின் இரண்டா வது உருமாற்றம் ஆகும; அதே போது வணிகருக்கு C – M ஆகும், அவர் வாங்கிய துணியை விற்பதாகும். ஆனால் உண்மையில் இந்தக் கட்டத்தில்தான் துணி உற்பத்தியாளர் உற்பத்தி செய்த சரக்கு-மூலதனம் இறுதியாக விற்கப்படுகிறது. வேறு விதமாய்ச் சொல்லின், வணிகரின் இந்த M – C – M பணியானது இரு

தொழிலதிபர்களிடையே நடைபெற வேண்டிய C – M பணியைப் புரிந்திடும் இடைத்தரகரின் வேலையே ஆகும். அல்லது, துணி உற்பத்தியாளர் விற்ற துணியின் மதிப்பில் ஒரு பகுதியைக் கொண்டு நூல்-வர்த்தகரிடமிருந்து நூல் வாங்குவதாகக் கொள்வோம். இது அவருக்கு M – C ஆகும். ஆனால் நூல் விற்கும் வணிகருக்கு இது C – M ஆகும், அதாவது நூலைத் திரும்ப விற்பதாகும். நூலைச் சரக்கு-மூலதனமாகப் பார்க்குமிடத்து, இது அதன் இறுதி விற்பனையே ஆகும்; இவ்விற்பனையின் மூலம் அது சுற்றோட்டத் துறையிலிருந்து நுகர்வுத் துறைக்குப் போய் விடுகிறது; இது C – M ஆகும், அதன் முதல் உருமாற்றத்தின் நிறைவு ஆகும். வணிகர் தொழி துறை முதலாளியிடம் வாங்கினாலும் சரி, விற்றாலும் சரி, அவரது M – C – M, அதாவது வணிக-மூலதனத்தின் சுற்று எப்போதுமே சரக்கு-மூலதனத்தைப் பொறுத்த வரை — மறுவுற்பத்தி நிகழ்முறையிலிருக்கும் தொழில்துறை மூலதனத்தின் தற்காலிக வடிவமாகிய சரக்கு-மூலதனத்தைப் பொறுத்த வரை — C – M ஆக இருப்பதைத்தான், அதாவது அதன் முதல் உருமாற்றத்தின் நிறைவைத் தான் குறிக்கிறது. வணிக-மூலதனத்தின் M – C தொழில் துறை முதலாளிக்கு மட்டுமே C – M ஆகும். அவரால் உற்பத்தி செய்யப் படும் சரக்கு-மூலதனத்துக்கு அப்படி ஆகாது. இது சரக்கு-மூலதனத்தைத் தொழில் துறை முதலாளியிடமிருந்து சுற்றோட்டச் செயலிக்கு மாற்றுவதே ஆகும். வணிக-மூலதனம் C – Mஐ முடிக்கும் வரை, செயல்பட்டு வரும் சரக்கு-மூலதனம் அதன் இறுதி C – Mஐ நிறைவேற்றாது. M – C – M ஆனது முழுக்க முழுக்க ஒரே சரக்கு-மூலதனத்தின் இரண்டு C – M களைத்தான், அது அடுத்தடுத்து இரு முறை விற்கப்படுவதைத்தான் குறிக்கிறது; இவ்விதம் அதன் கடைசியும் இறுதியுமான விற்பனை நடந்தேறுகிறது.

ஆக, சரக்கு-மூலதனமானது வர்த்தக-மூலதனம் ஆகும் போது, ஒரு சுயேச்சை வகை மூலதனமாக வடிவெடுக்கிறது; ஏனென்றால் வணிகர் பண-மூலதனத்தை முன்னீடு செய்கிறார். இந்தப் பண-மூலதனம் சரக்கு-மூலதனத்தின் உருமாற்றத்திற்கு, அது சரக்கு-மூலதனமாய்ச் செயல்படுவதற்கு, அதாவது பணமாக மாற்றப் படுவதற்குப் பிரத்தியேக ஊடகமாகப் பயன்படுவதன் மூலமாகவே மூலதனமாய் ஈட்டேற்றம் பெறுகிறது. மூலதனமாகச் செயல்படுவதற்கு, அது ஓயாமல் சரக்குகளை வாங்கியும் விற்றும் இதனை நிறைவேற்றுகிறது. அது செய்யும் பிரத்தியேகமான காரியம் இது. தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறையை நிறைவேற்றும் இந்தச் செயற்பாடு வணிகர் ஈடுபடுத்தும் பண-மூலதனத்தின் பிரத்தியேகப் பணியாகும். இந்தப் பணியின் வாயிலாக அவர் தமது பணத்தைப் பண-மூலதனமாக மாற்றுகிறார். தமது Mஐ M – C – M′ ஆக வார்க்கிறார், இதே நிகழ்முறையின் மூலம் சரக்கு-மூலதனத்தை வர்த்தக-மூலதனமாக மாற்றுகிறார்.

வர்த்தக-மூலதனம் சரக்கு-மூலதன வடிவில் இருந்து வரும் வரை, அது—மொத்தச் சமுதாய மூலதனத்தினது மறுவுற்பத்தி நிகழ்முறையின் கோணத்திலிருந்து பார்க்கையில்—சந்தையில் உரு மாற்ற நிகழ்முறையில் இருந்து வரும் தொழில் துறை மூலதனத்தின் ஒரு பகுதியே தவிர வேறல்ல என்பது கண்கூடு; தொழில் துறை மூலதனத்தின் இந்தப் பகுதியானது சரக்கு-மூலதனமாக நிலவுகிறது, அவ்வாறே செயல்படுகிறது. ஆகவே வணிகரால் முன்னீடு செய்யப் படும் பண-மூலதனம் மட்டுமே பிரத்தியேகமாய் வாங்குவதற்கும் விற்பதற்கும் என்றே விதிக்கப்பட்டதாகும், இக்காரணத்தால் இது சரக்கு-மூலதனம், பண-மூலதனம் இவற்றின் வடிவத்தை மட்டும் மேற்கொள்கிறது, வேறு எந்த வடிவத்தையும் மேற்கொள்வதில்லை, திறனுடை-மூலதனத்தின் வடிவத்தை ஒருபோதும் மேற்கொள்வ தில்லை; இது எப்போதுமே மூலதனத்தினது சுற்றோட்டத் துறையின் எல்லைக்கு உட்பட்டதாகும்—இந்தப் பண-மூலதனத்தை மட்டுமே இப்போது மூலதனத்தின் மறுவுற்பத்தி நிகழ்முறை அனைத்தோடும் தொடர்பு படுத்திப் பரிசீலித்திட வேண்டும்.

உற்பத்தியாளர்—துணி உற்பத்தியாளர்—தமது 30,000 கெஜம் துணியை வணிகரிடம் £3,000க்கு விற்று முடித்ததும், இந்தப் பணத்தைப் பயன்படுத்தி அவசியமான உற்பத்திச் சாதனங்களை வாங்குகிறார். இவ்வாறு அவரது உற்பத்தி நிகழ்முறை தடை படாமல் தொடர்கிறது. அவரைப் பொறுத்த வரை, தமது சரக்கைப் பணமாக மாற்றும் வேலை முடிந்து விட்டது. ஆனால் துணியைப் பொறுத்த வரை, அதன் உருமாற்றம் இன்னமும் நடைபெறவில்லை என்று பார்தோம். அது இன்னமும் இறுதியாகப் பண உருவிற்கு மாற்றப்படவில்லை, இன்னமும் திறனுடை நுகர்விலோ சொந்த நுகர்விலோ பயன்-மதிப்பாக நுழைந்திடவில்லை. ஆரம்பத்தில் துணி உற்பத்தியாளரால் குறிக்கப்பெற்ற அதே சரக்கு-மூலதனம் இப்போது சந்தையில் துணி வணிகரால் குறிக்கப் பெறுகிறது. துணி உற்பத்தியாளரைப் பொறுத்த வரை உருமாற்ற நிகழ்முறை தடைப் பட்டு, வணிகரின் கைக்குச் சென்றபின் தொடருகிறது.

துணி உற்பத்தியாளர் தமது துணி உண்மையில் சரக்காய் இல் லாது போகும் வரை, அது அதனை இறுதியாக வாங்குகிறவரின்—திறனுடை-நுகர்வாளரானாலும் சொந்த நுகர்வாளரானாலும்—கைக்குப் போய்ச் சேரும் வரை காத்திருக்க நேரிட்டால், அவரது மறுவுற்பத்தி நிகழ்முறை தடைபட்டிருக்கும். அல்லது, அது தடைபடு வதைத் தவிர்ப்பதற்காக அவர் தமது செயற்பாடுகளைக் குறுக்கிக் கொள்ளவும், தமது துணியில் முன்னைக் காட்டிலும் சிறியதொரு பகுதியை நூல், நிலக்கரி, உழைப்பு போன்றவையாக, சுருங்கச் சொல்லின் திறனுடை-மூலதனத்தின் கூறுகளாக மாற்றிக் கொள்ள வும், முன்னைக் காட்டிலும் பெரியதொரு பகுதியைப் பண வைப்பாக இருத்திக் கொள்ளவும் வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்; இவ்வாறு

அவரது மூலதனத்தில் ஒரு பகுதி சரக்கு களாகச் சந்தையில் இருக்கும் போதே, இன்னொரு பகுதி உற்பத்தி நிகழ்முறையைத் தொடரச் செய்யும்; ஒரு பகுதி சந்தையில் சரக்கு களின் வடிவில் இருக்கும் போதே, மறு பகுதி பண வடிவில் திரும்பியிருக்கும். அவரது மூலதனம் இவ்விதம் பிரிவதை வணி கரின் தலையீடு ஒழித்து விடுவதில்லை. ஆனால் இத்தலையீடு இல்லாது போகுமானால், பண வைப்பில் சுற்றோட்ட மூலதனமாக இருக்கும் பகுதி திறனுடை-மூலதனத்தின் வடிவில் ஈடுபடுத்தப்படும் பகுதியோடு ஒப்பிடு கையில் எப்போதும் கூடுதலாகவே இருக்க வேண்டியிருக்கும், அதற்கேற்ப மறுவுற்பத்தியின் அளவுவீதத்தைக் கட்டுப்படுத்த வேண்டி யிருக்கும். ஆனால் இதற்கு பதில் உற்பத்தியாளர் ஓயாமல் தமது மூலதனத்தில் இன்னும் பெரிய பகுதியை உள்ளபடியான உற்பத்தி நிகழ்முறையில் ஈடுபடுத்தவும், இன்னும் சிறிய பகுதியைப் பண வைப்பாக இருத்திக் கொள்ளவும் முடிகிறது.

ஆனால் மறு புறம் சமுதாய மூலதனத்தில் இன்னொரு பகுதி வணிக-மூலதனத்தின் [merchants capital] வடிவில் தொடர்ந்து சுற்றோட்டத் துறைக்குள் வைத்துக் கொள்ளப்படுகிறது. சர்வ சதாகாலமும் அது முழுக்க முழுக்க வாங்குவதும் விற்பதுமான ஒரே நோக்கத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. ஆகவே இந்த மூலதனத்தைக் கையில் வைத்திருக்கும் ஆட்கள் மட்டுமே மாறுவ தாகத் தோன்றுகிறது.

வணிகர் £3,000 பெறுமானமுள்ள துணியை விற்கும் பொருட்டு வாங்குவதற்கு பதில், இந்த £3,000ஐ உற்பத்தித் திறனுள்ள முறையில் பயன்படுத்தியிருப்பாரானால், சமுதாயத்தின் திறனுடை-மூலதனம் அதிகரித்திருக்கும். அப்போது துணி உற்பத்தி யாளர் தமது மூலதனத்தில் இன்னும் பெரிய பகுதியைப் பண வைப்பாக இருத்திக் கொள்ள வேண்டி நிலை ஏற்பட்டிருக்கும், இப்போது தொழில் துறை முதலாளியாக மாறி விட்ட வணிகரும் அவ்வாறே செய்தாக வேண்டும் என்பது மெய்தான். மறு புறம், வணிகர் வணிகராகவே இருந்து வருவாரானால், உற்பத்தியாளர் சரக்கை விற்பதில் செலவிடும் நேரம் மிச்சமாகிறது. இந்த நேரத்தை அவர் உற்பத்தி நிகழ்முறையைக் கண்காணிப்பதற்குப் பயன்படுத்த லாம்; வணிகர் தமது நேரம் முழுவதையும் சரக்கை விற்பதற்குப் பயன்படுத்தியாக வேண்டும்.

வணிக-மூலதனம் அதன் அவசிய விகித உறவுகளை தாண்டிச் செல்லாத வரை, பின்வரும் முடிவுகள் பெறப்படும்:

1) உழைப்புப் பிரிவினையின் பயனாய், பிரத்தியேகமாக வாங்குவதற்கும் விற்பதற்கும் என்றே ஒதுக்கப்படும் மூலதனமானது (சரக்குகளை வாங்குவதற்குத் தேவையான பணம் மட்டுமல்லாமல், வணிகரின் நிறுவனத்தைப் பராமரிப்பதற்காக உழைப்பிலும் அவரது மாறா-மூலதனத்திலும்—சேமிப்பகங்கள், போக்குவரத்து

முதலானவை—முதலீடு செய்தாக வேண்டிய பணமும் இதிலடங்கும்) தொழில் துறை முதலாளி தமது தொழிலின் வர்த்தகப் பகுதி முழுவதையும் தாமே நடத்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால் இருக்கக் கூடியதை விடக் குறைவாகவே இருக்கும்;

2) வணிகர் தமது நேரம் முழுவதையும் பிரத்தியேகமாய் இந்த வணிகத் தொழிலுக்கென்றே ஒதுக்குவதால் உற்பத்தியாளர் தமது சரக்குகளை இன்னும் துரிதமாய்ப் பணமாக மாற்ற முடிகிறது; மேலும் சரக்கு-மூலதனம் அதன் உருமாற்றத்தினூடாகச் செல்வது கூட உற்பத்தியாளரின் கையில் நடைபெறுவதை விட துரிதமாய் நடைபெறுகிறது;

3) ஒட்டுமொத்தமாய் வணிக-மூலதனத்தைத் தொழில் துறை மூலதனத்தோடு அதற்குள்ள உறவில் வைத்துப் பார்க்கும் போது, வணிக-மூலதனத்தின் ஒரு புரள்வு ஒரே உற்பத்திக் கிளையில் இருக்கும் அநேக மூலதனங்களின் புரள்வுகளைக் குறிப்பதாய் இருக்கலாம் என்பதோடு, வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில் இருக்கும் பல மூலதனங்களின் புரள்வுகளைக் குறிப்பதாகவும் இருக்கலாம். முதலாவது நிலைக்கு எடுத்துக்காட்டு: துணி வணிகர் தமது £3,000க்கு யாராவது ஒரு துணி உற்பத்தியாளரின் சரக்கை வாங்கி, அதே உற்பத்தியாளர் அடுத்த முறை அதே அளவு சரக்கை சந்தைக்குக் கொண்டு வருவதற்குள் விற்று முடித்து விட்டு, வேறு ஒரு உற்பத்தியாளரின் அல்லது மற்றும் பல துணி உற்பத்தியாளர்களின் சரக்கை மறுபடியும் வாங்கி விற்று, இவ்விதம் ஒரே உற்பத்திக் கிளையில் இருக்கும் வெவ்வேறு மூலதனங்களின் புரள்வுகளை நிகழச் செய்கிறார். இரண்டாவது நிலைக்கு எடுத்துக்காட்டு: வணிகர் லினன் துணியை விற்று விட்டுப் பட்டுத் துணி வாங்கி, இவ்விதம் வேறோர் உற்பத்திக் கிளையில் இருக்கும் மூலதனத்தின் புரள்வை நிகழ செய்கிறார்.

பொதுவாக, தொழில் துறை மூலதனத்தின் புரள்வுக்கு [turnover of industrial capital] சுற்றோட்டக் காலம் மட்டுமல்லாமல் உற்பத்திக் காலமும் வரம்பிடுவது நோக்கற்பாலது. ஒரு வகைச் சரக்கை வர்த்தகம் செய்யும் வணிக-மூலதனத்தின் புரள்வுக்குத் தனியொரு தொழில் துறை மூலதனத்தின் புரள்வு மட்டுமல்லாமல், அதே உற்பத்திக் கிளையில் இருக்கும் தொழில் துறை மூலதனங்கள் யாவற்றின் புரள்வும் வரம்பிடுகிறது. வணிகர் ஓர் உற்பத்தியாளரின் துணியை வாங்கி விற்ற பிறகு அவ்வுற்பத்தியாளர் இன்னொரு சரக்குத் தொகுதியைச் சந்தைக்கு கொண்டுவருவதற்குள் வேறோர் உற்பத்தியாளரின் துணியை வாங்கி விற்கலாம். ஆகவே ஒரே வணிக-மூலதனமானது குறிப்பிட்ட ஓர் உற்பத்திக்கிளையில் முதலீடாகியுள்ள மூலதனங்களின் வெவ்வேறு புரள்வுகளையும் அடுத் தடுத்து நிகழச் செய்யலாம், இதன் விளைவாக அதன் புரள்வு ஒரே ஒரு தொழில் துறை மூலதனத்தின் புரள்வுகளோடு

முழுதொத்ததாய் இல்லாது போகிறது; எனவே அந்த ஒரு தொழில் துறை முதலாளி அந்தரங்கமாய் வைத்திருக்க வேண்டிய தனியொரு பண வைப்பை மட்டும் மாற்றீடு செய்வதாய் இல்லாது போகிறது. ஓர் உற்பத்திக் கிளையில் இருக்கும் வணிக-மூலதனத்தின் புரள்வு இயல்பாகவே அந்த கிளையின் மொத்த உற்பத்தியால் நிர்ணயிக்கப் படுகிறது. ஆனால் அதே கிளையைச் சேர்ந்த ஏதேனும் ஒரு மூலதனத்தின் புரள்வுக் காலம் அதன் உற்பத்திக் காலத்தால் நிர்ணயிக்கப்படுகிற அளவில், அம்மூலதனத்தினது உற்பத்தியின் அளவுவீதத்தாலோ புரள்வுக் காலத்தாலோ மேற்கூறிய வணிக-மூலதனத்தின் புரள்வு நிர்ணயிக்கப் படுவதில்லை. A ஆனவர் ஒரு சரக்கை வழங்குவதாகவும், இச்சரக்கின் உற்பத்திக்கு மூன்று மாத காலம் தேவைப் படுவதாகவும் கொள்வோம். வணிகர் அதனை வாங்கி ஒரு மாதத்தில் விற்று முடிப்பாரானால், அதன் பிறகு அவர் வேறோர் உற்பத்தியாளரிடமிருந்து அதே பண்டத்தை வாங்கி விற்கலாம். அல்லது அவர் ஒரு விவசாயியின் தானியத்தை விற்று முடித்த பிறகு அதே பணத்தைக் கொண்டு இன்னொரு விவசாயியின் தானியத்தை வாங்கி விற்கலாம், இவ்வாறே மேலும் செய்யலாம். அவரது மூலதனத்தின் புரள்வு குறிப்பிட்ட காலத்திற்குள், எடுத்துக்காட்டாக ஓராண்டு காலத்தில் அவரால் அடுத்தடுத்து வாங்கி விற்க முடிகிற தானிய அளவால் நிர்ணயிக்கப் படுகிறது; அதே போது விவசாயியின் மூலதனத்தினது புரள்வு—புரள்வுக்காலம் என்னவானாலும்—ஓராண்டு நீடிக்கும் உற்பத்திக் காலத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

ஆயினும், இதே வணிக-மூலதனத்தின் புரள்வு அதே போல் வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில் இருக்கும் மூலதனங்களின் புரள்வுகளையும் நிகழச் செய்யலாம்.

ஒரே வணிக-மூலதனம் வெவ்வேறு புரள்வுகளில் பணி-புரிந்து ஒன்றன் பின் ஒன்றாய் வெவ்வேறு சரக்குகளை வாங்கியும் விற்றும் இந்தச் சரக்கு-மூலதனங்களைப் பணமாக மாற்றுகிறது. பொதுவாகப் பணமானது குறிப்பிட்ட காலத்துக்குள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அதன் புரள்வுகள் மூலம் சரக்குகள் தொடர்பாகப் புரிந்திடும் அதே பணியினை இவ்விதம் வணிக-மூலதனமானது பண-மூலதனம் என்ற முறையில் சரக்கு-மூலதனம் தொடர்பாகப் புரிந்திடுகிறது.

வணிக-மூலதனத்தின் புரள்வும், சம அளவுள்ள ஒரு தொழில் துறை மூலதனத்தின் புரள்வும் (அல்லது ஒரே ஒரு முறை மறுவுற்பத்தி ஆவதும்) ஒன்றல்ல. வணிக-மூலதனத்தின் புரள்வு ஒரே உற்பத்திக் கிளையிலானாலும் சரி, வெவ்வேறு உற்பத்திக் கிளைகளிலானாலும் சரி அநேகத் தொழி துறை மூலதனங்கள் நிகழ்த்தும் புரள்வுகளின் கூட்டுத் தொகைக்குச் சமம். வணிக-மூலதனம் எவ்வளவுக்கு எவ்வளவு விரைவாய்ப் புரளுகிறதோ, மொத்தப்

பண-மூலதனத்தில் அவ்வளவுக்கு அவ்வளவு சிறிய பகுதியே வணிக-மூலதனமாகப் பயன்படுகிறது; இதற்கு மாறாக வணிக-மூலதனம் எவ்வளவுக்கு எவ்வளவு மெதுவாய்ப் புரளுகிறதோ மொத்தப் பண-மூலதனத்தில் அவ்வளவுக்கு அவ்வளவு பெரிய பகுதி வணிக-மூலதனமாகப் பயன்படுகிறது. உற்பத்தி எவ்வளவுக்கு எவ்வளவு குறைவாக வளர்ச்சி பெற்றுள்ளதோ, சுற்றோட்டத்தில் விடப்படும் சரக்குகளின் மொத்தத் தொகையோடு ஒப்பிடுகையில் வணிக-மூலதனத்தின் மொத்தத் தொகை அவ்வளவுக்கு அவ்வளவு பெரிதாய் உள்ளது; ஆனால் அறுதியாகப் பார்க்கையில், அல்லது கூடுதலாய் வளர்ச்சி பெற்ற நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், அவ்வளவுக்கு அவ்வளவு சிறியதாய் உள்ளது. இதையே வளர்ச்சி பெறாத இந்நிலைமைகளில் உள்ளபடியே இருந்து வரும் பண-மூலதனத்தில் பெரும்பகுதி வணிகர்களின் கையில் இருப்பதாகும். வணிகர்களின் திரவியமே ஏனையோருக்குப் பணச்செல்வம் ஆகிறது.

வணிகரால் முன்னீடு செய்யப்படும் பண-மூலதனத்தின் சுற்றோட்ட வேகமானது (1) உற்பத்தி நிகழ்முறை புதுப்பிக்கப்படுவதும் வெவ்வேறு உற்பத்தி நிகழ்முறைகள் ஒருசேரப் பிணைக்கப்படுவதும் எவ்வளவு விரைவாய் நடைபெறுகின்றன என்பதையும் (2) நுகர்வு-வேகத்தையும் பொறுத்தது.

மேலே பரிசீலித்த புரள்வை நிகழ்த்தும் பொருட்டு வணிக-மூலதனம் முதலில் அதன் முழு மதிப்புக்கு சரக்குகள் வாங்கவும், பிறகு அவற்றை விற்கவும் தேவையில்லை. இதற்கு பதிலாய் வணிகர் இவ்விரு இயக்கங்களையும் ஒருங்கே நிகழ்த்துகிறார். அவரது மூலதனம் இரு பகுதிகளாய்ப் பிரிகிறது. ஒன்று சரக்கு-மூலதனத்தால் ஆனது, மற்றொன்று பண-மூலதனத்தால் ஆனது. ஓரிடத்தில் அவர் வாங்குகிறார், அதாவது தமது பணத்தைச் சரக்குகளா மாற்றுகிறார். வேறு இடத்தில் அவர் விற்கிறார், அதாவது தமது சரக்கு-மூலதனத்தில் இன்னொரு பகுதியைப் பணமாக மாற்றுகிறார். ஒரு பக்கம் அவரது மூலதனம் பண-மூலதன வடிவில் அவரிடம் திரும்பி வருகிறது; அதே போது மறு பக்கம் அவருக்கு சரக்கு-மூலதனம் கிடைக்கிறது. மூலதனப் பகுதி ஒரு வடிவத்தில் எவ்வளவுக்கு எவ்வளவு பெரிதாய் உள்ளதோ, மறு வடிவத்தில் அவ்வளவுக்கு அவ்வளவு சிறிதாய் உள்ளது. இது மாறி மாறி வந்து சமநிலை கொள்கிறது. பணம் சுற்றோட்ட ஊடகமாகப் பயன்படுவது அது கொடுப்புச் சாதனமாகப் பயன்படுவதோடும், இதையொட்டி கடன்-செலாவணி முறை வளர்ச்சி அடைவதோடும் இணையும் போது, வணிக-மூலதனத்தின் பண-மூலதனப் பகுதியானது இந்த வணிக-மூலதனம் நிகழ்த்தும் பரிமாற்றங்களின் பரிமாணத்துடன் ஒப்பிடுகையில் மேலும் குறைந்து போகிறது. £3,000 மதிப்புள்ள மதுபானத்தை 3 மாதக்கடனில் வாங்கி

இந்தக் கெடு முடிவதற்குள் அந்த மதுபானம் முழுவதையும் ரொக்கத் துக்கு விற்று விடுவோமானால், இந்தப் பரிமாற்றங்களுக்காக சல்லிக் காசு கூட முன்னீடு செய்யத் தேவையில்லை. இங்கே இன்னொன் றும் கண்கூடாய்த் தெரிகிறது; அதாவது இங்கு வணிக-மூலதன மாகச் செயல்படும் பண-மூலதனமானது பண-மூலதன வடிவில் இருக்கிற — பண வடிவில் மீண்டு வரும் நிகழ்முறையில் இருக்கிற — தொழில் துறை மூலதனமே தவிர வேறல்ல. (உற்பத்தியாளர் £3,000 மதிப்புள்ள மதுவை 3 மாதக் கடனுக்கு விற்று இந்தக் கடனுறுதிப் பத்திரத்தை வங்கியில் தந்து கழிவு நீக்கிப் பணமாக்கு வதால் எதுவும் மாறி விடாது; இதற்கும் வணிக-மூலதனத்துக்கும் தொடர்பேதுமில்லை.) சந்தை-விலைகள் இடைக்காலத்தில் — உதா ரணமாய் $\frac{1}{10}$ பங்கு — குறையுமானால் வணிகர்இலாபம் பெறமாட் டார் என்பதோடு, £3,000க்கு பதில் £2,700 மட்டுமே மீளப் பெறுவார். அவர் கையிலிருந்து £300 எடுத்துக் கொடுக்க வேண்டி யிருக்கும். இந்த £300 ஆனது விலை வேறுபாட்டை சரிக்கட்டு வதற்கான சேம வைப்பாக மட்டுமே பயன்படும். ஆனால் மது பானத் தயாரிப்பாளருக்கும் இதுவே பொருந்தும். அவரே குறைந்த விலைக்கு விற்றிருந்தால் அதேபோல் £300 இழந்திருப்பார்; சேம வைப்பில் மூலதனம் இல்லாது போனால் உற்பத்தியை அதே அளவுவீதத்தில் மீண்டும் தொடங்க அவரால் இயலாமற் போகும்.

துணி வணிகர் துணி உற்பத்தியாளரிடமிருந்து £3,000 மதிப் புள்ள துணி வாங்குகிறார். உற்பத்தியாளர் இந்த £3,000இல் £2,000ஐ நூலுக்கு விலையாகத் தருகிறார். அவர் நூல் வணிகரிட மிருந்து இந்த நூலை வாங்குகிறார். துணி உற்பத்தியாளர் நூல் வணிகருக்குத் தருகிற பணம் துணி வணிகரின் பணமல்ல; ஏனென் றால் துணி வணிகர் இந்தத் தொகைக்கு சரக்குகள் பெற்றுள்ளார். இது உற்பத்தியாளரது சொந்த மூலதனத்தின் பண-வடிவமே ஆகும். இப்போது நூல் வணிகரின் கையிலிருக்கும் இந்த £2,000 மீண்டு வந்த பண-மூலதனமாகத் தெரிகிறது. ஆனால் துணி களைந்திட்ட பண வடிவத்தையும் நூல் அணிந்திட்ட பண வடிவத்தையும் குறிக் கும் £2,000இலிருந்து வேறாய் எந்த அளவுக்கு இந்த £2,000 மீண்டு வந்த பண-மூலதனமாய் இருக்கிறது? நூல் வணிகர் கட னுக்கு வாங்கி கெடு முடிவதற்குள் ரொக்கத்துக்கு விற்றால், இந்த £2,000இல் — தொழில் துறை மூலதனம் அதன் சுற்றின் போக்கில் மேற்கொள்ளும் பண வடிவத்திலிருந்து வேறாய் — வணிக-மூல தனம் சல்லிக்காசு கூட இருக்காது. ஆகவே வர்த்தக-மூலதனமானது சரக்கு-மூலதனமாகவோ பண-மூலதனமாகவோ வணிகரின் கையி லிருக்கும் தொழில் துறை மூலதனத்தின் வடிவம் மட்டுமே அல்ல என்பதால், நேரடியாக வணிகருக்குச் சொந்தமானதும் சரக்குகளை வாங்கி விற்பதில் சுற்றியோடுவதுமான பண-மூலதனப்

பகுதியே தவிர வேறல்ல. உற்பத்தியின் அளவுவீதம் குறைவாய் இருக்கையில், இந்த மூலதனப் பகுதி உற்பத்திக்காக முன்னீடு செய்யப்படும் மூலதனத்தில் ஒரு பகுதியை - சேமப் பணவைப்பாகவும் வாங்குஞ் சாதனமாகவும் எப்போதும் தொழிலதிபரின் கையில் இருக்க வேண்டியதும், எப்போதும் அவரது பண-மூலதனமாக சுற்றியோட வேண்டியதுமான பகுதியை - குறிக்கிறது. உற்பத்தியின் அளவுவீதம் குறைவாய் இருக்கையில், இந்த மூலதனப் பகுதி இப்போது வணிக முதலாளிகளின் கையில் இருப்பதோடு, சுற்றோட்ட நிகழ்முறையிலும் அவ்வாறே தன் பணிகளை ஆற்றுகிறது. இது மொத்த மூலதனத்தில் - வருவாயாகச் செலவிடப்படுவதை அன்னியில் - மறுவுற்பத்தி நிகழ்முறையைத் தொடர்ச்சியானதாய் இருக்கச் செய்யும் பொருட்டு ஓயாமல் சந்தையில் வாங்குஞ் சாதனமாக சுற்றியோட வேண்டிய பகுதியே ஆகும். மறுவுற்பத்தி நிகழ்முறை எவ்வளவுக்கு எவ்வளவு துரிதமாய் நடைபெறுகிறதோ, கொடுப்புச் சாதனமாகப் பணம் செயல்படுவது எவ்வளவுக்கு எவ்வளவு வளர்ச்சி பெற்றுள்ளதோ, அதாவது கடன்-செலாவணி அமைப்பு எவ்வளவுக்கு எவ்வளவு வளர்ச்சி பெற்றுள்ளதோ,[38] மொத்த மூலதனத்துடன் ஒப்பிடுகையில் இந்த மூலதனப் பகுதி அவ்வளவுக்கு அவ்வளவு சிறிதாய் உள்ளது.

வணிக-மூலதனம் சுற்றோட்டத் துறையில் செயல்படும் மூலதனமே ஆகும். சுற்றோட்ட நிகழ்முறை மொத்த மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஒரு கட்டம் ஆகும். ஆனால் சுற்றோட்ட

---

38. வணிக மூலதனத்தை திறனுடை-மூலதனமாக வகைப்படுத்த வேண்டும் என்பதற்காக ராம்சே அதை போக்குவரத்துத் தொழிலோடு போட்டுக் குழப்பி, வர்த்தகத்தை 'சரக்குகளை ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்கு போக்குவரத்து செய்தல்' என்றழைக்கிறார். (செல்வ வினியோகம் பற்றிய கட்டுரை. பக்கம் 19.) வெர்ரியும் இவ்வாறே குழப்புகிறார். (Meditazioni sulla Economia politica § 4 (In: Scrittori Classici italiani di economica politica, Parte moderna பாகம் xv, பக்கம் 32. - ஆங்கிலப் பதிப்பாசிரியர்) ஸே கூட இதே குழப்பத்தை வெளிப்படுத்துகிறார். (Traité d'économie Politique, I, 14,15.) அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைக் கூறுகள்: (ஆண்பிடோவர் மற்றும் நியூயார்க் 1835) என்ற நூலில் சா.பி.நியூமன் சொல்கிறார்: இப்போது இருந்து வரும் சமுதாய பொருளாதார ஏற்பாடுகளில் வணிகர் செய்யும் 'செயல்கூட -- உற்பத்தியாளருக்கும் நுகர்வாளருக்கும் இடையில் நின்று முன்னவரிடம் மூலதனத்தை முன்னீடு செய்து பதிலுக்கு உற்பத்திப் பொருட்களைப் பெற்று, அவற்றை பின்னவரிடம் ஒப்படைத்து பதிலுக்கு மூலதனத்தை திரும்பப் பெறுவதாகிய செயலேகூட - சமுதாயத்தின் பொருளாதார நிகழ்முறைகளை எளிதில் நடைபெறச் செய்வதோடு, எந்தப் பண்டங்கள் தொடர்பாய் செய்யப்படுகிறதோ அந்த மொத்த மூலதனத்துடன் ஒப்பிடுகையில் இந்த மூலதனப்பகுதி அவ்வளவுக்கு அவ்வளவு சிறிதாய் உள்ளது. பண்டங்களுக்கு மதிப்பைச் சேர்க்கவும் செய்கிற பரிமாற்றம் ஆகும்' (பக்கம் 174). இவ்விதம் உற்பத்தியாளரும் நுகர்வாளரும் வணிகரின் இடையீட்டின் மூலமாய் நேரமும் பணமும் மிச்சம் செய்கிறார்கள். இந்தச் சேவைக்கு மூலதனமும் உழைப்பும் முன்னீடு செய்யப்படுவதோடு கைம்மாறும் கிடைக்க வேண்டும்; 'ஏனென்றால் இது உற்பத்திப் பொருட்களுக்கு மதிப்பு சேர்க்கிறது; நுகர்வாளர்களின் கையிலிருக்கும் பண்டங்கள் உற்பத்தியாளர்கள் கையிலிருக்கும் அதே

நிகழ்முறையில் மதிப்பு இம்மியளவும் உற்பத்தியாவதில்லை, எனவே உபரி-மதிப்பும் கூட இம்மியளவும் உற்பத்தியாவதில்லை. மதிப்புத் திரள் மாறாமல், அதன் வடிவத்தில் மட்டும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உண்மையில் அங்கே சரக்குகளின் உருமாற்றத்தைத் தவிர வேறு எதுவும் நிகழ்வதில்லை; இதற்கு மதிப்புகளின் படைப்புடனோ மாற்றத்துடனோ எவ்வித நேரடி தொடர்பும் இல்லை. உற்பத்தியான சரக்குகளை விற்பதன் மூலம் உபரி-மதிப்பு ஈடேற்றம் செய்யப்படுகிறது, என்றால், அது ஏற்கெனவே அச்சரக்குகளில் இருந்து வருவதால்தான் இப்படிச் செய்ய முடிகிறது. ஆகவே இரண்டாவது செயலிலும், அதாவது பண-மூலதனம் மீண்டும் சரக்குகளுக்கு (உற்பத்தி-அடிக்கூறுகளுக்கு) பரிவர்த்தனை ஆவதிலும் வாங்குகிறவர் இம்மியளவும் உபரி-மதிப்பை ஈடேற்றம் செய்வதில்லை. அவர் தமது பணத்தை உற்பத்திச் சாதனங்களுக்கும் உழைப்புச் சக்திக்கும் பரிவர்த்தனை செய்வதன் மூலம் உபரி-மதிப்பின் உற்பத்தியைத் தொடக்குவதோடு சரி, ஆனால் இந்த உருமாற்றங்களுக்கு சுற்றோட்டக் காலம் - மூலதனம் உபரி-மதிப்பை உற்பத்தி செய்யாத சொல்லப் போனால், எதையுமே உற்பத்தி செய்யாத காலமாகிய இது-தேவைப்படுவதால், இது மதிப்புகளின் படைப்பைக் கட்டுப்படுத்துகிறது. உபரி-மதிப்பானது சுற்றோட்டக் காலத்தின் நீட்டளவுக்கு எதிர்விகிதத்தில் இலாப வீதத்தின் வாயிலாக வெளிப்படுகிறது. ஆக, வணிக-மூலதனம் மதிப்பையோ உபரி-மதிப்பையோ படைப்பதில்லை, எப்படியும் நேரடியாகப் படைப்பதில்லை. இது சுற்றோட்டக் காலத்தைக் குறுக்க உதவுவதால் தொழில்துறை முதலாளிகளால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பைக் கூடுதலாக்கச் சுற்றடியாகத் துணைபுரியலாம். இது சந்தையை விரிவாக்கத் துணை புரிகிறது. மூலதனங்களிடையே உழைப்புப் பிரிவினையை ஏற்படுத்துகிறது. எனவே மூலதனம் மேலும் விரிவான அளவுவீதத்தில் இயங்குவதை சாத்தியமாக்குகிறது

---

செயலாகவே' தெரிகிறது (பக்கம் 175). நியூமனின் இந்தக் கருத்து அடிப்படையிலேயே தவறாகும். சரக்கின் பயன்-மதிப்பு உற்பத்தியாளரின் கையிலிருப்பதைவிட நுகர்வாளரின் கையில் அதிகமாய் இருக்கிறது; ஏனென்றால் அதனை நுகர்வாளரே முதலில் ஈடேற்றம் செய்கிறார். சரக்கு நுகர்வுத்துறையில் நுழையும் வரை அதன் பயன்-மதிப்பு அதற்குரிய நோக்கத்துக்கு பயன்படுவதில்லை, செயல்படத் தொடங்குவதில்லை. அது உற்பத்தியாளரின் கையில் இருந்து வரும் வரை உள்ளுறை வடிவில் மட்டுமே நிலவுகிறது. ஆனால் எவரும் ஒரு சரக்குக்கு இரு முறை விலை கொடுப்பதில்லை - முதலில் அதன் பரிவர்த்தனை - மதிப்புக்காகவும் பிறகு அதன் பயன்-மதிப்புக்காகவும் விலை கொடுப்பதில்லை. பரிவர்த்தனை-மதிப்புக்கு விலை கொடுக்கிறேன் என்றால், இப்படிச் செய்வதன் மூலம் அதன் பயன்-மதிப்பை தனதாக்கிக் கொள்கிறேன். சரக்கை உற்பத்தியாளர் அல்லது இடையாளரிடமிருந்து நுகர்வாளருக்கு மாற்றுவதன் மூலம் அதன் பரிவர்த்தனை-மதிப்பு இம்மியளவும் அதிகமாவதில்லை.

என்பதால், இதன் பணி தொழில்துறை மூலதனத்தின் உற்பத்தித் திறனையும் அம்மூலதனத்தின் திரட்டலையும் ஊக்கி வளர்க்கிறது. இது சுற்றோட்டக் காலத்தைக் குறுகச் செய்வதால், உபரி-மதிப்புக்கும் மூலதன முன்னீட்டுக்குமான விகிதத்தை, எனவே இலாப வீதத்தை உயரச் செய்கிறது. இது பண வடிவில் சுற்றோட்டத் துறைக்குள் அடைந்து கிடக்கும் மூலதனப் பகுதியை எந்த அளவுக்குக் குறையச் செய்கிறதோ, நேரடியாக உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மூலதனப் பகுதியை அந்த அளவுக்கு அதிகரிக்கச் செய்கிறது.

## அத்தியாயம் XVII

## வர்த்தக இலாபம்

மூலதனம் சுற்றோட்டத் துறையில் ஆற்றும் முறையான பணிகள் - தொழில் துறை முதலாளி முதலாவதாகத் தமது சரக்குகளின் மதிப்பை ஈடேற்றம் பெறச் செய்வதற்கும், இரண்டாவதாக இந்த மதிப்பைத் திரும்பவும் உற்பத்தி-அடிக்கூறுகளாய் மாற்றுவதற்கும் செய்தாக வேண்டிய காரியங்கள், அதாவது C'—M—C ஆகிய சரக்கு-மூலதன உருமாற்றத்தை நிகழச் செய்யும் விற்றலும் வாங்கலுமான காரியங்கள் - மதிப்பையோ உபரி-மதிப்பையோ உற்பத்தி செய்கிறவை அல்ல என்று இரண்டாம் பாகத்தில் (பக்கம் 114-30) பார்த்தோம். இந்த நோக்கத்திற்குத் தேவைப்படுகிற நேரம்தான் சரக்குகளைப் பொறுத்தவரை புறவயமாகவும், முதலாளியைப் பொறுத்த வரை அகவயமாகவும் மதிப்பு, உபரி-மதிப்பு இவற்றின் உற்பத்திக்கு வரம்பு நிர்ணயிப்பதாய்ப் பார்த்தோம். இது பொதுவாகச் சரக்கு-மூலதனத்தின் உருமாற்றத்துக்குப் பொருந்துவதாகும் என்றாலும், இந்தச் சரக்கு-மூலதனத்தில் ஒரு பகுதி வர்த்தக-மூலதனமாக உருவெடுத்தாலும் உருவெடுக்கலாம் என்பதாலோ, சரக்கு-மூலதனத்தின் உருமாற்றத்தை நிகழச் செய்யும் காரியங்கள் முதலாளிகளது தனிக் குழு ஒன்றின் தனிப் பொறுப்பாய், அல்லது பண-மூலதனத்தில் ஒரு பகுதியின் பிரத்தியேகப் பணியாய்க் காணப்படுகின்றன என்பதாலோ இதில் இம்மியளவும் மாற்றமில்லை. தொழில் துறை முதலாளிகளே சரக்குகளை விற்பதும் வாங்குவதும் - இதையே சரக்கு - மூலதனத்தின் உருமாற்றமாகிய C'—M—C குறிக்கிறது - மதிப்பையோ உபரி-மதிப்பையோ படைக்கும் காரியங்கள் அல்ல என்றால், தொழில் துறை முதலாளிகள் அல்லாத மற்றவர்களால் செய்யப்படும் போதும் இவை மதிப்பையோ உபரி-மதிப்பையோ படைக்க மாட்டா என்பது உறுதி. மேலும் மொத்தச் சமுதாய மூலதனத்தில் ஒரு பகுதியானது மறுவுற்பத்தி நிகழ்முறை சுற்றோட்ட நிகழ்முறையால் தடைபட்டு விடாமல் தொடர்ச்சியாக நடைபெறும் பொருட்டு எப்போதும் பண-மூலதனமாகக் கையில் இருந்து வர வேண்டும் அல்லவா, இந்தப் பண-மூலதனம் மதிப்பையோ உபரி-மதிப்பையோ படைப்பதில்லை என்றால், தொழில் துறை முதலாளிகள் அல்லாத ஒரு பிரிவு முதலாளிகளால் இதே பணியை ஆற்றுவதற்காகத் தொடர்ந்து சுற்றோட்டத்தில் விடப்படுவதாலும் அது

மதிப்பையோ உபரி-மதிப்பையோ படைக்கும் குணங்களைப் பெற்று விட முடியாது. எந்த அளவுக்கு வணிக-மூலதனம் சுற்றடியாக உற்பத்தித் திறனுள்ளதாய் இருக்கலாம் என்பதை ஏற்கெனவே சுட்டினோம்; இது குறித்துப் பிறகு விவரமாய்ப் பரிசீலிப்போம்.

ஆக, வர்த்தக-மூலதனமானது - சேமித்து வைத்தலையும் சிப்பங் கட்டுதலையும் போக்குவரத்தையும் சில்லறை வணிகத்தையும் போல் அதனோடு தொடர்புடைய பலதரப்பட்ட பணிகளையெல்லாம் களைந்து விட்டு, விற்கும் பொருட்டு வாங்குவதாகிய அதன் உண்மைப் பணியோடு மட்டும் நின்று கொள்ளும்போது - மதிப்பையோ உபரி-மதிப்பையோ படைக்காமல் இம்மதிப்புகளின் ஈடேற்றத்திலும், எனவே அதே போது நேரடிச் சரக்குப் பரிவர்த்தனையிலும், அதாவது அவை கைக்கு கை மாறிச் செல்வதில், சமுதாய அளவிலான உருமாற்றத்தில் இடையாளாகவே செயல்படுகிறது. எவ்வாறாயினும், தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்டக் கட்டமானது உற்பத்திக் கட்டத்தைப் போலவே மறுவுற்பத்தி நிகழ்முறையின் ஒரு கட்டமே ஆகும் என்பதால், சுற்றோட்ட நிகழ்முறையில் சுயேச்சையாகச் செயல்படும் மூலதனம் பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் செயல்படும் மூலதனத்தைப் போலவே சராசரி வருடாந்தர இலாபத்தைத் தந்தாக வேண்டும். வணிக-மூலதனம் தொழில் துறை மூலதனத்தைக் காட்டிலும் உயர்ந்த சதவீதத்தில் சராசரி இலாபம் தருமானால், தொழில் துறை மூலதனத்தில் ஒரு பகுதி வணிக-மூலதனமாகத் தன்னை மாற்றிக் கொள்ளும். வணிக-மூலதனம் குறைந்த சராசரி இலாபம் தருமானால், விளைவு நேர்மாறாய் இருக்கும். அப்போது வணிக-மூலதனத்தில் ஒரு பகுதி தொழில் துறை மூலதனமாக மாற்றப்படும். எந்த மூலதன வகையும் வணிக-மூலதனத்தைப் போல் அவ்வளவு எளிதாய் அதன் நோக்கம் அல்லது பணியை மாற்றிக் கொள்வதில்லை.

வணிக-மூலதனம் உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதில்லை என்பதால், சராசரி இலாபமாக அது ஈட்டுகிற உபரி-மதிப்பு மொத்தத் திறனுடை-மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பில் ஒரு பகுதியாகவே இருந்தாக வேண்டும். ஆனால் இப்போது நம் முன் எழுகிற கேள்வி இதுதான்; வணிக-மூலதனமானது திறனுடை-மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பு அல்லது இலாபத்தில் தனக்குரிய பங்கை எப்படிக் கவர்ந்து கொள்கிறது?

வர்த்தக-இலாபம் என்பது சரக்குகளின் விலையில் அவற்றின் மதிப்புக்கு மேல் கூடுதலாய்ச் சேர்க்கப்படுவதே, அல்லது பெயரளவில் செய்யப்படும் உயர்வே என்பது மாயைதான்.

வணிகர் தாம் விற்கிற சரக்குகளின் விலையிலிருந்துதான் இலாபம் பெற முடியும் என்பது வெளிப்படையானது; சரக்குகளை விற்று அவர் பெறும் இலாபமானது அவரது கொள்முதல்-விலைக்கும் விற்பனை-விலைக்கும் இடையிலான வேறுபாட்டுக்கு, அதாவது முன்னதன் மீது பின்னதற்குள்ள மிகைக்குச் சமமாய் இருந்தாக வேண்டும் என்பது இன்னும் கூட வெளிப்படையானது.

சரக்குகள் வாங்கப்பட்ட பின்னரும் விற்கப்படுவதற்கு முன்னரும் அவற்றில் கூடுதல் செலவுகள் (சுற்றோட்டச் செலவுகள்) சேருவது சாத்தியம்தான், சேராமலிருப்பதும் சாத்தியம்தான். அப்படிச் செலவுகள் ஏற்பட்டால், கொள்முதல்-விலையின் மீது விற்பனை-விலைக்குள்ள மிகை முழுவதும் இலாபம் ஆகாது என்பது தெளிவு. இத்தகைய செலவுகள் ஏதும் ஏற்படவில்லை என்று - பகுப்பாய்வை எளிமைப்படுத்தும் பொருட்டு - இப்போதைக்கு அனுமானம் செய்து கொள்வோம்.

தொழில் துறை முதலாளிக்கு அவரது சரக்குகளின் விற்பனை-விலைக்கும் கொள்முதல்-விலைக்கும் இடையிலான வேறுபாடு அவற்றின் உற்பத்தி-விலைக்கும் அடக்க-விலைக்கும் இடையிலான வேறுபாட்டுக்குச் சமம்; மொத்தச் சமுதாய மூலதனத்தின் கோணத்திலிருந்து பார்த்தால், சரக்குகளின் மதிப்புக்கும் முதலாளிகளுக்கான அவற்றின் அடக்க-விலைக்கும் இடையிலான வேறுபாட்டுக்குச் சமம்; அதாவது இச்சரக்குகளில் உருக்கொண்ட மொத்த உழைப்பளவுக்கும் ஊதிய உழைப்பளவுக்கும் இடையிலான வேறுபாட்டுக்குச் சமம். தொழில் துறை முதலாளியால் வாங்கப்படும் சரக்குகள் விற்பனைக்குரிய சரக்குகளாகச் சந்தையில் விடப்படுவதற்கு முன்னால் உற்பத்தி நிகழ்முறையினூடாகச் செல்கின்றன; அவற்றின் விலையில் இலாபமாக ஈடேற்றம் பெற வேண்டிய பகுதி இந்த உற்பத்தி நிகழ்முறையில்தான் படைக்கப்படுகிறது. ஆனால் வணிகரின் நிலைமை வேறு. சரக்குகள் சுற்றோட்ட நிகழ்முறையில் இருந்து வரும் வரைதான் அவரது கையில் இருக்கின்றன. அவர் செய்வதெல்லாம் திறனுடை முதலாளி தொடங்கி வைத்த அவற்றின் விற்பனையை, அவற்றினது விலையின் ஈடேற்றத்தைத் தொடருவதே; ஆகவே அவை மீண்டும் உபரி-மதிப்பை உறிஞ்சிக் கொள்ளும்படியான எவ்வித இடைக்கட்ட நிகழ்முறையினூடாகவும் அவர் அவற்றைச் செலுத்துவதில்லை. சுற்றோட்ட நிகழ்முறையின் போது தொழில் துறை முதலாளி செய்வதெல்லாம் ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் உபரி-மதிப்பு அல்லது இலாபத்தை ஈடேற்றம் பெறச் செய்வதுதான்.

ஆனால் வணிகரோ சுற்றோட்டத்தின் போதும் அதன் வாயிலாகவும் அவரது இலாபத்தை ஈடேற்றம் பெறச் செய்வதோடு கூட, அதற்கு முன்னதாக இந்த இலாபம் கிடைப்பதற்கு வழிசெய்து கொண்டாக வேண்டும். இதைச் செய்வது எப்படி? தொழில் துறை முதலாளியிடமிருந்து சரக்குகளை அவற்றின் உற்பத்தி-விலைக்கு வாங்கி - மொத்தச் சரக்கு-மூலதனத்தின் நிலையிலிருந்து நோக்குகையில் அவற்றின் மதிப்புக்கு வாங்கி - இந்த விலையோடு ஒரு கூடுதல் தொகையைச் சேர்த்து அவற்றின் உற்பத்தி விலைக்கும் மிகையான விலைக்கு விற்று - மொத்தச் சரக்கு-மூலதனத்தின் நிலையிலிருந்து நோக்குகையில் அவற்றின் மதிப்புக்கும் கூடுதலான விலைக்கு விற்று - சரக்குகளின் உண்மை மதிப்புக்கு மேல் அவற்றின் பெயர் மதிப்புக்குள்ள மிகையை வசப்படுத்திக் கொள்வது தவிர வேறு வழி ஏதும் இல்லை என்பதாகத் தோன்றுகிறது. சுருங்கச் சொல்லின், சரக்குகளை அவற்றின் பெறுமானத்துக்கும் அதிகமான விலைக்கு விற்று இந்தக் கூடுதல் தொகையை அவர்கள் இலாபமாய்ப் பெறுவதாகத் தோன்றுகிறது.

இப்படி ஒரு கூடுதல் தொகையைச் சேர்த்து விலையைக் கூட்டி விற்கும் இந்த வழி எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதுதான். எடுத்துக்காட்டாய், ஒரு கெஜம் துணியின் அடக்க-விலை 2 ஷில்லிங். இதை வாங்கி விற்று 10% இலாபம் சம்பாதிக்க வேண்டுமானால் விலையை $^{1}/10$ பங்கு கூடுதலாக்க வேண்டும்; அதாவது கெஜம் துணியை 2 ஷில்லிங் 2 $^{2}/5$ பென்னி விலைக்கு விற்க வேண்டும். அதன் உள்ளபடியான உற்பத்தி-விலைக்கும் விற்பனை-விலைக்கும் இடையிலான வேறுபாடு = 2 $^{2}/5$ பென்னி; இது 2 ஷில்லிங் மீது 10% இலாபத்தைக் குறிப்பதாகும். இது ஒரு கெஜம் துணியை உண்மையில் 1 $^{1}/10$ கெஜம் துணியின் விலைக்கு விற்பதற்கு ஒப்பாகும். அல்லது, 2 ஷில்லிங் விலைக்கு $^{10}/11$ கெஜம் துணியை மட்டும் விற்றுவிட்டு $^{1}/11$ கெஜத்தைக் கொடுக்காமல் வைத்துக் கொள்வதற்கு ஒப்பாகும். உண்மையில் கெஜம் 2 ஷில்லிங் 2½ பென்னி விலையில் $^{1}/11$ கெஜத்தைத் திருப்பி வாங்க முடியும். ஆகவே இது சரக்குகளின் விலையைப் பெயரளவில் உயர்த்தி உபரி-மதிப்பிலும் உபரி-உற்பத்தியிலும் பங்கு பெறும் சுற்றடி வழியாகவே இருக்கும்.

சரக்குகளின் விலையை உயர்த்தி வர்த்தக இலாபத்தை ஈடேற்றம் செய்வது எடுத்த எடுப்பில் இப்படித்தான் தெரிகிறது. இலாபமானது சரக்குகளின் விலையைப் பெயரளவில் உயர்த்துவதிலிருந்து, அல்லது சரக்குகளை அவற்றின் மதிப்புக்கும் கூடுதலான விலைக்கு விற்பதிலிருந்து வருகிறது என்ற இந்தக் கருத்தெல்லாம்

வர்த்தக-மூலதனத்தின் கண்ணோட்டங்களிலிருந்து உதித்தெழுவதுதான்.

ஆனால், இன்னும் நெருங்கி ஆராய்ந்து பார்க்கையில் இது வெறும் மாயைதான் என்பது விரைவில் தெரிந்து விடுகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி மேலோங்கித் திகழ்வதாய்க் கொள்வோமானால், வர்த்தக இலாபத்தை இவ்வழியில் ஈடேற்றம் செய்ய முடியாது. (எப்போதும் இங்கே சராசரிகளைக் குறிப்பிடுகிறோமே தவிர, தனித்த நேர்வுகளை அல்ல.) வணிகர் சரக்குகளை அவற்றின் உற்பத்தி-விலைக்கு மேல் 10% கூடுதலான விலைக்கு விற்பதன் மூலம் அச்சரக்குகள் மீது 10% இலாபத்தை மட்டும் ஈடேற்றம் செய்து கொள்ள முடியும் என நாம் அனுமானம் செய்து கொள்வது ஏன்? ஏனென்றால் இந்தச் சரக்குகளின் உற்பத்தியாளராகிய தொழில் துறை முதலாளி (தொழில் துறை மூலதனத்தின் ஆளுருவமாகிய இவர் வெளி உலகின் முன்னே உற்பத்தியாளராகக் காட்சியளிக்கிறார்) அவற்றை வர்த்தகரிடம் அவற்றின் உற்பத்தி-விலைக்கே விற்றதாய்க் கொள்கிறோம். சரக்குகளை வாங்குவதற்கு வர்த்தகர் கொடுத்த கொள்முதல்-விலை அவற்றின் உற்பத்தி-விலைக்கு, அல்லது இறுதியாகப் பார்க்குமிடத்து அவற்றின் மதிப்புக்குச் சமமாய் இருக்குமானால், அதாவது உற்பத்தி-விலை, அல்லது இறுதியாகப் பார்க்குமிடத்து மதிப்பானது வணிகரின் அடக்க-விலையைக் குறிக்குமானால், அவரது கொள்முதல் - விலைக்கு மேல் விற்பனை-விலை பெற்றுள்ள மிகை-இந்த வேறுபாடுதான் அவரது இலாபத்துக்கு ஆதாரம் - அவற்றின் உற்பத்தி-விலைக்கு மேல் வர்த்தக-விலை பெற்றுள்ள மிகையாய் இருந்தாக வேண்டும்; இறுதியாகப் பார்த்தால் வணிகர் எல்லாச் சரக்குகளையுமே அவற்றின் மதிப்பை விடக்கூடுதலான விலைக்கு விற்கிறார் என்றாகிறது. ஆனால் தொழில் துறை முதலாளி தமது சரக்குகளை அவற்றின் உற்பத்தி-விலைக்கே வணிகரிடம் விற்பதாக அனுமானம் செய்து கொண்டோமே ஏன்? சரிவரச் சொல்வதெனில் அந்த அனுமானத்தில் நாம் ஆராயாமலே ஏற்றுக்கொண்டது என்ன? வணிக-மூலதனம் பொது இலாப வீதத்தின் உருவாக்கத்தில் பங்கு பெறவதில்லை என்பதே அது (இது வரை நாம் வணிக-மூலதனத்தை வர்த்தக-மூலதனம் என்ற அளவில் மட்டுமே பரிசீலித்து வருகிறோம்). பொது இலாப வீதம் பற்றிப் பேசுகையில் நாம் இந்த முதனிலையிலிருந்து தொடங்குவது அவசியமாயிற்று. ஏனென்றால், முதலாவதாக, அப்போது வணிக-மூலதனம் என்பதே நம்மைப் பொறுத்தவரை இல்லாத ஒன்றுதான்; இரண்டாவதாக, சராசரி இலாபத்தையும், எனவே பொது

இலாப வீதத்தையும் தொழில் துறை மூலதனங்களால் வெவ்வேறு உற்பத்திக் கிளைகளில் உள்ளபடியே உற்பத்தி செய்யப்படும் இலாபங்கள் அல்லது உபரி-மதிப்புகளின் சமனமாதலாய் முதலில் வளர்த்தெடுக்க வேண்டியிருந்தது. ஆனால் வணிக மூலதனத்தை எடுத்துக் கொள்ளும் போது, இலாப உற்பத்தியில் பங்கு பெறாமல் இலாபத்தில் பங்கு பெறுகிற ஒரு மூலதனத்தைப் பரிசீலிக்க முற்படுகிறோம். ஆகவேதான் நமது முந்தைய விளக்கத்தோடு இப்போது சிலவற்றைக் கூடுதலாய்ச் சேர்த்துக் கொள்வது அவசியமாகிறது.

ஓராண்டு காலத்தில் முன்னீடு செய்யப்படும் மொத்தத் தொழில் துறை மூலதனம் = $720_c+180_v$ = 900 (மிலியன், £ எனலாம்) என்றும், s'=100% என்றும் வைத்துக் கொள்வோம். ஆகவே உற்பத்தி = $720_c+180_v$ $+180_s$. இந்த உற்பத்திப் பொருள் அல்லது சரக்கு-மூலதன உற்பத்தியை C என்போம் இதன் மதிப்பு அல்லது உற்பத்தி-விலை (சரக்குகளின் மொத்த அளவிற்கு இரண்டும் ஒன்றுதான்) = 1,080; மொத்தச் சமுதாய மூலதனமாகிய 900க்கு இலாப வீதம் = 20%. நமது முந்தைய பகுப்பாய்வுகளின் படி இந்த 20% ஆனது சராசரி இலாப வீதம் ஆகும்; ஏனென்றால் இங்கே உபரி-மதிப்பானது ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இயைபுடைய தனிப்பட்ட ஒரு மூலதனத்திற்கென்று கணக்கிடப் படுவதற்குப் பதில், சராசரி இயைபுடைய மொத்தத் தொழில் துறை மூலதனத்திற்கென்றே கணக்கிடப்படுகிறது. ஆக C=1,080; இலாப வீதம் = 20%. ஆனால் இந்த £900 தொழில் துறை மூலதனத்தோடு கூடவே £300 வணிக-மூலதனமும் இருப்பதாகவும், தொழில் துறை மூலதனத்தை போலவே இந்த வணிக-மூலதனமும் அதன் பருமனக்கேற்ப இலாபத்தில் பங்கு பெறுவதாகவும் கொள்வோம். நமது அனுமானத்தின் படி இது மொத்த மூலதனமாகிய 1,000இல் $^1/_{10}$ பங்கு ஆகும். ஆகவே அது மொத்த உபரி-மதிப்பாகிய 180ல் $^1/_{10}$ பங்கு என்னுமளவுக்குப் பங்கு பெற்று, 18% இலாபம் பெறுகிறது, இந்நிலையில் மொத்த மூலதனத்தில் எஞ்சியுள்ள $^9/_{10}$ பங்கினிடையில் விநியோகமாக வேண்டிய இலாபம் =162தான்; அதாவது 900 மூலதனத்திற்கு அதே 18%தான். ஆக, 900 தொழில் துறை மூலதனத்தின் உடைமையாளர்கள் வணிகர்களிடம் Cஐ விற்கும் விலை = $720_c + 180_v$ $+162_s$ = 1,062. வர்த்தகர் தமது மூலதனமாகிய 100உடன் 18% சராசரி இலாபத்தைச் சேர்த்துக் கூட்டினால், அவர் சரக்குகளை 1,062+18=1,080 என்னும் விலைக்கு, அதாவது அவற்றின் உற்பத்தி-விலைக்கு, மொத்தச் சரக்கு-மூலதனத்தின் கோணத்திலிருந்து பார்த்தால் அவற்றின்

மதிப்புக்கு விற்பார்; இருப்பினும் அவர் சுற்றோட்ட நிகழ் முறையின் போதும், அந்நிகழ்முறையின் மூலமாகவும்தான், அவரது கொள்முதல் விலைக்கு மேல் விற்பனை-விலை பெற்றுள்ள மிகையிலிருந்துதான் இலாபம் சம்பாதிக்கிறார். ஆனால் அவர் சரக்குகளை அவற்றின் மதிப்பைக் காட்டிலும், அல்லது உற்பத்தி-விலையைக் காட்டிலும் கூடுதலான விலைக்கு விற்பதில்லை; அவர் அவற்றைத் தொழில் துறை முதலாளியிடமிருந்து அவற்றின் மதிப்பைக் காட்டிலும், அல்லது உற்பத்தி-விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு வாங்கி இருப்பதுதான் இதற்கும் காரணம்.

இவ்விதம் வணிக-மூலதனமானது மொத்த மூலதனத்தில் அதன் பங்குக்கேற்ப பொது இலாப வீதத்தின் உருவாக்கத்தில் ஒரு காரணி ஆகிறது. ஆகவே, மேற்கூறிய உதாரணத்தில் சராசரி இலாப வீதம்=18% என்று சொல்லும் போது, மொத்த மூலதனத்தில் $^1/10$ பங்கு வணிக-மூலதனமாய் இல்லாமலும் அதனால் பொது இலாபவீதம் $^1/10$ பங்கு குறைக்கப்படாமலும் இருக்குமானால், சராசரி இலாப வீதம் = 20% என்பதாக இருக்கும். உற்பத்தி-விலைக்கு இன்னும் கூட நெருக்கமாகவும் முழுநிறைவாகவும் இலக்கணம் வகுப்பதற்கு இது வழிசெய்கிறது. உற்பத்தி-விலை என்று சொல்லும் போது, முன் போலவே சரக்கின் விலை = அதன் அடக்கச் செலவுகள் (அதில் அடங்கியுள்ள மாறா+மாறும்-மூலதனத்தின் மதிப்பு) + சராசரி இலாபம் என்பதையே குறிப்பிடுகிறோம். ஆனால் இந்தச் சராசரி இலாபம் இப்போது வேறு வழியில் நிர்ணயிக்கப்படுகிறது. மொத்தத் திறனுடை-மூலதனம் உற்பத்தி செய்யும் மொத்த இலாபத்தால் அது நிர்ணயிக்கப்படுகிறது; ஆனால், மேலே அனுமானம் செய்து கொண்டது போல் மொத்தத் திறனுடை-மூலதனம்=900, இலாபம்=180 என்று இருக்குமானால், சராசரி இலாப வீதம் = $^{180}/900$=20% ஆகும்படி மொத்தத் திறனுடை-மூலதனத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அது கணக்கிடப்படுவதில்லை. மாறாக மொத்தத் திறனுடை-மூலதனம் +வணிக-மூலதனம் என்பதையே அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது; அதாவது திறனுடை-மூலதனம் 900, வணிக-மூலதனம் 100 என்றால் சராசரி இலாப வீதம்=$^{180}/1,000$=18%. ஆகவே உற்பத்தி-விலை = K (அடக்கச் செலவுகள்) + 18 தானே தவிர K+20 அல்ல. மொத்த இலாபத்தில் வணிக-மூலதனத்துக்கு உரிய பங்கு இவ்விதம் சராசரி இலாப வீதத்தில் சேர்க்கப்படுகிறது. ஆகவே மொத்தச்

சரக்கு-மூலதனத்தின் உள்ளபடியான மதிப்பு, அல்லது உற்பத்தி-விலை =k+p+m (m என்பது வர்த்தக இலாபத்தைக் குறிக்கும்). இவ்வாறு உற்பத்தி-விலையானது, அதாவது தொழில் துறை முதலாளியாக இருப்பவர் தனது சரக்குகளை விற்கும் விலையானது உள்ளபடியான உற்பத்தி-விலையைக் காட்டிலும் சிறியதாகும்; அல்லது, எல்லாச் சரக்குகளையும் ஒட்டுமொத்தமாய் எடுத்துக் கொள்வோமானால், தொழில் துறை முதலாளிகளின் வர்க்கம் அதன் சரக்குகளை விற்கும் விலை அவற்றின் மதிப்பை விடக் கீழானதாகும். ஆகவே, மேற்கூறிய உதாரணத்தில் 900 (அடக்கச் செலவுகள்)+900இல் 18%, அதாவது 900+162=1,062. ஆக, வணிகர் 100 கொடுத்து வாங்கிய சரக்கை 118க்கு விற்பதன் மூலம் உண்மையில் விலையை 18% கூடுதலாக்கவே செய்கிறார் என்றாகிறது. ஆனால் அவர் 100 கொடுத்து வாங்கிய இந்தச் சரக்கு மெய்யாகவே 118 மதிப்புடையதாகும் என்பதால் அவர் அதனை அதன் மதிப்பை விடக்கூடுதலான விலைக்கு விற்கவில்லை. இனிமேல் நாம் உற்பத்தி-விலை என்ற சொல்லை இந்த அர்த்தத்தில் - முன்னைக் காட்டிலும் துல்லியமான அர்த்தத்தில்-பயன்படுத்துவோம். இதிலிருந்து தெளிவாவது என்னவென்றால்: தொழில் துறை முதலாளியின் இலாபம் சரக்கின் அடக்க-விலை மீது அதன் உற்பத்தி-விலை பெற்றுள்ள மிகைக்குச் சமம்; இந்தத் தொழில் துறை இலாபத்திலிருந்து (industrial profit) வேறானதாகிய வர்த்தக இலாபம் சரக்கின் உற்பத்தி-விலை (வணிகருக்கு அதன் கொள்முதல்-விலை) மீது விற்பனை-விலை பெற்றுள்ள மிகைக்குச் சமம்; ஆனால் சரக்கின் உள்ளபடியான விலை = அதன் உற்பத்தி-விலை+வர்த்தக இலாபம் எப்படித் தொழில் துறை மூலதனம் ஏற்கெனவே சரக்குகளின் மதிப்பில் உபரி-மதிப்பாக இருந்து வரும் இலாபங்களையே ஈடேற்றம் செய்கிறதோ. அதே போல் வணிக-மூலதனமும் சரக்குகளுக்குத் தொழில் துறை முதலாளி வைத்த விலையில் உபரி-மதிப்பு அல்லது இலாபம் முழுவதும் இன்னமும் முழுமையாக ஈடேற்றம் செய்யப்படாததால்தான் இலாபம் பெறுகிறது.[39] வணிகரின் விற்பனை- விலை இவ்விதம் கொள்முதல்-விலையை விஞ்சுவதற்கு காரணம் கொள்முதல்-விலை மொத்த மதிப்பை விடக் குறைவாய் இருப்பதுதானே தவிர, விற்பனை-விலை மொத்த மதிப்பை விடக் கூடுதலாய் இருப்பது அல்ல.

ஆக, வணிக-மூலதனமானது உபரி-மதிப்பின் உற்பத்தியில் பங்கு பெறா விட்டாலும் உபரி-மதிப்பைச் சராசரி இலாபமாக

39 ஜான் பெல்லர்ஸ் (ஏழைகள், பட்டறைத் தொழில்கள், வர்த்தகம் தோட்டங்கள் ஒழுக்கக்கேடு ஆகியவை பற்றிய கட்டுரைகள். லண்டன், 1699, பக்கம்10.-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

சமனமாக்குவதில் பங்கு பெறுகிறது. இவ்வாறு பொது இலாப வீதமானது வணிக-மூலதனத்திற்காக உபரி-மதிப்பிலிருந்து பிடித்தம் செய்யப்படுவதை, தொழில் துறை மூலதனத்தின் இலாபத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுவதைக் குறிக்கிறது.

மேற்கூறியதிலிருந்து பெறப்படுவதாவது:

1. தொழில் துறை மூலதனத்தோடு ஒப்பிடுகையில் வணிக-மூலதனம் எவ்வளவுக்குப் பெரிதாய் உள்ளதோ, தொழில் துறை இலாபவீதம் அவ்வளவுக்குச் சிறிதாய் இருக்கும்; வணிக-மூலதனம் எவ்வளவுக்குச் சிறிதாய் உள்ளதோ, தொழில் துறை இலாப வீதம் அவ்வளவுக்குப் பெரிதாய் இருக்கும்.

2. எப்போதுமே இலாப வீதம் உள்ளபடியான உபரி-மதிப்பு வீதத்தை விடச் சிறிதாகும். அதாவது எப்போதுமே சுரண்டல்-கடுமையை குறைத்துக் காட்டுவதாகும் என்று முதற் பகுதியில் தெளிவாக்கினோம். மேற்கூறிய உதாரணத்தில், 720c + 180v + 180 s என்பதில் உபரி-மதிப்பு வீதம் 100%, இலாப வீதமோ 20%தான். வணிக-மூலதனத்துக்குப் போய்ச் சேரும் பங்கையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் சராசரி இலாப வீதம் இன்னும் சிறிதாய்த் தெரிவதால் - 20%இலிருந்து 18% ஆகி விடுவதால் - வேறுபாடு இன்னும் பெரிதாகி விடுகிறது. ஆகவே, நேரடி முதலாளித்துவச் சுரண்டலாளரின் சராசரி இலாப வீதமானது உள்ளபடியே இருப்பதை விடவும் குறைவான இலாப வீதத்தைக் குறிப்பதாகும்.

மற்றெல்லா நிலைமைகளும் மாறாதிருக்க, வணிக-மூலதனத்தின் ஒப்பீட்டுப் பரிமாணம் (கலப்பின வடிவத்தைக் குறிப்பவரான சிறு வர்த்தகரை விதிவிலக்காய்க் கொள்கிறோம்) அதன் புரள்வு வேகத்துக்கு எதிர் விகிதத்தில் உள்ளது, எனவே பொதுவாக மறுவுற்பத்தி நிகழ்முறையின் ஆற்றலுக்கு எதிர் விகிதத்தில் உள்ளது. விஞ்ஞானப் பகுப்பாய்வின் போது தொழில் துறை மூலதனங்கள், அவற்றிடையிலான போட்டி ஆகியவற்றின் விளைவாகவே பொது இலாப வீதம் உருவாவதாகவும், பிற்பாடுதான் வணிக-மூலதனத்தின் குறுக்கீட்டால் திருத்திச் சரி செய்து ஒழுங்குபடுத்தப்படுவதாகவும் தெரிகிறது. ஆனால் வரலாற்று வளர்ச்சியின் போது இந்நிகழ்முறை அப்படியே தலைகீழாக மாறிப் போகிறது. வணிக-மூலதனம்தான் முதலில் சரக்குகளின் விலையை ஏறத்தாழ அவற்றின் மதிப்புக்கேற்ப நிர்ணயிக்கிறது; மறுவுற்பத்தி நிகழ்முறையை ஊக்கப்படுத்தும் துறையாகிய சுற்றோட்டத் துறையில்தான் பொது இலாப வீதம்

தொடக்கத்தில் உருவெடுக்கிறது. ஆரம்பத்தில் வர்த்தக இலாபம்தான் தொழில் துறை இலாபத்தை நிர்ணயிக்கிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறை நிலைநாட்டப்பெற்று உற்பத்தியாளரே வணிகரான பிறகு தான். வர்த்தக இலாபமானது சமுதாய மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டுள்ள மொத்த மூலதனத்தின் ஈவுப் பகுதியென்ற முறையில் வணிக-மூலதனத்திற்குரிய பங்காய்ச் சேரும் மொத்த உபரி-மதிப்பின் ஈவுப் பகுதியாக மாற்றப்படுகிறது.

வணிக-மூலதனத்தின் குறுக்கீட்டால் இலாபம் கூடுதலாய்ச் சமனமாகும் போது, வணிகரின் பண-மூலதன முன்னீடு சரக்குகளின் மதிப்பில் கூடுதல் கூறு எதையும் சேர்ப்பதில்லை என்று பார்த்தோம்: வணிகர் இலாபம் சம்பாதிப்பதற்காக விலையோடு சேர்க்கும் கூடுதல் தொகையானது சரக்குகளின் மதிப்பில் ஒரு பகுதிக்கே - திறனுடை-மூலதனம் உற்பத்தி-விலையில் சேர்த்துக் கணக்கிடாத, அதாவது சேர்க்காமல் விட்டு விட்ட அந்தப் பகுதிக்கே - சமம் என்றும் பார்த்தோம். இந்தப் பண-மூலதனத்தின் நிலை தொழில் துறை முதலாளியினுடைய நிலை-மூலதனத்தின் நிலையைப் போன்றதே; எப்படி என்றால் இது நுகரப்படுவதில்லை, எனவே இதன் மதிப்பு சரக்கின் மதிப்பில் ஒரு கூறாவதில்லை. சரக்கு-மூலதனத்தின் கொள்முதல்-விலையில்தான் வணிகர் அதன் உற்பத்தி-விலையைப் பண வடிவில் M ஆக மாற்றீடு செய்கிறார். முன்பே தெளிவாக்கியது போல அவரது விற்பனை-விலை = $M + \Delta M$இதில் $\Delta M$ என்பது பொது இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்படும் சரக்குகளின் விலையோடு கூடுதலாய்ச் சேர்க்கப்படும் தொகையைக் குறிக்கிறது. அவர் சரக்குகளை விற்று முடிக்கும் போது, அவர் அவற்றை வாங்குவதற்காக முன்னீடு செய்த அவரது ஆரம்பப் பண-மூலதனம் இந்த $\Delta M$உடன் கூடவே அவரிடம் மீண்டு வருகிறது. அவரது பண-மூலதனமானது (money-capital) உண்மையில் பண-மூலதனமாக மாற்றப்படும் தொழில் துறை முதலாளியின் சரக்கு-மூலதனம் (Commodity -Capital) ஆகுமே தவிர வேறல்ல என்பதைத்தான் திரும்பவும் இங்கு பார்க்கிறோம். இந்தச் சரக்கு-மூலதனம் வணிகரிடம் விற்கப்படுவதற்கு பதில் நேரடியாக நுகர்வாளரிடம் விற்கப்படுவதால் எப்படி அதன் மதிப்புப் பருமனில் எம்மாற்றமும் ஏற்படாதோ, அதே போல வணிகரிடம் விற்கப்படுகையிலும் இப்பருமனில் எம்மாற்றமும் ஏற்பட முடியாது. வணிகர் செய்வதெல்லாம் நுகர்வாளர் தரப்போவதை முன்னறிந்து செயல்படுவதுதான். ஆனால் இது வரை அனுமானம் செய்து கொண்ட நிபந்தனையின் பேரில் மட்டுமே இப்படிச் சொல்வது

சரியானது; அதாவது வணிகருக்குத் தனியே மேற் செலவுகள் (Overhead expenses) எவையும் இல்லையென வைத்துக் கொண்டோம். வேறு விதமாகச் சொன்னால் அவர் உற்பத்தியாளரிடமிருந்து சரக்குகள் வாங்குவதற்காக முன்னீடு செய்தாக வேண்டிய பண-மூலதனத்தை அன்னியில், சரக்கு உருமாற்ற நிகழ்முறையில், வாங்கி விற்கும் நிகழ்முறையில் வேறெந்த மூலதனமும் - சுழல்-மூலதனமோ நிலை-மூலதனமோ - முன்னீடு செய்யத் தேவையில்லை எனக் கொள்கிறோம். ஆனால் மெய் நடப்பில் இதுவல்ல நிலைமை - சுற்றோட்டச் செலவுகளைப் பரிசீலிக்கையில் (இரண்டாம் பாகம், அத்தியாயம் VI) இதைப் பார்த்தோம். இந்தச் சுற்றோட்டச் செலவுகளில் (costs of circulation) ஒரு பகுதியானவை வணிகர் ஏனைய சுற்றோட்டச் செயலிகளிடமிருந்து மீட்டெடுக்க வேண்டிய செலவுகள் ஆகும், மறு பகுதியானவை அவரது பிரத்தியேகத் தொழில்களிலிருந்து நேரடியாய் எழும் செலவு ஆகும்.

இந்தச் சுற்றோட்டச் செலவுகள் எவ்வகைப்பட்டவையாகவும் இருக்கலாம் - இவை வணிகரின் தொழில் நிறுவனம் முழுக்க முழுக்க வர்த்தக நிறுவனமாய் இருப்பதிலிருந்து எழுகிறவையாகவும், எனவே வணிகரின் பிரத்தியேக சுற்றோட்டச் செலவுகளைச் சேர்ந்தவையாகவும் இருக்கலாம். அல்லது சிப்பங்கட்டுதல் போக்குவரத்து, சேமித்து வைத்தல் இன்னபிற வகையில் சுற்றோட்ட நிகழ்முறையில் பிற்பாடு சேர்க்கப்படும் உற்பத்தி நிகழ்முறைகளுக்கான கட்டண இனங்களைக் குறிப்பவையாகவும் இருக்கலாம். எப்படியிருந்தாலும் சரி, சரக்குகளைக் கொள்முதல் செய்வதற்காக முன்னீடு செய்யப்படும் பண-மூலதனத்தை அன்னியில், எப்போதுமே வணிகர் இத்தகைய சற்றோட்டச் சாதனங்களை வாங்குவதற்காகவும், அவற்றுக்குப் பணம் செலுத்துவதற்காகவும் சற்றே கூடுதல் மூலதனம் முன்னீடு செய்வது அவசியமாகிறது. செலவின் இந்தக் கூறினில் சுழல்-மூலதனமாய் அமைந்திடும் பகுதி சரக்குகளின் விற்பனை-விலையில் ஒரு கூடுதல் கூறாக முழுமொத்தமாய்ச் சேருகிறது; நிலை-மூலதனமாய் அமைந்திடும் பகுதியோ அது தேய்மானம் அடையும் அளவுக்கு மட்டுமே சேருகிறது. ஆனால் இந்தச் செலவுக் கூறானது பெயர்-மதிப்பாய் அமைகிற கூறு என்ற முறையில் மட்டும், முழுக்க முழுக்க வர்த்தக வழிப்பட்ட சுற்றோட்டச் செலவுகள் என்ற முறையில் ஆனாலும் கூட, சரக்குகளுக்கு உண்மை மதிப்பேதும் சேர்ப்பதில்லை. ஆயின், நிலை-மூலதனம் ஆனாலும் சரி, சுழல்-மூலதனம் ஆனாலும் சரி, இந்தக் கூடுதல் மூலதனம் அனைத்தும் பொது இலாப வீதத்தின் உருவாக்கத்தில் பங்கு பெறுகிறது.

முழுக்க முழுக்க வர்த்தக வழிப்பட்டவையான சுற்றோட்டச் செலவுகள் (அதாவது சிப்பங் கட்டுதல், கப்பல் போக்குவரத்து, சேமிப்பு முதலானவற்றுக்கு ஆகும் செலவுகள் நீங்கலானவை) சரக்குகளின் மதிப்பை ஈடேற்றம் செய்வதற்கு, சரக்குகளாய் இருப்பதைப் பணமாக மாற்றுவதற்கோ பணமாக இருப்பதை சரக்குகளாக மாற்றுவதற்கோ, சரக்குப் பரிவர்த்தனையை நிகழச் செய்வதற்குத் தேவைப்படும் செலவுகளாகப் பெயர்கின்றன. சுற்றோட்ட நிகழ்முறையினுள் நீடிக்கக் கூடிய உற்பத்தி நிகழ் முறைகளை எல்லாம் சற்றும் கருதாமல் ஒதுக்கிவிடுகிறோம்; இந்நிகழ்முறைகளிலிருந்து வணிகரின் அலுவலை அறவே தனியாய்ப் பிரித்திடலாம். எடுத்துக்காட்டாக உள்ளபடியான போக்குவரத்துத் தொழிலும் சிப்பங் கட்டுதலும் மெய்யாகவே வர்த்தகத் தொழிலிருந்து அறவே வேறான தொழிற் கிளைகளாக இருக்கலாம், அப்படித்தான் இருக்கின்றன; வாங்குவதற்கும் விற்பதற்குமான சரக்குகள் கப்பல் துறைகளிலோ பிற பொது இடங்களிலோ சேமித்து வைக்கப்படலாம்; இதனால் ஏற்படும் சேமிப்புச் செலவை முன்னீடு செய்ய வேண்டியவர் வணிகரே என்பதால், மூன்றாமவர்களால் இச்செலவுகள் அவரிடமிருந்து பெறப்படுகின்றன. இதெல்லாம் உள்ளபடியே மொத்த வர்த்தகத்தில் நடைபெறுகிறது; இங்கேதான் வணிக-மூலதனம் வேறு பணிகளோடு கலவாமல் அதன் மிகத் தூய வடிவில் காணப்படுகிறது. சிப்பங் கட்டும் நிறுமத்தின் உரிமையாளரும், இரயில் போக்குவரத்து இயக்குநரும், கப்பல் உரிமையாளரும் 'வணிகர்' அல்லர். இங்கு நாம் பரிசீலித்திடும் செலவுகள் வாங்குவதற்கும் விற்பதற்குமான செலவுகள் ஆகும். இச்செலவுகள் கணக்கிடுதல், கணக்கு வைத்தல், விற்பனைச் சந்தைக்கு வழிசெய்தல், கடிதப் போக்குவரத்து முதலானவையாகப் பெயர்வதை முன்பே குறிப்பிட்டோம். அலுவலகங்கள், காகிதம், அஞ்சல் சாதனங்கள் போன்றவை இதற்குத் தேவையான மாறா-மூலதனம் ஆகின்றன. இதர செலவுகள் வணிகக் கூலித் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்காக முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனமாய் பிரிகின்றன. (சிப்பங் கட்டும் செலவுகள், போக்குவரத்துச் செலவுகள், சுங்கத் தீர்வைகளுக்கான முன்னீடுகள் முதலானவற்றில் ஒரு பகுதியை வணிகர் சரக்குகளைக் கொள்முதல் செய்யும் போது முன்னீடு செய்வதாகக் கருதலாம்; இவ்விதம் இச்செலவுகள் அவரைப் பொறுத்த வரை கொள்முதல்-விலையில் சேருகின்றன.)

இந்தச் செலவுகள் எல்லாம் சரக்குகளின் மதிப்பை ஈடேற்றம் செய்வதில் ஏற்படுகிறவைதானே ஒழிய அவற்றின் பயன்-மதிப்பை

உற்பத்தி செய்வதில் ஏற்படுகிறவை அல்ல. இவை முழுக்க முழுக்கச் சுற்றோட்டச் செலவுகளே ஆகும். இவை நேரடி உற்பத்தி நிகழ்முறையில் நுழைவதில்லை என்றாலும், சுற்றோட்ட நிகழ்முறையின் பகுதியாய் இருப்பதால் மொத்த மறுவுற்பத்தி நிகழ்முறையின் பகுதியாகவும் இருக்கின்றன.

இந்தச் செலவுகளில் இங்கு நம் கருத்துக்குரியதாய் இருக்கும் பகுதி மாறும்-மூலதனமாக முன்னீடு செய்யப்படும் பகுதி மட்டுமே. (பின்வரும் பிரச்சினைகளையும் ஆராய்ந்திட வேண்டும்: முதலாவதாக, அவசியமான உழைப்பு மட்டுமே சரக்குகளின் மதிப்பில் சேருகிறது என்னும் விதி சுற்றோட்ட நிகழ்முறையில் எப்படி இயங்குகிறது? இரண்டாவதாக, மூலதனத் திரட்டல் வணிக-மூலதனத்தில் எப்படி நடைபெறுகிறது? மூன்றாவதாக, வணிக-மூலதனம் சமுதாயத்தின் உள்ளபடியான ஒட்டுமொத்த மறுவுற்பத்தி நிகழ்முறையில் எப்படிச் செயல்படுகிறது.)

இச்செலவுகள் எழக் காரணம் உற்பத்திப் பொருள் சரக்கெனும் பொருளாதார வடிவம் உடையதாய் இருப்பதே.

தொழில் துறை முதலாளிகள் நேரடியாய் ஒருவருக்கு ஒருவர் சரக்குகளை விற்கும் போது இழந்திடும் உழைப்பு-நேரம் - அதாவது, புறவயமாகச் சொன்னால், சரக்குகளின் சுற்றோட்டக் காலம் - இந்தச் சரக்குகளின் மதிப்பைக் கூடுதலாக்குவதில்லையென்றால், தொழில் துறை முதலாளிக்கு பதில் வணிகருக்கு உரித்தாவதன் மூலம் இந்த உழைப்பு-நேரம் அதன் தன்மையைக் கடுகளவும் மாற்றிக் கொள்ளாது என்பது தெளிவு. சரக்குகளை (உற்பத்திப் பொருட்களை) பணமாக மாற்றுவதும் பணத்தைச் சரக்குகளாக (உற்பத்திச் சாதனங்களாக) மாற்றுவதும் தொழில் துறை மூலதனத்தின் அவசியப் பணியாகும்; எனவே முதலாளியின் - தனக்கே உரிய பிரக்ஞையும் சித்தமும் வாய்க்கப் பெற்ற மூலதன ஆளுருவமாகவே இருக்கிற முதலாளியின் - அவசியச் செயற்பாடு ஆகும். ஆனால் இந்தப் பணிகள் மதிப்பைப் படைப்பதும் இல்லை, உபரி-மதிப்பை உற்பத்தி செய்வதுமில்லை. வணிகர் இந்த வேலைகளைச் செய்து, திறனுடை முதலாளியின் ஈடுபாடு ஓய்ந்த பிறகு சுற்றோட்டத் துறையில் மூலதனத்தின் பணிகளைத் தொடர்ந்து ஆற்றுவது அவர் தொழில் துறை முதலாளியின் இடத்துக்கு வருவதையே குறிப்பதாகும். இந்த வேலைகளுக்குத் தேவைப்படும் உழைப்பு-நேரம் மூலதன மறுவுற்பத்தி நிகழ்முறைக்கு அவசியமான குறிப்பிட்ட சில காரியங்களுக்குச் செலவிடப்படுகிறது; ஆனால்

இதிலிருந்து கூடுதல் மதிப்பேதும் விளையாது. வணிகர் இந்தக் காரியங்களை செய்யா விட்டால் (அதாவது இதற்குத் தேவைப்படுகிற உழைப்பு நேரத்தைச் செலவிடாவிட்டால்), அவர் தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்ட முகவராகத் தமது மூலதனத்தைப் பிரயோகிக்க மாட்டார்; அப்படியானால் தொழில் துறை முதலாளியின் தடைபட்ட பணியைத் தொடர மாட்டார்; எனவே தொழில் துறை முதலாளிகளால் உற்பத்தி செய்யப்படும் இலாபத் திரளில் அவரால் ஒரு முதலாளியாகத் தமது முன்னீட்டுக்கேற்பப் பங்கு பெற முடியாமல் போகும். உபரி-மதிப்புத் திரளில் பங்கு பெறுவதற்கும், தமது மூலதன முன்னீட்டின் மதிப்பைப் பெருக்கிக் கொள்வதற்கும், வர்த்தக முதலாளி கூலித் தொழிலாளர்களை அமர்த்தத் தேவையில்லை. தொழிலும் மூலதனமும் சிறிதாயிருந்தால் அவரே அதில் வேலை செய்யும் ஒரே தொழிலாளியாய் இருக்கலாம். சரக்குகளுக்கு அவர் கொடுக்கும் கொள்முதல்-விலைக்கும் அவற்றின் உள்ளபடியான உற்பத்தி-விலைக்கும் இடையிலான வேறுபாட்டின் வாயிலாக அவருக்கு உரித்தாகிற இலாபப்பகுதியே அவரது ஊதியமாகிறது.

ஆனால், வணிகர் சிறிய அளவில் முன்னீடு செய்த மூலதனத்திற்கு ஈடேற்றம் செய்யும் இலாபமானது நல்ல ஊதியம் பெறும் தேர்ச்சி பெற்ற கூலித் தொழிலாளர்களில் ஒருவரின் கூலிக்குச் சமமாகவே இருக்கலாம்; ஏன், அதை விடக் குறைவாகவும் இருக்கலாம். உண்மையில் அவர் உற்பத்தி செய்யும் முதலாளியின் நேரடி வர்த்தக முகவர்கள் பலரோடும் தோளில் கைபோட்டுச் செல்கிறவர், கொள்முதல் முகவர்கள், விற்பனை முகவர்கள், வர்த்தகப் பயணர்கள் போன்றோராய்ப் பணியாற்றும் இவர்கள் கூலியின் வடிவிலோ ஒவ்வொரு விற்பனையிலிருந்தும் கிடைக்கும் இலாபத்திலான பங்கின் வடிவிலோ (விழுக்காடுகள், சிறப்பு ஊதியங்கள்) வணிகருக்கு ஈடாகவோ, இன்னும் அதிகமாகவோ வருமானம் பெறுகிறார்கள். வணிகரைப் பொறுத்தவரை, சுயேச்சையான முதலாளியாக வணிக இலாபத்தை அடைகிறார்; தொழில் துறை முதலாளியின் கூலித் தொழிலாளியாகிய விற்பனையாளரைப் பொறுத்தவரை, கூலியின் வடிவிலோ தம்மை நேரடி முகவராய்க் கொண்ட தொழில் துறை முதலாளியின் இலாபத்திலான விகிதப் பங்கின் வடிவிலோ இலாபத்தில் ஒரு பகுதியைப் பெறுகிறார்; அவரை வேலைக்கு அமர்த்துகிறவரோ தொழில் துறை இலாபம், வர்த்தக இலாபம் இரண்டையும் அடைகிறார். ஆனால் இந்த நேர்வுகளில் எல்லாம் சுற்றோட்ட முகவருக்கு அவரது வருமானம் சாதாரணக் கூலியாக, செய்த

வேலைக்குத் தரப்படும் ஊதியமாகத் தெரியக் கூடும் என்றாலும், அது அப்படித் தெரியாதவிடத்து இலாபமானது நல்ல ஊதியம் பெறும் தொழிலாளியின் கூலிக்குச் சமமாகவே இருக்கக் கூடும் என்றாலும், அவரது வருமானம் முழுக்க முழுக்க வணிக இலாபத்திலிருந்தே பெறப்படுவதாகும். அவரது உழைப்பு மதிப்பைப் படைக்கும் உழைப்பு அல்ல என்பதிலிருந்து எழும் விளைவு இது.

சுற்றோட்டச் செயல் நீண்டு செல்வது தொழில் துறை முதலாளிக்கு (1) சொந்த முறையிலான நேர இழப்பைக் குறிக்கிறது; ஏனென்றால் அவர் உற்பத்தி நிகழ்முறையின் மேலாளராகத் தாமே நேரில் பணியாற்ற விடாமல் இது தடுத்துவிடுகிறது; (2) பண வடிவிலோ சரக்கு வடிவிலோ ஆன அவரது உற்பத்திப் பொருள் சுற்றோட்ட நிகழ்முறையில் இன்னும் நீண்ட காலம் தங்கி விடுவதைக் குறிக்கிறது; இந்நிகழ்முறையில் அது தன் மதிப்பைப் பெருக்கிக் கொள்வதில்லை என்பதோடு, நேரடி உற்பத்தி நிகழ்முறையும் தடைபடுகிறது. இந்நிகழ்முறை தடைபடக் கூடாதென்றால், உற்பத்தியைக் குறைத்தாக வேண்டும், அல்லது உற்பத்தி நிகழ்முறையை அதே அளவு வீதத்தில் தொடரச் செய்வதற்கு இன்னுமதிகப் பண-மூலதனம் முன்னீடு செய்தாக வேண்டும். இதன் பொருள் என்னவென்றால், இது வரை முதலீடாகியுள்ள மூலதனத்திற்கு ஒவ்வொரு முறையும் முன்னை விடக் குறைந்த இலாபமே கிடைக்கிறது, அல்லது பழைய அளவிலேயே இலாபம் கிடைக்க வேண்டுமானால் கூடுதல் பண-மூலதனம் முன்னீடு செய்தாக வேண்டும். தொழில் துறை முதலாளியின் இடத்துக்கு வணிகர் வருகிற போதும் இதெல்லாம் மாறி விடுவதில்லை. தொழில் துறை முதலாளி சுற்றோட்ட நிகழ்முறைக்குக் கூடுதல் நேரம் ஒதுக்குவதற்கு பதில், வணிகர் அதில் ஈடுபடுகிறார்; தொழில் துறை முதலாளிக்கு பதில் வணிகர் சுற்றோட்டத்துக்குக் கூடுதல் மூலதனம் முன்னீடு செய்கிறார்; அதாவது, தொழில் துறை மூலதனத்தில் பெரியதொரு பகுதி ஓயாமல் சுற்றோட்ட நிகழ்முறைக்குள் திருப்பி விடப்படுவதற்கு பதில், வணிக-மூலதனம் முற்றிலுமாய் அதில் முடக்கப்படுகிறது; தொழில் துறை முதலாளி இன்னும் குறைந்த இலாபம் அடைவதற்கு பதில்; தமது இலாபத்தில் ஒரு பகுதியை முற்றிலுமாய் வணிகருக்கே விட்டுத் தந்தாக வேண்டும். வணிக-மூலதனம் அது அவசியமாய்த் தேவைப்படும் எல்லைக்குள் இருந்து வரும் வரை, வேறுபாடு என்பதெல்லாம்; மூலதனப் பணிகளின் இந்தப் பிரிவினை பிரத்தியேகமாய் சுற்றோட்ட நிகழ்முறைக்குப் பயன்படுத்தப்படும் நேரத்தைக் குறையச் செய்வதும், இதற்காக முன்னீடு செய்யப்படும் கூடுதல் மூலதனம் குறைந்து

போவதும், மொத்த இலாபத்தில் வணிக இலாபம் குறித்திடும் இழப்பு குறைந்து போவதுமே. மேற்கண்ட எடுத்துக்காட்டில் 720c+180v+180s ஆனது 100 வணிக-மூலதனத்தின் துணை கொண்டு தொழில்துறை முதலாளிக்கு 162, அதாவது 18% இலாபம் உற்பத்தி செய்யுமானால், அதாவது 18 கழிக்கப்படுமானால், இந்தச் சுயேச்சையான வணிக-மூலதனம் இல்லாது போனால் அநேகமாய் 200 கூடுதல் மூலதனம் தேவைப்படும்; தொழில் துறை முதலாளியின் மொத்த மூலதன முன்னீடு 900க்கு பதில் 1,100 ஆக இருக்க வேண்டும்; உபரி-மதிப்பு 180 என்னும் அடிப்படையில் இது தரும் இலாப வீதம் $16^{4}/11\%$ ஆக மட்டுமே இருக்கும்.

தமக்குத் தாமே வணிகராகவும் செயல்படுகிற தொழில் துறை முதலாளி சுற்றோட்ட நிகழ்முறையில் இருக்கும் தமது உற்பத்திப் பொருள் பணமாக மாற்றப்படுவதற்குள் புதிய சரக்குகள் வாங்குவதற்கான கூடுதல் மூலதனத்தை முன்னீடு செய்வதோடு, தமது வர்த்தக-மூலதனத்தின் மதிப்பை ஈடேற்றம் செய்வதற்கான, அதாவது சுற்றோட்ட நிகழ்முறைக்கான மூலதனத்தையும் (அலுவலகச் செலவுகள், வர்த்தக பணியாளர்களுக்கான ஊதியம்) முன்னீடு செய்தால் இந்த நிரப்புக் கூறுகள் கூடுதல்-மூலதனமாக அமைகின்றன; ஆனால் இவை உபரி-மதிப்பைப் படைப்பதில்லை. இவற்றைச் சரக்குகளின் மதிப்பிலிருந்து சரிக்கட்டியாக வேண்டும்; ஏனென்றால் இந்தச் சரக்குகளின் மதிப்பில் ஒரு பகுதியைத் திரும்பவும் இந்தச் சுற்றோட்ட செலவுகளாய் மாற்றியாக வேண்டும். ஆனால் இதனால் கூடுதல் உபரி-மதிப்பு ஏதும் உண்டாகிவிடுவதில்லை. சமுதாயத்தின் மொத்த மூலதனத்தைப் பொறுத்தவரை, உண்மையில் இதன் பொருள் என்னவென்றால், இம்மூலத்னத்தில் ஒரு பகுதி தற்பெருக்க நிகழ்முறையைச் சேராத இரண்டாம் பட்சக் காரியங்களுக்கென ஒதுக்கப்பட்டாக வேண்டும், இதற்காக சமுதாய மூலதனத்தின் இந்தப் பகுதியை ஓயாமல் மறுவுற்பத்தி செய்ய வேண்டும். இது தனிப்பட்ட முதலாளிக்கும் தொழில் துறை முதலாளிகளின் வர்க்கமனைத்துக்கும் இலாப வீதத்தைக் குறையச் செய்கிறது; கூடுதல் மூலதனத்தின் ஒவ்வொரு புதிய முதலீட்டிலிருந்தும் - இந்தக் கூடுதல் மூலதனம் அதே மாறும்-மூலதனத் திரளை இயங்க வைப்பதற்குத் தேவைப்படும் போதெல்லாம் - எழுகிற விளைவுதான் இது.

சரக்குச் சுற்றோட்ட அலுவல் தொடர்பான இந்தக் கூடுதல் செலவுகள் தொழில் துறை முதலாளியிடமிருந்து வர்த்தக முதலாளிக்கு மாற்றப்படுகையில் இலாப வீதத்தில் இதே போன்ற குறைவு

ஏற்படுகிறது; ஆனால் இன்னும் சிறிய அளவிலும் வேறு வழியிலும் ஏற்படுகிறது. இந்தக் கூடுதல் செலவுகள் இல்லாத போது வணிகர் முன்னீடு செய்ய வேண்டியதைக் காட்டிலும் அதிகமான மூலதனத்தை இப்போது அவர் முன்னீடு செய்ய வேண்டியிருப்பதால், இந்தக் கூடுதல் மூலதனத்துக்குரிய இலாபம் வர்த்தக இலாபத்தின் அளவினை அதிகரிக்கச் செய்கிறது. இதனால் முன்னிலும் அதிகமான வணிக-மூலதனம் தொழில் துறை மூலதனத்தோடு சேர்ந்து கொண்டு சராசரி இலாப வீதத்தை சமனமாக்குவதில் ஈடுபடுகிறது; இதன் விளைவாக சராசரி இலாபம் குறைய வேண்டியதாகின்றது. மேற்கண்ட நமது எடுத்துக்காட்டில், குறிப்பிட்ட செலவுகளை சமாளிப்பதற்காக 100 வணிக-மூலதனத்தை அன்னியில் 50 கூடுதல் மூலதனம் முன்னீடு செய்யப்பட்டால், மொத்த உபரி-மதிப்பு 180ஆனது திறனுடை-மூலதனம் 900+வணிக-மூலதனம் 150=1,050க்கு பங்கிடப்படுகிறது. ஆகவே சராசரி இலாப வீதம் $17\ ^{1}/_{7}\%$ ஆகக் குறைகிறது. தொழில் துறை முதலாளி தமது சரக்குகளை வணிகரிடம் $900+154\ ^{2}/_{7}=1,054\ ^{2}/_{7}$ என்னும் விலைக்கு விற்கிறார், வணிகர் அவற்றை 1,130 (1,080+ செலவுகளுக்காக 50 - இந்தச் செலவுகளை அவர் மீட்டாக வேண்டும்) என்னும் விலைக்கு விற்கிறார். மேலும், வணிக-மூலதனத்துக்கும் தொழில் துறை மூலதனத்துக்கும் இடையிலான பிரிவினை ஏற்படும் போதே, வர்த்தகச் செலவுகள் மையப்படுகின்றன, இதனால் குறைந்து போகின்றன என்பதையும் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

இப்போது எழுகிற கேள்வி இதுதான்: வர்த்தக முதலாளி - இங்கே வணிகர் - வேலைக்கமர்த்தும் வர்த்தகக் கூலித் தொழிலாளர்களின் (commercial wage-workers) நிலைமை என்ன?

ஒரு வீதத்தில் பார்த்தால் இந்த வர்த்தகப் பணியாளரும் கூலித் தொழிலாளிதான், வேறு எந்தக் கூலி தொழிலாளியையும் போன்றவர்தான். முதலாவதாக, அவரது உழைப்புச் சக்தி வணிகரின் மாறும்-மூலதனத்தைக் கொண்டு வாங்கப்படுகிறதே தவிர, வருவாயாகச் செலவிடப்படும் பணத்தைக் கொண்டல்ல; எனவே அதற்காக முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் மதிப்பைப் பெருகச் செய்வதற்காக வாங்கப்படுகிறதே தவிர சொந்த முறையில் சேவை புரிவதற்காக அல்ல. இரண்டாவதாக, அவரது உழைப்புச் சக்தியின் மதிப்பும், இவ்வாறு அவரது கூலியும் ஏனைய கூலித் தொழிலாளர்களது உழைப்புச்சக்தியின் மதிப்பையும் அவர்களது கூலியையும் போலவே நிர்ணயிக்கப்படுகின்றன; அவரது பிரத்தியேக உழைப்புச் சக்தியின்

உற்பத்திக்கும் மறுவுற்பத்திக்குமான செலவால் நிர்ணயிக்கப்படுகிறதே தவிர அவரது உழைப்பின் உற்பத்தியால் அல்ல.

ஆனால் வணிக-மூலதனத்திற்கும் தொழில் துறை மூலதனத்திற்கும் இடையே, இவ்விதம் வணிகருக்கும் தொழில் துறை முதலாளிக்கும் இடையே நிலவுகிற அதே வேறுபாடு வர்த்தகப் பணியாளருக்கும் தொழில் துறை முதலாளியால் நேரடியாக வேலைக்கமர்த்தப்படும் கூலித் தொழிலாளர்களுக்கும் இடையேயும் நிலவுவதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வெறும் சுற்றோட்ட முகவரேயாகிய வணிகர் மதிப்பையோ உபரி-மதிப்பையோ உற்பத்தி செய்வதில்லை என்பதால் (இவர் தாம் செய்யும் செலவுகளின் மூலமாய் சரக்குகளுக்குச் சேர்க்கும் கூடுதல் மதிப்பு ஏற்கெனவே இருந்து வரும் மதிப்புகளின் சேர்ப்பாகப் பெயர்கிறது, இருப்பினும் இங்கு ஒரு கேள்வி எழுகிறது, அவர் எப்படித் தமது மாறா-மூலதனத்தின் இந்த மதிப்பைப் பாதுகாத்து கொள்கிறார்?) அவரால் இதே பணிகளில் அமர்த்தப்படும் வணிகத் தொழிலாளர்களும் அவருக்கு நேரடியாக உபரி-மதிப்பைப் படைத்துக் கொடுக்க முடியாது என்றாகிறது. திறனுடைத் தொழிலாளர்கள் தொடர்பாகச் செய்வது போலவே இங்கேயும், கூலியானது உழைப்புச் சக்தியின் மதிப்பால் நிர்ணயிக்கப்படுவதாகக் கொள்கிறோம். ஆகவே, கூலியைக் குறைப்பதன் மூலம் வணிகர் பணம் பண்ணுவதாக, தொழிலாளிக்கு ஒரு பகுதியை மட்டும் தந்து விட்டு முழுத் தொகையையும் முன்னீடு செய்ததாக அவர் தமது அடக்கச் செலவுக் கணக்கில் குறிப்பதாகக் கொள்ளவில்லை; வேறு விதமாகச் சொல்வதெனில் வணிகர் தமது எழுத்தர்களையும் ஏனையோரையும் ஏமாற்றிப் பணம் பண்ணுவதாகக் கொள்ளவில்லை.

வணிகக் கூலித் தொழிலாளர்களை பொறுத்த வரை, அவர்கள் நேரடி உபரி-மதிப்பு ஏதும் (உபரி-மதிப்பின் மாறிய வடிவமே இலாபம்) படைக்காமலே எப்படித் தம்மை வேலைக்கு அமர்த்துகிறவருக்கு நேரடி இலாபத்தை உற்பத்தி செய்து கொடுக்கிறார்கள் என்பதை விளக்குவது அல்ல இடர்ப்பாடு, இந்தப் பிரச்சினைக்கு வர்த்தக இலாபங்களைப் பொதுவாகப் பகுத்தாய்ந்த போதே தீர்வு கண்டு விட்டோம். தொழில் துறை மூலதனமானது சரக்குகளில் உருக்கொண்டு ஈடேற்றம் பெற்ற உழைப்பில் சமதை ஏதும் தந்திடாமல் வசப்படுத்தியதை விற்று இலாபம் ஈட்டுகிறது; இதே போலத்தான் வணிக-மூலதனமும் சரக்குகளில் அடங்கியுள்ள ஊதியமிலா உழைப்புக்கு முழு விலை தராமலே (மொத்தமுள்ள தொழில் துறை மூலதனத்தின் ஈவுக் கூறு என்ற முறையில் இந்தச் சரக்குகளின்

உற்பத்திக்கான முதலீடாகிய மூலதனத்திற்கு உரியதைத் தராமலே) திறனுடை-மூலதனத்திடமிருந்து இச்சரக்குகளை வாங்குகிறது; பிறகு இந்தச் சரக்குகளை விற்கும் போது ஊதியம் பெறாத பகுதியாக அவற்றில் அடங்கியுள்ள இந்த உழைப்புக்கு முழு விலை பெறுவதன் மூலம் இலாபம் ஈட்டுகிறது. வணிக-மூலதனத்துக்கும் உபரி-மதிப்புக்குமான உறவு தொழில் துறை மூலதனத்துக்கும் உபரி-மதிப்புக்குமான உறவிலிருந்து வேறானது. தொழில் துறை மூலதனம் பிறரது ஊதியமிலா உழைப்பை நேரடியாகத் தனதாக்கிக் கொள்வதன் மூலம் உபரி-மதிப்பை உற்பத்தி செய்கிறது. வணிக-மூலதனமோ இந்த உபரி-மதிப்பில் ஒரு பகுதியைத் தொழில் துறை மூலதனத்திடமிருந்து தனக்கு மாற்றிக் கொள்வதன் மூலம் தனதாக்கிக் கொள்கிறது.

மதிப்புகளை ஈடேற்றம் செய்யும் பணியின் வாயிலாகத்தான் வணிக-மூலதனம் மறுவுற்பத்தி நிகழ்முறையில் மூலதனமாகச் செயல்படுகிறது, அதாவது மொத்த மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பில் பங்கு பெறுகிறது. தனியொரு வணிகரின் இலாபத் திரள் அவர் இந்நிகழ்முறையில் ஈடுபடுத்த முடிகிற மூலதனத் திரளைப் பொறுத்தது; அவரது எழுத்தர்களின் ஊதியமிலா உழைப்பு எவ்வளவு அதிகமாய் இருக்கிறதோ, இந்த மூலதனத்தை அவ்வளவு அதிகமாய் அவர் வாங்குவதற்கும் விற்பதற்கும் பயன்படுத்த முடியும். வணிகரின் பணம் எந்தப் பணியைக் கொண்டு மூலதனமாகிறதோ அந்தப் பணியே பெரும்பாலும் அவரின் ஊழியர்கள் மூலமாய் செய்யப்படுகிறது. இந்த எழுத்தர்களின் ஊதியமிலா உழைப்பு மதிப்பைப் படைப்பதில்லை என்றாலும் வணிகர் உபரி-மதிப்பைத் தனதாக்கி கொள்வதற்கு வழிசெய்கிறது. அவரது மூலதனத்தைப் பொறுத்த வரை உபரி-மதிப்பைப் படைப்பதும் தனதாக்கிக் கொள்வதும் விளைவளவில் ஒன்றுதான். ஆகவே இந்த ஊதியமிலா உழைப்பு தான் அவரது இலாபத்திற்கு ஆதாரம். இல்லையேல் வர்த்தகத்தைப் பெரிய அளவில் முதலாளித்துவ முறையில் நடத்த முடியாமல் போகும்.

எப்படித் தொழிலாளியின் ஊதியமிலா உழைப்பு திறனுடை-மூலதனத்திற்கான உபரி-மதிப்பை நேரடியாகப் படைத்தளிக்கிறதோ, அதே போல் வர்த்தகக் கூலித் தொழிலாளியின் ஊதியமிலா உழைப்பும் இந்த உபரி-மதிப்பில் ஒரு பங்கை வணிக-மூலதனத்திற்குப் பெற்றுக் கொடுக்கிறது.

இடர்ப்பாடே இங்குதான் உள்ளது: வணிகரின் உழைப்பு நேரமும் உழைப்பும் ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்ட உபரி-மதிப்பில் ஒரு

பங்கை அவருக்குப் பெற்றுக் கொடுத்த போதிலும் மதிப்பைப் படைப்பதில்லை என்பதால், அவர் வர்த்தக உழைப்புச் சக்தியை வாங்குவதில் செலவிடும் மாறும்-மூலதனத்தின் நிலைமை என்ன? இந்த மாறும்-மூலதனம் முன்னீடு செய்யப்படும் வணிக-மூலதனத்தின் செலவுத் தொகைகளில் சேர்க்கப்பட வேண்டுமா? இல்லையா? சேர்க்கப்படாவிடில், இலாப வீதம் சமனமாக்கப்படும் விதியோடு இது முரண்பட்டு மோதுவதாக அல்லவா இருக்கும்? 150 முன்னீடு செய்கிறவர் மூலதன முன்னீட்டுக் கணக்கில் 100 மட்டுமே செலவாகக் குறிக்க முடியும் என்றால் எந்த முதலாளிதான் 150 முன்னீடு செய்ய முன்வருவார்? மாறாக, சேர்க்கப்படுகிறது என்றால் வணிக-மூலதனத்தின் தன்மைக்கே இது முரணாய் இருப்பதாக அல்லவா தெரிகிறது? ஏனென்றால் வணிக-மூலதனமானது தொழில் துறை மூலதனம் செய்வது போல் பிறர் உழைப்பை இயங்க வைப்பதன் மூலம் மூலதனமாகச் செயல்படுவதில்லை; தனக்குரிய வேலையைத் தானே செய்வதன் மூலமாகத்தான், அதாவது வாங்குவதும் விற்பதுமான வேலைகளைச் செய்வதன் மூலமாகத்தான் அது மூலதனமாகச் செயல்படுகிறது; தொழில் துறை மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படுகிற உபரி-மதிப்பில் ஒரு பகுதியை இவ்வழியிலும் இதன் காரணமாகவும்தான் வணிக-மூலதனம் பெறுகிறது.

(ஆக, பின்வருவனவற்றை நாம் பரிசீலித்தாக வேண்டும்: வணிகரின் மாறும்-மூலதனம்; சுற்றோட்டத் துறையில் அவசிய உழைப்பின் விதி; வணிகரின் உழைப்பு எப்படி அவரது மாறா-மூலதனத்தின் மதிப்பைப் பாதுகாக்கிறது என்பது; ஒட்டுமொத்த மறுவுற்பத்தி நிகழ்முறையில் வணிக-மூலதனம் வகிக்கும் பங்கு; முடிவில், ஒரு புறம் சரக்கு-மூலதனத்திலும் பண-மூலதனத்திலும், மறு புறம் வர்த்தக-மூலதனத்திலும் தனவணிக-மூலதனத்திலுமான இரட்டிப்பு.)

ஒவ்வொரு வணிகரிடமும் அவரே தமது சொந்த உழைப்பால் புரளச் செய்யக் கூடிய அளவுக்கு மட்டுமே மூலதனம் இருக்குமானால், வணிக-மூலதனம் துண்டும் துணுக்குமாகக் கூறுபடுவது அளவுகடந்துவிடும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை முன்னேறிச் செல்லும் போது திறனுடை-மூலதனம் எந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருகச் செய்கிறதோ, எந்த அளவுக்கு மேன்மேலும் பெரும் பெரும் திரள்களில் இயங்கிச் செயல்படுகிறதோ அதே அளவுக்கு வணிக-மூலதனத்தின் இந்தக் கூறுபாடும் அதிகரிக்கிறது. இதனால்

இவ்விரண்டுக்கும் இடையிலான ஒவ்வாமை அதிகரிக்கிறது. மூலதனமானது உற்பத்தித் துறையில் எவ்விதத்தில் மையப்படுகிறதோ சுற்றோட்டத் துறையில் அதே விகிதத்தில் பரவலானதாகிறது. தொழில் துறை முதலாளியின் பிரத்தியேகமான வர்த்தக அலுவலும், இவ்விதம் அவரது பிரத்தியேகமான வர்த்தகச் செலவுகளும் இதனால் வரம்பின்றி விரிவடைகின்றன; ஏனென்றால் அவர் 100 வணிகர்களுக்குப் பதில் 1,000 வணிகர்களோடு வர்த்தகம் செய்ய வேண்டியிருக்கலாம். எனவே சுயேச்சையாகச் செயல்படும் வணிக-மூலதனத்தால் வரும் நன்மைகள் பெரும்பாலும் ஒழிந்து போகின்றன. பிரத்தியேகமான வர்த்தகச் செலவுகள் மட்டுமல்லாமல், வகை பிரித்தல், சிப்பங்கட்டுதல் போன்ற ஏனைய சுற்றோட்டச் செலவுகளும் கூட அதிகரிக்கின்றன. இதெல்லாம் தொழில் துறை முதலாளியைப் பொறுத்த வரை நடைபெறுகிறவை. இப்போது வணிக-மூலதனத்தைப் பார்ப்போம். முதலில் பிரத்தியேகமான வர்த்தக நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வோம். சிறு தொகைகளைக் கையாளுவதற்கு ஆவதை விடப் பெரும் தொகைகளைக் கையாளுவதற்கு அதிக நேரம் ஆவதில்லை. £1,000 விலைக்கு ஒரு முறை வாங்குவதற்கு ஆவதைப் போல் ஒவ்வொரு முறையும் £100 விலைக்கு 10 முறை வாங்குவதற்குப் பத்து மடங்கு நேரம் ஆகிறது. பெரிய வணிகர் ஒருவருடன் கடிதத் தொடர்பு கொள்வதற்கு ஆவதைப்போல் சிறு வணிகர்கள் 10 பேருடன் கடிதத் தொடர்பு கொள்வதற்கு பத்து மடங்கு கடிதமும் காகிதமும் அஞ்சல் செலவும் ஆகின்றன. வர்த்தக அலுவலகத்தில் உழைப்புப் பிரிவினை தெள்ளத் தெளிவாய் வரையறை செய்யப்பட்டுள்ளது. ஒருவர் கணக்குப் பதிவு செய்கிறார். மற்றொருவர் பண விவகாரங்களைப் பார்த்துக் கொள்கிறார், இன்னொருவர் கடிதத் தொடர்பைக் கவனித்துக் கொள்கிறார்; ஒருவர் வாங்குகிறார், மற்றொருவர் விற்கிறார், இன்னொருவர் பயணம் செய்கிறார் - இவ்வாறே மேலும் சொல்லலாம். இந்த ஏற்பாடு உழைப்பு-நேரத்தை ஏராளமாய் மிச்சம் செய்கிறது; இதனால்தான் மொத்த வர்த்தகத்தில் வேலை செய்யும் தொழிலாளர் தொகைக்கும் வர்த்தக நிறுவனத்தின் ஒப்பீட்டு அளவுக்கும் தொடர்பே இல்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், பெருவீதத்தில் செய்யப் பட்டாலும் சிறுவீதத்தில் செய்யப்பட்டாலும் ஒரே பணிக்கு ஒரே உழைப்பு-நேரம் தேவைப்படுவது தொழில் துறையைக் காட்டிலும் வர்த்தகத் துறையில் மிக அதிகமாய்க் காணப்படும். இதனால்தான் வரலாற்று நோக்கில் பார்க்கும் போது குவிப்பானது தொழில் துறைப்

பட்டறையைக் காட்டிலும் முற்காலத்திலேயே வணிகத் தொழிலில் காணப்படுகிறது. மேலும், மாறா-மூலதனச் செலவுகளை எடுத்துக் கொண்டால், பெரிய அலுவலகம் ஒன்றுக்கு ஆகும் செலவைக் காட்டிலும் சிறு சிறு அலுவலகங்கள் 100க்கு ஆகும் செலவு ஒப்பிட்டுச் சொல்ல முடியாத அளவுக்கு மிக அதிகமாகும், பெரிய பண்டக சாலை ஒன்றுக்கு ஆகும் செலவைக் காட்டிலும் சிறு சிறு பண்டக சாலைகள் 100க்கு ஆகும் செலவும் அதே போல் மிக அதிகமாகும் - இவ்வாறே மேலும் சொல்லலாம். முன்னீடு செய்யப்பட வேண்டிய செலவுகள் என்ற முறையிலானது போக்குவரத்துச் செலவுகள் வர்த்தக நிறுவனத்தின் கணக்கில் சேருகின்றன அல்லவா, கூறுபாடு அதிகரிக்க அதிகரிக்க இந்தப் போக்குவரத்துச் செலவுகளும் அதிகரிக்கின்றன.

தொழில் துறை முதலாளி தமது தொழிலின் வர்த்தகப் பிரிவில் உழைப்புக்காகவும் சுற்றோட்டச் செலவுகளுக்காகவும் இன்னும் அதிகமாய் முதலீடு செய்ய வேண்டியிருக்கும். குறிப்பிட்ட வணிக-மூலதனம் அநேக சிறு சிறு முதலாளிகளிடையே பிரிக்கப்படும் போது, அதன் பணிகளை ஆற்றுவதற்குத் தொழிலாளர்கள் இன்னுமதிகமாய்த் தேவைப்படுவார்கள்; மேலும் குறிப்பிட்ட சரக்கு-மூலதனத்தைப் புரளச் செய்வதற்கு வணிக-மூலதனம் இன்னுமதிகமாய்த் தேவைப்படும்.

சரக்குகளை வாங்குவதிலும விற்பதிலும் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டுள்ள வணிக-மூலதனம் முழுவதையும் B எஃறும், வர்த்தப் பணியாளர்களுக்குக் கூலியாகத் தரப்படும் மாறும்-மூலதனம் முழுவதையும் b என்றும் வைத்துக் கொள்வோம். ஒவ்வொரு வணிகரும் சம்பளச் சிப்பந்திகள் இல்லாமலே, அதாவது bஆக ஏதும் முதலீடு செய்யாமலே சமாளித்தாக வேண்டிய போது இருக்கக்கூடிய மொத்த வணிக-மூலதனத்தைக் காட்டிலும் B+b குறைவாகவே இருக்கும். ஆனால் இன்னும் நாம் சிக்கலைத் தீர்த்தாகவில்லை.

சரக்குகளின் விற்பனை-விலையானது *(1)*B+b மீதான சராசரி இலாபத்தைக் கொடுப்பதற்குப் போதுமானதாய் இருக்க வேண்டும். B+bஆனது பொதுவாக ஆரம்ப வணிக-மூலதனத்தைக் குறைத்து வருவதாய் இருக்கிறது, b இல்லாமல் தேவைப்படக் கூடியதைக் காட்டிலும் சிறிய வணிக-மூலதனத்தைக் குறிப்பதாய் இருக்கிறது என்பதே இதற்கு விளக்கமாகிறது. ஆனால் இந்த விற்பனை-விலை (2) b மீதான கூடுதல் இலாபத்தைக் கொடுப்பதற்கு மட்டுமல்லாமல் கூலியாகத் தரப்பட்டதையும், அதாவது வணிகரின் மாறும்-

மூலதனம் =bஐயும் மாற்றீடு செய்வதற்குப் போதுமானதாய் இருக்க வேண்டும். கடைசியாகக் கூறிய இந்த நோக்கம்தான் இடர்பாட்டுக்கு வழிசெய்கிறது. bஆனது விலையின் புதிய அடக்கக் கூறினைக் குறிப்பது ஆகுமா? அல்லது B+bஇன் மூலம் வரப் பெறும் இலாபத்தில் ஒரு பகுதி மட்டும்தானா? இலாபத்தின் இப்பகுதி வணிகக் கூலித் தொழிலாளியைப் பொறுத்தவரை கூலியாக இருப்பினும் வணிகரைப் பொறுத்த வரை மாறும்-மூலதனத்தை மாற்றீடு செய்வதாகிறது. இரண்டாவதாகக் கூறியதே மெய் எனில், வணிகரின் மூலதன முன்னீடாகிய B+bக்குக் கிடைக்கும் வணிக இலாபமானது பொது இலாப வீதம் என்ற முறையில் Bக்குச் சேரவேண்டிய இலாபம், மற்றும் b ஆகிய இரண்டின் கூட்டுத் தொகைக்குச் சமம் ஆகும். b ஆனது கூலியாக வணிகர் செலவிடும் தொகை ஆகுமே தவிர இதனால் அவருக்கு இலாபம் ஏதும் இல்லை.

bஇன் வரம்புகளை (கணித அர்த்தத்தில்) கண்டறிந்தால் இந்த விவகாரத்தின் உயிர்நாடி பிடிபட்டு விடும். முதலில் பிரச்சினையைத் துல்லியமாய் வரையறை செய்து கொள்வோம். Bஆனது சரக்குகளை வாங்குவதிலும் விற்பதிலும் நேரடியாய் முதலீடாகியுள்ள மூலதனத்தையும், k ஆனது இந்தப் பணியில் நுகரப்படும் மாறா-மூலதனத்தையும் (உள்ளபடியே சரக்குகளைக் கையாளுவதற்கு ஆகும் செலவுகள்). b ஆனது வணிகரால் முதலீடு செய்யப்படும் மாறும்-மூலதனவத்தையும் குறிப்பதாகக் கொள்வோம்.

B ஐ மீட்பதில் இடர்ப்பாடுகள் ஏதுமில்லை. இது வணிகருக்குக் கொள்முதல் விலையின் ஈடேற்றமே ஆகும்; உற்பத்தியாளருக்கு உற்பத்தி-விலை ஆகும். இது வணிகரால் செலுத்தப்படும் விலை ஆகும்; வாங்கியதைத் திரும்பவும் விற்பதன் மூலம் அவர் தமது விற்பனை-விலையின் பகுதியாக Bஐ மீட்டுக் கொள்கிறார்; இந்த B உடன் கூடவே B இன் மீது இலாபமும் சம்பாதிக்கிறார் - இதை முன்பே விளக்கினோம். எடுத்துக்காட்டாக, சரக்கின் அடக்க-விலை £100 என்றும் இலாபம் 10% என்றும் வைத்துக் கொள்வோம். ஆக சரக்கின் விற்பனை-விலை 110 ஆகும். சரக்கிற்கு 100 செலவாயிற்று, வணிக-மூலதனமாகிய 100 அதோடு 10 சேர்க்கிறது, அவ்வளவுதான்.

Kஐ எடுத்துக் கொள்வோமானால், அதிக பட்சமாய் அது மாறா-மூலதனத்தில் உற்பத்தியாளர் வாங்குவதிலும் விற்பதிலும் பயன்படுத்தக்கூடிய பகுதிக்குச் சமமாய் இருந்தாலும், உண்மையில் அதை விடச் சிறியதாகவே உள்ளது; ஆனாலும் அது அவருக்கு

நேரடியாக உற்பத்தியில் தேவைப்படுகிற மாறா-மூலதனத்துக்குக் கூடுதல் சேர்க்கையாய் அமையும், எப்படியானாலும் இந்தப் பகுதியை சரக்கின் விலையில் ஓயாமல் மீட்டாக வேண்டும்; அதாவது சரக்கில் இதற்குரிய பகுதி ஓயாமல் இவ்வடிவில் செலவிடப்பட்டாக வேண்டும்; அல்லது சமுதாயத்திறனுடைய மொத்த மூலதனத்தின் கோணத்திலிருந்து பாரத்தால், ஓயாமல் இவ்வடிவில் மறுவுற்பத்தி செய்யப்பட்டாக வேண்டும். முன்னீடு செய்யப்படும் மாறா-மூலதனத்தின் இந்தப் பகுதியானது இலாப வீதத்தின் மீது ஏற்படுத்தும் விளைவு அதனை வரம்புக்குட்படுத்துவதாய் இருக்கும்; நேரடியாக உற்பத்தியில் முதலீடாகியுள்ள மாறா-மூலதனத்தின் மொத்தத் திரளும் இலாப வீதத்தின் மீது ஏற்படுத்தும் அதே விளைவுதான் இது. தொழில் துறை முதலாளி தமது தொழிலின் வர்த்தகப் பகுதியை வணிகரிடம் விட்டு விடுவதால், அவர் மூலதனத்தின் இந்தப் பகுதியை முன்னீடு செய்யத் தேவையில்லை. அவருக்கு பதிலாக வணிகர் அதனை முன்னீடு செய்கிறார். ஒரு விதத்தில் பார்த்தால், வணிகர் இதைப் பெயரளவுக்கே செய்கிறார்; ஏனென்றால் அவர் தம்மால் நுகரப்படும் மாறா-மூலதனத்தை (உள்ளபடியே சரக்குகளைக் கையாளுவதற்காகும் செலவுகள்) உற்பத்தியோ மறுவுற்பத்தியோ செய்வதில்லை. அதன் உற்பத்தி சில தொழில் துறை முதலாளிகளின் தனித் தொழிலாக அல்லது அவர்களது தொழிலின் ஒரு பகுதியாக விளங்குகிறது; இவ்விதம் இந்தத் தொழில் துறை முதலாளிகள் வகிக்கும் பங்கு அவசியப் பண்டங்கள் உற்பத்தியாளர்களுக்கு மாறா-மூலதனத்தை வழங்குவோரின் பங்கை ஒத்ததாகும். ஆகவே முதலாவதாக, வணிகர் இந்த மாறா-மூலதனத்தைத் தமக்காக மீட்டெடுத்துக் கொள்கிறார்; இரண்டாவதாக அதன் மீது இலாபம் பெறுகிறார். ஆக, இந்த இரண்டின் மூலமாகவும் தொழில் துறை முதலாளியின் இலாபம் குறைந்து போகிறது. ஆனால் உழைப்புப் பிரிவினையோடு பின்னிப் பிணைந்தவையாகிய சிக்கனப்படுத்தல், குவிப்பு ஆகியவற்றின் விளைவாக, இந்த இலாபமானது அவரே இம் மூலதனத்தை முன்னீடு செய்ய வேண்டியிருந்தால் வீழ்ச்சியடையக்கூடியதை விடக் குறைவாகவே வீழ்ச்சியடைகிறது. இவ்விதம் முன்னீடு செய்யப்படும் மூலதனம் குறைவாய் இருப்பதால் இலாப வீதத்திலான வீழ்ச்சியும் குறைவாயுள்ளது.

ஆக, இது வரை விற்பனை-விலை =B+k+(B+k) மீதான இலாபம். விலையின் இந்தப் பகுதியினால் இதற்கு மேல் இடர்ப்பாடுகள்

ஏதுமில்லை. ஆனால் வணிகரால் முன்னீடு செய்யப்படும் மாறும்-மூலதனமாகிய b இப்போது அதில் சேருகிறது.

ஆகவே, விற்பனை-விலை =B+K + b+ (B+k) மீதான இலாபம் +b மீதான இலாபம்.

Bஆனது கொள்முதல்-விலையை மீட்டுக் கொள்வதோடு சரி, அது இவ்விலைக்கு B மீதான இலாபம் தவிர வேறு எதையும் சேர்ப்பதில்லை. Kஆனது K மீதான இலாபத்தையும் Kஐயும் சேர்க்கிறது; ஆனால் K+மாறா-மூலதன வடிவில் முன்னீடு செய்யப்படும் சுற்றோட்டச் செலவுகளில் பகுதியாகிய K மீதான இலாபம் + உரிய சராசரி இலாபம் என்பது வணிகரின் கையிலிருப்பதை விடத் தொழில் துறை முதலாளியின் கையில் அதிகமாயிருக்கும். சராசரி இலாபம் சரிந்து செல்வதானது முன்னீடு செய்யப்படும் தொழில் துறை மூலதனத்திலிருந்து B+Kஐக் கழித்த பிறகு கணக்கிடப்படும் முழு சராசரி இலாபத்தின் வடிவில் வெளிப்படுகிறது. B+K மீதான சராசரி இலாபத்திலிருந்து கழிக்கப்படுவது வணிகருக்குத் தரப்படுகிறது; அதாவது இந்தக் கழித்தலானது ஒரு பிரத்தியேக மூலதனத்தின், வணிக-மூலதனத்தின் இலாபமாய்க் காணப்படுகிறது.

ஆனால் b+b மீதான இலாபத்தைப் பொறுத்தவரை, அல்லது இலாப வீதம்=10% என்று அனுமானம் செய்து கொள்ளும் நமது எடுத்துக்காட்டில் b+$^{1}/_{10}$, bஐப் பொறுத்தவரை நிலைமை வேறு. மெய்யாகவே இடர்ப்பாடு இங்குதான் உள்ளது.

வணிகர் bஐக் கொண்டு வாங்குவது, நமது அனுமானத்தின் படி வர்த்தக உழைப்பே (commercial labour) வேறல்ல; சுற்றோட்ட மூலதனத்தின் பணிகளான C—M, M—C ஆகியவற்றை நிறை வேற்றுவதற்கு இந்த வர்த்தக உழைப்பு தேவைப்படுகிறது. ஆனால் வர்த்தக உழைப்பு என்பது மூலதனம் வணிக-மூலதனமாகச் செயல்படுவதற்கு, சரக்குகளைப் பணமாகவும் பணத்தைச் சரக்குகளாகவும் உருமாற்றிட உதவுவதற்குப் பொதுவாய் அவசியமான உழைப்பாகும். இது மதிப்புகளை ஈடேற்றம் செய்யும் உழைப்பே தவிர அவற்றைப் படைக்கும் உழைப்பன்று. மூலதனம் இந்தப் பணிகளை ஆற்றுவதால்தான் - முதலாளி தமது மூலதனத்தைக் கொண்டு இந்தக் காரியங்களை அல்லது இந்த வேலையைச் செய்வதால்தான் - அது வணிக-மூலதனமாகச் செயல்பட்டு, பொது இலாப வீதத்தை ஆளுவதில் பங்கேற்கிறது; அதாவது மொத்த இலாபத்திலிருந்து தனக்குரிய இலாப ஈவுகளைப் பெறுகிறது. ஆனால் b+b மீதான

இலாபமானது முதலாவதாக உழைப்புக்கான ஊதியத்தைத் தன்னுள் கொண்டிருப்பதாகக் தோன்றுகிறது (ஏனென்றால் தொழில் துறை முதலாளி வணிகருக்கு அவரது உழைப்புக்கே விலை கொடுத்தாலும், வணிகரால் ஊதியமளிக்கப் பெறும் எழுத்தர்களின் உழைப்புக்கு விலை கொடுத்தாலும் இரண்டும் ஒன்றுதான்); இரண்டாவதாக வணிகர் தாமே நிறைவேற்ற வேண்டியதாய் இருக்கக் கூடிய இந்த உழைப்புக்கான ஊதியத்தின் மீதான இலாபத்தை தன்னுள் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. முதலாவதாக வணிக-மூலதனம் அதன் bஐத் திரும்பப் பெறுகிறது; இரண்டாவதாக வணிகர் அதன் மீது இலாபம் சம்பாதிக்கிறார். இந்நிலைமைக்குக் காரணம் என்னவென்றால்: முதலாவதாக அதனை வணிக-மூலதனமாகச் செயல்பட வைக்கும் வேலைக்கு ஊதியம் தேவைப்படுகிறது; இரண்டாவதாக அது மூலதனமாகச் செயல்படுவதால், அதாவது செயல்படும் மூலதனம் என்ற முறையில் தனக்கு இலாபம் கிடைக்கும் படியான வேலையைச் செய்வதால், அது இலாபம் கோருகிறது. ஆக, தீர்க்க வேண்டிய பிரச்சினை இதுதான்.

B = *100* என்றும் b=*10*என்றும் இலாப வீதம் =*10%* என்றும் கொள்வோம். K = *0* என்போம்; கொள்முதல்-விலையின் இந்தக் கூறினைக் கருதாமல் ஒதுக்கி விடும் பொருட்டே இப்படிச் செய்கிறோம்; இந்தக் கூறு இவ்விடத்துக்குக்குரியதல்ல, இதற்கு ஏற்கெனவே விளக்கம் அளிக்கப்பட்டு விட்டது. ஆகவே விற்பனை - விலை= B+p+b+p (=B+Bp'+b+bp';இதில் p' ஆனது இலாப வீதத்தைக் குறிக்கும்)=100+10+10+1=121.

ஆனால் bஆனது வணிகரால் கூலியில் முதலீடு செய்யப்படா விட்டால் - ஏனென்றால் bஆனது வர்த்தக உழைப்புக்கு மட்டுமே, அதாவது தொழில் துறை மூலதனத்தால் சந்தையில் விடப்படும் சரக்கு-மூலதனத்தின் மதிப்பை ஈடேற்றம் செய்வதற்குத் தேவையான உழைப்புக்கு மட்டுமே ஊதியமாகும் - நிலைமை பின்வருமாறு இருக்கும்: B=100என்பதை வாங்கவோ விற்கவோ வணிகர் தமது நேரத்தைச் செலவிடுவார்; இது தவிர அவருக்கு வேறு நேரமே இல்லை என்று அனுமானம் செய்து கொள்ள விரும்புகிறோம். b, அல்லது *10* என்பதால் குறிக்கப் பெறும் வர்த்தக உழைப்புக்கு விலையாகக் கூலிக்கு பதில் இலாபம் தரப்படுமானால் அதற்கு இன்னொரு வணிக-மூலதனம்= *100* தேவைப்படும்: ஏனென்றால் *10%* என்ற கணக்கில் b = *10* ஆகிறது. இந்த இரண்டாவது B=*100* ஆனது சரக்குகளின் விலையில் கூடுதலாய்ச் சேராது. ஆனால் *10%* ஆனது அவ்விதம் சேரும்.

எனவே 100 விலையில் இரு பரிமாற்றங்கள் (=200) நிகழும்; 200+20=220 என்னும் விலைக்கு சரக்குகள் வாங்கப்படும்.

வணிக-மூலதனம் என்பது சுற்றோட்ட நிகழ்முறையில் ஈடுபட்டுள்ள தொழில் துறை மூலதனப் பகுதி தனித்தவொன்றாய் வகைப்படுத்தப்பட்டு வரும் வடிவம்தானே தவிர வேறு எதுவுமல்ல. எனவே அது குறித்து எழும் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க வேண்டுமானால், வணிக-மூலதனத்திற்கே உரித்தான புலப்பாடுகள் இன்னமும் சுயேச்சையாய்த் தோற்றமளிக்காமல், தொழில் துறை மூலதனத்துடன் நேரடித் தொடர்புடையதாகவே, அதன் ஒரு கிளையாகவே தோற்றமளிக்கக் கூடிய முறையில்தான் பிரதானமாகப் பிரச்சினையை முன்னிறுத்தியாக வேண்டும். தொழிலகமாக அல்லாமல் அலுவலகமாக வேலை செய்யும் வணிக-மூலதனம் ஓயாமல் சுற்றோட்ட நிகழ்முறையில் செயல்படுகிறது. இங்கேதான் - தொழில் துறை முதலாளியின் அலுவலகத்திலேதான் - இப்போது பரிசீலிக்கப்பட்டு வரும் bஜ முதலில் நாம் ஆராய வேண்டும்.

தொழில் துறைப் பட்டறையோடு ஒப்பிடுமிடத்து அலுவலகமானது தொடக்கத்திலிருந்தே மிக மிகச் சிறியதாகும். மற்றபடி உற்பத்தியின் அளவுவீதம் விரிவடைய விரிவடைய, தொழில் துறை மூலதன்த்தின் சுற்றோட்டத்திற்காக, சரக்கு-மூலதனமாக நிலவும் உற்பத்திப் பொருளை விற்பதற்கும், விற்றுக் கிடைக்கும் பணத்தை உற்பத்திச் சாதனங்களாக மாற்றுவதற்கும், இந்நிகழ்முறை முழுவதையும் பற்றி கணக்கு எழுதி வைப்பதற்கும் தேவையான வர்த்தகக் காரியங்களும் அதற்கேற்பப் பல்கிப் பெருகுகின்றன. விலைகளைக் கணக்கிடுவது, கணக்குப் பதிவு, நிதி மேலாண்மை, கடிதத் தொடர்பு - இவையெல்லாம் இவ்வகைப்பட்டவையே. உற்பத்தியின் அளவு வீதம் தொடர்பு இவையெல்லாம் இவ்வகைப்பட்டவையே. உற்பத்தியின் அளவு வீதம் எவ்வளவுக்கு எவ்வளவு வளர்ச்சி அடைகிறதோ, தொழில் துறை மூலதனத்தின் வர்த்தகக் காரியங்களும், எனவே மதிப்பையும் உபரி-மதிப்பையும் ஈடேற்றம் செய்வதற்கான உழைப்பும் ஏனைய சுற்றோட்டச் செலவுகளும் (அதே விகிதத்தில் அதிகமாகா விட்டாலும்) அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாகின்றன. உள்ளபடியே அலுவலகப் பணியாளர்களாய் அமைந்திடும் வர்த்தகக் கூலித் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவது இதற்கு அவசியமாகிறது. இவர்களுக்காகக் கூலி வடிவில் முதலீடு செய்யப்பட்ட போதிலும், திறனுடை உழைப்பை விலைக்கு வாங்குவதில் முதலீடு செய்யப்படும் மாறும்-

மூலதனத்திலிருந்து அது வேறுபடுகிறது. இது நேரடியாக உபரி-மதிப்பைக் கூடுதலாக்காமலே தொழில் துறை முதலாளியின் முதலீட்டை, முன்னீடு செய்ய வேண்டிய மூலதனத் திரளைக் கூடுதலாக்குகிறது. ஏனெனில் இது ஏற்கெனவே படைக்கப்பட்ட மதிப்பை ஈடேற்றம் செய்வதற்கென்றே அமர்த்தப்படும் உழைப்புக்கான முதலீடாகும். இவ்வகைப்பட்ட ஏனைய எல்லா முதலீடுகளையும் போலவே இதுவும் இலாப வீதத்தைக் குறையச் செய்கிறது; முன்னீடு செய்யப்படும் மூலதனம் அதிகரித்தாலும் உபரி-மதிப்பு அதிகரிப்பதில்லை என்பதே காரணம். மூலதன முன்னீடு Cஆனது C+ΔC ஆக அதிகரிக்கும் போதே உபரி-மதிப்பு Sமாறாமல் இருந்தால், இலாப வீதம் S/Cஆனது S/C+ΔCஆகக் குறையும். எனவே தொழில் துறை முதலாளி மாறா-மூலதனத்திற்கான செலவுகளைப் போலவே இந்தச் சுற்றோட்டச் செலவுகளையும் குறைந்தபட்ச அளவாகக் குறைத்துக் கொள்வதற்குப் பாடுபடுகிறார். இதனால்தான் தொழில் துறை மூலதனம் அதன் திறனுடை கூலித் தொழிலாளர்கள்பால் காட்டும் அதே போக்கை அதன் வர்த்தகக் கூலித் தொழிலாளர்கள்பால் கட்டுவதில்லை. ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க, அது எவ்வளவு அதிகமான திறனுடைக் கூலித் தொழிலாளர்களை அமர்த்துகிறதோ, அவ்வளவு அதிகமாய் உற்பத்தியாகி, அவ்வளவு அதிகமாய் உபரி-மதிப்பு அல்லது இலாபம் கிடைக்கிறது. இதற்கு மாறாக, உற்பத்தியின் அளவுவீதம் எவ்வளவுக்கு எவ்வளவு பெரிதாய் உள்ளதோ, ஈடேற்றம் செய்ய வேண்டிய மதிப்பும் உபரி-மதிப்பும் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய் உள்ளதோ, சரக்கு-மூலதனம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய் உற்பத்தி ஆகிறதோ, அலுவலகச் செலவுகள் - ஒப்பளவில் இல்லையென்றாலும் அறுதியாய் - அவ்வளவுக்கு அவ்வளவு அதிகரிக்கின்றன; இது ஒரு விதமான உழைப்புப் பிரிவினைக்கு வழிகோலுகிறது. எந்த அளவுக்கு இலாபம் இந்த முதலீடுகளுக்கு முன்நிபந்தனையாகும் என்பது, வர்த்தகச் சம்பளங்கள் அதிகரிக்கும் போது அவற்றில் ஒரு பகுதி அநேக சந்தர்ப்பங்களில் இலாபப் பங்காகத் தரப்படுவதிலிருந்தும், வேறு பலவற்றிலிருந்தும் தெரிய வருகிறது. ஓரளவுக்கு மதிப்புகளைக் கணக்கிடுவது தொடர்பானவையும், ஓரளவுக்கு அவற்றை ஈடேற்றம் செய்வது தொடர்பானவையும், ஓரளவுக்கு ஈடேற்றமான பணத்தைத் திரும்பவும் உற்பத்திச் சாதனங்களாக மாற்றுவது தொடர்பானவையும் ஆகிய இடைநிலை வேலைகளை மட்டும் செய்கிற உழைப்பின் பருமன் ஈடேற்றம் செய்யப்பட வேண்டிய மதிப்பு-உற்பத்தியின் அளவைப் பொறுத்தாகும் என்பதும், இந்த உழைப்பானது நேரடித் திறனுடை

உழைப்பைப் போல் இம்மதிப்புகளின் தனித் தனியாக பருமன்கள், திரள்களின் காரணமாகச் செயல்படுவதில்லை, காரியமாகவே செயல்படுகிறது என்பதும் இயற்கைதான். ஏனைய சுற்றோட்டச் செலவுகளுக்கும் இது பொருந்தும். அளத்தல், நிறுத்தல், கட்டுதல், போக்குவரத்து ஆகியவை அதிகமாய் நடைபெற வேண்டுமானால், சரக்குகளும் அதிகமாய்க் கையிலிருக்க வேண்டும். கட்டுதல், போக்குவரத்து முதலானவற்றின் அளவு இந்தச் செயல்பாட்டின் இலக்குப் பொருட்களான சரக்குகளின் அளவை பொறுத்ததே தவிர, பின்னது முன்னதைப் பொறுத்தது அல்ல.

வர்த்தகத் தொழிலாளி நேரடியாக உபரி-மதிப்பு ஏதும் உற்பத்தி செய்வதில்லை. ஆனால் அவரது உழைப்பின் விலை அவரது உழைப்புச் சக்தியின் மதிப்பால், அதாவது அதன் உற்பத்திச் செலவால் நிர்ணயிக்கப்படுகிறது; அதே போது இந்த உழைப்புச் சக்தியின் பிரயோகமும், முயற்சியும், ஆற்றலின் செலவிடும் தேய்மானமும் எவ்விதத்திலும் அதன் மதிப்பால் வரம்பிடப்படுவதில்லை - இந்த அமிசத்தில் வர்த்தகத் தொழிலாளியின் நிலையும் ஏனைய ஒவ்வொரு கூலித் தொழிலாளியின் நிலையும் ஒன்றே. ஆகவே வர்த்தகத் தொழிலாளியின் கூலியானது அவரது உதவி கொண்டு முதலாளி ஈடேற்றம் செய்கிற இலாபத் திரளுக்கு ஏற்றதாய் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அவருக்காக முதலாளி செலவிடுவதும் அவரைக் கொண்டு முதலாளிக்கு வந்து சேருவதும் இருவேறு சங்கதிகளாகும். அவர் நேரடி உபரி-மதிப்பு ஏதும் படைப்பதில்லை என்றாலும், அவரது உழைப்பில் ஒரு பகுதி ஊதியமிலா உழைப்பாய் இருப்பதால் உபரி-மதிப்பை ஈடேற்றம் செய்வதற்கு ஆகும் செலவைக் குறைத்திட முதலாளிக்கு உதவுவதன் மூலம் அவரது வருமானத்தைக் கூடுதலாக்குகிறார். வர்த்தகத் தொழிலாளி - இச்சொல்லுக்குரிய கண்டிப்பான அர்த்தத்தில் - ஓரளவுக்கு நல்ல ஊதியம் பெறும் கூலித் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர், தேர்ச்சி பெற்ற உழைப்பாக வகைப்படுத்தப்பட்டு சராசரி உழைப்புக்கு மேற்பட்டதாய் இருக்கும் உழைப்புக்கு உரியவர்களான அந்தக் கூலித் தொழிலாளர்களைச் சேர்ந்தவர். என்றாலும் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை முன்னேறிச் செல்லும் போது சராசரி உழைப்பு தொடர்பாகவும் கூட கூலி குறைந்து செல்லும் போக்கு வெளிப்படுகிறது. இதற்கு ஒரு காரணம் அலுவலகத்திலான உழைப்புப் பிரிவினையாகும்; இந்தப் பிரிவினை உழைப்பாற்றலின் ஒருபுற வளர்ச்சியைக் குறிப்பதாகும்; இந்த வளர்ச்சிக்கான செலவு முழுவதையும் முதலாளி ஏற்க

வேண்டியதில்லை; ஏனென்றால் தொழிலாளியின் தேர்ச்சி அதுவாகவே பணிப் பயிற்சியின் வாயிலாக வளர்கிறது, உழைப்புப் பிரிவினையால் எவ்வளவுக்கு ஒரு புறத் தன்மையதாகிறதோ அவ்வளவுக்குத் துரிதமாய் வளர்கிறது. இதற்கு இரண்டாவது காரணம், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது கற்பிக்கும் வழிமுறைகளையும் இன்ன பிறவற்றையும் எவ்வளவுக்கு எவ்வளவு நடைமுறை நோக்கங்களுக்கு இசைவாய்ச் செலுத்துகிறதோ, விஞ்ஞானம் பொதுக் கல்வியும் அடைகிற முன்னேற்றத்தோடு, அவசியமான பயிற்சியும், வர்த்தக நடைமுறைகள் பற்றிய அறிவும், மொழிகளும் இன்னபிறவும் அவ்வளவுக்கு அவ்வளவு விரைவாகவும் எளிதாகவும் பரவலாகவும் மலிவாகவும் மறுவுற்பத்தி ஆகின்றன. பொதுக் கல்வி அனைவருக்கும் உரியதாய்ப் பரவலாக்கப்படுவதால், இத்தகைய தொழில் பலவும் பழகும் வாய்ப்பை இதற்கு முன் பெற்றிராதவையும் தாழ்ந்த வாழ்க்கைத் தரத்துக்குப் பழக்கப்பட்டவையுமான வர்க்கங்களிலிருந்து இவ்வகைத் தொழிலாளர்களை முதலாளிகள் வேலைக்குச் சேர்ப்பது சாத்தியமாகிறது. மேலும், இதனால் வழங்கலும், போட்டியும் அதிகரிக்கின்றன. ஆகவே, ஒரு சில விதிவிலக்குகள் போக, இவர்களது உழைப்புச் சக்தியின் மதிப்பு முதலாளித்துவப் பொருளுற்பத்தி முன்னேறிச் செல்லும் போது குறைந்து போகிறது. இவர்களது உழைப்பாற்றல் அதிகரிக்கும் போதே கூலி குறைகிறது. முதலாளி தாம் ஈட்டேற்றம் செய்ய வேண்டிய மதிப்பும் இலாபங்களும் அதிகரிக்கும் போதெல்லாம் இத்தொழிலாளர்களின் தொகையையும் அதிகமாக்கிக் கொள்கிறார். இந்த உழைப்பு அதிகமானது எப்போதும் உபரி-மதிப்பு அதிகமாவதன் விளைவு ஆகுமே தவிர, ஒருபோதும் காரணம் ஆகாது.[40]

ஆக இரட்டிப்பு நிலை (duplication) எழுகிறது. ஒரு புறம், சரக்கு-மூலதனம், பண-மூலதனம் (இனி வணிக-மூலதனம் என்றே குறிப்பிடுவோம்) என்னும் பணிகள் தொழில் துறை மூலதனம் பூணுகிற திட்டமான பொது வடிவங்களாகும். மறு புறம், பிரத்தியோகமான மூலதனங்களும், எனவே முதலாளிகளின் பிரத்தியேகமான பிரிவுகளும்

(40) எங்கெல்ஸ் குறிப்பு:-வர்த்தகப் பாட்டாளி வர்க்கத்தின் கதி குறித்து 1865இல் இப்படி எழுதப்பட்டது. இந்த முன்னறிவிப்பானது காலத்தின் சோதனையை வென்று நிற்பதற்கு நூற்றுக்கணக்கான ஜெர்மானிய எழுத்தாளர்கள் சான்றாவர்; இந்த எழுத்தர்கள், வர்த்தகக் காரியங்கள் அனைத்திலும் பயிற்சி பெற்றவர்கள். மூன்று நான்கு மொழிகளில் வல்லவர்கள்; ஆனால் லண்டன் நகரத்தில் இவர்களது சேவை வாரத்துக்கு 25 ஷில்லிங் கூலிக்கு வீணாகிறது; இது தேர்ச்சி வாய்ந்த கம்மியரின் கூலியைக் காட்டிலும் மிகக் குறைவு. கையெழுத்துப் பிரதியில் இருபக்கங்கள் வெறுமையாக விடப்பட்டிருப்பது இந்த விவகாரம் இன்னும் விரிவான முறையில் பரிசீலனை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. மற்றபடி, வாசகர் இரண்டாம் பாகத்தைப் பார்த்துக் கொள்ளலாம் (அத்தியாயம் VI,பக்கம் 168-77) ('சுற்றோட்டச் செலவுகள்'); இத்தலைப்புக்குரிய பலவும் அங்கேயே ஆராயப்பட்டுள்ளன.

முழுக்க முழுக்க இந்தப் பணிகளுக்கென்றே அமைகின்றன; இவ்விதம் இப்பணிகளும் மூலதனத் தற்பெருக்கத்தின் பிரத்தியேகத் துறைகளாக வளர்ச்சியடைகின்றன.

வணிக-மூலதனத்தைப் பொறுத்த வரை, வர்த்தகப் பணிகளும் சரி, சுற்றோட்டச் செலவுகளும் சரி, தனித்தவொன்றாய் வகைப் படுத்தப்படும் வடிவில் மட்டுமே காணப்படுகின்றன. தொழில் துறை மூலதனத்தில் சுற்றோட்டத்துக்கென ஒதுக்கப்படும் பகுதியானது ஓயாமல் சரக்கு-மூலதனமாகவும் பண-மூலதனமாகவும் நிலவுவதோடு, தொழிலகத்தை அடுத்துள்ள அலுவலகத்திலும் இடம் பெறுகிறது. ஆனால் இது வணிக-மூலதனம் ஆகும் போது சுயேச்சையானதாகிறது. வணிக-மூலதனத்தைப் பொறுத்த வரை, அதற்குள்ள ஒரே பட்டறை அலுவலகம்தான். சுற்றோட்டச் செலவுகளாக ஈடுபடுத்தப்படும் மூலதனப் பகுதி தொழிலதிபருக்கு இருப்பதை விடப் பெருவணிகருக்கு மிகப் பெரிதாய் இருப்பதாகத் தெரிகிறது; ஏனென்றால் ஒவ்வொரு தொழிலகத்துக்குமான தனித்தனி அலுவலகங்களை அன்னியில், தொழில் துறை முதலாளி வர்க்கம் முழுவதும் இவ்விதம் சுற்றோட்டத்துக்காகச் செலவிட வேண்டிய மூலதனப் பகுதி ஒருசில வணிகர்களின் கையில் குவித்து விடுகிறது; இவ்வணிகர்கள் சுற்றோட்டப் பணிகளை நிறைவேற்றுவதன் மூலம், அவை தொடருவதற்கு அவசியமான செலவுகளுக்கும் - மேன்மேலும் அதிகமாகிச் செல்லும் இச்செலவுகளுக்கும் - வகை செய்து கொள்கிறார்கள்.

தொழில்துறை மூலதனத்துக்கு சுற்றோட்டச் செலவுகள் திறனிலாச் செலவுகளாய்த் தெரிகின்றன: ஆம், அவை திறனிலாச் செலவுகள்தாம். வணிகருக்கு அவை அவரது இலாபத்திற்கான ஆதாரமாய்த் தெரிகின்றன; பொது இலாப வீதம் குறிப்பிட்டதாய் இருக்க அவரது இலாபம் இச்செலவுகளின் அளவுக்கேற்ப அமைகிறது. ஆகவே, இந்தச் சுற்றோட்டச் செலவுகளுக்காகச் செய்ய வேண்டிய முதலீடு வணிக-மூலதனத்துக்குத் திறனுடைச் செலவீடு ஆகும். எனவேதான் அது விலைக்கு வாங்குகிற வர்த்தக உழைப்பும் கூட அதற்கு நேரடியாகவே திறனுடை உழைப்பு ஆகும்.

## அத்தியாயம் XVIII

## வணிக-மூலதனத்தின் புரள்வு

## விலைகள்

தொழில்துறை மூலதனத்தின் புரள்வானது அதன் உற்பத்திக் காலத்தையும் சுற்றோட்டக் காலத்தையும் இணைத்து வருவதாகும், எனவே உற்பத்தி நிகழ்முறை முழுவதையும் அளாவியதாகும். மறு புறம் வணிக-மூலதனத்தின் புரள்வானது உண்மையில் சரக்கு-மூலதனம் அயலார் கைக்கு மாறும் இயக்கமே தவிர வேறல்ல ஆதலால், சரக்கின் உருமாற்றத்தின் முதல் கட்டமாகிய C—Mஐ மட்டுமே குறித்திடுகிறது; இது இங்கே தனிப்பட்ட ஒரு மூலதனத்தின் மீள்வு இயக்கமாகிறது. M—C,C—M என்பது வணிகரின் கண்ணோட்டத்தில் வணிக-மூலதனத்தின் புரள்வாகும். வணிகர் கொள்முதல் செய்கிறார், அதாவது தமது பணத்தைச் சரக்குகளாக மாற்றுகிறார், பிறகு விற்கிறார், அதாவது சரக்குகளைத் திரும்பவும் பணமாக மாற்றுகிறார், ஓயாமல் திரும்பத் திரும்ப இதையே செய்கிறார். சுற்றோட்டத்திற்குள் தொழில் துறை மூலதனத்தின் உருமாற்றமானது எப்போதுமே $C_1$—M—$C_2$ என்ற வடிவில் வெளிப்படுகிறது; உற்பத்திச் சரக்கு $C_1$ஐ விற்று வரும் பணம் புதிய உற்பத்திச் சாதனங்களாகிய $C_2$ஐ விலைக்கு வாங்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது. இது நடைமுறையில் $C_1$ஐ $C_2$க்குப் பரிவர்த்தனை செய்வதற்கு ஒப்பானது; ஒரே பணம் இவ்விதம் இரு முறை கைமாறுகிறது. அதன் அசைவியக்கம் $C_1$, $C_2$ ஆகிய இருவேறு சரக்கு வகைகளின் பரிவர்த்தனையை நிகழச் செய்கிறது. ஆனால் வணிகரைப் பொறுத்தவரை நிலைமை இதற்கு நேர்மாறானது; அதாவது M—C—M' என்பதில் ஒரே சரக்கு இரு முறை கைமாறுகிறது. இது வணிகரின் பணம் மீண்டு வருவதற்கு வழி செய்வதோடு சரி.

எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட ஒரு வணிகரின் மூலதனம் £ 100 என்றும், இந்த £100க்கு அவர் சரக்குகள் வாங்கி £110க்கு விற்கிறார் என்றும் கொள்வோமானால், அவரது £100 மூலதனம் ஒரு புரள்வைப் பூர்த்தி செய்துள்ளது; ஓராண்டுக்கு எத்தனை புரள்வுகள் இவ்விதம் பூர்த்தியாகின்றன என்பது M—C—M' என்னுமிந்த அசைவியக்கம் திரும்பத் திரும்ப எத்தனை முறை நிகழ்கிறது என்பதைப் பொறுத்ததாகும்.

கொள்முதல்-விலைக்கும் விற்பனை-விலைக்கும் இடையிலான வேறுபாட்டில் ஒளிந்திருக்கக் கூடிய செலவுகளை இங்குக் கருத்தில் கொள்ளாமல் அறவே ஒதுக்கி விடுகிறோம்; ஏனென்றால் இச்செலவுகள் வடிவத்தை எவ்விதத்தும் மாற்றுகிறவை அல்ல; நாம் வடிவத்தையே பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே, குறிப்பிட்ட வணிக-மூலதனத்தின் புரள்வுகளது எண்ணிக்கையை வெறும் சுற்றோட்ட ஊடகமாகப் பணம் திரும்பத் திரும்பச் சுழன்று வரும் சகடங்களோடு இங்கே ஒப்பிடலாம். எப்படி ஒரே ஒரு தாலெர் காசு பத்து சகடங்களில் சுழல்வதன் மூலம் அதைப் போல் பத்து மடங்கு மதிப்புள்ள சரக்குகளை வாங்கி விடுகிறதோ, அதே போல வணிகரின் ஒரே பண-மூலதனம் பத்து முறை புரளும் போது அதைப் போல் பத்து மடங்கு மதிப்புள்ள சரக்குகளை வாங்கி விடுகிறது, அதாவது மொத்தத்தில் அதைப் போல் பத்து மடங்கு மதிப்புள்ள சரக்கு-மூலதனத்தை ஈடேற்றம் செய்கிறது; எடுத்துக்காட்டாக 100 வணிக-மூலதனமானது அதைப் போல் பத்து மடங்கு மதிப்பாகிய 1000 மதிப்புள்ள சரக்கு-மூலதனத்தை ஈடேற்றம் செய்கிறது. ஆனால் பின்வரும் வேறுபாடும் இருக்கிறது; சுற்றோட்ட ஊடகமாகப் பணம் சுழன்று வரும் சகடத்தில் ஒரே காசுதான் கைக்குக் கை மாறிச் செல்கிறது, ஒரே பணியை இவ்விதம் திரும்பத் திரும்ப செய்கிறது, எனவே சுற்றியோடும் காசுகளின் திரளை அதன் ஓட்ட வேகத்தால் சரிக்கட்டுகிறது.

ஆனால் வணிகரைப் பொறுத்த வரை ஒரே பண-மூலதனம்தான், ஒரே பண-மதிப்புதான், அதிலடங்கிய காசுகள் எவையாய் இருப்பினும், அதன் மதிப்புக்கு உரித்தான அளவில், திரும்பத் திரும்ப சரக்கு-மூலதனத்தை வாங்கி விற்கிறது; இவ்விதம் அதே கைக்குத் திரும்பி வருகிறது, புறப்பட்டுச் சென்ற அதே முனைக்கு $M+\Delta M$ ஆக, அதாவது மதிப்பு+உபரி-மதிப்பாகத் திரும்பி வருகிறது. இதனாலேயே அதன் புரள்வு மூலதனப் புரள்வாகிறது. அது எப்போதுமே சுற்றோட்டத்தில் விடுவதை விட கூடுதலான பணத்தை சுற்றோட்டத்திலிருந்து எடுக்கிறது. எப்படியானாலும் வணிக-மூலதனத்தின் புரள்வு இன்னும் விரைவாய் நடைபெறுவது (கடன்-செலாவணி அமைப்பு வளர்ச்சி பெற்றிருப்பின் பணம் கொடுப்புச் சாதனமாகப் பணியாற்றுவது முதலிடம் பெறுகிறது) ஒரே பணத் தொகை இன்னும் துரிதமாய் சுற்றியோடுவதைக் குறிக்கிறது என்பது கூறாமலே விளங்கும்.

தொழில் துறை மூலதனம் திரும்பத் திரும்ப புரளுவதானது (நுகர்வு நிகழ்முறை உள்ளிட்ட) மறுவுற்பத்தி நிகழ்முறை முழுவதும் காலவட்ட முறையில் புதுப்பிக்கப்படுவதைக் குறிப்பதாகும்; ஆனால் வர்த்தக-மூலதனம் திரும்பத் திரும்பப் புரளுவது திரும்பத் திரும்ப வாங்கி விற்பதை மட்டும் குறிப்பதாகும்; ஒருபோதும் இதற்கு மேல் வேறேதையும் குறிப்பதாகாது. வணிக-மூலதனத்திற்கு மறுவுற்பத்தி நிகழ்முறை ஒரு வெளி நிலைமையாக மட்டுமே தெரிகிறது. வணிக-மூலதனம் துரிதமாய்ப் புரளுவது தொடர்ந்து சாத்தியமாக வேண்டுமானால், தொழில் துறை மூலதனமானது ஓயாமல் சரக்குகளை சந்தைக்குக் கொண்டு வரவும், சந்தையிலிருந்து எடுத்துப் போகவும் வேண்டும். மறுவுற்பத்தி நிகழ்முறை மெதுவாக நடைபெற்றால், வணிக-மூலதனத்தின் புரள்வும் மெதுவாகவே நடைபெறும். மெய்தான், வணிக-மூலதனம் திறனுடைய-மூலதனத்தின் புரள்வுக்கு ஊக்கமளிக்கவே செய்கிறது, ஆனால் அதன் சுற்றோட்டக் காலத்தைக் குறுகச் செய்வதாய் உள்ள வரைதான் இதைச் செய்கிறது. உற்பத்திக் காலத்தின் மீது அதற்கு நேரடித் தாக்கம் ஏதுமில்லை; உற்பத்திக் காலமும் கூட தொழில்துறை மூலதனத்தின் புரள்வுக் காலத்துக்கு ஒரு தடைதான். இது வணிக-மூலதனத்தின் புரள்வுக்கு முதல் தடை மதில் ஆகும். இரண்டாவதாக, மறுவுற்பத்தி-நுகர்வினால் ஏற்படும் தடைமதிலை அன்னியில், வணிக-மூலதனத்தின் புரள்வுக்கு இறுதியாக வரம்பிடுவது மொத்தச் சொந்த நுகர்வின் விரைவும் பரிமாணமுமே ஆகும்; ஏனென்றால் நுகர்வுப் பண்ட நிதியத்தை (consumption fund) சேர்ந்த சரக்கு-மூலதனம் அனைத்தும் இதைப் பொறுத்ததே.

ஆனால் (வர்த்தக உலகில் நிகழும் சில புரள்வுகளில் ஒரு வணிகர் எப்போதும் ஒரே சரக்கை இன்னொரு வணிகருக்கு விற்கிறார், இவ்வகைச் சுற்றோட்டம் ஊக வாணிபக் காலங்களில் படுவிபரீதமாய்த் தோன்றக் கூடும், இந்த வகைப் புரள்வுகளை ஒதுக்கி விட்டே பேசுகிறோம்,) வணிக-மூலதனமானது முதலாவதாக, திறனுடை-மூல தனத்திற்கான C—M கட்டத்தைக் குறுகச் செய்கிறது. இரண்டாவதாக, நவீனக் கடன்-செலாவணி அமைப்பில் அது சமுதாயத்தின் மொத்தப் பண-மூலதனத்தில் கணிசப் பகுதியைப் பயன்படுத்திக் கொள்கிறது; இதனால் ஏற்கெனவே கொள்முதல் செய்ததைத் திட்டவட்டமாய் விற்று முடிப்பதற்கு முன்னதாகவே அது திரும்பத் திரும்ப கொள்முதல் செய்வது சாத்தியமாகிறது. வணிகர் நேரடியாய் இறுதி நுகர்வாளரிடமே விற்றாலும் சரி, இருவருக்குமிடையில் பத்துப் பன்னிரண்டு இடைநிலை வணிகர்கள் இருந்தாலும் சரி, எல்லாம் இங்கு ஒன்றுதான்.

மறுவுற்பத்தி நிகழ்முறை அளவுகடந்த நெகிழ்வு கொண்டதாய் இருப்பதால் - எப்போதும் எந்தக் குறிப்பிட்ட எல்லையைத் தாண்டியும் அதனை கொண்டுசெல்லலாம் - உற்பத்தித் துறையில் அதற்குத் தடையேதும் ஏற்படுவதில்லை, அப்படியே ஏற்பட்டாலும் மிகவும் நெகிழ்ந்து கொடுக்கக் கூடியதாகவே ஏற்படுகிறது. சரக்குகளின் தன்மை காரணமாய் C—M என்பதும் M—C என்பதும் தனித்தனியே பிரிக்கப்படுவதை அன்னியில், பெயரளவான வேண்டல் (fictitions demand) தோற்றுவிக்கப்படுகிறது. வணிக- மூலதனம் சுயேச்சையான தகுநிலை பெற்றதாயினும், அதன் சுழலியக்கம் எப்போதும் சுற்றோட்டத் துறைக்குள் தொழில்துறை மூலதனம் நிகழ்த்தும் சுழலியக்கமேதான். ஆனால் சுயேச்சையான தகுநிலை பெற்றிருப்பதன் அடிப்படையில் அது - குறிப்பிட்ட சில வரம்புகளுக்குள் - மறுவுற்பத்தி நிகழ்முறையின் எல்லைகளைப் பொருட்படுத்தாமல் சுயேச்சையாய் இயங்குகிறது, இவ்விதம் மறுவுற்பத்தி நிகழ்முறையை அதன் எல்லைகளுக்கு அப்பாலும் கூட கொண்டுசென்று விடுகிறது. இப்படி உள்ளுக்குள் சார்ந்திருப்பதும் வெளியே சுயேச்சையாய் இருப்பதும் சேர்ந்து வணிக-மூலதனத்தை இழுத்துச் செல்கின்றன-நெருக்கடி வெடித்தெழுந்து உள்ளிணைப்பு வலுவந்தமாக மீட்டமைக்கப்படும் நிலைக்கு இழுத்துச் செல்கின்றன.

இதனால்தான் நெருக்கடிகள் முதலில் மேற்பரப்பில் வெளிப்பட்டு வெடித்தெழுவது நேரடி நுகர்வுக்கு வகைசெய்யும் சில்லறை வர்த்தகத்தில் அல்லாமல், மொத்த வர்த்தகத்திலும் வங்கித்துறையிலும் நடைபெறுகிறது-வங்கித் துறைதான் சமுதாயத்தின் பண-மூலதனத்தை மொத்த வர்த்தத்தின் கைக்கு வருமாறு செய்வது.

உள்ளபடியே உற்பத்தியாளர் ஏற்றுமதியாளரிடம் விற்கலாம், பதிலுக்கு ஏற்றுமதியாளரோ அயல்நாட்டு நுகர்வாளரிடம் விற்கலாம்; இறக்குமதியாளர் தமது கச்சாப் பொருட்களை உற்பத்தியாளரிடம் விற்கலாம், உற்பத்தியாளர் தமது பண்டங்களை மொத்த வணிகரிடம் விற்கலாம். ஆனால் கண்ணுக்குப் புலப்படாமல் எங்கோ பண்டங்கள் விலைபோகாது கிடக்கின்றன, அல்லது உற்பத்தியாளர்களுக்கும் இடையாளர்களுக்குமான எல்லாரிடமும் பண்டங்கள் பையப் பைய மிகையிருப்பாகி விடுகின்றன. பொதுவாக அப்போது நுகர்வு மிக உயர்ந்த அளவில் நடைபெறுகிறது; ஒரு தொழில் துறை முதலாளி வரிசையாக அடுத்தடுத்து வேறு பல தொழில் துறை முதலாளிகளை இயங்கச் செய்வதோ, அவர்களால் அமர்த்தப்படும் தொழிலாளர்கள்

முழுநிறைவான வேலைவாய்ப்பினைப் பெற்று வழக்கத்துக்கும் கூடுதலாய் செலவிடக் கூடியவர்களாக இருப்பதோ இதற்கு காரணமாகலாம். முதலாளிகளின் செலவுகளும் அவர்களின் வருமானப் பெருக்கத்தோடு சேர்ந்து அதிகரிக்கின்றன. மேலும் முன்பே பார்த்தது போல (இரண்டாம் பாகம், பகுதி III, பக்கம் 558-62, 567-73), மாறும்-மூலதனத்துக்கும் மாறா-மூலதனத்துக்கும் இடையே தொடர்ச்சியான சுற்றோட்டம் நடைபெறுகிறது. (மூலதனத் திரட்டலின் வேகம் அதிகரிப்பதையும் பொருட்படுத்தாமலே நடைபெறுகிறது). மாறா-மூலதனம் சொந்த நுகர்வில் ஒருபோதும் சேருவதில்லை என்பதால் முதற்கண் இந்நுகர்வைச் சாராதிருக்கிறது. ஆனால் இந்நுகர்வு நிச்சயமாய் மாறா-மூலதனத்திற்கு வரம்பிடுகிறது; ஏனென்றால் ஒருநாளும் மாறா-மூலதனம் மாறா-மூலதனத்திற்காகவே உற்பத்தி செய்யப்படுவதில்லை, சொந்த நுகர்வுக்குப் பயன்படும் பண்டங்களை ஆக்கித் தரும் உற்பத்திக் கிளைகளில் மாறா-மூலதனம் மேலும் தேவைப்படுவதால் மட்டுமே அது உற்பத்தி செய்யப்படுகிறது. என்றாலும் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய எதிர்ப்பார்க்கப்படும் வேண்டலால் தூண்டப் பெற்று இந்த உற்பத்தி சிறிது காலம் தொல்லையின்றி அப்படியே தொடரலாம். ஆகவே இந்த உற்பத்திக் கிளைகளில் வணிகர்கள், தொழிலதிபர்களின் தொழில் விறுவிறுப்பாய் நடைபெறுகிறது. தொலைதூர சந்தைகளில் விற்பனை செய்யும் வணிகர்களின் (அல்லது உள்நாட்டுச் சந்தையில் திரண்டு விட்ட சரக்கிருப்புகளுக்கு உரியவர்களின்) மீள்வுகள் மெதுவானவையும் சொற்பமானவையும் ஆகி, வங்கிகள் பணக் கொடுப்பை வலியுறுத்தும் போது, அல்லது கொள்முதல் செய்த சரக்குகளைத் திரும்பவும் விற்பதற்குள்ளேயே அச்சரக்குகளுக்கான உறுதிப் பத்திரங்கள் தீர்வுக் காலத்தை எட்டி விடும்போது நெருக்கடி மூள்கிறது. அப்போது வேறு வழியின்றி விற்பனை செய்ய வேண்டியதாகிறது, கொடுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு இந்த விற்பனை நடைபெறுகிறது. பிறகு திடுதிப்பெனத் தகர்வு (Crash) ஏற்பட்டு மாயத் தோற்றமான செல்வச் செழிப்புக்கு சட்டென முடிவு கட்டுகிறது.

வணிக-மூலதனப் புரள்வு மேம்போக்கானதாகவும் அர்த்தமற்றதாகவும் இருப்பது இன்னுங்கூட அதிகமாகி விடுகிறது; ஏனென்றால், ஒரே வணிக-மூலதனத்தின் புரள்வு பல திறனுடைய-மூலதனங்களின் புரள்வுகளை ஒரே நேரத்திலோ அடுத்தடுத்தோ நிகழச் செய்யலாம்.

வணிக-மூலதனத்தின் புரள்வானது பல தொழில் துறை மூலதனங்களின் புரள்வுகளை நிகழச் செய்வது மட்டுமல்லாமல் சரக்கு-மூலதனத்தின் உருமாற்றத்தில் எதிரெதிரான கட்டங்களைத் துரிதப்படுத்தவும் செய்யலாம். எடுத்துக்காட்டாக வணிகர் உற்பத்தியாளரிடமிருந்து துணி வாங்கி, வெளுப்புக்காரரிடம் விற்று விடுகிறார். ஆகவே ஈடேற்றம் - இருவேறு தொழில் துறை மூலதனங்களுக்கு இரு எதிரெதிர்க் கட்டங்களை குறிக்கிறது. வணிகர் திறனுடைய நுகர்வுக்காக விற்பதால், அவரது C—M எப்போதுமே ஒரு தொழில் துறை முதலாளிக்கு M—C ஆகும். அவரது M—C எப்போதுமே இன்னொரு தொழில் துறை முதலாளிக்கு C—M ஆகும்.

சுற்றோட்டச் செலவுகளாகிய Kஐ விட்டு விடுவோமானால் (இந்த அத்தியாயத்தில் அப்படித்தான் செய்கிறோம்). அதாவது சரக்குகளைக் கொள்முதல் செய்வதற்குத் தேவையான பணத்துடன் கூடவே வணிகர் முன்னீடு செய்யும் மூலதனப் பகுதியை ஒதுக்கித் தள்ளி விடுவோமானால், இந்தக் கூடுதல் மூலதனத்தின் மீது கூடுதல் இலாபமாகிய $\Delta$Kஐயும் விட்டு விடுகிறோம் என்றாகிறது. வணிக-மூலதனத்தின் இலாபமும் புரள்வும் விலைகளை எப்படி பாதிக்கின்றன என்று பார்க்க வேண்டுமானால், கண்டிப்பாய் தர்க்க வழிப்பட்டதும் கணிதவியல் முறையில் சரியானதுமாகிய ஆய்வுமுறை இதுதான்.

1 இராத்தல் சர்க்கரையின் உற்பத்தி-விலை £1ஆக இருக்குமானால், வணிகர் £100க்கு 100 இராத்தல் சர்க்கரை வாங்க முடியும். ஓராண்டு காலத்தில் இவ்வளவு சர்க்கரையை அவர் வாங்கி விற்பாரானால், மேலும் சராசரி வருடாந்தர இலாப வீதம் 15%ஆக இருக்குமானால், அவர் £100க்கு £15ஐச் சேர்ப்பார், 1 இராத்தல் சர்க்கரையின் உற்பத்தி-விலையாகிய £1க்கு 3 ஷில்லிங் சேர்ப்பார். அதாவது அவர் ஒரு ராத்தல் சர்க்கரை £1,3 ஷில்லிங் விலைக்கு விற்பார். ஆனால் 1 இராத்தல் சர்க்கரையின் உற்பத்தி-விலை 1 ஷில்லிங்காகக் குறையுமானால் வணிகர் £100க்கு 2,000 இராத்தல் சர்க்கரை வாங்கவும், இராத்தல் ஒன்றுக்கு 1 ஷில்லிங்கு $1\ ^4/_5$ பென்னி என்னும் விலையில் சர்க்கரையை விற்கவும் கூடும். சர்க்கரைத் தொழிலில் முதலீடாகியுள்ள மூலதனத்தின் மீதான வருடாந்தர இலாபம் இப்போதும் ஒவ்வொரு £100க்கும் £15ஆகவே இருக்கும். ஆனால் வணிகர் முதல் நேர்வில் 100 இராத்தலும், இரண்டாம் நேர்வில் 2,000 இராத்தலும் விற்றாக வேண்டும். உற்பத்தி-விலை உயர்ந்தோ தாழ்ந்தோ இருப்பதற்கும் இலாப வீதத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆனால் அது

ஒவ்வோர் இராத்தல் சர்க்கரையின் விற்பனை-விலையிலும் வணிக இலாபமாக வடிபடுகிற அந்த ஈவுப்பகுதியை - அதாவது குறிப்பிட்ட அளவு சரக்கு அல்லது பண்டத்தை விற்பதன் மூலம் விலையுடன் கூட வணிகர் அடையும் கூடுதல் தொகையை - வெகுவாகவும் தீர்மானமாகவும் பாதிக்கவே செய்கிறது. சரக்கின் உற்பத்தி - விலை சிறிதாயிருந்தால், அதன் கொள்முதல்-விலையில், அதாவது அச்சரக்கின் குறிப்பிட்ட அளவுக்கென்று வணிகர் முன்னீடு செய்யும் தொகையும் சிறிதாகவே இருக்கும். ஆகவே இலாப வீதம் குறிப்பிட்டதாய் இருக்க, விலை குறைந்த சரக்குகளின் இந்த அளவு மீது அவர் அடையும் இலாப அளவும் சிறிதாகவே இருக்கும். இதையே வேறுவிதமாகச் சொன்னால், அப்போது அவர் குறிப்பிட்ட அளவு-100 என்போம் - மூலதனத்தைக் கொண்டு இந்த விலைகுறைந்த சரக்குகளை இன்னும் பெரிய அளவில் வாங்க முடியும்; ஒவ்வொரு 100க்கும் அவர் பெறும் மொத்த இலாபமாகிய 15 இந்தச் சரக்குத் திரளைச் சேர்ந்த தனிப்பட்ட உருப்படி அல்லது பகுதி ஒவ்வொன்றின் மீதும் சிறு சிறு பின்னங்களாகப் பிரிக்கிறது. இதற்கு மாறாக நடைபெறுமானால், நேர் எதிரானதே உண்மையாகும். இது, முழுக்க முழுக்க, அவர் விற்பனை செய்யும் பண்டங்களை ஆக்கித் தரும் தொழில் துறை மூலதனத்தின் உற்பத்தித் திறன் உயர்ந்தோ குறைந்தோ இருப்பதைப் பொறுத்ததாகும். வணிகர் ஏகபோக வணிகராகவும், அதே போது உற்பத்தியிலும் ஏகபோகம் வகிப்பவராகவும் இருக்கும் நேர்வுகளை-டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி அக்காலத்தில் இப்படித்தான் இருந்தது - விலக்கி விட்டுப் பார்ப்போமானால், சரக்குகளின் தனிப்பட்ட உருப்படி ஒவ்வொன்றின் மீதும் குறைந்த இலாபத்தில் அதிகச் சரக்குகளை விற்பதா, அதிக இலாபத்தில் குறைந்த சரக்குகளை விற்பதா என்பது வணிகரைப் பொறுத்ததென்று உலவி வரும் கருத்தைக் காட்டிலும் கேலிக்குரியது எதுவுமில்லை. அவரது விற்பனை-விலையின் இரு வரம்புகள் இவைதான்: ஒருபுறம், சரக்குகளின் உற்பத்தி-விலை, இதன் மீது அவருக்கு எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை; மறு புறம் சராசரி இலாப வீதம், இதன் மீதும் அவருக்குக் கட்டுப்பாடு இல்லை. அவரே தீர்மானிக்கக் கூடிய ஒன்றே ஒன்று, அதிக விலையுள்ள சரக்குகளை வர்த்தகம் செய்ய விரும்புகிறாரா, விலைமலிவான சரக்குகளை வர்த்தகம் செய்ய விரும்புகிறாரா என்பது மட்டுமே; இதிலும் கூட அவருக்கு கிடைக்கக் கூடிய மூலதனத்தின் அளவும் ஏனைய நிலைமைகளும் தமக்குரிய விளைவை ஏற்படுத்துகின்றன. ஆகவே அவர் எவ்வழிச் செல்ல வேண்டும் என்பது முழுக்க முதலாளித்துப்

*பொருளுற்பத்தி முறையின் வளர்ச்சிப்படித் தரத்தைப் பொறுத்ததே ஒழிய, வணிகரின் நல்லெண்ணத்தைப் பொறுத்ததன்று. உற்பத்தியிலும் ஏகபோகம் வகித்த பழைய டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியைப் போல் முற்றிலும் வர்த்தக நிறுமமாகிய ஒன்று, எப்படியும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் தொடக்க நிலைகளுக்கே பொருத்தமான ஒரு வழிமுறையை, அடியோடு மாறி விட்ட நிலைமைகளில் தொடர முடியும் என்று மனக்கோட்டை கட்டியது.*[41]

*இலாபம் தொடர்பான பொய்க் கருத்துருவங்கள் அனைத்தையும் போலவே எதுவும் கலவாத வர்த்தகத்தைக் கண்ணுறுவதிலிருந்தும் வணிகர்களின் தப்பெண்ணத்திலிருந்தும் மக்களுக்கு ஏற்படும் தப்பெண்ணத்தை நிலைநிறுத்துவதற்கு ஏனையவற்றோடு பின்வரும் நிலைமைகளும் துணைபுரிகின்றன.*

*முதலாவதாக: போட்டியின் புலப்பாடுகள்; இது மொத்த வணிக-மூலதனத்தின் பங்குதாரர்களாகிய தனிப்பட்ட வணிகர்களிடையே வணிக இலாபம் பங்கிடப்படுவதற்கு மட்டுமே பொருந்தும்; எடுத்துக்காட்டு: ஒருவர் தனி போட்டியாளர்களை களத்திலிருந்து விரட்டும் பொருட்டு மலிவாய் விற்றல்.*

*இரண்டாவதாக: பேராசிரியர் ரோஷரைப் போன்ற வல்லமை வாய்ந்த ஒரு பொருளாதார அறிஞர் இன்னமும் கூட லீப்சிக்கில் இப்படிக் கற்பனை செய்து கொள்ளலாம்; விற்பனை - விலைகளில் மாற்றம் ஏற்படச் செய்தது 'பொது அறிவின், மனிதாபிமானத்தின் பாற்பட்ட' காரணங்கள்தானாம்.★ அது புரட்சிகரமாய் மாறிப் போன பொருளுற்பத்தி முறையின் விளைவு அல்லவாம்.*

41. 'விலை என்னவானாலும் இலாபமானது, பொதுவாகப் பேசுமிடத்து மாற்றமின்றி எப்போதும் அப்படியே இருப்பதாகும்-நீரின் மேல்மட்டத்தில் மிதக்கும் பொருளானது நீர்மட்டம் உயர்ந்தாலும் தணிந்தாலும் மாற்றமின்றி மேல் மட்டத்தில் அப்படியே இருப்பதுபோல் இருப்பதாகும். விலைகள் உயர உயர வர்த்தகர் விலையை உயர்த்துகிறார்; விலைகள் குறையக் குறைய வர்த்தகர் விலையைக் குறைக்கிறார். (கார்பெட், தனியாட்களின் செல்வத்திற்கான காரணங்கள் பற்றிய ஆய்வு, லண்டன், 1841, பக்கம் 20.) இங்கேயும் பொதுவாக வாசகத்திலும் சாதாரண வர்த்தகம் குறித்துப் பேசுகிறோமே தவிர ஊக வாணிபம் குறித்தல்ல. ஊக வாணிபம் பற்றிய பகுப்பாய்வு - வணிக - மூலதனத்தில் பிரிவினை தொடர்பான ஏனைய ஒவ்வொன்றையும் போலவே - நமது ஆய்வுக்களத்திற்கு அப்பாற்பட்டதாகும். 'வர்த்தக இலாபமானது விலையைச் சாராமல் மூலதனத்திற்குச் சேர்க்கப்படும் மதிப்பாகும், மற்றது' (ஊக வாணிபம்) 'மூலதன மதிப்பில் அல்லது விலையிலேயே ஏற்படும் மாற்றத்தின் அடிப்படையிலானது' (முன் வந்தது, பக்கம் 128).

★ ரோஷர், Die Grundlagen der Nationalokonomie, 3. Auflage, 1858, பக்கம் 192.-ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

*மூன்றாவதாக:* உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதால் உற்பத்தி -விலைகள் குறைந்து அதே காரணத்தால் விற்பனை-விலைகளும் குறைந்தால், வேண்டலும், அத்தோடு சந்தை-விலைகளும் வழங்கலை விடவும் துரிதமாய் உயருவதுண்டு, இதனால் விற்பனை-விலை களிலிருந்து சராசரி இலாபத்துக்கும் மேலாகவே கிடைக்கிறது.

*நான்காவதாக:* வணிகர் இன்னும் பெரிய மூலதனத்தை இன்னும் துரிதமாய்ப் புரளச் செய்வதற்காக விற்பனை - விலையைக் குறைத்துக் கொள்ளலாம் (இது அவர் விலைக்குச் சேர்த்துக் கொள்ளும் வழக்கமான இலாபத்தைக் குறைத்துக் கொள்வதே தவிர வேறல்ல). இவையெல்லாம் வணிகர்களுக்குள்ளேயே நடைபெறும் போட்டி தொடர்பானவையே ஆகும்.

முதல் பாகத்திலேயே (*பக்கம் 811-14*) நாம் தெளிவாக்கியதுதான்: சரக்கு-விலைகள் உயர்ந்தோ தாழ்ந்தோ இருப்பது குறிப்பிட்ட மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்புத் திரளையோ அல்லது உபரி-மதிப்பு வீதத்தையோ நிர்ணயிப்பதில்லை; ஒரு சரக்கின் விலையும், இந்த விலையில் உபரி-மதிப்பின் பங்கும் பெரிதாகவோ சிறிதாகவோ இருப்பது குறிப்பிட்ட உழைப்பளவால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் ஒப்பளவைப் பொறுத்ததாகும் என்றாலும் கூட இதுவே நிலைமை, சரக்கின் குறிப்பிட்ட அளவு ஒவ்வொன்றின் விலைகளும், அவை மதிப்புகளுக்கு ஏற்ப அமைவதால், இந்தச் சரக்கில் உருக்கொண்ட மொத்த உழைப்பளவால் நிர்ணயிக்கப்படுகின்றன. அதிகமான சரக்கில் குறைவான உழைப்பே உருக்கொண்டிருந்தால் சரக்கின் அலகு-விலை தாழ்ந்திருக்கிறது, அதில் உபரி-மதிப்பு குறை வாய் உள்ளது. சரக்கில் உருக்கொண்ட இந்த உழைப்பு எப்படி ஊதிய உழைப்பாகவும் ஊதியமிலா உழைப்பாகவும் பிரிகிறது என்பதும், எனவே அதன் விலையில் எந்தப் பகுதி உபரி-மதிப்பைக் குறிக்கிறது என்பதும் உழைப்பின் இந்த மொத்த அளவுக்கோ, ஆதலால் சரக்கின் விலைக்கோ எவ்விதத் தொடர்பும் இல்லாதவை. ஆனால் உபரி-மதிப்பு வீதமானது சரக்கின் அலகு-விலையில் அடங்கியுள்ள உபரி-மதிப்பின் அறுதிப் பருமனைப் பொறுத்ததல்ல. அது அவ்வுபரி-மதிப்பின் ஒப்பீட்டுப் பருமனையே, அதே சரக்கில் அடங்கியுள்ள கூலியோடு அதற்குள்ள விகித உறவையே பொறுத்தது. ஆகவே, சரக்கின் ஒவ்வோர் அலகிலும் உபரி-மதிப்பின் அறுதிப்பருமன் சிறிதாய் இருக்கும்போதே உபரி-மதிப்பு வீதம் பெரிதாய் இருக்கலாம். சரக்கின் ஒவ்வோர் உருப்படியிலும் இடம்பெற்றுள்ள உபரி-மதிப்பின் இந்த அறுதிப்

பருமன் பிரதானமாக உழைப்பின் உற்பத்தித் திறனைப் பொறுத்தது; இரண்டாம்பட்சமாக மட்டுமே அது ஊதிய உழைப்பாகவும் ஊதியமிலா உழைப்பாகவும் பிரிவதைப் பொறுத்தது.

வர்த்தக விற்பனை-விலையைப் பொறுத்த வரை, உற்பத்தி-விலை என்பது புறத்திருந்தான குறிப்பிட்ட முன்நிபந்தனை ஆகும்.

முன்சென்ற காலங்களில் வர்த்தகச் சரக்கு-விலைகள் உயர்ந்திருந்தற்கு காரணங்கள் இவைதான்: (1) உயர்ந்த உற்பத்தி-விலைகள், அதாவது உழைப்பின் உற்பத்தித் திறனின்மை; (2) பொது இலாப வீதம் இல்லாத நிலை; இந்நிலையில் வணிக-மூலதனமானது மூலதனங்கள் இன்னுமதிகமாய் பொதுவான பெயர்ச்சித் திறன் பெற்றிருந்தால் அதன் பங்குக்குப் போய்ச் சேர்ந்திருக்கக் கூடியதைக் காட்டிலும் உபரி-மதிப்பின் இன்னும் பெரிய பங்களவை உறிஞ்சிக் கொள்ளும். ஆகவே இந்நிலையின் இரு கூறுகளுக்கும் முடிவு கட்டுவது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையினது வளர்ச்சியின் விளைவாகும்.

வணிக-மூலதனத்தின் புரள்வுகள் கால அளவில் மாறுகின்றன; ஆதலால் அவற்றின் வருடாந்திர எண்ணிக்கை வெவ்வேறு கிளைகளிலும் அதிகமாகவோ குறைவாகவோ உள்ளது. ஒரே கிளைக்குள் பொருளாதாரச் சகடத்தின் வெவ்வேறு கட்டங்களிலும் புரள்வு துரிதமாகவோ மெதுவாகவோ நடைபெறுகிறது. என்றாலும் புரள்வுகளின் சராசரி எண்ணிக்கை ஒன்றுள்ளது, இது அனுபவத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

வணிக-மூலதனத்தின் புரள்வு தொழில் துறை மூலதனத்தின் புரள்விலிருந்து வேறுபடுவதாக முன்பே பார்த்தோம். இது இயல்பானதே. தொழில் துறை மூலதனத்தின் புரள்வில் ஒரே ஒரு கட்டம் வணிக-மூலதனத்தின் (இது தனியே சுயேச்சையாய் அமைந்ததாயினும், தொழில் துறை மூலதனத்தின் பகுதியாகவே இன்னமும் இருப்பினும்) ஒரு முழுப்புரள்வாகத் தோற்றமளிக்கிறது. தவிரவும் அது இலாபத்தோடும் விலை நிர்ணயத்தோடும் கொண்டுள்ள உறவும் வேறு விதமானதாய் இருக்கிறது.

தொழில் துறை மூலதனத்தைப் பொறுத்த வரை, அதன் புரள்வானது ஒரு புறம் மறுவுற்பத்தி காலவட்ட முறையில் நடைபெறுவதைத் தெரிவிக்கிறது; ஆகவே குறிப்பிட்ட காலத்தில் சந்தையில் விடப்படும் சரக்குகளின் திரள் அதைப் பொறுத்தது. மறு புறம்

அதன் சுற்றோட்டக் காலம் ஒரு தடைமதிலை, நீட்டப்படக்கூடிய தடைமதிலை எழுப்புகிறது; மதிப்பு, உபரி-மதிப்பின் படைப்புக்கு அதிகமாகவோ குறைவாகவோ தடங்கலாய் அமைகிறது. ஏனென்றால் அது பொருளுற்பத்தி நிகழ்முறையின் பரிமாணத்தைப் பாதிக்கிறது. ஆகவே மூலதனப் புரள்வானது ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்புத் திரளையும் எனவே பொது இலாப - வீதத்தின் உருவாக்கத்தையும் நிர்ணயிக்கும் கூறுகளில் ஒன்றாகச் செயல்படுகிறது; ஆனால் அது நேர்வகைக் கூறாகச் செயல்படுவதை விடவும் வரம்பிடும் கூறாகவே செயல்படுகிறது. மாறாக, வணிக-மூலதனத்திற்கு சராசரி இலாப வீதமானது குறிப்பிட்ட பருமனாகும். வணிக-மூலதனமானது இலாபம் அல்லது உபரி-மதிப்பைப் படைப்பதில் நேரடியாகப் பங்கு பெறுவதில்லை; தொழில் துறை மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் இலாபத் திரளிலிருந்து மொத்த மூலதனத்தில் தனக்குள்ள பங்குக்கேற்ற விகிதத்தில் ஓர் ஆதாயப் பங்கீட்டை பெறுவதால்தான் அது பொது இலாப வீதத்தின் உருவாக்கத்தில் கலந்து கொள்கிறது.

இரண்டாம் பாகம், பகுதி IIஇல் விரித்த நிலைமைகளில் ஒரு தொழில் துறை மூலதனம் நிகழ்த்தும் புரள்வுகளின் எண்ணிக்கை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய் இருக்கிறதோ, அது படைக்கும் இலாபத் திரள் அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் இருக்கும். பொது இலாப வீதம் உருப்பெறுவதால், மொத்த இலாபமானது வெவ்வேறு மூலதனங்களிடையே இலாப உற்பத்தியில் உள்ளபடியே அவை வகிக்கும் பங்குக்கேற்ற விகிதத்தில் பங்கிடப்படுவதற்கு பதிலாய் மொத்த மூலதனத்தில் அவற்றுக்குள்ள ஈவுப் பங்குக்கேற்ற விகிதத்திலேயே, அதாவது அவற்றின் பருமனுக்கேற்ற விகிதத்திலேயே பங்கிடப்படுவது மெய்தான். என்றாலும் இதனால் சாராம்சத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. மொத்த தொழில் துறை மூலதனம் நிகழ்த்தும் புரள்வுகளின் எண்ணிக்கை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமோ, இலாபத் திரளும் ஆண்டு தோறும் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்புத் திரளும், எனவே ஏனைய நிலைமைகள் மாறாதிருக்க, இலாப வீதமும் அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாகும், வணிக-மூலதனத்தின் நிலைமை வேறு. அதைப் பொறுத்த வரை இலாப-வீதம் குறிப்பிட்ட பருமனாகும்; ஒரு புறம் தொழில் துறை மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் இலாபத் திரளாலும், மறு புறம் மொத்த வணிக-மூலதனத்தின் ஒப்பீட்டுப் பருமனாலும் - உற்பத்தி, சுற்றோட்ட நிகழ்முறைகளில் முன்னீடு செய்யப்படும் மூலதனத் தொகையோடு அது கொண்டுள்ள அளவுவழி விகித உறவால் -

நிர்ணயிக்கப்படுவதாகும். வணிக-மூலதனத்தின் புரள்வுகளது எண்ணிக்கை அதற்கும் மொத்த மூலதனத்திற்குமான விகித உறவை, அதாவது சுற்றோட்டத்துக்குத் தேவைப்படும் வணிக-மூலதனத்தின் ஒப்பீட்டுப் பருமனைத் தீர்மானகரமாய் பாதிக்கவே செய்கிறது. தேவைப்படும் வணிக-மூலதனத்தின் அறுதிப் பருமனும், அதன் புரள்வுகளின் வேகமும் எதிர் விகிதத்தில் இருப்பது தெளிவாய்த் தெரிந்த ஒன்றே. ஆனால் மற்றெல்லா நிலைமைகளும் மாறாதிருக்க, வணிக-மூலதனத்தின் ஒப்பீட்டுப் பருமன், அதாவது மொத்த மூலதனத்தில் அதற்குள்ள பங்கு அதன் அறுதிப் பருமனால், நிர்ணயிக்கப்படுகிறது. மொத்த மூலதனம் 10,000, வணிக-மூலதனம் அத்தொகையில் $^{1}/_{10}$ பங்கு என்றால் பின்னது 1,000 ஆகும்; மொத்த மூலதனம் 1,000 என்றால் அதில் $^{1}/_{10}$ பங்கு 100 ஆகும். வணிக-மூலதனத்தின் ஒப்பீட்டுப் பருமன் மாறாதிருந்தாலும் அதன் அறுதிப் பருமன் மொத்த மூலதனத்தின் பருமனைப் பொறுத்து மாறுகிறது. ஆனால் இங்கே அதன் ஒப்பீட்டுப் பருமனை, உதாரணமாய் மொத்த மூலதனத்தில் $^{1}/_{10}$ பங்கு என்பதை குறிப்பிட்ட ஒன்றாய்க் கொள்கிறோம். இந்த ஒப்பீட்டுப் பருமனோ புரள்வினால் நிர்ணயிக்கப்படுகிறது. அது துரிதமாய்ப் புரளுமானால், அதன் அறுதிப் பருமன் உதாரணமாய் முதல் நேர்வில் 1,000 ஆகவும், இரண்டாம் நேர்வில் 100 ஆகவும் இருக்கும்; எனவே அதன் ஒப்பீட்டுப் பருமன்= $^{1}/_{10}$. புரள்வு மெதுவாய் நடைபெறுமானால், அதன் அறுதிப் பருமன் உதாரணமாய் முதல் நேர்வில் 2,000 ஆகவும், இரண்டாம் நேர்வில் 200 ஆகவும் இருக்கும். அப்போது அதன் ஒப்பீட்டுப் பருமன் மொத்த மூலதனத்தில் $^{1}/_{10}$இலிருந்து $^{1}/_{5}$ பங்காக அதிகரித்திருக்கும். வணிக-மூலதனத்தின் சராசரிப் புரள்வைக் குறையச் செய்யும் நிலைமைகள், எடுத்துக்காட்டாகப் போக்குவரத்துச் சாதன வளர்ச்சி போன்றவை வணிக-மூலதனத்தின் அறுதிப் பருமனை அந்த அளவுக்குக் குறையச் செய்கின்றன, இவ்விதம் பொது இலாப வீதத்தை அதிகரிக்கச் செய்கின்றன. இதற்கு மாறாக நடைபெறுமானால், நேர் எதிரானதே உண்மையாகும். வளர்ச்சி பெற்ற முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது, முந்தைய நிலைமைகளோடு ஒப்பிடுமிடத்து வணிக-மூலதனத்தின் மீது இரட்டைத் தாக்கம் செலுத்துகிறது. ஒரு புறம், குறிப்பிட்ட சரக்களவானது உள்ளபடியே செயல்படும் வணிக-மூலதனத்தின் இன்னும் சிறிய திரளைக் கொண்டே புரளுமாறு செய்யப்படுகிறது; வணிக-மூலதனத்தின் புரள்வு மேலும் துரிதமாவதாலும், மறுவுற்பத்தி நிகழ்முறை மேலும் துரிதமாவதாலும்-

பின்னது துரிதமாவதைச் சார்ந்தே முன்னதும் துரிதமாகிறது - வணிக-மூலதனத்துக்கும் தொழில்துறை மூலதனத்துக்குமான விகிதம் குறைகிறது. மறுபுறம் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை வளர்ச்சி அடையும் போது உற்பத்தி அனைத்தும் சரக்கு உற்பத்தி ஆகி, உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் சுற்றோட்ட முகவர்களின் கைக்குச் செல்கின்றன. மேலும், சிறுவீதத்தில் உற்பத்தி செய்து வந்த முந்தைய பொருளுற்பத்தி முறையில் உற்பத்தியாளர்களின் மிகக் கணிசமானோர் தமது பண்டங்களை நேரடியாகவே நுகர்வாளர்களிடம் விற்று வந்தார்கள். அல்லது அவர்கள் நேரடியாகக் கொடுத்த சரக்காணைகளின் பேரில் வேலை செய்து வந்தார்கள்; உற்பத்தியாளரே நேரடியாகப் பண்ட வடிவில் நுகர்ந்த திரளான உற்பத்திப் பண்டங்களும், பண்ட வடிவில் ஆற்றப்பட்ட திரளான சேவைகளும் இதில் சேர மாட்டா. ஆக, முன் சென்ற பொருளுற்பத்தி முறைகளில் வர்த்தக-மூலதனமானது அது புரளச் செய்த சரக்கு-மூலதனத்துடன் ஒப்பிடுகையில் அதிகமாய் இருந்த அதே போது,

1. அறுதியாகக் குறைவாய் இருந்தது; ஏனென்றால் மொத்த உற்பத்தியில் மிகச் சிறு பகுதியே சரக்குகளாக உற்பத்தி செய்யப்பட்டு, சரக்கு-மூலதனமாகச் சுற்றோட்டத்தில் நுழைந்து வணிகர்களின் கைக்குச் சென்றது. சரக்கு-மூலதனம் குறைவாய் இருந்ததால் வர்த்தக-மூலதனமும் குறைவாய் இருந்தது. ஆனால் அதேபோது அது விகிதப்படி அதிகமாய் இருந்தது; இதற்கு அதன் புரள்வு மெதுவாய் நடைபெற்றது மட்டுமல்ல காரணம். அதனால் புரளச் செய்யப்பட்ட சரக்குத் திரளுடன் ஒப்பிடுகையில் மட்டும் மேலும் இந்தச் சரக்குத் திரளின் விலையும், ஆகவே அது அதிகமாய் இருந்தது என்பதல்ல. அதற்காக முன்னீடு செய்தாக வேண்டிய வணிக-மூலதனமும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் இருப்பதைக் காட்டிலும் அதிகமாய் இருந்தது. உழைப்பின் உற்பத்தித்திறன் இப்போது இருப்பதைவிட முன்பு குறைவாய் இருந்ததால், அதே அளவு மதிப்பானது முன்பு குறைந்த அளவிலான சரக்குகளில் அடக்கப்பட்டு வந்தது.

2. முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையில் முன்னைக் காட்டிலும் பெருந்திரளான சரக்குகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. (இந்தச் சரக்குத் திரளின் மதிப்பு குறைந்து போவதையும் கணக்கில் எடுத்துக் கொண்டாக வேண்டும்); அது மட்டுமல்ல, குறிப்பிட்ட அளவிலான உற்பத்திப் பண்டத் திரள் (எடுத்துக்காட்டாக தானியத் திரள்) இன்னும் பெரிய சரக்குத்

திரளாகவும் அமைகிறது. அதாவது அதில் மேன்மேலும் அதிகமான பகுதி வர்த்தகப் பொருளாகிறது. இதன் விளைவாக வணிக-மூலதனத்தின் திரள் அதிகரிப்பதோடு, கற்றோட்டத்தில், எடுத்துக்காட்டாக வாணிபக் கப்பல் போக்குவரத்து, இரயில் போக்குவரத்து, தந்தி போன்றவற்றில் பிரயோகிக்கப்படும் மூலதனம் அனைத்தின் திரளும் அதிகரிக்கிறது.

3. ஆயினும் - 'மூலதனங்களிடையிலான போட்டி' தொடர்பான பரிசிலனைக்குரிய அம்சம் இது - முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை முன்னேறிச் செல்லும் போது வேலையற்ற அல்லது அரைகுறையாக மட்டுமே செயல்படுகிற வணிக - மூலதனம் வளர்கிறது; சில்லறை வர்த்தகத்தில் ஈடுபடுவது எளிதாவதும், ஊக வாணிபமும், விடுவிக்கப்பட்ட மூலதனம் தேவைக்கதிகமாய் இருப்பதுமே காரணம்.

ஆனால் மொத்த மூலதனத்துக்கான வணிக-மூலதனத்தின் ஒப்பீட்டுப் பருமன் குறிப்பிட்டதெனக் கொள்வோமானால், பல்வேறு வர்த்தகக் கிளைகளிலும் புரள்வுகள் வேறுபடுவது வணிக-மூலதனத்தின் பங்குக்குக் கிடைக்கும் மொத்த இலாபத்தின் பருமனையோ, பொது இலாப வீதத்தையோ பாதிப்பதில்லை. வணிகரின் இலாபமானது அவரால் புரளச் செய்யப்படும் சரக்கு - மூலதனத் திரளினால் நிர்ணயிக்கப்படுவதில்லை; அது இப்புரள்வினை நிகழச் செய்வதற்கு அவரால் முன்னீடு செய்யப்படும் பண-மூலதனத்தின் பரிமாணங்களால்தான் நிர்ணயிக்கப்படுகிறது. வருடாந்தரப் பொது இலாப வீதம் 15%ஆக இருந்து, வணிகர் £100 முன்னீடு செய்து, அதனை ஆண்டுக்கு ஒரு முறை புரளச் செய்வாரானால் தமது சரக்குகளை 115க்கு விற்பார். அவரது மூலதனம் ஆண்டுக்கு ஐந்து முறை புரளுமானால், அவர் 100க்கு வாங்கிய சரக்கு-மூலதனத்தை 103க்கு ஓராண்டில் ஐந்து முறை விற்பார். அதாவது ஓராண்டில் 500 பெறுமானமுள்ள சரக்கு-மூலதனத்தை 515க்கு விற்பார். இதன்படி அவரது மூலதன முன்னீடாகிய 100 மீது அதே வருடாந்தர இலாபமாகிய 15 கிடைக்கிறது. இல்லையென்றால் வணிக-மூலதனம், அதன் புரள்வுகளின் எண்ணிக்கைக்கேற்ப, தொழில் துறை மூலதனத்தைக் காட்டிலும் மிக உயர்ந்த இலாபம் தரும்; இது பொது இலாப வீதம் பற்றிய விதியோடு முரண்படுவதாய் இருக்கும்.

ஆகவே, பல்வேறு வர்த்தகக் கிளைகளிலும் வணிக-மூலதனத்தின் புரள்வு எண்ணிக்கையானது சரக்குகளின் வணிக-விலைகள்

மீது நேரடித் தாக்கம் செலுத்துகிறது. வணிக-விலையோடு சேர்க்கப்படுகிற தொகையானது, அதாவது வணிக இலாபத்தில் குறிப்பிட்ட ஒரு மூலதனத்துக்கு உரியதாகும் ஈவுப்பகுதியானது சரக்கின் உற்பத்தி - விலை ஏற்றாக வேண்டியது இது - புரள்வுகளின் எண்ணிக்கைக்கு அல்லது வெவ்வேறு வர்த்தகக் கிளைகளையும் சேர்ந்த வணிக-மூலதனங்களின் புரள்வு வேகத்துக்கு எதிர் விகிதத்தில் இருப்பதாகும். குறிப்பிட்ட வணிக-மூலதனம் ஆண்டுக்கு ஐந்து முறை புரளுமானால், அது அதற்குச் சமமான மதிப்புடைய சரக்கு-மூலதனத்தோடு சேர்ப்பது, ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே புரளும் இன்னொரு வணிக-மூலதனம் அதற்குச் சமமான மதிப்புடைய சரக்கு-மூலதனத்தோடு சேர்ப்பதில் $^{1}/_{5}$ பங்கே ஆகும்.

வெவ்வேறு வர்த்தகக் கிளைகளிலும் மூலதனங்களின் சராசரி புரள்வுக் காலத்தால் விற்பனை - விலைகள் திருத்தியமைக்கப்படுவதன் பொருள் இதுதான்: வணிக-மூலதனத்தின் எந்தக் குறிப்பிட்டப் பருமனுக்கும் வருடாந்தரப் பொது இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்படுகிற, எனவே இந்த மூலதனத்தின் வர்த்தக நடவடிக்கைகளின் பிரத்தியேகத் தன்மை கருதாமல் நிர்ணயிக்கப்படுகிற அதே இலாபத் திரள் சமமதிப்புள்ள சரக்குத் திரள்கள் மீது - புரள்வு வீதத்துக்கேற்ற விகிதத்தில் - வெவ்வேறு விதமாய் வினியோகப் பங்கீடு செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு வணிக-மூலதனம் ஆண்டுக்கு ஐந்து முறை புரளுமானால் சரக்குகளின் விலையோடு 15% /5 = 3% சேர்க்கப்படுகிறது, ஆண்டுக்கு ஒரு முறை புரளுமானால் 15% சேர்க்கப்படுகிறது.

ஆகவே, வெவ்வேறு வர்த்தகக் கிளைகளில் வர்த்தக இலாபத்தின் அதே சதவீதம் சரக்குகளின் விற்பனை - விலைகளை அவற்றின் மதிப்புகளில் முற்றிலும் வெவ்வேறான சதவீதங்களுக்கு அதிகரிக்கச் செய்கிறது. எல்லாமே அவற்றின் புரள்வுக் காலங்களைப் பொறுத்தது.

இதற்கு மாறாக, தொழில் துறை மூலதனத்தைப் பொறுத்தவரை புரள்வுக் காலமானது உற்பத்தி செய்யப்படும் தனிப்பட்ட சரக்குகளின் மதிப்புப் பருமனை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை! (ஆயினும் சுரண்டப்படும் உழைப்புத் திரளைப் புரள்வுக் காலம் பாதிப்பதால் அது குறிப்பிட்ட மூலதனம் குறிப்பிட்ட காலத்துள் செய்யும் மதிப்புகள், உபரி-மதிப்புகள் இவற்றின் திரளைப் பாதிக்கவே செய்கிறது. உற்பத்தி-விலைகளைக் கவனிக்கையில் இது மறைக்கப்பட்டு, புரள்வுக்காலம் தனிப்பட்ட சரக்குகளின் மதிப்புப் பருமனை

பாதிப்பதுபோல் தோன்றுகிறது. ஆனால் இதற்கு ஒரே காரணமாய் இருப்பது, ஏற்கெனவே பகுத்தாய்ந்த விதிகளின் படி, பல்வேறு சரக்குகளின் உற்பத்தி-விலைகளும் அவற்றின் மதிப்புகளிலிருந்து விலகிச் செல்வதே. உற்பத்தி நிகழ்முறையை அதன் முழு உருவில் பார்த்து, மொத்தத் தொழில்துறை மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் திரளை நோக்குவோமானால், உடனே பொது விதி மெய்ப்பிக்கப்படக் காண்போம்.

ஆகவே தொழில்துறை மூலதனத்தால் மதிப்புகள் உருவாக்கப் படுவதன் மீது புரள்வுக் காலம் செலுத்தும் தாக்கத்தை நெருக்கமாய்ப் பரிசீலித்தால், சரக்குகளின் மதிப்பு அவற்றிலடங்கிய உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது என்னும் பொது விதியிடமே - அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படையாகிய இதனிடமே - திரும்பி வந்து சேருகிறோம்; அதே போது வணிக விலைகள் மீது வணிக-மூலதனத்தின் புரள்வுகள் செலுத்தும் தாக்கம் வெளிப்படுத்துகிற புலப்பாடுகளை நோக்கும்போது - இணைத்திடும் பிணைப்புகளை ஆழ்ந்த முறையில் ஆராய்ந்து அறிந்தாலன்றி - விலைகள் யாவும் விதிமுறைக்குக் கட்டுப்படாமல் மனம்போன படி நிர்ணயமாவதாக, அதாவது ஒவ்வோர் ஆண்டிலும் குறிப்பிட்ட அளவு இலாபமடிப்பதில் குறியாய் இருக்கும் மூலதனத்தால் தீர்மானிக் கப்படுவதாகத் தோன்றுகிறது. முக்கியமாய்ப் புரள்வுகளின் இந்தத் தாக்கத்தினால்தான், குறிப்பிட்ட சில வரம்புகளுக்குள் உற்பத்தி நிகழ்முறையைச் சாராமல் சுற்றோட்ட நிகழ்முறை அதுவாகவே சரக்கு-விலைகளை நிர்ணயிப்பதாகத் தோன்றுகிறது. முழு உருவிலான மறுவுற்பத்தி நிகழ்முறை பற்றிய மேம்போக்கான, பொய்யான கருத்தமைவுகள் எல்லாம் வணிக-மூலதனம் தொடர்பான பரிசீலனைகளிலிருந்தும், அதன் தனிவிசேஷமான சுழலியக்கங்கள் சுற்றோட்டச் செயலிகளின் உள்ளத்தில் தோற்றுவிக்கும் கருத்தமைவுகளிலிருந்துமே பெறப்படுகிறவை ஆகும்.

வாசகர் ஏற்கெனவே இதனை உணர்ந்து கலக்கமுற்றே இருப்பார்: முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையில் உள்ளபடியே உள்ளார்ந்திருக்கும் உறவுகளைப் பகுத்தாராய்வது மிகவும் சிக்கலானதும் மிகவும் விரிவானதும் ஆகும். கண்ணுக்கும் தெரிகிற இயக்கத்தை, புற இயக்கமாக மட்டும் இருப்பதை உண்மையான உள்ளார்ந்த இயக்கமாகப் பெயர்ப்பது விஞ்ஞானத்தின் வேலையாகும்; இந்நிலையில் பொருளுற்பத்தியின் விதிகளைப் பற்றி முதலாளித்துவப் பொருளுற்பத்தி, சுற்றோட்டம் இவற்றின்

செயலிகளது உள்ளத்தில் எழுந்திடும் கருத்தமைவுகள் இந்த உண்மை விதிகளிலிருந்து கடுமையாய் விலகிச் செல்லும் என்பதும், கண்ணுக்குத் தெரிகிற இய்க்கங்களின் உணர்வுவழித் தெரிவிப்பாகத்தான் அவை இருக்கும் என்பதும் சொல்லாமே விளங்கும். வணிகர், பங்குத் தரகர், வங்கியாளர் ஆகியோரின் கருத்தமைவுகள் திரிபுற்றவையாகவே இருந்தாக வேண்டும். உற்பத்தியாளர்களின் கருத்தமைவுகள் அவர்களது மூலதனத்தை ஆளும் சுற்றோட்டச் செயல்களாலும், பொது இலாப வீதத்தின் சமனமாக்கத்தாலும் கேடுறுகின்றன.[42] இதே போலத்தான் போட்டி வகிக்கிற பங்கும் அவர்களது உள்ளத்தில் அறவே திரிபுற்று விடுகிறது. மதிப்பு, உபரி-மதிப்பின் வரம்புகள் குறிப்பிட்டவையாக இருந்தால் எப்படி மூலதனங்களின் போட்டியானது மதிப்புகளை உற்பத்தி-விலைகளாகவும், மேற்கொண்டு வணிக-விலைகளாகவும், உபரி-மதிப்பை சராசரி இலாபமாகவும் உருமாறச் செய்கிறது என்பதைப் புரிந்து கொள்வது எளிது. ஆனால் இப்படி வரம்புகள் எவையும் இல்லையெனில், போட்டியானது பொது இலாப வீதத்தை ஏன் குறிப்பிட்ட ஒரு நிலைக்கு சரிமட்டமாய் சமனமாக்க வேண்டும், உதாரணமாய் 1500% ஆக்குவதற்கு பதில் 15% ஆக்க வேண்டும் என்பது புரியாப் புதிராகி விடுகிறது. உயர்ந்த பட்சமாகப் பார்த்தால், போட்டியானது பொது இலாப வீதத்தை ஏதேனுமொரு சரிமட்ட நிலைக்கு சமனமாக்க முடியுமே தவிர, எந்தச் சரிமட்ட நிலை என்பதை நிர்ணயிப்பதற்கு வேண்டியது எதுவும் அதனிடம் இல்லை.

'ஆக, வணிக-மூலதனத்தின் கோணத்திலிருந்து பார்த்தால், புரள்வுதான் விலைகளை நிர்ணயிப்பதாகத் தோன்றுகிறது. மறு புறம், தொழில் துறை மூலதனத்தின் புரள்வு வீதமானது குறிப்பிட்ட மூலதனம் குறிப்பிட்ட அளவு உழைப்பைச் சுரண்டுவதைச் சாத்தியமாக்குவதால், இலாபத் திரள் மீதும், இவ்விதம் பொது இலாப வீதத்தின் மீதும் அது செலுத்தும் தாக்கம் அவற்றை நிர்ணயிப்பதும் அவற்றுக்கு வரம்பிடுவதும் ஆகும்; அதே போது இந்த இலாப வீதம் வணிக-மூலதனத்திற்கு ஒரு புற நிலைமையாக நிலவுகிறது; உபரி-மதிப்பின் உற்பத்தியோடு அதற்குள்ள அகத் தொடர்பு அடியோடு

42 மிகவும் வெகுளியானதென்றாலும் மிகவும் சரியானதாகும் இந்தக் குறிப்பு: 'ஒரே சரக்கு வெவ்வேறு விற்பனையாளர்களிடமிருந்து கணிசமாய் வேறுபடும் விலைகளில் வாங்கக்கூடியதாய் இருப்பதற்கு அநேக சந்தர்ப்பங்களில் கணக்கீட்டிலான தவறுகளே காரணம் என்பது உறுதி.' (∴பெல்லர், ஒடர்மன், Das Ganze der kaufmännischen Arithmetik, 7ஆம் பதிப்பு, 1859, [பக்கம் 451.]) விலைகளின் நிர்ணயம் எப்படி முற்றிலும் தத்துவார்த்தமானதாகி, அதாவது சூக்குமமானதாகி விடுகிறது என்பதையே இது காட்டும்.

அழிந்து போகிறது. மற்றபடி சம நிலைமைகளிலும், முக்கியமாய் ஒரே அங்கக இயைபிலும், ஒரு தொழில் துறை மூலதனம் ஓராண்டில் இரு முறைக்கு பதில் நான்கு முறை புரளுமானால், அது இரு மடங்கு உபரி - மதிப்பையும், எனவே இலாபத்தையும் உற்பத்தி செய்யும். புரள்வு வேக அதிகரிப்பைச் சாத்தியமாக்கும் மேம்பட்ட உற்பத்தி வழிமுறை இந்த மூலதனத்துக்குரிய ஏகபோகம் ஆகியதும் இது தெளிவாகிறது. இந்த ஏகபோகம் நீடிக்கும் வரை இந்நிலையும் நீடிக்கிறது. வெவ்வேறு வர்த்தகக் கிளைகளில் புரள்வுக் காலங்களிலான வேறுபாடுகள், குறிப்பிட்ட சரக்கு-மூலதனத்தின் புரள்வில் பெறப்படும் இலாபம் இந்தச் சரக்கு-மூலதனத்தை பண-மூலதனம் எத்தனை தடவை புரளச் செய்கிறது என்பதற்கு எதிர் விகிதமுடையதாய் இருப்பதில் வெளிப்படுகின்றன. சிறிது சிறிதான இலாபம் வேகம் வேகமான வரவு-இதையே கடைக்காரர் தமது கொள்கையாகவும் கோட்பாடாகவும் கொண்டு, உறுதியாய்க் கடைப்பிடிப்பதாக நினைக்கிறார்.

மற்றபடி, விரைவான புரள்வுகளும் மெதுவான புரள்வுகளும் மாறி மாறி நடைபெற்று ஒன்றை ஒன்று சரிக்கட்டிக் கொண்ட போதிலும், இந்த வணிக-மூலதனப் புரள்வு விதியானது தனிப்பட்ட ஒவ்வொரு வர்த்தகக் கிளையிலும் முதலீடாகிற வணிக-மூலதனம் அனைத்தும் நிகழ்த்தும் சராசரிப் புரள்வுகளுக்கு மட்டுமே அந்தந்தக் கிளையிலும் பொருந்தும் என்பது கூறாமலே விளங்கும். வணிகர் B செயல்படும் அதே கிளையில்தான் A உம் செயல்படுகிறார். Aஇன் மூலதனம் சராசரி எண்ணிக்கையைக் காட்டிலும் சற்றே அதிகமான அல்லது சற்றே குறைவான புரள்வுகளை நிகழ்த்துவதாகக் கொள்வோம். அப்போது ஏனைய வணிகர்களின் மூலதனங்கள் சராசரியைக் காட்டிலும் சற்றே அதிகமான புரள்வுகளை நிகழ்த்த வேண்டும். இது இந்த வர்த்தகக் கிளையில் முதலீடாகியுள்ள வணிக - மூலதனத்தினது மொத்தத் திரளின் புரள்வை மாற்றி விடாது. ஆனால் இது தனிப்பட்ட வணிகர் அல்லது கடைக்காரருக்குத் தீர்மானகர முக்கியத்துவமுடையதாகும். இந்நிலையில் அவர் கூடுதல் இலாபம் சம்பாதிக்கிறார்; எப்படி தொழில் துறை முதலாளிகள் சராசரிக்கு மேலான நிலைமைகளில் உற்பத்தி செய்தால் கூடுதல் இலாபம் சம்பாதிக்கிறார்களோ, அதேபோலத்தான் இதுவும். போட்டியானது வணிகரை நிர்பந்திக்குமானால், அவர் தமது இலாபத்தை சராசரிக்குக் கீழே குறைத்துக் கொள்வதன் மூலம் தமது போட்டியாளர்களைக் காட்டிலும் மலிவாய் விற்கலாம். அவர்

தமது மூலதனத்தை வேகமாகப் புரளச் செய்ய முடிவதற்குக் காரணமான சாதக நிலைமையே - எடுத்துக்காட்டாக கடை அமைந்திருக்கும் இடம் அப்படிச் சிறப்பானதாய் இருக்கலாம் - விற்பனைக்கு உரியதாகிறதெனக் கொண்டால், அதற்கு அவர் கூடுதல் வாடகை தரமுடியும் - அதாவது அவரது உபரி-இலாபத்தில் ஒரு பகுதியை நிலவாடகையாக மாற்ற முடியும்.

## அத்தியாயம் XIX

## தனவணிக-மூலதனம்

தொழில்துறை மூலதனத்தின் சுற்றோட்டத்தின்போது - தொழில்துறை மூலதனம் மட்டுமல்லாமல் இப்போது நாம் அதோடு வர்த்தக-மூலதனத்தையும் சேர்த்து இரண்டின் சுற்றோட்டத்தின்போது என்றே சொல்லலாம் (ஏனெனில். தொழில் துறை மூலதனத்தின் சுற்றோட்ட இயக்கத்தில் ஒரு பகுதியை வர்த்தக-மூலதனம் தானே ஏற்று தனது தனிவகை இயக்கமாக்கிக் கொள்கிறது) - பணம் புரிந்திடும் முழுக்க முழுக்க செய்நுட்பவகைப் பட்ட செயற்பாடுகள் எல்லாம் இவற்றை மட்டும் தனது பிரத்தியேகச் செயற்பாடுகளாய் கொண்ட குறிப்பிட்ட ஒருவகை மூலதனத்தின் பணியாகத் தனித்த ஒன்றென வகைப்படுத்தப் படுகையில் இம்மூலதனம் தனவணிக - மூல தனமாக (money-dealing capital) மாற்றம் பெறுகிறது. தொழில் துறை மூலதனத்தில், துல்லியமாகச் சொன்னால் வர்த்தக-மூலதனத்திலும் ஒரு பகுதி எந்நேரமும் பணவடிவில், பொதுவாய்ப் பண-மூலதனமாக இருந்து வருவதோடு, இந்த செய்நுட்ப பணிகளிலேயே ஈடுபட்டுள்ள பண-மூலதனமாகவும் இருந்து வருகிறது. மொத்த மூலதனத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதி மீதப் பகுதியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு, பண-மூலதன வடிவில் தனித்து நிற்கிறது; இம்மூலதனப் பகுதியின் முதலாளித்துவப் பணி தொழில்துறையினரும் வர்த்தகத்துறையினருமான முதலாளிகளின் வர்க்கம் அனைத்துக்கும் இந்தக் காரியங்களைச் செய்து கொடுப்பது மட்டுமே. வர்த்தக-மூலதனம் தொடர்பாக நிகழ்வது போலவே, பண-மூலதன வடிவில் சுற்றோட்ட நிகழ்முறையில் ஈடுபட்டுள்ள தொழில்துறை மூலதனத்திலும் ஒரு பகுதி மீதப்பகுதியிலிருந்து பிரிந்து, மறுவுற்பத்தி நிகழ்முறையின் இந்தக் காரியங்களை ஏனைய மூலதனம் அனைத்துக்கும் செய்து கொடுக்கிறது. ஆகவே இந்தப் பண-மூலதனத்தின் இயக்கங்களும் மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஈடுபட்டுள்ள தொழில்துறை மூலதனத்தில் தனிப்படுத்தப்பட்ட ஒரு பகுதியின் இயக்கங்களே தவிர வேறல்ல.

மூலதனம் புதிதாய் முதலீடாகும்போதுதான், புதிதாய் முதலீடாவதால்தான் - இது மூலதனத் திரட்டலுக்கும் பொருந்தும் - பண-வடிவிலான மூலதனம் இயக்கத்தின் தொடக்க முனையாகவும் இறுதி விளைவாகவும் விளங்குகிறது. ஆனால் ஏற்கெனவே நிகழ்முறையில் ஈடுபட்டுள்ள எல்லா மூலதனங்களுக்கும் இந்த முதல் முனையும் கடைசி முனையும் வழியிடை முனைகளாகவே விளங்குகின்றன. சாமனிய சரக்குச் சுற்றோட்டம் தொடர்பாக முன்பே பார்த்தது போல, உற்பத்தித் துறையை விட்டு புறப்பட்ட கணத்திலிருந்து திரும்பவும் அத்துறைக்குள் நுழைகிற கணம் வரை தொழில்துறை மூலதனம் C'—M—C எனும் உருமாற்றத்திற்கு உள்ளாவதால், Mஆனது உண்மையில் இவ்வுருமாற்றத்தில் ஒரு கட்டத்தின் இறுதி விளைவை குறிக்கும் போதே, அக்கட்டத்தை நிறைவு செய்திடும் நேரெதிர்க் கட்டத்தின் தொடக்க முனையும் ஆகிறது. தொழில் துறை மூலதனத்தின் C—Mஆனது எப்போதுமே வணிக-மூலதனத்துக்கு M—C—Mஆகும் என்றாலும், வணிக-மூலதனம் செயல்பட தொடங்குவதிலிருந்து உள்ளபடியே அதற்கான நிகழ்முறை ஓயாமல், C—M—C ஆகவும் இருக்கிறது. ஆனால் அது C—M, M—C ஆகிய செயல்களை ஒருங்கே செய்திடுகிறது. இதன் பொருள் ஒரு மூலதனம் மட்டும் C—M கட்டத்தில் இருக்க, இன்னொரு மூலதனம் M—C கட்டத்தில் இருக்கிறது என்பதல்ல; உற்பத்தி நிகழ்முறையின் தொடர்ச்சி காரணமாய் ஒரே மூலதனம் ஒரே சமயத்தில் ஓயாமல் வாங்கவும் ஓயாமல் விற்கவும் செய்கிறது என்பதே ஆகும். எப்போதுமே அது ஒரே சமயத்தில் இரு கட்டங்களிலும் இருக்கக் காணலாம். அதன் ஒரு பகுதியானது பணமாக மாறி, பிறகு திரும்பவும் சரக்குகளாக மாற்றப்படும் போதே, இன்னொரு பகுதியானது சரக்குகளாக மாறி, பிறகு திரும்பவும் பணமாக மாற்றப்படுகிறது.

பணம் இங்கே சுற்றோட்டச் சாதனமாகப் பயன்படுகிறதா, கொடுப்புச் சாதனமாகப் பயன்படுகிறதா என்பதெல்லாம் சரக்குப் பரிவர்த்தனையின் வடிவத்தைப் பொறுத்தது. இரு நிலைகளிலுமே முதலாளி ஓயாமல் பலருக்கு பணம் கொடுக்கவும், ஓயாமல் பலரிடமிருந்து பணம் பெறவும் வேண்டியுள்ளது. பணத்தைக் கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுக்க வேண்டும், பெற வேண்டியவர்களிடமிருந்து பெற வேண்டும். முழுக்க முழுக்க செய்நுட்ப வகைப்பட்டதான இந்தச் செயற்பாடும் உழைப்பே ஆகும். பணம் கொடுப்புச் சாதனமாகப் பயன்பட்டு வரும் வரை,

கொடுப்பு நிலுவைகளைக் கணக்கிடுவதும் பற்று வரவுக் கணக்குகள் எழுதி வருவதும் அவசியமாகும். இந்த உழைப்பு சுற்றோட்டச் செலவு ஆகும், அதாவது மதிப்பைப் படைக்கும் உழைப்பு ஆகாது. முகவர்கள் அல்லது முதலாளிகளின் தனிப்பிரிவினரால் முதலாளி வர்க்கத்தின் மீதப் பகுதியினருக்காக செய்து தரப்படுவதன் மூலம் இவ்வுழைப்பு சுருக்கப்படுகிறது.

மூலதனத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதியானது சேர்ப்பாக, உள்ளுறைப் பண-மூலதனமாக - வாங்குஞ் சாதனத்தின் சேம வைப்பாகவும் கொடுப்புச் சாதனத்தின் சேம வைப்பாகவும், வேலை வாங்கப்படுவதற்குக் காத்திருக்கும் பண வடிவிலான வேலையில்லா மூலதனமாகவும் - எப்போதும் தயராய் இருந்து வர வேண்டும். இன்னொரு பகுதி இதே வடிவில் ஓடி வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. வசூலித்தல், செலுத்துதல், கணக்குப் பதிவு செய்தல் இவற்றை அன்னியில், பணச் சேர்ப்பு பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டாக வேண்டும்; இது ஒன்றே தனியொரு காரியமாகி விடுகிறது. ஓயாமல் சேர்ப்பினை சுற்றோட்டச் சாதனமாகவும் கொடுப்புச் சாதனமாகவும் மாற்றுவதோடு, விற்பனையிலிருந்தும் வரவேண்டிய கொடுப்பு களிலிருந்தும் பெறப்படும் பணத்தைக் கொண்டு சேர்ப்பை மீட்டமைக்கவும் வேண்டும். மூலதனப் பணியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்ட பணமாக இருந்து வரும் மூலதனப் பகுதி மூலதனத்துக்கேயுரிய பணியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு நிகழ்த்தும் இந்த ஓயாத இயக்கம், முற்றிலும் செய்நுட்பத் தன்மையுள்ள இந்தப்பணி தனக்கென்றே உழைப்புக்கும் செலவுக்கும் வழிசெய்கிறது; இந்த உழைப்பும் செலவும் சுற்றோட்டச் செலவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

மூலதனப் பணிகளைச் சார்ந்துள்ள இந்தச் செய்நுட்பக் காரியங்களை முதலாளி வர்க்கம் அனைத்துக்காகவும் கூடுமான வரை முகவர்கள் அல்லது முதலாளிகளின் தனிப் பிரிவினர் அவர்களின் பிரத்தியேகப் பணியாகச் செய்து கொடுப்பது - அதாவது இந்தக் காரியங்கள் அவர்களின் கையில் குவிக்கப்படுவது - உழைப்புப் பிரிவினையால் ஏற்படும் நிலைமை ஆகும். வணிக-மூலதனத்தில் போலவே இங்கேயும் உழைப்புப் பிரிவினை என்பது இரட்டை அர்த்தத்தில் ஆகும். அது தனிச்தேர்ச்சி தேவைப்படும் அலுவலாகி விடுகிறது. ஒரு முழு வர்க்கத்துக்குச் செயல்படும் பணச் செய் நுட்ப அமைப்புக்கு வேண்டிய

தனித் தேர்ச்சி வாய்ந்த அலுவலாக இருப்பதால் செறிவும் குவிவும் பெற்று பெருவீத அளவில் நடைபெறுகிறது. இப்பணிக்குள் மேலும் உழைப்புப் பிரிவினை ஏற்படுகிறது. சுயேச்சையான பல்வேறு கிளைகளாகப் பிரிவதன் மூலமும், இந்தக் கிளைகளுக்குள் வேலை கூறு போடப்படுவதன் மூலமும் இது நடைபெறுகிறது (பெரும் பெரும் அலுவலகங்கள், ஏராளமான கணக்குப் பதிவாளர்களும் காசாளர்களும், விரிவான உழைப்புப் பிரிவினை). பணம் கொடுத்தல் - பெறுதல், கணக்கு முடித்தல், நடப்புக் கணக்குள் வைத்துக் கொள்ளுதல், பணத்தை சேம இருப்பில் வைத்தல் முதலானவை - இதெல்லாம் இந்த செய்நுட்பக் காரியங்கள் எல்லாம் அவற்றை அவசியமாக்கிடும் செயல்களிலிருந்து விலகி நிற்கும் போது, இந்தப் பணிகளுக்காக முன்னீடு செய்யப்படும் மூலதனம் தனவணிக-மூலதனம் ஆகிறது.

இந்தப் பல்வேறு காரியங்களும் பிரத்தியேகத் தொழில்களாகத் தனித்தவொன்றென வகைப்படுத்தப்படுவது தனவணிகத்தைத் தோற்றுவிக்கிறது; இக்காரியங்கள் பணத்திற்குரிய வெவ்வேறு நோக்கங்களிலிருந்தும் அதன் பணிகளிலிருந்தும் உதித்தெழுகிறவை. ஆகவே, மூலதனம் பணவடிவில் இருக்கும் போதும் பணத்தின் இந்தப் பணிகளை நிறைவேற்றியாக வேண்டும்.

நிதியானது ஆரம்பத்தில் வெவ்வேறு சமுதாயங்களிடையே உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனை ஆவதிலிருந்து வளர்ந்ததாக முன்பே சுட்டிக் காட்டினோம்.[43]

ஆகவே பண வர்த்தகம், அதாவது பணச் சரக்கிலான வர்த்தகம், முதலில் நாடுகளிடையிலான வர்த்தகத்திலிருந்தே வளர்ந்தது. வெவ்வேறு நாட்டு நாணயங்கள் நிலவத் தொடங்கியதிலிருந்தே அயல்நாடுகளில் சரக்கு வாங்கும் வணிகர்கள் தம் நாட்டு நாணயங்களை உள்ளூர் நாணயங்களுக்கும், உள்ளூர் நாணயங்களை தம் நாட்டு நாணயங்களுக்கும் பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டியிருந்தது, அல்லது வெவ்வேறு நாணயங்களை நாணயமாக்கப்படாத தூய வெள்ளி அல்லது தங்கத்துக்கு - அதாவது உலகப் பணத்துக்கு பரிவர்த்தனை செய்து கொள்ள வேண்டியிருந்தது. நாணய மாற்று அலுவல்துறை (exchange business) இவ்வாறுதான் தலைதூக்கியது. நவீன நிதித்துறையின் இயற்கையான அடித்தளங்களில் ஒன்றாகக் கருத

43 அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு, பக்கம் 27.

வேண்டியதாகும் நாணய மாற்று அலுவல் துறை.[44] இதிலிருந்தே நாணய மாற்று வங்கிகள் வளர்ந்தன; இவற்றில் வெள்ளி (அல்லது தங்கம்) உலகப் பணமாகப் பயன்படுகிறது. இது இப்போது வங்கிப் பணம் அல்லது வர்த்தகப் பணம் என்று அழைக்கப்படுகிறது; இது செலாவணியிலிருந்து வேறானது. வெளி நாட்டிலிருந்து வரும் பயணர் அந்நாட்டு நாணய-மாற்றாளரிடமிருந்து (Money-changer) இந்நாட்டு நாணயமாற்றாளருக்குக் கொடுப்புக் குறிப்பினை மட்டும் பெற்று வந்து தமது வெளிநாட்டு நாணயங்களை மாற்றிக் கொள்ளும் ஏற்பாடு காலத்தில் ரோமாபுரியிலும் கிரேக்கத்திலும் அவற்றுக்கிடையிலான நாணய-மாற்று அலுவல்களிலிருந்து வளரலாயிற்று.

தங்கம், வெள்ளியை சரக்குகளாக (சொகுசுப் பண்டங்கள் தயாரிப்பதற்கான கச்சாப் பொருட்களாக) வர்த்தகம் செய்வது பொன்-வெள்ளிப் பாள வர்த்தகத்துக்கு (bullion trade), அதாவது சர்வப்

---

44 காசு வெளியிட உரிமை பெற்ற கோமகன்களுடையவும் நகரங்களுடையவும் நாணயங்களானவை வகையிலும் தங்க, வெள்ளி உள்ளடக்கத்திலும் வெகுவாய் வேறுபட்டன. இதனால் வெவ்வேறு நாணயங்களையும் ஈடுகட்டும் பொருட்டு வணிகர்கள் உள்ளூர் நாணயங்களைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட போது, இதற்கு வழிசெய்வதற்கென நாணயமாற்று நிலையங்களை நிறுவுவது அவசியமாயிற்று. அயல் நாட்டுச் சந்தைக்குச் சென்ற வணிகர்கள் அங்கே தாம் காசாகக் கொடுக்க வேண்டிய தொகைகளைக் கொடுப்பதற்கு வசதியாகப் பொன் அல்லது வெள்ளியை உலோகமாகவே எடுத்துச் சென்றனர். இதே போல் இந்த அயல்நாட்டுச் சந்தைகளில் தாம் பெற்றுக் கொண்ட நாணயங்களையும் தாய் நாடு திரும்புகையில் பொன் அல்லது வெள்ளி உலோகமாய் மாற்றிக் கொண்டு திரும்பினர். பணத்தைப் பரிவர்த்தனை செய்யும் தொழில் நாணயமாக்கப்படாத உயர்நிலை உலோகங்களை உள்ளூர் நாணயங்களுக்கும், பின்னவற்றை முன்னவற்றுக்கும் பரிவர்த்தனை செய்து கொள்வது இவ்விதம் பரவலான, ஆதாயமான தொழிலாயிற்று.' (ஹல்மன், பாலி, 1826-29, பக்கம் 437-38.) 'நாணய மாற்று வங்கிகள் மாற்று உண்டியல்களை வெளியிடுவதால் அப்பெயர் பெறவில்லை... அவை நாணயங்களை ஒன்றுக்கொன்று மாற்றிக் கொடுப்பது வழக்கமாய் இருந்ததால் அப்பெயர் பெற்றவை. 1609இல் ஆம்ஸ்டர்டாம் நாணய மாற்று வங்கி நிறுவப்படுவதற்கு நீண்ட காலம் முன்னதாகவே, டச்சு வணிக நகரங்களில் பண-மாற்றிகள் இருந்தார்கள், நாணய மாற்றங்களும், ஏன், நாணய மாற்று வங்கிகளும் கூட இருந்தன... அயல் வணிகர்கள் நாட்டிற்குள் கொண்டு வந்த ஏராளமான நாணய வகைகளை அரசின் செலாவணிக்கு பரிவர்த்தனை செய்து கொள்வதே இந்த பண-மாற்றிகளுக்கு தொழிலாய் இருந்தது. பைய பைய அவர்களின் செயல் வட்டம் விரிவடைந்தது... அவர்கள் தம் காலத்தின் வங்கியாளர்களும் காசாளர்களும் ஆயினர். ஆனால் ஆம்ஸ்டர்டாம் ஆட்சியானது காசாளர் அலுவலும் நாணய மாற்று அலுவலும் ஒன்றிணைவதை ஆபத்தாகக் கருதியது; இந்த ஆபத்துக்கு ஈடுகொடுப்பதற்காக, காசாளர் அலுவல், நாணய மாற்று அலுவல், ஆகிய இரு பணிகளையும் செய்யக்கூடிய அரசுரிமைப் பட்டயம் பெற்ற பெரியதொரு நிறுவனத்தை அமைத்திடுவதென தீர்மானிக்கப்பட்டது. இந்த நிறுவனம்தான் புகழ் பெற்ற வங்கியாகிய 1609ஆம் வருடத்திய ஆம்ஸ்டர்டாம் நாணய மாற்று வங்கி. இதே போலத்தான் வெனிஸ், ஜெனோவா, ஸ்டாக்ஹோம் ஹாம்பர்க் நகரங்களின் நாணய மாற்று வங்கிகளும் பணத்தை மாற்றிக்கொள்ள ஓயாத அவசியத்திலிருந்தே பிறந்தன. இவை யாவற்றிலும் ஹாம்பர்க் நாணய மாற்று வங்கி ஒன்றுதான் இன்றும் தொழில் செய்து வருகிறது; ஏனென்றால் இப்படி ஒரு நிறுவனத்திற்கான தேவை தனக்கென்று நாணயசாலை ஏதுமில்லாத அந்த வணிக நகரத்தில் இன்னமும் உணரப்படுகிறது....' (எஸ்.விஸ்ஸரிங், ஆம்ஸ்டர்டாம், 1860-61 247-48.)

பொதுப் பணமாகப் பணம் புரியும் பணிகளுக்கான ஊடகமாகச் செயல்படும் வர்த்தகத்துக்கு இயற்கை அடிப்படை ஆகும். இந்தப் பணிகள் முன்பே விளக்கிக் கூறியது போல (முதல் பாகம், அத்தியாயம் III, பிரிவு 3, இ), இரட்டைத் தன்மை வாய்ந்தவை: நாடுகளிடையிலான கொடுப்புகளை நேர்செய்வதற்காகவும் வட்டி தேடி அலையும் மூலதனப் பெயர்ச்சிகள் தொடர்பாகவும் பல்வேறு நாடுகளின் சுற்றோட்டத் துறைகளுக்குமிடையே போவதும் வருவதுமான செலாவணி இயக்கம்; அதே போது, உயர்நிலை உலோகங்கள் அவை உற்பத்தி ஆகும் இடங்களிலிருந்து உலகச் சந்தை வாயிலாகப் பாய்ந்து பல்வேறு நாடுகளின் சுற்றோட்டத் துறைகளிடையே வினியோகமாதல் இங்கிலாந்திய 17ஆம் நூற்றாண்டின் பெரும்பகுதியிலும்கூட பொற்கொல்லர்களே வங்கியாளர்களாகச் செயல்பட்டார்கள். நாடுகளிடையிலான கணக்குகளை நேர்செய்வது உண்டியல் வர்த்தகம் முதலானவற்றில் மேலும் வளர்ந்து சென்ற விதத்தையும், பண மதிப்புள்ள பத்திரங்கள் மூலமான கொடுக்கல் வாங்கல் தொடர்பான யாவற்றையும் சற்றும் கருதாமல் ஒதுக்கி விடுவோம்; சுருங்கச் சொல்லின், கடன்-செலாவணி அமைப்பின் தனி வடிவங்கள் யாவற்றையும் பரிசீலனையிலிருந்து விலக்கி விடுவோம்; இங்கு இவ்வமைப்பு இன்னமும் நம் கருத்துக்குரியதல்ல.

தேசப் பணம் சர்வப் பொதுப் பணம் என்னும் பொறுப்பில் தன் வட்டாரத் தன்மையைக் களைந்திடுகிறது. ஒரு நாட்டுச் செலாவணி இன்னொரு நாட்டுச் செலாவணியாகத் தெரிவிக்கப் பெறுகிற; இவ்விதம் முடிவில் யாவும் அவற்றின் பொன் அல்லது வெள்ளி உள்ளடக்கமாகக் குறுகி விடுகின்றன; அதே போது உலகப் பணமாகச் சுற்றியோடும் இரு சரக்குகளாகிய தங்கமும் வெள்ளியும் தமக்கிடையிலான மதிப்பு-விகிதத்துக்குப் பெயர்க்கப்படுகின்றன; இவ்விகிதம் ஓயாமல் மாறுகிறது. இந்த இடைநிலை காரியத்தைதான் தனவணிகர் தமது தனித்தொழில் ஆக்கிக்கொள்கிறார். ஆக பண-மாற்றுதலும் பொன்-வெள்ளிப் பாள வர்த்தகமுமே தனவணிகத்தின் ஆரம்ப வடிவங்களாகும். இவை பணத்தின் இரட்டைப் பணிகளிலிருந்து - தேசப் பணம், உலகப் பணம் என்னும் பணிகளிலிருந்து உதித்தெழுகிறவை.

பொதுவாக வர்த்தகம், முதலாளித்துவத்துக்கு முற்பட்ட முறைகளிலானதும் கூட, எப்படி அவசியமாக்கியதோ, அதே போல முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையும் பின்வருவதை அவசியமாக்குகிறது:

*முதலாவதாக, பணமானது சேர்ப்பாகத் திரட்டப்படுவதைக் குறிக்கிறது. அதாவது இங்கே கொடுப்புச் சாதனத்துக்கும் வாங்குஞ் சாதனத்துக்குமான சேம நிதியாக எப்போதும் பண வடிவில் தயாராய் இருக்க வேண்டிய மூலதனப் பகுதியாகத் திரட்டப்படுவதைக் குறிக்கிறது. இது பணச் சேர்ப்பின் முதல் வடிவமாகும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையிலும், பொதுவாக வணிக-மூலதன வளர்ச்சியின்போதும் (எப்படியும் இம்மூலதனத்தின் நோக்கங்களை உத்தேசித்தேனும்) மீண்டும் அது உதித்தெழும் வடிவமாகும். இவை இரண்டும் தேச அளவில் மட்டுமின்றி சர்வதேச அளவிலுமான சுற்றோட்டத்துக்குப் பொருந்துகிறவை. பணச் சேர்ப்பு தொடர்ச்சியான மாற்றப் போக்கில் உள்ளது, ஓயாமல் சுற்றோட்டத்திற்குள் பொழிவதும் ஓயாமல் அதிலிருந்து மீள்வதுமாய் உள்ளது. சேர்ப்பின் இரண்டாவது வடிவம் பண வடிவில் வாளாவிருக்கிற, தற்காலிகமாய் வேலையற்றிருக்கிற மூலதனத்தின் சேர்ப்பு ஆகும்; புதிதாய்த் திரட்டப்பட்டு, இன்னும் முதலீடு செய்யப்படாமலிருக்கிற பண-மூலதனமும் இதிலடங்கும். சேர்ப்பின் இந்த உருவாக்கத்தால் அவசியமாகும் முக்கியப் பணிகள் பத்திரமாய் பாதுகாத்து வைத்தல், கணக்குப் பதிவு செய்தல் முதலானவை ஆகும்.*

இரண்டாவதாக, கொள்முதல்கள் செய்வதற்கும், விற்று வரும் பணத்தை வசூலிப்பதற்கும், பணம் செலுத்துவதற்கும் பணம் பெறுவதற்கும், கொடுப்புகளை நேர்செய்வதற்கும், இன்னபிற காரியங்களுக்குமான பணச் செலவீடுகளை இது குறிக்கிறது. தனவணிகள் முதலில் வணிகர்கள், தொழில்துறை முதலாளிகள் வெறும் காசாளராகவே இந்தச் சேவைகளை எல்லாம் செய்து கொடுக்கிறார்.[45]

---

45 'காசாளர் என்கிற ஏற்பாடு அதன் ஆரம்பத்திய சுயேச்சைத் தன்மையை டச்சு வணிக நகரங்களில் போல் அநேகமாய் வேறு எங்குமே இவ்வளவு தூய வடிவில் பாதுகாத்துக் கொள்ளவில்லை (ஆம்ஸ்டர்டாமில் காசாளர் தொழிலின் தோற்றம் குறித்து பார்க்கவும்: இ. லுசாக், ஹாலந்தின் ரிக்டம், பகுதி III). 'இதன் பணிகள் ஓரளவு பழைய ஆம்ஸ்டர்டாம் நாணய மாற்று வங்கியின் பணிகளுக் கொப்பானவை. காசாளர் தமது சேவையைப் பயன்படுத்திக் கொள்ளும் வணிகர்களிடமிருந்து குறிப்பிட்ட பணத்தொகை பெறுகிறார்; இத்தொகைக்கு அவர் தமது கணக்கேடுகளில் அவர்களுக்கான 'வரவுக் கணக்கு' தொடங்குகிறார். பிற்பாடு அவர்கள் அவரிடம் தமது பாத்தியதைகளை அனுப்பி வைக்கிறார்கள். அவர்களுக்காக அவர் இவற்றை வசூல் செய்து அவர்களது கணக்கில் வரவு வைக்கிறார். அதே போல் அவர்களுடைய முறிகளுக்கு (Kassiers Briefs) பணம் கொடுக்கிறார். இத்தொகைகளை அவர்களது கணக்கில் பற்று வைக்கிறார். இந்த வரவுகளுக்கும் கொடுப்புகளுக்கும் சிறு கட்டணம் விதிக்கிறார்; இது இரு தரப்புகளுக்குமிடையே நிறைவேறும் புரள்வின் அளவுக்கேற்பவே அவரது உழைப்புக்கு ஊதியமாகிறது ஒரே காசாளரைப் பயன்படுத்திக் கொள்ளும் இரு வணிகர்களிடையே கொடுப்புகளை நேர் செய்ய வேண்டியிருந்தால், கணக்கேடுகளில் பரஸ்பரமாய் பதிவு செய்வதன் மூலம்

*பணத்தின் ஆரம்பக் கட்டங்களிலேயே கூட, கடன் கொடுப்பதும் வாங்குவதும் கடன்-செலாவணியும் பணத்தின் சாதாரணப் பணிகளோடு கூடுதலாய்ச் சேர்ந்து கொண்டதுமே தனவணிகம் முழு வளர்ச்சி பெற்று விடுகிறது. வட்டி - மூலதனத்தைப் பரிசீலிக்கும் அடுத்தப்பகுதியில் இது பற்றி மேலும் பார்ப்போம்.*

*பொன்-வெள்ளிப் பாள வர்த்தகம் என்பதே, அதாவது தங்கம் அல்லது வெள்ளியை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு மாற்றுவதே சரக்கு-வர்த்தகத்தின் விளைவுதான். பன்னாடுகளிடையே கொடுபடவேண்டியவற்றின் நிலவரத்தையும் வெவ்வேறு சந்தைகளிலும் நிலவும் வட்டி வீதங்களையும் தெரிவிக்கும் நாணய மாற்று வீதத்தால் இது நிர்ணயிக்கப்படுகிறது. பொன்-வெள்ளிப் பாள வர்த்தகராய் இருப்பவர் விளைவுகளின் இடையீட்டாளராகவே செயல்படுகிறார்.*

*பணத்தையும், அதன் அசைவியக்கங்களும் வடிவங்களும் சாமானியச் சரக்குச் சுற்றோட்டத்திலிருந்து வளரும் விதத்தையும் பரிசீலித்த போது (முதல் பாகம், அத்தியாயம் III), வாங்குஞ் சாதனமாகவும் கொடுப்புச் சாதனமாகவும் சுற்றியோடும் பணத்திரளின் அசைவியக்கங்கள் சரக்குகளின் உருமாற்றத்தை, இந்த உருமாற்றத்தின் பரிமாணத்தையும் வேகத்தையும் சார்ந்திருப்பதாகப் பார்த்தோம்; இவ்வுருமாற்றம் முழு அளவிலான மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஒரு கட்டம் மட்டுமே என்பதை இப்போது நாமறிவோம். பணப் பொருட்களை - தங்கத்தையும் வெள்ளியையும் - அவை உற்பத்தியாகும்*

---

இக்கொடுப்புகள் மிக எளிதாய் முடிக்கப்படுகின்றன; காசாளர்கள் அவர்களின் பரஸ்பர பாத்தியதைகளை அன்றாடம் நேர் செய்கிறார்கள். இவ்வாறு காசாளரின் உள்ளபடியான தொழிலுக்கு அடிப்படையாய் இருப்பது கொடுப்புகளிலான இந்த இணக்கப்பாடே. ஆகவே தொழில்துறை முனைவுகளையும், வாணிபத்தையும், வரம்பின்றி கடன் பெறுவதையும் இது விலக்கி விடுகிறது; ஏனென்றால் காசாளர் தம்மிடம் கணக்கு வைத்திருக்கும் எந்த ஒருவரின் வரவுக் கணக்கிற்கும் மேலே பணம் கொடுத்துவிடக் கூடாது என்பது இத்தொழிலில் விதியாகும்.' (விஸ்ஸரிங், முன் வந்தது, பக்கம் 134.) வெனிஸ் நகர வங்கித் தொழில் கூட்டமைப்புகள் தொடர்பாக: 'பொற்பாளத்தைச் சுமந்து செல்வது ஏனைய இடங்களைக் காட்டிலும் வெனிசில் வசதிக் குறைவாய் இருந்தது. வெனிஸ் நகரின் தேவைகளும் இட அமைவும் அந்நகரத்துப் பெரு வணிகர்களைத் தூண்டி, உரிய பாதுகாப்பிலும் கண்காணிப்பிலும் மேலாண்மையிலும் வங்கித் தொழில் கூட்டமைப்புகளை நிறுவச் செய்தன. இந்தக் கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் குறிப்பிட்ட தொகைகளை அவற்றில் போட்டு வைத்தார்கள்; தமக்குக் கடன் கொடுத்தவர்களுக்கு இத்தொகைகள் மீது முறி எடுத்தார்கள். செலுத்தப்பட்ட தொகை உடனே கணக்கேட்டில் அதற்கென்று ஒதுக்கிய . பக்கத்தில் கடன்பட்டவரின் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டு, அதே எட்டில் கடன் கொடுத்தவரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. கணக்கு மாற்று வங்கிகள் (giro banks) என்கிறவற்றின் மூல ஆரம்பம் இதுதான். இந்தக் கூட்டமைப்புகள் மிகப்பழையவை. ஆனால் இவற்றை 12ஆம் நூற்றாண்டுக்குரியவையாகக் கருதினால், 1171இல் நிறுவப்பட்ட அரசுக் கடன் கழகத்தோடு குழப்பிக் கொள்கிறார்கள்.' (ஹல்மன், முன்வந்தது, பக்கம் 453-54.)

இடங்களிலிருந்து பெறுவதைப் பொறுத்த வரை, நேரடிச் சரக்குப் பரிவர்த்தனையாகப் பெயர்கிறது; சரக்குகள் என்ற முறையில் தங்கமும் வெள்ளியும் வேறு சரக்குகளுக்கு பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. ஆகவே, இரும்பு அல்லது ஏனைய உலோகங்களைப் பெறுவதைப் போலவே இதுவும் சரக்குப் பரிவர்த்தனையில் ஒரு கட்டமே ஆகும். ஆனால் உலகச் சந்தையில் உயர்நிலை உலோகங்களின் அசைவியக்கத்தைப் பொறுத்த வரை (கடன்கள் மூலம் நடைபெறும் மூலதனப் பெயர்ச்சியை - சரக்கு-மூலதன வடிவிலும் கூட ஏற்படும் இவ்வகைப் பெயர்ச்சியை - இங்கு கவனியாது ஒதுக்கி விடுகிறோம்), இது நாடுகளிடையிலான சரக்குப் பரிவர்த்தனையால் நிர்ணயிக்கப்படுகிறது; எப்படி ஒரு நாட்டின் வாங்குஞ் சாதனமாகவும் கொடுப்புச்சாதனமாகவும் பணம் நிகழ்த்தும் அசைவியக்கம் உள்நாட்டுச் சந்தையில் நடைபெறும் சரக்குப் பரிவரித்தனையால் நிர்ணயிக் கப்படுகிறதோ, அதே போலத்தான் இதுவும். உயர்நிலை உலோகங்கள் ஒரு நாட்டின் சுற்றோட்டத் துறையிலிருந்து இன்னொரு நாட்டின் சுற்றோட்டத் துறைக்கு உள்வருவதும் வெளிச் செல்வதும் தேச செலாவணியின் (national currency) மதிப்பிறக்கத்தாலோ இரட்டை - நாணயத்திட்டத்தாலோ (double standard) ஏற்படுகிற விளைவே ஆதலால், பணச் சுற்றோட்டத்தைப் பொறுத்த வரை புறம்பானவை ஆகும்; அரசின் சொந்த விருப்பத்தின் விளைவான திருத்தங்களையே குறிப்பவை ஆகும். அரசாணைகளால் ஏற்படுகிற தடப்புரள்வுகளைச் சரிசெய்வதற்குரிய முடிவில் சேர்ப்புகளின் உருவாக்கத்தை எடுத்துக் கொள்வோம்; இந்தச் சேர்ப்புகள் உள்நாட்டு வர்த்தகத்திற்கானாலும் அயல் வர்த்தகத்திற்கானாலும் வாங்குஞ் சாதனத்திற்கும் கொடுப்புச் சாதனத்திற்குமான சேம நிதிகளாய் அமைகிறவை; மேலும் தற்காலிகமாய் வேலையில்லாதிருக்கும் மூலதனத்தின் ஒரு வடிவத்தை மட்டும் குறிக்கிறவை; இவை இரு நிலைகளிலுமே சுற்றோட்ட நிகழ்முறையின் அவசிய வீழ்படிவுகள் ஆகும்.

பணச் சுற்றோட்டம் முழுவதுமே பரிமாணத்திலும் வடிவத்திலும் அசைவியக்கத்திலும் சரக்குச் சுற்றோட்டத்தின், முதலாளித்துவ நோக்கு நிலையில் மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறையே ஆகிய சரக்குச் சுற்றோட்டத்தின் விளைவுதான் என்றால் (வருவாய்க்குப் பதில் மூலதனம் பரிவர்த்தனையாவதும், வருவாய்ச் செலவீடு சில்லறை வர்த்தகத்தின் மூலம் நடைபெறுவதாய் உள்ள வரை வருவாய்க்குப் பதில் வருவாய் பரிவர்த்தனையாவதும் மூலதனத்தின் சுற்றோட்ட நிகழ்முறையில் அடக்கமாகும்). தனவணிகம் என்பது சரக்குச்

சுற்றோட்டத்தின் விளைவும் புலப்பாடுமே ஆன பணச்சுற்றோட்டத்தை ஊக்குவிப்பது அல்ல என்பது தெளிவு. சரக்குச் சுற்றோட்டத்தில் ஒரு கட்டமாகிய இந்தப் பணச் சுற்றோட்டம்தான் தனவணிகத்துக்கே ஆதாரம். தனவணிகம் ஊக்குவிப்பதெல்லாம் பணச் சுற்றோட்டத்தின் செய்நுட்பக் காரியங்களையே; இக்காரியங்களை அது குவியவும் குறுகவும், எளிமைப்படவும் செய்கிறது. தனவணிகம் சேர்ப்புகளை உருவாக்குவதில்லை. அது வழங்கிடும் செய்நுட்பச் சாதனங்களைக் கொண்டு சேர்ப்புகளின் உருவாக்கத்தை - இவ்வுருவாக்கம் விரும்பிச் செய்யப்படுவதாய் உள்ளவரை (அதாவது வேலையற்ற மூலதனத்தைக் குறிப்பதாகவோ மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஏற்படும் குலைவுகளைக் குறிப்பதாகவோ இல்லாத வரை), பொருளாதார வகையில் இன்றியமையாத குறைந்தபட்ச அளவாகக் குறைக்க முடிகிறது. ஏனென்றால் வாங்குஞ் சாதனத்துக்கும் கொடுப்புச் சாதனத்துக்குமான சேம நிதிகள் ஒவ்வொரு முதலாளியும் அவற்றைச் சொந்தமாய் ஆளுவதாக இருந்தால் தேவைப்படுவதை விட, முதலாளி வர்க்கம் முழுவதற்காகவும் ஆளப்படுமானால் குறைவாகவே தேவைப்படும். தனவணிகர்கள் உயர்நிலை உலோகங்களை வாங்குவதில்லை. சரக்கு-வர்த்தகம் அவற்றை வாங்கிய பிறகு அவற்றின் வினியோகத்தையே அவர்கள் கையாளுகிறார்கள். நிலுவைகள் தீர்க்கப்படுவதற்கு அவர்கள் வசதி செய்து கொடுக்கிறார்கள்; பணம் கொடுப்புச் சாதனமாகப் பயன்படுவதாலும் இந்தத் தீர்வுகளுக்கான செயற்கைப் பொறியமைவின் மூலமாய் இதற்குத் தேவையானப் பணத்தொகையை குறையச் செய்வதாலும் இது சாத்தியமாகிறது. ஆனால் பரஸ்பரக் கொடுப்புகளின் இணைப்புகளையோ பரிமாணத்தையோ அவர்கள் நிர்ணயிப்பதில்லை. எடுத்துக்காட்டாக வங்கிகளிலும் தீர்வகங்களிலும் ஒன்றுக்கொன்று பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும் மாற்று உண்டியல்களும் காசோலைகளும் சுயேச்சையான கொடுக்கல் வாங்கல்களையே குறிப்பவையும் அந்தக் குறிப்பிட்ட காரியங்களின் விளைவுகளும் ஆகும்; இந்த விளைவுகளின் செய்நுட்பத் தீர்வு இன்னும் சிறப்பாய் செய்து முடிக்கப்படுகிறது. அவ்வளவுதான். பணம் வாங்குஞ் சாதனமாக சுற்றியோடி வரும் வரை, வாங்கல்கள் - விற்றல்களின் பரிமாணம் எண்ணிக்கை ஆகியவற்றுக்கும் தனவணிகத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. தனவணிகமானது வாங்குவதோடும் விற்பதோடும் சேர்ந்து வரும் செய்நுட்பக் காரியங்களைச் சுருங்கச் செய்கிறது, இவ்விதம் சரக்குகளைப் புரளச் செய்வதற்குத் தேவைப்படும் ரொக்கப் பணத்தின் அளவை குறையச் செய்கிறது, இதற்கு மேல் அது செய்யக் கூடியது ஒன்றுமில்லை.

இங்கு நாம் தனவணிகத்தை அதன் தூய வடிவில், அதாவது கடன்-செலாவணி அமைப்பிலிருந்து வேறுபடுத்திய வடிவில் பரிசீலிக்கிறோம். இந்தத் தனவணிகம் இவ்விதம் சரக்குச் சுற்றோட்டத்தின் குறிப்பிட்டக் கட்டத்திற்கு உரிய, அதாவது பணச் சுற்றோட்டத்துக்கும் அச்சுற்றோட்டத்தில் எழும் வெவ்வேறு பணப் பணிகளுக்கும் உரிய செய்நுட்பம் தொடர்பானது மட்டுமே ஆகும்.

இது தனவணிகத்தை சரக்கு வணிகத்திலிருந்து போதிய அளவுக்கு வேறுபடுத்திக் காட்டுகிறது; சரக்கு வணிகம் சரக்குகளின் உருமாற்றத்தையும் அவற்றின் பரிவர்த்தனையையும் ஊக்குவிக்கிறது; ஏன், சரக்கு-மூலதனத்தின் இந்த நிகழ்முறையைத் தொழில் துறை மூலதனத்திலிருந்து தனியே பிரித்து விடப்பட்ட ஒரு மூலதனத்தின் நிகழ்முறையாகவும் கூட தோற்றமளிக்கச் செய்கிறது, வர்த்தக - மூலதனத்துக்கே உரிய சுற்றோட்ட வடிவம் M—C—M ஆகும்; இதில் சரக்கு இருமுறை கைமாறி, பணத்தின் மீள்வுக்கு வழிசெய்கிறது; பணம் இருமுறை கைமாறி, சரக்குப் பரிவர்த்தனையைத் தூண்டி நிகழச் செய்யும் சுற்றோட்ட வடிவமாகிய C—M—C இலிருந்து இது வேறானது. ஆனால் தனவணிக - மூலதனத்தைப் பொறுத்த வரை, இது போன்ற தனிவடிவம் ஏதுமில்லை.

பணச் சுற்றோட்டத்தை இவ்விதம் செய்நுட்ப வழியில் தூண்டி நிகழச் செய்யும் பணியில் முதலாளிகளின் தனியொரு பிரிவினர் பண-மூலதனத்தை முன்னீடு செய்வதால் - இம்மூலதனமானது குறைந்த அளவு வீதத்தில் தொழில் நடைபெறும் போது வணிகர்களும் தொழில்துறை முதலாளிகளும் இந்நோக்கங்களுக்காகத் தாமே முன்னீடு செய்தாக வேண்டிய கூடுதல் மூலதனத்தைக் குறிக்கிறது - மூலதனத்தின் பொது வடிவமாகிய M—M' இங்கேயும் இடம் பெறுகிறது. Mஐ முன்னீடு செய்வதன் மூலம் முன்னீடு செய்யும் முதலாளி M+ΔMஐப் பெறுகிறார். ஆனால் M—M'ஐத் தூண்டி நிகழச் செய்வது இங்கு உருமாற்றத்தின் செய்நுட்ப நிகழ்முறைகள் தொடர்பானதே தவிர பொருளாயத நிகழ்முறைகள் தொடர்பானதல்ல.

தனவணிகர்களின் செயற்பாட்டுக்குப் பயன்படும் பண-மூலதனத் திரள் வணிகர்களுக்கும் தொழில்துறை முதலாளிகளுக்கும் சொந்தமான - சுற்றோட்ட நிகழ்முறையில் இருந்து வருகிற பண-மூலதனமே ஆகும் என்பது தெளிவாய்த் தெரிகிறது. தனவணிகர்களின்

செயற்பாடுகள் வணிகர்கள், தொழில்துறை முதலாளிகள் ஆகியோரின் செயற்பாடுகள்தான், இவற்றில் தனவணிகர்கள் இடையாளர்களாய்ச் செயல்படுகிறார்கள் என்பதும் தெளிவாகிறது.

தனவணிகர்கள் ஏற்கெனவே ஈடேற்றம் பெற்ற மதிப்புகளை வைத்து (கடன் கொடுத்தவர்களின் பாத்தியதைகளது வடிவில் ஈடேற்றம் பெற்றவையாக இருந்தாலும் கூட) இயங்குவதால் அவர்களின் இலாபமானது உபரி-மதிப்பிலிருந்து கழிக்கப்படுவதே தவிர வேறல்ல என்பதும் தெளிவாய்த் தெரிகிறது.

சரக்கு-வர்த்தகத்தில் நிகழ்வது போல் இங்கும் பணிகள் இரட்டிப்பாகும் நிலை எழுகிறது. ஏனென்றால் பணச் சுற்றோட்டம் தொடர்பான செய்நுட்பக் காரியங்களில் ஒரு பகுதியை சரக்குகளின் வர்த்தகர்களும் உற்பத்தியாளர்களும் நிறைவேற்றியாக வேண்டும்.

## அத்தியாயம் XX

## வணிக-மூலதனம் பற்றிய வரலாற்று உண்மைகள்

குறிப்பாக எவ்வடிவத்தில் வர்த்தக-மூலதனமும் தனவணிக-மூலதனமும் பணம் திரட்டுகின்றன என்பது பற்றி அடுத்த பகுதியில் பரிசீலிப்போம்.

இதுவரை பார்த்திருப்பதிலிருந்து தெளிவாய்த் தெரிவது என்னவென்றால், வர்த்தக-மூலதன வடிவிலானாலும் சரி, தனவணிக-மூலதன வடிவிலானாலும் சரி, வணிக-மூலதனத்தைத் தொழில் துறை மூலதனத்தின் குறிப்பான ஒரு வகையாகக் கருதுவது பேரபத்தம் ஆகும். சுரங்கத் தொழில், பயிர்த் தொழில், கால்நடை வளர்ப்பு, செய்பொருளுற்பத்தி, போக்குவரத்துத் தொழில் போன்றவையெல்லாம் தொழில் துறை மூலதனத்தின் கிளைப் பாதைகள் ஆகும்; இவை சமுதாய உழைப்புப் பிரிவினையின் விளைவாய்க் கிளைப்பவை, எனவே முதலீட்டின் பல்வேறு துறைகளாய் இருப்பவை; வணிக-மூலதனம் தொழில் துறை மூலதனத்தின் இந்தப் பல்வேறு வகைகளில் ஒன்றல்ல. ஒவ்வொரு தொழில் துறை மூலதனமும் அதன் மறுவுற்பத்தி நிகழ்முறையின் சுற்றோட்டக் கட்டத்தில் சரக்கு-மூலதனமாகவும் பண-மூலதனமாகவும் செயல்படுகிறது, அதாவது வணிக-மூலதத்தின் இரு வடிவங்களுக்கும் உரிய பிரத்தியேகப் பணிகளாக விளங்கும் அதே பணிகளை நிறைவேற்றுகிறது என்பதை எளிதில் கண்ணுற முடிவதால் வணிக-மூலதனத்தைத் தொழில் துறை மூலதனத்தின் குறிப்பான ஒரு வகையாகக் கருதும் கொச்சைப் பார்வைக்கு வாய்ப்பில்லை. மறுபுறம், திறனுடைய - மூலதனமாக இருக்கும் தொழில்துறை மூலதனத்துக்கும் சுற்றோட்டத் துறையில் இருக்கும் தொழில் துறை மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் வர்த்தக-மூலதனமாகவும் தனவணிக-மூலதனமாகவும் தனித்து வகைப்படுத்தப்படுகின்றன; மூலதனம் அவ்வப்போது சொற்ப காலத்துக்கு மேற்கொள்ளும் குறிப்பிட்ட வடிவங்களும் பணிகளும் மூலதனத்தின் தனியொரு பகுதியின் சுயேச்சையான வடிவங்களாகவும் பணிகளாகவும் காணப்பட்டு, பிரத்தியேகமாய் அம்மூலதனப் பகுதியுடன் கட்டுண்டு போவதன் வாயிலாக இது நடைபெறுகிறது. தொழில்துறை

மூலதனத்தின் மாறிய வடிவமும் எவ்வேறு தொழிற்கிளைகளில் பிரயோகிக்கப்படும் திறனுடைய - மூலதனங்களிடையே அக்கிளைகளின் தன்மை காரணமாய் எழுகிற பொருளாயத வேறுபாடுகளும் தனித்தனி உலகங்களாய் விலகியிருக்கும் இருவேறு சங்கதிகளாகும்.

பொதுவாகப் பொருளாதார அறிஞர் வடிவ வேறுபாடுகளைக் கொச்சையாக நோக்குகிறார். உண்மையில் அவற்றின் பொருளடக்கத்தினது கோணத்திலிருந்து மட்டுமே அவற்றைக் கருத்தில் கொள்கிறார் என்பது ஒரு புறமிருக்க, கொச்சைப் பொருளாதார அறிஞரின் மேற்கூறிய தவறான கண்ணோட்டத்திற்கு இன்னும் இரு காரணங்களும் உண்டு. முதலாவதாக, வணிக இலாபத்தின் விசேசத் தன்மையை அவரால் விளக்க முடியவில்லை; இரண்டாவதாக, சரக்கு-மூலதனம், பண-மூலதனம் ஆகியவற்றையும், பிற்பாடு வர்த்தக-மூலதனம் தனவணிக-மூலதனம் ஆகியவற்றையும் உற்பத்தி நிகழ்முறையிலிருந்தே அவசியமாய் எழும் வடிவங்களாக வகுத்துக் காட்டும் சப்பைக்கட்டுவாத முயற்சிகளில் அவர் ஈடுபடுகிறார்; ஆனால் இந்த மூலதன வடிவங்களும் காரணமாய் அமைவது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் பிரத்தியேக வடிவமே ஆகும்; அனைத்துக்கும் மேலாக இப்பொருளுற்பத்தி முறை சரக்குச் சுற்றோட்டத்தையும், எனவே பணச்சுற்றோட்டத்தையும் தனி அடிப்படையாய்க் கொள்கிறது.

தானிய உற்பத்தியானது கால்நடை வளர்ப்பிலிருந்தும் செய்பொருளுற்பத்தியிலிருந்தும் வேறுபடுவது போலவேதான் வர்த்தக-மூலதனமும் தனிவணிக-மூலதனமும் தானிய உற்பத்தியிலிருந்து வேறுபடுகின்றன என்றால், பொருளுற்பத்தியும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியும் முற்ற முழுக்க ஒன்றே ஆகுமென்று தெள்ளத் தெளிவாய்த் தெரிகிறது; திறனுடைய - நுகர்வுக்கானாலும் சொந்த நுகர்வுக்கானாலும், சமுதாய உறுப்பினர்களிடையே சமுதாய உற்பத்திப் பண்டங்களின் வினியோகமானது - இறைச்சி நுகர்வு கால்நடை வளர்ப்பாலும், ஆடை நுகர்வு ஆடை தயாரிப்பாலும் சமாளிக்கப்படுவது போலவே - வணிகர்களாலும் வங்கியாளர்களாலும் முரணின்றி செவ்வனே சமாளிக்கப்பட்டாக வேண்டும் என்றும் தெளிவாகிறது[46]

46 சிந்தனைச் செம்மல் திருவாளர் ரோஷர் (*Die Grundlagen der Nationalokonomie*, 3. Auflage, 1858, §60, பக்கம் 103, - ஆங்கிலப்பதிப்பாசிரியர்) கூறுவதைக் கேளுங்கள்: வாணிபமானது உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வாளர்களுக்கும் இடைப்பட்டு இணைக்கும் இடைச்செயல் (mediation) ஆகுமென சிலர் சொல்கிறார்கள் அல்லவா? அதேபோல் உற்பத்தியையே

*ஸ்மித், ரிக்கார்டோ போன்ற மாபெரும் பொருளாதார அறிஞர்கள் வணிக-மூலதனம் ஒரு தனிரகமாய் அல்லவா இருக்கிறது என்று கலக்க முறுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் தொழில் துறைமூலதனமே அடிப்படையான மூலதன வடிவமாகும் என்றும் சுற்றோட்ட மூலதனம் (சரக்கு - மூலதனமும் பண-மூலதனமும்) ஒவ்வொரு மூலதனமும் ஆன மறுவுற்பத்தி நிகழ்முறையின் போது ஏற்கும் ஒரு படிநிலை ஆகுமே தவிர வேறல்ல என்றும் கருதுகிறவர்கள், மதிப்பு, இலாபம் முதலானவை உருவாவதன் விதிகளை அவர்கள் தொழில் துறை மூலதனத்தைப் பற்றிய அவர்களது ஆய்விலிருந்து நேரடியாக வகுத்தளிக்கிறார்கள்; ஆனால் நேரடியாக இவை வணிக-மூலதனமும் உள்ளடங்கும்படி நீளவில்லை எனவேதான் அவர்கள் வணிக-மூலதனத்தை அடியோடு ஒதுக்கி வைக்கிறார்கள் அதனை; தொழில் துறை மூலதனத்தின் ஒரு வகையாக மட்டுமே குறிப்பிடுகிறார்கள். அயல்வர்த்தகத்தை ஆராய்கையில் ரிக்கார்டோ குறிப்பிடுவது போல் எப்போதாவது வணிக-மூலதனத்தைப் பற்றித் தனியே பேச முற்படுவார்களானால், அது மதிப்பைப் படைப்பதில்லை (ஆகவே உபரி-மதிப்பையும் படைப்பதில்லை) என்பதைத் தெளிவுபடுத்தவே முயல்கிறார்கள். ஆயினும் அயல்வர்த்தகத்துக்கும் எது உண்மையோ அதுவேதான் உள்நாட்டு வர்த்தகத்துக்கும் உண்மையாய் இருக்க வேண்டும்.*

---

*இதுவரை நாம் வணிக-மூலதனத்தை முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் நோக்குநிலையிலிருந்தும், அதன் வரம்புகளுக்குட்பட்டும் மட்டுமே பரிசீலித்தோம். ஆனால் வர்த்தகம்*

---

கூட நுகர்வில் இடைச்செயல் (யாருக்கும் யாருக்கும் இடைப்படும் செயல்?) ஆகும் எனலாம். வணிக-மூலதனம் வேளாண்மைத் துறை மூலதனத்தையும் தொழில் துறை மூலதனத்தையும் போலவே திறனுடைய - மூலதனத்தைச் சேர்ந்த ஒரு பகுதியே என்பதைத்தான் இது குறிப்பிடுகிறது. வேறுவிதமாகச் சொல்லின், மனிதன் உற்பத்திச் சாதனங்களைக் கொண்டுதான் தனது நுகர்வை நிறைவு செய்து கொள்ள இடைச்செயல் புரிய முடியும் லீப்சிக்கில் கல்வி கற்காவிட்டாலும் அவன் இதைச் செய்தே ஆக வேண்டும்), அல்லது இயற்கையின் விளைபொருட்களை தனதாக்கிக் கொள்வதற்கு (இதை இடைச்செயல் என்றழைக்கலாம்) உழைப்பு தேவைப்படுகிறது என்று நாம் கூறலாம் என்பதால், பிரத்தியேகமான சமுதாயப் பொருளுற்பத்தி வடிவம் ஒன்றிலிருந்து எழும் சமுதாய இடைச்செயல் - இடைச்செயலாய் இருப்பது காரணமாய் - அதே அறுதியான அவசியத் தன்மையையும் அதே படிநிலையையும் பெற்றுள்ளது என்றுதான் ஆகிறது. இடைச்செயல் என்னும் சொல் யாவற்றுக்கும் தீர்வாகிறது. வணிகர்கள் உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வாளர்களுக்கும் இடைப்பட்டு இணைக்கும் இடைச்செயல் புரிவோர் அல்ல என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும் (உற்பத்தியாளர்களிடமிருந்து வேறான நுகர்வாளர்களை, அதாவது உற்பத்தி செய்யாத நுகர்வாளர்களை இப்போதைக்கு ஒதுக்கி விடுகிறோம்); இந்த உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பண்டங்கள் அவர்களுக்குள் பரிவர்த்தனை ஆவதிலேயே வணிகர்கள் இடைச் செயல்புரிவோர் ஆவார்கள். அவர்கள் பரிவர்த்தனையில் இடையாட்களே ஆவர்; இந்தப் பரிவர்த்தனை ஆயிரக்கணக்கான சந்தர்ப்பங்களில் அவர்கள் இல்லாமலே நடைபெறுகிறது.

மட்டுமல்ல. வணிக-மூலதனமும் கூட முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையைக் காட்டிலும் பழைமையானது, உண்மையில் அதுவே கட்டுத்தறியில்லா மூலதனத்தின் மிகப் பழைய நிலவல் வடிவமாகும்.

தனவணிகமும் அதற்காக முன்னீடு செய்யப்படும் மூலதனமும் வளர்ச்சியடைவதற்கு தேவைப்படுவதெல்லாம் மொத்த வர்த்தகமும், மேற்கொண்டு வர்த்தக-மூலதனமும் நிலவ வேண்டும் என்பதற்கு மேல் ஒன்றுமில்லை; இதனை முன்பே பார்த்தோம். எனவே வர்த்தக-மூலதனத்தை மட்டுமே இங்கு நாம் கவனமாய்ப் பரிசீலித்தாக வேண்டும்.

வணிக-மூலதனம் சுற்றோட்டத் துறையில் அடைபட்டிருப்பதாலும், அதன் பணி சரக்குப் பரிவர்த்தனையை தூண்டி நிகழச் செய்வது மட்டுமே என்பதாலும், சாமானிய சரக்குச் சுற்றோட்டத்துக்கும் பணச் சுற்றோட்டத்துக்கும் அவசியமான நிலைமைகளுக்கு மேல் அது நிலவுவதற்கு தேவைப்படுவதெல்லாம் நேரடிப் பண்டமாற்றிலிருந்து எழும் வளர்ச்சி அடையாத வடிவங்கள் மட்டுமே. பார்க்கப் போனால், சாமானிய சரக்குச் சுற்றோட்டமும் பணச் சுற்றோட்டமும் அது நிலவுவதற்கு இன்றியமையா நிலைமை ஆகும். சரக்குகளாகச் சுற்றோட்டத்தில் விடப்படும் பண்டங்கள் என்ன அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்டாலும் - புராதன கால பொதுவுடைமைச் சமுதாயத்தின் அடிப்படையிலானாலும், அடிமை முறை உற்பத்தியின் அடிப்படையிலானாலும், சிறுவிவசாயி, குட்டி முதலாளி என்ற அடிப்படையிலானாலும், அல்லது முதலாளித்துவ அடிப்படையிலானாலும் உற்பத்திப் பொருட்கள் சரக்குகளாய் இருக்கும் தன்மையில் மாற்றமில்லை; சரக்குகள் என்ற முறையில் அவை பரிவர்த்தனை நிகழ்முறையினூடாகவும் அதனால் விளையும் வடிவ மாற்றங்களினூடாகவும் சென்றாக வேண்டும். எந்த முனைகளுக்கிடையே வணிக மூலதனம் இடைச்செயல் புரிகிறதோ அந்த முனைகள் அதற்கு நிர்ணயமானவையாய் இருந்து வருகின்றன; பணத்துக்கும் அதன் அசைவியக்கங்களுக்கும் எப்படி இம்முனைகள் நிர்ணயமானவையாய் இருக்கின்றனவோ அதே போலத்தான் இதுவும். அவசியமான ஒன்றே ஒன்று, இந்த முனைகள் சரக்குகளாகத் தயாராய் இருக்க வேண்டும் என்பதே - உற்பத்தியானது முழுக்க முழுக்க சரக்கு உற்பத்தியாக இருந்தாலும் சரி, சுயேச்சையான உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியைக் கொண்டே நிறைவு செய்து கொள்ளும் உடனடியாக

தேவைகளுக்கு உபரியாவது சந்தையில் விடப்பட்டாலும் சரி. வணிக-மூலதனமானது அது நிலவுவதற்கு இன்றியமையாத முன் நிபந்தனைகளாகிய இந்த முனைகளின், இந்தச் சரக்குகளின் அசைவியக்கங்களை மட்டுமே தூண்டி நிகழச் செய்கிறது.

உற்பத்திப் பொருட்கள் எந்த அளவுக்கு வர்த்தகத்தில் நுழைத்து, வணிகர்களின் கைவழிச் செல்கின்றன என்பது பொருளுற்பத்தி முறையைப் பொறுத்தது; உற்பத்திப் பொருளை நேரடி வாழ்வுச் சாதனமாக அல்லாமல், முழுக்க முழுக்க சரக்காகவே உற்பத்தி செய்யும் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் இறுதி வளர்ச்சியில் அதிகபட்ச அளவுக்கு நடைபெறுகிறது. மறுபுறம், ஒவ்வொரு பொருளுற்பத்தி முறையின் அடிப்படையிலும், உற்பத்தியாளர்களின் (இங்கே உற்பத்திப் பொருட்களின் உடைமையாளர்களைச் சொல்கிறோம்) இன்ப நுகர்ச்சிகளை அல்லது செல்வத்தைக் கூடுதலாக்கும் பொருட்டு, பரிவர்த்தனைக்கென்றமைந்த உபரி - உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியை வர்த்தகம் வசதியளித்து ஊக்கப்படுத்துகிறது. வர்த்தமானது இவ்விதம் பொருளுற்பத்தியை மென்மேலும் பரிவர்த்தனை - மதிப்பை நோக்கிச் செல்லும் தன்மையதாக்குகிறது.

சரக்குகளின், உருமாற்றம், அவற்றின் அசைவியக்கம் (1) பொருள்வகையில், வெவ்வேறு சரக்குகள் ஒன்றுக் கொன்று பரிவர்த்தனையாவதும், (2) வடிவவகையில் சரக்குகள் விற்றலினால் பணமாக மாறுவதும், பணம் வாங்கலினால் சரக்குகளாக மாறுவதும் ஆகும். வணிக - மூலதனத்தின் பணி சரக்குகளை வாங்குவதும் விற்பதுமாகிய இதே செயல்களாகத்தான் பகுபடுகிறது. ஆகவே அது சரக்குப் பரிவர்த்தனையை தூண்டி நிகழச் செய்வதோடு சரி; என்றாலும், எடுத்த எடுப்பில் இந்தப் பரிவர்த்தனையை நேரடி உற்பத்தியாளர்களிடையிலான சாதாரண சரக்குப் பரிவர்த்தனையாக கருதி விடலாகாது. அடியுடைமை முறையிலும் பிரபுத்துவத்திலும் ஆதிக் குடிகள் தொடர்பான குறுநிலத் திறையாண்மையிலும் (vassalage), அடியுடைமையாளரும் பிரபுத்துவக் கோமானும் திறை வசூலிக்கும் அரசும்தான் உற்பத்திப் பண்டங்களின் உடைமையாளர்களாய், எனவே அவற்றை விற்கிறவர்களாய் இருப்பவர்கள். வணிகர் பலருக்காக வாங்கி விற்கிறவர். வாங்கல்களும் விற்றல்களும் அவரது கையில் குவிக்கப்படுகின்றன. ஆதலால் முன்போல் அவை வாங்குகிறவரின் (வணிகரின்) நேரடித் தேவைகளோடு பிணைப்புண்டிருப்பதில்லை.

ஆனால் வணிகர் ஊக்குவிக்கும் சரக்குப் பரிவர்த்தனை உற்பத்திக் கிளைகளின் எவ்வகை சமூக ஒழுங்கமைப்புக்கு உரியதாய் இருந்தாலும் சரி, அவரது செல்வம் எப்போதும் பண வடிவில் நிலவுகிறது, அவரது பணம் எப்போதும் மூலதனமாகச் செயல்படுகிறது. அதன் வடிவம் எப்போதும் M—C—M' ஆக இருக்கிறது. பணம்தான் பரிவர்த்தனை-மதிப்பின் சுயேச்சை வடிவம் அதுவேதான் தொடக்கமுனை; பரிவர்த்தனை-மதிப்பின் பெருக்கம்தான் முழுமுதல் குறிக்கோள் சரக்குப் பரிவர்த்தனை என்பதும், அதனை ஊக்குவிக்கும் காரியங்களும் - உற்பத்தியிலிருந்து பிரிக்கப்படும் உற்பத்தியாளர் அல்லாதாரால் செய்யப்படும் போது - செல்வத்தை கூடுதலாக்கும் வழிவகைதான் வெறும் செல்வமாக அல்ல, மிகவும் சர்வப் பொதுவான சமூக வடிவிலமைந்த செல்வமாகவே, பரிவர்த்தனை-மதிப்பாகவே செல்வத்தை கூடுதலாக்கும் வழிவகைதான். பிரதானக் குறியாகவும், நிர்ணயிக்கும் நோக்கமாகவும் இருப்பது Mஐ M+ΔM ஆக மாற்ற வேண்டும் என்பதே. M—M'ஐ தூண்டி நிகழச் செய்யும் பரிமாற்றங்களான M—Cஉம் C—M'உம் இவ்விதம் Mஐ M+ΔM (ஆக மாற்றுவதில் இடைநிலைக் கட்டங்களாகவே தோன்றுகின்றன. வணிக- மூலதனத்திற்கே உரிய அசைவியக்கமான இந்த M—C—M' அதனை C—M—C இலிருந்து, அதாவது பயன்-மதிப்புகளின் பரிவர்த்தனையை இறுதி நோக்கமாய்க் கொண்டு நேரடியாக உற்பத்தியாளர்களிடையே நடைபெறும் சரக்கு வர்த்தகத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.

பொருளுற்பத்தி எவ்வளவுக்கு எவ்வளவு குறைவாக வளர்ச்சி அடைந்துள்ளதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் பணச் செல்வம் வணிகர்களின் கையில் குவிக்கப்படுகிறது. அல்லது வணிகர்களின் செல்வத்துக்குரிய பிரத்தியேக வடிவில் காணப்படுகிறது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்குள் - அதாவது மூலதனம் பொருளுற்பத்தியின் மீது தன் ஆளுகையை நிலைநாட்டி, முற்றிலும் மாறியதும் பிரத்தியேகமானதுமாகிய வடிவத்தை அதற்கு அளித்த பிறகு - வணிக-மூலதனம் ஒரு பிரத்தியேகப் பணி கொண்ட மூலதனமாகவே விளங்குகிறது. முன் சென்ற பொருளுற்பத்தி முறைகள் யாவற்றிலும், இன்னும் சொல்லப் போனால் பொருளுற்பத்தியானது உற்பத்தியாளரின் நேரடித் தேவைகளுக்கு பயன்படுமிடத்தெல்லாம், வணிக - மூலதனமே ஏனைய யாவற்றுக்கும் மேலாய் பணியைச் செய்து வரக் காண்கிறோம்.

ஆகவே, மூலதனம் பொருளுற்பத்தியின் மீது தன் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கு நீண்டகாலம் முன்னதாகவே வணிக-மூலதனம் ஏன் மூலதனத்தின் வரலாற்று வடிவமாக விளங்குகிறது என்பதைப் புரிந்து கொள்வதில் இம்மியளவும் இடர்பாடில்லை. அது நிலவுவதும் குறிப்பிட்ட நிலைக்கு வளருவதும் தம்மளவிலேயே முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சிக்கான வரலாற்று முதனிலைகளாகும்; (1) பணச் செல்வத்தின் குவிப்புக்கான முதனிலைகள் என்ற முறையில் அவை இப்படி ஆகின்றன; (2) வர்த்தகத்துக்கான பொருளுற்பத்தியும், பெருவீதத்தில் - தனிப்பட்ட நுகர்வாளருக்கு அல்ல - விற்பனை செய்வதும், எனவே தம் சொந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக சரக்கு வாங்குவதற்கு பதில் வாங்குவோர் பலரின் வாங்கல்களையும் தனது ஒரு வாங்கலில் குவித்து விடுகிற வணிகரும் கூட முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு இன்றியமையாத் தேவைகளாய் இருப்பதே இதற்குக் காரணம். மறுபுறம், வணிக-மூலதனத்தின் வளர்ச்சி அனைத்துமே பொருளுற்பத்தியை மென்மேலும் பரிவர்த்தனை-மதிப்புக்கான உற்பத்தியின் தன்மையுடையதாக்கி, உற்பத்திப் பொருட்களை மேன்மேலும் சரக்குகளாக மாற்றும் போக்குடையதாகும். என்றாலும் அதன் வளர்ச்சி மட்டுமே ஒரு பொருளுற்பத்தி முறையிலிருந்து இன்னொரு பொருளுற்பத்தி முறைக்கு மாறிச் செல்வதை தூண்டி நிகழ்த்தவும் அதற்கு விளக்கமளிக்கவும் இயலாது என்பதை விரைவில் பார்ப்போம்.

முதலாளித்துவப் பொருளுற்பத்திக்குள் வணிக-மூலதனமானது முன்பு சுயேச்சையாக நிலவி வந்த நிலை மாறி, மூலதன முதலீட்டில் ஒரு தனிக் கட்டம் ஆகிறது; இலாபங்கள் சமன்மானது அதன் இலாப வீதத்தைப் பொதுச் சராசரியாகப் பெயர்த்திடுகிறது. அது திறனுடை - மூலதனத்தின் செயலியாக மட்டுமே செயல்படுகிறது. வணிக-மூலதனம் வளர்ச்சி பெறும்போது உருவெடுக்கும் தனிச் சமூக நிலைமைகள் முன்போல் இப்போது ஆதிக்கத்தில் இல்லை. மாறாக, வணிக-மூலதனம் இன்னமும் கோலோச்சுகிற இடங்களில் எல்லாம் பிற்பட்ட நிலைமைகள் நிலவக் காண்கிறோம். ஒரே நாட்டிற்குள் என்றாலும் கூட இப்படித்தான் உள்ளது; எடுத்துக்காட்டாக ஒரு நாட்டில் பிரத்தியேகமாய் வணிக நகரங்களாய் இருப்பவை தொழில் துறை நகரங்களாய் இருப்பவற்றைக் காட்டிலும் கடந்த கால

நிலைமைகளோடு மிகவும் எடுப்பான ஒற்றுமைகளை வெளிப் படுத்துகின்றன.[47]

மூலதனம் சுயேச்சையாகவும் முதன்மையாகவும் வணிக-மூலதனமாகவே வளருமானால் பொருளுற்பத்தி இன்னமும் மூலதனத்தின் ஆட்சிக்கு உட்படாதிருப்பதையே அவ்வளர்ச்சி குறிக்கிறது; ஆகவே முதலாளித்துவத்திலிருந்து சுயேச்சையானதும் அதற்குப் புறம்பானதுமாகிய ஒரு சமூகப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையில் வளரும் மூலதனத்தையே அது குறிக்கிறது. ஆகவே வணிக-மூலதனத்தின் சுயேச்சையான வளர்ச்சி சமுதாயத்தின் பொதுவான பொருளாதார வளர்ச்சிக்கு எதிர் விகிதத்தில் உள்ளது.

மூலதனத்தின் முதன்மையான வடிவம் என்ற முறையில் சுயேச்சையான வாணிகச் செல்வமானது சுற்றோட்ட நிகழ்முறையை அதன் முனைகளிலிருந்து பிரிப்பதைக் குறிக்கிறது. பரிவத்தனையில் ஈடுபடும் உற்பத்தியாளர்களே இந்த முனைகளாவர். அவர்கள் சுற்றோட்ட நிகழ்முறையைச் சார்ந்திருப்பவர்கள் அல்லர். சுற்றோட்ட நிகழ்முறையும் அவர்களைச் சார்ந்திருப்பதல்ல. உற்பத்திப் பொருளானது வர்த்தகத்தின் மூலமாய் சரக்கு ஆகிறது. இங்கு வர்த்தகம்தான் உற்பத்தி பொருட்களை சரக்குகளாக மாற்றுகிறதே தவிர, உற்பத்தியான சரக்கு அதன் அசைவியக்கங்களின் மூலம் வர்த்தகத்தைத் தோற்றுவிப்பதில்லை. இவ்வாறு மூலதனமானது இங்கே முதலில் சுற்றோட்ட நிகழ்முறையிலிருந்தும் மூலதனமாகி காணப்படுகிறது. சுற்றோட்ட நிகழ்முறையில்தான் பணம் மூலதனமாக வளருகிறது. சுற்றோட்டத்தில்தான் உற்பத்திப் பொருட்கள் முதலில் பரிவர்த்தனை-மதிப்புகள் என்ற முறையிலும் சரக்குகள் என்ற முறையிலும் பணம் என்ற முறையிலும் வளர்ச்சி அடைகின்றன. மூலதனம் சுற்றோட்ட நிகழ்முறையில் உருவாக முடியும், உருவாக வேண்டும்; பிறகுதான் அது தன் முனைகளை - சுற்றோட்டம் புரியும்

---

47 திருவாளர் வி.கீசல்பாஹ் (அவர் எழுதிய Der Gang Des welthandels im Mittelalter, 1860 என்பதில்) வணிக-மூலதனம் மூலதனத்தின் பொது வடிவமாய் இருக்கும் உலகிற்குரிய கருத்துகளிலேயே இன்னமும் மூழ்கிக் கிடக்கிறார். மூலதனத்தின் நவீன அர்த்தம் அவருக்குத் துளி கூட விளங்கவில்லை. மாம்சென் அவர் எழுதும் ரோமானிய வரலாற்றில் 'மூலதனம்' பற்றியும் மூலதனத்தின் ஆட்சி பற்றியும் பேசுகிற மாம்செனின் நிலையில்தான் இவரும் இருக்கிறார். இக்கால ஆங்கிலேய வரலாற்றில், வர்த்தக ஆதிக்கமும் வணிக நகரங்களும் அரசியலில் பிற்போக்குப் பிண்டங்களாய் இருந்து, நிலவுடைமை, பணவுடைமைப் பிரபுக்களோடு கூடிக்கொண்டு, தொழில்துறை மூலதனத்தை எதிர்க்கின்றன. எடுத்துக்காட்டாக, லிவர்பூலின் அரசியல் பங்கினை மான்செஸ்டர், பர்மிங்காம். அரசியல் பங்குடன் ஒப்பு நோக்குங்கள். தானிய வரி ஒழிக்கப்பட்ட பிறகுதான் தொழில்துறை மூலதனத்தின் பரிபூரண ஆட்சியை ஆங்கிலேய வணிக-மூலதனமும் பணவுடைமைக் கும்பலும் ஒப்புக்கொண்டன.

இடைச்செயலால் இணைக்கப்படும் பல்வேறு உற்பத்திக் கிளை களையும் - கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்கிறது. பணச்சுற்றோட்டமும் சரக்குச் சுற்றோட்டமும் மிகவும் வெவ்வேறான ஒழுங்கமைப்புடன் கூடிய - இன்னமும் முக்கியமாய்ப் பயன் - மதிப்புகளின் உற்பத்திக்கே ஒத்து வரக்கூடிய உள்ளமைப்பு கொண்ட - உற்பத்திக் கிளைகளுக்கிடையே இடைச்செயல் புரியலாம். சுற்றோட்ட நிகழ்முறை இப்படித் தனித்தவொன்றாக்கப்பட்டு வெவ்வேறு உற்பத்திக் கிளைகள் மூன்றாவது கிளையால் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படுவதானது இரட்டைப் பொருள் பொதிந்ததாகும். சுற்றோட்டம் இன்னமும் உற்பத்தியின் மீது தன் பிடிப்பை நிலைநாட்டிக் கொள்ளவில்லை, குறிப்பிட்ட முதனிலையோடு உறவு கொண்டிருப்பது போலவே அதனோடும் உறவு கொண்டிருக்கிறது என்பது ஒரு பொருள். பொருளுற்பத்தி நிகழ்முறை சுற்றோட்டத்தை உட்கிரகித்து, உற்பத்தியின் ஒரு கட்டமாக மட்டும் ஆக்கிவிடவில்லை என்பது இன்னொரு பொருள். ஆனால் முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் இரண்டு நிகழ்கின்றன. உற்பத்தி நிகழ்முறை முழுக்க முழுக்க சுற்றோட்டத்தைச் சார்ந்துள்ளது; சுற்றோட்டமானது உற்பத்தியின் மாறிச் செல்லும் கட்டமே ஆகும். சரக்காகப் படைக்கப்படும் உற்பத்திப் பொருள் இந்தக் கட்டத்தில் ஈடேற்றம் செய்யப்படுகிறது; அதன் உற்பத்தி - அடிக் கூறுகள் - இவையும் சரக்குகளாகவே படைக்கப்படுகிறவை - மாற்றீடு செய்யப்படுகின்றன. நேரடியாகச் சுற்றோட்டத்திலிருந்தே வளர்ந்து வந்த மூலதன வடிவம் - வணிக - மூலதனம் - இங்கே மூலனத்தின் மறுவுற்பத்தி நிகழ்முறையில் இடம் பெறும் மூலதன வடிவங்களில் ஒன்றாக மட்டுமே காணப்படுகிறது.

வணிக-மூலதனத்தின் சுயேச்சையான வளர்ச்சி முதலாளித்துவப் பொருளுற்பத்தியினது வளர்ச்சியின் படித்தரத்துக்கு எதிர் விகிதத்தில் உள்ளது என்பதே விதி. சரக்கேற்றிச் செல்லும் வர்த்தகத்தின் (Carrying trade) வரலாறு இதனைத் தெளிவாகவே புலப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக வெனிசியர்கள், ஜெனோவியர்கள், டச்சுக்காரர்கள் முதலானோரின் வர்த்தகத்தில் இதைக் காணலாம். அங்கெல்லாம் முக்கிய ஆதாயம் உள்நாட்டுப் பண்டங்களை ஏற்றுமதி செய்து பெறப்படுவதற்கு பதில், வர்த்தக வழியிலும் மற்றபடி பொருளாதார வழியிலும் வளர்ச்சி அடையாத சமுதாயங்களின் உற்பத்திப்

பொருட்களது பரிவர்த்தனையை ஊக்குவிப்பதன் மூலமும், உற்பத்தியிலீடுபடும் இரு நாடுகளையுமே சுரண்டுவதன் மூலமும்தான் பெறப்பட்டது.[48] இங்கே வணிக-மூலதனம் அதன் தூய வடிவில் இருக்கிறது, அதாவது முனைகளிலிருந்து - அது புரியும் இடைச்செயலால் இணைக்கப்படுகிற உற்பத்திக் கிளைகளிலிருந்து - பிரிக்கப்பட்டிருக்கிறது. இதுவே அதன் வளர்ச்சிக்கான முக்கிய ஆதாரம். ஆனால் சரக்கேற்றிச் செல்லும் வர்த்தகத்தின் இந்த ஏகபோகமானது இரு முனைகளிலும் அதனால் சுரண்டப்படுகிற மக்களினங்களின் (இவர்களின் வளர்ச்சிக் குறைவே இவ்வர்த்தகம் நிலவுவதற்கான அடிப்படை ஆயிற்று) பொருளாதார வளர்ச்சிக்கேற்ப சிதைவுறுகிறது, அத்துடன் இவ்வர்த்தகமே சிதைவுறுகிறது. மூட்டை வர்த்தகத்தைப் பொறுத்தவரை இது ஒரு தனி வர்த்தகக் கிளையின் சரிவாக மட்டுமல்லாமல், முழுமையான வர்த்தக நாடுகளது முதன்மை நிலையின் சரிவாகவும், மூட்டை வர்த்தகத்தை சார்ந்திருந்த அந்நாடுகளின் பொதுவான வர்த்தகச் செல்வத்தின் சரிவாகவும் விளங்குகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் முன்னேற்றத்தை ஒட்டி, வணிகர்கள் தொழில்துறை மூலதனத்திற்கு கீழ்ப்பட்டதைத் தெரிவித்த தனிவடிவமே இது. வணிக-மூலதனம் பொருளுற்பத்தியை ஆளும் இடங்களில் எல்லாம் எப்படி நடந்து கொள்கிறது என்பதை பொதுவாக குடியேற்ற நாடுகளின் பொருளாதாரம் (குடியேற்ற அமைப்பு எனப்படுவது) மட்டுமல்லாமல், குறிப்பாக பழைய டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வழிமுறைகளும் தெளிவாய்க் காட்டுகின்றன.

வணிக-மூலதனத்தின் அசைவியக்கம் M—C—M' ஆகும் என்பதால், முதலாவதாக வணிக இலாபமானது சுற்றோட்ட நிகழ்முறைக்குள் மட்டும் நடைபெறும் செயல்களில், அதாவது வாங்குவதும் விற்பதுமாகிய இரு செயல்களில் ஈட்டப்படுகிறது; இரண்டாவதாக, கடைசிச் செயலாகிய விற்றலில் அது ஈடேற்றம் செய்யப்படுகிறது.

48 'வர்த்தக நகரங்களில் வசிப்பவர்கள் பணக்கார நாடுகளின் சிறந்த செய்பொருட்களையும் விலையுயர்ந்த சொகுசுப் பண்டங்களையும் இறக்குமதி செய்வதன் மூலம் பெரும் பெரும் உடைமையாளர்களின் படாடோபத்துக்குத் தீனி போட்டார்கள்; இந்த உடைமையாளர்கள் தமது நிலத்தில் கச்சா விளைபொருளை ஏராளமாய்க் கொடுத்து அப்பண்டங்களை ஆர்வத்துடன் வாங்கிக் கொண்டார்கள். எனவேதான் அக்காலத்திய ஐரோப்பாவில் பெரும்பகுதியின் வர்த்தகம் அவர்கள் தமது கச்சா விளைபொருளை நாகரிக நாடுகளின் செய்பொருள் உற்பத்திக்கு பரிவர்த்தனை செய்வதாகவே பெரும்பாலும் இருந்தது... இந்த ரசனையானது பரவிப் பொதுவானதாகி கணிசமான வேண்டலுக்கு வழிசெய்யும் போது, வணிகர்கள் வண்டிச் செலவை மிச்சம் பிடிப்பதற்காக அதே வகை தொழில்கள் சிலவற்றை தமது நாட்டிலேயே நிறுவ முயன்றதில் வியப்பில்லை.' (ஆதாம்ஸ்மித் (நாடுகளின் செல்வம்), புத்தகம் III, அத்தியாயம் III, லண்டன், 1776, பக்கம் 489, 490.)

ஆகவே இது உடைமை மாற்றத்தின் பேரிலான இலாபமாகும். முதல் பார்வைக்கு, உற்பத்திப் பொருட்கள் அவற்றின் மதிப்புக்கே விற்கப்பட்டு வரும் வரை சுயேச்சையான தூய வர்த்தக இலாபமென்பதே சாத்தியமற்றதாகத் தோன்றுகிறது. குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பதே வர்த்தக நியதி. அதாவது சமதைகளின் பரிவர்த்தனை அல்ல. பல்வேறு சரக்குகள் அனைத்துமே மதிப்புகள் ஆகும், எனவே பணம் ஆகும் என்பதால் மதிப்பின் கருத்தமைவும் வர்த்தகத்தில் அடங்கியுள்ளது. பண்பைப் பொறுத்தவரை அவை யாவும் சமூக உழைப்பின் தெரிவிப்புகளாகும். ஆனால் அவை சம பருமனுள்ள மதிப்புகள் அல்ல - உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனைசெய்து கொள்ளப்படும் அளவு வழிப்பட்ட விகிதம் ஆரம்பத்தில் மனம் போனபடி அமையலாயிற்று. அவை பரிவர்த்தனைக்குரியவையாய் இருப்பதால், அதாவது ஒரே மூன்றாவது பண்டத்தின் தெரிவிப்புகளாய் இருப்பதால் சரக்குகளாக வடிவெடுக்கின்றன. தொடர்ந்து நடைபெறும் பரிவர்த்தனையும், முன்னைக் காட்டிலும் முறையான விதத்தில் பரிவர்த்தனைக்காக நடைபெறும் மறுவுற்பத்தியும் இப்படி மனம் போனபடி அமையும் தன்மையை மேன்மேலும் குறையச் செய்கின்றன. ஆனால் முதலில் உற்பத்தியாளருக்கும் நுகர்வாளருக்கும் குறையச் செய்வதற்கு பதில், அவர்களின் இடைத்தரகரான வணிகருக்கே குறையச் செய்கின்றன. இவர் பண-விலைகளை ஒப்புநோக்கி, வேறுபாடாக் அமைவதை சுருட்டிக் கொள்கிறார். அவரைக் கொண்டு நிகழும் சுழலியக்கங்களின் மூலமாகவே அவர் சமன்பாட்டை ஏற்படுத்துகிறார்.

ஆரம்பத்தில் வணிக-மூலதனமானது அதன் கட்டுப்பாட்டுக்கு உட்படாத கடைக்கோடிகளுக்கு, அதனால் உண்டாக்கப்பெறாத இரு முன்னிலைகளுக்கு இடைப்பட்ட அசைவியக்கமாகவே விளங்குகிறது.

பணமானது சரக்குச் சுற்றோட்டத்தின் வடிவமாகிய C—M—C என்பதிலிருந்தே மதிப்பின் அளவை சுற்றோட்ட ஊடகம் மட்டுமல்லாமல், சரக்கின், எனவே செல்வத்தின் அறுதி வடிவம் அல்லது சேர்ப்பாகவும் பிறப்பது போலவே, இதனால் அது பாதுகாக்கப்படுவதும் பணமாகத் திரட்டப்படுவதும் அதனளவிலேயே ஒரு நோக்கமாகி விடுவது போலவே, வெறும் உடைமை மாற்றத்தின் மூலமாகவே தன்னைப் பாதுகாத்து பெருக்கிக் கொள்கிற ஒன்றென்னும் முறையில் சேர்ப்பாகிய பணமும், வணிக-மூலதனத்தின் சுற்றோட்ட வடிவமான M—C—M' என்பதிலிருந்தே பிறக்கிறது.

புராதன காலத்தின் வாணிப நாடுகள் எபிக்யூரசின் தெய்வங்கள் பேரண்டத்தின் இடை உலகுகளில் வசித்தது போல் அல்லது போலந்திய சமுதாயத்தின் இண்டு இடுக்குகளில் யூதர்கள் இருந்தது போல் இடை நிலையில் இருந்து வந்தன. முதன் முதலாய் சுயேச்சையான முறையில் செழித்தோங்கிய வணிக நகரங்களும் வர்த்தக நாடுகளும் புரிந்த வர்த்தகமானது பொருளுற்பத்தி செய்யும் அநாகரீக நிலையைச் சார்ந்து முழுக்க சரக்கேற்றிச் செல்லும் வர்த்தமாகவே நடைபெற்றது; இந்நாடுகளிடையே மேற்கூறிய நகரங்களும் நாடுகளும் இடையாளராய்ச் செயல்பட்டன.

முதலாளித்துவத்துக்கு முற்பட்ட சமூக நிலைகளில் தொழில்துறையை வர்த்தகம் ஆண்டது. நவீன சமூகத்தில் வர்த்தகத்தைத் தொழில்துறை ஆளுகிறது. வர்த்தகமானது அது எச்சமுதாயங்களிடையே நடைபெறுகிறதோ அச்சமுதாயங்களின் மீது ஓரளவுக்கு எதிர்விளைவு உண்டாக்கும் என்பது மெய்தான். சொகுசுப் பண்டங்களும் வாழ்வுச் சாதனங்களும் உற்பத்திப் பொருட்களின் நேரடிப் பயனைச் சார்ந்திருப்பதைக் காட்டிலும் விற்பனையை அதிகமாய்ச் சார்ந்திருக்குமாறு செய்வதன் மூலம் அது பொருளுற்பத்தியை மென்மேலும் பரிவர்த்தனை-மதிப்புக்குக் கீழ்ப்படுத்தும். இவ்வழியில் அது பழைய உறவு முறைகளை களைத்திடுகிறது. அது பூணச் சுற்றோட்டத்தை பல்கிப் பெருகச் செய்கிறது. இப்போது அதற்கு உட்படுவது உபரி உற்பத்தி மட்டுமல்ல, மென்மேலும் ஆழமாய் உற்பத்தியினுள் அது ஊடுருவிச் சென்று முழு முழு உற்பத்திக் கிளைகளையே தன்னைச் சார்ந்ததாகக் கீழ்ப்படுத்துகிறது. என்றாலும் இப்படி ஏற்படும் சிதைவு உற்பத்தி செய்கிற சமுதாயத்தின் தன்மையே பெருமளவுக்குப் பொறுத்ததாகும்.

வணிக-மூலதனமானது வளர்ச்சி அடையாத சமுதாயங்களிடையே உற்பத்திப் பொருட்களின் பரிவர்த்தனையை தூண்டி நிகழச் செய்வதாய் இருந்து வரும் வரை, வர்த்தக இலாபம் என்பது பேரம் பேசி வெல்வதாகவும் ஏமாற்றுவதாகவும் தோற்றமளிப்பதோடு, பெரும்பாலும் அவற்றிலிருந்தே பிறக்கிறது. பல்வேறு நாடுகளின் உற்பத்தி-விலைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை அது பயன்படுத்திக் கொள்வது ஒரு புறமிருக்க (இவ்வகையில் அது சரக்குகளின் மதிப்புகளை சமனமாக்கி நிலைப்படுத்தும் போக்குடையது), அந்தப் பொருளுற்பத்தி முறைகளால் என்ன நேரிடுகிறது என்றால், வணிக-மூலதனம் உபரி-உற்பத்தியில்

மிகப்பெரும் பகுதியைத் தனதாக்கிக் கொள்கிறது. இதற்கான காரணங்களில் ஒன்று, இன்னமும் கணிசமாய்ப் பயன்-மதிப்புக்காக உற்பத்தி செய்யும் சமுதாயங்களை அம்மூலதனம் இணைத்து இடைச்செயல் புரிகிறது. இச்சமுதாயங்களின் பொருளாதார ஒழுங்கமைப்புக்கு, அவற்றின் உற்பத்தியில் சுற்றோட்டத்துக்குச் செல்லும் பகுதியை விற்பதானாலும், உற்பத்திப் பொருட்களை அவற்றின் மதிப்புக்கு விற்பதானாலும் இரண்டாம்பட்ச முக்கியத்துவம் உடையதே ஆகும். மற்றொரு காரணம் என்னவென்றால், அந்தப் பழைய பொருளுற்பத்தி முறைகளில் உபரி-உற்பத்தியின் தலையாய உடைமையாளர்களோடு வணிகர் வாணிபம் செய்தாரல்லவா, அடிமையுடைமையாளரும் பிரபுத்துவக் கோமானும் அரசும் (எடுத்துக்காட்டாக கிழக்கத்தியக் கொடுங்கோலர்) ஆகிய அந்த உடைமையாளர்கள் பிரம்மாண்ட செல்வத்திற்கும் சுகபோகத்துக்கும் பிரதிநிதிகளாவர்; இந்தச் செல்வத்தையும் சுகபோகத்தையும்தான் வணிகர் கவர்ந்திழுத்து மூட்டை கட்ட முயல்கிறார் - பிரபுத்துவக் காலம் குறித்து முன்பு மேற்கோளாய்க் காட்டிய பகுதியின் ஆதாம் ஸ்மித் சரியாகவே இதைக் கண்டு கொண்டார். வணிக-மூலதனம் ஆதிக்கநிலை வகிக்கும் போது, எங்குமே ஒரு கொள்ளைக்கார அமைப்பைக் குறிப்பதாய் உள்ளது.[49] எனவேதான் பழங்காலத்திலும் நவீன காலத்திலும் வர்த்தக நாடுகளிடையே வணிக-மூலதனம் வளர்ந்ததற்கும் சூறையாடுதல், கடற்கொள்ளை, அடிமைகளைக் கடத்துதல், குடியேற்றங்களைக் கைப்பற்றுதல் ஆகியவற்றுக்கும் நேரடித் தொடர்பு இருக்கக் காண்கிறோம். கார்த்திகிலும்

---

49 இப்போது பிரபுக் குலத்தார் அல்லது கொள்ளைக் காரர்களைப் பற்றி வணிகர்கள் வெகுவாய் குறைபட்டுக் கொள்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் பேராபத்துக்கிடையே வர்த்தகம் செய்ய வேண்டியுள்ளது; ஆள் கடத்தல், அடி உதை, மிரட்டிப்-பணம் பறித்தல், கொள்ளை ஆகிய ஆபத்துகளை அவர்கள் சந்திக்க வேண்டியுள்ளது. வணிகர்கள் நீதிக்காகவும் நியாயத்திற்காகவும் இந்தத் துன்பங்களையெல்லாம் அனுபவிப்பார்களானால், அவர்கள் புண்ணியவான்களாய் இருப்பார்கள்....ஆனால் இந்தப் பெரும் கொடுமையையும் கிறித்துவத்திற்குப் புறம்பான திருட்டு, கொள்ளையையும் உலமெங்கும் வணிகர்கள் செய்கிறார்கள், தமக்குள்ளேயும் கூட செய்து கொள்கிறார்கள் என்பதால், அக்கிரமத்தால் வந்த பெருஞ் செல்வம் திரும்பவும் இழக்கப்படுமாறு அல்லது திருடப்படுமாறு, அவர்களே வஞ்சிக்கப்படுமாறு அல்லது சிறைப்படுத்தப்படுமாறு கடவுள் பார்த்துக் கொள்வதில் வியப்பேது? .... அரசர்கள் இத்தகைய அநியாய பேரங்களை மிகக் கடுமையாய் தண்டிக்க வேண்டும்? தம் குடிகளை வணிகர்கள் இவ்வளவு அக்கிரமமான முறையில் மோசடி செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்கள் இப்படிச் செய்ய தவறுவதால் கடவுள் வீரமறவர்களையும் கொள்ளைக் காரர்களையும் பயன்படுத்தி இவர்கள் மூலமாய் வணிகர்களை அவர்கள் இழைக்கும் கொடுமைகளுக்காகத் தண்டிக்கிறார், இவர்களை தமது சைத்தான்களால் பயன்படுத்துகிறார்; இப்படித்தான் அவர் எகிப்திலும் உலகெங்கிலும் சைத்தான்களை பரப்புகிறார், அல்லது எதிர்களின் மூலமாய் நாசம் செய்கிறார். இவ்விதம் ஒருவருக்கெதிராக மற்றவரை நிறுத்துகிறார். வணிகர்களின் அளவுக்கு வீரமறவர்கள் கொள்ளைக்காரர்கள் அல்ல என்று சுட்டாமலே இதைச் செய்கிறார். ஆனால்

ரோமாபுரியிலும் பிற்காலத்தில் வெனிஸ் நகரத்தார், போர்த்துகீசியர், டச்சுக்காரர்கள் போன்றோரிடையிலும் இதைக் காணலாம்.

வர்த்தகமும் வணிக-மூலதனமும் வளர்ச்சி அடைவது எங்குமே பரிவர்த்தனை - மதிப்புகளின் உற்பத்திக்குச் சாதகமான போக்கைத் தோற்றுவித்து, அதன் பரிமாணத்தை அதிகமாக்கி அதனைப் பல்கிப் பெருகச் செய்து, உலகளாவிய தன்மையதாக்கி, பணத்தை உலகப் பணமாக வளர்த்திடுகிறது. எனவே வர்த்தகமானது உடனடியாக எதிர்படுவதும் வெவ்வேறு வடிவங்களில் அமைந்து பயன்-மதிப்பையே பிரதானமாய் மனத்திற்குகொண்டு நடைபெறுவதுமான பொருளுற்பத்தி ஒழுங்கமைப்பை அதிகமாகவோ குறைவாகவோ சிதைப்பதாய் இருக்கக் காண்கிறோம். எந்த அளவுக்கு அது பழைய பொருளுற்பத்தி முறையை களைந்துப் போகச் செய்கிறது என்பது அதன் உறுதிப்பாட்டையும் உள்ளமைப்பையும் பொறுத்தது. இந்தக் களைப்பு நிகழ்முறை எங்கு கொண்டு போய் விடும், அதாவது பழைய பொருளுற்பத்தி முறைக்குப் பதிலாய் வரும் புதியப் பொருளுற்பத்தி முறை என்னவாக இருக்கும் என்பது பழையப் பொருளுற்பத்தி முறையின் தன்மையைப் பொறுத்ததுதானே தவிர வர்த்தகத்தைப் பொறுத்ததல்ல. புராதன உலகில் வர்த்தகத்தின் விளைவும் வணிக-மூலதனத்தின் வளர்ச்சியும் எப்போதுமே அடிமைப் பொருளாதாரத்தில் போய் முடிந்தன; தொடக்க முனையைப் பொறுத்து, நேரடி வாழ்வுச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கென்று அமைந்து தந்தை வழி அடிமையுடைமை அமைப்பு உபரி-மதிப்பின் உற்பத்திக் கென்று அமைந்ததாய் மாற்றப்படுவதில்தான் போய் முடிந்தன. ஆனால் நவீன உலகில் அது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் போய் முடிகிறது. இந்த விளைவுகள் வணிக-மூலதனத்தின் வளர்ச்சி அல்லாத நிலைமைகளிலிருந்து தம்மளவில் விளைந்து வருவது இதிலிருந்து தெரிகிறது.

---

வணிகர்கள் நாள் தவறாமல் உலகம் முழுவதையும் கொள்ளை இடுகிறார்கள். வீரமறவரோ, ஆண்டில் ஓரிரு முறை ஓரிருவரைக் கொள்ளையிடக் கூடும்.' ஈசாப் சொல்வதைக் கேளுங்கள்: அரசர்களாகிய நீங்கள் கொள்ளைக்காரர்களின் கூட்டாளிகள் ஆகி விட்டீர்கள். எப்படியென்றால், ஒரு குல்தனோ வரை குல்தனோ திருடிய திருடர்களைத் தூக்கிலிடுகிறார்கள்; ஆனால் உலகம் முழுவதையும் கொள்ளையிட்டு மற்றவர்களை எல்லாம் விட துணிந்து திருடுபவர்களோடு உறவாடுகிறார்கள். பெரிய திருடர்கள் சிறிய திருடர்களைத் தூக்கிலிடுகிறார்கள் என்று பழமொழி சொல்வது இன்றும் சரிதான். ரோமானிய செனடர் காட்டோ கூறியது போல, அற்பத் திருடர்கள் சிறைகளிலும் பட்டிகளிலும் அடைபட்டுக் கிடக்கிறார்கள்; பகிரங்கத் திருடர்களோ பொன்னிலும் பட்டிலும் மினுக்கித் திரிகிறார்கள். ஆனால் கடவுள் முடிவில் என்ன சொல்வார். அவர் இசக்கியேலிடம் சொன்னது போல் செய்வார்; அரசர்களையும் வணிகர்களையும், ஒரு திருடனை இன்னொரு திருடனோடு ஈயத்தையும் இரும்பையும் போல் ஒன்றாய்க் கலந்து விடுவார்; நகரம் எரிந்து சாம்பலாகும் போது, அரசர்களும் இருக்க மாட்டார்கள், வணிகர்களும் இருக்க மாட்டார்கள்.' (மார்ட்டின் லூதர், 1524, பக்கம் 296-97)

நகரத் தொழிலாய் இருப்பது பயிர்த் தொழிலிலிருந்து பிரிந்த பிறகு, அதன் உற்பத்திப் பொருட்கள் தொடக்கத்திலிருந்தே சரக்குகளாய் இருப்பதும், எனவே அவற்றின் விற்பனைக்கு வர்த்தகத்தின் உதவி தேவைப்படுவதும் இயல்புதான். வர்த்தகமானது நகரங்கள் வளர்ச்சி அடைவதற்கு சாதகமாய் இருப்பதும், மறுபுறம் நகரங்கள் வர்த்தகத்தைச் சார்ந்திருப்பதும் இந்த அளவில் இயல்பானவை. ஆனால் இந்த வளர்ச்சியோடு சேர்ந்து எந்த அளவுக்கு தொழில்துறை வளர்ச்சி ஏற்படும் என்பது அறவே வேறு நிலைமைகளைப் பொறுத்தது. புராதன ரோமாபுரி பிற்காலத்தில் குடியரசாக இருந்த போது வணிக-மூலதனத்தை புராதன உலகில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உயர் வளர்ச்சி காணச் செய்த போதிலும் கைத்தொழில்களின் வளர்ச்சியில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அப்போது ஐரோப்பாவிலும் ஆசியா மைனரிலும் கோரினத்தும் ஏனைய கிரேக்க நகரங்களும் வர்த்தகத்தில் வளர்ச்சி கண்ட போதே கைத்தொழில்களிலும் உயர் வளர்ச்சி கண்டன. மறுபுறம், நகரங்களின் வளர்ச்சிக்கும் அதை ஒட்டி எழுந்த நிலைமைகளுக்கும் நேர்மாறாக, வர்த்தக மனப்பான்மையும் வணிக-மூலதன வளர்ச்சியும் நிலைத்தமராத நாடோடி மக்களினங்களிடையேயும் காணப்படுவதுண்டு.

ஐயத்திற்கு இடமற்ற உண்மை - இந்த உண்மைதான் அறவே தவறான கருத்தோட்டங்களுக்கு வழி செய்துள்ளது - என்னவென்றால், 16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளில் புவியியல் கண்டு பிடிப்புகளின் துணை கொண்டு வர்த்தகத்தில் நிகழ்ந்த பெரும் புரட்சிகள், வணிக-மூலதனத்தின் வளர்ச்சியை விரைவுபடுத்திய இப்புரட்சிகள் பிரபுத்துவப் பொருளுற்பத்தி முறை முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையாக மாறிச் செல்வதை தூண்டி விடும் முதன்மைக் கூறுகளில் ஒன்றாகும். உலகச் சந்தையின் திடீர் விரிவாக்கம், சுற்றியோடும் சரக்குகள் பல்கிப் பெருகியது. ஆசியாவின் உற்பத்திகளையும் அமெரிக்காவின் கருவூலங்களையும் வசப்படுத்திக் கொள்ள ஐரோப்பிய நாடுகள் வெளிப்படுத்திய போட்டியார்வம், குடியேற்ற அமைப்பு - இவை எல்லாம் பொருளுற்பத்தியின் மீதான பிரபுத்துவத் தளைகளை அறுத்தெறிவதற்கு பெரும்பங்கு செலுத்தின. ஆனால் நவீனப் பொருளுற்பத்தி முறைக்கான நிலைமைகள் மத்தியகாலத்திற்குள் உருவெடுத்திருந்த இடங்களில் மட்டுமே அப்பொருளுற்பத்தி முறை அதன் முதற்காலக் கட்டத்தில் - பட்டறைச் தொழிற்காலத்தில் - வளர்ந்தது. எடுத்துக்காட்டாக, போர்த்துகலுடன்

ஹாலந்தை ஒப்பு நோக்கலாம்.[50] 16ஆம் நூற்றாண்டிலும் 17ஆம் நூற்றாண்டிலும் கூட வர்த்தகத்தின் திடீர் விரிவாக்கமும் புதிய உலகச் சந்தையின் தோற்றமும் பழைய பொருளுற்பத்தி முறையின் மறைவுக்கும் முதலாளித்துவத்துவப் பொருளுற்பத்தி முறையின் உதயத்துக்கும் மிகப் பெரும் பங்கு செலுத்திய போது, மறுதலையாக இது ஏற்கெனவே நிலவி வந்த முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையில்தான் சாதிக்கப் பெற்றது. உலகச் சந்தையே இந்தப் பொருளுற்பத்தி முறைக்கு அடிப்படை ஆகிறது. மறுபுறம், மேன்மேலும் விரிவான அளவு வீதத்தில் உற்பத்தி செய்ய வேண்டிய உள்ளார்ந்த அவசியம் இந்த பொருளுற்பத்தி முறைக்கு இருப்பது ஓயாமல் உலகச் சந்தையை விரியச் செய்யும் போக்குடையதாகும். அதாவது இங்கே வர்த்தகம் தொழில்துறையை புரட்சிகரமாய் மாற்றியமைப்பதற்கு பதில் தொழில்துறைதான் ஓயாமல் வர்த்தகத்தைப் புரட்சிக்ரமாய் மாற்றியமைக்கிறது. இப்போது வர்த்தக முதன்மை என்பதே கூட, பெரும் தொழில்துறைக்காள நிலைமைகள் குறிப்பிட்ட அளவுக்கு நிலவுவதோடு பிணைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தையும் ஹாலந்தையும் ஒப்பு நோக்கலாம். வாணிப நாடாய் அரசோச்சிய ஹாலந்து இந்நிலையிலிருந்து கண்ட சரிவின் வரலாறு வணிக-மூலதனம் தொழில் துறை மூலதனத்துக்குக் கீழ்ப்பட்டுப் பணியும் வரலாறேயின்றி வேறல்ல. முதலாளித்துவத்திற்கு முற்பட்ட காலத்தில் அந்தந்த நாடுகளிலும் நிலவிய பொருளுற்பத்தி முறைகளின் உள்திடமும் ஒழுங்கமைப்பும் வர்த்தகத்தின் அரிக்கும் சக்திக்கு எழுப்பிய தடைகள் இந்தியாவுடனும் சீனத்துடனும் ஆங்கிலேயர்களின் வாணிப உறவில் எடுப்பாய் வெளிப்படுகின்றன. இங்கே பொருளுற்பத்தி முறையின் பரந்த அடிப்படையாய் அமைவது சிறுவீதப் பயிர்த் தொழிலுக்கும் வீட்டுத் தொழிலுக்குமான ஐக்கியமே ஆகும்; இந்தியாவைப் பொறுத்தவரை பொது நிலவுடைமையை

50 ஏனைய நிலைமைகளோடு கூட, மீன்பிடித் தொழில், பட்டறைத் தொழில், பயிர்த் தொழில் ஆகியவை ஓங்கி இருந்த நிலை எப்படி ஹாலந்தின் வளர்ச்சிக்கான அடிப்படை ஆயிற்று என்பதை மாஸி (பக்கம் 68) போன்ற 18ஆம் நூற்றாண்டின் எழுத்தாளர்களே விளக்கமளித்துவிட்டார்கள். ஆசியாவிலும் பண்டைக் காலத்திலும், மத்திய காலத்திலும் வர்த்தகத்துக்கிருந்த பரிமாணத்தையும் முக்கியத்துவத்தையும் குறைத்து மதிப்பிட்டு வந்த பழையக் கருத்துக்கு நேர்மாறாக அதனை மிகைப்படுத்தி மதிப்பிடுவது இப்போது மரபாகி உள்ளது. இந்தக் கருத்துக்கு எதிரான மிகச் சிறந்த மாற்று 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கிலாந்து செய்த ஏற்றுமதி-இறக்குமதிகளை ஆராய்வதும் அவற்றை நவீன கால ஏற்றுமதி-இறக்குமதிகளோடு ஒப்பு நோக்குவதுமே ஆகும். என்றாலும் அவை பழைய வர்த்தக நாடு எதனுடையவும் ஏற்றுமதி-இறக்குமதிகளைக் காட்டிலும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாதபடி அதிகமாய் இருந்தன. [பார்க்கவும்: ஆண்டர்சன், வர்த்தகத்தின் தோற்றத்தை வரலாற்று வழியிலும் கால்வரிசைப்படியும் கண்டறிதல். (இரண்டாம் பாகம், லண்டன் 1764, பக்கம் 261 முதலானவை. - ஆங்கிலப்பதிப்பாசிரியர்.)]

அடித்தளமாகக் கொண்ட கிராம சமுதாயங்களின் வடிவத்தையும் இதனோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்; இந்த நிலப் பொதுவுடைமைதான் சீனத்திலும் ஆரம்ப வடிவமாய் இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆட்சியாளர்கள் என்ற முறையிலும் நிலவுடைமையாளர்கள் என்ற முறையிலும் உடனே தமது நேரடியான அரசியல், பொருளாதார அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தச் சின்னஞ்சிறு பொருளாதாரக் கூட்டு சமுதாயங்களைச் சீர்குலைத்தார்கள்.[51] ஆங்கிலேய வர்த்தகத்தின் விற்பனைப் பண்டங்களது விலை குறைவாய் இருந்தது நூற்பு, நெசவுத் தொழில்களை - தொழிற்துறை உற்பத்தி, வேளாண்மைத்துறை உற்பத்தி இவற்றின் இந்த ஐக்கியத்தில் புராதனமான இணைக்கும் கூறுகளில் ஒன்றாய் இருந்து வந்த இத்தொழில்களை - அழிக்கப் பயன்பட்ட அளவில் மட்டுமே அவ்வர்த்தகம் இந்தக் கிராம சமுதாயங்கள் மீது புரட்சிகர தாக்கம் செலுத்தி, அவற்றை கலைத்துப் போட்டது. அப்படியும் கூட இந்தக் கலைப்பு வேலை பையப் பையவே நடைபெறுகிறது. சீனத்தில் இன்னுங்கூட மெதுவாகவே நடைபெறுகிறது. அங்கே நேரடி அரசியல் அதிகாரத்தால் இது வலுப்பெறவில்லை. பயிர்த் தொழில் பட்டறைத் தொழிலோடு இணைந்திருப்பதால் பெறப்படும் கணிசமான சிக்கனமும் கால மிச்சமும் பெருந் தொழில்களின் உற்பத்திப் பொருட்களுக்கு உறுதியான எதிர்ப்பைத் தோற்றுவிக்கின்றன; இந்தப் பெரும் தொழில்களில் ஊடாடிச் செல்லும் சுற்றோட்ட நிகழ்முறைக்கான திறனிலாச் செலவும் அத்தொழில்களின் உற்பத்திப் பொருட்களது விலையில் அடங்கும். மறுபுறம், ஆங்கிலேய வர்த்தகத்தைப் போல் அல்லாமல், ருஷ்ய வர்த்தகமானது ஆசிய வகை பொருளுற்பத்தியின் பொருளாதார அடித்தளத்தை தொடுவதே இல்லை.[52]

---

51 இந்தியாவில் ஆங்கிலேயரின் வரலாறு என்பது பயனற்ற, மெய்யாகவே அபத்தமான (நடைமுறையில் அவக்கேடான) பொருளாதாரப் பரிசோதனைகளின் சங்கிலித் தொடரே ஆகும். வங்கத்தில் அவர்கள் பெருவீத ஆங்கிலேயப் பண்ணைகளின் கேலிப் பதிப்பை உருவாக்கினார்கள்; தென்கிழக்கு இந்தியாவில் பாகம் பிரித்த சிறுவுடைமையின் கேலிப்பதிப்பை உருவாக்கினார்கள். வட மேற்கில் பொது நில உடைமையோடு கூடிய இந்தியாவின் பொருளாதாரக் கூட்டுத்துவச் சமுதாயத்தை அதன் கேலிப் பதிப்பாகவே மாற்ற தங்களால் முடிந்ததனைத்தும் செய்தார்கள்.

52 எங்கெல்ஸ் குறிப்பு:- ருஷ்யா தனக்கென்று முதலாளித்துவப் பொருளுற்பத்தியை வளர்த்துக் கொள்ள அரும்பாடு பட்டு வருவதாலும், இந்த முதலாளித்துவப் பொருளுற்பத்தி முழுக்க முழுக்க அதன் உள்நாட்டுச் சந்தையையும் அண்டைபுற ஆசிய சந்தைகளையுமே சார்ந்திருப்பதாலும் இந்நிலைமையும் மாறத் தொடங்கி வருகிறது.

பிரபுத்துவ பொருளுற்பத்தி முறையிலிருந்து மாறி வருவது இரட்டைத் தன்மை வாய்ந்ததாகும். இயற்கை விவசாயப் பொருளாதாரத்துக்கும் மத்தியகால நகரப்புறத் தொழில்களின் கைவினைச் சங்க கட்டுக்கடங்கிய கைத்தொழில்களுக்கும் மாறாக, உற்பத்தியாளர் வணிகரும் முதலாளியும் ஆகிறார். இல்லையேல் வணிகர் பொருளுற்பத்தியின் மீது நேரடி ஆளுகையை நிறுவிக் கொள்கிறார். எவ்வளவுதான் இது வரலாற்று வழியில் படிக்கல்லாகப் பயன்பட்டாலும் - 17ஆம் நூற்றாண்டின் ஆங்கிலேயத் துணி வணிகரைப் பாருங்கள், அவர் சுயேச்சையான நெசவாளர்களுக்கு கம்பளியை விற்று அவர்களிடமிருந்து துணி வாங்குவதன் மூலம் அவர்களைத் தமது கட்டுப்பாட்டுக்கு உட்படுத்திக் கொள்கிறார் - இது மட்டுமே பழைய பொருளுற்பத்தி முறையை வீழ்த்துவதற்கு பங்களித்து விட முடியாது; மாறாக இது அந்தப் பொருளுற்பத்தி முறையை தனக்கு இன்றியமையாத முன் தேவை என்ற முறையில் பாதுகாத்து நிலைநிறுத்தும் போக்குடையதே ஆகும். எடுத்துக்காட்டாக, பிரெஞ்சுப் பட்டுத் தொழிலிலும் ஆங்கிலேயே உள்ளாடை, சித்திரப் பின்னல் தொழில்களிலும் பட்டறையதிபர் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை பெரும்பாலும் பெயரளவுக்கே பட்டறையதிபராக இருந்தார். உண்மையில் அவர் வணிகராகவே இருந்தார்; நெசவாளர்கள் ஒழுங்கமையாத பழைய முறையில் தொழில் செய்து வர, அவர் வணிகருக்குரிய கட்டுப்பாட்டை மட்டுமே செலுத்தினார்; உண்மையில் அவர்கள் வணிகருக்காகவே வேலை செய்தார்கள்.[53] இந்த அமைப்பு எங்குமே உண்மையான முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கு தடைக்கல்லாகிறது; இப்பொருளுற்பத்தி முறை வளர்ச்சி அடையும் போது அது அழிந்து போகிறது. பொருளுற்பத்தி முறையை புரட்சிகரமாய் மாற்றியமைக்காமல் நேரடி உற்பத்தியாளர்களின் நிலைமையை இன்னுங்கூட மோசமாக்கவே செய்கிறது, மூலதனத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் நிலவும் நிலைமைகளை விட மோசமான நிலைமைகளில் வெறும் கூலித் தொழிலாளர்களாகவும் பாட்டாளிகளாகவும் அவர்களை மாற்றி விடுகிறது, பழைய பொருளுற்பத்தி முறையின் அடிப்படையில் அவர்களது உபரி-உழைப்பைத் தனதாக்குகிறது. லண்டனில் தட்டு முட்டுகளை

53 எங்கெல்ஸ் குறிப்பு: ரைன் பகுதியைச் சேர்ந்த ரிப்பன் தயாரிப்பாளர்கள், பாய் முடைவோர், பட்டு நெசவாளர்கள் ஆகியோரைப் பற்றியும் இவ்வாறே சொல்லலாம். இந்தக் கிராமபுற கை நெசவாளர்கள் நகரத்து 'பட்டறையதிபரோடு' வாணிபம் செய்வதற்காக கிரெ∴பெல்டு அருகே இருப்புப்பாதை கூட அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் பிற்பாடு இயந்திர வழி நெசவுத் தொழில் இதையும் இத்துடன் கூடவே கைநெசவாளர்களையும் தொழிலிலிருந்து விரட்டி விட்டது.

உற்பத்தி செய்யும் கைவினைத் தொழிலின் ஒரு பகுதியில் இதே நிலைமைகள் சற்றே மாறிய வடிவில் நிலவுகின்றன. உற்பத்தி முழுவதும் ஒன்றையொன்று சாராமல் தனித் தனியாக இருக்கும் மிகப் பலத் தொழிற் கிளைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு நிறுவனம் நாற்காலி மட்டும் செய்கிறது, மற்றொன்று மேசை மட்டும் செய்கிறது, இன்னொன்று பீரோ மட்டும் செய்கிறது - இவ்வாறே இன்னும் சொல்லலாம். ஆனால் இந்த நிறுவனங்களே கூட தனியொரு குட்டியதிபராலும் ஒரு சில பணியாளர்களாலும் ஏறக்குறைய கைத்தொழில்களைப் போலவே நடத்தப்படுகின்றன. என்றாலும் உற்பத்தி அளவு மிக அதிகமாகையால் நேரடியாய் தனியாட்களுக்காக வேலை செய்ய முடியாது. இங்கிருந்து சரக்கு வாங்குகிறவர்கள் தட்டுமுட்டுக் கடைகளின் உரிமையாளர்கள் ஆவர். சனிக்கிழமைகளில் அதிபர் அவர்களைப் போய்ப் பார்த்து தமது உற்பத்திப் பொருளை விற்கிறார். அடகுக் கடையில் கடன் வாங்கும் போது எவ்வளவு சச்சரவு செய்வார்களோ இங்கு அவ்வளவு சச்சரவுக்குப் பிறகுதான் பேரம் முடிகிறது. வேறு எதற்கும் இல்லையென்றாலும், அடுத்த வாரத்திற்கு கச்சாப் பொருட்கள் வாங்குவதற்கும் கூலி கொடுப்பதற்கும் அதிபர்கள் இந்த வல்லாந்தர விற்பனையைத்தான் நம்பியுள்ளனர். இந்நிலைமைகளில் அவர்கள் உண்மையில் வணிகருக்கும் தம் தொழிலாளர்களுக்கும் நடுவிலுள்ள இடையாளர்களே ஆவர். உபரி - மதிப்பில் ஆகப் பெரும் பங்கை சுருட்டிக் கொள்ளும் உள்ளபடியான முதலாளி வணிகர்தான்.[54] முன்பெல்லாம் கைத் தொழில்களாகவோ கிராமப்புறத் தொழில்களுக்கான துணைப் பிரிவுகளாகவோ நடைபெற்று வந்த தொழிற் கிளைகள் பட்டறைத் தொழிலாக மாறிச் செல்வதற்கும் அநேகமாய் இதுவே பொருந்தும். பெருவீதத் தொழில்துறைக்கு மாறிச் செல்வது சிறுவுடைமையாளர்களால் இயக்கப்படும் இந்த நிறுவனங்களின் தொழில்நுட்ப வளர்ச்சியை - கைத்தொழில் போன்ற செயல்பாட்டுக்கு இடமளிக்கும் இயந்திர சாதனத்தை இந்நிறுவனங்கள் ஈடுபடுத்தும் இடங்களிலெல்லாம் - பொறுத்ததாகும். இயந்திரம் கையால் ஓட்டப்படுவதற்குப் பதில் நீராவியால் ஓட்டப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஆங்கிலேய உள்ளாடைத் தொழிலில் சமீப காலமாய் இதுவே நடப்பு.

---

54 எங்கெல்ஸ் குறிப்பு:- 1865க்குப் பிறகு இந்த ஏற்பாடு இன்னும் பெரிய அளவில் வளர்ந்துள்ளது. விவரங்கள் தேவையானால் பார்க்கவும்: சரக்கூதிய முறை குறித்து பிரபுக்கள் சபை பொதுக் குழுவின் முதல் அறிக்கை, லண்டன், 1888.

இதன் விளைவாய் மும்மடி மாற்றம் நடந்தேறுகிறது. முதலாவதாக, வணிகர் நேரடியாய் தொழில்துறை முதலாளி ஆகிறார். வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களில், அதிலும் குறிப்பாக சொகுசுப் பண்டங்களை உற்பத்தி செய்கிறவையும், கச்சாப் பொருட்களோடும் தொழிலாளர்களோடும் சேர்த்து அயல்நாடுகளிலிருந்து வணிகர்களால் இறக்குமதி செய்யப்படுகிறவையுமான தொழில்களில் நடப்பது இதுவே. 15ஆம் நூற்றாண்டில் கான்ஸ்டாண்டி நோப்பிளிலிருந்து இத்தாலியில் இறக்குமதி செய்யப்பட்ட தொழில்களை உதாரணமாய்க் குறிப்பிடலாம். இரண்டாவதாக, வணிகர் சிறு கைவினை அதிபர்களை தமது இடையாளர்களாய் மாற்றிக் கொள்கிறார்; அல்லது நேரடியாகவே சுயேச்சை உற்பத்தியாளரிடமிருந்து கொள்முதல் செய்து, அவரை பெயரளவில் சுயேச்சையானவராகவும் அவரது பொருளுற்பத்தி முறையை மாற்றமின்றியும் விட்டு வைக்கிறார். மூன்றாவதாக, தொழிலதிபர் வணிகராகி நேரடியாகவே மொத்த விற்பனைச் சந்தைக்காக உற்பத்தி செய்கிறார்.

மத்திய காலத்தில் வணிகர் ஆனவர் கைவினைச் சங்கங்களோ விவசாயிகளோ உற்பத்தி செய்த பண்டங்களைப் போய் சரியாகச் சொல்வது போல - 'கைமாற்றுகிறவராகவே' இருந்தார்.* வணிகர் தொழிலதிபர் ஆகிறார்; சரியாகச் சொன்னால், கைவினைஞர்களை, முக்கியமாய் கிராமபுற சிறு உற்பத்தியாளர்களை தனக்கு வேலை செய்ய வைக்கிறார். மறுதலையாக உற்பத்தியாளர் வணிகராகிறார். எடுத்துக்காட்டாக, நெசவுக் கைவினைஞர் தமக்குத் தேவையான கம்பளியை வணிகரிடமிருந்து சன்னம் சன்னமாய்ப் பெற்று, தமது பணியாளர்களோடு சேர்ந்து அவருக்கு வேலை செய்வதற்கு பதிலாக தாமே தமக்குத் தேவையான கம்பளி அல்லது நூலை வாங்கிக் கொள்கிறார், நெய்த துணியை வணிகரிடம் விற்கிறார். உற்பத்தி - அடிக்கூறுகள் அவரே வாங்கிய சரக்குகளாக பொருளுற்பத்தி நிகழ்முறைக்குள் செல்கின்றன. யாரேனும் தனிப்பட்ட வணிகருக்காக அல்லது குறிப்பிட்ட நுகர்வாளர்களுக்காக உற்பத்தி செய்வதற்கு பதில் வர்த்தக உலகிற்காக உற்பத்தி செய்கிறார். உற்பத்தியாளரே வணிகராய் இருக்கிறார். வணிக-மூலதனம் செய்வதெல்லாம் சுற்றோட்ட வர்த்தகமானது கைத்தொழில்களும் கிராமப்புற வீட்டுத்

* போப், -ஆங்கிலப்பதிப்பாசிரியர்

தொழில்களும் பிரபுத்துவ வேளாண்மையும் முதலாளித்துவத் தொழில் முனைவுகளாக மாறுவதற்கு முன் நிபந்தனையாக இருந்தது. அது உற்பத்திப் பொருளை சரக்காக வளரச் செய்கிறது; ஓரளவு அதற்கு ஒரு சந்தையை ஏற்படுத்துவதன் மூலம் ஓரளவுக்கும், பழைய சரக்குகளுக்கு ஈடான புதுப்புது சரக்குகளை நுழைத்து, உற்பத்தித் துறைக்கு புதிய கச்சாப் பொருட்களையும் துணைப் பொருட்களையும் வழங்குவதன் மூலம் ஓரளவுக்கும் இதைச் செய்து முடிக்கிறது; ஆரம்பத்திலிருந்தே உள்நாட்டுச் சந்தையிலும் உலகச் சந்தையிலுமான வர்த்தகத்திற்கென புதிய உற்பத்தி கிளைகள் இவ்விதம் தொடக்கப்படுகின்றன. உலகச் சந்தையில் பிறக்கும் உற்பத்தி நிலைமைகளிலான வர்த்தகத்திற்குகெனவும் கூட இந்தப் புதிய கிளைகள் தொடக்கப்படுகின்றன. பட்டறைத்தொழில், குறிப்பாகப் பெருவீதத் தொழில் துறை போதிய வலிமை பெற்றவுடனே அதுவே தனக்கென்று சந்தையைத் தோற்றுவிக்கிறது. தன் சரக்குகளைக் கொண்டு சந்தையைக் கைப்பற்றுகிறது. இக்கட்டத்தில் வர்த்தகமானது தொழிற்துறை உற்பத்தியின் பணியாள் ஆகிறது; தொடர்ந்து சந்தை விரிந்து செல்வது இவ்வுற்பத்திக்கு இன்றியமையாத் தேவையாகிறது. பெருந்திரள் உற்பத்தி தொடர்ந்து மேன்மேலும் விரிவடைந்து, இருந்து வரும் சந்தையை நிரம்பி வழியச் செய்கிறது, இவ்விதம் இச்சந்தை இன்னுமதிகமாய் விரிவடைவதற்காக, அதன் வரம்புகளை உடைத்துச் செல்வதற்காக ஓயாமல் பாடுபடுகிறது. இந்தப் பெருந்திரள் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் பருமனும் உழைப்பினது உற்பத்தித் திறனின் வளர்ச்சி நிலையும்தானே தவிர, (வர்த்தகமானது நிலவி வரும் வேண்டலை குறிப்பதாய் உள்ள வரை) வர்த்தகம் அல்ல. எப்போதுமே தொழில்துறை முதலாளி உலகச் சந்தையை கண்முன்னே நிறுத்திக் கொள்கிறார், தமது சரக்குகளின் அடக்க-விலைகளை உள் நாட்டிலும் உலகெங்கிலும் நிலவும் சந்தை-விலைகளோடு ஒப்பு நோக்குகிறார், அப்படித்தான் அவர் ஓயாமல் ஒப்பு நோக்கியாக வேண்டும். முன் சென்ற காலத்தில் இப்படி ஒப்பு நோக்கும் வேலை அநேகமாய் முழுக்க முழுக்கவே வணிகர்களுக்குரியதாய் இருந்தது, இவ்விதம் தொழில்துறை மூலதனத்தின் மீது வணிக-மூலதனம் மேலாதிக்கம் பெறச் செய்தது.

நவீன பொருளுற்பத்தி முறை பற்றிய முதல் தத்துவார்த்த பரிசீலனை வாணிக ஊக்கப் பொருளாதாரம் - சுற்றோட்ட நிகழ்முறையின் மேலோட்டமான புலப்பாடுகளிலிருந்து, வணிக-மூலதனத்தின் அசைவியக்கங்களில் தனிப்படுத்தப்படும்

இப்புலப்பாடுகளிலிருந்து தொடங்குவது அவசியமாயிற்று, வேறு வழியில்லை; எனவே அது புறத்தோற்றத்தை மட்டுமே பற்றிக் கொண்டது. ஒரு காரணம் என்னவென்றால், வணிக-மூலதனம்தான் பொதுவாக மூலதனத்தின் தடையிலா நிலவியல் வடிவங்களிலேயே முதலாவதாகும். மற்றொரு காரணம் என்னவென்றால், பிரபுத்துவப் பொருளுற்பத்தியைப் புரட்சிகரமாய் மாற்றியமைக்கும் முதற்காலக் கட்டத்தில் - நவீன பொருளுற்பத்தியின் பிறப்புக் காலத்தில் - வணிக - மூலதனம் மிகப் பெரும் தாக்கம் செலுத்தியது. தத்துவார்த்தப் பகுப்பாய்வு சுற்றோட்ட நிகழ்முறையிலிருந்து பொருளுற்பத்தி நிகழ்முறைக்குச் செல்லும் போதுதான் உண்மையான நவீனப் பொருளாதார விஞ்ஞானம் ஆரம்பமாகிறது. வணிக-மூலதனத்தைப் போலவே வட்டி-மூலதனமும் மிகப் பழைய மூலதன வடிவமாகும். ஆனால் வாணிக ஊக்கப் பொருளாதாரம் இந்த மூலதன வடிவத்தைத் தொடக்க நிலையாகக் கொள்வதற்கு பதில், ஏன் அதற்கு எதிரான சொற்போரில் இறங்குகிறது என்று பிறகு பார்ப்போம்.

## பகுதி V

# இலாபமானது வட்டியாகவும் தொழில் முனைவின் இலாபமாகவும் பிரிதல்

## அத்தியாயம் XXI

## வட்டி-மூலதனம்

பொது இலாப வீதம் அல்லது சராசரி இலாப வீதத்தை முதலில் பரிசீலித்த போது (இப்பாகத்தின் பகுதி II) நாம் இவ்வீதத்தை அதன் முழுநிறை வடிவில் நம்முன் வைத்துக் கொள்ளவில்லை; இலாபத்தின் சமனமாதல் வெவ்வேறு துறைகளில் முதலீடாகியுள்ள தொழில்துறை மூலதனங்கள் இடையிலான சமனமாதலாக மட்டுமே காணப்பட்டது. முன்சென்ற பகுதியில் இத்துடன் கூடுதலாய், இந்தச் சமனமாதலில் வணிக-மூலதனம் பங்கு பெறுவதைப் பரிசீலித்தோம்; வர்த்தக-இலாபத்தையும் பரிசீலித்தோம். பொது இலாப வீதமும் சராசரி இலாபமும் முன்னைக் காட்டிலும் இப்போது குறுகிய வரம்புகளில் காணப்பட்டன. நமது பகுப்பாய்வின் போக்கில் இதனை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது வருங்காலத்தில் பொது இலாப வீதத்தையோ சராசரி இலாபத்தையோ குறிப்பிடும் போதெல்லாம் பின்னால் குறிப்பிட்ட இப்பொருளிலேயே குறிப்பிடுகிறோம். அதாவது சராசரி இலாப வீதத்தின் இறுதி வடிவத்தை மட்டுமே சொல்கிறோம். வணிக-மூலதனத்துக்கானாலும் தொழில்துறை மூலதனத்துக்கானாலும் இவ்வீதம் ஒன்றே ஆதலால், இந்த சராசரி இலாபத்தைப் பொறுத்த வரை தொழில்துறை இலாபத்தையும் வர்த்தக-இலாபத்தையும் வேறுபடுத்திப் பார்க்கும் அவசியம் மறைந்து விட்டது. உற்பத்தித் துறையில் தொழில் வகை முதலீடாக இருந்தாலும் சரி, சுற்றோட்டத் துறையில் வர்த்தக வகை முதலீடாக இருந்தாலும் சரி. மூலதனம் அதன் பருமனுக்கேற்ப ஒரே வருடாந்தர சராசரி இலாபத்தையே தருகிறது.

பணம் - உள்ளபடியே பணமாகவோ அல்லது சரக்குகளாகவோ நிலவுகிற குறிப்பிட்ட மதிப்பளவின் சுயேச்சை தெரிவிப்பாக இங்கே கொள்ளப்படும் பணம்-முதலாளித்துவப் பொருளுற்பத்தியின்

அடிப்படையில் மூலதனமாக மாற்றப்படலாம். இவ்விதம் குறிப்பிட்ட மதிப்பென்னும் நிலையிலிருந்து தற்பெருக்கும் அடைகிற, அல்லது அதிகரித்துச் செல்கிற மதிப்பாக மாற்றப்படலாம். அது இலாபத்தை உற்பத்திச் செய்கிறது. அதாவது முதலாளி தொழிலாளர்களிடமிருந்து குறிப்பிட்ட அளவு ஊதியமிலா உழைப்பை, உபரி-உற்பத்தியை, உபரி-மதிப்பைக் கறப்பதையும் தனதாக்கிக் கொள்வதையும் சாத்தியமாக்குகிறது. இவ்வழியில்-பணம் என்ற முறையில்-அதற்குள்ள பயன்-மதிப்பை அன்னியில் - அது ஒரு கூடுதல் பயன்-மதிப்பையும் ஈட்டுகிறது, அதாவது மூலதனமாகச் செயல்படுவதென்னும் பயன்-மதிப்பை ஈட்டுகிறது. அப்போது அதன் பயன்-மதிப்பு அது மூலதனமாக மாற்றப்படும்போது உற்பத்தி செய்கிற இலாபத்தில்தான் அடங்கியுள்ளது. உள்ளுறை மூலதனம் என்னும் இப்பொறுப்பில், இலாபத்தை உற்பத்தி செய்யும் சாதனம் என்ற முறையில், அது சரக்காகிறது, ஆனால் ஒரு தனி வகைச் சரக்காகிறது. இதையே வேறு விதமாகச் சொன்னால், மூலதனமானது மூலதனம் என்ற முறையில் சரக்காகிறது.[55]

வருடாந்தர சராசரி இலாப வீதம் 20% எனக் கொள்வோம். அப்படியானால் £100 மதிப்புள்ள இயந்திரம் சராசரி நிலைமைகளிலும் சராசரி மதி நுட்பத்தோடும் காரிய நோக்குள்ள ஊக்கத்தோடும் மூலதனமாக ஈடுபடுத்தப்படும்போது £20 இலாபம் கிடைக்கும். ஆகவே £100 வைத்துள்ள ஒருவர் £100ஐ £120 ஆக்கும் சக்தியை, அதாவது £20 இலாபத்தை உற்பத்தி செய்யும் சக்தியைப் பெற்றுள்ளார். அவர் £100 உள்ளுறை மூலதனத்தைப் பெற்றுள்ளார். அவர் இந்த £100ஐ இன்னொருவர் உண்மை மூலதனமாகப் பயன்படுத்திக் கொள்ளுவதற்காக ஓராண்டு காலத்துக்குத் கொடுக்கிறார் என்றால், £20 இலாபத்தை உற்பத்தி செய்யும் சக்தியைக் கொடுக்கிறார்-இந்த உபரி-மதிப்புக்காக அந்த இன்னொருவர் எச்செலவும் செய்வதில்லை, அதற்கீடாக எவ்விலையும் கொடுப்பதில்லை, அந்த இன்னொருவர் ஆண்டின் முடிவில் £100இன் உடைமையாளருக்கு இலாப உற்பத்தியிலிருந்து £5 கொடுக்க வேண்டுமானால், இவ்விதம் அவர் £100இன் பயன்-மதிப்புக்கு - அதன் மூலதனப் பணியாகிய, அதாவது

(55) பொருளாதார அறிஞர்கள் விவகாரத்தை இந்தக் கோணத்திலிருந்து புரிந்து கொள்ளும்படியான சில நூற்பகுதிகளை இங்கே மேற்கோளாய்த் தரலாம். - 'நீங்கள் (இங்கிலாந்து வங்கி) மூலதனச் சரக்கில் மிகப் பெரும் வர்த்தகர்கள் அல்லவா? என்பது இந்த வங்கியின் இயக்குநர் ஒருவர் வங்கிச் சட்டங்கள் பற்றிய அறிக்கைக்காக சாட்சி என்ற முறையில் விசாரிக்கப்பட்ட போது அவரிடம் கேட்கப்பட்ட கேள்வியாகும். (காமன்ஸ் சபை, 1857, பக்கம் 104.)

£20 இலாப உற்பத்தி செய்யும் பணியாகிய பயன்-மதிப்புக்கு - விலை கொடுப்பார். பண-உடைமையாளருக்குச் செலுத்தப்படும் இலாபப் பகுதி வட்டி என்று அழைக்கப்படுகிறது; மூலதனம் செயல்படும் போது தானே சுருட்டிக் கொள்வதற்கு பதில் மூலதனத்தின் உடைமை யாளருக்கு விட்டுக் கொடுக்கிற இலாபப் பகுதிக்கு மறுபெயரே, அல்லது தனிச் சொல்லே வட்டி என்பது.

£100ஐப் பெற்றிருப்பது வட்டியை அத்தொகையின் உடைமை யாளருக்கு வட்டியை - அவரது மூலதனத்தைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் இலாபத்தின் அந்தக் குறிப்பிட்டப் பகுதியை - சுருட்டிக் கொள்ளும் சக்தியைக் கொடுப்பது வெளிப்படையானது. அவர் அந்த இன்னொருவருக்கு £100ஐக் கொடுத்திரா விட்டால், பின்னவர் இலாபமேதும் உற்பத்தி செய்திருக்க முடியாது, இந்த £100ஐப் பொறுத்தவரை முதலாளியாகச் செயல்பட்டிருக்கவே முடியாது.[56]

ஜில்பார்ட் பேசுவது போல் (பார்க்கவும்:குறிப்பு) இங்கு இயற்கை நீதி பற்றிப் பேசுவது அபத்தம். உற்பத்திச் செயல்களிடையிலான கொடுக்கல் வாங்கல்களின் நீதியானது இவை உற்பத்தி உறவுகளின் இயற்கை விளைவுகளாய் எழுகிறவை என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தப் பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தப்பட்ட தரப்புகள் வேண்டுமென்றே செய்யும் செயல்களாகவும், அவர்களது பொதுச் சித்தத்தின் தெரிவிப்புகளாகவும், தனிப்பட்ட ஏதேனும் ஒரு தரப்புக்கு எதிராக சட்டத்தால் அமல் செய்யக்கூடிய ஒப்பந்தங்களாகவும் இடம் பெற்றுள்ள சட்டநீதி வடிவங்கள் வெறும் வடிவங்களே ஆதலால் இந்த உள்ளடக்கத்தை நிர்ணயிக்க முடியாது. அவை அதனைத் தெரிவிப்பதோடு சரி. இந்த உள்ளடக்கமானது பொருளுற்பத்தி முறைக்கு ஒப்ப அமையும் போதெல்லாம் அம்முறைக்கு ஏற்றதாய் இருக்கும்போதெல்லாம், அது நீதியாகும். அம்முறைக்கு முரணாய் இருக்கும்போதெல்லாம் அது அநீதியாகும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் அடிப்படையின் அடிமை முறை அநீதியாகும்; சரக்குகளின் தரத்தில் மோசடி செய்வதும் கூட அதே போல் அநீதியாகும்.

£100 ஆனது மூலதனமாகச் செயல்படுவதால்தான் - தொழில்துறை மூலதனமாகச் செயல்பட்டாலும் சரி, வணிக-மூலதனமாகச்

---

(56) 'பணம் கடன்வாங்குகிற ஒருவரின் நோக்கம் அப்பணத்தைக் கொண்டு இலாபம் சம்பாதிப்பதாய் இருக்குமானால், அவர் தமது இலாபத்தில் ஒரு பகுதியை கடன் கொடுத்தவருக்குத் தர வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும் இயற்கை நீதிக் கோட்பாடாகும்.' (ஜில்பார்ட், வங்கிகளின் கொள்கையும் வரலாறும், லண்டன், 1834, பக்கம்.163.)

செயல்பட்டாலும் சரி - £20 இலாபம் உற்பத்தி செய்கிறது. ஆனால் இம்மூலதனப் பணிக்கு இன்றியமையாதது இத்தொகை மூலதனமாகச் செலவிடப்படுவதாகும், அதாவது (தொழில்துறை மூலத்னமாக இருந்தால்) உற்பத்திச் சாதனங்களை அல்லது (வணிக-மூலதனமாக இருந்தால்) சரக்குகளை வாங்குவதில் செலவிடப்படுவதாகும். ஆனால் பணம் இருந்தால்தான் அதைச் செலவிட முடியும். £100 இன் உடைமையாளராகிய A ஆனவர் அத்தொகையை சொந்த நுகர்வுக்குச் செலவிடுவதாகவோ, சேர்ப்பாய் வைத்துக் கொள்வதாகவோ இருந்தால், B ஆனவர் செயல்படும் முதலாளி என்ற முறையில் அததொகையை மூலதனமாக முதலீடு செய்திருக்க முடியாது. B தம் சொந்த மூலதனத்தைச் செலவிடாமல் A இன் மூலதனத்தையே செலவிடுகிறார்; எப்படியானாலும் அவர் A இன் மூலதனத்தை A இன் சம்மதமில்லாமல் செலவிட முடியாது. ஆகவே, உண்மையில் A தான் ஆரம்பத்தில் £100ஐ மூலதனமாகச் செலவிடுகிறார்; முதலாளியாக அவர் புரியும் பணி £100ஐ இப்படி மூலதனமாகச் செலவிடுவதோடு நின்று விடுகிறது. இந்த £100ஐப் பொறுத்த வரை, A ஆனவர் அத்தொகையை B க்கு கடனாய்க் கொடுப்பதால்தான், இவ்விதம் அதை மூலதனமாகச் செலவிடுவதால்தான் B ஆனவர் முதலாளியாகச் செயல்படுகிறார். B முதலாளியாகச் செயல்படுவது A அவருக்கு £100ஐக் கடனாய்க் கொடுத்து, இவ்விதம் மூலதனமாகச் செலவிடுவதால்தான்.

வட்டி-மூலதனத்தின் தனிச் சுற்றோட்டத்தை முதலில் பரிசீலிப்போம். பிறகு இரண்டாவதாக, இம்மூலதனம் அதற்கேயுரிய முறையில் சரக்காக விற்கப்படுவதை, அதாவது ஒரேயடியாய் கைவிடப்படுவதற்குப் பதில் கடனாகத் தரப்படுவதை நாம் பரிசீலித்தாக வேண்டும்.

A ஆனவர் Bக்கு முன்னீடு செய்கிற பணம்தான் தொடக்கமுனை. இந்த முன்னீடு பிணையத்துடனோ பிணையமின்றியோ செயல் படலாம். முதலாவதாகக் குறிப்பிட்ட வடிவம் அதிகம் புராதனமானது; சரக்குகள் மீதான, அல்லது மாற்று உண்டியல்கள், மூலதனப் பங்குகள் போன்ற காகிதப் பத்திரத்தின் மீதான முன்னீடுகளுக்கு மட்டும் இது பொருந்தாது. இந்தத் தனி வடிவங்கள் இப்போது நம் கருத்துக்குரியவை அல்ல. இங்கு நாம் வழக்கமான வட்டி-மூலதனத்தை அதன் வழக்கமான வடிவிலேயே பரிசீலிக்கிறோம்.

Bஇன் வசம் இருக்கும் போது பணம் உள்ளபடியே மூலதனமாக மாற்றப்படுகிறது. M—C—M' என்பதன் ஊடாகச் சென்று, M' ஆக

M+ ΔM ஆக A இடம் திரும்புகிறது; இதில் ΔMவட்டியைக் குறிக்கும். மூலதனமானது நீண்ட காலத்துக்கு Bஇன் வசம் இருந்து வர முறையான கால இடைவெளிகளில் வட்டி செலுத்தப்படும் நேர்வை இங்கே எளிமையின் நிமித்தம் பரிசீலிக்காமல் விடுகிறோம்.

ஆக, அசைவியக்கம் இதுதான்: M—M—C—M'—M'.

இங்கே இரட்டித்துக் காணப்படுவது *(1)* பணம் மூலதனமாகச் செலவிடப்படுவதும் *(2)* ஈடேற்றம் பெற்ற மூலதனமாக, M' அல்லது M+ ΔMஆக மீண்டு வருவதும் ஆகும்.

வணிக-மூலதனத்தின் அசைவியக்கமாகிய M—C—Mஎன்பதில் ஒரே சரக்கு இருமுறை கைமாறுகிறது, வணிகர் வணிகருக்கே விற்றால் இருமுறைக்கும் அதிகமாய் கைமாறுகிறது. ஆனால் ஒரே சரக்கு இப்படி கை மாறுகிற ஒவ்வொரு நிகழ்வும் ஓர் உருமாற்றத்தை, சரக்கின் வாங்கல் அல்லது விற்றலைச் சுட்டுகிறது - சரக்கு நுகர்வில் சேரும் வரை இந்நிகழ்முறை எத்தனை தடவை வேண்டுமானாலும் திரும்பத் திரும்ப இடம் பெறலாம்.

மறுபுறம், C—M—C இல் ஒரே பணம் இருமுறை கைமாறுகிறது; ஆனால் இது சரக்கின் முழுமையான உருமாற்றத்தைச் சுட்டுகிறது; சரக்கு முதலில் பணமாக மாற்றப்பட்டு, பிறகு பணம் என்னும் நிலையிலிருந்து திரும்பவும் இன்னொரு சரக்காக மாற்றப்படுகிறது.

ஆனால் வட்டி-மூலதனத்தில் M முதல்தடவை கைமாறுவது சரக்கு உருமாற்றத்திலோ மூலதன மறுவுற்பத்தியிலோ ஒரு சட்டம் அல்லவே அல்ல. அது இரண்டாவது தடவை செலவிடப்படும் போதுதான், அதை வைத்து வர்த்தகம் புரிகிற அல்லது அதனை திறனுடை-மூலதனமாக மாற்றுகிற செயலார்ந்த முதலாளியின் கையில்தான் அது முதன்முதலாய் அப்படியொரு கட்டமாகிறது. Mஇன் முதல் கை மாற்றமானது அது A இடமிருந்து Bக்கு மாற்றப்படுவதற்கு மேல்-வழக்கமாக குறிப்பிட்ட சில சட்ட வடிவங்கள், உடன்படிக்கைகளின்படி நடைபெறும் இந்த கைமாற்றத்திற்கு மேல் - இங்கு வேறு எதையும் குறித்திடாது.

மூலதனமென்ற முறையிலான பணத்தின் இந்த இரட்டைச் செலவீட்டுக்கு-இதில் முதலாவது செலவீடு A இடமிருந்து Bக்கு நடைபெறும் கைமாற்றம் மட்டுமே - அதன் இரட்டை மீள்வு ஈடாகிறது. M' அல்லது M+ΔM என்ற முறையில் அது நிகழ்முறையிலிருந்து வெளியேறி B இடம், அதாவது முதலாளியாகச் செயல்படுகிறவரிடம் திரும்பி வருகிறது. பிறகு அவர் அதனை திரும்பவும் Aக்கு மாற்றுகிறார்;

ஆனால் இலாபத்தில் ஒரு பகுதியையும் சேர்த்துக் கொண்டு, ஈடேற்றம் பெற்ற மூலதனமாக, M+ ΔM ஆக அது A இடம் திரும்புகிறது. இதில் Δ என்பது இலாபம் முழுவதும் அல்ல, இலாபத்தில் ஒரு பகுதி மட்டுமே - வட்டியே - ஆகும் அது B இடம் திரும்பி வரும்போது அவரால் செலவிடப்பட்ட ஒன்றாகவே, செயல்படும் மூலதனமாகவே, ஆனால் Aஇன் உடைமையாகத் திரும்புகிறது. ஆகவே அதன் மீள்வை முழுமைப்படுத்த வேண்டுமானால் B அதனை A இடம் திருப்பித் தர வேண்டும். ஆயின் B ஆனவர் இலாபத்தில் ஒரு பகுதியையும் - வட்டி என்னும் பெயர் கொண்டதும், இந்த மூலதனத்தைக் கொண்டு அவர் சம்பாதித்ததுமாகிய இந்தப் பகுதியையும் - A இடம் ஒப்படைத்தாக வேண்டும். ஏனென்றால் அவருக்கு A ஆனவர் பணத்தை மூலதனமாகவே கொடுத்தார், அதாவது தன் அசைவியக்கத்தில் பாதுகாக்கப்படுவதோடு, தன் உடைமை யாளருக்கு உபரி-மதிப்பையும் படைத்தளிக்கிற மதிப்பாகவே கொடுத்தார். செயல்படும் மூலதனமாய் இருக்கும்வரைதான் அது B இன் கையில் இருந்து வருகிறது. அது - நிர்ணயித்த தேதியில் - மீண்டு வந்தவுடனே மூலதனமாகச் செயல்படுவது நின்றுவிடுகிறது. மூலதனமாகச் செயல்படுவது நின்றுவிடும் போது, அதனை A இடம் திரும்பிக் கொடுத்தாக வேண்டும் - அவர்தான் அதன் சட்டபூர்வ உடைமையாளர்; என்னும் நிலையில் ஒரு போதும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

இந்த சரக்கிற்கே, சரக்காக இருக்கும் மூலதனத்திற்கே உரித்தானதாகிய கடன்-வடிவம் விற்றல்-வடிவத்துக்குப் பதிலாய் ஏனைய கொடுக்கல் வாங்கல்களிலும் இடம் பெறுவதாகும்; மூலதனம் இங்கே சரக்காகத் திகழ்கிறது, அல்லது மூலதனமாக இருக்கும் பணம் சரக்காகிறது என்ற எளிய விளக்கத்திலிருந்து இக்கடன் வடிவம் பெறப்படுகிறது.

இங்கே ஒன்றை வேறுபடுத்தி பார்க்க வேண்டும்.

முன்பே பார்த்த ஒன்றை (இரண்டாம் பாகம் அத்தியாயம் I) இவ்விடத்தில் சுருக்கமாய் நினைவு கூர்வோம். அதாவது சுற்றோட்ட நிகழ்முறையில் மூலதனம் சரக்கு-மூலதனமாகவும் பண-மூலதன மாகவும் பயன்படுகிறது. ஆனால் இவ்விரு வடிவங்களில் எந்த ஒன்றிலும் மூலதனம் மூலதனமென்ற முறையில் சரக்காவதில்லை.

திறனுடை-மூலதனம் சரக்கு-மூலதனமாக மாறியதும், அதனைச் சரக்காக விற்கும் பொருட்டு சந்தைக்கு கொண்டு வந்தாக வேண்டும்.

சந்தையில் அது வெறும் சரக்காகவே செயல்படுகிறது. அப்போது முதலாளியானவர் சரக்குகளை விற்பவராக மட்டுமே காணப்படுகிறார் - வாங்குகிறவர் எப்படி சரக்குகளை வாங்குகிறவராக மட்டுமே இருக்கிறாரோ அதேபோல, சரக்காக இருக்கும் உற்பத்திப் பொருள் விற்கப்படுவதன் மூலம் சுற்றோட்ட நிகழ்முறையில் அதன் மதிப்பை ஈடேற்றம் செய்து கொண்டாக வேண்டும், பணமாக உருமாற்றம் பெற்றாக வேண்டும். எனவே, இந்தச் சரக்கு நுகர்வாளரால் அவசியப்பண்டமாக வாங்கப்பட்டாலும் முதலாளியால் உற்பத்திச் சாதனமாக அதாவது அவரது மூலதனத்தின் அடக்கக்கூறாக வாங்கப்பட்டாலும், எல்லாம் ஒன்றுதான். சுற்றோட்டச் செயலில் சரக்கு-மூலதனம் சரக்காக மட்டுமே செயல்படுகிறது, மூலதனமாக அல்ல. அது சாதாரணச் சரக்கிலிருந்து வேறான சரக்கு-மூலதனமாக இருப்பதற்கு காரணம் என்னவென்றால், (1) அது உபரி-மதிப்பை ஏந்தி வருகிறது; ஆகவே அதன் மதிப்பின் ஈடேற்றம் அதேபோது உபரி-மதிப்பின் ஈடேற்றமும் ஆகும்; ஆனால் அது ஒரு சரக்காகவே, குறிப்பிட்ட விலை கொண்ட உற்பத்திப் பொருளாகவே நிலவுவதில் இதனால் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை; (2) அது சரக்காகச் செயல்படுவது மூலதனமாக அது மறுவுற்பத்திச் செய்யப்படும் நிகழ்முறையில் ஒரு கட்டமாகும்; ஆகவே சரக்கு என்ற விதத்திலான அதன் அசைவியக்கம் அதன் நிகழ்முறையின் பகுதியான அசைவியக்கமாகவே இருப்பதால் அதே போது மூலதனம் என்ற விதத்திலான அதன் அசைவியக்கமும் ஆகும். என்றாலும் அது விற்றலின் மூலமாகவே சரக்கு-மூலதனம் ஆகிவிடுவதில்லை; இந்தப் பிரத்தியேகமான மதிப்பளவு மூலதனம் என்ற பொறுப்பில் நிகழ்த்தும் முழு அசைவியக்கத்தோடும் இந்த விற்றலுக்குள்ள தொடர்பின் மூலமாகத்தான் அது சரக்கு-மூலதனம் ஆகிறது.

இதேபோல், பண-மூலதனம் என்ற முறையில் அது உண்மையில் பணமாக மட்டுமே, அதாவது சரக்குகளை (உற்பத்தி-அடிக்கூறுகளை) வாங்கும் சாதனமாக மட்டுமே செயல்படுகிறது. இந்தப் பணம் அதே போது மூலதன-வடிவங்களில் ஒன்றாகிய பண-மூலதனமாகவும் இருப்பது வாங்கும் செயலில் இருந்து, இங்கு அது பணமாக ஆற்றும் உள்ளபடியான பணியிலிருந்து வருவதல்ல; மூலதனத்தின் மொத்த அசைவியக்கத்தோடு இச்செயலுக்குள்ள தொடர்பிலிருந்தே வருவதாகும்; ஏனென்றால் பணமாக மூலதனம் செய்யும் இந்தச்செயல் முதலாளித்துவ பொருளுற்பத்தி நிகழ்முறையைத் தொடக்கி வைக்கிறது.

ஆனால், சரக்கு-மூலதனமும் பண-மூலதனமும் உள்ளபடியே செயல்படுவதால், அதாவது உள்ளபடியே நிகழ்முறையில் பங்குவகிப்பதால், இங்கே சரக்கு-மூலதனம் சரக்காக மட்டுமே செயல்படுகின்றது, பண-மூலதனம் பணமாக மட்டுமே செயல்படுகிறது. முதலாளிக்கு அவரது சரக்குகள் மூலதனத்தைக் குறிப்பவையாக இருந்த போதிலும், உருமாற்றத்தை அதனளவில் பார்க்கையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் முதலாளி வாங்குகிறவரிடம் அவற்றை மூலதனமாக விற்பதில்லை. விற்கிறவரிடமும் அவர் பணத்தை மூலதனமாகப் பெறுவதில்லை. அவர் தமது சரக்குகளை கொடுக்கும் போது சரக்குகளாக மட்டுமே கொடுக்கிறார்; பணத்தைக் கொடுக்கும் போதும் பணமாக மட்டுமே, அதாவது சரக்குகளை வாங்கும் சாதனமாக மட்டுமே கொடுக்கிறார்.

முழுநிகழ்முறையுடனும் தொடர்புபடுத்திப் பார்க்கும் போதுதான், தொடக்க முனை அதேபோது மீள்வு முனையாகவும் விளங்குகிற தருணத்தில், M—M' அல்லது C—C'ல், சுற்றோட்ட நிகழ்முறையில் இருக்கும் மூலதனம் மூலதனமாகக் காட்சியளிக்கிறது (உற்பத்தி நிகழ்முறையிலோ, தொழிலாளியை முதலாளிக்கு கீழ்ப்படுத்துவதன் மூலமும் உபரி-மதிப்பினது உற்பத்தியின் மூலமும் மூலதனம் மூலதனமாகத் காட்சியளிக்கிறது). ஆனால் இப்படி மீள்வு ஏற்படும் இத் தருணத்தில் தொடர்பு மறைந்துவிடுகிறது. அப்போது பெறப்படுவது M' அல்லது M+ ΔMஆகும். ஆரம்பத்தில் முன்னீடு செய்யப்பட்ட தொகை + கூடுதல் என்பதற்குச் சமமான பணத்தொகை ஆகும் - ஈடேற்றம் பெற்ற உபரி - மதிப்பையே கூடுதல் என்கிறோம் (ΔM சேர்ந்து அதிகரித்த மதிப்பளவு பண வடிவில் இருந்தாலும் சரக்குகளாக இருந்தாலும், உற்பத்தி அடிக்கூறுகளாக இருந்தாலும் அது பற்றி கவலையில்லை). மூலதனமானது ஈடேற்றம் பெற்ற மூலதனமாக, பெருக்கம் அடைந்த மதிப்பாக நிலவுகிற இந்த மீள்வு முனையிலேயே தான் - இந்த முனையானது மெய்யாகவோ கற்பனையாகவோ ஓய்வுமுனையாக நிர்ணயிக்கப்படுவதால் - மூலதனம் ஒரு போதும் இவ்வடிவில் சுற்றோட்டத்திற்குள் நுழைவதில்லை; மாறாக அது முழு நிகழ் முறையின் விளைவாகவும் சுற்றோட்டத்திலிருந்து விலக்கிக் கொள்ளப் பட்டதாகவே காணப்படுகிறது. அது திரும்பவும் செலவிடப்படும் போதெல்லாம், ஒருபோதும் வேறு ஒருவரிடம் மூலதனமாகத் தரப்படுவதில்லை சாதாரணச் சரக்காகவே அவரிடம் விற்கப்படுகிறது, அல்லது சரக்குகளுக்கு பிரதியாய் சாதாரணப் பணமாகவே அவரிடம் தரப்படுகிறது. அது சுற்றோட்ட நிகழ்முறையில் ஒரு போதும்

மூலதனமாக விளங்குவதில்லை, சரக்காகவோ பணமாகவோதான் விளங்குகிறது; இந்தக் கட்டத்தில் மற்றவர்களுக்கு அதன் ஒரே நிலவல் வடிவம் இது தான். சரக்குகளும் பணமும் இங்கு மூலதனமாய் இருப்பது சரக்குகள் பணமாக மாறுவதாலோ, பணம் சரக்குகளாக மாறுவதாலோ அல்ல; விற்பவர்களுடனோ வாங்குபவர்களுடனோ அவற்றுக்குள்ள மெய்யான உறவுகளில் அல்ல, (அகவயமாய் சொல்வதானால்) முதலாளியுடன் அவற்றுக்குள்ள கருத்தியல் உறவுகளில் மட்டுமே, அல்லது (புறவயமாய் சொல்வதானால்) மறுவுற்பத்தி நிகழ் முறையிலான கட்டங்கள் என்றவிதத்தில் மட்டுமே இங்கு அவை மூலதனம் ஆகும். மூலதனம் உள்ளபடியே இயங்குகிற மூலதனமாய் இருப்பது உற்பத்தி நிகழ் முறையில் தானே தவிர, அதாவது உழைப்புச் சக்தி சுரண்டப்படும் நிகழ் முறையில்தானே தவிர சுற்றோட்ட நிகழ்முறையில் அல்ல.

ஆனால் வட்டி-மூலதனத்தைப் பொறுத்தவரை நிலைமை வேறு; இந்த வேறுபாடுதான் அதற்கு அதன் பிரத்தியேகத் தன்மையை கொடுக்கிறது. பணம் உடைமையாளர் தமது பணத்தை வட்டி-மூலதனமாக பெருக்கி கொள்ள விரும்பி, அதை இன்னொருவரிடம் ஒப்படைக்கிறார், சுற்றோட்டத்தில் விடுகிறார், மூலதனமாய் இருக்கும் சரக்காக மாற்றுகிறார். தமக்கு மட்டும் மூலதனமாய் இருப்பதை மற்றவர்களுக்கும் மூலதனம் ஆக்குகிறார். அது அதனை கொடுக்கின் றவருக்கு மூலதனமாய் இருப்பது மட்டுமல்லாமல், தொடக்கத்தி லிருந்தே இன்னொருவருக்கும் மூலதனமாகத் தரப்படுகிறது, உபரி-மதிப்பைப் படைக்கிற, இலாபத்தைப் படைக்கிற பயன் மதிப்பு வாய்க்கப்பெற்ற மதிப்பாக தரப்படுகிறது; இம்மதிப்பு அதன் அசைவியக்கத்தில் தன்னை பாதுகாத்துக் கொள்கிறது, தன் பணியை ஆற்றி முடித்த பிறகு தன் ஆரம்ப உடைமையாளரிடம், இங்கே பண உடைமையாளரிடம் திரும்பிவிடுகிறது. ஆகவே அது குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே அவரை விட்டுப் பிரிந்து செல்கிறது, தற்காலிக மாகவே தன் உடைமையாளரின் கையிலிருந்து செயல்படும் முதலாளியின் கைக்குச் செல்கிறது. ஆக அது கொடுப்பு வடிவில் தரப்பட்டுவிடுவதும் இல்லை, விற்கப்பட்டு விடுவதும் இல்லை, கடனாக மட்டுமே தரப்படுகிறது; முதலாவதாக அது குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகு தொடக்க முனைக்கே திரும்பி வரும் இரண்டாவதாக அது ஈடேற்றம் பெற்ற மூலதனமாய் - உபரி-மதிப்பை படைக்கும் ஈடேற்றம் செய்து கொண்ட சக்தியாகிய தன் பயன்-மதிப்பை

மூலதனமாய் - திரும்பி வரும் என்னும் புரிதலோடுதான் ஒப்புவிக்கப் படுகிறது,

மூலதனமாக கடன் தரப்படும் சரக்குகள் அவற்றின் குணங்களைப் பொறுத்து நிலை-மூலதனமாகவோ சுழல்-மூலதனமாகவோ கடன் தரப்படுகின்றன. பணத்தை இரண்டில் எந்த வடிவத்திலும் கடன் தரலாம். எடுத்துக்காட்டாக ஆண்டுத் தொகையின் வடிவில் பணம் திருப்பிச் செலுத்தப்படுமானால் அதனை நிலை-மூலதனமாக கடன் தரலாம்; இதனால் மூலதனத்தின் ஒரு பகுதி வட்டியோடு திரும்பி வருகிறது. வீடு, கப்பல், இயந்திரம் போன்ற சில சரக்குகளை, அவற்றின் பயன்-மதிப்புகளது தன்மை காரணமாய் நிலை-மூலதனமாக மட்டுமே கடன் தர முடியும். என்றாலும் கடன் தரப்படும் மூலதனம் எல்லாம் - அதன் வடிவம் என்னவானாலும் சரி, அதன் பயன் மதிப்பினது தன்மை அதன் மீள்வில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தினாலும் சரி - எப்போதுமே பண-மூலதனத்தின் ஒரு பிரத்தியேக வடிவம்தான். ஏனென்றால் கடனாகத் தரப்படுவது எப்போதுமே குறிப்பிட்ட பணத்தை தொகையாக இந்தத் தொகையின் பேரில் தான் வட்டி கணக்கிடப்படுகிறது கடனாகத் தரப்படுவது எதுவானாலும் அது பணமாகவோ சுழல்-மூலதனமாகவோ இல்லாவிட்டால், நிலை-மூலதனம் மீள்கிற முறையிலேயே அதுவும் திருப்பிச் செலுத்தப் படுகிறது. கடன் கொடுத்தவர் காலவட்ட முறையில் அவ்வப்போது வட்டி பெற்றுக் கொள்கிறார், அத்துடன் நிலை-மூலதனத்தின் நுகரப்பட்ட மதிப்பில் ஒரு பகுதியையும் பெற்றுக் கொள்கிறார்; இந்தப் பகுதியானது கால வட்ட தேய்மானத்துக்கு சமதையாகும். நிர்ணயித்த காலவரையின் முடிவில், நிலை-மூலதனக் கடனில் நுகரப்படாமல் இருக்கும் பகுதி அப்படியே பண்ட வடிவில் திருப்பித் தரப்படுகிறது. கடன் தரப்படும் மூலதனம் சுழல்-மூலதனமாய் இருந்தால், அதுவும் சுழல்-மூலதனத்திற்கே உரிய முறையில் திருப்பித் தரப்படுகிறது.

ஆக எப்போதுமே மீள்வின் மறுவுற்பத்திச் செயலில் மூலதனம் உள்ளபடியே சுழன்று வரும் சுற்றினாலும் அதன் பிரத்தியேக வகைகளாலும் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் கடன்தரப்படும் மூலதனத்தைப் பொறுத்தவரை, அதன் கை மாற்றத்துக்கு வழி செய்த அதன் முன்னீடு கடனாக வடிவம் பெற்று இருப்பதால் அதன் மீள்வும் திருப்பிச் செலுத்தும் கொடுப்புகளாக வடிவம் பெறுகிறது.

இந்த அத்தியாயத்தில் உள்ளபடியான பண-மூலதனத்தை மட்டுமே பரிசீலிக்கிறோம்; இப்பண-மூலதனத்திலிருந்தே கடன்-மூலதனத்தின் ஏனைய வடிவங்கள் வருவிக்கப்படுகின்றன.

கடன்-மூலதனம் இரு வழிகளில் திரும்பி வருகிறது. மறுவுற்பத்தி நிகழ்முறையில் அது செயல்படும் முதலாளியிடம் திரும்புகிறது; பிறகு அதன் மீள்வானது கடன் கொடுத்த பண-முதலாளிக்கான கைமாற்றமாக, அதன் சட்டபூர்வ தொடக்க மனையாகிய உண்மை உடைமையாளருக்குத் திருப்பிச் செலுத்தும் கொடுப்பாக மீண்டும் ஒருமுறை நிகழ்கிறது.

உள்ளபடியான சுற்றோட்ட நிகழ்முறையில் மூலதனம் எப்போதுமே சரக்காவோ பணமாகவோ விளங்குகிறது. அதன் அசைவியக்கம் எப்போதுமே வரிசையான பல வாங்கல்களாகவும் விற்றல்களாகவும் பிரிகிறது. சுருங்கச் சொல்லின் சுற்றோட்ட நிகழ் முறை சரக்குகளின் உருமாற்றமாகப் பெயர்கிறது, மறுவுற்பத்தி நிகழ்முறையை அதன் முழு உருவில் நாம் பரிசீலிக்கும் போது நடப்பது வேறு. பணத்திலிருந்து தொடங்குவோமானால் (சரக்குகளிலிருந்து தொடங்கினாலும் இதே நிலைமைதான், ஏனென்றால் அவற்றின் மதிப்பிலிருந்தே தொடங்குகிறோம், அதாவது அவற்றையும் பணம் எனும் தன்மையிலேயே பார்க்கிறோம்). குறிப்பிட்ட பணத்தொகை செலவிடப்படுவதையும், குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு ஒரு கூடுதல் தொகையோடு திரும்பி வருவதையும் காண்போம். முன்னீடு செய்யப்படும் பணத்தொகை உபரி-மதிப்போடு திரும்பி வருகிறது. குறிப்பிட்ட சகடத்தில் செல்லும் போது அது குறைவுறாமல் இருந்திருப்பதோடு அதிகரித்தும் இருக்கிறது. ஆனால் இப்போது மூலதனமாக கடன் தரப்படும் பணமானது தன்னைப் பாதுகாத்துப் பெருக்கிக் கொள்வதும், குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு கூடுதல் தொகையோடு திரும்பி வருவதும், எந்நேரமும் இதே நிகழ்முறையை மீண்டும் நிகழ்த்த எந்நேரமும் தயாராய் இருப்பதுமாகிய பணத் தொகையாகவே கடன் தரப்படுகிறது. அது பணமாகவோ சரக்காகவோ செலவிடப்படுவதில்லை; அதாவது பண-வடிவில் முன்னீடு செய்யப்படும்போது, சரக்குக்குப் பிரதியாய் பரிவர்த்தனை செய்யப்படுவதில்லை, சரக்கை முன்னீடு செய்யப்படும் போதும் பணத்துக்குப் பிரதியாய் விற்கப்படுவதில்லை; மாறாக, அது மூலதனமாகவே செலவிடப்படுகிறது. மூலதனம் தானே தன்னுடன் இவ்விதம் உறவு கொள்கிறது; முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையை அதன் முழு உருவிலும் ஏக ஓர்மையாகவும் நோக்குகையில், இவ்வுறவு வெளிப்படக் காண்கிறோம்; இவ்வுறவில் மூலதனமானது பணத்தைப் பெற்றெடுக்கும் பணமாக விளங்குகிறது; இங்கே இடைநிலையான அசைவியக்கம் ஏதுமின்றி இங்கே இவ்வுறவு

மூலதனத்திற்கு அதன் தன்மையாக, பெயர்க் குறிப்பாக உரித்தாக்கப்படுகிறது. பண-மூலதனமாகக் கடன் தரப்படும் போது அது இப்பெயர்க் குறிப்போடு ஒப்புவிக்கப்படுகிறது.

பண-மூலதனம் வகிக்கும் பங்கைப் பற்றி புரூதோனின் கண்ணோட்டம் விசித்திரமான ஒன்று (Gratuité du crédit. Discussion entre M.F. Bastiat et M. Prudhon, *பாரிஸ், 1850*). கடன் கொடுப்பது விற்பதல்ல என்பதால் புரூதோனுக்கு அது ஒரு தீமையாகத் தெரிகிறது. வட்டிக்கு கடன் கொடுப்பது 'விற்கப்படும் பொருளின் உடைமையைத் துறக்காமலே ஒரே பண்டத்தை திரும்பத் திரும்ப விற்பதும் அதன் விலையை மீண்டும் மீண்டும் பெறுவதுமான வினைத்திறமே ஆகும்.' (பக்கம் 9).* இலக்குப் பொருள் - பணம், வீடு முதலானவை- விற்றலிலும் வாங்கலிலும் போல உடைமையாளர்களை மாற்றிக் கொள்வதில்லை. ஆனால் வட்டி- மூலதனத்தின் வடிவில் தரப்படும் பணத்துக்கு பிரதியாய் சமதை ஏதும் பெறப்படுவதில்லை என்பதைப் புரூதோன் பார்க்கவில்லை. மெய்தான், ஒவ்வொரு விற்றல் வாங்கல் செயலிலும் பொருள் தரப்பட்டுவிடுகிறது, பரிவர்த்தனை நிகழ்முறைகள் சற்றாவது உள்ளவரை விற்கப்படும் பண்டத்தின் உடைமை எப்போதுமே துறக்கப்பட்டுவிடுகிறது. ஆனால் அதன் மதிப்பு கைவிடப்படுவ தில்லை. விற்றலில் சரக்கு தரப்பட்டுவிடுவதே தவிர, அதன் மதிப்பு அல்ல. அது பண வடிவிலோ உறுதிப் பத்திரங்கள் அல்லது கொடுப்புரிமைகளின் வடிவிலோ - இவையும் இங்கே பணத்துக்கு இன்னொரு வடிவம்தான் - திருப்பித் தரப்படுகிறது. வாங்கலில் பணம் தரப்பட்டுவிடுகிறதே தவிர அதன் மதிப்பு அல்ல; இம்மதிப்பு சரக்குகளின் வடிவில் மாற்றீடு செய்யப்படுகிறது. தொழில்துறை முதலாளி மறுவுற்பத்தி நிகழ்முறை முழுவதிலும் ஒரே மதிப்பையே (உபரி-மதிப்பு நீங்கலாக) வைத்திருக்கிறார், ஆனால் வெவ்வேறு வடிவங்களில் அதை வைத்திருக்கிறார்.

பரிவர்த்தனை, அதாவது பண்டங்களின் பரிவர்த்தனை நடைபெறுவதால் மதிப்பில் எவ்வித மாற்றமும் இல்லை. அதே முதலாளியிடம் எப்போதும் அதே மதிப்பு இருந்து வருகிறது. ஆனால் முதலாளி உபரி-மதிப்பை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் வரை பரிவர்த்தனை ஏதும் நடைபெறுவதில்லை. உபரி-மதிப்பு சரக்குகளில்

(*) இப்படிக் கூறியவர் செவே. இவர் La voix du peuple ஏட்டின் ஆசிரியர்களில் ஒருவரும், Gratuité du crédit. Discussion entre M.F. Bastiat et M. Proudhon, பாரீஸ், 1850 என்னும் நூலின் 'முதல் கடிதத்தை' எழுதியவரும் ஆவார்.- ஆங்கிலப் பதிப்பாசிரியர்)

உருக்கொண்ட பிறகுதான் பரிவர்த்தனை நடைபெறுகிறது. தனிப்பட்ட பரிவர்த்தனைச் செயல்களை அல்லாமல், மூலதனம் நிகழ்த்தும் முழுச் சுற்றாகிய M—C—M' என்பதை நோக்குவோமானால், குறிப்பிட்ட மதிப்பளவு ஓயாமல் முன்னீடு செய்யப்படுவதையும், இந்த மதிப்பளவு உபரி-மதிப்பு அல்லது இலாபம் சுற்றோட்டத்திலிருந்து விலக்கி எடுக்கப்படுவதையும் காண்போம். எப்படியானாலும் உள்ளபடியான பரிவர்த்தனைச் செயல்கள் எப்படி இந்நிகழ்முறை தூண்டி நிகழ்த்தப்படுகிறது என்பதை வெளிப்படுத்துவதில்லை. மூலதனம் என்ற முறையிலான Mஇன் இந்த நிகழ்முறையைத்தான் பணக்கடன் தரும் முதலாளியின் வட்டி சார்ந்துள்ளது. இந்நிகழ்முறையிலிருந்தே அது வருவிக்கப்படுகிறது.

புரூதோன் சொல்கிறார், 'உண்மையில் என்ன நடக்கிறது என்றால் தொப்பி செய்கிறவர் தொப்பிகளை விற்று...அவற்றின் மதிப்பைப் பெறுகிறார், அதற்கு அதிகமாகவோ குறைவாகவோ பெறுவதில்லை. ஆனால் பணக்கடன் தரும் முதலாளி....மீட்டுக்கொள்வது அவரது மூலதனத்தை மட்டுமல்ல; அவர் தமது மூலதனத்தைக் காட்டிலும், தாம் பரிவர்த்தனையில் விடுவதைக் காட்டிலும் கூடுதலாய் மீட்டுக் கொள்கிறார்; தமது மூலதனத்தோடு கூடுதலாய் வட்டியும் பெறுகிறார்.' (பக்கம் 69). இங்கு தொப்பிக்காரர் திறனுடை-முதலாளியையே குறிக்கிறார், கடன்-முதலாளியை அல்ல. திறனுடை-முதலாளி எப்படிச் சரக்குகளை அவற்றின் மதிப்புக்கு விற்று (உற்பத்தி-விலைகள் மூலமாய் நடைபெறும் சமனமாதல் இங்கு அவரது கண்ணோட்டத்திற்கு அனாவசியமானது), தாம் பரிவர்த்தனையில் விட்ட மூலதனத்திற்கு மேல் இலாபம் பெற முடியும் என்பதன் இரகசியத்தை புரூதோன் கிரகிக்கத் தவறி விட்டது கண்கூடாய்த் தெரிகிறது. 100 தொப்பிகளின் உற்பத்தி-விலை = £115 என்றும், இந்த உற்பத்தி-விலை தொப்பிகளின் மதிப்புக்கு சமமாய் இருக்க நேருவதாகவும் கொள்வோம்; தொப்பி உற்பத்தி செய்யும் மூலதனத்தின் இயைபும், சராசரி சமுதாய மூலதனத்தின் இயைபும் ஒன்றே என்பது இதன் பொருள். இலாபம் = 15% என்றால், தொப்பிக்காரர் தமது சரக்குகளை அவற்றின் மதிப்பாகிய £115 க்கு விற்று £15 இலாபமும் சம்பாதிக்கிறார். அவற்றுக்காக அவர் £100 மட்டுமே செலவு செய்தார். அவர் அவற்றை தம் சொந்த மூலதனத்தைக் கொண்டு உற்பத்தி செய்திருந்தால், முழு உபரியாகிய £15ஐயும் சுருட்டிக் கொள்கிறார்; கடன் வாங்கிய மூலதனத்தைக் கொண்டு உற்பத்தி செய்திருந்தால், அவர் வட்டியாக £5 கொடுத்துவிட வேண்டியிருக்கலாம். இதனால் தொப்பிகளின் மதிப்பில் எவ்வித

*மாற்றமும் இல்லை; இம்மதிப்பில் ஏற்கெனவே அடங்கியுள்ள உபரி-மதிப்பு வெவ்வேறு ஆட்களிடையே பங்கிடப்படுவதில்தான் மாற்றம் ஏற்படுகிறது. ஆகவே வட்டி கொடுப்பது தொப்பிகளின் மதிப்பில் எவ்விளைவும் உண்டாக்குவதில்லை என்பதால், புருதோன் பின்வருமாறு சொல்வது அபத்தமே: 'வர்த்தகத்தில் மூலதனத்தின் மீதான வட்டி தொழிலாளிகளின் கூலியோடு சேர்க்கப்பட்டு, சரக்குகளின் விலையில் போய்ச் சேருவதால், தொழிலாளர்கள் தம் சொந்த உழைப்பின் உற்பத்திப் பொருளை விலைக்கு வாங்குவது முடியாத காரியம். Vivre en travaillant* என்பது வட்டியின் ஆட்சியில் முரண்பாட்டைத் தன்னகத்தே கொண்ட கோட்பாடு.' (பக்கம் 105).*[57]

மூலதனத்தின் இயல்பைப் புருதோன் அவ்வளவாய்ப் புரிந்து கொள்ளவில்லை என்பதையே அவர் பின்வருமாறு கூறுவதிலிருந்து அறிய முடிகிறது; இங்கே அவர் பொதுவாக மூலதனத்துக்குரிய அசைவியக்கத்தை வட்டி-மூலதனத்துக்கே உரிய அசைவியக்கமாக விவரிக்கிறார்: *'பண-மூலதனமானது வட்டி திரளுவதன் மூலம் பரிவர்த்தனையிலிருந்து அதன் தொடக்க முனைக்கு திரும்பி வருகிறது என்பதால், அதே தனியாள் எப்போதுமே செய்யும் மறுமுதலீடு ஓயாமல் அதே அளவுக்கு இலாபம் கிடைக்கச் செய்வதாகப் பெறப்படுகிறது, (பக்கம் 154.)*

வட்டி-மூலதனத்தின் விசேச அசைவியக்கத்தில் இன்னமும் அவருக்குப் புதிராய் இருப்பது என்ன? வாங்குதல், விலை, பண்டங்களைக் கொடுத்துவிடுதல், உபரி-மதிப்பு இங்கு மேற்கொள்ளும் நேரடி வடிவம் ஆகிய இந்தக் கருத்தினங்களே; சுருங்கச் சொல்லின், மூலதனமே சரக்காகி இருக்கிற, எனவே விற்றல் என்பது கடன் கொடுத்தலாகவும், விலை என்பது இலாபத்தில் ஒரு பங்காகவும் மாறியிருக்கிற புலப்பாடே அவருக்குப் புதிராய் உள்ளது.

மூலதனம் அதன் தொடக்க முனைக்குத் திரும்புவதே பொதுவாக மூலதனம் அதன் மொத்தச் சுற்றில் நிகழ்த்தும் தனித்தன்மை வாய்ந்த அசைவியக்கமாகும். இது வட்டி-மூலதனத்துக்கு மட்டும் உரித்தான

(57) எல்லாம் புருதோன் சொல்கிறபடியே நடப்பதானால், 'வீடு;' 'பணம்' முதலானவை 'மூலதனமாக' கடன் தரப்படலாகாது; 'சரக்குகளாக அடக்க-விலைக்கு விற்கப்படவே வேண்டும்' (பக்கம் 44). புருதோனைக் காட்டிலும் சற்றே உயர்ந்து காணப்பட்டார் லூதர். இலாபம் சம்பாதிப்பது கடன் கொடுக்கும் விதத்தையோ விலைக்கு வாங்கும் விதத்தையோ பொறுத்ததல்ல என்பதை அவர் அறிந்திருந்தார்: 'அவர்கள் விலைக்கு வாங்குவதையும் கடுவட்டியாக மாற்றுகிறார்கள். ஆனால் உண்மையில் உடனே இவ்வளவு அதிகமாய் சமாளிக்க முடியாது. முதலில் ஒன்றே ஒன்றுடன், அதாவது கடுவட்டிக் கடனுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். அதை நாம்தடுத்து நிறுத்திய பிறகு (இறுதித் தீர்ப்பு நாளுக்குப் பிறகு), விலைக்கு வாங்குவதிலான கடுவட்டியை எதிர்த்தும் நாம் போதனை செய்யத் தவற மாட்டோம்.')

தனிச் சிறப்பு அல்லவே அல்ல. வட்டி-மூலதனத்தைச் சிறப்பித்துக் காட்டுவது சுற்று ஏதும் இடையில் வராமல் அது மீண்டு வருவதன் புறவடிவமே ஆகும். கடன் தரும் முதலாளி சமதை ஏதும் பெற்றுக் கொள்ளாமல் தமது மூலதனத்தை தந்துவிடுகிறார், அதனைத் தொழில்துறை முதலாளியிடம் கைமாற்றிக் கொடுக்கிறார். அவர் செய்யும் கைமாற்றம் மெய்யான மூலதனச் சுற்றோட்ட நிகழ்முறையைச் சேர்ந்த செயலே அல்ல. அது தொழில்துறை முதலாளியால் நிகழ்த்தப்படும் இச்சுற்றை அறிமுகப்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுகிறது. பணத்தின் இந்த முதலாவது நிலைமாற்றம் எந்த உருமாற்றச் செயலையும் - வாங்கலையோ விற்றலையோ - தெரிவிப்பதல்ல. பரிவர்த்தனை ஏதும் நடைபெறுவதில்லை சமதை ஏதும் பெறப்படுவதில்லை என்பதால், உடைமை துறக்கப்படுவதும் இல்லை. தொழில்துறை முதலாளியின் கையிலிருந்து கடன்-முதலாளியின் கைக்கு பணம் திரும்பி வருவது மூலதனத்தை தந்துவிடுவதாகிய முதற்செயலைப் பூர்த்தி செய்வதோடு, சரி. பணவடிவில் முன்னீடு செய்யப்படும் மூலதனம் சுழல்வட்ட நிகழ்முறையினூடாக தொழில்துறை முதலாளியிடமே பணவடிவில் திரும்பி வந்து சேருகிறது. ஆனால் அது அவரால் முதலீடு செய்யப்பட்டபோது அவருக்குச் சொந்தமானதாய் இருக்கவில்லை என்பதால், மீண்டு வந்த பிறகும் அவருக்குச் சொந்தமானதாய் இருக்க முடியாது. மறுவுற்பத்தி நிகழ்முறையினூடாகச் செல்வதாலேயே மூலதனம் எவ்விதத்தும் அவரது சொத்தாகி விட முடியாது. ஆகவே அவர் கடன் கொடுத்தவரிடம் அதனைத் திருப்பி ஒப்படைத்தாக வேண்டும். கடன் கொடுப்பவரிடமிருந்து கடன் வாங்குபவருக்கு மூலதனத்தை கைமாற்றிக் கொடுக்கும் முதல் செலவீடு சட்டவகை கொடுக்கல் வாங்கலாகும்; இதற்கும் உள்ளபடியான மறுவுற்பத்தி நிகழ்முறைக்கும் தொடர்பே இல்லை. இது இந்நிகழ்முறைக்கான பீடிகை மட்டுமே ஆகும். திரும்பி வந்துள்ள மூலதனத்தை கடன் வாங்கியவரிடமிருந்து கடன் கொடுத்தவருக்கு திரும்பவும் கைமாற்றிக் கொடுக்கிற பிரதிக் கொடுப்பு [Return payment] இன்னொரு சட்டவகைக் கொடுக்கல்வாங்கலாகும், இது முதலாவதன் நிரப்புக் கூறு. முதலாவது உள்ளபடியான நிகழ்முறையை அறிமுகம் செய்கிறது, இரண்டாவது இந்நிகழ்முறைக்கு பிற்சேர்வான ஒரு செயலாகும். இவ்வாறு தொடக்க முனையும் மீள்வு முனையும், கடன் மூலதனத்தைக் கொடுப்பதும் மீட்டு எடுப்பதும் சட்டவகைக் கொடுக்கல் வாங்கல்களால் தூண்டி நிகழ்த்தப்படும் மனம்போன போக்கிலான

அசைவியக்கங்களாகத் தெரிகின்றன; இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் மூலதனத்தின் உள்ளபடியான அசைவியக்கத்துக்கு முன்னரும் பின்னரும் நடைபெறுகிறவை; இவற்றுக்கும் இந்த அசைவியக்கத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. மூலதனமானது தொடக்கம் முதலே தொழில்துறை முதலாளிக்கும் சொந்தமானதாய் அமைந்து, எனவே அவரது சொந்த மூலதனமாகவே அவரிடம் திரும்பி இருக்குமானால், இந்த உள்ளபடியான மூலதன அசைவியக்கத்தைப் பொறுத்தவரை எவ்வித மாற்றமும் இருக்காது.

முதல் அறிமுகச் செயலில் கடன் கொடுப்பவர் கடன் வாங்குபவருக்கு தமது மூலதனத்தைத் தருகிறார். இச்செயலைப் பூர்த்தி செய்யும் இறுதிச் செயலில், கடன் வாங்கியவர் கடன் கொடுத்தவரிடம் மூலதனத்தைத் திருப்பித் தருகிறார். இந்த இருவருக்குமிடையிலான கொடுக்கல்வாங்கலைப் பொறுத்தவரை - வட்டியை இப்போதைக்கு ஒதுக்கி வைத்து விடுகிறோம்- கடன் கொடுப்பவருக்கும் கடன் வாங்குகிறவருக்கும் இடையில் கடன்-மூலதனத்தின் அசைவியக்கத்தைப் பொறுத்த வரை, இவ்விரு செயல்களும் (இவற்றைப் பிரித்து வேறுபடுத்துகிற குறிப்பிட்ட கால இடைவெளியில் மூலதனத்தின் உள்ளபடியான மறுவுற்பத்தி நிகழ்முறை) அசைவியக்கம் முழுவதையும் அளாவுகின்றன. இந்த அசைவியக்கமானது, திரும்பி வரும் என்ற நிபந்தனையின் பேரில் கைவிட்டுக் கொடுப்பதானது அதுவாகவே கடன் கொடுத்தலும் கடன் வாங்குதலுமான அசைவியக்கமாக அமைகிறது, பணத்தையோ சரக்குகளையோ நிபந்தனையோடு உடைமை மாற்றம் செய்யும் பிரத்தியேக வடிவம் ஆகிறது.

பொதுவாக மூலதனத்துக்கே உரிய அசைவியக்கமானது, பணம் முதலாளியிடம் திரும்பி வருவதானது அதாவது மூலதனம் அதன் தொடக்க முனைக்கு மீள்வதாவது வட்டி-மூலதனத்தைப் பொறுத்த வரை முழுக்க முழுக்க புறத்தோற்றம் ஆகிறது. உள்ளபடியான இயக்கத்திலிருந்து பிரிந்து அவ்வியக்கத்தின் வடிவம் ஆகிறது. A ஆனவர் தமது பணத்தைப் பணமாக அல்லாமல் மூலதனமாகவே தந்துவிடுகிறார். மூலதனத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. அது கைமாறுவதோடு சரி. அது மெய்யாகவே மூலதனமாக மாறுவது அது B இன் கைக்கு போய்ச்சேரும் வரை நடைபெறுவதில்லை. ஆனால் A ஐப் பொறுத்த வரை அவர் B இடம் அதைக் கொடுத்தவுடனே அது மூலதனமாகிவிடுகிறது. உற்பத்தி, சுற்றோட்ட நிகழ்முறைகளிலிருந்து

மூலதனத்தின் உள்ளபடியான மீள்வு Bக்கு மட்டுமே நடைபெறுகிறது. ஆனால் Aக்கு மீள்வானது உடைமைமாற்றம் மேற்கொண்ட அதே வடிவத்தை மேற்கொள்கிறது மூலதனம் B இடமிருந்து Aக்குத் திரும்புகிறது. குறிப்பிட்ட காலத்துக்கு பணத்தைத் தந்துவிட்டு அதாவது கடன் கொடுத்துவிட்டு, வட்டியோடு (உபரி-மதிப்பு) அதை திரும்பப் பெறுவதுதான் வட்டி-மூலதனத்துக்கே உரிய அசைவியக்கத்தின் முழு வடிவம் ஆகும். கடன் தரப்படும் பணம்-மூலதனமாக நிகழ்த்தும் உள்ளபடியான அசைவியக்கம் கடன் கொடுத்தவருக்கும் கடன் வாங்கியவருக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்களுக்கு அப்பால் நடைபெறும் காரியமாகும். இந்தக் கொடுக்கல் வாங்கல்களில் இடைநிலையான செயல் மறைக்கப்பட்டு, கண்ணுக்குத் தெரியாததாய், நேரடியாக உட்படாததாய் இருக்கிறது. மூலதனம் என்கிற தனிவகைச் சரக்கு தனக்கேயுரிய உடைமைமாற்ற முறையினைக் கொண்டுள்ளது. ஆகவே அதன் மீள்வானது குறிப்பிட்ட சில பொருளாதார நிகழ்முறைத் தொடர்களின் விளைவும் பயனுமாய் வெளிப்படாமல் வாங்குகிறவருக்கும் விற்கிறவருக்கும் இடையிலான பிரத்தியேகமான சட்ட உடன்பாட்டின் விளைவாகவே வெளிப்படுகிறது. மீள்வு நேரமானது மறுவுற்பத்தி நிகழ்முறையின் முன்னேற்றத்தைப் பொறுத்தது; வட்டி மூலதனத்தைப் பொறுத்த வரை, மூலதனம் என்ற முறையிலான அதன் மீள்வு கடன் கொடுத்தவருக்கும் கடன் வாங்கியவருக்கும் இடையிலான உடன்பாட்டையே சார்ந்திருப்பது போல் தெரிகிறது. ஆகவே இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பாக மூலதன மீள்வானது இனியும் மறுவுற்பத்தி நிகழ்முறையிலிருந்து எழும் விளைவாகக் காணப்படுவதில்லை; கடன் தரப்பட்ட மூலதனம் பண வடிவத்தை இழக்கவே இல்லை என்பது போல் தோன்றுகிறது. உண்மையில் இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளபடியான மறுவுற்பத்தி மீள்வுகளால்தான் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதில் சந்தேகமே வேண்டாம். ஆனால் கொடுக்கல் வாங்கலில் இந்த உண்மை நிதர்சனமாவதில்லை. நடைமுறையில் எப்போதுமே இப்படித்தான் நிகழ்கிறது என்பதும் கிடையாது. உள்ளபடியான மீள்வு உரிய நேரத்தில் நடைபெறாவிட்டால், கடன் வாங்கியவர் கடன் கொடுத்தவரின் பால் தமக்குள்ள கடப்பாடுகளை நிறைவேற்ற வேறு வழிதுறைகளை நாடியாக வேண்டும். மூலதனத்தின் வெற்று வடிவமானது - A என்னும் குறிப்பிட்ட தொகையாகச் செலவிடப்பட்டு,

குறிப்பிட்ட காலம் கழிந்த பிறகு, இப்படி காலம் கழிவது தவிர வேறு இடைநிலையான செயல் ஏதுமின்றி $A+{}^{1}/_{x}A$ என்னும் தொகையாக மீண்டு வரும் பணம் என்பது - உள்ளபடியான மூலதன அசைவியக்கத்தின் அர்த்தமற்ற வடிவம்தான்.

மூலதனத்தின் உள்ளபடியான அசைவியக்கத்தில் அதன் மீள்வு சுற்றோட்ட நிகழ்முறையில் ஒரு கட்டமாகும். பணம் முதலில் உற்பத்திச் சாதனங்களாக மாற்றப்படுகிறது; உற்பத்தி அவற்றை சரக்குகளாக மாற்றுகிறது; சரக்குகள் விற்கப்படுவதன் மூலம் திரும்பவும் பணமாக மாற்றப்படுகின்றன. மூலதனத்தை ஆரம்பத்தில் பணவடிவில் முன்னீடு செய்த முதலாளியின் கைக்கு இவ்வடிவில் திரும்புகின்றன. ஆனால் வட்டி-மூலதனத்தைப் பொறுத்தவரை, உடைமை மாற்றத்தைப் போலவே மீள்வும் மூலதன உடைமையாளர்க்கும் மற்றொருவருக்கும் இடையிலான சட்டப்பூர்வ கொடுக்கல் வாங்கலின் விளைவே ஆகும். நாம் உடைமை மாற்றத்தையும் மீள்வுக் கொடுப்பையும் மட்டுமே பார்க்கிறோம். இடைக்காலத்தில் என்ன நடந்தாலும் மறைக்கப்பட்டுவிடுகிறது.

ஆனால் மூலதனமாக முன்னீடு செய்யப்படும் பணம் முன்னீடு செய்தவரிடமே, அதை மூலதனமாகச் செலவிட்டவரிடமே திரும்பி வரும் குணத்தை பெற்றிருப்பதாலும், M—C—M' ஆனது மூலதன அசைவியக்கத்தின் உள்ளார்ந்த வடிவமாய் இருப்பதாலும், பணத்தின் உடைமையாளர் அப்படி பண உடைமையாளராய் இருப்பதாலேயே அதனை மூலதனமாக - தொடக்க முனைக்கு திரும்பி வருவதும், அதன் அசைவியக்கத்தின் போக்கில் தன்மதிப்பை பாதுகாத்து அதிகரித்துக் கொள்வதுமான குணம் படைத்த ஒன்றாக - கடன் தரலாம். அவர் அதனை மூலதனமாகத் தந்துவிடுகிறார்; ஏனென்றால் அது மூலதனமாக ஈடுபடுத்தப்பட்டு முடிந்த பிறகு தொடக்க முனைக்கு திரும்பி வருகிறது; ஆகவே கடன்வாங்கியவரிடம் அது திரும்பி வந்திருப்பதால்தான் குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு அவர் அதனைத் திருப்பி ஒப்படைக்க முடிகிறது.

ஆக, பணத்தை மூலதனமாக கடன் தர வேண்டுமானால் - குறிப்பிட்ட காலம் கழித்து திருப்பி தரப்படும் என்ற நிபந்தனையின் பேரில் அதனை உடைமை மாற்றம் செய்ய வேண்டுமானால்; அது உள்ளபடியே மூலதனமாக ஈடுபடுத்தப்படுவதும் உள்ளபடியே தொடக்க முனைக்கு திரும்பி வருவதும் அவசியமாகும். எனவே, மூலதனமாக பணம் நிகழ்த்தும் உண்மை சகடம் தான் கடன் வாங்கியவர் கடன் கொடுத்தவருக்கு பணத்தை திரும்பித்தர வகை செய்யும்

சட்டவகை கொடுக்கல் வாங்கலுக்கான முதல் நிலை ஆகும். கடன் வாங்கியவர் பணத்தை மூலதனமாகப் பயன்படுத்தவில்லை என்றால் அது அவரது சொந்த விவகாரம். கடன் கொடுப்பவர் அதனை மூலதனமாகக் கடன் கொடுக்கிறார்; ஆகவே அது பணவடிவில் அதன் தொடக்க முனைக்கு திரும்பி வரும் வரை பண-மூலதனச் சுற்று உட்பட மூலதனப்பணிகளை ஆற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

M—C, C—M', ஆகிய சுற்றோட்டச் செயல்களில் குறிப்பிட்ட மதிப்பளவு பணமாகவோ சரக்குகளாகவோ செயல்படுகிறது; இவை இடை-நிலை நிகழ்முறைகளே ஆகும், மொத்த அசைவியக்கத்தின் கட்டங்கள் மட்டுமே ஆகும். இந்த மதிப்பளவு மூலதனம் என்ற முறையில் M—M' ஆகிய முழு இயக்கத்தையும் நிகழச் செய்கிறது. அது பணமாகவோ ஏதேனும் ஒரு வடிவில் அமைந்த மதிப்புத் தொகையாகவோ முன்னீடு செய்யப்பட்டு, மதிப்புத் தொகையாக திரும்பி வருகிறது. கடனாக பணம் கொடுப்பவர் சரக்குகள் வாங்குவதில் அதனைச் செலவிடுவதில்லை; இந்த மதிப்புத் தொகை சரக்கு வடிவில் இருந்தால் பணத்துக்கு அதனை விற்பதில்லை. அவர் அதனை மூலதனமாக, M—M' ஆக, குறிப்பிட்ட காலம் வரைக்குப் பின்னர் தன் தொடக்க முனைக்குத் திரும்பி வரும் மதிப்பாக முன்னீடு செய்கிறார் வாங்குவது அல்லது விற்பதற்குப் பதில் அவர் கடன் கொடுக்கிறார். ஆகவே, இப்படி கடன் கொடுத்தல் மதிப்பை பணமாகவோ சரக்குகளாகவோ உடைமை மாற்றம் செய்வதற்குப் பதில் மூலதனமாக உடைமை மாற்றம் செய்வதற்குப் பொருத்தமான வடிவமாகும். ஆனால் கடன் கொடுத்தலானது முதலாளித்துவ மறுஉற்பத்தி நிகழ்முறைக்குத் தொடர்பே இல்லாத கொடுக்கல்-வாங்கல்களாகவும் வடிவெடுக்க முடியாது என்பதல்ல இதன் பொருள்.

இதுவரை நாம் கடன்-மூலதனத்தின் உடைமையாளர்க்கும் தொழில்துறை முதலாளிக்கும் இடையே அம்மூலதனம் நிகழ்த்தும் அசைவியக்கங்களை மட்டுமே பரிசீலித்தோம். இப்போது வட்டியை பரிசீலித்தாக வேண்டும்.

கடன் கொடுப்பவர் தமது பணத்தை மூலதனமாகச் செலவிடுகிறார். அவர் இன்னொருவரிடம் ஒப்புவிக்கும் மதிப்பளவு மூலதனம் ஆகும். எனவே அது அவரிடம் திரும்பி வருகிறது. ஆனால் அது திரும்பி வருவது மட்டுமே கடன் தரப்பட்ட மதிப்புத் தொகை மூலதனமாக நிகழ்த்தும் மீள்வு ஆகிவிடாது; கடன் தரப்பட்ட மதிப்புத் தொகை திரும்பி வருவதே தவிர அது வேறல்ல. மூலதனமாகத் திரும்பி வர

வேண்டுமானால் முன்னீடு செய்யப்படும் மதிப்புத் தொகையானது அதன் அசைவியக்கத்தில் பாதுகாக்கப்படுவதோடு பெருக்கம் அடையவும் வேண்டும், மதிப்பு வகையில் அதிகரித்தாக வேண்டும் அதாவது உபரி-மதிப்போடு, M+ΔMஆகத் திரும்பி வர வேண்டும்; இதில் ΔMஎன்பது வட்டி ஆகும், அதாவது சராசரி இலாபத்தில் ஒரு பகுதியாகும். இந்தப் பகுதியானது செயல்படும் முதலாளியின் கையிலேயே தங்கி இராமல் பண முதலாளியின் கைக்கு போய்ச் சேர்கிறது.

பணமுதலாளி பணத்தை மூலதனமாக ஒப்புவித்து இருப்பது அது அவருக்கு M+ΔMஆக மீட்டளிக்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. நீண்ட காலவரையின் முடிவில் மூலதனம் மீள்வதற்கு இடையே நிர்ணயித்த கால இடைவெளிகளில் எவ்வடிவில் வட்டி செலுத்தப்படுகிறது என்பதையும் பிறகு பார்ப்போம்.

கடன் வாங்கும் தொழில்துறை முதலாளிக்கு பண முதலாளி எதைக் கொடுக்கிறார்? உண்மையில் அவரிடம் எதை ஒப்படைக்கிறார்? பணத்தை கைமாற்றிக் கொடுக்கும் இந்தச் செயல்தான் கடனாகப் பணம் தருவதை மூலதனமாகப் பணத்தை உடைமை மாற்றம் செய்வதாக, அதாவது சரக்காக மூலதனத்தை உடைமை மாற்றம் செய்வதாக மாற்றிவிடுகிறது.

உடைமை மாற்றம் செய்யும் இந்தச் செயலைக் கொண்டுதான் கடனாகப் பணம் தருபவரால் மூலதனம் சரக்காக கடன் தரப்படுகிறது, அல்லது அவர்வசம் இருக்கும் சரக்கு இன்னொருவருக்கு மூலதனமாகத் தரப்படுகிறது.

சாதாரண விற்றலில் உடைமை மாற்றம் செய்யப்படுவது எது? விற்கப்படும் சரக்கின் மதிப்பு அல்ல; அது தன் வடிவத்தை மாற்றிக் கொள்வதோடு சரி. மதிப்பானது உள்ளபடியே விற்பவரின் கைக்குப் பணமாகச் செல்வதற்கு முன்னர் சரக்கில் அதன் விலையாக கருத்தியலாய் நிலவுகிறது. அதே மதிப்பும் அதே மதிப்பளவும் தம் வடிவத்தை மட்டும் மாற்றிக் கொள்கின்றன. அவை ஒரு சந்தர்ப்பத்தில் சரக்கு-வடிவிலும், மற்றொரு சந்தர்ப்பத்தில் பண வடிவிலும் நிலவுகின்றன. விற்பவர் உண்மையில் உடைமை மாற்றம் செய்வதும். எனவே வாங்குகிறவரின் சொந்த நுகர்வுக்கோ திறனுடை நுகர்வுக்கோ செல்வதும் சரக்கின் பயன்-மதிப்புதான்-பயன் மதிப்பாய் இருக்கிற சரக்குதான்.

சரி, பண முதலாளி கடனுக்குரிய காலத்துக்கு கைவிடுவதும் கடன் வாங்கும் திறனுடை முதலாளியிடம் ஒப்புவிப்பதுமான பயன்-மதிப்பு என்ன? பணமானது மூலதனம் ஆக வல்லதாய், மூலதனப் பணிகளை ஆற்ற வல்லதாய் இருப்பதன் மூலம் ஈட்டுகிற பயன்-மதிப்பே அது. இப்பயன்-மதிப்பை பெற்றுள்ள பணம் தன் ஆரம்ப மதிப்புப் பருமனைப் பாதுகாத்துக் கொள்வதை அன்னியில் அதன் நிகழ் முறையின் போது குறிப்பிட்ட உபரி-மதிப்பை, சராசரி இலாபத்தை (இதற்கு கூடுதலாகவோ குறைவாகவோ இருப்பதெல்லாம் இங்கு வெறும் தற்செயலாகவே காணப்படுகிறது) படைக்கக் கூடியதாகும். ஏனைய சரக்குகளை பொறுத்தவரை பயன்-மதிப்பு முடிவில் நுகரப்பட்டு விடுகிறது. அவற்றின் பொருளுருவும் அத்துடன் அவற்றின் மதிப்பும் மறைந்து போகின்றன. மாறாக, சரக்காய் இருக்கும் மூலதனத்தின் மதிப்பும் பயன்-மதிப்பும் அதன் பயன்-மதிப்பு நுகரப்படுவதன் மூலமாய் குறையாமல் இருப்பதோடு கூடுதலாகவும் செய்கின்றன என்பது அம்மூலதனத்துக்குரிய தனி விசேஷமாகும்.

மூலதனமாய் இருக்கும் பணத்திற்குரிய இந்தப் பயன்-மதிப்பையே-சராசரி இலாபத்தை உற்பத்தி செய்யும் இந்த ஆற்றலையே - பண முதலாளி தொழிற்துறை முதலாளியிடம் ஒப்புவிக்கிறார்.

இவ்விதம் கடன் தரப்படும் பணத்துக்கும் தொழில்துறை முதலாளியுடன் உறவுகொண்டு இருக்கும் உழைப்புச் சக்திக்கும் இந்த அம்சத்தில் ஒரு விதமான ஒற்றுமை உள்ளது. தொழில்துறை முதலாளி உழைப்புச் சக்தியின் மதிப்புக்கு விலை கொடுக்கிறார். ஆனால் கடன்-மூலதனத்தின் மதிப்பைத் திருப்பிச் செலுத்துகிறார் என்பதுதான் வேறுபாடு, தொழில்துறை முதலாளிக்கு உழைப்புச் சக்தியின் பயன்-மதிப்பு என்பது, உழைப்புச் சக்தி தான் பெற்றிருப்பதைக் காட்டிலும் தனக்குச் செலவாவதைக் காட்டிலும் தான் நுகரப்படுகையில் அதிக மதிப்பை (இலாபத்தை) படைப்பதே ஆகும். இந்தக் கூடுதல் மதிப்பு தொழில்துறை முதலாளிக்கு பயன்-மதிப்பு ஆகும். இதே போல் கடன்-மூலதனத்தின் பயன்-மதிப்பானது மதிப்பை பெற்றெடுக்கவும் கூடுதலாக்கவும் அதற்குள்ள ஆற்றலாய்க் காணப்படுகிறது.

உண்மையில் பண முதலாளி ஒரு பயன்-மதிப்பை உடைமை மாற்றம் செய்கிறார்; ஆக, அவர் தருவது எதுவானாலும் சரக்காகத் தரப்படுகிறது. இந்த அளவுக்குத்தான் சரக்குடான ஒப்புமை முழுமையானதாகும். முதலாவதாக அது ஒரு கையிலிருந்து இன்னொரு கைக்குச் செல்லும் மதிப்பாகும். சாதாரணச் சரக்கை சரக்காகவே

இருக்கிற ஒன்றை எடுத்துக் கொண்டால் வாங்குகிறவரின் கையிலும் விற்கிறவரின் கையிலும் இருக்கிற மதிப்பு ஒன்றுதான், வடிவங்கள் மட்டும் வேறுபடுகின்றன; இருவரும் கொடுக்கல் வாங்கல்க்கு முன் பெற்றிருந்ததும் உடைமை மாற்றம் செய்ததுமான அதே மதிப்பை -ஒருவர் சரக்கு வடிவிலும் மற்றவர் பணவடிவிலும் - பெற்றுள்ளனர். வேறுபாடு என்னவென்றால், கடனைப் பொறுத்தவரை இந்தக் கொடுக்கல் வாங்கலில் பண முதலாளி மட்டுமே மதிப்பை தந்துவிடுகிறார்; ஆனால் வருங்காலத்தில் திரும்ப பெறும் வாய்ப்பின் மூலமாய் அதை பாதுகாத்துக் கொள்கிறார். கடன் தரப்படுகையில் ஒரு தரப்பு மட்டுமே மதிப்பை துறப்பதால் ஒரு தரப்பு மட்டுமே மதிப்பைப் பெறுகிறது. இரண்டாவதாக, மெய்யானதொரு பயன்-மதிப்பு ஒரு பக்கம் கைவிடப்பட்டு, மறுபக்கம் கைவரப்பெற்று நுகரப்படுகிறது. ஆனால் சாதாரண சரக்குகளைப் போல் அல்லாமல் இந்தப் பயன்-மதிப்பு தன் அளவிலேயே மதிப்பாகும், அதாவது ஆரம்ப மதிப்பைக் காட்டிலும் மிகையாய் இருப்பதாகும்; இந்த மிகையானது பணத்தை மூலதனமாகப் பயன்படுத்துவதன் மூலம் ஈடேற்றம் செய்யப்படுகிறது. இலாபமே இந்தப் பயன்-மதிப்பு.

கடன் தரப்படும் பணத்தின் பயன்-மதிப்பானது மூலதனமாகப் பயன்படவும், எனவே சராசரி நிலைமைகளில் சராசரி இலாபத்தை உற்பத்தி செய்யும் அப்பணத்தால் இயலுவதில் பொதிந்துள்ளது.[58]

சரி, தெழில்துறை முதலாளி கொடுப்பது என்ன? அதாவது கடனாகத் தரப்படும் மூலதனத்தின் விலை என்ன? 'ஆட்கள் தாம் கடனாய் பெறுவதன் பயன்பாட்டுக்கான வட்டியாகச் செலுத்துவது அதைக் கொண்டு உற்பத்தி செய்ய முடிகிற இலாபத்தின் ஒரு பகுதியே' என்கிறார் மாஸி முன்வந்தது பக்கம் 49.[59]

சாதாரணச் சரக்கை வாங்குகிறவர் அதன் பயன்-மதிப்பை வாங்குகிறார்; அதன் மதிப்புக்கு பணம் கொடுக்கிறார். கடனாகப் பணம்

---

(58) 'வட்டி வாங்குவதில் உள்ள நேர்மையானது ஒருவர் இலாபம் சம்பாதிப்பதையோ சம்பாதிக்காமல் இருப்பதையோ பொறுத்ததல்ல. அது' (கடனாய் வாங்கப்படுவது 'சரியாக ஈடுபடுத்தப்பட்டால் இலாபத்தை உற்பத்தி செய்ய வல்லதாய் இருப்பதையே பொறுத்ததாகும்.' (இயற்கை வட்டி வீதத்தை ஆளும் காரணங்கள் பற்றிய கட்டுரை, இப்பொருள் குறித்து சர்.வி,பெட்டி, திரு.லாக் ஆகியோரின் எண்ணங்கள் பற்றிய பரிசீலனையும் சேர்ந்தது, லண்டன், 1750, பக்கம் 49, ஆசிரியர் பெயர் குறிப்பிடாத இந்நூலின் ஆசிரியர் ஜோ.மாஸி ஆவார்.)

(59) 'பணக்காரர்கள், தமது பணத்தைத் தாமே ஈடுபடுத்துவதற்கு பதில்....மற்றவர்கள் அதை வைத்து இலாபம் சம்பாதிக்கட்டும் என்று விட்டு விடுகிறார்கள்; இப்படிக் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியை உடைமையாளர்களுக்கென்று ஒதுக்கீடு செய்து கொள்கிறார்கள்.' (முன் வந்தது, பக்கம் 23,24)

பெறுகிறவரும் மூலதனம் என்ற முறையிலான அதன் பயன்-மதிப்பையே வாங்குகிறார்; ஆனால் அவர் பணம்-கொடுப்பது எதற்கு? நிச்சயமாய், சாதாரணச் சரக்குகளுக்கு இருப்பதுபோல் அதன் விலைக்கோ மதிப்புக்கோ அல்ல. வாங்குகிறவருக்கும் விற்பவருக்கும் இடையே நிகழ்வது போல், அதாவது அவர்களுக்கிடையே மாறிச் செல்லும் மதிப்பு ஒரு சந்தர்ப்பத்தில் பண வடிவிலும், இன்னொரு சந்தர்ப்பத்தில் சரக்கு வடிவிலும் நிலவுவது போல், கடன் வாங்குகிறவருக்கும் கடன் கொடுக்கிறவருக்கும் இடையே மாறிச் செல்லும் மதிப்பில் வடிவ மாற்றம் ஏதும் நிகழ்வதில்லை. உடைமை மாற்றம் செய்யப்படும் மதிப்பும் மீண்டு வரும் மதிப்பும் ஒன்றாகவே இருப்பது இங்கு அறவே வேறு வழியில் வெளிப்படுகிறது. மதிப்புத் தொகை, அதாவது பணம் அதற்கீடாக சமதை பெறாமலே தரப்பட்டுவிடுகிறது; குறிப்பிட்ட காலத்துக்குப்பிறகு அது திருப்பித்தரப்படுகிறது. கடன் கொடுக்கிறவர் எப்போதும் அதே மதிப்பின் உடைமையாளராய் இருந்துவருகிறார், அம்மதிப்பு அவரது கையிலிருந்து கடன் வாங்குகிறவரின் கைக்கு மாறிச் சென்ற பிறகும் கூட அவ்வாறே இருந்து வருகிறார். சதாரணச் சரக்குப் பரிவர்த்தனையில் பணம் எப்போதுமே வாங்குகிறவரின் தரப்பிலிருந்து வருகிறது. ஆனால் கடனைப் பொறுத்தவரை, அது விற்கிறவரின் தரப்பிலிருந்து வருகிறது. விற்கிறவர்தான் குறிப்பிட்ட காலத்துக்கு பணத்தைத் தந்துவிடுகிறவர்; மூலதனத்தை வாங்குகிறவர் அதனை ஒரு சரக்காகப் பெற்றுக் கொள்கிறவர் ஆவார். ஆனால் பணம் மூலதனமாகச் செயல்பட்டு வரும் வரைதான், எனவே முன்னீடு செய்யப்பட்டு வரும் வரைதான் இது சாத்தியமாகும். கடன் வாங்குகிறவர் பணத்தை மூலதனமாக, கூடுதலான மதிப்பை உற்பத்தி செய்யும் மதிப்பாக கடன் வாங்குகிறார். ஆனால் அது முன்னீடு செய்யப்படுகிற தருணத்தில் இன்னமும் உள்ளுறை மூலதனமாகவே இருக்கிறது; எந்த மூலதனமும் தன் தொடக்க முனையில், அதாவது அது முன்னீடு செய்யப்படும் தருணத்தில் இப்படித்தான் உள்ளுறை மூலதனமாய் இருக்கும். அது ஈடுபடுத்தப்படுவதன் மூலமாகத்தான் தன் மதிப்பைப் பெருக்கிக் கொண்டு தன்னை மூலதனமாக ஈடேற்றம் செய்து கொள்கிறது. ஆனால் கடன் வாங்கியவர் அம்மூலதனத்தை ஈடேற்றம் பெற்ற மூலதனமாகி, அதாவது மதிப்பு (வட்டி) என்பதாகி திருப்பித் தர வேண்டி உள்ளது. வட்டியானது ஈடேற்றம் பெற்ற இலாபத்தில் ஒரு பகுதியாக மட்டுமே

இருக்க முடியும். பகுதியாக மட்டும்தானே தவிர, முழுவதுமாய் இருக்க முடியாது. எப்படியென்றால் கடன் வாங்கியவருக்கு கடன்-மூலதனத்தின் பயன்-மதிப்பு என்பது அவருக்கு இலாபம் உற்பத்தி செய்து கொடுப்பதில் அடங்கியுள்ளது. இல்லையேல், கடன் கொடுக்கிறவரின் தரப்பிலிருந்து பயன்-மதிப்பு எவ்விதத்தும் உடைமைமாற்றம் செய்யப்பட்டிருக்காது. மறுபுறம், இலாபம் முழுவதும் கடன் வாங்குகிறவர் பங்குக்கே போய்ச் சேர முடியாது. இல்லையேல் உடைமை மாற்றம் செய்யப்பட்டு பயன்-மதிப்புக்காக அவர் விலையேதும் தர மாட்டார், முன்னீடு செய்யப்பட்ட பணத்தை கடன் கொடுத்தவரிடம் சாதாரணப் பணமாகத் திருப்பித் தருவாரே தவிர, மூலதனமாக, ஈடேற்றம் பெற்ற மூலதனமாக அல்ல; M+ ΔM ஆகும் போதுதான் அது ஈடேற்றம் பெற்ற மூலதனம் ஆகும்.

கடன் கொடுக்கிறவர், கடன் வாங்குகிறவர் இருவரும் ஒரே பணத்தொகையைத்தான் மூலதனமாகச் செலவிடுகிறார்கள். ஆனால் பின்னவரின் கையில்தான் அது மூலதனமாகச் செயல்படுகிறது. ஒரே பணத்தொகை இருவருக்கு மூலதனமாய் இருக்கும் இரட்டை நிலவலால் இலாபம் இரட்டிப்பதில்லை. இலாபத்தைப் பிரிப்பதன் மூலமாகவே அத்தொகை அவ்விருவருக்கும் மூலதனமாய்ப் பயன்பட முடியும்: கடன் கொடுத்தவருக்குப் போய்ச் சேரும் இலாபப் பகுதி வட்டி என்று அழைக்கப்படுகிறது.

நமது அனுமானத்தின்படி முழுக் கொடுக்கல்வாங்கலும் இருவகை முதலாளிகளிடையே - பண முதலாளிக்கும் தொழில்துறை அல்லது வணிக-முதலாளிக்கும் இடையே நடைபெறுகிறது.

இங்கு மூலதனமாய் இருக்கும் மூலதனம் ஒரு சரக்காகும் என்பதை, அல்லது இங்கு பரிசீலிக்கப்படும் சரக்கானது மூலதனம் ஆகும் என்பதை எப்போதும் மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டும். ஆகவே இங்கு நிதர்சனமாகிற உறவுகள் யாவும் சாதாரணச் சரக்கின் கோணத்திலிருந்து, அல்லது மறுவுற்பத்தி நிகழ்முறையில் சரக்கு-மூலதனமாகச் செயல்படும் மூலதனத்தின் கோணத்திலிருந்து பார்க்கையில், அறிவுக் ஒவ்வாததாய் இருக்கும். விற்பது, வாங்குவதற்குப் பதில் கடன் கொடுப்பது, கடன்பெறுவது என்பது இங்கே சரக்கின்-மூலதனத்தின் - பிரத்தியேகத் தன்மையிலிருந்து எழுகிற வேறுபாடாகும் இங்கு செலுத்தப்படுவது வட்டிதானே தவிர சரக்கின் விலை அல்ல என்பதும் இதே போலத்தான். நாம் வட்டியை பண-மூலதனத்தின் விலை என்று

*அழைக்க விரும்பினால், அது அறிவுக்கு ஒவ்வாத விலை வடிவமாகும், சரக்குகளது விலையின் கருத்துருவத்துக்கு மாறானதாகும்.*[60] *விலையானது இங்கே முற்றிலும் சூக்குமமான அர்த்தமற்ற வடிவத்துக்கு பெயர்க்கப்படுகிறது; ஏதேனுமொரு வழியில் பயன்-மதிப்பாகப் பயன்படுகிற ஒன்றுக்கு தரப்படும் குறிப்பிட்ட பணத் தொகையே அது என்று குறிக்கப்பெறுகிறது; ஆனால் விலையின் கருத்துருவம் பணமாகத் தொனிக்கப் பெறும் ஏதேனுமொரு பயன்-மதிப்பின் மதிப்பையே உண்மையில் குறிப்பதாகும்.*

*மூலதனத்தின் விலையைக் குறிப்பதாகிய வட்டி தொடக்க முதலே ஒவ்வாத் தெரிவிப்புதான். பரிசீலனைக்குரிய சரக்கு இரட்டை மதிப்புடையது; முதலில் ஒரு மதிப்பையும், பிறகு இந்த மதிப்பிலிருந்து வேறான விலையையும் உடையது; அதேநேரத்தில் விலையானது மதிப்பின் பணத் தெரிவிப்பைக் குறிப்பது ஆகும். பண-மூலதனம் என்பது ஒரு பணத் தொகைதான், அல்லது ஒரு பணத்தொகையாக நிர்ணயிக்கப் பெறும் குறிப்பிட்ட சரக்களவின் மதிப்புதான். ஒரு சரக்கானது மூலதனமாக கடன் தரப்படுமானால், அது ஒரு பணத் தொகையின் மாறுவேடமே ஆகும். ஏனென்றால் மூலதனமாகக் கடன் தரப்படுவது இத்தனை இராத்தல் பருத்தி அல்ல. பருத்தியின் வடிவில் அதன் மதிப்பாக நிலவும் இவ்வளவு பணம் என்பதுதான். ஆகவே மூலதனத்தின் விலையானது திரு டாரென்ஸ் நினைப்பது போல் (பார்க்கவும்: அடிக்குறிப்பு 60) செலாவணியை அல்லவென்றாலும், பணத் தொகையைக் குறிப்பது போலவே அதையும் குறிக்கிறது. அப்படியானால் ஒரு மதிப்புத் தொகை அதன் சொந்த விலையை அன்னியில், அதன் சொந்தப் பண வடிவத்தில் வெளியிடப்படும் விலையை அன்னியில் வேறொரு விலையை எப்படி பெற்றிருக்க முடியும்? பார்க்கப் போனால், விலை என்பது சரக்கின் பயன்-மதிப்பிலிருந்து வேறான அதன் மதிப்புதான் (இது சந்தை-விலைக்கும் பொருந்தும்; இவ்விலை மதிப்பிலிருந்து வேறுபடுவது பண்பிலான வேறுபாடு அல்ல, அளவிலான வேறுபாடுதான், இது மதிப்புப் பருமனை மட்டுமே குறிப்பதாகும்). பண்பு வழியில்*

(60) 'மதிப்பு என்ற சொல்லை செலாவணிக்கு பிரயோகிக்கும் போது மூவேறு அர்த்தம் கொடுக்கிறது...(2) உள்ளபடியே கையிலிருக்கும் செலாவணியை...வருங்காலத்தில் ஒரு நாள் பெறப்பட உள்ள அதே செலாவணித் தொகையோடு ஒப்பு நோக்கலாம். இங்கே செலாவணியின் மதிப்பு வட்டி வீதத்தால் அளவிடப்படுகிறது; வட்டி வீதமானது கிடைக்கக்கூடிய மூலதன அளவுக்கும் அதற்கான வேண்டலுக்கும் இடையிலான விகிதத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.' (கர்னல் ரா.டாரென்ஸ், 1844ஆம் வருட வங்கிச் சாசனச் சட்டத்தின் செயல்பாடு குறித்து..., 2ஆம் பதிப்பு,1847, பக்கம் 5,6.)

மதிப்பிலிருந்து வேறுபடுகிற விலை என்பது அபத்தமான முரண்பாடு ஆகும்.[61]

மூலதனம் தற்பெருக்கத்தின் மூலம் மூலதனமாகத் தன்னை காண்பித்துக் கொள்கிறது. அதன் தற்பெருக்கப் படித்தரம் அது மூலதனமாக ஈடேற்றம் பெறுகிற அளவுழி படித்தரத்தை வெளியிடுகிறது. அதனால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பு அல்லது இலாபத்தை - அதன் வீதம் அல்லது பருமனை - முன்னீடு செய்யப்படும் மூலதனத்தின் மதிப்புடன் ஒப்பு நோக்கித்தான் அளவிட முடியும். ஆகவே வட்டி-மூலதனத்தின் தற்பெருக்கத்தை அளவிடுவ தானாலும், வட்டித் தொகையை, மொத்த இலாபத்தில் அதன் பங்கை முன்னீடு செய்யப்படும்மூலதனத்தின் மதிப்புடன் ஒப்பு நோக்கித்தான் அளவிட முடியும். விலையானது சரக்கின் மதிப்பைத் தெரிவிக்கிற தென்றால், வட்டியானதுபண-மூலதனத்தின் தற்பெருக்கத்தைத் தெரிவிக்கிறது. எனவே கடன் கொடுத்தவரிடம் அதற்காகத் தரப்படும் விலையாகத் தெரிகிறது. வாங்குவதிலும் விற்பதிலும் பணத்தை ஊடகமாய்க் கொண்டு நடைபெறும் பரிவர்த்தனையின் சாமானிய உறவுகளை - புரூதோன் செய்வது போல் - வட்டி - மூலதனத்திற்கு பொருத்திப் பார்ப்பது தொடக்கத்திலிருந்தே எவ்வளவு அபத்தமானது என்பதையே இது தெளிவாக்குகிறது. பணம் மூலதனமாகச் செயல்படுகிறது, எனவே அதனை மூலதனமாக, அதாவது உள்ளுறை மூலதனமாக இன்னொருவருக்கு கைமாற்றிக் கொடுக்கலாம் என்பதுதான் அடிப்படையான முதனிலை.

ஆனால் மூலதனம் சந்தையில் விற்பனைக்கு முன்வைக்கப் படுவதாலும், பணத்தின் பயன்-மதிப்பு உள்ளபடியே மூலதனமாக உடைமைமாற்றம் செய்யப்படுவதாலும், மூலதனம் இங்கே சரக்காகக் காணப்படுகிறது. மூலதனத்தின் மதிப்பு இலாபத்தை உற்பத்தி செய்வதில் பொதிந்துள்ளது. மூலதனமாக ஈடுபடுத்தப்படும் பணம் அல்லது சரக்குகளின் மதிப்பானது அவை அவற்றின் உடைமையாளருக்கு உற்பத்தி செய்து கொடுக்கும் உபரி-மதிப்பின் அளவைப் பொறுத்ததே தவிர, பணமாகவோ சரக்குகளாகவோ அவை பெற்றுள்ள மதிப்பை பொறுத்ததல்ல. மூலதனத்தின் உற்பத்தியே

(61) 'பணத்தின் மதிப்பு' அல்லது 'செலாவணியின் மதிப்பு' என்ற சொல்லை சரக்குகளுக்கான பரிவர்த்தனை-மதிப்பு, மூலதனத்தின் பயன்-மதிப்பு ஆகிய இரண்டையும் குறிப்பதற்கு விருப்பம் போல் பயன்படுத்தும்போது அச்சொல்லின் ஐயத்திரிபான நிலை ஓயாத குழப்பத்துக்கு வழிவகுக்கிறது.' (டுக், செலாவணிக் கொள்கை பற்றிய ஆய்வு, பக்கம் 77.) மதிப்பு என்பதே (வட்டி) மூலதனத்தின் பயன்-மதிப்பாகிவிடுகிறது என்னும் பிரதானக் குழப்பம் (இவ்விவகாரத்திலேயே உட்கிடக்கையாய் இருக்கும் குழப்பம்) டுக்கின் பார்வையில் படாமல் தப்பிவிட்டது.)

இலாபம் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையில், பணம் பணமாகச் செலவிடப்பட்டாலும், மூலதனமாக முன்னீடு செய்யப்பட்டாலும், பணத்தின் பயன்பாட்டிலான ஒரு வேறு பாட்டையே அது குறிக்கிறது. பணம் அல்லது சரக்குகள் தம்மளவில் உள்ளுறை மூலதனமாகும். எப்படி உழைப்புச் சக்தி உள்ளுறை மூலதனமோ அதே போலத்தான் இவையும். ஏனென்றால் (1) பணத்தை உற்பத்தி - அடிக் கூறுகளாக மாற்றலாம். அது அவற்றுக்கான சூக்குமத் தெரிவிப்புதான் - அவை மதிப்பாக இருக்கும் நிலவல் வடிவம்தான்; (2) செல்வத்தின் பொருட் கூறுகள் உள்ளுறை மூலதனமாகும் குணம் படைத்தவை; ஏனென்றால் அவற்றை மூலதனம் ஆக்குகிற அவற்றின் எதிர்நிரப்புக்கூறு, அதாவது கூலியுழைப்பு முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையில் தயாராய்க் கிடைக்கிறது.

பொருட் செல்வத்தின் முரண்பாடான சமூகத் தனியியல்புகள் - கூலியுழைப்பாய் இருக்கும் உழைப்புக்கு அது பகையாய் இருப்பது - பொருளுற்பத்தி நிகழ்முறையைச் சாராமலே முதலாளித்துவச் சொத்துடைமையில் வெளிப்படுகின்றன. குறிப்பிட்ட இந்த உண்மை முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் ஓயாது விளைவ தாகும், ஓயாத விளைவு என்ற முறையில் அதற்கு ஓயாத முன்தேவையாகவும் இருப்பதாகும். முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையிலிருந்து பிரித்துப் பார்க்கும் போது இவ்வுண்மையானது பணம், சரக்குகள் இரண்டுமே உள்ளுறை மூலதனமாக, உள்ளியல் மூலதனமாக இருப்பதில், அதாவது மூலதனமாக விற்கத்தக்கவையாய் இருப்பதில் வெளிப்படுகிறது; இவ்வடிவில் அவை பிறர் உழைப்பை ஆள முடியும், பிறர் உழைப்பைத் தனதாக்கும் உரிமையை வழங்க முடியும், எனவே தற்பெருக்கமடையும் மதிப்புகளை குறிப்பவையாய் இருக்க முடியும். பிறர் உழைப்பைத் தனதாக்குவதற்கான உரிமையையும் சாதனங்களையும் வழங்குவது இந்த உறவு முறைதானே தவிர முதலாளியின் தரப்பில் சமதையாகத் தரப்படும். உழைப்பு அல்ல என்பது தெளிவாய்த் தெரிந்து விடுகிறது.

மேலும், இலாபமானது வட்டியாகவும் முறையான இலாபமாகவும் பிரிவது வழங்கல்-வேண்டலால், அதாவது போட்டியால் சரக்குகளின் சந்தை-விலைகளைப் போலவே - ஒழுங்கு செய்யப்படுவதால், மூலதனம் சரக்காகக் காணப்படுகிறது. ஆனால் ஒற்றுமையைப் போலவே, இங்கு வேற்றுமையும் வெளிப்படையாகத் தெரிகிறது. வழங்கலும் வேண்டலும் சமமானால், சரக்குகளின் சந்தை-விலை அவற்றின் உற்பத்தி-விலைக்குச் சமமாகிறது; அதாவது

அப்போது அவற்றின் விலையானது போட்டியைச் சாராமல் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் உள்ளார்ந்த விதிகளால் ஒழுங்கு செய்யப்படுவதாகத் தெரிகிறது. ஏனென்றால் வழங்கல்-வேண்டலின் ஏற்ற இறக்கங்கள் உற்பத்தி-விலைகளிலிருந்து சந்தை-விலைகள் விலகி வரும் வேறுபாடுகளுக்கு மட்டுமே விளக்கமாகின்றன. இந்த வேறுபாடுகள் தமக்குள் ஒன்றையொன்று நேர் செய்து கொள்கின்றன; இதனால் குறிப்பிட்ட நெடுங்காலங்களின் போக்கில் சராசரிச் சந்தை-விலைகள் உற்பத்தி-விலைகளுக்கும் சமமாகின்றன. வழங்கலும் வேண்டலும் சமமானவுடனே, இந்தச் சந்திகள் செயல்படாது போகின்றன, அதாவது ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொள்கின்றன; அப்போது விலைகளை நிர்ணயிக்கும் பொதுவிதி தனிப்பட்ட நேர்வுகளுக்கும் பொருந்தக் கூடியதாகிறது. அப்போது சந்தை-விலையானது சந்தை-விலையின் அசைவியக்கங்களது சராசரியாக மட்டுமல்லாமல், அதன் உடனடி வடிவத்திலும் கூட உற்பத்தி - விலைக்கு - பொருளுற்பத்தி முறையின் உள்ளார்ந்த விதிகளாலேயே ஒழுங்கு செய்யப்படும் இவ்விலைக்கு சமமாகிறது. இதுவே கூலிக்கும் பொருந்தும். வழங்கலும் வேண்டலும் சமமானால், ஒன்று மற்றதன் விளைவை செயலிழக்கச் செய்கின்றது. அவை தம்மால் ஏற்படும் விளைவை ஒன்றுக்கொன்று செயலிழக்கச் செய்து கொள்கின்றன, கூலியானது உழைப்புச் சக்தியின் மதிப்புக்குச் சமமாகிறது. ஆனால் பண-மூலதனத்தின் வட்டியைப் பொறுத்தவரை நிலைமை வேறு. போட்டியானது இங்கே விதியிலிருந்தான விலகல்களை நிர்ணயிப்பதில்லை. போட்டியால் செயலாக்கப்படுவது தவிர பிரிவினை விதி வேறெதுவும் இல்லை, என்பதே உண்மை. ஏனென்றால் 'இயற்கை' வட்டி வீதம் என்பதாக எதுவும் இல்லை - இதைப் பிறகு பார்ப்போம். தடையிலாப் போட்டியால் நிர்ணயிக்கப்படும் வட்டி வீதத்தைத்தான் இயற்கை வட்டி வீதம் என்று மக்கள் சொல்கிறார்கள். வட்டி வீதத்துக்கு இயற்கை' வரம்புகள் என்பதாக எதுவும் இல்லை. போட்டியானது விலகல்களையும் ஏற்ற இறக்கங்களையும் மட்டும் நிர்ணயிக்காத போதெல்லாம், எனவே எதிரெதிர்ச் சக்திகளின் செயலிழப்பானது நிர்ணயிப்பு என்பதற்கே முற்றுப்புள்ளி வைத்துவிடும் போதெல்லாம், நிர்ணயிக்கப்பட வேண்டியது மனம் போன போக்கிலான விதிசாராத ஒன்றாகி விடுகிறது. அடுத்த அத்தியாயத்தில் இது குறித்து இன்னும் பார்ப்போம்.

வட்டி-மூலதனத்தைப் பொறுத்தவரை, எல்லாமே மேம் போக்கானதாய்த் தெரிகிறது; முன்னீடானது கடன் கொடுப்பவரிட

மிருந்து கடன் வாங்குகிறவருக்கான வெறும் கைமாற்றமாகத் தெரிகிறது; ஈடேற்றம் பெற்ற மூலதனத்தின் மீள்வானது திரும்பவும் நடைபெறும் கைமாற்றமாகவே, கடன் வாங்கியவர் கடன்கொடுத்த வருக்கு வட்டியோடு திருப்பிச் செலுத்தும் மீள்வுக் கொடுப்பாகவே தெரிகிறது. இலாப வீதமானது தனியொரு புரள்வில் பெறப்படும் இலாபத்துக்கும் முன்னீடு செய்யப்படும் மூலதன-மதிப்புக்குமான விகித உறவால் மட்டுமல்லாமல் இந்தப் புரள்வுக் காலத்தின் நீட்டளவாலும் நிர்ணயிக்கப்படுகிறது, எனவே குறிப்பிட்ட கால வட்டங்களுக்குள் தொழில்துறை மூலதனம் தருகிற இலாபமாக நிர்ணயிக்கப்படுகிறது என்ற - முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் உள்ளார்ந்திருக்கிற - உண்மை. தொடர்பாகவும் இதையே குறிப்பிடலாம் வட்டி-மூலதனத்தைப் பொறுத்தவரை, இதுவும் கூட கடன் கொடுக்கிறவருக்கு குறிப்பிட்ட கால வட்டத்துக்கு குறிப்பிட்ட வட்டி தரப்படுவது மேற்பரப்பில் தெரிகிறது.

எந்த ஒன்றின் அகத் தொடர்பையும் ஊடுருவிப் பார்க்கும் தமக்கேயுரிய நுண்ணறிவுத் திறத்தோடு புனைவாற்றல் வாய்ந்த ஆதாம் முல்லர் சொல்கிறார். (Elemente der staatskunst) பெர்லின், *1809*, Dritter Theil, *பக்கம் 138); பொருட்களின் விலைகளை நிர்ணயிக்கும் போது காலம் கருதுவதில்லை. வட்டியை நிர்ணயிக்கும் போது காலம்தான் தலையாய காரணி.'* உற்பத்திக் காலமும் சுற்றோட்டக்காலமும் சரக்கு-விலைகளை நிர்ணயிப்பதில் சேருகின்றன என்பதையும், இதுதான் மூலதனத்தின் குறிப்பிட்ட புரள்வுக் காலத்துக்கு இலாப வீதத்தை நிர்ணயிக்கிறது என்பதையும், குறிப்பிட்ட காலத்துக்கான இந்த இலாப நிர்ணயிப்பால்தான் வட்டி நிர்ணயிக்கப்படுகிறது என்பதையும் அவர் பார்க்கவில்லை. வேறு இடங்களில் போலவே இங்கேயும் அவரது புத்திசாதுர்யம் மேற்பரப்பிலிருக்கும் புழுதிமேகங்களை கண்ணுறுவதிலும், இந்தப் புழுதியை மருமமும் முக்கியத்துவமும் வாய்ந்த ஒன்றாக துணிந்து பறைசாற்றுவதிலும் அடங்கியுள்ளது.

## அத்தியாயம் XXII
## இலாபப் பிரிவினை, வட்டி விதம், இயற்கை வட்டி விதம்

*பிற்பாடு நாம் சந்திக்கவிருக்கும் கடன்-செலாவணியின் ஏனைய எல்லாப் புலப்பாடுகளையும் போலவே இந்த அத்தியாயத்தின் ஆய்வுப் பொருளையும் இங்கு விவரமாய்ப் பகுத்தாராய முடியாது. கடன் கொடுக்கிறவர்களுக்கும் கடன்வாங்குகிறவர்களுக்கும் இடையிலான போட்டாப் போட்டியும் அதன் விளைவாகப் பணச் சந்தையில் ஏற்படும் சிறுசிறு அலைவுகளும் நமது ஆய்வின் எல்லைக்கு அப்பாற்பட்டவை. தொழில்துறை சகடத்தின் போது வட்டி விதம் சுழன்று வரும் சுற்றை விளக்கமாக எடுத்துரைக்க வேண்டுமானால் இச்சகடத்தையே ஆராய்ந்தாக வேண்டும், ஆனால் இதையும் இங்கே செய்ய முடியாது. உலகச் சந்தையில் வட்டி விதம் தோராயமாய்ச் சமனமாவதையும் இங்கு பரிசீலிப்பதற்கில்லை. வட்டி-மூலதனத்தின் சுயேச்சை வடிவமும், இலாபத்திலிருந்து வேறாக வட்டி தனிப்படுத்தப்படுவதுமே இங்கே நமது கருத்துக்குரியவை.*

*நமது முந்தைய அனுமானத்தின்படி, வட்டி என்பது தொழில்துறை முதலாளி பண முதலாளிக்குச் செலுத்தும் இலாபப் பகுதியே ஆதலால், வட்டியின் அதிகப்பட்ச வரம்பு இலாபமே ஆகும்; அது இந்த அதிகப்பட்ச வரம்பை அடையுமானால், திறனுடை-முதலாளி சுருட்டிக் கொள்ளும் இலாபப் பகுதி = 0. உள்ளபடியே வட்டியானது இலாபத்தை விட அதிகமாய் இருக்கும் போது அதை இலாபத்திலிருந்து எடுத்துக் கொடுக்க முடியாது; விதிவிலக்கான இந்நேர்வுகளை ஒதுக்கி விட்டுப் பார்த்தால், மொத்த இலாபத்திலிருந்து கண்காணிப்புக் கூலியாகப் பெயரும் பகுதியை (இது பற்றி பிறகு பார்ப்போம்) கழித்து வருவதை வட்டியின் அதிகப்பட்ச வரம்பாகக் கருதலாம். வட்டியின் குறைந்தபட்ச வரம்பை அறுதியிட்டுரைக்க முடியவே முடியாது. அது எவ்வளவு வேண்டுமானாலும் சரிவுறலாம் ஆனால் அது இப்படிச் சரிவுறுவதை இந்த ஒப்பீட்டு குறைந்தபட்சத்திற்கு மேல் திரும்பவும் உயர்த்துவதற்கு எதிர்ச்செயல் புரியும் காரணிகள் எப்போதும் இருக்கும்.*

*'மூலதனத்தின் பயன்பாட்டுக்காகச் செலுத்தப்படும் தொகைக்கும் மூலதனத்திற்குமான விகித உறவு பணமாக அளவிடப்படும் வட்டி வீதத்தைத் தெரிவிக்கிறது.' 'வட்டி வீதமானது (1) இலாப வீதத்தையும் (2) கடன் கொடுத்தவருக்கும் கடன் வாங்கியவருக்கும் இடையே இலாபம் முழுவதும் எவ்விகிதத்தில் பிரிக்கப்படுகிறது என்பதையும் பொறுத்தது. (எக்கானமிஸ்ட், 1853, ஜனவரி 22.) 'மனிதர்கள் தாம் கடனாய்ப் பெறுவதன் பயன்பாட்டுக்கு வட்டியாகச் செலுத்துவது அதைக் கொண்டு உற்பத்தி செய்யக் கூடிய இலாபத்தில் ஒரு பகுதியாக இருக்குமானால், இந்த வட்டி எப்போதுமே அந்த இலாபத்தால் ஆளப்படுவதாய் இருந்தாக வேண்டும்.' (மாஸி, முன் வந்தது, பக்கம் 49.)*

மொத்த இலாபத்துக்கும் பணமுதலாளிக்கு வட்டியாகச் செலுத்தப்பட வேண்டிய இலாபப் பகுதிக்கும் இடையிலான விகித உறவு நிலையானதென்று முதலில் வைத்துக் கொள்வோம். அப்படி யானால், வட்டியானது மொத்த இலாபத்துடன் சேர்ந்தே உயரும் அல்லது குறையும் என்பதும், மொத்த இலாபமானது பொது இலாப வீதத்தாலும் அதன் ஏற்ற இறக்கங்களாலும் நிர்ணயிக்கப்படுகிறது என்பதும் தெளிவு. எடுத்துக்காட்டாக, சராசரி இலாபவீதம் = 20%, வட்டி = இலாபத்தில் ¼ பங்கு என்று இருக்குமானால், வட்டி வீதம் = 5%; சராசரி இலாப வீதம் + 16% என்றால், வட்டி வீதம் = 4%. இலாப வீதம் 20% ஆக இருக்க, வட்டி வீதம் 8% ஆக உயரலாம்; அப்போதும் தொழில்துறை முதலாளிக்கு 16% இலாப வீதத்திலும் 4% வட்டி வீதத்திலும் அதே இலாபம், அதாவது 12% இப்போதும் கிடைக்கும் வட்டியானது 6% அல்லது 7% மட்டும் உயருமானால், அப்போதும் அவர் இலாபத்தில் பெரும்பங்கை வைத்துக் கொள்வார். வட்டியானது சராசரி இலாபத்தில் மாறாப் பங்களவாய் அமையுமானால், எவ்வளவுக்கு எவ்வளவு பொது இலாப வீதம் உயருகிறதோ மொத்த இலாபத்துக்கும் வட்டிக்கும் இடையிலான அறுதி வேறுபாடு அவ்வளவுக்கு அவ்வளவு அதிகரிக்கும், மொத்த இலாபத்தில் திறனுடை - முதலாளி சுருட்டிக் கொள்ளும் பங்கும் அவ்வளவுக்கு அவ்வளவு அதிகரிக்கும் என்றாகிறது; இதையே மறுதலையாகவும் குறிப்பிடலாம். வட்டி=சராசரி இலாபத்தில் $^1/_5$ பங்கு எனக் கொள்வோம். 10இல் ஐந்திலொரு பங்கு=2; மொத்த இலாபத்துக்கும் வட்டிக்கும் இடையிலான வேறுபாடு=8. 20இல் ஐந்திலொரு பங்கு=4; வேறுபாடு=20 - 4=16; 25இல் $^1/_5$ பங்கு = 5; வேறுபாடு 25 - 5=20 30இல் $^1/_5$பங்கு = 6; வேறுபாடு = 30 - 6=24; 35இல் $^1/_5$ பங்கு = 7; வேறுபாடு = 35-7

= 28. 4, 5, 6, 7% எனும் வெவ்வேறு வட்டி வீதங்கள் இங்கு எப்போதுமே மொத்த இலாபத்தில் 1/5 பங்கு, அல்லது 20%ஐ மட்டுமே குறிக்கும். ஆக, இலாப வீதங்கள் வெவ்வேறாய் இருந்தால், வெவ்வேறான வட்டி வீதங்கள் மொத்த இலாபத்தில் ஒரே ஈவுப் பகுதியை அதாவது மொத்த இலாபத்தில் ஒரே சதவீதத்தைக் குறிக்கலாம். வட்டியின் விகிதப் பங்குகள் இப்படி மாறாதிருக்கும் நிலையில், தொழில்துறை இலாபமானது (மொத்த இலாபத்துக்கும் வட்டிக்கும் இடையிலான வேறுபாடானது) பொது இலாப வீதத்திற்கேற்ப உயரும் அல்லது குறையும்.

ஏனைய எல்லா நிலைமைகளும் மாறாதிருப்பதாகக் கொண்டால், அதாவது வட்டிக்கும் மொத்த இலாபத்துக்கும் இடையிலான விகிதம் அவ்வளவாய் மாறாதிருப்பதாகக் கொண்டால், செயல்படும் முதலாளி இலாப வீதத்தின் படித்தரத்துக்கு நேர்விகிதத்தில் உயர்ந்த வட்டியோ குறைந்த வட்டியோ செலுத்த முடிகிறது, அப்படிச் செலுத்த அவர் சித்தமாயும் இருக்கிறார்.[62] இலாப வீதம் முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் வளர்ச்சிக்கு எதிர்விகிதம் உடையதென முன்பே பார்த்தோம்; ஆகவே; ஒரு நாட்டில் நிலவுவது உயர்ந்த வட்டி வீதமானலும் குறைந்த வட்டி வீதமானாலும் தொழில்துறை வளர்ச்சியின் படித்தரத்துக்கு அதே எதிர்விகிதம் உடையதுதான் என்றாகிறது. எப்படியும், வட்டி வீதத்திலான வேறுபாடு உள்ளபடியே இலாப வீதங்களிலான வேறுபாட்டை தெரிவிப்பதாய் இருக்கும்வரை இந்நிலைமைதான். எப்போதுமே இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை - இது பிறகு தெரியவரும். இந்த அர்த்தத்தில் வட்டியானது இலாபத்தின் மூலம், துல்லியமாகச் சொன்னால் பொது இலாப வீதத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்படுவதாகக் கூறலாம். வட்டி இவ்விதம் ஒழுங்கு செய்யப்படுவது அதன் சராசரிக்கும் பொருந்தும்.

எப்படியானாலும் சராசரி இலாபவீதத்தை வட்டியின் அதிகபட்ச வரம்புக்கான இறுதி நிர்ணயக் கூறாக கருத வேண்டும்.

வட்டி சராசரி இலாபத்துக்கு தொடர்புடையது என்ற உண்மையை இப்போது இன்னும் விரிவாய் பரிசீலிப்போம். இலாபம் போன்ற குறிப்பிட்ட ஒன்றை இருதரப்புகளிடையே பிரிக்க வேண்டும் என்னும்போதெல்லாம், இயல்பாகவே அனைத்துக்கும் முதலாவதாய் கவனிக்கப்பட வேண்டியது பிரிக்கப்பட வேண்டியதன் பருமன்தான்;

(62) 'இயற்கை வட்டி வீதமானது முக்கியமாய் தொழிலின் இலாபங்களால் ஆளப்படுகிறது'. (மாஸி, முன் வந்தது, பக்கம் 51.)

இலாபத்தின் பருமனாகிய இது சராசரி இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. குறிப்பிட்ட அளவுள்ள, உதாரணமாய் 100க்குச் சமமான ஒரு மூலதனத்திற்கு பொது இலாபவீதமும், எனவே இலாபப் பருமனும் குறிப்பிட்டவை எனக் கொள்வோம். அப்போது வட்டியில் ஏற்படும் மாற்றங்கள் கடன் வாங்கிய மூலதனத்தை வைத்து இயங்குகிற உற்பத்தி-முதலாளியின் கையில் இருந்து வரும் இலாபப் பகுதியில் ஏற்படும் மாற்றங்களுக்கு எதிர்விகிதம் உடையதாய் இருக்கும் என்பது கண்கூடு. பங்கிடு செய்யப்பட வேண்டிய இலாபத்தின், ஊதியமிலா உழைப்பினால் உற்பத்தி செய்யப்படும் மதிப்பின் அளவை நிர்ணயிக்கும் நிலைமைகள் இந்த இருவகை முதலாளிகளுக்கும் இடையே அதன் பங்கீட்டை நிர்ணயிக்கும் நிலைமைகளிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றன, அநேக சந்தர்ப்பங்களில் அவை நேர் எதிரான விளைவுகளை தோற்றுவிப்பதும் உண்டு.[63]

நவீன தொழில்துறை ஆனது சகடங்களாய் சுழன்று செல்வதை கண்ணுறுவோமானால்-விறுவிறுப்பற்ற நிலை, உயர்ந்து செல்லும் புத்தாக்கம், செழுமை, மிகையுற்பத்தி, நெருக்கடி, தேக்கம் விறுவிறுப்பற்ற நிலை என்னும் இச்சகடங்கள் தமது பகுப்பாய்வின் எல்லைக்கு அப்பாற்பட்டவை-குறைந்த வட்டி வீதம் பொதுவாக செழுமை காலங்களுக்கு அல்லது கூடுதல் இலாபத்திற்கு உரியதாய் இருப்பதையும், வட்டியிலான உயர்வு செழுமையையும் அதற்கு நேர்மாறாதனவையும் பிரித்து வேறுபடுத்துவதையும், அதிதீவிர கடுவட்டி என்னும் நிலைக்கு உயருகிற அதிகபட்ச வட்டி நெருக்கடி காலங்களுக்கு உரியதாய் இருப்பதையும் அறியலாம்.[64] 1943-ம் வருடத்திய கோடை காலம் குறிப்பிடத்தக்க செழுமை நிறைந்த ஒரு காலத்திற்கு நல்வரவு கூறியது; 1842ம் வருடத்திய வசந்த காலத்திலும் கூட 4½% ஆக இருந்து வந்த வட்டி வீதம் 1843-ம் வருடத்திய வசந்த

(63) கையெழுத்துப்பிரதி இவ்விடத்தில் பின்வரும் குறிப்பை கொண்டுள்ளது: 'இலாபப் பங்கீட்டின் விதிகளை ஆராய்வதற்கு முன்னால் அளவுப் பிரிவினை எப்படி பண்பு பிரிவினை ஆகிறத என்பதை முதலில் தெரிந்து கொள்வதே நல்லது - இந்த அத்தியாயத்தின் போக்கிலிருந்து இத தெளிவாகிறது. முந்தைய அத்தியாயத்திலிருந்து மாறி வர வேண்டுமானால், வட்டியை இலாபத்தின் வரையறுக்கப்படாத ஒரு பகுதியாகக் கொள்வதே போதுமானது.')

(64) 'நெருக்குதலுக்குப் பின் உடனேவரும் முதற்காலத்தில், ஊக வாணிபம் இல்லாமல் பணம் ஏராளமாய் உள்ளது. இரண்டாவது காலத்தில் பணம் ஏராளமாய் இருப்பதோடு ஊக வாணிபங்களும் மிகுந்து இருக்கின்றன; மூன்றாவது காலத்தில் ஊக வாணிபம் சரிவுறத் தொடங்குகிறது, பணத்துக்கான வேண்டல் அதிகரிக்கின்றது நான்காவது காலத்தில் பணத்துக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறது நெருக்குதல் வந்து சேருகிறது.' ஜில்பார்ட், வங்கித் தொழில்பற்றிய நடைமுறைவிளக்கம், 5-ம் பதிப்பு, முதல்பாகம் லண்டன், 1849 பக்.149.)

*காலத்திலும் கோடை காலத்திலும் 2% ஆகக் குறைந்தது;*[65] *செப்டம்பரில் அது பெரிதும் குறைந்து 1 ½% ஆயிற்று (ஜில்பார், பக்கம்.166); அதன் பிறகு 1847 வருடத்திய நெருக்கடியின் போது அது 8% ஆகவும் இன்னும் அதிகமாகவும் உயர்ந்தது.*

*ஆனால் குறைந்த வட்டி தேக்க நிலையோடு ஒத்துப்போவதும், மீதமாய் உயர்ந்து செல்லும் வட்டி புத்துயிர் பெற்று விறுவிறுப்போடு ஒத்துப் போவதும் சாத்தியமே.*

*வட்டி வீதம் நெருக்கடிகளின் போது உச்சநிலை அடைகிறது; அப்போது கொடுப்புகளை நிறைவேற்றுவதற்காக எவ்விலை கொடுத்தும் கடனாகப் பணம் வாங்குகிறார்கள். வட்டியிலான உயர்வு பிணையங்களின் விலையிலான சரிவை குறிப்பதாகும் என்பதால், அதேபோது தயாராய் பண-மூலதனம் வைத்திருப்பவர்களுக்கு அருமையானதொரு வாய்ப்பை வழங்குகிறது; வட்டிப் பிணையங்களை படுகேவலமான விலையில் அடைவதற்கான வாய்ப்பாகும் இது; வட்டி வீதம் மீண்டும் குறைந்தவுடனேயே எப்படியும் அவற்றின் சராசரி விலையையாவது மீட்டுக் கொண்டாக வேண்டிய பிணையங்கள் இவை.*[66]

*ஆனால், இலாபவீதத்திலான ஏற்ற இறக்கங்களை சாராமலே குறைந்து செல்லும் போக்கு வட்டி வீதத்துக்கும் உண்டு. இப்போக்கிற்கு இரு முக்கிய காரணங்கள் உண்டு:*

*1. 'உற்பத்தி திறனுள்ள முறையில் ஈடுபடுத்துவது ஒன்றையே நோக்கமாய்க் கொண்டு மூலதனம் கடன் வாங்கப் பட்டதாக வைத்துக் கொண்டாலும் கூட மொத்த இலாபங்களது வீதத்தில் எவ்வித மாற்றமும் இல்லாமலே வட்டி மாறுவது பெரிதும் சாத்தியம் என்றே கருதுகிறேன். எப்படியென்றால், நாடு செல்வ வளத்தில் முன்னேறிச் செல்கையில், ஒரு வர்க்கம் உதித்தெழுந்து மேன்மேலும் பெருகிச் செல்கிறது;*

(65)டூக் இதற்கு விளக்கமளிக்கிறார்: 'முந்தைய ஆண்டுகளில் மூலதனம் இலாபகரமாக ஈடுபடுத்தப்படும் வாய்ப்பு குறைவாய் இருந்ததால் தவிர்க்க முடியாமலே உபரி மூலதனம் திரண்டு போனதும், சோப்புகள் விடுவிக்கப்பட்டதும் வர்த்தக வாய்ப்புகளிலான நம்பிக்கை மீண்டும் துளிர் விட்டதுமே காரணம்.'(1839 முதல்1847 முடிய விலைகளின் வரலாறு, லண்டன், 1848, பக்கம் 54.)

(66) 'ஒரு வங்கியாளரின் பழைய வாடிக்கையாளருக்கு £200,000 பத்திரத்தின் பேரில் கடன் கொடுக்க மறுத்து விட்டார்கள்; கொடுப்பை நிறுத்தி வைப்பதாக தெரியப்படுத்தும் பொருட்டு அவர் புறப்பட இருக்கையில், அப்படிச் செய்ய அவசியமே இல்லை என்னும், இப்போதைய நிலையில் வங்கியாளர் பத்திரத்தை £150,000க்கு வாங்கித் கொள்வார் என்றும் அவரிடம் தெரிவிக்கப்பட்டது.' (எச்.ராய்) பரிவர்த்தனைகளின் தத்துவம் 1844ம் வருடத்திய வங்கிச் சாசனச் சட்டம் முதலானவை, லண்டன், 1869 பக்.80.)

இவ்வர்க்கத்தினர் தம் மூதாதையரின் பாடுகளினால் போதிய நிதிகளை தம் வசம் வைத்து இருக்கின்றனர்; வட்டியைக் கொண்டு மட்டுமே வளமாய் வாழ்வதற்கு இந்நிதிகள் வழி செய்கின்றன. வேறு பலர் இளமைக் காலத்திலும் நடுத்தர வயதிலும் மும்முரமாய்த் தொழில் செய்தவர்கள், பிற்காலத்தில் ஓய்வு பெற்றுச் சென்று, தாமே திரட்டிய தொகைகள் மீதான வட்டியைக் கொண்டு அமைதியாக வாழ்கின்றனர். முன்னவர்களைப் போலவே இவர்களும் நாட்டின் செல்வ வளங்கள் பெருகும் போது சேர்ந்து பெருகும் போக்குடையவர்கள் எப்படி என்றால் சுமாரான இருப்பைவைத்து ஆரம்பிக்கின்றவர்கள் அதிகமாய் ஒன்றும் இல்லாமல் ஆரம்பிப்பவர்களைவிட விரைவாய் சுயேச்சைப் பெற வாய்ப்பு உண்டு. எனவேதான் புதிதாய் குடியமர்ந்த வறிய வட்டங்களைக் காட்டிலும் பழைய பணக்கார நாடுகளில் தாமே மூலதனத்தைச் சிரமப்பட்டு ஈடுபடுத்த விரும்பாதவர்களுக்குச் சொந்தமான நாட்டு மூலதனத்தொகை சமுதாயத்தின் மொத்த திறனுடை இருப்பில் கூடுதலான விகிதப் பங்காய் அமைகிற நிலை ஏற்படுகிறது. இங்கிலாந்தில்...மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் வட்டி வருமானக்காரர்களின் வர்க்கம் அதிகமாய் இருக்கிறது! வட்டி வருமானக் காரர்களின் வர்க்கம் பெருகப்பெருக, மூலதனம் கடனாய் கொடுப் போரின் வர்க்கமும் பெருகின்றது; எப்படி என்றால் இருவரும் ஒன்று தான்.' (ராம்சே, செல்வ விநியோகம் பற்றிய கட்டுரை. பக்கம் 201 - 02.)

2. கடன்-செலாவணி அமைப்பு வளரும் போதே சமுதாயத்தின் அனைத்து வர்க்கங்களுக்கும் சொந்தமான பணச் சேமிப்புகள் மீது தொழில் அதிபர்களுக்கும் வணிகர்களுக்கும் உள்ள பிடிப்பு மேன்மேலும் வளர்ந்து செல்கிறது; வங்கியாளர்கள் மூலமாய் நடைபெறும் சேமிப்புகள் இவை இந்தச் சேமிப்புகள் மேன்மேலும் குவிக்கப்பட்டு பண-மூலதனமாக பயன்படுவதற்கு ஏற்ற தொகைகள் ஆகின்றன; இவையெல்லாம் கூட வட்டிவீதத்தை குறையச் செய்தாக வேண்டும். பிற்பாடு இது பற்றி இன்னும் பார்ப்போம்.

வட்டி வீதம் நிர்ணயிக்கப்படுவது தொடர்பாக ராம்சே சொல்கிறார்: 'இது ஓரளவுக்கு மொத்த இலாபங்களின் வீதத்தையும், ஓரளவுக்கு இவை மூலதன இலாபங்களாகவும் தொழில் முனைவின் இலாபங்களாகவும் பிரிக்கப்படும் விகிதத்தையும் பொறுத்தது. இந்த விகிதமோ மூலதனத்தை கடன் கொடுக்கிறவர்களுக்கும் கடன் வாங்குகிறவர்களுக்கும் இடையிலான போட்டியைப் பொறுத்தது; இந்தப் போட்டியானது ஈடேற்றம் செய்யப்பட வேண்டிய மொத்த

இலாபத்தின் வீதத்தால் முழுக்க ஆளப்படுவதில்லை என்றாலும் அதன் தாக்கத்திற்கு உள்ளாகிறது.[67] போட்டியானது பிரத்தியேகமாய் இந்த காரணத்தால் மட்டுமே ஒழுங்கு செய்யப்படாதது: ஏனென்றால், ஒருபுறம் உற்பத்தித்திறனுள்ள முறையில் ஈடுபடுத்தும் நோக்கமின்றியே பலர் கடன் வாங்குகின்றனர்; மறுபுறம் மொத்த மூலதனத்தின் கடனாகத்தரப்பட இருப்பதன் விகித பங்கே மொத்த இலாபத்தில் ஏற்படக்கூடிய எந்த மாற்றத்தையும் சாராமல் நாட்டின் செல்வ வளத்துக்கேற்ப மாறுகிறது., (ராம்சே, முன்வந்தது, பக் 206-07.)

சராசரி வட்டி வீதத்தை நிர்ணயிக்க வேண்டுமானால் (1) பெரும் தொழில் துறை சகடங்களிலான அதன் மாற்றங்களின்போது சராசரி வட்டிவீதத்தை கணக்கிட்டாக வேண்டும்; (2) நீண்ட கால மூலதனக் கடன்கள் தேவைப்படும் முதலீடுகளுக்கான வட்டிவீதத்தைக் கண்டறிந்தாக வேண்டும்.

குறிப்பிட்ட நாட்டில் நிலவும் சராசரி வட்டி வீதத்தை - ஓயாமல் சந்தையில் அலைவுறும் வட்டிவீதங்களிலிருந்து வேறானதாகிய இவ்வீதத்தை - எந்த விதியாலும் நிர்ணயிக்க முடியாது. பொருளாதார அறிஞர்கள் எந்த அர்த்தத்தில் இயற்கை இலாப வீதம் என்றும் இயற்கை கூலி வீதம் என்றும் பேசுகிறார்களோ அந்த அர்த்தத்தில் இயற்கை வட்டி வீதம் என்பதாக எதுவும் இத்துறையில் இல்லை. இது தொடர்பாக மாஸி சரியாகவேசொல்கிறார் (பக்கம் 49): 'இந்த சந்தர்ப்பத்தில் எவருக்கும் சந்தேகமாய் இருக்கக் கூடிய ஒன்றே ஒன்று, இந்த இலாபத்தில் உரிமைப்படி எவ்விகிதப் பங்கு கடன் வாங்கியவருக்குச் சொந்தம், எவ்விகிதப் பங்கு கடன்கொடுத்தவருக்குச் சொந்தம் என்பதுதான். இதை நிர்ணயிப்பதற்கு பொதுவாக கடன் வாங்குகிறவர்கள், கொடுக்கிற வர்களின் அபிப்பிராயங்களை நாடுவது தவிர வேறு வழிமுறை ஏதுமில்லை; ஏனென்றால் இவ்வகையில் சரியென்பதும் தவறென்பதும் பொதுச் சம்மதத்தின் அடிப்படையில் எது அவ்வாறு கருதப்படுகிறதோ அது மட்டுமே.' வழங்கலையும் வேண்டலையும் சமப்படுத்துவதற்கு - சராசரி இலாபவீதத்தை குறிப்பிட்டதாய்க் கொள்கிறோம் - அர்த்தம் ஒன்றுமில்லை. இந்தச் சூத்திரம் வேறு எங்கு பயன்படுத்தப்பட்டாலும் (இது நடைமுறையில்

(67) வட்டிவீதமானது மொத்தத்தில் சராசரி இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்படுவது காரணமாய் அநேக சந்தர்ப்பங்களில் குறைந்த வட்டி வீதமும் மட்டு மீறிய வணிக புரட்டும் சேர்ந்து வர காணலாம். 1844ம் வருடத்திய கோடை காலத்தில் நடைபெற்ற இரயில் போக்குவரத்து புரட்டை எடுத்துக் காட்டாக குறிப்பிடலாம். இங்கிலாந்து வங்கியின் வட்டி வீதம் 1844 அக்டோபர் 16 வரை 3% ஆக உயர்த்தப்படவில்லை.

*சரியானதே), போட்டியைச் சார்ந்திராத, போட்டியையே நிர்ணயிக்கிற அடிப்படை நியதியை (வரம்புகளை ஒழுங்கு செய்கிற அல்லது பருமன்களுக்கு வரம்பிடுகிற நியதியை) கண்டுபிடிப்பதற்கான சூத்திரமாகப் பயன்படுகிறது; போட்டி நடைமுறையாலும், அதன் புலப்பாடுகளாலும், அப்புலப்பாடுகளிலிருந்து எழும் கருத்துருவங்களாலும் வசியம் செய்யப்பட்டிருப்பவர்கள் போட்டிக்குள் நிலவும் பொருளாதார உறவுகளின் உள்தொடர்பை மீண்டும் மேலெழுந்தவாரியாய் அறிந்து கொள்வதற்கான சூத்திரமாக இது பயன்படுவது குறிப்பிடத்தக்கது. போட்டியுடனாக வரும் மாற்றங்களிலிருந்து இந்த மாற்றங்களின் வரம்புகளுக்கு செல்வதற்கான வழிமுறையாகும் இது. சராசரி வட்டி வீதத்தைப் பொறுத்தவரை இதுவல்ல நிலைமை. சராசரி போட்டி நிலைமைகள், கடன் கொடுக்கிறவருக்கும் கடன் வாங்குகிறவருக்கும் இடையிலான சமநிலை கடன் கொடுக்கிறவருக்கு 3, 4, 5% போன்ற வட்டி வீதத்தை, இல்லையேல் அவரது மூலதனத்தின் மீதான மொத்த இலாபத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை - உதாரணமாக 20% அல்லது 50% - தருவதற்கு ஏற்புடைத்த காரணம் ஏதுமில்லை. போட்டி அதுவாகவே எதையாவது நிர்ணயிக்கிற இடங்களில் எல்லாம், இந்த நிர்ணயிப்பு தற்செயலானதாய், முற்றிலும் அனுபவ ஞானம் சார்ந்ததாய் இருக்கிறது. பகட்டுப் புலமையோ கற்பனை புனைவோதான் இந்தத் தற்செயலை அவசியம் என்று காட்ட முயலும்.[68] வங்கிச்சட்டங்கள் தொடர்பாகவும் வர்த்தக நெருக்கடிகள் தொடர்பாகவும் அமைந்த 1857, 1858 ஆண்டுகளுக்கான பாராளுமன்ற அறிக்கைகளில் மிகப்பெரிய*

---

(68) எடுத்துக்காட்டாக ஜார்ஜ் ஒப்டைக் அரசியல் பொருளாதாரம் பற்றிய கட்டுரை என்னும் தமது நூலில் (நியூயார்க், 1851) 5% வட்டி வீதத்தை உலகளாவியதாய் சாசுவத விதிகளின் துணை கொண்டு விளக்கிக் காட்டும் முயற்சியில் படுதோல்வி அடைகிறார். திரு கார்ல் ஆர்ண்டு Die naturgemässe Volkswirtscheft gegenüber dem monopoliengeist und dem kommunismus, etc., ஹனோ, 1845 என்ற நூலில் இன்னுங்கூட வெகுளித்தனமாய் எழுதுகிறார். அதில் சொல்லப்பட்டிருப்பதாவது: 'பண்ட உற்பத்தியின் இயற்கைப் போக்கில் ஒரே ஒரு நிகழ்வுதான் முழுமையாக நிலைபெற்ற நாடுகளில் வட்டி வீதத்தை ஓரளவுக்கு ஒழுங்கு செய்வதாய் தெரிகிறது; ஐரோப்பிய வனங்களில் வருடாந்தர வளர்ச்சியின் மூலம் வெட்டுமர உற்பத்தி அதிகரிக்கும் விகிதமே அது. இந்தப் புதிய வளர்ச்சி அவற்றின் பரிவர்த்தனை-மதிப்பைச் சாராமலே, 100க்கு 3 அல்லது 4 என்னும் வீதத்தில் நடைபெறுகிறது.' (மரங்கள் தமது பரிவர்த்தனை-மதிப்பைச் சாராமல், தமது புதிய வளர்ச்சி ஏற்படுமாறு பார்த்துச் கொள்வது என்னே விசித்திரம்:) 'இதன்படி பார்த்தால் மிகப் பணக்கார நாடுகளில் வட்டி வீதம் அதன இப்போதைய மட்டத்திற்கும் கீழே வீழ்ச்சி அடையுமென்று எதிர்பார்க்க முடியாது' (பக்கம் 124). (மரங்களின் பரிவர்த்தனை-மதிப்பு எவ்வளவுதான் அவற்றின் புதிய வளர்ச்சியைச் சார்ந்திருந்தாலும் புதிய வளர்ச்சி பரிவர்த்தனை-மதிப்பைச் சாராமலிருப்பதே காரணம் என்பதைச் சொல்கிறார்.) இதை 'ஆதிகால வனாந்தர வட்டி வீதம்' என்றழைப்பது பொருத்தமாய் இருக்கும். இதைக் கண்டுப்பிடித்துச் சொன்னவர் 'நாய்வரியின் தத்துவஞானி' என்ற முறையில் இந்நூலில் 'நமது விஞ்ஞானத்திற்கு' இன்னுமொரு மெச்சத்தக்க பங்களிப்பைச் செய்கிறார். கார்ல் ஆர்ண்டை 'நாய்வரியின் தத்துவஞானி' என்று மார்க்ஸ் குறிப்பிடுவது வஞ்சப்புகழ்ச்சியே. ஏனென்றால் ஆர்ண்டு தமது புத்தகத்தில் ஒரு தனிப்பத்தியில் (88, பக்கம் 420-21 இந்த நாய்வரியை வலிந்துரைத்தார்.- -ஆங்கிலப்பதிப்பாசிரியர்.)

வேடிக்கையாய் இருப்பது இங்கிலாந்து வங்கி இயக்குநர்களும் லண்டன் வங்கியாளர்களும் கிராமப்புற வங்கியாளர்களும் தொழில்துறை தத்துவ வாதிகளும் 'உற்பத்தி செய்யப்படும் உண்மை வட்டி வீதம்' பற்றி மாறி மாறிப் பேசுவதுதான்; 'கடன்-மூலதனத்தின் பயன்பாட்டுக்குச் செலுத்தப்படும் விலை இம்மூலதனத்தின் வளங்களுக்கு ஏற்ப மாறும்,' 'உயர்ந்த வட்டி வீதமும் குறைந்த இலாபமும் நிரந்தரமாய் இருந்து வர முடியாது' என்பன போன்ற வழக்கமான சங்கதிகளையும், இது போன்ற பகட்டு வெற்றுரைகளையும் இவர்கள் தாண்டிச் செல்வதே இல்லை.[69] சராசரி வட்டி வீதமானது சராசரியாக மட்டும் இருந்து விடாமல் உள்ளபடியான பருமனாகவும் இருக்கும் வரை அதற்குப் போட்டியுடன் தொடர்பு இருப்பது போலவே வழக்காறுகள் சட்ட நீதிப் பாரம்பரியம் போன்றவற்றுடனும் தொடர்பு உள்ளது. அநேக சட்ட விவகாரங்களில், வட்டியை கணக்கிட வேண்டி இருக்குமிடத்து சராசரி வட்டி வீதத்தை சட்டபூர்வ வட்டி வீதமாக கொள்ள வேண்டும். நடும வட்டி வீத்தின் வரம்புகளை ஏன் பொது விதிகளிலிருந்து வருவிக்க முடியாது என்பதைமேலும் ஆய்ந்திடுவோ மானால், இதற்கான விடை வட்டியின் தன்மையிலேயே பொதிந்து இருக்கக் காண்போம். வட்டி என்பது சராசரி இலாபத்தில் ஒரு பகுதி தான். ஒரே மூலதனம் இரண்டு பாத்திரம் வகிக்கிறது-கடன் கொடுப்பவரின் கையில் கடன்-மூலதனமாகவும், செயல்படும் முதலாளியின் கையில் தொழில்துறை-மூலதனம் அல்லது வர்த்தக-மூலதனமாகவும்' விளங்குகிறது. ஆனால் அது ஒரு முறை மட்டுமே செயல்படுகிறது. ஒரு முறை மட்டுமே இலாபம் உற்பத்தி செய்கிறது. கடன்-மூலதனமாக இருக்கும் மூலதனத்தின் தன்மை பொருளுற்பத்தி நிகழ்முறையில் எப்பங்கும் வகிப்பதில்லை. அதற்கு உரிமை கொண்டாடும் இருதரப்பினரும் இலாபத்தை எப்படி பிரித்துக் கொள்கிறார்கள் என்பது முற்றிலும் அனுபவ ஞானம் சார்ந்த ஒன்று, தற்செயலின் ஆட்சி பரப்புக்குரியது; கூட்டுப் பங்குத் தொழிலில் பொது இலாபம் சதவீதப் பங்குகளாக பங்கிடப்படுவது எப்படியோ அதே போலத்தான் இதுவும். அறவே வெவ்வேறான இரு அடிக்கூறுகள் - உழைப்புச் சக்தியும் மூலதனமும்-உபரி மதிப்புக்கும் கூலிக்கும்

(69) இங்கிலாந்து வங்கி அதன் கழிவு வீதத்தை உயர்த்தினாலும் குறைத்தாலும் தங்க ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு ஏற்ப பகிரங்க சந்தையில் நிலவும் வட்டி வீதத்தைத் தக்கவாறு கருத்தில் கொண்டுதான் எப்போதுமே இதைச் செய்கிறது. 'உண்டியல் கழிவுகளை வைத்து சூதாடுவது, வங்கி வீதத்தில் மாறறங்கள் ஏற்படுவதை எதிர்பார்த்து இவ்விதம் சூதாடுவது இப்போது பண மையத்தின்,' அதாவது லண்டன் பணச் சந்தையின் பெருந்தலைகளது வர்த்தகத்தில் சரி பாதி ஆகிவிட்டது. (எச்.ராய்) பரிவர்த்தனைகளின் தத்துவம்...... பக், 113.)

இடையிலான பிரிவினையை நிர்ணயிக்கும் காரணிகளாகச் செயல்படுகின்றன; அடிப்படையாகப் பார்த்தால் இந்தப் பிரிவினை தான் இலாப வீதத்தை நிர்ணயிக்கிறது; இந்த காரணிகள் ஒன்றுக் கொன்று வரம்பிடும் இரு சுயேச்சையான மாறிகளின் பணிகளாகும்; இவற்றின் பண்பு வேறுபாடுதான் உற்பத்தி செய்யப்படும் மதிப்பின் அளவு பிரிவினைக்கு ஆதாரமாகும், உபரி-மதிப்பு வாடகையாகவும் இலாபமாகவும் பிரியும்போதும் இவ்வாறே நிகழ்கிறது என்பதை பிறகு பார்ப்போம். வட்டியைப் பொறுத்தவரை இப்படி எதுவும் நிகழ்வதில்லை. இங்கு ஒரே உபரி-மதிப்பு தொகையின் முற்றிலும் அளவு வழிப்பட்ட பிரிவினையிலிருந்தே பண்பு வழிப்பட்ட வேறுபடுத்தல் எழுகிறது என்பதை இப்போது பார்ப்போம்.

'இயற்கை' வட்டி வீதம் என்பதாக எதுவும் இல்லை என்பதே மேற்சொன்னவற்றிலிருந்து தெரிய வருகிறது. ஆனால் பொது இலாப வீதத்தைப் போல் அல்லாமல் ஒருபுறம், ஓயாமல் அலைவுறும் சந்தை வட்டி வீதங்களிலிருந்து வேறான சராசரி வட்டி அல்லது சராசரி வட்டி வீதத்தின் வரம்புகளை நிர்ணயிப்பதற்கு பொது விதி ஏதும் இல்லை; ஏனென்றால் மொத்த இலாபத்தை இரு மூலதன உடைமையாளர் களிடையே வெவ்வேறு பெயரில் பிரிக்க வேண்டி இருப்பதோடு சரி; மறுபுறம் வட்டி வீதமானது-சராசரி வட்டி வீதமானாலும் சரி, குறிப்பிட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிலவக்கூடிய சந்தை வட்டி வீதமானாலும் சரி - பொது இலாப வீதத்திலிருந்து அறவே வேறான முறையில் ஒரே சீரான, திட்டவட்டமான, புலப்படத்தக்க பருமனாகத் தெரிகிறது.[70]

வட்டி வீதத்துக்கும் இலாப வீதத்துக்குமான உறவு சரக்கின் சந்தை-விலைக்கும் அதன் மதிப்புக்குமான உறவைப் போன்றதே. வட்டி வீதம் இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்படுவதாய் உள்ள வரை, இந்த இலாப வீதம் எப்போதும் பொது இலாப வீதத்தைக் குறிக்குமே தவிர குறிப்பிட்ட ஒரு தொழிற்கிளையில் நிலவும் பிரத்தியேக இலாப வீதம் எதனையும் குறிக்காது, தனியொரு முதலாளி குறிப்பிட்ட ஒரு தொழிற்பிரிவில் அடையக்கூடிய கூடுதல் இலாபத்தைக் குறிப்பது

(70) 'ஓயாமல் சரக்குகளின் விலை அலைவுறுகிறது; இவையாவும் வெவ்வேறு பயன்பாடுகளுக்காக செய்யப்பட்டவை; பணம் அனைத்துக் காரியங்களுக்கும் பயன்படுகிறது, சரக்குகள், ஒரே வகைச் சரக்குகளும் கூட தரத்தைப் பொறுத்து வேறுபடுகின்றன; ரொக்கப் பணம் எப்போதும் ஒரே மதிப்புடையது; அல்லது ஒரே மதிப்புடையதாகக் கொள்ளப்படுவது என்றாவது சொல்லலாம். இப்படித்தான் நாம் வட்டி என்று பெயரிட்டு அழைக்கும் பணத்தின் விலையானது வேறு எதை விடவும் நிலையானதும் ஒரே சீரானதும் ஆகும்.' (ஜே.ஸ்டுவர்ட், அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், பிரெஞ்சு மொழிப்பெயர்ப்பு, 1789, IV, பக்கம் 27.)

என்ற பேச்சுக்கே இடமில்லை.[71] ஆகவே சராசரி வட்டி வீதம் பொது இலாப வீதத்தின் தூயத் தெரிவிப்போ நம்பத்தக்க தெரிவிப்போ அல்லவென்றாலும், பொது இலாப வீதம் சராசரி வட்டி வீதத்தில் அனுபவ ஞானம் சார்ந்த, நிர்ணயமான மெய்நடப்பாக விளங்குகிறது.

வட்டி வீதமே கூட கடன் வாங்குகிறவர்கள் அளிக்க முன்வரும் வெவ்வேறு வகைப் பிணையங்களுக்கேற்பவும், பணம் எவ்வளவு காலத்துக்கு கடன் வாங்கப்படுகிறது என்பதற்கேற்பவும் மாறுவது மெய்தான்; ஆனால் குறிப்பிட்ட தருணத்தில் அது இந்த வகைகள் ஒவ்வொன்றிலும் ஒரே சீராய் இருக்கிறது. அப்படியானால் இந்த வேறுபாடு வட்டி வீதத்தின் நிலையான, ஒரே சீரான தோற்றத்துக்கு எதிரானது அல்ல.[72]

---

(71) 'இலாபத்தைப் பிரிப்பதற்கான இந்த விதி கடன் கொடுக்கிறவர்களுக்கும் வாங்குகிறவர்களுக்கும் பொதுவாகப் பொருந்தக் கூடியதே தவிர, கடன்கொடுக்கிற, வாங்குகிற ஒவ்வொருவருக்கும் குறிப்பாகப் பொருந்தக்கூடியதல்ல. குறிப்பிடத்தக்கவாறு அதிக இலாபம் கிடைத்தால் அது தேர்ச்சியின் பரிசாகும், குறைந்த இலாபம் கிடைத்தால் அது அறியாமையின் பரிசாகும். கடன் கொடுப்பவர்களுக்கும் இதற்கும் எவ்விதத் தொடர்புமில்லை; இலாபம் குறைவதால் அவர்களுக்கு அவதியுமில்லை, இலாபம் அதிகரிப்பதால் அவர்களுக்கு ஆதாயமுமில்லை. ஒரே தொழிலில் ஈடுபட்டுள்ள தனித்தனி ஆட்கள் தொடர்பாகக் கூறப்பட்டது தனித்தனி தொழில்வகைகளுக்கும் பொருந்தும்; ஏதேனும் ஒரு தொழிற்கிளையில் ஈடுபட்டுள்ள வணிகர்களும் தொழில்துறையினரும் கடன் வாங்கி அடையும் இலாபம், அதே நாட்டைச் சேர்ந்த வணிகர்களும் தொழில்துறையினரும் அடையும் பொதுவான இலாபத்தை விட அதிகமாய் இருந்தால், அதை அடைவதற்கு பொதுவான தேர்ச்சியையும் அறிவுத் திறத்தையும் கொண்டே அடையப்பட்டதென்றாலும் அசாதாரணமாய்க் கிடைக்கும் இலாபம் அவர்களுக்கே சொந்தம்; அவர்களுக்கு கடனாகப் பணம் கொடுத்தவர்களுக்குச் சொந்தமல்ல.....ஏனென்றால் கடன் கொடுத்தவர்கள் பொதுவான வட்டி வீதம் கிடைப்பதற்கு வழி செய்கிற நிபந்தனைகளை விட குறைந்த நிபந்தனைகளின் பேரில் எந்தவொரு தொழிற்கிளையை நடத்துவதற்கும் தமது பணத்தை கொடுத்திருக்க மாட்டார்கள்; ஆகவே அவர்களது பணத்தை வைத்து எவ்வளவுதான் ஆதாயம் அடையப்பட்டிருந்தாலும் பொதுவான வட்டி வீதத்திற்கு அதிகமாய் அவர்களுக்கு கிடைத்தலாகாது.' (மாஸி, முன் வந்தது, பக்கம் 50-51)

---

(72) எங்கெல்ஸ் குறிப்பு:-

| | |
|---|---|
| வங்கி-வீதம் | 5% |
| சந்தைக் கழிவு வீதம், 60 நாள் முறிகள் | 3 5/8 % |
| சந்தைக் கழிவு வீதம் 3 மாத முறிகள் | 3½% |
| சந்தைக் கழிவு வீதம் 6 மாத முறிகள் | 5 5/16% |
| உண்டியல் தரகர்களுக்குகான கடன்கள், ஒவ்வொரு நாளும் | 1 முதல் 2% |
| உண்டியல் தரகர்களுக்கான கடன்கள், ஒரு வாரம் | 3% |
| இரு வாரக் காலத்துக்கான கடைசி வீதம், பங்குதாரர்களுக்கான கடன்கள்..... | 4¾ முதல் 5% |
| வைப்புப் படி (வங்கிகள்) | 3½% |
| வைப்புப்படி (கழிவு அகங்கள்) | 3 முதல் 3¼% |

*சராசரி வட்டி வீதமானது ஒவ்வொரு நாட்டிலும் சற்றே நீண்ட கால வட்டங்களில் மாறாப் பருமனாய் விளங்குகிறது. ஏனென்றால் பொது இலாப வீதம் இன்னும் நீண்ட கால இடைவெளிகளில்தான் மாறுகிறது. பிரத்தியேக இலாப வீதங்களில் ஓயாமல் மாற்றங்கள் ஏற்பட்டாலும் கூட இதுவே நிலைமை; ஒரு கிளையில் ஏற்படும் மாற்றத்தை, இன்னொரு கிளையில் ஏற்படும் எதிர்மாற்றம் சரிக்கட்டி விடுகிறது. பொது இலாப வீதம் ஒப்பளவில் மாறாதிருப்பது சராசரி அல்லது பொது வட்டி வீதம் அவ்வளவாய் மாறாதிருக்கும் இந்தத் தன்மையில் துல்லியமாய் வெளிப்படுகிறது.*

*ஆனால் ஓயாது ஒழியாது அலைவுற்றுக் கொண்டிருக்கும் சந்தை வட்டி வீதத்தைப் பொறுத்த வரை, சரக்குகளின் சந்தை-விலையைப் போலவே இதுவும் எந்தவொரு தருணத்திலும் நிலையான பருமனாய் இருந்து வருகிறது; ஏனென்றால் பணச் சந்தையில் கடன்-மூலதனம் அனைத்தும் செயல்படும் மூலதனத்தை மொத்தத் திரளாக ஓயாமல் எதிர்கொள்கிறது; இதனால் ஒரு புறம் கடன்-மூலதனத்தின் வழங்கலுக்கும், மறுபுறம் அதற்கான வேண்டலுக்கும் இடையிலான உறவு குறிப்பிட்ட எந்தவொரு நேரத்திலும் சந்தை வட்டி வீதத்தை தீர்மானிக்கிறது. கடன்-செலாவணி அமைப்பின் வளர்ச்சியும் அதையொட்டி ஏற்படும் மூலதனக் குவிப்பும் எவ்வளவுக்கு எவ்வளவு கடன்-மூலதனத்தை பொதுவான சமூகத் தன்மை பெற்றதாக்கி ஒரேயடியாகப் பணச் சந்தையில் விடுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு மேற்கூறிய வழங்கல்-வேண்டல் உறவு சந்தை வட்டி வீதத்தைத் தீர்மானிக்கிறது. மறுபுறம், பொது இலாப வீதமானது எப்போதுமே ஒரு போக்குதான் பிரத்தியேக இலாப வீதங்களைச் சமனமாக்கும் அசைவியக்கம்தான், அதற்கு மேல் ஒன்றுமில்லை. இங்கே முதலாளிகளிடையிலான போட்டாப் போட்டியானது - இப்போட்டியே கூட சமநிலை நோக்கிய இந்த அசைவியக்கமே இலாபம் சராசரிக்கும் குறைவாய் இருக்கும் கிளைகளிலிருந்து மூலதனத்தை சன்னம் சன்னமாய் விலக்கி எடுப்பதாகவும், இலாபம் சராசரிக்கும் கூடுதலாய்க் கிடைக்கும் கிளைகளில் சன்னம் சன்னமாய் முதலீடு செய்வதாகவும் அமைகிறது, அல்லது இப்போட்டியானது சன்னம் சன்னமாகவும் மாறும் விகிதங்களிலும் கூடுதல் மூலதனம்*

இந்த வேறுபாடு ஒரே நாளுக்கு எவ்வளவு அதிகமாய இருக்கலாம் என்பது 1889 டிசம்பர்-9இல் லண்டன் பணச் சந்தையில் நிலவிய வட்டி வீதம் தொடர்பான மேலே தரப்பட்ட விவரங்களிலிருந்து தெளிவாகிறது. இவ்விவரங்கள் டிசம்பர் 10 தேதிய டெய்லி நியூஸ் ஏட்டின் நகல் இணைப்பிலிருந்து தரப்படுகிறது. குறைந்தபட்சம் 1%, அதிகபட்சம் 5%.)

இந்தக் கிளைகளிடையே வினியோகமாவதாகவும் அமையலாம். இந்த வெவ்வேறு கிளைகள் தொடர்பாகவும் மூலதனத்தை வழங்குவதிலும் விலக்கிக் கொள்வதிலும் ஓயாத மாற்றத்தை இது குறிக்கிறது; வட்டி வீத நிர்ணயிப்பில் போன்று ஏககாலத்தியப் பெருந்திரள் விளைவை ஒருபோதும் குறிப்பதில்லை.

வட்டி-மூலதனமானது சரக்கிலிருந்து அறுதியாக வேறுபடும் கருத்தினமாக இருந்த போதிலும், ஒரு தனிவகைச் சரக்காகிறது; வட்டி அதற்கு விலையாகிறது; இவ்விலை சாதாரணச் சரக்கின் சந்தை-விலையைப் போலவே எப்போதும் வழங்கல்-வேண்டலால் நிர்ணயமாகின்றது. ஆகவே சந்தை-வட்டி வீதமானது ஓயாமல் அலைவுற்றுக் கொண்டிருந்த போதிலும், குறிப்பிட்ட எத்தருணத்திலும் ஒவ்வொரு தனிப்பட்ட சரக்கின் சந்தை விலையையும் போலவே மாறாமல் நிலையாகவும் ஒரே சீராகவும் இருப்பதாகத் தோன்றுகிறது. பண முதலாளிகள் இச்சரக்கை வழங்குகிறார்கள். செயல்படும் முதலாளிகள் அதை விலைக்கு வாங்கி, அதற்கான வேண்டலை தோற்றுவிக்கிறார்கள். சமனமாதலின் மூலம் பொது இலாப வீதம் உருவாகும் போது இப்படி நடைபெறுவதில்லை. ஒரு கிளையில் சரக்குகளின் விலை உற்பத்தி-விலைக்கு கீழாகவோ மேலாகவோ இருந்தால் (இங்கு நாம் தொழில்துறை சகடத்தின் பல்வேறு கட்டடங்களையும் ஒட்டினாற் போல் ஒவ்வொரு தொழில் முனைவிலும் ஏற்படும் ஏற்ற இறக்கங்களை வேண்டுமென்றே ஒதுக்கிவிடுகிறோம்) உற்பத்தியை பெருக்கியோ சுருக்கியோ, அதாவது தொழில்துறை மூலதனங்களாய் சந்தையில் விடப்படும் சரக்குத் திரள்களை பெருக்கியோ சுருக்கியோ சமநிலை ஏற்படுத்தப்படுகிறது - இந்தப் பெருக்கத்துக்கும் சுருக்கத்துக்கும் காரணமாய் இருப்பது தனிப்பட்ட உற்பத்திக் கிளைகளுக்குள் மூலதனம் பாய்வதும் அவற்றைவிட்டு அது வெளியேறுவதும் ஆகும். சரக்குகளின் சராசரிச் சந்தை - விலைகள் உற்பத்தி - விலைகளாக இப்படிச் சமனமாவதன் மூலமாகத்தான் பொது அல்லது சராசரி இலாப வீதத்திலிருந்தான பிரத்தியேக இலாப வீதங்களின் விலகல்கள் சரி செய்யப்படுகின்றன. இந்நிகழ்முறையில் நேரடியான தொழில்துறை மூலதனமாக வணிக மூலதனமோ வட்டி-மூலதனத்தைப் போல் தம்மை வாங்குகிறவரைப் பொறுத்தவரை சரக்குகளின் தோற்றத்தை என்றாவது மேற்கொள்வது சாத்தியமில்லை. இந்நிகழ்முறை சற்றேனும் புலப்படத்தக்கதாய் இருக்கிறது என்றால், சரக்குகளின் சந்தை-விலைகள் ஏறி இறங்குவதிலும் உற்பத்தி விலைகளுக்கு சமனமாவதிலும்தான் அப்படி இருக்கிறதே தவிர, சராசரி இலாபத்தின் நேரடி நிர்ணயிப்பு என்ற

முறையில் அல்ல. பொது இலாப வீதம் (1) மொத்த மூலதனத்தால் உற்பத்திச்செய்யப்படும் உபரி-மதிப்பாலும் (2) இந்த உபரி-மதிப்புக்கும் மொத்த மூலதனத்தின் மதிப்புக்குமான விகிதத்தாலும், (3) போட்டியாலும்தான் நிர்ணயிக்கப் படுகிறது. ஆனால் போட்டியானது தனிப்பட்ட உற்பத்திக் கிளைகளில் முதலீடாகியுள்ள மூலதனங்கள் தமது ஒப்பீட்டுப் பருமன்களுக்கேற்ப இந்த உபரி-மதிப்பிலிருந்து சம ஆதாய பங்குகளை எடுக்க முனைகிற அசைவியக்கமாக உள்ளவரை தான், பொது இலாப வீதம் போட்டியால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே, பொது இலாப வீதத்திருக்கு ஆதாரமாய் இருக்கும் காரணங்கள் உள்ளபடியே சந்தை-வட்டி வீதத்துக்கான காரணங்களில் இருந்து பெரிதும் வேறுபடுகிறவையும் அவற்றை விட பெரிதும் சிக்கலானவையும் ஆகும் - சந்தை வட்டி வீதத்தை நேரடியாகவும் உடனடியாகவும் நிர்ணயிப்பது வழங்களுக்கும் வேண்டலுக்கும் இடையேயான விகிதமே. எனவே பொது இலாப வீதமானது வட்டிவீதத்தைப் போல் தெளிவாகவும் கண்கூடாகவும் தெரியக்கூடிய ஒன்றல்ல. பல்வேறு உற்பத்திக் கிளைகளிலும் நிலவுகிற தனிப்பட்ட இலாப வீதங்களே ஓரளவுக்கு நிச்சயமற்றவைதான்; ஆனால் அவை தோற்றமளிக்கிற அளவில், ஒரே சீராய் இருப்பது அல்ல, அவற்றின் வேறுபாடுகள்தான் புலப்படத் தக்கவையாகும் ஆனால் பொது இலாப வீதம் இலாபத்தின் கீழ் வரம்பாக மட்டும் தெரிகிறதே தவிர, உள்ளபடியான இலாபவீதத்தின் அனுபவஞானம் சார்ந்த, நேரடியாக கண்ணுக்குத் தெரிகிற வடிவமாக அல்ல.

வட்டி வீதத்துக்கும் இலாப வீதத்துக்கும் இடையிலான இந்த வேறுபாட்டை வலியுறுத்தும் போது, வட்டி வீதம் உறுதிபடுவதற்கு சாதகமானவையாகிய பின் வரும் இரு அம்சங்களை இன்னமும் விட்டு விடவேச் செய்கிறோம்: (1) வட்டி-மூலதனம் வரலாற்றின் முன்பே நிலவி வருவதும் பாரம்பரியமான பொது வட்டி வீதம் நிலவிவருவதும்; (2) நாட்டின் பொருளாதார நிலைமைகள் எப்படி இருந்த போதிலும் இலாப வீதத்தின் மீது உலகச் சந்தை செலுத்தும் தாக்கத்துடன் ஒப்பிடுகையில் வட்டி வீதத்தை நிறுவுவதன் மீது உலகச்சந்தை செலுத்தும் மிகக் கூடுதலான நேரடித் தாக்கம்.

சராசரி இலாபமானது நேரடியாக நிலை பெற்ற ஒன்றாய் இருப்பதில்லை; எதிரெதிரான அலைவுகள் சமனமாதலின் இறுதி விளைவாக நிர்ணயிக்கப்பட வேண்டிய ஒன்றாகவே அது இருக்கிறது. வட்டி வீதம் அப்படி அல்ல. அது தினந்தோறும் நிர்ணயமாகி பொதுவான அளவில், எப்படியும் வட்டார அளவிலாவது செல்லுபடியாகிற ஒன்று-தொழில்துறை மூலதனம், வணிக - மூலதனம்

இவற்றின் செயற்பாட்டை கணக்கிடுவதில் முன் தேவையாகவும் காரணியாகவும் கூட பயன்படுகின்ற ஒன்று. ஒவ்வொரு £100 பணத்தொகையும் £ 2, 3, 4, 5 தந்திடுவது அதன் பொதுவான இயற்கைத் திறம் ஆகிறது. வானிலை அறிக்கைகள் பாரமானியும் வெப்பமானியும் காட்டும் குறிப்புகளை தெரிவிப்பது போல் பங்குச் சந்தை அறிக்கைகள் வட்டி வீதத்தை - இம்மூலதனத்துக்கோ அம் மூலதனத்துக்கோ அல்ல, பணச் சந்தையிலுள்ள மூலதனத்துக்கு, அதாவது பொதுவாக கடன்-மூலதனத்துக்கு உரிய வட்டி வீதத்தை - சரிநுட்பமாய்த் தெரிவிக்கின்றன.

பணச் சந்தையில் கடன் கொடுக்கிறவர்களும் கடன் வாங்கு கிறவர்களும்தான் ஒருவரையொருவர் எதிர்நோக்குகிறார்கள். சரக்கின் வடிவம் ஒன்றே - அதாவது பணமே. உற்பத்தி அல்லது சுற்றோட்டத்தின் தனிப்பட்ட கிளைகளில் முதலீடாவதைப் பொறுத்து மூலதனம் மேற்கொள்ளும் பிரத்தியேக வடிவங்களெல்லாம் இங்கே மறைந்துவிடுகின்றன. அது சுயேச்சையான மதிப்பின் வேறுபாடற்ற ஒருபடித்தான வடிவில்-பணமாக-நிலவுகிறது. தனிப்பட்ட கிளைகளிடையிலான போட்டி அதனைப் பாதிப்பதில்லை. பணத்தைக் கடன் வாங்குகிற வகையில் எல்லாக் கிளைகளும் ஒன்றாகின்றன; அவற்றைச் சந்திக்கும் போது மூலதனம் பூணுகிற வடிவம் வருங்காலத்தில் அது எவ்விதம் முதலீடாகப் போகிறது என்பதை இன்னும் இலட்சியம் செய்யாத வடிவம் ஆகும். அது சாராம்சத்தில் ஒரு வர்க்கத்தின் பொது மூலதனமாகவே மூலதனத்தின் வழங்கல் வேண்டலின் மிகவும் திட்டவட்டமாய் இடம் பெறுகிறது - தொழில்துறை மூலதனம் பல்வேறு தனிப்பட்ட கிளைகளுக்கும் இடையிலான மூலதனத்தின் அசைவியக்கத்திலும் போட்டியிலும் மட்டுமே இப்படிச் செய்கிறது. மறுபுறம், பணச் சந்தையில் பண - மூலதனம் உள்ளபடியே பெற்றுள்ள வடிவமானது, அம்மூலதனம் பிரத்தியேகமாய் ஈடுபடுத்தபடுவதை இலட்சியம் செய்யாத வடிவம் ஆகும்; இவ்வடிவத்தில் ஒரு பொதுக்கூறாக அது பல்வேறு கிளைகளிடையே, முதலாளி வர்க்கத்திடையே பிரிக்கப்படுகிறது; இப்பிரிவினை ஒவ்வொரு தனிப்பட்ட கிளையிலும் உற்பத்தியின் தேவைகளைப் பொறுத்து நடைபெறுகிறது. மேலும், பெருவீத தொழில்துறை வளர்ச்சி அடையும்போது, சந்தைக்கு வரும் பண-மூலதனமானது தனிப்பட்ட யாரேனும் ஒரு முதலாளியால், சந்தையில் இருக்கும் மூலதனத்தில் ஏதேனும் ஒரு பின்னப் பகுதியின் உடைமையாளரால் குறிக்கப்படுவதில்லை. மாறாக, அது

குவிக்கப்பெற்ற, ஒழுங்கமைந்த திரளின் தன்மை பெறுகிறது. இத்திரளானது உள்ளபடியான பொருளுற்பத்தியை போலல்லாமல் வங்கியாளர்களது அதாவது சமுதாய மூலதனத்தின் பிரதிநிதிகளது கட்டுக்கு உட்பட்டதாகும். அதாவது வேண்டலின் வடிவத்தைப் பொறுத்தவரை கடன்-மூலதனம் வர்க்க முழுமையாலும் எதிர் நோக்கப்படுகிறது. அதே போது வளங்களைப் பொறுத்தவரை கடன்-மூலதனம் ஒரே மொத்தமாய் இடம் பெறுகிறது.

பொது இலாப வீதம் திட்ட வட்டயான வட்டி வீதத்தின் அருகில் குழப்பமாகவும் தெளிவின்றியும் காணப்படுவதற்கான காரணங்களில் இவை சில. வட்டி வீதம் பருமனில் அலைவுற்றாலும், கடன் வாங்குகிறவர்களை எதிர்நோக்கும் போதெல்லாம் நிர்ணயமானதாகவும் நிலையானதாகவுமே எதிர் நோக்குகிறது; ஏனென்றால் அது அவர்கள் அனைவருக்கும் ஒரே சீராய் மாறுகிறது. எப்படி பண - மதிப்பிலான மாற்றங்கள் எல்லாச் சரக்குகளின் எதிரிலும் அது ஒரே மதிப்புடையதாய் இருப்பதை தடுத்து விடுவது இல்லையோ, அதே போலத்தான் இதுவும். எப்படிச் சரக்குகளின் சந்தை-விலைகளில் நாள்தோறும் ஏற்படும் ஏற்றஇறக்கங்கள் நாள்தோறும் அவ்விலைகள் செய்தி ஏடுகளில் அறிவிக்கப்படுவதை தடுத்து விடுவதில்லையோ, அதே போலத்தான் இதுவும். இதனால்தான் மாமூலாகவே வட்டி வீதம் 'பணத்தின் விலை' என்று அறிவிக்கப்படுகிறது. இங்கு மூலதனமே பண வடிவில் சரக்காக முன்வைக்கப்படுவதுதான் காரணம். எனவே அதன் விலை நிர்ணயம் என்பது ஏனைய சரக்குகளுக்கெல்லாம் எப்படியோ அதே போல அதன் சந்தை விலையும் நிர்ணயமாகும். இதனால்தான் எப்போதுமே வட்டி வீதமாவது பொதுவட்டி வீதமாக, இவ்வளவு பணத்துக்கு இவ்வளவு பணம் என்பதாக, திட்டமானதோர் அளவாக விளங்குகிறது. மறுபுறம் இலாப வீதமானது ஒரே சரக்கை வெவ்வேறு மூலதனங்கள் வெவ்வேறு நிலைமைகளில் உறபத்தி செய்வதைப் பொறுத்து ஒரே விலையுள்ள சரக்குகளுக்கு ஒரே உற்பத்திக் கிளைக்குள்ளேயே கூட மாறலாம். ஏனென்றால் தனியொரு மூலதனத்தின் இலாப வீதம் சரக்கின் சந்தை விலைக்கும் அடக்க விலைக்கும் இடையிலான வேறுபாட்டால் நிர்ணயிக்கப்படுகிறதே தவிர, அதன் சந்தை-விலையால் நிர்ணயிக்கப்படுவதில்லை. இந்த வெவ்வேறு இலாப வீதங்கள் ஓயாத ஏற்ற இறக்கத்தின் ஊடாகத்தான் - முதலில் ஒரே கிளைக்குள்ளேயும் பிறகு வெவ்வேறு கிளைகளிடையேயும் - சமநிலை காண முடியும்.

(பிற்பாடு விரித்துரைப்பதற்கான குறிப்பு.) ஒரு பிரத்தியேகக் கடன் -செலாவணி வடிவம்: பணமானது வாங்குஞ் சாதனமாக பயன்படுவதற்குப் பதில் கொடுப்புச் சாதனமாக பயன்படும் போது, சரக்கு உடைமை மாற்றம் செய்யப்பட்டாலும் அதன் மதிப்பு பிற்பாடுதான் ஈடேற்றம் செய்யப்படுகிறது என்பது தெரிந்ததே. சரக்கு மீண்டும் விற்கப்படும்வரை பணம் செலுத்தப்பட வில்லையானால், இந்த விற்றல் வாங்கலின் விளைவாகத் தெரிவதில்லை; மாறாக, இந்த விற்றலின் ஊடாகவே வாங்கல் ஈடேற்றம் செய்யப்படுகிறது. வேறுவிதமாகச் சொன்னால், விற்றல் வாங்குஞ் சாதனமாகிறது. இரண்டாவதாக: வரவேண்டிய கடன்களுக்கான உரிமைப் பத்திரங்கள், மாற்று உண்டியல்கள் போன்றவை கடன் கொடுத்தவருக்கு கொடுப்புச் சாதனம் ஆகின்றன. மூன்றாவதாக வர வேண்டிய கடன்களுக்கான உரிமைப் பத்திரங்களின் இழப்பீடு பணத்தை மாற்றீடு செய்கிறது.

## அத்தியாயம் XXIII

## வட்டியும், தொழில் முனைவின் இலாபமும்

வட்டியானது ஆரம்பத்தில் இலாபத்தின், அதாவது உபரி-மதிப்பின் பகுதியாகத் தோன்றுகிறது. ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கிறது, உண்மையில் அப்படித்தான் இருந்தும் வருகிறது என்று முந்தைய இரு அத்தியாயங்களிலும், பார்த்தோம்; இலாபத்தின் இந்தப் பகுதியானது தொழிலதிபரோ வணிகரோ ஆகிய செயல்படும் முதலாளி சொந்த மூலதனத்துக்குப்பதில் கடன்வாங்கிய மூலதனத்தைப் பயன்படுத்தும் போதெல்லாம் பண-மூலதன உடைமையாளருக்கு-அதனைக் கடனாய்க் கொடுத்தவருக்கு - செலுத்த வேண்டியதாகும். அவர் சொந்த மூலதனத்தை மட்டும் ஈடுபடுத்தினால், இத்தகைய இலாபப் பிரிவினை ஏதும் நடைபெறுவதில்லை; அப்போது இலாபம் முழுவதும் அவருக்கே. மூலதனத்தின் உடைமையாளர்கள் தாமே அதனை மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஈடுபடுத்தி வரும் வரை, வட்டி வீதத்தை நிர்ணயிப்பதில் போட்டியிடுவதில்லை. வட்டி என்னும் கருத்தினம் - வட்டி வீதத்தை நிர்ணயிக்காமல் சாத்தியமற்றதாகிய இக்கருத்தினம் - நேரடித் தொழில்துறை மூலதனத்தின் அசைவடிவியக்கங்களுக்கு அந்நியமானது என்பது இதிலிருந்தே தெளிவாகிறது.

'குறிப்பிட்ட பண-மூலதனத் தொகையின் பயன்பாட்டுக்காக வருடம் ஒன்றுக்கு, அல்லது அதை விட நீண்டதோ குறுகியதோ ஆன ஏதேனும் ஒரு காலத்துக்கு கடன் கொடுத்தவர் உவந்து பெற்றுக் கொள்வதும், கடன் வாங்கியவர் உவந்து கொடுப்பதுமான விகிதத் தொகையே வட்டிவீதம் என்று இலக்கணம் உரைக்கலாம்....ஒரு மூலதனத்தின் உடைமையாளர் செயல்முனைப்புடன் அதனை மறுவுற்பத்தியில் ஈடுபடுத்தும்போது, எந்த முதலாளிகளுக்கும் கடன் வாங்குகிறவர்களின் எண்ணிக்கைக்குமான விகிதம் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறதோ அந்த முதலாளிகளின் வகையில் அவர் சேரமாட்டார் ( தா.டூக், விலைகளின் வரலாறு, லண்டன், 1838, II, பக்கம் 355-56.) முதலாளிகள் பண-முதலாளிகளாகவும் தொழில்துறை முதலாளி களாகவும் பிரிவதுதான் இலாபத்தில் ஒரு பகுதியை வட்டியாக மாற்றுகிறது, பொதுவாக வட்டி என்னும் கருத்தினத்தைப்

படைத்தளிக்கிறது; இந்த இருவகை முதலாளிகளுக்கும் இடையிலான போட்டிதான் வட்டிவீதத்தை உண்டாக்குகிறது.

மூலதனம் மறுவுற்பத்தி நிகழ்முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வரை-அது தொழில்துறை முதலாளிக்கே சொந்தம் என்றும், கடன்கொடுத்த ஒருவரிடம் அவர் அதனைத் திருப்பிச் செலுத்த தேவையில்லை என்றும் வைத்துக் கொண்டாலும் கூட-தனிப்பட்ட ஒருவர் என்ற முறையில் முதலாளி இம்மூலதனத்தை விருப்பம் போல் பயன்படுத்திக் கொள்வதற்கில்லை; இலாபத்தை மட்டுமே அவர் வருவாயாகச் செலவிட்டுக் கொள்ளலாம். அவரது மூலதனமானது மூலதனமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வரை அது மறுஉற்பத்தி நிகழ்முறைக்குச் சொந்தம், அந்நிகழ்முறையில் அது முடக்கி வைக்கப்படுகிறது. அவரே அதன் உடைமையாளர்; ஆனால் அவர் உழைப்பைச் சுரண்டுவதற்கான மூலதனமாக அதைப் பயன்படுத்தி வரும்வரை அதனை வேறெந்த வழியிலும் அவர் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்த உடைமையுரிமை உதவாது. பண-முதலாளியின் சங்கதியும் இதுவேதான். அவரது மூலதனம் கடனாகத் தரப்பட்டு, இவ்விதம் பண-மூலதனமாகப் பயன்பட்டு வரும் வரை அதைக் கொண்டு அவருக்கு இலாபத்தின் ஒரு பகுதியாகிய வட்டி கிடைக்கிறது; ஆனால் அவர் அசல் தொகையை விருப்பம்போல் பயன்படுத்திக் கொள்ள முடியாது. அவர் தமது மூலதனத்தை ஓராண்டு காலத்துக்கோ இன்னும் நீண்ட காலத்துக்கோ கடனாய்க் கொடுத்து அசல் திரும்பி வராமலே குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை வட்டி பெறும் போதெல்லாம் இது தெளிவாகிறது. ஆனால் அசலே திரும்பி வந்தாலும் கூட அதனால் இங்கு எவ்வித மாறுபாடும் இல்லை. அவர் அசலை திரும்பப் பெறுவாரானால், அது அவருக்கு மூலதனமாக இங்கே பண-மூலதனமாக செயல்பட வேண்டிய நிலை உள்ள வரை அவர் அதனை மீண்டும் மீண்டும் அவர் அதனை கையிலே வைத்துக் கொண்டிருக்கும் வரை, அது வட்டி பெற்றுக் கொடுக்காது, மூலதனமாகச் செயல்படாது; அது வட்டி பெற்றுக் கொடுத்து, மூலதனமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வரை அவரது கையில் தங்காது. மூலதனத்தை சர்வசதா காலத்துக்கும் வட்டிக்கு விடும் சாத்தியப்பாடு இதிலிருந்தே எழுகிறது. ஆகவே பொசாங்கேயை எதிர்த்து டூக் பின்வருமாறு கூறியிருப்பது அறவே தவறாகும். பொசாங்கே கூறுவதை டூக் மேற்கோளாய்த் தருகிறார் (*உலோகச் செலாவணியும் காகிதச் செலாவணியும் கடன்-செலாவணியும், லண்டன், 1842, பக்கம் 73*): 'வட்டி வீதமானது 1% என்பது போல் மிகக்

குறைந்த அளவாக குறைக்கப்படுமானால், கடன் வாங்கிய மூலதனத்தை சொந்தமாய்ப் பெற்றிருக்கும் மூலதனத்துக்கு அனேகமாய்ச் சமமானதாகவே கருத வேண்டியிருக்கும்.' இத்துடன் டூக் பின்வரும் ஓரக் குறிப்பைச் சேர்க்கிறார்: 'அந்த வட்டி வீதத்திலோ இன்னுங்குறைந்த வட்டி வீதத்திலோ கூட கடன் வாங்கிய மூலதனத்தை சொந்தமாய் பெற்றிருக்கும் மூலதனத்துக்கு அநேகமாய்ச் சமமானதாகக் கருத வேண்டும் என்பது விசித்திரக் கருத்தாகும்; இவ்வளவு மதிநுட்பம் வாய்ந்த, ஆய்வுப் பொருளின் சில கூறுகளில் இவ்வளவு விவரமறிந்த ஓர் எழுத்தாளரால் எடுத்துரைக்கப்பட்டிராவிட்டால் இக்கருத்து அக்கறையுடன் கவனிக்கத் தக்கதே அல்ல. அனுமானப்படி கடனைத் திருப்பிச் செலுத்தச் செய்யும் நிபந்தனை இருந்தாக வேண்டுமென்பதை அவர் பார்க்கத் தவறிவிட்டாரா, அல்லது அது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல எனக் கருதுகிறாரா? (தா.டூக். செலாவணிக் கொள்கை பற்றிய ஆய்வு, 2ஆம் பதிப்பு, லண்டன், 1844, பக்கம் 80.) வட்டி =0 என்ற நிலை ஏற்படுமானால், கடன் வாங்கிய மூலதனத்தை வைத்துச் செயல்படும் தொழில்துறை முதலாளி சொந்த மூலதனத்தைப் பயன்படுத்தும் முதலாளியுடன் சமநிலை அடைவார். இருவரும் பெறும் சராசரி இலாபம் ஒன்றாகவே இருக்கும்; கடன்வாங்கிய மூலதனம் ஆனாலும் சரி, சொந்த மூலதனம் ஆனாலும் சரி, இலாபத்தை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் வரைதான் அது மூலதனமாகச் செயல்படுகிறது. திருப்பிச் செய்யும் நிபந்தனையால் எவ்வித மாற்றமும் ஏற்படாது. வட்டி வீதம் எவ்வளவுக்கு எவ்வளவு பூஜியத்தை நெருங்குகிறதோ - எடுத்துக் காட்டாய் அது 1%ஆக குறையும் போது-கடன்வாங்கிய மூலதனம் சொந்த மூலத்துடனான சமநிலையை அவ்வளவுக்கு அவ்வளவு நெருங்கி வருகிறது. பண-மூலதனம் பண-மூலதனமாக நிலவ வேண்டியிருக்கும் வரை எப்போதும் வட்டிக்கு விடப்பட்டாக வேண்டும், வழக்கில் இருந்து வரும் வட்டிவீதத்துக்கு-எடுத்துக்காட்டாய் 1%க்கு-விடப்பட்டாக வேண்டும்; எப்போதும் அதே வர்க்கத்துக்கு-தொழில்துறை முதலாளிகளுக்கும் வர்த்தக முதலாளிகளுக்கும்-விடப்பட்டாக வேண்டும். இவர்கள் முதலாளிகளாகச் செயல்பட்டு வரும் வரை கடன்வாங்கிய மூலதனத்தை வைத்து வேலை செய்கிற ஒருவருக்கும் சொந்த மூலதனத்தை வைத்து வேலை செய்கிற மற்றொருவருக்கும் இடையிலுள்ள ஒரே ஒரு வேறுபாடு முன்னவர் வட்டி செலுத்தியாக வேண்டும் என்பதும் பின்னவர் அப்படிச் செய்ய தேவையில்லை என்பதும்தான். ஒருவர் P என்னும் இலாபமனைத்தையும் சுருட்டிக் கொள்கிறார்; மற்றவருக்கோ

p—i, அதாவது வட்டி நீங்கலான இலாபம் மட்டுமே கிடைக்கிறது. வட்டி எவ்வளவுக்கு பூஜியத்தை நெருங்குகிறதோ, p—i அவ்வளவுக்கு p ஐ நெருங்குகிறது. எனவே இரு மூலதனங்களும் அவ்வளவுக்கு அவ்வளவு சமநிலையை நெருங்குகின்றன. ஒருவர் மூலதனத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு புதிதாய்க் கடன் வாங்க வேண்டும்; ஆனால் மற்றவரும் மூலதனம் செயல்பட வேண்டி இருக்கும் வரை உற்பத்தி நிகழ்முறைக்கு மீண்டும் மீண்டும் அதனை முன்னீடு செய்தாக வேண்டும்; இந்நிகழ்முறையைச் சாராமல் விருப்பம்போல் அதை எடுத்துப் பயன்படுத்த அவரால் முடியாது. இருவருக்குமிடையே எஞ்சி நிற்கும் ஒரே ஒரு வேறுபாடு ஒருவர் தமது மூலதனத்துக்கு உடைமையாளர், மற்றவர் அப்படியல்ல என்கிற கண்கூடான வேறுபாடுதான்.

இப்போது எழுகிற கேள்வி இதுதான். இலாபத்தை நிகர இலாபமாகவும் வட்டியாகவும் பிரிக்கிற இந்த முற்றிலும் அளவுவழிப்பட்ட பிரிவினை எப்படி பண்பு வழிப்பட்ட பிரிவினையாக மாறுகிறது? அதாவது கடன்வாங்கிய மூலதனத்தை அல்லாமல் சொந்த மூலதனத்தை மட்டும் ஈடுபடுத்துகிற ஒரு முதலாளி எப்படி தமது மொத்த இலாபத்தில் ஒரு பகுதியை வட்டி என்னும் பிரத்தியேகம் கருத்தினமாக வகைப்படுத்தி, அவ்வகையில் அதனை தனியே கணக்கிடுகிறார்? மேலும் மூலதனம் முழுவதையும்-கடன் வாங்கியதென்றாலும் சரி, அல்லவென்றாலும் சரி-எடுத்துக் கொண்டால் எப்படி அது வட்டி-மூலதனமாக இருக்கும் நிலை அதுவே நிகர இலாபம் உற்பத்தி செய்யும் மூலதனமாகவும் இருக்கும் நிலையிலிருந்து வேறுபடுத்தப்படுகிறது?

இலாபம் அளவு வழியில் பிரிகிற ஒவ்வொரு தற்செயல் பிரிவினையும் இவ்வாறு பண்புவழிப் பிரிவினையான மாறிவிடுவ தில்லை என்பது கூறாமல் விளங்கும். எடுத்துக்காட்டாக, தொழில்துறை முதலாளிகள் சிலர் சேர்ந்து தொழில் தொடங்குகிறார்கள், பின்னர் ஏதாவது ஒரு சட்ட உடன்படிக்கையின்படி இலாபத்தை தம்மிடையே பிரித்துக் கொள்கிறார்கள். மற்றவர்கள் யாரையும் பங்காளர்களாய்ச் சேர்க்காமல் தாமே தொழில் செய்கிறார்கள். இவர்கள் தமது இலாபத்தை இரு இனங்களாக - ஒரு பகுதியை சொந்த இலாபமாகவும், மறுபகுதியை இல்லாத பங்காளர்களுக்கான நிறும இலாபமாகவும் - கணக்கிடுவதில்லை. ஆகவே இந்த எடுத்துக்காட்டில் அளவுவழிப் பிரிவினை பண்புவழிப் பிரிவினை ஆகவில்லை. உடைமை யுரிமையானது சட்டவழியில் பல ஆட்களைச் சார்ந்திருக்க

நேரும்போதெல்லாம் இது நிலைமை. அப்படி நேராதபோதெல்லாம் இதுவல்ல நிலைமை.

மேற்சொன்ன கேள்விக்கு விடைகாண வேண்டுமானால், வட்டியின் உருவாக்கத்தில் உள்ளபடியே தொடக்க முனையாய் அமைவது என்ன என்பது பற்றி இன்னுங்கூட விரிவாய் பரிசீலிக்க வேண்டும்; அதாவது பண முதலாளியும் தொழில்துறை முதலாளியும் சட்ட வழியில் வெவ்வேறான ஆட்களாக மட்டுமல்லாமல் , மறுவுற்பத்தி நிகழ்முறையில் அறவே வெவ்வேறான பங்கு வகிக்கும் ஆட்களாகவும்தான் உண்மையில் ஒருவரை ஒருவர் எதிர் நோக்குகிறார்கள். இவர்களின் கையில் ஒரே மூலதனம் அறவே வெவ்வேறான இரட்டை அசைவியக்கத்தை மெய்யாகவே நிகழ்த்துகிறது என்ற அனுமானத்திலிருந்து நாம் தொடங்கியாக வேண்டும். ஒருவர் அம்மூலதனத்தை வட்டிக்குக் கொடுப்பதோடு சரி, மற்றவர் அதனை உற்பத்தியில் ஈடுபடுத்துகிறார்.

கடன்வாங்கிய மூலதனத்தை வைத்து வேலை செய்யும் திறனுடை முதலாளிக்கு மொத்த இலாபம் இருபகுதிகளாகப் பிரிகிறது - அவர் கடன் கொடுத்தவருக்கு செலுத்த வேண்டியதாகிய வட்டியாகவும், இந்த வட்டிக்கு மிகையாய் இருப்பதும் இலாபத்தில் அவரது பங்காய் அமைவதுமாகிய உபரியாகவும் பிரிகிறது. பொது இலாப வீதம் குறிப்பிட்டதாய் இருந்தால், இண்டாவதாகக் குறிப்பிட்ட இந்த இலாபப் பகுதி வட்டி வீதத்தால் நிர்ணயிக்கப்படுகிறது; வட்டி வீதம் குறிப்பிட்டதாய் இருந்தால், அப்போது பொது இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. மேலும்: மொத்த இலாபமானது, மொத்த இலாபத்தின் உள்ளபடியான மதிப்பானது தனிப்பட்ட ஒவ்வொரு நேர்விலும் சராசரி இலாபத்திலிருந்து எவ்வளவுதான் வேறுபட்டாலும், செயல்படும் முதலாளிக்குச் சொந்தமான பகுதி வட்டியால் நிர்ணயிக்கப்படுகிறது; ஏனென்றால், வட்டி பொது வட்டி வீதத்தால் நிர்ணயமாகிறது (தனிவிதமான சட்ட உடன்படிக்கைகள் ஏதும் இருப்பின் ஒதுக்கித் தள்ளி விடுகிறோம்), முன்கூட்டியே, பொருளுற்பத்தி நிகழ்முறை தொடங்குவதற்கு முன்பே, அதன் விளைவாகிய மொத்த இலாபம் அடையப்படுவதற்கு முன்பே வட்டி குறிக்கப்பட்டு விட்டதாய் கொள்ளப்படுகிறது. உள்ளபடியே மூலதனத்தின் பிரத்தியேக உற்பத்தி உபரி-மதிப்பே, துல்லியமாகச் சொன்னால் இலாபமே என்று பார்த்தோம். ஆனால் கடன் வாங்கிய

மூலதனத்தை வைத்து வேலை செய்கிற முதலாளிக்கு இந்த பிரத்தியேக உற்பத்தி இலாபம் அல்ல, வட்டி நீங்கலான இலாபமே, வட்டி கொடுத்த பிறகு அவரிடம் எஞ்சி இருக்கும் இலாபப் பகுதியே ஆகும். ஆகவே இலாபத்தின் இந்தப் பகுதி மூலதனம் செயல்படுவதாய் உள்ள வரை அதன் உற்பத்தியாக அவருக்குத் தெரிவது தவிர்க்க முடியாதது; அவரைப் பொறுத்தவரை அது இப்படி இருப்பதற்கு காரணம், செயல்படும் மூலதனத்திற்கு மட்டும் அவர் மூலதனப் பிரதிநிதியாய் இருப்பதே. அது செயல்படுவதாய் உள்ளவரை அவர் அதன் ஆளுருவமாய் இருக்கிறார். தொழில்துறையிலோ வர்த்தகத்திலோ இலாபகரமாய் முதலீடாகிக் கொண்டிருக்கும்வரை அது செயல்படுகிறது; குறிப்பிட்ட தொழிற் கிளைக்கு அவசியமான காரியங்கள் அதை ஈடுபடுத்துகிறவர் மூலமாய் அதைக் கொண்டு நடைபெறுகின்றன. கடன்கொடுத்தவருக்கு அவர் மொத்த இலாபத்திலிருந்து எடுத்துச் செலுத்த வேண்டியதான வட்டியைப் போல் அல்லாமல், அவர் பங்குக்கு வந்து சேரும் இலாபப் பகுதியானது தவிர்க்க முடியாமலே தொழில்துறை இலாபமாகவோ வர்த்தக இலாபமாகவோ வடிவெடுக்கிறது; அல்லது, இவ்விரண்டையும் தழுவிய ஜெர்மனி சொல்லை பயன்படுத்துவதானால், Unternehmergewinn ஆக(தொழில் முனைவின் இலாபமாக) வடிவெடுக்கிறது. மொத்த இலாபம் சராசரி இலாபத்திற்குச் சமமானால் தொழில் முனைவின் இலாபத்தினது அளவு பிரத்தியேகமாய் வட்டி வீதத்தாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. மொத்த இலாபம் சராசரி இலாபத்திலிருந்து வேறுபடுமானால் அவ்வேறுபாடு (இரண்டிலிருந்தும் வட்டியைக் கழித்த பிறகு) தற்காலிக விலைகளுக்கு காரணமாய் அமையும் நிலைமைகள் யாவற்றாலும் நிர்ணயிக்கப் படுகிறது-தனிப்பட்ட ஏதேனும் ஒரு கிளையில் பெறப்படும் இலாப வீதம் பொது இலாப வீதத்திலிருந்து விலகுவதாய் இருந்தாலும் சரி, குறிப்பிட்ட ஒரு கிளையில் யாரேனும் தனியொரு முதலாளி பெறும் இலாபம் இந்தக் கிளையின் சராசரி இலாபத்திலிருந்து விலகுவதாய் இருந்தாலும் சரி. ஆனால் பொருளுற்பத்தி நிகழ்முறைக்குப்பட்ட இலாப வீதம் உபரி-மதிப்பை மட்டுமல்லாமல், உற்பத்திச் சாதனங்களின் கொள்முதல் விலை, சராசரிக்கு மேல் உற்பத்தித் திறனுள்ள வழிமுறைகள் மாறா-மூலதனத்தை மிச்சம் செய்யும் சிக்கனங்கள்-போன்ற வேறுபல நிலைமைகளையும் பொறுத்ததாகும் என்று பார்த்தோம். அது உற்பத்தி விலையை அன்னியில் தனி நிலைமைகளையும் பொறுத்ததாகும், தனித்த தொழில் கொடுக்கல்

வாங்கல் ஒவ்வொன்றிலும் முதலாளியின் சாமர்த்தியத்தையும் உலகத்தையும் பொறுத்ததாகும்; அவரது கொள்முதல் விலை அல்லது விற்பனை விலை உற்பத்தி-விலையை விட கூடுதலாய் இருக்கிறதா குறைவாய் இருக்கிறதா என்பதையும், அது எந்த அளவுக்கு கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கிறது என்பதையும், எனவே சுற்றோட்ட நிகழ்முறையின் போது மொத்த உபரி-மதிப்பில் அவர் தனதாக்கும் பகுதியின் அளவையும் பொறுத்ததாகும். எப்படியானாலும் மொத்த இலாபத்தின் அளவுவழிப் பிரிவினை இங்கே பண்புவழிப் பிரிவினையாக மாறுகிறது; எதைப் பிரிக்க வேண்டும் என்பதையும், செயலார்ந்த முதலாளி எவ்விதம் தமது மூலதனத்தை நிர்வகிக்கிறார் என்பதையும், அவருக்கு அது செயல்படும் மூலதனம் என்ற முறையில், அதாவது செயலார்ந்த முதலாளியாக அவர் செய்யும் பணிகளின் விளைவாகப் பெற்றுத் தரும் மொத்த இலாபம் எவ்வளவு என்பதையும் பொறுத்தே அளவுவழிப் பிரிவினை நடைபெறுவதால், அது அவ்வளவு எளிதாய் பண்புவழிப் பிரிவினையாக மாறுகிறது. செயல்படும் முதலாளியை இங்கே மூலதன உடைமையாளர் அல்லாத ஒருவராய்க் கொள்கிறோம். அவருக்கு மூலதன உடைமையின் பிரதிநிதியாக இருப்பவர் கடன் கொடுத்த பண-முதலாளியே. எனவே பண-முதலாளிக்கு அவர் செலுத்தும் வட்டியானது மொத்த இலாபத்தில் மூலதன உடைமை காரணமாகவே இடம் பெறும் பகுதியாக விளங்குகிறது. இதிலிருந்து வேறாக, செயலார்ந்த முதலாளிக்குப் போய்ச் சேரும் இலாபப் பகுதியானது இப்போது தொழில்முனையின் இலாபமாக விளங்குகிறது; இந்த இலாபமானது அவர் மறுவுற்பத்தி நிகழ்முறையின் மூலதனத்தைக் கொண்டு செய்யும் காரியங்கள் அல்லது பணிகளிலிருந்து மட்டுமே வருவதாகும்; குறிப்பாகச் சொன்னால், தொழில்துறையிலோ வர்த்தகத்திலோ முனைவாளராக அவர் செய்யும் பணிகளிலிருந்தே வருவதாகும். ஆகவே அவரைப் பொறுத்தவரை வட்டியானது சொந்தமாக மூலதனத்தைப் பெற்றிருப்பதன் பலனாகவே தெரிகிறது; 'வேலை' செய்யாத, செயல்படாத மூலதனத்தை மூலதனத்தின் மறுவுற்பத்தி நிகழ்முறையிலிருந்து பிரித்து நோக்கும்போது அம்மூலதனத்தால் விளையும் பலனாகவே தெரிகிறது. அதே போது தொழில் முனைவின் இலாபமானது அவருக்கு எப்படித் தெரிகிறது என்றால், அவர் மூலதனத்தைக் கொண்டு செய்திடும் பணிகளின் பிரத்தியேகப் பலனாக, மூலதனத்தினது அசைவியக்கம், சாதனை இவற்றின் பலனாகத் தெரிகிறது. மூலதனத்தின் சாதனை அவருக்கு அவரது

செயல்முனைப்பாகவே பொருளுற்பத்தி நிகழ்முறையில் பண-முதலாளி செயலற்றும் பங்கேற்காமலும் இருப்பதற்கு மாறான செயல் முனைப்பாகவே தெரிகிறது. மொத்த இலாபத்தின் இருபகுதிகளுக்கும் இடையிலான இந்த பண்புவழி வேறுபாடு - வட்டியானது பொருளுற்பத்தி நிகழ்முறைக்குத் தொடர்பின்றி மூலதனத்திலிருந்தே, மூலதன உடைமையிலிருந்தே விளையும் கனியாய் இருப்பதும், தொழில்முனைவின் இலாபமானது செயல்படும் மூலதனத்திலிருந்து பொருளுற்பத்தி நிகழ்முறையில் பணிபுரியும் மூலதனத்திலிருந்து, எனவே மூலதனத்தை ஈடுபடுத்துகிறவர் மறுவுற்பத்தி நிகழ்முறையில் வகிக்கும் முனைப்பான பங்கிலிருந்து விளையும் கனியாய் இருப்பதுமாகிய இந்தப் பண்பு வழி வேறுபாடு-ஒருபுறம் பண-முதலாளிக்கும், மறுபுறம் தொழில்துறை முதலாளிக்கும் அகவயமாய் உதிக்கிற கருத்து மட்டுமே அல்ல. இது புறவய உண்மையை அடிப்படையாகக் கொண்டது. எப்படியென்றால், வட்டியானது கடன்கொடுத்த பண-முதலாளியிடம் திரும்பிச் செல்கிறது; இந்தப் பண-முதலாளி மூலதனத்துக்கு உடைமையாளர் மட்டுமே ஆவார். எனவே பொருளுற்பத்தி நிகழ்முறைக்கு முன்னரும் அதற்கு வெளியேயும் மூலதன உடைமைக்கு மட்டுமே பிரதிநிதி ஆவார்; அதே போது தொழில் முனைவின் இலாபமானது செயல்படும் முதலாளியிடம் மட்டுமே செல்கிறது - இவர் மூலதன உடைமையாளர் அல்ல.

ஒரே மூலதனத்தின் மீதும், எனவே அதனால் உற்பத்தி செய்யப்படும் இலாபத்தின் மீதும் இருவேறு ஆட்கள் இருவேறு விதமாய் சட்டவுரிமை கொண்டாடுகிறார்கள்; இவ்விருவருக்கு மிடையே மொத்த இலாபம் பிரிக்கப்படுவதான வெறும் அளவு வழிப் பிரிவினை மேற்சொன்ன வழியில் பண்புவழிப் பிரிவினையாக மாறுகிறது. கடன் வாங்கிய மூலதனத்தை வைத்து காரியமாற்றுவதால் தொழில்துறை முதலாளிக்கும், தானே தனது மூலதனத்தை பிரயோகிக்காததால் பண-முதலாளிக்கும் இது பண்புவழிப் பிரிவினை ஆகிறது. இலாபத்தில் ஒரு பகுதி இப்போது ஒரு வடிவத்தில் இருக்கும் மூலதனத்திலிருந்து விளையும் பலனாக, வட்டியாக விளங்குகிறது; மறு பகுதி எதிர் வடிவத்தில் இருக்கும் மூலதனத்திலிருந்து விளையும் பிரத்தியேகப் பலனாகவும், இவ்விதம் தொழில்முனைவின் இலாபமாகவும் விளங்குகிறது. இருபகுதிகளில் ஒன்று பிரத்தி யேகமாகவே மூலதனத்தை வைத்து காரியமாற்றுவதன் பலனாக, செயலாற்றும் மூலதனத்தின் பயனாக, அதாவது செயலார்ந்த முதலாளி

செய்திடும் பணிகளின் பலனாக விளங்குகிறது. மொத்த இலாபத்தின் இரு பகுதிகளும் அடிப்படையிலேயே வெவ்வேறான இரு ஆதாரங்களிலிருந்து பிறந்தவை என்பது போல் அவை ஒன்றுக்கொன்று இப்படி இறுகிப் போய் தனிப்படுவது இப்போது முதலாளி வர்க்கம் அனைத்துக்கும் மொத்த மூலதனத்திற்கும் திடமாய் உருவெடுக்கிறது. செயலார்ந்த முதலாளியால் ஈடுபடுத்தப்படும் மூலதனம் கடன்வாங்கியதாய் இருந்தாலும் இல்லாவிட்டாலும், பண-முதலாளிக்குச் சொந்தமான மூலதனத்தை அவரே ஈடுபடுத்தினாலும் ஈடுபடுத்தாவிட்டாலும் எல்லாம் இங்கு ஒன்றேதான். ஒவ்வொரு மூலதனத்தின் இலாபமும், எனவே மூலதனங்களின் சமனமாதலால் நிறுவப்படும் சராசரி இலாபமும் கூட பண்பு வழியில் வெவ்வேறான ஒன்றையொன்று சாராத, தனித்தனியான இருபகுதிகளாகப் பிளவுறுகிறது, அல்லது பிரிக்கப்படுகிறது; அதாவது வட்டியாகவும் முனைவு-இலாபமாகவும் பிரிக்கப்படுகிறது; இவையிரண்டும் தனித்தனி விதிகளால் நிர்ணயிக்கப்படுகிறவை. கடன் வாங்கிய மூலதனத்தை வைத்து காரியமாற்றும் முதலாளியைப் போலவே சொந்த மூலதனத்தை வைத்து காரியமாற்றும் முதலாளியும் பண உடைமையாளர் என்ற முறையில், தமக்குத் தாமே கடன் அளித்துக் கொண்டவர் என்ற முறையில் தமக்குச் சேர வேண்டிய வட்டியாகவும், செயலார்ந்த முதலாளிக்குரிய பணியைச் செய்கிறவர் என்ற முறையில் தமக்குச் சேர வேண்டிய முனைவு-இலாபமாகவும் மொத்த இலாபத்தை பிரித்துக் கொள்கிறார். ஆகவே இந்தப் பிரிவினை, பண்பு வழிப் பிரிவினையாக உள்ளவரை, மெய்யாகவே முதலாளி இலாபத்தை இன்னொருவரோடு பகிர்ந்து கொள்ள நேரிடுகிறது அல்லவா என்பது கருத்துக்குரியதன்று. மூலதனத்தை ஈடுபடுத்துகிறவர் சொந்த மூலதனத்தை வைத்து வேலை செய்யும்போது கூட இரு தனியாட்களாய் -மூலதன உடைமையாளராகவும் மூலதனத்தை ஈடுபடுத்துகிற வராகவும்-பிளவுறுகிறார்; அவரது மூலதனமும் அதிலிருந்து கிடைக்கும் இலாப இனங்களின் அடிப்படையில் இரண்டாய்ப் பிளவுறுகிறது, உற்பத்தி நிகழ் முறைக்கு வெளியே இருப்பதும் தனக்கு வட்டி பெற்றுத் தருவதும் ஆகிய மூலதன-உடைமையாகவும் உற்பத்தி நிகழ்முறைக்கு உள்ளே இருப்பதும் தன் பணியின் ஊடாக முனைவு-இலாபம் பெற்றுத்தருவதுமாகிய மூலதனமாகவும் பிளவுறுகிறது.

ஆக, வட்டியானது உறுதியான நிலை பெற்றுவிடுகிறது முன்போல் அது மொத்த இலாபத்தை பொருளுற்பத்தியோடு தொடர்பில்லாமல்

பிரித்திடும் பிரிவினையாகத் தெரிவதில்லை; தொழில்துறை முதலாளி வேறு ஒருவரின் மூலதனத்தை வைத்து காரியமாற்ற நேருகையில் எப்போதாவது இப்படி நிகழ்வதுண்டு. அவர் சொந்த மூலதனத்தை வைத்து காரியமாற்றும்போதே கூட அவரது இலாபம் வட்டியாகவும் முனைவு-இலாபமாகவும் பிளவுறுகிறது. வெறும் அளவு வழி பிரிவினை இவ்விதம் பண்பு வழி பிரிவினையாக மாறுகிறது. தொழில்துறை முதலாளி அவரது மூலதனத்தின் உடைமையாளராய் இருந்தாலும் இல்லாவிட்டாலும் - இது தற்செயல் நிலைமைதான் - இந்த மாற்றம் நடைபெறுகிறது இலாபத்தின் வெவ்வேறு பங்களவுகளாக மட்டுமல்லாமல் மூலதனத்தோடு வெவ்வேறு வழிகளில் உறவு கொண்டவையும், எனவே மூலதனத்தின் வெவ்வேறு பண்புக்கூறுகளோடு வரவு உறவு கொண்டவையுமான இருவேறு இலாப இனங்களாகவும் இருப்பவை வெவ்வேறு ஆட்களுக்கு ஒதுக்கப்படக் காண்கிறோம்.

வட்டியாகவும் முனைவு-இலாபமாகவும் மொத்த இலாபம் இவ்விதம் பிரிக்கப்படுவது பண்புவழிப் பிரிவினை ஆகிவிட்ட நிலையில், அது பண்புவழிப் பிரிவினை என்னும் இத்தன்மையை மொத்தமூலதனத்திற்கும் முதலாளி வர்க்கம் அனைத்திற்குமாய்ப் பெறுவதற்கான காரணங்களைக் கண்டுபிடிப்பது எளிது.

முதலாவதாக பின்வரும் அனுபவ ஞானம் சார்ந்த, சாதாரண நிலைமையிலிருந்து இதை அறிய முடிகிறது; அதாவது தொழில்துறை முதலாளிகளில் பெரும்பாலோர் வெவ்வேறு எண் விகிதங்களில் என்றாலும் கூட சொந்த மூலதனத்தை வைத்தும் கடன் வாங்கிய மூலதனத்தை வைத்தும் வேலை செய்கின்றனர்; ஒருவரது சொந்த மூலதனத்துக்கும் கடன் வாங்கிய மூலதனத்துக்கும் இடையிலான விகிதம் நேரத்துக்கு நேரம் மாறுகிறது.

இரண்டாவதாக, மொத்த இலாபத்தில் ஒரு பகுதி வட்டியின் வடிவத்துக்கு மாறுவது மறுபகுதியை முனைவு-இலாபமாக மாற்றுகிறது. முனைவு -இலாபமானது வட்டி மீதான மொத்த இலாபத்தின் மிகை ஒரு சுயேச்சை இனமாக நிலவத் தொடங்கியதும் பூணுகிற எதிர் வடிவமே ஆகும். மொத்த இலாபம் எப்படி வட்டியாகவும் முனைவு-இலாபமாகவும் வேறுபடுத்தப்படுகிறது என்னும் பிரச்சினை தொடர்பான பகுப்பாய்வு முழுவதும், மொத்த இலாபத்தின் ஒரு பகுதி எப்படி வட்டியாக சர்வப் பொதுவாய் இறுகித் தனிப்பட்டதாகிறது என்னும் பரிசீலனையாக உருவெடுக்கிறது.

என்றாலும் வரலாற்று வழியில் பார்க்குமிடத்து, முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையும், அதனோடு சேர்ந்து வந்த கருத்துருவங்களான மூலதனமும் இலாபமும் உதிப்பதற்கு நெடுங்காலம் முன்னதாகவே வட்டி-மூலதனம் முழுமை பெற்ற பாரம்பரிய வடிவமாக நிலவியது; எனவே வட்டியானது மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் முழுமை பெற்ற உட்பிரிவாக நிலவியது. இதனால்தான் பண-மூலதனம் அல்லது வட்டி-மூலதனமே இன்றும் கூட சுயமான மூலதனமாக, தலையாய மூலதனமாக மக்கள் உள்ளத்தில் பதிந்துள்ளது. இதனால்தான், மறுபுறம், பணமே வட்டியாகச் செலுத்தப்படுகிறது என்னும் கருத்து மாஸி காலம் வரை ஓங்கி இருந்தது. கடன்-மூலதனமானது உள்ளபடியே மூலதனமாக ஈடுபடுத்தப்பட்டாலும் - நுகர்வுக்காக மட்டும் கடன் வாங்கப் படுகிறபோதும் கூட-வட்டி பெற்றுத் தருகிறது என்னும் உண்மை இம்மூலதன வடிவம் சுயேச்சையாக நிலவுகிறது என்னும் கருத்துக்கு வலுச்சேர்க்கிறது. வட்டியானது முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் ஆரம்பக் காலங்களில் இலாபத்தைச் சாராமல் சுயேச்சையாய் இருந்ததற்கும், வட்டி-மூலதனம் தொழில்துறை மூலதனத்தைச் சாராமல் சுயேச்சையாய் இருந்ததற்கும் மிகச் சிறந்த நிரூபணம் என்னவென்றால், மொத்த இலாபத்தின் ஒரு பகுதியே வட்டி என்பதை 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்தான் (மாஸியும்,* அவருக்குப் பிறகு ஹியூமும்**). கண்டு பிடித்தார்கள் என்பதும், எப்படியும் இப்படி ஒரு கண்டுபிடிப்பு அவசியமாயிற்று என்பதுமே.

மூன்றாவதாக, தொழில்துறை முதலாளி சொந்த மூலதனத்தை வைத்து காரியமாற்றினாலும் சரி, கடன்வாங்கிய மூலதனத்தை வைத்து காரியமாற்றனாலும் சரி? பண முதலாளிகளின் வர்க்கம் தனிவகை முதலாளிகளாக அவரை எதிர்நோக்குவதில் இதனால் எவ்வித மாற்றமும் இல்லை; இவ்வாறே பண-மூலதனம் சுயேச்சையான மூலதன வகையாகவும், வட்டி இந்தப் பிரத்தியேக மூலதனத்துக்கேயுரிய சுயேச்சையான உபரி-மதிப்பு வடிவமாகவும் அவரை எதிர்நோக்குவதிலும் மாற்றம் இல்லை.

பண்பு வழியில் கூறுவதானால், வட்டி என்பது வெறும் மூலதன உடைமையே பெற்றுத் தருகிற உபரி-மதிப்பாகும்; மூலதனத்தின் உடைமையாளர் மறுவுற்பத்தி நிகழ்முறைக்கு வெளியே நின்றாலும்

---

(*) (ஜோ.மாஸி) இயற்கை வட்டி வீதத்தை ஆளும் காரணங்கள் பற்றிய கட்டுரை லண்டன் 1750-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

** டே.ஹியூம். 'வட்டிகுறித்து.' 'பல்பொருள் குறித்தும் கட்டுரைகள், ஆய்வுரைகள், 'என்பதில், முதல் பாகம், லண்டன், 1764, --ஆங்கிலப்பதிப்பாசிரியர்.)

மூலதனம் அதுவாகவே வட்டி பெற்றுத் தருகிறது. ஆகவே அது மூலதனத்தால் அதன் நிகழ்முறைக்கு வெளியே ஈடேற்றம் செய்யப்படும் உபரி-மதிப்பாகும்.

அளவுவழியில் கூறுவதானால், இலாபத்தில் வட்டியாக அமையும் பகுதி தொழில்துறை மூலதனத்துடனோ வர்த்தக மூலதனத்துடனோ அல்லாமல் பண-மூலதனத்துடனேயே உறவு கொண்டிருப்பதாக தெரிகிறது. உபரி-மதிப்பினது இப்பகுதியின் வீதம், அதாவது வட்டி வீதம் இந்த உறவை மேலும் வலுப்படுத்துகிறது. ஏனென்றால், முதலாவதாக, வட்டி வீதமானது பொது இலாப வீதத்தைச் சார்ந்திருந்த போதிலும் சுயேச்சையாக நிர்ணயிக்கப்படுகிறது; இரண்டாவதாக, சரக்குகளின் சந்தை-விலையைப் போலவே அதுவும் - திட்டமாய்ப் புலப்படாது இலாப வீதத்துடன் ஒப்பிடுகையில் - நிலையான ஒரே சீரான, திட்பமான, எவ்வளவுதான் மாற்றங்களுக்கு உள்ளானாலும் எப்போதுமே நிர்ணயமான உறவாகக் காணப்படுகிறது. மூலதன மெல்லாம் தொழில்துறை முதலாளிகளின் கையிலிருக்குமானால் வட்டி, வட்டி வீதம் என்பதாக எதுவும் இருக்காது. மொத்த இலாபத்தின் பண்புவழிப் பிரிவினை பூணுகிற சுயேச்சையான வடிவம் பண்புவழிப் பிரிவினையைத் தோற்றுவிக்கிறது. தொழில்துறை முதலாளி பண-முதலாளியோடு தம்மை ஒப்பு நோக்கிக் கொள்வாரானால், சராசரி வட்டி மீது - வட்டி வீதத்தின் அடிப்படையில் அனுபவ ஞானம் சார்ந்து முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டதாய்த் தோன்றும் இந்த சராசரி வட்டி மீது - அவரது மொத்த இலாபத்திற்குள்ள மிகையாகிய முனைவு - இலாபம் மட்டுமே அவரைப் பண-முதலாளியிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும். மறுபுறம், கடன்வாங்கிய மூலதனத்திற்கு பதில் சொந்த மூலதனத்தை வைத்து வேலை செய்யும் தொழில்துறை முதலாளியோடு அவர் தம்மை ஒப்பு நோக்கிக் கொள்வாரானால் பின்னவர் வட்டியை வேறொருவருக்குச் செலுத்துவதற்கு பதில் தாமே எடுத்துக் கொள்வதன் மூலம் பண-முதலாளி என்ற முறையில் மட்டுமே அவரிடமிருந்து வேறுபடுவார். இருநிலைகளிலுமே மொத்த இலாபத்தில் வட்டியிலிருந்து வேறுபடுத்திக் காணப்படும் பகுதி அவருக்கு இரு சந்தர்ப்பங்களிலும் முனைவு-இலாபமாகத் தெரிகிறது; வட்டி என்பதே கூட மூலதனம் அதுவாகவே பெற்றுத் தரும் உபரி-மதிப்பாக, உற்பத்தித் திறனுள்ள முறையில் பிரயோகிக்கப்படா விட்டாலும் அது பெற்றுத் தரக்கூடிய உபரி-மதிப்பாகத் தெரிகிறது.

இது நடைமுறை வர்த்தகத்தில் தனிப்பட்ட முதலாளிக்கு சரியானது. மூலதனத்தை வட்டி-மூலதனமாகக் கடன் கொடுப்பதற்குப் பயன்படுத்திக் கொள்வதா, அல்லது அதைத் திறனுடை-மூலதனமாகப்

பயன்படுத்தி தாமே அதன் மதிப்பைப் பெருகச் செய்வதா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அவருக்கு உண்டு - அவரது மூலதனம் ஆரம்பத்திலிருந்தே பண-மூலதனமாக நிலவினாலும் சரி, இன்னும் பண-மூலதனமாக மாற்றப்படாமல் இருந்தாலும் சரி. ஆனால் கொச்சைப் பொருளாதார அறிஞர்கள் சிலர் செய்வது போல் இதைக் கொண்டு போய் சமுதாயத்தின் மொத்த மூலதனத்திற்கு பொருந்தச் செய்வதும், இதுவே இலாபத்தின் காரணமென்று விளக்கமளிக்கும் அளவுக்கு போய் விடுவதும் விபரீதமே. மொத்த மூலதனத்தில் ஒப்பளவில் சிறுபகுதியே பணமாய் இருக்க, எஞ்சிய பகுதியாகிய உற்பத்திச் சாதனங்களை வாங்கிப் பயன்படுத்துவதற்கு யாருமில்லாமல் மூலதனமனைத்தையும் பணமூலதனமாக மாறறிவிடலாம் என்னும் கருத்து பேரபத்தமே. மூலதனமானது திறனுடை பணியேனும் செய்யாமலே, உபரி-மதிப்பைப் படைக்காமலே (உபரி-மதிப்பில் ஒரு பகுதியே வட்டி) முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப் படையில் வட்டி பெற்றுத் தரும் என்றும், முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை முதலாளித்துவப் பொருளுற்பத்தி இல்லாமலே தன்வழிச் செல்லும் என்றும் துணிவது இன்னுங்கூட பேரபத்தமாய் இருக்கும். அளவுக்கதிகமான முதலாளிகள் தமது மூலதனத்தை பண - மூலதனமாக மாற்றுவார்களானால், இதன் விளைவாக பண-மூலதனம் பயங்கர மதிப்பிறக்கத்துக்கு உள்ளாகும், வட்டி வீதம் பயங்கர வீழ்ச்சி அடையும்; பலர் தங்களுக்குக் கிடைக்கும் வட்டியைக் கொண்டு வாழ முடியாதென்னும் நிலை உடனே ஏற்படும்; இவர்கள் திரும்பவும் தொழில்துறை முதலாளிகளாக மாற வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். ஆனால் தனிப்பட்ட முதலாளியைப் பொறுத்தவரை, இது உண்மைதான் என்று மறுபடியும் சொல்கிறோம். ஆகவே சொந்த மூலதனத்தை வைத்து காரியமாற்றும் போதும் கூட, அவர் தமது சராசரி இலாபத்தில் சராசரி வட்டிக்குச் சமமான பகுதியை பொருளுற்பத்தி நிகழ்முறைக்கு தொடர்பில்லாமல் தமது மூலதனத்திலிருந்தே விளையும் பலனாகக் கருதுவது வட்டியாகத் தனிப்படுத்தப்படும். இந்தப் பகுதியைப் போலல்லாமல் மொத்த இலாபத்தின் உபரியை வெறும் முனைவு-இலாபமாகக் அவர் கருதுவதும் தவிர்க்க முடியாதது.

நான்காவதாக, (கையெழுத்துப் பிரதியில் வெற்றிடம்)

ஆக செயல்படும் முதலாளி கடன்வாங்கிய மூலதனத்தின் உடைமையாளருக்கு செலுத்த வேண்டிய இலாபப் பகுதியானது கடன்வாங்கியதென்றாலும் அல்லவென்றாலும் மூலதனம் அனைத்தும் அதுவாகவே வட்டி என்ற பெயரில் பெற்றுத் தரும் இலாபப் பகுதிக்கான சுயேச்சை வடிவமாக மாற்றப்படுகிறது என்று பார்த்தோம். இந்த

இலாபப் பகுதி எவ்வளவு பெரியதென்பது சராசரி வட்டி வீதத்தைப் பொறுத்தது. செயல்படும் முதலாளி தமது மூலதனத்தின் உடைமையாளராய் இருக்கும் போது வட்டிவீதத்தை நிர்ணயிப்பதில் போட்டியிடுவதில்லை-எப்படியும் செயல் முனைப்புடன் போட்டியிடுவதில்லை - என்ற உண்மை இந்த இலாபப் பகுதியின் தோற்றுவாயையே வெளிப்படுத்துகிறது. இலாபத்தின் மீது வெவ்வேறு சட்ட உரிமைகள் கொண்ட இருவருக்கிடையே அதனை அளவுவழியில் மட்டும் பிரிக்கும் பிரிவினை பண்புவழிப் பிரிவினையாக மாறிவிட்டது: இந்தப் பிரிவினை மூலதனம், இலாபம், ஆகியவற்றின் இயல்பிலிருந்தே உதித்தெழுவது போல் தெரிகிறது. ஏனென்றால், முன்பே நாம் பார்த்தது போல, இலாபத்தில் ஒரு பகுதி சர்வப் பொதுவாய் வட்டியாக வடிவெடுத்தவுடனே, சராசரி இலாபத்துக்கும் வட்டிக்கும் இடையிலான வேறுபாடு, அல்லது வட்டிக்கு மேல் கூடுதலாய் இருக்கும் இலாபப் பகுதி வட்டிக்கு எதிரான வடிவத்தை-முனைவு - இலாபமென்னும் வடிவத்தை மேற்கொள்கிறது. வட்டி, முனைவு - இலாபம் ஆகிய இவ்விரு வடிவங்களும் எதிர் கூறுகளாக மட்டும் நிலவுகின்றன. ஆகவே அவை ஒன்றுக்கொன்று விகித உறவு கொண்டவையே தவிர, உபரி- மதிப்புக்கு உபரி-மதிப்புக்கு விகித உறவு கொண்டவை அல்ல-அவை வெவ்வேறு இனங்கள், தலைப்புகள் அல்லது பெயர்களுக்குரிய உபரி-மதிப்புப் பகுதிகளே தவிர வேறல்ல. இலாபத்தில் ஒரு பகுதி வட்டியாக மாறுவதால்தான் மறுபகுதி முனைவு-இலாபமாக விளங்குகிறது.

இங்கு நாம் இலாபம் என்று சொல்வது எப்போதும் சராசரி இலாபத்தையே குறிக்கும்; ஏனென்றால் இந்தப் பகுப்பாய்வில் மாறுபாடுகள் நம் கருத்துக்குரியவை அல்ல - தனிப்பட்ட இலாபங்களின் மாறுபாடுகளாய் இருந்தாலும் சரி, வெவ்வேறு கிளைகளில் அடையப்பெறும் இலாபங்களின் மாறுபாடுகளாய் இருந்தாலும் சரி; போட்டிப் போராட்டத்தாலும் சராசரி இலாபம் அல்லது உபரி-மதிப்பின் பங்கீட்டை பாதிக்கும் ஏனைய நிலமைகளாலும் ஏற்படும் இந்தப் பரிசீலனை முழுவதற்கும் இது பொருந்தும்.

வட்டி என்பது, ராம்சே சொல்வது போல, நிகர இலாபமாகும்; மறுவுற்பத்தி நிகழ்முறைக்கு வெளியே நிற்பவரான கடன்கொடுத்தவருக்கோ தமது மூலதனத்தை உற்பத்தித் திறனுள்ள முறையில் ஈடுபடுத்தும் பண-உடைமையாளருக்கோ மூலதன உடைமை அதுவாகவே இந்த நிகர இலாபத்தை பெற்றுத் தருகிறது. ஆனால் பின்னவரைப் பொறுத்த வரையிலும் கூட திறனுடை முதலாளி

என்னும் பொறுப்பில் அல்லாமல் பண-முதலாளி என்னும் பொறுப்பில்தான் தம் சொந்த மூலதனத்தை செயல்படும் முதலாளிக்கு கடன்கொடுப்பது போல் தமக்குத் தாமே வட்டி-மூலதனமாக கடன் கொடுத்துக் கொண்டவர் என்னும் பொறுப்பில்தான் அவருக்கு மூலதனம் இந்த நிகர இலாபத்தைப் பெற்றுத் தருகிறது. பணத்தையும். பொதுவாக மதிப்பையும் மூலதனமாக மாற்றுவது எப்படி முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் இடையறாத விளைவாகுமோ, அதே போல் அது மூலதனமாக நிலவுவது முதலாளித்துவப் பொருளுற்பத்திக்கு இடையறாத முன் நிபந்தனை ஆகும். உற்பத்திச் சாதனங்களாக மாற்றப்படக்கூடியதாய் இருப்பதன் மூலம் அது ஊதியமிலாத உழைப்பை ஓயாமல் ஆள்கிறது; இவ்விதம் சரக்குகளின் உற்பத்தி நிகழ்முறையையும் சுற்றோட்ட நிகழ்முறையையும் அதன் உடைமையாளருக்கான உபரி-மதிப்பு உற்பத்தியாக மாற்றுகிறது. ஆகவே வட்டி என்பது பின்வரும் உண்மையின் தெரிவிப்பே ஆகும்; பொதுவாக மதிப்பானது, பொதுவான சமுதாய வடிவத்திலிருக்கிற பொருள் வடிவாக்கப்பட்ட உழைப்பானது, உள்ளபடியான பொருளுற்பத்தி நிகழ்முறையில் உற்பத்திச் சாதனங்களாக வடிவெடுக்கும் மதிப்பானது சுயேச்சையான ஒரு சக்தியாகி உழைப்புச் சக்தியை எதிர்நோக்குகிறது, ஊதியமிலா உழைப்பை தனதாக்கும் சாதனமாக இருக்கிறது; அது இப்படியொரு சக்தியாக இருப்பதற்கு காரணம் தொழிலாளியை இவ்வொருவரின் உடைமை என்ற முறையில் எதிர்நோக்குவதே மறுபுறம், கூலியுழைப்புக்கான இந்த எதிர்நிலை வட்டியின் வடிவத்தில் மறைத்து விடுகிறது; ஏனென்றால் வட்டி-மூலதனத்திற்கு எதிர்க்கூறாய் இருப்பது திறனுடை-மூலதனம்தானே தவிர கூலியுழைப்பல்ல. கடன்தரும் முதலாளி மறுவுற்பத்தி நிகழ்முறையில் உள்ளபடியே பணியாற்றும் முதலாளிக்கு முகங்கொடுக்கிறாரே தவிர கூலித் தொழிலாளிக்கு அல்ல. முதலாளித்துவப் பொருளுற்பத்தியில்தான் கூலித் தொழிலாளி யிடமிருந்து உற்பத்திச் சாதனங்களின் உடைமை பறிக்கப்படுகிறது. வட்டி-மூலதனம் என்பது பணவடிவிலான மூலதனத்திலிருந்து வேறாக சொத்துடைமை வடிவிலான மூலதனம் ஆகும். ஆனால் மூலதனம் அதன் பணியைச் செய்யாமலிருக்கும் வரை, தொழிலாளர்களைச் சுரண்டுவதில்லை, உழைப்புக்கு எதிராக வருவதில்லை.

மறுபுறம், முனைவு-இலாபம் கூலியுழைப்பும் அல்ல, முனைவு-இலாபமும் வட்டியும்தான் எதிர்கூறுகளாக உறவு கொண்டிருப்பவை.

முதலாவதாக, சராசரி இலாபத்தைக் குறிப்பிட்டதாக கொண்டால், முனைவு-இலாபம் கூலியால் நிர்ணயிக்கப்படுவதில்லை, வட்டி வீதத்தாலே நிர்ணயிக்கப்படுகிறது. அது வட்டி வீதத்துக்கு எதிர் விகிதத்தில் உயர்வாகவோ குறைவாகவோ இருக்கிறது.[73]

இரண்டாவதாக, செயல்படும் முதலாளி முனைவு-இலாபம் மீதான உரிமையையும், எனவே-இலாபத்தையும் கூட தமது மூலதன உடைமையிலிருந்து வருவிப்பதில்லை; மூலதனப் பணியிலிருந்தே-எவ்வடிவில் மூலதனம் இயங்காச் சொத்தாக மட்டும் இருக்கிறதோ அந்தக் குறிப்பிட்ட மூலதன வடிவத்திலிருந்து வேறானதாகிய இம்மூலதனப் பணியிலிருந்தே வருவிக்கிறார். அவர் கடன்வாங்கிய மூலதனத்தை வைத்து காரியமாற்றும் போதெல்லாம், ஆகவே வட்டியும் முனைவு-இலாபமும் வெவ்வேறு ஆட்களுக்குப் போய்ச் சேரும் போதெல்லாம், இந்த வேற்றுமை உடனே கண்கூடாய் வெளிப்படுகிறது. முனைவு-இலாபமானது மறுவுற்பத்தி நிகழ் முறையில் மூலதனம் புரியும் பணியிலிருந்து உதித்தெழுகிறது; அதாவது செயல்படும் முதலாளி தொழில்துறை மூலதனம், வர்த்தக மூலதனம் ஆகியவற்றின் இந்தப் பணியை நிறைவேற்றுவதற்காகச் செய்யும் காரியங்கள், செயல்களின் விளைவாக உதித்தெழுகிறது. ஆனால் செயல்படும் மூலதனத்தின் பிரதிநிதியாய் இருப்பது வட்டி-மூலதனத்தின் பிரதிநிதியாய் இருப்பது போல் சுகமாய் ஓய்ந்திருக்கும் வேலையல்ல. முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையில், உற்பத்தி நிகழ்முறையையும் சுற்றோட்ட நிகழ்முறையையும் முதலாளி நெறிப்படுத்துகிறார். திறனுடை உழைப்பை அவரே சுரண்டினாலும் சரி, அவர் சார்பில் வேறொருவர் சுரண்டினாலும் சரி, இப்படிச் சுரண்டுவதற்கு மெய்வருந்தியாக வேண்டும். ஆகவே, அவரது முனைவு-இலாபமானது வட்டியிலிருந்து வேறானதாக, மூலதன உடைமையைச் சார்ந்திராமல் சுயேச்சையானதாக அவருக்குத் தெரிகிறது; சொல்லப் போனால், உடைமையாளர் அல்லாதவர் என்ற முறையில் - உழைப்பாளி என்ற முறையில் - தாம் செய்யும் பணியின் விளைவாகவே அவருக்குத் தெரிகிறது.

இது காரணமாய் தவிர்க்க முடியாமலே அவருக்கு உதிக்கும் கருத்தின்படி, அவரது முனைவு-இலாபம் கூலி உழைப்புக்கு எதிராய்

---

(73) 'முனைவு-இலாபங்கள் மூலதன நிகர இலாபங்களைப் பொறுத்தவையே தவிர பின்னவை முன்னவற்றைப் பொறுத்தவையல்ல. (ராம்சே, செல்வ விநியோகம் பற்றிய கட்டுரை, பக்கம் 214. ராம்சேயைப் பொறுத்தவரை, நிகர இலாபம் என்றால் எப்போதுமே வட்டியைக் குறிக்கும்)

நிறுத்தப்படுவதில்லை, பிறரது ஊதியமிலா உழைப்பாகவும் இருப்பதில்லை; மாறாக, அதுவே ஒருவகை கூலியாக அதாவது உழைப்பை கண்காணிப்பதற்கான கூலியாக இருக்கிறது; (1) இந்தக் கண்காணிப்பு வேலை சாதாரண தொழிலாளியின் உழைப்பை விட மிகவும் சிக்கலானதாய் இருப்பதாலும், (2) அவர் தமக்குத் தாமே ஊதியம் அளித்துக் கொள்வதாலும் இந்தக் கூலி சாதாரண தொழிலாளியின் கூலியை விட உயர்வாய் இருக்கிறது. முதலாளியாக அவர் செய்யும் பணி உபரி-மதிப்பை அதாவது ஊதியமிலா உழைப்பைப் படைப்பதிலும், மிகவும் சிக்கலான நிலைமைகளில் அதைப் படைப்பதிலும் அடங்கியுள்ளது என்பதே உண்மை. முதலாளி முதலாளியாகப் பணிசெய்யாமல் மூலதன உடைமையாளராக மட்டும் இருக்கும்போதே கூட அவரது பங்குக்கு வட்டி போய்ச் சேருகிறது என்றும், மறுபுறம் செயல்படும் முதலாளி தமது செயற்பாட்டுக்குப் பயன்படும் மூலதனத்தின் உடைமையாளராக இல்லாத போதே கூட அவரது பங்குக்கு முனைவு-இலாபம் போய்ச் சேரவே செய்கிறது என்றும் ஒப்புநோக்குவது மேற்கூறிய உண்மையை அறவே காணத் தவறுவதாகும். இலாபம், அதாவது உபரி-மதிப்பு பிரிக்கப்பட்டு வரும் இரு பகுதிகளின் எதிர்நிலை வடிவம் காரணமாய், அவருக்கு இரண்டும் உபரி-மதிப்பின் பகுதிகளே என்பது மறந்து போகிறது; உபரி-மதிப்பின் தன்மையிலும் தோற்றுவாயிலும் நிலவல் முறையிலும் இந்தப் பிரிவினையால் எவ்வித மாற்றமும் இல்லை என்பதும் கூட மறந்து போகிறது.

மறு உற்பத்தி நிகழ்முறையில், செயல்படும் முதலாளியானவர் கூலித் தொழிலாளர்களுக்கு இன்னொருவரின் சொத்தாக உள்ள மூலதனத்தின் பிரதிநிதியாக இருக்கிறார். அவரைப் பிரதிநிதியாகக் கொண்டு பணமுதலாளியும் உழைப்பைச் சுரண்டுவதில் பங்கேற்கிறார். முதலீடு செய்கிற முதலாளி தமக்காக தொழிலாளர்களைத் வேலை செய்ய வைப்பது, அல்லது உற்பத்திச் சாதனங்களை மூலதனமாக ஈடுபடுத்துவது என்னும் தமது பணியை தொழிலாளர்களுக்கு உற்பத்திச் சாதனங்களின் ஆளுருவமாக நிறைவேற்ற முடியும்; மறுவுற்பத்தி நிகழ்முறையில் மூலதனம் ஆற்றும் பணிக்கும், மறுவுற்பத்தி நிகழ்முறைக்கு வெளியே மூலதனம் உடைமையாக மட்டும் இருப்பதற்கும் இடையிலான முரண்பாட்டில் மறந்து போகிறது.

உண்மையில் இலாபத்தின், அதாவது உபரி-மதிப்பின் இரு பகுதிகளும் மேற்கொள்கிற வடிவங்களான வட்டியும் முனைவு-

இலாபமும் உழைப்போடு எவ்வித உறவையும் தெரிவிப்பதில்லை; ஏனென்றால் உழைப்புக்கும் இலாபத்திற்கும் இடையேதான் இந்த உறவு நிலவுகிறது; இந்த இலாபம் ஒரு தொகையாக, முழு உருவாக, இந்த இரு பகுதிகளின் ஓர்மையாக இருக்கும் உபரி-மதிப்பே ஆகும். இலாபம் எவ்விதத்தில் பிரிக்கப்படுகிறது என்பதும், இந்தப் பிரிவினைக்கு வழிசெய்யும் வெவ்வேறு சட்ட உரிமைகளும் இலாபம் என்ற ஒன்று ஏற்கெனவே இருந்து வருகிறதென்றும் அனுமானத்தின் அடிப்படையிலானவை. ஆகவே முதலாளி தாம் செயல்படுவதற்கு பயன்படும் மூலதனத்தின் உடைமையாளராக இருந்தால், இலாபம் அல்லது உபரி-மதிப்பு முழுவதையும் அடைகிறார். முதலாளி இப்படி அடைகிறாரா, அல்லது அதில் ஒரு பகுதியை அதன் சட்ட உடைமையாளராய் இருக்கும் இன்னொருவருக்கு செலுத்த வேண்டியவர் ஆகிறாரா என்பது குறித்து தொழிலாளிக்கு கொஞ்சங்கூட கவலை இல்லை. இலாபம் இருவகை முதலாளிகள் இடையே பிரிக்கப்படுவதற்கான காரணங்கள், பிரிக்கப்பட வேண்டிய இலாபம்-அடுத்து பிரிக்கப்படுகிறதா, எப்படிப் பிரிக்கப்படுகிறது என்பதெல்லாம் கருதாமல் மறுவுற்பத்தி நிகழ்முறையிலிருந்து மூலதனமே வருவிக்கிற உபரி-மதிப்பு-நிலவுவதற்கான காரணங்களாய் இவ்விதம் மாறிப்போவதை பார்த்தறிய முடிவதில்லை. வட்டியானது முனைவு-இலாபத்திற்கும், முனைவு-இலாபமானது வட்டிக்கும் எதிராய் இருப்பதாலும் இவையிரண்டும் உழைப்புக்கு அல்லாமல் ஒன்றுக்கொன்றே எதிர்நிறுத்தப்படுவதாலும், முனைவு-இலாபம், வட்டி ஆகியவற்றின் கூட்டுத்தொகை, அதாவது இலாபம்-சொல்லப் போனால் உபரி-மதிப்பும் கூட - எதிலிருந்து வருவிக்கப்படுகின்றன என்பதை அறிய முடிகிறதாம். அதிலிருந்து தெரியுமா? அதன் இரு பகுதிகளது எதிர்நிலை வடிவத்திலிருந்துதானாம்! ஆனால் இலாபப் பிரிவினை தொடங்குவதற்கு முன்பே, அது பற்றி எண்ணிப் பார்ப்பதற்கு முன்பே இலாபம் உற்பத்தி செய்யப்பட்டு விடுகிறது.

வட்டிக்கு விடப்படும் பணம் உள்ளபடியே மூலதனமாக மாற்றப்பட்டு, அதைக் கொண்டு ஓர் உபரி உற்பத்தி செய்யப்பட்டு வரும் வரைதான் - இந்த உபரியின் ஒரு பகுதியே வட்டியாகும் - வட்டி - மூலதனம் வட்டி-மூலதனமாய் இருந்து வருகிறது. ஆனால் உற்பத்தி நிகழ்முறையைச் சாராமல் வட்டி பெற்றுத் தருவது வட்டி-மூலதனத்தின் அங்ககக் குணமாகும் என்பதை இது மறுப்பதாகாது. இப்படித்தான் உழைப்புச் சக்தியும் அது உழைப்பு நிகழ்முறையில்

ஈடுபடுத்தப்பட்டு பொருள்வடிவாக்கப்பட்டு வரும் வரைதான் மதிப்பு உற்பத்தி செய்கிற அதன் குணத்தைப் பாதுகாத்து கொள்கிறது; ஆனால் அது உள்ளியலாய், ஒரு சக்தி என்ற முறையில், மதிப்பைப் படைக்கும் செயற்பாடாகும், எனவே உற்பத்தி நிகழ்முறைக்கு முற்பட்டிருப்பதே தவிர அதிலிருந்து பிறப்பதல்ல என்பதற்கு இது எதிர்வாதம் ஆகாது. மதிப்பைப் படைப்பதற்கான இத்தகைய ஆற்றல் என்ற முறையில்தான் உழைப்புச் சக்தி விலைக்கு வாங்கப்படுகிறது. ஒருவர் அதனை விலைக்கு வாங்கிய பிறகு, உற்பத்தித் திறனுள்ள வேலையில் ஈடுபடுத்தாமல் இருந்து விடக்கூடும்; எடுத்துக்காட்டாக, முற்றிலும் சொந்த நோக்கங்களுக்காகவோ சொந்த சேவைகளுக்காகவோ இன்ன பிறவற்றுக்காகவோ அது வாங்கப்படலாம். இது மூலதனத்துக்கும் பொருந்தும். கடனாகப் பெற்றதை மூலதனமாக ஈடுபடுத்துவதா, அதாவது உபரி-மதிப்பை உற்பத்தி செய்தலென்னும் அதன் உள்ளார்ந்த குணத்தை உள்ளபடியே இயங்க வைப்பதா என்பதை கடன் வாங்கியவர்தான் தீர்மானிக்க வேண்டும். அவர் அதனை மூலதனமாக ஈடுபடுத்தினாலும் ஈடுபடுத்தாவிட்டாலும், சரக்கென்ற முறையில் மூலதனத்தில் உள்ளார்ந்திருக்கும் உள்ளுறை உபரி-மதிப்புக்குத்தான் விலை கொடுக்கிறார்.

முனைவு-இலாபத்தை இப்போது இன்னுங்கூட விவரமாய்ப் பரிசீலிப்போம்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் மூலதனத்துக்குரிய சமூகச் சிறப்பியல்பு பிறரது உழைப்புச் சக்தியை ஆளுகிற சொத்தாய் இருத்தலென்னும் சிறப்பியல்பு நிலைபெற்றதாகிறது; இவ்விதம் வட்டியானது இந்த இடையுறவில் மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பின் ஒரு பகுதியாக காணப்படுகிறது; ஆகவே உபரி-மதிப்பின் மறுபகுதியான முனைவு-இலாபமானது மூலதனத் திலிருந்தே அல்லாமல் மூலதனத்திற்குரிய சமூகச் சிறப்பியல்பைச் சாராமல் பொருளுற்பத்தி நிகழ்முறையிலிருந்தே வருவதாக தவிர்க்க முடியாதது இந்தச் சமூகச் சிறப்பியல்பின் வேறுபட்ட நிலவல் முறையைத்தான் மூலதனத்தின் மீதான வட்டி என்ற சொற்றொடர் வெளியிடுகிறது. ஆனால் பொருளுற்பத்தி நிகழ் முறையை மூலதனத்திலிருந்து வேறாகப் பிரித்து விட்டால் வெறும் அது உழைப்பு நிகழ்முறையே ஆகும். ஆகவே, மூலதன உடைமையாளரைப் போல் அல்லாமல், தொழில்துறை முதலாளியானவர் மூலதனத்தை இயக்குவதாகக் காணப்படுவதற்கு பதில் மூலதனத்தைச் சாராமல்

செயல்படுகிறவராக அதாவது பொதுவான உழைப்பு நிகழ்முறையின் சாமானியச் செயலியாகவும் உழைப்பாளியாகவும், உண்மையில் கூலித் தொழிலாளியாகவுமே காணப்படுகிறார்.

வட்டி என்பது உழைப்புச் சாதனங்கள் மூலதனமாக சமூகவழியில் நிலவுவதைத்தான் தெரிவிக்கிறது; அவை சமூகவழியில் உழைப்புக்கு எதிர்நிலையாக நிலவுவதையும், உழைப்புக்கும் உழைப்பின் மீதும் ஆள்வழி அதிகாரமாக மாற்றப்பட்டு நிலவுவதையும்தான் தெரிவிக்கிறது. அது மூலதன உடைமையைக் பிறர் உழைப்பின் உற்பத்திப் பொருட்களைத் தனதாக்கிக் கொள்வதற்கான சாதனமாகக் காட்டுகிறது. ஆனால் மூலதனத்தின் இந்த தனியியல்பை பொருளுற்பத்தி நிகழ்முறைக்கு வெளியே அதற்குச் சொந்தமாய் இருக்கிற ஒன்றாகக் காட்டுகிறதே தவிர, இந்தப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் முதலாளித்துவச் சிறப்பியல்பின் விளைவாய் இருக்கிற ஒன்றாகக் காட்டுவதில்லை. வட்டியானது இந்தத் தனியியல்பை உழைப்புக்கு நேரடியாய் எதிர்நிறுத்தப்படுவதாக காட்டாமல், உழைப்புடன் தொடர்பற்றதாகவே, ஒரு முதலாளிக்கும் இன்னொரு முதலாளிக்கும் இடையிலான உறவு முறையாகவே காட்டுகிறது. ஆகவே மூலதனத்துக்கும் உழைப்புக்குமான உறவுக்கு அப்பாற்பட்டதும் அவசியமற்றதுமான சிறப்பியல்பாகவே காட்டுகிறது. ஆக, வட்டியில் இலாபத்தின் இந்தப் பிரத்தியேக வடிவத்தில், மூலதனத்தின் எதிர்நிலைத் தன்மை சுயேச்சையான வடிவம் பூணுகிறது; இந்த வடிவத்தில் எதிர்நிலைஅறவே மறைந்து சூக்குமப்பட்டுவிடுகிறது. இரு முதலாளிகளுக்கு இடையிலான உறவுமுறைதானே தவிர, முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலான உறவுமுறையல்ல வட்டி.

மறுபுறம் வட்டியின் இந்த வடிவமானது இலாபத்தின் மறுபகுதியை முனைவு-இலாபமாகவும், மேலும் கண்காணிப்புக் கூலியாகவும் வடிவம் பூணச் செய்கிறது. முதலாளியே செய்ய வேண்டியவையும், தொழிலாளியிடமிருந்து வேறாகவும், தொழிலாளிக்கு எதிராகவும் முதலாளியிடம் வந்து சேருகிறவையுமான பிரத்தியேகப் பணிகள் வெறும் உழைப்புப் பணிகளாக காட்டப்படுகின்றன. அவர் உபரி-மதிப்பைப் படைப்பதற்கு முதலாளியாக வேலை செய்வது காரணம் அல்லவாம், முதலாளியாக பொறுப்பு வகித்தாலும் வகிக்காவிட்டாலும் அவரும் வேலை செய்கிறார், என்பதுதான் காரணமாம். இவ்வாறு உபரி-மதிப்பின் இந்தப்

பகுதி இப்போது உபரி-மதிப்பாக இல்லாமல், அதற்கு எதிர்க்கூறாக, ஆற்றி முடித்த உழைப்புக்கான சமதையாக மாறிப்போகிறது. மூலதனத்தின் அந்நியப்பட்ட தன்மையானது அது உழைப்புக்கு எதிர்நிலையில் இருப்பதானது உள்ளபடியான சுரண்டல் நிகழ்முறைக்கு வெளியே ஓரிடத்துக்கு, அதாவது வட்டி-மூலதனத்திற்கு ஒதுக்கப்பட்டு விடுவதால், இந்தச் சுரண்டல் நிகழ்முறையே கூட சாமானிய உழைப்பு நிகழ்முறையாகத் தெரிகிறது; செயல்படும் முதலாளி இந்த உழைப்பு நிகழ்முறையில் தொழிலாளி ஆற்றுவதல்லாத வேறுவகை உழைப்பையே ஆற்றுவதாகத் தெரிகிறது. இதனால் சுரண்டல் உழைப்பு, சுரண்டப்படும் உழைப்பு இரண்டும் உழைப்பென்ற முறையில் ஒன்றாகத் தெரிகின்றன. சுரண்டப்படும் உழைப்பைப் போலவே சுரண்டும் உழைப்பும் உழைப்புதான். மூலதனத்தின் சமூக வடிவம் வட்டிக்குப் போய்ச் சேருகிறது; ஆனால் நடுநிலையான, நடுநிலையானதும் சார்பற்றதுமான வடிவில் அது தெரிவிக்கப்படுகிறது. மூலதனத்தின் பொருளாதாரப் பணி முனைவு-இலாபத்துக்குப் போய்ச் சேருகிறது; ஆனால் இந்தப் பணிக்கே உரிய முதலாளித்துவத் தனியியல்பிலிருந்து பிரித்து நோக்கப்படுகிறது.

இலாபங்கள் சமனமாகி சராசரி இலாபமாக உருப்பெறுகையில் இழப்பீட்டுக்கான காரணங்களாக இந்நூலின் இரண்டாம் பகுதியில் சுட்டிக்காட்டியவை தொடர்பாக முதலாளியின் உள்ளத்தில் உதிப்பதே இங்கேயும் உதிக்கிறது. உபரி-மதிப்பின் பங்கீட்டில் நிர்ணயிக்கும் காரணிகளாகச் சேரும் இந்த இழப்பீட்டுக் காரணங்கள் முதலாளியின் உள்ளத்தில் உருத்திரிந்து; இலாபத்தின் தோற்றுவாய்களாகவும் (அகவய) நியாயங்களாகவும் தெரிகின்றன.

முனைவு-இலாபத்தை கண்காணிப்பு செய்யும் உழைப்பிற்கான கூலியாகக் கொள்ளும் கருத்துருவம் முனைவு-இலாபத்திற்கும் வட்டிக்குமான எதிர்நிலையிலிருந்து பிறக்கிறது. இலாபத்தின் ஒரு பகுதி கூலியாகத் தனியே பிரிக்கப்படலாம், உண்மையில் அவ்வாறே பிரிக்கப்படுகிறது என்பது, அல்லது தலைகீழாகச் சொல்வதெனில் கூலியில் ஒரு பகுதி முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் இலாபத்தின் பிரிக்க முடியாத பகுதியாகத் தெரிகிறது என்பது இந்தக் கருத்துருவத்தை மேலும் வலுப்படுத்துகிறது. ஆதாம் ஸ்மித் சரியாக வகுத்துரைத்தது போல, இந்தக் கூலிப் பகுதியானது பெரிய தொழில் நிறுவனப் பிரிவுகளின் - மேலாளருக்குத் தனிச் சம்பளம் கொடுப்பதை நியாயப்படுத்தும் அளவுக்கு உழைப்புப் பிரிவினை வளர்ந்துள்ள

பிரிவுகளின் - மேலாண்மைச் சம்பளமாக வடிவெடுக்கையில் தூய வடிவில், சுயேச்சையாக வெளிப்படுகிறது; ஒருபுறம் (வட்டித் தொகையும் முனைவு - இலாபமான) இலாபத்திலிருந்தும், மறுபுறம் (வட்டியைக் கழித்த பிறகு) முனைவு? இலாபமாக எஞ்சியிருக்கும் இலாபப் பகுதியிலிருந்தும் அறவே பிரிந்து வெளிப்படுகிறது.

நேரடி பொருளுற்பத்தி நிகழ்முறை சுயேச்சையான உற்பத்தியாளர்களின் தனித்த உழைப்பாக வடிவெடுக்காமல் ஒன்றிணைந்த சமுதாய நிகழ்முறையாக வடிவெடுக்கும் இடங்களில் எல்லாம் கண்காணிப்புக்கும் மேலாண்மைக்குமான உழைப்பு இயல்பாகவே தேவைப்படுகிறது.[74] ஆனால் இது இரட்டைதன்மை கொண்டது.

ஒருபுறம், தனியாட்கள் பலரும் கூடி வேலை செய்யும் போதெல்லாம், நிகழ்முறையை ஒருங்கிணைக்கவும் ஒன்றுபடுத்தவும் அவர்களை அடக்கியாளும் சித்தம் தேவைப்படுகிறது. இதற்கென்று செய்ய வேண்டிய பணிகள் பட்டறையின் மொத்தச் செயற்பாட்டுக்கு பொருந்துமே தவிர பகுதிச் செயற்பாடுகளுக்குப் பொருந்தாது; இது இசைக்குழு இயக்குநரின் வேலையைப் போன்றது இது உற்பத்தி திறனுள்ள வேலை; ஒன்றிணைத்த பொருளுற்பத்தி முறை ஒவ்வொன்றிலும் இது செய்யப்பட்டதாகும்.

மறுபுறம் - வர்த்தகப் பிரிவு ஏதும் இருப்பின் அதை ஒதுக்கி வைத்துவிடுகிறோம் - இந்தக் கண்காணிப்பு வேலையானது நேரடி உற்பத்தியாளரான உழைப்பாளிக்கும் உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளருக்கும் இடையிலான எதிர்நிலையை அடிப்படையாகக் கொண்ட எல்லா பொருளுற்பத்தி முறைகளிலும் தவிர்க்க முடியாமலே எழுகிறது. இந்தப் பகைமை எவ்வளவுக்கு அதிகரிக்கிறதோ, கண்காணிப்பு வேலை வகிக்கும் பங்கும் அவ்வளவுக்கு அதிகரிக்கிறது. எனவே தான் அது அடிப்படையுடைமை அமைப்பில் உச்ச நிலை அடைகிறது.[75] ஆனால் முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையிலும் அது இன்றியமையாததாகவே இருந்து வருகிறது; ஏனென்றால் இப்பொருளுற்பத்தி முறையில் உற்பத்தி நிகழ்முறை அதேபோது

(74) 'இங்கே' (பண்ணை உடைமையாளரை பொறுத்த வரை) 'கண்காணிப்பு சிறிதும் தேவையற்றதாகிறது,' (ஜா.எ.கெயிர்ன்ஸ், அடிமைச்சக்தி, லண்டன், 1862, பக்கம்.48.)

(75) 'வேலையின் தன்மை காரணமாய், தொழிலாளர்களை' (அதாவது அடிமைகளை) 'விரிந்த பரப்பில் கலைத்து அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்படுமானால், கங்காணிகளின் எண்ணிக்கையும் எனவே இந்தக் கண்காணிப்பை அவசியமாக்குகிற உழைப்பிற்காகும் செலவும் அதற்கேற்ப கூடுதலாகும்' (கெயிர்ன்ஸ் முன்வந்தது, பக்கம் 44.)

முதலாளி உழைப்புச் சக்தியை நுகரும் நிகழ்முறையாகவும் இருக்கிறது. எப்படி கொடுங்கோல் அரசுகளில் அரசினரின் கண்காணிப்பும் சர்வாம்ச தலையீடும் அனைத்துச் சமுதாயங்ளின் தன்மையிலிருந்தும் எழுகிற பொதுவான செயற்பாடுகள் நிறைவேறுவதை மட்டுமல்லாமல் அரசினருக்கும் மக்கள் திறனுக்கும் இடையிலான எதிர் நிலையிலிருந்து எழும் பிரத்தியேகப் பணிகளையும் குறிப்பதாய் இருக்கிறதோ அதே போலத்தான் இதுவும்.

புராதனக் காலஎழுத்தாளர்களின் கண்ணெதிரே நிலவியது அடிமையுடைமை அமைப்பு; இவர்களின் படைப்புகளில் கண்காணிப்பு வேலையின் இரு கூறுகளும் நடைமுறையில் மட்டு மல்லாமல் தத்துவத்திலும் பிரிக்க முடியாதவாறு இணைந்திருக் கின்றன. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை அறுதியானதாகக் கருதும் நவீனகாலப் பொருளாதார அறிஞர்களின் படைப்புகளிலும் இதே நிலைமைதான். மறுபுறம் சில பொருளாதார அறிஞர்கள் கூலி முறையை நியாயப்படுத்துவதற்குக் கண்காணிப்பு வேலையைப் பயன்படுத்திக் கொள்வது போலவே, நவீனகால அடிமையுடைமை அமைப்புக்கு வக்காலத்து வாங்கும் சப்பைக்கட்டுவாதிகளும் அடிமை முறையை நியாயப்படுத்துவதற்கு அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்; இதற்கொரு சான்றைக் குறிப்பிடுவோம்:

காட்டோவின் காலத்தில் வில்லிகஸ்: அடிமைப் பொருளாதாரத்துடன் கூடிய பண்ணைக்குத் தலைமை வகிப்பவர் கங்காணி ஆவார். (வில்லிகஸ், இது வில்லா என்பதிலிருந்து பெறப்படுவது); பெற்றுக் கொள்வதும் செலவிடுவதும், வாங்குவதும் விற்பதும் ஆண்டையிடமிருந்து கட்டளைகள் பெறுவதும் இவரே; ஆண்டை இல்லாத போது உத்திரவுகள் பிறப்பிப்பதும் தண்டனை விதிப்பதும் இவரே....இயல்பாகவே கங்காணி ஏனைய அடிமைகளை விட சுதந்திரமாய் செயல்பட முடிந்தது; அவர் திருமணம் செய்து கொள்ளவும், குழந்தைகளை பெற்று வளர்க்கவும் சொந்தமாக பணம் வைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று மாகோனிய நூல்கள் அறிவுறுத்துகின்றன; அவருக்கும் பெண் கங்காணிக்கும் மணம் செய்து வைக்கலாம் என்று காட்டோ பரிந்துரை செய்கிறார்; நன்னடத்தையின் பேரில் ஆண்டையிடமிருந்து சுதந்திரம் பெறும் வாய்ப்பு அநேகமாய் அவருக்கு மட்டுமே இருந்தது. மற்றபடி அடிமைகள் யாவரும் பொதுக் குடும்பமாகவே இருந்தனர்...... கங்காணி உட்பட ஒவ்வொர் அடிமைக்கும் குறிப்பிட்ட காலத்திற்கொரு

முறை, நிர்ணயமான விகிதங்களில் அவசியப் பண்டங்கள் ஆண்டையின் செலவில் வழங்கப்பட்டன; அவற்றைக் கொண்டுதான் அவர் காலம் தள்ள வேண்டியிருந்தது......வழங்கப்படும் பண்ட அளவு உழைப்புக்கேற்ப மாறுபட்டது; உதாரணமாக, கங்காணியின் வேலை பிற அடிமைகளின் வேலையைவிட இலகுவாய் இருந்தது, அவர் பெற்ற பங்களவும் அவர்கள் பெற்ற பங்களவை விட குறைவாய் இருந்தது; (மாம்சென், ரோமானிய வரலாறு, 2ஆம் பதிப்பு, 1856, பக்கம் 809-10.)

அரிஸ்டாட்டில்: 'எப்படி என்றால் ஆண்டான்' - முதலாளி - 'தன்னை ஆண்டானாக நிரூபித்துக் கொள்வது அடிமைகளை' - உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குவதற்கான சக்தியை அவருக்கு அளிக்கும் மூலதன உடைமையை - 'பெறுவதன் மூலம் அல்ல; அடிமைகளை ஈடுபடுத்துவதன்' - உழைப்பாளர்களை, இப்போதெல்லாம் கூலித் தொழிலாளர்களை பொருளுற்பத்தி நிகழ்முறையில் பயன்படுத்துவதன் - ' மூலம்தான். ஆனால் இந்த விஞ்ஞானத்தில் மகத்தானதோ மாண்புமிக்கதோ எதுவும் இல்லை. என்றாலும் அடிமை எதையெல்லாம் செய்ய முடிந்தனவாய் இருந்தாக வேண்டுமோ, ஆண்டான் அதற்கெல்லாம் ஆணையிட முடிந்தவராய் இருந்தாக வேண்டும். ஆண்டான்கள் கண்காணிப்பு வேலை செய்து தொல்லைப்பட வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாத போதெல்லாம், இந்தப் பெருமையை கங்காணி பெறுகிறார்: அதேபோது ஆண்டான்கள் அரசு விவகாரங்களிலோ தத்துவஞானத்திலோ ஆழ்ந்து போகிறார்கள்.' (அரிஸ்டாட்டில், குடியரசு, பெக்கர் பதிப்பு, புத்தகம் 7.)

அரசியல், பொருளாதாரத் துறைகளில் தலைமை வகிப்பது ஆளும் சக்திகள் மீது ஆட்சிப் பணிகளை ஏற்றுகிறது என்பதையும் பொருளாதாரத் துறையில் அவர்கள் உழைப்புச் சக்தியை நுகரும் கலையை அறிந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதையும்தான் அரிஸ்டாட்டில் இப்படிச் சொல்கிறார். இந்தக் கண்காணிப்பு வேலை அவ்வளவு முக்கியத்துவம் உடையதல்ல என்றும், எனவேதான் ஆண்டான் இந்தக் கடும் பணியின் 'கௌரவத்தை' கங்காணியிடம் விட்டு விடலாம் என்றாலும் விட்டு விடுகிறார் என்றும் அவர் எடுத்துக்காட்டுகிறார்.

மேலாண்மையும் கண்காணிப்பும் ஆகிய வேலை ஒன்றிணைந்த சமுதாய உழைப்பிற்குரிய தன்மையால் நிர்ணயிக்கப்படாமல், உற்பத்திச் சாதன உடைமையாளருக்கும் வெறும் உழைப்புச் சக்தியின் உடைமையாளருக்கும் இடையிலான எதிர்நிலையாலேயே

நிர்ணயிக்கப்படும் தனிப் பணியாக இல்லாத வரை, அடிமையுடைமை அமைப்பில் நடைபெறுவது போல் உழைப்பாளியையே விலைக்கு வாங்குவதன் மூலம் இந்த உழைப்புச் சக்தி வாங்கப்பட்டாலும் சரி தொழிலாளியே தமது உழைப்புச் சக்தியை விற்று, அதனால் உற்பத்தி நிகழ்முறையும் கூட மூலதனம் அவரது உழைப்பை நுகரும் நிகழ்முறையாகக் காணப்பட்டாலும் சரி, நேரடி உற்பத்தியாளர்களின் அடிமை நிலையிலிருந்து எழுகிற இப்பணி மிகப் பல சந்தர்ப்பங்களில் இந்த உறவுமுறையை நியாயப்படுத்துவதற்காக எடுத்துக்காட்டப் படுகிறது, சுரண்டல், அதாவது ஏனையவர்களின் ஊதியமிலா உழைப்பைத் தனதாக்குவது மூலதன உடைமையாளர் செய்யும் வேலைக்காக நியாயமாய் அவருக்கு கிடைக்க வேண்டிய கைம்மாறாக இவ்வாறே மிகப்பல சந்தர்ப்பங்களில் எடுத்துக்காட்டப்படுகிறது; ஆனால் அமெரிக்க ஐக்கிய அரசியல் அடிமைமுறைக்காக வாதாடும் வழக்குரைஞர் ஓ 'கானர் என்பார் 1859 டிசம்பர் 19ஆம் நாள் நியூயார்க்கில் 'தென்புலத்திற்கு நீதி வேண்டும்' என்ற முழக்கத்தோடு நடைபெற்ற கூட்டத்தில் பேசிய பேச்சுக்கு இவ்வகையில் ஈடு இணை ஏதுமில்லை. இடிமுழக்கமாய் எழுந்த கரவொலிக்கிடையே அவர் சொன்னார்: 'கனவான்களே, இந்து அடிமை நிலை இயற்கையால் நிக்ரோவுக்கு விதிக்கப்பட்டது.......அவனிடம் வலிமை இருக்கிறது. உழைப்பதற்குச் சக்தி இருக்கிறது; ஆனால் இந்தச் சக்தியைப் படைத்த இயற்கை ஆள்வதற்கான அறிவு திறத்தையோ வேலை செய்வதற்கான விருப்பத்தையோ அவனுக்கு அருளவில்லை.' (கரவொலி) 'இவ்விரண்டும் அவனுக்கு மறுக்கப்பட்டவை. உழைக்கும் விருப்பத்தை அவனுக்கு அருளாத அந்த இயற்கை அந்த விருப்பத்தை தூண்டுவதற்கும் அவன் தனக்கும் தன்னை ஆளும் ஆண்டானுக்கும் பயனுள்ள முறையில் வாழக்கூடிய சூழலில் பயனுள்ள வேலைக் காரனாக அவனை ஆக்குவதற்கும் அவனுக்கோர் ஆண்டானைக் கொடுத்தது .......நீக்ரோவை இயற்கை எந்நிலைமையில் இருத்தியதோ அந்நிலைமையிலேயே அவனை விட்டுவைப்பது, அவனை ஆளுவதற்கு அவனுக்கோர் ஆண்டானைக் கொடுப்பது அநீதியாகாது என்பேன்;.....இதற்குப் பிரதியாக உழைக்குமாறு அவனை கட்டாயப்படுத்துவதும் அவனை ஆளுவதிலும் தனக்கும் சமுதாயத்துக்கும் பயனுள்ளவன் ஆக்குவதிலும் ஈடுபடுத்தப்படும் உழைப்புக்கும் திறமைக்கும் நியாய இழப்பீட்டை அந்த ஆண்டானுக்கு தருவதும் அவனது உரிமைகள் எதனையும் பறிப்பதாகாது.'*

(*) நியூயார்க் டெய்லி ட்ரிப்யூன் 1859 டிசம்பர் 20, பக்கம் 7-8-ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

அடிமையைப் போலவே இப்போது கூலித் தொழிலாளிக்கும் அவரை வேலை வாங்குவதற்கும் அடக்கி ஆளுவதற்கும் ஓர் ஆண்டான் இருந்தாக வேண்டும். பிரபுத்துவமும் அடிமைத்தனமும் என்கிற இந்த உறவு நிலவுவதாகக் கொண்டால், கூலித் தொழிலாளியை அடக்கி யாளுவதும் கண்காணிப்பதுமான உழைப்புக்கு இழப்பீடாக, அல்லது 'அவனை ஆளுவதிலும் தனக்கும் சமுதாயத்துக்கும் பயனுள்ளவன் ஆக்குவதிலும் ஈடுபடுத்தப்படும் உழைப்புக்கும் திறமைக்கும் நியாயமான இழப்பீடாக' கூலித் தொழிலாளியை கட்டாயப்படுத்தி தனது கூலியையும் அத்துடன் கண்காணிப்பும் கூலியையும் உற்பத்தி செய்ய வைப்பது முறையானதாகவே இருக்கும்.

கண்காணித்து மேலாண்மை செய்யும் உழைப்பு ஓர் எதிர் நிலையிலிருந்து உழைப்பின் மீது மூலதனம் ஆதிக்கம் புரிவதிலிருந்து எழுவதாகும். எனவே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையைப் போலவே வர்க்க முரண்பாடுகளின் அடிப்படையில் அமைந்த எல்லா பொருளுற்பத்தி முறைகளுக்கும் பொதுவானதாகும். இந்த உழைப்பானது ஒன்றிணைந்த சமுதாய உழைப்பு அனைத்தாலும் தனியாட்களுக்கு அவர்களது தனிக் கடமைகளாக ஒதுக்கப்படும் உற்பத்திப் பணிகளுடன்-முதலாளித்துவ அமைப்பிலும் கூட - நேரடியாகவும் பிரிக்க முடியாதவாறும் தொடர்புடையதாகும். மேலாளர் ஒருவரை ஊதியம் கொடுத்து அமர்த்த வேண்டிய அளவுக்குப் பெருவீதத்தில் தொழில் நடத்தப்படும் போதெல்லாம் இந்த கங்காணியின் கூலியானது இலாபத்திலிருந்து அறவே விலகிப் பிரிந்து, தேர்ச்சி பெற்ற உழைப்புக்கான கூலியாக வடிவெடுக்கிறது. எல்லாம் சரிதான், ஆனால் நமது தொழில்துறை முதலாளிகளாவது 'அரசு விவகாரங்களிலோ தத்துவஞானத்திலோ ஆழ்ந்து' போவதானது!

திருவாளர் யூர் ஏற்கெனவே சொல்லி விட்டார்.[76] 'நமது தொழில்துறை அமைப்பின் ஆன்மா' தொழில்துறை மேலாளர்களே தவிர, தொழில்துறை முதலாளிகள் அல்ல என்று தொழில் நிறுவனத்தின் வர்த்தகப் பகுதி தொடர்பாக சொல்ல வேண்டிய தனைத்தையும் சென்ற பகுதியிலேயே நாம் சொல்லிவிட்டோம்.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது, மூலதன உடைமையிலிருந்து அறவே விலகிப் பிரிந்த கண்காணிப்பு வேலை

(76) ஆ.யூர், ஆலைத் தொழில்களின் தத்துவம், பிரெஞ்சு மொழிபெயர்ப்பு, 1836, பக்கம் 67 ஆலையதிபர்களுக்கு ஒரு பிண்டாராகிய இவர் பெரும்பாலான ஆலையதிபர்களுக்கு தாங்கள் இயங்க வைக்கும் பொறியமைவு குறித்து சொற்ப ஞானமும் கிடையாது என்பதற்கும் சான்று பகர்கிறார்.)

எப்போதும் தயாராய் உடனுக்குடன் கிடைக்கக் கூடிய நிலையை வந்தடைந்திருக்கிறது. ஆகவே முதலாளி தாமே இந்த வேலையைச் செய்வது வீண் என்னும் நிலை ஏற்பட்டுள்ளது. இசைக்குழு இயக்குநர் தமது குழுவின் இசைக்கருவிகளுக்கு உடைமையாளராய் இருக்கத் தேவையில்லை; ஏனைய இசைக்கலைஞர்களின் 'கூலி' என்ன என்பதில் எவ்வகையிலும் சம்பந்தப்படுவது இயக்குநராக அவர் ஆற்ற வேண்டிய கடமைகளின் எல்லைக்கு உட்பட்டதும் அல்ல. முதலாளி தமது உயர் பீடத்தில் அமர்ந்து பெருநிலவுடைமையாளர் தேவையற்றவர் என்று தீர்ப்பு வழங்குகிறாரே, உற்பத்திப் பணிகளில் முதலாளியும் தேவையற்றவர் ஆகிவிட்டதையே கூட்டுறவுத் தொழிற்சாலைகள் நிரூபிக்கின்றன. முதலாளியின் வேலை முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையிலிருந்தே பிறப்பதல்ல, எனவே மூலதனம் ஓயும்போது தானாக ஓய்வதல்ல என்பதால், அது பிறர் உழைப்பைச் சுரண்டுகிற பணியோடு மட்டும் நின்று விடுவதல்ல என்பதால், அது உழைப்பு நிகழ்முறையின் சமூக வடிவத்திலிருந்து, பலரும் பொதுவான விளைவை நோக்கமாய்க் கொண்டு கூட்டு-வேலை செய்வதிலிருந்து பிறப்பதாய் இருப்பதால், முதலாளித்துவ மேலோட்டை உடைத்து வெளிப்பட்டவுடனே அந்தவடிவத்தைப் போலவே இந்த வேலையும் மூலதனத்திலிருந்து விடுபட்டு சுயேச்சையாகிவிடுகிறது. இந்த உழைப்பு முதலாளித்துவ உழைப்பு என்ற முறையில், அல்லது முதலாளியின் பணி என்ற முறையில் அவசியமாவதாகக் கூறுவது, முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் மடியில் வளர்ந்த வடிவங்களை அவற்றின் முதலாளித்துவ எதிர்நிலைத் தன்மையிலிருந்து தனியாகவும் வேறாகவும் புரிந்து கொள்ள பாமரர்களால் முடிவதில்லை என்பதையே குறிக்கிறது. பண முதலாளியோடு ஒப்பிடுமிடத்து தொழில்துறை முதலாளி ஒரு தொழிலாளி ஆவார். ஆனால் முதலாளிக்குரிய அர்த்தத்தில்தான் தொழிலாளி ஆவார். பிறர் உழைப்பு தனதாக்கம் செய்யப்படும் பிறரது உழைப்பின் அளவுக்குச் சரிசமம் ஆகும். சுரண்டலுக்குத் தேவையான முயற்சியை அவர் மேற்கொள்கிற அளவில் பிறர் உழைப்பின் மீதான சுரண்டல் வீதத்தையே இக்கூலி நேரடியாகச் சார்ந்துள்ளது; ஆனால் இது இச்சுரண்டலுக்கு அவசியமாகிற மெய்வருத்தத்தின் கடுமையை பொறுத்ததல்ல; முதலாளி ஒரு மேலாளருக்கு சுமாரான ஊதியம் கொடுத்து இந்த மெய்வருத்தத்தை அவர் தலையில் சுமத்திவிடலாம். ஒவ்வொரு

நெருக்கடிக்குப் பிறகும் ஆங்கிலேய தொழிற்சாலை வட்டங்களில் முன்னாள் ஆலையதிபர்கள் பலரும் ஏற்கெனவே தங்களுக்குச் சொந்தமாய் இருந்த தொழிற்சாலைகளிலேயே புதிய உடைமையாளர் களின் மேலாளர்கள் என்ற பொறுப்பில் குறைந்த கூலி பெற்று கண்காணிப்பு வேலை செய்யக் காணலாம்; பெரும்பாலும் இந்த புதிய அதிபர்கள் அவர்களுக்கு கடன் கொடுத்தவர்களாகவே இருப்பார்கள்.[77]

வர்த்தக மேலாளருக்குரியதானாலும், தொழில்துறை மேலாளருக்குரியதானாலும் மேலாண்மைக் கூலியானது தொழிலாளர் கூட்டுறவுத் தொழிற்சாலைகளிலும், அதே போல் முதலாளித்துவப் பங்கு நிறுமங்களிலும் முனைவு - இலாபத்திலிருந்து அறவே தனிப்படுத்தப்படுகிறது. முனைவு-இலாபத்திலிருந்து மேலாண்மைக் கூலி தனியே பிரிக்கப்படுவது - வேறு சந்தர்ப்பங்களில் முற்றிலும் தற்செயலாகவே நடைபெறுவது - இங்கு ஓயாமல் நிகழ்கிற ஒன்று. கூட்டுறவுத் தொழிற்சாலையில் மேலாளர் தொழிலாளர்களுக்கு எதிராய் நிற்கும் மூலதனத்தின் பிரதிநிதியாக இருப்பதற்கு பதில் தொழிலாளர்களிடமே ஊதியம் பெறுவதால் கண்காணிப்பு வேலையின் பகைத்தன்மை மறைகிறது. பொதுவாகப் பங்கு நிறுமங்கள் (கடன்-செலாவணி அமைப்புடன் சேர்ந்து வளர்ந்தவை) மேன்மேலும் இந்த மேலாண்மைப் பணியை மூலதன உடைமையிலிருந்து - சொந்த மூலதனமாய் இருந்தாலும் சரி, கடன் வாங்கியதாய் இருந்தாலும் சரி - தனியே பிரிக்கும் போக்குடையவை. நீதிபதிகளும் நிர்வாகிகளும் ஆற்ற வேண்டிய பணிகள் - பிரபுத்துவக் காலத்தில் நிலவுடைமைக்கு உரித்தானவையாக இருந்த இப்பணிகள் - இப்படி முதலாளித்துவ சமுதாயம் வளர வளர நிலவுடைமையிலிருந்து விலகிப் பிரியலாயினவோ, அதே போலத்தான் இதுவும். ஆனால் ஒருபுறம், வெறும் மூலதன உடைமையாளராகிய பணமுதலாளி செயல்படும் முதலாளியை எதிர்நோக்க வேண்டி இருக்கும் போதே, கடன்-செலாவணியின் முன்னேற்றத்தால் பண-மூலதனம் சமூகத்தன்மை பெறுகிறது; அது வங்கிகளில் குவிக்கப்பட்டு, ஆரம்ப உடைமையாளர்களுக்கு பதில் இவ்வங்கிகளால் வட்டிக்கு விடப்படுகிறது. மறுபுறம், கடன்வாங்கிய வகையிலோ வேறு வகையிலோ மூலதனத்தின் மீது எவ்விதத்தும்-உரிமை கொண்டாட

(77) எங்கெல்ஸ் குறிப்பு:- எனக்குத் தெரிந்த உதாரணத்தைச் சொல்கிறேன்; 1868ஆம் வருட நெருக்கடியைத் அடுத்து, போண்டியாகி விட்ட ஓர் ஆலையதிபர் முன்பு தன்னிடம் தொழிலாளர்களாய் இருந்தவர்களிடமே ஊதியம் பெறும் கூலித் தொழிலாளியானார். ஆலையதிபர் போண்டியான பின் தொழிலாளர்களின் கூட்டுறவு அமைப்பு தொழிற்சாலையை ஏற்று நடத்தியது; முன்னால் ஆலையதிபரே மேலாளராக அமர்த்தப்பட்டார்.)

முடியாமல் மேலாளராக மட்டும் இருப்பவர் செயல்படும் முதலாளிக்கே உரித்தானவையாகிய முக்கியப் பணிகளையெல்லாம் ஆற்றுகிறார். ஆகவே மேற்பார்வையாளர் மட்டும் எஞ்சி நிற்கிறார், முதலாளி தேவையற்றவராகி பொருளுற்பத்தி நிகழ்முறையிலிருந்து மறைந்துவிடுகிறார்.

இங்கிலாந்தில் கூட்டுறவுத் தொழிற்சாலைகளின் பொதுக் கணக்குகளிலிருந்து[78] தெரியவருவது என்னவென்றால்: ஏனைய தொழிலாளர்களின் கூலியைப் போலவே மாறும்-மூலதன முதலீட்டில் ஒரு பகுதியாகிய மேலாளரின் கூலியைக் கழித்த பிறகு இலாபம் சராசரி இலாபத்தைக் காட்டிலும் உயர்ந்திருந்தது - சில நேரம் இந்தத் தொழிற்சாலைகள் ஆலையதிபர்களான தனியாரைக் காட்டிலும் மிக உயர்ந்த வட்டி செலுத்தியும் கூட இப்படியிருந்தது. இந்த தொழிற் சாலைகள் யாவற்றிலும் மாறா-மூலதனத்தை பயன்படுத்து வதிலான கூடுதல் சிக்கனமே கூடுதல் இலாபத்திற்கு ஆதாரமாய் இருந்தது. ஆனால் இதில் நாம் கவனிக்க வேண்டிய உண்மை, இங்கே சராசரி இலாபம் (= வட்டி+முனைவு இலாபம்) மேலாண்மைக் கூலியிலிருந்து அறவே விலகிப் பிரிந்த பருமனாக மெய்யாகவும் கண்கூடாகவும் வெளிப்படுவதே. இலாபம் இங்கே சராசரி இலாபத்துக்கு மேல் உயர்ந்து போனதால் முனைவு-இலாபமும் வழக்கத்துக்கு மேல் உயர்ந்துபோயிற்று.

கூட்டுப்பங்கு வங்கிகள் போன்ற சில முதலாளித்துவப் பங்கு நிறுமங்கள் தொடர்பாகவும் இதே நிலைமை நிலவக் காணலாம். லண்டன் மற்றும் வெஸ்ட் மின்ஸ்டர் வங்கியானது 1863இல் வருடாந்தர ஆதாய பங்கீடு 30% செலுத்தியது; அதே போது லண்டன் யூனியன் வங்கியும் ஏனையவையும் 15% செலுத்தின. இயக்குநர்களின் சம்பளத்தை அன்னியில், வைப்புகளுக்குத் தரப்படும் வட்டியும் இங்கு மொத்த இலாபத்திலிருந்து கழிக்கப்படுகிறது. வைப்புகளுடன் ஒப்பிடுகையில் செலுத்திய மூலதனம் மிதமான அளவில் இருப்புதே இங்கு இலாபம் உயர்ந்திருப்பதற்கு காரணம் ஆகிறது. எடுத்துக் காட்டாக லண்டன் மற்றும் வெஸ்ட்மின்ஸ்டர் வங்கியைப் பொறுத்தவரை 1863இல்: *செலுத்திய மூலதனம் 1,000,000; வைப்புகள் 14,540,275 லண்டன் யூனியன் வங்கியைப் பொறுத்தவரை 1863இல்: செலுத்திய மூலதனம் 600,000; வைப்புகள் 12,384,173.*

78. எங்கெல்ஸ் குறிப்பு: இங்கே மேற்கோள் காட்டப்படும் கணக்குகள் 1865ல் எழுதப்பட்டதால் 1864 வரைக்குமான கணக்குகள் மட்டுமே இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

இலாபத்தின் உபரியானது வட்டிக்குப் பகையான வடிவம் எடுப்பதால் ஆரம்பத்தில் முனைவு-இலாபமும் கண்காணிப்பு அல்லது மேலாண்மைக் கூலியும் குழம்பிக் கொள்ளப்படுகின்றன. இலாபத்தை ஊதியமிலா உழைப்பிலிருந்து வருவிக்கப்படும் உபரி-மதிப்பாக அல்லாமல், முதலாளி வேலை செய்து பெறும் கூலியாக காட்ட வேண்டுமென்னும் சப்பைக்கட்டுவாத நோக்கம் இந்தக் குழப்பத்தை மேலும் வளர்த்திடுகிறது. இதற்கு பதிலளிக்கும் விதத்தில் சோஷலிசவாதிகள் என்ன கோரிக்கை எழுப்பினார்கள் தெரியுமா? இலாபம் என்பது வெறும் கண்காணிப்புக் கூலிதான் என்று தத்துவத்தில் மட்டும் பாசாங்கு இலாபத்தை கண்காணிப்புக் கூலியாகக் குறைத்துக் கொள்ளுங்களேன் என்றார்கள். இந்தக் கோரிக்கை தத்துவ ஒப்பனைக்கு வேம்பாய்க் கசந்தது; ஏனென்றால் ஒருபுறம், தொழில்துறை, வர்த்தகத்துறை மேலாளர்கள் வர்க்கம் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ந்து விட்ட நிலையில், வேறெந்தக் கூலியையும் போலவே இந்தக் கண்காணிப்புக் கூலியும் குறிப்பிட்ட மட்டத்தையும் குறிப்பிட்ட சந்தை விலையையும் வந்தடைந்தது;[79] மறுபுறம், பொதுவாக ஏற்படும் வளர்ச்சியால் தனிப்பயிற்சி பெற்ற உழைப்புச் சக்திக்காகும் உற்பத்திச் செலவு குறைந்து போகிற நிலையில் தேர்ச்சி பெற்ற உழைப்புக்கான வேறு எந்தக் கூலியையும் போலவே இந்தக் கண்காணிப்புக் கூலியும் வீழ்ச்சியுற்றது.[80] தொழிலாளர் தரப்பில் கூட்டுறவும் முதலாளிகள் தரப்பில் பங்குத் தொழில் முனைவுகளும் வளர்ந்துவிட்ட நிலையில், முனைவு - இலாபத்தையும் மேலாண்மைக் கூலியையும் குழப்பிக் கொள்வதற்கான கடைசி; சமாதானமும் ஒழிந்தது. இலாபம் என்பது உபரி-மதிப்புதான், ஈடாகச் சமதையேதும் தராமல் பெறப்படும்

(79) 'தம்மிடம் வேலை செய்யும் ஆட்களைப் போலவே அதிபர்களும் உழைப்பாளர்கள்தாம் இத்தன்மையில் அவர்கள் நலனும் அவர்களது ஆட்கள் நலனும் ஒன்றேதான். ஆனால் இதற்கு மேல் அவர்கள் முதலாளிகளாகவோ முதலாளிகளின் முகவர்களாகவோ இருக்கிறார்கள்; இத்தன்மையில் அவர்கள் நலன் தொழிலாளி நலனுக்கு எதிரானதாய் இருப்பது உறுதி' (பக்கம் 27). 'இந்த நாட்டில் பணியாளர்களாய் இருக்கும் கம்மியர்களிடையே கல்வி விரிவாய்ப் பரவுவது விசேச அறிவு பெற்ற ஆட்களின் தொகையை அதிகமாக்குவதன் மூலம் அதிபர்கள் மற்றும் முதலாளகளில் அநேகமாய் எல்லாரது உழைப்பு மற்றும் தேர்ச்சியின் மதிப்பை நாள்தோறும் குறையச் செய்கிறது.' (பக்கம் 30, ஹாட்ஜீஸ்கின், மூலதனத்தின் பாத்தியதைகளுக்கு எதிராக உழைப்புக்குப் பாதுகாப்பு, லண்டன்,) 1825.

(80)'மரபு வழி வந்த தடைகள் பரவலாய்த் தளர்ந்து போவதும், கல்வி வசதிகள் பெருகுவதும் தேர்ச்சியற்ற உழைப்பின் கூலியை உயர்த்துவதற்கும் பதில் தேர்ச்சி பெற்ற உழைப்பின் கூலியைக் குறையச் செய்யும் போக்குடையவை.' (ஜா.ஸ்டு.மில், அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள், 2ஆம் பதிப்பு, லண்டன், 1849, பக்கம் 479)

மதிப்புதான், ஈடேற்றம் பெற்ற ஊதியமிலா உழைப்புதான் என்பது தத்துவத்தில் மறுக்கவொண்ணாதவாறு வெளிப்பட்டது போலவே நடைமுறையிலும் வெளிப்பட்டது. செயல்படும் முதலாளி மெய்யாகவே உழைப்பைச் சுரண்டுவதும், கடன்வாங்கிய மூலதனத்தை வைத்து வேலை செய்யும்போது அவரது சுரண்டலின் பலன் வட்டியாகவும், வட்டிக்கு மேல் இலாபத்தின் உபரியாகிய முனைவு-இலாபமாகவும் பிரிக்கப்படுவதும் அப்போது தெளிவாய்த் தெரிந்தது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் அடிப்படையில் மேலாண்மைக் கூலி தொடர்பாக பங்குத் தொழில் முனைவுகளில் ஒரு புதிய மோசடி வளருகிறது; மெய்யான இயக்குநருக்கு மேலே ஏராளமான மேலாளர்கள் அல்லது இயக்குநர்கள் அடங்கிய வாரியங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கண்காணிப்பும் மேலாண்மையும் பங்காளர்களைக் கொள்ளையிட்ட சொத்து சேர்ப்பதற்கான சாக்காக மட்டுமே பயன்படுகிறது. இது தொடர்பாய் மிக அரிதான விவரங்கள் காணப்படும் நூல்: மாநகரம் அல்லது லண்டன் நகரத் தொழில்-வர்த்தகத்தின் உடற்கூறியல்; பங்குச் சந்தை, மற்றும் காபி அருந்தகங்கள் பற்றிய சித்திரங்களுடன், லண்டன், *1845*, 'வங்கியாளர்களும் வணிகர்களும் எட்டு ஒன்பது வெவ்வேறு நிறுமங்களுக்கு இயக்குநராய் இருப்பதால் அவர்களுக்கு என்ன இலாபம் என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டிலிருந்து அறியலாம்; திருவாளர் திமோத்தி ஆபிரகாம் கர்ட்டிஸ் நொடித்துப்போன போது, அந்தக் கனவானின் நொடிப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சொந்த நிலுவை அறிக்கை இயக்குநர் பதவியிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கு எடுத்துக்காட்டாயிற்று.....ஆண்டுக்கு 800 முதல் 900 வரை கிடைத்தது. திருவாளர் கர்ட்டிஸ் இங்கிலாந்து வங்கி, கிழக்கிந்திய நிறுவனம் ஆகியவற்றின் ஆட்சிக் குழுக்களில் பங்குப் பெற்றிருந்தவர் என்பதால், பொது நிறுமம் அதன் வாரியத்தில் அவரது சேவைகளை அடைவது பெரும்பேறாய்க் கருதப்பட்டது.' (பக்கம் *81, 82*). வாரம் ஒரு முறை நடைபெறும் ஒவ்வொரு கூட்டத்திற்கும் இந்த நிறுமங்களின் இயக்குநர்களுக்கு குறைந்தது ஒரு கினியா ஊதியம் தரப்படுகிறது. பொதுவாக இந்தக் கண்காணிப்புக் கூலி இந்தப் பெயரளவு இயக்குநர்கள் உள்ளபடியே செய்த கண்காணிப்பு வேலைக்கு எதிர்விகிதத்தில் இருந்ததை நொடிப்பு நீதிமன்றத்தின் நடவடிக்கை களிலிருந்து அறிய முடிகிறது.

## அத்தியாயம் XXIV

## வட்டி-மூலதன வடிவில் மூலதன உறவுகள் புறம்பாதல்

வட்டி-மூலதனத்தில்தான் மூலதன உறவுகள் வெகுவாகப் புறம்பாக்கப்பட்டு மிகவும் மாய்மாலத் தன்மையதான வடிவம் பெறுகின்றன. வட்டி-மூலதனத்துக்கு சூத்திரமாய் இருப்பது M—M': அதாவது பணம் இன்னும் அதிகப் பணத்தைப் படைக்கிறது. மதிப்பு தற்பெருக்கம் அடைகிறது, ஆனால் இந்த இரு முனைகளையும் செயல்படுத்தும் நிகழ்முறையை இங்கே காண்பதற்கில்லை. வணிக-மூலதனத்துக்கு சூத்திரமாகிய M—C—M' என்பதில் முதலாளித்துவ அசைவியக்கத்தின் பொதுவடிவத்தையாவது காண முடிகிறது. ஆனால் இந்த பொது வடிவம் சுற்றோட்டத்துறைக்குள் மட்டுமே அடங்கி விடுகிறது; இதனால் இலாபமானது உடைமை மாற்றத்திலிருந்து பெறப்படும் இலாபமாகவே தோற்றமளிக்கிறது; என்றாலும் இலாபம் ஒரு சமூக உறவிலிருந்து விளைவதே தவிர, வெறும் பண்டத்திலிருந்து விளைவதல்ல என்பதை மட்டுமாவது இங்கே பார்க்க முடிகிறது. வணிக-மூலதனத்தின் சூத்திரமானது எப்படியும் ஒரு நிகழ்முறையை, எதிரெதிரான கட்டங்களின் ஐக்கியத்தை, ஒன்றுக்கொன்று எதிரான இரு செயல்களாக - சரக்குகளை வாங்குவதும் விற்பதுமாக - பிரிகிற அசைவியக்கத்தை வெளிப்படுத்துகிறது. இதெல்லாம் வட்டி-மூலதனத்தின் சூத்திரமாகிய M—M' என்பதில் மறைக்கப்படுகிறது. எடுத்துக் காட்டாக, ஒரு முதலாளி £1,000ஐ 5% வட்டி வீதத்தில் கடன் கொடுப்பாரானால், ஓராண்டு காலத்துக்கு மூலதனம் என்ற முறையில் 1000ன் மதிப்பு C+Ci'; இதில் C என்பது மூலதனம், i' என்பது வட்டி வீதம். ஆக, 5% = $^5/_{100}$ = $^1/_{20}$, மற்றும் 1,000+1,000 X $^1/_{20}$ = £1,050. மூலதனம் என்ற முறையில் £1,000ன் மதிப்பு £1,050. அதாவது மூலதனம் வெறும் பருமனல்ல. அது பருமன்களின் உறவு முறை ஆகும், குறிப்பிட்ட மதிப்பாக அமையும் அசல் தொகையானது தற்பெருக்கம் அடையும் மதிப்பாக உபரி-மதிப்பை உற்பத்தி செய்துள்ள அசல் தொகையாக அமையும் தன்னுடனேயே கொண்டிருக்கும் உறவு முறையாகும். மூலதனம் என்றாலே அது செயலார்ந்த முதலாளிகள் அனைவருக்கும் - அவர்கள் சொந்த மூலதனத்தை வைத்துச் செயல்படு

கிறவர்களானாலும் கடன் வாங்கிய மூலதனத்தை வைத்துச் செயல் படுகிறவர்களானாலும் நேரடியாகத் தற்பெருக்கம் அடையும் மதிப்பு என்னும் இவ்வடிவத்தை மேற்கொள்கிறது என்பதை முன்பே பார்த்தோம்.

M—M' இங்கே மூலதனத்தின் முதல் தொடக்க முனையைப் பார்க்கிறோம்; பணமே அத்தொடக்கமுனை; M—C—M' என்னும் சூத்திரம்தான் அதன் இரு கடைக்கோடி முனைகளாகக் சுருங்கி M -M' ஆகிறது: இதில் $M' = M+\Delta M$, அதாவது பணம் இன்னும் அதிகப் பணத்தை படைத்துக் கொடுப்பதாகும். மூலதனத்தின் ஆரம்ப அல்லது பொதுச் சூத்திரம் அர்த்தமற்ற முறையில் சுருக்கிக் குறைக்கப்படுகிறது. இந்தச் சுருக்கமானது மூலதனம் தயாராய் இருப்பதையும், உற்பத்தி நிகழ்முறையும் சுற்றோட்ட நிகழ்முறையும் ஐக்கியமாகி இருப்பதையும், எனவே மூலதனம் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட உபரி-மதிப்பைப் பெற்று தருவதையும் குறிக்கிறது. வட்டி-மூலதனத்தின் சூத்திரத்தில் இது நேரடியாகவே வெளிப்படுகிறது; உற்பத்தி நிகழ்முறை, சுற்றோட்ட நிகழ்முறை ஆகியவற்றின் உதவி இதற்குத் தேவைப்படுவதில்லை. மூலதனமானது வட்டிக்கான மரும ஆதாரமாக, தன்னைத் தானே படைத்துக் கொள்ளும் ஆதாரமாக-தன்னைத் தானே அதிகமாக்கிக் கொள்ளும் ஆதாரமாக-காட்சியளிக்கிறது. பொருளானது (பணம், சரக்கு, மதிப்பு) வெறும் பொருளாகவே கூட இப்போது மூலதனம் ஆகும். மறுவுற்பத்தி நிகழ்முறை அனைத்திலிருந்தும் விளையும் பலனானது பொருளிலேயே உள்ளார்ந்திருக்கும் குணமாகக் காட்சியளிக்கிறது. பணத்தின், அதாவது ஓயாமல் பரிவர்த்தனை செய்து கொள்ளக்கூடிய வடிவத்தில் இருக்கும் சரக்கின் உடைமையாளர்தான் அதைப் பணமாகக் செலவிட வேண்டுமா, மூலதனமாக வட்டிக்கு விட வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர். ஆக தானாகவே உதிக்கிற இந்த மாய்மாலம், மதிப்பு தன்னைத்தானே, பெருக்கிக் கொள்வது பணம் பணத்தைத் தோற்றுவிப்பது என்பதெல்லாம் வட்டி-மூலதனச் சூத்திரத்தில்தான் தூய வடிவில் வெளிப்படுகின்றன; மூலதனம் அதன் தோற்றுவாய்க்குரிய பிறப்புக் குறிகளை முன்போல் இச்சூத்திரத்தில் வெளிப்படுத்துவதில்லை. சமூக உறவானது உறவாக, ஒன்று அதனுடனேயே கொள்ளும் உறவாக, பணம் பணத்தோடு கொள்ளும் உறவாக நிறைவு பெறுகிறது. பணம் உள்ளபடியே மூலதனமாக மாற்றப்படுவதற்கு பதில் இங்கே உள்ளடக்கம் இல்லாமல் உருவம் மட்டும் இருக்கக் காண்கிறோம். உழைப்புச்சக்தியின் பயன்-மதிப்பைப் போலவே, இங்கு பணத்தின் பயன்-மதிப்பு என்பதும் மதிப்பை -

தன்னில் அடங்கி இருப்பதற்கும் கூடுதலான மதிப்பை - படைத்திட அதற்குள்ள ஆற்றலே ஆகும். பணம் என்ற முறையில் பணமானது உள்ளுறை நிலையில் தற்பெருக்கமடையும் மதிப்பாகும். அவ்வாறே அது வட்டிக்கு விடப்படுகிறது - இதுவே இந்த அலாதியான சரக்கிற்குரிய விற்றல் வடிவம். பேரிக்காய் தருவது பேரிமரத்தின் குணமாய் இருப்பது போலவே மதிப்பை விளைவிப்பதும் வட்டி பெற்றுத் தருவதும் பணத்தின் குணமாகிறது. கடன் கொடுப்பவர் இப்படி வட்டி தருகிற ஒன்றாகவே தமது பணத்தை விற்கிறார். ஆனால் அத்தோடில்லை. உள்ளபடியே செயல்படும் மூலதனமானது இத்தகைய தோற்றத்தில் காட்சியளிப்பதை முன்பே பார்த்தோம்; அதாவது செயல்படும் மூலதனம் என்பதால் அல்லாமல், மூலதனம் என்பதாலேயே பண-மூலதனம் என்பதாலேயே அது வட்டி பெற்றுத் தருவது போல் தெரிகிறது.

இதுவும் திரிபுற்றுப் போகிறது. செயல்படும் முதலாளி தொழிலாளியிடமிருந்து கறக்கிற இலாபத்தில், அதாவது உபரி-மதிப்பில் ஒரு பகுதியே வட்டி. மாறாத, வட்டிதான் மூலதனவத்திற்கேயுரிய உற்பத்திப் பொருள், தலையாய சங்கதி என்பது போலவும், முனைவு-இலாபத்தின் உருவிலான இலாபமானது மறுவுற்பத்தி நிகழ்முறையின் துணைப்பொருளும் துணை விளைவுமே என்பது போலவும் இப்போது தோற்றமளிக்கக் காண்கிறோம். மூலதனத்தின் மாய்மால வடிவமும், மாய்மால மூலதனம் எனும் கருத்துருவமும் இதிலிருந்து நமக்குக் கிடைக்கின்றன. M—M' என்பதில் நமக்குக் கிடைப்பது மூலதனத்தின் அர்த்தமற்ற வடிவம். உற்பத்தி உறவுகள் இங்கே வக்கரிப்புக்கு உள்ளாகிப் பொருளுருவம் பெறுதல் உச்ச நிலையை அடைகிறது. மூலதனம் அதன் எளிய வடிவமாகிய வட்டி-மூலதன வடிவில் அதன் மறுவுற்பத்தி நிகழ்முறையையே ஒதுக்கிக் கொண்டு முன் செல்கிறது. பணமோ சரக்கோ மறுவுற்பத்தி தன் மதிப்பைப் பெருக்கிக் கொள்ளும் ஆற்றலுடையதாகி, மூலதனம் என்பதே விந்தையிலும் விந்தையானதாகி விடுகிறது.

மூலதனத்தை மதிப்புக்கான, மதிப்பின் படைப்புக்கான சுயேச்சை ஆதாரமாகக் காட்ட முனையும் கொச்சை அரசியல் பொருளாதாரத்துக்கு, இந்த வடிவம் அரும்பெரும் கண்டுபிடிப்பாய்த் தெரிவது இயல்புதான்: ஏனென்றால் இந்த வடிவத்தில்தான் இலாபத்தின் ஆதாரம் உய்த்துணரத் தக்கதாய் இல்லாது போகிறது; முதலாளித்துவப் பொருளுற்பத்தி நிகழ்முறையின் விளைவு - அந்நிகழ் முறையிலிருந்து விலகிப் பிரிந்து - சுயேச்சையாக நிலவத் தொடங்குகிறது.

மூலதனம் பண-மூலதனம் ஆகும் போதுதான் சரக்காகிறது; இந்தச் சரக்கின் தற்பெருக்க ஆற்றலுக்கு ஒவ்வொரு சமயத்திலும் அச்சமயம் நிலவும் ஒவ்வொரு வட்டிவீதத்திலும் குறிப்பிட்டதொரு விலை கேட்கப்படுகிறது.

வட்டி-மூலதனம் என்ற வீதத்தில், முக்கியமாய் அதன் நேரடி வடிவமாகிய வட்டி தரும் பண-மூலதன வடிவில் (வட்டி-மூலதனத்தின் ஏனைய வடிவங்கள் இங்கு நம் கருத்துக்குரியவை அல்ல, இவை இந்த வடிவத்திலிருந்து வருவிக்கப்பட்டவை, இப்படியொன்று நிலவுவதை முன்தேவையாகக் கொண்டவை). மூலதனம் முற்றான மாய்மால வடிவத்தை மேற்கொள்கிறது. ஏனெனில் M—M' ஆனது செயல்படும் ஒன்றாய், விலைக்கு விற்கப்படக்கூடியதாய் இருக்கிறது. முதலாவதாக, மூலதனம் தொடர்ந்து பணமாக நிலவி வருவதன் மூலம் இந்த மாய்மால வடிவத்தை மேற்கொள்கிறது; பண வடிவத்தில் தனி இயல்புகள் யாவும் மறைந்து, அதன் மெய்யான அடிக்கூறுகள் கண்ணுக்குப் புலப்படாதவை ஆகின்றன. ஏனென்றால் பயன்-மதிப்புகள் என்ற முறையில் சரக்குகளுக்குரிய தனி இயல்புகள் பணவடிவத்தில்தான் மறைந்து கொள்கின்றன; எனவே இந்தச் சரக்குகளாகவும் இவற்றின் உற்பத்திச் சாதனங்களாகவும் அமைகிற தொழில்துறை மூலதனத்தின் தனி இயல்புகளும் கூட பண வடிவத்தில்தான் மறைந்து கொள்கின்றன. இந்த வடிவத்தில்தான் மதிப்பானது - இங்கு மூலதனமானது - சுயேச்சையான பரிவர்த்தனை - மதிப்பாக நிலவுகிறது. மூலதனத்தின் மறுவுற்பத்தி நிகழ்முறையில் பண வடிவம் நிலையற்றதே- வழியில் வருவதே. ஆனால் பணச் சந்தையில் மூலதனம் எப்போதுமே இந்த வடிவத்தில் இருந்து வருகிறது. இரண்டாவதாக, மூலதனத்தால் உற்பத்தி செய்யப்படும் உபரி-மதிப்பு - இதுவும் இங்கே பண-வடிவத்தில் இருக்கிறது - மூலதனத்தின் உள்ளார்ந்த பகுதியாக தோற்றமளிக்கிறது. வளருவது மரங்களுக்கு இயல்பான ஒன்றாய் இருப்பது போல், பணத்தை விளைவிப்பது பண-மூலதன வடிவில் இருக்கும் மூலதனத்துக்கு இயல்பான ஒன்றாய்த் தோன்றுகிறது.

வட்டி-மூலதனத்தில் மூலதன அசைவியக்கம் குறுகிவிடுகிறது. இடையில் வரும் நிகழ்முறை நீங்கிவிடுகிறது. இவ்வாறு 1,000 மதிப்புள்ள ஒரு மூலதனம் பொருளாக நிலை பெறுகிறது; அது அதனளவிலேயே 1,100க்குச் சமமாகும்; இது குறிப்பிட்ட காலம் கழித்து 1,100 ஆகவே மாற்றப்பட்டு விடுகிறது - நிலவறையில் சேமித்து வைக்கப்படும் தேறல் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அதன்

பயன்-மதிப்பை உயர்த்திக் கொள்வது போல, மூலதனம் இப்போது ஒரு பொருளாக இருக்கிறது; ஆனால் ஒரு பொருள் என்ற முறையில் அது மூலதனமாக இருக்கிறது. பணம் இப்போது கருவுற்றிருக்கிறது.* பணமானது வட்டிக்கு விடப்பட்ட பிறகு, அல்லது (செயல்படும் முதலாளிக்கு முனைவு இலாபத்தை அன்னியில் அதன் உடைமையாளர் என்ற முறையில் அவருக்குச் சேர வேண்டிய வட்டியையும் அது பெற்றுத் தருகிற அளவில்) மறுவுற்பத்தி நிகழ்முறையில் முதலீடான பிறகு, அதன் மீதான வட்டி வளர்ந்து செல்கிறது; அது விழித்துக் கொண்டு இருந்தாலும் உறங்கிக் கொண்டு இருந்தாலும் உள்நாட்டில் இருந்தாலும் அயல்நாட்டில் இருந்தாலும் இவ்வட்டி இரவும் பகலும் வளர்ந்து செல்கிறது. வட்டி தரும் பண-மூலதனமானது (மூலதன மனைத்தும் அதன் மதிப்பைப் பொறுத்த வரை பண-மூலதனமே, அல்லது பணமூலதனத் தெரிவிப்பாகக் கருதப்படுவதே ஆகும்) பணம் சேர்ப்பவரின் பேராவலையே இவ்விதம் நிறைவு செய்கிறது.

வட்டியானது ஒரு பொருளுக்குள் முளைப்பது போல் பண-மூலதனத்திற்குள்ளேயே இவ்வாறு முளைத்திருப்பதுதான் (மூலதனத்தின் மூலமாய் உபரி-மதிப்பு உற்பத்தியானது இங்கே இப்படித்தான் தோற்றமளிக்கிறது) இவ்வளவு முழுமையாய் லூதரின் கவனத்தை கவர்ந்து கொள்கிறது; கடுவட்டிக்கு எதிராக அப்பட்டமாய் அவர் தொடுக்கும் கடும் தாக்குதல்களில் இது வெளிப்படுகிறது. கடன் கொடுத்த ஒருவருக்கு ஏதேனும் செலவுக்காக அத்தொகை தேவைப்படும் நிலையில் குறிப்பிட்ட தேதியில் அக்கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறுவதால் அவருக்கு இழப்பு ஏற்படுமானால், அல்லது ஒரு பேரத்தில் எடுத்துக்காட்டாக தோட்டம் வாங்குவதில் அவர் இலாபம் அடையும் வாய்ப்பை நழுவி விட நேருமானால், வட்டி கேட்கலாம் என்று விளக்கிச் சொன்னபிறகு லூதர் தொடருகிறார்: 'நான் உங்களுக்கு 100 குல்டன் கடன் கொடுத்திருக்கிறேன் என்றால், உங்களால் எனக்கு இரட்டை இழப்பு ஏற்படுகிறது; ஏனென்றால் ஒரு புறம் என்னால் பணம் செலுத்த முடியாமல் போகிறது, மறுபுறம் விலைகொடுத்து வாங்கவும் முடியாமல் போகிறது. ஆக இருபுறமும் எனக்கு இழப்பு ஏற்படுகிறது. இது duplex interesse, damni emergentis et lucri cessantis... என்று அழைக்கப்படுகிறது ... ஜான் 100 குல்டன் கடன் கொடுப்பதால் இழப்புகளுக்கு ஆளானதால், இழப்பீடு மட்டுமே கேட்கிறார் என்று கேள்விப்பட்டதும், அவர்கள் அவசர அவசரமாய்

---

(*) கெதே, ஃபாஸ்ட், பகுதி I, காட்சி 5. —ஆங்கிலப் பதிப்பாசிரியர்.)

ஒவ்வொரு 100 குல்டனுக்கும் இரட்டை வட்டி விதிக்கிறார்கள்; இரட்டை இழப்பீடு கோருகிறார்கள்; அதாவது பணம் செலுத்த முடியாமையால் ஏற்படும் இழப்புக்கும், ஒரு பேரத்தில் இலாபம் பெற முடியாமையால் ஏற்படும் இழப்புக்கும் ஈடு தேடுகிறார்கள்; இந்த 100 குல்டன் மீது இரட்டை இழப்பு வளர்ந்திருந்தால் எப்படியோ அப்படி வைத்துக் கொள்கிறார்கள்; எனவே அவர்களிடம் 100 குல்டன் இருக்கும் போதெல்லாம், அதை கடனாய்க் கொடுத்து இரு இழப்புகளுக்கு ஈடாக வட்டி வசூலிக்கிறார்கள்; ஆனால் இந்த இழப்புகளுக்கு அவர்கள் ஆளாகவே இல்லை.....இவ்வாறு நீர் கடுவட்டிக்காரர் என்றால், உமக்கு ஏற்படவே ஏற்படாத, உம்மால் நிரூபிக்கவோ கணக்கிடவோ முடியாத கற்பனை இழப்புக்காக உமக்கு அண்டையில் இருப்பவர்களிடமிருந்து இழப்பீடு பெறுகிறவராவீர். இவ்வகையான கற்பனை இழப்பைத்தான் சட்ட வல்லுனர்கள் non verum, sed phantasticum interesse என்றழைக்கிறார்கள். இது ஒவ்வொருவரும் தமக்குத் தாமே இட்டுக்கட்டிக் கொள்கிற இழப்பு....ஆகவே என்னால் பணஞ் செலுத்தவோ விலைக்கு வாங்கவோ முடியாமல் போயிருக்கும் என்பதால் இழப்புகள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று சொல்வது உதவாது. இல்லையேல் இதன் பொருள் ex contingeste necessarium என்பதாக இருக்கும்; அதாவது இல்லாத ஒன்றிலிருந்து ஏதோ ஒன்றைப் படைப்பதாகவும், நித்தியமில்லாத ஒன்றை சர்வநிச்சயமான ஒன்றாக்குவதாகவும் இருக்கும். இத்தகைய கடுவட்டி ஒரு சில ஆண்டுகளில் உலகையே கபளீகரம் செய்து விடாதா?....அவருக்கு அவரது விருப்பத்தையும் மீறி வருத்தத்துக்குரிய ஒரு விபத்து நேரிட்டால் அதிலிருந்து அவர் மீண்டாக வேண்டுமென்றால், அதற்கு அவர் இழப்பீடு கேட்கலாம்; ஆனால் வர்த்தகத்தில் இப்படியில்லை; இதற்கு நேர்மாறாகவே உள்ளது. அங்கே அவர்கள் இல்லாமையால் வாடும் அண்டை புறத்தாரின் செலவில் இலாபமடைய திட்டந்தீட்டுகிறார்கள்: எப்படி செல்வம் சேர்க்கலாம், செல்வந்தராகலாம், கவலையோ ஆபத்தோ இழப்போ எதுவுமின்றி எப்படி உழைக்காமல் ஓய்ந்திருக்கலாம், பிறர் உழைப்பைச் சார்ந்து உல்லாசமாய் வாழலாம் என்று திட்டந்தீட்டுகிறார்கள். கணப்படுப்பின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, எனது 100 குல்டனையும் நாட்டில் எனக்காகச் செல்வம் திரட்ட விடுவது, அது கடனாக மட்டுமே தரப்படுவதால் எவ்வித ஆபத்தும் இல்லாமல் என்னிடமே வைத்துக் கொள்வது - நண்பரே, அதை விரும்பாதார் யார்?' (மார்ட்டின் லூதர், An die Pfarherrn wider den Wucher zu, predigen, etc, விட்டன்பர்க், 1540.)

*தன்னைத் தானே மறுவுற்பத்தி செய்து கொள்வதும் தன்னைத் தானே பெருக்கிக் கொள்வதுமான மதிப்பாக, பயனாய் உள்ளார்ந்த குணங்களின் பயனாய் - எனவே பகட்டுப் புலமைவாதிகளின் மறைந்திருக்கும் பண்பின் பயனாய் - சாசுவதமாக நிலைத்து நின்று வளர்ந்து செல்லும் மதிப்பாக மூலதனத்தை கருதுவது டாக்டர் பிரைசின் அதிவினோத கற்பனைகளுக்கு வழிசெய்திருக்கிறது; இந்தக் கற்பனைகள் மொத்தத்தில் இரசவாதிகளின் கட்டுக்கதைகளை விஞ்சுகிறவை; இந்தக் கற்பனைகளை பிட் மனபூர்வமாய் நம்பினார்; ஈட்டு நிதி தொடர்பான தமது விதிகளில் நிதி நிர்வாகத்தின் தூண்களாக இவற்றைப் பயன்படுத்தினார்.*

*'கூட்டு வட்டி பெற்றுத் தரும் பணமானது முதலில் மெல்ல மெல்ல வளர்கிறது. ஆனால் அதிகரிப்பின் வேகம் ஓயாமல் முடுக்கப்படுவதால், சில நேரம் மிகத் துரிதமாகி, கற்பனைத் திறன்கள் அனைத்தையும் பரிகசிக்கிறது. நமது இரட்சகர் பிறந்த போது ஒரு பென்னி 5 சதவீத கூட்டு வட்டிக்கு விடப்பட்டிருந்தால் இதற்குள் அது நூற்றி ஐம்பது மிலியன் புவிப்பரப்புகளில் அடங்கியிருக்கக் கூடிய கட்டித்தங்கம் முழுவதையும் விட பெருந்தொகையாக வளர்ந்திருக்கும். ஆனால் சாமானிய வட்டிக்கு விடப்பட்டிருந்தால், அதே காலத்தில் இரு ஒரு ஷில்லிங், நாலரை பென்னியாகவே அதிகரித்திருக்கும். இதுவரை நமது அரசினர் இந்த இருவழிகளில் முதலாவதைக் காட்டிலும் இரண்டாவதையே பணம் பெருக்குவதற்கு தேர்ந்தெடுத்துள்ளனர்.*[81]

(81) ***ரிச்சர்டு பிரைஸ், தேசக் கடன் என்னும் பொருள் குறித்து பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள்,*** இரண்டாம் பதிப்பு, லண்டன், 1774, பக்கம் 19. வெகுளித்தனமாய் அவர் பகடி செய்கிறார்:'பணத்தை சாமானிய வட்டிக்கு கடன்வாங்கி, கூட்டு வட்டிக்கு கடன் கொடுத்துப் பெருகச் செய்கிறார்கள்.' (ரா.ஹாமில்டன், மகா பிரிட்டனின் தேசக்கடனது தோற்றம், முன்னேற்றம் பற்றிய ஆய்வு, 2ஆம் பதிப்பு, எடின்பரோ, 1814, பக்கம் 133.) இதன்படி பார்த்தால், தனிப்பட்டவர்களும் கூட செல்வம் திரட்டுவதற்கு மிகவும் பாதுகாப்பான வழி கடன் வாங்குவதே என்றாகி விடும். ஆனால் 5% வருட வட்டிக்கு 100 கடன் வாங்கினால், வருட முடிவில் £5 செலுத்த வேண்டியிருக்கும். இந்தக் கடன் 10 கோடி ஆண்டுகளுக்கு நீடித்தாலும் கூட, இடைபட்ட காலத்தில் ஒவ்வோர் ஆண்டும் £100ஐ மட்டுமே வட்டிக்கு விட வேண்டியிருக்கும், ஒவ்வோர் ஆண்டும் £5 செலுத்த வேண்டியிருக்கும். இவ்வழியில் £100 கடன் வாங்கி £105 கடன் கொடுக்க ஒரு நாளும் முடியாது. 5% வட்டி செலுத்துவது எப்படி? புதிய கடன்களைக் கொண்டு செலுத்தலாம்; அரசாக இருந்தால் புதிய வரிகளைக் கொண்டு செலுத்தலாம். தொழில்துறை முதலாளி கடனாகப் பணம் வாங்கி, 15% இலாபம் பெறுவாரானால், அவர் 5% வட்டி செலுத்தலாம், (வருமானம் பெருகப் பெருக அவரது நுகர்ச்சி வேட்கையும் வளர்கிறது என்றாலும்) சொந்தத் தேவைகளுக்காக 5% செலவிடலாம், 5% மூலதனம் ஆக்கலாம். இந்நிலையில், தொடர்ந்து 5% வட்டி செலுத்துவதற்கு 15% இலாபம் பெறுவது முன் நிபந்தனை ஆகிறது. இந்நிகழ்முறை தொடருமானால், இலாப வீதம் 15% இலிருந்து - உதாரணமாய் 10% ஆக - குறையும்; குறைவதற்கான காரணம் முன் சென்ற அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளன. ஆனால் 5% வட்டிக்கு 15% இலாப வீதம் அவசியமாவதை பிரைஸ் அடியோடு மறந்துவிடுகிறார்; மூலதனத் திரட்டலோடு சேர்ந்து இந்த வட்டிவீதமே தொடருவதாக அனுமானம் செய்து கொள்கிறார். பணத்தைக் கடனாகக் கொடுப்பது, கூட்டு வட்டியோடு திரும்பப் பெறுவது என்பதில் மட்டும் கருத்து செலுத்துகிறாரே தவிர, உள்ளபடியான மூலதனத்திரட்டல் பற்றி அவர் கவலைப்படவே இல்லை; மூலதனத் திரட்டல் வட்டி-மூலதனத்தின் உள்ளார்ந்த குணமாதலால் இத்திரட்டல் எப்படி நடந்தேறுகிறது என்பது அவருக்கு ஒரு பொருட்டே அல்ல.)

எதிர்வகைக் கொடுப்புகள் பற்றிய கருத்தோட்டங்கள்...., லண்டன், 1772 என்ற நூலில் அவரது கற்பனை இன்னும் உயரச் சிறகடித்துப் பறக்கிறது. அதில் கூறப்படுவதாவது: 'நமது இரட்சகர் பிறந்த போது 6% கூட்டு வட்டிக்கு விடப்பட்ட ஒரு ஷில்லிங்' (ஜெருசலம் ஆலயத்தில் விடப்பட்டதோ என்னவோ!) '.....இந்த சூரியமண்டலம் முழுவதும் - சனிக் கோளின் சுற்றுப் பாதையானது விட்டத்துக்குச் சமமான விட்டத்தையுடைய ஒரு கோளமாக கருதும்படியான இம்மண்டலம் முழுவதும் - கொள்ளக் கூடியதையும் விட பெருந்தொகையாக வளர்ந்திருக்கும்'. 'ஆகவே அரசானது ஒரு போதும் எவ்வகையிலும் இடர்படத் தேவையில்லை; மிகச் சிறு சேமிப்பை வைத்துக் கொண்டு அது வட்டி வருவதற்கு தேவைப்படக் குறுகிய காலத்தில் மிகப் பெரும் கடன்களை தீர்த்துவிடலாம்' (இங்கிலாந்தின் தேசக் கடனுக்கு எவ்வளவு அழகான தத்துவ அறிமுகம் இது!)

பெருக்கு விருத்தி முறையில் வரப்பெறும் பிரம்மாண்டப் பரிமாணங்கள் பிரைசை அப்படியே பொறிகலங்கச் செய்கின்றன. அவர் மறுவுற்பத்திக்கும் உழைப்புக்கும் அவசியமான நிலைமைகளை சிறிதும் கவனியாமல், மூலதனத்தை தானே தன்னை ஒழுங்கியக்கிக் கொள்ளும் இயந்திர மனிதனாக, தானே பெருக்கமடைகிற வெறும் எண்ணிக்கையாக கருதியதால் (மால்தஸ் அவரது பெருக்கு விருத்தி முறையில் மக்கள் தொகையை இப்படித்தான் கருதினார்* $s = c\,(1+i)^n$ என்னும் சூத்திர வடிவில் மூலதனம் வளருவதற்கான விதியை தாம் கண்டுபிடித்து விட்டதாக எண்ணி பரவசமடைந்தார். இச்சூத்திரத்தில் $s$ = மூலதனத் தொகை + கூட்டு வட்டி $c$ = முன்னீடு செய்யப்படும் மூலதனம்; $i$=வட்டி வீதம் (100 இன் ஈவுப் பங்குகளாக தெரிவிக்கப் படுவது); $n$=இந்நிகழ்முறை நடைபெறும் ஆண்டுகளின் எண்ணிக்கை.

முனைவர் பிரைசின் புதிர் விளையாட்டை அப்படியே வினையாக எடுத்துக் கொள்கிறார் பிட். 1786இல் காமன்ஸ் சபையானது பொதுநன்மைக்காக £1மிலியன் சேகரிக்கத் தீர்மானித்திருந்தது. பிட் நம்புகிற பிரைசின் கருத்துப்படி இதற்கு மிகச் சிறந்த வழி மக்களுக்கு வரிவிதிப்பதுதான்; இந்தத் தொகையை வசூலித்த பிறகு 'திரட்டலுக்கு' பயன் படுத்தி, கூட்டு வட்டியெனும் மருமத்தின் மூலம் தேசக்கடனை தொலைத்துக் கட்டலாமாம். காமன்ஸ் சபை மேற்கண்ட தீர்மானத்தை இயற்றிய பிறகு விரைவிலேயே பிட் ஒரு சட்டம் கொண்டு வந்தார்;

(*) மால்தஸ் மக்கள்தொகை கோட்பாடு பற்றிய கட்டுரை, லண்டன், 1798, பக்கம் 25-26. - ஆங்கிலப்பதிப்பாசிரியர்.)

£250,000ஐ திரட்டலுக்குப் பயன்படுத்துமாறு இச்சட்டம் ஆணையிட்டது; 'காலாவதியான ஆண்டுத் தொகைகளோடு, இந்நிதியானது ஆண்டுக்கு £4,000,000 ஆக வளரும்வரை' இவ்விதம் திரட்டுவதற்கு ஆணையிட்டது. (சட்டம்26, மூன்றாம் ஜார்ஜ், அத்தியாயம் 31.* 1792ம் ஆண்டில் பிட் உரை நிகழ்த்திய போது ஈட்டு நிதியத்துக்கு ஒதுக்கப்படும் தொகைகளையே கூடுதலாக்குமாறு முன்மொழிந்து பேசினார்; இயந்திரங்கள், கடன் செலாவணி போன்றவையும் இங்கிலாந்தின் வர்த்தக முதன்மைக்கு காரணங்களாய் இருந்தபோதிலும் 'மிகப் பரவலான காரணம் மிகவும் நீடித்து நிற்கிற காரணம் திரட்டல்தான்' என்று அவர் குறிக்கிட்டார். இந்தக் கோட்பாடு மாமேதை ஸ்மித்தின் நூலில் முழுமையாக வளர்த்தெடுக்கப்பட்டது என்றார்....; வருடாந்தர இலாபத்தின் ஒரு பகுதியையாவது அசலிலும் கூடுதலாக்குவதற்காக ஒதுக்கி வைப்பதன் மூலம் இந்தத்திரட்டல் நடைபெறுவதாகவும், அசலை இதே வீதத்தில் அடுத்த ஆண்டு ஈடுபடுத்தி, தொடர்ச்சியாக இலாபம் பெறப்படுவதாகவும் எடுத்துவைத்தார். இவ்வாறு டாக்டர் பிரைஸின் துணைகொண்டு பிட் ஆனவர் ஸ்மித்தின் திரட்டல் தத்துவத்தை மாற்றி, ஒரு நாடு கடன்களைத் திரட்டி தனது செல்வத்தை பெருக்கிக் கொள்வதற்கான சாதனமாக்கி விடுகிறார்; இவ்வழியில் முடிவிலா கடன்களின் - கடன்களைச் செலுத்துவதற்கான கடன்களின் - விருத்தி தொடரை வந்தடைந்து மகிழ்கிறார்.

நவீன வங்கித் தொழிலின் தந்தை ஜோசையா சைல்டு முன்பே சொல்லிவிட்டார். £100 ஆனது 10% வட்டி வீதத்தில் 70 ஆண்டு காலத்தில் கூட்டு வட்டி முறையைக் கொண்டு £102,400 பெற்றுத்தரும் என்று. (ஜோ.சைல்டு, Traite Sur le Commerce.....ஆம்ஸ்டர்டாம் மற்றும் பெர்லின், 1754, பக்கம் 115 1669ல் எழுதப்பட்டது.)

டாக்டர் பிரைஸின் கருத்தோட்டத்தை இக்காலப் பொருளாதார அறிஞர்கள் எவ்வளவு கண்மூடித்தனமாய் பிரயோகிக்கிறார்கள் என்பதை தெளிவாக்கும் பொருட்டு, எக்னாமிஸ்ட் எட்டில் இருந்து பின்வரும் பகுதியை எடுத்துக்காட்டுகிறேன்: 'சேமிக்கப்படும் மூலதனத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் கூட்டுவட்டி சேர்த்துப் பார்க்கும்போது, மூலதனமானது அனைத்தையும் செயல்படுத்திக் கொள்கிறது; உலகிலுள்ள செல்வம் எல்லாம் - எதிலிருந்து வருமானம்

* 'தேசக்கடனை குறைப்பதற்காகப் பயன்படுத்துவதற்கென ஆணையர்களின் பொறுப்பில் ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் குறிப்பிட்ட தொகைகளை ஒப்படைப்பதற்கான சட்டம்' (சட்டம்26 மூன்றாம் ஜார்ஜ், அத்தியாயம் 31).-ஆங்கிலப்பதிப்பாசிரியர்.

பெறப்படுகிறதோ அதெல்லாம் - நீண்ட காலத்துக்கு முன்பே மூலதனத்துக்கு வட்டியாகிவிட்டது....இப்போது வாடகை என்பதெல்லாம் ஏற்கனவே நிலத்தில் முதலீடான மூலதனத்திற்கு வட்டி செலுத்துவதே ஆகும்.' (எக்னாமிஸ்ட், 1851 ஜூலை 10.) வட்டி-மூலதனம் என்ற பொறுப்பில் மூலதனமானது எக்காலத்திலும் உற்பத்தியாகக் கூடிய எல்லாச் செல்வமும் எனக்கே சொந்தமென்று உரிமை கொண்டாடுகிறது; இது வரை அதற்குக் கிடைத்திருப்பதெல்லாம் யானைப் பசிக்குக் கிடைத்த சோளப் பொரிதான். மானுட இனம் எக்காலத்திலும் இயற்றக்கூடிய உபரி-உழைப்பனைத்தும் மூலதனத்தின் உள்ளார்ந்த விதிகளின் படி அதற்கே சொந்தமாம். மலைமுழுங்கி மகாதேவனேதான்.

முடிவில், கற்பனைத் திலகம் முல்லரின் பின்வரும் கலவைக் கூளத்தைக் கண்ணுறுவோம்: 'கூட்டுவட்டியானது, அல்லது தம்மைத்தாமே வளர்முகத்தில் முடுக்கிவிட்டுக் கொள்ளும் மானுட சக்திகளானவை டாக்டர் பிரைஸ் கூறுவது போல் பிரம்மாண்டமாய் அதிகரிக்க வேண்டுமானால் அநேக நூற்றாண்டுகளுக்கு முழுமையாகவும் இடையறாமலும் ஒரே சீராகவும் பிரயோகிக்கப்பட்டாக வேண்டும்; அப்போதுதான் அவை இப்படிப்பட்ட மிகப்பெரும் விளைவுகளை தோற்றுவிக்க முடியும். மூலதனம் பிரிந்து, சுயேச்சையாய் வளரும் பற்பல தளிர்களாய்க் கிளைத்த பிறகு, சக்திகளைத் திரட்டும் மொத்த நிகழ்முறையும் புதிதாய் தொடங்குகிறது. இயற்கையானது ஒவ்வொரு தொழிலாளிக்கும் உரிய சராசரிப் பங்கான ஆற்றலை சுமார் 20 முதல் 25 ஆண்டு காலத்தில் வளர்ந்து பெருகும் வரிசையாகும்படி வினியோகம் செய்துள்ளது (!). இக்காலம் கழிந்த பிறகு தொழிலாளி தமது தொழிலை விட்டு விலகிவிடுகிறார்; உழைப்பின் கூட்டு வட்டியால் திரட்டப்பட்ட மூலதனத்தை புதிய தொழிலாளிக்கு அவர் மாற்றிக் கொடுத்தாக வேண்டும்; பெரும்பாலும் பற்பல தொழிலாளர்கள் அல்லது குழந்தைகளிடையே அவர் அதை விநியோகம் செய்துவிடுகிறார். இவர்கள் முதலில் தமது மூலதனப் பங்கை செயற்படுத்தவும் பிரயோகிக்கவும் கற்ற பிறகுதான், அதன் மீது உள்ளபடியே சிறிதாவது கூட்டு வட்டி எடுக்க முடியும். மேலும் அயராது சுறுசுறுப்பாய்ச் செயல்படும் சமுதாயங்களிலும் கூட குடியியல் சமூகம் (civil society)ஈட்டிய பெருமளவு மூலதனம் பையப்பைய பல்லாண்டு காலத்தில் திரட்டப்பட்டு, உழைப்பின் உடனடி விரிவாக்கத்துக்கு எவ்விதத்தும் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. இதற்குப் பதிலாய், கணிசத்தொகை சேர்ந்ததுமே கடன் என்ற பெயரில் இன்னொரு

தனியாளுக்கு - ஒரு தொழிலாளிக்கோ வங்கிக்கோ அரசுக்கோ - மாற்றித் தரப்படுகிறது. இவ்விதம் கடன் வாங்குகிறவர் அதன் பிறகு மூலதனத்தை உள்ளபடியே இயங்க வைத்து அதன்மீது கூட்டுவட்டி எடுக்கிறார்; எனவே அவர் தமக்கு கடன் கொடுத்தவருக்கு சாமானிய வட்டி செலுத்துவதாக எளிதில் உறுதி அளிக்கலாம். முடிவில், உற்பத்தி அல்லது சிக்கனத்தின் விதிமட்டும் உருப்படியாகச் செயல்படுமானால் மனிதனின் ஆற்றல்களும் அவற்றின் விலை பயன்களும் பெரும் பெரும் விருத்தித் தொடர்களில் பல்கிப் பெருகும்; நுகர்வு, பேராசை, வீணடித்தல் இவற்றின் விதிதான் இந்தப் பெருக்கத்துக்கு எதிராக வருவது.' *(அ.முல்லர்* Elemente der staatskunst, III *பக்கம் 147-49.)*

இதனினும் பயங்கரமான அபத்தத்தை இப்படி ஒரு சில வரிகளில் புனைவது முடியாத காரியம். தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையே, உழைப்புச்சக்தியின் மதிப்புக்கும் மூலதனத்தின் மீதான வட்டிக்கும் இடையே குழப்படி செய்யும் கிறுக்குத்தனத்தையும் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், கூட்டுவட்டி விதிக்கப்படுவது ஏன் என்பதற்குக் காரண விளக்கமாய் கருதப்படுவது கூட்டுவட்டி ஈட்டித்தரும் பொருட்டு மூலதனம் வட்டிக்கு விடப்படுகிறது என்பதே. வாழ்க்கைத் துறைகள் யாவற்றிலிருந்துமான பரபரப்பூட்டும் கற்பனைகளுக்கு ஏற்ற ஒரு முறையையே நமது முல்லர் கையாளுகிறார். புறத்தோற்றத்தை (மிகவும் மேற்போக்காய் பார்ப்பதிலிருந்து எழுகிறவை. பிறகு, தப்பும்தவறுமான, உப்புச்சப்பற்ற, இந்த உள்ளடக்கத்தை மர்மப் புதிராய் மாற்றும்படியான தெரிவிப்பு முறையின் மூலம் 'ஏற்றி போற்றவும்' செறிவுடையதாக்கவும் வேண்டியதாகிறது இலாபத்தில் (உபரி-மதிப்பில்) திரும்பவும் மூலதனமாக மாற்றப்படுகிற, அதாவது மேலும் உபரி-உழைப்பை உறிஞ்சுவதற்குப் பயன்படுகிற பகுதியை வட்டி என்று அழைக்கலாம் என்றால், மூலதனத்திரட்டல் நிகழ்முறையையும் கூட்டு வட்டி திரட்டலாகக் கருதலாம். ஆனால்:

1. இடையில் நிகழும் குறுக்கீடுகள் ஒரு புறம் இருக்க, தயாராய் இருந்துவரும் மூலதனத்தில் பெரியதொரு பகுதி மறுவுற்பத்தி நிகழ்முறையின் போக்கில் மதிப்பிறக்கம் அடைகிறது; ஏனென்றால் சரக்குகளின் மதிப்பு ஆரம்பத்தில் அவற்றின் உற்பத்திக்காக செலவிடப்படும் உழைப்பு நேரத்தால் நிர்ணயிக்கப்படுவதில்லை. அது அவற்றின் மறுவுற்பத்திக்காக செலவிடப்படும் உழைப்பு நேரத்தாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. இந்த உழைப்பு நேரமானது

உழைப்பினது சமுதாய உற்பத்தித் திறனின் வளர்ச்சி காரணமாய் ஓயாமல் குறைந்து செல்கிறது. ஆகவேதான், சமுதாய உற்பத்தித்திறன் உயர்ந்திருக்கும்போது, தயாராய் இருந்துவரும் மூலதனம் அனைத்தும் நீண்ட மூலதனத்திரட்டல் நிகழ்முறைக்குப் பதில் ஒப்பளவில் குறுகிய மறுவுற்பத்திக் காலத்தின் விளைவாகத் தோன்றுகிறது.[82]

2. இந்தப் பாகத்தின் பகுதி IIIஇல் தெளிவாக்கியது போல, மூலதனத்திரட்டல் வளரவளர, அதற்கொப்ப சமுதாய உழைப்பின் உற்பத்தித்திறன் உயரஉயர, இலாபவீதம் குறைந்து செல்கிறது. சமுதாய உழைப்பின் உற்பத்தித்திறன் உயர்ந்து செல்வதானது மூலதனத்தின் மாறாப்பகுதியோடு ஒப்பிடுமிடத்து மாறும் பகுதி ஒப்பளவிலும் தொடர்ச்சியாகவும் குறைந்து செல்வதில் துல்லியமாய் வெளிப்படுகிறது. ஒரு தொழிலாளியால் இயங்க வைக்கப்படும் மாறா-மூலதனம் பத்து மடங்கு அதிகரித்த பிறகும் அதே இலாபவீதம் வரப்பெற வேண்டுமானால், உபரிஉழைப்பு-நேரம் பத்து மடங்கு அதிகரித்தாக வேண்டும்; என்ற கருத்தே பிரைசின் தொடர்விருத்திக்கு அடிப்படையாகும்; பொதுவாகச் சொன்னால் 'கூட்டு வட்டியைக் கொண்டு அனைத்தையும் வயப்படுத்திக் கொள்ளும் மூலதனத்துக்கும்'[83] இதுவே அடிப்படை.

உபரி-மதிப்பும் உபரி-உழைப்பும் முழுதொத்தவையாக இருப்பது மூலதனத் திரட்டல் மீது பண்பு வழியில் வரம்பு விதிப்பதாகும். இந்த வரம்பு மொத்தவேலை நாளையும், உற்பத்திச் சக்திகளின், மற்றும் மக்கள் தொகையின் அப்போதைய வளர்ச்சியையும் கூறுகளாய்க் கொண்டது; இவ்வளர்ச்சியோ ஒருங்கே சுரண்டக் கூடிய வேலை-நாட்களின் எண்ணிக்கைக்கு வரம்பிடுகிறது. ஆனால் உபரி-மதிப்பை அர்த்தமற்ற வட்டி-வடிவில் கருதிப்பார்ப்போமாயின் வரம்பானது அளவு வழிப்பட்டதே. அது கற்பனைக்கு எட்டாதது.

---

82 இதுகுறித்து மில், காரீ, ரோஷர் ஆகியோரின் தவறான கருத்துகளைப் பார்க்கவும். (மார்க்ஸ் குறிப்பிடும் நூல்கள் பின்வருமாறு: ஜா.ஸ்டு.மில், அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் இரண்டாம் பதிப்பு, முதல்பாகம், லண்டன், 1849, பக்கம் 91-92; ஹெ.சா.காரீ. சமூக விஞ்ஞான கோட்பாடுகள், மூன்றாம் பாகம், பிலடெல்பியா 1859. பக்கம் 71-73; வி ரோஷர் Dive grundlager der Nationals konomive 3 Auflagı ஸ்டட்கார்ட் மற்றும் ஆகஸ்பர்க், 1858, 45.-ஆங்கிலப்பதிப்பாசிரியர்.)

83 'கூட்டுவட்டியின் கோரிக்கைகள் திணறடிக்கும்படியானவை எந்த உழைப்பாலும், எந்த உற்பத்தித் திறனாலும், எந்த சாதுர்யத்தாலும், எந்தக் கலை நுணுக்கத்தாலும் இக்கோரிக்கைகளை நிறைவு செய்து விட முடியாது என்று தெளிவாய்த் தெரிகிறது. ஆனால் மிச்சம் பிடித்தல் என்றாலே முதலாளியின் வருவாயிலிருந்துதான் பிடிக்கப்படுகிறது; இதனால் உள்ளபடியே இந்தக் கோரிக்கைகள் ஓயாமல் எழுகின்றன. இவற்றை நிறைவு செய்வதற்கும் உழைப்பின் உற்பத்தித் திறன் ஓயாமல் மறுத்திடுகிறது. ஆகவே ஒருவிதமான சமநிலை ஓயாமல் ஏற்படுகிறது.' (மூலதனத்தின் பாத்தியதைகளுக்கு எதிராக உழைப்புக்கு பாதுகாப்பு, பக்கம் 23. எழுதியவர்: ஹாட்ஜ்ஸ்கின்.)

ஆக, மூலதனத்தை மாய்மாலமாக்கும் கருத்துருவம் வட்டி-மூலதனத்தில் உச்சி முகட்டை அடைகிறது. இந்தக் கருத்துருவம் உழைப்பின் திரட்டப்பட்ட உற்பத்திப் பொருளுக்கு அதுவும் நிலையான பண-வடிவில் திரட்டப்பட்டு இருப்பதற்கு ஓர் இயந்திர மனிதனைப் போல் உபரி-மதிப்பைப் பெருக்கி விருத்தியில் படைக்கும் உள்ளார்ந்த இரகசிய ஆற்றலை உரித்தாக்குகிறது. உழைப்பால் படைத்துத் திரட்டப் பெற்றிருப்பது எக்காணமிஸ்ட் நினைப்பது போல்; உலகின் செல்வமனைத்தையும் முன்பே கழிவு செய்து உலகின் செல்வத்தையும் தனக்கே உரியதாகவும் நியாயமாகத் தன்னையே சேரவேண்டியதாகவும் மாற்றிக் கொண்டுவிடுகிறது. கடந்த கால உழைப்பின் உற்பத்திப் பொருள், கடந்தகால உழைப்பை கூட இங்கே நிகழ்காலம் அல்லது வருங்காத்துக்குரிய உயிருள்ள உபரி-உழைப்பின் ஒரு பகுதியை கருக்கொண்டு இருக்கிறதாம். ஆனால் உண்மை என்னவென்று நமக்குத் தெரியும்: கடந்தகால உழைப்பின் உற்பத்திப் பொருட்களது மதிப்பைப் பாதுகாப்பது - அந்த அளவுக்கு அம்மதிப்பை மறுவுற்பத்தி செய்வதும்கூட - உயிருள்ள உழைப்புடன் அப்பொருட்களுக்குத் தொடர்பு ஏற்படுவதன் விளைவாக மட்டுமே நடைபெறுவதாகும்; இரண்டாவதாக, கடந்தகால உழைப்பின் உற்பத்திப் பொருட்கள் உயிருள்ள உபரி-உழைப்பின் மீது ஆதிக்கம் செலுத்துவது மூலதன உறவுகள் நீடித்திருக்கும் வரைதான் நீடிக்கிறது; இந்த மூலதன உறவுகளோ கடந்த கால உழைப்பு உயிருள்ள உழைப்பின்மீது சுயேச்சையாகவும் அட்டகாசமாகவும் ஆதிக்கம் செலுத்தும்படியான அந்தக் குறிப்பிட்ட சமூக உறவுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பவை.

## அத்தியாயம் XXV

## கடன்-செலாவணியும் பெயரளவு மூலதனமும்

கடன்-செலாவணி அமைப்பையும், அது தன் சொந்த உபயோகத்திற்காக வார்த்திடும் கருவிகளையும் (கடன்-செலாவணிப் பணம் முதலானவை) பரிபூர்ணமாய்ப பகுத்தாராய்வது நமது திட்டத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டதாகும். பொதுவாக முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் தன்மையைப் படம்பிடித்துக் காட்டுவதற்கு அவசியமான குறிப்பிட்ட சில கூறுகளை மட்டும் இங்கு எடுத்துரைக்க விழைகிறோம்.

வர்த்தகக் கடன்-செலாவணியையும் வங்கிக் கடன்-செலாவணியையும் மட்டும் பரிசீலிப்போம். இவ்வகை கடன்-செலாவணியின் வளர்ச்சிக்கும் பொதுக்கடன் - செலாவணியின் வளர்ச்சிக்கும் இடையிலான தொடர்பை இங்கு பரிசீலிக்கப் போவதில்லை.

பணம் கொடுப்புச் சாதனமாகப் பணி புரிவதும், அத்துடன் சரக்குகளின் உற்பத்தியாளருக்கும் வர்த்தகருக்கும் இடையே கடன் கொடுத்தவருக்கும் கடன் பட்டவருக்குமான உறவு ஏற்படுவதும் எப்படி சாமானியச் சரக்கு சுற்றோட்டத்திலிருந்து வளர்ந்து வருகின்றன என்று முன்பே தெளிவாக்கினோம் (முதல் பாகம் அத்தியாயம் III, பிரிவு 3, ஆ) வர்த்தகமும், முழுக்க முழுக்கச் சுற்றோட்டத்தையே குறியாய்க் கொண்டு உற்பத்தி செய்கிற முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையும் வளர்ச்சியடையும் போது, கடன்-செலாவணி அமைப்பின் இந்த இயற்கை அடிப்படை பரவலாய் விரிவாக்கப்பட்டு முழுமையடைகிறது. இங்கு பணம் மொத்தத்தில் கொடுப்புச் சாதனமாக மட்டும் செயல்படுகிறது; அதாவது சரக்குகள் பணத்துக்கு விற்கப்படுவதற்குப் பதிலாக, குறிப்பிட்ட தேதியில் விலை கொடுப்பதாக எழுதித் தரப்படும் உறுதிக்கு விற்கப்படுகின்றன. சுருக்கம் வேண்டி, இந்த உறுதிப் பத்திரங்களை எல்லாம் மாற்று உண்டியல்கள் (bills of exchange) என்னும் பொதுத் தலைப்பில் உட்படுத்திடலாம். இந்த மாற்று உண்டியல்கள் அவற்றின் தீர்வுக்குரிய நாள் வரும் வரை கொடுப்புச் சாதனமாகச் சுற்றியோடுகின்றன; உள்ளபடியான வர்த்தகப்

பணம் ஆவது இவையே. வரவேண்டியவற்றையும் தர வேண்டிய வற்றையும் முடிவில் நேர் செய்வதால், இவை அறுதியாகப் பணமாய்ச் செயல்படுகின்றன; ஆனால் இவை இறுதியில் உண்மைப் பணமாகவே மாறிவிடுவதில்லை. உற்பத்தியாளர் வணிகர்களும் இவ்விதம் தமக்குள் முன்னீடு செய்து கொள்வது எப்படி கடன்-செலாவணிக்கு மெய்யான அடித்தளமாகிறதோ, அதேபோல் இம்முன்னீடுகளின் சுற்றோட் டத்துக்குக் கருவியாகிய மாற்று உண்டியலும் முறையான கடன்-செலாவணிப் பணத்திற்கு, வங்கி-நோட்டுகள் முதலான வற்றுக்கு அடிப்படை ஆகிறது. இவற்றுக்கு ஆதாரமாவது மாற்று உண்டியல்களின் சுற்றோட்டம்தானே தவிர பணத்தின் சுற்றோட்டம் அல்ல - உலோகப் பணமானாலும் சரி, அரசுவெளியிடும் காகிதப் பணமானாலும் சரி,

*வி.லீதம் (யார்க்ஷயர் வங்கியாளர்) செலாவணி பற்றிய கடிதங்கள், 2ஆம் பதிப்பு, லண்டன், 1840 என்ற நூலில் எழுதுகிறார்: '1839ஆம் ஆண்டு முழுவதற்குமான தொகை....£528, 493, 842 ஆக இருக்கக் காண்கிறேன்' (அயல்நாட்டு மாற்று உண்டியல்கள் மொத்தத்தில் சுமார் ஐந்திலொரு பங்காக இருக்குமென அவர் அனுமானம் செய்து கொண்டார்); 'அதே ஆண்டில் ஒரே நேரத்தில் வெளியிலிருந்து உண்டியல்களின் தொகை £132, 123, 460ஆக இருக்கக் காண்கிறேன்' (பக்கம் 56). மாற்று உண்டியல்களானவை 'ஏனைய எல்லா அடக்க கூறுகளின் ஒட்டுமொத்த அளவை விடவும் பெரியதோர் அடக்கக் கூறாகும்' (பக்கம் 3). 'மாற்று உண்டியல்களின் இந்த மிகப் பெரும் மேற்கட்டுமானத்துக்கு அடித்தளமாய் இருப்பது (!) வங்கி நோட்டுகள், தங்கம் ஆகியவற்றின் அளவுதான்; ஒரு சில நிகழ்ச்சிகள் காரணமாய் இந்த அடித்தளம் மிகவும் குறுகிப் போய் விடும் போது, அதன் உறுதிப்பாடு ஆபத்துக்குள்ளாகிறது, இந்த அடித்தளமே இல்லாதொழியும் ஆபத்தும் ஏற்படுகிறது' (பக்கம் 8). 'செலாவணி முழுவதையும்' (வங்கி நோட்டுகளின் செலாவணியைச் சொல்கிறார்) 'இங்கிலாந்து வங்கிக்கும் வட்டிக்கடை வங்கியாளர்களுக்கும் (Country bankers)உள்ள கேட்டதும் செலுத்த வேண்டிய கடன் பொறுப்புகளின் அளவினையும் மதிப்பீடு செய்வதானால் மொத்தத் தொகை 153 மிலியனாக இருக்கக் காண்கிறேன்; சட்டப்படி இத்தொகையைத் தங்கமாக மாற்றலாம்;....இந்த வேண்டலை நிறைவு செய்வதற்கான தங்கத்தின் அளவு' 14 மிலியன் மட்டுமே (பக்கம் 11). 'மாற்று உண்டியல்களுக்கு' வரம்பிட்டுக் கட்டுப்பாடு செய்யும் ஏற்பாடு ஏதும் உண்டா? பணம் பெருகிக் கரை புரளுவதும், வட்டி அல்லது கழிவு*

வீதங்களாக மிகையாவதும் குறைந்திடுவதும் அதாவது ஒரு பகுதி உண்டியல்கள் தோன்றக் காரணமாய் இருப்பவையும், அபாயகரமான அளவுக்கு உண்டியல்கள் பெருக்கெடுக்க ஊக்கமளிப்பவையுமான இந்தக் காரணிகள் தடுக்கப்படுவது தவிர - வேறு கட்டுப்பாடு செய்யும் ஏற்பாடு ஏதும் இல்லை. உண்டியல்களில் மெய்யாகவே முறையான கொடுக்கல் வாங்கலின் விளைவாய் எழுந்தவையும் உண்டு, அதாவது உண்மையிலேயே சந்தை பேரம், விற்பனை போன்றவற்றால் தோன்றியிருப்பவையும் உண்டு; இட்டுக் கட்டுவதற்காக, அதாவது ஏற்கெனவே இருந்து வரும் உண்டியலிடத்தில் இட்டுக் கட்டுவதற்கென்று வரையப்பெற்று அந்த அளவுக்கு செலாவணியை படைத்துப் புழக்கத்தில் விட்டு பெயரளவு மூலதனத்தையும் வெறும் கடன்வசதிப் பத்திரத்தையும் தோற்று விப்பவையும் உண்டு. முதல் வகையைச் சேர்ந்தவை எவ்வளவு, இரண்டாவது வகையைச் சேர்ந்தவை எவ்வளவு என்று சொல்வதற்கில்லை. பணம் மிகுந்தும் மலிந்தும் இருக்கும் காலத்தில் பின் குறிப்பிட்ட பகுதி மிகப்பெரும் அளவை எட்டுவதாக அறிகிறேன்' (பக்கம் 43-44). ஜே.வா.பொஸாங்கே, உலோகச் செலாவணியும் காகிதச் செலாவணியும் கடன் செலாவணியும், லண்டன், 1842என்ற நூலில் சொல்கிறார்:'ஆண்டில் ஒவ்வோர் அலுவல் நாளிலும் சராசரியாக £3,000,000க்கும் அதிகமான அளவுக்குக் தீர்வகத்தின் மூலம் கொடுப்புகள் தீர்வு செய்யப்படுகின்றன லண்டன் வங்கியாளர்கள் தீர்வுக்குரிய உண்டியல்களையும் தாக்கலாகிய காசோலைகளையும் தீர்வகத்தில் பரிவர்த்தனை செய்து கொள்கிறார்கள்; இதற்காக ஒவ்வொரு நாளும் தேவைப்படும் பணத்தொகை £200,000க்கு சற்றே கூடுதலாகும்' (பக்கம் 86). எங்கெல்ஸ் குறிப்பு.--1889 இல், தீர்வகத்தின் மொத்தப் புரள்வு £7,618 ¾ மிலியன் ஆகும்; தோராயமாக 300 அலுவல் நாட்களில் சராசரியாக நாள் ஒன்றுக்கு £25½ மிலியன் ஆகும். புறக்குறிப்பின் (endorsement) மூலம் சொத்துடைமையைக் கைமாற்றஞ் செய்வதால், 'மாற்று உண்டியல்கள் பணத்தைச் சாராமல் செலாவணியாகச் செயல்படுகின்றன என்பதில் ஐயமில்லை' (பக்கம் 92). 'சராசரியாகப் பார்த்தால் சுற்றோட்டத்தில் இருக்கும் ஒவ்வோர் உண்டியலுக்கும் இரு புறக்குறிப்புகள் இருப்பதாகவும்.... ஒவ்வோர் உண்டியலும் தீர்வுக்குரியதாவதற்குள் இரு கொடுப்புகளை நிறைவேற்றுவதாகவும் கொள்ளலாம். இந்த அனுமானத்தின் அடிப்படையில் புறக்குறிப்பின் மூலம் மட்டுமே, மாற்று உண்டியல்களைக் கொண்டே 1839 ஆம் ஆண்டில் ஐநூற்றி இருபத்தெட்டு மிலியனைப் போல் இரு மடங்கு, அதாவது £1,056,000,000 மதிப்புக்கு

சொத்துடைமை கைமாறியதாகத் தெரியவரும்; நாளொன்றுக்கு £3,000,000க்கு மேல் கைமாறியுள்ளது. ஆகவே, வங்கி-வைப்புகளும் மாற்று உண்டியல்களும் சேர்ந்து பணத்தின் துணை இல்லாமலே நாளொன்றுக்கு £18,000,000க்குக் குறையாத அளவுக்கு சொத்துடைமையை கைமாற்றம் செய்வதன் மூலம் பணப்பணிகள் ஆற்றுவதாக நாம் முடிவுக்கு வருவதில் பிழை யொன்றும் இல்லை' (பக்கம் 93).

பொதுவான கடன்-செலாவணி பற்றி டூக் பின்வருமாறு சொல்கிறார்: 'மிகவும் எளிய முறையில் சொல்வதானால், கடன் என்றாலே நம்பிக்கை வைப்பதுதான், இந் நம்பிக்கைக்கு முறையான ஆதாரம் இருக்கலாம், இல்லாமலும் போகலாம். நம்பிக்கை வைத்துதான் ஒருவர் பிறிதொருவரிடம் குறிப்பிட்ட அளவு மூலதனத்தைப் பண வடிவிலோ, இருவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பண-மதிப்பில் கணக்கிடப்படும் பண்டங்களின் வடிவிலோ ஒப்படைக்கிறார்; இவ்விதம் ஒப்படைக்கப் படுவதை நிர்ணயமான காலவரையின் முடிவில் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். மூலதனமானது பணமாகக் கடன் தரப்படுகையில் வங்கி நோட்டுகளாகவோ ரொக்கக் கடனாகவோ அலுவல் தொடர்பாளர் மீதான ஆணையாகவோ தரப்படுகையில் - இம் மூலதனத்தைப் பயன்படுத்து வதற்காக ஒவ்வொரு £100க்கும் இவ்வளவு என்ற வீதத்தில் கடன் தொகையோடு சேர்த்துக் கூடுதலாகத் திருப்பிக் கொடுத்தாக வேண்டும். பண்டங்களாகக் கடன் தரப்படுமிடத்து - இவற்றின் பணமதிப்பு குறித்து உடன்பாடு காணப்பட்டு, இந்தக் கடன் ஒரு விற்பனையாகிறது - திருப்பிச் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்படும் காலக்கெடு முடியும் வரை மூலதனத்தின் பயன்பாட்டுக்கும் எதிர்பாராமல் நேரக்கூடிய ஊறுபாட்டுக்குமான ஈட்டுத்தொகையும் திருப்பிச் செலுத்த ஒப்புக் கொள்ளப்படும் தொகையில் அடக்கமாகும். நிர்ணயித்த தேதியில் திருப்பிச் செலுத்துவதாக எழுதித் தரப்படும் கடப்பாடுகளின் பேரிலேயே பெரும்பாலும் இந்தக் கடன்கள் தரப்படுகின்றன. இந்தக் கடப்பாடுகள் அல்லது உறுதிப் பத்திரங்கள் குறித்த தேதிக்குப் பிறகு கைமாற்றம் செய்யத்தக்கவை ஆதலால், கடன் கொடுத்தவர்கள் இவற்றைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்; தம் வசம் இருக்கும் உண்டியல்களின் காலக் கெடு முடிவதற்குள் பண வடிவிலோ பண்ட வடிவிலோ இருக்கிற தமது மூலதனத்தை பயன்படுத்த வேண்டிய அவசியம் நேரிட்டால் அவர்கள் பெரும்பாலும் குறைந்த வட்டிக்குக் கடன் வாங்குவதற்கோ குறைந்த விலைக்குச் சரக்கு வாங்குவதற்கோ இந்தப் பத்திரங்கள் பயன்படுகின்றன; தமது பெயருடன் கூடவே உண்டியல்களில்

*எழுதப்படும் பெயர்களாலும் தமது கடன்-மதிப்பை வலுப்படுத்திக் கொள்வதன் மூலம் அவர்கள் இவற்றைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.' செலாவணிக் கோட்பாடு பற்றிய ஆய்வு, பக்கம் 87.)*

*சா.கோக்விலின்,* Du credit et des Banques dans l'Industrie, Revue des Deux Mondes, 1842, *பாகம் 31: 'ஒவ்வொரு நாட்டிலும் கடன்-செலாவணி கொடுக்கல் வாங்கல்களில் பெரும்பாலானவை தொழில்துறை உறவுகளின் வட்டத்துக்குள் நடை பெறுகின்றன ... கச்சாப்பொருள் உற்பத்தியாளர் அதனை செய்பொருள் உற்பத்தியாளருக்கு முன்னீடு செய்து, குறிப்பிட்ட தேதியில் பணம் செலுத்துவதற்கான உறுதிமொழியை அவரிடமிருந்து பெற்றுக்கொள்கிறார். செய்பொருள் உற்பத்தியாளரோ வேலையில் தனக்குரிய பங்கை செய்து முடித்த பின் தமது உற்பத்திப் பொருளை மேலும் சரிசெய்வதற்காக இதேபோன்ற நிபந்தனைகளின் பேரில் இன்னொரு செய்பொருள் உற்பத்தியாளிடம் முன்னீடு செய்கிறார். இவ்வாறு கடன்-செலாவணி ஒருவரிடமிருந்து மற்றொருவருக்காய் நுகர்வாளர் வரைக்கும் நீண்டு செல்கிறது. மொத்த விற்பனையாளர் சில்லரை விற்பனையாளருக்கு சரக்குகளை கடனாய்த் தருகிறார்; அதேபோது அவரே செய்பொருள் உற்பத்தியாளரிடமிருந்தோ தரகு முகவரிடமிருந்தோ கடன் பெறுகிறார். எல்லாரும் ஒரு கையால் கடன் வாங்குகிறார்கள், மறுகையால் கடன் கொடுக்கிறார்கள்; இவ்விதம் தருவதும் பெறுவதும் சில நேரம் பணமாய் இருந்தாலும் பல நேரம் பண்டங்களாகவே இருக்கக் காணலாம். ஆகவே தொழில் துறை உறவுகளில் முன்னீடுகளின் பரிவர்த்தனை ஒய்வதே இல்லை; இந்த முன்னீடுகள் ஒன்றுடன் ஒன்று இணைந்தும் ஒன்றையொன்று வெட்டியும் செல்கிறவை. கடன்-செலாவணியின் வளர்ச்சியானது பரஸ்பர முன்னீடுகள் இப்படிப் பல்கிப் பெருகுவதில்தான் அடங்கியுள்ளது; அதன் சக்திக்கு உண்மையில் இதுவே ஆதார பீடம்.'*

*கடன்-செலாவணி அமைப்பின் மறுபக்கமானது தனவணிகத்தின் வளர்ச்சியோடு தொடர்புடையது; தனவணிகத்தின் வளர்ச்சியோ முதலாளித்துவ பொருளுற்பத்தியில் சரக்கு வணிகத்தின் வளர்ச்சியோடு இணைந்து நடைபெறுவது. தொழில் அதிபர்களின் சேமநிதிகளை பேணிக் காக்கும் பொறுப்பும், பணம் பெறுதல், பணம் தருதல், நாடுகளிடையிலான கொடுப்புகள், எனவே பொற்பாள வர்த்தகம் ஆகியவற்றின் செய்நுட்பக் காரியங்களும் எப்படி தனவணிகர்களின் கையில் குவிக்கப்படுகின்றன என்று முன் சென்ற பகுதியில்*

(அத்தியாயம் XIX)பார்த்தோம். கடன்-செலாவணி அமைப்பின் மறுபக்கம் - அதாவது வட்டி-மூலதனம் அல்லது பண-மூலதனத்தின் மேலாண்மை - இந்த தனவணிகத்துடன் சேர்ந்து வளர்ந்து, தனவணிகர்களின் தனிப்பணியாகிறது. பணத்தை கடன் வாங்குவதும் கடன் கொடுப்பதும் அவர்களின் தனித்தொழில் ஆகிறது. அவர்கள் பண=மூலதனத்தை கடன் கொடுக்கிறவருக்கும் கடன் வாங்குகிற வருக்கும் இடையாளர்களாகச் செயல்படுகிறார்கள். பொதுவாகச் சொன்னால், வங்கித் தொழிலின் இந்தக் கூறு கடன்தரக்கூடிய பண-மூலதனத்தை வங்கியாளர்களின் கையில் பெருந்தொகையாகக் குவிப்பதாய் அமைகிறது; இதன் பயனாய், தனிப்பட்ட வட்டிக் காரருக்கு பதில் வங்கியாளர்கள் எல்லா வட்டிக்காரர்களுக்குமான பிரதிநிதிகள் என்ற முறையில், தொழில்துறை முதலாளிகளையும் வர்த்தக முதலாளிகளையும் எதிர்நோக்குகின்றனர். அவர்கள் பண-மூலதனத்தின் பொது மேலாளர்கள் ஆகின்றனர். மறுபுறம் வர்த்தக உலகம் அனைத்துக்குமாக கடன் வாங்குவதன் மூலம், கடன்கொடுக்கிற அனைவருக்கும் எதிரில் கடன் வாங்குகிற அனைவரையும் குவியச் செய்திடுகிறார்கள். வங்கியானது ஒரு புறம் பண-மூலதனத்தின் மையப்பாட்டை, கடன் கொடுக்கிறவர்களின் மையப்பாட்டைக் குறிப்பதாகும்; மறுபுறம் கடன் வாங்குகிறவர்களின் மையப்பாட்டைக் குறிப்பதாகும். பொதுவாகச் சொன்னால், குறைந்த வட்டி வீதத்தில் கடன்வாங்கி, அதிக வட்டிவீதத்தில் கடன் கொடுப்பதன் மூலம் வங்கி இலாபம் பெறுகிறது.

கடன் கொடுப்பதற்கென வங்கிகள் தம்வசம் வைத்திருக்கும் மூலதனம் பல்வேறு வழிகளிலும் அவற்றிடம் வந்து சேருவதாகும். முதலாவதாக, இவை தொழில்துறை முதலாளிகளின் காசாளர்களாய் இருப்பதால், ஒவ்வொரு உற்பத்தியாளரும் வணிகரும் சேமநிதியாக வைத்திருக்க வேண்டிய அல்லது கொடுப்பாக வரப்பெறுகிற பண-மூலதனம் அனைத்தும் இவற்றின் கையில் குவிக்கப்படுகிறது. இவ்வாறு இந்த நிதிகள் கடன் கொடுப்பதற்கான பண-மூலதனமாக மாற்றப்படுகின்றன. எனவே வர்த்தக உலகின் சேமநிதி பொதுவான தொரு கருவூலத்தில் குவிக்கப்படுவதால் இன்றியமையாக் குறைந்தபட்ச அளவாக குறைந்து போகிறது; மற்றபடி சேமநிதியாக படுத்துறங்க வேண்டிய பண-மூலதனத்தில் ஒரு பகுதி கடனுக்கு விடப்பட்டு, வட்டி-மூலதனமாகப் பயன்படுகிறது. இரண்டாவதாக, வங்கிகள் கடனாய்த் தரக்கூடிய மூலதனம் பண-முதலாளிகளின் வைப்புகளிலிருந்து கிடைக்கிறது. இம்முதலாளிகள் தமது வைப்புகளை

வட்டிக்கு விடும் அலுவலை வங்கிகளிடம் ஒப்படைக்கிறார்கள். மேலும், வங்கி அமைப்பு வளர்ச்சி அடையும் போது, முக்கியமாய் வங்கிகள் வைப்புகளுக்கு வட்டி கொடுக்கத் தொடங்கியதும், எல்லா வர்க்கங்களுக்கும் சொந்தமான பணச் சேமிப்புகளும், தற்காலிகமாய் ஒய்ந்திருக்கிற பணமும் வங்கிகளில் வைப்பு வைக்கப்படுகின்றன. தனித்தனியாக இருக்கும்போது பண-மூலதனமாகச் செயல்பட முடியாத சிறு சிறு தொகைகள் பெரும் பெரும் திரள்களாக ஒன்று கலந்து, இவ்விதம் பணச் சக்தி ஆகின்றன. சிறு சிறு தொகைகள் இப்படி மொத்தமாய்ச் சேர்க்கப்படுவது வங்கி அமைப்பின் பிரத்தியேகப் பணியாகும்; முறையான பண-முதலாளிகளுக்கும் கடன் வாங்கு கிறவர்களுக்கும் இடையாளராக அது புரியும் செயற்பாடுகளிலிருந்து இந்தப் பிரத்தியேகப் பணியை வேறுபடுத்தி காண வேண்டும். கடைசியாகப் பார்த்தால், வழக்கமாய் பையப்பையவே நுகரப்படும் வருவாய்களும் கூட வங்கிகளில் வைப்புகளாகிவிடுகின்றன.

கடன் தரப்படுவது எப்படி? (வர்த்தகக் கடனை மட்டுமே இங்கு குறிப்பிடுகிறோம்.) உண்டியலைக் கழிவு செய்து பணமாக மாற்றித் தருவதன் மூலம் (அதாவது காலக்கெடுவுக்கு முன்னதாகவே உண்டியலைப் பணமாக மாற்றுவதன் மூலம்) தனிப்பட்டவருக்கான கடன் வசதியிலிருந்து நேரடி முன்னீடுகள் மூலம், வட்டி வருமானப் பத்திரங்களையும் அரசுக் கடன் பத்திரங்களையும் பல வகையான பங்குச் சீட்டுகளையும் போன்ற பிணையங்களின் பேரிலான முன்னீடுகள் மூலம் இன்னும் முக்கியமாய்க் கப்பல் ரசீதுகளையும் துறைமுக அத்தாட்சிகளையும் இதர சரக்குடைமைப் பத்திரங்களையும் அதிகப் பற்று பெற உரிமையளிக்கும் வைப்புகளையும் வைத்து வழங்கப்படும் கடன் தொகைகள் மூலம் தரப்படுகிறது.

வங்கியாளர் தரும் கடன் பல்வேறு வடிவங்கள் எடுக்கலாம்; இதர வங்கிகள் மீதான மாற்று உண்டியல்களாகவோ, அவற்றின் மீதான காசோலைகளாகவோ, அதே வகை கடன்-செலாவணிக் கணக்கு களாகவோ இருக்கலாம்; முடிவில், வங்கியானது நோட்டுகள் வெளியிட உரிமை படைத்ததாய் இருந்தால், அவ்வங்கியின் வங்கி-நோட்டுகளாகவும் இருக்கலாம். வங்கி-நோட்டு என்பது ஒரு வங்கியாளர் மீதான பணவிடையே(draft) தவிர வேறல்ல; இதை வைத்திருப்பவருக்கு அதற்குரிய பணத்தை எந்த நேரத்திலும் கொடுக்க வேண்டியிருக்கும். வங்கியாளர் தனியார் பணவிடைகளுக்குப் பதில் இதைத் தருகிறார். கடைசியாகக் குறிப்பிட்ட இந்தக் கடன்-செலாவணி

வடிவம் பாமரருக்கு அதி முக்கியமாகவும் எடுப்பாகவும் தெரிகிறது. முதலாவதாக ஏனென்றால், இவ்வகைக் கடன்-செலாவணிப் பணமானது வெறும் வர்த்தகச் சுற்றோட்டத்தின் எல்லைகளை மீறி பொதுச் சுற்றோட்டத்திற்குள் வந்து, இங்கே பணமாகப் பயன்படுகிறது. மேலும் ஏனென்றால், பெரும்பாலான நாடுகளில் நோட்டு வெளியிடும் முக்கிய வங்கிகளானவை தேச வங்கிகளும் தனியார் வங்கிகளும் சேர்ந்த விசேஷக் கலவையாய் இருப்பதால், உள்ளபடியே தேசக் கடன்-செலாவணி அவற்றுக்கு பின்பலமாய் உள்ளது, அவற்றின் நோட்டுகள் ஏறக்குறைய சட்டச் செலாவணியாய் (legal tender) உள்ளன; வங்கியாளர் கடன்-செலாவணியையே வர்த்தகம் செய்வது இங்கு தெளிவாகிறது; வங்கி நோட்டு என்பது கடன்-செலாவணிக்கான அடையாளச் சீட்டாக சுற்றியோடுவதே தவிர வேறல்ல. ஆனால் கடன்-செலாவணியின் ஏனைய எல்லா வடிவங்களுடனும் கூட வங்கியாளருக்கு தொடர்புண்டு; தன்னிடம் வைப்பாய் இருக்கும் ரொக்கப் பணத்தை அவர் முன்னீடு செய்யும் போதும் கூட இதே நிலைமைதான். உண்மையில் வங்கி நோட்டு என்பது மொத்த வர்த்தகத்துக்கான நாணயத்தையே குறிக்கிறது; எப்போதும் வைப்பையே வங்கிகள் மிக உயர்வாய் மதிக்கின்றன. ஸ்காட்லாந்திய வங்கிகள் இதற்கு சிறந்த சான்றாகின்றன.

வங்கிகளின் தனி வடிவங்களைப் போலவே தனிக் கடன்-செலாவணி நிறுவனங்களையும் நமது நோக்கத்திற்கு இதற்கு மேல் பரிசீலிக்கத் தேவையில்லை.

'வங்கியாளர்களின் அலுவலை...இரு கிளைகளாகப் பிரிக்கலாம்... மூலதனத்தை உடனடியாகச் செயலில் ஈடுபடுத்த வாய்ப்பில்லாதவர்களிடமிருந்து அதனை வசூல் செய்வதும், அவ்விதம் ஈடுபடுத்த வாய்ப்புள்ளவர்களுக்கு அதனை வினியோகம் அல்லது கைமாற்றம் செய்வதும் வங்கியாளரது அலுவலின் ஒரு கிளை ஆகும். வாடிக்கையாளர்களின் வருமானங்களை வைப்புகளாகப் பெற்றுக் கொள்வதும், அவர்கள் தமது நுகர்வுப் பொருட்களுக்காகச் செலவிடுவதற்கு வேண்டும்போது தொகையை எடுத்துக் கொடுப்பதும் மற்றொரு கிளை ஆகும் ... முன்னது மூலதனத்தின் சுற்றோட்டம் ஆகும், பின்னது செலாவணியின் சுற்றோட்டம் ஆகும் ...' ஒன்று 'ஒரு பக்கம் மூலதனக் குவிப்பு தொடர்பானது, மறுபக்கம் மூலதன வினியோகம் தொடர்பானது. மற்றொன்று, 'அவ்வட்டத்தின் வட்டார நோக்கங்களுக்கான

*சுற்றோட்டத்தை பரிபாலனம் செய்வதில் ஈடுபடுத்தப்படுவது.' டுக், செலாவணிக் கோட்பாடு பற்றிய ஆய்வு, பக்கம் 36, 37, பிற்பாடு அத்தியாயம்* XXVIIIஇல் இதே நூற்பகுதிக்குத் திரும்பி வருவோம்.

*குழுக்களின் அறிக்கைகள், பாகம்* VIII, *வர்த்தக இன்னல், பாகம்*II.*பகுதி* I, *1847-48, சாட்சியக் குறிப்புகள் (இனி, வர்த்தக இன்னல், 1847-48 என்று எடுத்துக் காட்டப்படுவது.)* நாற்பதாம் ஆண்டுகளில் லண்டனில் மாற்று உண்டியல்களை கழிவு செய்யும் போது ஒரு வங்கியின் மீதான இன்னொரு வங்கியின் 21-நாள் பணவிடைகள் வங்கி நோட்டுகளுக்கு பதிலாய் ஏற்றுக் கொள்ளப்பட்டதுண்டு. வட்டிக்கடை வங்கியாளர் ஜே. பீஸ் அளித்த வாக்கு மூலம், எண் *4636, 4645.)* இதே அறிக்கையில் உள்ளபடி, பணமுடை ஏற்படும்போதெல்லாம் வங்கியாளர்கள் தம் வாடிக்கையாளர்களுக்கு இத்தகைய மாற்று உண்டியல்களைத் தரும் வழக்கமிருந்தது. பெற்றுக் கொள்கிறவர் வங்கி-நோட்டுகள் வேண்டும் என விரும்பினால், அவர் மீண்டும் இந்த உண்டியலை கழிவு செய்து கொள்ள வேண்டும். வங்கிகளைப் பொறுத்த வரை, இது க்காசடிக்கும் சிறப்புரிமைக்கு ஒப்பானது. திருவாளர்கள் ஜோன்ஸ், லாய்டு மற்றும் கம்பெனியார் 'நினைவுக்கெட்டா காலத்திலிருந்தே' இவ்வழியில் கொடுப்புகளைச் செலுத்தி வந்தனர்; பணமுடை ஏற்பட்டு வட்டி வீதம் 5%க்கு மேல் உயர்ந்தவுடனே இப்படிச் செய்யத் தொடங்கி விடுவார்கள். வாடிக்கையாளர் இத்தகைய வங்கி உண்டியல்களை மகிழ்வுடன் பெற்றுக் கொண்டார்; ஏனென்றால் ஜோன்ஸ், லாய்டு மற்றும் கம்பெனியாரிடமிருந்து வரும் உண்டியல்களைக் கழிவு செய்து காசாக்குவது அவரது சொந்த உண்டியல்களைக் கழிவு செய்து காசாக்கிக் கொள்வதை விட எளிதாய் இருந்தது; மேலும் அவை இருபது முப்பது பேரிடம் கைமாறிச் செல்வதுண்டு *(மேலது, எண் 901-904, 905, 992.)*

இந்தக் கடன்-செலாவணி வடிவங்களெல்லாம் வர வேண்டிய கொடுப்புகளுக்கான பாத்தியதையை மாற்றிக் கொடுக்கத் தக்கவை ஆக்குவதற்கு பயன்படுகின்றன. *'கடன்-செலவாணி எத்தனையோ-உருவெடுக்கலாம், என்ன உருவெடுத்தாலும் அது சில சமயம் பணப் பணிகளை ஆற்ற வேண்டி வரும். வங்கி-நோட்டாகவோ மாற்று உண்டியலாகவோ வங்கிக் காசோலையாகவோ உருவெடுக்கலாம், ஆனால் நிகழ்முறையானது அடிப்படைக்கூறுகள் அனைத்திலும் ஒன்றேதான், விளைவும் ஒன்றேதான்.' ஃபுல்லர்ட்டன், செலாவணிகளின் முறைப்பாடு குறித்து 2ஆம் பதிப்பு, 1845,*

பக்கம் 38, - 'வங்கி-நோட்டுகள் கடன்-செலாவணியின் சில்லறைக் காசுகளாகும்' (பக்கம் 51)

ஜே. டபிள்யூ. ஜில்பார்ட் எழுதிய வங்கித் தொழிலின் வரலாறும் கோட்பாடுகளும், லண்டன், 1834 என்ற நூலிலிருந்து: 'வங்கியின் வர்த்தக மூலதனத்தை முதலீடாகிய மூலதனம் என்றும், கடன் வாங்கிய வங்கி-மூலதனம் என்றும் இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்' (பக்கம் 117). 'வங்கி-மூலதனம் அல்லது கடன் வாங்கிய மூலதனத்தை திரட்டுவதற்கு மூன்று வழிகள் உள்ளன. முதலாவது, வைப்புகள் பெறுதல்; இரண்டாவது, நோட்டு வெளியிடுதல்; மூன்றாவது, உண்டியல் எழுதிக் கொடுத்தல். ஒருவர் வட்டியில்லாமல் எனக்கு £100 கடன் கொடுக்கிறார், நான் வேறொருவருக்கு, இந்த £100ஐ நான்கு சதவீத வட்டிக்குக் கடன் கொடுக்கிறேன் என்றால், ஓராண்டு காலத்தில் இந்தக் கொடுக்கல் வாங்கலின் மூலம் £4 ஆதாயமடைகிறேன். மேலும் ஒருவர் நான் தரும் 'பணஞ்செலுத்துவதற்கான உறுதியை' வாங்கிப் போய் ('பணஞ்செலுத்த உறுதியளிக்கிறேன்' என்பதுதான் ஆங்கிலேய வங்கி-நோட்டுகளுக்கு வழக்கமான சூத்திரம்) 'ஆண்டு முடிவில் என்னிடம் திருப்பிக் கொண்டு வந்து, அதற்காக எனக்கு நான்கு சதவீத வட்டி செலுத்துவாரானால், நான் அவருக்கு 100 சவரன் கடன் கொடுத்திருந்தால் என்ன நடக்குமோ அதுவே நடக்கும்; அதாவது இந்தக் கொடுக்கல்-வாங்கலின் மூலம் நான் £4 ஆதாயமடைவேன்; மேலும் கிராமப்புறத்திலிருந்து ஒருவர் எனக்கு £100 கொண்டு வந்து கொடுத்து இருபத்தொரு நாள் கழித்து அதே தொகையை லண்டனில் இருக்கும் ஒருவரிடம் நான் செலுத்திவிட வேண்டும் என்று நிபந்தனை விதிப்பாரானால், இந்த இருபத்தொரு நாட்களில் அந்தப் பணத்தைக் கொண்டு என்னால் சம்பாதிக்க முடிகிற வட்டியே நான் பெறும் இலாபமாய் இருக்கும். வங்கித் தொழில் என்னென்ன காரியங்கள் செய்கிறது என்பதும், வைப்புகள் நோட்டுகள் உண்டியல்கள் இவற்றைக் கொண்டு எப்படி வங்கி-மூலதனம் உருவாக்கப்படுகிறது என்பதும் இங்கு நன்றாகவே சித்திரிக்கப்படுகிறது' (பக்கம் 117). 'வங்கியாளரின் இலாபமானது, பொதுவாகச் சொன்னால், அவரது வங்கி-மூலதனம் அல்லது கடன் வாங்கிய மூலதனத்தின் அளவுக்கேற்ப அமைகிறது....வங்கியின் உண்மை இலாபத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால், முதலீடு செய்யப்படும் மூலதனத்தின் மீதான வட்டியை மொத்த இலாபத்திலிருந்து கழிக்க வேண்டும்; எஞ்சுவதே வங்கி இலாபமாகும்' (பக்கம் 118). 'வங்கியாளர்கள் பிறரது பணத்தைக் கொண்டுதான் தமது வாடிக்கையாளர்களுக்கு முன்வீடுகள்

*வழங்குகிறார்கள்' (பக்கம் 146).* 'நோட்டு வெளியிடாத வங்கியாளர்கள் தாம் உண்டியல்களை கழிவு செய்வதன் மூலம் வங்கி-மூலதனத்தை உருவாக்குகிறவர்கள். அவர்கள் தமது கழிவுகளை தமது வைப்புகளின் பெருக்கத்துக்கு சேவகம் புரியச் செய்கிறார்கள். லண்டன் வங்கியாளர்கள் தம்மிடம் வைப்புக் கணக்கு வைத்துள்ள நிறுவனங்களைத் தவிர வேறு எவருக்கும் உண்டியற் கழிவு செய்துதர மாட்டார்கள்' (பக்கம் 119). 'உண்டியல்களை கழிவு செய்யப்பெற்றுள்ள, முழுத்தொகைக்கும் வட்டிசெலுத்தியுள்ள ஒரு கட்சியானது அந்தத் தொகையில் ஒரு பகுதியை வட்டியில்லாமல் வங்கியாளரின் கையில் விட்டு வைத்தாக வேண்டும். இவ்வழியின் வங்கியாளர் உள்ளபடியே முன்னீடு செய்யப்படும் பணத்தின் மீது நடப்பு வட்டி வீதத்துக்கும் கூடுதலாய் அடையப் பெற்று, தம்கையில் விட்டு வைக்கப்படும் நிலுவையின் அளவுக்கு வங்கி-மூலதனம் திரட்டிக் கொள்கிறார்' (பக்கம் 119-20). சேமநிதிகள், வைப்புகள், காசோலைகள் இவற்றில் சிக்கனம் செய்தல்: 'வைப்பு வங்கிகளானவை சுற்றோட்ட ஊடகப் பயன்பாட்டை சிக்கனம் செய்யப் பயன்படுகின்றன. உடைமை உரிமைகளை கைம்மாற்றம் செய்யும் கோட்பாட்டின் அடிப்படையில் இது நடைபெறுகிறது ... இப்படியாகத்தான் வைப்பு வங்கிகள் ... சிறுபணத்தொகையைக் கொண்டு பெருமளவில் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து வைக்க முடிகிறது. இவ்விதம் விடுவிக்கப்படும் பணத்தை வங்கியாளர் உண்டியற் கழிவு செய்வதன் மூலமோ வேறு வழியிலோ தமது வாடிக்கையாளர்களுக்கு முன்னீடுகள் வழங்க பயன்படுத்திக் கொள்கிறார். ஆகவே கைம்மாற்றக் கோட்பாட்டினால் வைப்பு அமைப்பு இன்னும் அதிக செய்திறன் உடையதாகிறது...' (பக்கம் 123). 'ஒருவருடன் ஒருவர் கொடுக்கல் வாங்கல் செய்யும் இரு தரப்பினர் ஒரே வங்கியாளரிடம் கணக்கு வைத்துக் கொண்டாலும், வெவ்வேறு வங்கியாளரிடம் கணக்கு வைத்துக் கொண்டாலும், இரண்டும் ஒன்றுதான்; ஏனென்றால் வங்கியாளர்கள் அவர்களது காசோலைகளை தீர்வகத்தில் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை செய்து கொள்கின்றனர்....வைப்பு அமைப்பானது இவ்விதம் கை மாற்றங்களைக் கொண்டு எந்த அளவுக்கு கொண்டு செல்லப்படலாம் என்றால், உலோகச் செலாவணியின் பயன்பாட்டை அடியோடு ஒழித்துவிடலாம்; ஒவ்வொருவரும் வங்கியில் வைப்புக் கணக்கு வைத்துக் கொண்டு தாம் கொடுக்க வேண்டியதையெல்லாம் காசோலை வடிவிலேயே கொடுப்பாரானால், பணத்தை ஒழித்து விடலாம்; காசோலைகள் மட்டுமே சுற்றோட்ட ஊடகம் என்றாகிவிடும். ஆனால் இந்நிலைமை ஏற்படும்போது

வங்கியாளர் கையில் பணம் இருப்பதாக கொள்ள வேண்டும். இல்லையேல் காசோலைகளுக்கு மதிப்பே இருக்காது' (பக்கம் 124). வட்டாரக் கொடுக்கல் வாங்கல்கள் வங்கிகளின் கையில் மையப்படுமாறு பின்வரும் வழிகளில் செய்யப்படுகிறது: (1) கிளை வங்கிகளின் மூலம் இது செய்யப்படுகிறது. கிராமப்புறவங்கிகள் தத்தமது வட்டத்தைச் சேர்ந்த சிற்றூர்களிலும், லண்டன் வங்கிகள் மாநகரின் வெவ்வேறு வட்டங்களிலும் கிளை நிறுவனங்களை வைத்துள்ளன. (2) முகமைகளின் மூலமாகவும் இது செய்யப்படுகிறது. 'கிராமப்புற, வங்கியாளர் ஒவ்வொருவரும் தமது நோட்டுகள் அல்லது உண்டியல்களுக்கு பணம் செலுத்துவதற்காக லண்டனில் ஒரு முகவரை அமர்த்திக் கொள்கிறார்; ... லண்டனில் வசிப்பவர்கள் கிராமப்புறத்தில் வசிப்பவர்களின் பயன்பாட்டுக்காக ஒப்படைக்கக் கூடிய தொகைகள் வரப்பெறுவதற்கும் இந்த முகவரைப் பயன்படுத்திக் கொள்கிறார்' (பக்கம் 127). வங்கியாளர் ஒவ்வொருவரும் ஏனையோரின் நோட்டுகளை ஏற்றுக்கொள்கிறார், ஆனால் அவற்றை மறு வெளியீடு செய்வதில்லை. பெருநகரங்கள் யாவற்றிலும் அவர்கள் வாரத்துக்கு ஒரிரு முறை ஓரிடத்தில் கூடி, தமது நோட்டுகளை மாற்றிக் கொள்கிறார்கள். நிலுவையானது லண்டன் பேரிலான பணவிடையைக் கொண்டு செலுத்தப்படுகிறது (பக்கம் 134). 'வங்கித் தொழிலின் குறிக்கோள் வாணிபத்துக்கு வசதிகள் செய்து கொடுப்பதாகும். வாணிபத்துக்கு வசதிகள் செய்து கொடுப்பது எதுவானாலும் ஊக வாணிபத்துக்கும் வசதிகள் செய்து கொடுக்கிறது. வாணிபமும் ஊக வாணிபமும் சில சந்தர்ப்பங்களில் ஒன்றையொன்று நெருக்கமாய்ச் சார்ந்துள்ளன. சரியாக எந்தப் புள்ளியில்தான் வாணிபம் முற்றுப்பெற்று ஊக வாணிபம் ஆரம்பமாகிறது என்பதைச் சொல்வது முடியாத காரியம் ... எங்கெல்லாம் வங்கிகள் உண்டோ அங்கெல்லாம் மூலதனம் எளிதில் கிடைக்கிறது, குறைந்த வட்டிக்கும் கிடைக்கிறது பெறப்படுகிறது. மூலதனம் மலிவாய் இருப்பது ஊகவாணிபத்துக்கு வசதிகள் செய்து கொடுக்கிறது; இறைச்சியும் மதுபானமும் மலிவாய் இருப்பது எப்படி பெருந்தீனி கொள்வதற்கும் குடிப்பழக்கத்துக்கும் வசதிகள் செய்து கொடுக்கிறதோ அதே போலத்தான் இதுவும்' (பக்கம் 137, 138). 'சுற்றோட்ட வங்கிகள் எப்போதுமே சொந்தமாய் நோட்டு வெளியிடுவதால், அவற்றின் உண்டியற்கழிவு அலுவல் பிரத்தியேகமாய் இவ்வகை மூலதனத்தைக் கொண்டே நடைபெறுவது போல் தெரியும். ஆனால் அது அப்படி நடைபெறவில்லை. வங்கியாளர் தாம் கழிவு செய்து கொடுக்கும் எல்லா உண்டியல்களுக்கும் சொந்தமாய் நோட்டு வெளியிட்ட

*போதிலும், அவர்வசம் இருக்கும் உண்டியல்களில் பத்தில் ஒன்பது பங்களவை உண்மை மூலதனத்தைக் குறிப்பது சாத்தியமே, எப்படியென்றால் முதலில் வங்கியாளரின் நோட்டுகள் உண்டியலுக்காக தரப்பட்ட போதிலும், உண்டியல் தீர்வுக்குரியதாகும் வரை இந்த நோட்டுகள் சுற்றோட்டத்தில் தங்காமல் போகலாம். உண்டியலின் முதிர்வுக்கு இன்னும் மூன்று மாதத் தவணை இருக்கையில் வங்கி நோட்டுகள் மூன்றே நாட்களில் திரும்ப வேண்டியவையாக இருக்கலாம் (பக்கம்172). 'ரொக்கக் கடன் கணக்கிலிருந்து அதிகப்பற்று பெறுதல் மாமூலாய் நடைபெறுகிறதே; உண்மையில் இதற்காகவே ரொக்கக் கடன்கள் வழங்கப்படுகின்றன ...சொந்த பிணையத்தின் பேரில் மட்டுமல்லாமல் பொது நிதியங்கள் பிணையமாகக் கொண்டும் ரொக்கக் கடன்கள் வழங்கப்படுகின்றன' (பக்கம் 194, 195). வாணிபச் சரக்கை பிணையமாய்க் கொண்டு கடன் என்ற முறையில் முன்னீடு செய்யப்படும் மூலதனமானது கழிவு பெற்ற உண்டியலைப் பணமாக மாற்றிக் கொடுப்பதற்காக முன்னீடு செய்யப்பட்டால் ஏற்படுத்தக் கூடிய அதே விளைவுகளை ஏற்படுத்தும் ஒருவர் தமது வாணிகச் சரக்கைப் பிணையமாக்கி £ 100 கடன் வாங்கினால், இப்படிச் செய்வதும் அவர் தமது வாணிகச் சரக்கை £ 100 உண்டியல்களுக்கு விற்றுவிட்டு, வங்கியாளரிடம் அதனைக் கழிவு செய்து பெறுவதும் ஒன்றுதான். இவ்விதம் முன்னீடு பெறுவதன் மூலம், அவர் சந்தையில் நிலைமை மேம்படும் வரை தமது சரக்கை வைத்துக் கொண்டு காத்திருக்க முடிகிறது; இம்முன்னீடு மட்டும் அவசர நோக்கங்களுக்கு பணம் திரட்டுவதற்காக அவர் ஒரு தியாகத்தை ஏற்க வேண்டி இருக்குமல்லவா? அதை இப்போது தவிர்க்க முடிகிறது' (பக்கம் 180 - 181).*

செலாவணித் தத்துவம் பற்றிய திறனாய்வு, பக்கம் 62-63; *'கேள்விக்கு இடமில்லாத உண்மை என்னவென்றால், நீங்கள் A இடம் இன்று வைப்பு வைக்கிற £1000 ஆனது நாளை மறுவெளியீடு செய்யப்பட்டு B இடம் வைப்பாகிவிடலாம். நாளை மறுநாள் B இடமிருந்து மறுவெளியீடு செய்யப்பட்டுC இடம் வைப்பாகி விடலாம்; ... இவ்வாறே முடிவில்லாமல் தொடர்ந்து நடைபெறலாம். இதே £1000 பணமானது இவ்விதம் தொடர்ச்சியாக அடுத்தடுத்து கைமாற்றம் செய்யப்பட்டு அறுதியால் வரையற்ற வைப்புகளின் தொகையாக பல்கிப் பெருகலாம். ஆகவே ஐக்கிய முடியரசில் வைப்புகளாக இருப்பவை யாவற்றிலும் பத்தில் ஒன்பது பங்கானவை வங்கியாளர்களின் ஏடுகளில் பதியப்பட்டிருப்பது தவிர வேறு*

*எவ்வகையிலும் இல்லாதவையாகவே இருக்கலாம்; இந்த வங்கியாளர்களே அந்தந்த வைப்புகளுக்கும் பொறுப்பாளர்கள் ... எடுத்துக்காட்டாக, ஸ்காட்லாந்தில் செலாவணி (அதுவும் பெரும்பாலும் காகிதப்பணம் ) £3 மிலியனை; தாண்டியதே இல்லை; வங்கியில் வைப்புகள் £27 மிலியனாக இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது ... வங்கிகள் திடுதிப்பென்று அவசர நெருக்குதலுக்கு உள்ளாகாவிட்டால், ஒரே £1000 ஆனது திரும்பத் திரும்ப பயணம் செய்து வரம்பற்ற ஒரு தொகையை எளிதில் தீர்க்கலாம். நீங்கள் ஒரு தொழிற்காரரிடம் பட்ட கடனை; தீர்ப்பதற்கு இன்று பயன்படும் அதே £1000 அவர் வணிகரிடம் பட்ட கடனைத் தீர்ப்பதற்கு நாளை பயன்படலாம், வணிகர் வங்கியிடம் பட்ட கடனைத் தீர்ப்பதற்கு நாளை மறுநாள் பயன்படலாம்; இவ்வாறே முடிவின்றி தொடர்ந்து பயன்பட்டு வரலாம். ஆக, ஒரே £1000 ஆனது கைக்கு கையும் வங்கிக்கு வங்கியும் மாறிச்சென்று வைப்புகளாய் எண்ணிப்பார்க்கக்கூடிய எந்தத் தொகையையும் தீர்க்கலாம்.'*

*[வாணிபத்துக்கு வசதிகள் செய்து கொடுப்பது எதுவானாலும் ஊக வாணிபத்துக்கும் வசதிகள் செய்து கொடுக்கிறது. வாணிபமும் ஊக வாணிபமும் சில சந்தர்ப்பங்களில் ஒன்றையொன்று நெருக்கமாய்ச் சார்ந்துள்ளன; சரியாக எந்தப் புள்ளியில் வாணிபம் முற்றுப்பெற்று ஊக வாணிபம் ஆரம்பமாகிறது என்பதைச் சொல்வது முடியாத காரியம்' - 1834-ம் ஆண்டிலேயே இதை ஜில்பார்ட் அறிந்திருந்தார் என்று பார்த்தோம். விற்கப்படாத சரக்குகள் மீது முன்னீடுகள் பெறுவது எவ்வளவுக்கு எவ்வளவு எளிதாய் இருக்கிறதோ இத்தகைய முன்னீடுகள் அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் எடுக்கப்படுகின்றன; சரக்குகள் மீது பணமுன்னீடுகள் பெற வேண்டும் என்பதற்காகவே சரக்குகள் உற்பத்தி செய்யவோ ஏற்கெனவே உற்பத்தியான சரக்குகளை தொலைதூரச் சந்தைகளில் தள்ளிவிடவோ அவ்வளவுக்கு அவ்வளவு ஆசை வருகிறது. ஒரு நாட்டின் தொழில் - வர்த்தக உலகம் முழுவதும் இத்தகைய மோசடியால் எந்த அளவுக்கு ஆட்டிப் படைக்கப்படலாம். என்பதற்கும், இதனால் முடிவில் என்ன நேரிடுகிறது என்பதற்கும் 1845 - 47 காலத்திய ஆங்கிலேய தொழில் - வர்த்தகத்தின் வரலாறு தக்க எடுத்துக்காட்டாகும். கடன் - செலாவணியால் என்ன சாதிக்க முடியும் என்பதை இதிலிருந்து நாம் அறிய முடிகிறது. பின்வரும் எடுத்துக்காட்டுகளை பார்ப்பதற்கு முன்னால், பீடிகையாய் ஒரு சிலவற்றைக் குறிப்பிடுவோம்.*

1837 இலிருந்து அநேகமாய் இடையறாது ஆங்கிலேய தொழில் துறையை பீடித்திருந்த நெருக்குதல் 1842 முடிவில் அகலத் தொடங்கியது. அடுத்து வந்த ஈராண்டு காலத்தில் ஆங்கிலேய செய்பொருட்களுக்கு அயல்நாட்டு வேண்டல் இன்னும்கூட அதிகமாயிற்று; 1845, 1846 ஆண்டுகள் மிகப்பெரும் செழுமைக் காலமாய் அமைந்தன. 1843இல் அபினிப் போர் ஆங்கிலேய வர்த்தகத்தின் படையெடுப்புக்கு சீனத்தைத் திறந்துவிட்டது. புதிய சந்தையானது விரிவாகிக் கொண்டிருந்த தொழில்துறை, முக்கியமாய் பருத்தித் தொழில்துறை இயலும் விரிவாவதற்கு புதிதாய் ஊக்கம் கொடுத்தது. 'எப்படி நாம் மிகையாக உற்பத்தி செய்து விட முடியும்? 300 மிலியன் மக்களுக்கு நாம் உடை கொடுத்தாக வேண்டுமே' என்று மான்செஸ்டர் ஆலையதிபர் ஒருவர் அந்த நேரத்தில் என்னிடம் கூறினார்.' ஆனால் புதிதாய்ப் பிறந்த ஆலைக்கட்டடங்கள், நீராவி எஞ்சின்கள், நூற்புக்கும் நெசவுக்குமான யந்திரங்கள் இவையெல்லாம் லங்காஷயரிலிருந்து வந்து குவிந்த உபரி - மதிப்பை உட்கிரகிக்கப் போதுமானவையாய் இருக்கவில்லை. உற்பத்தியைப் பெருக்குவதில் காட்டப்பெற்ற அதே ஆர்வத்தோடும் துடிப்போடும் யாவரும் இருப்புப்பாதை நிர்மாணத்தில் ஈடுபடலாயினர். ஆலை அதிபர்களுக்கும் வணிகர்களுக்கும் ஊகவாணிகத்திலிருந்த அடங்காத் தாகம் தணிய இத்துறை முதலாவது வழியாயிற்று. 1844 ஆம் ஆண்டு கோடையிலேயே இது ஆரம்பமாகிவிட்டது. நடப்பது நடக்கட்டும் பார்க்கலாம் என்று கண்ணை மூடிக்கொண்டு பங்குகளுக்கு ஒப்புறுதி அளிக்கப்பட்டது (under written). அதாவது ஆரம்பத் தொகையைக் கட்ட கையில் காசு இருந்த முழு அளவுக்கு தயங்காமல் ஒப்புறுதி அளிக்கப்பட்டது. எஞ்சிய தொகையைக்கட்ட வேண்டிய காலம் வந்தபின் - கேள்வி 1059, வா.இ.1848/57 தருகிற விவரத்தின்படி, 1846 - 47இல் இருப்புப்பாதை முதலீடுகளின் மொத்தத் தொகை £75 மிலியன் - கடன் ஏற்பாடுகளில் இறங்குவதைத் தவிர வேறு இல்லாமற் போயிற்று. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தொழில் முயற்சியின் மூல நிறுவனங்களும் திண்டாட்டத்தில் சிக்கித் தவிக்க நேர்ந்தது.

பெரும்பாலும் இந்த மூலநிறுவனங்களின் தலையில் இதற்கு முன்பே அதிகப்படியான சுமை ஏற்றப்பட்டிருந்தது. உயர்ந்த இலாபம் கிடைக்கும் வாய்ப்பு சுண்டியிழுத்தபடியால், ரொக்கமாய் மாற்றக்கூடிய செல்வாதாரங்கள் எந்த அளவுக்குத் தயாராய் உள்ளன என்பது குறித்துக் கவலைப்படாமல் மிகவும் விரிந்த அளவிலான செயல்பாடுகள்

மேற்கொள்ளப்பட்டன. எளிதில் பெறக்கூடியதாகவும் மலிவான தாகவும் கடன் - செலாவணி இருக்கவே இருந்தது. வங்கிக்கழிவு வீதம் குறைவாய் இருந்தது: 1844இல் 1¾ முதல் 2¾%ஆகவும், 1845 அக்டோபர் வரை 3%க்குக் குறைவாகவும் இருந்தது. சிறிது காலத்துக்கு (1846 பிப்ரவரி) 5%ஆக உயர்ந்து, 1846 டிசம்பரில் 3¼%ஆக குறைந்தது. இங்கிலாந்து வங்கியின் நிலவறைகளில் முன் எப்போதும் கேள்விப்பட்டிராத அளவுக்கு தங்க இருப்பு குவிந்து கிடந்தது. உள்நாட்டு மதிப்பீட்டு விவரங்கள் யாவும் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்திருந்தன. அப்படியானால் இந்த அருமையான வாய்ப்பை ஏன் நழுவ விடவேண்டும்? ஏன் இயன்றதனைத்தையும் செய்து பார்க்கக் கூடாது? ஆங்கிலேய பண்டங்களுக்காக ஏங்கித் தவிக்கும் அயல்நாட்டுச் சந்தைகளுக்கு உற்பத்தி செய்ய முடிந்ததனைத்தையும் ஏன் அனுப்பி வைக்கக் கூடாது? தூரக் கிழக்கில் நூலும் துணிகளும் விற்பதிலிருந்தும் இதற்குப் பிரதியாகக் கிடைக்கும் விற்பனைச் சரக்கை இங்கிலாந்தில் விற்பதிலிருந்தும் வரும் இரட்டை ஆதாயத்தை ஏன் ஆலையதிபரே அடையக் கூடாது?

முன்கொடுப்புகளுக்கு ஈடாக இந்தியாவுக்கும் சீனத்துக்கும் பெருந்திரளான சரக்குத் தொகுதிகளை அனுப்பி வைக்கும் ஏற்பாடு இப்படித்தான் தலையெடுத்தது. வெகுவிரைவில் இது முன்னீடுகள் பெறுவதற்கென்றே சரக்குத் தொகுதிகளை அனுப்பி வைக்கும் ஏற்பாடாக வளர்ந்தது - அடுத்து வரும் குறிப்புகளில் இதுபற்றி இன்னும் விவரமாய் எடுத்துரைக்கப்படுகிறது. இந்த ஏற்பாடு தவிர்க்க முடியாதவாறு சந்தைகளில் சரக்குகள் பெருக்கெடுப்பதற்கும் தகர்வுக்கும் (crash) வழிகோலியது.

1846இல் விளைச்சல் பொய்த்ததால் தகர்வு ஏற்பட்டது. இங்கிலாந்துக்கும் முக்கியமாய் அயர்லாந்துக்கும் உணவுப் பொருட்களை குறிப்பாக சோளம், உருளைக் கிழங்கு ஆகியவற்றை பெரும் பெரும் அளவில் இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் எழுந்தது. ஆனால் இவற்றை வழங்கிய நாடுகளுக்கு மிகவும் வரம்பிற்கு உட்பட்ட அளவுக்கு மட்டுமே ஆங்கிலேயத் தொழில்துறையில் உற்பத்திப் பொருட்களை விலைகளாகத் தர முடிந்தது. உயர்நிலை உலோகங்களை கொடுக்க வேண்டியதாயிற்று. குறைந்தது ஒன்பது மிலியன் மதிப்புள்ள தங்கம் அயல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டது. இந்தத் தொகையில் ஏழரை மில்லியனுக்கு குறையாமல் இங்கிலாந்து

வங்கியின் கருவூலத்திலிருந்து வந்தது. பணச்சந்தையில் இவ்வங்கி விருப்பம்போல் செயல்படும் சுதந்திரம் இதனால் கணிசமாய் பாதிப்புற்றது. இவ்வாறு ஏனைய வங்கிகளும்-இவற்றின் சேம வைப்புகள் இங்கிலாந்து வங்கியில் போட்டு ஊக்கப்பட்டு, நடைமுறையில் அவ்வங்கியின் சேம வைப்புகளைப் போலவே கருதப்பட்டன - பணக்கடன் வசதியை குறுக்கிக் கொள்ள வேண்டிய தாயிற்று. கொடுப்புகள் துரிதமாகவும் எளிதாகவும் முடிப்பாய்வது முதலில் இங்குமங்குமாகவும் பிறகு பரவலாகவும் தடைப்பட்டது. 1847 ஜனவரியிலும் கூட 3 முதல் 3½% ஆக இருந்த வங்கிக் கழிவு வீதம் ஏப்ரலில் 7%ஆக உயர்ந்தது; அந்த மாதத்தில்தான் முதன் முதலாய் பணப்பீதி மூண்டது. கோடையில் நிலைமை சற்றே சீராயிற்று (6½%, 6%): ஆனால் புது மகசூலும் பொய்த்த போது மீண்டும் பீதி மூண்டு இன்னுங்கூட மூர்க்கமாய்ப் பரவியது. அதிகாரப்பூர்வ குறைந்தபட்ச வங்கிக் கழிவு அக்டோபரில் 7%ஆகவும் நவம்பரில் 10% ஆகவும் உயர்ந்தது; அதாவது பெருந்திரளான மாற்று உண்டியல்களை அக்கிரமமான வட்டி வீதங்களில்தான் கழிவு செய்து காசாக்க முடிந்தது, அல்லது இனி காசாக்கவே முடியாது என்ற நிலை ஏற்பட்டது. பரவலாய் கொடுப்புகள் நின்று போனதால் முன்னணிப் பங்கு நிறுவனங்கள் சிலவும் மிகச்சில இடைத்தர நிறுவனங்களும் சிறிய நிறுவனங்களும் நொடித்துப் போக நேரிட்டது. சாமார்த்தியமானதொரு சட்டமாகிய 1844-ஆம் வருட வங்கிச் சட்டம் விதித்த தடைவரம்புகளால் இங்கிலாந்து வங்கிக்கே ஆபத்து ஏற்பட்டிருந்தது. அரசானது பரவலாய் எழுந்த கூக்குரலுக்கு பணிந்து வங்கிச் சட்டத்தை அக்டோபர் 25இல் இடைநிறுத்தம் செய்தது; வங்கியைப் பிணைத்த அபத்தமான சட்டத் தளைகள் இவ்விதம் அகன்றன. அதனால் இப்போது வங்கி நோட்டுகளை தட்டுத்தடை இல்லாமல் சுற்றோட்டத்துள் செலுத்த முடிந்தது. இந்த வங்கி நோட்டுகளின் செலாவணி மதிப்பு நடைமுறையில் நாட்டின் செலாவணி மதிப்பினது உத்திரவாதத்தைப் பெற்றிருந்தாலும் இவ்விதம் சற்றும் ஊறுபடாததாய் இருந்தாலும் பணமுடை உடனடியாகவும் தீர்மானகரமாகவும் தணிக்கல் பெற்றது. என்றாலும், சிக்கிக் கொண்ட பெரிய சிறிய பங்கு நிறுமங்கள் பலவும் இயல்பாகவே நொடித்துப் போயின; ஆனால் நெருக்கடியின் உச்ச நிலையை கடந்து வந்தாயிற்று; வங்கிக் கழிவு டிசம்பரில் 5%ஆகக் குறைந்தது; 1848ஆம் ஆண்டில் தொழில் - வர்த்தக விறுவிறுப்பின் புதிய அலைவீச்சு தொடங்கியது; இது 1849இல் கண்டத்தில் புரட்சிகர இயக்கங்களை முனை மழுங்கச் செய்தது, முன்னெப்போதும் காணாத

தொழில்துறைச் செழுமையை ஐம்பதாம் ஆண்டுகளில் தொடக்கி வைத்தது; ஆனால் மீண்டும் 1857ஆம் வருடத்திய தகர்வில் போய் முடிந்தது.—பி. எங்கெல்ஸ்.]

*1. 1848இல் பிரபுக்கள் சபை வெளியிட்ட ஆவணம் ஒன்று 1847ஆம் வருட நெருக்கடியின் போது அரசு முறிகளும் பத்திரங்களும் மிகப் பெரும் மதிப்பிறக்கத்துக்கு உள்ளானதைப் பற்றிக் சொல்கிறது. இந்த ஆவணத்தில் கண்டுள்ளபடி, 1847 அக்டோபர் 23 தேசிய மதிப்பிறக்கமானது அதே ஆண்டு பிப்ரவரியில் இருந்த நிலவரத்தோடு ஒப்பிடுகையில் பின்வருமாறு அமைந்தது:*

| | |
|---|---|
| ஆங்கிலேய அரசுப் பத்திரங்களில்............ | *£93,824,217* |
| கப்பல்துறை மற்றும் கால்வாய்ப் பங்குகளில்.......... | *£1,358,288* |
| இருப்புப் பாதை பங்குகளில்.................. | *£19,575,820* |
| மொத்தம்............... | **£114,762,325** |

*2. கிழக்கிந்திய வர்த்தக மோசடி தொடர்பாக - முன்போல் சரக்கு வாங்குவதற்காக பணவிடை எடுப்பதற்குப் பதில் பணமாக மாற்றத்தக்க கழிவுப் பணவிடைகள் கொடுப்பதற்காகவே சரக்குகள் வாங்கப்பட்ட இம்மோசடி தொடர்பாக - 1847 நவம்பர் 24 தேதிய 'மான்செஸ்டர் கார்டியன்' கூறுவதாவது:*

*லண்டனில் A என்பவர் சரக்கு வாங்கும்படி B என்பவரிடம் சொல்கிறார். மான்செஸ்டரில் ஆலையதிபர் C என்பவரிடம் சரக்கு வாங்கி கிழக்கு இந்தியாவிலுள்ள D என்பவருக்குக் கப்பலில் அனுப்பச் சொல்கிறார். D க்கு B தர வேண்டிய தொகையாக வரைந்த ஆறு மாதப் பணவிடையை C இடம் கொடுத்து B இச்சரக்கை வாங்குகிறார். B க்கு A தர வேண்டிய தொகையாக வரைந்த ஆறு மாதப் பணவிடை மூலம் B தனக்கு பிணைய ஈடு செய்து கொள்கிறார். கப்பலில் சரக்கு ஏற்றப்பட்டதும் கிடைக்கும் கப்பல் இரசீதை D க்கு அனுப்பி A, அப்போது தனக்கு D தர வேண்டிய தொகையாக வரைந்த ஆறு மாதப் பணவிடையைப் பெறுகிறார். சரக்கிற்கு உள்ளபடி பணம் தரப்படுவதற்கு மாதக் கணக்கில் முன்னதாகவே உண்டியல் பணவிடை வடிவில் ஆலையதிபருக்கும் ஒப்பமிடும் ஏனையவருக்கும் தொகை கிடைத்துவிடுகிறது. சாதாரணமாக இம்மாதிரியான உண்டியல்கள் தவணை முதிர்வுக் காலத்தை அடைந்ததும், தொலைநாட்டு வாணிபமாதலால் திரும்பிவர அவகாசம் தந்தாக வேண்டுமென்று போலி நியாயம் சொல்லிப் புதுப்பிக்கப்பட்டு விடுகின்றன. வருத்தத்துக்குரியது என்னவென்றால், இத்தகைய வர்த்தகத்தால் ஏற்படும் இழப்புகள், அதனைச் சுருங்கச்செய்வதற்குப் பதில், நேரடியாக அதன் பெருக்கத்துக்கே வழிகோலின. ஆட்களின் செல்வம்*

எந்த அளவுக்கு குன்றியதோ, கடந்தகால சாகசங்களில் தாங்கள் இழந்துவிட்ட மூலதனத்தைப் புதிய முன்னீடுகளைக் கொண்டு ஈடு செய்யும் பொருட்டு அவர்கள் கொள்முதல் செய்ய வேண்டிய தேவை அந்த அளவுக்கு அதிகரித்தது. இவ்விதம் கொள்முதல்கள் செய்வதானது வழங்கல் - வேண்டலுக்கு தொடர்புடைதாய் இல்லாமல், இடர்பாடுகளில் சிக்கித்தவிக்கும் நிறுவனத்தின் நிதியாக்கச் செயல்பாடுகளின் மிகமுக்கியப் பகுதியாயிற்று. ஆனால் இது நிலைமையின் ஒரு பக்கத்தை மட்டும் குறிப்பதாகும். உள்நாட்டில் விற்பனை பண்ட ஏற்றுமதி தொடர்பாக என்ன நடைபெற்றதோ, வெளிநாட்டில் விளைபொருளை கொள்முதல் செய்து கப்பலேற்றுவதிலும் அதுவே நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்தியாவில் தமது உண்டியல்களை காசாக்கிக் கொள்வதற்கு வேண்டிய கடன்-செலாவணியைப் பெற்றிருந்த நிறுவனங்கள் சர்க்கரை, அவுரி, பட்டு, அல்லது பருத்தி கொள்முதல் செய்தன - லண்டன் நிறுவனத்தின் பேரிலான பழைய பணவிடைகள் விரைவில் கெடு முடிந்து போகும் என்பதாலும் அவற்றுக்கு வழிவகை செய்தாக வேண்டும் என்பதாலும்தானே தவிர லண்டனில் இருந்து கடைசியாக வந்த தரைமார்க்க அஞ்சலில் அறிவுறுத்தப்பட்ட விலைகள் இந்தியாவில் நடப்பிலிருந்த விலைகள் மீது இலாபம் கிடைக்கும் என்னும் நம்பிக்கை ஊட்டியதால் அல்ல. எவ்வளவு கலபமான வழி இது. குறிப்பிட்ட அளவு சர்க்கரை கொள்முதல் செய்து கப்பலேற்றுவது, 10 மாத காலத் தேதிக் கெடுவில் லண்டன் நிறுவனத்தின் பேரிலான உண்டியல்களாக அதற்கு விலை கொடுப்பது, தரைமார்க்க அஞ்சலில் கப்பற்சரக்கு ஆவணங்களை அனுப்பி வைப்பது - இதுதான் அந்த வழி. இரண்டு மாதம் ஆவதற்குள்ளேயே, சரக்கு நடுக்கடலில் இருக்கும் போதே அல்லது ஹூக்ளி ஆற்று முகத்தை கடப்பதற்குள்ளேயே, அச்சரக்குகள் லொம்பார்டு தெருவில் அடகு வைக்கப்பட்டன - அச்சரக்குகளுக்கு ஈடான பணவிடைகள் தீர்வுக்குரியவை ஆவதற்கு எட்டுமாதம் முன்னதாகவே நிதியானது இவ்விதம் லண்டன் நிறுவனத்தின் வசமாயிற்று. கப்பற்சரக்கு விலைப்பட்டிகள் மீதும் கப்பல்துறை ஆணைகள் மீதும் முன்னீடு செய்வதற்கும், மின்சிங் சந்திலிருக்கும் பிரபல நிறுவனங்களின் பேரில் இந்தியாவில் வாணிகம் செய்யும் நிறுவனங்கள் எடுக்கும் உண்டியல்களை வரம்பின்றி கழிவு செய்து கொடுப்பதற்கும் அமைப்புக் கடன் வடிவிலான பணம் உண்டியல் தரகர்களிடம் அதிகமாய் இருந்து வந்த வரை இதெல்லாம் இடைஞ்சலோ இடர்பாடோ இல்லாமல் தொடர்ந்து நடைபெற்றது'

(மோசடித்தனமான இந்த நடைமுறை இந்தியாவுக்குச் சென்றவையும் அங்கிருந்து வந்தவையுமான சரக்குகள் பாய்மரக் கப்பல்களில் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிச் செல்ல வேண்டியிருந்தவரை வழக்கில் இருந்து வந்தது. ஆனால் சூயஸ் கால்வாய் வழியாக நீராவிக் கலங்களில் சரக்கு ஏற்றி அனுப்பப்படுவது தொடங்கியதிலிருந்தே பெயரளவு மூலதனம் அதன் அடிப்படையை நீண்ட கடற்பயணம் என்ற அடிப்படையை - பறிகொடுத்துவிட்டது. இந்திய சந்தை ஆங்கிலேய தொழிலதிபரும் ஆங்கிலேய சந்தை பற்றி இந்திய வணிகரும் அறிந்து

கொள்வதற்கு தந்தித் தொடர்பு பயன்படத் தொடங்கிய அதே நாளில் இந்த வழிமுறை சற்றும் நடைமுறைக்கு ஒவ்வாததாகிவிட்டது. - பி.எங்கெல்ஸ்.)

3. ஏற்கெனவே மேற்கோளாய் காட்டிய வாணிப இன்னல் பற்றிய அறிக்கை, 1847-48 என்பதிலிருந்து பின்வரும் பகுதி எடுத்துக் காட்டப்படுகிறது: '1847 ஏப்ரல் கடைசி வாரத்தில் இங்கிலாந்து வங்கியானது லிவர்பூர் ராயல் வங்கியிடம் தனது உண்டியற் கழிவு அலுவலை பாதியளவு குறைத்துக் கொள்ளப்போவதாக அறிவுறுத்தியது. இந்த அறிவிப்பு செயல்படுத்தப்பட்ட போது அலாதியான சிரமங்கள் ஏற்பட்டன. ஏனென்றால் லிவர்பூலுக்குச் செலுத்த வேண்டியவை சமீப காலத்தில் ரொக்கமாகச் செலுத்தப் பட்டதை விட உண்டியல்களாகச் செலுத்தப்பட்டதே மிக அதிகம்; பொதுவாகச் சொன்னால் வணிகர்கள் தமது ஏற்புகளுக்கு (acceptances) பணம் செலுத்துவதற்காக இங்கிலாந்து வங்கிக்கு பெரும்பாலும் ரொக்கமே கொண்டு வந்தார்கள். இவர்கள் சமீப காலத்தில் தமது பருத்திக்காகவும் ஏனைய விளைபொருளுக்காகவும் வரப்பெற்ற உண்டியல்களை மட்டுமே கொண்டு வர முடிந்தது; இடர்பாடுகள் பெருகப் பெருக இந்த நடைமுறையும் மிகத்துரிதமாய் வளர்ந்தது. வங்கியானது வணிகர்களுக்காக செலுத்த வேண்டிய ஏற்புகள் முக்கியமாய் அயல்நாடுகளிலிருந்து அவர்கள் பேரில் எடுக்கப்பட்ட ஏற்புகளாய் இருந்தன; தமது விளைபொருளுக்கு என்ன விலை பெற்றாலும் அந்த ஏற்புகளை நிறைவு செய்வது அவர்களுக்கு வழக்கமாகி விட்டது......வணிகர்கள் வழக்கமாய் கொண்டு வரும் ரொக்கத்துக்குப் பதிலாய்க் கொண்டு வந்த உண்டியல்கள்....பல்வேறு கெடுத் தேதிகள் உடையவையாகவும் பல்வேறு வகைப்பட்டவை யாகவும் இருந்தன. அவற்றில் கணிசமானவை மூன்று மாதகால கெடுத்தேதி கொண்ட வங்கியாளர் உண்டியல்களாய் இருந்தன. இவற்றில் பெரும் பகுதியானவை பருத்தி உண்டியல்களாய் இருந்தன. இந்த மாற்று உண்டியல்கள் வங்கியாளர் உண்டியல்களாய் இருக்கையில், லண்டன் வங்கியாளர்களாலும், நாம் குறிப்பிடக்கூடிய ஒவ்வொரு வர்த்தகத்திலும், பிரேசில், அமெரிக்கா, மேற்கிந்தியா ஆகியவற்றுடனான வர்த்தகத்தில் - வணிகர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன ... வணிகர்கள் ஒருவர் போல் ஒருவர் உண்டியல் எடுக்கவில்லை, ஆனால் வணிகர்களிடமிருந்து பண்டம் கொள்முதல் செய்த உட்பகுதியைச் சேர்ந்தவர்கள் லண்டன் வங்கியாளர்கள் பேரிலான உண்டியல்களையோ, லண்டனிலுள்ள பல்வேறு தரப்பினர் பேரிலான உண்டியல்களையோ வேறு யாரேனும் ஒருவர் பேரிலான உண்டியல்களையோ வணிகர்களுக்கு அனுப்பி வைத்தனர். இங்கிலாந்து வங்கியின் அறிவிப்பு அயல்நாட்டுப் பண்டங்களின் விற்பனையை ஈடாய்க் கொண்டு எடுக்கப்பட்ட உண்டியல்கள் தவணை முதிர்வு வரையறைகளை - இந்தக் காலவரைகள் மூன்று மாதத்திற்கு மேல் நீண்டு செல்வதும் உண்டு - குறையச் செய்தது' (பக்கம் 26, 27)

இங்கிலாந்தில் 1844 முதல் 1847 வரை செழுமை காலமாய் இருந்தது; இதற்கும் இரயில் போக்குவரத்துத் தொழிலான முதத்பெரும் மோசடிக்கும் தொடர்பு இருந்ததை மேலே விவரித்தோம். மேற்கூறிய அறிக்கையானது பொதுவாக தொழில் - வர்த்தகத்தின் மீது இந்த மோசடி ஏற்படுத்திய விளைவை பின்வருமாறு

குறிப்பிடுகிறது; 1847 ஏப்ரலில் 'அநேகமாய் எல்லா வணிக நிறுவனங்களுமே தமது வர்த்தக மூலதனத்தில் ஒரு பகுதியை எடுத்து இரயில் போக்குவரத்து தொழிலுக்குப் பயன்படுத்திக் கொண்டதன் மூலம் தமது வர்த்தகத் தொழிலை ஏறக்குறைய பட்டினி போட முற்பட்டன' (பக்கம் 42). 'தனிப்பட்டவர்களும் வங்கியாளர்களும் தீயணைப்பு நிலையத்தாரும் இரயில் போக்குவரத்து தொழிலிலான பங்குகள் மீது உயர்ந்த வட்டி வீதத்தில், உதாரணமாய் 8%இல் கடன் வாங்கினார்கள் (பக்கம் 66). 'வர்த்தக நிறுவனங்கள் இரயில் போக்குவரத்து தொழிலுக்கு இவ்வளவு பெருமளவில் கடன் வழங்கியதானது பத்திரங்களை கழிவு செய்வதன் மூலம் இந்நிறுவனங்கள் வங்கிகளை அதிகப்படியாகவே சார்ந்திருக்கத் தூண்டியது இவ்வழியில் அவை தமது வர்த்தக நடவடிக்கைகளைத் தொடர்ந்தன' (பக்கம் 67). (கேள்வி:) 'இரயில் போக்குவரத்து தொழிலின் பங்குக் கோரிக்கைகள்' (1847) 'ஏப்ரலிலும் அக்டோபரிலும்' (பணச் சந்தை மீதான) 'நெருக்குதலைத் தோற்றுவிப்பதில் மிகப்பெரும் விளைவை ஏற்படுத்தியதாகச் சொல்வீர்களா?'- (பதில்:) 'ஏப்ரலில் நெருக்குதலை தோற்றுவிப்பதில் அவை அநேகமாய் எவ்விளைவையும் ஏற்படுத்தவில்லை என்று சொல்வேன்; ஏப்ரல் வரை, அநேகமாய் கோடைவரை, இந்தப் பங்குக் கோரிக்கைகள் வங்கியாளர்களின் சக்தியைக் குறைப்பதற்கு பதில் சில அமிசங்களில் கூடுதலாக்கிவிட்டன என்று எனக்குத் தோன்றுகிறது; ஏனென்றால் பங்குக் கோரிக்கைகளைப் போல செலவீடு துரிதமாய் நடைபெற வில்லை; இதன் விளைவு என்னவென்றால், இரயில் போக்குவரத்துத் தொழிலுக்கான பணம் பெரும்பாலான வங்கிகளின் கையில் ஆண்டின் தொடக்கத்தில் ஏராளமாகவே இருந்தது.' வாணிப இன்னல் 1848 - 57 அறிக்கைகளில் வங்கியாளர்கள் தந்துள்ள ஏராளமான வாக்கு மூலங்களில் இது உறுதி செய்யப்படுகிறது. 'பைய பைய உருகிக் கரைந்த கோடையிலும், டிசம்பர் 31 இலும் அது மிகவும் குறைவாய் இருந்தது. அக்டோபரில் நெருக்குதலுக்கு காரணமாய் இருந்தவற்றில் ஒன்று வங்கியாளர்களின் கையிலிருந்த இரயில் போக்குவரத்து தொழிலுக்கான பணம் சிறிது சிறிதாய் குறைந்து போனதாகும். ஏப்ரல் 22க்கும் டிசம்பர் 31க்கும் இடையே எங்கள் கையிலிருந்த இரயில் போக்குவரத்துத் தொழிலின் நிலுவைகள் மூன்றில் ஒரு பங்கு குறைந்து போயின; இரயில் போக்குவரத்துத் தொழிலின் பங்குக் கோரிக்கைகளும் ... முடியரசெங்கிலும் இதற்கு காரணமாய் இருந்துள்ளன; இவை வங்கியாளர்களின் வைப்புகளை சிறிது சிறிதாய் வற்றச் செய்துள்ளன' (பக்கம் 43, 44). -சாமுவேல் குர்னீ (பேர்போன நிறுவனமாகிய ஓவரெண்டு, குர்னீ மற்றும் கம்பெனியின் தலைவர்) இதேபோல் சொல்கிறார்: 1846ஆம் ஆண்டில் இருப்புப்பாதைகள் அமைப்பதற்காக மூலதனத்திற்கு கணிசமான வேண்டல் ஏற்பட்டது ... ஆனால் அது பணத்தின் மதிப்பைக் கூடுதலாக்கவில்லை. சிறு சிறு தொகைகள் பெருந்திரள்களாய் குவிந்தன; அந்தப் பெருந்திரள்கள் எமது சந்தையில் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன; ஆக, மொத்தத்தில் இதன் விளைவு நகரத்தின் பணச் சந்தையிலிருந்து எடுப்பதைக் காட்டிலும் கூடுதலான பணத்தை அச்சந்தையினுள் விடுவதாகவே இருந்தது.

லிவர்பூல் கூட்டுப்பங்கு வங்கியின் இயக்குநர் ஏ. ஹாஜ்சன் எந்த அளவுக்கு மாற்று உண்டியல்கள் வங்கியாளர்களுக்கு சேமவைப்பாய் அமைய முடியும் என்பதைத் தெளிவாக்குகிறார்: 'எமது வைப்புகள் யாவற்றிலும் குறைந்தது 10ல் 9 பங்கையும் எம்மிடம் உள்ள பிறருக்குச் சொந்தமான பணம் முழுவதையும் எமது உண்டியல் பெட்டியில் ஒவ்வொரு நாளும் தீர்வுக்குரியவையாகும் உண்டியல்களாக வைத்துக் கொள்வது எமக்கு வழக்கம்;.....எந்த அளவுக்கு என்றால் நெருக்குதல் நிறைந்த காலத்தில், தீர்வுக்குரியவையாகும் உண்டியல்கள் ஒவ்வொருநாளும் எங்களிடம் கோரப்படும் தொகைக்கு அநேகமாய் சமமாக இருந்தன' (பக்கம் 53.)

ஊக வாணிப உண்டியல்கள். - '5092. அந்த உண்டியல்கள் (விற்கப் பட்ட பருத்தியை ஈடாய்க் கொண்டவை) பொதுவாக யாரால் ஏற்கப் பெற்றன? '-(ஆர். கார்டுனர், பருத்தியாலை அதிபர், இந்நூலில் திரும்பத் திரும்ப குறிப்பிடப்படுகிறவர்:)' விளைபொருள் தரகர்கள்: ஒருவர் பருத்தி வாங்குகிறார், அதை தரகரின் கையில் ஒப்படைக்கிறார். அந்தத் தரகரின் பேரில் உண்டியல் எடுக்கிறார். உண்டியல்களைக் கழிவு செய்துக் காசாக்கிக் கொள்கிறார்.' - '5094. அவை லிவர்பூல் வங்கிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு கழிவு செய்து காசாக்கப்படுகின்றனதா?- ஆம், இது தவிர ஏனைய பகுதிகளில்......இவ்விதம் கிடைக்கும் கடன்வசதி மட்டும் இல்லையென்றால், பருத்தி சென்ற ஆண்டு இவ்வளவு அதிகமாய், இராத்தலுக்கு 1½ பென்னி அல்லது 2 பென்னி உயர்ந்திருக்காது என்று நம்புகிறேன்.' - '600. பெருமளவிலான உண்டியல்கள் லிவர்பூலில் ஊக வணிகர்களால் பருத்தித் தரகர்கள் பேரில் எடுக்கப்பட்டு, சுற்றோட்டத்தில் விடப்பட்டன என்று குறிப்பிட்டிருக் கிறீர்கள்: அந்த ஏற்பாடு பருத்தி மீதான ஏற்புகளைப் போலவே காலனி நாடுகள் மற்றும் அயல் நாடுகளின் விளைபொருள் மீதான ஏற்புகளில் நீங்கள் செய்யும் முன்னீட்டுக்கும் பொருந்துமா?' (ஏ. ஹாக்சன், லிவர்பூல் வங்கியாளர்:) 'காலனி நாடுகளின் சகலவகை விளைபொருட்களுக்கும் பொருந்தும் என்றாலும், மிக முக்கியமாய்ப் பருத்திக்குப் பொருந்தும்.' '601. - வங்கியாளர் என்ற முறையில் அந்தவகை பத்திரத்தை உங்களால் முடிந்தவரை ஏற்க மறுக்கிறீர்களா?- இல்லை, அளவோடு வைத்துக் கொண்டால் அது நியாயமான வகை பத்திரம்தான். இவ்வகைப் பத்திரம் அடிக்கடி புதுப்பிக்கப்படுகிறது.'

கிழக்கிந்திய, சீனச்சந்தையில் மோசடி, 1847. — சார்லஸ் டர்னர் (லிவர்பூலில் கிழக்கிந்திய வர்த்தகம் புரியும் ஒருமுன்னணி நிறுவனத்தின் தலைவர்): 'மொரீஷஸ் வர்த்தகம் தொடர்பாகவும் அதுபோன்ற ஏனையவை தொடர்பாகவும் நடந்துள்ள நிகழ்ச்சிகள் தமக்கெல்லாம் தெரிந்தவையே. தரகர்கள் வழக்கமாய்ச் செய்வது என்னவென்றால் ... விற்பனைப் பண்டங்களை ஈடாய்க் கொண்டு எடுத்த உண்டியல்களுக்குப் பணஞ் செலுத்துவதற்காக அப்பண்டங்கள் வந்து சேர்ந்த பிறகு அவற்றின் மீது முன்னீடு செய்வதும் - எவ்வித முறைகேடும் இல்லை-கப்பல் ரசீதுகள் மீது முன்னீடு செய்வதும் மட்டுமல்லாமல் ... பண்டம் கப்பலேறுவதற்கு முன்னதாகவே, சில சந்தர்ப்பங்களில் உற்பத்தியாவதற்கு முன்னதாகவே அதன் மீதும் முன்னீடு செய்கிறார்கள். இப்போது என்னையே உதாரணமாய் எடுத்துக்

கொண்டால், குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஆறு அல்லது ஏழு ஆயிரம் பவுன் ஸ்டெர்லிங் என்னுமளவுக்கு கல்கத்தாவில் உண்டியல்கள் வாங்கினேன்; உண்டியல்களின் விற்ற வரவு கரும்பு சாகுபடியில் உதவி புரிவதற்காக மொரிஷஸ் நாட்டுக்கு சென்றது; அந்த உண்டியல்கள் இங்கிலாந்துக்கு வந்தன; அவற்றின் சரிபாதிக்கு மேல் மறுக்கப்பட்டது; ஏனென்றால் கப்பலில் சர்க்கரை வந்து சேர்ந்தபோது, அந்த உண்டியல்களுக்கு பணஞ்செலுத்த பயன்படாமல் அது மூன்றாம் தரப்பினருக்கு அடகு வைக்கப்பட்டிருந்தது; கப்பலேறுவதற்கு முன்பே, உண்மையில் அநேகமாய் காய்ச்சப்படுவதற்கு முன்பே அது அடகு வைக்கப்பட்டுவிட்டது' (பக்கம் 78). 'ஆலையதிபர்கள் இப்போது ரொக்கமாகத் தரும்படி வலியுறுத்துகிறார்கள்; ஆனால் இது ஒன்றும் பெரிதல்ல. ஏனென்றால் சரக்கு வாங்குகிறவருக்கு லண்டனில் கடன் - மதிப்பு ஏதும் இருக்குமானால் அவர் நிறுவனத்தின் பேரில் உண்டியல் எடுத்து அவ்வுண்டியலை கழிவு செய்து கொள்ளலாம்; அவர் லண்டனுக்குச் செல்கிறார், அங்கே கழிவு இப்போது மிகக் குறைவு; அவர் உண்டியலை கழிவு செய்து, ஆலையதிபருக்கு ரொக்கமாய்க் கொடுக்கிறார்... விற்பனைப் பண்டங்களைகப்பலில் ஏற்றி அனுப்புகிறவர் தமக்கு வரவேண்டியதை இந்தியாவிலிருந்து வரப்பெறுவதற்கு குறைந்தது 12 மாதமாகிறது;... பத்துப் பதினைந்து ஆயிரம் பவுன்ஸ்டெர்லின் வைத்துள்ள ஒருவர் இந்திய வர்த்தகத்தில் இறங்குவார். அவர் லண்டனில் உள்ள ஒரு நிறுவனத்திடம் கணிச அளவுக்கு வரவுக் கணக்குத் தொடங்குவார்; அந்த நிறுவனத்துக்கு ஒரு சதவீதம் கொடுப்பார். வெளியில் அனுப்பப்படும் விற்பனைப் பண்டங்களின் விற்று வரவு லண்டனிலிருக்கும் நிறுவனத்திற்கே திரும்பி வரவேண்டும் என்ற புரிதலின் அடிப்படையில் லண்டன் நிறுவனத்தின் பேரில் அவர் உண்டியல் எடுப்பார்; ஆனால் லண்டன் ஆசாமிக்கு ரொக்க முன்னீடு கிடைக்காமற் செய்ய வேண்டும் என்பதை இருதரப்புகளுமே குறைவறப் புரிந்து வைத்திருக்கும்; அதாவது விற்று வரவு வந்து சேரும்வரை உண்டியல்களைப் புதுப்பித்து வர வேண்டும். உண்டியல்கள்லிவர்பூல், மான்செஸ்டர்.....அல்லது லண்டனில் கழிவு செய்யப்பட்டன;.....இவற்றில் பலவும் ஸ்காட்லாந்திய வங்கிகளில் கிடக்கின்றன' (பக்கம் 79). - 786. சமீபத்தில் லண்டனில் ஒரு நிறுவனம் நொடித்துப் போயிற்று; அவர்களின் விவகாரங்களை ஆராய்ந்தபோது இது போன்ற ஒரு கொடுக்கல் வாங்கல் நடைபெற்றிருப்பதாக நிரூபணமாயிற்று; மான்செஸ்டரில் ஒரு வர்த்தக நிறுவனம் உள்ளது; கல்கத்தாவில் இன்னொரு நிறுவனம் உள்ளது; அவை லண்டனில் இருக்கும் ஒரு நிறுவனத்தில் £200,000 என்னுமளவுக்கு வரவுக் கணக்கு தொடங்கின. அதாவது மான்செஸ்டரில் இந்த நிறுவனத்தின் கூட்டாளிகளாய் இருந்தவர்கள், கிளாஸ்கோவிலிருந்தும் மான்செஸ்டரி லிருந்தும் கிழக்கிந்திய நிறுவனத்துக்கு சரக்கு ஏற்றி அனுப்பியவர்கள். லண்டன் நிறுவனத்தின் பேரில் £200,000 என்னுமளவுக்கு எடுக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார்கள்; அதே போது கல்கத்தாவிலிருக்கும் நிறுவனம் லண்டன் நிறுவனத்தின் பேரில் £200,000 என்னுமளவுக்கு எடுக்க வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளப் பட்டிருந்தது; அவை

அந்த உண்டியல்களைகல்கத்தாவில் விற்று, இந்த விற்று வரவைக் கொண்டு வேறு உண்டியல்கள் வாங்கி லண்டன் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்; கிளாஸ்கோவிலிருந்து எடுக்கப்படும் முதல் உண்டியல்களை இவ்விதம் வசப்படுத்திக் கொள்ளலாம்... அந்தக் கொடுக்கல்வாங்கல் முடியும்போது £600,000 மதிப்புள்ள உண்டியல்கள் உருவாக்கப் பட்டிருக்கும். ' - '971. இப்போது, கல்கத்தாவிலிருக்கும் ஒரு நிறுவனம்' (இங்கிலாந்துக்கு அனுப்பி வைப்பதற்காக) 'ஒரு சரக்குத் தொகுதியைக் கொள்முதல் செய்யுமானால், அதற்கு விலையாக தன் லண்டன் பேராளரின் பேரிலான தன் சொந்த உண்டியல்களையே தருமானால், அது இந்த நாட்டுக்கு கப்பல் ரசீதுகளை அனுப்பி வைக்குமானால், அந்த ரசீதுகள் லொம்பார்டு தெருவில் அது முன்னீடுகள் செய்வதற்கு உடனேகிடைக்கக் கூடியவை ஆகின்றன; அதன் பேராளர்கள் பணம் செலுத்துமாறு கோரப்படும் வரை அப்பணத்தை அவர்கள் எட்டுமாத காலம் பயன்படுத்திக் கொள்ளலாம்'.

IV. 1848 இல் பிரபுகள் சபையில் இரகசிய குழு ஒன்று 1847ஆம் வருடத்திய நெருக்கடிக்கான காரணங்களை ஆராய்ந்தது. ஆனால் குழுவிடம் தரப்பட்ட சாட்சியம் 1857 வரைக்கும் பிரசுரிக்கப்படவில்லை.... (சாட்சியக் குறிப்புகள். 1857ஆம் வருடத்திய இன்னலுக்கான காரணங்கள் முதலானவற்றைப் பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட பிரபுகள் சபை இரகசியக் குழுவின் முன்னால் பதியப் பெற்றவை; வாணிப இன்னல், 1848/57 என்று மேற்கோள் காட்டப் படுகிறவை). இங்கே, லிவர்பூல் யூனியன் வங்கியின் இயக்குனர் திருவாளர் லிஸ்டர் அளித்த சாட்சியத்தில் சில பகுதிகள் வருமாறு:

'2444. 1847ம் வசந்த காலத்தில் கடன்-செலாவணி அளவுக்கதிகமாய் நீட்டப்பட்டது; ஏனென்றால் ஒருவர் வர்த்தகத் தொழிலிலிருந்து தமது உடைமையை இரயில் போக்குவரத்து தொழிலுக்கு மாற்றினார். என்றாலும் அதே அளவுக்கு தொடர்ந்து வர்த்தகத் தொழிலும் செய்து வர ஆசைப்பட்டார். இருப்புப்பாதை தொழிலின் மூலதனப் பங்குகளை இலாபம் வைத்து விற்பதன் மூலம், வர்த்தகத்திலிருந்து எடுத்த பணத்தை மாற்றீடு செய்துவிடலாம் என்று அவர் முதலில் நினைத்திருக்க வேண்டும் - இப்படிச் செய்ய முடியாதென்று தெரிந்து கொண்டார் போலும்; பிறகு அவர் முன்னதாக ரொக்கம் செலுத்தி நடத்திய தமது வர்த்தகத்தை இப்போது கடன் பெற்று நடத்தலானார். இதனால் கடன்-செலாவணி விரிவடைந்தது.'

'2500. அந்த உண்டியல்களை... வங்கிகள் வைத்திருந்ததன் மூலம் இழப்பு அடைந்தனவே, பிரதானமாக அவை சோளத்தின் பேரிலான உண்டியல்களா, அல்லது பருத்தியின் உண்டியல்களா? - அவை எல்லா வகை விளைபொருட்களின் பேரிலுமான உண்டியல்கள் சோளம், பருத்தி, சர்க்கரை இவற்றின் பேரிலானவை; அனைத்துவகை அயல்நாட்டு விளைபொருட்களின் பேரிலுமானவை. எண்ணெய் தவிர விலை இறங்காத பொருள் அநேகமாய் வேறு எதுவுமே இல்லை எனலாம்? - '2506. உண்டியலை ஏற்றுக் கொள்ளும் தரகர் மதிப்பைப் பொறுத்து நல்லதோர் ஈட்டுத்தொகை இல்லாமல் ஏற்றுக் கொள்ள மாட்டார்.'

'2512. விளைபொருள் ஈடாய் கொண்டு எடுக்கப்படும் உண்டியல்களில் இருவகை உண்டு; முதலாவது, விளைபொருளை இறக்குமதி செய்யும் வணிகரின் பேரில் அயல்நாட்டில் எடுக்கப்படும் ஆரம்ப உண்டியல்....விளைபொருளை ஈடாய் கொண்டு எடுக்கப்படும் உண்டியல்கள் விளைபொருள் வந்து சேருவதற்குள்ளேயே தீர்வுக்குரியவை ஆகிவிடுவதுண்டு. ஆகவே விளைபொருள் வந்து சேரும்போது வணிகரிடம் போதிய மூலதனம் இல்லை என்றால் விற்பதற்குரிய நேரம் வரும்வரை அவர் அதனை தரகரிடம் அடகு வைத்தாக வேண்டும். அப்போது அதே விளைபொருளை பிணையமாய் கொண்டு லிவர்பூலில் வணிகர் உடனடியாக தரகரின் பேரில், ஒரு புதிய வகை உண்டியல் எடுக்கிறார்.... தரகரிடம் விளைபொருள் இருக்கிறதா என்பதையும், அவர் எந்த அளவுக்கு அதன் மீது முன்னீடு செய்திருக்கிறார் என்பதையும் தெரிந்து கொள்வது வங்கியாளரின் வேலையாகும். இழப்பு ஏற்பட்டால் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு வேண்டிய சொத்து தரகரிடம் உள்ளதா என்று பார்ப்பது வங்கியாளரின் வேலையாகும்.'

'2516. நாமும் அயல்நாடுகளிலிருந்து உண்டியல்கள் வரப்பெறுகிறோம்... ஒருவர் அயல்நாட்டில் இங்கிலாந்தின் பேரில் உண்டியல் எடுக்கிறார். இங்கிலாந்தில் உள்ள ஒரு நிறுவனத்துக்கு அதை அனுப்பி வைக்கிறார்; அந்த உண்டியல் விவேகமாய் எடுக்கப்பட்டதா, அல்லவா என்பதை, அது விளைபொருளுக்கு எடுக்கப்பட்டதா வெறும் காற்றுக்கு எடுக்கப்பட்டதா என்பதை நம்மால் கூற முடியாது.'

'2533. அநேகமாய் ஒவ்வொரு வகை அயல்நாட்டு விலைபொருளும் விற்கப்பட்டதில் பேரிழப்பு நேரிட்டதாக கூறினீர்கள். அந்த விளைபொருளை வைத்து அளவுக்கதிகமாய் உலக வாணிபம் நடைபெற்றதே காரணம் என்று நினைக்கிறீர்களா? மிக அதிகமாய் இறக்குமதி செய்ததாலும் பயன்படுத்தி தீர்ப்பதற்கு அதற்கு நிகராய் நுகர்வு இல்லாது போனதாலும் ஏற்பட்ட இழப்பு இது. நுகர்வு பெரிதும் குறைந்து போனதாய்த் தெரிகிறது.'- '2534. அக்டோபரில் விளைபொருளை அநேகமாய் விற்கவே முடியாமல் போனது.'

நெருக்கடியின் உச்சத்தில் பலதிசையிலும் சிதறி ஓடும் போக்கு எப்படி பரவலாய் வளருகிறது என்பதை அதே அறிக்கையில் வெளிப்படுத்துகிறார் ஒரு முதல்தர வல்லுனர் - பெருமதிப்புக்குரிய தந்திரக்கார சமயவேடதாரியும் ஒவரெண்டு, குர்னி மற்றும் கம்பெனியைச் சேர்ந்தவருமான சாமுவேல் குர்னி: '1262.....பீதி நிலவும் போது எந்த ஒருவரும் நமது வங்கி நோட்டுகளுக்கு என்ன கிடைக்கும் என்றோ தமது கருவூல உண்டியல்களை விற்பதால் ஏற்படும் இழப்பு ஓரிரு சதவீதமாய் இருக்குமா மூன்று சதவீதமாய் இருக்குமா என்றோ கேட்டுக் கொண்டிருப்பதில்லை. அவரை கிலி பீடித்திருக்குமானால், இலாப நட்டம் குறித்து அவர் கவலைப்படுவதில்லை; அவர் தம்மைப் பத்திரப்படுத்திக் கொண்டு, மற்றவர்கள் எக்கேடும் கெட்டட்டும் என்று இருந்துவிடுகிறார்.'

V. இரு சந்தைகளும் ஒன்றை ஒன்று தெவிட்டச் செய்வது பற்றி, கிழக்கிந்திய வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வணிகர் திருவாளர் அலெக்சாந்தர் 1857ஆம் வருட

வங்கிச் சட்டம் பற்றிய கீழவைக் குழுவின் முன்னால் சாட்சியமளிக்கிறார் (வங்கிக் குழு, 1857 என்று மேற்கோள் காட்டப்படுவது): '4330. இப்போது நான் மான்செஸ்டரில் 6 ஷில்லிங் முதலீடு செய்தால், இந்தியாவில் 5 ஷில்லிங் திரும்பப் பெறுகிறேன்; இந்தியாவில் 6 ஷில்லிங் முதலீடு செய்தால், லண்டனில் 5 ஷில்லிங் திரும்பப் பெறுகிறேன்.' ஆக இந்தியச் சந்தையை இங்கிலாந்தும் ஆங்கிலேயச் சந்தையை இந்தியாவும் தெவிட்டச் செய்கின்றன. 1847ஆம் வருடத்திய கசப்பான அனுபவத்திற்கு பிறகு வெறும் 10 ஆண்டுகளே கழித்து 1857 கோடையில் இதுதான் நிலைமை.

## அத்தியாயம் XXVI

## பண-மூலதனத் திரட்டல். வட்டி விதத்தின் மீது அதன் தாக்கம்

'இங்கிலாந்தில் கூடுதல் செல்வம் தொடர்ந்து திரட்டப்பட்டு வருகிறது; இச் செல்வமானது முடிவில் பணமாக வடிவெடுக்கும் போக்குடையதாகும். அவசரமாய்ப் பணம் சம்பாதிக்கும் ஆசைக்கு அடுத்தபடியாக; வட்டியோ இலாபமோ தரக்கூடிய ஏதேனும் ஒருவகை முதலீடாக அவசரமாய் அதைச் செலவிடும் விருப்பம் காணப்படுகிறது; ஏனென்றால் பணம் பணமாகவே உள்ளவரை வட்டியும் தராது, இலாபமும் தராது. ஆகவே, உபரி-மூலதனம் இப்படி ஓயாமல் வந்து சேரும்போதே அதை ஈடுபடுத்துவதற்கான களமும் படிப்படியான முறையில் போதிய அளவுக்கு விரிவடையவில்லை என்றால், முதலீட்டை நாடி வரும் பணம் அவ்வப்போது திரண்டு போகும்; இந்தப் பண திரட்டல்களின் பரிமாணம் நிகழ்ச்சிகளின் இயக்கப் போக்கை பொறுத்ததாகும். நீண்ட பல ஆண்டுகளாய், இங்கிலாந்தின் உபரிச் செல்வத்தை பிரம்மாண்ட அளவில் உறிஞ்சி வந்தது நமது பொதுக் கடன் (Public Dept)....*1816*-இல் இக்கடன் அதன் உச்ச அளவை வந்தடைந்தது; முன்போல் அதனால் உபரிச் செல்வத்தை உறிஞ்ச முடியவில்லை; ஆகவே ஆண்டுக்குக் குறைந்தது இருபத்தேழு மிலியன் தொகை வேறு வழியின்றி ஏனைய முதலீட்டு வழிகளை நாட வேண்டியதாயிற்று. இதற்கும் மேலே, மூலதனத்தைத் திருப்பி செலுத்தும் பல்வேறு கொடுப்புகள் நடைபெற்றன.... பெரும் மூலதனம் தேவைப்படக்கூடியவையும் ஈடுபடுத்தப்படாமல் மிகையாய் இருக்கும் மூலதனத்திற்கு அவ்வப்போது வழி திறந்து விடுகிறவையுமான தொழில் முனைவுகள்.... இன்றியமையாதவை, எப்படியும் நமது நாட்டில் மட்டுமாவது இன்றியமையாதவை; தேவைக்கதிகமான சமுதாயச் செல்வம் வழக்கமான முதலீட்டுக் களங்களில் இடம் பிடிக்க முடியாமல் அவ்வப்போது திரண்டு விடுவதால், இந்தத் திரட்டல்களை பயன்படுத்திக் கொள்வதற்கு இத்தொழில் முனைவுகள் அவசியமாகின்றன.' **செலாவணித் தத்துவம் குறித்து மறுபிரிசிலனை,** லண்டன், *1845*, பக்கம் *32-34*. **1845**ஆம் ஆண்டு

குறித்து இதே நூலில் கூறப்பட்டு இருப்பதாவது: 'சமீபகாலத்தில் விலைகள் மிகக் குறைந்த நிலையிலிருந்து உயர்ந்து மேலே வந்துள்ளன.....அரசுப் பிணையங்கள் முகப்பு விலையை எட்டிப்பிடித்துவிட்டன....இங்கிலாந்து வங்கியின் (Bank of England ) காப்பறைகளில் பாளங்களாய் வைக்கப்பட்டுள்ள பொன் வெள்ளியின் அளவு....அவ் வங்கி நிறுவப்பட்டதிலிருந்து வைத்துள்ள கருவூலத்தை விஞ்சி விட்டது-வகைவகையான மூலதனப் பங்குகள் விற்கப்படும் விலைகள், சராசரியாகப் பார்த்தால், முன் எப்போதும் காணாதவை; வட்டி வீதங்கள் விழ்ச்சியடைந்து வெறும் பெயரளவுக்கானவையாகிவிட்டன. இங்கிலாந்தில் இச் சமயத்தில் முதலீட்டுக்கு பயன்படுத்தப்படாத செல்வம் மீண்டும் மிகப் பெரும் அளவில் திரண்டுபோய் இருப்பதற்கு இவையெல்லாம் சான்றுகள் ஊக வாணிபப் பரபரப்பு நிறைந்த அந்தக் காலம் மீண்டும் நெருங்கி வந்துவிட்டது.' (மேலது, பக்கம் 36.)

'பொன் -வெள்ளிப் பாளம் இறக்குமதியாவது அயல் வர்த்தகத்தில் ஆதாயம் கிடைப்பதற்கு உறுதியான அடையாளம் ஆகாது என்றாலும், இதற்கு இன்னதுதான் காரணம் என்று விளக்கம் சொல்ல முடியாத போது, முதற் பார்வைக்கு அந்த ஆதாயத்தில் ஒருபகுதியைக் குறிக்கவே செய்கிறது. 'ஜா.ஜெ.ஹவார்டு, செலாவணியும் நாடும், லண்டன், 1843, பக்கம் 40-41.) 'வர்த்தகம் சீராகவும், விலைகள் நியாய மாகவும்......சுற்றோட்டம் முழுநிறைவாக என்றாலும் தேவைக்கு மிகைப்படாமலும் இருக்கிற ஒரு காலகட்டத்தில் மகசூலில் ஏற்படும் குறைபாட்டினால் தானியம் இறக்குமதி செய்யபடவும் ஐந்து மிலியன் மதிப்புக்கு தங்கம் ஏற்றுமதி செய்யப்படவும் நேரிடுவதாகக் கொள்வோம். சுற்றோட்டமானது (இது சுற்றோட்டச் சாதனத்தைக் குறிப்பதைவிடவும் வேலையற்ற பண - மூலதனத்தையே குறிப்பதாய் இருப்பதை விரைவில் பார்ப்போம்-பி.எங்கெல்ஸ்) அந்த அளவு குறைந்து போகவே செய்யும். இதற்குச் சம அளவிலான சுற்றோட்டம் இப்போதும் தனியாட்களின் வசத்தில் இருக்கக்கூடும். ஆனால் வணிகர்கள் தமது வங்கியாளர்களிடம் சேர்த்து வைத்துள்ள வைப்புகளும், அவர்களது பணப் பெட்டிகளில் இருக்கும் சேம இருப்பும் ஆகிய இவையெல்லாம் குறைந்துபோகும்; வேலையற்ற மூலதனத்தின் அளவு இப்படி குறைந்துபோவதன் உடனடி விளைவாக வட்டி வீதம் உயர்ந்துவிடும். அது 4முதல் 6 சதவீதம் உயருமெனக் கொள்ளலாம். வர்த்தகம் ஆரோக்கியமான நிலையில் இருக்கும்போது,

நம்பிக்கை ஆட்டங்காணாது; ஆனால் கடன் - செலாவணியின் மதிப்பு பெரிதும் உயர்ந்துவிடும்.' (மேலது, பக்கம் 42.) 'ஆனால்... எல்லா விலைகளும் வீழ்ச்சியடைவதாகக் கொள்வோம்... வைப்புகள் அதிகரித்து மிகையான செலாவணி இவ்விதம் வங்கியாளரிடம் திரும்பி வருகிறது - வேலையற்ற மூலதனம் மிதமிஞ்சியதாவது வட்டி வீதத்தை குறைந்தபட்ச அளவாகச் சரியச் செய்கிறது; உறக்கத்தில் இருக்கும் செலாவணியானது திரும்பவும் விலைகள் உயர்ந்துவிடுவதாலோ, வர்த்தகம் மேலும் முனைப்பாய் நடைபெறுவதாலோ பணிபுரியத் தொடங்கும் வரை அல்லது அயல்நாட்டு மூலதனப் பங்குகளிலோ அயல்நாட்டு பண்டங்களிலோ செய்யப்படும் முதலீடுகளால் அது உறிஞ்சப்படும் வரை இந்நிலவரம் நீடிக்கிறது' (பக்கம் 68).

பின்வருகிறவையும் வர்த்தக இன்னல், 1847 - 48 பற்றிய நாடாளுமன்ற அறிக்கையிலிருந்து எடுத்துத்தரப்படுகின்றன. - 1846 - 47,ல் விளைச்சல் தவறிப் போனதாம். பஞ்சம் ஏற்பட்டதாலும் உணவுப் பொருட்களை பெருமளவில் இறக்குமதி செய்வது அவசியமாகிற்று. 'இந்நிலைமைகள் காரணமாய் நாடு... ஏற்றுமதிகளுக்கு மேல்... மிக அதிகமாய் இறக்குமதிகள் செய்ய வேண்டியதாயிற்று... இது வங்கிகளிலிருந்து கணிசமான தொகை வெளியேறுவதற்கு வழி செய்தது; கழிவுத்தரகர்களை இன்னும் அதிகமாய்ப் பயன் படுத்தி... உண்டியல்களை கழிவு செய்வதற்கும் இது வழி செய்கிறது... அவர்கள் உண்டியல்களை ஆராய்ந்து பார்க்கலானார்... இதனால் தீர்வகங்களில் செய்து தரப்படும் வசதிகள் மிகக் கடுமையான அளவுக்குக் குறைக்கப்படலாயின; நலிந்த தீர்வகங்கள் நொடிக்கலாயின; தமது கடன் - செலாவணியை நம்பியிருந்த... தீர்வகங்கள்... மூழ்கிப் போயின. முன்னரே நிலவிய அச்ச உணர்வு இதனால் அதிகரித்தது; வங்கியாளர்களும் ஏனையோரும் தமது கடப்பாடுகளை நிறைவு செய்வதற்கு தமது உண்டியல்களையும் பிறவகைப் பணப்பிணையங்களையும் வங்கி-நோட்டுகளாக மாற்றுவதை 2முன்பு சார்ந்து இருந்ததைப் போல் அதே அளவு நம்பிக்கையுடன் இப்போது சார்ந்திருக்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்டு, தாம் அளிக்கக்கூடிய வசதிகளை மேலும் குறைத்துக் கொண்டார்கள்; பலர் அந்த வசதிகளை வழங்க அடியோடு மறுத்துவிட்டார்கள்; தமது வங்கி நோட்டுகளைப் பெட்டியில் பூட்டி வைத்துக் கொண்டார்கள்; அநேக சந்தர்ப்பங்களில் தமது கடப்பாடுகளை நிறைவு செய்வதற்காகவே இப்படிச் செய்தார்கள்; கையிலிருக்கும் வங்கி நோட்டுகளை பிறரிடம்

கொடுப்பதற்கு அஞ்சினார்கள்....அச்சமும் குழப்பமும் அன்றாடம் வளர்ந்தன; ஜான் ரஸ்ஸல் பிரபு....இங்கிலாந்து வங்கிக்கு மடல் விடுத்திரா விட்டால்....எல்லாமே போண்டியாகிப் போவதுதான் விவகாரமாய் இருந்திருக்கும்' (பக்கம் 74 - 75). ரஸ்ஸல் விடுத்த மடல் வங்கிச் சட்டத்தை நிறுத்தி வைத்தது.- முன்னர் குறிப்பிட்ட சார்லஸ் டர்னர் தமது சாட்சியத்தில் எடுத்துரைக்கிறார். 'சில தீர்வகங்களுக்கு ஏராளமாய் வழிவகைகள் இருந்த போதிலும், தயாராய் தோட்டப் பண்ணைகளிலோ அவுரி ஆலைகளிலோ, சர்க்கரை ஆலைகளிலோ முடக்கப்பட்டு இருந்தது. £500,000 அல்லது £600,000 என்னுமளவுக்குக் கடன்-பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு விட்ட இத்தீர்வகங்களிடம் தமது உண்டியல்களுக்குப் பணம் செலுத்துவதற்கு சொத்துகள் ஏதும் தயார் நிலையில் இருக்கவில்லை; அவை தமது உண்டியல்களுக்கு பணம் செலுத்துவதற்கு முழுக்க முழுக்க தமது கடன்- செலாவணியையே சார்ந்திருப்பது முடிவில் தெரிய வந்தது' (பக்கம் 81). மேலே குறிப்பிட்ட சா.குர்னீ சொன்னார் (1664): 'இப்போது (1844) கொடுக்கல் வாங்கல் வரம்புக்குட்பட்டதாயும், பணம் மிகவும் அபரிமிதமானதாயும் இருக்கின்றன.'-1763. இந்நிலைமை மூலதனம் இல்லாமையால் எழுந்ததாக நான் நினைக்கவில்லை; அப்போது நிலவிய அச்ச உணர்வினால்தான் வட்டிவீதம் இவ்வளவு உயர்ந்துவிட்டது.'

1847இல் இங்கிலாந்து உணவுப் பொருட்களின் இறக்குமதிக்காக அயல்நாடுகளுக்குக் குறைந்தது £9 மிலியன் மதிப்புக்குத் தங்கம் செலுத்தியது. இத்தொகையில் £7½ மிலியன் இங்கிலாந்து வங்கியிலிருந்தும் £1½ மிலியன் ஏனைய ஆதாரங்களிலிருந்தும் பெறப்பட்டது (பக்கம் 245).-இங்கிலாந்து வங்கியின் ஆளுனர் மாரிஸ் சொல்கிறார். 'நாட்டிலுள்ள பொது மூலதனப் பங்குகளும், நீர்ப்பாதை, இருப்புப்பாதை பங்குகளும் 1847 அக்டோபர் 23க்குள்ளாகவே மொத்தத்தில் £114,752,225 என்னும் அளவுக்கு மதிப்பிறக்கம் அடைந்துவிட்டன'(பக்கம் 312). ஜா.பெண்டிங்க் பிரபு கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அதே மாரிஸ் சொல்கிறார். 'மூலதனப் பங்குகளிலும் சகல வகை உற்பத்திப் பண்டத்தினும் முதலீடாகியிருந்த சொத்து முழுவதும் இதேபோல் மதிப்பதிகம் அடைந்ததும், கச்சாப் பருத்தியும் கச்சாப் பட்டும் கம்பளி உரோமமும் இதே தேய்வுற்ற விலையில் கண்டத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதும்.... சர்க்கரையும் காப்பியும் தேயிலையும் வேறு வழியின்றிச் செய்யப்பட்ட விற்பனைகளில் பலியிடப்பட்டதும் உங்களுக்குத்

*தெரியாதா?-பெருமளவு உணவுப் பொருள் இறக்குமதி செய்யப் பட்டதன்விளைவாக நடைபெற்ற பொற்பாள வெளியேற்றத்தை சமாளிப்பதற்காக நாடு பெரும் தியாகம் செய்ய நேரிட்டது தவிர்க்க முடியாத ஒன்று.'- 'இவ்வளவு தியாகம் செய்து தங்கத்தைத் திரும்பப்பெற பாடுபட்டதைக் காட்டிலும் இங்கிலாந்து வங்கியின் கருவூலப் பெட்டிகளில் இருக்கும் £8,000,000இலிருந்து எடுத்து பயன்படுத்திக் கொண்டு இருந்தால், அதுவே சிறப்பானதாய் இருந்திருக்கும் என்று நீங்கள் நினைக்கவில்லையா? -இல்லை.'- இதுபோன்ற வீரதீரம் தொடர்பான கருத்துரைகளை இப்போது கேட்கலாம். இங்கிலாந்து வங்கியின் இயக்குநர்களில் ஒருவரும் முன்னாள் ஆளுனருமாகிய திருவாளர் வி.கார்ட்டனிடம் திஸ்ரேலி கேட்கிறார்: '1844இல் வங்கி உரிமையாளர்களுக்குத் தரப்பட்ட ஆதாயப் பங்கின் வீதம் யாது? - அந்த ஆண்டுக்கு 7%.'- 1847க்கு....ஆதாயப் பங்கு எவ்வளவு? ஒன்பது சதவீதம்.'- 'இந்த ஆண்டில் வங்கி அதன் உரிமையாளர்களுக்காக வருமானவரி செலுத்துகிறதா?-செலுத்துகிறது.' - 1844இல் செலுத்தியதா?- செலுத்தவில்லை.'[84] - 'ஆக இந்த வங்கிச் சட்டம் (1844ஆம் வருடத்தியது) செயல்பட்டதால் அதிக நன்மை அடைந்தவர்கள் வங்கி உரிமையாளர்கள் தானே?.... இந்தச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு உரிமையாளர்களுக்கான ஆதாயப் பங்கு 7சதவீதத்திலிருந்து 9சதவீதமாக உயர்த்தப்பட்டு இருப்பதும், இச்சட்டம் வருவதற்கு முன்பு உரிமையாளர்கள் செலுத்தி வந்த வருமான வரியை இப்போது வங்கியே செலுத்துவதும்தானே இதனால் கண்ட பலன்?-அப்படித்தான்.' (எண் 4356-61.)*

*திருவாளர் பியஸ் என்னும் கிராமப் புற வங்கியாளர் 1847ஆம் வருடத்திய நெருக்கடியின் போது வங்கிகளில் நடைபெற்ற பணச் சேர்ப்பு தொடர்பாக பின்வருமாறு கூறினார்: '4605. இங்கிலாந்து வங்கியானது அதன் வட்டி வீதத்தை இதற்கு மேலும் உயர்த்த வேண்டி இருந்ததால், அனைவரும் அச்சமுற்றது போல் தெரிந்தது; கிராமப்புற வங்கியாளர்கள் கைவசம் இருக்கும் பொற்பாளத்தின் அளவை அதிகமாக்கி கொண்டார்கள், நோட்டு இருப்பையும் அதிகமாக்கிக்*

84. **எங்கெல்ஸ் குறிப்பு:-** இதன் பொருள் என்னவென்றால், முன்பெல்லாம் முதலில் ஆதாயப் பங்கை நிர்ணயித்து விட்டார்கள், பிறகு அந்தந்த மூலதனப் பங்காளருக்கும் ஆதாயப் பங்கு தரப்பட்டபோது வருமான வரியைப் பிடித்தம் செய்து கொண்டார்கள். ஆனால் 1844க்குப் பிறகு வங்கியானது முதலில் அதன் மொத்த இலாபத்திற்கும் வருமான வரி செலுத்திவிட்டது; பிறகு 'வருமான வரி இல்லாத' ஆதாயப்பங்கு தந்தது. ஆகவேதான், பெயரளவுக்கான மாறவில்லை என்றாலும், முன்னைக்காட்டிலும் இப்போது வரியின் அளவு உயர்ந்து காணப்படுகின்றன.

கொண்டார்கள். வழக்கமாக சில 100 பவுன் மதிப்புக்கே தங்கமும் வங்கி நோட்டுகளும் வைத்துக் கொள்வதை வழக்கமாய்க் கொண்ட எங்களில் பலர் உடனே எங்கள் மேசைகளிலும் இழுப்பறைகளிலும் ஆயிரக்கணக்கில் சேர்த்து வைத்துக் கொண்டோம்; உண்டியற் கழிவுகள் தொடர்பாகவும் சந்தையில் புழங்கிக் கொண்டிருந்த எங்கள் உண்டியல்கள் தொடர்பாகவும் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டதால், பரவலாய்ப் பணச் சேர்ப்பு நடைபெற்றது. விசாரணைக் குழுவைச் சேர்ந்த ஒருவர் குறிப்பிடுகிறார்:'4691ஆக, கடந்த 12 ஆண்டு காலத்தில் இப்படி நிகழ்ந்திருப்பதற்குக் காரணம் என்னவானாலும், இதன் விளைவு பொதுவாக உற்பத்தியாய் ஈடுபடும் வர்க்கங்களுக்கு அல்லாமல் யூதருக்கும் வணிகருக்குமே சாதகமாய் இருந்துள்ளது.

தன வணிகர் நெருக்கடிக் காலங்களை எவ்வளவு தூரம் தமக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக் கொள்கிறார் என்பதை டூக் வெளிப்படுத்துகிறார்: 'வார்விக்ஷயரிலும் ஸ்டாஃபோர்டுஷயரிலும் இருப்புப் பண்டங்கள் உற்பத்தி செய்யும் வட்டங்களில், 1847இல் மிகப் பல சரக்காணைகளை ஏற்க மறுத்துவிட்டார்கள்: ஏனென்றால் ஆலையதிபர் தமது உண்டியல்களைக் கழிவு செய்வதற்காக செலுத்த வேண்டி இருந்த வட்டியின் வீதம் அவரது இலாபம் முழுவதையும் விழுங்கியதோடு கூட நின்றபாடில்லை' (எண் 5451).

ஏற்கனவே எடுத்துக்காட்டிய இன்னொரு பாராளுமன்ற அறிக்கையை இப்போது பார்ப்போம்: வங்கிச் சட்டங்கள் பற்றிய பொறுக்குக் குழுவின் அறிக்கை காமன்ஸ் சபையிலிருந்து பிரபுக்கள் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது, 1857 (இனி வ.கு.1857 என்று மேற்கோள் காட்டப்படுவது). இங்கிலாந்து வங்கியின் இயக்குனரும், செலாவணிகக் கோட்பாட்டிற்காக வரிந்துகட்டி வாதுரைப்போரில் முக்கியமான ஒருவருமாகிய திருவாளர் நார்மன் இவ்வறிக்கையில் பின்வருமாறு விசாரிக்கப்படுகிறார்:

'3635. வட்டி வீதமானது மூலதனத்தின் வழங்கலையும் வேண்டலையும் பொறுத்ததுதானே தவிர நோட்டுகளின் அளவைப் பொறுத்தது அல்ல என்று கருதுவதாகக் கூறினீர்கள். 'மூலதனம்' என்பதில் நோட்டுகளையும் நாணயத்தையும் தவிர வேறு எதைச் சேர்த்துக் கொள்கிறீர்கள் என்று சொல்வீர்களா?- 'மூலதனம்' என்பதற்குரிய, சாதாரண இலக்கணம் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் சரக்குகள் அல்லது சேவைகள்தான் என்று நம்புகிறேன்.'- '3636. வட்டி வீதம் குறித்து பேசும்போது 'மூலதனம்' என்ற சொல்லில் எல்லாச்

சரக்குகளையும் உட்படுத்தலாம் என்கிறீர்களா?- உற்பத்தியில் பயன்படுத்தப்படும் எல்லாச் சரக்குகளையும் உட்படுத்தலாம்.'- '3637. வட்டிவீதத்தை எது நிர்ணயிக்கிறது என்பது பற்றி பேசும் போது 'மூலதனம்' என்ற சொல்லில் அதையெல்லாம் உட்படுத்து வீர்களா?-ஆம். பருத்தி ஆலையதிபர் ஒருவருக்கு அவரது தொழிற்சாலைக்காக பருத்தி தேவைப்படுகிறது என்றுவைத்துக் கொள்வோம். அதற்காக அவர் என்ன செய்கிறார் என்று பார்ப்போம்: அநேகமாக தமது வங்கியாளரிடமிருந்து முன்னீடாகப்.பணம் பெற்றுக் கொள்கிறார்; இப்படிக்கிடைக்கும் நோட்டுகளை எடுத்துக்கொண்டு லிவர்புல் சென்று கொள்முதல் செய்கிறார். உண்மையில் அவருக்கு வேண்டியது பருத்திதான். பருத்தியைப் பெற்றுத் தரும் சாதனமாக மட்டும் இல்லையேல் நோட்டுக்களோ, தங்கமோ அவருக்கு வேண்டியதில்லை. இதேபோல் தமது தொழிலாளர்களுக்கு ஊதியமளிக்கும் சாதனம் அவருக்குத் தேவைப்படலாம்: அப்போதும் கூட அவர் நோட்டுகளைக் கடன் வாங்குகிறார்; தொழிலாளர்களுக்கோ உணவும் உறைவிடமும் வேண்டும், அவற்றுக்கு விலை கொடுக்கும் சாதனம்தான் பணம்.'- '3638. ஆனால் பணத்துக்குத்தானே வட்டி தரப்படுகிறது?- முதற்கண் அப்படித்தான்; ஆனால் வேறோரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். அவர் முன்னீடாய் பணம் பெறுவதற்காக வங்கிக்குச் செல்லாமல் பருத்தியைக் கடன் சொல்லி வாங்குவதாய்க் கொள்வோம் அந்நிலையில் ரொக்கப் பண விலைக்கும் அவர் அதற்குப் பணம் செலுத்த வேண்டிய நேரத்தில் தரவேண்டிய கடன்-விலைக்கும் இடையிலான வேறுபாடுதான் பட்டிக்கு அளவையாகும். பணம் என்பதே இல்லாவிட்டாலும் வட்டி இருக்கும்'.

இந்தத் தன்னகங்கார பீத்தல் செலாவணிக் கோட்பாட்டின் இந்தப் பெருந் தூணிடமிருந்து வருவது பொருத்தத்திலும் பொருத்தமே. முதலாவதாக, வங்கி நோட்டுகளும் தங்கமும் ஏதேனுமொன்றை வாங்குவதற்கான சாதனம்தான், அவற்றை அவற்றுக்காகவே க'_ன் வாங்குவதில்லை என்பது சுடர்விடும் கண்டுபிடிப்பு. வட்டிவீதம் எதனால் நிர்ணயிக்கப்படுகிறது என்று விளக்கம் அளிப்பதற்காக இக்கண்டுபிடிப்பு எடுத்துரைக்கப்படுகிறது - அப்படி எதனால் நிர்ணயிக்கப்படுகிறதாம்? சரக்குகளின் வழங்கல்-வேண்டலால் நிர்ணயிக்கப்படுகிறதாம். இந்த வழங்கலும் வேண்டலும் சரக்குகளின் சந்தை-விலைகளை நிர்ணயிப்பதாகத்தான் இதுகாறும் அறியப்பட்டு இருந்தது. ஆனால் சரக்குகளின் சந்தை- விலைகள் மாறாமலே பெரிதும் வெவ்வேறான வட்டி வீதங்கள் அவற்றுடன் ஒத்துப்போவதை காண

முடிகிறதே.- ஆனால் இதைச் சமாளிக்கவும் ஒரு தந்திரம் உண்டு. அவரைப் பார்த்து 'பணத்துக்குத்தானே வட்டி தரப்படுகிறது' என்று கேட்டிருப்பது சரியானது. இந்த ஒரு கேள்வியில் பின்வரும் கேள்விகளும் அடங்கி இருக்கவே செய்கின்றன: 'எவ்விதத்தும் சரக்கு-வர்த்தகத்தில் ஈடுபடாதவராகிய வங்கியாளர் பெறும் வட்டிக்கும் இந்தச் சரக்குகளுக்கும் என்ன சம்பந்தம்? ஆலையதிபர்கள் பெரிதும் வெவ்வேறான சந்தைகளில், அதாவது உற்பத்தியில் பயன்படுத்தப்படும் சரக்குகளுக்கு பெரிதும் வெவ்வேறான வழங்கல்-வேண்டல் நிலமைகளைக் கொண்டிருக்கும் சந்தைகளில் பணத்தை முதலீடு செய்தபோதிலும், இப்படி முதலீடு செய்வதற்கான பணத்தை அவர்கள் ஒரே வட்டி வீதத்தில் பெறுவதில்லையா?' இந்தக் கேள்விகளுக்குப் பதிலாய் இந்தப் பிரபல மாமேதை சொல்லக் கூடியதெல்லாம், ஆலையதிபர் பருத்தியைக் கடன் சொல்லி வாங்குவாரானால் ரொக்கப் பண விலைக்கும் அவர் அதற்கு பணம் செலுத்த வேண்டிய நேரத்தில் தர வேண்டிய கடன் - விலைக்கும் இடையிலான வேறுபாடுதான் வட்டிக்கு அளவையாகும்' என்பதே, உண்மை இதற்கு நேர்மாறானது. நடப்பிலுள்ள வட்டி வீதம் எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்பதற்கு விளக்கம் அளிக்குமாறு பேரறிஞர் நார்மனிடம் கேட்கப்பட்டதே, இந்த வட்டி வீதம்தான் ரொக்க விலைக்கும் பணம் செலுத்த வேண்டிய நேரம் வரும் வரையிலான கடன் - விலைக்கும் இடையிலான வேற்றுபாட்டுக்கு அளவையாகும். பருத்தியை முதலில் அதன் ரொக்க விலைக்கு விற்க வேண்டும்; இந்த ரொக்க விலையை நிர்ணயிப்பது சந்தை விலை; சந்தை விலையை ஒழுங்கு செய்வது வழங்கல்-வேண்டல் நிலவரம். விலை 1,000 என்று வைத்துக் கொள்வோம். வாங்குவதையும் விற்பதையும் பொறுத்தவரை ஆலையதிபருக்கும் பருத்தி தரகருக்கும் இடையிலான கொடுக்கல்-வாங்கலின் முடிவே இது. இதையடுத்து இரண்டாவது கொடுக்கல்-வாங்கல் நடைபெறுகிறது. இது கடன் கொடுக்கிற வருக்கும் கடன் வாங்குகிறவருக்கும் இடையிலானது. £1,000 மதிப்பீடானது ஆலையதிபருக்குப் பருத்தியாக முன்னீடு செய்யப் படுகிறது; அவர் அதனைப் பணமாகத் திருப்பிச் செலுத்த வேண்டும்; மூன்றுமாத காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும் எனக் கொள்வோம்.

£1,000க்கு மூன்று மாத காலத்துக்கான வட்டி, சந்தை வட்டி வீதத்தால் நிர்ணயிக்கப்படும் இந்த வட்டி ரொக்க விலைக்கு மேல் தரவேண்டிய கூடுதல் தொகை ஆகிறது. பருத்தியின் விலை

வழங்கல்-வேண்டலால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் முன்னீடு செய்யப்படும் பருத்தி மதிப்பின், அதாவது மூன்றுமாத காலத்துக்கு முன்னீடு செய்யப்படும் £1,000இன் விலையானது வட்டி வீதத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. பருத்தி இவ்விதம் பண-மூலதனமாக மாற்றப்படுகிறது என்னும் இந்த உண்மை, திருவாளர் நார்மனுக்கு, பணம் என்பதே இல்லாவிட்டாலும் வட்டி இருக்கும் என்பதற்கான நிரூபணமாகிவிடுகிறது. பணம் என்பதே இல்லாது போனால், பொது வட்டி வீதம் என்ற ஒன்றே இருக்காது என்பது திண்ணம்.

முதலாவதாக, மூலதனத்தை 'உற்பத்தியில் பயன்படுத்தப்படும் சரக்குகள்' எனக் கருதுவது கொச்சையான பார்வையாகும். இந்தச்சரக்குகள் மூலதனமாகப் பயன்படும் அளவில், மூலதனமாக அவை பெற்றுள்ள மதிப்பு - சரக்குகளாக அவை பெற்றுள்ள மதிப்பு அல்ல - அவை உற்பத்தித் துறையிலோ வாணிபத் துறையிலோ ஈடுபடுத்தப்படுவதிலிருந்து வரப்பெறும் இலாபமாக வெளிப்படு கிறது. விலைக்கு வாங்கப்படும் சரக்குகளின் சந்தை விலையோடும் அவற்றின் வழங்கல்-வேண்டலோடும் எந்நிலைமை யிலும் சற்றாவது தொடர்புடையதாய், இருந்தாலும் இலாபவீதமானது அதுவே வேறு காரணங்களால் நிர்ணயிக்கப்படுகிறது. பொதுவாக வட்டி வீதத்துக்கு இலாபவீதம் வரம்பிடுவதில் ஐயமில்லை. ஆனால் திரு.நார்மன் இந்த வரம்பு எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்று நமக்குச் சொல்ல வேண்டும். அது பண-மூலதனத்தின் ஏனைய மூலதன வடிவங்களி லிருந்து வேறுபடுத்திக் காணப்படும் பண-மூலதனத்தின் வழங்கல் - வேண்டலால் நிர்ணயிக்கப்படுகிறது. இன்னுமொரு கேள்வி கேட்கப்படலாம்: பண-மூலதனத்தின் வழங்கலும்-வேண்டலும் எப்படி நிர்ணயிக்கப்படுகின்றன? பொருள் வடிவான மூலதனத்தின் வழங்கலுக்கும் பண-மூலதனத்தின் வழங்கலுக்கும் மறைமுகத் தொடர்பு இருப்பதும், இதேபோல் பண-மூலதனத்திற்கான தொழில்துறை முதலாளிகளின் வேண்டல் உள்ளபடியே நடைபெறும் உற்பத்தியின் நிலைமைகளால் நிர்ணயிக்கப்படுவதும் உண்மைதான், சந்தேகமே இல்லை. இந்த உண்மையை நமக்கு விளங்க வைப்பதற்குப் பதில், பண-மூலதனத்திற்கான வேண்டலும் பணத்திற்கே ஆன வேண்டலும் ஒன்றல்ல என்று சிந்தனை முத்து ஒன்றை நம்மிடம் உதிர்க்கிறார் நார்மன். இது சிந்தனை பெறும் திறம் மட்டுமே ஆகும். ஏனென்றால் இவரும் ஒவர்ஸ்டோனும் ஏனைய செலாவணிக் கோட்பாட்டுத் தீர்க்கத்தரிசிகளும் சட்டமுறையின் செயற்கை தலையீட்டைக் கொண்டு சுற்றோட்டச் சாதனங்களிலிருந்தே மூலதனம்

உண்டுபண்ணுவதற்கும், வட்டி விதத்தை உயர்த்துவதற்கும் பாடுபடுகிறவர்களாய் இருப்பதால், எந்நேரமும் இவர்களுக்கு குற்ற நெஞ்சு குறுகுறுக்கிறது.

சாமுவேல் ஜோன்ஸ் லாய்டு என்கிற ஓவர்ஸ்டோன் பிரபு என்ன சொல்கிறார் பார்ப்போம் - 'மூலதனம்' அவரது நாட்டில் இவ்வளவு அரிதாய் இருப்பதால் அவர் தமது 'பணத்திற்கு'10% வாங்குவது ஏன் என்பதற்கு விளக்கமளிக்குமாறு அவரிடம் கேட்கப்படுகிறது.

'3653, வட்டி வீதத்திலான ஏற்ற இறக்கங்களுக்கு இந்த இரண்டில் ஒன்றே காரணம்: மூலதனத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம்' (பிரமாதம், பொதுவாகச் சொன்னால், மூலதனத்தின் மதிப்பு சரியாக வட்டி வீதத்தைத்தான் குறிக்கிறது, அதாவது வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றம் வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றத்திலிருந்து உதித்தெழுமாறு செய்யப்படுகிறது என்று பொருள்,' மூலதனத்தின் மதிப்பு' தத்துவார்த்தத்தில் எப்போதுமே இப்படியல்லாமல் வேறுவிதமாய் ஒரு போதும் புரிந்து கொள்ளப்பட்டதே இல்லை - இதனைப் பிறிதோர் இடத்தில் தெளிவாக்கினோம். அல்லது, ஓவர்ஸ்டோன் பிரபு 'மூலதனத்தின் மதிப்பு' என்ற சொற்றொடரை இலாபவீதம் என்னும் பொருளில்தான் பயன்படுத்துகிறார் என்றால், அந்தச் சிந்தனைச் செம்மல் வட்டி வீதம் இலாப வீதத்தால் நிர்ணயிக்கப்படுகிறது என்னும் கருத்துக்கே திரும்பிச் செல்கிறார் என்றாகிறது. 'அல்லது நாட்டிலுள்ள பணத்தின் அளவில் ஏற்படும் மாற்றம், வட்டியிலான பெரும் ஏற்ற இறக் அலைவுகளுக்கு எல்லாம்-மூலதனத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களே மூலகாரணம் என்று தெளிவாய் கண்டறியலாம்.-நீண்ட காலம் நீடிப்பதாலோ பெரிய அளவுக்கு ஏற்படுவதாலோ பெரும் அலைவுகளாய்க் கருதப்படுகிற இவற்றுக்கு எல்லாம்-இந்த உண்மைக்கு மிகவும் எடுப்பான நடைமுறைச் சான்றுகளாய்க் குறிப்பிடத்தக்கது. 1847இலும் கடந்த ஈராண்டு காலத்திலும் (1855-56) வட்டி வீதத்தில் ஏற்பட்ட உயர்வு ஆகும்: பணத்தின் அளவில் ஏற்படும் மாற்றத்தால் வட்டி வீதத்தில் ஏற்படும் அற்ப அலைவுகள் அளவிலும் சரி, காலத்திலும் சரி சின்னஞ் சிறியவையே. இவை அடிக்கடி நிகழ்கின்றன எவ்வளவு துரிதமாகவும் அடிக்கடியும் நிகழ்கின்றனவோ, அவற்றுக்குரிய நோக்கத்தை நிறைவேற்றுவதில் அவ்வளவு பயனுள்ளவையாய் அமைகின்றன; அவற்றுக்குரிய நோக்கம் என்பது ஓவர்ஸ்டோன் போன்ற வங்கியாளர்களை மேலும் செல்வந்தர் களாக்குவதுதான். நண்பர் சாமுவேல் குர்னீ பிரபுகள் சபையினது

விசாரணைக் குழுவின் முன்னால் இதை ஒளிவு மறைவின்றிச் சொல்கிறார்-வாணிப இன்னல் 1848 (1857): '1324. வட்டி வீதத்தில் சென்ற ஆண்டு ஏற்பட்ட பெரும் ஏற்ற இறக்க அலைவுகள் வங்கியாளர் களுக்கோ, தனவணிகர்களுக்கோ சாதகமானவையா இல்லையா? நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?-அவை தன வணிகர்களுக்குச் சாதகமானவை என்று கருதுகிறேன். வர்த்தகத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் எல்லாமே விவரம் தெரிந்தவனுக்கு சாதகமானவைதான். 1325, வங்கியாளர் தமது மிகச் சிறந்த வாடிக்கையாளர்களை வளம் குன்றச் செய்வதன் மூலம் உயர்ந்த வட்டி வீதங்களால் முடிவில் பாதிப்புறலாம் இல்லையா?-இல்லை; அது கண்ணுக்குத் தெரியும்படி விளைவை ஏற்படுத்துவதாக நான் நினைக்கவில்லை.'

தயாராய் கிடைக்கக் கூடிய பணத்தின் அளவானது வட்டிவீதத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை கடைசியில் மீண்டும் பரிசீலிப்போம். ஆனால் ஓவர்ஸ்டோன் மீண்டும் ஒரு மாறாட்ட பிழை புரிகிறார் என்பதை இங்கேயே குறிப்பிட்டாக வேண்டும். 1847இல் பணி - மூலதனத்திற்கான வேண்டலானது (பண முடை குறித்து அல்லது அவர் சொல்வது போல் 'பணத்தின் அளவு' குறித்து அக்டோபருக்கு முன்பு எவ்விதக் கவலையும் இருக்கவில்லை பல்வேறு காரணங்களாலும் அதிகரித்து தானியம், பருத்தி இவற்றின் விலைகள் உயர்ந்து சென்றது, மிகையுற்பத்தி காரணமாய் சர்க்கரை வாங்குவதற்குப் போதிய ஆட்கள் இல்லாமற் போனது, இருப்புபாதைத் தொழிலான ஊக வாணிபம், தகர்வு, அயல்நாட்டுச் சந்தைகளில் பருத்திச் சரக்குகள் மிகையாய் கொட்டிக் குவிக்கப்பட்டது, மாற்று உண்டியல்களின் ஊக வாணிபம் செய்வதற்காகவே வலியப் போய் இந்தியாவிற்கு ஏற்றுமதியும் இந்தியாவிலிருந்து இறக்குமதியும் செய்தது (இது பற்றி மேலே விவரித்துள்ளோம்).

சொல்ல வேண்டியதைத்தான் சொல்லியிருக்கிறார். இவை யெல்லாம் அந்தக் காரணங்களில் அடக்கமாகும்-இவையாவும், தொழில் துறையிலான மிகையுற்பத்தியும் வேளாண்மைத் துறையிலான குறையுற்பத்தியும் - அதாவது பெரிதும் வேறுபடக்கூடிய காரணங்கள் பண-மூலதனத்திற்கான, அதாவது கடன்-செலாவணிக்கும் பணத்துக்குமான வேண்டல் அதிகரிப்பதற்கு வழிவகுத்தன. பண-மூலதனத்திற்கான வேண்டலில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு மூலகாரணமாய் இருந்து பொருளுற்பத்தி நிகழ்முறையின் போக்கே ஆகும். ஆனால் காரணம் என்னவாயினும் பண-மூலதனத்திற்கான

வேண்டல்தான் வட்டிவீதத்தை, பண - மூலதனத்தின் மதிப்பை உயரச் செய்தது. பண-மூலதனத்தின் மதிப்பு உயர்ந்த காரணத்தால்தான் பண - மூலதனத்தின் மதிப்பு உயர்ந்தது என்பதே ஓவர்ஸ்டோன் சொல்வதன் பொருள் என்றால், இது அர்த்தமற்ற சொற்புரட்டே ஆகும். ஆனால் இலாபவீதத்திலான உயர்வே வட்டி வீதத்திலான உயர்வுக்கு காரணம் என்ற அர்த்தத்தில் அவர் 'மூலதனத்தின் மதிப்பைக்' குறிப்பிடுகிறார் என்றால், நமக்கு உடனே தெரிந்துவிடும் இது தவறு என்று. இலாபம் குறைந்தாலும் மதிப்பும் உயரலாம்; பண-மூலதனத்தின் ஒப்பீட்டு வழங்கல் சுருங்கத் தொடங்கியவுடனே அதன் 'மதிப்பு' அதிகரிக்கிறது: ஓவர்ஸ்டோன் அப்படி எதைத்தான் நிரூபிக்க விரும்பினார்? 1847ஆம் வருடத்திய நெருக்கடிக்கும் அதையொட்டி ஏற்பட்ட வட்டி வீத உயர்வும் பணத்தின் அளவோடு, 'அதாவது அவர் ஊக்கம் கொடுத்து நிறைவேறச் செய்த 1844ஆம் வருடத்திய வங்கிச் சட்டத்தின் விதிமுறையோடு எவ்விதத் தொடர்பும் கிடையாது என்பதைத்தான் நிரூபிக்க விரும்பினார்; ஆனால் அதற்கு அவற்றோடு தொடர்பு இருக்கவே செய்தது; எப்படியென்றால் வங்கி சேமவைப்பு தீர்ந்துபோகும் என்ற அச்சம் - ஓவர்ஸ்டோன் உண்டுபண்ணியது - பணப் பீதியைத் தோற்றுவித்து 1847-48 காலத்திய நெருக்கடிக்குத் தன் பங்கைச் செலுத்தியது. ஆனால் இதுவல்ல இங்கே விவகாரம். பண -மூலதனம் தட்டுப்பாடாய் இருந்தது; கிடைக்கக் கூடிய வழிவகைகளுடன் ஒப்பிடுகையில் செயற்பாடுகளின் பரிமாணம் மிகையாய் இருந்ததே தட்டுப்பாட்டுக்கு காரணம்; மகசூல் தவறிப் போனதால் மறுவுற்பத்தி நிகழ்முறையில் ஏற்பட்ட குலைவும், இருப்புப்பாதை தொழிலிலான மிகை - முதலீடும், மிகையுற்பத்தி, அதிலும் குறிப்பாக பருத்திச் சரக்குகளின் மிகையுற்பத்தியும், இந்தியாவுடனும் சீனாவுடனும் ஆன வர்த்தகத்தில் செய்யப்பட்ட மோசடிகளும், ஊக வாணிபமும், தேவைக்கதிகமான சர்க்கரை இறக்குமதிகளும் இன்னபிறவும் அந்தத் தட்டுப்பாட்டை முற்றச் செய்தன. குவார்ட்டர் ஒன்றுக்கு 120 ஷில்லிங் வீதம் விலைகொடுத்த தானியம் வாங்கியவர்கள், அதன் விலை 60 ஷில்லிங்காகக் குறைந்தபோது அவர்களிடம் இல்லாமற் போவது என்ன அவர்கள் மிகையாய்ச் செலுத்திய 60 ஷில்லிங்கும், தானியத்தின் மீதான லோம்பாடு தெரு முன்னீடுகளில் அந்தத் தொகைக்குரிய கடன் - செலாவணியும்தான் இல்லாமற் போனவை. அவர்கள் தங்களுடைய தானியத்தை 120 ஷில்லிங் என்ற பழைய விலையில் பணமாக முடியாமற் போனதற்கு வங்கி நோட்டுகள் போதிய அளவு இல்லாமற் போனது எவ்விதத்தும் காரணம் அல்ல மிகையாக சர்க்கரை இறக்குமதி

செய்தவர்களின் நிலைமையும் இதுவேதான்; இந்தச் சர்க்கரையை விற்க முடியாத நிலை ஏற்பட்டதென்றே சொல்லலாம். தங்களுடைய நிலைத்திரா மூலதனத்தை இருப்புப் பாதை தொழிலில் முடக்கி வைத்துவிட்டு, தங்களது 'முறையான' தொழிலில் அம்மூலதனத்தை மாற்றீடு செய்வதற்கு கடன்-செலாவணியை நம்பியிருந்த கனவான்களின் நிலைமையும் இதுவேதான். ஓவர்ஸ்டோனுக்கு இதெல்லாம் 'அவரது பணத்தின் மதிப்பு உயர்த்தால் அறநெறி அர்த்தத்தைக்' குறிப்பதாகும். ஆனால் பண-மூலதனத்தின் மதிப்பு இப்படி உயர்ந்த போதே, அதற்கிணையாக உண்மை மூலதனத்தின் (சரக்கு-மூலதனம், திறனுடை-மூலதனம் இவற்றின்) பணமதிப்பு குறைவுற்றது. ஒரு வடிவத்தில் மூலதனத்தின் மதிப்பு குறைந்ததால்தான் மற்றொரு வடிவத்தில் மூலதனத்தின் மதிப்பு உயர்ந்தது. ஆனால் ஓவர்ஸ்டோன் வெவ்வேறு மூலதன வகைகளின் இவ்விரு மதிப்புகளையும் பொதுவான மூலதனத்தின் ஒரே மதிப்பாக இனங்காண முயல்கிறார்; இவையிரண்டையும் சுற்றோட்ட ஊடகத்திலான, தயாராய் கிடைக்கக்கூடிய பணத்திலான தட்டுப் பாட்டுக்கு எதிராய் நிறுத்துவதன் மூலம் இம் முயற்சியைச் செய்கிறார். ஆனால் ஒரே அளவு பண-மூலதனத்தை கடனாய்க் கொடுப்பதற்கு மிகவும் வெவ்வேறான அளவுகளில் சுற்றோட்ட ஊடகத்தைப் பயன்படுத்தலாம்.

அவர் உதாரணமாய்க் கொள்ளும் 1847ஆம் ஆண்டையே எடுத்துக் கொள்வோம், அதிகாரப்பூர்வ வங்கி - வட்டிவீதம் ஜனவரியில் 3முதல் 3½% ஆக இருந்தது; பிப்ரவரியில் 4முதல் 4½%. மார்ச்சில் பொதுவாக 4%. ஏப்ரலில் (பீதி) 4முதல் 7½%. மேயில் 5முதல் 5½%. ஜூனில் மொத்தத்தில் 5%. ஜூலையில் 5% ஆகஸ்டில் 5முதல் 5½%. செப்டம்பரில் 5%, சொற்ப அளவில் மாற்றம் ஏற்பட்டு 5¼, 5½, 6%. அக்டோபரில் 5, 5½, 7% நவம்பரில் 7-10%, டிசம்பரில் 7முதல் 5%.- இந்த உதாரணத்தில், இலாபங்கள் குறைந்ததாலும், சரக்குகளின் பண-மதிப்புகள் பெருமளவில் சரிவுற்றதாலும் வட்டி உயர்ந்தது. ஆக, மூலதனத்தின் மதிப்பு உயர்ந்ததால் 1847இல் வட்டி வீதம் உயர்ந்தது என்று ஓவர்ஸ்டோன் இங்கே கூறுகிறார் என்றால், அவர் மூலதனத்தின் மதிப்பு என்று சொல்வது பண-மூலதனத்தின் மதிப்பாகத்தான் இருக்க முடியும்: பண-மூலதனத்தின் மதிப்பு என்பது வட்டி வீதம்தான், வேறு எதுவும் அல்ல. ஆனால் பிற்பாடு அவரே மூலதன மதிப்புதான் இலாப வீதம் என்று சாதித்து தமது சுய உருவை வெளிப்படுத்திவிடுகிறார்.

1856இல் வட்டி வீதம் உயர்ந்திருந்தது என்பதைப் பொறுத்தவரை, ஓர் உண்மையை ஓவர்ஸ்டோன் அறியாதவராகவே இருந்தார்; ஓரளவுக்கு இந்த வட்டி வீத உயர்வானது கடன் - செலாவணித் தரகர்கள் முன்னுக்கு வந்து கொண்டு இருந்ததன் அறிகுறியாகவே இருந்தது என்பதே அவ்வுண்மை. இந்தத் தரகர்கள் பிறருடைய மூலதனத்தைக் கொண்டு வட்டி செலுத்தினார்களே தவிர தமது இலாபத்திலிருந்து செலுத்தவில்லை; 1857ஆம் வருடத்திய நெருக்கடிக்கு ஒருசில மாதங்களே முன்னதாக அவர் 'தொழில் ஆரோக்கியமாகவே இருக்கிறது' என்று.

அவர் மேலும் சாட்சியமளித்தார்; (வ.கு.1857) '3722. வட்டி வீதத்திலான உயர்வு வர்த்தக இலாபங்களை அழித்துவிடுகிறது என்னும் கருத்து மிகவும் தவறானது. முதலாவதாக, வட்டி வீதத்திலான உயர்வு நீண்ட காலத்திற்கு நீடிப்பது அரிதே; இரண்டாவதாக, அது நீண்ட காலத்துக்கு நீடிப்பதாகவும் பெருமளவிலானதாகவும் இருக்குமானால் உண்மையில் அது மூலதனத்தின் மதிப்பிலான உணர்வே ஆகும். மூலதனத்தின் மதிப்பு இங்கேயும் கடைசியில் 'மூலதனத்தின் மதிப்பு' என்பதன் பொருள் என்னவென்று தெரிந்து கொள்கிறோம். மேலும், இலாப வீதம் நீண்ட காலத்துக்கு உயர்ந்திருந்தாலும், முனைவு - இலாபம் குறையலாம்; வட்டி வீதமானது இலாபத்தில் பெரும் பகுதியை விழுங்கிவிடும் அளவுக்கு உயரலாம்.

'3724, நாட்டில் வர்த்தகம் பெருமளவில் அதிகரித்ததாலும், இலாபவீதம் பெரும் அளவில் உயர்ந்ததாலும் வட்டிவீதம் உயர்ந்துள்ளது; வட்டி வீதத்திலான உயர்வு அதற்குக் காரணமாகிய இவ்விரண்டையும் அழித்துவிடுவதாகக் குறை சொல்வது ஒரு விதமான தர்க்கமுறை அபத்தமாகும்; இதற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.'-அவர் பின்வருமாறு சொன்னால் எவ்வளவு தர்க்க வழிப்பட்டதாய் இருக்குமோ அவ்வளவு தர்க்க வழிப்பட்டதே இதுவும்; ஊக வாணிபம் காரணமாய் சரக்கு - விலைகள் உயர்ந்ததால் இலாபவீதம் உயர்ந்துள்ளது; விலை உயர்வானது அதற்குக் காரணமாகிய ஊக வாணிபத்தை அழித்துவிடுவதாகக் குறை சொல்வது தர்க்க முறை அபத்தமாகும் - இவ்வாறே மேலும் சொல்லலாம் - எந்தவொன்றும் முடிவில் அதற்கான காரணத்தையே அழித்துவிட முடியும் என்பது உயர்ந்த வட்டி வீதத்தில் மோகம் கொண்ட கடுவட்டிக்காரருக்கு மட்டுமே தர்க்கமுறை அபத்தமாகும். ரோமானியர்களின் மகத்துவம் நாடுபிடிக்க அவர்கள் நடத்திய

படையெடுப்புகளுக்கு காரணமாயிருந்தது; அவர்கள் நடத்திய படையெடுப்புகள் அவர்களது மகத்துவத்தை அழித்துவிட்டன. செல்வச் செழிப்பு சொகுசு வாழ்க்கைக்குக் காரணமாகிறது; சொகுசு வாழ்க்கை செல்வச் செழிப்பை அழித்துவிடக் கூடியதாய் இருக்கிறது. பாவம், அப்பாவி மனிதர் இந்தக் கோடீசுவரரின் இழிந்துகெட்ட - உயர் குலத்தாரின் - 'தர்க்கமுறை' இங்கிலாந்து முழுவதிலும் பெற்ற மரியாதையே இன்றைய முதலாளித்துவ உலகின் பேதைமைக்கு எடுப்பான சான்று. மேலும். உயர்ந்த இலாப வீதமும் தொழிற் பெருக்கமும் உயர்ந்த வட்டி வீதத்துக்கு காரணங்களாய் இருக்கக்கூடும் என்றால், அதனாலேயே உயர்ந்த வட்டி வீதம் உயர்ந்த இலாபத்திற்கு காரணமாகிவிடாது. (உள்ளபடியே நெருக்கடியின்போது காணப் பட்டது போன்ற) உயர்ந்த வட்டியானது உயர்ந்த இலாபவீதம் மறைந்தொழிந்து நீண்டகாலம் ஆனபிறகு நீடித்ததா, இன்னும் சொல்லப் போனால் உச்ச நிலையை வந்தடைந்ததா என்பதுதான் கேள்வி.

'3718. உண்டியற் கழிவு வீதத்தில் ஏற்பட்ட பெரும் உயர்வைப் பொறுத்தவரை, அது முழுக்க முழுக்க மூலதனத்தின் மதிப்புயர்வினால் வருவதாகும்; இந்த மூலதன மதிப்புயர்வுக்கானக் காரணத்தை யார் வேண்டுமானாலும் தெள்ளத் தெளிவாய் கண்டுபிடித்துவிடலாம் என்று நினைக்கிறேன். இந்தச் சட்டம் 13 ஆண்டு காலமாய்ச் செயல்பட்டு வருகிறது. இந்த 13 ஆண்டு காலத்தில் இந் நாட்டின் வர்த்தகம் £45,000,000இலிருந்து £120,000,000ஆக அதிகரித்துள்ளது என்ற விவரத்தை முன்பே சுட்டினேன். சுருக்கமாய் அப்படிக் கூறியதில் குறிக்கப்பெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் யாராவது யோசித்துப் பார்க்கட்டும்; இவ்வளவு பிரம்மாண்டமாய் அதிகரித்த வர்த்தகத்தை தொடர்ந்து நடத்துவதற்காக மூலதனத்திற்கு எழும் மிகப் பெரும் எழும் வேண்டலை எண்ணிப் பார்க்கட்டும்; அதேபோது, அந்தப் பெரும் வேண்டலை நிறைவு செய்வதற்கான வழங்கலின் இயற்கை ஆதாரத்தை அதாவது இந்த நாட்டின் வருடாந்தரச் சேமிப்பைக் கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாய் ஆதாயமற்ற போர்ச் செலவு விழுங்கியிருப்பதையும் எண்ணிப் பார்க்கட்டும். நான் இதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்: வட்டி வீதம் இப்போது உயர்ந்து இருப்பதைவிடவும் இன்னும் அதிகமாய் உயரவில்லையே என்றுதான் எனக்கு வியப்பாய் உள்ளது; அதாவது இந்தப் பிரம்மாண்டமான செயற்பாடுகளை நிறை வேற்றுவதற்காக மூலதனத்திற்கு ஏற்பட்ட நெருக்குதல் உங்களுக்குத் தெரிய வந்திருப்பதைவிடவும் மிகக் கடுமையானதாய் இருக்கவில்லையே என்றுதான் எனக்கு வியப்பாய் உள்ளது.'

நமது கடுவட்டி தர்க்க ஞானி எவ்வளவு திகைப்புக்குரிய விதத்தில் சொற்களைக் கொட்டிக்குவித்து குளறுபடி செய்கிறார் பாருங்கள். இதோ மீண்டும் அவர் வருகிறார், மூலதனத்தின் மதிப்புயர்வு பற்றி சொல்லிக் கொண்டு ஒரு பக்கத்தில் மறுவுற்பத்தி நிகழ்முறை, அதாவது உண்மை மூலதனத்தின் திரட்டல் இப்படி பிரம்மாண்டமாய் விரிவடைந்தது என்றும், மறுபக்கத்தில் 'மூலதனம்' என்பதாக ஒன்று இருந்தது, வர்த்தகத்தின் இந்த பிரம்மாண்ட அதிகரிப்பை நிகழ்த்துவதற்காக அந்த மூலதனத்திற்கு 'மிகப் பெரும் வேண்டல்' எழுந்தது என்றும் அவர் நினைக்கிறார் போலும்! உற்பத்தி இப்படி மிகப் பெரும் அளவில் அதிகரித்ததே மூலதன அதிகரிப்பாகவும் அமையவில்லையா? அது வேண்டலை தோற்றுவித்தது என்றால் வழங்கலையும், அதேபோது இன்னுமதிக படைமூலதன வழங்கலையும் தோற்றுவிக்க வில்லையா? வட்டி வீதம் மிக அதிகமாய் உயர்ந்தது என்றால், பண-மூலதனத்திற்கான வேண்டல் அதன் வழங்கலைக் காட்டிலும் துரிதமாய் அதிகரித்ததே காரணம்; தொழில்துறை உற்பத்தி விரிவடைந்தபோதே கடன்-செலாவணி அடிப்படையிலான அதன் செயற்பாடும் விரிவடைந்தது என்பதே இதன் பொருள். அதாவது, தொழில்துறை உள்ளபடியே விரிவடைந்ததால் 'பணவசதிக்கான' வேண்டல் அதிகரித்தது; இந்த வேண்டலைத்தான் நமது வங்கியாளர் 'மூலதனத்துக்கான மிகப் பெரும் வேண்டல் என்று சொல்வது தெளிவாய்த் தெரிகிறது. ஏற்றுமதித் தொழிலை £45 மிலியன் என்ற நிலையிலிருந்து £120 மிலியனாக உயரச் செய்தது மூலதனத்திற்கான இந்த வேண்டலின் விரிவாக்கம் மட்டுமல்ல என்பது உறுதி. மேலும் கிரிமியப் போரினால் விழுங்கப்பட்ட நாட்டின் வருடாந்தரச் சேமிப்பு இந்தப் பெரும் வேண்டலுக்கான வழங்கலின் இயற்கை ஆதாரம் ஆவதாக ஓவர்ஸ்டோன் சொல்வதன் பொருள் என்ன? முதலாவதாக, சின்னஞ்சிறு கிரிமியப் போரிலிருந்து பெரிதும் மாறுபட்டு இருந்த 1792-1815 போரின்போது இங்கிலாந்து மூலதனம் திரட்டியதே, எப்படி? இரண்டாவதாக, இயற்கை ஆதாரம் வற்றிப் போய்விட்டதென்றால், மூலதனம் எந்த ஆதாரத்திலிருந்துதான் வந்தது? இங்கிலாந்து அயல் நாடுகளிலிருந்து கடன் கேட்கவில்லை என்பது தெரிந்ததே. ஆனால் இயற்கை ஆதாரத்திற்குப் பக்கத்தில் ஒரு செயற்கை ஆதாரமும் இருக்குமானால் ஒரு நாடுபோரில் இயற்கை ஆதாரத்தையும் தொழிலில் செயற்கை ஆதாரதத்தையும் பயன்படுத்திக் கொள்வதுதான் அந்நாட்டுக்கு நல்லது. ஆயின் பழைய பண - மூலதனம் மட்டுமே கிடைக்கக் கூடியதாய் இருந்தால், உயர்ந்த வட்டி விதத்தின் மூலம் அது

*தன் செயல் திறனை இருமடங்காக்கிக் கொள்ளக் கூடுமா? நாட்டின் வருடாந்தர சேமிப்புகள் (இங்கு இவை நுகரப்பட்டு விட்டதாகக் கொள்ளப்பட்டன) பண - மூலதனமாகத்தான் மாற்றப்படுகின்றன என்று திருவாளர் ஓவர்ஸ்டோன் கருதுவது தெளிவாய்த் தெரிகிறது. ஆனால் உண்மை மூலதனத்திரட்டல், அதாவது உற்பத்தி விரிவாக்கமும் உற்பத்திச் சாதனப் பெருக்கமும் சிறிதும் நடைபெறவில்லை என்றால், இந்த உற்பத்தியின் மீது கடன்பட்டவர் பணி வகையில் கொண்டாடும் பாத்தியதைகளின் திரட்டலிலிருந்து என்ன நன்மை விளையும்?*

*இலாப வீதம் உயருவதால் 'மூலதனத்தின் மதிப்பில்' ஏற்படும் உயர்வும் பண - மூலதனத்திற்கான வேண்டல் அதிகரிப்பதால் ஏற்படும் உயர்வும் ஒன்றெனக் கருதுகிறார் ஓவர்ஸ்டோன். இந்த வேண்டலானது எவ்விதத்தும் இலாப வீதத்தைச் சார்ந்திராத காரணங்களால் உயரலாம். 1847இல் உண்மை மூலதனத்தின் மதிப்பிறக்கத்தால் இவ்வேண்டல் உயர்ந்ததை அவரே எடுத்துக் காட்டுகிறார். தமது நோக்கத்திற்கு எது பொருத்தம் என்று பார்த்து மூலதனத்தின் மதிப்பை உண்மை மூலதனத்திற்கோ பண - மூலதனத்திற்கோ உரியதாக்குகிறார்.*

*நமது வங்கிக் கோமானின் வஞ்சகமும், வங்கியாளருக்குரிய குறுகிய மனம் படைத்த அவரது கண்ணோட்டமும்; அதன் உபதேச வாடையும் பின்வருவதில் மேலும் வெளிப்படுகின்றன: (3728.கேள்வி:) உண்டியல் கழிவு வீதமானது வணிகருக்கு எவ்வித முக்கியத்துவமும் அற்றதென நம்புவதாக சொல்லியிருக்கிறீர்கள்; சாதாரண இலாப வீதம் என்று எதைக் கருதுகிறீர்கள் என்பதைச் சொல்வீர்களா'?- இந்தக் கேள்விக்கு பதில் அளிப்பது 'சாத்தியமில்லை' என்று திருவாளர் ஓவர்ஸ்டோன் அறிவிக்கிறார்,- '3729. சராசரி இலாப வீதம் 7முதல் 10% எனக் கொள்வோமானால், உண்டியற் கழிவு வீதத்தில் 2 முதல் 7 அல்லது 8% மாறுபாடு என்பது இலாப வீதத்தை முக்கியமாய் பாதித்தாக வேண்டும், அல்லவா?' (இந்தக் கேள்வியை கூட முனைவு - இலாப வீதத்தை இலாப வீதத்தோடு சேர்த்துக் குழப்படி செய்து இலாபவீதமானது வட்டிக்கும் முனைவு இலாபத்திற்கும் பொதுவான ஆதாரமாகும் என்ற உண்மையைக் காணத்தவறுவதாகும். வட்டி வீதம் இலாப வீதத்தை அப்படியே விட்டுவைக்க கூடுமே தவிர, முனைவு-இலாபத்தை விட்டு வைக்காது. ஓவர்ஸ்டோன் பதிலளித்தார்:) 'முதலாவதாக யாரும் தங்கள் இலாபத்திற்கு கடும் தடையாகிற கழிவு வீதத்தில் பணம் செலுத்த மாட்டார்கள்: அப்படிச் செய்வதைக் காட்டிலும் தங்கள் தொழிலையே நிறுத்திக் கொள்வார்கள்.' (ஆம்,*

தங்களை நாசமாக்கிக் கொள்ளாமல் இப்படிச் செய்ய முடியுமானால் செய்வார்கள். தங்கள் இலாபம் உயர்ந்திருக்கும்வரை, கழிவுத் தொகையைச் செலுத்த விரும்புவதால் செலுத்துகிறார்கள்; இலாபம் குறைந்திருக்கும் போது, செலுத்தித்தான் ஆக வேண்டும் என்பதால் செலுத்துகிறார்கள்) 'கழிவு என்பதன் பொருளென்ன? ஒருவர் ஏன் உண்டியலை கழிவு செய்கிறார்?... ஏனென்றால் இன்னும் பெரிய அளவிலான மூலதனத்தை ஆள விரும்புகிறார்,' (Halte-La!) ஏனென்றால் முடக்கப்பட்ட தமது மூலதனம் முன் கூட்டியே பண வடிவில் மீண்டு வருமாறு செய்யவும் தமது தொழில் நின்று போய் விடாமல் தடுக்கவும் அவர் விரும்புகிறார்; ஏனென்றால் அவ்வப்போது செலுத்த வேண்டியவற்றை உரிய காலத்தில் அவர் செலுத்தியாக வேண்டும். தொழில் சிறப்பாக நடைபெறும் போதுதான், அல்லது அவர் வேறொருவரின் மூலதனத்தை வைத்து ஊக வாணிபம் செய்யும் போதுதான் அவருக்கு மேலும் மூலதனம் தேவைப்படுகிறது.) 'இன்னும் பெரிய அளவிலான மூலதனத்தை அவர் ஆள விரும்புவது ஏன்? அந்த மூலதனத்தை ஈடுபடுத்த விரும்புவது ஏனென்றால் அப்படிச் செய்வது அவருக்கு இலாபகரமானது; உண்டியற் கழிவு அவரது இலாபத்தை அழித்துவிடுமானால் இது அவருக்கு இலாபகரமாய் இருக்காது.

தொழிலை விரிவாக்குவதற்காக மட்டுமே மாற்று உண்டியல்கள் கழிவு செய்யப்படுவதாகவும், தொழில் இலாபகரமாய் இருப்பதால் விரிவாக்கப்படுவதாகவும் இந்தத் தன்னகங்கார தர்க்க ஞானி அனுமானம் செய்து கொள்கிறார். முதல் அனுமானம் தவறானது. சாதாரணத் தொழிலதிபர் தமது மூலதனத்தை முன்கூட்டியே பண வடிவம் பெறச் செய்வதற்காகவும், இவ்விதம் தமது மறுவுற்பத்தி நிகழ் முறையை நில்லாமல் நடைபெறச் செய்வதற்காகவும் உண்டியலைக் கழிவு செய்கிறார். தமது தொழிலை விரிவாக்குவதற்காகவோ கூடுதல் மூலதனம் பெறுவதற்காகவோ அல்ல, தான் கொடுக்கிற கடனை பெறுகிற கடனால் நேர் செய்து கொள்வதற்காகவே இப்படிச் செய்கிறார். அவர் கடன் - செலாவணியைக் கொண்டு தமது தொழிலை விரிவாக்க விரும்பினால், உண்டியல்களைக் கழிவு செய்வது அவருக்கு அவ்வளவாய்ப் பயன்படாது; ஏனென்றால் இது ஏற்கனவே அவர்கையிலிருக்கும் பண - மூலதனத்தை ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்துக்கு மாற்றுவதே ஆகும்; இதற்குப் பதில் அவர் இன்னும் நீண்ட காலத்திற்குரியதாய் நேரடிக் கடன் வாங்கிக் கொள்வார்,- கடன்-செலாவணியில் மோசடி செய்பவர் தமது தொழில்

நடவடிக்கைகளை விரிவாக்கிக் கொள்வதற்காக இழிவான ஒரு வர்த்தகப் பேரத்தை இன்னொரு பேரத்தால் மூடி மறைப்பதற்காக தமது பண வசதி உண்டியல்களைக் கழிவு செய்து பணம் பெறுவார்; இலாபம் சம்பாதிப்பதற்காக அல்ல, பிறிதொருவரின் மூலதனத்தை கைப்பற்றுவதற்காகவே இப்படிச் செய்வார்.

இவ்வாறு திருவாளர் ஓவர்ஸ்டோன் உண்டியல் கழிவு செய்தலை மூலதனத்தைக் குறிக்கும் உண்டியல்களை ரொக்கப் பணமாய் மாற்றுதலென இனங்காட்டுவதற்குப் பதில் கூடுதல் மூலதனம் கடனாய்ப் பெறுதலென இனங்காட்டிய போதிலும், இடுக்கி இறுக்கப்பட்டதும் நொடிப்பொழுதில் பின்வாங்குகிறார்.- *(3730. கேள்வி:)* 'வணிகர்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள், கழிவு வீதம் தற்காலிகமாய் உயர்ந்தாலும் கூட குறிப்பிட்ட காலத்திற்கு அவர்கள் தொடர்ந்து காரியமாற்றக் கூடாதா?'*(ஓவர்ஸ்டோன்:)* 'குறிப்பிட்ட எந்தவொரு கொடுக்கல் வாங்கலிலும் ஒருவர் உயர்ந்த வட்டி வீதத்தில் அல்லாமல் குறைந்த வட்டி வீதத்திலேயே மூலதனத்தை ஆள முடியுமானால், பிரச்சனையை இப்படி வரம்பிற்குட்பட்டு நோக்குகையில், அது அவருக்கு வசதியானதே என்பதில் ஐயமில்லை'.-மறுபுறம், வரம்பிற்கே உட்படாத ஒரு கண்ணோட்டம் தான் திருவாளர் ஓவர்ஸ்டோன் தமது மூலதனத்தை மட்டும், வங்கி - மூலதனத்தை மட்டும் 'மூலதனமாகப்' புரிந்து கொள்வதைச் சாத்தியமாக்குகிறது; இந்தக் கண்ணோட்டத்தினால்தான் அவர் தம்மிடம் மாற்று உண்டியல் கழிவு செய்ய வருகிறவரை மூலதனம் இல்லாதவர் என்று அனுமானம் செய்து கொள்ள முடிகிறது. பின்னவரின் மூலதனம் சரக்கு வடிவில் இருந்துவருகிறது, அல்லது அவரது மூலதனத்தின் பணவடிவம் மாற்று உண்டியலாய் இருக்கிறது, இந்த உண்டியலைத் திருவாளர் ஓவர்ஸ்டோன் வேறொரு பண வடிவத்துக்கு மாற்றித் தருகிறார் என்பதுதான் இந்த அனுமானத்துக்குக் காரணம்.

*3732.* '1844ஆம் வருடச்சட்டம் தொடர்பாக இங்கிலாந்து வங்கியிலுள்ள பொற்பாளத்தின் அளவுக்கேற்ப சராசரி வட்டிவீதம் என்னவாய் இருந்ததென்று உங்களால் சொல்ல முடியுமா? பொற்பாளத்தின் அளவு சுமார் £9,000,000 அல்லது £10,000,000 ஆக இருந்தபோது வட்டி வீதம் 6 அல்லது 7 சதவிதமாக இருந்தது என்பதும்; பொற்பாளத்தின் அளவு £16,000,000ஆக இருந்தபோது வட்டி வீதம் 3முதல் 4% ஆகவும் இருந்தது என்பதும் உண்மைதானா?' (கேள்வி

கேட்பவர் திருவாளர் ஓவர்ஸ்டோனை நெருக்கிப் பிடித்து, இங்கிலாந்து வங்கியிலிருக்கும் பொற்பாளத்தின் அளவினது தாக்கத்திற்குட்படும் வட்டி வீதத்தை மூலதனத்தின் மதிப்பினது தாக்கத்திற்குட்படும் வட்டி வீதத்தின் அடிப்படையில் விளக்கும்படி செய்ய விரும்புகிறார்.)- 'அப்படியிருக்குமென நான் கருதவில்லை;.... என்றாலும், அப்படி யிருக்குமானால் 1844 ஆம் வருடச் சட்டம் கையாண்டவற்றைக் காட்டிலும் மிகக் கடுமையான வழிமுறைகளை நாம் கையாள வேண்டும் என்று நினைக்கிறேன். ஏனென்றால் பொற்பாளச் சேமிப்பு எவ்வளவு அதிகமோ வட்டிவீதம் அவ்வளவு குறைவு என்பது உண்மையாகவே இருந்தாலும் கூட, இந்தக் கண்ணோட்டத்தின்படி நாம் பொற்பாளச் சேமிப்பை அளவு கடந்து அதிகமாக்குவதற்கு முனைந்து பாடுபட வேண்டும்; பிறகு வட்டியைக் குறைத்து இல்லாமல் செய்துவிட வேண்டும்.'- இந்த அற்ப விகடத்துக்கு அசைந்து கொடுக்காமல் கேள்வியாளர் கேய்லீ தொடர்கிறார்: '3733. அப்படியிருக்குமானால், £ 5,000,000மிலியன் பொற்பாளம் வங்கியிடம் அடுத்த ஆறுமாத காலத்தில் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும் எனக் கொண்டால், பொற்பாளமானது அப்போது £ 16,000,000ஆக இருக்கும்; இவ்விதம் வட்டி வீதமானது 3அல்லது 4 சதவீதமாய்க் குறைவதாகக் கொண்டால், வட்டி வீதத்திலான வீழ்ச்சிக்கு நாட்டின் வர்த்தகம் பெருமளவில் குறைந்து போனதே காரணம் என்று எப்படிச் சொல்லலாம்?- வட்டி வீதத்திலான சமீபத்திய உயர்வு, வட்டி வீதத்திலான வீழ்ச்சி அல்ல நாட்டின் வர்த்தகத்தில் ஏற்படும் பெரும் அதிகரிப்புடன் நெருங்கிய தொடர்புடையதாகும் என்றேன்.'-ஆனால் கேய்லீ சொல்வது இதுதான்; தங்கச் சேம வைப்பு குறைவதோடு சேர்ந்து வட்டி வீதம் உயருவது தொழிலின் விரிவாக்கத்துக்கான அறி குறியாய் இருக்குமானால் தங்கச் சேம வைப்பின் பெருக்கத்தோடு சேர்ந்து வட்டி வீதம் குறைவது தொழிலின் குறுக்கத்துக்கான ஓர் அறிகுறியாய் இருந்தாக வேண்டும். இதற்கு ஓவர்ஸ்டோனிடம் பதிலேதும் இல்லை.- (3736. கேள்வி:) 'மூலதனம் பெறுவதற்கான கருவியே பணம் என்று தாங்கள்' (மூல பாடத்தில் எப்போதுமே 'மேதகையீர்') கூறக்கேட்டேன்.' (இதுவே தான், பணத்தைக் கருவியாகக் கருதுவதுதான் தவறு; அது மூலதனத்தின் ஒரு வடிவமாகும்.) '(இங்கிலாந்து வங்கியின்) பொற்பாளம் வெளிச் செல்லும் நிலையில், இதற்கு மாறாக, முதலாளிகள் பணம் பெறுவதே பெரும் பாடல்லவா-(ஓவர்ஸ்டோன்:) 'அல்ல, முதலாளிகள் அல்ல, முதலாளிகள் அல்லாதவர்கள்தாம் பணம் பெற விரும்புகிறார்கள். ஏன்

விரும்புகிறார்கள்?....ஏனென்றால் முதலாளிகள் அல்லாதவர்களின் தொழிலை நடத்துவதற்கு முதலாளியினது மூலதனத்தின் மீதான ஆளுகையைப் பணத்தின் வாயிலாக அவர்கள் பெறுகிறார்கள்.'- ஆலையதிபர்களும் வணிகர்களும் முதலாளிகள் அல்ல என்றும், முதலாளியின் மூலதனம் பண - மூலதனம் மட்டுமே என்றும் இங்கு அவர் பட்டவர்த்தனமாய்ப் பறை சாற்றுகிறார்.-'3737. மாற்று உண்டியல் எடுப்பவர்கள் முதலாளிகள் அல்லவா?-மாற்று உண்டியல் எடுப்பவர்கள் முதலாளிகளாய் இருக்கலாம், இல்லாமலும் போகலாம்.'-இங்கு அவர் மாட்டிக்கொண்டு விடுகிறார்.

இதன் பிறகு அவரிடம், வணிகர்களின் மாற்று உண்டியல்கள் விற்கப்பட்ட அல்லது கப்பலேற்றப்பட்ட சரக்குகுளைக் குறிக்குமா என்று கேட்கப்படுகிறது. வங்கி நோட்டு எப்படித் தங்கத்தைக் குறிக்குமோ அதேபோல் இந்த உண்டியல்களும் சரக்குகளின் மதிப்பைக் குறிக்கும் என்பதை அவர் மறுக்கிறார். (3740, 3741.) இது ஒரு வகையில் துடுக்குத்தனமே.

'3742. வணிகரின் குறிக்கோள் பணம் பெறுவது அல்லவா?-அல்ல; உண்டியல் எடுப்பதில் பணம் பெறுவது குறிக்கோள் அல்ல; உண்டியலைக் கழிவு செய்வதில்தான் பணம் பெறுவது குறிக்கோளாகும்.'- மாற்று உண்டியல்கள் எடுப்பது சரக்குகளை கடன்-செலாவணிப் பணத்தில் ஒரு வடிவத்திற்கு மாற்றுவதாகும்; இதேபோல் மாற்று உண்டியல்கள் கழிவு செய்வதும் இந்தக் கடன் செலாவணிப் பணத்தை இன்னொரு வடிவத்துக்கு அதாவது வங்கி - நோட்டுகளாக மாற்றுவது ஆகும். எப்படியானாலும் உண்டியல் கழிவு செய்வதன் நோக்கம் பணம் பெறுவதுதான் என்பதைத் திருவாளர் ஓவர்ஸ்டோன் இங்கு ஏற்றுக் கொள்கிறார். சற்று முன்னர்தான் அவர் சொன்னார், உண்டியல் கழிவு செய்தல் கூடுதல் மூலதனம் பெறும் வழியே தவிர மூலதனத்தை ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்துக்கு மாற்றும் வழி அல்ல என்று.

'3743. 1825, 1837, 1839ஆம் ஆண்டுகளில் பீதி ஏற்பட்டதாகச் சொல்கிறீர்கள், இதுபோன்ற பீதியின் நெருக்குதலில் வணிகச் சமுதாயத்தின் பேராவல் யாது? அவர்களது குறிக்கோள் மூலதனத்தை வசப்படுத்துவதா அல்லது சட்டச் செலவாணியை வசப்படுத்துவதா?- அவர்களது குறிக்கோள் தமது வர்த்தகத்து ஆதரவாக மூலதன ஆளுகையைப் பெறுவதே.'-கடன் மதிப்பு இல்லாத நிலை ஏற்படுவதால் தங்கள் மீதான கெடு முடிந்த மாற்று உண்டியல்களுக்காக

கொடுப்புச் சாதனம் பெறுவதே அவர்கள் நோக்கம்; இப்படிச் செய்தால்தான் அவர்கள் தமது சரக்குகளை விலை குறைந்து தர வேண்டி இராது. அவர்களிடம் மூலதனமே இல்லாமல் போனால், கொடுப்புச் சாதனத்தோடு கூடவே அதை வரப் பெறுகிறார்கள்; ஏனென்றால் ஈடாக ஒன்றும் தராமலேயே அவர்கள் மதிப்பு வரப்பெறுகிறார்கள். பணம் என்ற முறையிலேயே பணம் பெறும் ஆவலானது எப்போதுமே மதிப்பு சரக்கு வடிவத்திலிருந்து அல்லது கடன் கொடுத்தோரின் பாத்தியதை களது வடிவத்திலிருந்து பண வடிவத்துக்கு மாற்றும் ஆசையில் அடங்கி இருக்கிறது. ஆகவே, நெருக்கடிகளை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலும் கூட, கடனாக மூலதனம் பெறுவதற்கும் உண்டியல் கழிவு செய்வதற்கும் பெருத்த வேறுபாடு உள்ளது; பின்னது பண பாத்தியதைகளை ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்துக்கோ, அல்லது உண்மைப் பணமாகவோ மாற்றுவதே ஆகும்.

(இவ்விடத்தில் பதிப்பாசிரியர் என்ற முறையில் உரிமை எடுத்துக்கொண்டு சிலவற்றை இடைக்குறிப்பாய் எடுத்துரைக்கிறேன்.

நார்மனையும், அவ்வாறே லாய்டு-ஓவர்ஸ்டோனையும் பொறுத்தவரை வங்கியாளர் எப்போதுமே மற்றவர்களுக்கு 'மூலதனம் முன்னீடு செய்கிறவராய்' இருக்கிறார்; அவருடைய வாடிக்கையாளர்கள் அவரிடமிருந்து 'மூலதனம்' கேட்பவர்களாய் இருக்கிறார்கள். தம்மிடம் வந்து மாற்று உண்டியல்களைக் கழிவு செய்து காசாக்கிக் கொள்கிறவர்கள் 'மூலதன ஆளுகையைப் பெற விரும்புவதால்' (3729) இப்படிச் செய்வதாகவும், இவர்கள் 'குறைந்த வட்டி வீதத்தில் மூலதன ஆளுகையைப் பெற (3730) முடிந்தால் இன்புறுவதாகவும் ஓவர்ஸ்டோன் சொல்கிறார். 'பணம் மூலதனம் பெறுவதற்கான கருவியே' என்கிறார். (3736); பீதி நிலவும் போது வணிகச் சமூதாயத்தின் பேராவல் 'மூலதன ஆளுகையைப் பெற' (3743) வேண்டும் என்பதுதானாம். மூலதனம் என்றால் என்ன என்பது குறித்து லாயிடு - ஓவர்ஸ்டோன் இவ்வளவு குழப்பமும் குளறுபடியும் செய்த போதிலும், ஒன்று மட்டுமாவது தெளிவாய் இருக்கிறது; அதாவது வங்கியாளர் தமது வாடிக்கை யாளருக்குக் தருவதை மூலதனம் என்று அவர் பெயரிட்டு அழைக்கிறார் - இந்த மூலதனம் இதற்கு முன் வாடிக்கையாளர் வசம் இல்லாதது, ஏற்கனவே அவர்வசம் இருப்பதன் நிரப்புக் கூறாக அவருக்கு முன்னீடு செய்யப்பட்டது.

வங்கியாளர் பணவடிவில் தயாராய் இருக்கக் கூடிய சமுதாய மூலதனத்தை (கடன்கள் மூலமாய்) விநியோகம் செல்பவராகப்

பணிபுரிந்தே பழகிவிட்டதால், தம் கையிலிருந்து பணம் கொடுக்கிற ஒவ்வொரு பணியையுமே கடன் கொடுத்தல் எனக் கருதிவிடுகிறார். அவர் கொடுக்கும் பணம் எல்லாம் கடனாகவே அவருக்குத் தெரிகிறது. பணம் நேரடியாகவே கடனாய்த் தரப்படும்போது, உண்மையும் இதுதான். உண்டியல் கழிவும் தொழிலில் பணம் முதலீடாகும் போது உண்டியலின் கெடு முடியும்வரை உண்மையில் அது அவராலேயே முன்னீடு செய்யப்படுகிறது. இதனால்தான் தாம் செலுத்தும் கொடுப்புகள் எல்லாம் முன்னீடுகளே என்ற கருத்து அவரிடம் வளருகிறது; மேலும், வட்டி அல்லது இலாபம் பெறும் குறிக்கோளுடன் செய்யப்படும் ஒவ்வொரு பணமுதலீடும் - பொருளாதாரக் கண்ணோட்டத்தில் தனிப்பட்ட ஒருவராய் இருக்கும் பண உடைமையாளர் தொழில் முனைவராய் இருக்கும் தமக்கே செய்து கொள்ளும் பண முன்னீடாகக் கருதப்படுகிறது என்ற அர்த்தத்தில் மட்டுமல்ல, வங்கியாளர் தமது வாடிக்கையாளருக்குக் கடனாய்த் தரும் பணத் தொகை ஏற்கனவே பின்னவரின் வசம் இருக்கும் மூலதனத்தைப் பெருகச் செய்கிறது என்ற திட்டவட்டமான அர்த்தத்திலும் கூட இந்தக் கொடுப்புகள் எல்லாம் முன்னீடுகளே என்ற கருத்து அவரிடம் வளருகிறது.

இந்தக் கண்ணோட்டம்தான் வங்கியாளரின் அலுவலகத்திலிருந்து அரசியல் பொருளாதாரத்திற்குப் பெயர்க்கப்பட்டு இந்தக் குழப்பம் தரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது - வங்கியாளர் தமது வாடிக்கையாளரிடம் ரொக்கப் பணமாக ஒப்படைப்பது மூலதனமா, சுற்றோட்ட ஊடகம் அல்லது செலாவணி ஆகிய வெறும் பணமா?. இந்தச் சர்ச்சைக்கு - அடிப்படையின் எளியதான இந்தச் சர்ச்சைக்கு முடிவுகாண வேண்டுமானால் நாம் வங்கி வாடிக்கையாளரின் இடத்தில் நம்மையே இருத்திக் கொள்ள வேண்டும். எல்லாமே இந்த வாடிக்கையாளர் கேட்பதும் பெறுவதும் என்ன என்பதைப் பொறுத்தது.

வங்கியானது, அதன் வாடிக்கையாளரிடமிருந்து எவ்வித பிணையமும் பெறாமல் அவரது சொந்தப் பொறுப்பிலேயே அவருக்கு கடன் வழங்குமானால் குழப்பம் ஏதும் இல்லாமல் தெளிவாய் இருக்கிறது அப்போது அவர் ஏற்கெனவே தாம் முதலீடு செய்துள்ள மூலதனத்திற்கு ஒரு நிரப்புக் கூறாக குறிப்பிட்ட மதிப்பு முன்னீடு செய்யப் பெறுகிறார் என்பது உறுதி. அவர் அதனைப் பண வடிவில் வரப் பெறுகிறார்; ஆக, இது வெறும் பணம் மட்டுமல்ல, பண - மூலதனமும் ஆகும்.

மறுபுறம், அவர் பிணையங்கள் போன்றவற்றை ஈடாய்த் தந்து முன்னீடு பெறுவாரானால், திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அவருக்குத் தரப்படும் பணம் என்ற அர்த்தத்தில் அது ஒரு முன்னீடாகும். ஆனால் அது மூலதன முன்னீடாகாது. ஏனென்றால் பிணையங்களும் மூலதனத்தைக் குறிப்பதையே, பார்க்கப் போனால் முன்னீட்டைக் காட்டிலும் பெரிய தொகையைக் குறிப்பவை ஆகும். ஆகவே கடன் பெறுகிறவர் பிணையமாக ஒப்படைப்பதைக் காட்டிலும் குறைந்த மூலதன மதிப்பையே பெற்றுக்கொள்கிறார்; இது அவருக்குக் கூடுதல் மூலதன சம்பாத்தியத்தைக் குறிப்பதன்று. அவர் இந்தக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவது அவருக்குப் பணம் தேவைப்படுவதால்தானே தவிர, மூலதனம் தேவைப்படுவதால் அல்ல - அதுதான் அவரிடம் பிணையங்களாக இருக்கிறதே. ஆக, இங்குப் பணம் முன்னீடு செய்யப்படுகிறதே தவிர, மூலதனம் அல்ல.

உண்டியல் கழிவு செய்வதன் மூலம் கடன் வழங்கப்பட்டால், முன்னீடு என்ற வடிவமே கூட மறைந்துவிடுகிறது. அப்போது அது வெறும் வாங்கல் - விற்றலாகிவிடுகிறது. உண்டியலானது புறக்குறிப்பு எழுதப்பட்டு வங்கியின் வசமாகிறது; பணமானது அதே போது வாடிக்கையாளரின் வசமாகிறது. அவர் எதையும் திருப்பிச் செலுத்துவது என்ற பேச்சே இல்லை. வாடிக்கையாளர் மாற்று உண்டியலையோ ஏதாவது இது போன்ற கடன்-செலாவணிப் பத்திரத்தையோ கொடுத்து ரொக்கப் பணம் வாங்குவாரானால், பருத்தி, இரும்பு, தானியம் போன்ற தமது ஏனைய சரக்குகளைக் கொடுத்து ரொக்கப் பணம் வாங்குவது எந்த அளவுக்கு முன்னீடாகும் அல்லது ஆகாதோ, அதே அளவுக்குத்தான் இதுவும் முன்னீடாகும் அல்லது ஆகாது. இப்படியிருக்க, இதை மூலதன முன்னீடு என்று அழைப்பதற்கு வழியே இல்லை. ஒரு வணிகருக்கும் வேறொரு வணிகருக்கும் இடையிலான ஒவ்வொரு வாங்கலும் விற்றலும் மூலதனத்தின் கைமாற்றம் ஆகும். ஆனால் மூலதனத்தின் கைமாற்றம் பரஸ்பரமானதாய் இல்லாமல், ஒருவழிப்பட்டதாயும் குறிப்பிட்ட காலத்துக்குரியதாயும் இருக்கும்போது மட்டுமே மூலதன முன்னீடு நடைபெறுகிறது. ஆகவே, உண்டியலானது விற்கப்பட்ட சரக்குகள் எதையும் குறிக்காத ஊகவாணிப உண்டியலாய் இருக்கும் போதுதான் உண்டியல் கழிவு மூலமான மூலதன முன்னீடு நடைபெற முடியும்; இப்படிப்பட்ட உண்டியல் என்று தெரிந்தால் எந்த வங்கியாளரும் அதை ஏற்கமாட்டார். ஆக, முறையான உண்டியல் - கழிவுத் தொழிலில் வங்கியின் வாடிக்கையாளர் பெற்றுக் கொள்வது

மூலதன முன்னீடோ பண முன்னீடோ அல்ல. விற்கப்பட்ட சரக்குகளுக்கான பணத்தையே அவர் பெற்றுக் கொள்கிறார்.

வாடிக்கையாளர் ஒரு வங்கியிலிருந்து மூலதனம் கேட்பதும் பெறுவதுமான நேர்வுகள் வேறு, அவர் வங்கியிலிருந்து பண முன்னீடு மட்டும் பெறுகிற அல்லது பணம் வாங்குகிற நேர்வுகள் வேறு என்பது இவ்வழியில் தெளிவாகிறது. யார் செய்தாலும் திருவாளர் லாய்டு-ஓவர்ஸ்டோன் அரிதிலும் அரிதான சந்தர்ப்பங்களில் தவிர துணை பிணையம் பெறாமல் தமது நிதியிலிருந்து முன்னீடு செய்யவே மாட்டார் என்பதால் (அவர் மான்செஸ்டரில் எனது தொழில் நிறுவனத்திற்கு வங்கியாளராய் இருந்தார்). தாராள மனம் படைத்த வங்கியாளர்கள் மூலதனம் வேண்டுமென்று கேட்டுவரும் ஆலையதிபருக்குப் பெரும் பெரும் மூலதனக் கடன்களை வாரிவழங்கியதாக அவர் தீட்டும் கவித்துவ வருணனைகள் அப்பட்டமான கற்பனைப் புனைவுகளே என்பதும் தெளிவாய்த் தெரிகிறது.

இங்கு எடுத்துக்காட்ட வேண்டிய ஒன்று என்னவென்றால், சாராம்சத்தில் இதையேதான் அத்தியாயம் XXXII இல் மார்க்ஸ் இப்படிச் சொல்கிறார்: 'கொடுப்புச் சாதனத்திற்கான வேண்டல் என்பது வணிகர்களும் உற்பத்தியாளர்களும் ஈடாய்த் தருவதற்கு நல்ல பிணையங்களை வைத்துள்ளவரை பணமாக மாற்றுரிமை பெறுவதற் கான வேண்டலே ஆகும்; துணைப் பிணையம் ஏதும் இல்லாத போதெல்லாம் இது பண - மூலதனத்திற்கான வேண்டல் ஆகும்; அதாவது கொடுப்புச் சாதனம் முன்னீடு செய்யப்படுவது அதற்கு பண வடிவத்தை மட்டுமல்லாமல், கொடுப்பை நிறைவேற்றுவதற்கு அதனிடம் இல்லாத சமதையையும் தருவதாகும் - இந்தச் சமதையின் வடிவம் எதுவாகவும் இருக்கலாம்.'- மேலும் அத்தியாயம் XXXIII சொல்கிறார்: 'வளர்ச்சி பெற்ற கடன் - செலாவணி அமைப்பில், பணம் வங்கியாளர்களின் கையில் குவிந்திருக்க, எப்படியும் பெயரளவிலாவது வங்கியாளர்களோ அதை முன்னீடு செய்கிறவர்கள். இந்த முன்னீடு சுற்றோட்டத்தி லிருக்கும் பணத்தை மட்டுமே குறிப்பதாகும். இது சுற்றோட்டத்தின் முன்னீடாகுமே தவிர அது சுற்றியோடச் செய்கிற மூலதனங்களின் முன்னீடாகாது.' இத்துறை குறித்து நன்கறிந்த திருவாளர் சாப்மனும் உண்டியல் கழிவுத் தொழில் பற்றிய இக் கண்ணோட்டத்தை உறுதி செய்கிறார்: வ.கு.1857: 'வங்கியாளர் உண்டியலை வைத்திருக்கிறார், வங்கியாளர் உண்டியலை வாங்கி இருக்கிறார்.' சாட்சியம், கேள்வி 5139.

*இப்பொருள் குறித்து அத்தியாயம் XXVIII மீண்டும் பரிசீலிப்போம். —பி.எங்கெல்ஸ்.)*

*'3744. 'மூலதனம்' என்ற சொல்லுக்கு உள்ளபடியே என்னதான் பொருள் கொள்கிறீர்கள்? தயவுசெய்து இதை விளக்குவீர்களா?'- (ஓவர்ஸ்டோன்:) 'மூலதனம் பல்வேறு சரக்குகளால் ஆனது, இந்தச் சரக்குகளைக் கொண்டு தொழில் நடைபெறுகிறது; நிலை-மூலதனமும் உண்டு, சுழல்-மூலதனமும் உண்டு. கப்பல் துறை, கப்பல் துறை மேடை.... இவையெல்லாம் நிலை மூலதனம்; மளிகைப் பண்டங்கள் துணிமணிகள் இவையெல்லாம் சுழல் - மூலதனம்.'*

*'3745. பொற்பாள வெளிக் கசிவினால் நாடு அல்லல்படுகிறதா?-அச் சொல்லுக்குரிய அறிவுக்குகந்த அர்த்தத்தில் அப்படியில்லை.' (இதையடுத்து வருவதெல்லாம் பழைய ரிக்கார்டியப் பணத் தத்துவமே.)...'எல்லாம் இயல்பாய் நடைபெறுகையில் உலகத்தினுடைய பணம் வெவ்வேறு உலக நாடுகளிடையே குறிப்பிட்ட விகிதப் பங்குகளில் விநியோகமாகிறது; அந்த விகிதங்கள் எப்படி அமைகின்றன என்றால், (பணத்தின்) அந்த விநியோகத்தில் ஏதேனும் ஒரு நாட்டுக்கும், கூட்டாக உலகின் ஏனைய எல்லா நாடுகளுக்கும் இடையிலான வாணிக உறவு பண்ட மாற்று உறவாக இருக்கும்; ஆனால் குலைவுண்டாக்கும் நிலைமைகள் எழுந்து அவ்விநியோகத்தைப் பாதிக்கும் அந்நிலைமைகள் எழும்போது குறிப்பிட்ட ஏதேனுமொரு நாட்டின் பணத்தில் ஒரு பகுதியானது ஏனைய நாடுகளுக்குச் செல்கிறது.' '3746. மேன்மை தங்கிய தாங்கள் இப்போது 'பணம்' என்ற சொல்லை பயன்படுத்துகிறீர்கள். தாங்களே முன்பு இது மூலதன இழப்பு என்று கூறியதாகப் புரிந்து கொண்டேன்.- எதை மூலதன இழப்பென்றேன்?'-3747. பொற்பாள ஏற்றுமதியை?-நான் அப்படிச் சொல்லவில்லை. பொற்பாளத்தை மூலதனமாகக் கருதுவீர்களானால் அது மூலதன இழப்பு தான் என்பதில் சந்தேகமே இல்லை; உலகத்தினுடைய பணமாக அமைந்திருக்கும் அந்த உயர்நிலை உலோகங்களில் குறிப்பிட்ட விகிதப் பங்கை தந்துவிடுவதாகும் அது.' '3748. கழிவு வீதத்திலான மாற்றம் மூலதனத்தின் மதிப்பிலான மாற்றத்தின் அறிகுறிதான் என்று தாங்கள் கூறியதாகப் புரிந்து கொண்டேன்?- அவ்வாறுதான் கூறினேன்.' '3749, கழிவு வீதமானது பொதுவாக இங்கிலாந்து வங்கியிலிருக்கும் பொற்பாளச் சேமிப்பு நிலவரத்தைப் பொறுத்து மாறுவதாகக் கூறினீர்களே?- கூறினேன். ஆனால் ஒரு நாட்டில் இருக்கும் பணத்தின்*

*அளவில்' (உள்ளபடியே இருந்துவரும் தங்கத்தின் அளவைத்தான் இங்கு சொல்கிறார் என்பது இதிலிருந்து தெரிகிறது)' ஏற்படும் மாற்றத்தால் வட்டி வீதத்தில் ஏற்படும் ஏற்ற இறக்க அலைவுகள் மிகச் சிறியவை என்று முன்பே குறிப்பிட்டேன்.'*

*'3750. ஆக, கழிவு வீதத்தில் தற்காலிக அதிகரிப்பு என்றாலும் வழக்கத்தைக் காட்டிலும் தொடர்ச்சியான அதிகரிப்பு ஏற்படும்போது மூலதனம் முன்பு இருந்ததைக் காட்டிலும் குறைந்து போவதாகத் தாங்கள் சொல்கிறீர்களா?- அச் சொல்லுக்குரிய ஓர் அர்த்தத்தில் குறைந்து போவதாகச் சொல்கிறேன். மூலதனத்துக்கும் அதற்கான வேண்டலுக்கும் இடையிலான விகித உறவு மாறிப்போகிறது; இந்த மாற்றம் இது வேண்டல் அதிகரிப்பதால் ஏற்படக் கூடுமே தவிர, மூலதன அளவு குறைவதால் அல்ல.' (ஆனால் சற்று முன்னர்தான் மூலதனம்-பணம் அல்லது தங்கம் என்றார்; அதற்கும் சற்று முன்னர் வட்டி வீதத்திலான உயர்வுக்கு உயர்ந்த இலாப வீதத்தைக் காரணமாய்க் காட்டி விளக்கமளித்தார்; இந்த உயர்ந்த இலாபவீதத்துக்கு தொழில் அல்லது மூலதனத்தின் குறுக்கம் அல்ல, பெருக்கமே காரணம்.)*

*'3751. நீங்கள் குறிப்பாகச் சுட்டும் மூலதனம் யாது?- அது ஒவ்வொருவருக்கும் வேண்டிய மூலதனம் என்ன என்பதைப் பொறுத்தது. நாடு அதன் தொழிலை நடத்துவதற்காகத் தன் ஆளுகையில் வைத்துள்ள மூலதனத்தையே சொல்கிறேன்; அந்தத் தொழில் இரட்டிப்பாகும் போது, அதை நடத்திச் செல்வதற்குத் தேவைப்படும் மூலதனத்திற்கான வேண்டலின் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டாக வேண்டும்.' (இந்த வங்கியாளர் கெட்டிக்காரர், முதலில் தொழில் நடவடிக்கையை இரட்டிப்பாக்குகிறார், பிறகு இப்படி இரட்டிப்பாக்குவதற்குத் தேவைப்படும் மூலதனத்திற்கான வேண்டலை இரட்டிப்பாக்குகிறார். அவருக்கு அவருடைய வாடிக்கையாளர் மட்டுமே கண்ணில் தெரிகிறார்; இந்த வாடிக்கையாளர் தமது தொழிலின் பரிமாணத்தை இரட்டிப்பாக்குவதற்காக கூடுதலாய் மூலதனம் தரும்படி திருவாளர் லாய்டைக் கேட்கிறார்.)- 'மூலதனம் என்பது வேறு எந்தச் சரக்கையும் போன்றது தான்' (ஆனால் திருவாளர் லாய்டின் கருத்துப்படி மூலதனம் என்பது சரக்குகளின் முழு மொத்தமே தவிர வேறல்ல); 'அதன் விலை வழங்கல்-வேண்டலுக்கேற்ப மாறும்' (அதாவது சரக்குகள் தமது விலையை இருமுறை மாற்றிக் கொள்கின்றன ஒருமுறை சரக்குகள் என்ற விதத்திலும், மறுமுறை மூலதனம் என்ற விதத்திலும் இப்படிச் செய்கின்றன).*

'3752. கழிவு வீதத்திலான மாற்றங்கள் இங்கிலாந்து வங்கியின் கருவூலப் பெட்டிகளில் இருக்கும் தங்கத்தின் அளவாக மாற்றங்களோடு பொதுவாகத் தொடர்புடையவை. மேன்மை தங்கிய தாங்கள் அந்த மூலதனத்தைத்தான் சொல்கிறீர்களா?-அல்ல' - '3753. இங்கிலாந்து வங்கியில் பெருமளவில் மூலதனம் சேமித்து வைக்கப்பட்டிருப்பது உயர்ந்த கழிவு வீதத்தோடு தொடர்புடையதாய் இருந்த ஏதேனுமொரு சந்தர்ப்பத்தைத் தங்களால் எடுத்துக்காட்ட முடியுமா? - இங்கிலாந்து வங்கி மூலதன வைப்புக்குரிய இடமல்ல. அது பண வைப்புக்குரிய இடமே.' - '3754. வட்டி வீதம் மூலதன அளவைப் பொறுத்தது என்று தாங்கள் கூறியிருக்கிறீர்கள்; தயவு செய்து எந்த மூலதனம் என்பதைச் சொல்வீர்களா? இங்கிலாந்து வங்கியில் பொற்பாளம் பெருமளவில் சேமித்து வைக்கப்பட்டிருந்த போதே வட்டிவீதமும் உயர்ந்திருந்து ஏதேனுமொரு சந்தர்ப்பத்தைத் தங்களால் எடுத்துக்காட்ட முடியுமா?- மிக அநேகமாய் (ஆகா!) இங்கிலாந்து வங்கியிலிருக்கும் பொற்பாளத் திரட்டலும் குறைந்த வட்டி வீதமும் தற்செயலாய் ஒருங்கமையலாம். ஏனென்றால் மூலதனத்திற்கான வேண்டல் குறைந்திருக்கும் காலம்' (மூலதனம் என்றால் பண-மூலதனம்; இங்குக் குறிப்பிடப்படும் காலமாகிய 1844 -1845 செழுமைக் காலமாய் இருந்தது) 'மூலதனத்தை ஆளுவதற்கான சாதனம் அல்லது கருவி திரளக்கூடிய காலமாகத்தான் இருக்கிறது.'- '3755. அப்படியானால் கழிவு வீதத்துக்கும் இங்கிலாந்து வங்கியின் கருவூலப் பெட்டியிலிருக்கும் பொற்பாள அளவுக்கும் தொடர்பே இல்லையென்று நினைக்கிறீர்கள்?- தொடர்பு இருக்கலாம், ஆனால் அது கோட்பாடு வழிப்பட்ட தொடர்பன்று' (ஆனால் இவரது 1844ஆம் வங்கிச் சட்டம் வட்டிவீதத்தை தன் வசம் இருக்கும் பொற்பாள அளவைக் கொண்டு ஒழுங்கு செய்தலை இங்கிலாந்து வங்கியின் கோட்பாடு ஆக்கிற்று); 'இரண்டுக்குமிடையே தற்செயலாய் நிகழ்வுப் பொருத்தம் இருக்கலாம்.' '3758 உண்டியல் கழிவு வீதம் உயர்ந்து இருப்பதால் ஏற்பட்டுள்ள நெருக்குதல் நிலையில் இந்நாட்டில் வணிகர்களுக்கு மூலதனம் கிடைப்பதில்தான் இடர்பாடு உள்ளதே தவிர, பணம் கிடைப்பதில் அல்ல என்று நீங்கள் சொல்வதாக நான் புரிந்து கொள்வது சரிதானா?- நீங்கள் இரண்டை ஒன்று சேர்க்கிறீர்கள், அவற்றை நான் இவ்வடிவில் இணைக்கவில்லை; அவர்களுக்கு மூலதனம் கிடைப்பதில் இடர்பாடு உள்ளது. பணம்கிடைப்பதிலும் இடர்பாடு உள்ளது....பணம் கிடைப்பதிலுள்ள இடர்பாடும் மூலதனம் கிடைப்பதிலுள்ள இடர்பாடும் ஒன்றுதான் 'அடுத்தடுத்து வரும் இரு முன்னேற்றக் கட்டங்களில் நோக்கப்படுகையில் இது இருவேறு

இடர்பாடுகளாகத் தெரிகிறது.' 'இங்கே மீன் மீண்டும் வலையில் சிக்கிக் கொள்கிறது. முதலாவது இடர்பாடு மாற்று உண்டியலைக் கழிவு செய்வதில், அதாவது சரக்குகளைப் பிணையமாய்க் கொண்டு கடன் பெறுவதில் உள்ளது. இது மூலதனத்தை, அல்லது மூலதனத்தின் வர்த்தக அடையாளத்தைப் பணமாக மாற்றுவதிலுள்ள இடர்ப் பாடாகும். இந்த இடர்பாடு உயர்ந்த வட்டி வீதத்தில் வெளிப்படுகிறது, வேறு பலவற்றிலும் வெளிப்படுகிறது. ஆனால் பணம் கிடைத்தபிறகு, இரண்டாவது இடர்பாடாய் எழுவது என்ன? பணம் செலுத்தினால் போதும் என்றிருக்கும் போது யாருக்காவது தமது பணத்தைத் தொலைத்துக் கட்டுவதில் ஏதேனும் இடர்பாடு இருக்குமா?, வாங்க மட்டுமே வேண்டி இருக்குமானால் நெருக்கடிக் காலங்களில் கொள்முதல் செய்வதில் யாருக்காவது எதாவது இடர்பாடு ஏற்பட்டதுண்டா? வாதத்திற்காக வேண்டி, தானியம், பருத்தி போன்றவற்றில் ஏற்படும் குறிப்பிட்ட ஒரு•பஞ்சத்தைக் குறிக்கு மானால், இந்த இடர்பாடு இச் சரக்குகளின் விலையில் மட்டுமே வெளிப்படக்கூடும்; இது பண-மூலதனத்தின் மதிப்பில், அதாவது வட்டி வீதத்தில் வெளிப்படாது; முடிவாகப் பார்க்குமிடத்து, நம்மவரிடம் இப்போது அச்சரக்குகளை வாங்குவதற்குரிய பணம் இருப்பதால் தான் இந்த இடர்பாடு சமாளிக்கப்படுகிறது.'

'3760. ஆனால் உண்டியற் கழிவு வீதம் உயர்வதால் பணம் கிடைப்பதிலுள்ள இடர்பாடு அதிகரிக்குமே?- இடர்ப்பாடு அதிகரித் தாலும், நீங்கள் பணம் பெற விரும்புவது அல்ல அதற்குக் காரணம்; மூலதனம் கிடைப்பதிலுள்ள கூடுதலான இடர்ப்பாடு நாகரீக அரசின் சிக்கல் வாய்ந்த உறவுகளின்படி தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் வடிவம்தான் இது' (இவ்வடிவமே வங்கியாளருக்கு இலாபம் பெற்றுத் தருகிறது).

'3763. (ஓவர்ஸ்டோன் பதில்:) வங்கியாளர் இடையாளராயிருந்து, ஒரு பக்கம் வைப்புகளை வரப்பெற்றுக் கொள்கிறார். மறுபக்கம் அந்த வைப்புகளைப் பிரயோகிக்கிறார் அவற்றை மூலதனவடிவில் ஆட்களின் கைவசம் நம்பி ஒப்படைக்கிறார்.

அவர் மூலதனமென்று எதைச் சொல்கிறார் என்பது முடிவில் நமக்குத் தெரிந்துவிடுகிறது. அவர் பணத்தை நம்பி ஒப்படைப்பதன் மூலம்,-மங்கல வழக்கைக் குறைத்துக் கொள்வதனால் வட்டிக் கடன் கொடுப்பதன் மூலம் அந்தப் பணத்தை மூலதனமாக மாற்றுகிறார்.

*உண்டியல் கழிவு வீதத்திலான மாற்றம் ஒரு வங்கியில் இருக்கும் தங்கச் சேம வைப்பின் அளவிலோ தயாராய்க் கிடைக்கக்கூடிய பணத்தின் அளவிலோ ஏற்படும் மாற்றத்துடன் தொடர்புடையதாய் இருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது என்றும், உயர்ந்தபட்சமாய்ச் சொன்னால் தற்செயலான நிகழ்வுப் பொருத்தம் மட்டுமே உண்டு என்றும் தெரிவித்த பிறகு திருவாளர் ஓவர்ஸ்டோன் மீண்டும் சொல்கிறார்:*

*'3805. நாட்டிலிருக்கும் பணம் வெளிக்கசிவால் குறைந்து போகும் போது, அதன் மதிப்பு அதிகரிக்கிறது; இங்கிலாந்து வங்கியானது பணத்தின் மதிப்பிலான அந்த மாற்றத்தோடு ஒத்துப்போக வேண்டும்' (இங்கே பணத்தின் மதிப்பு என்பது மூலதனமாய் இருக்கும் பணத்தின் மதிப்பையே, அதாவது வட்டிவீதத்தையே ஆகும்; ஏனென்றால் பணமாயிருக்கும் பணத்தின் மதிப்பு சரக்குகளுடன் ஒப்பிடுகையில் மாறாது இருந்து வருகிறது); 'வட்டி வீதத்தை உயர்த்துவது என்னும் கலைச் சொல்லின் பொருள் இது தான்.'*

*'3819. நான் அந்த இரண்டையும் குழப்பிக் கொள்ளவே இல்லை.'-பணத்தையும் மூலதனத்தையும் சொல்கிறார்; அவற்றை அவர் வேறுபடுத்திப் பார்க்கவே என்பதால்தான் குழம்பிக் கொள்ளவும் இல்லை.*

*'3834. நாட்டிற்கு அவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதற்காக (1847இல் சோளத்திற்காக)' தரவேண்டியிருந்த மிகப் பெரும் தொகை மெய் நடப்பில் மூலதனமாகவே இருந்தது.'*

*'3841. உண்டியற் கழிவு வீதத்திலான மாற்றங்களுக்கும்' (இங்கிலாந்து வங்கியில்)' சேமவைப்பு நிலவரத்துக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு என்பதில் ஐயமில்லை; ஏனென்றால் சேமவைப்பு நிலவரமானது நாட்டிலுள்ள பணத்தின் அளவு அதிகரிப்பதையோ குறைவதையோ காட்டும் குறிமுள் ஆகும்; நாட்டிலுள்ள பணம் அதிகரிப்பது அல்லது குறைவதற்கேற்ப, அந்தப் பணத்தின் மதிப்பும் அதிகரிக்கும் அல்லது குறையும்; வங்கியின் உண்டியற் கழிவு வீதம் அந்த மாற்றத்துடன் ஒத்துப்போகும்.'-ஆக, ஓவர்ஸ்டோன் எண் 3755இல் திட்டவட்டமாக மறுத்ததை இங்கு ஏற்றுக் கொண்டுவிடுகிறார்.- '3842. அவற்றுக்கிடையே மிக நெருங்கிய தொடர்புள்ளது.' ஒருபுறம் வங்கியின் நோட்டு வெளியீட்டுத் துறையிலிருக்கும் பொற்பாளத்தின் அளவுக்கும் மறுபுறம் வங்கிப் பணித்துறையிலிருக்கும் நோட்டுகளின் சேமவைப்புக்கும் இடையிலான தொடர்பைச் சொல்கிறார். இங்கே*

அவர் வட்டி வீதத்திலான மாற்றத்திற்கு பணத்தின் அளவிலான மாற்றத்தைக் காரணமாய்க் காட்டுகிறார். ஆனால் இப்படிச் சொல்வது தவறு. நாட்டில் சுற்றியோடி வரும் பணம் அதிகரிப்பதால் சேம வைப்பு குறைந்து போகலாம். பொதுமக்கள் இன்னுமதிகமாய் நோட்டுகள் வாங்க, உலோகச் சேர்ப்பு குறையாதாய் இருக்கும்போது இதுவே நிலைமை. ஆனால் இந்நிலைமையில் வட்டிவீதம் உயருகிறது; ஏனென்றால் அப்போது இங்கிலாந்து வங்கியின் வங்கி மூலதனத்துக்கு 1844 ஆம் வருடத்திய சட்டம் வரம்பிடுகிறது. ஆனால் அவர் இதைக் குறிப்பிடத் துணியவில்லை; ஏனென்றால் இச் சட்டத்தின் விளைவாக இரு துறைகளும் ஒன்றுக்கொன்று எவ்விதத் தொடர்பும் அளவற்றவையாகின்றன.

'3859. உயர்ந்த இலாப வீதமானது எப்போதுமே மூலதனத்திற்குப் பெரும் வேண்டலைத் தோற்றுவிக்கும்; மூலதனத்திற்கான பெரும் வேண்டல் அதன் மதிப்பை உயரச் செய்யும்.'-முடிவில் இங்கே ஓவர்ஸ்டோனின் பார்வையில் உயர்ந்த இலாப வீதத்திற்கும் மூலதனத்துக்கான வேண்டலுக்கும் தொடர்பு இருக்கக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக 1844 - 45இல் பருத்தித் தொழிலில் உயர்ந்த இலாப வீதம் நிலவியது; ஏனென்றால் கச்சாப் பருத்தி விலை மலிவாய் இருந்தது, அவ்வாறே இருந்தும் வந்தது; பருத்திச் சரக்குகளுக்கான வேண்டலோ வலுவாயிருந்தது. மூலதனத்தின் மதிப்பானது (ஏற்கெனவே ஓரிடத்தில் ஓவர்ஸ்டோன் ஒவ்வொரு வருக்கும் தமது தொழிலில் தேவைப்படுவதுதான் மூலதனம் என்கிறார்). ஆகவே இங்குக் கச்சாப் பருத்தியின் மதிப்பானது ஆலையதிபருக்கு அதிகரிக்கவில்லை....உயர்ந்த இலாப வீதமானது யாரேனுமொரு பருத்தி ஆலையதிபர் தமது தொழிலை விரிவாக்கும் நோக்கத்திற்காக கடனாய்ப் பணம் பெறுவதற்குத் தூண்டுதலாய் இருந்திருக்கலாம். இதனால் பண - மூலதனத்திற்கான அவரது வேண்டல் மட்டும் உயர்ந்ததே தவிர, வேறு எதற்கான வேண்டலும் அல்ல.

'3889. காகிதமானது வங்கி - நோட்டாக இருக்கலாம், இல்லாமலும் போகலாம் என்பது எப்படியோ, அதே போல் பொற்பாளமானது பணமாக இருக்கலாம், இல்லாமலும் போகலாம்,'

'3896. மேன்மை தங்கிய தாங்கள் இங்கிலாந்து வங்கிக்கு வெளியில் இருக்கும் நோட்டுகளிலான ஏற்ற இறக்கங்கள் பொற்பாள அளவிலான ஏற்ற இறக்கங்களோடு ஒத்துப் போக வேண்டும் என்ற வாதத்தை 1840இல் பயன்படுத்தினீர்கள், தாங்கள் இப்போது இந்த வாதத்தைக் கை

விடுவதாக நான் புரிந்து கொள்கிறேன்; சரிதானா?-அதை நான் எந்த அளவில் கைவிடுகிறேன் என்றால்....இப்போது நம் வசம் இருக்கும் தகவல் தொடர்புச் சாதனங்களை வைத்துப் பார்க்குமிடத்து இங்கிலாந்து வங்கிக்கு வெளியிலிருக்கும் நோட்டுகளை இங்கிலாந்து வங்கியில் வங்கிச் சேம வைப்பிலிருக்கும் நோட்டுகளோடு சேர்த்துக் கணக்கிட்டாக வேண்டும்.'-இது உயர்தரத்திலும் உயர்தரமானது. வங்கியானது கருவூலத்தில் இருக்கும் தங்கத்திற்கு ஈடாகவும், அதற்கு மேல் 14 மிலியனும் காகித நோட்டுகள் வெளியிடலாம் என்ற மனம் போன போக்கிலான விதியின் பொருள் என்ன? அதனால் வெளியிடப்படும் நோட்டுகளின் அளவாசை தங்கச் சேம வைப்பின் ஏற்ற இறக்க அலைவுகளோடு சேர்ந்து அலைவுறுகிறது என்பதே. ஆனால் இப்போது 'நம் வசம் இருக்கும் தகவல் தொடர்புச் சாதனங்களிலிருந்து இங்கிலாந்து வங்கி இவ்விதம் தயாரிக்கக்கூடிய நோட்டுகளின் திரள் (வெளியீட்டுத்துறையானது வங்கிப் பணித்துறைக்கு மாற்றிக் கொடுக்கும் இத்திரள்)-இங்கிலாந்து வங்கியின் இரு துறைகளுக்கும் இடையில் நடைபெறுவதும் தங்கச் சேமவைப்பில் ஏற்ற இறக்க அலைவுகளோடு சேர்ந்து அலைவுறுவதுமான இந்தச் சுற்றோட்டம்-இங்கிலாந்து வங்கிக்கு வெளியிலிருக்கும் வங்கி நோட்டுகளின் சுற்றோட்டத்திலான அலைவுகளை நிர்ணயிப்பதில்லை என்பது தெளிவாகப் புலப்படுகிறது; ஆகவே பின்னது-உண்மைச் சுற்றோட்டம்-வங்கி நிர்வாகம் பொருட்படுத்த வேண்டாத சங்கதியாகிறது; வங்கியின் இரு துறைகளுக்கும் இடையிலான சுற்றோட்டம் மட்டுமே தீர்மானகர முக்கியத்துவம் உடையதாகிறது - இந்தச் சுற்றோட்டத்திற்கும் உண்மைச் சுற்றோட்டத்திற்குமான வேறுபாடு சேம வைப்பில் பிரதிபலிக்கிறது. புற உலகிற்கு இந்த அகச் சுற்றோட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருப்பதற்கு ஒரே காரணம் என்னவென்றால், இங்கிலாந்து வங்கி அதன் நோட்டு வெளியீட்டின் சட்டபூர்வ உச்சவரம்பை எந்த அளவுக்கு நெருங்கி வருகிறது என்பதையும், அதன் வாடிக்கையாளர்கள் இப்போதும் வங்கிப் பணித்துறையிலிருந்து எவ்வளவு பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் சேமவைப்பிலிருந்து அறிய முடிகிறது என்பதே.

ஒவர்ஸ்டோனின் வஞ்சக உள்நோக்கத்துக்கு தெள்ளத் தெளிவான எடுத்துக்காட்டாய் பின்வருவதைக் குறிப்பிடலாம்:

'4243. மூலதனத்தின் அளவானது சமீப ஆண்டுகளில் வெளிப்பட்டுள்ள கழிவு வீத அலைவுகளைப் போல் தன் மதிப்பை

*மாற்றிக் கொள்ளும் அளவுக்கு மாதம்தோறும் அலைவுறுவதாக நினைக்கிறீர்களா?- மூலதனத்தின் வேண்டலுக்கும் வழங்கலுக்கும் இடையிலான உறவு குறுகிய காலங்களுக்குள்ளேயும் கூட அலைவுறக்கூடும் என்பதில் ஐயமில்லை....பிரான்ஸ் நாடானது மிகப்பெரிய கடன் வாங்க விரும்புவதாக நாளை ஓர் அறிவிப்பு வெளியிடுமானால், இந்த நாட்டிலுள்ள பணத்தின் மதிப்பில், அதாவது மூலதனத்தின் மதிப்பில் உடனடியாக பெரும் மாற்றம் ஏற்படச் செய்யும் என்பதில் ஐயமில்லை.'*

*'4245. எதற்காக என்றாலும் சரி, திடீரென்று தனக்கு 30 மிலியன் பெறுமானமுள்ள சரக்குகள் வேண்டியிருப்பதாக பிரான்ஸ் அறிவிக்குமானால், மூலதனத்திற்கு (மேலும் விஞ்ஞான பூர்வமானதும் மேலும் எளியதுமாகிய இச் சொல்லைப் பாவிக்கிறோம்) பெருமளவிலான வேண்டல் எழும்.*

*'4246. பிரான்ஸ் தான் பெறும் கடனைக் கொண்டு வாங்க விரும்பக்கூடிய மூலதனம் என்பது ஒன்று, அது அம் மூலதனத்தை வாங்குவதற்குப் பயன்படுத்தும் பணம் என்பது வேறு; மதிப்பு மாற்றத்துக்குள்ளாவது பணமா, இல்லையா?-பழைய கேள்வியே புத்துயிர் பெறுவது போல் இருக்கிறது; இது இந்த விசாரணைக் குழுவின் அறையைக் காட்டிலும் மாணவரின் வகுப்பறைக்கே பொருத்தமான கேள்வி எனக்கருதுகிறேன்.'-கடைசியாக இதைச் சொல்லிவிட்டு புறப்பட்டு செல்கிறார், ஆனால் மாணவரின் வகுப்பறைக்கு அல்ல.*[85]

---

(85) எங்கெல்ஸ் குறிப்பு:- மூலதனம் தொடர்பானவற்றில் ஓவர்ஸ்டோன் சொற்களைக் குழப்பிக் குளறுபடி செய்வது குறித்து மேலும் அத்தியாயம் 32.. இன் முடிவில் பார்ப்போம்.

## அத்தியாயம் XXVII

# முதலாளித்துவப் பொருளுற்பத்தியில் கடன்-செலாவணியின் பங்கு

*கடன்-செலாவணி அமைப்பு குறித்து இதுவரை நாம் தந்துள்ள பொதுக்குறிப்புகள் பின்வருமாறு:*

*I. அதன் அவசிய வளர்ச்சியானது இலாப வீதத்தின் சமனமாதலை, அல்லது முதலாளித்துவப் பொருளுற்பத்தி அனைத்திற்கும் ஆதாரமாய் உள்ள இச்சமனமாதலின் அசைவியக்கங்களை நிகழச்செய்தல்.*

*II. சுற்றோட்டச் செலவுகள் குறைக்கப்படுதல்.*

*(1) தலையாயச் சுற்றோட்டச் செலவுகளில் ஒன்று அதனளவி லேயே மதிப்பாய் இருக்கும் பணமே ஆகும். மூன்று வழிகளில் இது கடன்-செலாவணியின் மூலமாய் சிக்கனம் செய்யப்படுகிறது.*

*(அ) மிகப்பல கொடுக்கல் வாங்கல்களில் பணம் அறவே விலகிப்போய் விடுதல்.*

*(ஆ) சுற்றோட்ட ஊடகத்தின் சுற்றோட்ட வேகம் அதிகரித்தல்.*[86] *ஓரளவுக்கு இது அடுத்து வரும் (2) இல் கூறவிருப்பதற்கும் பொருந்து கிறது. ஒரு புறம், இந்த வேக முடுக்கம் செய்நுட்ப வகையிலானது; 'கடன்-செலாவணியே.....பணம் சந்தையின் மீதான கடும் அழுத்தம் பொதுவாக முழு நிறைவான சுற்றோட்டத்துடன் ஒருங்கமைவதற்கு*

---

86. 'ஓராண்டு காலத்தில் சுற்றோட்டத்திலிருந்து நோட்டுகளின் சராசரி 1812இல் 106,538,000 பிராங்கு; 1818இல் 101,205,000 பிராங்கு; அதே போது செலாவணியின் அசைவியக்கம், அதாவது எல்லாக் கணக்குகளிலும் கொடுப்புகள், வரவுகளின் வருட மொத்தம் 1812இல் 2,837, 712,000 பிராங்கு; 1818இல் 9,665,030,000பிராங்கு. ஆகவே 1818ஆம் ஆண்டில் பிரான்சில் நிகழ்ந்த செலாவணி இயக்கத்தை 1812இல் நிகழ்ந்த செலாவணி இயக்கத்தோடு ஒப்பிடுமிடத்து 3:1 என்னும் விகிதம் பெறப்படுகிறது. சுற்றோட்ட வேகத்தின் மாபெரும் ஒழுங்கியக்கி அதாவது நுகர்வுக்குரிய சரக்குகள் உள்ளபடியே நிகழ்த்தும் புரள்வுகளின் பருமனும் எண்ணிக்கையும் மாறாதிருக்க,—(கடன் - செலாவணி தத்துவம் பற்றி மறுபரிசீலனை....பக்கம் 65.) - "1833 செப்டம்பருக்கும் 1843 செப்டம்பருக்கும் இடையே ஐக்கிய முடியரசு எங்கிலுமுள்ள பல்வேறு நோட்டு வெளியிடும் அமைப்புகளில் சுமார் 300 வங்கிகள் சேர்க்கப்பட்டன; இதன் விளைவாக இரண்டரை மிலியன் என்னுமளவுக்கு சுற்றோட்டம் குறைந்து போயிற்று; 1833 செப்டம்பர் இறுதியில் £36,035,244 ஆக இருந்தது 1843 செப்டம்பர் இறுதியில் £33,518,554 ஆயிற்று.' (முன் வந்தது, பக்கம் 53.) - 'ஸ்காட்லாந்தியச் சுற்றோட்டத்தின் அபார முனைப்பு காரணமாய், இங்கிலாந்தில் £420 தேவைப்படும்படியான அதே அளவு பணம் கொடுக்கல் வாங்கல்களை அங்கு £100ஐக் கொண்டே நிகழ்த்த முடிகிறது." (முன் வந்தது, பக்கம் 55. கடைசியாகக் கூறியது இச்செயற்பாட்டின் செய்நுட்ப அமிசத்தை மட்டும் குறிப்பதாகும்.)

இதுவே காரணம்.' சிறு அளவிலான பணம் அல்லது பண அடையாளங்கள் முன்போல் அதே சேவை ஆற்றுகின்றன. இது வங்கித் தொழிலின் செய்நுட்பத்தோடு பின்னிப் பிணைந்ததாகும். மறு புறம், கடன்-செலாவணியானது சரக்கு உருமாற்றங்களின் வேகத்தையும் பணச் சுற்றோட்டத்தின் வேகத்தையும் முடுக்கிவிடுகிறது.

(இ) தங்கப் பணத்திற்குப் பதில் காகிதப்பணத்தைப் பயன்படுத்துதல்.

(2) தனித் தனி சுற்றோட்டக் கட்டங்களை, அல்லது சரக்குகளின் உருமாற்றத்தை, பிற்பாடு மூலதன உருமாற்றத்தை கடன்- செலாவணியைக் கொண்டு முடுக்கி விரைவுபடுத்துதல்; அத்துடன் பொதுவாக மறுவுற்பத்தி நிகழ்முறையையும் விரைவுபடுத்துதல். (மறுபுறம், கடன்-செலாவணியானது வாங்கல் விற்றலென்னும் செயல்களை நீண்ட காலம் பிரித்து வைக்க உதவுகிறது. இவ்விதம் ஊக வாணிபத்துக்கான அடிப்படையாகப் பயன்படுகிறது.) சேம வைப்பு நிதிகள் சுருங்குதல்; இதனை இருவழிகளில் நோக்கலாம்: ஒரு புறம் சுற்றோட்ட ஊடகத்தின் குறைப்பாகவும், மறுபுறம் எப்போதும் பண வடிவில் இருந்து வரவேண்டிய மூலதனப் பகுதியின் குறைப்பாகவும் நோக்கலாம்.[87]

III. பங்கு நிறுமங்கள் அமைக்கப்படுதல். இதனால்:

1) உற்பத்தியின் அளவு வீதமும் தொழில் முனைவுகளின் அளவு வீதமும் பெருமளவில் விரிவடைதல் - தனிப்பட்ட மூலதனங்களுக்கு இது முடியாத காரியம். அதேபோது முன்பு அரசுத்தொழில் முனைவுகளாய் இருந்தவை பொதுமக்களுக்குரியவை ஆயின.

(2) மூலதனம் என்பதே ஒரு சமுதாயப் பொருளுற்பத்தி முறையை ஆதாரமாய்க் கொண்டதுதான்; உற்பத்திச் சாதனங்கள், உழைப்புச் சக்தி இவற்றின் சமுதாயக் குவிப்பு மூலதனத்திற்கு அவசியமாகும். இங்கு அது தனியார் மூலதனத்திலிருந்து வேறான சமுதாய மூலதனமாக (நேரடியாகக் கட்டமைந்த தனியாட்களின் மூலதனமாக) நேரடியாகவே வடிவம் பெறுகிறது; அதன் தொழில் முயற்சிகள், தனியார் தொழில் முயற்சிகளிலிருந்து வேறான சமுதாயத் தொழில் முயற்சிகளாக வடிவம் பெறுகின்றன. தனிச் சொத்தாய் இருக்கும் மூலதனத்தை முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் கட்டமைப்புக்குள்ளேயே ஒழித்து விடுவதாகும் இது.

87. 'வங்கிகள் நிறுவப்படுவதற்கு முன்பெல்லாம்....செலாவணி நோக்கங்களுக்காக விலைக்கு எடுக்கப்படும் மூலதனத்தின் அளவானது தேவையான சரக்குகளின் உள்ளபடியான சுற்றோட்டத்தை விட எப்போதும் கூடுதலாய் இருந்தது. எக்காணமிஸ்ட், 1845, பக்கம் 238.

(3) உள்ளபடியே செயல்பட்டுக் கொண்டிருக்கும் முதலாளியே வெறும் மேலாளராக, பிறருக்குச் சொந்தமான மூலதனத்தின் நிர்வாகியாக மாற்றுதல்: மூலதன உடைமையாளரை வெறும் உடைமையாளராக, வெறும் பண முதலாளியாக மாற்றுதல். அவர்கள் பெறும் ஆதாயப்பங்குகளில் வட்டியும் முனைவு-இலாபமும், அதாவது மொத்த இலாபம் அடங்குவதாய் இருந்தாலுங்கூட (மேலாளரின் சம்பளம் தேர்ச்சி பெற்ற உழைப்பின் ஒரு பிரத்தியேக வகைக்கான கூலிதான், அல்லது அப்படித்தாய் இருக்க வேண்டும்; இவ்வுழைப்பின் விலை வேறு எவ்வுழைப்பின் விலையையும் போலவே உழைப்புச் சந்தையில் நிர்ணயிக்கப்படுகிறது). இந்த மொத்த இலாபமானது இதன் பிறகு வட்டியாக மட்டுமே, அதாவது உள்ளபடியான மறுவுற்பத்தி நிகழ்முறையிலான பணியிலிருந்து இப்போது அறவே விலகிவிட்ட மூலதனத்தைச் சொந்தமாய்ப் பெற்றிருப்பதற்கான வெறும் இழப்பீடே ஆகும்; இதே போலத்தான் மேலாளரின் உருவில் இந்தப் பணி இலாபமானது (முன்போல் அதில் ஒரு பகுதி மட்டுமேயாகிய வட்டி அல்ல. கடன் வாங்குகிறவருக்குக் கிடைக்கும் லாபத்தைக் காட்டி நியாயப்படுத்தப்படுவதாகிய வட்டி அல்ல) மற்றவர்களின் உபரி-உழைப்பைத், தனதாக்குதல் என்பதாகவே காட்சியளிக்கிறது; உற்பத்திச் சாதனங்கள் மூலதனமாக மாற்றப் படுவதால், அதாவது உள்ளபடியான உற்பத்தியாளருக்கு அவை அந்நியமாவதால், மேலாளர் முதல் கடைநிலை, நாட்கூலித் தொழிலாளி வரை உள்ளபடியே உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு தனியாளுடனும் அவை வேறொருவரின் உடைமை என்ற முறையில் எதிர் நிலை கொண்டிருப்பதால் இந்தத் தனதாக்கம் நிகழ்கிறது. பங்கு நிறுமங்களில் உற்பத்திப் பணி மூலதன உடைமையிலிருந்து விலக்கப்பட்டுவிடுகிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் உச்ச வளர்ச்சியால் ஏற்படும் இந்த விளைவு திரும்பவும் மூலதனத்தை உற்பத்தியாளர்களின் உடைமையாக மாற்றுவதன் திசையிலான அவசிய மாறுநிலை கட்டமாகும்; ஆனால் இந்த மாற்றம் மூலதனத்தை முன்போல் தனிப்பட்ட உற்பத்தியாளர்களின் தனி உடைமையாக மாற்றுவதல்ல; மாறாக கூட்டுத்துவ உற்பத்தியாளர்களின் உடைமையாக, நேரடிச் சமுதாய உடைமையாக மாற்றுவதே ஆகும். மறுபுறம், பங்கு நிறுமம் என்பது இன்னமும் முதலாளித்துவ உடைமையோடு பிணைக்கப்பட்டுள்ள மறுவுற்பத்தி நிகழ்முறைப் பணிகள் யாவற்றையும் கூட்டுத்துவ உற்பத்தியாளர்களின் பணிகளாகவே, சமுதாயப் பணிகளாகவே மாற்றுவதன் திசையிலான ஒரு மாறுநிலை ஆகும்.

பரிசீலனையை மேலும் தொடருவதற்கு முன்னால், பொருளாதார வழியில் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உண்மையைக் குறிப்பிட்டாக வேண்டும்: இலாபமானது இங்கு வட்டியாகக் தூய வடிவெடுப்பதால், இவ்வகை தொழில் முயற்சிகள் வெறும் வட்டியை மட்டும் தருகிறவையாக இருந்தாலும் கூட சாத்தியமே ஆகும். பொது இலாப வீதம் குறைந்து செல்லும் போக்கை எதிர்த்தியங்கும் காரணங்களில் இதுவும் ஒன்று; ஏனென்றால் இந்தத் தொழில் முயற்சிகள்-இவற்றில் மிகப் பெரிது-பொது இலாப வீதம் சமனமாதலில் பங்கேற்க வேண்டுமென்ற அவசியமில்லை.

(மார்க்ஸ் மேற்கண்டவாறு எழுதிய பிறகு, புதுப் புது வடிவங்களில் தொழில் முனைவுகள் வளர்ந்துள்ளன என்பதையும், இவை பங்கு நிறுமங்களின் இரண்டாவது, மூன்றாவது படி நிலைகளைக் குறிப்பவை என்பதையும் நாமறிவோம். இன்று பெருவீதத் தொழில் துறையின் களங்கள் யாவற்றிலும் பொருளுற்பத்தியை அனுதினமும் வளர் வேகத்தில் விரிவாக்கலாம்; ஆனால் இந்தக் கூடுதலான உற்பத்திப் பண்டங்களுக்கான சந்தை மேன்மேலும் மெதுவாகவே விரிவடைவ தால் அந்த விரிவாக்க வேகம் சரிகட்டப்பட்டுவிடுகிறது. தொழில்துறை களங்கள் மாதக் கணக்கில் உற்பத்தி செய்து கொடுப்பதைச் சந்தையானது ஆண்டுக் கணக்கில் உட்கிரகிக்க முடிந்தால் அரிதே. ஒவ்வொரு தொழில் வள நாடும் ஏனையவற்றிடமிருந்து குறிப்பாக இங்கிலாந்திடமிருந்து தன்னைத் தனியே பிரித்து வைத்துக் கொள்வதற்காகவும் கடைபிடிக்கிற காப்புத் தீர்வை கொள்கையையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம். விளைவுகள் என்னவென்றால், மிகையுற்பத்தி பொதுவானதும் நீடித்ததும் ஆகிறது. விலைகள் குறைந்து போகின்றன, இலாபங்கள் வீழ்ந்து அடியோடு மறைந்தும்விடுகின்றன; சுருங்கச் சொல்லின், ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவதற்கான சுதந்தரம்-பிரமாதமாய்ப் பீற்றிக் கொள்ளப்பட்டதே, அந்தப் பழைய சுதந்தரம் - அதன் வல்லமையின் விளிம்பு வரை சென்றுவிட்டது. கண்கூடான முறையில் அது இழிந்து வகையற்றுப்போவதை அதுவே அறிவித்துக் கொண்டாக வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் குறிப்பிட்ட தொழில் கிளையைச் சேர்ந்த பெருந் தொழிலதிபர்கள் பொருளுற்பத்தியை ஒழுங்கு செய்வதற்காக கூட்டிணைவில் (CARTEL) சேருவதன் மூலம் இது ஒவ்வொரு நாட்டிலும் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு நிறுவனமும் உற்பத்தி செய்ய வேண்டிய அளவை நிர்ணயிப்பதற்கு ஒரு குழு இருக்கிறது. வந்துசேரும் சரக்காணைகளைப் பகிர்ந்தளிக்கும் இறுதி அதிகாரம் இக்குழுவிற்கே. அவ்வப்போது பன்னாட்டுக்

கூட்டிணைவுகளும்கூட நிறுவப்பட்டன; ஆங்கிலேய, ஜெர்மானிய இரும்புத் தொழில் துறைகளுக்கிடையில் நிறுவப்பட்டதை உதாரணமாகக் குறிப்பிடலாம். ஆனால் பொருளுற்பத்தியிலான இவ்வகை கூட்டமைப்பும் கூட போதுமானதாய் இருக்கவில்லை. தனிப்பட்ட நிறுவனங்களிடையே அவற்றின் நலன்கள் தொடர்பாய் எழும் பகைமை அடிக்கடி இந்தக் கூட்டமைப்பையும் மீறி வெளிப்பட்டது. இதனால் மீண்டும் பழையபடியே போட்டி இடம்பெறலாயிற்று. உற்பத்தியின் அளவுவீதம் இடமளித்து சில தொழிற்கிளைகளில், அந்தந்த தொழிற்கிளையின் உற்பத்தி அனைத்தும் ஒரே மேலாண்மையில் பெரியதொரு கூட்டுப் பங்கு நிறுமத்தின் கையில் குவிக்கப்படுவதற்கு இது வழிவகுத்தது. அமெரிக்காவில் இப்படித்தான் திரும்பத் திரும்ப நிகழ்ந்துள்ளது. ஐரோப்பாவில் இதுவரையிலுமான ஆகப் பெரும் எடுத்துக்காட்டாய் இருப்பது ஐக்கிய காரப்பொருள் கழகமாகும். இக்கழகமானது பிரித்தானிய காரப்பொருள் உற்பத்தி அனைத்தையும் ஒரே ஒரு தொழில் நிறுவனத்தின் கைக்குள் அடக்கமாகும்படிச் செய்துவிட்டது. முப்பதுக் கதிகமான தனிப்பட்ட ஆலைகளின் முன்னாள் உடைமையாளர்கள் அவர்களது முழு நிறுவனங்களின் கணிப்பீட்டு மதிப்புக்கு பங்குகள் பெற்றுள்ளார்கள். இவற்றின் மொத்த மதிப்பு சுமார் 5மிலியன், இது இந்தப் பொறுப்புக் கழகத்தின் நிலை - மூலதனத்தைக் குறிப்பதாகும். தொழில்நுட்ப மேலாண்மை முன்போல் அதே கையில் இருந்து வருகிறது. ஆனால் தொழில் கட்டுப்பாடு பொது மேலாண்மையின் கையில் குவிக்கப்பட்டுள்ளது. சுழல் - மூலதனத்திற்கு - மொத்தம் சுமார் 1 மிலியன் - பொதுமக்கள் தொகை செலுத்தலாம் என்று அழைப்பு விடப்பட்டது. ஆக மொத்த மூலதனம் 6 மிலியன். இரசாயனத் தொழில் துறை முழுவதற்கும் அடிப்படையாகிய இந்தத் தொழிற்கிளையில், இங்கிலாந்தைப் பொறுத்தவரை போட்டி போய் ஏகபோகம் வந்து விட்டது; சமுதாயம் முழுவதும், நாடே வருங்காலத்தில் உடைமைப் பறிப்பு செய்வதற்கு வழியமைக்கப்பட்டுள்ளது - இது மகிழ்வுக்கும் மனநிறைவுக்கும் உரியது.—பி.எங்கெல்ஸ்.)

இதுதான் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்குள்ளேயே முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையை ஒழித்துக் கட்டுவதாகும், எனவே தன்னைத் தான் அழித்துக் கொள்ளும் முரண்பாடாகும்; முதல் பார்வைக்கு இது ஒரு புதிய உற்பத்தி வடிவத்துக்கு மாறிச் செல்வதில் ஒரு கட்டத்தை மட்டும் குறிப்பதாகும். இது தன்னால் ஏற்படும் விளைவுகளில் இத்தகைய முரண்பாடாகத் தன்னை வெளிப்படுத்திக்

கொள்கிறது. குறிப்பிட்ட சில துறைகளில் ஏகபோகம் நிறுவி, அரசுத் தலையீட்டை அவசியமாக்குகிறது. புதிய நிதிப் பிரபுக்குலத்தை, ஊக்குநர்கள். ஊக-வணிகர்கள், வெறும் பெயரளவுக்கான இயக்குநர்கள் என்று புதியவகை ஒட்டுண்ணிகளை உண்டுபண்ணி விடுகிறது. தொழில்கூட்டுக்கு ஊக்கமளித்தல், பங்குவெளியீடு பங்கு ஊக - வாணிபம் என்ற வழிகளில் மோசடி செய்து ஏமாற்றும் முழு அமைப்பையே வளர்த்திடுகிறது. தனியுடைமையின் கட்டுப்பாடு இல்லாத தனியார் பொருளுற்பத்தியே இது.

முதலாளித்துவ அமைப்பின் அடிப்படையிலேயே முதலாளித் துவத் தனியார் தொழில்துறை ஒழிக்கப்படுவதைக் குறிப்பதும், விரிந்து பரந்து புதிய உற்பத்திக் கிளைகளில் படையெடுத்துச் செல்கையில் தனியார் தொழில்துறையை அழிப்பதுமாகிய பங்கு-நிறுமத் தொழிலை அன்னியில், கடன் - செலாவணியானது தனியொரு முதலாளிக்கு, அல்லது முதலாளியாகக் கருதப்படுகிற ஒருவருக்கு குறிப்பிட்ட சில வரம்புகளுக்குள் பிறரது மூலதனம் மற்றும் உடைமையின் மீதும், எனவே பிறரது உழைப்பின் மீதும் அறுதிக் கட்டுப்பாடுகிடைக்கச் செய்கிறது.[88] அவருக்கே சொந்தமான தனிப்பட்ட மூலதனம் அல்ல, சமுதாய மூலதனத்தின் மீதான கட்டுப்பாடுதான் சமுதாய உழைப்பின் மீது அவர் கட்டுப்பாடு செலுத்துவதற்கு வழி செய்கிறது. உண்மையிலேயே ஒருவருக்குச் சொந்தமாய் இருந்தாலும் சரி, அவருக்கு சொந்தமென பொதுமக்கள் கருதக் கூடியதானாலும் சரி, மூலதனம் என்பதே கூட கடன் - செலாவணியின் மேற்கட்டுமானத்திற்கு வெறும் அடித்தளமே ஆகிவிடுகிறது. முக்கியமாய் மொத்த வர்த்தகத்தில்

88. எடுத்துக்காட்டாக, 1857 போன்ற ஒரு நெருக்கடி ஆண்டில் ஏற்பட்ட தொழில் முறிவுகளின் பட்டியலை வெளியிட்டது. முறிவுற்றவர்களின் தனியுடைமையை அவர்கள் அடைக்க வேண்டிய கடன்களின் அளவுடன் ஒப்பு நோக்கலாம். 'மூலதனமும் கடன்-செலாவணியும்' பெற்றிருப்பவர்களின் வாங்குஞ் சக்தி ஊக - வாணிபச் சந்தைகளில் நடைமுறை பரிச்சயம் இல்லாதவர்கள் புரிந்து கொள்ளக் கூடியதைக்காட்டிலும் மிக அதிகமாகும் என்பதே உண்மை.' (டுக், செலாவணிக் கோட்பாடு பற்றிய ஆய்வு, பக்கம் 79.) 'ஒருவர் அவரது வழக்கமான தொழிலுக்கு போதிய மூலதனம் உடையவர் என்று பெயர் பெற்றவராகவும், அவரது தொழிலில் நல்ல கடன் - மதிப்பு உடையவராகவும் இருப்பதாகக் கொள்வோம்; இப்படிப்பட்ட ஒருவர் அவர் வர்த்தகம் செய்யும் பண்டத்தின் விலை உயரக்கூடிய வாய்ப்பை நம்பி எதிர்பார்த்திட, எடுத்த எடுப்பில் நிலவக்கூடிய நிலைமைகளும் அவரது ஊக - வாணிபத்தின் முன்னேற்றமும் அவருக்கும் சாதகமாய் அமையுமானால், அவரது மூலதனத்தோடு ஒப்பிடுமிடத்து பென்னம்பெரிய அளவுக்கு அவர் கொள்முதல்கள் செய்யலாம்' (மேலது, பக்கம் 136). 'வணிகர்களும் ஆலையதிபர்களும் இன்ன பிறரும் அவர்களுக்கே சொந்தமாக மூலதனத்தை மட்டும் பயன்படுத்தி செய்யக்கூடியதை விட மிக அதிகமான காரியங்களைச் செய்து வருகிறார்கள்....மூலதனம் என்பது ஏதேனுமொரு வர்த்தக நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களுக்கு வரம்பாய் இருப்பதைக் காட்டிலும் நல்ல கடன் - மதிப்பைக் கட்டியெழுப்புவதற்கான அடித்தளமாகவே இருக்கிறது.' (எக்கானமிஸ்ட், 1847 பக்கம் 333.

சமுதாய உற்பத்திப் பண்டத்தில் ஆகப்பெரும் பகுதி எதன் வழியாகச் செல்கிறதோ அதில் - இப்படித்தான் இருக்கிறது. முதலாளித்துவப் பொருளுற்பத்தியிலும் கூட ஓரளவுக்கு நியாயப்படுத்தப்படும் அளவை நியமங்கள் எல்லாம், சாக்குப் போக்குகள் எல்லாம் இங்கே மறைந்துவிடுகின்றன. ஊக - வாணிபம் செய்திடும் மொத்த வணிகர் சமுதாயச் சொத்தைத்தான் பணயம் வைக்கிறாரே ஒழிய, அவருக்கே சொந்தமானதை அல்ல. மூலதனத்தின் தோற்றுவாயைச் சேமிப்புகளோடு தொடர்புபடுத்தி பேசுவதிலும் இதே போல் களங்கப்பட்டுவிடுகிறது; ஏனென்றால் அவருக்காக மற்றவர்கள் சேமிக்க வேண்டும் என்றுதான் அவர் கேட்கிறார். இப்படித்தான் சமீபத்தில் பிரான்சு நாடு முழுவதும் பனாமாக்கால்வாய் மோசடிக் காரர்களுக்கு ஒன்றரை மிலியன் பிராங்கு சேமித்துக் கொடுத்தது. பனாமா மோசடி நடைபெறுவதற்கு முழுதாய் இருபதாண்டு முன்னதாகவே அம்மோசடி முழுவதும் முன்னறியப் பட்டாற்போல் இங்குச்சரியாக விவரிக்கப்படுகிறது.-பி.எங்கெல்ஸ்.) நுகர்வுத் தவிர்ப்பு தொடர்பான அந்த மற்றொரு சொற்றொடரை அவரது பகட்டு வாழ்வு நேருக்கு நேர் மறுதலிப்பதாய் உள்ளது; இந்தப் பகட்டு வாழ்வே இப்போது கடன் - செலாவணிச் சாதனமாய் உள்ளது. முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் குறைவாளர்ச்சிக் கட்டத்தில் சற்றே அர்த்தமுள்ளவையாய் இருக்கும் கருத்துக்கள் இங்கு சற்றும் அர்த்தமற்றவை ஆகின்றன. வெற்றி, தோல்வி இரண்டுமே இங்கு மூலதன மையப்பாட்டிற்கும், இவ்விதம் மிகப் பெருமளவிலான உடைமைப் பறிப்புக்கும் வழிகோலுகின்றன. நேரடி உற்பத்தியாளர்களோடு நில்லாமல், சிறுமுதலாளிகளும் நடுத்தர முதலாளிகளும் கூட இங்கு உடைமைப் பறிப்புக்கு ஆளாகிறார்கள். உடைமைப் பறிப்புதான் முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறைக்கான தொடக்க நிலை; இப்போது நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கும் நேர்வில், அதன் நோக்கம் தனியாட்கள் அனைவரிடமிருந்தும் உற்பத்திச் சாதன உடைமையைப் பறிப்பதாகும். சமுதாயப் பொருளுற்பத்தி வளர்ச்சியடைந்த நிலையில் உற்பத்திச்சாதனங்கள் தனியார் உற்பத்திக்கான சாதனங்களாகவும் தனியார் உற்பத்தியின் பண்டங்களாகவும் இல்லாது போகின்றன. அதன் பிறகு இவை கூட்டுத்துவ உற்பத்தியாளர்களின் கையிலிருக்கும் உற்பத்திச் சாதனங்களாகத்தான் இருக்க முடியும்; அதாவது அவர்களின் சமுதாய உற்பத்திப் பண்டங்களாய் இருப்பது போலவே அவர்களின் சமுதாயச் சொத்தாகத்தான் இருக்கமுடியும். ஆனால் இந்த உடைமைப் பறிப்பானது முதலாளித்துவ அமைப்பிற்குள் முரண்பாடான வடிவில்

காட்சியளிக்கிறது; சமுதாயச் சொத்தை ஒரு சிலர் தனதாக்கிக் கொள்ளும் நிகழ்வாகக் காட்சியளிக்கிறது; கடன் - செலாவணியானது இந்த ஒரு சிலரை வெறும் சாகசக்காரர்களாகவே மேன்மேலும் மாற்றிச் செல்கிறது. சொத்துடைமை இங்கே மூலதனப் பங்கின் வடிவில் நிலவுவதால், அதன் அசைவியக்கமும் கைமாற்றமும் பங்குச் சந்தையிலான சூதாட்டத்தின் விளைவுதான் என்றாகிறது; அச்சந்தையில் மீன்களைப் பெரிய சுறா மீன்களும், ஆட்டுக்குட்டிகளைப் பங்குச் சந்தை ஓநாய்களும் விழுங்குகின்றன. பங்கு நிறுமங்களில் சமுதாய உற்பத்திச் சாதனங்கள் தனிச்சொத்தாக விளங்கும் பழைய வடிவத்துக்கு எதிர்ப்பு காணப்படுகிறது. ஆனால் பங்கின் வடிவத்தை அடைவதற்கான மாற்றம் இன்னமும் முதலாளித்துவத்தின் தலைக்கட்டுகளில் சிக்குண் டிருக்கிறது; ஆகவே சமுதாயச் செல்வம் என்ற தன்மைக்கும் தனியார் செல்வம் என்ற தன்மைக்கும் இடையிலான எதிர்நிலையை முறியடிப்பதற்குப் பதில் பங்கு நிறுமங்கள் அவ்வெதிர்நிலையை ஒரு புதிய வடிவில் வளர்த்திடுவதோடு சரி.

தொழிலாளர்களுக்கே சொந்தமான கூட்டுறவுத் தொழில்சாலைகள் பழைய வடிவத்திற்குள் புதியதன் இளர்தளிர்களை குறிப்பவை ஆகும்; ஆனால் நடப்பிலுள்ள அமைப்பின் குறைகள் யாவும் இயல்பாகவே எங்கெங்கும் இத்தொழிற்சாலைகளின் உள்ளபடியான ஒழுங்கமைப்பிலும் காணப்படுகின்றன, காணப்பட்டே தீரும். ஆனால் இவற்றினுள்ளே மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலான எதிர்நிலை முறியடிக்கப்படுகிறது; கூட்டுத்துவ முறையில் ஒன்று சேர்ந்த தொழிலாளர்களை தமக்குத்தாமே முதலாளியாக்குவது மூலம்தான், அதாவது அவர்கள் உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்தித் தமது உழைப்புக்கே வேலை கொடுப்பதைச் சாத்தியமாக்குவதன் மூலம்தான் பொருளாதார உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும், அவற்றுக்குரிய சமுதாயப் பொருளுற்பத்தி வடிவங்களின் வளர்ச்சியும் குறிப்பிட்ட கட்டத்தை அடைந்திருக்கும் போது, எப்படி ஒரு புதிய பொருளுற்பத்தி முறை பழையதிலிருந்து இயல்பாய் வளர்ந்து வருகிறது என்பதற்கு இந்தத் தொழிற்சாலைகள் சான்றாகின்றன. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையிலிருந்து ஆலைத் தொழில் (Factory System) உதித்தெழவில்லையென்றால், கூட்டுறவுத் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கவே முடியாது. அந்தப் பொருளுற்பத்தி முறையிலிருந்து கடன்-செலாவணி அமைப்பு உதித்தெழவில்லையென்றால் இவை வளர்ந்திருக்கவே முடியாது. கடன்-செலாவணி அமைப்பானது முதலாளித்துவத் தனியார் தொழில் முனைவுகள் முதலாளித்துவப்

பங்கு நிறுமங்களாக படிப்படியாய் மாற்றமடைவதற்கு பிரதான அடிப்படையாய் இருப்பதோடு, கூட்டுறவுத் தொழில் முனைவுகள் ஓரளவுக்கு நாடு தழுவியவையாக படிப்படியாய் விரிவடைவதற்குத் தேவையான வழிவகைகளை வழங்கவும் செய்கிறது. கூட்டுறவு தொழிற்சாலைகளைப் பொருளுற்பத்தி முறையிலிருந்து கூட்டுத்துவ பொருளுற்பத்தி முறைக்குச் செல்லும் மாறுநிலை வடிவங்களாய்க் கருதப்பட வேண்டும்; பகைமையானது முதலாளித்துவப் பங்கு நிறுவனங்களில் எதிர்பகையாகவும் கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் நேர்வகையாகவும் தீர்க்கப்படுவது என்றே வேறுபாடாகும்.

கடன்-செலாவணி அமைப்பின் வளர்ச்சியை - மற்றும் முதலாளித்துவச் சொத்துடைமை ஒழிந்து போவதன் உள்ளியல் நிலை இவ்வளர்ச்சியால் குறிக்கப் பெறுவதை - இதுவரை பிரதானமாய் தொழில்துறை மூலதனம் தொடர்பாகவே பரிசீலித்தோம். அடுத்து வரும் அத்தியாயங்களில் கடன் - செலாவணியை நேரடியாக வட்டி மூலதனம் தொடர்பாகவும், இம்மூலதனத்தின் மீது அது ஏற்படுத்தும் விளைவு தொடர்பாகவும், இதனால் அது மேற்கொள்ளும் வடிவம் தொடர்பாகவும் பரிசீலிப்போம்; பிரத்தியேகமாய்ப் பொருளாதார நோக்கில் அமைந்த மேலும் சிலவற்றையும் பொதுவாகக் குறிப்பிட வேண்டியுள்ளது.

ஆனால் முதலாவதாகச் சொல்ல வேண்டியது இதுதான்:

கடன்-செலாவணி அமைப்பு மிகையுற்பத்திக்கும் மிகை ஊக - வாணிபத்துக்கும் முக்கிய நெம்புகோலாய் விளங்குகிறது என்றால், இயல்பாகவே நெகிழ்திறம் உடையதான மறுவுற்பத்தி நிகழ்முறை இங்கு அதன் கடைக்கோடி வரம்புகள் வரை இழுக்கப்படுவதுதான் காரணம். இவ்விதம் இழுக்கப்படுவது ஏனென்றால், சமுதாய மூலதனத்தில் பெரியதொரு பகுதியை அதன் உடைமையாளர் அல்லாதவர்கள் ஈடுபடுத்துகிறார்கள்; ஆகவே இவர்கள் உடைமையாளரைப் போல் அல்லாமல் வேறுவிதமாகவே காரியமாற்றுகிறார்கள் உடைமையாளர் என்றாலோ தமது தனியார் மூலதனத்தை தாமே கையாளுகிற அளவில் அதன் வரம்புகளை கவலையுடன் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படுவார். முதலாளித்துவப் பொருளுற்பத்தியினது முரண்பட்ட இயல்பின் அடிப்படையிலான மூலதனத் தற்பெருக்கமானது குறிப்பிட்ட கட்டம்வரைதான் மெய்யான தடையிலா வளர்ச்சிக்கு இடமளிக்கிறது என்ற உண்மையையே இது புலப்படுத்துகிறது. அதாவது இந்த நற்பெருக்கமே பொருளுற்பத்திக்கு

உள்ளார்ந்த தளையும் தடையும் ஆகிறது; இந்தத் தடையைத்தான் கடன்-செலாவணி அமைப்பு ஓயாமல் தகர்த்துச் செல்கிறது.[89] ஆகவே கடன் - செலாவணி அமைப்பு உற்பத்திச் சக்திகளின் பொருளாயத வளர்ச்சியையும் உலகச் சந்தை நிறுவப்படுவதையும் முடுக்கி விரைவுபடுத்துகிறது. புதிய பொருளுற்பத்தி முறையின் இந்தப் பொருளாயத அடித்தளங்களை முழு நிறைவின் குறிப்பிட்ட படித்தரத்துக்கு உயர்த்துவது முதலாளித்துவப் பொருளுற்பத்தி அமைப்பின் வரலாற்றுக்கடமை ஆகும். அதேபோது கடன்-செலாவணியானது இந்த முரண்பாட்டின் ஆவேசக் குமுறல்களை - நெருக்கடிகளை - விரைவுபடுத்தி, இவ்விதம் பழைய பொருளுற்பத்தி முறையின் குலைவிற்கான அடிக்கூறுகளை முடுக்கிவிடுகிறது.

கடன்-செலாவணி அமைப்பில் உள்ளார்ந்திருக்கும் இரு தனிச் சிறப்புகள் என்னவென்றால்; ஒரு புறம், முதலாளித்துவப் பொருளுற்பத்தியின் ஊக்குவிசையை அதாவது பிறர் உழைப்பைச் சுரண்டிசெல்வம் சேர்த்தலைச் சூதாட்டமாகவும் மோசடியாகவும் மிகவும் நேரடியான, மிகவும் பகாசுரமான வடிவத்துக்கு வளர்த்திடுகிறது, சமுதாயச் செல்வத்தைச் சுரண்டுகிற அந்த ஒருசிலரின் எண்ணிக்கையை மேன்மேலும் குறையச் செய்திடுகிறது. மறுபுறம், புதிய பொருளுற்பத்தி இந்த இரண்டுங்கெட்ட தன்மை காரணமாகத் தான் லா முதல் ஐசக் பெரைரே வரையிலான கடன் செலாவணியின் அதிமுக்கிய சொல் விளம்பிகளெல்லாம் மோசடிக்காரரும் தீர்க்தரிசியும் ஒன்று கலந்தால் போன்ற இன்னியல்பு வாய்ந்தவர்களாய் இருக்கிறார்கள்.

89. கிளாஸ்கோ, 1832 ஆங்கிலப் பதிப்பாசிரியர்.

## அத்தியாயம் XXVIII

## சுற்றோட்ட ஊடகமும் மூலதனமும்; டூக் புல்லர்ட்டன் கருத்தோட்டம்

டூக்,[90] வில்சன் முதலானோர் செலாவணியையும் மூலதனத்தையும் வேறுபடுத்திக் காட்டுகையில், சுற்றோட்ட ஊடகம் பணமாக இருப்பதற்கும், பொதுவாய் பண-மூலதனமாக இருப்பதற்கும், வட்டி-மூலதனமாக இருப்பதற்கும் இடையிலான வேறுபாடுகள் எல்லாம் தாறுமாறாகக் கலந்துவிடுகின்றன; முடிவில் இதிலிருந்து வரப்பெறும் விவரங்கள் இரண்டு.

---

90. இது தொடர்பாக டூக் எழுதியிருப்பதை மூலவடிவில் இங்கு எடுத்துக் கொடுக்கிறோம். ஜெர்மன் பதிப்பில் பக்கம் 390இல் இது இடம் பெற்றது. 'வங்கியாளரின் அலுவலை - கேட்டவுடன் பணம் செலுத்த வேண்டிய உறுதிப்பத்திர நோட்டுகள் வெளியிடுவதை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் - இரு கிளைகளாகப் பிரிக்கலாம்; வர்த்தகர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இடைப்பட்ட கொடுக்கல் வாங்கல்களையும், வர்த்தகர்களுக்கும் நுகர்வாளர்களுக்கும் இடைப்பட்ட கொடுக்கல் - வாங்கல்களையும் டாக்டர் (ஆதாம்) ஸ்மித் சுட்டிக்காட்டியுள்ளார். வேறுபடுத்திப் பார்ப்பதன் மூலம் இப்படிப் பிரிக்கலாம். மூலதனத்தை உடனடியாகச் செயலில் ஈடுபடுத்த வாய்ப்பில்லாதவர்களிடமிருந்து அதனை வசூல் செய்வதும், அவ்விதம் ஈடுபடுத்த வாய்ப்புள்ளவர்களுக்கு அதனை விநியோகம் அல்லது கைமாற்றம் செய்வதும் வங்கியாளரது அலுவலின் ஒரு கிளையாகும். வாடிக்கையாளரின் வருமானங்களை வைப்புகளாகப் பெற்றுக் கொள்வதும் அவர்கள் தமது நுகர்வுப் பொருட்களுக்காகச் செலவிடுவதற்கு வேண்டும்போது தொகையை எடுத்துக் கொடுப்பதும் மற்றொரு கிளையாகும்...முன்னது மூலதனத்தின் சுற்றோட்டமாகும், பின்னது செலாவணியின் சுற்றோட்டமாகும்.' (டூக், செலாவணிக் கோட்பாடு பற்றிய ஆய்வு, லண்டன், பக்கம் 36.) முன்னது 'ஒருபுறத்தில் மூலதனக்குவிப்பும் மறுபுறத்தில் மூலதன நோக்கங்களுக்காகச் சுற்றோட்டத்தை நிர்வகிப்பது' ஆகும். (மேலது, பக்கம் 37.) இதைவிடவும் மிகச் சரியான ஆங்கிலேயரைப் பொறுத்தவரை பண வடிவமூலதனமாக) (கருத்தோட்டத்தின் உருவறை கின்னியரிடமிருந்தான பின்வரும் நூற்பகுதியில் காணக்கிடைக்கிறது: 'பணமானது....அடிப்படையிலேயே வேறுபட்டவையான இரு காரியங்களை செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது.... வர்த்தகர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இடைப்பட்ட பரிவர்த்தனைக்கான ஊடகம் என்ற முறையில், அது மூலதனத்தை கைமாற்றுவதற்கான கருவியாகப் பயன்படுகிறது. அதாவது பண வடிவிலானகுறிப்பிட்ட அளவு மூலதனத்தை சரக்கு வடிவிலான அதே அளவு மூலதனத்திற்குப் பரிவர்த்தனை செய்திட பயன்படுகிறது. ஆனால் கூலி கொடுப்பதற்கும் வர்த்தகர்களுக்கும் நுகர்வாளர்களுக்கும் இடைப்பட்ட வாங்கல் விற்றலுக்கும் பயன்படுத்தப்படும் பணம் மூலதனமாகாது, வருமானமே ஆகும்; சமுதாயத்தின் வருமானங்களில் அன்றாடச் செலவுக்கென்று ஒதுக்கப்படும் பகுதியாகும். இது ஓயாத அன்றாட பயன்பாட்டில் சுற்றியோடுவதாகும். இதை மட்டும்தான் கண்டிப்பான சொல் வழக்கில் செலாவணி எனத்தகும். மூலதன முன்னீடுகள் முழுக்க முழுக்க வங்கியின் விருப்பத்தையும் ஏனைய மூலதன உடைமையாளர்களின் விருப்பத்தையுமே பொறுத்தவை; ஏனென்றால் கடன் வாங்குவதற்கு எப்போதுமே ஆட்கள் தயாராய் இருக்கக்காணலாம்; ஆனால் செலாவணியின் அளவானது அன்றாடச் செலவின் நோக்கங்களுக்காகத் தமக்கிடையே பணத்தைச் சுற்றியோடச் செய்யும் சமுதாயத்தினரின் தேவைகளைப் பொறுத்தது.' (ஜே.ஜி கின்னியர், நெருக்கடியும் செலாவணியும், லண்டன் 1847 (பக்கம் 3 - 4.)

செலாவணியானது வருவாய்ச் செலவீட்டை, அதாவது தனிப்பட்ட நுகர்வாளர்களுக்கும் சில்லறை வணிகர்களுக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கலை ஊக்கப்படுத்தி நிகழச் செய்கிற அளவில் நாணயமாக (பணமாக) சுற்றியோடுகிறது - நுகர்வாளர்களுக்கு (திறமுடைநுகர்வாளர்கள் அல்லது உற்பத்தியாளர்கள் அல்ல, தனிப்பட்ட சொந்த நுகர்வாளர்களுக்கு) விற்பனை செய்யும் எல்லா வணிகர்களும் இந்தச் சில்லறை வணிகர் இனத்தையே சேர்ந்தவர்கள். பணம் இங்கே ஓயாமல் மூலதனத்தை மாற்றீடு செய்கிறது என்றாலும் நாணயமாகப் பணிபுரியும் வகையில்தான் சுற்றியோடுகிறது. குறிப்பிட்ட நாட்டிலுள்ள பணத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதி எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும் தனிப்பட்ட நாணயங்களால் ஆனதாய் இருந்தபோதிலும் ஓயாமல் இப்பணிக்கென்றே ஒதுக்கப்படுகிறது. இது ஒரு புறமிருக்க, பணமானது வாங்கு சாதனம் (சுற்றோட்ட ஊடகம்) என்ற முறையிலோ கொடுப்புச் சாதனம் என்ற முறையிலோ மூலதனக் கைமாற்றத்தை ஊக்கப்படுத்தி நிகழச் செய்கிற அளவில் அது மூலதனம் ஆகும். ஆக, பணத்தை நாணயத்திலிருந்து வேறுபடுத்திக்காட்டுவது அது வாங்குஞ் சாதனமாக பணியாற்றுவதோ கொடுப்புச் சாதனமாகப் பணியாற்றுவதோ அல்ல; வர்த்தகர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் உலோகப் பணத்துக்கு சரக்கு வாங்குகிற அளவில் அது வாங்குஞ் சாதனமாகவும் செயல்படலாம்; கடன் - செலாவணி இருப்பதாகக் கொண்டு வருவாய் வரப் பெறுவதற்கு முன்பே நுகரப்படுகிற அளவில் வர்த்தகருக்கும் நுகர்வாளருக்கும் இடையே அது கொடுப்புச் சாதனமாகவும் கூட செயல்படலாம். இரண்டாவதாக குறிப்பிட்ட நேர்வில் இந்தப் பணம் ஒரு தரப்புக்கு, விற்பவரின் தரப்புக்கு மூலதனத்தை மாற்றீடு செய்து கொடுப்பதோடு, மறுதரப்பால், வாங்குபவரின் தரப்பால் மூலதனமாகச் செலவிடப்படுகிறது. முன்னீடு செய்யப்படுகிறது என்பதுதான் வேறுபாடாகும். அதாவது உண்மையில் வேறுபாடானது வருவாயின் பண வடிவத்துக்கும் மூலதனத்தின் பண வடிவத்துக்கும் இடையிலானதே தவிர, செலாவணிக்கும் மூலதனத்துக்கும் இடையிலானது அல்ல. எப்படியென்றால் நுகர்வாளர்களுக்கும் - வர்த்தகர்களுக்கும் இடையில் நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களைப் போலவே வர்த்தகர்களுக்குள் நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களிலும் குறிப்பிட்ட பண அளவு சுற்றியோடுகிறது. ஆகவே இந்த இருபணிகளை, ஆற்றும்போதும், அது செலாவணியாகவே இருக்கிறது. எவ்வித மாறுபாடும் இல்லை. டூக்கின் கருத்தோட்டம் பல்வேறு வழிகளிலும் இப்பிரச்சினையில் குழப்பம் உண்டாக்குகிறது:

(1) பணி வழிப்பட்ட வேற்றுமைகளைக் குழப்புதல்;

(2) இரு பணிகளிலும் சுற்றியோடும் மொத்தப் பண அளவு தொடர்பான பிரச்சினையைக் கொண்டு வந்து அமைத்தல்;

(3) இரு பணிகளிலும், இவ்விதம் மறுவுற்பத்தி நிகழ்முறையின் இரு துறைகளிலும் சுற்றியோடும் செலாவணி அளவுகளின் ஒப்பு விகிதங்கள் தொடர்பான பிரச்சினையை கொண்டு வந்து நுழைத்தல்.

(1) இதில் பணமானது ஒரு வடிவத்தில் செலாவணியாகவும் மறுவடிவத்தில் மூலதனமாகவும் இருப்பதாகிய பணிவழிப்பட்ட வேற்றுமைகள் குழம்பிக் கொள்ளப்படுகின்றன. பணம் ஏதேனும் ஒரு பணியைப் புரிவதாய் உள்ளவரை, அது வருவாயை ஈடேற்றம் செய்தாலும் சரி, மூலதனத்தைக் கைம்மாற்றம் செய்தாலும் சரி, வாங்கல் விற்றலிலோ பணம் கொடுப்பிலோ செயல்படுகிறது; அதாவது வாங்குஞ் சாதனமாகவோ கொடுப்புச் சாதனமாகவோ செயல்படுகிறது; செலாவணி என்னும் சொல்லுக்குரிய விரிந்த அர்த்தத்தில் செலாவணியாகச் செயல்படுகிறது. பணமானது அதை செலவிடுகிறவர் அல்லது வரப்பெறுகிறவரின் கணக்கிடுகளில் மூலதனம் அல்லது வருவாயாக இருப்பதென்றும் அந்த மற்றுமொரு நோக்கத்தால் எவ்வித மாறுபாடும் இல்லை; இது இரு வழிகளில் நிரூபணமாகிறது. இரு துறைகளிலும் சுற்றி ஓடும் பண-வகைகள் வெவ்வேறாய் இருந்த போதிலும், ஒரே காசு, எடுத்துக்காட்டாக ஓர் ஐந்து - பவுன் நோட்டு ஒரு துறையிலிருந்து மறுதுறைக்குள் செல்வதும் மாறி மாறி இரு பணிகளையும் ஆற்றுவதுமாய் இருக்கிறது; இது தவிர்க்க முடியாதது. சில்லறை வணிகர் தமது வாடிக்கையாளர்களிடமிருந்து வரப்பெறும் நாணயத்தைக் கொண்டுதான் தமது மூலதனத்தைப் பண வடிவம் பெறச் செய்ய முடியும் என்பதையே இதற்குக் காரணமாய்க் குறிப்பிடலாம். சில்லறை வணிகத் துறையே உள்ளபடியான சில்லறைக் காசுக்கு சுற்றோட்ட ஈர்ப்பு மையமாய் இருப்பதாகக் கொள்ளலாம்; சில்லறை வணிகருக்கு - ஓயாமல் சில்லறைக் காசு தேவைப்படுகிறது, நுகர்வாளர்களிடமிருந்து ஓயாமல் அது அவரிடம் வந்து சேருகிறது. ஆனால் இதோடு மதிப்பு நியமமாகப் பயன்படும் உலோக வடிவிலும் பணம், அதாவது நாணயம் அவருக்கு வந்து சேருகிறது. இங்கிலாந்தில் ஒரு பவுன் நாணயங்களாக, ஏன், வங்கி - நோட்டுகளாகவும் கூட, முக்கியமாய் குறைந்த மதிப்புள்ளவையாக, ஐந்து - பவுன், பத்து-பவுன் நோட்டுகளைப் போன்றவையாக வந்து சேருகிறது. சில்லறை வணிகர்

இந்தப் பொற்காசுகளையும் நோட்டுகளையும், மற்றும் மிச்சமாகக் கூடிய சில்லறைக் காசுகளையும் நாள்தோறும் அல்லது வாரந்தோறும் வங்கியில் போட்டு வைக்கிறார்; கொள்முதல் செய்கையில், வைப்பின்பேரில் காசோலைகள் எழுதி விலையாகக் கொடுக்கிறார். ஆனால் இந்தப் பொற்காசுகளும் வங்கி நோட்டுகளும் வந்து சேருவது போலவே ஓயாமல் வங்கியிலிருந்து விலகிச் சென்றவாறு உள்ளன; இது நேர்வழியிலோ சுற்று வழியிலோ நடைபெறுகிறது (ஆலையதிபர்கள் கூலி கொடுப்பதற்காக சில்லறை காசு எடுப்பதை உதாரணமாய்க் குறிப்பிடலாம்); பொதுமக்கள் அனைவரும் நுகர்வாளர் என்ற முறையில் தமது வருவாயின் பண வடிவமாக இவற்றை வங்கியிலிருந்து எடுக்கின்றனர்; இவை ஓயாமல் ஓடிப்பாய்ந்து சில்லறை வணிகர்களிடமே திரும்பிச் செல்கின்றன; இவ்விதம் மீண்டும் அவர்களது மூலதனத்தில் ஒரு பகுதியை அவர்களுக்கு ஈடேற்றம் செய்து கொடுக்கின்றன; அதேபோது அவர்களது வருவாயில் ஒரு பகுதியையும் கூட ஈடேற்றம் செய்து கொடுக்கின்றன. இந்த வருவாய் - ஈடேற்றம் முக்கியமானது. டுக் அறவே காணத்தவறுவது, பணம் பண மூலதனமாகச் செலவிடப்படும்போதுதான், மறுவுற்பத்தியின் நிகழ்முறையின் ஆரம்பக் கட்டத்தில்தான் மூலதன - மதிப்பு தூய வடிவில் அப்படியே மூலதன மதிப்பாக மட்டும் நிலவுகிறது. ஏனென்றால் உற்பத்திச் சரக்குகள் மூலதனத்தை மட்டுமல்லாமல், உபரி - மதிப்பையும் உள்ளடக்கி இருப்பவை; அவை மூலதனமாக மட்டும் இருப்பவையல்ல, மூலதனமாக ஈடேற்றம் பெற்றுவிட்ட மூலதனமாகவும் இருப்பவை, வருவாயின் ஆதாரத்தை உள்ளடக்கிய மூலதனமாகவும் இருப்பவை. ஆகவே சில்லறை வணிகர் தம்மிடம் திரும்பி வரும் பணத்துக்குப் பதிலாய் கொடுக்கிறவை, அதாவது அவரது விற்பனைச் சரக்குகள் அவருக்கு மூலதனம்+இலாபம் ஆகும். மூலதனம் +வருவாய் ஆகும்.

மேலும், சுற்றியோடும் பணமானது சில்லறை வணிகரிடம் திரும்பி வருவதன் மூலம் அவரது மூலதனத்தின் பணவடிவத்தை மீட்டுக் கொடுக்கிறது.

ஆக, வருவாயின் சுற்றோட்டத்துக்கும் மூலதனத்தின் சுற்றோட்டத்துக்கும் இடையிலான வேறுபாட்டைச் செலாவணிக்கும் மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடாகப் பெயர்த்துச் சொல்வது முற்றமுழுக்க தவறானது. தாமே வங்கி - நோட்டு வெளியிடும் வங்கியாளரின் கண்ணோட்டத்தை மேற்கொள்வதால்தான் டுக்

இப்படித் தவறாகச் சொல்கிறார். இந்த வங்கியாளரின் நோட்டுகளில் ஓயாமல் பொதுமக்கள் கையில் தங்கி செலாவணியாகப் பயன்படுகிறவற்றுக்காக அவருக்கு எச்செலவும் ஆவதில்லை - காகிதத்துக்கும் அச்சாக்கத்துக்கும் ஆகிற செலவு தவிர, இந்த நோட்டுகள் அவர் பெயரில் வரையப்பெற்ற கடன் - சான்றுப் பத்திரங்களாக (மாற்று உண்டியல்களாக) சுற்றியோடுகிறவை என்றாலும், அவருக்குப் பணம் கிடைக்கச் செய்வதன் மூலம் அவரது மூலதனத்தைப் பெருகச் செய்யும் சாதனமாகப் பயன்படுகிறவை ஆகும். ஆனால் இவை அவரது மூலதனத்திலிருந்து - சொந்த மூலதனமானாலும் சரி, கடன் வாங்கிய மூலதனமானாலும் சரி - வேறுபடுகின்றன. இதனால்தான் செலாவணிக்கும் மூலதனத்துக்கும் இடையே அவருக்குத் தனி வேறுபாடு ஒன்று உள்ளது. ஆனால் இந்த வேறுபாட்டுக்கும் இந்தச் சொற்களுக்கே ஆன இலக்கண வரையறைக்கும் - அதிலும் குறிப்பாக டூக் - தரும் வரையறைக்கும் - எவ்விதத் தொடர்பும் இல்லை.

தனி வேறுபாடாக விளங்கும் தன்மையானது-வருவாயின் பணவடிவமாகப் பயன்படுகிறதா, மூலதனத்தின் பண வடிவமாக பயன் படுகிறதா என்பது - சுற்றோட்ட ஊடகமாக இருக்கும் பணத்தின் தன்மையில் எவ்வித மாற்றமும் உண்டாக்காது; இவ்விரு பணிகளில் எப்பணி புரிந்தாலும் அது இத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்கிறது. மெய்தான் பணமானது வருவாயின் பணவடிவமாகச் செயல்படும்போது மேலதிகமாகவே சுற்றோட்ட ஊடகமாக (நாணயமாக, வாங்கும் சாதனமாக) பயன்படுகிறது; வாங்குவதும் விற்பதுமான செயல்கள் பரவலாய்க் கலைந்திருப்பதும், வருவாயைச் செலவிடுகிறவர்களில் பெரும்பான்மையினர், அதாவது தொழிலாளர்கள் ஒப்பளவில் அதிகமாய்க் கடன் சொல்லி வாங்க முடியாது என்பதும் இதற்கே காரணம் ஆகும். அதே போது சுற்றோட்ட ஊடகம் மூலதனத்தின் பணவடிவமாய்த் திகழ்கிற தொழில் - வர்த்தக உலகின் கொடுக்கல் வாங்கலிலோ, பணமானது பிரதானமாய்க் கொடுப்புச்சாதனமாகவே பயன்படுகிறது; மூலதனக் குவிப்பு ஓரளவும், கடன் - செலாவணி அமைப்பு நிலவி வருவது ஓரளவும் இதற்குக் காரணம் ஆகும். ஆனால் கொடுப்புச் சாதனமாகப் பயன்படும் பணத்துக்கும் வாங்கும் சாதனமாக (சுற்றோட்ட சாதனமாக) பயன்படும் பணத்துக்கும் இடையிலான வேறுபாடு பணம் தொடர்பான வேறுபாடே ஆகும். அது பணத்துக்கும் மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடு ஆகாது. சில்லறை வர்த்தகத்தில் தாமிரமும் வெள்ளியும்

மேலதிகமாய்ச் சுற்றியோடுகின்றன, மொத்த வர்த்தகத்திலோ தங்கம் மேலதிகமாய்ச் சுற்றியோடுகிறது. தங்கத்துக்கும் இடையிலான வேறுபாடு சுற்றோட்டத்துக்கும் மூலதனத்துக்கும் இடையிலான வேறுபாடாகாது.

2) இதில் இருபணிகளிலும் சுற்றியோடும் மொத்தம் பண அளவு தொடர்பான பிரச்சனை கொண்டு வந்து அழைக்கப்படுகிறது: பணம் சுற்றியோடுவதாய் உள்ளவரை, அது வாங்கும் சாதனமாகச் சுற்றியோடினாலும் சரி, கொடுப்புச் சாதனமாகச் சுற்றியோடினாலும் சரி - இரண்டில் எத்துறையில் இவ்விதம் சுற்றியோடினாலும் சரி, மேலும் அதன் பணி வருவாயை ஈடேற்றம் செய்வதாக இருந்தாலும் சரி, மூலதனத்தை ஈடேற்றம் செய்வதாக இருந்தாலும் சரி - சுற்றியோடும் பணத்திரளின் அளவானது ஏற்கனவே நாம் சாமானிய சரக்குச் சுற்றோட்டத்தை பரிசீலிக்கையில் விதித்துரைத்த விதிகளுக்கே உட்பட்டதாகும் (முதல்பாகம், அத்தியாயம் III, பிரிவு 2,6). எது எப்படியானாலும், சுற்றோட்ட வேகமும், அதாவது குறிப்பிட்ட கால வரைக்குள் அதே காசுகள் வாங்கு சாதனமாகவும் கொடுப்புச் சாதனமாகவும் அதே பணியைத் திரும்பத் திரும்ப எத்தனை முறை புரிகின்றன என்பதும், ஏக காலத்திய விற்றல், வாங்கல்கள் அல்லது கொடுப்புகளின் திரளும், சுற்றியோடும் சரக்குகளின் விலைகளைக் கூட்டி வரும் கூட்டுத் தொகையும், முடிவில் அதே காலத்தில் தீர்க்கப்பட வேண்டிய கொடுப்புகளின் நிலுவைகளுமே சுற்றியோடும் பணத்தின், செலாவணியிலும் பரிமாணத்தை நிர்ணயிக்கின்றன. இவ்விதம் செயலில் ஈடுபடுத்தப்படும் பணம் அதைக் கொடுக்கிறவருக்கோ பெறுகிறவருக்கோ மூலதனத்தைக் குறித்தாலும், வருவாயைக் குறித்தாலும் எல்லாம் ஒன்றுதான், இதனால் விவகாரத்தில் எவ்வித மாற்றமுமில்லை. இப் பணத்தின் பரிமாணம் வாங்குஞ் சாதனமாகவும் கொடுப்புச் சாதனமாகவும் அது புரியும் பணியினால்தான் நிர்ணயிக்கப்படுகிறது -

3) இதில் இரு பணிகளிலும் இவ்விதம் மறுவுற்பத்தி நிகழ்முறையின் இரு துறைகளிலும் சுற்றியோடும் செலாவணி அளவுகளின் ஒப்பு விகிதங்கள் தொடர்பான பிரச்சினை கொண்டுவந்து நுழைக்கப்படுகிறது. சுற்றோட்டத்தின் இரு துறைகளும் அகத் தொடர்புடையவை: எப்படியென்றால், ஒருபக்கத்தில், செலவிடப்பட வேண்டிய வருவாய்களின் திரள் நுகர்வின் பரிமாணத்தை தெரிவிக்கின்றது: மறுபக்கத்தில் உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் சுற்றியோடும் மூலதனத்திரள்களின் பருமன் மறுவுற்பத்தி

நிகழ்முறையின் பரிமாணத்தையும் விரைவையும் தெரிவிக்கிறது. ஆயினும் குறிப்பிட்ட இதே நிலைமைகள் இருபணிகள் அல்லது துறைகளிலும் சுற்றியோடும் பண அளவுகள் மீது, அல்லது (வங்கித் தொழிலுக்குரிய வழக்கில் ஆங்கிலேயர் சொல்வது போல) செலாவணியின் அளவு மீது வேறுபட்ட விளைவை, ஏன் எதிரெதிர் திசைகளில் இயங்கும் விளைவையே கூட உண்டாக்குகின்றன. டூக் மூலதனத்தையும் செலாவணியையும் கொச்சையாக வேறுபடுத்திக் காட்டுவதற்கு இதுவே புதுக் காரணம் ஆகிவிடுகிறது. செலாவணித் தத்துவத்தை விளம்பிடும் கனவான்கள் இருவேறு சங்கதிகளைக் குழப்பிக் கொள்வதே அவற்றை இருவேறு கருத்துருவங்களாகக் காட்டுவதற்கு எவ்விதத்தும் காரணமாகி விடாது.

மறுவுற்பத்தி நிகழ்முறை செழிப்பானதாகவும், மும்முரமாய்ப் பெருகி விரிவடைவதாகவும், வளர்வேகத்தில் நடைபெறுவதாகவும் விறுவிறுப்பானதாகவும் அமைந்திடும் காலங்களில், தொழிலாளர்கள் முழுவேலைவாய்ப்பு பெறுகிறார்கள். பொதுவாகச் சொன்னால் கூலியும் உயர்கிறது. தொழில் வர்த்தக சகடத்தின் ஏனைய கால கட்டங்களில் கூலி சராசரிக்கும் கீழானதாய் குறைவதை இந்தக் கூலி உயர்வு ஓரளவு சரிக்கட்டுகிறது. அதேபோது முதலாளிகளின் வருவாய்களும் கணிசமாய் வளர்ந்து பெருகுகின்றன. பொதுவாக நுகர்வு அதிகரிக்கிறது. சரக்கு விலைகளும் காலந்தவறாமல் உயருகின்றன, எப்படியும் உயிர்நாடியான பல்வேறுபட்ட தொழிற்கிளைகளிலாவது உயருகின்றன. இதனால், சுற்றோட்டத்தில் இருக்கும் பண அளவு அதிகரிக்கிறது; சுற்றோட்ட வேகம் அதிகரிப்பதானது செலாவணியின் அளவு அதிகரிப்பதற்கே சில தடைமதில்களை ஏற்படுத்துவதால் இந்தப் பணஅளவு குறிப்பிட்ட வரம்புகளுக்குட்பட்டேனும் அதிகரிக்கிறது. சமுதாய வருவாயில் கூலியாக அமைந்திருக்கும் பகுதி ஆரம்பத்தில் தொழில்துறை மாறும்-மூலதனவடிவில் முன்னீடு செய்யப்பட்டதாகும் என்பதாலும் அது எப்போதும் பண வடிவில் இருப்பதாலும், செம்மைக் காலத்தில் அதன் சுற்றோட்டத்துக்குப் பணம் அதிகமாய்த் தேவைப்படுகிறது. ஆனால் நாம் இருமுறை இதனைக் கணக்கில் சேர்த்து விடக்கூடாது - முதலில் மாறும் - மூலதனத்தின் சுற்றோட்டத்துக்குத் தேவைப்படும் பணமாகவும், பிறகு தொழிலாளர்களுடைய வருவாயின் சுற்றோட்டத்துக்குத் தேவைப்படுகிறது பணமாகவும் கணக்கில் சேர்த்து விடக்கூடாது. தொழிலாளர்களுக்குக் கூலியாகத் தரப்படும் பணம் சில்லறை வர்த்தகத்தில் செலவிடப்பட்டு, அநேகமாய் வாரம்

ஒருமுறை சில்லறை வணிகர்களின் வைப்புகளாக வங்கிகளுக்குத் திரும்பி வந்து சேருகிறது; இன்னுஞ் சிறிய காலவட்டங்களில் இடைப்பட்டு வரும் நானாவித கொடுக்கல் வாங்கல்களை நிகழ்த்தி முடிந்தபின் இவ்விதம் வந்து சேர்கிறது. செழுமைக் காலத்தில் பணத்தின் மீள்வு தொழில்துறை முதலாளிகளுக்குச் சரளமாய் நடைபெறுகிறது; முன்னைக் காட்டிலும் இப்போது கூலி அதிகமாய்க் கொடுக்க வேண்டியிருந்தாலும் மாறும்-மூலதனத்தின் சுற்றோட்டத்துக்குப் பணம் அதிகமாய்த் தேவைப்பட்டாலும் , இதனால் பணக்கடன் வசதிக்கான தேவை அதிகரிக்காமல் போவதற்கு பணத்தின் இந்தச் சரளமான மீள்வுதான் காரணம்.

வருவாய்ச் செலவீட்டுப் பயன்படும் சுற்றோட்ட ஊடகங்களின் திரள் செழுமைக் காலங்களில் உறுதியாய் அதிகரிப்பதே ஒட்டுமொத்தவிளைவாகும்.

மூலதன கைமாற்றத்துக்கு தேவைப்படுகிற, எனவே முழுக்க முழுக்க முதலாளிக்குள்ளேயே தேவைப்படுகிற சுற்றோட்டத்தைப் பொறுத்தவரை, விறுவிறுப்பாய் தொழில் நடைபெறும் காலமே சுலபமாகவும் சரளமாகவும் கடன் கிடைக்கும் காலமும் ஆகும். முதலாளிக்கும் முதலாளிக்கும் இடையிலான சுற்றோட்ட வேகம் நேரடியாகவே கடன்-செலாவணியால் ஒழுங்கு செய்யப்படுகிறது; கொடுப்புகளை அடைத்து முடிப்பதற்கும், ஏன், ரொக்கம் கொடுத்து கொள்முதல் செய்வதற்கும் கூட தேவைப்படுகிற சுற்றோட்ட ஊடகத்திரள் இந்த வேகத்துக்கேற்ப குறைகிறது. அது அறுதியாக அதிகரித்தாலும் அதிகரிக்கலாம்; ஆனால் மறு உற்பத்தி நிகழ்முறையின் விரிவாக்கத்துடன் ஒப்பு நோக்குமிடத்து எல்லா நிலைமைகளிலும் ஒப்பளவில் குறையவே செய்கிறது. ஒருபுறம், பணத்தின் இடைச்செயல் இல்லாமலே முன்னைக் காட்டிலும் பெருந்திரளான கொடுப்புகள் அடைபடுகின்றன; மறுபுறம்; நிகழ்முறை விறுவிறுப்பாக நடைபெறுவது காரணமாய், குறிப்பிட்ட பணத்தொகைகள் வாங்குஞ் சாதனம் என்ற முறையிலும் சரி, கொடுப்புச் சாதனம் என்ற முறையிலும் சரி முன்னைக் காட்டிலும் துரிதமாய் இயங்குகின்றன. குறிப்பிட்ட பண அளவு முன்னைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான தனிப்பட்ட மூலதனங்களில் மீள்வை ஊக்கி நிகழ்த்துகிறது.

இந்தச் செழுமைக் காலங்களில் பணத்தின் ஓட்டமானது துறை 1-இல் (வருவாய்ச் செலவீடு அறுதியாக விரிவடையும்போதே துறை2-இல் (மூலதனப் பெயர்ச்சி) ஒப்பளவிலானது சுருங்குகிறது என்றாலும், மொத்தத்தில் முழுநிறைவானதாகவே காட்சியளிக்கிறது.

மூலதன மீள்வுகள் சரக்கு-மூலதனம் திரும்பவும் பணமாக உருமாறுவதை M—C—M' என்பதைத் தெரிவிக்கின்றன - இரண்டாம் பாகம், பகுதி 1-இல் மறுவுற்பத்தி நிகழ்முறையைப் பரிசீலித்த போது இதைக் கண்ணுற்றோம். தொழில்துறை முதலாளி, வணிகர் இருவருக்குமே பணவடிவிலான மூலதன மீள்வுக்கும் உள்ளபடியே அம்மீள்வு நடைபெறும் நேரத்துக்கும் தொடர்பே இல்லாத நிலை கடன் செலாவணியால் ஏற்படுவதாகும். இருவருமே கடனுக்கு விற்கின்றனர்; அவர்களுடைய சரக்குகள் திரும்பவும் அவர்களுக்குப் பணமாக உருமாறுவதற்கு முன்பே, அதாவது பணவடிவில் அவர்களிடம் திரும்பி வந்து சேருவதற்கு முன்பே, இவ்விதம் உடைமை மாற்றம் செய்யப்பட்டு விடுகின்றன. மறுபுறம் அவர்கள் கடனுக்கு வாங்கவும் செய்கிறார்கள்; அவர்களுடைய சரக்குகளின் மதிப்பு உண்மையில் பணமாக உருமாறுவதற்கு முன்பே, அதாவது சரக்கு விலையை செலுத்த வேண்டிய நேரம் வந்து அது செலுத்தப்படுவதற்கு முன்பே, அம்மதிப்பு திரும்பவும் திறனுடைய - மூலதனமாகவோ சரக்கு - மூலதனமாகவோ மாற்றப்பட்டு விடுகிறது. இந்தச் செழுமைக் காலங்களில் மூலதன மீள்வு சரளமாகவும் சுலபமாகவும் நடந்தேறுகிறது. உறுதியாகச் சில்லறை வணிகர் மொத்த வணிகருக்கும், மொத்த வணிகர் ஆலையதிபருக்கும், ஆலையதிபர் கச்சாப் பொருள் இறக்குமதி யாளருக்கும் பணம் செலுத்துகின்றனர் - இவ்வாறே மேலும் சொல்லலாம். மீள்வுகள் துரிதமாகவும் நம்பத்தக்க முறையிலும் நடைபெறுவது போன்ற தோற்றம் அம் மீள்வுகள் உண்மையின் முடிவுற்ற முடிவுற்ற பிறகும் மறையாமல் நீண்ட காலத்துக்கு நீடிக்கிறது; கடன்-செலாவணி நடப்பில் இருப்பதால்தான் இது சாத்தியமாகிறது; எப்படியென்றால் மெய்யான மீள்வுகளுக்குப் பதிலாகக் கடன்-செலாவணி மீள்வுகள் இடம் பெறுகின்றன. வாடிக்கையாளர்கள் பணத்தைக் காட்டிலும் மாற்று உண்டியல்களை அதிகமாய் வைப்பில் இட முற்பட்டதுமே வங்கிகள் வரவிருக்கும் ஆபத்தை கண்டு கொள்கின்றன. லிவர்புல் வங்கி இயக்குநர் அளித்த சாட்சியத்தைப் பார்க்கவும்.

நான் முன்பே குறிப்பிட்டதை இங்கு எடுத்துக் காட்டலாம்: 'கடன் செலாவணி ஆதிக்கம் செலுத்தும் காலங்களில் பணச் சுற்றோட்டத்தின் வேகம் சரக்கு-விலைகளைக் காட்டிலும் துரிதமாய் அதிகரிக்கிறது. கடன்-செலாவணி வீழ்ச்சியடையும் காலங்களிலோ சரக்கு-விலைகள் சுற்றோட்ட வேகத்தைக்காட்டிலும் மெதுவாய்ச் சரிகின்றன.' (அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு 1859, பக்கம் 83,84.)

*நெருக்கடிக் காலத்தில் மேற்சொன்னதற்கு நேர்மாறாய் நடைபெறுகிறது. துறை 1- இல் சுற்றோட்டம் சுருங்குகிறது. விலைகள் குறைகின்றன. இதேபோல் கூலியும் குறைகிறது; வேலை பெற்ற தொழிலாளர் தொகை சுருங்குகிறது. கொடுக்கல் வாங்கல்களின் திரள் சரிகிறது. மாறாக, கடன் - செலாவணி சுருங்கிப் போகும் நிலையில் துறை 2- இன் சுற்றோட்டத்தில் பணக்கடன் வசதிக்கான தேவை அதிகரிக்கின்றது. இப்போதே இன்னும் கூட விவரமாய் இதனை பரிசீலிப்போம்.*

*மறுவுற்பத்தி நிகழ்முறையில் தேக்கம் ஏற்படும்போது கடன் - செலாவணி குறைந்து போவதால், துறை 1-க்கு அதாவது வருவாய்ச் செலவீட்டுக்குத் தேவைப்படும் சுற்றோட்டத்திரள் சுருங்க, துறை 2-க்கு அதாவது மூலதன பெயர்ச்சிக்கு தேவைப்படும் சுற்றோட்டத்திரள் விரிவடைகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இப்படிச் சொல்வது ஃபுல்லர்ட்டனும் மற்றவர்களும் எடுத்துரைக்கும் பின்வரும் கருத்தோடு எந்த அளவுக்கு ஒத்துப் போகிறது என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று: 'கடனாய் கிடைக்கும் மூலதனத்திற்கான வேண்டலும் கூடுதல் சுற்றோட்டத்திற்கான வேண்டலும் இருவேறு சங்கதிகள்; அநேக சந்தர்ப்பங்களில் இவை தொடர்பற்று இருக்கக் காணலாம்.' (ஃபுல்லர்ட்டன், முன்வந்தது, பக்கம் 82, அத்தியாயம் 5-இன் தலைப்பு)*[91]

91) 'பணக் கடன் வசதிக்கான' (அதாவது மூலதனக் கடனுக்கான) 'வேண்டலும் கூடுதல் சுற்றோட்டச் சாதனங்களுக்கான வேண்டலும் ஒன்றுதான் என்று நினைப்பது, அல்லது இரண்டும் அநேகச் சந்தர்ப்பங்களில் தொடர்புள்டயவை என்று நினைப்பதே கூட பெருந்தவறு ஆகும். இந்த ஒவ்வொரு வேண்டலும் தனி விவேகமாய் அதற்கே உரிய நிலைமைகளில் தோற்றம் எடுப்பதாகும், ஒன்றுக்கொன்று வெகுவாய் மாறுபட்டதாகும். செழுமை படர்ந்திருக்கும்போதுதான், கூலிஉயர்ந்தும், விலைகள் ஏறுமுகமாயும், ஆலைகள் வேலைமயமாகவும் இருக்கும்போதுதான் பெரிய அளவிலும் அதிக எண்ணிக்கையிலும் கொடுப்புகளை நிகழ்த்தும் அவசியத்திலிருந்து பிரிக்க முடியாத கூடுதல் பணிகளை நிறைவேற்றுவதற்கு வழக்கமாகவே செலாவணியின் கூடுதல் வழங்கல் தேவைப்படுகிறது; ஆனால் பெரும்பாலும் வர்த்தகச் சகடம் இன்னும்கூட முன்னேறிச் சென்றுவிட்ட ஒரு கட்டத்தில்தான், இடர்ப்பாடுகள் எதிர்படத் தொடங்கும்போது, சந்தைகளில் சரக்கிருப்பு மிகையாகி மீள்வரவுகள் தாமதப்படும்போதுதான் வட்டி உயருகிறது, மூலதன முன்னீடுகள் செய்தாக வேண்டிய நெருக்குதல் வங்கிக்கு ஏற்படுகிறது. வங்கியானது வழக்கமாகவே அதன் உறுதிப் பத்திர நோட்டுகளை ஊடகமாகக் கொண்டுதான் மூலதனத்தை முன்னீடு செய்கிறது என்பதும் எனவே இந்த நோட்டுகளை ஏற்க மறுப்பது கடன் வசதியை ஏற்க மறுப்பதாகும் என்பதும் உண்மைதான். ஆனால் கடன் வசதி வழங்கப்பட்ட உடனே, சந்தையின் அவசியத் தேவைக்களுக்கிணங்க அனைத்தும் சரிப்பட்டு விடுகிறது; கடன் நீடித்திருக்கிறது; செலாவணி தேவைப்படாது போனால் வெளியிட்டோரிடமே திரும்பி போய்ச் சேருகிறது. இவ்வாறு, இங்கிலாந்து வங்கியின் கையிலிருக்கும் கடன் பத்திரங்கள் அவ்வங்கியின் சுற்றோட்டச் செலாவணிக்கு இசைவாக அலைவுறுவதைக் காட்டிலும் பெரும்பாலும் எதிர் திசையிலேயே அலைவுறுகின்றன என்பது பராளுமன்ற தகவலறிக்கைகளை மேலோட்டமாய்ப் பரிசீலிக்கும் போதே எவருக்கும் தெளிவாய்த் தெரியவரும். ஆகவே கிராமப்புற வங்கியாளர்கள் இத்துணை அழுத்தம் திருத்தமாய் வலியுறுத்துகிற அந்தக் கோட்பாட்டுக்கு இந்த மாபெரும் வங்கி

முதலாவதாக, மேற்கூறிய இரு நேர்வுகளில் முதலாவதில், அதாவது செழுமைக் காலங்களில் சுற்றோட்ட ஊடகத்திரள் அதிகரிக்கவே செய்யும், அப்போது, அதற்கான வேண்டலும் அதிகரிப்பது தெளிவாய்த் தெரிகிறது. இன்னுமதிக மூலதனம் செலவிட வேண்டி இருப்பதால், வங்கியிலிருக்கும் தமது வைப்பிலிருந்து தங்கமாகவோ வங்கி நோட்டுகளாகவோ எடுப்பது அதிகரித்தாலும் குறைந்தாலும் மூலதனத்துக்கான அவரது வேண்டல் அதனால் அதிகரிப்பதில்லை. அவர் தமது மூலதனத்தைச் செலவிடும் குறிப்பிட்ட, இந்த செலவீட்டு வடிவத்திற்கான வேண்டல்தான் அதிகரிக்கிறது. வேண்டலானது, அவர் தமது மூலதனத்தைச் சுற்றோட்டத்தில் விடுகிற செய்நுட்ப வடிவம் வடிவத்திற்கானதே. கடன்-செலாவணி அமைப்பின் வேறுபட்ட வளர்ச்சியை பொருத்தவரை எப்படியோ அதேபோல் - எடுத்துக்காட்டான ஒரே மாறும்-மூலதனம் அல்லது ஒரே கூலி அளவுக்கு சுற்றோட்ட ஊடகத் திரள் ஒரு நாட்டைக் காட்டிலும் இன்னொரு நாட்டில் அதிகமாய் தேவைப்படுகிறது; உதாரணமாய் ஸ்காட்லாந்தைக் காட்டிலும் இங்கிலாந்திலும் இங்கிலாந்தைக் காட்டிலும் ஜெர்மனியிலும் அதிகமாய்த் தேவைப்படுகிறது. இதேபோல் வேளாண்மையிலும் கூட

---

விதிவிலக்கு ஆகாது: ஒரு வங்கியின் சுற்றோட்டச் செலாவணியானது சாதாரணமாய் வங்கி நோட்டுச் செலாவணி பயன்படும்படியான நோக்கங்களுக்கெல்லாம் ஏற்கெனவே போதுமானதாய் இருக்குமானால் அது அச்சுற்றோட்டத்தை விரிவாக்கிக் கொள்ள முடியாது என்பதே அந்தக் கோட்பாடு, ஆனால் அந்த எல்லையைக்கடந்த பிறகு அதன் முன்னீடுகள் ஒவ்வொரு முறை கூடுதலாக்கப்படும் போதும் அதன் மூலதனத்திலிருந்து எடுத்து முன்னீடு செய்யப்பட வேண்டும். சேமவைப்பில் இருந்துவரும் அதன் கடன்பத்திரங்கள் சிலவற்றை விற்பதன் மூலமோ, இத்தகைய கடன்பத்திரங்களில் மேற்கொண்டு முதலீடு செய்யாமலிருப்பதன் மூலமோ இம்முன்னீடுகளுக்கான தொகை பெறப்பட வேண்டும். 1833க்கும் 1840க்கும் இடைப்பட்ட காலத்திற்கான பாராளுமன்ற தகவலறிக்கைகளிலிருந்து தொகுக்கப்பெற்ற அட்டவணை - முன்னொரு பக்கத்தில் இந்த அட்டவணையைக் குறிப்பிட்டுள்ளேன் - இந்த உண்மைக்குச் சான்றாகத் தொடர்ந்து பல எடுத்துக்காட்டுகளைத் தருகிறது; இவற்றில் இரண்டு குறிப்பிடத் தக்கவை; இவற்றுக்கு மேல் வேறுஎதையும் எடுத்துக்காட்ட வேண்டிய அவசியமே எனக்கு இருக்காது. 1837 ஜனவரி 3ஆம் நாள், இங்கிலாந்து வங்கி கடன்மதிப்பைக் காத்துக் கொள்ளவும், பணச் சந்தையின் இடர்ப்பாடுகளுக்கு முகம் கொடுக்கவும் அதிகபட்சமாய் தன் செல்வாதாரங்களைப் பயன்படுத்த வேண்டியதாயிற்று; அப்போது கடனாகவும் உண்டியற் கழிவாகவும் அது செய்த முன்னீடுகள் £17,022,000என்னும் பெருந்தொகையாக இருக்க காண்கிறோம்; முன்னீடு வெளியீடுகளின் கூட்டுத்தொகைக்கு கிட்டத்தட்ட சமமாகும்; வெளியீடுகளின் தொகையானது இதற்கிடையில் £17,076,000 குறைந்த அளவிலேயே அசையாமல் இருந்து வந்தது; மறுபுறம், 1833 ஜூன் 4ஆம் நாள் சுற்றோட்டம் £ 18,892,000ஆக இருந்தது. கைவசமிருந்த தனியார் கடன் பத்திரங்களின் மீள்வு கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் குறிக்கப் பெற்ற மிகக் குறைந்த அளவு என்று சொல்ல முடியாவிட்டாலும், கிட்டத்தட்ட அந்த அளவாக இருந்தது, அதாவது £972,000 மட்டுமே' (ஃபுல்லர்ட்டன், முன்வந்தது, பக்கம் 97, 98.) பணக் கடன் வசதிக்கான வேண்டலும் தங்கத்திற்கான (வில்சனும் டூக்கும் பிறரும் எதை மூலதனம் என்கிறார்களோ அதற்கான) வேண்டலும் முழுதொத்தவையாய் இருக்கத் தேவையேயில்லை என்பது இங்கிலாந்து வங்கியின் ஆளுநர் திருவாளர் வெகுலின் அளித்த பின்வரும் சாட்சியத்திலிருந்து தெரிகிறது: 'அந்த அளவுக்கு' (வரிசையாக மூன்று நாட்களுக்கு தினமும் ஒரு மிலியன் எனும் அளவுக்கு)'

மறுவுற்பத்தி நிகழ்முறையில் செயல்படும் ஒரே மூலதனத்திற்கு அதன் பணி நிறைவேறுவதற்காக வெவ்வேறு பருவகாலங்களில் வெவ்வேறு பண-அளவுகள் தேவைப்படுகின்றன.

ஆனால் ஃபுல்லர்ட்டன் குறிப்பிடும் வேற்றுமை சரியானதன்று. மந்த காலத்தை செழுமை காலத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது அவர் சொல்வது போல் கடன்களுக்கான வலுத்த வேண்டல் அல்லவே அல்ல. செழுமைக் காலங்களில் இவ் வேண்டல் எளிதில் நிறைவு செய்யப்படுவதும், மந்த காலங்களில் அது பல இடர்ப்பாடுகளைச் சமாளிக்க வேண்டி இருப்பதுமே அவற்றை வேறுபடுத்திக்காட்டுகிறது. செழுமைக் காலத்தில் கடன்-செலாவணி அமைப்பு மிகப் பெருமளவில் வளர்ச்சியடைவதும் இதனால் கடன்-மூலதனத்திற்கான வேண்டலும் கூட மிகப்பெரும் அளவில் அதிகரிப்பதும், இப்படிப்பட்ட காலங்களில் வழங்கலானது தட்டுத் தடையின்றி இவ்வேண்டலுக்கு ஈடு கொடுப்பதும்தான் மந்த காலத்தில் கடன்-செலாவணி பற்றாக்குறை ஆவதற்குக் காரணம் ஆகும். ஆக இவ்விரு காலங்களையும் குணங்குறிக்கப்பயன்படுவது கடன்களுக்கான வேண்டலின் பரிமாணத்தில் காணப்படும் வேறுபாடுதான்.

முன்பே குறிப்பிட்டது போல, செழுமைக் காலத்தில் நுகர்வாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இடையில் ஓடும் செலாவணிக்கான வேண்டல் மேலோங்கி இருப்பதும் மந்தகாலத்தில் முதலாளிகளுக்கிடையில் ஓடும் செலாவணிக்கான வேண்டல் மேலோங்கி இருப்பதும் இரு காலங்களையும் வேறுபடுத்திக் காட்டும் முக்கிய விவரமாகும். மந்த காலத்தில் முன் கூறிய வேண்டல் குறைகிறது, பின் கூறியது அதிகரிக்கிறது.

---

உண்டியல்களை கழிவு செய்வதானது இதைவிட அதிக அளவிலான முனைப்புள்ள சுற்றோட்டம் பொதுமக்களுக்கு வேண்டியிராவிட்டால்' (வங்கி நோட்டுகளின்)' சேமவைப்பைக் குறையச் செய்யாது. உண்டியல்களை கழிவு செய்வதன் பேரில், வெளியிடப்படும் நோட்டுகள் வங்கியாளர்களை ஊடகமாய்க் கொண்டும் வைப்புகளின் மூலமாகவும் திரும்பி வந்து சேரும். இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் பொற்பாளம் ஏற்றுமதி செய்வதற்கானவையாக இல்லாவிட்டால் மக்கள் தம்மிடம் இருக்கும் நோட்டுகளை வங்கியாளர்களின் கையில் கொடுக்காமல் தாமே பெட்டியில் பூட்டி வைக்குமாறு தூண்டும் அளவுக்கு உள்நாட்டில் பீதி நிலவாவிட்டால்.....கொடுக்கல் வாங்கல்களின் பரிணாமத்தால் சேமவைப்பு பாதிக்கப்படாது.' - 'வங்கியானது ஒரு நாளில் ஒன்றரை மிலியன் என்ற அளவில் உண்டியற்கழிவு செய்யலாம்; வங்கியின் சேமவைப்புக்கு மிகச்சிறு பாதிப்பும் இல்லாமலேயே இப்படி ஓயாமல் செய்யப்படுகிறது; நோட்டுகள் வைப்புகளாக மறுபடியும் மீண்டு வருகின்றன; ஒரு கணக்கிலிருந்து இன்னொரு கணக்குக்கு மாற்றப்படுவது தவிர வேறு எவ்வித மாற்றமும் நடைபெறுவதில்லை.' (வங்கிச் சட்டங்கள் பற்றிய அறிக்கைகள், 1857, சாட்சியம் எண் 241,500.) ஆக வங்கி நோட்டுகள் இங்குக் கடன்-செலாவணித் தொகைகளை கைமாற்றம் செய்யும் சாதனமாக மட்டுமே பயன்படுகின்றன.

இங்கிலாந்து வங்கியின் கையிலிருக்கும் கடன் பத்திரங்கள் பெருகிச் செல்லும் காலங்களில் அதன் நோட்டுப் புழக்கம் குறைந்து செல்வதும், கடன் பத்திரங்கள் குறைந்து செல்லும் காலங்களில் அதன் நோட்டுப் புழக்கம் பெருகிச் செல்வதுமான புலப்பாடுதான் ஃபுல்லர்ட்டன் போன்றவர்களுக்கு தீர்மானகர முக்கியத்துவமுடையதாய்த் தெரிகிறது. ஆனால், கடன் பத்திரங்களின் நிலவரமானது பணக் கடன் வசதியின் பரிமாணத்தையும் கழிவு செய்யப்பட்ட மாற்று உண்டியல்கள் விற்கப்படக்கூடிய துணை பிணையங்களின் பேரிலான முன்னீடுகளின் ஆகியவற்றின் பரிமாணத்தையும் தெரிவிப்பதாகும். இதனால்தான் ஃபுல்லர்ட்டன் இங்கிலாந்து வங்கியின் கையிலிருக்கும் கடன் பத்திரங்கள் பெரும்பாலும் அதன் புழக்கத்திற்கு எதிர்த் திசையில் அலைவுறுவதாகவும், எந்த வங்கியும் பொதுமக்களின் தேவைகளால் நிர்ணயிக்கப்படும் குறிப்பிட்ட நிலைக்கு அப்பால் தன் வங்கி நோட்டு வெளியீட்டை அதிகமாக்க முடியாது என்று தனியார் வங்கிகள் நீண்ட காலமாய் வலியுறுத்திவரும் கருத்தை இது உறுதி செய்வதாகவும் சொல்கிறார், ஆனால் ஒரு வங்கி இந்த எல்லையைக் கடந்து முன்னீடுகள் செய்ய விரும்பினால், தன் மூலதனத்திலிருந்து செய்ய வேண்டும் என்று சொல்கிறார். ஆகவே கடன் பத்திரங்களை ஈடேற்றம் செய்ய வேண்டும். அல்லது கடன் பத்திரங்களில் முதலீடு செய்யக் கூடிய வைப்புகளை அப்படிச்செய்யாமல் இதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்.

எதை ஃபுல்லர்ட்டன் மூலதனம் என்று சொல்கிறார் என்பதும் இதிலிருந்து வெளிப்பட்டுவிடுகிறது. இங்கு மூலதனம் குறிப்பதென்ன? இங்கிலாந்து வங்கி முன்போல் தன்வங்கி நோட்டுகள் அல்லது உறுதிப் பத்திர நோட்டுகளை செலவே இல்லாமல் தமக்குச் சொந்தமாகிற இவற்றை - பயன்படுத்தி இப்போது முன்னீடுகள் செய்ய முடியாது என்பதே. ஆனால் வங்கியானது இந்நிலையில் எதைப் பயன்படுத்தி முன்னீடுகள் செல்கிறது? சேம வைப்பிலிருக்கும் கடன் பத்திரங்களை, அதாவது அரசுப்பத்திரங்களையும் மூலதனப் பங்குகளையும் ஏனைய வட்டி வருமானச் சான்றுகளையும் விற்றுக் கிடைக்கும் தொகைகளைப் பயன்படுத்தி முன்னீடுகள் செய்கிறது. இத்தகைய பத்திரங்களைவிற்கும் போது விலையாக அதற்கு என்ன கிடைக்கிறது? பணம் கிடைக்கிறது - தங்கமாகவோ இங்கிலாந்து வங்கியின் நோட்டுகளைப் போன்று சட்டச் செலாவணியாக (Legal Tender) இருக்கும் வங்கி நோட்டுகளாகவோ கிடைக்கிறது. ஆக, எல்லா நிலைமைகளிலுமே வங்கி முன்னீடு செய்வது பணத்தையே ஆகும். ஆனால் இந்தப் பணம்

இப்போது அவ்வங்கியில் மூலதனத்தில் ஒரு பகுதியாகிறது. ஆக தங்கத்தை முன்னீடு செய்தால் இது எளிதில் புரிகிறது. நோட்டுகளை முன்னீடு செய்தால், இந்த நோட்டுகள் மூலதனத்தைக் குறிப்பவை; ஏனென்றால் அது அவற்றுக்கு உள்ளபடியான மதிப்பை ஓரளவு விட்டுக் கொடுத்திருக்கிறது; வட்டி வருமானப்பத்திரத்தை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம். தனியார் வங்கிகளைப் பொறுத்தவரை, கடன் பத்திரங்களை விற்பதன் மூலம் அவற்றுக்கு கிடைக்கும் நோட்டுகள் பெரும்பாலும் இங்கிலாந்து வங்கி நோட்டுகளாகவோ தாமே வெளியிட்ட நோட்டுகளாகவோதான் இருக்க முடியும்; ஏனென்றால் கடன் பத்திரங்களுக்கு விலையாக வேறு நோட்டுகள் ஏற்கப்படுவது அதிகமாகவே இருக்கும், இங்கிலாந்து வங்கியாகவே இருக்குமானால் அதனிடம் மீண்டுவரும் அதன் சொந்த நோட்டுகளுக்கு மூலதனம், அதாவது வட்டி வருமானப் பத்திரம் செலவாயிற்று. மேலும், இவ்வழியில் அது தன் சொந்த நோட்டுகளை சுற்றோட்டத்திலிருந்து விலக்கிக் கொள்கிறது. அது இந்த நோட்டுகளைத் திரும்பவும் வெளியிடுமானால், அல்லது அவற்றுக்குப் பதில் அதே அளவுக்குப் புதிய நோட்டுக்கள் வெளியிடுமானால், அவை இப்போது மூலதனத்தைக் குறிப்பவையாகும். முதலாளிகளுக்கான முன்னீடுகளுக்காக பயன்படுத்தப்பட்டாலும் சரி, பிற்பாடு இத்தகைய பணவசதிக்கான வேண்டல் குறையும்போது கடன் பத்திரங்களில் பயன்படுத்தப்பட்டாலும் சரி மூலதனத்தையே குறிப்பவையாகும். இந்நேர்வுகளில் எல்லாம் மூலதனம் என்ற சொல் வங்கியாளரின் கோணத்திலிருந்து மட்டுமே ஆளப்படுகிறது; வங்கியாளர் தமது கடன்-செலாவணியை மட்டுமல்லாமல், அதற்கும் கூடுதலாய் கடன் தரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறார் என்பதே இதன் பொருள்.

தெரிந்த செய்திதான்: இங்கிலாந்து வங்கி தான் செய்யும் முன்னீடுகளுக்கெல்லாம் தன் நோட்டுகளையே பயன்படுத்திக் கொள்கிறது. ஆனால் இதையும் மீறி, இங்கிலாந்து வங்கியின் நோட்டுப் புழக்கமானது கழிவு செய்யப்படும் மாற்று உண்டியல்களுக்கும் அதன் கையிலிருக்கும் துறைப்பிணையத்துக்கும் ஏற்ப குறைந்து செல்கிறது. இவ்விதம் அதன் முன்னீடுகள் அதிகரித்துச் செல்கின்றன என்ற பொதுவான நிலைமை ஏற்பட்டால், சுற்றோட்டத்தில் விடப்படும் நோட்டுகள் என்னாவது? எப்படி அவை வங்கிக்குத் திரும்புகின்றன?

முதலாவதாக, பணக்கடன் வசதிக்கான வேண்டலானது நாட்டின் கொடுப்பு நிலுவை (Balance of payment) கொடுப்பு நிலுவை

பாதகமாய் இருப்பதிலிருந்து எழுவதாகவும், இதனால் தங்க வெளிக்கசிவைக் குறிப்பதாகவும் இருக்குமானால், சிக்கல் ஒன்றுமில்லை. மாற்று உண்டியல்கள் கழிவு செய்யப்பட்டு வங்கி நோட்டுகள் ஆகின்றன. இங்கிலாந்து வங்கியே அதன் வெளியீட்டுத் துறையில் வங்கி நோட்டுகளைத் தங்கத்துக்குப் பரிவர்த்தனை செய்து கொள்கிறது; இந்த தங்கம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வங்கியானது உண்டியல்களைக் கழிவு செய்யும்போது நோட்டுகளின் இடைச்செயல் இல்லாமல் நேரடியாகவே தங்கத்தை கொடுப்பது போன்றதாகும் இது. இவ்விதம் அதிகரித்திடும் வேண்டல் சில சந்தர்ப்பங்களில் £7 முதல் £10 மிலியனாய் இருப்பதுண்டு என்றாலும் உள்நாட்டுப் புழக்கத்தில் ஒரே ஒரு ஐந்து - பவுன் நோட்டைக்கூட கூடுதலாய்ச் சேர்ப்பதில்லை. சரி, இங்கிலாந்து வங்கி முன்னீடு செய்வது மூலதனத்தைத்தானே தவிர செலாவணியை அல்ல என்று சொல்லப்படுமானால், இதனால் குறிக்கப்படுவன இரண்டு: முதலாவதாக, அது உள்ளபடியான மதிப்புகளை, தன் சொந்த மூலதனத்தில் அல்லது தன்னிடம் வைப்பு வைக்கப்பட்டுள்ள மூலதனத்தில் ஒரு பகுதியை முன்னீடு செய்கிறதே தவிர கடன் - செலாவணியை அல்ல. இரண்டாவதாக, அது நாடுகளிடையிலான சுற்றோட்டத்துக்காகப் பணத்தை முன்னீடு செய்கிறதே தவிர உள்நாட்டுச் சுற்றோட்டத்துக்காக அல்ல; அது உலகப் பணத்தை முன்னீடு செய்கிறது; இதற்காகப் பணமானது எப்போதுமே சேர்ப்பின் வடிவத்தில் இருக்கும்போது அது வெறும் மதிப்புருவமாக இல்லாமல், தன்னை பணவுருவமாகக் கொண்ட மதிப்பாகவே இருக்கிறதோ அந்த வடிவத்தில் இருந்து வரவேண்டும். இங்கிலாந்து வங்கிக்கும் சரி தங்க ஏற்றுமதி செய்யும் வர்த்தகருக்கும் சரி, இந்தத் தங்கம் இப்போது மூலதனத்தைக் குறிப்பதாகும், அதாவது வங்கி - மூலதனத்தையோ வர்த்தக மூலதனத்தையோ குறிப்பதாகும் என்றாலும், அதற்கான வேண்டல் பண - மூலதனத்தின் அறுதி வடிவத்துக்கான வேண்டல்தானே ஒழிய மூலதனத்திற்கான வேண்டல் அன்று விற்கமுடியாத ஆங்கிலேய சரக்குமூலதனம் அயல் நாட்டுச் சந்தைகளில் மிகையாய்க் கொட்டிக்குவிக்கப்பட்டுள்ள தருணத்தில் தான் இந்த வேண்டல் எழுகிறது. ஆக, வேண்டப்படுவது பணமாக இருக்கும் மூலதனம்தானே தவிர மூலதனமாக இருக்கும் மூலதனம் அல்ல; எந்த வடிவத்தில் பணம் உலகச் சந்தைக்குரிய சர்வப் பொது சரக்காகப் பயன்படுகிறதோ அந்த வடிவத்தில் இந்தப் பணமாக இருக்கும் மூலதனம் வேண்டப்படுகிறது. பணத்தின் ஆரம்ப வடிவமாகிய உயர்நிலை உலோகமே இவ்விதம் வேண்டப்படுகிறது.

ஆகவே தங்கத்தின் வெளிக்கசிவானது, ஃபுல்லர்ட்டன், டூக் முதலானோர் கூறிக் கொள்வது போல் 'வெறும் மூலதனப் பிரச்சினை' அல்ல. மாறாக, இது ஒரு 'பணப் பிரச்சினையே ஆகும், ஒரு பிரத்தியேகப் பணியை புரிகிற பணத்தின் பிரச்சினை என்றாலும் கூட பணப்பிரச்சனையே ஆகும். செலாவணியின் தத்துவத்தின் சொல்விளம்பிகள் வாதிடுவது போல் அது உள்நாட்டுச் சுற்றோட்டப் பிரச்சனை அல்ல என்பது, ஃபுல்லர்ட்டன் பிரச்சனைதான் என்பதற்கு நிரூபணம் ஆகவே ஆகாது. எந்த வடிவத்தில் பணம் நாடுகளிடையிலான கொடுப்புச் சாதனமாக இருக்கிறதோ (ஆங்கிலேயரைப் பொறுத்தவரை பணவடிவ மூலதனமாக) இருப்பதற்கும் இடையிலான வேறுபாடுகள் எல்லாம் தாறுமாறாகக் கலந்து விடுகின்றன; முடிவில் இதிலிருந்து கருத்தோட்டத்தின் உருவறை கின்னியரிடமிருந்தான பின்வரும் நூற்பகுதியில் காணக்கிடைக்கிறது: 'பணமானது.....அடிப்படையிலேயே வேறுப் பட்டவையான இரு காரியங்களைச் செய்வதற்குப் பயன்படுத்தப் படுகிறது....வர்த்தகர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இடைப்பட்ட பரிவர்த்தனைக்கான ஊடகம் என்ற முறையில், அது மூலதனத்தை கைமாற்றுவதற்கான கருவியாகப் பயன்படுகிறது; அதாவது பண வடிவிலான குறிப்பிட்ட அளவு மூலதனத்தை சரக்கு வடிவிலான அதேஅளவு மூலதனத்திற்கு பரிவர்த்தனை செய்திடப் பயன்படுகிறது. ஆனால் கூலி கொடுப்பதற்கும் வர்த்தகர்களுக்கும் நுகர்வாளர் களுக்கும் இடைப்பட்ட வாங்கல் விற்றலுக்கும் பயன்படுத்தப்படும் பணம் மூலதனமாகாது, வருமான்மே ஆகும்; சமுதாயத்தின் வருமானங்களில் அன்றாடச் செலவுக்கென்று ஒதுக்கப்படும் பகுதியாகும். இது ஓயாத அன்றாடப் பயன்பாட்டில் சுற்றியோடு வதாகும்; இதை மட்டும்தான் கண்டிப்பான சொல்வழக்கில் செலாவணி என்பதாகும். மூலதன முன்னீடுகள் முழுக்கமுழுக்க வங்கியில் விருப்பத்தையும் ஏனைய மூலதன உடைமையாளர்களின் விருப்பத்தையுமே பொறுத்தவை; ஏனென்றால் கடன் வாங்குவதற்கு எப்போதுமே ஆட்கள் தாயாராய் இருக்கக் காணலாம்; ஆனால் செலாவணியின் அளவானது அன்றாடச் செலவின் நோக்கங்களுக்காக தமக்கிடையே பணத்தைச் சுற்றியோடச் செய்யும் சமுதாயத்தினரின் தேவைகளைப் பொறுத்தது.' (ஜே.ஜி. கின்னியர், நெருக்கடியும் செலாவணியும், லண்டன், 1847 (பக்கம் 3 - 4.) அந்த வடிவத்திலான பணத்தின் பிரச்சினையாகும் இது. 'அந்த மூலதனம்' (உள்நாட்டில் மகசூல் பொய்த்த பிறகு மிலியன் குவார்ட்டர் அயல் நாட்டு

கோதுமைக்கான கொள்முதல் விலை) 'சரக்காக அனுப்பப்படுகிறதா காசாக அனுப்பப்படுகிறதா என்பதுவே கொடுக்கல்வாங்கலின் தன்மையை எவ்விதத்தும் பாதிக்காது.' (ஃபுல்லர்ட்டன், முன்வந்தது, பக்கம் 131.) ஆனால் தங்க வெளிக்கசிவு நடைபெறுகிறதா இல்லையா என்பதை இது முக்கிய அளவில் பாதிக்கிறது. மூலதனம் உயர்நிலை உலோக வடிவில் இடமாற்றம் செய்யப்படுவது ஏனென்றால் அதனைச் சரக்குகளின் வடிவில் இடமாற்றம் செய்யவே முடியாது, அப்படியே செய்தாலும் பேரிழப்பை ஏற்க வேண்டி வரும். தங்க வெளிக்கசிவு குறித்து இக்கால வங்கிப்பொருளாதாரம் கொண்டுள்ள அச்சமானது உயர்நிலை உலோகங்களை மட்டுமே உண்மைச் செல்வமாகக் கருதிப் பணப் பொருளாதாரம் ஒருநாளும் எண்ணிக் கூடப்பார்த்திராத ஒன்று. எடுத்துக்காட்டாக, 1847 - 48 காலத்திய நெருக்கடி குறித்து இங்கிலாந்து வங்கியின் ஆளுநர் மோரிஸ் நாடாளுமன்றக் குழுவின் முன்னர் பின்வருமாறு சாட்சியம் அளித்தார்: (3846. கேள்வி:) 'பங்குகள், நிலை - மூலதனம் இவற்றின் மதிப்பிறக்கம் குறித்து நான் பேசுகையில், பங்குகளிலும், ஒவ்வொரு வகை விலை பொருளிலும் ஒரே வகையில் மதிப்பிறக்கம் ஏற்படுவது உங்களுக்குத் தெரியாதா; கச்சாப்பருத்தியும், கச்சாப்பட்டும், ஆலையில் இடப்படாதா; கம்பளியும் இதே குறைந்த விலைக்கு கண்டத்துக்கும் அனுப்பப்பட்டன என்பதும் சர்க்கரையும் காப்பியும் தேயிலையும் நிர்ப்பந்த விற்பனையில் பலியிடப்பட்டன என்பதும் உங்களுக்குத் தெரியாதா? - பெருமளவு உணவு இறக்குமதி செய்ய நேரிட்டால் நிகழ்ந்த பொற்பாள வெளியேற்றத்தை ; மாளிப்பதற்காக நாடு தவிர்க்க முடியாமலேயே கணிசமாய் தியாகம் செய்ய வேண்டியிருந்தது.' - '3848. இவ்வளவு தியாகம்செய்து தங்கத்தைத் திரும்பப் பெறுவதற்குப் பாடுபட்டதைக் காட்டிலும் வங்கியின் கருவூலப் பெட்டிகளில் இருந்துவரும் £8 மில்லியனை எடுத்துப் பயன்படுத்தியிருந்தால் நன்றாய் இருக்குமென்று நினைக்கிறீர்களா?- நான் அப்படி நினைக்க வில்லை.'- தங்கம்தான் இங்கே ஒரே உண்மைச் செல்வத்தைக் குறிப்பதாய் உள்ளது.

டூக்கின் கண்டுபிடிப்பை எடுத்துக்காட்டி ஃபுல்லர்ட்டன் சொல்கிறார்: '' ஒன்றிரண்டேயான விதிவிலக்குகளையும் மனநிறைவு தரும்படியான விளக்கத்துக்கு இடமளிக்கின்றவற்றையும் ஒதுக்கி விட்டுப் பார்த்தால், கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் ஒவ்வொரு தடவை செலாவணி குறிப்பிடத்தக்கவாறு வீழ்ச்சியடைந்து, அதைத் தொடர்ந்து தங்க வெளிக்கசிவு ஏற்படும்போதும் சுற்றோட்ட ஊடகம் ஒப்பளவில் கீழ் நிலையில் இருந்துள்ளது. சுற்றோட்ட ஊடகம் கீழ்

நிலையில் இருந்தபோதெல்லாம் செலாவணி வீழ்ச்சியடைந்து தங்க வெளிக்கசிவு நடைபெற்றுள்ளது.' (ஃபுல்லர்ட்டன், பக்கம் 121.) பொதுவாகச் சொன்னால் இத்தகைய தங்க வெளிக்கசிவுகள் ஊக்கத்துடிப்பும் ஊக வாணிபமும் நிறைந்த காலத்துக்குப் பிறகு நடைபெறுவதை இந்தக் கண்டுபிடிப்பு நிரூபிக்கிறது; 'ஏற்கனவே தொடங்கிவிட்ட தகர்வின் சமிக்ஞையாக.....சந்தைகளில் இருப்புகள் மிகையாகிவிட்டதன், நமது உற்பத்திகளுக்கான அயல்நாட்டு வேண்டல் ஓய்ந்து விட்டதன், மீள்வரவுகள் தாமதமாகி விட்டதன் அறிகுறியாகவும், வர்த்தக அவமதிப்பு, பட்டறை மூடல், கைவினைஞர்களின் பட்டினி, தொழில்துறையிலும் தொழில் முனைவிலும் பரவலான தேக்கம் ஆகிய இவையனைத்தின் அவசியத் தொடர்ச்சியாகவும் இந்தத் தங்க வெளிக் கசிவுகள் நடைபெறுகின்றன. இயல்பாகவே இதுதான் செலாவணித் தத்துவத்தின் சொல்விளம்பிகள் கூறிக் கொள்வதற்கு, அதாவது 'முழுநிறைவான சுற்றோட்டம் பொற்பாளத்தை வெளியேறி துரத்துகிறது, குறைவான சுற்றோட்டம் பொற்பாளத்தைக் கவர்ந்திழுக்கிறது' என்பதற்கு மிகச் சிறந்த மறுப்பாகவும் இருக்கிறது. மாறாக, இங்கிலாந்து வங்கியானது பொதுவாக செழுமைக் காலத்தினால் வலுவான தங்கச் சேம வைப்பை கொண்டிருக்கிறது என்றாலும், பொதுவாக இந்தச் சேர்ப்பானது புயலுக்குப் பின் வருகிற மந்தமான காலத்தில் உருவாக்கப்படுகிறது.

ஆக, தங்க வெளிக்கசிவு தொடர்பான இந்த மதிநுட்பத்துக் கெல்லாம் என்ன பொருளென்றால், சுற்றோட்டத்துக்கும் கொடுப்புக்குமான பன்நாட்டு ஊடகங்களுக்கான வேண்டலிலிருந்து வேறுபடுகிறது என்பதும் (ஆகவே ஃபுல்லர்ட்டன் அவரது நூலின் பக்கம் 112இல் சொல்வதுபோல 'தங்க வெளிச்கசிவு ஏற்படுவதானது பணப் புழக்கத்திற்கான உள்நாட்டு வேண்டல் எவ்வகையிலும் குறைந்து போவதை குறித்தாக வேண்டுமென்பதில்லை' என்பது கூறாமலே விளங்கும்). உயர்நிலை உலோக ஏற்றுமதி, அது பன்னாட்டுச் சுற்றோட்டத்தில் விடப்படுதல் என்பதும் நோட்டுகளையோ, காசுகளையோ, உள்நாட்டுச் சுற்றோட்டத்தில் விடுவதும் ஒன்றல்ல. மற்றபடி, பன்னாட்டுக் கொடுப்புகளுக்கான சேமவைப்பு நிதியாக குவிக்கப்பட்ட சேர்ப்பின் அசைவியக்கங்களுக்கும் சுற்றோட்ட ஊடகமாகப் பணம் நிகழ்த்தும் அசைவியக்கங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்று முன்னொரு சந்தர்ப்பத்தில் தெளிவாக்கினேன். எது எப்படியானாலும், சேர்ப்புக்குரிய வெவ்வேறு பணிகளென்று பணத்தின் இயல்பிலிருந்து நான் வகுத்த அந்தப்

பணிகள் - உள்நாட்டு வர்த்தகத்தில் தீர்வுக்குரிய உண்டியல்களுக்கு பணம் செலுத்துவதற்கான கொடுப்புச் சாதனங்களின் சேமநிதியாக இருத்தல், சொலாவணியின் சேமநிதியாக இருத்தல், கடைசியாக உலகப் பணத்தின் சேமநிதியாக இருத்தல் போன்ற பணிகள் - இங்கு ஒரே ஒரு சேமநிதியிலிருந்து விளைவதாய்க் காட்டப்படுவதால் பிரச்சினை சிக்கலாகிறது.) இதிலிருந்து மேலும் பெறப்படுவது என்னவென்றால், குறிப்பிட்ட சில நிலைமைகளில், இங்கிலாந்து வங்கியிலிருந்து உள்நாட்டுச் சந்தைக்கான தங்கக்கசிவும் அயல்நாட்டுக் கசிவும் ஒருங்கே நிகழலாம். இருப்பினும், கடன்-செலாவணி அமைப்பும் கடன் - செலாவணிப் பணமும் வளர்ந்துள்ள நாடுகளில் வங்கி நோட்டுகளின் மாற்றத் தகுதியை உத்திரவாதம் செய்யும் நிதியாகப் பயன்படும் என்னும் கூடுதல் பணி இந்தச் சேர்ப்பின் தலையில் மனம் போனபடி சுமத்தப்படுவதால் பிரச்சினை இன்னும் கூட சிக்கலாகிறது. இதெல்லாம் போதாதென்று (1) நாட்டின் சேமவைப்பு நிதி ஒரேயொரு மைய வங்கியில் குவிக்கப்படுவதும் (2) முடிந்தவரை மிகச்சிறிய குறைந்தபட்சமாக அது குறைக்கப்படுவதும் நிகழ்கின்றன. ஃபுல்லர்ட்டன் பின்வருமாறு குறைபட்டுக் கொள்வதற்கும் இதுவே காரணம் (பக்கம் 143.)-: 'செலாவணி மாற்று விகிதத்திலான மாற்றங்கள் வழக்கமான கண்டத்து நாடுகளில் பரிபூரண அமைதியுடனும் சுலபமாகவும் நடந்தேறுகின்றன; இங்கிலாந்தில் இதற்கு மாறாக நடைபெறுகிறது; இங்கிலாந்து வங்கியில் கருவூலம் காலியாகப் போவதாகத் தோன்றும் போதெல்லாம் பரபரப்பான கொந்தளிப்பும் அச்சமும் கலந்த நிலை தோன்றுகிறது; ஆனால் உலோகச் செலாவணி இவ்வகையில் பெற்றுள்ள மாபெரும் அனுகூலம் வந்து வாய்ப்பதுமில்லை.'

ஆனால், தங்க வெளியோட்டத்தை இப்போது ஒதுக்கி விடுவோமாயின் இங்கிலாந்து வங்கியைப் போல் நோட்டுகள் வெளியிடுகிற ஒரு வங்கி தன் வங்கி நோட்டு வெளியீட்டை அதிகமாக்காமலேயே எப்படித் தன்னால் வழங்கப்படும் பணக் கடன் வசதியின் அளவை அதிகமாக்க முடியும்?

வங்கியைப் பொறுத்தவரை, அதன் சுவர்களுக்கு அப்பால் இருக்கும் நோட்டுகளெல்லாம் - சுற்றியோடிக் கொண்டு இருந்தாலும் சரி, தனியார் சேர்ப்புகளில் இருந்தாலும் சரி - சுற்றோட்டத்தில் இருப்பவை, அதாவது அதன் கையில் இல்லாதவை ஆகும். ஆகவே, வங்கியானது உண்டியற்கழிவு செய்தலும் வட்டிக்குப் பணம்

கொடுத்தலான அதன் அலுவலை, பிணையங்களின் பேரிலான அதன் முன்னீடுகளை விரிவாக்கினால், அந்த நோக்கத்திற்காக அதனால் வெளியிடப்பட்ட வங்கி நோட்டுகள் யாவும் மீட்டு வந்தாக வேண்டும்; வராவிட்டால் அவை பணப் புழக்கத்தின் பரிமாணத்தை அதிகமாக்கி விடும் - நமது அனுமானத்தின்படி இது நடைபெற முடியாத ஒன்று. வங்கி - நோட்டுகளின் இந்த மீள் வரவு இரு வழிகளில் நடைபெறலாம்.

முதலாவதாக: வங்கியானது பிணையங்களுக்கு ஈடாக A என்பவருக்குத் தன் நோட்டுகள் கொடுக்கிறது; Aஆனவர் B என்பவருக்கு மாற்று உண்டியல்களுக்காக பணம் கொடுக்க இந்த நோட்டுகளை பயன்படுத்திக் கொள்கிறார்; Bநோட்டுகளை மீண்டும் வங்கியில் வைப்பு வைக்கிறார். இப்படி இந்த நோட்டுகளின் சுற்றோட்டம் முடிந்து விட்டாலும் கடன் இருந்து வருகிறது. ('கடன் இருந்து வருகிறது; வேண்டப்படவில்லை என்றால் செலாவணியானது வெளியிட்டவரிடமே திரும்ப வந்து சேருகிறது.' ஃபுல்லர்ட்டன், பக்கம் 97.) வங்கியானது Aஇடம் முன்னீடு செய்த நோட்டுகள் இப்போது அதனிடமே திரும்பிவந்து விட்டன; ஆனால் Aக்கு, அல்லது A கழிவு செய்த உண்டியலை யார் எடுத்திருந்தாலும் அவருக்குக் கடன் கொடுத்ததும், இந்த நோட்டுகள் வாயிலாக தெரிவிக்கப்படும் மதிப்புத் தொகைக்காக B இடம் கடன்பட்டதும் வங்கிதான். இவ்விதம் வங்கியின் மூலதனத்தில் இதற்கிணையான ஒரு பகுதியைப் B பயன்படுத்த முடிகிறது.

இரண்டாவதாக: A என்பவர் Bஎன்பவருக்கு பணம் கொடுக்கிறார்; B ஆனவர் - அல்லது அவரிடமிருந்து இந்த நோட்டுகளைப் பெறும் C என்பவர் - நேரடியாகவோ சுற்றடியாகவோ வங்கிக்குச்சேர வேண்டிய உண்டியலுக்குப் பணம் செலுத்துவதற்காக இந்த நோட்டுகளைப் பயன்படுத்திக் கொள்கிறார். அதாவது வங்கிக்கு அதன் நோட்டுகளாகவே பணம் செலுத்தப்படுகிறது. இந்தக் கொடுக்கல் வாங்கல் இவ்விதம் முடிவடைகிறது (வங்கிக்கு திரும்பிச் செலுத்த வேண்டியது மட்டும்தான் எஞ்சியுள்ளது).

இந்நிலையில், வங்கியானது Aக்கு வழங்கும் முன்னீடு எந்த அளவுக்கு மூலதன முன்னீடாகவோ வெறும் கொடுப்புச் சாதன முன்னீடாகவோ கருதப்படும்?

(இது கடனின் தன்மையையே பொறுத்தது. மூன்று நேர்வுகளை வேறுபடுத்திப் பார்த்தாக வேண்டும்.)

முதல்நேர்வு—A ஆனவர் பிணையம் ஏதும் தராமலே சொந்தக் கடன் மதிப்பின் பேரில் வங்கியிலிருந்து கடனாய்த் தொகைகள் பெறுகிறார். இந்நேர்வில் அவர் வெறும் கொடுப்புச் சாதனங்களைப் பெறவில்லை. அவர் புதிய மூலதனத்தைப் பெறுகிறார் என்பது கேள்விக்கு இடமற்றது; இம்மூலதனத்தை அவர் தமது தொழிலில் ஈடுபடுத்தி, முதிர்ச்சி தேதிவரை கூடுதல் மூலதனமாக ஈடேற்றம் செய்யலாம்.[92]

இரண்டாம் நேர்வு—Aஆனவர் வங்கியிடம் கடன்-பத்திரங்களையோ அரசு பிணை முறிகளையோ மூலதனப் பங்குகளையோ ஈடாய்க் கொடுத்து, அவற்றுக்குப் பதில் அவற்றின் அந்நேரத்திய மதிப்பில் மூன்றில் இரு பங்கு வரை ரொக்கம் கடனாய்ப் பெற்றிருப்பதாகக் கொள்ளலாம். இந்நேர்வில் அவர் தமக்குத் தேவையான கொடுப்புச் சாதனங்களைப் பெற்றிருக்கிறாரே தவிர கூடுதல் மூலதனம் ஏதும் பெறவில்லை; ஏனென்றால் அவர் வங்கியிடமிருந்து வரப்பெற்றதைக் காட்டிலும் பெரிய மூலதன மதிப்பை அதனிடம் ஒப்படைத்துள்ளார். ஆனால் இந்தப் பெரிய மூலதன மதிப்பானது, ஒருபுறம் குறிப்பிட்ட ஒரு வட்டி - வருமான வடிவில் முதலீடானதால் அவரது அப்போதைய (கொடுப்புச் சாதனங்களுக்காக) தேவைகளை நிறைவு செய்வதற்குக் கிடைக்கக் கூடியதாய் இருக்கவில்லை; மறுபுறம், ஏதோ சில காரணங்களால் A ஆனவர் இந்த மூலதன மதிப்பை விற்று நேரடியாகவே அதைக் கொடுப்புச்சாதனமாக மாற்ற விரும்பவில்லை. அவரது கடன் பத்திரங்கள் சேமவைப்பிலிருக்கும் மூலதனமாகவும் பயன்பட்டன; அவரும் அவற்றை அந்நிலையில் வைத்தே இயங்கச் செய்தார். ஆகவே Aக்கும் வங்கிக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல் என்பது தற்காலிகமாய் ஒருவருக்கொருவர் மூலதனத்தை மாற்றிக் கொள்வதில் அடங்கியுள்ளது; A தமக்கு வேண்டிய கொடுப்புச் சாதனங்களைப் பெற்றபோதிலும் கூடுதல் மூலதனம் ஏதும் பெறுவதில்லை. (நடப்பது இதற்கு நேர் மாறானதே;) மறுபுறம், வங்கியைப் பொறுத்தவரை, இந்தக் கொடுக்கல் வாங்கலானது கடன் வடிவில் பணமூலதனம் தற்காலிகமாய் ஒப்படைக்கப் படுவதாகிறது, ஒரு வடிவத்திலிருந்து வேறுவடிவத்துக்கு பண-மூலதனம் மாற்றப்படுவதாகிறது; இந்த உருமாற்றம்தான் வங்கித் தொழிலில் அடிப்படைப் பணியாகும்.

---

(92) எங்கெல்ஸ் குறிப்பு:- மூலப் பிரதியில் இதையடுத்து வரும் பகுதி ஈண்டு விளங்கக் கூடியதாய் இல்லை. பதிப்பாசிரியர் இப்பகுதியை அடைப்புக் குறியில் முடிவுரை திருத்தி எழுதியுள்ளார். வேறோர் இடத்தில் இந்த விவரம் இதற்கு முன்பே அத்தியாயம்XXVI இல் சுட்டப் பெற்றது.

மூன்றாம் நேர்வு—A ஆனவர் வங்கியின் மூலமாய் ஒரு மாற்று உண்டியலை கழிவு செய்து கழிவு கழிக்கப்பட்டபின் அதன் மதிப்பை ரொக்கமாகப் பெற்றார் - இந்த நேர்வில் அவர் மாற்றக் கூடிய வடிவில் இருக்கும் மதிப்புத் தொகையை அடைவதற்காக மாற்ற முடியாத பண - மூலதனத்தை வங்கியிடம் விற்றார். இன்னமும் ஓட்டத்திலிருக்கும் தமது உண்டியலை ரொக்கப் பணத்துக்கு விற்றார். உண்டியல் இப்போது வங்கியின் சொத்தாகி விட்டது. உண்டியலில் கடைசியாக புறக்குறிப்பு எழுதியவர் என்ற முறையில் A தன் பணம் செலுத்தப்படாவிட்டால் அதற்காக வங்கிக்குப் பொறுப்பாகிறவர் என்பதனால் மாற்றம் எதுவும் இல்லை. அவர் இந்தப் பொறுப்பை உண்டியலில் புறக்குறிப்பு எழுதிய மற்றவர்களுடனும், உண்டியலை எடுத்தவருடனும் பகிர்ந்து கொள்கிறார்; இவர்கள் யாவரும் முறைப்படி அவருக்குப் பொறுப்பானவர்கள். ஆக, இந்த நேர்வில் கடன் தரப்படுவதற்கும் பெறப்படுவதற்கும் பதிலாக, சாதாரண வாங்கலும் விற்றலும் மட்டுமே நடைபெறக் காண்கிறோம். இக்காரணத்தால்தான் A ஆனவர் வங்கிக்குத் திருப்பிச் செலுத்த வேண்டியது ஒன்றுமில்லை. உண்டியல் தீர்வுக்குரியதாகும்போது அதனை ரொக்கமாக்கி வங்கி தனக்குத்தானே ஈடுசெய்துகொள்கிறது. இங்கேயும் Aக்கும் வங்கிக்குமிடையே மூலதன கைமாற்றம் நடைபெற்றுள்ளது, வேறு எந்தச் சரக்கின் வாங்கல் விற்றலிலும் நடைபெறுவது போலவே நடைபெற்றுள்ளது. இக்காரணத்தால் தான் A கூடுதல் மூலதனம் ஏதும் பெறுவதில்லை அவருக்குத் தேவைப்பட்டதும் அவர் பெற்றதும் கொடுப்புச் சாதனமே - வங்கியின் மூலமாய்த் தமது பண-மூலதனத்தின் ஒரு வடிவத்தை - தமது உண்டியலை - வேறொரு வடிவமாக - பணமாக - மாற்றுவிப்பதன் மூலம் அவர் இந்தக் கொடுப்புச் சாதனத்தைப் பெற்றார்.

ஆக, முதல் நேர்வில் மட்டுமே மூலதனம் மெய்யாகவே முன்னீடு செய்யப்படுவது என்னும் பேச்சுக்கு இடமுள்ளது; இரண்டாம் நேர்விலும் மூன்றாம் நேர்விலும் மூலதனத்தின் ஒவ்வொரு முதலீடும் 'மூலதன முன்னீட்டை' குறிக்கிறது என்னும் அர்த்தத்தில் மட்டுமே இப்படிக் கருத வாய்ப்புண்டு. இந்த அர்த்தத்தில் வங்கியானது பண-மூலதனத்தை Aக்கு முன்னீடு செய்கிறது; ஆனால் பொதுவாக A-இன் மூலதனமாய் இருப்பதில் ஒரு பகுதியாய் அமைகிறது என்னும் அர்த்தத்தில்தான் இது A-க்கு பண-மூலதனம் ஆகும். பிரத்தியேகமாய் மூலதனம் என்ற முறையில் அல்ல, பிரத்தியேகமாய் கொடுப்புச் சாதனம் என்ற முறையில் தான் அது அவருக்குத் தேவைப்படுகிறது, அவ்வாறுதான் அதை அவர் பயன்படுத்தவும் செய்கிறார்.

இல்லாவிட்டால் சாதாரணமாய் சரக்கு விற்று கொடுப்புச் சாதனத்தை அடைகிற ஒவ்வொரு நிகழ்வும் மூலதன முன்னீட்டைப் பெறும் நிகழ்வாகவே கருதப்படக் கூடும். (- பி.எங்கெல்ஸ்.)

தாமே நோட்டு வெளியிடும் தனியார் வங்கிகளைப் பொறுத்தவரை எழக்கூடிய வேறுபாடு இதுதான்: இந்த வங்கிகளின் நோட்டுகள் உள்ளூர்ச் சுற்றோட்டத்தில் இருந்து வரவும் இல்லை, வைப்புகளாகவோ தீர்வுக்குரிய மாற்று உண்டியலுக்கான கொடுப்பாகவோ அவ்வங்கிகளுக்கு திரும்பி வரவும் இல்லை என்றால் சில ஆட்களின் கைக்குக் போய்விடுகின்றன; இந்த ஆட்கள் இந்நோட்டுகளைத் தங்கமாகவோ இங்கிலாந்து வங்கியின் நோட்டுகளாகவோ ரொக்கமாக்கித் தரும்படி தனியார் வங்கியை நெருக்குகிறார்கள். தனியார் வங்கி தரும் கடன் இந்நிலையில் இங்கிலாந்து வங்கியின் நோட்டுகளோ தங்கமோ (தனியார் வங்கியைப் பொறுத்தவரை இரண்டும் ஒன்றுதான்) முன்னீடு செயல்படுவதையே குறித்திடுகிறது; அதாவது அதன் வங்கி - மூலதனத்தில் ஒரு பகுதி முன்னீடு செய்யப்படுவதைக் குறித்திடுகிறது. இங்கிலாந்து வங்கியோ வேறு ஏதேனும் வங்கியோ நோட்டு வெளியிடுவதற்குச் சட்டப்படி அதிகப்பட்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் தனது நோட்டுகளையே சுற்றோட்டத்திலிருந்து விலக்கி எடுப்பதற்கும், முன்னீடுகளின் உருவில் அவற்றை மீண்டும் வெளியிடுவதற்கும் கடன் பத்திரங்களை விற்க நேரிடுமானால் அப்போதும் மேற்சொன்னதே பொருந்தும்; அந்நிலையில் வங்கியின் நோட்டுகளே அது திரட்டி வைத்துள்ள வங்கி - மூலதனத்தில் ஒரு பகுதியைக் குறித்திடுகின்றன.

முழுக்க முழுக்க உலோகப் பணம் மட்டுமே புழக்கத்தில் இருந்தாலும் கூட (1) தங்க வெளிக்கசிவினால் (ஓரளவுக்காவது அயல் நாடுகளுக்குச் செல்லக்கூடிய தங்க வெளிக் கசிவையே மார்க்கஸ் இங்கு குறிப்பிடுவது தெளிவாய்த் தெரிகிறது (- பி.எங்கெல்ஸ்) கருவூலம் காலியாவது சாத்தியமாகும்; (2) கொடுப்புகளைச் செலுத்துவதற்கே (அதற்குமுன் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களின் தீர்வுக்காகவே) தங்கம் பிரதானமாய்த் தேவைப்படும் என்பதால், பிணையத்துக்கு ஈடாக முன்னீடு செய்வது கணிசமாய் வளரக்கூடும்; ஆனால் வைப்புகளாகவோ தீர்வுக்குரிய மாற்று உண்டியல்களுக்கான கொடுப்பாகவோ வங்கியிடமே திரும்பி வந்துசேரும். இதனால், ஒருபக்கத்தில், வங்கியின் கையில் கடன் பத்திரங்கள் அதிகரிக்கும் போதே வங்கியின் மொத்தக் கருவூலம் குறையும்; மறுபக்கத்தில்

உடைமையாளர் என்ற முறையில், தன் வைப்பாளர்களிடம் கடன் பட்டவர் என்ற முறையில் அது முன்னதாக வைத்திருந்த அதே தொகையைத்தான் இப்போதும் வைத்திருக்கும்; முடிவில் செலாவணியின் மொத்த அளவு குறைந்து போகும்.

வட்டிக்குக் கடன் தரப்படும்போது நோட்டுகளாகவே தரப்படுவதாகவும், இதனால் நோட்டு வெளியீடு எப்படியும் தற்காலிகமாகவேனும் அதிகரிப்பதாகவும் (இந்த அதிகரிப்பு உடனே மறைந்து விடக் கூடியது என்றாலும்) இதுவரை அனுமானம் செய்து கொண்டோம். ஆனால் நோட்டுகளாகத்தான் கடன் தர வேண்டும் என்னும் அவசியமில்லை. காகித நோட்டுக்குப் பதிலாக வங்கியானது Aக்கு ஒரு கடன்-செலாவணிக் கணக்கு தொடங்கலாம். அப்போது வங்கிக்குக் கடன்பட்டவராகிய இந்த Aஆனவர் அதன் கற்பனை வைப்பாளர் ஆகிறார். அவர் தமக்குக் கடன் கொடுத்தவருக்கு வங்கியின் பேரிலான காசோலைகள் கொடுக்கிறார்; இந்தக் காசோலைகளைப் பெறுகிறவர் அவற்றைத் தமது வங்கியாளரிடம் சேர்ப்பிக்கிறார்; வங்கியாளர் அவற்றை தீர்வகத்தில் அவர் பெயரில் தீராதுள்ள காசோலைகளுக்கு மாற்றிக் கொள்கிறார். இங்கே நோட்டுகளின் இடைச் செயல் ஏதும் நடைபெறவேயில்லை; கொடுக்கல் வாங்கல் முழுவதும் எந்த அளவோடு நின்றுவிடுகிறது என்றால், வங்கியானது தன்பேரில் வரையப்பட்ட காசோலையைக் கொண்டு தான் பட்ட கடனை தீர்க்கிறது. உள்ளபடியே அதற்கான இழப்பீடு என்பது Aமீதான அதன் உரிமைத் தகுதியில்தான் அடங்கியுள்ளது. இங்கே வங்கியானது தனக்கு வரவேண்டிய கடனுக்கான உரிமைத் தகுதியில் எனவே தன் சொந்த வங்கி மூலதனத்தில் ஒரு பகுதியை Aக்கு கடனாய்த் தந்துள்ளது. இவ்விதம், Aபெயரில் கடன் வரவு வைத்துக் கணக்குத் தொடங்கியதன் மூலம் வங்கியானது அதன் வங்கி - மூலதனத்தில் ஒரு பகுதியை Aக்குக் கடனாய் வழங்குகிறது என்பதே அர்த்தம்.

பணக் கடன் வசதிக்கான இந்த வேண்டல் மூலதனதிற்கான வேண்டலாய் இருக்கும்வரை, பண-மூலதனத்திற்கான வேண்டலே ஆகும். வங்கியாளரின் கண்ணோட்டத்தில் மட்டுமே அது மூலதனமாகும்; அதாவது (அயல்நாடுகளுக்கான தங்க ஏற்றுமதிகளைப் பொறுத்தவரை) தங்கம், அல்லது தேசிய வங்கியின் நோட்டுகள் ஆகும்; ஒரு தனியார் வங்கி இந்த நோட்டுகளை அவற்றுக்குச் சமதையான விலை கொடுத்து வாங்குவதன் மூலம்தான் அடைய முடியும்; ஆகவே இவை அந்த தனியார் வங்கிக்கு மூலதனத்தைக் குறிப்பவையாகும்.

அல்லது, வட்டி வருமான பத்திரங்களையும், அரசுப்பத்திரங்களையும், மூலதனப் பங்குகளையும் இன்ன பிறவற்றையும் விற்றே தங்கம் அல்லது வங்கி நோட்டுகளை அடைந்தாக வேண்டும். ஆனால் அரசுப் பத்திரங்களைப் பொறுத்தவரை வாங்குகிறவருக்கு மட்டும் அவை மூலதனமாகும்; அவருக்கு அவை கொள்முதல் விலையை அவற்றில் அவர் முதலீடு செய்த மூலதனத்தைக் குறித்திடுகின்றன. அவை தம்மளவில் கடனுக்கான உரிமைத் தகுதிகள் தானே தவிர மூலதனம் அல்ல. அடமானங்களாய் இருந்தால் அவை வருங்கால நிலவாடகை மீதான உரிமைத்தகுதிகள் மட்டுமே ஆகும். மூலதனப் பங்குகளாய் இருந்தால், அவை வருங்கால உபரி-மதிப்பில் பங்கு பெறுவதற்கு உரிமை அளிக்கும் உடைமை உரிமைகள் மட்டுமே ஆகும். இவையெல்லாம் உண்மை மூலதனம் அல்ல. இதேபோன்ற கொடுக்கல் வாங்கல்களைக் கொண்டு வங்கிக்குச் சொந்தமான பணத்தை வைப்புகளாக மாற்றலாம்; இவ்விதம் வங்கியானது இப்பணத்தின் உடைமையாளராய் இருப்பதற்குப் பதில் அதனை கடன் வாங்கியவராகி வேறொரு உடைமைப்பட்டதில் அதனை வைத்துள்ளது. இது வங்கிக்கு எவ்வளவுதான் முக்கியமானதென்றாலும் சேமவைப்பாய் இருக்கும் மூலதனத்தின் அளவிலோ, குறிப்பிட்ட நாட்டில் கிடைக்கக் கூடிய பண - மூலதனத்தின் அளவிலோ கூட இதனால் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஆகவே மூலதனமானது இங்குப் பண-மூலதனத்தை மட்டுமே குறித்திடுகிறது; அது உள்ளபடியான பணவடிவத்தில் கிடைக்கவில்லை என்றால் மூலதனத்தின் மீதான உடைமைத் தகுதியை மட்டுமே குறித்திடுகிறது. இது மிகவும் முக்கியமானது; ஏனென்றால் வங்கி-மூலதனத் தட்டுப்பாடும் அம்மூலதனத்திற்கான அவசர வேண்டலும் உள்ளபடியான மூலதனத்தின் குறைவோடு குழப்பிக் கொள்ளப்படுகிறது; மாறாக இந்த உள்ளபடியான மூலதனம் இத்தகையச் சந்தர்ப்பங்களில் உற்பத்திச் சாதனங்களாகவும் உற்பத்திப் பண்டங்களாகவும் அபரிமிதமாகி சந்தைகளில் பெருக்கெடுக்கிறது.

ஆகவே, செலாவணியின் மொத்தத்தில் மாறாமல் இருக்கும் போதே அல்லது குறையும்போதே ஒரு வங்கி பிணையமாக வைத்துள்ள கடன் பத்திரங்களின் திரள் எப்படி அதிகரிக்கிறது, அதாவது பணக்கடன் வசதிக்கு வளர்ந்து செல்லும் வேண்டலை எப்படி அவ் வங்கியால் நிறைவு செய்ய முடிகிறது என்பதை விள்க்குவது எளிது. இத்தகைய பணமுடைக்காலங்களில் செலாவணியின் மொத்தத் திரள் இருவழிகளில் கட்டுப்படுத்தப்படுகிறது: 1) தங்க வெளிக்கசிவு என்னும் வழி; 2) வெறும் கொடுப்புச் சாதனமாக இருக்கும்

பணத்திற்கான வேண்டல் என்னும் வழி; அப்போது வங்கி நோட்டுகள் வெளியிடப்பட்ட உடனே திரும்பி வருகின்றன; அல்லது நோட்டுகளின் இடைச்செயல் இல்லாமல் கடன் செலாவணியைக் கொண்டு கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுகின்றன; ஆகவே அப்போது கடன் - செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மூலமாகவே கொடுப்புகள் நிறைவேற்றப்படுகின்றன; இக் கொடுப்புகளின் தீர்வு இச் செயல்பாட்டின் ஒரே நோக்கமாகிவிடுகிறது. பணத்திற்குள்ள தனி விசேசமான தன்மைகளின் ஒன்று என்னவென்றால், அது கணக்குகளைத் தீர்ப்பதற்கு மட்டுமே பயன்படும்போது (நெருக்கடிக் காலங்களில் வாங்கலைக் காட்டிலும் கொடுப்புக்காகவே கடன்கள் எடுக்கப்படுகின்றன; அதாவது புதிய கொடுக்கல் வாங்கல்களை தொடக்கி வைப்பதல்ல, பழைய கொடுக்கல் வாங்கல்களை முடித்து வைப்பதே கடன் எடுப்பதன் நோக்கம்). அதன் சுற்றோட்டம் ஓடி மறையும்படியான ஒன்றே தவிர வேறல்ல; பணத்தின் இடைச்செயல் இல்லாமல் வெறும் கடன் - செலாவணி செயல்பாடுகளைக் கொண்டே நிலுவைகள் தீர்க்கப்படாத சந்தர்ப்பங்களிலும் கூட இதுவே நிலைமை - பணக்கடன் வசதிக்கான வேண்டல் வலுக்கும்போது, மிகப் பெருமளவிலான இவ்வகை கொடுக்கல் வாங்கல்கள் பணப் புழக்கத்தை விரிவாக்காமலே நடைபெறமுடியும். ஆனால் இங்கிலாந்து வங்கி வழங்கும் பணக் கடன் வசதி, விரிவானதாய் இருக்கும்போதே அதன் பணப்புழக்கம் மாறாமல் நிலையாக இருந்து வருகிறது. அல்லது குறையவும் கூடச் செய்கிறது என்ற உண்மை மட்டுமே, ஃபுல்லர்ட்டனும் டுக்கும் பிறரும் (பணக்கடன் வசதி என்பதும் கூடுதல் மூலதனமாகக் கடனுக்கு மூலதனம் பெறுவதும் ஒன்றுதான் என்ற இவர்களின் கருத்து பிழையானதாகையால்) அனுமானம் செய்து கொள்வதுபோல் கொடுப்புச் சாதனமாகப் பணியாற்றும் பணத்தின் (வங்கி நோட்டுகளின்) புழக்கம் கூடுதலாகி விரிவடைவதில்லை என்பதற்கு எடுத்த எடுப்பில் நிரூபணம் ஆகிவிடாது. வாங்குஞ் சாதனமாய் இருக்கும் நோட்டுகளின் புழக்கமானது தொழில் - வர்த்தக மந்தத்தின் போது இத்தகைய விரிவான கடன் வசதி அவசியமாகும்போது குறைந்து போவதால் கொடுப்பிச் சாதனமாய் இருக்கும் நோட்டுகளின் புழக்கம் அதிகரிக்கலாம்; புழக்கத்தின் மொத்த அளவு, வாங்குஞ் சாதனமாகவும் கொடுப்புச் சாதனமாகவும் செயல்படும் நோட்டுகளின் மொத்தத் தொகை நிலையாக இருந்து வரலாம். அல்லது குறையவும் கூடச் செய்யலாம். வெளியிடப்பட்ட உடனேயே தம்மை வெளியிட்ட வங்கிகளுக்குத் திரும்பி வந்து சேரும்

வங்கி நோட்டுகள் கொடுப்புச் சாதனமாக சுற்றியோடுவது அந்த பொருளாதார அறிஞர்களின் பார்வையில் சுற்றோட்டமே அல்லவாம்.

கொடுப்புச் சாதனமாகச் செயல்படும் பணப்புழக்கம் வாங்குஞ்சாதனமாகச் செயல்படும் பணப்புழக்கம் குறைவதைவிடவும் உயர்விகிதத்தில் அதிகரிக்குமானால், மொத்தப் புழக்கம் அதிகரிக்கும். ஆனால் கொடுப்புச்சாதனமாகப் பயன்படும் பணம் அளவில் கணிசமாய்க் குறைந்து போகும். குறிப்பிட்ட சில நெருக்கடிக் காலங்களில், அதாவது கடன் - செலாவணி அடியோடு தகர்ந்து, சரக்குகளும் கடன் பத்திரங்களும் விற்க முடியாதவை ஆவதோடு மாற்று உண்டியல்கள் கழிவு செய்ய முடியாதவையாகி பணக் கொடுப்பு, அதாவது வணிகர் சொல்வது போல ரொக்கம் தவிர வேறெதற்கும் இதில் மதிப்பில்லை என்ற நிலைவரும்போது மேற்சொன்னதுதான் உள்ளபடியே நிகழ்கிறது. கொடுப்புச் சாதனமாக இருக்கும் நோட்டுகளின் புழக்கம் இப்படிப்பட்ட பணப் பற்றாக்குறை காலங்களுக்கே உரிய தனி இயல்பு என்பதை ஃபுல்லர்ட்டன் போன்றவர்கள் புரிந்து கொள்ளாததால், இடர்ப்பாட்டைத் தற்செயலானதாய்க் கருதுகிறார்கள். 'வங்கி நோட்டுகளை கைவசப்படுத்துவதற்கான போட்டாப் போட்டி பணப் பீதி நிகழும் பருவங்களுக்கே உரியது; இந்தப் போட்டியானது சில சமயம் - எடுத்துக்காட்டாக 1825 முடிவில் - நோட்டீஸ் வெளியீடுகள் தற்காலிகமாகத்தான் என்றாலும் திடீரென்று பெறுவதற்கு வழி செய்கின்றன; பொற்பாளத்தின் வெளியேற்றம் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டு இருக்கும்போதே இவ்விதம் வழி செய்கிறது. இந்தப் போட்டிக்கான உதாரணங்களை மீண்டும் எடுத்துக் கொள்வோமானால், இவற்றைக் குறைந்த செலாவணியின் இயற்கையான அல்லது அவசியமான தொடர் விளைவுகளில் அடங்குகிறவையாகக் கருதக் கூடாது. இத்தகைய சந்தர்ப்பங்களில் வேண்டலானது பணப் புழக்கத்திற்கான (வாங்குஞ் சாதனமாய் இருக்கும் பணப் புழக்கத்திற்கான என்று இருக்க வேண்டும்)' வேண்டல் அல்ல பணச் சேர்ப்புக்கான வேண்டலே ஆகும்; அச்சமுற்ற வங்கியாளர் களிடமிருந்தும் முதலாளிகளிடமிருந்தும் இந்த வேண்டுதல் எழுகிறது. தங்கக் கசிவு தொடர்ந்து நீண்ட காலம் நடைபெற்ற பிறகு பொதுவாக நெருக்கடியின் கடைசி அங்கத்தில் இவ் வேண்டல்' (அதாவது கொடுப்புச்சாதன சேமவைப்புக்கான வேண்டல்) 'எழுகிறது; நெருக்கடி முடியப்போவதை முன்னறிவிப்பதாகவும் அது அமைகிறது.' (ஃபுல்லர்ட்டன், பக்கம் 130.)

கொடுப்புச்சாதனமாகச்செயல்படும் பணத்தைப் பரிசிலித்த போதே கொடுப்புகளின் சங்கிலித்தொடர் திடீரென்று அறுபடும்போது எப்படிப் பணமானது அதன் கருத்தியல் வடிவத்திலிருந்து பொருளியல் வடிவத்துக்கும் அதே பொது சரக்குகளின் எதிரே மதிப்பின் அறுதி வடிவத்துக்கும் மாறுகிறது என்று விளக்கிச் சொன்னோம். சில எடுத்துக்காட்டுகளையும் குறிப்பிட்டோம். இந்த இடைமுறிவே கூட கடன் -செலாவணியும் அதனோடு கைகோத்து வரும் நிலைமைகளும் - சந்தைகளில் மிகையிருப்பு, சரக்குகளின் மதிப்பிறக்கம், உற்பத்தியின் இடைமுறிவு போன்றவை - நிலையற்று இருப்பதன் விளைவாக ஓரளவுக்கும், அதன் காரணமாக ஓரளவுக்கும் இருக்கிறது.

ஆனால் வாங்குஞ்சாதனமாகச் செயல்படும் பணத்துக்கும் கொடுப்புச் சாதனமாகச் செயல்படும் பணத்துக்கும் இடையிலான வேற்றுமையை ஃபுல்லர்ட்டன் செலாவணிக்கும் மூலதனத்துக்கும் இடையிலான பொய் வேற்றுமையாக மாற்றிவிடுகிறார் என்பது தெளிவாய்த் தெரிகிறது. இறக்குமதி படைத்த வங்கியாளருக்குரிய முறையில் சுற்றோட்டத்தை நோக்குவதுதான் இதற்கும் காரணம்.,

இருப்பினும் இப்படியொரு கேள்வி கேட்கப்படலாம்; இத்தகைய பணமுடைக் காலங்களில் பற்றாக்குறையாகிப் போவது எது பிரத்தியேகமாகக் கொடுப்புச் சாதனமாகச் செயல்படும் மூலதனமா, பணமா? இது ஒரு பிரசித்தமான சர்ச்சை.

முதலாவதாக, பணமுடையில் விளைவாக தங்க வெளியோட்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும்வரை சர்வதேச கொடுப்புச் சாதனம் தான் வேண்டப்படுகிறது என்பது தெளிவு. ஆனால் சர்வதேச கொடுப்புச் சாதனமாகச் செயல்படும் பணம் என்பது தன்னளவிலேயே மதிப்புக்குரிய பொருளாய், மதிப்புத்தொகையாய் உள்ளபடியே தங்க உலோகமாய் இருப்பதாகும். அதேபோது இது மூலதனமும் ஆகும், சரக்கு வடிவில் இருக்கும் மூலதனம் அல்ல, பணவடிவில் இருக்கும் மூலதனமாகும் (பணம் என்னும் சொல்லுக்குரிய சிறந்த அர்த்தத்தில், அது உலகச் சந்தைக்குரிய சர்வப் பொதுச் சரக்காக இருந்து வரும் அர்த்தத்தில் பணவடிவில் இருப்பதாகும்). இங்கே முரண்பாடு என்பது கொடுப்புச் சாதனமாகச் செயல்படும் பணத்துக்கான வேண்டலுக்கும் மூலதனத்திற்கான வேண்டலுக்கும் இடையே அல்ல. பண வடிவில் இருக்கும் மூலதனத்துக்கும் சரக்கு வடிவில் இருக்கும் மூலதனத்துக்கும் இடையேதான் முரண்பாடு; இங்கு வேண்டப்படுகிற வடிவம்,

எவ்வடிவில் மட்டுமே அது செயல்பட முடியுமோ அந்த வடிவம் அதன் பணவடிவமேயாகும்.

தங்கத்திற்கான (அல்லது வெள்ளிக்கான) இந்த வேண்டலை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், இப்படிப்பட்ட நெருக்கடி காலங்களில் மூலதனம் கிடைப்பது எவ்விதத்தும் அரிதாகிப் போவதாய் சொல்ல முடியாது. தானிய விலையேற்றம், பருத்திப் பஞ்சம் போன்ற அசாதாரண நிலைமைகளில் இப்படி நேரிடலாம்; ஆனால் இந்தப் புலப்பாடுகள் இத்தகைய காலங்களின் அவசிய உடன் பிறப்புகளோ, மாமூல் கூட்டாளிகளோ அல்ல; பணக்கடன் வசதிக்கான வேண்டல் வலுவாய் இருப்பதை - கூறமுடியாததை வைத்தே அதற்கும் மேல் சற்றும் அலட்டிக் கொள்ளாமல் மூலதனப் பற்றாக்குறை நிலவுவதாக முன்கூட்டியே அனுமானம் செய்து கொள்ள முடியாது. நடப்பு இதற்கு மாறானது. சந்தைகளின் இருப்பு மிகையாகி சரக்கு-மூலதனம் பெருக்கெடுக்கிறது. ஆக, என்ன நடந்தாலும், பண முடைக்குக் காரணமாவது சரக்கு-மூலதனப்பற்றாக்குறை அல்ல. பிற்பாடு இப்பிரச்சனைக்குத் திரும்பி வருவோம்.

SEELAN BOOKS ★ NORWAY ★
SIGNATURE

ISBN No. : 81-234-0588-X
CODE No. : A993

PRICE: Rs.900.00